294
25 L

ஆசியாவும் மேனாட்டு ஆதிக்கமும்

K. M. பணிக்கர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

ஆசியாவும் மேனுட்டு ஆதிக்கமும்

2—CP 1306—2504 (7/67)



புதிலிராயன் யோன் த காத்திரோ இந்தியாவை வந்தடைதல்

ஆசியாவும்
மேனாட்டு ஆதிக்கமும்

ஆசிய வரலாற்றில் வஸுக்கோ த காமாச்
சகாத்தத்தை ஆராய்வது
1498–1945

ஆக்கியோன் :

K. M. பணிக்கர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களப் பிரசுரம்

அரசாங்க அச்சகப்பகுதியிற் பதிப்பிக்கப்பட்டது

முதலாம் பதிப்பு, 1969.

ASIA AND WESTERN DOMINANCE

by

K. M. PANIKKAR

Translated and Published by

THE EDUCATIONAL PUBLICATIONS DEPARTMENT,
GOVERNMENT OF CEYLON.

by arrangement with

George Allen & Unwin Ltd.

Ruskin House, Museum Street, London.

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே.

முகவுரை

இந்நூல் K. M. பணிக்கர் ஆங்கிலத்தில் எழுதிய "Asia and Western Dominance" என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

இந்திய வரலாறு பற்றி இந்தியர் எழுதிய நூல்கள் எத்தனையோ தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், ஆசியாவில் நிலவிய மேனாட்டு ஆதிக்கத்தைப் பொருளாகக் கொண்டு ஆசியாவைச் சேர்ந்த ஒருவர் எழுதிய நூல் ஒன்றுவது இதுவரை வெளிவந்திலது. அக்குறையை ஓளவுக்காயினும் இந்நூல் தீர்த்துவைக்கும் என்பது எமது நம்பிக்கை.

ஓர் ஆசியன் என்ற முறையில் பணிக்கர் விடயத்தை நோக்கும் கோணம் மேனாட்டு வரலாற்றறிஞர் நோக்கும் கோணத்திலிருந்து சற்று வேறுபட்டதாகும். மேனாட்டினர் ஆசியாவிலே தமது ஆதிக்கத்தை எவ்வாறு பரப்பினர் என்பதை எடுத்துக் காட்டியதுடன் அவர்களுக்கு அஃது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை என்பதையும் பணிக்கர் கூறியுள்ளார். போத்துக்கேயரின் கடற்படைப் பலத்தை மிகைப்படுத்திக் கூறுதல் வழக்கமாக இருந்ததெனினும், அவர்கள் கள்ளிக்கோட்டையில் எவ்வாறு சமறினால் தோற்கடிக்கப்பட்டனர் என்பதைக் கூறி மற்றவர்கள் கூறுமளவுக்கு ஆசிரியர் வலிமை குறைந்தவரல்லர் என்பதை இவர் நிரூபித்துள்ளார். அவ்வாறே, சீன வல்லரசுக்கு மாறுகப் போத்துக்கேயர் மகாவோ நகரை மத்திய நிலையமாக வைத்திருந்தனர் எனும் அபிப்பிராயம் தவறுனதெனக் காட்டிப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலம் வரை அவர்கள் ஆங்காங்கு ஆளப்பட்டவர்களாக இருந்தனர் எனவும், 1843 வரை சீன ஆட்சியாளருக்குக் கப்பம் கட்டினர் எனவும் கூறுகின்றார்.

எட்டுப் பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும் இந்நூல் சீனு, யப்பான் ஆகிய நாடுகளுடனும் ஏனைய ஆசிய நாடுகளுடனும் மேனாட்டு வல்லரசுகள் கொண்டிருந்த தொடர்பு பற்றிச் சுருக்கமாக வெனினும் போதுமான அளவுக்கு எடுத்துரைக்கின்றது. முதல் நாலு பாகங்களும் ஐரோப்பிய வல்லரசுகள் எவ்வாறு ஆசியாவுக்கு வந்து தமது ஆதிக்கத்தை நிலைநாட்டின என்பது பற்றிக் கூறுகின்றன. இறுதி நான்கு பாகங்களும் ஐரோப்பிய வலுக் குன்றியமை, ஆசியா புனர்வாழ்வு பெற்றமை, கிறித்தவ மிசனரிமார் மேற்கொண்ட சேவைகள், ஐரோப்பியாவில் கீழைத்தேசச் செல்வாக்குப் பரவியமை ஆகியன பற்றிக் கூறுகின்றன.

கீழைத் தேசங்களிலே ஓர் உயர்ந்த கலாசார முறை நிலவியது எனவும் அத் தேசங்களுக்குரிய தத்துவங்களின் செல்வாக்கு மாத்திரமன்றிக் கலைகளின் செல்வாக்கும் ஐரோப்பிய நாடுகளில் பரவியது எனவும் இறுதியாகவுள்ள சுவைமிக்க நான்கு பாகங்களும் எடுத்துக் காட்டுகின்றன.

ஆசியா பற்றி ஆசியாவைச் சேர்ந்த வரலாற்றறிஞர் ஒருவர் கூறிய கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு உதவும் இத்தமிழாக்கம் ஐரோப்பியர் ஆசியாவுக்கு வந்த வரலாற்றைக் கற்கும் பல்கலைக் கழக மாணவருக்கும் இவ்விடயத்தில் ஆர்வமுள்ள சாதாரண வாசகருக்கும் பயன்படும்.

எம். ஏ. பெரேரா,
ஆணையாளர்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
58, சர் ஏணெல்ற் த சில்வா மாவத்தை,
கொழும்பு 3.

පෙරවදන

ආසියාව සහ බටහිර ආධිපත්‍යය යන්න කේ. එම්. පනික්කාර් විසින් ලියන ලද Asia and Western Dominance නම් ඉංග්‍රීසි කෘතියෙහි සිංහල පරිවර්තනය යි.

ඉන්දියානුන් විසින් ඉන්දියාව පිළිබඳ ලියන ලද පොත්වල පරිවර්ථන පළ කර ඇතත් ආසියාවේ බටහිර විෂය කොට ගෙන [illegible] යකු විසින් ලියන ලද කිසිදු පොතක් මෙතෙක් සිංහලෙන් පළ වී නැත. ඒ අඩු පාඩුව මේ පොතෙන් තරමක් දුරට මඟ හැරේ යයි අපේක්ෂා කැරේ.

පනික්කාර් ආසියානිකයකු වන හෙයින් ඔහුගේ දෘශ්ටි කෝණය බටහිර ඉතිහාසඥයින්ගේ දෘෂ්ඨි කෝණයට තරමක් වෙනස් වේ. බටහිර රටවල් ආසියාවේ සිය බලය පතුරුවා ගත් අයුරු ගෙන හැර පාන හෙතෙම ඔවුන්ට එතරම් පහසුවෙන් එ සේ කළ නොහැකි වූ බව ද කියයි. පෘතුග්‍රීසීන්ගේ සාගරික බලය අනිශයෝක්තියෙන් විස්තර කිරීම සිරිත වී තිබුණ ද ඔවුන් කැලිකට්හි සැමරින්ගෙන් බැට කෑඅයුරු ඔහු විස්තර කරන්නේ ආසියානිකයින් මවා පෙන්වන ලද තරම් දුබල නොවූ බව ස්ථුට කරමිනි. එ ලෙස ම චීනයේ බලයට පටහැනි ව පෘතුග්‍රීසීන් මකාවෝ නගරය මධ්‍යස්ථානයක් කර ගෙන සිටි බව පවසන මතය ද බිඳ හෙළමින් දහ නව වන සිය වසේ මැද කාලයක් වන තෙක් ඔවුන් එහි සිටියේ යටත් වැසියන් ලෙස බවත් 1843 වනතෙක් ඔවුන් චීන පාලකයින්ට කප්පන් ගෙවූ බවත් පවසයි.

කොටස් අටකට බෙදා ඇති මේ පොතේ චීනය ද ජපානය ද අනිත් ආසියානික රටවල් ද සමඟ බටහිර බලවතුන් ඇති කර ගත් සම්බන්ධතා පිළිබඳ ව ලුහුඬින් වුවත් ප්‍රමාණවත් ලෙස විස්තර කැරේ. යුරෝපීය බල වතුන් ආසියාවට පැමිණ එහි සිය බලය තහවුරු කර ගත් අයුරු මුල් කොටස් සතරෙන් විස්තර කැරෙන අතර අවසාන කොටස් සතරෙන් දැක්වෙන්නේ යුරෝපීය බලය පිරිහීම, ආසියාවේ පුනර්ජීවයක් ඇති වීම, ක්‍රිස්තියානි මිෂනාරි කටයුතු හා යුරෝපයේ ප්‍රාචීන බලපෑම් යන විෂයන් සම්බන්ධ කරුණු යි.

විශේෂයෙන්ම සිත් ගන්නා සුලු අවසාන කොටස් සතරින් ප්‍රාචීන රටවල උසස් සංස්කෘතියක් තිබුණු බව ද ඒවායේ දර්ශනවාදය පමණක් නොව කලාවත් යුරෝපීය රටවල් කෙරෙහි බල පෑ බව ද මේ පොත කියවන්නාට වැටහේ.

ආසියාව සම්බන්ධයෙන් ආසියානික ඉතිහාසකාරයකුගේ අදහස් උදහස් දැන ගැනීමට අවස්ථාවක් ලබා දෙන මේ පොත ආසියාවේ යුරෝපියන්ගේ වැඩ කටයුතු පිළිබඳ විෂය සිංහලයෙන් හදාරන විශ්ව විද්‍යාල ශිෂ්‍යයාටත් මේ විෂය වෙත සිත යොමන සාමාන්‍ය පාඨකයාටත් ප්‍රයෝජනවත් වේ යයි බලාපොරොත්තු වෙමු.

නන්ද දේව විජේසේකර,
රාජ්‍ය භාෂා කටයුතු පිළිබඳ කොමසාරිස්.

අංක 5, ද පොන්සේකා පාර,
කොළඹ 5.

முன்னுரை

வசுக்கோ த காமா கோழிக்கோட்டிலே 1498 இல் வந்திறங்கிய காலம் முதலாக, 1947 இலே பிரித்தானியப் படைகள் இந்தியாவினின்றும் வெளியேறும் வரையும், சீனத்திலிருந்த ஐரோப்பியக் கடற்படைகள் 1949 இல் வெளியேறும் வரையும், சென்ற கழிந்த 450 ஆண்டுக் காலமானது உலக வரலாற்றிலே தெளிவினமைந்த ஒரு சகாத்தமாகக் கருதத்தக்கது. அச் சகாத்தத்திலே வெவ்வேறு நாடுகளும் மக்களும் தலைமை தாங்கியிருக்கலாம். எனினும், அதிற் காணப்பட்ட திட்டவட்டமான சில பிறப்பியல்புகள், வரலாற்றிலே அதனைத் தனி வேறு சகாத்தமாக வேறு பிரித்துக் காட்டுகின்றன. அதனை ஊக்கிய சத்திகள் காலப் போக்கிலே மாறுதலடைந்தன. அக்கால வரலாற்றிலே இழையோடி நின்ற ஒரு கருத்து—இசுலாமுக் கெதிராகச் சிலுவைப் போர் விளைத்தலும், இசுலாமியராதிக்கத்தை மீக்கொண்டு செல்லலுமாகிய கருத்து—இசுலாமியப் பேரரசாட்சியின் வளர்ச்சியால் ஐரோப்பாவுக்கு நேர்ந்த பேராபத்து இலெப்பாந்தோச் சமரோடு முடிவுற்ற காலத்தில், மறைந்தொழிந்தது. ஆதியில் வாசனைத் திரவிய வர்த்தகத்திலே முற்றுரிமை பெறுதற்கிருந்த ஆர்வமானது, பின்னர், ஒரு நூற்றாண்டு காலத்தின்போது, துணிவகைகளையும் தேயிலையையும் பிறபண்டங்களையும் ஐரோப்பாவுக்கு இறக்குமதி செய்யும் விருப்பாக மாறி, அப்பால், பிரித்தானியக் கைத்தொழிற் புரட்சியின் பின்னர், ஐரோப்பியக் கைத்தொழிற் பொருள்களுக்குச் சந்தை காணும் வேட்கையாக மாறிற்று. அவேட்கை இறுதியில் மூலதனம் முதலீடு செய்தற்கான முயற்சியாக மாற்றமடைந்தது. ஆதியில் ஐரோப்பியர் வர்த்தகத்திலேயே பெரும்பாலும் ஈடுபாடு கொண்டாராக, பத்தொன்பதாம் நூற்றாண்டிலே. காலப்போக்கில், அவர்தம் நாட்டம் பிரதானமாக அரசியலிற் சென்றது. அக்காலத்தின்போது, ஐரோப்பாவிலே தலைமை தாங்கிய நாடுகளும் மாறின. போர்த்துக்கலிடமிருந்து இடச்சுமக்கள் வர்த்தக ஆதிக்கத்தைக் கவர்ந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் நடுக்கூற்றிலே, பிரித்தனும் பிரான்சும் சிறிதுகாலம் அதன் பொருட்டுப் போட்டியிட்டன. அக்காலந் தொட்டு இரண்டாவது உலகப்போர் தொடங்கும்வரையும் பிரித்தானியரின் அதிகாரமே, பேரிடர்ப்பாடு யாதுமின்றி, நிலவி வந்துளது.

இவ்வாறான மாற்றங்களும் அபிவிருத்திகளும் காணப்பட்டாலும், த காமா வைத் தொடர்ந்த ஊழியில், அடிப்படையான அமிசங்களிலே சிறப்பானதோர் ஒருமைப்பாடு இழையோடி நின்றதென்பது உண்மை. அவ்வமிசங்களை வருமாறு சுருக்கிக் கூறலாம்: ஆசிய நாடுகள் மீது கடற்பலம் ஆதிக்கம் பெற்றிருந்தமை; சருவதேச வர்த்தகத்தையன்றிப் பெரும்பாலும் விவசாய உற்பத்தியையும் உண்ணாட்டு வர்த்தகத்தையுமே ஆதாரமாகக் கொண்ட பொருளியல் வாழ்க்கை நிலவிய சமுதாயங்கள் மீது வர்த்தகப் பொருளாதாரமுறை திணிக்கப்பட்டமை; மூன்றாவதாக, கடலில் ஆதிக்கஞ் செலுத்திய ஐரோப்பிய மக்கள் ஆசிய அலுவலர்களிலேயும் ஆதிக்கம் பெற்றமை, என்றிவையாகும். கடற்

பலமே முதன்மை பெற்றிருந்த காலமாகும் அது. கடலில் ஆட்சி பெற்ற நாடுகளே அதிகாரமும் பெற்றிருந்தன. வசுக்கோ த காமாவின் காலம் முதலாக இற்றை நூற்றாண்டின் ஆரம்பம்வரையும் ஏறக்குறைய 400 ஆண்டுக் காலமாக, அத்திலாந்திக்குத் தவிர்ந்த பிற சமுத்திரங்களில் நாடுகளின் பூட்டைகளே நிருணயிக்கவல்ல கடற்பலம் காணப்பட்டிலது. இவ்வழி, அத்திலாந்திக்கில் ஆட்சி பெற்றல், இந்து சமுத்திரத்திலும்—இறுதியிற் பசிபிக்கிலும்—ஆதிக்கம் உறுதியாகும் என்றவாறான நிலைமை அக்கால் இருந்தது. தொடக்கத்திலே ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கு, ஐபீரிய வல்லரசுகளே அத்திலாந்திக்கில் ஆதிக்கம் பெற்றிருந்தன. ஆயின், இசுப்பானிய மன்னன் பிலிப்பு அனுப்பிய ஆமெடாக் கடற்படை அழித்தழிக்கப்பட்ட காலந் தொடங்கி, அவ்வாதிக்கம் படிப்படியாகக் குன்றி, ஈற்றில், ஐரோப்பிய வல்லரசுகள் பிறவற்றின் வசப்பட்டது. ஆயின் ஆசியக் கடல்களில் மேனாட்டோரின் ஆதிக்கம் தொடர்ந்து நீடித்தது.

ஆசிய மக்களிடையே வர்த்தகப் பொருளாதாரமுறை புகுந்ததுவும், அதன் வழி அம்மக்களின் வாழ்க்கைத் துறை யொவ்வொன்றிலும் படிப்படியாக விளைந்த புரட்சியும் இந்நூலில் ஆராயப்படும் பிரதான விடயங்களாகும். அவற்றைப்பற்றி நாம் இங்கு ஆராயவேண்டியதில்லை. ஆயினும், நாம் குறித்த பருவத்தின் தொடக்கம் முதல் இறுதிவரையும், ஆசியாவொடு ஐரோப்பா கொண்ட உறவுகளில், மேற்கூறியனவே பிரதான அமிசங்களாக விளங்கின வென்பதை ஈண்டுக் குறிப்பிடல் வேண்டும். இசுலாமின் வலியடக்குவதே தலையாய குறிக்கோளாகக் கொள்ளப்பட்ட விடத்தும், மலாக்காவிலே அல்புகேர்க்கி தன் வீரர்க்கு ஆற்றிய சொற்பொழிவிலே கூறியதுபோல, வாசனைத் திரவிய வர்த்தகத்தின்றும் சோனகரை ஒதுக்குவதன் மூலமே இசுலாமின் வலியழிக்கப் போத்துக்கேயர் கருதியிருந்தனர். கடற்படை வலி கொண்டு வர்த்தகம் நடாத்துவதே போத்துக்கேயரின் பூட்கையாயிற்று. பெருந்தொகையான வாசனைத் திரவியங்கள் கப்பல் வாயிலாய் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவே, அத்திரவியங்கள் விற்பனையாதற்குகந்த உலகளாவிய சந்தை உருவாகியது. அதனால், அப்பண்டங்களே உற்பத்தி செய்த கரையோரப் பிரதேசங்களிலும் தீவகங்களிலும் பெரும் பொருளாதார மாற்றம் விளைந்தது. ஆயின், ஆசிய நாடுகளுட் பெருந்தரைவல்லரசுகள், குறிப்பாகப் போத்துக்கேயர் காலத்திலே, அதனாற் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டில. எனினும், இடச்சுக்காரரும் பிரித்தானியரும் வந்துற்றதோடு, அந்நிலைமை பையவே மாறுதலடைந்தது. இந்தியாவொடு பிரித்தானியர் நடாத்திய வர்த்தகத்தில் வாசனைத்திரவியங்கள் அத்துணை பேரிடம் வகித்ததில்லை. எனினும், பருத்தித்துணிகளும், போகப் பொருள்களும், அவுரியும், வெடிமருந்து செய்தற்கு அவசியமான வெடியுப்புமே பிரதானமான வர்த்தகப் பொருள்களாக அமைந்தன. இப்பொருள்கள் ஐரோப்பாவிலே பெரிதும் தேவைப்பட்டமையால், அவற்றுக்கிருந்த மதிப்புப் பெரிதும் அதிகரித்தமையால், பதினெட்டாம் நூற்றாண்டின்போது இந்தியாவின் பொருளாதாரமானது அதன் கடல்வழி வர்த்தகத்தையே சாலவும் சாந்ததாயிற்று. இந்த ஐரோப்பிய வர்த்தகம் ஆசிய நாடுகளுக்குக் கூடிய முக்கியத்துவம் உடையதாகப் பெருகியதனால், இரு பெரும் மாறுதல்கள் இந்தியாவிலும் சீனத்திலும்

நிகழ்ந்தன. அரசியல் ஆதிக்கமும் பொருளாதார ஆதிக்கமும் உண்ணாட்டுப் பிரதேசங்களிலிருந்து கரையோரப் பிரதேசங்களுக்குப் பெயர்ந்தமை அவற்றுள் முதல்வது; பிறநாட்டு வர்த்தக முயற்சிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்ட வர்த்தக வகுப்பொன்று அவ்விரு நாடுகளிலும் உருவாகி வளர்ந்தமை மற்றையது. வாசனைத் திரவிய வர்த்தகத்தோடு தொடங்கிய இப்பொருளாதாரத்தொடர்பு, பின்னர், முதல் உலகப் போருக்கு முந்திய முப்பதாண்டுக் காலத்தின்போது, ஐரோப்பாவிலிருந்து பெருந்தொகையான மூலதனத்தை ஆசிய நாடுகளிலே முதலீடு செய்யும் முயற்சியாக மாறியது. இம்மாறுதல்கள் நிகழ்ந்த காலமெல்லாம், ஆசிய மக்களின் வாழ்க்கையிலே இப்புதிய வர்த்தகப் பொருளாதாரம் செலுத்திய ஆதிக்கம் மிகப் பெரிது. அந்த வர்த்தக ஆதிக்கமே, நாம் இப்போது ஆராயும் சகாத்தத்தின் வரலாற்றுக்கு ஒரு தனிப்பண்பைக் கொடுக்கின்றது எனலாம்.

ஆசியப் பிரதேசங்கள் பெரும்பாலானவற்றில் ஐரோப்பிய மக்கள் தாபித்துக் கொண்ட அரசியலாதிக்கம் மூன்றாவது சிறப்பியல்பாகக் கருதத்தக்கது. இம் மகத்தான மாறுதலே மற்றையவற்றிலும் கூடிய கவனத்தை ஈர்த்ததாயினும், அது மற்றை யிரண்டின் நேர்விளைவாகவே கொள்ளற்பாலது. கடல்சார் வர்த்தகத்தில் ஐரோப்பிய நாடுகள் பெற்ற முற்றுரிமை காரணமாக ஆசியப் பேரரசுகளின் பொருளாதாரப் பலமும் அரசியல் வலியும் தகர்க்கப்பட்டதன் பின்னர் கடலில் ஆட்சிபெற்றிருந்த ஐரோப்பிய நாடுகள் ஆசியாவிலே தாம் விரும்பிய இடத்தே தாம் விரும்பியாங்கு தமது வலியைப் பிரயோகித்தல் எளிதாயிற்று. இவ்வாறு அரசியலாதிக்கம் பெற்றதன் பயனாய், இனபேதக்கோட்பாடும், ஆசிய மக்களுக்கெதிராக ஐரோப்பியரிடையே ஒற்றுமையுணர்ச்சியும் தோன்றலாயின. ஆசியாவுக்கும் மேனாட்டுக்குமிடையே நிலவிய தொடர்புகளை ஆராயும்போது, இவ்விரு காரணிகளும் முன்னைக்காலத்திற் பெற்றிராத ஒரு சிறப்பைப் பெறுகின்றன.

இச்சகாத்தத்துக்கு ஒரு தனிப்பண்பை அளிக்கும் பிறிதோர் அமிசமும் இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆசியாவிற் கிறித்தவ மதத்தைப் பரப்புதற்கு ஐரோப்பியர் அக்காற் செய்த முயற்சியே அஃது. எனினும், ஆசிய-ஐரோப்பியத் தொடர்புகளில் இதுவோர் இன்றியமையாச் சிறப்பியல்பாக இருந்தது எனக் கொள்ளல் தவறு. புதிய நாடுகளும் புதிய பாதைகளும் கண்டுபிடிக்கும் முயற்சி தலைப்பட்டு நின்ற தொடக்க காலத்திலே, சிலுவைப்போருணர்ச்சி போத்துக்கேயரை ஊக்கிற்று என்பதிற் சந்தேகமில்லை. ஆயின் அஃது இசுலாமுக்கெதிரான பகையுணர்ச்சியாக இருந்ததே யன்றி, மதமாற்றும் ஆர்வமாக இருக்கவில்லை. கத்தோலிக்க உலகிலே எதிர்மதமலர்ச்சி யெனும் இயக்கம் பொங்கியெழுந்த போதே, மதமாற்றும் முயற்சியில் ஆசியாவும் சிக்குண்டது. பிரான்சிசு சேவியர் இப்புதிய ஆர்வத்தைப் பிரதிபலிப்பவராக விளங்கினர். அன்னாருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி, 'அஞ்ஞானிகளான' ஆசிய மக்களை மதம் மாற்றும் முயற்சி ஒரு பேரியக்கமாகச் சிறிது காலம் பரவிற்று. பீக்கிங்கிலிருந்த யேசுதரன்றி, யப்பானிற் பணி செய்த சமய குரவரே இப்புதிய ஆர்வத்துக்கு

உதாரண புருடராகக் கொள்ளத்தக்கவர். ஆயின் மதமாற்றுதல் ஒரு தற்காலிக முயற்சியாய்ச் சிறிது காலத்துள் அருகிப் போயிற்று. இடச்சுக்காரரும் ஆங்கிலேயரும் ஆசிய நாடுகளில் வந்து புகுந்து போத்துக்கேயரின் ஆதிக்கம் நலிந்ததன் பின்னர், மதமாற்றும் முயற்சி ஒரு நூற்றாண்டுக் காலமாக ஆசியாவில் எங்குமே பெரும்பாலும் மறைந்துவிட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியளவிலேயே, புரட்டசுத்தாந்த மதப் பிரிவுகள் மதமாற்றும் முயற்சியில் ஈடுபாடு கொண்டன. இந்தியாவிலும் சீனத்திலும் அவை மேற்கொண்ட மத மாற்ற முயற்சிகள், ஆசியாவொடு ஐரோப்பா கொண்ட தொடர்புகளில் ஒரு பிரதான அமிசமாகின. ஆசியாவில் ஐரோப்பியரின் அரசியலாதிக்கத்தை உறுதிப்படுத்தும் முயற்சியோடு அவை நெருங்கிய தொடர்பு உடையவரக இருந்தன.

இதுகாறும் கூறிய சிறப்பியல்புகள் நாம் எடுத்தாளும் சகாத்தத்துக்கு ஒரு சிறப்பான பண்பை அளிக்கின்றன. அவ்வழி, அச்சகாத்தம் ஒரு பெரும் இயக்கத்தை வரலாறு எனும் கண்ணாடியிலே பிரதிபலிப்பதாய் அமைகின்றது. ஆசிய நாடுகள்மீது ஐரோப்பா செலுத்திவந்த ஆதிக்கம் முடிவடைந்துவிட்டதாயினும், அவற்றுக்கிடையே யுள்ள தொடர்புகள் அற்றுவிடவில்லையென்றும், ஆசிய மக்களின் அலுவல்களிலே, முன்னே நாளிலும் பார்க்க இப்போது ஐரோப்பா இன்னும் நெருங்கிய தொடர்பு பூண்டுளதென்றும், ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே வர்த்தகத்தொடர்பு இன்று மேலும் பெருகி விட்டதென்றும் பலவாறுக மறுப்புரை கூறுதல் எளிதே. அத்தகைய கூற்றுக்கள் யாவும் மெத்தவும் உண்மை என்பதிற் சந்தேகமில்லை. ஆயின், அத்தொடர்பின் அடிப்படை முற்றுக மாறிவிட்டது என்பதையும் மறுக்க வொண்ணுது. பொருளாதாரத் துறையிலே இன்று மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றதாயின், அத்தொடர்பு ஐரோப்பிய நாடுகளால் வலிந்து திணிக்கப்பட்டதொன்றன்று. அது இருவயினெத்த தன்மையதாய், இருசாராரின் தேசிய நலன்களையுங் கருத்திற் கொண்டே தொடர்ந்து நிலவுகின்றது. இனி, ஆசிய நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையேயுள்ள அரசியற் றொடர்புகளும் சுதந்திரமான நாடுளுக்கிடையே நிலவவேண்டிய—நிலவுகின்ற—முறைமையான அரசியற் றொடர்புகளேயாம். ஆசியாவும் ஐரோப்பாவும் இன்று ஒன்றையொன்று நேரெதிர் நோக்கி நிற்கின்றன. வரலாற்றுச் சிறப்புவாய்ந்த பெரும் பெரும் வினைவுகள், அவ்வழி உருவாகலாம். ஆயின், த காமாச் சகாத்தத்திற் காணப்பட்ட தொடர்பு மறைந்தொழிந்துவிட்டது. புதிய சகாத்தத்திற்கும் அதற்கு முற்பட்ட பழைய சகாத்தத்திற்குமிடையே, புரட்சிகரமான, பண்புமாத்திரையான ஒரு பெரும் மாற்றம் தோன்றியுளது.

நாம் எடுத்துக்கொண்ட சகாத்தத்தின் தன்மையில் மாற்றம் விளைந்தவாற்றை இன்னுமோர் உண்மையும் எடுத்துக் காட்டுவதாய் அமைந்துளது. சோவியற்று ஐக்கிய நாடும், அமெரிக்க ஐக்கிய நாடும் இன்று ஆசிய விடயங்களிற் கூடிய செல்வாக்குச் செலுத்துவதே அஃது. அமெரிக்க ஐக்கிய நாடு பசிபிக்குக் கரையை 1844 இல் வந்தடைந்தது. இருபதாம் நூற்றாண்டில், முதல் இருப

தாண்டுக் காலத்தின்போது, பசிபிக்கிலே அமெரிக்காவின் செல்வாக்கு மிகப் பரந்துவிட்டது. முதற் பெரும்போரின் பின்னர், அச்செல்வாக்கே முதன்மை பெற்றது. அவ்வழி, தூரகிழக்கிலே ஐரோப்பாவின் செல்வாக்குப் படிப்படியாக மங்கத் தொடங்கிற்று. இனி, இரசியச் செல்வாக்கும் அமெரிக்கச் செல்வாக்கும் ஒருங்கே விருத்தியடைந்து பரவின எனலாம். அமெரிக்க செல்வாக்குக் கிழக்கிலிருந்து கடல் கடந்து பரவ, மற்று இரசியச் செல்வாக்கு ஆசியப் பிரதேசத்தின் எல்லைப்புறங்களிலே உருவாகிப் பரவலாயிற்று. இவ்விரு செல்வாக்கும் பரவியதனால், ஐரோப்பிய நாடுகள் முன்னம் செலுத்தி வந்த ஆதிக்கம் படிப்படியாகக் குன்றியது. புதிய வல்லரசுகளான இரசியாவும் அமெரிக்காவும் ஆசியாவொடு கொண்ட தொடர்புகள் முற்றும் வேறுபட்ட மரபைச் சேர்ந்தவை—எனின், மேனாடுகள் முன்னங் கொண்டிருந்த தொடர்புகளினின்றும் முற்றுக வேறுபட்டவை. இவ்வாறுக, அப்புதிய வல்லரசுகளின் செல்வாக்குப் பழைய மேனாடுகளின் செல்வாக்கை ஆசிய நாடுகளிலே விஞ்சிச் சென்று ஈற்றில் முதன்மைபெற்றது.

கிழக்குலகிலே இரசியாவும் அமெரிக்காவும் கடைப்பிடித்த பூட்கைகளை எடுத்தாளல் இந்நூலுக்கு அப்பாற்பட்ட விடயம். எனினும், ஐரோப்பிய நாடுகளின் பூட்கைகளைத் தக்கவாறு தெளிதற்கு உதவும் வகையில், அந்நாடுகளின் பூட்கைகளும் ஓராற்றல் இங்கு ஆராயப்பட்டுள. ஆயின், ஒரேயொரு விடயம் இங்கு அழுத்திக் கூறத் தக்கது. இரசியா நிரந்தரமாக ஆசியாவில் உளதென்பது பூகோளரீதியான உண்மை. அதனால் அந்நாட்டின் செல்வாக்குக் காலப் போக்கிலே மென்மேலும் பெருகுமென எதிர்பார்க்கலாம். கிழக்குலகிற் பிரதான அரசுகளாக விளங்கும் இந்தியாவும் சீனமும் யப்பானும் இரசியப் பிரதேசத்துக்கு அண்மையாக உள. மேலும் இரசியச் செல்வாக்கு ஆசிய நிலப்பரப்பின் வழியாக வந்துறுவது என்றவகையானும், கடல் வழிப்பரவுவது அன்று என்ற வகையானும், ஆசியாவிலே ஐரோப்பா 400 ஆண்டு காலமாகச் செலுத்தி வந்த செல்வாக்கினும் அடிப்படையான பேதமுடையது அது என்பது தேற்றம். ஆசிய நாடுகளொடு அமெரிக்கா கொள்ளுந் தொடர்பும் பூகோளச் சார்புடையதே. பசிபிக்கு ஒரு பெருஞ் சமுத்திரப் பரப்பாக இருப்பினும், ஆசியாவை ஐரோப்பியர் வந்தடையுமுன்னர் அது ஆராய்ந்து அறியப்படாத ஒரு புலமாக இருந்ததேனும், இன்று, தூரகிழக்கு நாடுகளும் அமெரிக்காவும் அயல்நாடுகளே. வான்வழிப் போக்குவரத்து அபிவிருத்தியடைய, அவை இன்னும் நெருங்கிய அண்டை நாடுகளாகும் என்பதற்கையமில்லை. இக்காரணங்களை யெல்லாம் கருத்திற்கொள்ளும்போது, ஆசியாவிலிருந்து ஐரோப்பியரின் அரசியலாதிக்கம் மறைந்தமையும், ஒரு சகாத்தத்தின் முடிவைத் தெளிவாகக் குறிக்கின்றது எனலாம்.

ஆசியாவை வென்றடிப்படுத்தி வைத்திருக்கும் முயற்சியில் ஐரோப்பிய நாடுகள் இறுதியாகத் தோல்வியடைந்தமை, கடற்பலத்தின் குறைபாட்டை எடுத்துக் காட்டும் ஓர் உதாரணமாக விளங்குகின்றது. அதாவது கடற்பலத்தாற் சாதிக்கக் கூடியதற்கும் ஓர் எல்லையுண்டு என்பதை அவ்வுண்மை விளக்குகின்

றது. பாலத்தீனத்திலே சிலுவைப் போர்கள் தோல்வியடைந்ததற்கான காரணத்தை ஆராயப்புகுந்த வரலாற்றறிஞன் இலேயர் பெலொக்கு வருமாறு கூறினன்: 'இராணுவ வரலாற்றிலே இழையோடி நிற்கின்ற ஓர் அமிசத்தை அத் தோல்வி விளக்கிக் காட்டுகின்றது. இராணுவ விடயங்களிலே கடற் பலத்தை நம்பியிருத்தல், இறுதியில் ஏமாற்றத்தையே விளைக்கும் ஒரு மருட்கையாகும் என்பதே அந்த அமிசம். வரலாற்றிலே இடம்பெற்றுள்ள தீர்க்கமான இறுதிப் போர்களில் மிகுந்த கடற்பலத்தோடே தொடங்குகின்ற கட்சி, தரைப்பலத்தால் இறுதியில் முறியடிக்கப்படுவதைக் காண்கின்றோம். அக்கடல் வல்லரசு காதேச்சாகவோ அதென்சாகவோ இருந்தாலென், மாவேந்தனின் பினீசியக் கடற்படையாக இருந்தாலென், அது கலப்போக்கிலே தோல்வியடையும்; தரை வல்லரசே இறுதியில் வெல்லும்.' அவ்வாறே ஆசியாவிலும், கடற்பலத்தை ஆதாரமாகக் கொண்ட வல்லரசுகளுக்கெதிராக ஆசியப் பிரதேசத்து மன்பதைகள் திரண்டெழுந்து இறுதியில் தமது சுதந்திர நிலையை நாட்டின. கடல்சார்ந்த வணிகப் பேரரசுகள் பூட்டிய தளையை ஆசியத் தரைப்பேரரசுகள் உதறித் தள்ளி, ஆசியாவினின்றும் ஐரோப்பியராதிக்கத்தை ஒதுக்கியபோது, தரைப் பேரரசுகளின் பெருவலி கடல்வலியை இறுதியில் மீக்கொண்டவாற்றையே நாம் காண்கிறோம்.

நாகரிகம் ஏறுநடைபோட்டு முன்னேறியவாற்றையே ஐரோப்பிய ஆணிலப் படர்ச்சி குறிப்பதாகுமெனக் கொள்ளும் ஐரோப்பிய ஆசிரியன்மார் சிலர் உளர். உதாரணமாகச் சன்சம் என்பார் வருமாறு கூறுவர்: 'முன்னேறிச் சென்ற ஒரு நாகரிகத்தின் பிரதிபலிப்பே—தவிர்க்க முடியாத பிரதிபலிப்பே—அஃது (ஆசியநாடுகள் மேற் படையெடுத்தமை). மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் அது ஒரு புதிய பருவத்தைக் குறித்தது. ஆயின் பேராசிரியர் தோனி என்பாரோ அந்துவேப்பு வணிகரின் கைவரிசையையே ஐரோப்பியப் படையெடுப்புக்களின் பின்னணியிற் காண்கின்றார்.

உண்மையை நோக்குங்கால், ஆசியப் பிரதேசங்களிலே ஐரோப்பாவின் ஆக்கிரமிப்பானது, சன்சம் கூறுவதுபோன்று, 'முன்னேறிச் செல்லும் நாகரிகத்தின்' விளைவும் அன்று; திரைமறைவிலிருந்து ஆட்டிவைக்கும் வணிகமக்களின் பாவைக் கூத்தும் அன்று. எனின், மத்திய கிழக்கிலே உன்னதமான தரைவல்லரசாக விளங்கிய இசுலாமைப் புறங்காண்டலே முதல் நோக்கமாகவும், ஐரோப்பியரின் சத்தியெலாம் கட்டுண்டு நிற்றற்கு இடனுயிருந்த 'மத்தியதரையெனும் சிறைச்சாலையை' உடைத்துச்செல்வதைத் துணைநோக்கமாகவும் கொண்டு செய்யப்பட்ட பெரு முயற்சியின் விளைவே அஃது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியளவில் கைத்தொழிலிலும் அரசியற்றுறையிலும் விளைந்த புரட்சிகரமான மாற்றங்கள் காரணமாக, ஐரோப்பாவிலே சமூக, பொருளாதார அரசியல் அமைப்பானது பெரிதும் சீர்திருத்தியமைக்கப்பட்டிருந்தது. அத்தகைய ஐரோப்பா 'முன்னேறிச் செல்லும் ஒரு நாகரிகத்தைப்' பிரதிபலித்தது என்னல் பொருத்தமே. ஆசியச் சமுதாயங்களின் அடிப்படைக்குமே 'சவால்' விடுவதுபோன்றிருந்தது அது; தனது ஆதிக்கத்தை அவற்றின்மீது திணித்து,

அடிப்படைச் சிறப்புமிக்க சமூக, அரசியல் மாற்றங்களை ஆசியாவில் அது புகுத்தியது. ஆயின், ஆசியாவொடு ஐரோப்பியர் தொடர்புகொண்ட முதல் மூன்நூற்ருண்டுக்காலத்தே காணப்பட்ட வணிகப் போராட்டத்தை, கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையே மூண்ட மகத்தான ஒரு 'பாரதப் போராகக்' கொள்ளல் சற்றும் பொருத்தமாகாது. அத்தகைய கொள்கை மிகப் பிந்தியகால வரலாற்றுக்கு ஒருகாற் பொருந்துமாயினும், நாம் எடுத்தாளும் பருவத்து வரலாற்றுக்குப் பொருந்துவதாகாது.

வரலாற்றுச் சிறப்புடைய இச்சகாத்தம் பற்றிச் சிறந்த பல ஆராய்ச்சி நூல்கள் எழுதப்பட்டிருப்பினும், அவை பெரும்பாலும் சிறப்பான சில பிரதேசங்களின் வரலாற்றையே நுதலுவன. இசுலாமுக்குப் புறம்பான ஆசியா முழுவதோடும் ஐரோப்பா கொண்ட தொடர்புகள் பற்றி இதுகாறும் ஆராய்ச்சிப் பனுவல் யாதும் எழுதப்படவில்லை. வறிதே வரலாற்றுச் சார்பான நல்ல நூல்கள் பல உண்டு. அவையெல்லாம் தனித்தனி நாடுகளைப் பற்றிக் கூறுவனவே யல்லால், அந்நாடுகளின் வரலாற்றிலே காணப்படும் பொதுவான ஒற்றுமையைப் புறக்கணிப்பன. அவ்வொற்றுமை துலக்கமாகப் புலப்படாமைக்குக் காரணம், இந்தியாவிற் பிரித்தானியரின் பேரரசு வகித்த தனி நிலையேயாம். அந்நிலையினை வருணிக்க முயன்ற பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சனொருவன், அது தூரகிழக்கிற்கு உரியதுமன்று; மத்திய கிழக்கிற்கு உரியதுமன்று; இந்தியாவுக்கே சிறப்பாக உரியது என்றனன். இவ்வாறுக இந்தியாவிற் பிரித்தானியர் வகித்த நிலையானது ஆசியாவின் பொதுவரலாற்றுச் சார்பில் வைத்தெண்ணப்படாது, தனிப்பட்ட ஒரு விடயமாகவே கருதப்பட்டு வந்துளது. அதனால் ஆசியாவின் வரலாற்றை உலக வரலாற்றின் சார்பில் முழுமையுற வைத்து நோக்குவது மிக இடர்ப்பாடாக இருந்தது.

அந்த இடர்ப்பாட்டை நீக்கி, ஆசியவரலாற்றை அதற்குரிய சார்பில் வைத்து நோக்கும் முயற்சியாகவே இந்நூல் அமைந்துளது. மேலும், ஆசியாவில் ஐரோப்பியரின் முயற்சிகளை ஆசிய மாணவனொருவன், ஆசிய நோக்கிலே நின்று ஆராய்ந்து அறிய முற்படும் ஒரு முயற்சியாகவும் இந்நூல் கருதத்தக்கது.

நன்றியுரை

இந்நூலை யாத்து வெளியிடுவதில் உளமுவந்து உதவி புரிந்த பல நண்பர்க்கும் இணைவர்க்கும் யான் கடப்பாடுடையேன். அவருள்ளும் சிறப்பாக, இந்நூலின் கையெழுத்துப் பிரதிகளை வாசித்து அரிய யோசனைகள் பலவற்றை அவ்வப் போது எடுத்துக் கூறிய திரு. வெங்கடாச்சாரி, இ. சி. சே. அவர்களுக்கும், இந் நூல் அச்சில் இருந்தகாலை ஆவன செய்து, இடர்ப்பாடு கருதாது பார்வைப்படி களை வாசித்து, பொதுவாக, இந்நூலை யாத்து வெளியிடுவதில் உதவிபுரிந்த திரு. கய் உவிந்து அவர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றியை இங்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ள பல பிரச்சினைகள் பற்றி, பதினைந்தாண்டுக்கு மேற்பட்ட காலத்தின்போது பற்பல வேளைகளிலே, திரு வாளர் கய் உவிந்தோடு யான் கலந்தாலோசித்தது உண்டு. ஆசியாவின் ஐரோப் பிய வரலாறுபற்றி அன்னர் கொண்டுள்ள ஆழ்ந்த புலமையால் யான் பெற்ற பயன் பெரிதே யென்பதை நன்றிப் பெருக்கோடு இங்குக் கூற விரும்புகிறேன். அனைத்து ஆன்மர்க் கல்லூரியைச் சேர்ந்த திரு. சியோபிரி அட்சன் அவர் களுக்கு எனது கடப்பாடு இருமடியானது. சீனமும் மேனாடும்பற்றி அவர் எழுதி யுள்ள அருமையான தலைசிறந்த கட்டுரை, சீனத்தோடு ஐரோப்பா பத்தொன்ப தாம் நூற்றாண்டுக்கு முன்னம் கொண்டிருந்த தொடர்புகளை விளக்குவதில், எனக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது. மேலும், கையெழுத்துப் பிரதிகளை வாசித்துப் பல முக்கியமான விடங்களைச் செவ்வை பார்த்ததோடமையாது, எனக்குப் பரிச்சயமில்லாத பல அன்னியப் பெயர்களைத் திருத்தியுந் தந்த அட் சன் அவர்கள் என்னைப் பெரிதுங் கடமைப்படுத்திவிட்டனர்.

பீக்கிங்கு நகரிலுள்ள பெயிற்றாங்குக் கத்தோலிக்கத் தேவாலயத்தைச் சேர்ந்த, வணக்கத்துக்குரிய பிதாக்கள் எனக்குப் பிரான்சிசு சேவியர் அடி களார், வண. பிதா. இரிக்கு ஆகியோரின் திருவுருவப்படங்களை உவந்தளித் தனர். அன்னர்க்கு எனது நன்றி உரியது.

மூற்பிரதேச வாராய்ச்சிப் பயணத்தின்போது வசுக்கோ த காமா பயன் படுத்திய கப்பல்களின் உருவப்படங்களை எனக்கு நல்கிய போத்துக்கேய அர சாங்கத்தார்க்கும் எனது நன்றி உரியதாகும்.

யோன் த காத்திரோ இந்தியாவில் வந்திறங்கியவரலாற்றைக் காட்டுஞ் சித் திர விரிப்பின் ஒளிப்படத்தை, வியன்ன நகரத்து வரலாற்று ஓவிய அரும் பொருளகத்தார் எனக்குத் தந்தனர். அன்னர்க்கும் எனது நன்றி.

முக்கியமான சீன வரலாற்று விடயங்களின் மொழிபெயர்ப்புக்களை, அவை அச்சேறுது இருந்தக்கண்ணும், யான் பயன்படுத்துமாறு உதவியவர் பிரித்தானி யத் தூதகத்தைச் சேர்ந்த திரு. போட்டு அவர்கள். அன்னர்க்கும் யான் பெரி துங் கடப்பாடுடையேன்.

உள்ளுறை

பக்கம்

முன்னுரை ix

முதலாம் பாகம்

விரிவுக் காலம்

1498–1750

1. இந்தியாவும் இந்து சமுத்திரமும் 3
2. சீனமும் யப்பானும் 48

இரண்டாம் பாகம்

வென்றடிப்படுத்திய காலம்

1750–1858

1. இந்தியாவும் தீவுகளும் 69
2. சீனம் 93

மூன்றும் பாகம்

பேரரசுக் காலம்

1858–1914

1. இந்தியா 113
2. சீனம் 135
3. யப்பான் 165
4. தென்கிழக்கு ஆசியா 177
5. சீயம் 186

நாலாம் பாகம்

இரசியாவும் தூரகிழக்கும்

1. புரட்சிக்கு முன்னர் 193
2. ஆசியாவும் இரசியப் புரட்சியும் 208

ஐந்தாம் பாகம்

ஐரோப்பா பின்னிடைதல்

1918–1939

1. ஐரோப்பாவில் உண்ணுட்டுப் போரும் அதன் விளைவுகளும் 217
2. இந்தியா 224
3. சீனம் 232
4. யப்பான் 247
5. ஆசியாவிற் பிறவிடங்களிலே 264

ஆறும் பாகம்

ஆசியாவின் மீட்சி

பக்கம்

1. பொது 269
2. இந்தியா 273
3. யப்பான் 290
4. சீனம் 298
5. ஆசிய நாடுகளுள் சிறியவை 314

ஏழாம் பாகம்

கிறித்தவ மிசனரிமார்

கிறித்தவ மிசனரிமார் 323

எட்டாம் பாகம்

ஐரோப்பாவிலே குணபுலத்துச் செல்வாக்கு

1. பண்பாட்டுச் செல்வாக்கு 351
2. ஐரோப்பியச் சிந்தனையிற் குணபுலத்துச் செல்வாக்கு 359

முடிபு 367

அட்டவணை 393

விளக்கப் படங்கள்

		பக்கம்
1.	பதிலிராயன் யோன் த காத்திரோ இந்தியாவை வந்தடைதல். (முகப்புக் பக்கம்)	
2.	கடலோடி என்றி.	20
3.	வசுக்கோ த காமா முதற் பிரதேச ஆராய்ச்சிப் பயணத்தின்போது சென்ற கப்பல்கள்.	40
4.	சாமோரினது வேத்தவையில் வசுக்கோ த காமா.	41
5.	இதயோசி, 1536–98.	78
6.	இயயாசு தொக்குகாவா, 1542–1616.	79
7.	நாகசாகியிலுள்ள தெசிமாவில் இடச்சு மனேயும் கப்பலும்.	96
8.	" முதுபுத்தர். "	174
9.	பிரான்சிசு சேவியர் அடிகளின மரணம்.	336

நாட்டுப் படங்கள்

1610 இல் ஆசியாவும் தூரகிழக்கும்.	47
1950 இலிருந்து ஆசியாவும் தூரகிழக்கும்.	112
1900 இல் ஐரோப்பிய செல்வாக்கு.	297

முதலாம் பாகம்

விரிவுக் காலம்

1498 – 1750

அதிகாரம் 1

இந்தியாவும் இந்து சமுத்திரமும்

(1)

இந்தியாவின் தென்மேற்குக் கரையிலுள்ள துறையாகிய கோழிக்கோட்டை வசுக்கோ-த-காமா என்பான் 1498 மே 27 இல் வந்தடைந்தான். அவன் வருகையால் இந்திய வரலாற்றிலும், மற்று ஐரோப்பியச் சரித்திரத்திலும் புதிய வோர் திருப்பம் உண்டாயதென்பதற்கையமில்லை.

வரலாற்றுக் காலத்து ஆதி நாள் தொட்டு இந்தியாபற்றி ஐரோப்பிய மக்கள் நன்கறிந்திருந்தனர். கிரேக்க மண்ணிலே கி. மு. 480 அளவில் இந்திய வீரர் பாரசீகப் பதாகைக்கீழ்ப் போரிட்டதுண்டு. இந்திய எல்லைப்புறத்தில் மாமன்னன் அலெக்சாந்தர் கால்வைத்தற்கு நெடுங்காலமுன்பே, இந்தியாவுக்கும் எலனிய நாட்டுக்குமிடையிற் கேண்மையுறவு நிலவியதும் உண்டு. எகிப்து நாட்டைத் தளமாய்க்கொண்ட உரோமானியக் கப்பல்கள் இந்தியத் துறைகட்கு வந்து போவது ஒழுங்காக நிகழ்ந்தது. அன்றியும், தென்னிந்திய அரசுகளுக்கும் உரோமானியப் பேரரசுக்குமிடையே வளமார் வர்த்தகம், கி. மு. முதனூற்றாண்டளவில், விருத்தியடைந்திருந்தவாற்றை அரிக்கமேட்டு அகழ்வாராய்ச்சிகள் தெளிவாக இன்று நிறுவியுள்ளன. கிரேக்க, உரோமானிய புவியியலாளர் இந்தியக் கரைப்புலங்களை அறிந்திருந்தமின்றி, இந்தோனேசியத் தீவுக் குழாத்தையும் வருணித்துள்ளனர். இருணிறை கண்டமாய் ஐரோப்பா இருந்த ஞான்று, இத்தகைய நெருங்கிய உறவும் ஒழுங்கான தொடர்பும் இருந்திலவேனும், மேற்குப்புல மக்களின் கற்பனையை இந்திய நாடு இன்னும் ஈர்த்தவாறிருந்தது. ஆசிய நாடுகள் பற்றி அஞ்ஞான்றும் ஐரோப்பியர் அறிந்தேயிருந்தனர் என்பதற்குச் சான்று சில உண்டு. ஆதிச் சிலுவைப் போர்களின் பின்னர், ஆசிய நாடுகளில் அன்னர் ஊங்கிய கவனஞ் செலுத்தினர். இந்திய நிலவரம் பற்றியும் வர்த்தகம் பற்றியும் வெனிசும் செனுவாவும் மிக விரிவாக அறிந்திருந்தன. சேய்மையிலுள்ள அந்துவேப்பிலுமே இந்தியாவின் புகழ் பரவி நின்றது; இந்தியப் பொருள்களும் ஆங்குப் போற்றப்பட்டன. பதின்மூன்றும் நூற்றாண்டளவில் ஐரோப்பிய யாதிகர் பலர் இந்தியாவுக்கு வந்து போயினர். அவருட் குறிப்பிடத்தக்கோர் மார்க்கோ போலோ, பிறயர் ஒடரிக்கு, மொன்றி கோவினோ என்போராவர். பிற்றை நாளில் எகல் என்பான் கூறியது காண்க: 'பல்லோரும் ஆசைகொள்ளும் நாடு என்ற வகையால், உலக வரலாற்றில் இந்தியா எஞ்ஞான்றும் ஓர் இன்றியமையாத அமிசமாக இருந்து வந்துளது. அறப் பழையகாலந் தொட்டு இற்றைநாள்வரை, அவ்வற்புத நாட்டின் கருவூலங்களையும்—மணியே, முத்தே, விரையே, உரோசாச் சத்தே, அரிமாவே, வேழமே என்றித்தகைய விலைமதிக்கவொண்ணு இயற்கைத் திரவியங்களையும்—மற்று

அறிவுக் களஞ்சியங்களையும் நாடிப்பெறுவதிலே நாடுகள் யாவும் தத்தம் விருப பையும் வேணவாவையும் செலுத்தி வந்துள. இக்கருவூலங்களெல்லாம் மேலைப் புலத்திற்குச் சென்றவாறு எவ்வாறென்பது எஞ்ஞான்றும் உலக வரலாற்றிற் சிறப்புடைத்தாய் நாடுகளின் கதியினை நெருங்கிப் பாதிப்பதாய் இருந்துளது.

கோழிக்கோட்டிற் காமா வந்திறங்கியமை எத்துணை பொருண்மை யுடைத் தென்பதை நாம் முழுமையுறத் தெளியவேண்டின், இரு நூற்றாண்டுக் காலமாய் மக்கள் கண்ட கனவின் பயனே அதுவென்பதையும், எழுபத்தைந்தாண்டுக் காலமாய்த் தொடர்ந்த ஓவா முயற்சியின் விளைவே அதுவென்பதையும் நாம் உன்னிப்பார்த்தல் வேண்டும். வெனிசியர் தவிர்ந்த மத்தியதரைப் புலத்து வணி கர் யாவரும் அவ்வாசைக்கனவிற் பங்குகொண்டோரே. இனி, அக்கனவை நன வாக்குவதில் முன்னின்று முயற்சி செய்தோர் பெரும்பான்மையும் போத்துக் கேயரே. இக்கனவிற்கும் இம் முயற்சிக்கும் ஆதாரமாகிப் பின்னின்று ஊக்கிய சமய, பொருளாதார, அரசியற் சத்திகளை யாம் செவ்வனே விளங்குதற்கு, சென்று முடிந்த இருநூற்றாண்டுக் காலத்து ஐரோப்பிய வரலாற்றுப் போக் கினைச் சற்று நோக்குதல் அவசியமாகும்.

சிலுவைப் போர்மீளிகளிடமிருந்து 1187 இல் எருசலத்தை மீளக் கைப்பற் றியவன் சலடின் என்பான்—அவன் காலந்தொட்டு, எகிப்து நாட்டைத் தலை மைப் பீடமாய்க் கொண்ட இசுலாமானது கட்டமைப்புடையதாய் வளர்ந்து, ஆற்றலும் வலிய பெருந்தடையாக ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்குங் குறுக்கே நின்றது. முதன் மூன்று சிலுவைப் போர்களிலும் கிறித்துவவுலகை உந்தித் தள்ளிய இயல்பிகந்த ஊக்கமும், ஆர்வமும், அபிமானமும் சென்று தேய்ந்து இற்று முடிந்தன. சலடின் ஈட்டிய வெற்றியான்று, பிற்றைநாட் சரித்திரச் சார்பில் நோக்குமிடத்துத் தீர்க்கமான ஒரு வெற்றியாய் அமைந்ததென்பது ஒருபுறமாக, உயிர்நிலையங்களென்று கொள்ளத் தக்க எகிப்திய சிரியக் கரைப் புலங்களிலே இசுலாமியரின் ஆதிக்கத்தைப் பன்னெடுங்காலம் நிலைநாட்டியது. இவ்வுண்மையை ஐரோப்பிய அரசறிஞரும் அக்கால் உணரத் தவறினரல்லர் என்பது, ஐந்தாஞ் சிலுவைப்போர் (1218-21) எகிப்துக்கு மாறுகவே தொடுக் கப்பட்டவாற்றால் விளங்கும். ஐரோப்பியப் பெருமன்னர் பலர், பிரான்சு நாட் டுச் செயின்று உனாயி என்பான் தலைமையிலே திரண்டெழுந்து இறுதி முறை யாகத் தாக்கினரெனினும், அவ்விறுதித் தாக்குதலும் படுதோல்விப்பட்டது. இவ்வாருகக் கிறித்துவ உலகச் சத்திகளனைத்தும் ஒன்றுதிரண்டு 200 ஆண்டுக் காலமாய் முயன்ற பின்னரும், உயிர்நிலையமன்ன அக்கரையோரம் இசுலாமிய ரின் வன்கரத்திற் சிக்குண்டிருந்தது.

கிழக்குப்புலத்து வாசனைத்திரவிய வர்த்தகமானது வரலாற்றை இயங்கச் செய்யும் ஒரு பெருங் காரணியாக இருந்துவந்துளது. அதன் வழிப்பெற்ற பண் டங்கள் பலவிடத்துந் தேவைப்பட்டவாதலின், அதுவே கழிபெரும் இலாபம் வணிகர்க்கு அளித்தது. அவ்வர்த்தகம் இந்தியத்துறைகளிலிருந்து, இசுலாமி யக் கொற்றவர் கட்டியாண்ட நாடுகளைக் கடந்தே வரல் வேண்டியிருந்தது. அண்மைக்கால ஆசிரியன் ஒருவன் கூறியதுபோன்று, 'மிளகு எமக்கு ஒரு

பொருட்டன்று; ஆயின் அக்காலத்தில் அது வைரமணிக் கற்களோடு வைத் தெண்ணப்பட்டது. மிளகின் பொருட்டு ஆழ்கடலின் அபாயங்களை மக்கள் அலட்சியஞ் செய்தனர்; போராடி உயிர்துறந்தனர்'. திருவாளர் அட்சன் என் பார் தாம் எழுதிய ஆராய்ச்சிப் புலமைசான்ற **'ஐரோப்பாவும் சீனமும்'** எனும் நூலில் அக்கால நிலைமையினை வருமாறு ஆய்ந்துள்ளார்: "ஐரோப்பியச் சமை யற்கலைக்கு மென்மேலும் இன்றியமையாதனவாகிவந்த வாசனைச் சரக்குக்களை இந்தியாவிலிருந்தும் இந்தோனேசியாவிலிருந்துமே யல்லாற் பிறவிடத்தி ருந்து பெறல் இயலாததாயிற்று; அன்றியும் அவை பாரசீகம், எகிப்து எனும் நாடுகள் வழியாகவே வரல் கூடும். இயல்பாகவே முற்றுரிமையாக இருந்த, இன்றியமையாத இவ்வர்த்தகம், இலவாந்து அரசியலிலே பெரிதும் பூசலுக்கு ஏதுவாயிற்று. பதினேந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பியப் படர்ச்சிக்குத் தூண்டு கோலாயமைந்த தனிப்பெருங் காரணியும் அதுவே. இந்தியாவுக்கும் ஐரோப்பா வுக்குமிடையே இடைத்தரகர் போன்று இயங்கிவந்த எகிப்தியர் வாசனைச் சரக்குக்களின் விலையை 300 சதவீதமாக உயர்த்தல் வழக்கமாயிருந்தது. ஆயின், பாரசீகத்திலே தாட்டர் ஆதிக்கம் நிலவியபோது, இக்கானேற்று இசுலாம் மதத்தைத் தழுவ முன்னர்—இத்தாலிய வர்த்தகர் இந்தியாவுக்கு நேராகச் சென்று, எகிப்தியர்க்குப் போட்டியாக விலையைக் குறைத்தல் இயல்வதா யிற்று. இவ்வாருக ஐரோப்பியர் எவ்வெந்நாட்டில், எவ்வெச்செலவில் வாசனைச் சரக்குக்கள் உற்பத்தியாயின என்பதைத் தெரிந்துகொண்டனர். எனவே, பகை யாகிநின்ற இசுலாமும், இலவாந்தில் ஓயாது நிகழ்ந்த போர்களும் இந்தியச் சந்தைகளினின்றும் அன்னரைத் துண்டித்தபோது "வாசனைச்சரக்கு வளர்ந்த இந்தியத் தீவுகளுக்குப் புது வழிகாணும் ஒருவல்லாசைக் காத்து நின்ற பெரு வாய்ப்புக்களை அன்னர் நன்கறிந்திருந்தனர்."

இவ்வர்த்தக விருப்பொடு புதியதொரு காரணியும் வந்துசேர்ந்தது; வெனி சும் செனேவாவும் தம்மிடை கொண்ட போட்டியே அஃது. திறனுறு சூழ்வும், அருஞ் செயலார்வமும், ஆழ்ந்த நோக்கமைந்த பூட்கையும் ஆகிய மூன்றும் ஒன்றுசேர்ந்தமையால், வெனிசியர் தம் ஆன்ற செல்வாக்கினை நெடுநாட் கெய சோவில் நாட்டியதோடு, ஐரோப்பாவிலே கிழக்கு வர்த்தகத்தின் முற்றுரிமை பெற்ற முகவராகத் தம்மைத் தாபித்துங் கொண்டனர். தரைப் பாதைகளைப் பொறுத்தவரையிற் பைசாந்தியத்து அரசியன் மாற்றங்களுக்கமைய அவர்தம் ஆக்கம் மாறியதாயினும், செங்கடல் வர்த்தகத்தில், உருத்துவந்த ஆபத்தை யெல்லாம் அவர்கள் எதிர்த்துமடக்கி, தமது ஆதிக்கந் தகவே பேணினர். இவ் வாருகச் செனேவாவிற்கு வைரித்த போட்டியாளராயிருந்த வெனிசிய வர்த்த கர், கழிபேரிலாபந் தந்து வந்த இவ்வர்த்தகத்திலே தொடர்ந்து முதன்மை வகித்தமையால், மத்தியதரைக் கடலினின்று வெளிப்போதற்குச் செனேவா மக்கள் குன்று ஊக்கங்கொண்டனர்.

பதின்மூன்றும் பதினான்காம் நூற்றாண்டுகளிலே வெனிசும் செனேவாவும் தம்மிடை கொண்ட போட்டியானது தனிப்பெரும் வரலாற்றுச் சிறப்புடைய ஒரு விடயமாகும். வியாபாரிகளின் நலவுரிமைகளைப் பேணுதற்கமைந்த ஆட்சி

யமைப்புடைய வணிக அரசாயிருந்தது வெனிசு. வர்க்கத்திற் சிறந்து விளங்கிய 200 குடும்பங்களும் தத்தம் குடும்ப முயற்சியால் வணிகப் பேரரசுகளை இலவாந்திலே தாபித்தல் கூடும். ஆயின் பூட்கையும், நியமனங்களும், போரும், வர்த்தக விதிகடாமும் அரசினுலேயே முற்றும் தீர்மானிக்கப்பட்டன. தனிப் பட்டோர்க்குச் சொந்தமான கப்பற் கோட்டிகளோ, முற்றுரிமைகளோ ஆங்கு இருக்கவில்லை; அரசிற்கே சொந்தமான கப்பற் கோட்டியும் முற்றுரிமைகளும், அரசினுல் ஆற்றுப்படுத்தப்பட்ட பொருளாதாரமுமே அங்கும் காணப்பட்டன.

ஆயின் செனுவாவின் நிலைமை முற்றும் வேறுபட்டதாயிருந்தது. பெருங் குடும்பங்களும் கன்னைகளும் அரசாங்க அமைப்பினைத் தங்கைப்படுத்தி, தம் சொந்த நயத்தின்பொருட்டு அதனைப் பயன்படுத்தின. இத்தகைய ஒரு கன்னை அதிகாரம் பெற்றதும், தனக்குப் போட்டியாயிருந்தோரை நாடு கடத்துவது வழக்காயிருந்தது. இத்தனிமுயற்சி காரணமாகச் செனுவா மக்கள் பல்வேறு அரசவைகளிலே ஆலோசகராகவும் நிபுணராகவும் சேவைசெய்யும் வாய்ப்புப் பெற்றதோடு, பல வர்த்தக உத்திகளைச் செம்மையாக வகுத்துக் கையாளவும், கடல்கடந்து புத்துலகு காணும் விந்தை முயற்சியில் முதன்மைபெறவும் வலியராயினர். குறிப்பாக வெனிசின் முற்றுரிமையைத் தகர்த்தற்கு ஏதுவான ஆராய்ச்சியிலே அன்னர் முதன்மைபெற்று விளங்கினர்.

பதின்மூன்றும் நூற்றுண்டின் இறுதிப் பத்தாண்டின்போது, செனுவா வணிகர் வர்த்தகப் பெருந்திட்டமொன்றைப் பாரசீகத்து இல்கான் அர்குன் என்பாற்கு வகுத்துக் கூறினர். அத்திட்டத்தின் வழி, மலபாரினின்று வரும் வாசனைத்திரவிய வர்த்தகத்தைப் பாரசீகக் குடாவிற்கு எவ்வாறு மாற்றலாமென்பதையும், அங்கிருந்து தரைமீதாக வட இலவாந்துத் துறைகளுக்கு அதனைச் செலுத்தலாமென்பதையும் அவர்கள் விளக்கிக் காட்டினர். இவ்வட இலவாந்துத் துறைகளிலே, வெனிசியரைச் செனுவியர் பலியோலகியின் ஆதரவு கொண்டு முன்னமே வென்றடிப்படுத்தியிருந்தார் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. இந்திய வர்த்தகம் செங்கடல்வழி நிகழாவகை தடுத்தற்குப் பாரசீகக் குடாவிலே செனுவியர் ஒரு கடற்படையை நிறுவுதல் வேண்டுமென்பதே அத்திட்டத்தின் கருத்தாகும். இத்திட்டம் கைகூடிற்றிலது. ஆயினும், இந்திய வர்த்தகத்தைச் செனுவா என்றுமே மறந்ததில்லை. இசுலாமின் ஆதிக்கத்தையும் வெனிசின் முற்றுரிமையையும் முறியடித்தற்கு இந்தியாவிற்குக் கடற்பாதை காண்பதே சாலச்சிறந்த வழியாகச் செனுவாவிற்குத் தென்பட்டது. இத்தகைய பாதை காண்டற்கு ஐரோப்பியக் கடலோடிகள் செய்த முந்தை முயற்சிகளை அட்சன் என்பார் விவரமாகக் கூறியுள்ளார். அம்முயற்சிகளுள் எமது கவனத்தை ஈர்ப்பது உகோலினெ த விவால்டோ என்பான் மேற்கொண்ட கடற் பயணமாகும். இந்தியாவிற்குக் கடற்பாதை காணுங் குறிப்பொடு, 1291 இலே செனுவாவிலிருந்து புறப்பட்டு, சிபுரோத்தரைக் கடந்து, ஆபிரிக்கக் கரையோரமாக அவன் கப்பலூர்ந்து சென்றான். இத்தகைய முயற்சிகள் ஒருபுறமாக, இறுதியிலே செனுவியர் இசுப்பெயினது ஆதரவோடு அமெரிக்கக் கண்டத்தைக் கடந்து பசிபிக்கை அடைந்தமையாலும், போத்துக்கலின் ஆதரவு

கொண்டு நன்னம்பிக்கை முனையை வளைந்து இந்து சமுத்திரத்தை அடைந்த மையாலும், வெனிசியரின் முற்றுரிமையையும் இசலாமியரின் முற்றுகையையும் உடைத்தெறிந்தனர்.

நாவாயோட்டுங் கலையைச் செம்மைப்படுத்துவதிலும், ஆபிரிக்காவின் மேற் குக்கரையை ஆராய்வதிலும் எழுபத்தைந்தாண்டுக்காலமாய் அயரா முயற்சி செய்தபின்னரே இவ்விலட்சியம் நிறைவேறியது. இம்முயற்சி தனிப்பட்ட ஒரு வனது முயற்சியாய் அமையாது, பலரின் ஒத்துழைப்பாய் அமைந்தது. ஆயி னும், போத்துக்கல் இளவலாகிய என்றியெனும் இளவரசனே ஈண்டு விதந் துரைத்தல் வேண்டும். கடலோடி என்றி எனப் பட்டம் பெற்ற இவ்வீரன் ஏறக் குறைய நாற்பதாண்டுக்காலமாய் விரிந்த அடிப்படையிலே திட்டமிட்டு ஓவா முயற்சி செய்தற்கு ஊக்கமளித்தும், வழிகாட்டியும், பொருளுதவி செய்தும் வந்தனன்.

அக்கால வரலாற்றிலே தன் ஊக்கத்தால் உயர்வு பெற்ற கடலோடி என்றி யின் குணவியல்பையும் செயற்கரிய செயல்களையும் ஆராயு முன்னர், இப்பிரச் சினையின் இருவேறு இயல்புகளை நாம் வற்புறுத்திக் கூறுதல் வேண்டும். ஐபீரி யத் தீபகற்பம்—அங்கும் சிறப்பாகப் போத்துக்கல்—செனேவாவின் மரபைத் தன் அரும்பெறலுரிமையாகப் பெற்றதெனலாம். செனேவியப் பெருமகனாகிய மனுவேல் பெசன்கா என்பான் 1317 இலே போத்துக்கேயக் கடற்படைக்கு மரபுவழித் தளபதியாக அமர்த்தப்பட்டான். போத்துக்கேய மன்னனுடைய கடற்படைக்கு வேண்டிய, பயிற்சி பெற்ற மாலுமிகளைக் கொடுத்துதவுதற்கு அவன் முன்வந்தான். பெசன்கா தனிப்பெரும் ஆற்றல் படைத்த ஒருவன் போலும்—1319 அளவிலே, பெரும் ஆதனங்களையும் ஒதமாரா எனும் நகரை யும் அவற்கு மன்னன் உவந்தளித்தவாற்றைக் காண்கிறோம். பெசன்கா நிய மித்த கப்பற்றளபதிகள் பலர், அவனைப் போன்றே செனேவியப் பெருமக்களா யிருந்தனர். ஒரு நூற்றாண்டுக்காலமாக வளர்ந்துவந்த உறவினால், கடலோடு மார்வத்தைச் செனேவியரிடமிருந்து போத்துக்கேயர் கிரகித்ததோடு, கிழக் குலகிற்கு ஒரு புதுப்பாதை காணும் பெரும் பணியையும் அன்னர் மேற்கொண் டனர். இப்பணியில் ஈடுபடுதற்கு, புவியியற் சார்பிலே போத்துக்கல் அமைந் திருந்தவாறு பெரிதும் வாய்ப்பாக இருந்தது. ஆபிரிக்காவின் மேற்குக் கரையை ஆராய்ந்து படமமைத்தற்கும், ஆபிரிக்க முனையை வளைந்து கடற் பயணஞ் செய்தற்கும் இலிசுபனைப்போல் வாய்ப்பான துறை ஐரோப்பாவிற் பிறிதில்லையெனலாம். ஆனைமருப்பினும் பேரீந்துக் கனியினும் நடைபெற்ற ஆபி ரிக்க வர்த்தகமானது வந்துறுதற்கு ஏற்ற அங்காடியாக இலிசுபன் நகரம் பதினான்காம் நூற்றாண்டளவிலே அமைந்துவிட்டது.

புத்துலக ஆராய்ச்சியிற் செனேவா வகுத்த மாபினைத் தன் அரும்பெறலுரி மையாகப் பெற்றவாறே, இசுலாமிற்கு மாறுகக் கிறித்தவத்தைப் பரப்பும் தலை யாய நாடாகவும் பதினைந்தாம் நூற்றாண்டிற் போத்துக்கல் விளங்கியது. கிழ

வைப்போர்க்கு ஊற்றமளித்த ஆர்வமானது ஐபீரியத் தீபகற்பத்திலே பொன் ருது நின்றதுமன்றி, பதினேந்தாம் பதினாறும் நூற்றாண்டுகளிலே மேலும் வலுப் பெற்று வளர்ந்தது எனலாம். மேற்கு ஐரோப்பிய நாடுகள் பிறவற்றைப் பொறுத்தவரையில், இசுலாமானது எங்கோ தொலைவினுள்ள ஓர் ஆபத்தாகவே காணப்பட்டது. ஆயின் ஐபீரிய நாடுகளைப் பொறுத்தவரை—கசுற்றீல், அரகன், போத்துக்கல் எனுமிந்நாடுகளுக்கு—இசுலாமானது கழிபெரும் வலியும் விழிப்புமுடைய ஒரு பெரும் ஆபத்தாய் அண்மையில் நின்றது. பதிதனுகிய முகமதியனுக்கெதிராகப் பிறமக்கள் கொண்ட மதாபிமானம் விட்டுவிட்டுத் தோன்றுவதாய்க் காணப்பட்டது. ஆயின் ஐபீரியத் தீபகற்கத்தின் அகத்தே இசுலாமிய இராச்சியங்கள் இன்னும் இருந்து செழித்தோங்கியமையால், ஐபீரிய மக்கள் வேறுவழியின்றி வாளுள் முழுவதும் இசுலாமுக்கெதிராக அறப் போர் விளைக்கும் பான்மையராயினர். நாட்டபிமானமும் சமய பத்தியும் படைத்த ஐபீரியனுக்கு—அவன் இசுப்பானியனுயினும் போத்துக்கேயனுயினும்—இசுலாம் மதத்துக்கெதிராகப் போராடுதல் தவிர்க்க முடியாத ஒரு மறப் பணியாயிற்று. அதுவே அவன் செய்ய வேண்டிய சமயக் கடமையும், அரசியற் பொறுப்பும் ஆயிற்று. ஆதலின் தனிப்பெரும் பகையாயமைந்த இசுலாம் மதத்தை எவ்வெவ்விடத்தும் போராடி மடக்குதல் வேண்டும். இவ்வுண்மையை நாம் என்றும் உளத்திற் கொண்டாலன்றி, ஆசியாவிற் போத்துக்கேயரின் செயல்கள் பலவற்றை விளங்கிக் கொள்ளுதல் இயல்வதாகாது.

இதுகாறுங் கூறிய அமிசங்களெல்லாம் வீரனை கடலோடி என்றியில் ஒன்றித்துக் காணப்பட்டன. முதலாம் யோனுக்கு மூன்றும் மைந்தனுய்ப் பிறந்தவன் தொம் என்றி (1394-1460). நாட்டுப் பெரும் மீளியாகிய தனே அல்வாரசு என்பானுடைய வீரப்பெரும் மரபிலே பயின்று வளர்ந்த என்றி, மறப்பண்பு மிக்க கிறித்துவப் பத்திநெறியிலே ஊறியவனுகி, இசுலாம் மதத்திற் கடுங்காழ்புக் கொண்டவனுயிருந்தான். இசுலாமியர்க்கெதிராக அவன் கொண்ட பகையுணர்ச்சி காரணமாக, இளைஞனுயிருந்த காலத்திலேயே செயற்ருமேற் படைநடாத்திச் சென்று 1415 இல் அதனைத் தாக்கிக் கைப்பற்றினன். இசுப்பெயினுள் இசுலாம் 711 இலே புகுதற்கு வாயிலாய் அமைந்ததும், ஆபிரிக்காவில் இசுலாமிற்கு ஒரு தளமாய் அமைந்ததுமான அவ்விடத்தின்மேல் முதன் முதலாக நிகழ்ந்த தாக்குதல் அதுவேயென்பதை நாம் நினைவிற்கொள்ளல் வேண்டும். இம்முதற்படையெழுச்சியில் வெற்றியீட்டியது போலவே மீண்டும் வெற்றியீட்டலாம் எனும் நம்பிக்கையோடு, தஞ்சியர்மேல் 1437 இல் இரண்டாம் தாக்குதல் அவன் நிகழ்த்திய காலை, அது படுதோல்வியாக முடிந்தது. ஆயின் இக்காலத்துக்கு முன்னமே என்றி தன் வாழ்க்கைப்பணி இன்னதெனத் தேர்ந்துகொண்டான். குறுகிய போர் முயற்சிகளில் அவன் ஈடுபாடு மென்மேலுங் குன்றுவதாயிற்று. இசுலாமை மடக்கியொடுக்கி, இந்துசமுத்திரம் வரையும் கிறித்துவ உலகை அகலச் செய்தற்கு ஒரு மகத்தான திட்டஞ் சூழ்

வதே 1417 இலிருந்து அவன் கொண்ட குறிக்கோளாயிருந்தது. இந்தியர் பலர் அவனைத் தரிசிக்க வந்தாரென்றும், அவனுடைய கப்பல் சிலவற்றில் இந்தியர் பயணஞ் செய்ததும் உண்டென்றும் அவனுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஆசிரியனான அசுராரா கூறியுள்ளான். இந்தியாவிற்கு ஒரு வழி காண்டல், அவன் மனத்தை விட்டகலாத ஒரு **மருட்கை** போன்றிருந்தது. இப்பணியைச் செய்து முடித்தல் இறைவன் இட்ட கட்டளையாகுமென அவன் நம்பினனெனப் பாரோசும் போத்துக்கேய வரலாற்றறிஞர் பிறரும் கூறியுள்ளனர். கிறித்துவ சங்கத்திற்கு மாண்புறு அதிபனாயிருந்த என்றி, அச்சங்கத்தின் மூலபலமனைத்தையும் அப்புனிதப் பணிக்குப் பயன்படுத்தினன். இத்தகைய மூலபலமெல்லாம் படைத்திருந்த என்றி சாகிரசு முனையிலே தனது மாளிகைக் கண்ணே கணிதவியலாரையும், தேசப்படம் வரையுநரையும், வானியல் வல்லாரையும் ஒருங்குகூட்டி, மற்றுச் சேய்மையிலுள்ள தீவுகள்பற்றி அறிந்திருந்த சோனகச் சிறைவரின் துணையுங் கொண்டு, நாவாய்க்கலையைக் கசடறப் பயில்வதில் ஈடுபட்டான். அவனெடு இணைந்து பணிபுரிந்தோருள் ஒருவன் யகுடா கிரெசுக்கூசு என்பான். வல்லுநன் யக்கோம் எனும் பெயரையுங் கொண்ட யகுடா, நாட்டுப்படம் அமைப்பதிலும், கப்பற்கருவிகள் செய்வதிலும் நிபுணனாயிருந்தான். கிழக்குலகிற்குப் பயணஞ் செய்வதில் வெற்றி காண்டற்கு இன்றியமையாத முதற்படி, ஆபிரிக்கக் கரையை ஆராய்ச்சி செய்தலே யென்பதை என்றி ஆகியிலேயே உணர்ந்து கொண்டான். ஐரோப்பியக் கப்பலோட்டியெவனும் சென்றறியாத மனித சஞ்சாரமற்ற ஒரு வலயம் பசடோர் முனைக்குத் தெற்கே யிருந்தது. பலநூறு மைல் பரந்து கிடந்த அப்பாலைநிலத்துக்கு அப்பாலேயிருந்த நாட்டைக் கண்டறிந்தாலன்றி, நன்னம்பிக்கை முனையை அடைதலும், மற்று இந்து சமுத்திரத்தைச் சென்று சேர்தலும் ஒல்லாக் காரியங்களாகும். பசடோர் முனையைத் தாண்டிச் சென்றால், தாம் எல்லோரும் கரிய மேனியராய் மாறிவிடுவர் என்றஞ்சியதனால், அம்முனையைக் கடக்க மானுமிகள் மெத்தவுந் தயங்கினர் என்பர். மதீரா 1420 இலும், அசோசுத் தீவுகள் 1431 இலும் கண்டறியப்பட்டன. பதினைது முறை அடுத்தடுத்து முயன்றதன் பின்னர், கில் ஈனசு என்பான் தலைமையிற் சென்ற ஒரு கப்பற் கோட்டி, பசடோர் முனையை 1434 இலே தாண்டிச் சென்றது. திம்பக்திலிருந்து வந்து சேரும் பொன்னுக்கு அங்காடியாகவிருந்த கினிக்கரையையும் அவன்றன் கப்பல்கள் சென்றடைந்தன. அவனுடைய தளபதி யொருவன் புவிநடுக் கோட்டையுங் கடந்தான். மனித வாழ்க்கையின் வாடையுமிலாத, வெருத்தருகின்ற சகராப் பாலைநிலத்துக்கு அப்பாலிருந்த நாடுகள் அடுத்து ஆராயப்பட்டன. போத்துக்கேய நாவாய்க்கலையின் அரும்பெருஞ் சாதனை இதுவெனல் பொருத்தும். ஆபிரிக்க முனைய வளைந்து செல்லலும், இந்தியாவிற்குக் கடல்வழி காண்டலும் அவ்வழி கைகூடினவாதலின்.

வேட்டுமுனை வரை ஆபிரிக்கக்கரையில், என்றியின் ஆட்சியே வலுப்பெற் றிருந்தது. அவன்றன் வாழ்க்கைச் சரிதையை எழுதப்புகுந்த அசுராரா கூறி யது காண்க :

" அலெக்சாந்தரும் சீசரும் நிறுவிய பேராதிக்கத்தின் பின்னர், தனது வெற்றி யின் சின்னங்களைத் தனது நாட்டிலிருந்து இத்துணை தொலைவில் விட்டுச் சென்ற பிற மன்னன் எவனும் உலகில் இருந்ததில்லை யென்பது திண்ணம் ".[1] இக்கூற்று மிகையாகாது.

பிறபல முறைகளிலும் கடலோடி என்றி அரும்பெருஞ் சாதனைகளை ஈட்டி னன். வட ஆபிரிக்காவிலே பரந்து, இந்தியாவையும் ஐரோப்பாவையும் இணைக் கும் பாதைகளுக்குக் குறுக்கே நின்ற முசிலிம் ஆதிக்கத்தை மடக்கியொடுக்கு வதே அவன்றன் சாதனைகளின் தலையாய நோக்கமாயிருந்தது. கப்பலோட்டி களும் மாலுமிகளும் பயிலுதற்கு முதன்முதலாக ஒரு கழகத்தைத் தாபித்தவன் அவனே—காலப்போக்கில் அது ஒரு பெரும் நாவாய்க்கலைக்கோட்டமாக வளர்ந் தது. அறப்போர் விளைக்கும் ஆர்வத்தோடு ஆழிகளை வென்றடிப்படுத்துந் துணி வுடைய வீரர் பலரை அக்கழகத்திலே சேர்த்துப் பயிற்சியளித்தான் கடலோடி என்றி. இக்கழகத்திலே புத்தம்புதிய விஞ்ஞானக் கருத்துக்கள் மாலுமிகளுக்குப் போதிக்கப்பட்டன. அக்காலத்திலே பொதுவழக்கிலிருந்த கப்பல்களைக் கொண்டு நெடுந்தூரம் பிரயாணஞ் செய்ய வியலாதென்பதை என்றி உணர்ந்தான். பாரங் குறைந்ததாயினும், உறுதி மிக்கதும் வேகமாகச் செல்லக்கூடியதுமான 'காவெல்' எனுஞ் சிறுகலத்தை அவன் கட்டி முடித்தான். பிரங்கிதாங்கி மெதுவாகச் செல்லும் பென்னம் பெரிய 'கலியன்' எனும் மரக்கலங்களையும் அவன் திருத்தியமைத்தான்.

இந்தியாவரை கண்டறிந்த பிரதேச மனைத்துக்கும் உரிமையளிக்கும் பத்திர மொன்றை 1454 இலே போப்பாண்டவர் ஐந்தாம் நிக்கலசிடமிருந்து அவன் பெற்றான். கிழக்குலகிலே போர்த்துக்கேயரின் முற்றுரிமையை வகுத்துக் கூறிய மூன்று பத்திரங்களுள் முதல்வதான இத்திருநிருபம் சாலவும் முக்கியமான தாதலின், அதனை இங்கு எடுத்துக் கூறுவம் :

" போர்த்துக்கேய இளவரசன், எம் அருமை மைந்தன் என்றி, புகழ்சான்ற தன் தந்தை யோன் மன்னனது அடிச்சுவட்டைப் பின்பற்றி, துணிவுடைக் கிறித்துவவீரன் ஒருவனைப் போன்று மன்னுயிர்கள்மீது கொண்ட அபிமானத் தால் உந்தப்பட்டு, அதிதொலைவிலுள்ள அறியப்படாத நாடுகளிலே தேவனது

---

1. " அடிமைகளைப் பிடிக்கு முகமாகக் குரொன்காலோ த சிஞத்திரா என்பான் ஆபிரிக்கா வுக்குப் பயணஞ் செய்தகாலை, பசடோர் மூனைக்கப்பால் அட்லின் என்னும் பெயருடைய ஒரு நீக்கிரோத் தலைவனைப் பிடித்தான். இந்த அட்லின் ஒரு விந்தை மனிதனைக் காணப்பட்டான். பல நாடுகளிற் பயணஞ் செய்தவன் என்பதோடு, அவன் சோனக மொழிகளிற் பேசும் திறமையும் உடையவனாயிருந்தான். சாதாராவைக கடந்து சூடானுக்கும் செங்கடற்கும் சென்ற " கரவன்கள் " பற்றித் தொம் என்றிக்குக் கூறியவனும் இந்த அட்லினே.

நாமத்தைப் பரப்பி, தேவனுக்கும் கிறித்து நாதருக்கும் பகைவரான பதிதப் பதர்களை—சராசனரும் அஞ்ஞானிகளும் போன்றுரை—கத்தோலிக்க மதத்திலே சேர்த்துள்ளான் என்பது கேட்டு யாம் பெருமகிழ்வற்றேம்."

"அலைகடலில் அமைந்துள்ள, மனிதர் வாழாத் தீவுகளிலே கிறித்துவக் குடும்பங்களைக் குடியேற்றி, பரிசுத்த அற்புதங்களைக் கொண்டாடும் பொருட்டுத் தேவாலயங்களுக்கு ஆங்குக் கால்கோள் செய்தபின்னர், குணபுலத்துத் தொலை தீரங்களுக்குக் கடல் கடந்து சென்றோர் மனித வரலாற்றிலே யாரும் இலர் என்பதை உளத்துக்கொண்டு, கிறித்து நாதர்க்கு ஏற்கவே பணிந்துள்ளதாகக் கூறப்படும் இந்தியாவரை கடல்வழிச் செல்லுதற்குத் தன் முயற்சியால் வழி வகைகாண்டலே தேவனுக்குப் பிரீதியாகுமென இளங்கோ என்றி நம்பினன். அம்மக்களோடு அவன் தொடர்புகள் கொள்வாயின், மெய்ச்சமயத்துக்குப் பகைவரானோர்க்கு மாறுக மேலீப்புலத்துக் கிறித்துவர்க்கு உறுதுணை செய்யுமாறு அன்னாரை அவன் தூண்டுவன். அதே வேளையில், இசுலாம் எனும் தீரா நோயாற் பீடிக்கப்படாத நாடுகளை அவன் அரசனுடைய அனுமதியோடு அடிபணியச் செய்து, கிறித்துநாதரின் நாமத்தை ஆங்கு ஓதியுணர்த்துவன்."

"இவ்வாறுக, சென்ற இருபத்தைந்தாண்டுகாலமாக, போத்துக்கேயத் தானைகளின் ஆதரவின்றி, கழிபெரும் இன்னல்களிடையே, மாபெரும் சோதனைகள் வந்துற்றபோதும், வேகமாய்ச் செல்லும் 'கரவெல்களிலே' ஆழிகள் கடந்து, அந்தாட்டிக்குத் துருவத்துக்கு இப்பாலுள்ள மத்திய பிரதேசங்களை ஓயுதலின்றி ஆராய்ந்து, பற்பல கடல்களைத் தாண்டிச் சென்றபின், கினி மாகாணத்தை இறுதியில் அடைந்தபின், நைல் எனப் பொதுவாக அறியப்பட்ட நதியின் முகம் வரை முன்னேறியுள்ளான்."

"சராசனராயினும், பதிதராயினும் கிறித்துநாதர்க்கு மாறுளோரின் ஆட்சிக் குட்பட்ட நாடுகள் அனைத்தையும் தாக்கவும் வெல்லவும் அடிப்படுத்தவும் முற்ற முடிந்த உரிமை, நாம் தீர்க்காலோசனை செய்ததன் பின்னர், திவ்விய நிருபங்கள் மூலமாக அப்பொன்சோ மன்னற்கு உவந்தளித்துள்ளேம். அந்த அப்பொன்சோ மன்னனும், இளங்கோவும், அவர் வழி வந்தோரும் கீழ்க்குறிப்பிட்ட தீவுகளையும் துறைகளையும் கடல்களையும் அடிப்படுத்தித் தனியுரிமையோடு ஆளல் வேண்டுமெனும் எமது விருப்பைத் திவ்விய நிருபங்களால் நாம் ஈண்டு வெளியிடுகின்றோம். அன்றியும், மெய்ந்நம்பிக்கையுடைய கிறித்துவெவரும், அந்த அப்பொன்சோ மன்னனதும் அவன் வழிவந்ததோரதும் அனுமதியின்றி அவர்தம் இறைமையுரிமையை மீறலாகாதென்று இத்தாற் றடுக்கப்பட்டுளர். ஏற்கவே வென்றடிப்படுத்தப்பட்டனவும் இனிமேல் வென்றடிப்படுத்தத் தக்கனவுமான நாடுகளில் பசடோர் முனையும் நொன்முனையும் கினிக்கரையுமாகிய எல்லைகள் வரை பரந்துள்ளனவும், குணபுல முழுவதும் என்றென்றும் எதிர்காலத்தும் அப்பொன்சோ மன்னனுடைய இறைமைக்குட்பட்டனவாகும்".

ஐந்தாம் நிக்கலசு அளித்த இக்கொடையை உறுதிப்படுத்துமுகமாக, மூன்றாம் கலிக்தசு இரண்டாந் திருநிருபமொன்றை 1456, மார்ச்சு 13 இற் பிரசித்தஞ் செய்தார். இவ்வாறுக, பதினைந்தாம் நூற்றாண்டிலே மறுக்கமுடியாத தனிப்

பெருஞ் சட்டவரிமையை என்றி பெற்றான். மேலும், தன் பணிக்குத் தூண்டு கோலாயிருந்த அரசியல் நோக்கத்தையும் மதக்குறிக்கோளையும் அவ்வழி உலகுக்கு எடுத்துரைத்தான். போப்பாண்டவரின் திருநிருபத்திலே தெள்ளத் தெளிவாய் நின்று, ஒரு நூற்றாண்டுக்காலமாகப் பூட்கையை ஊக்கியவை யாவெனின், பதிதநாடுகளைக் கிறித்துவ நெறிக்கு அடிப்படுத்தும் ஆன்மிக ஆர்வமும், இசுலாம் மதத்தைப் பிற்புறத்திருந்து தாக்கி அதன் கருவறுக்குந் திவிரமான அபிமானமுமேயாம்.

போத்துக்கல் மேற்கொண்ட பணியின் அடுத்தபடியினை, 1494 யூன் 9 இல் ஒப்பேறிய துரோடசிலாசுப் பொருத்தனை குறிக்கின்றது. இப்பொருத்தனை வாயிலாய், இசுப்பெயினும் போத்துக்கலும் தத்தம் ஆட்சிப்புலத்தின் எல்லையை, வேட்டுமுனைத் தீவுகட்கு மேற்கே 370 இலீக்குத் தொலைவிலமைந்த ஒரு கற்பனைக் கோட்டாற் குறித்தன. இவ்வெல்லையைப் போப்பாண்டவர் அலெக் சாந்தர் உறுதிப்படுத்தினர். ஐபீரிய அரசுகளிரண்டும் கண்டறிந்த நாடுகளனைத் தையும் பிரிக்கும் இறுதி எல்லையாய் அதுவே அமையலாயிற்று.

இதற்கிடையிலே, இளங்கோ என்றி காட்டிய வழிப்படி சென்ற கடற்படை யெழுச்சிகள் மென்மேலும் முன்னேற்றங் காண்பவாயின. 1487 இற் பதோலமியு தயசு என்பான் புயன்முனையைக் கண்டுபிடித்தான்—'புயன்முனை' நன்னம் பிக்கை முனையாக மாற்றப்பட்டது பொருத்தமே. இவ்வாறாக இந்தியாவிற்குக் கடல்வழி காணும் காலம் பிறந்தது. அக்கனவை நனவாக்கும் பெறற்கரிய பேறு 'பாக்கியவான்' எனப் பட்டம்பெற்ற தொம் மனுவெல் என்பாற்கு உரிய தாயிற்று. நெடிது நிகழ்ந்த விவாதத்தின் பின்னரே, அம்மகத்தான கடற் பயணத்தை மேற்கொள்ளுதற்கு முடிவு செய்யப்பட்டது. இத்திட்டம்பற்றி ஆராய்ந்த மாண்புறு கழகத்திலே கடுமெதிர்ப்புத் திவிரமாகக் காணப்பட்டது. அத்திட்டம் வெறுங் கானல்நீரேயென்றும், அரசின் பணத்தைப் பாழ்படுத்தக் கூடுமென்றும் தலையாய உறுப்பினர் பலர் வாதஞ் செய்தனர். அக்கடற்பயணத் திற்குச் சார்பாகத் தொம் மனுவெல் தானே முடிவு செய்தான். படைக்கலம் பூண்ட மரக்கலங்களே உடனும் அடுக்குப்பண்ணுமாறு அவன் கட்டளையிட்டான்.

தேகசு நதியின் முகத்தமைந்துள்ள பெலம் எனும் துறைமுகத்திலிருந்து 1497 யூலை 8 இல் நான்கு கப்பல்கள் புறப்பட்டன. மன்னனது மாளிகையைச் சேர்ந்த விழுமியோனை வசுக்கோ த காமா என்பானே அக்கப்பற் கோட்டிக் குத் தலைமை தாங்கினன். இருபது பீரங்கிதாங்கிய கொடிமரக்கலமாகிய 'சான் கேபிரியல்' என்பதும், வசுக்கோவிற்குத் தம்பியாகிய போல் த காமாவின் தலைமையில் இயங்கிய 'சான் இறப்பியேல்' எனுந் துணைக் கப்பலும் ஆறுண்டு முன்பே கட்டப்பட்டவை. அவற்றைக் கட்டி முடித்தோன், போத்துக்கேயக் கடலோடிகளுட் சிறந்தோனாகிய பதோலமியு தயசு என்பானே. இனி, வேக மாகச் செல்லக்கூடிய ஒரு 'கரவெலே' மூன்றாவது கப்பலாய் அமைந்தது. 'தாக்கும் நாவாயாகிய' நான்காவது கப்பல், பீரங்கியதிகாரியான கொன் சாலோ நூனசு என்பான் தலைமையிற் சென்றது. தளபதி-நாயகத்தின் கப்ப

விலே பறந்த கொடியில், கிறித்துநாதரின் பெருஞ் சிலுவையொன்றும், ஒரு பீரங்கியும் தீட்டப்பட்டிருந்தன. கிழக்குலகை வந்தடையப் போகும் புதிய வல்லரசின் சின்னங்கள் அவை.

த காமாவின் பயணம் பற்றி இங்கு நாம் விரித்துரைக்கவேண்டியதில்லே. இளங்கோ என்றியின் பெருங் கழகத்திலே பயின்ற மாலுமிகளும் நாவாய்க் கலேஞரும் அவனுக்குத் துணேயாய்ச் சென்றனர். ஆபிரிக்க முனேவரை கடல்களே யெல்லாம் அவர்கள் அறிந்தோரே. ஆபிரிக்காவின் கிழக்குக்கரையைப் பொறுத்தவரை, மொசாம்பிக்குவரை பயணஞ் செய்தலிற் பேரிடர்ப்பாடுகள் தோன்றியதில்லே. இந்து சமுத்திரத்தைக் கடப்பதில் இந்திய வலவன் ஒருவன், தளபதி-நாயகத்திற்கு வழிகாட்டிச் சென்றான். மிலிந்தி மன்னனே அவனேத் துணேக்கனுப்பினன் என்ப. இந்துசமுத்திரத்தையும், ஆபிரிக்கக் கரைப்புல மனேத்தையும் பல நூற்றாண்டுக்கால முன்பாகவே இந்தியக் கப்பலோட்டிகள் ஆராய்ந்திருந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்தியக் கப்பல்கள் கிழக்காபிரிக்கத் துறைகளுக்குச் சென்று வருதல் வழக்காயிருந்தது; மடகாசுக் காரும் அவற்றுக்குத் தெரிந்த ஒரு தீவே. ஆயின், அவை ஆபிரிக்க முனேயை வனேந்து மேலேக்கரைக்குச் சென்றதுண்டா வென்பது எமக்குத் திண்ணமாகத் தெரிந்த தொன்றன்று. அட்சன் கூறியவை சில இங்குக் குறிப்பிடத்தக்கன. 'அக்கடல்களிலே (இந்து சமுத்திரத்திலே) திரிவோர், மேலேக்கடல்களுக்குச் செல்லுமோர் வழி பற்றி அறிந்திருந்தனரென்றும், அதனேக் காட்டும் நினேவுக் குறிப்பொன்றை அம்மரத்துவர் கண்டதுண்டென்றும்' கோவில்கம் கேள்விப் பட்டதாக அட்சன் கூறியுள்ளான். பிரா மவுரோ என்பான் வரைந்த தேயப் படங்களேக் குறிப்பிட்டு இவ்விடயத்தை அட்சன் மேலும் விளக்குவன். 'இந்தியாவிலிருந்து ஆபிரிக்காவின் தென்முனே கடந்து சென்ற இரு கடற் பிரயாணங்கள் பற்றிய பரம்பரைக் கதையைப் பிரா மவுரோ பதிந்துவைத் துளன். தென்முனேயைத் தியாபு எனும் பெரியாற் குறிப்பிட்டு, ஏறக்குறைய 1420 ஆம் ஆண்டளவிலே இந்தியக் கப்பலொன்று புயற்காற்றால் அலேக்கப்பட்டு, அத்தியாபு முனேயை அடைந்து, தரை காணுது, நாற்பது நாட்களில் 2000 மைல் தூரம் மேலேக் கரையிற் சென்றதென அவன் கூறுவன். இன்னும், நம்பத்தகுந்த ஒருவன், தான் இந்தியாவிற் கப்பலேறிச் சோபாலாவைக் கடந்து, மேற் காபிரிக்கக் கரையிலே காபின் எனுந் தலத்தை அடைந்தவாற்றைப் பற்றித் தனக்கு (மவுரோவிற்கு) கூறியதாக' மவுரோ எழுதியுள்ளார். எனவே, ஆராய்ந்து படமமைத்த ஒரு கடலே இந்துசமுத்திரம் என்பதும், அதன் வழி கள் அறியப்பட்டிருந்தன என்பதும் கண்கூடு. ஆதலின், பாலே நிலத்தையடுத்த மேலேக் கரைகளேக் கடந்து புவிநடுக்கோட்டையடைந்த தளபதிகளும், ஆபிரிக்க முனேயைக் கண்ட தயசும் ஈட்டிய சாதனேகளோடு ஒப்பு நோக்க, வசுக்கோ த காமா கோழிக்கோட்டை வந்தடைந்தமை, நாவாயோட்டற் சாதனேயென்ற அளவிலே, அம்மூந்தையோரின் வெற்றிக்கு ஒப்பாகாது. எனினும் ஒருபெருங் கனவு நனவாயிற்று; எழுபதாண்டுக் காலமாகச் செய்த அரும்பெரும் முயற் சிக்கு அதுவோர் சிகரமாயமைந்தது.

போத்துக்கேயரின் முயற்சிக்கு ஊக்கமளித்த ஊற்றங்கள் பற்றி முன்னமே நாம் ஆராய்ந்துள்ளோம். இசுலாமின் அரசியல்வலிமையைத் தகர்க்கும் நோக்கொடு சூழப்பட்ட பெரும் விரகு; கிறித்துவ நெறியை யாண்டும் பரப்புதல்; வாசனைத் திரவிய வர்த்தகத்தை முற்றுரிமையாக்கும் வேட்கை என்றிவையே அவ்வூற்றங்களாகும். த காமாவின் வருகை தொட்டு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக் காலம்வரை போத்துக்கேயரின் பூட்கையைப் பின்னின்று ஊக்கியவை இவையே. ஆசியாவொடு போத்துக்கேயர் கொண்ட தொடர்புகளை இவற்றின் சார்பிலேயே நாம் ஆராய்தல் வேண்டும்.

'சான் கேபிரியல்' இந்து சமுத்திரத்தில் வந்துற்றபோது, பிறிதொரு புரட்சிகரமான காரணியும் கிழக்குலகில் வந்து புகுந்தது. அதுவே பீரங்கி தாங்கிய கப்பலாகும். போத்துக்கேயக் கப்பல்களின் படைக்கலவகைகள், இந்து சமுத்திரத்திலே முன்பு கண்டு கேட்டறியாத ஒரு புதுமையாயிருந்தன. இந்தியப் பகைவர் ஈடுகொடுக்க வியலாத தீர்க்கமான ஒரு பலத்தை அவை போத்துக்கேயர்க்குத் தப்பாது அளித்தன. கடலிலே பீரங்கிப் பிரயோகஞ் செய்யவல்ல —ஐரோப்பியரல்லாத—ஒரேயொரு சாகியம் ஒற்றுமென் துருக்கவினமேயாகும். ஆயின், கோழிக்கோட்டிலே போத்துக்கேயர் கால்வைத்த ஞான்று, இந்து சமுத்திரத்திலே துருக்கருக்குக் கடற்படை யாதும் இருந்ததில்லை. இப்பேராபத்தைச் சுலுத்தான் உணர்ந்தபோது, இந்திய நாட்டிலே போத்துக்கல் காலூன்றி விட்டதோடு, ஓயாது தன் கடற்படைப்பலத்தைப் பெருக்கும் வாய்ப்பையும் பெற்றிருந்தது. ஆயின் துருக்கரோ தம் படைப்பலமனைத்தையும் இலவாந்திலே குவித்துவிட்டாராதலின், அது செய்ய முடியாது கலங்கினர். முக்கியமான இவ்விடயம்பற்றி அடுத்து ஆராய்வோம்.

நினைக்கெட்டாக் காலந்தொட்டு இந்து சமுத்திரமானது தீவிரமான வர்த்தகம் நிகழ்ந்த அரங்கமாய் இருந்து வந்துளது. வரலாற்றுத் தொடங்கிய காலந்தொட்டே இந்தியக் கப்பல்கள் அராபியக் கடலைக் கடந்து செங்கடல் வரை சென்று, ஆங்கிருந்த துறைகளிலிருந்து, எகிப்தொடும் இசுரவேலொடும் பிற மத்திய கிழக்கு நாடுகளொடும் நெருங்கிய கலாசார வர்த்தகத் தொடர்பினைப் பேணி வந்துள. பருவப் பெயர்ச்சிக் காற்றுக்களின் இரகசியத்தை இப்பாலுசு உரோமானியர்க்கு ஓது முன்னமே, இந்திய மாலுமிகள் அவற்றின் உதவிகொண்டு பபு—எல்—மண்டபுக்குச் சென்றதுண்டு. கிழக்கிலே, இந்திய மாலுமிகள் சேய்மையிலுள்ள போணியோவிற்குஞ் சென்று வந்தனர். மலாயாவிலும் இந்தோனேசியத் தீவுகளிலும் கம்போடியாவிலும் சம்பாவிலும் பிற கரைப்புலங்களிலும் 1,200 ஆண்டுகளாக இந்தியக் குடியேற்றங்கள் தழைத்தோங்கியிருந்தன. கொல்லத்தைத் தளமாகக் கொண்ட இந்தியக் கப்பல்கள் தென்சீன கரைகளுக்குச் சென்று வருதல் வழக்காயிருந்தது. திரைகடலோடித் திரவியஞ் சேர்க்கும் வாழ்க்கை, தென்னிந்தியத் தீபகற்பத்தின் வரலாற்றிற் பரம்பரையாகப் பயின்று வந்துளது.

இந்திய நாட்டின் கரைகளைத் தழுவாநிற்கும் ஆழ்கடல்களில், இந்திய மாலுமிகள் செலுத்திவந்த ஒப்புயர்வில்லா ஆதிக்கம், ஆதிக் கலிபாக்களின் ஆட்சியில் அராபியக் கப்பற்பலம் பெருகியபோது, தளரத் தொடங்கியது. ஆயினும், அராபியரும் இந்துக்களும் வெளிப்படையாகவே போட்டியிட்டனர். 'கடல்மீது இறைமை' யெனுங் கருத்து, குறுகிய தொடுகடல்களிலன்றிப் பிறவிடத்தே ஆசிரியர்க்குப் புறம்பான ஒரு கருத்தாகவே இருந்தது. மலாக்காத் தொடுகடல் மீது ஆதிக்கஞ் செலுத்திய சிறிவிசயப் பேரரசானது, அக்கடலொழுங்கைவழியாகச் செல்லுங் கப்பல்களை, இருநூற்றாண்டுக் காலமாகக் கட்டுப்படுத்தியாட்சி செய்தது உண்மையேயாயினும், திறந்த பெருங் கடல்களிலே நிகழும் கப்பற் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் உரிமையாதையும் எந்த ஆசிய அரசுங் கையாண்டதும் இல்லை; அத்தகு உரிமை கோரியதும் இல்லை. சோழப் பேரரசரும் சாமோரின்மாரும் (சேரமான்) போன்று மிகுபலம்படைத்த கடற்படைகளை வைத்திருந்த இந்திய அரசுகள், கரைப்புலங்காக்கவும் கடற்சோரம் அடக்கவும் போர் மூண்ட காலத்தே தானைகளைப் பாதுகாப்பொடு கடல்வழியாகக் கொண்டு செல்லவுமே தங்கடற்படைகளைப் பயன்படுத்தினவென்பது, முன்னங் கூறிய கடற்சுதந்திரம் பற்றிய கோட்பாட்டினின்றும் தெளிவாகின்றது. இவ்வழி, சிறிவிசயச் சைலேந்திர மன்னர்க்கும் சோழப் பேரரசர்க்குமிடையே நூற்றாண்டுப் போர் நிகழ்ந்த காலத்தில், சமர்கள் யாவும் தரைமீதே நடந்தனவாம். பெரும் பெருந் தானைகளைக் கப்பல்மூலமாய் மலாயாத் தீபகற்பத்திற்கு இட்டுச் சென்று, மலாய் நாட்டிலேயே அடுத்தடுத்துப் போர் மலைந்தான் சோழ மன்னன் என்ப. காதேசிற்கும் உரோமாபுரிக்குமிடையே நிகழ்ந்த கடற்சமர்கள் போன்று விரிந்த அடிப்படையிலே கடற்போர் வினைத்தல், போத்துக்கேயர் வருதற்கு முன்னர், இந்திய நாட்டில் அறியப்பட்டிலதென்றே தோன்றுகின்றது. தூரக் கடல்களிலே பொருதற்கு வேண்டும் அணியடுக்கு இந்தியக் கப்பல்களிலே இருந்ததில்லை.

அராபியரின் வர்த்தக முயற்சி ஒருகாலுமே அரசியற் சார்புடையதாக இருக்கவில்லை. இந்தியத் துறைகள் அனைவற்றிலும் அராபிய வணிகர் தடையேதுமின்றி வர்த்தகம் நடாத்தினர்; பசிபிக்குவரை சென்று சீனக் கரைக்குமே சென்றனர். ஒன்பதாம் நூற்றாண்டின் பின்னர், இந்தோனேசியத் தீவுகளின் வாசனைத் திரவிய வர்த்தகத்திற்காகக் கூர்ச்சரத்து வியாபாரிகளோடு அராபியர் கடும் போட்டியிட்டனர்போலும். அப்பொன்சோ அல்புகூர்க்கே மலாயக் கரையை அடைந்தபோது, அராபியரும் இந்துக்களும் சீனரும் அப்பிரதேசத்துச் சந்தைகளிலே வெளிப்படையாகப் போட்டியிடுவதை அவன் கண்ணுற்றமையால் மேற்கூறிய உண்மை புலனாகின்றது.

சீன யங்குகள் எனப்படும் பெருமரக்கலங்கள் மிகப் பழைய காலந்தொட்டு மலாயாக் கடல்களிலும், ஓரோவழி, இந்தியத்துறைகளிலும் தோன்றியதுண்டு. மிங்கு வமிசக்காலத்திலேயே சீனரின் கடலாதிக்கம் தெற்கு நோக்கி முறையாகப் பரவத்தொடங்கியது. யுங்கு லோ எனப் பெயர் படைத்த மிங்குப் பேரரசனது ஆட்சிக்கண்ணே, செங்கு கோ எனும் பெருந்தளபதியின் தலைமையிலே,

அடுத்தடுத்துப் பல கடற்படையெழுச்சிகள் தென்றிசை நோக்கி வழிப்பட்டதுண்டு. பேச்சு மொழிபெயர்ப்பாளனுய் அக்கோட்டியொடு கூடிச் சென்ற அண்ணகன், மா உவன் என்பான், தென் கடல்களிலே அத்தளபதி ஆற்றிய பயணங்கள் பற்றி விரிவான வருணனை எமக்கு அளித்துள்ளான். செங்கு கோ நடாத்திச் சென்ற, ஆமெடாவனைய பெருங் கப்பற்கோட்டிகளுள் ஒன்று, அறுபத்தைந்தினுக்குக் குறையாத கப்பல்களை உடையதாய், மாபெரிய கப்பல்கள் சில வற்றைக் கொண்டதாய் இருந்தது. இந்து சமுத்திரப் பரப்பிலே அவன் இலங்கைக்கும் கோழிக்கோட்டிற்கும் பன்முறை வந்ததுமன்றி, ஏடின் துறைவரை கப்பலோட்டிச் சென்றதும் உண்டு.[1] கடல்சார்ந்த இப்பெருமுயற்சி நெடுங் காலம் நீடித்ததில்லை. செங்கு கோ இறந்ததற் பின்னர், சீனர் மேற்கொண்ட ஒழுங்கினமைந்த கடற்பயணம் யாதும் பற்றி யாம் கேட்கின்றிலேம். எனினும், அம்மிங்குத் தளபதி மலாயாவிற்கு அடுத்தடுத்துச் செய்த பயணங்கள், அரசியல் விளைவு அற்றவையென்னல் சாலாது. 'வானுலகப் பேரரசு' என்று விதந்தோதப்படும் சீன வரசின் பெருவலிபற்றி மலாய் மன்னர் முதன் முதலாக அறிவாராயினர். அன்றியும், அதனை மீறிச் செல்லவும் நினையாது, அதற்குத் திறையளக்கும் நிலையினை விருப்பாயேற்று, பீக்கிங்கிலிருந்து கோலோச்சிய மாமன்னனது மேலாண்மையையும் ஒப்புக்கொண்டனர். இத்தகைய படிவுநிலை ஒரு நூற்றாண்டுகாலமாக, போத்துக்கேயப் போர்க்கப்பல்கள் வந்தடையுங்காலம் வரையும், நீடித்ததெனலாம். இந்த முசிலிங் கொற்றவர்களைப் போத்துக்கேய அதிகாரவர்க்கம் நடாத்திய பான்மை, பிற்காலத்தே, மேற்குப்புல வல்லரசுகளுக்கும் சீனப் பேரரசுக்குமிடையே நிலவிய உறவுகளிற் பாரதூரமான விளைவுகள் பயந்த வாற்றை உரிய காலத்திற் பின்னர்க் காண்போம்.

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிக்கண்ணை இந்துசமுத்திரத்திற் போத்துக்கேயர் செவ்வனே ஆதிக்கஞ் செலுத்திய ஞான்று (1499-1600) இந்தியத் தீபகற்பமானது பெருவலியும் உண்ணாட்டுறுதியும் படைத்த அரசுகளாக ஒழுங்குபட்டிருந்தது. துங்கபத்திரையாற்றுக்குத் தென்புறத்துள்ள பிரதேசமானது, முசிலிம் படையெடுப்புக்களை 1337 இல் எதிர்த்தற்காகக் கட்டுக்கோப்புடையதாய் அமைக்கப்பட்டது. அந்நூற்றாண்டின் இறுதியளவிலே, விசயநகரப் பேரரசானது தன்னிலை உறுதிப்படுத்தியதுமன்றி, குமரி முனைவரை பரந்துமிருந்தது.

---

1. "கோழிக்கோட்டிலே சீனக் களஞ்சியசாலை ஒன்று இருந்ததாகச் சன்சம் கூறினுலும் அக்கூற்றுக்கு ஆதாரம் யாதுமே இல்லை. அத்தகைய ஒரு சீனக் களஞ்சியசாலை இருந்ததென்றும், கோழிக்கோட்டு மன்னன் அதற்குச் செய்த அட்டூழியங் காரணமாகச் சீனப் பெருங்கடற் படை கோழிக்கோட்டுக்கு வந்து அந்நகரை அழித்ததென்றும் நெசுத்தோரியக் குருவானவர் ஒருவர் கப்ராலுக்குக் கூறிய கதையை ஆதாரமாகக் கொண்டதே சன்சமின் கூற்று. மேலும், "இந்தியாவுக்கெதிராக ஆக்கிரமிப்புச் செய்வதில், வரன்முறைப்படி சீனரே முந்தி வந்தோர்—போத்துக்கேயரல்ல" என்றவாறான ஒரு வாய்ப்பான கருத்தையும் சன்சம் தெரிவித்துள்ளார் (சன்சம் : மேலையுலகும் யப்பானும், ப. 44). கோழிக்கோட்டிலே சீனக்களஞ்சியசாலை இருந்ததுமில்லை ; செங்கு கோவின் கடற்படை அந்நகரைத் தாக்கியதுமில்லை. மா உவன் அப்பயணம் பற்றி எழுதிவைத்துள்ள கட்டுரையிலே அவ்வாறான தாக்குதல் பற்றிக் குறிப்பு யாதுமில்லை.

இரண்டாந் தேவராயர் ஆண்டகாலத்தில் (1422-46), அக்கால் இருந்த இந்திய அரசுகள் யாவற்றுள்ளும் அதுவே வலிமைமிக்கதாய் விளங்கிற்றெனலாம். அவ் வரசின் வலியும் வளனும் பற்றி, 1420 இல் ஆங்கு வந்துபோய இத்தாலிய யாதி கன் நிக்கொலோ கொந்தி என்பான் வாயிலாகவும், 1443 இற் பாரசீகத் தூத மைச்சனுயிருந்த அப்துர் இரசாக்கு என்பான் வாயிலாகவும் யாம் மெய்ப்படி யான விவரங்கள் பெற்றுளம்.

இந்தியக் கடல்களிற் போத்துக்கேயர் வந்துற்றகாலை, நரசிங்கராயர் என்பா ரது ஆட்சியின்போது, அப்பேரரசானது இராயச்சூர்ந் தோபிற்குத் தென்பா லுள்ள பிரதேசமெங்கணும் மறுக்கவொண்ணு ஆதிக்கஞ் செலுத்தி வந்தது. போத்துக்கேய மக்களைப் போன்று விசயநகரப் பேரரசன்மாரும் இசுலாமியர்க் கெதிராக மதப்போர் விளைக்கும் ஆர்வமுடையராய் இருந்தனரென்பது ஈண்டுக் குறிப்பிடற்பாலது. ஐபீரியத் தீபகற்பத்திலே முசிலிங்கள் இருந்தமையும், ஒடுங் கிய சிலுரோத்தர்த் தொடுகடற்கப்பால் அவர்தம் பேரரசு பரந்திருந்தமையும் போத்துக்கேயர்க்கு நிலையான பேராபத்தாய் இருந்தவாறே, விசயநகர எல் லையை அடுத்துப் பாமினிச் சுலுத்தானரசுகள் இருந்தமையாலே, இந்துமதத் தையும் பண்பாட்டையும் தென்னிந்தியாவிலே பாதுகாத்து, இசுலாமிய வல்ல ரசுகட்கெதிராய் நாட்டின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் அவ்வரசின் தீவிர நோக்கமாய் அமையலாயிற்று. விசயநகரத்துக்கும் போத்துக்கலுக்கும் இசு லாமே பெருஞ் சத்துருவாகும். கோவாவிற் போத்துக்கேயரின் அதிகாரத்தைத் தாபிப்பதால், இவ்வுண்மை முக்கிய இடம் வகித்தவாற்றைப் பின்னர்க் காண் போம்.

விசயநகரத்துக்கு வடபாலாகப் பீசப்பூரிலே அதில்சாகிச் சுலுத்தானரசு இருந்தது. சுலுத்தான் மூராட்டின் மைந்தனும் இந்தியாவுக்குத் தப்பியோடிப் பாமினி மன்னனிடத்தே சேவைக்கமர்ந்தவனுமாய யூசுபு அதில் காஞல் (1490) நிறுவப்பட்ட பீசப்பூர் இராச்சியமானது கொங்கணிக்கரை வரை வியாபித் திருந்தது. பீசப்பூர்க்கு வடதிசைக்கண்ணே, அகமதாபாத்தைத் தலைநகராக வாய்க்கப்பெற்ற கூர்ச்சரத்துச் சுலுத்தானரசு வலிமைசான்று விளங்கிற்று. இசு லாம் மதத்தைத் தழுவிய இராசபுத்திரன் ஒருவனுக்கு மகனுய்ப் பிறந்த சாபர் காஞல் 1401 இல் நிறுவப்பட்ட அவ்விராச்சியமானது கம்பாய், சாவல், சூரத்து ஆகிய பெருந்துறைகளில் ஆட்சியுடையதாய், அவ்வழி, வடவிந்தியாவிலிருந்து மேலேப்புலத்திற்குச் சென்ற வர்த்தகங் காரணமாகச் செல்வங் கொழிக்கும் நாடாகியது. 1458 இல் அரியணையேறி ஐம்பத்து மூன்று வருடகாலம் (இறந் தது 1511 இல்) அரசோச்சிய மாமூது பேகரா என்பான் ஆட்சியில், கூர்ச்சரத் துச் சுலுத்தா;ரசு தலைப்பெரும் இராச்சியமாகப் பீடும் வலியும் பெற்றுத் திகழ்ந்தது.

ஆசியாவின் அரசியல் நிலைமை பற்றிய மூப்பெருங் காரணிகள், ஐரோப்பிய நாடுகளோடு வளர்ந்த தொடர்புகளைப் பாதித்தவாற்றுல், இங்குக் குறிப்பிடத் தக்கன. இசுலாம் பரவுதற்கு எதிரீடாகத் தோன்றிய இயக்கத்தின் விளைவாய்த் தென்னிந்தியாவிலே இந்துப் பேரரசொன்று திட்பம் பெற்றமை முதலாவது

காரணி — இதனை நாம் முன்பே கண்டுளம். ஆசியக் கண்டத்தின் தெற்குப் பரப்பிலே மலாக்காச் சுலுத்தானரசுவரையும், இன்னும் அப்பால் இந்தோனேசியத் தீவுகள் வரையும், மிங்கு வமிசத்தின் ஆட்சிக்காலத்திற் சீனர் ஆதிக்கம் பெற்றமை இரண்டாவதாகும். தென்றிசைக்கண்ணே சீனவாதிக்கம் பரவியதாற் போந்த விளைவுகளை, இந்தோநேசிய நாட்டைச் சேர்ந்த அண்மைக்கால வரலாற்றறிஞன் ஒருவன் மேல்வரும் மொழிகளால் எடுத்துக் கூறினன்: "தூதமைச்சன்மார் துறைதொறும் துறைதொறுஞ் சென்று தத்தம் தூதின் நோக்கத்தை நயந்தும் பரிவோடும் விளக்கி, அவ்வத்தலத்து, அரசன்மாரைச் சீனத்தலைநகர்க்குத் தாமாகச் சென்று திறையளிக்குமாறு வேண்டிக்கொண்டனர். சிலவாண்டு காலம் பீக்கிங்குநோக்கி மன்னர் குழுமினர். அவ்வாறு முதலிற் சென்றோன் பூனிமன்னனே (மேற்குப் போணியோ அல்லது புருனெய்க்கு அவன் மன்னனுகலாம்). அவன் விந்தையான ஒரு வேண்டுதலோடு சீனப் பேரரசின் வேத்தவைபுக்கான். மட்சபாகிற்றுக்குத் திறையளக்கும் கடப்பாட்டினின்றுந் தனக்கு விடுதலையளித்தது, சீனவிற்கே நேராகத் திறைசெலுத்த அனுமதிக்குமாறு கிழக்காசியா அனைத்துக்கும் அதிபனுகிய பேரரசனை அவன் வேண்டிக் கொண்டான். அச்சலுகை அவற்கு இனிதே நல்கப்பட்டது..... மலாக்காராசனும் அத்தலைவகை வெற்றியைப் பீக்கிங்கிற் கண்டான், மலாக்காவை அல்லற்படுத்தலாகாதெனச் சீயம் மன்னனைப் பணிக்கும் கட்டளையொன்றை அவனும் பெற்றான்."

மிங்கு வமிசம் இழிவுற்றமையால் மலாக்காவிலும் பிறதீவுகளிலும் சீன வதிகாரம் பெரிதும் நலிவுற்றதாயினும், அரசியற் சிறப்புடைய காரணியாக அது இன்னும் விளங்கிற்று. மலாக்கா, பிற்றாங்கு, பிற மலாயரசுகள் ஆகியவற்றின் சுலுத்தான்மார் பீக்கிங்கையே தம் பாதுகாப்பிற்கு நம்பியிருந்தனர். அவ்வழி, 'சீன அமைதியின்' நிழல் அப்பிரதேசம் முழுவதையும் அடக்கி நின்றது.

மலாய்த்தீவுக் கூட்டத்திலே இசுலாமும் இந்துமதமும் தம்மிடை விளைத்த வெம்போராட்டம் மூன்றாவது காரணியாகும் — முன்னையவற்றைக் காட்டிலும் இது எவ்வாற்றானும் சிறப்பாற் குறைந்ததொன்றன்று. மலாயாவிலும் அண்மைத் தீவுகளிலும் கூர்ச்சரத்திருந்தே இசுலாம் வந்து புகுந்தது. வர்த்தகத்தின் அடிச்சுவட்டில் வந்த அம்மதம் பதினைந்தாம் நூற்றாண்டின் நடுக்கூற்றளவில், துறைப்பட்டினங்களிலே பெருவளர்ச்சியடைந்தது. ஆயினும் உண்ணாடு இந்து மதத்தில் ஊன்றி நின்றது. எனினும், அத்தீவுகளிலே இந்துமதவமைப்பின் சமுதாயக் கோப்பு நெகிழ்ந்துவிட்டது; எனவே அம்மதம் இன்னும் வலியதாய், கட்டொழுங்குடைய அரசுகள் பலவற்றின் ஆதரவு பெற்றதாய் இருந்தக் கண்ணும், ஊக்கங் குன்றித் தற்காக்கவேண்டிய தளர்நிலையில் இருந்தது.

இந்தியத் தீபகற்பத்தின் தென்கோடியிலே, கடற்கரைய மேலைத்தொடர்ச்சிமலைகளாலே விசயநகர இராச்சியத்தினின்றும் பிரிக்கப்பட்டுத் தனித்துநின்ற கரைப்புலமொன்றே குறுநிலமன்னர் சுயவாட்சி புரிந்த பிரதேசமாக இன்னும் விளங்கிற்று. மலபர் என்றும் கேரளம் என்றும் அறியப்பட்ட இப்பிரதேசமானது, மங்களூர்தொட்டுக் குமரிமுனைவரை வியாபித்தது, 'மிளகுத் தேய

மாய்த்' தனிப்பெருஞ் சிறப்புப்பெற்றது. ஆங்கிருந்து வாசனைச்சரக்கும் துணி வகைகளும் பிற இந்தியப் பொருள்களுந் தாங்கிய கப்பல்கள் பாரசீகக் குடா விற்கும் செங்கடலுக்கும் இடையறவின்றி இரண்டாயிரம் வருடகாலமாகச் சென்றுவந்துள. இப்பிரதேசத்திற் பிரதான மன்னன் கோழிக்கோட்டுச் சாமோ ரின் என்பான் — இவனுடைய தலைநகரத்திலேயே வசுக்கோ த காமா கப்பல் நான்கோடு 1498 மே 27 எனும் அப்பெருந் தினத்தில் வந்துற்றான் என்க. சாமோரின் எனப்பட்டம் பெற்ற கோழிக்கோட்டு வேந்தன் சிறிய இராச்சியம் படைத்தவனாயினும் வலியிற் பெரிய மன்னனாயிருந்தான். வாசனைத் திரவிய வர்த்தகத்தின் தலைப்பெரும் மையமாகக் கோழிக்கோடே பண்டைநாளிற் பல நூற்றாண்டுகளாய் இருந்து வந்துளது. மிளகும் கிராம்பும் மலபார் நாட்டுப் பிற விளைவுகளுமே யல்லாது, பசிபிக்குத் தீவுகளிற் படுகின்ற வாசனைத் திரவியங் களும் ஐரோப்பாவிற்குச் செல்லும் வழியிற் கோழிக்கோடாகச் செல்வது வழக்காயிருந்தது. கோழிக்கோட்டுத் துறைபற்றியும் அதன் சீத்துவம் பற்றியும் பிறநாட்டு நோக்காளர் வரைந்து வைத்த வருணனைகள் பல எமக்கு இன்று கிடைத்துள. எந்தவொரு கப்பலும் எங்கிருந்து வந்தாலும் எங்குத்தான் போனா லும், இத்துறையை (கோழிக்கோட்டை) ச் சேர்ந்தக்கால் வேற்றுமையின்றியே நடாத்தப்பட்டது — அதற்கு இடர்ப்பாடு யாதும் வந்தடைவதில்லை. இதனைக் கண்ணுற்றோன் பாரசீகத் தூதுவனை அப்துர் இரெசாக்கு என்பான். பருவப் பெயர்ச்சிக் காற்றின் தகவான போக்கே கோழிக்கோட்டிற்குத் தனிச்சிறப்பளித் தது. செங்கடலினின்று இந்தியக் கரைக்கும், இந்தியாவினின்று அராபியக் கரைக்கும், பருவப்பெயர்ச்சிக் காற்றினை வாய்ப்பாகப் பயன்படுத்திச் செல்லும் வகையில் அது உன்னதமாக அமைந்திருந்தது.

கோழிக்கோட்டு வணிகன்மார் தம் பண்டமனைகளைக் கெயிரோவிலும் அலெக் சாந்திரியாவிலும், இன்னும் மேற்கே பெசுவிலும் அமைத்திருந்தனர். வாசனைத் திரவிய வர்த்தகத்தைக் கட்டியாண்ட வாணிபக் குழாத்துக்கும் சாமோரினுக்கு மிடையே நெருங்கிய நட்புறவு நான்கு நூற்றாண்டுக்கு மேற்பட நிலவி வந் துளது. அராபிய வினமே இவ்வர்த்தகத்திற் பெரிதும் ஈடுபட்டு இருந்ததாதலின், இவ்விந்து மன்னற்கும் அவ்விசுலாமியர்க்குமிடையே சிறப்பான கெழுதகைமை வளர்ந்து வந்துளது. இந்தியாவின் அப்பகுதியிலே அரசியலதிகாரமற்றும், வட புலத்து முசிலிஞ் சுலுத்தான்களோடு தொடர்பு யாதுமின்றியும் இருந்த அவ் வினத்தோர், இந்து ஆட்சிக்கு எவ்வாற்றானும் அபாயம் விளைத்திலர். கரைப் புலத்து அராபிய வணிகரின் அரசியலுறவுகளெல்லாம் எகிப்தோடும் அராபியா வோடும் பரசீகக் குடாநாட்டோடுமே வலுப்பெற்று விளங்கின. பின்னர் நிகழ்ந்த மாற்றங்களை விளங்குதற்கு இவ்வுண்மை பெரிதும் முக்கியமாகும். போத்துக் கேயரின் பூட்கையினைச் சாமோரின் நன்கு அறிந்திருந்தான். முசிலிம் வர்த்தகர் மூலமாய்ச் செய்திகளறிந்த சாமோரின், போத்துக்கேயக் கடற்படை வந்துற்ற தனாலே தனது அதிகாரத்துக்கு நேரப்போகும் ஆபத்தை உணர்ந்தான். 'மலை யும் கடலும் புரக்கும் மன்னன்' என்பதே சாமோரினுக்குரிய பரம்பரை விரு தாகும். இந்தியாவின் மேலைக்கரையிலே தன் அதிகாரம் பேணுதற்கு வேண்டும்

வலிபடைத்த ஒரு கடற்படை அவனிடத்திருந்தது. முசிலிங்களுக்கு உற்ற நண்பன் — கடலரசன் — இத்தகு மன்னனின் தலைநகரிலேயே வசுக்கோ த காமா வந்திறங்கினன்.[1]

பிரதேசவாராய்ச்சியை நோக்கமாய்க் கொண்டே இம்முதற் பயணம் மேற்கொள்ளப்பட்டதாதலின், வர்த்தகம் நடாத்த அனுமதி கோருவதோடு திருத்தியடைந்தான் வசுக்கோ த காமா — சாமோரினும் அவ்வனுமதியைத் தயங்காது வழங்கினன். ஆயினும், போத்துக்கேயத் தளபதி சுங்கத்தீர்வை கட்டமறுத்தமை, எதிர்காலத்தே விளையப்போகும் இடர்ப்பாடுகளுக்கு ஓர் அறிகுறியாய் அமைந்தது. அன்றியும், அத்தலைநகரிலே 'சோனகர்' இருந்தவாற்றையும், வேத்தவைக்கண்ணே அன்னார்க்கிருந்த பெருஞ் செல்வாக்கையும் கண்டு அவன் வியப்பும் அச்சமும், ஒருங்கே யடைந்தான். இத்தகைய நிலைமையினை அவன் எதிர்பார்த்தவனல்லன். ஐந்தாம் நிக்கலசின் திருநிருபமானது இந்திய மக்களைக் கிறித்தவராகவே கணித்ததென்பதையும் நாம் இங்கு நினைவிற் கொள்ளல் வேண்டும். கோழிக்கோட்டிலே இந்துக் கோயிலொன்றைக் கிறித்தவத் தேவாலயமென வசுக்கோ த காமா வழுப்படக் கருதியதும் உண்டு. எனவே, முசிலிங்கள் காணப்பட்டமையும், அவர்கள் பெரும்பாலும் வர்த்தக முற்றுரிமை பெற்றிருந்தவாறும், சாமோரினிடத்து அவர்க்கிருந்த செல்வாக்குமெல்லாம், அவனுக்குக் கசப்பும் வியப்பும் அளித்தது இயல்பே—போத்துக்கேய அதிகாரவர்க்கங் கொண்டிருந்த எண்ணமெல்லாவற்றிற்கும் இவை மாறுகச் சென்றன.

முறைப்படி உபசாரம் பரிமாறிய பின்னர், தன்னெடு கொணர்ந்த பண்டங்களுக்கீடாய் வாசனைத் திரவியம் பெற்றதன் பின்னர், தான் மேற்கொண்ட கடற்படை யெழுச்சியின் வெற்றியினைத் தன் அதிபனுக்கு அறிக்கை செய்தற்காக வசுக்கோ த காமா தாயகமேகினன். தொம் மனுவெலும் அவன்றன் உசாத்துணைவரும் தமக்கு வைரித்த எதிரிகளான 'சோனகர்' இந்து சமுத்திரத்திலேயும் தமக்கு எதிராக வந்தவாற்றையும், மற்றுக் கடல்வழிப்பாதை கண்டமையால் வரத்தகும் நயங்கள் நீடித்த பெருமுயற்சியின்றி வாய்க்காவென்பதையும் உணர்ந்து கொண்டார்கள். மன்னனது ஆணைவழி ஆயத்தஞ் செய்யப்பட்ட இரண்டாவது கடற்படைக்கோட்டி, பெருமளவிற்றாய் அமையலாயிற்று. அது மூப்பத்து மூன்று கப்பல்களையுடையதாய், 1,500 பேரைக் கொண்டதாய், வேண்டிய படைக்கலவசதி படைத்ததாய் இருந்தது. இந்தியக் கடல்களிலே போத்துக்கேய மன்னனின் ஆதிக்கத்தை நாட்டும்பொருட்டாய்த் திரட்டப்பட்ட பெரும் படையெழுச்சியாகும் அது. மகிமைசான்ற விழுமியோன், பெதுரு அல்வாறெசு கபிறால் என்பான், ஆமெடாவெனத்தக்க இப்பெருங் கடற்படைக்குத் தலைமை தாங்கினன். போத்துக்கேய விழுமியோர் குலக்கொழுந்துகளிலிருந்தே, பிற

---

1. சாமோரினெடு கொண்ட உறவு தெறித்ததற்கு எதுவாயமைந்த நிகழ்ச்சிகள் பற்றி, யான் எழுதிய " மலபாரும் போத்துக்கேயரும் " எனும் நூலிற் காண்க. போத்துக்கேயருக்குச் சார்பான கருத்து தன்வேசு எழுதிய நூலிலே, தக்க ஆராய்வின்றித் தரப்பட்டுளது. ஆயின் உவைற்றவே எழுதிய " இந்தியாவிற் போத்துக்கேய ஆதிக்கத்தின் எழுச்சி " எனும் நூலில் அதே கருத்துச் சற்று நிதானமாகக் கூறப்பட்டுள்ளது.



கடலோடி என்றி

கப்பல்களுக்கு வேண்டிய அதிகாரிகள் திரட்டப்பட்டனர். கோழிக்கோட்டுக்கு நேராகக் கப்பலூர்ந்து சென்று, வர்த்தக நிலையம் நிறுவ உரிமையும் பிரான்சிசுக்கன் குருமார் அறுவர் சுவிசேடம் போதிக்க அனுமதியும் வேண்டு, அன்றேல் அடுபோர் வேண்டு—என்றவாறாக மனுவெலுக்குக் கட்டளை பிறந்தது. மூப்பத்துமூன்று உருக்களைக் கொண்ட இப்பெரும் ஆமெடாவில், இந்தியக் கரையை அடைந்தவை ஆறே. போத்துக்கேயர் மீண்டும் வந்தமை கண்டு சாமோரின் எவ்வாற்றானும் மனஞ் சுளித்திலன். கபிராலைக் கோழிக்கோட்டுக்கு வரவேற்குமுகமாய்ச் செய்தியனுப்பினன். தளபதியோ நண்பு பாராட்டச் சித்தங் கொண்டிலன். சாமோரினைத் தரிசனந் தருமாறு கேட்ட தளபதி, தான் கப்பல் விட்டிறங்குமுன்னர் பிணையாட்கள் சிலரை ஒப்படைக்குமாறு வற்புறுத்தினன். விந்தையான இந்த யோசனைக் கிணங்கிய சாமோரின் போத்துக்கேயத் தூதுவனை அன்பாய் வரவேற்று, வர்த்தகஞ் செய்யத் தலமும் அளித்தான். ஆயின், கபிராலின் உதவியாளருள் ஒருவனாகிய கொறேரா என்பான் மிகை செய்தமையால் மக்களிடையே கிளர்ச்சி மூண்டது. போத்துக்கேயர் பலர் உயிரிழந்தனர். இப்பூசலைத் துவங்கியவனான கொறேராவும் அவன்றன் ஆட்கள் ஐம்பதின்மரும் கொல்லப்பட்டனர். இது கண்ட கபிரால் தன் கப்பல்களைப் பிறக்கிடுசெய்து நகரத்தின் மீது குண்டுமாரி பொழிந்தான். இத்தறுகண்மைச் செயலுக்குப் பழிவாங்கும் நோக்கமொடு, 1,500 வீரரைத் தாங்கிய எண்பது கப்பல்களைச் சாமோரின் ஆயத்தஞ் செய்தான். ஆயின் கோழிக்கோட்டுக் கப்பல்களைக் கண்ணுற்ற கபிரால், கப்பலூர்ந்து தன் வழிப்போனான்.

கபிரால் தன் வழிப்போனெனினும், இந்துசமுத்திரத்தைப் போத்துக்கேயர் கைவிட நினைந்திலர். அதற்கு மாறாகத் தொம் மனுவெல் 'எதியோப்பியா, அராபியா, பாரசீகம், இந்தியா எனுமிவற்றின் வர்த்தகம், வெற்றி, கப்பலோட்டம் அனைத்துக்கும் அதிபதி' என நெடும் பட்டஞ் சூடி, இன்னும் வலிய கடற்படையெழுச்சிக்கு ஆயத்தஞ் செய்தான். இந்தியக் கடல்களிலே அவன்றன் ஆதிக்கத்தை நிலைநாட்டுமாறு கட்டளையிடப்பட்டது. இக்கடற்படைக்குத் தலைவனாக வசுக்கோ த காமாவே அமர்த்தப்பட்டான். இக்கடற்படையெழுச்சிக்குத் தீவிரமான எதிர்ப்பு இருக்குமெனும் உணர்ச்சியால், ஐந்து கலங்களைக்கொண்ட துணைப்படையொன்று எசுற்றோவோ த காமா என்பான் தலைமையில் ஆறு திங்கள் கழித்து அனுப்பப்பட்டது.

போத்துக்கேயரின் கடல்சார் முயற்சியில் முதலாவதாய தீர்க்கமான இப் பருவத்தின் கண்ணே எமது உள்ளத்தையள்ளும் உண்மையொன்று புலனாகின்றது. கிழக்கில் உலவிய கடற்படைகளுக்குப் போத்துக்கேயத் தாய்நாட்டரசு வியத்தகும் வகையில் வரையாது படைத்துணை அனுப்பி வந்தமையே அவ்வுண்மையாகும். ஆமெடாவையடுத்து ஆமெடாவாக, பயிற்சி பெற்ற தளபதிகளின் தலைமையிலே கடற்படைக்கோட்டிகள் மூடிவின்றி இங்கு அனுப்பப்பட்டன. மற்று, இந்தியக்கடல்களிற் போர்மலைந்து திரிந்த போத்துக்கேயத் தலைவன்மார்க்கும் தமக்குத் துணையாய் ஆளுதவியும் கப்பலுதவியும் வந்தவாறிருக்கு

மென்பது தெரிந்தே யிருந்தது. ஆதலின், அல்லல் கூர்ந்த நிலைமைக் கண்ணும், அன்னர், படைத்துணை மிக்க செய்மையில் இல்லை—வந்துசேரும்—என்ற நம்பிக்கையுறுதியால் ஊற்றம் பெற்று நின்று பிடித்தல் இயல்வதாயிற்று. இப் பெரும் பணியில், அந்துவேப்பு நகரத்து வணிகப் பெருமக்களின் நிதியாதரவு போத்துக்கேய அரசாங்கத்திற்கு எப்போதும் இருந்தது. அவ்வணிகப் பெருமக்கள், போத்துக்கேயர் புதுவழி கண்டமையால் வர்த்தகத்தில் விளையப் போகும் புரட்சியின் பாங்கினை உணர்ந்து, அந்நலன்களை வெளவ விரைந்தனர். உதாரணமாக, 1505 இல் போத்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்ட பயணங்களுக்கு வெகுசிலர் குடும்பத்தோர் பணமளித்து உதவினர். அன்றியும், 1503 அளவிலே, அந்துவேப்பு நகரத்தின்கண்ணே வாசனைத் திரவியம் வைத்தற்காக ஒரு பண்டசாலையைப் போத்துக்கேயர் நிறுவுதல் அவசியமாயிற்று. இவ்வாறாக, அந்துவேப்பின் முதலீடு கொண்டு, இடையறாப் படைத்துணை அனுப்பும் முறையைத் தொம் மனுவெல் வகுத்தமைத்தான். கிழக்குப்புலக் கடல்களிலே போத்துக்கேயக் கப்பற் படைகள் ஈட்டிய வெற்றிக்கு அம்முறையே பெரிதுங் காரணமெனலாம்.

த காமாவும் அவன்றன் துணைவரும், இந்தியக் கரையை அடைதற்கு முன்னமே, 'நாவாயோட்டத்திற்கு அதிபதி' என அவர்தம் இறையோன் பாராட்டிய உரிமையை நிலைநாட்டத் தலைப்பட்டார்கள். பயணத்தின் போது எதிர்ப்பட்ட கப்பலெதனையும், எவ்விதமான எச்சரிக்கையுமின்றி, அவர்கள் தடுத்து அழிப்பாராயினர். 'இலெண்டாசு டா இந்தியா'[1] எனும் பனுவல் கூறுஞ் சம்பவமொன்று, இந்தியக் கடல்களில் அவன் கையாண்ட பயங்கர முறையையும் கடற்சூறையையும் தெள்ளிதிற் காட்டும். படைக்கலந்தரியா மரக்கலமொன்று மெக்காவிலிருந்து மீளும் வழியில் போத்துக்கேய ஆமெடாவைக் குறுக்கிட்டது. அதனைக் கைப்பற்றிய வசுக்கோ த காமா, இலெண்டாசு கூறியது போன்று, 'பொருளெலாம் அகற்றி அதனை வெறுமைப்படுத்திய பின்னர், சோனகனெவனையும் யாரும் வெளிக்கொண்டு செல்லலாகாதெனத் தடுத்து, அதற்குத் தீவைத்தான்'. பாரோசு கூறிய குறிப்புரையொன்று, அவன் அக்கலத்தைப் பிடித்தற்கான காரணத்தை விளக்கும்போலும். 'கடல்களிலே கப்பலோட்டுதற்கு ஒரு பொதுவுரிமை யாவர்க்கும் உண்டென்பது உண்மையேயாகும். ஐரோப்பாவிலே, மற்றையோர் எமக்கு மாறுகக் கொள்ளும் அவ்வுரிமையை யாம் ஏற்றுக்கொள்வோம். ஆயின் அவ்வுரிமை ஐரோப்பாவிற்கு அப்பாற் செல்லுவதன்று. ஆதலின், போத்துக்கேயர் கடலுக்கு அதிபர் என்ற வகையால், தம் அனுமதியின்றிக் கடல்களில் நாவாயோட்டுவோர் யாவராயினும் அவர்தம் பண்டங்களைப் பறிமுதல் செய்தல் நியாயமேயாகும்'.

மிக விரிந்த விசித்திரமான உரிமை இது; எனினும், ஆசியாவில் மேலைப்புல ஆதிக்கம் முடிவுறும்வரை, ஒவ்வோர் ஐரோப்பிய நாடும் தன் தன் காலத்தில் இவ்வுரிமையைச் சாரமளவிலே உறுதியாகப் பற்றி நின்றுளது. பதினைந்தாந் நூற்

[1] Lendas da India

முண்டின் முதற் காற்கூற்றிலே போத்துக்கேயர் செய்ததுபோல, இத்தூணை முரட்டுத்தனமாய் வேறெந்த நாடும் அதனை எடுத்துக் கூறியதுமில்லை; இத்தூணை மிலேச்சத் தனமாய் வற்புறுத்த முயன்றதுமில்லை. ஆயினும், சருவதேசச் சட்டத்தின் கோட்பாடுகள் ஐரோப்பாவின் எல்லைக்கப்பாற் செல்லா; இலண்டனிலோ பாரிசிலோ மிலேச்சத்தனம் என்று கருதப்படுவது (உதாரணமாகச் 'சம்மர்பலேசு' எனுங் கோடை நிவாசம் எரிக்கப்பட்டமை) பிக்கிங்கிலே நாகரிகமான ஒழுக்கமாகும்; (அபின் புகைத்தல் சட்டப்படி தடுக்கப்பட்ட குற்றமாக இங்கிலாந்தில் இருந்தபோதும், சீனவின் சட்டத்துக்கு மாறுக அபின் வர்த்தகத்தை வற்புறுத்தப் பிரித்தன் முயன்றவாறுபோல்) ஆசிய மக்களைப் பொறுத்தவரை அறச்சார்புடைய கடப்பாடுகள் ஐரோப்பிய நாடுகளுக்கில்லை—என்றிவ்வாறான ஒரு நெறியே ஆசியாவொடு ஐரோப்பா பூண்ட தொடர்புகளைக் கட்டுப்படுத்தி வந்துள்ளது. 1870 ஆம் ஆண்டெனும்படியான பிற்றை நாளிலே, ஒங்கோங்கு வர்த்தக மன்றத்தின் அதிபன் வருமாறு கழறினன். சருவதேசச் சட்டத்துக்குக் கட்டுப்பட்ட நாகரிகம் வாய்ந்த நாடுகள் போன்று சீனமும் எல்லா உரிமைகளும் எல்லாச் சிறப்புரிமைகளும் படைத்த நாடே யெனக் கொள்ளல் எவ்வாற்றானும் பொருந்தாது. ஐரோப்பியர்க்குமாறுக ஆசியர்க்கும் உரிமைகள் உண்டு எனும் உண்மை, ஐரோப்பிய ஆதிக்கம் முடிவுறும்வரையும், நெஞ்சார ஒப்புக்கொள்ளப்படவில்லை. இந்தியா, பர்மா, இலங்கை போன்று பிரித்தானியரின் நேரான ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளிலே சட்டத்தின் வாயிலாய்ச் சமவுரிமை விதிக்கப்பட்டது உண்மையே. ஆயின் ஐரோப்பியர்க்கு மாறுகச் சட்டமானது வேண்டியாங்கு கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டில தென்பது பலரும் அறிந்த—பலரும் கண்டுதெளிந்த—ஓர் உண்மையாகும்.[1] சீனச்சட்டங்களின் பிரயோகத்தினின்றும் ஐரோப்பியர் பாதுகாப்புப் பெற்றனர். உண்மையை நோக்குமிடத்து 'வேறுபட்ட உரிமைகள்' பற்றிய இத்திய கோட்பாடு, யப்பான் தவிர்ந்த பிற நாடுகளிலே இறுதிவரை நிலைத்து நின்றது—ஆசியாவிலே ஐரோப்பா இறுதியாகத் தோல்விப்பட்டதற்கும் அதுவே மூலகாரணமாம்.

வசுக்கோ த காமா இழைத்த தறுகண்மை மிக்க சூறைச் செயல்கள், அவன் றன் கப்பல்கள் கரைக்கப்பாலே தென்படுமுன்னமே, சாமோரினது செவிக்கு எட்டின. மலிக்குங் கடலுக்கும் அதிபனை சாமோரின் இப்புதிய ஆபத்தை நிருவகித்தற்குச் சித்தமானன். கபிரால் முன்னங் குண்டுப்பிரயோகஞ் செய்ததன் பயனுய், சாமோரின் தனது கடற்படை வலியைப் பெருக்கியிருந்தான். அன்றியும் செங்கடல் வர்த்தகத்தில் ஈடுபட்டவனும், கோழிக்கோட்டுப் பெரும் வியாபாரிகளுள் ஒருவனுமாய கோசா அம்பார் என்பானுடைய பாரக் கலங்களும் சாமோரினது கடற்படை வலிக்கு உறுதுணையளித்தன. கோழிக்கோட்டுக் கடற்படையானது வேகம் மிக்கதாய் இருந்தபோதும், கனரகப் பீரங்கி மாட்டிய போத்துக்கேயக் கப்பல்களுக்கு, வெடிதீர்க்குந் திறனில் இணையாகாது.

[1] For interesting sidelights, see Maurice Collis : Trials in Burma.

கொச்சிக்கு அப்பால் நடந்த கடற் செருவில், போத்துக்கேயரின் குண்டுப்பிர யோகங் காரணமாகக் கோசா அம்பாரின் கப்பல்கள் சேதப்பட்டன. எனினும், சாமோரினது கடற்படையினுக்குத் தளபதியான காசிம் என்பான் சிறிய தன் கப்பல்களைச் சுழித்தும் வளைத்தும் திறம்பட நடாத்தியதனால், போத்துக்கேயர் அவற்றின் மீது குண்டுப்பிரயோகஞ் செய்ய வகையறியாது செயலற்று நின்ற னர். கோழிக்கோட்டுப் போர்க்கலங்கள் போத்துக்கேயக் கப்பல்களைக் குளவி கள் போன்று மொய்த்துத் தாக்க, வசுக்கோ த காமா போர்மூளுதல் தவிர்ந்து, தன் கப்பல்களோடு தாயகம் ஏகினான்.

கொச்சிக் கரைக்கு அப்பால் நிகழ்ந்த இச்சமரில் வாகை சூடியது கோழிக் கோட்டுக் கடற்படையே யாயினும், த காமாவைத் துரத்து செல்லக் காசிம் வலியற்று நின்றமையாலே, வெற்றியின் பயன் வியர்த்தமாகியது. கரைக்கு அண்மையிலாயின், அது போத்துக்கேயக் கடற்படைக்கு விஞ்சிய தொன்றே. ஆயின் தளத்துக்குச் சேய்மையாகக் கடமையாற்றக் கோழிக்கோட்டுக் கப்பல் கள் முற்றுந் தகுதியற்றவை. கொச்சிச் சமரில் இவ்விரகசியத்தை உய்த்துணர்ந்த போத்துக்கேயர், பிற்றை நாளில் அதனைச் செவ்வையாகப் பயன்படுத்தி முழுப் பயன் பெற்றனர்.

இந்து சமுத்திரத்தை வசுக்கோ த காமா விட்டு நீங்கிச் சில காலம் கழியு முன்னர், பதினான்கு கப்பல்களைக் கொண்ட கடற்படையொன்று உலோப்போசு சோறேசு என்பான் தலைமையிற் கோழிக்கோட்டை வந்தடைந்தது. சோறேசு அனுபவம் மிக்க தளபதி—கிரங்கனூருக்கு அப்பாலாக, மம்மலியென்பான் தலை மையில் நங்கூரம் பாய்ச்சிநின்ற ஒரு கடற்படை வியூகத்தைப் பதுங்கிப் பாய்ந்து திடுமென அழித்தான் சோறேசு. அப்பால், பிறிதொரு துறையில் வந்துகூடிய வர்த்தகக் கடற்படையொன்றினைத் தாக்கத் தொடங்கிய சோறேசு, அதனைக் காத்து நின்ற காவற்படையொடு கடுஞ் சமர் விளைத்து அதனைக் கலைத் தான். பாரப்படைக்கலம் பூண்ட போத்துக்கேயக் கரவெல்களுக் கெதிராய்ச் சிறிய தன் கப்பல்கள் நேருக்கு நேர் எதிரூன்றித் தாக்க முயல்வதாற் பய னில்லையெனக் கண்ட சாமோரின், தனக்கு நண்பனுகிய எகிப்திய சுலுத்தானைத் தன் துணைக்கழைத்தான். நவமான படைக்கலங்கள் மாட்டப்பெற்று, 1500 வீர ரைத் தாங்கிய எகிப்தியக் கடற்படையொன்று, அனுபவம் மிக்க தளபதியாகிய மீர் உசேன் என்பான் தலைமையில் அராபியக் கடலுட் பாய்ந்து வந்தது. மீர் உசேன் கையாண்ட விரகு எளிமையானது; திட்பமிக்கது. தியூத்தீவே அவன் முதலிற் கொண்ட குறிக்கோள்—அதனையே தளமாக அவன் பயன்படுத்தத் துணிந்தான். சாமோரினது கடற்படையோடு ஒருங்கு சந்தித்து, திரண்ட அப் பெரும் படைகொண்டு போத்துக்கேயரைத் தாக்குவதே அவன் திட்டம்.

அந்நாளிற் போத்துக்கேயப் பதிலிராயனாயிருந்த பிரான்சிசுக்கோ தி அல்மேடா வியத்தகும் எதிர்காலவுணர்ச்சியும் ஆற்றலும் வாய்க்கப்பெற்றோன். ஆயினும், அவனுக்குப் போட்டியாயிருந்து பின்னர் அவற்பின் பதவியேற்ற அல்புகேர்க்கியின் புகழ் அவன்றன் மேதையை மூடி மறைத்தது. வேத்தவை

யிலே செல்வாக்குடையனுயிருந்த அப்பெரும் விழுமியோன், வென்றடிப்படுத்தும் பூட்கையாதையும் திண்ணமாய் எதிர்த்தான். ஆயினும், மறுக்கவொண்ணுக் கடலாதிக்கத்தின் அவசியத்தை அவன் உணர்ந்தது மன்றி, தன் இறையோன் கிழக்குப் புலத்திலே நிறுவ நினைந்து திட்டந் தீட்டிய வர்த்தகப் பேரரசு நிறை வேறுதற்கு, அவ்வாதிக்கம் எத்துணை அவசியமென்பதையும் நன்கு உணர்ந்திருந்தான்.

பருவப் பெயர்ச்சிக் காற்றையடுத்து உசேன் தியூவை அடைந்தான். சாமோரி னுடைய கப்பல்களும் ஆங்கு வந்து சேர்ந்தன; திரண்ட இப்படைகள் தெற்கு நோக்கிச் செல்வதாயின. பதிலிராயனுக்கு மைந்தனுகிய உலோறென்சோ தி அல்மேடாவின் தலைமையில் இயங்கிய போத்துக்கேயக் கடற்படையானது கொச்சியிலிருந்த தன் தளத்திலிருந்து புதிதாக வந்த ஆபத்தைத் தடுத்தற் காக வடக்கு நோக்கிச் சென்றது. கரையோரத்தில், இடைத்தூரமளவிலே, சாவுல் எனுமிடத்தில் இருதிறப்படைகளும் சந்தித்தன. எகிப்தியக் கப்பல் களிற் போத்துக்கேயர் வந்தேற முயன்று தவறியமையாலே, அது பெரும்பான் மையும் பீரங்கிப் பிரயோகஞ் செய்ததன் பின்னர், போத்துக்கேயர் போர்தொடத் தீர்மானித்தனர். ஆயினும், தி அல்மேடாவின் கொடிக்கப்பலானது குண்டுபட்டுச் சேதமடைந்தது; தளபதியுங் கொல்லப்பட்டான்.

போத்துக்கேயர்க்கு அவலமே வந்தடுக்கும்போற் ரூன்றியது. ஒத்த அணி யடுக்கும் விஞ்சிய மானுமித்திறமையும் படைத்த ஒரு பகைவன் இந்து சமுத் திரத்திலே வந்து சேர்ந்தான். அவ்வேளையிலே, மனுவெல் கண்ட ஆசைக் கனவு நிக்கனவாக மாறியது போலத் தோன்றியது. ஆயின் பதிலிராயன் பிரான்சி சுக்கோ தி அல்மேடா தைரியமிழந்திலன். அகப்படக்கூடிய கப்பலனைத்தையும் எடுக்கக்கூடிய படைக்கலமனைத்தையும் அவன் திரட்டிக்கொண்டு, பகைவரைச் சந்திப்பதற்கு வடதிசை நோக்கிச் சென்ரூன். அவனிடம் பதினெண் கப்பல்க ளும் 1,200 வீரரும் இருந்தனர். தியூத் தீவினை 1509 பெப்பிரவரி 2 இல் அடைந்த அல்மேடா இந்து-எகிப்தியப் படைகளின் வருகைநோக்கி எதிர் பார்த்து நின்ரூன். ஆங்கு வஞ்சத்துரோகம் அவனுக்குச் சாதகமாக வேலைசெய் தது. கூர்ச்சரமன்னற்கீழ் ஆள்பதியாகத் தியூவை ஆண்டவன், இசுலாம் மதத் தைத் தழுவிய ஐரோப்பியன், மாலிக்கு அயாசு என்பான், மறைவாகப் போத் துக்கேயரோடு ஒருங்குசேர்ந்து, மீர் உசேனுக்குச் செல்லவேண்டிய உணவுப் பொருள் வசதிகளைத் தடுத்து விட்டான். எனவே எகிப்தியத் தளபதி பிறவழி யின்றி, சாமோரின் அனுப்பிய 100 கலன்களிற் கிடைக்கக்கூடிய உணவுப் பொருளையே நம்பவேண்டியவனுயினன். கோழிக்கோட்டுத் துணைப்படையைத் தவிர்த்து நோக்கின், அவன் படையில் ஒழுங்கான கப்பல்கள் பத்தேயிருந்தன. இத்தகைய இடர்ப்பாடுகள் பல இருந்தும், மீர் உசேன் போர் விளைக்கத் துணிந் தான். இருதிறப் பகைப்படைகளும் 1509 பெப்பிரவரி 3 ஆம் தேதி தியூத் தீவுக் கப்பால் எதிர்ப்பட்டன. தீர்க்கமான முடிவின்றி நடைபெற்ற அப்போரில், எப்பக்கமும் வெற்றிபெற்றதில்லை. ஆயினும், கூர்ச்சரத்துச் சுலுத்தான் செய்த

வஞ்சனை கண்டு வெறுப்படைந்த எகிப்தியப் படையானது சின்னேரம் பொறுத்துத் தன்வழிச் சென்றது.

இந்தியக் கடல்களிலிருந்து மீர் உசேனும் எகிப்தியக் கடற்படையும் அகன்று போய காலந்தொட்டு, 'நாவாயோட்டற்கு அதிபதிகள்' தாமே யெனப் பாராட்டி வந்த உரிமையினைப் போத்துக்கேயர் ஒருவாறு நாட்டினரெனலாம். சாமோரி னுடைய கடற்படை வலிமை அழியாதிருந்தது உண்மையே. அன்றியும் அடுத்த தொண்ணூருண்டுக்காலமாகக் கரையையடுத்த கடற்பரப்பினிற் போத்துக்கேய ரின் அதிகாரத்துக்கு அடிபணியாது கோழிக்கோடு நின்றதெனினும், பன்முறை சமர்புரிந்து வெற்றிகொண்டதும் உண்டேயெனினும், ஆழ்கடற் பரப்பிலே போத்துக்கேயர் மறுக்கவொண்ணு ஆட்சி நிறுவினர். அவ்வழி, இந்தியாவின் கடல்வழி வர்த்தகம் ஒன்றரைநூற்றாண்டுக் காலமாக அவர் தயவிற் கிடந்தது. கடல்சார்ந்த இப்பேரரசை ஒழுங்குற அமைத்து, பசிபிக்குவரை அகலச்செய்த வன் அல்பொன்சோ அல்புகேர்க்கி யென்பான். ஆசியாவொடு ஐரோப்பா கொண்ட உறவுகள் பற்றிய வரலாற்றிற் பெரும்பெயர் படைத்த மனிதர்களும் அவனும் ஒருவன் என்பதற்கையமில்லை; கிழக்குலகிலே மேலைப்புல ஆதிக்கத் துக்கு அடிகோலிய சிற்பியும் அவனே யெனலாம்.

செங்கடல் வணிகரைத் தாக்குதற்கும், அக்கடலின் வாயிலை முற்றுதற்குமாகத் திரித்தன் தா குன்கா என்பான் தலைமையில் 1506 இற் படையெழுச்சி யொன்று நிகழ்ந்தபோது அல்புகேர்க்கியும் அவனுடன் கூடி முதன்முதலாகக் கிழக்கிற்கு வந்தான். ஏடின், சொக்கோத்திரா, ஓமசு எனுந் துறைகளைச் சுற்றித் திரிந்தமையாலே, அவனுடைய சமுத்திரப் பூட்கையின் அடிப்படைக்கருத்துக்கள் மெல்ல உருவெடுத்தன. அவன் பிறரிடமிருந்து அதிகாரம் பெறுது, ஓமசு மன்னனைத் திறைதரும்படி தன்வலதாகவே நெருக்கி அத்திறையும் பெற்றான். யோன் கோமசு, யோன் சான்சசு என்னுமிருவரைக் கொண்ட தூதமானது, சித்தி முகமது எனுந் தியூனிசியச் சோனகன் வழிகாட்டியாக உடன்வர, அப்படையெழுச்சியொடு சேர்ந்து, போத்துக்கேய வேந்தன்சார்பாக எதியோப்பியாவின் அதிசய மன்னனும் 'பிரெத்தர் யோன்' என்பானைச் சந்திக்குமாறு அனுப்பப்பட்டதையும், எதியோப்பியத் தலைநகரைச் சென்றடையுமாறு அத்தூதம் மாலிண்டியில் இறக்கிவிடப்பட்டவாற்றையும் நாம் ஈண்டுக்கவனித்தல் அவசியம். அக்கோட்டி ஓராண்டுக்காலம் கழிந்ததற்பின்னர், மறுபடி தோன்ற, அல்புகேர்க்கி அராபிக்கிலும் போத்துக்கேய மொழியிலும் திருமுகங்கள் எழுதி அக்கிறித்தவப் பேரரசனுக்கு அவர்மூலமாக அனுப்பினன். போத்துக்கேய உடைமைகளுக்கு ஆள்பதியாக அவன் பதவியேற்ற காலத்தளவில், அராபியக் கடலையும் செங்கடலையும் அளாவிப்பார்க்குமளவிற்கு அவன்றன் அக்கண்ணேக்கம் விரிந்து விட்டதென்பது கண்கூடு.

இந்திய நாட்டில் வெல்லற்கரிய தளமொன்று நிறுவி, அத்தளத்திருந்து இந்து சமுத்திரத்தில் மறுக்கவொண்ணுப் பூரணமான ஆதிக்கத்தை நாட்டுதல் வேண்டுமென்பதே அவன் கொண்ட முதற் குறிக்கோளாயிருந்தது. அக்காலத்திற் கொச்சிக் கோட்டையே போத்துக்கேயர்க்கிருந்த தனியோர் உடைமையாகும்.

சிறியவோர் தீவில் அமைந்திருந்த கொச்சி அரைச்சதுரமைல் பரப்பே உடையதாயிருந்தது. கொச்சி, தகுதியற்றதெனத் தீர்மானித்த அல்புகேர்க்கி, வாசனைத்திரவிய வர்த்தகத்துக்கு ஒரு பெரும் மையமாக இன்னும் விளங்கிய கோழிக்கோடுமீது கவனஞ் செலுத்தினன். சாமோரினோடு பன்முறை போர் தொடுத்துத் தோல்வியே கண்ட போத்துக்கேயர் மனக்கொதிப்படைந்தனர். எனவே, கோழிக்கோட்டை வென்றடிப்படுத்தி, சாமோரினது வலியை அழித்திடுக எனும் உறுதியான கட்டளையோடு, மகிமைசால் மாசல் தொம் பெர்ணந்து கோற்றினோ என்பானைத் தொம் மனுவெல் அனுப்பி வைத்தான். திடீரெனத் தாக்குவதே தக்கதென்று தீர்மானிக்கப்பட்டது. போத்துக்கேயக் கடற்படையென்றும், இந்தியக் கடற்படையென்றும் பெயர் படைத்த இரு கடற்படைகள் முறையே மாசலும் ஆள்பதியும் தலைமைதாங்க, ஒரு பெரும் வெளியெழுச்சிப் படையோடு கோழிக்கோட்டுக்கு முன்னர்த் தோன்றின. இடர்ப்பாடின்றிக் கப்பல் விட்டிறங்கினர் போத்துக்கேயர். சாமோரின் அப்போது தலைநகரில் இருக்கவில்லை—வேறெங்கோ சென்றிருந்தான். ஆயினும் போத்துக்கேயப் படையெடுப்பாளரொடு போராடிய மாளிகைக்காவலர், அவர்களை எளிதாகத் தோல்வியுறுத்தினர். வெம்போரொன்றிலே போத்துக்கேய வீரர் வெட்டிச் சாய்க்கப்பட்டனர்; மகிமைசால் மாசலும், கூடவே வீரர் எழுவரும் உயிரிழந்தனர். அல்புகேர்க்கியும் கையிலும் கழுத்திலும் காயமுற்றார். பீரங்கிவெடிபட்டதனால் மூர்ச்சையடைந்து தரையில் வீழ்ந்த அல்புகேர்க்கியைக் கப்பலுக்குக் காவிச் செல்லல் அவசியமாயிற்று. இந்திய மன்னன் ஒருவனது வலியைத் தரைப்போரில் அடக்கச் செய்த முதன் முயற்சி இவ்வாறாக அவலமாய் முடிந்தது.

தனிப்பெருந்தலைவனாகிய அல்புகேர்க்கியின் தலைமையிலே இவ்வாறு போத்துக்கேயர் தோல்விப்பட்டமையாற் போந்த விளைவுகள் பாரதூரமானவை. அத் தோல்வி பின்னர் 230 ஆண்டுக் காலமாக எந்தவோர் ஐரோப்பிய வினமும் படைகொண்டு நாடுபற்றவோ ஓரிந்திய மன்னனை வென்றடிப்படுத்தவோ முயன்றதில்லை. கோவாவை அடிப்படுத்தி ஒரு பெருந்தளமாகப் போத்துக்கேயர் அரண்செய்தது உண்மையே. ஆயின் அப்பிரதேசத்தில் ஆட்சி செலுத்திய இந்துவேந்தன் தளசியென்பானுடைய உதவிகொண்டே அது நிகழ்ந்தது. அவ்வேந்தன் தன் அயற்புறத்திலே அதில் சாகி சுலுத்தான் செலுத்தி வந்த அதிகாரத்தை ஒடுக்கும் நோக்கத்தோடே போத்துக்கேயரொடு நட்புக்கொண்டான். இன்னும், அதில் சாகியின் பரந்த ஆணிலங்களின் ஒரு கோடியிலே கோவா இருந்தது: எனவே அதனைப் போத்துக்கேயர் வென்றடிப்படுத்தி அரண் செய்தமை, இசுலாமிற்கு எதிராய்ப் போராடி வந்த விசயநகர இந்துப் பேரரசிற்கு முக்கியமான ஒரு விடயமாயிருந்தது. கோவாநகரங் கடல்வழிச் செல்ல ஒரு வாயிலாய் அமையுமென்பதையும், அவ்வழி தங்குதிரைப்படைக்கு இன்றியமையாத குதிரைகளையும் படைக்கலங்களையும் பிற உபகரணங்களையும் பெறல் கூடுமென்பதையும் விசயநகரப் பேரரசர் விரைவில் உணர்ந்தனர். எனவே, கோவாவைக் கைப்பற்றி அரண்செய்தமையாற் போத்துக்கேயர்

இந்திய நாட்டில் ஒரு தலைவல்லசாக இடம்பெற்று விட்டனர் என்று கொள்ளலாகாது; இந்து சமுத்திரத்திற் கடற்போராட்டு நடாத்துதற்கேற்ற ஒரு தளத்தையே அவ்வாற்றல் அவர்கள் பெற்றனர்.

கோவாவிலிருந்த சோனகர் அனைவரையும் தான் வாட்கிரையாக்கியது பற்றி அல்புகேர்க்கி தன் அதிபனுக்கு அறிவித்தான். 'ஆங்கிருந்து சோனகர் அனைவரையும் தப்பவிடாது தேடிப் பிடித்து, பள்ளிவாயில்களிற் போட்டுத் தீக்கிரையாக்கினேன்' என அவன் அறிக்கைசெய்தான். இசுலாமுக்கெதிராக 170 வருட காலமாய் ஓயாது போராடிவந்த விசயநகரத்து இந்துமன்னர்க்கும் போத்துக்கேயர்க்குமிடையே, இசுலாம் மீது கொண்ட இக்கடுங்காழ்ப்புக் காரணமாய், நட்புறவு வளர்ந்தது. விசயநகர மன்னருளெல்லாம் பெருமையில் மிக்கோனும், தக்கணத்து முசிலிங்கொற்றவர்க்கு வைரித்த எதிரியுமான கிருட்டின தேவராயன் 1509 இல் விசயநகரத்து அரியணை யேறினன். போத்துக்கேயர் கோவாவைக் கைப்பற்றியதை அவன் வரவேற்றான்—அவ்வழி அவன் தனக்கு வேண்டும் போருபகரணங்களை வெளிநாட்டிலிருந்து பெறுதல் எளிதாயிற்று. அன்றியும் அவன் அவர்களோடு கெழுதகைமையான உறவும் பூண்டான். பத்கல் எனுமிடத்திலே ஒரு நிலையம் அமைக்க அனுமதி வேண்டி அல்புகேர்க்கி 1510 இல் அவனிடந் தூது விடுத்தகாலை, அவ்வனுமதி உவந்து வழங்கப்பட்டது. இவ்வாறுக இசுலாமிடத்துக் கொண்ட பகைமையால் ஒற்றுமை பூண்ட இந்துப் பேரரசும் போத்துக்கேய அதிகாரவர்க்கமும் தம்மிடை நண்பு பாராட்டி வந்தன. இந்துக் கடல்களிலே போத்துக்கல் வந்துற்ற பின்னர், ஐம்பதாண்டுக் காலங் கழிந்தபின், அற்ப சொற்பமான படைவலி கொண்டே தனது நிலை கோவாவிற் பேணியவாற்றைக் கருதும்போது மேற்கூறிய உண்மையை நாம் புறக்கணித்தலாகாது.

இவ்வாறுக அராபியக் கடலிலே நிலைமையைச் சீராக்கியபின்னர், மலாயாவிலும் தூரகிழக்கிலேயும் அல்புகேர்க்கி கவனஞ் செலுத்தினன். வாசனைத் திரவிய வர்த்தகத்திலே ஒரு பெரும்பகுதி இந்தோனேசியத் தீவுகளிலிருந்து புறப்பட்டு மலாக்காவினூடாகப் பரந்த கடலுக்குச் சென்று, இறுதியில் அராபிய வணிகராற் செங்கடற்றுறைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஆதலின் மலாக்காத் தொடுகடலில் ஆதிக்கம் நிலைநாட்டினால்தான், இவ்விந்து சமுத்திர வர்த்தகத்தை ஆட்சி செய்தல் இயலாததாகும்.

குறித்த இவ்வரலாற்றுக் காலத்தே மலாக்காவானது ஒரு சருவதேசத் துறைமுகமாக விளங்கியதென்பதை நாம் மறுத்தலாகாது. இயற்கை அமைவு காரணமாய்ப் பசிபிக்குச் சமுத்திரத்திலே அது தாழ்க்கோலனைய சிறப்பிடம் வகித்தது. யாவாவிலும், மொலுக்காசிலும், பிற தீவுகளிலும் வளர்ந்த அருமந்த வாசனைத் திரவியங்களுக்கெல்லாம் தலைப்பெரும் அங்காடியாக விளங்கிய அத்துறைக்கு, கிழக்கே யப்பான் சீனா நாடுகளிலிருந்தும் மேற்கே இந்தியா, பாரசீகம், அராபியா, எகிப்து ஆகிய நாடுகளிலிருந்தும் கப்பல்கள் ஒழுங்காக வந்து போவது வழக்கமாயிருந்தது. 'ஆண்டுதொறும் கம்பாய், சவுல், துபுல், கோழிக்கோடு, ஏடின், மெக்கா, சேர், சித்தா, சோழமண்டலம், வங்கம், பெகு

ஆதியாம் தேயங்களின் கப்பல்களும், சீனர், கோரியர், யாவகர் ஆகியோரின் கப்பல்களும் மலாக்காவிற்கு வருவது வழக்கம்,' என்றிவ்வாறு அல்புகேர்க்கியும் கூறியது காண்க. செங்கோவின் படையெழுச்சிக்குப் பின்னர், மலாயாச் சுஞுத்தான்மார் சீனப் பேரரசனின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டதுமன்றி, 'வானுலக மைந்தனுகிய' அவனுக்கு ஒழுங்காகத் திறையளத்தவாற்றையும் முன்னர்க் கண்டோம். எனவே, மலாக்காவானது கிழக்குலகிலே ஒரு பெரும் வர்த்தகமையமாய்ச் சிறப்புப் பெற்றதுமன்றி, ஆசியாவின் தெற்கிலும் தென் மேற்கிலுமுள்ள நாடுகளையும் சீனத்தையும் இணைக்கும் ஒரு பாலமாய் அமைந்தமையாலும் சிறப்புப் பெற்றது.

அல்புகேர்க்கி தானே மலாக்காவிற்குச் செல்லத் துணிந்தான். பதினெட்டுக் கப்பல் கொண்ட படையொன்று திரட்டி அவன் கொச்சியிலிருந்து புறப்பட்டு, 1511 இல் மலாக்காவிலே வந்து தோற்றினன். ஆங்கு, பேச்சு வார்த்தைக்கு ஓர் பீடிகையாக, சுஞுத்தானுக்குத் தன் வலிகாட்டக் கருதிப் போலும், துறைமுகத்திலே நங்கூரம்பாய்ச்சி நின்ற அராபிய கம்பாய்க் கப்பல்களுக்கு எரியூட்டினன் அல்புகேர்க்கி—ஆயின் முசிலிங்களல்லாதாரின் கப்பல்களிலும் சீனக் கப்பல்களிலும் அவன் கைவைத்திலன். துறைமுகத்திருந்த சீனக் கப்பல்களின் தளபதிகளைச் சுஞுத்தான் முன்னம் துன்புறுத்தியிருந்தான் போலும்—அன்னர் அல்புகேர்க்கிக்குத் துணைசெய்ய முன்வந்து, இறங்குகலங்கள் சிலவற்றை அளித்தனர். சென். சேமிசு விழா நாளன்று மலாக்காமீது தாக்குதல் நிகழ்ந்தது. போத்துக்கேயப் படையினுக்கும், அல்புகேர்க்கி தலைவனையிருந்த ஒரு சமயக் குழாத்திற்கும் சென். சேமிசே அருட்சுரவராகக் கொள்ளப்பட்டார். அக்காலத்திற் போத்துக்கேயரின் முயற்சிகளைப் பின்னின்று ஊக்கிய சமய ஆர்வத்தையும், இசுலாமியர்க்கெதிராய் ஆசியாவிலும் தாம் சிலுவைப் போர் மலிகின்றனர் என அவர் கொண்டிருந்த நம்பிக்கையையும் அன்னர் முன்னம் நடாத்திய தாக்குதலிலும், அடுத்து நடாத்திய போரிலும் தெளிவாகக் காணலாகும்.

அல்புகேர்க்கி தன் வீரர்க்கு ஆற்றிய சொற்பொழிவொன்றில் இச்சமயச் சார்பினைச் செவ்வனே உறுத்திக் கூறினன். 'சோனகரை இந்நாட்டினின்றும் அப்புறப்படுத்தி, முகமது நபியின் சமயப்பிரிவெனும் தீயினை மீண்டும் மூளாவகையில் அணைப்பதனுலே யாம் எங்கள் பரமபிதாவுக்குச் செய்யக்கூடிய பெருஞ்சேவை' பற்றி அவன் குறிப்பாக அழுத்திக் கூறினன். இவ்வாறு அவன் கடவுளுக்குச் செய்யும் தொண்டுபற்றிக் குறிப்பிட்ட பின்னர், வேந்தற்கு ஆற்றும் பணியும் பற்றி விதந்துரைத்தான். 'இந்த மலாக்கா வர்த்தகத்தை அவர்களிடமிருந்து (சோனகரிடமிருந்து) நாம் கைப்பற்றினுமையின், கெயிரோவும் மெக்காவும் அறவே பாழாகும்; வெனிசு வர்த்தகர் போத்துக்கலிடமிருந்து பெற்றுலன்றி, அன்னர்க்கு வாசனைத்திரவியங்கள் கிடைக்குமாறில்லை'. இவ்வாறுக இருநோக்கங்களும் அமைவாகக் கலந்திருந்தவாற்றைக் காண்க.

எனினும், முதற்றாக்குதல் தோல்வியாய் முடிந்தது. அலங்காரமாக அணிமணி பூட்டப்பெற்ற யானையில் இவர்ந்து, சுஞுத்தானே தற்காத்து நின்றோர்க்குத் தலைமை தாங்கினன். ஆயின் பின்னர், உக்கிரமான போரின் பயனுய், மலாய்

மன்னனும் அவன்றன் படைஞரும் பின்வாங்கிச் சென்றராக, நகரம் பகைவர் கைப்பட்டது. அப்பால் நடந்தது படுகொலையே—அதற்குந்தப்பிய முசிலிங்கள் அடிமைகளாக விற்கப்பட்டனர். ஆயின் நகரில் வாழ்ந்த சீன, இந்து, பர்மிய மக்களைப் போத்துக்கேயர் வாளாவிட்டனர். நகரம் எஞ்சலின்றிச் சூறையாடப் பட்டது. மன்னனுக்கு அனுப்பப்பட்ட கொள்ளைப்பணம் 2,00,000 பொற் குரூ சாடோ எனக் கணிக்கப்பட்டது.

இப்போரினிற் புகழ்மாலை சூடியோர் தளபதி பெர்ணந்து பெரசு அந்திராடே யும், தளபதி அந்துவான் ஆபுருவும் ஆவர். இவர்கள் இருவரும் பெருஞ் சிறப் புடைய தலைவராயினர். பசிபிக்கு முழுவதுமே தன் காலடியிற் கிடப்பதை உணர்ந்த அல்புகேர்க்கி சீனக் கடற்குத் தளபதியாக அந்திராடே என்பானை நியமனஞ் செய்தான்; மற்று, வாசனைத்திரவியங்கட்குக் குன்றுத களஞ்சிய மாய்ப் புகழ்பெற்றிலங்கிய இந்தோனேசியத் தீவுகளை ஆராயும் பொருட்டு ஆபுருவைக் கப்பல் மூன்றோடு அனுப்பி வைத்தான். மாயிருஞ் சீனப் பேர சோடு ஓராற்றுற் றொடர்பு கொண்ட போத்துக்கேயர், வளங்கொழிக்கும் பசிபிக் குத் தீவுகளோடு நேராகத் தொடர்புபூண்டனர். மலாக்காவை வென்றடிப்படுத் திய அல்புகேர்க்கி, அவ்வழி, இந்து சமுத்திரத்திலே தனது ஆதிக்கம் நிறுவி யதுமன்றி, பசிபிக்கிலும் ஆட்சிபரப்பதற்கு வழிதிறந்தான். அவை கோவா விற்கு மீளுமுன்னர், வலிய ஒரு கோட்டையாக மலாக்காவை மாற்றியமைத்து அதன் ஆட்சிப் பொறுப்பைத் திறமைமிக்க தளபதி இறை த அவியோ என்பா னிடம் விட்டுச் சென்றான்.

மலாக்காவைக் கைப்பற்றியதனால், அல்புகேர்க்கி கடல் கடந்த ஐரோப்பியப் பேரரசொன்றை ஆசியாவில் அமைத்து முடித்தான். இந்து சமுத்திரத்திலே மறுக்கவொண்ணு ஆதிக்கம் நிறுவி, அதன் அடிப்படையில் வர்த்தகப் பேர சொன்றை நாட்டுவதே அவன் கொண்ட குறிக்கோள். ஆபிரிக்கக் கரையிலே பெருந்துறைகள் யாவும் ஏற்கவே போத்துக்கேயரின் ஆட்சியிலிருந்தன. ஆயின், அவன் காலத்துக்கு முன்னர் போத்துக்கேயர் கடலதிகாரஞ் செலுத்து தற்குக் கொச்சியொன்றே யிருந்ததல்லால், பிறதலங்கள் இந்தியாவில் அன் னர்க்கு இருந்ததில்லை. சொக்கொத்திராவைப் பிடித்தமையாலும், ஓமசிலே அரசியற் செல்வாக்குப் பெற்றமையாலும், மலாக்காவைக் கைவசப்படுத்தியமை யாலும், அசைக்க வொண்ணு ஆதிக்கமுறையை இந்து சமுத்திரத்தில் அவன் தாபித்தான்—போத்துக்கேயரின் கடல்வலி ஐரோப்பாவிலே வலுப்பெற்றிருந்த காலம் வரையும், அவ்வாதிக்கமுறை தளராது நின்றது. இப்பூட்கையைச் செல் வனே ஆற்றுப்படுத்தும்பொருட்டு, போத்துக்கேயரின் அதிகாரத்துக்கு மையப் பீடமாய் இயங்கத்தக்க தளமொன்றினை இந்திய மண்ணில் அமைத்தல் அவசிய மாயிற்று. கோவாவை வென்றடிப்படுத்தி, போத்துக்கேயரின் சிறுகுடியிருப்பை அங்கு நிறுவி, அரசாட்சி செய்தற்கு வேண்டுஞ் சாதனைகள் அனைத்தும் பொருந்திய தலைப்பெரு நகராய் அதனை விருத்திசெய்தமையே அவனுடைய திட்டமனைத்துக்கும் அடிப்படையாயிற்று.

இலவங்கத் தீவுகளுக்கு அல்புகேர்க்கி அனுப்பி வைத்த ஆபுரு என்பான் கிரெசிக்கை அடைந்தானையினும், அவன் செய்த பயணம் இடுக்கண் மிக்கதாய் இருந்தமையாலே, மூன்று கப்பலுள் ஒரேயொரு கப்பலே அடுத்த ஆண்டில் மலாக்காவிற்கு மீண்டது. ஆயினும், அவ்வாற்றால் இலவங்கத் தீவுகளுக்கு வழி திறந்தாயிற்று. ஆபுருவின் உத்தியோத்தருள் ஒருவனாகிய தளபதி செராவோ என்பான் சென்ற கப்பல் புயலிற் சிக்கி உடைந்ததாயினும், அவன் அம்போய்னாவை ஒருவாறு அடைந்து, உள்ளூர்ச் சுலுத்தான்மாரோடு தொடர்பு கொண்டான். அக்கால் இந்தோனேசியாவில் நிலவிய நிலைமை போத்துக்கேயர்க்குச் சாலவும் வாய்ப்பாயிருந்தது. அங்கே யாவாத் தீவில், அண்மையில் மதமாறிய முசிலிங் கொற்றவர்க்கும் பழைய இந்து இராச்சியங்களுக்குமிடையே வெம் போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்தது. இந்து இராச்சியங்களுட் குறிப்பிடத் தக்கது கெதிரியென்க. முசிலிங் கொற்றவருள் முக்கியமானவன் தெமாக்கு நாட்டுச் சுலுத்தான் ஆவன். அரசிழந்த மலாக்கா மன்னன் இவனுடைய உதவியை முன்னம் நாடியிருந்தான். எனவே இந்த யாவாச் சுலுத்தான் ஒரு நூறு கப்பல் கொண்ட கடற்படையொன்றை அடுக்குப்பண்ணி, மலாக்காக் கடலுக்கு அனுப்பி வைத்தான். ஆயின், போத்துக்கேயத் தளபதி அந்திராடேயின் கரவெற்கலங்களின் பீரங்கிப் பிரயோகத்துக்கு ஆற்றாது அப்படை கலைந்தது. இவ்வெற்றிவாயிலாய்ப் போத்துக்கேயர் யாவாக்கடலில் தம் ஆதிக்கம் நிறுவியதோடு, அந்நாளில் யாவாத்தீவில் நிகழ்ந்துகொண்டிருந்த சமயப் போரிலே, ஒரு மன்னனை மற்றையோனுக்கு மாறுகத் தூண்டிவிடுதலும் எளிதாயிற்று. ஆயின் ஆங்கு அவர்கள் கணிசமான வெற்றி காணுமுன், 1521 இல், வசந்தகாலத்தில், ஐரோப்பியக் கப்பலொன்று கிழக்கிலிருந்து துறைமுகத்துள் வந்து புகுந்தது. அமெரிக்காவிலிருந்து பசிபிக்கைக் கடந்து வந்த மகலன் என்பானின் **விற்ரோறியா**[1] என்னுங் கப்பலே அஃது. ஈது கண்டு அச்சங் கொண்ட போத்துக்கேயர், உள்ளூர்க் கொற்றவரோடு அவசரமாகப் பொருத்தனைகள் செய்து தமது அரசியல் நிலையை உறுதிப்படுத்தத் தலைப்பட்டார்கள்.

பெரசு அந்திராடே சீனக் கடல்களிற் செய்த பயணம் பற்றியும் மிங்குப் பேரரசோடு தொடர்பு கொள்ளப் போத்துக்கேயர் செய்த முயற்சிகள்பற்றியும் பின் ஆராய்வோம். இலவங்கத் தீவுகளிலே மெதுவாக ஆதிக்கம் பரப்பி, சீனக் கரையிலும் வந்துற்றதோடு, ஆசியக் கடல்களிற் போத்துக்கேயரின் ஆதிக்கம் பரவிய முதற்பருவம் முடிவுற்றதெனலாம். வாசனைத்திரவிய வர்த்தகத்திலே அவர்தம் முற்றுரிமையும் அவ்வளவிற் செவ்வையாக நிறுவப்பட்டது. எனினும், இவ்வாறு இந்துசமுத்திரத்தில் வந்து நுழைந்தோரை அப்புறப்படுத்தக் கடைசி முறையாகத் துருக்கியச் சுலுத்தான் ஒரு முறை முயன்றான். எகிப்தைத் தன் பேரரசில் ஒரு பாகமாய்க்கொண்ட மாண்புடைச் சுலுத்தான் கிழக்குலக வர்த்தகத்தினின்றும் அராபியர் விலக்கப்பட்டமையாலே அவல விளைவுகள் நேர்ந்தவாற்றை உணரத் தொடங்கினன். இந்து சமுத்திரத்திலே போத்துக்

[1] About Magellan's interest in the Moluccas, etc., see Stanley's edition of his "Voyages for the Hakluyt Society", p. 124.

கேயரின் முயற்சிக்கெல்லாம் ஊக்கமளித்த ஒரு பெரும் நோக்கம், இசுலாமிய ரின் ஆக்கமறுத்தலே யென்பதை ஏற்கவே கண்டோம். எகிப்தைப் போரசோடு இணைத்ததன்பின்னர், கொன்சுதாந்திநோப்பிளில் அரசோச்சிய சுலுத்தானுக்கு இப்பிரச்சினை நேரடியாகக் கவலையளித்தது. போத்துக்கேயரின் ஆக்கிரமிப் பாலே தம் நலவுரிமையில் நட்டப்பட்ட இந்திய மன்னர் இருவர் இருந்தனர்— அவர்தாம் கோழிக்கோட்டுச் சாமோரினும் கம்பாய் நாட்டு முசிலிம் மன்னனும் ஆவர். அவர்களோடு இணக்கப்பேச்சு நடாத்திய சுலுத்தான் பொது வெதிரிக்கு மாறுக ஒருமித்துச் செயலாற்றுதற்கு ஓர் உடன்படிக்கை செய்தான். இப் பொருத்தனை ஒப்பேறிய பின்னர், எகித்திய ஆள்பதி சுலைமான் பாசா அல் காடிம் என்பானுக்கு வருமாறு கட்டுரை விடுத்தான் சுலுத்தான்.

'சுலைமான் பாசாவே! எகிப்திய நாட்டின் பெக்கிளர் பெக்கு ஆகிய நீர் என் கட்டளை பெற்றவுடனும் உம்முடைய மூட்டை முடிச்சுக்களை ஆயத்தஞ் செய்து, சுயசில் அறப்போர் விளைக்க ஆவன செய்து, கடற்படையொன்று அடுக்குப்பண்ணி வேண்டிய படையுந் திரட்டிய பின்னர், நீர் இந்தியாவுக்கு வழிப்பட்டுச் சென்று அப்பகுதிகளை வென்று அடிப்படுத்திப் பாதை மறித்து, மெக்காவுக்கும் மெடினாவுக்கும் செல்லும் வழியைத் தடுத்ததன் பின்னர், போத்துக்கேரின் தீச்செயல் தடிந்து, கடலினின்றும் அவர்தங் கொடியை நீர் அப்புறப்படுத்துவீர்'.

இந்த அறிவுறுத்துரைக்கு ஏற்பப் பணிந்து சுலைமான் பாசா பெருங் கடற் படை அடுக்குப்பண்ணி, 1538 இல் இந்து சமுத்திரத்தில் வந்து தோற்றினன். ஆயினும் சாமோரினது கடற்படையை அவனுற் சந்திக்க முடியவில்லை. துருக் கியக் கடற்படையானது 1538 பெப்பிரவரி 20 ஆம் நாளில் இந்தியாவை அணுகுங்காலை, போத்துக்கேய ஆள்பதி மாட்டின் த சூசா என்பான் நெருங்கிய தாலே கோழிக்கோட்டுத் தளபதி வேறுவழியின்றி அக்கடற்படையைத் தாக்கிக் கலைத்தான். இச்செய்தி கேட்ட சுலைமான் பாசா, அராபியக் கடலில் வந்து அலைந்ததன்பின்னர், எகிப்து நாட்டுக்குத் திரும்பிப் போயினன். அடுத்த அறுப தாண்டுக்காலத்துக்குப் போத்துக்கேயக் கடற்படையானது இந்து சமுத்திரத் திலே எதிர்ப்பாரின்றி ஆட்சி செலுத்திற்று.

அக்காலத்திற் போத்துக்கேயர்க்கும் இந்திய அரசுகளுக்குமிடையே நிலவிய உறவில் தலக்கமாகப் புலப்படுகின்றவொன்று யாதெனின், கோழிக்கோடு தவிர்ந்த பிற தென்னாட்டு இந்து வேத்தவைகள் போத்துக்கேயரிடத்துப் பொறையும் நட்புங் கலந்த பொது மனப்பான்மை கொண்டதேயாகும். இவ்வாறுக இந்து சமுத்திரத்திலே போத்துக்கேயரின் ஆக்கிரமிப்பையும் கரைப்புலத்துத் தாபனங்களிலே அவர் தம் முயற்சியையும் கண்டு இந்திய நாட்டிற் கிளர்ச்சி யாதும் பரக்கக் காணப்படாமை ஈண்டு நாம் சிந்திக்கத் தக்கதொன்றாகும். விசயநகரப் பேரரசானது கோவாவிலிருந்து போத்துக்கேய ரோடு நல்லுறவு பேணியதோடு, பரந்த தன் ஆணிலங்களிலே வர்த்தகஞ் செய்ய வும் அனுமதியளித்தது. போத்துக்கேயர் முதன்முதலாகத் தாபனம் நிறுவிய

கொச்சியை யாண்ட மன்னவரோடு மிக்க கெழுதகைமையான உறவு பூண்டனர். கரைப்புலத்தில் ஆட்சி செய்த குறுநிலமன்னரோடும் அன்னர் தடையின்றி, அரசியல் சிக்கல் யாதுமின்றி வர்த்தகஞ் செய்தனர். கோழிக்கோடு தவிர்ந்த பிற இந்து வேத்தவைகளிலே போத்துக்கேயரைப் பகைமை யாதும் எதிர்த்ததில்லை யெனக் கூறின், அக்கூற்றுத் தவருகாது.

ஆயின் சாமோரினது நிலையோ முற்றும் புறம்பானது. கரைப்புலத்தில் அவன்றன் அரசே தனிப்பெருங் கடல்வல்லரசாய் இருந்ததாதலின், போத்துக்கேயர் கடலில் ஆதிக்கம் பாராட்டியமை அவனுடைய அதிகாரத்தொடு மூரணி நின்றது. சாமோரினுடைய கடற்படைகளுக்கும், கோவா கொச்சி நகரங்களிலே நிலையூன்றிய போத்துக்கேயர்க்கும் ஒரு நூருண்டுக்காலமாக இடையீடின்றிக் கடற்போராட்டு நிகழ்ந்து வந்தது. இறுதியாய் 1599 அளவிலேயே அவர்க்கிடை பொருத்தனை ஒப்பேறிற்று. இன்னும், கோழிக்கோட்டு அரசின் சீத்துவமானது, 400 ஆண்டுக்காலமாக அராபிய வர்த்தகரின் முயற்சியோடு ஒன்றியிணைந்து இருந்தவாற்றையும் நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். அராபியரின் வர்த்தக முயற்சியைத் தாமே கவரப் போத்துக்கேயர் முயன்றமையாலே, கோழிக்கோட்டின் வலி வளர்தற்கு அடிப்படையாகச் சாமோரின்மார் கையாண்டு வந்த பூட்கையானது பாதிக்கப்பட்டது. ஆதலின் சாமோரின் காட்டிய பகைமை அவ்வழி விளங்கும். அவனது அரசின் நலமே அப்பகைமைக்கு ஏதுவாயது.

பிறவாற்றுற் போத்துக்கேயரின் வர்த்தக முயற்சி முசிலிம் வணிகரையே பாதித்தது—அன்னர் எண்ணித்துணிந்த பூட்கையின் ஓர் அமிசமே அஃது. மலாக்காவை வென்றடிப்படுத்திய ஞான்று, இந்து சீன பர்மிய வர்த்தகன்மார்க்கு அல்புகேர்க்கி யாதும் உறுகண் செய்திலன் என்பதை முன்பு கண்டோம். இந்து சமுத்திரத்தில், வர்த்தகப் பொருள்களை ஏற்றிச் செல்லுதல் அராபிய வணிகரின் முற்றுரிமையாகிவிட்டது. அவர்களை அப்புறப்படுத்தப் போத்துக்கேயர் மூனைந்து முயன்றமை, இந்திய மன்னவரையோ அவர் தம் வணிகரையோ பாதித்திலது. இந்திய வர்த்தகர் தத்தம் பொருள்களைப் போத்துக்கேயர்க்கு விற்பதும், அல்லது அன்னர்க்கன்றி அராபியர்க்கு விற்பது மெல்லாம் இந்திய மன்னரைப் பொறுத்தவரை ஒன்றேயாகும். இன்னும், உண்மையை நோக்கின், இந்திய மன்னர்க்கு வேண்டிய படைக்கலங்களையும் பிற சாதனங்களையும் போத்துக்கேயர் விற்கக் கூடியராதலின், அன்னர்க்கே நிலைமை வாய்ப்பாயிருந்தது. இனி, இந்திய வணிகரோ அராபிய வணிகரின் போட்டியின்றி வர்த்தகம் நடாத்த ஒருவகை அனுமதிச் சீட்டு முறையினை விரைவில் வகுத்துக்கொண்டனர். அவ்வாற்றுற் போத்துக்கேயரின் முற்றுரிமை அன்னர்க்கு வாய்ப்பாகவே இருந்தது எனலாம். போத்துக்கேயர் தாம் ஆதிக்கம் வகித்த முதற் பருவத்தின்போது ஈட்டிய பெருவெற்றி யாதெனின், அராபிய வணிகரைக் கடல்களிலிருந்து விரட்டியோட்டி, அன்னர் இத்துணைக் காலம்

அனுபவித்துவந்த வர்த்தக முற்றுரிமையை அழித்ததேயாம். இதனை இந்துக்கள் வெறுத்ததுமில்லை; கம்பாயையும் கூர்ச்சரத்தையுஞ் சேர்ந்த அராபியரல்லா முசிலிம் வர்த்தகர் எதிர்த்ததுமில்லை.

இன்னும் கோழிக்கோட்டிற் போத்துக்கேயர்பட்ட அவலத்தோல்வியின் பின்னர், இந்தியப் பெருநிலத்தில் நாடுபற்றும் ஆசையாதும் கொண்டிருந்தாரேல், அவ்வாசை யனைத்தும் அவர்கள் கைவிட்டார்கள். கோவாவும் கொச்சிக் கோட்டையும், தியூ பம்பாய்த் தீவுகளும், கரையோரத்தையண்டிய பல்வேறிடங்களில் வர்த்தகத்தலங்களும் ஆகிய இவையே அன்னார்க்கிருந்த உடைமைகளாகும். அவற்றோடு அவர்கள் திருத்தியடைந்தனர். போத்துக்கேயப் பதிலிராயன்மார் கோவாவிலே வெகு ஆடம்பரமும் விமரிசையும் பேணினராயினும், பேராசர்க்கேயுரிய சிறப்புக்கள் பல பாராட்டிவந்தனராயினும், இந்திய மன்னரோடு அவர்கள் மெய்யுணர்வோடே ஒழுகி வந்தனர். அவர்கள் தூதுக்குழுக்களை அனுப்பியும் ஏற்றும் வந்தனர்; சன்மானங்கள் கொள்ளலும் கொடுத்தலும் செய்தனர்—எனவே அரசுகளிடையே நிலவவேண்டிய நற்பண்பனைத்தும் அவர்கள் பேணி வந்தனர். இவ்வாறுக அவர்கள் இந்தியநாட்டுச் 'சிற்றரசு' ஆயினர் எனலாம். ஆயின் கடலிலோ அவர்தம் உரிமைகள் எங்கும் பரந்தன. அவர்தம் அதிகாரம் எதிர்க்கவியலா வொன்றாய் இருந்தது.

(2)

அபொன்சோ த சூசா என்பான் 1542 இல் ஆளுபதியாக நியமனம் பெற்றதோடு, ஆசியாவிலே போத்துக்கேயரின் கடலாதிக்கம் இரண்டாம் பருவத்தை அடைகின்றது. அவர்கள் தம் வர்த்தக முற்றுரிமைவாயிலாக முழுப்பயன் பெறுவதில் முனைந்திருந்த காலம் அது. அறுபதாண்டு காலமாய், போத்துக்கேயப் பெருமரக்கலங்கள் கிழக்கிலிருந்து பட்டும் மணியும் வாசனைத் திரவியமுஞ் சுமந்து போத்துக்கலுக்கு அமைதியாய்ச் செல்வது வழக்கமாயிருந்தது. முடிக்குரிய சேவையாளர் செல்வம் பெருக்கினர். 'கிழக்குலகப் பபிலோன்' எனக் கமோவென்சுப் புலவனால் விதந்துரைக்கப்பட்ட கோவாவில், போக வாழ்க்கையும் இழிவொழுக்கமும் மட்டிறந்து பரவின. அக்கால் வாழ்ந்த போத்துக்கேயச் சான்றவர் சிலரின் சொற்களை நாம் நம்புவதாயின், வரலாற்றில் அவற்றுக்கு ஒப்பும் உயர்வும் இல்லையெனலாம். இப்பருவத்திலே போத்துக்கேயர் இலங்கைக் கடற்கரைப்புலத்தில் தமது செல்வாக்கை உறுதிப்படுத்தினர். இந்தோனேசியத் தீவுகளிலே தமது வர்த்தகம் பெருக்கினர்; சீனத்தோடும் யப்பானோடும் சிற்சில தொடர்புகள் நிறுவினர். ஆயின் பிறவாற்றால் அப்பருவம் அரசியற் சிறப்பு உடையதன்று. எனினும், சமயத்துறையிலே போத்துக்கேயரின் பூட்கையிற் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம் நிகழ்ந்தது—அஃது இங்குக் குறிப்பிடத்தக்கது.

போத்துக்கேயரும், அவர்ப்பின்னர் பிற ஐரோப்பிய வல்லரசுகளும் ஆசியாவிலே தத்தம் மதங்களைப் பரப்பச் செய்த முயற்சிகள் யாவும் ஆசிய ஐரோப்பிய வரலாற்றிற் சிறப்பிடம் வகிப்பவை—அவை பற்றிப் பிறிதோரிடத்திற் கூறப்படும்.[1] மூன்றும் தொம் யோன் காலத்திலே போத்துக்கேரின் சமயப்பூட்கையில் ஏற்பட்ட மாற்றம் பற்றியே இங்கு நாம் ஆராய்வோம். அறியப்படாத நாடுகளைக் கிறித்துவ நெறிக்கு வென்றடிப்படுத்துவதுபற்றிக் கடலோடி என்றிகனவு கண்டானுயினும், போப்பாண்டவர் நிக்கலசு என்பார் அவ்வாறே அவனைப் பணித்தனராயினும், புதிதுகாண் ஊழியின்போது போத்துக்கேயரின் பூட்கையில் மதாபிமானம் சிறிதே விரவிக் காணப்பட்டது. அஞ்ஞானிகளாகிய சோனகரைக் கொன்றொழிப்பதே யல்லாது, பதிதரை மதமாற்றஞ் செய்வது அவர்தம் நோக்கமாயிருக்கவில்லை. அத்தகைய பூட்கையைச் செயற்படுத்தற்கு வேண்டும் வலி தமக்கில்லையென்பதைத் தொம் மனுவெலும் அவன்றன் பிரதிநிதிகளும் அறிந்தே யிருந்தனர். ஆதலின் தமது ஆட்சிக்குட்பட்ட கோவா, கொச்சி, மலாக்கா போன்ற இடங்களிலே தேவாலயங்கள் கட்டி, பிசப்பகங்கள் அமைப்பதோடு திருத்தியடைந்தனர். புரட்டசுத்தாந்த இயக்கத்திற்கு ஈடாய்க் கத்தோலிக்கத் திருச்சபைக்குள்ளேயும் கிளர்ந்த மதாபிமானம், ஐரோப்பிய வேத்தவைகளிலே பெருஞ் செல்வாக்குச் செலுத்துவதாயிற்று. எதிர்மதமலர்ச்சியெனும் சமய இயக்கத்திற்கு உறுதுணையளித்த பெருமக்கள் பலர் ஐரோப்பியத் தீபகற்பத்திலேயே தோன்றியோராவர். இக்னேசியசு உலயோலா என்பார் தாபித்த யேசு சங்கத்தை ஆர்வமோடு ஆதரித்தோர் பலர் அத்தீபகற்பத்திலேயே காணப்பட்டனர். இசுப்பானியத் தலைவரே அச்சங்கத்தை நிறுவினரெனினும், போத்துக்கேய மன்னனே அதற்கு உற்ற துணைவனுய்ப் பெரும் ஆதரவாளனுய் விளங்கினன். அடுத்த ஐம்பதாண்டுக் காலத்தே யேசுசங்க ஆசிரியன்மாரின் ஊக்கத்தாலே, போத்துக்கேயக் கல்விப் பீடங்களிற் சிறப்பாகக் கொயிம்பிராவிற் சமயத்தத்துவம் வியத்தகு முறையிற் புத்துயிர்ப்படைந்தது. போத்துக்கேய மன்னர் ஆசியா மாட்டுக் கொண்ட பூட்கையில், இவ்வாறு மலர்ந்த மதாபிமானம் பிரதிபலித்தது. கிழக்குலகிலே கிறித்துவமதம் பரவிய வரலாற்றிலே பெருமக்கள் பலர் போத்துக்கலேயே தம் இரண்டாவது தாயகமாகக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. பிரான்சிசு சேவியரைச் சமயதூதப் பரிசோதகராய்க் கிழக்கிற்கு அனுப்பிவைத்தவன் போத்துக்கேய மன்னனேயாவன். இத்தாலியராகிய வண. பிதா வக்லியானே இலிசுபன் நகரிலே சமயத்தூதர் நாற்பத்திருவரைச் சேர்த்தனர்—அவருள் அறுவரே போத்துக்கேயர். கொயிம்பிராவிலும் கோவாவிலும் கல்வி கற்று முடித்த இறிக்கியென்பாரும் இத்தாலியரே. அவர்க்கும் ஞானத்தாயகம் போத்துக்கலே.

மூன்றும் யோனது காலத்தில் ஆன்மலாபத்தையன்றி வர்த்தக நயத்தை நாடுவதே போத்துக்கேயப் பூட்கையின் நோக்கமாயிருந்தது. அதில் மாறுதல் ஏற்படுதற்கு ஏதுவாயிருந்த சூழலை இதுகாறும் விளக்கினேம். இந்தியாவிற் கோவா தவிர்ந்த பிறவிடங்களிலே, இந்து மக்களைப் பொறுத்தவரை இப்பூட்கை

1. ஏழாம் பகுதியைப் பார்க்க.

யாற் பெருவிளைவு யாதும் நேர்ந்ததில்லை. ஆயின், மலபார்க் கரைப்புலத்து இந்தியக் கிறித்துவர்க்கு அதுவோர் அதி முக்கிய நிகழ்ச்சியாயிருந்தது. இலங்கை, சீனம், மொலுக்காசு, யப்பான் ஆகிய பிறவிடங்களிலே போத்துக் கேயரின் வர்த்தக முயற்சியும் சமயம் பரப்பும் ஆர்வமுங் கலந்து விடுகின்றன— அதனற் பிற்றைஞான்று யப்பானிலிருந்து பிறநாட்டோர் அனைவரும் வெளி யேற்றப்பட்டனர்; பதினேழாம் நூற்றாண்டிற் சீனப் பெருங்குழப்பம் விளைந் தது.

புரட்டசுத்தாந்தம் ஐரோப்பாவில் வளர்ந்தமையாலே, ஆசியாவில் மிக முக்கியமான பாரதூரமான விளைவு ஏற்பட்டது. போப்பாண்டவர் கிழக்குலகிற் போத்துக்கேயர்க்கு வழங்கிய முற்றுரிமையானது, புரட்டசுத்தாந்த அரசுகளைப் பொறுத்தவரை ஏற்பிலதாயிற்று. அன்றியும் ஆதிக்கச் சமநிலை ஐரோப்பாவிலே மெல்ல மாறியது. எலிசபெத்தரசியின் ஆட்சியில் இங்கிலாந்தானது இரண்டாம் பிலிப்பின் மூற்றுரிமையை இசுப்பானியப் பெருங்கடற்கண்ணே ஒழித்தற்கு முயன்றதுமன்றி, அடக்கற்கரிய ஆமெடாவின் வலியையும் அழித்தபோது ஐரோப்பியக் கடல் வல்லரசுகள் இந்தியக்கடல்களில் வந்து புகுவது ஒல்லுவதா யிற்று. இன்னும், வாசனைத்திரவிய வர்த்தகமையம் இலிசுபன் துறையிலிருந்து நெதலாந்து நாட்டுப் பெருந்துறைகட்கு மாறியவாற்றையும் நாம் ஈண்டு நினை விற் கொள்ளல் அவசியமாகும். ஐரோப்பாவின் வடபுலங்களிலேயே வாசனைத் திரவியங்கட்குக் கூடிய மதிப்புக் காணப்பட்டது. இன்றியமையா இப்பண்டங் களுக்கு ஓர் அங்காடியாக விளங்கியமையே இலிசுபன் நகரின் சிறப்பிற்குத் தலையாய காரணமாகும். ஆயின், வடபுல வணிகரின் கையிலேயே அக்கால் ஐரோப்பிய வர்த்தகம் இருந்ததாதலின், அவ்வர்த்தகத்துக்கு அந்துவேப்பே ஒரு மையமாக விளங்கியதுமன்றி, பெரும்பாலும் அதில் முற்றுரிமையும் பெற் றிருந்தது. இப்பண்டங்களை வினியோகஞ் செய்வதில் ஈடுபட்டிருந்த இடச்சு வர்த்தகர், கிழக்குலகிலே போத்துக்கேயரின் ஆதிக்கத்தை விஞ்சிச் செல்லலாம் எனத் தெளிந்தாராதலின், பழைமை போல் அவர்தம் பண்டங்களுக்குப் பெரு விலை கொடுக்கவிரும்பினரல்லர். தலைப்பெரும் இடச்சு வர்த்தகர் பலர் அமித்த டாமிலே 1592 இற் கூட்டங் கூடி, இந்தியாவொடு வர்த்தகஞ் செய்யும் நோக் கொடு கம்பெனியொன்றை நிறுவத் துணிந்தனர். பயணத்துக்கு ஆயத்தஞ் செய்யவும், வேண்டிய செய்திகள் சேகரிக்கவும் அத்தாபனம் கோணீலியசு த அவுற்மன் என்பானை இலிசுபனுக்கு அனுப்பி வைத்தது. இன்னும், கோவா அதிமேற்றிராணியார்க்குச் செயலாளனுமிருந்து, கிழக்குலகிலே போத்துக்கேய ரின் வலியும் மெலிவும் அறிந்துகொள்வதற்குச் சிறந்த வாய்ப்புக்கள் உடையனு மிருந்த யான் அய்கன் இலின்சுகோற்றன் என்பானும் தான் அறிந்த செய்தி யனைத்தும் கம்பெனிக்கு அளித்து உதவினன். தொம் மனுவெலின் காலத் திலுமே, இந்தியாவுக்குச் செல்லுங் கடற்பாதையைப் பெரும் இரகசியமாக வைத்திருத்தற்காகத் தக்க முற்காப்பு முறைகளைப் போத்துக்கேயர் கையாண் டிருந்தனர் என்பதை நாம் இப்போது நினைவுறுத்தல் வேண்டும். கொங்கோ விற்கு அப்பாலே பாதைபற்றி யாதும் விவரம் தேயப்படங்களிற் கொடுக்கப்

படுதலைத் தடுக்குமுகமாய் 1504 இல் மனுவெல் ஒரு கட்டளை விடுத்தான். அவ் வாறு கொங்கோவிற்கு அப்பால் இடங்குறிக்கப்பட்ட படங்கள் யாவும் தேடிச் சேர்க்கப்பட்டு, அவற்றினின்றும் அவ்வகைக் குறிப்புக்கள் அழித்து நீக்கப்பட் டன. படமமைக்கும் அரசாங்கத்துறையானது ஒரு பெரும் மறை பொரு ளாகவே போத்துக்கேய அரசினராற் பாதுகாக்கப்பட்டு வந்தது. எனவே தமக்கு வேண்டுஞ் செய்திகளை இலின்சுகோற்றன், அவுற்மன் என்பாரின் அறிக்கைகளிலிருந்தே இடச்சுக்காரர் பெறவேண்டியவராயினர்.

ஆசியாவொடு வர்த்தகஞ் செய்யப் புறப்பட்ட முதல் இடச்சுக்கடற்படை யானது, நான்கு மரக்கலங்களைக் கொண்டதாய், அவுற்மன் என்பான் தலைமை யிலே தெக்செல் எனுஞ் சிற்றூரிலிருந்து 1595 இல் வெளிப்போந்தது. இந்தோ னேசியத் தீவுகளை அடைந்து, இரண்டரையாண்டுக்காலங் கழிந்தபின், ஒல்லாந் துக்கு அது மீண்டது. அதனோடு சென்ற 259 ஆட்களிலே எண்பத்தொன்பதின் மரே மீண்டாராயினும், பெற்ற இலாபமே பெரிதாயிருந்தது. அப்போது கொணர்ந்த வர்த்தகப் பொருளை விற்றமையாலே 80,000 புளோரின் இலாபம் தேறிற்று.

ஒழுங்காகப் போக்குவரவு நிகழ்தற்கும், ஐக்கிய கிழக்கிந்தியக் கம்பெனி தோன்றுதற்கும் ஏதுவாயது அக்கடற்பயணம். அக்கம்பெனியை நிறுவுதற்குச் சிறந்த அரசறிஞனை ஒல்டன் பாணவெல்ற்று என்பானே ஊக்கமளித்தான். 1602, மார்சு 20 எனத் தேதியிடப்பட்ட ஒரு பட்டயத்தின்வாயிலாகக் குடித் திணை மன்றமானது வர்த்தக முற்றுரிமை அளித்ததுமன்றி, ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் ஒப்பேற்றவும், நாடு வென்று கைப்பற்றவும், கோட்டைகள் கட்டவும் வேண்டிய ஆட்சியதிகாரமும் அதற்கு அளித்தது. இக்கம்பெனி கைச் சாத்திட்ட முதற் பொருத்தனையானது, போத்துக்கேயர்க்கு வைரித்த எதிரியா யிருந்த 'மலபார் மாவேந்தன், சாமோரினுடே' ஒப்பேற்றப்பட்டது. கம்பெனி யின் சார்பாக அதிற் கைச்சாத்திட்டோன் தளபதி வான் தர் ஏகன் என்பானே (1604). 'மேன்மைதங்கிய சாமோரினது நாட்டிலிருந்தும், இந்தியாவின் பிற பாகத்திருந்தும் போத்துக்கேயரை வெளியேற்றும் நோக்கத்தோடே' நிறை வேற்றப்பட்டது அப்பொருத்தனையென அதன் பாயிரங் கூறிற்று. ஆயின் அல்பு கேர்க்கி அமைத்த பாதுகாப்புத் திட்டம் பங்கமடையாது இருக்குந்தனையும் போத்துக்கேயரை வெளியேற்றுதல் இயல்வதன்று. ஆதலின் போத்துக்கேயரின் ஆட்சி வலியற்றிருந்த இந்தோனேசியத் தீவுகளினின்றும் அன்னரை அப்புறப் படுத்தலே இடச்சுக்காரனின் முதன் முயற்சியாயிற்று.

ஐக்கிய கம்பெனியானது 132½ சதவீதமான தன் பங்கிலாபத்தை 1610 இல் வெளிப்படுத்திற்று. அது ஏற்கவே 1605 ஆம் ஆண்டளவில் அம்போய்ஞ வைப் போத்துக்கேயரிடமிருந்து கைப்பற்றியதுமன்றி, விரைவில் அப்பிரதே சத்திலே வர்த்தகச் சார்பிலும் அரசியற் சார்பிலும் தானே முந்திச் சென்று ஆக்கிரமிக்கும் தன்மை பெற்றது. எனினும், யான் பீற்றேசுகூன் என்பான் 1619 மே 30 இல் யக்கார்த்தாவை வென்றடிப்படுத்திய காலந்தொட்டே இந் தோனேசியத் தீவுகளிற் கப்பனியின் ஆதிக்கம் முற்றுக நிலைநாட்டப்பட்டது.

எனலாம். இச்சம்பவத்தைத் தன் பணிப்பாளர்க்கு அறிவித்தபோது கூன் வருமாறு கூறினன்: 'இத்துணைக்காலம் நாம் விழைந்தமையப்பீடத்திற்கு அத்திவாரம் இடப்பட்டுவிட்டது. வளமிகுநாட்டில் ஒரு பெரும்பகுதியும், வர்த்தகச் சிறப்புடைய கடல்களில் ஒரு பெரும்பாகமும் உமக்கேயாயின. நெஞ்சுத் துணிவாற் சாதிக்கக்கூடியது யாதென்பதையும் எல்லாம் வல்ல இறைவன் எமக்காகப் பாடுபட்டு உமக்கு அருள்செய்தவாற்றையும் கண்டு கொள்வீர்.'

இந்தியத் தீவுகளிலே இடச்சு ஆதிக்கத்துக்கு அத்திவாரமிட்டோன் யான் கூன் என்பானுக, பேரரசொன்றை நிருமாணித்துப் போத்துக்கேயரின் வீழ்ச்சியை மூற்றுப்படுத்தியோன் அந்தோனி வான் தீமன் என்பானுவன். அவன் 1633 இல் ஆள்பதிநாயகனுக நியமனம் பெற்றவன். கிழக்குலகிலே போத்துக்கேயர்க்குப் பெருங்கோட்டை போன்றிருந்த மலாக்காவை 1641 இல் அவன் தன்கைப்படுத்தி, அல்புகேர்க்கியின் பாதுகாப்பு முறையைப் பங்கப்படுத்தினன். இத்தளத்தினைத் தம்வயமாக்கிய இடச்சுக்காரர் இன்னும் போத்துக்கேயரின் ஆட்சியிலிருந்த இந்திய வர்த்தகமீது தமது கவனத்தைச் செலுத்தல் இயல்வதாயிற்று. செபால் வீரத்து என்பான் 1603 இலே வருமாறு கூறியிருந்தான். 'அந்நாட்டு மன்னனையும் மக்களையும் எமக்கு நண்பராகப் பெறுவோமாயின், போத்துக்கேயரைத் தாக்குதற்குக் கொழும்பினும் வாய்ப்பான இடம் பிறிதில்லையெனலாம்.[1] சிங்கள மன்னவர் போத்துக்கேயர்க்கு மாருக நடாத்திய போர்களில், இடச்சுக்காரர் மலாக்காவிலிருந்து உதவியளிக்கத் தொடங்கினர். ஆயின், தரைப்புறத்திருந்து வருந் தாக்குதல்களை நிருவகிக்கும் வலிமை கொழும்புக்கு இருந்தது. வான் தர் எய்டன் என்பான், 1654 இலே அத்துறையை நெடிது முற்றுகையிட்டபின், அதனை அடிப்படுத்திப் போத்துக்கேயரை இலங்கையினின்றும் வெளியேற்றினன்.

இதற்குப் பின்னர், இந்தியக் கடல்களிற் போத்துக்கேயர் ஆண்டனுபவித்த வர்த்தகப் பேராதிக்கம் விரைவாய் வீழ்ச்சியுற்றது. அன்னர் முதன்முதல் நிறுவிய கொச்சித் தாபனம் 1660 இல் அடிப்படுத்தப்பட்டது; சிறிய வர்த்தக நிலையங்கள் பிறவும் ஒவ்வொன்றுக இடச்சுக்காரரின் உடைமையாயின. கொழும்பிலே நிலையூன்றிய இடச்சுத் தளபதிகள், ஆங்கிருந்தவாறே கடல்சார்ந்த இந்திய வர்த்தகத்தினின்றும் போத்துக்கேயரைப் புறப்படுத்தும் போராட்டத்தில் ஈடுபடுவராயினர்.[2] அல்புகேர்க்கி நிருமாணித்த வர்த்தகப் பேரரசிலே கோவாவும் சிறுதீவுகளாகிய தாமனும் தியவும் தவிர்ந்த பிறவனைத்தையும் போத்துக்கேயர் இழந்துநின்றனர். இனிப் பம்பாயும் முன்னமே 1665 இல் ஆங்கில மன்னற்குச் சீதனமாகச் சென்றுவிட்டது.

---

[1] Pieris — Documents relating to Dutch Power in Ceylon.

[2] See also the present writer's Malabar and the Dutch.

யாவாத்தீவிலே வான்தீமன் ஆனவன், வர்த்தக முழுவதும் முற்றுரிமையாகப் பெறுவதில் வெற்றி பெற்றதோடு, கம்பெனியது அரசியற் செல்வாக்கினையும் ஒருவாறு பேணிவந்தனர். அறுவடையாகு முன்னம் பயிர்களுக்கீடாய் முற் பணம் கொடுக்கும் முறைமை மூலமாய்க் கம்பெனியான்து பண்டாத் தீவுகளி லும் அம்போய்னாவிலும் மொலுக்காசிலும் வாழ்ந்த மக்களின் நிலபுலங்களைப் படிப்படியாகத் தன்வயமாக்கியது. இவ்வாறு தனது ஆணிலத்துக்கப்பால் உடைமையாகப் பெற்ற நிலங்களிலிருந்து கராம்பு மரங்களைக் கம்பெனி அழிக் கத் தலைப்பட்டது; அக்கால், மக்கள் அதனை எதிர்த்தபோது படைப்பலங் கொண்டு அவ்வெதிர்ப்பைத் தகர்த்தது கம்பெனி. மொலுக்காசிலே இவ்வழி விளைந்த நிலைவரத்தை இடச்சு வரலாற்றறிஞன் ஒருவன் வருமாறு எடுத்துக் கூறினன்: 'கராம்புத் தோட்டங்களை நெல்வயல்களாகவும் சவ்வரிசித் தோட் டங்களாகவும் மாற்றுமாறு வேளாண்மக்களைக் கம்பெனி நெருக்கியது. மலைப் பாங்கான சிறுசிறு தீவுகள் தமக்கு வேண்டும் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யமுடியாமையாலே, அத்தீவுவாசிகள் கம்பெனியிடமே தமக்கு வேண்டும் அரிசியினை வாங்கவேண்டியவராயினர். இப்பண்டத்தைக் கம்பெனியானது கடு விலைக்கே விற்றமையால், நிலைமை இன்னும் மோசமாகியது. இவ்வாறாக, மொலுக்காசின் பொருளாதாரமானது பாழ்பட்டது; மக்கள் வறுமைவாய்ப் பட்டனர்.[1] மொலுக்காசிலே வெற்றியளித்த இம்முறையானது யாவாவிலும் பிறதீவுகளிலும் கம்பெனி அரசியலதிகாரம் பெற்றகாலை, (ஆங்கும்) கையாளப் பட்டவாற்றைப் பின்னர்க் காண்போம்.

அந்நூற்றாண்டின் நடுக்கூற்றளவிலே, தீவுகளிற் கம்பெனியின் ஆதிக்கமானது உறுதிப்பட்டது. மாத்தறமும், அற்சேயும், தேணுட்டியுமாகிய மூப்பெருஞ் சுலுத்தானரசுகள் மிக இடர்ப்பட்டே தத்தஞ் சுதந்திரத்தைக் காத்து வந்தன. இடச்சுக்காரரின் ஆணிலவுடைமைகள் சிறியனவாகவே இன்னும் இருந்தக் கண்ணும், இந்தோனேசிய அரசுக் கட்டுக்கோப்புத் தளர்ந்து தகரவே அவர் தம் அரசியலாதிக்கம் பெருகுவதாயிற்று. மக்கசார் மன்னனும், அற்சேய்நாட் டுச் சுலுத்தானும் கம்பெனியின் கோரிக்கைகளை உறுதியோடு எதிர்த்து வன் போர் விளைத்தனர். பல்லாண்டுக்காலம் கடிது போரிட்டபின்னரே, இறுதியில் 1680 அளவில் இடச்சுக்காரர் தம் ஆதிக்கத்தை ஆங்குத் தாபிப்பதில் வெற்றி கண்டனர். மக்கசார்க்கெதிராக நடந்த போராட்டம் கருத்தையீர்ப்பது—இடச் சுக்காரர்க்குப் பேராபத்து விளைக்கவல்ல ஒரு கடற்படையை அந்நாட்டு மன் னன் திரட்டி வைத்திருந்தான். இருபத்தொரு கப்பல்களையும் ஐரோப்பியத் தானையொன்றையுங் கொண்ட ஒரு பெருங்கடற்படை அதற்கெதிராக அனுப் பப்பட்டது. அத்தகு கடற்படை இருமுறை கடும்போராட்டு நடாத்திய பின்பே, சுலுத்தான் ஒப்பந்தஞ் செய்ய ஒருவாறு இணங்கினன். அதன்வழி அவன் கையளித்த ஆணிலமீது கம்பெனி இறைமைபெற்றது.

---

[1] See Bernard H. M. Vlekke's: Nusantara, p. 139.

இந்தியத் தீவுகளின் வர்த்தகமானது செவ்வனே இடச்சுக்காரரின் கைப் பட்டதாக, மாத்தறம் அற்சேய் ஆகிய சுலுத்தானரசுகளும், சிறுச்சிறு அரசு கள் பிறவும் தகர்ந்து வீழ்ந்து தம் வலியிழந்தன. ஆயினும், வியத்தகு மன்னன் சுலுத்தான் அப்துல் பற்ரு என்பான் தலைமையிற் பந்தமொன்றே புத்துயிர்ப் புப் பெற்றெழும்போலத் தோன்றிற்று. ஆயின், தந்தையும் மைந்தனும் போட்டி யிட்டதைத் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திய இடச்சுக்காரர் அவ்வரசினே யும் தங்கீழ்ப்படுத்தினர்.

வர்த்தகவுரிமைக்குத் துணையாக அரசியன் மேலாட்சி இவ்வாறு நிறுவப் பட்டதாயினும், இந்தியத்தீவுகளின் செல்வம் முழுமைக்கும் இடச்சுக்காரரே மறுக்கவொண்ணு ஆதிக்கம் பெற்றராயினும், இத்தோனேசியாவை வென்றடிப் படுத்தல் செவ்வையாக இன்னும் நிறைவேற்றப்பட்டதுமில்லை; கம்பெனியது நேராட்சி உண்ணுட்டிற் சென்றதுமில்லை. இக்காலப்பகுதியில், நாட்டினேச் சுரண்டி வாழுதல் இடச்சுக்காரரின் குறிக்கோளாய் அமையவில்லை—தனிப் பட்ட சிறுச்சிறு புலங்களிலன்றிப் பிறவிடத்து வர்த்தகமே அவர்தங் குறிக் கோளாயிருந்தது. நாடாளும் இறைமை பெறுதற்கு மாருக நின்றனர் கம் பெனிப் பணிப்பாளர். இலங்கையிலே நாடாளும் இறைமை வகித்தல் தக்கதே யென யோசனே கூறிய இறைக்குளொவு வான் கொயென்சு என்பாற்கு எழுது முகத்தால், பணிப்பாளர் மன்றம் வெளிப்படையாக வருமாறு பகர்ந்தது: 'நாட்டாசை கொண்ட பெருமன்னற்கேயன்றி, இலாபத்தை நோக்கும் வணி கர்க்கு அத்தகு வேலை பொருத்தமாகாது; எனினும், பிற்றைநாளில், வர்த்தகத் தினுஞ் சுரண்டி வாழ்தலே ஊங்கிய இலாபம் பயக்குமெனக் கண்டகாலை, இப் பூட்கை பெருமாற்றம் அடையலாயிற்று.

பசிபிக்குத் தீவுகளைத் தம்முயற்சிக்குப் பிரதான தளங்களாகக் கொண்ட இடச்சுக்காரர், சீனத்தொடும் யப்பானெடும் வர்த்தகவிருத்தி செய்தற்கேற்ற வாய்ப்பினே நன்றே பெற்றிருந்தனர். சிறிது காலம் போமோசாவை அவர்கள் தங்கைப்படுத்தி வைத்திருந்தனர்—எனினும், தோல்விப்பட்ட மிங்கு வமிசத் துக்கு உறுதுணையளித்த கொக்சிங்கா என்பான், வியத்தகுஞ் சீன மறத்தலை வன், அவர்களே அப்புறப்படுத்தனன். மஞ்சுப் பேரரசோடு அவர்கள் சூழ்வுத் தொடர்புகள் பூண முயன்று வெற்றி கண்டிலர். ஆயினும், கன்றனிலும் புக்கி யெனிலும் ஓராற்ருல் வர்த்தகம் நடாத்த அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். யப் பானெடு அவர்கள் பூண்ட வர்த்தகத்தொடர்புகள் கவனிக்கத்தக்கவை: முத லில் இரடோவிலும், பின்னர் தெசிமாவிலும் கடுமையான கட்டுப்பாட்டுக்கும் கண்காணிப்புக்கும் அமைய அவர்கள் ஒரு களஞ்சியசாலையை அமைத்துப் பேண அனுமதிக்கப்பட்டனர். இத்தொடர்புகளால் மிக முக்கியமான விளைவு கள் ஏற்பட்டன. சீனத்தோடு அவர்கள் நடாத்திய வர்த்தகத்தின்வாயிலாக, மேலையுலகிலே தேயிலை புகுந்தது; அவர்கள் யப்பானெடு கொண்ட தொடர்பு கள் காரணமாக, அத்தீவுப் பேரரசுபற்றி அறியும் ஆவல் மேலைப்புலத்தோரிடை ஓரளவு பரவிற்றெனலாம்.







வசுக்கோ த காமா முதற் பிரதேச ஆராய்ச்சிப் பயணத்தின் போது சென்ற கப்பல்கள்.



சாமோரினது வேத்தவையில் வசுக்கோ த காமா

(3)

இடச்சுக்கம்பெனி நிறுவப்படுதற்கு ஓராண்டு முன்னர், கிழக்குலக வர்த்தகத்தில் முற்றுரிமையளிக்கும் ஒரு பட்டயத்தை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியானது எலிசபெத்தரசியிடமிருந்து பெற்றிருந்தது. ஆங்கிலர்க்கு அந்நாளில் வாசனைத்திரவியங்கள் சிறப்பாகத் தேவைப்பட்டன. 'எலிசபெத்துக்கால மக்கள் இலையுதிர் பருவந் தொட்டு வசந்தம் வரைக்கும் உப்பிட்ட இறைச்சியை உண்டு வாழ்ந்தனர். புதிய இறைச்சியும் பொதுவாக அங்குத் தரங்குறைந்ததாகவே காணப்பட்டது. மீனவரது நலனைக் கருதி, மக்கள் விரும்பாவிடினும் கூடிய அளவில் மீனுண்ணல் வேண்டுமெனச் சட்டம் விதித்தது. இத்தகைய சுவையற்ற உணவுகள் காரணமாக, காரமான சுவையூட்டுக்களில் அன்னர் கொண்ட ஆசை எம்முடையதினுங் கூடியதாயிருந்தது. இயல்பேயாம். வாசனைச்சரக்கு மெத்தவும் இட்ட குடிவகைகளையே அவர்கள் விரும்பினர்—தேநீர் அவர்களுக்குக் கிடைத்திலதாதலின்.'[1] பதினாறும் நூற்றாண்டிலே வாசனைத் திரவிய வர்த்தகத்திலே தலையாய தரகராய் விளங்கிய இடச்சுக்காரரே வட ஐரோப்பிய நாடுகளுக்கு அவ்வின்றியமையாப் பண்டத்தை வழங்கி வந்தனர். ஆயின், 1599 இல் ஒரிருத்தல் மிளகின் விலையை 3 சில்லிங்கிலிருந்து 8 சில்லிங்காக உயர்த்தியபோது, பிரித்தானிய வர்த்தகர் கிழக்குலக வர்த்தகத்திலே தாமே ஈடுபடத் தீர்மானித்தனர்.

அக்கம்பெனியின் முதற்கலமானது தளபதி இலங்காத்தர் தலைமையில் 1601 சனவரி 24 இற் கிழக்குலகிற்குப் புறப்பட்டது. சுமாத்திராவினுள்ள அச்சின் துறையை அது அடைந்து, இரண்டரை யாண்டு கழிந்தபின்னர், 10,30,000 இருத்தல் மிளகோடு 1603 நவம்பர்த் திங்களிலே தாயகம் மீண்டது. அடுத்து நிகழ்ந்த பிற பயணங்களும் பெரும்பாலும் இலவங்கத் தீவுகட்கே மேற்கொள்ளப்பட்டன. எனினும், ஆங்கிலக் கம்பெனியின் முயற்சிகள் செவ்வையாக வெற்றி யளித்தன வென்னல் சாலாது. வாசனைத்திரவியங்கட்கோடாக விற்றற்கு, இங்கிலாந்தில் யாதுங் கிடைக்காமையே அதற்குக் காரணம். அன்றியும் அக்காலப் பொருளியலறிஞர் பொன் வெள்ளி யேற்றுமதியை அறவே வெறுத்தனர். எனினும், இந்தியத் தீவுகளிலிருந்த கம்பெனி முகவர் தக்கதொரு செவ்வையான முறையைக் கண்டறிந்து கையாண்டனர். கிழக்கிந்தியத் தீவுகளிலே இந்தியத் துணிவகைகளுக்குப் பெருமதிப்பு இருந்தவாற்றை அவர்கள் கண்டு கம்பெனிக்கு அறிக்கை செய்தனர். அவற்றை வாங்கிப் பந்தத்தினும் மொலுக்காசிலும் விற்றல், அவ்வழிவரும் இலாபம் கொண்டு வாசனைத்திரவிய வர்த்தகத்துக்கு வேண்டும் பணத்தைப் பெறலாமன்றே? இவ்வாறுக. துணிவகை வாங்கும்பொருட்டே இந்தியாவில் ஒரு வர்த்தக நிலையத்தைப் பிரித்தானியர் தாபிக்கத் தலைப்பட்டனர். இந்நோக்கம் பொருட்டுத் தேர்ந்த இடம் சூரத்து என்பதாகும் (1612).

---

[1] Quoted in Thompson and Garret: Rise and fulfilment of British Rule in India, p. 6.

சேமிசு மன்னன் ஒரு தூதமைச்சனை யகாங்கிர் மன்னனது வேத்தவைக்கு 1615 இல் அனுப்ப இணங்கினன். அக்காலத்தளவிலே இந்தோனேசியாவி லிருந்து வெளியேற்றப்பட்ட ஆங்கிலேயர் இந்தியப் பெருநிலத்தில் வர்த்தகம் விருத்தி செய்வதிலேயே தங் கருத்தைச் செலுத்துவாராயினர். இங்கிலாந்தி லிருந்து பொன்னும் வெள்ளியும் கொண்டுவந்து கொடுத்தல் சிந்தித்தற்கும் ஒவ் வாததாதலின், இங்கேயும், இந்திய வர்த்தகத்துக்கு வேண்டும் பணத்தைத் தேடவே பெரும் பிரச்சினையாயிற்று. செங்கடல் வழியாய்ச் சென்ற வர்த்தகம் இவ்விடர்ப்பாட்டுக்கு ஒரு முடிவுகாட்டும் போலத் தோன்றியது. ஆயின் அவர் தம் வர்த்தகம் விருத்தியடையுமுன், ஆங்கிலக் குடிப்போர் காரணமாகக் கம் பெனியின் நிலைமை வில்லங்கமாயது—இந்தியாவில் வர்த்தகம் நடாத்த உரிமை யளிக்கும் பட்டயமொன்றை முதலாவது சார்சு மன்னன் போட்டியாயமைத்த பிறிதொரு கம்பெனிக்கு அளித்துவிட்டான். ஆயினும், அதனால் விளைந்த போட் டியும் எதிர்ப்பும் கடுமையற்றதாய் இருக்கவே, கிழக்கிந்தியக் கம்பெனியானது தன் வர்த்தக நிலையங்களைப் பெருக்கும் பூட்கையை மேற்கொள்ளத் தலைப்பட் டது. அக்கம்பெனியார் மசூலிப்பட்டணத்தில் 1641 இற் குடியிருப்பு நிறுவினர். இன்னும், விசயநகரப் பேரரசிற்கு உரித்தாளனைய சந்திரகிரி இராசனிட மிருந்து, சென்னையிற் கோட்டை கட்டுதற்கு 1641 செத்தம்பரிலே அவர்கள் உரிமைபெற்றனர். அவர்கள் 1617 ஆம் ஆண்டளவில் இருபத்துமூன்று வர்த்தக நிலையங்களும் தொண்ணூறு சேவையாளரும் உடையராயிருந்தனர்—குறிப் பிடத்தக்க முன்னேற்றமென இதனைக் கொள்ளல் சாலாது.

அவர்கள் 1665 இற் பம்பாயைப் பெற்றமையாலே நிலைமை சிறிது மாறிய தெனலாம். அவர்கள் தங்குடியிருப்புக்களில் எஞ்ஞான்றும் விரும்பியவாறே, இரண்டாம் சார்சு கம்பெனியார்க்குப் பூரணமான ஆட்சியுரிமை ஆங்கு வழங் கினன் (1668). இந்திய மன்னராற் சூரத்துக்கு ஆபத்து நேரக்கூடுமாதலின், அங்கிருந்து கம்பெனியின் தலைமையலுவலகம் பம்பாய்க்கு மாற்றப்பட்டது— கடற்படைப்பீரங்கிகள் பம்பாய்த்துறையை எளிதே தற்காக்கக் கூடுமாதலின், இங்கிலாந்திலே மன்னராட்சி மீண்டதற் பின்னர், கம்பெனியின் சித்துவநிலை விருத்தியடையத் தொடங்கிற்று; அன்றேல் மக்களின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கிற்றெனலாம். சேர் யோசையா சைல்டு என்பானது தலைமைத்திற மையே அதற்குக் காரணமாகும். அவன் ஒரு விந்தைமனிதன்; படாடோபம் மிக்கான்; பழிக்கஞ்சாத் தன்மையுடையான்; இறுமாப்புடையோன்; தீவிர மனப்பான்மை மிக்குப்படைத்தோன்; ஆயினும், அரிய கற்பனைத்திறன் வாய்க் கப்பெற்றோன். 'சீனப் பேரரசனுகவோ முகலாய மாவேந்தனுகவோ தோன் றுது, நகரவணிகனுய் அவன் தோன்றியமை தெய்வஞ்செய்த ஒரு பிழைபோ லும்' என்றவாறுக அவன் வருணிக்கப்பட்டான். முன்னேற்றப் பூட்கையை வற்புறுத்தியவன் யோசையா சைல்டு. ஆசியப் பண்புடைய யாதினையும் அவன் இகழும் போக்கினன்—முகலாயப் பேரரசுமீதும் அவன் 'போர்ப்பிரகடனஞ்' செய்தானும். அதன் பயனுக வந்த விளைவு வெட்கக்கேடானதே. வங்கத்திலே கம்

பெனி நிறுவியிருந்த தாபனங்கள் அடிப்படுத்தப்பட்டன. எத்துணையோ முயற்சியின் பயனுய் உருவாக்கிய அனைத்தும் ஒரேயடியில் தகர்ந்து வீழ்ந்தன. பிற வழியின்றிக் கம்பெனியானது அமைதி வேண்டிற்று. மாவேந்தன் அவரங்கசீப்பும், 'இத்தகைய மானக்கேடான வகையில் இனிமேல் நடக்கமாட்டோம்' எனப் பிரித்தானியர் உறுதி கூறிய பின்னரே, அதற்கு இணங்கினன். தமது நிலை மறந்து நடந்த கம்பெனியார்மீது குற்றப்பணமும் தண்டனையாக விதிக்கப் பட்டது.

கம்பெனியின் களஞ்சியகாரர் வங்கத்துக்கு மீண்டபோது, ஊக்ளி நதியில் அமைந்துள்ள ஒரு மீனவக் கிராமத்தில் (கல்கத்தாவில், 1690 இல்) வந்து குடியேறினர். ஆருண்டு கழிந்தபின்னர், அதனை அரண் செய்யும் உரிமையும் பெற்றனர். இவ்வாருக, அந்நூற்ருண்டின் இறுதிக்கண்ணே பம்பாயும் கல்கத்தாவும் சென்னையும் தோன்றி வளர்ந்தன. ஒரு நூற்ருண்டு கழிந்தபின்னர் பிரித்தானிய ராதிக்கம் உண்ணுட்டில் ஊடுருவிப் பரவுதற்கு இவை மூன்றுமே மையங்களாயின. ஆயின் அக்காலத்தும் பின்னர்ப் பல நூற்ருண்டு காலத்துக்கும் எவ்வகைத்தாய அரசியற் செல்வாக்குங் கம்பெனிக்கு இருந்ததில்லே. இன்னும், வாங்கியும் விற்றும் வர்த்தகம் புடாத்திய காணேக்கும் பிற்றும் ஒக்செண்டனும் யூலும் போன்ருேர் அரசியலாதிக்கம் பெற்ற ஒரு மக்கள் எனுங் கருத்து, இற்றைக்கால வரலாற்றறிஞராற் கடிது பரப்பப்படினும், உண்மையில் வழுவுடைக் கருத்தேயாகும்.

ஆசிய வர்த்தகத்திற் பிரான்சியர் புகுந்த வரலாற்றையும் இங்குச் சுருக்கமாய்க் குறிப்பிடல் அமையும். ஐரோப்பிய வல்லரசுகளுக்கு எவ்வாற்ருனும் பின்னிற்காது இந்து சமுத்திரத்தில் இடம்பெறல் வேண்டியதன் அவசியத்தை நாலாம் என்றி நன்கு உணர்ந்தான். அவன் பிரான்சியக் கிழக்கிந்தியக் கம்பெனியொன்றை 1601 இல் நிறுவ முயன்ருன். கிழக்குப்புலத்தை ஆராயும் நோக்கொடு பல்வேறு பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும், ஐரோப்பிய விவகாரங்களிற் பிரான்சு சிக்குண்டிருந்தமையாலும், பின்னர் 'புரொண்டுப்' போர்களில் ஈடுபட்டு இருந்தமையாலும், கொல்பேட்டின் காலம்வரைக்கும், கிழக்குலக அலுவல்களிலே பிரான்சியர் தளர ஊக்கங்கொள்ளல் தடைப்பட்டு நின்றது. அரசறிஞனை கொல்பேட்டு, பிரான்சது கடல்சார் மாட்சியை நாட்ட ஆவல்கொண்டானுகி, கிழக்கிந்தியக் கம்பெனியைக் கூட்டுத்தாபனமாய் அமைக்கும் முயற்சியில் நேராகக் கவனங் கொண்டான் (1664). காலப்போக்கிலே, களஞ்சிய சாலேகள் நிறுவப்பட்டன—ஐரோப்பிய நாடுகள் பிறவற்றைப் போன்று பிரான்சுக்கும் சிறு வர்த்தகக் குடியிருப்புக்கள் இந்தியாவில் இருந்தன. இலங்கையிற் பிரான்சியராதிக்கத்தைத் தாபித்தலே கொல்பேட்டின் ஆதிக் கருத்தாயிருந்தது. கணிசமான பெரும் படையொன்று யாக்கோபு தி லாகே என்பான் தலைமையில் அந்நோக்கத்தோடு 1670 மாச்சு மாதத்தில் அனுப்பப்பட்டது. ஆயின் விழிப்புடனிருந்த இடச்சுக்காரர் அத்தீவினிற்

பிரான்சியக் குடியிருப்பொன்று தோன்றுவதை அப்போதே தடுத்துவைத்தனர். அப்படையெழுச்சியின் குறிப்பிடத்தக்க சாதனை யாதெனின், பிரான்சியர் அறுவரோடு பின்தங்கிவிட்ட பிரான்சிசு மாட்டின் என்பான் பாண்டிச்சேரியை நிறுவியதாகும்.

பதினேழாம் நூற்றாண்டின் இறுதிக்கண்ணே, கிழக்குப்புலத்தின் வரலாற்றினை வருமாறு சுருக்கிக் கூறலாம். போத்துக்கேயரின் வலியானது இந்து பசிபிக்குச் சமுத்திரங்களிலே செவ்வையாக ஒடுக்கப்பட்டது. ஆயினும் கோவாவிலும் மக்கவோவிலும் திமோரிலுமிருந்த அவர்தம் நிலையங்கள் பங்கப்படாது இன்னும் இருந்தன. இலங்கையின் கடற்கரைப்புலங்களில் இடச்சுக்காரர் ஆட்சி செலுத்தினர். இந்தியத் தீபகற்பத்திலும் சில வர்த்தக நிலையங்கள் அன்னர்க்கு இருந்தன—அவற்றுளும் முக்கியமானவை கொச்சினும் நாகபட்டணமுமாகும். அவர்கள் மலாக்காவை வென்றடிப்படுத்தி மலாயா வர்த்தகத்தையும் ஆண்டனுபவித்தனர். வர்த்தக மூற்றுரிமையை அடிப்படையாகக் கொண்ட பேரரசொன்றை அவர்கள் இந்தோனேசியாவில் உருவாக்கியிருந்தனர். சீனத் தோடும் யப்பானோடும் நயமான வர்த்தகம் அவர்கள் நடாத்தினர். இந்தோனேசியத் தீவுகளிலிருந்து விலக்கப்பட்ட பிரித்தானியரோ இந்தியாவிற் கவனஞ் செலுத்திப் பரந்த ஒரு வர்த்தகத் தாபனத்தை நிறுவியிருந்தனர். இறுதியாகப் பிரான்சியரும் குணபுலத்துள் வந்து புகுந்து பாண்டிச்சேரியிலே தமது உரிமை நாட்டினர். நீளப் பிரதேசங்கள் தவிர்ந்த பிறவிடங்களிலே ஐரோப்பிய வர்த்தகர் யாதும் அரசியலதிகாரம் செலுத்தியதில்லை. 1663 இலே போத்துக்கேயரும், 1689 இலே பிரித்தானியரும் இந்திய மன்னரொடு மாறுபட்டுப் பூசல் விளைத்தகாலை, உறுதிபெற்ற அரசுகளின் அதிகாரத்தை விஞ்ச முயலுதல் எத்துணை மடமையென்பது அன்னர்க்கு உணர்த்தப்பட்டது.

ஆசிய வர்த்தக அமைப்பிலே பெருமாற்றம் விளைந்தவாற்றை ஈண்டு வற்புறுத்திக் கூறுதல் வேண்டும். வாசனைத்திரவியங்களை நாடித் தேடியே ஐரோப்பிய நாடுகள் ஆசியக் கடல்களில் வந்து சேர்ந்தன என்னும் உண்மையை முன்னமே கண்டோம். பதினைரும் நூற்றாண்டில் ஆசிய—ஐரோப்பிய வர்த்தகத்தில் வாசனைத் திரவியங்களே முதலிடம் வகித்தன. பதினேழாம் நூற்றாண்டிலேயும், இடச்சுக்காரரைப் பொறுத்தவரை, வாசனைத் திரவியங்களிலேயே முக்கிய கவனஞ் சென்றது. ஆயின் இந்தோனேசியாவிலிருந்து பிரித்தானியர் முற்றுக விலக்கப்பட்டமையாலும், சீனத் துறைகளோடு செய்த வர்த்தகம் வளர்ந்தமையாலும், கவணி, பட்டு, கலிக்கோ முதலிய துணிவகைகட்குக் கவனம் மாறியது. ஐரோப்பாவிற் பொருளாதார நிலைமைகளிலே காணப்பட்ட புரட்சியே இம்மாற்றத்துக்குப் பெருந்துணையாய் அமைந்தது. ஒரு நூற்றாண்டுக் காலமாக அமெரிக்காவின் திரண்ட செல்வம் ஐரோப்பாவில் வந்து குவிந்தது. வட, தென் அமெரிக்கப் பிரதேசத்துப் பொன் வெள்ளிச் சுரங்கங்கள், அத்திலாந்திக்குக் கரையைச் சேர்ந்த நெய்தனில மக்களைச் செல்வம்படைத்த மக்களாக்கின. வட அமெரிக்காவிலே இங்கிலாந்துக்கும் ஒல்லாந்துக்குமிருந்த குடியேற்றங்கள், தாய்நாடுகளின் சீத்துவநிலையைப் பெருக்க உதவின. ஆசியாவின்

வாசனைத்திரவிய வர்த்தகமும் செல்வம் பெருக்க உதவிற்று. முன்னம் வெனிசு மட்டுமே கண்ட சீத்துவதிலேயினை அத்திலாந்திக்கு நாடுகள் பதினேழாம் நூற்றாண்டின் நடுக்கூற்றளவிலே எய்தியிருந்தன.

இப்பொருளாதாரச் சீத்துவங் காரணமாகப் புதிய தேவைகள் மக்களிடைத் தோன்றின. அக்காலப் பெருவல்லரசுகளான இங்கிலாந்திலும் பிரான்சிலும் இசுப்பெயினிலும் இந்திய நாட்டுச் சித்திரத்துணிகள் தேவைப்பட்டன; சீனப்பட்டுந் தேயிலையும், மற்றுக் கிழக்கிந்தியத் தீவுகள் அளித்த கோப்பியும் ஆங்குத் தேவைப்பட்டன. வாசனைத் திரவிய வர்த்தகம் தொடர்ந்து சிறப்பிடம் வகித்தது உண்மையே. ஆயின் பிற பண்டங்களின் போட்டி வளரவே, அவ்வழி வந்த இலாபம் பெரிதுங் குன்றியது. இந்தியத் துணிகளுக்கு இருந்த மதிப்பு இங்கிலாந்திலும் பிரான்சு நாட்டிலும் ஒருபெரும் அரசியற் பிரச்சினையாயது. துண்டு வெளியீட்டாளர்—அவருளும் குறிப்பாய் அந்த 'எழுத்துவாணிகன்' இசுற்றீல் என்பான்—பிரித்தானியக் கம்பளித்துணியின் மாண்பினை எடுத்துக் காட்ட முற்பட்டனர். கம்பளியுடுப்புத் தவிர்ந்த பிறவற்றை மாரிக்காலத்தில் உபயோகிப்பதைத் தடுக்க வேண்டிய அவசியம் 1677 இற் பாராளுமன்றத்துக்கு ஏற்பட்டது. 1695 ஆம் ஆண்டளவிலே இந்தியத்துணிவகைகள் பிரித்தானியத் துணியுற்பத்தியைச் சாலவும் பாதித்தமையால், இந்தியத் துணிவகைகள் வருவதை முற்றுகத் தடுத்திடுதல் வேண்டுமெனப் பொதுமக்கள் வற்புறுத்தினர். இசுப்பிற்றல்பீல்டுப் பட்டு நெசவாளர் பாராளுமன்றத்துக்கு அண்மையாக ஆர்ப்பாட்டஞ் செய்தனர். பிரான்சிலும் நிலைமை இத்தகையதாகவே யிருந்தது. இந்திய சீனத்துணி வகைகள் இறக்குமதியாவதை, நெசவாளரின் நெருக்கிடை காரணமாக, பதிலாட்சி சட்டமூலமாய்த் தடுக்க முயன்றது.

இந்தியத் துணிவகைகள் மலிவானவையாய், உறுதியும் கண்கவர் வண்ணங்களும் உடையவாய், சலவைக்கு உவந்தவையாய் இருந்தமையாலே, ஐரோப்பாவிற் செல்வரிடையும் மத்தியவகுப்பாரிடையும் அவற்றுக்குப் பெருமதிப்பிருந்தது. இவ்வழி, கிழக்குலக வர்த்தகத்தின் சிறப்பான கூருய்த் துணிவகையே அமைந்தவிடத்தும், பிற பொருள்களிலும் வர்த்தகம் நடந்தது. சீனாவிலிருந்து விசிறிகள், பீங்கான்கலவகை, தேயிலை, சுவரிலொட்டும் வண்ணத் தாள்கள் ஆகியனவும் இந்தியாவிலிருந்து (காசுமீரச்) சால்வைகளும் அரக்குபூசிய அழகுப் பொருள்களும், சரிகையும் முக்கியமான வர்த்தகப் பொருள்களாய் விளங்கின. இவ்வாறு பெருகிவந்த வர்த்தகத்துக்கு மாருகக் கடுமெதிர்ப்புத் தோன்றியது. சன்சம் கூறியவாங்கு "நாட்டைவிட்டுப் பொன் போய்விடுமென்ற பழைய அச்சமே வாதமனைத்துக்கும் மூலகாரணமாய் நின்றது. இந்தியத் துணிகளை அணியும்போது, மறைபொருளெல்லாம் வெளிபொருளாகித் தெரிகின்றனவே யென ஆங்கிலத் துண்டுவெளியீட்டாளர் அலமந்து கூறிடும்போது, ஆங்கில மாதரின் மானம்பற்றி அன்னர் காட்டும் அக்கறை வெறும் நடிப்பேயாகும். பொன்னும் வெள்ளியும், வெளிநாடு செல்வதைக் கண்டிப்போர் உண்ணூட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடே அவ்வாறு செய்வர்[1]."

---

[1] மேலையுலகும் யப்பானும், ப. 154 (சேர் யோட்சு சன்சம்).

ஆசிய வர்த்தகமானது பத்தொன்பதாம் நூற்றாண்டு வரைக்கும் ஒரு திசை நோக்கியே செல்வதாயிருந்தது. ஐரோப்பியப் பண்டங்கள் எந்த ஆசிய நாட்டிலும் பெருவாரியாகத் தேவைப்பட்டதில்லை. 'நீர்ப்பாசன அரசுகள்' என விற்பொகல் என்பானால் குறிப்பிடப்பட்ட ஆசியப் பேரரசுகள் நிலவருமானத்தையே பெரிதும் நம்புவனவாய், பொதுவாகத் தன்னிறைவான பொருளாதாரத்தை உடையனவாயிருந்தன. இந்திய வர்த்தகம் எஞ்ஞான்றுமே அளவிற் பெரிதாய் இருந்தபோதிலும், அந்நாட்டின் பொருளாதாரம் வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டதொன்றன்று. சீனாவுக்கும் இக்கூற்றுப் பொருந்துவதாகும். பிறநாட்டுப் பண்டங்கள் தனது நாட்டுள் இறக்குமதியாவதைச் சீன அரசாங்கம் எப்போதும் தடுத்துவந்துளது. மேலும், ஆசியப் பொருளாதாரத்துக்கு உதவும் வகையில் ஐரோப்பாவிடம் யாதும் இருந்ததுமில்லை. விவிலியக் காட்சிகளையும் தேவமாதரையும் சித்திரிக்கும் ஓவியங்களை—'இலிவியன்' கதைகளை விளக்குவனவும், பொது மக்கள் நயக்கத்தக்க அம்மணமான காட்சிகளையும் விரசமான நிகழ்ச்சிகளையும் சித்தரிப்பனவுமாய ஓவியங்களை[1]—அமித்த டாம் கம்பெனி சீயம் நாட்டுக்கு ஆயிரக்கணக்காய் அனுப்பி வைத்தது எனுங் கதை விசித்திரமான பூனைகதையன்று. விவிலியச் சித்திரங்களிலே ஈடுபாட்டை இங்குக் காண்பதரிது என்றவாறாய் இறிச்சாட்டு கோக் கென்பான் யப்பானிலிருந்து குறைப்பட்டு எழுதிய கடிதமும் இங்குக் குறிப்பிடத்தக்கது. 'இத்தகைய சிறப்பு வாய்ந்த ஓவியத்தையன்றிக் குதிரையோ கப்பலோ பறவையோ தீட்டப்பெற்ற ஒரு காகிதத்தையே அவர்கள் ஆற்றவும் போற்றுவர். சென். போலின் மதமாற்ற நிகழ்ச்சியைக் காட்டுமந்த நல்லோவியத்துக்கு ஆறு பென்சுதானும் இங்கு ஒருவரும் கொடுக்கத் துணியார்'.

மன்செசுற்றர் மலிவான துணிவகை அளிக்கும் வரைக்கும், உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதிக்குக் கிடைக்கும் வரைக்கும், ஐரோப்பியப் பண்டங்களுக்கு ஆசிய நாடுகளின் மதிப்பில்லாமை ஒரு பெருங்குறைபாடாய்க் காணப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலேதானும், ஐரோப்பியப் பண்டங்களுக்கு எற்பட்ட மதிப்பு எதிர்பார்த்த அளவிற்குப் பெரிதாக இருந்திலது—இதனைப் பின்னர்க் காண்போம். ஆதலின், பொருளாதாரத் தேசியக் கொள்கை, பொதுநலவரசின் நாவாய்ச் சட்டங்களோடு தோன்றிக் கொல்பேட்டின் ஆதரவில் வளர்ந்து, உண்ணூட்டுக் கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பளித்து, எற்றுமதிக்கு ஊக்கமளித்து, நாட்டின் செல்வத்தைப் பேணுதற்கு முயன்று கொண்டிருந்த அக்காலத்தில், கிழக்கிந்திய வர்த்தகமானது கடுங் கண்டனத்திற்கு ஆளாகியமையும் வெறுத்தொதுக்கப்பட்டமையும் வியத்தையன்று—இயல்பேயாகும். ஆயின், பொருளியலறிஞர் கொண்ட இக்கருத்துக்கள் பொதுமக்களின் விருப்பை வெல்வதற்கு வலியிலவாயின.

---

[1] நூசந்தரா எனும் நூலில் இம்மேற்கோள் காணப்படுகிறது (ப. 198).


40
50
60
30
20
10
0
70
கொன்ஸ்தாந்தினோப்பிள்
ஒற்ருமன்
பேரரசு
தமாசுக்கசு
பொக்தாத்து
பேசியா
மெடினு
யெட்டா
மெக்கா
செங்கடல்
பேசியன்குடா
ஓமசு (போ)
மசுக்கற்று (போ)
அ ரா பி யா
குசராத்
தியூ(போ
பம்பாய்(போ
ஏடின்
அராபியக்
சொக்கோத்திரா
அபிசீனியா
கடல்
இ ந் து
மலபார்க்
கோ
(போ
மங்
கோழி
கரை
1610 இல் ஆசியாவும் தூரகிழக்கும்
அன்னிய குடியேற்றங்கள் கோடிடப்பட்டுள
இட.-இடச்சு
போ.-போத்துக்கேய
இசு.-இசுப்பானிய
மைல்
0 200 400 600 800 1000


60
70
80
90
100
110
மொங்கோலியா
சிங்கியாங்கு
பெருமதில்
காக்கோரம்
தி பெ த் து
தில்லி
முகலாயப் பேரரசு
அகமதாபாத்து
குசராத்து
கம்பாய்
சூரத்து
தியூ(போ)
பம்பாய்(போ)
கோவா (போ)
பற்கல்
மங்களூர்
கோழிக்கோடு
கலை
கொல்லம்
குமரிமுனை
இலங்கை
கண்டி
நாகபட்டணம்
சோழமண்டலக்கரை
துங்கபத்திரை
சம்பா
வங்காளம்
பர்மா
சிற்றுகொங்கு
வங்காள விரிகுடா
மலபார்க்
மலாயா
மலாக்கா (போ)
மலாக்காத் தொடுகடல்
சுமாத்திரா
பாலெம்
பந்தம்
சமுத்திரம்
70
80
90
100


100
110
120
130
40
30
20
10
0
10
100
மொங்கோலியா
கிங்கான் மலை
பிக்கிங்கு
பெருமதில்
தியென்சின்
கொரியா
நாகசாக்கி
தெசிமா
நாங்கிங்கு
நிங்போ
சீ ன ம்
இரியுக்கியூ தீவுகள்
சுவாங் சோ
குவாந்தங்கு
போமோசா
கன்றன்
பெசுக்கடோசு
மக்கவோ (போ)
(அமக்கவு)
கொங்கு
பிலிப்பின்
தீவுகள் (இசு.)
மணிலா (இசு.)
பெகு
சீயம்
கம்போடியா
கொச்சின்
தென்சீனக்கடல்
புரூனை
மலாயா
மலாக்கா (போ)
அச்சின்
மலாக்காத் தொடுகடல்
சுமாத்திரா
போ ணி யோ
செலிபிசு
மொலுக்கா
தெணாட்டி
அம்போய்னா (இட)
பாலெம்பாங்கு
பற்றேவியா (யக்கார்த்தா)
பந்தம்
மாத்தறம்
யாவா
தீமோர்
பசிபிக்குச் சமுத்திரம்

பதினெட்டாம் நூற்றாண்டின் முதலரைக் கூற்றின் இறுதிக்கண்ணே பிரான்சும் இங்கிலாந்தும் இந்து சமுத்திரத்திலே பெரும்போட்டியிட்டன. போத்துக்கலியும் ஒல்லாந்தையும் பிற்றை நிலைக்குத் தள்ளிவிட்ட ஐரோப்பிய அரசியன் மாற்றங்கள் கிழக்குலகிலே ஐரோப்பிய வல்லரசுகளிடையே தோன்றிய முரண்பாடுகளிலும் பூசல்களிலும் செவ்வனே பிரதிபலித்தன. இப்போட்டியிற் பிரான்சும் இங்கிலாந்துமே எஞ்சி நின்றன. ஐரோப்பிய நாடுகளிலே விளைந்த உண்ணாட்டுச் சச்சரவுகளும், இடர்ப்பட்ட வரலாறும் எமது சரிதைக்கு அப்பாற்பட்டவை. எனினும், வளர்ந்துவந்த பிரித்தானியக் கடலாதிக்கத்தைத் தடை செய்தற்குப் பிரான்சியர் இடைக்கிடை செய்த முயற்சிகள்—உதாரணமாக இலா பூடனே என்பான் வங்கக் கடலிற் செய்த கடற்படைத் தாக்குதல்—சிறப்புக் குறைந்தனவே யென்பதை இங்கு எடுத்துக்காட்டல் தக்கது. இந்து சமுத்திரத்தைப் பொறுத்தவரை, பிரித்தானிய வர்த்தக ஆதிக்கத்திற்குப் போட்டியாயிருந்தோர் ஏற்கவே அகற்றப்பட்டனர். மற்றுச் சீனமும் கிழக்குக் கடல்களையும் பொறுத்தவரை எந்த வல்லரசும் பெருமளவில் வர்த்தகம் விருத்தி செய்ததில்லை. இந்தோனேசியாவில், இடச்சுக்காரர் பெரும்பான்மையும் வர்த்தக முற்றுரிமை பெற்றிருந்தார்கள்.

அதிகாரம் 2

சீனமும் யப்பானும்

(1)

போத்துக்கேயராதிக்கம் மலாக்காவில் 1511 இலே தாபிக்கப்பட்டதோடு, பசிபிக்கிலே ஐரோப்பியக் கப்பல்கள் பயணஞ் செய்தல் எளிதாயிற்று. மலாயாத் தீபகற்பத்திலே சீனர் பலர் இருந்தனர்—அவருட் பெரும்பாலோர் பூ-கியனைச் சேர்ந்தோரே. அவர்களிடமிருந்து போத்துக்கேயர் சீனப் பேரரசின் சீருஞ் சிறப்பும் வர்த்தகமும்பற்றி அறிந்துகொண்டனர். சீனக்கரைக்கு முதன்முதற் சென்ற போத்துக்கேயன் இறப்பியேல் பெரெத்தெரெலோ என்பான் (1516). அவன் 'யங்கு' எனுஞ் சீனக்கலத்திற் படனஞ் செய்து, பற்பல புதிய அனுபவங்களோடு மீண்டனன். அடுத்த ஆண்டிலே, யோட்சு மசுக்கராசு என்பான் சுவாங்கு சோ எனுந் துறைக்குச் சென்று, சீன வணிகரோடு வர்த்தகஞ் செய்தான் என யோட்சு பிலிப்சு கூறியுள்ளான். பெரெத்தெரெலோவும் மசுக்கராசும் திரட்டிக் கொடுத்த செய்தி கேட்டு, சீனத்தோடு வர்த்தகந் திறப்பதால் விளையும் நன்மையைப் போத்துக்கேயர் உணர்ந்துகொண்டார்கள். இவ்வாருகத் தூதுக் குழுவொன்று ஆயத்தமாயது. மருந்தாளனை தோமசு பிரெசு என்பான், போத்துக்கேய மன்னனிடமிருந்து நிருபம் பெற்று, பெர்ணந்து அந்திராடே என்பவன் துணைச்செல, கன்றன் வரை சென்றனன். மலாக்காவிலிருந்த போத்துக்கேயக் கடற்படைநிலையத்துக்குத் தலைவனுயிருந்தவன் அந்திராடே. அவன் பெருந்தொகை பிளகைச் சீனத்துக்கு ஏற்றிச் சென்றான். சீனத்திலே பிளகிற்கு எப்போதும் பெருமதிப்பிருந்தது. தூதமைச்சனைச் சீனர் இனிதே வரவேற்றனர். அன்றியும், பிளகை விற்றுச் சீனப் பொருள்களை வாங்குதற்கும் அந்திராடேக்கு அனுமதி தந்தனர் கன்றன் அலுவலாளர்.

அக்காலத்தே மீக்கிங்கிலிருந்து அரசோச்சியவன், மிங்கு வமிசத்தைச் சேர்ந்த காங்கு தே என்பான். அன்னியராகிய மொங்கோலியர்க்கு மாறுக எதிர்த்தெழச் செய்தவன், நாட்டபிமானம் மிக்க பௌத்த துறவி சூ யுவான்-சாங்கு என்பானை மிங்கு வமிசத்தை நிறுவியோனுவன். இவ்வமிசம் உண்மை நாட்டினப்பண்பு உடையதாய், சீன வுணர்ச்சியின் புத்துயிர்ப்பைப் பிரதிபலித்தது. உங்கு வூ எனும் அரசபட்டஞ் சூடிய சூ யுவான்-சாங்கின் ஆட்சியில், சீனப் பேரரசின் அதிகாரம், கொரியாவரையும் இறியூக்கியூத் தீவுகள் வரையும் பரந்திருந்தது; பர்மாவும் மற்றுந் தொலைவிலுள்ள பிற திறையரசுகளும் சீனப் பேரரசின் மேலாண்மையை ஏற்று ஒழுகின; இனி, மிங்குக்காலத்தொடக்கத்தில் யப்பானியப் பேரரசருமே அதனை வரைவின்றி ஒப்புக்கொண்டனர்.

நாட்டுணர்ச்சி மிக்க முடியரசர் என்ற வகையால், சீனப் பண்பாட்டின் உண்மையுணர்ச்சியை மீண்டும் மலரச்செய்வதே மிங்கு மன்னரின் பொதுவான பூட்கையாய் இருந்தது. உங்கு வூ சட்டக்கோவையொன்றினை யாத்தளித்தான்;

பேரரசிலே முன்னம் பரம்பரையாக நிலவிவந்த நிருவாக சேவையினை மீண்டும் நிறுவினன்; பேரரசுக்குப் பொதுவாயமைந்த பரீட்சைகள் மூலம் மண்டரின் முறையைப் பலப்படுத்தினன். அவற்பின் அரியணையேறிய யுங்கு லோ (1403-24) என்பானும் பேராற்றல் படைத்த பேரரசனே. அவன் பீக்கிங்கு நகரை இன்றுள்ள வடிவிலே திருத்திக் கட்டினன்; விரிந்தவோர் அறிவுக் களஞ்சியத்தை (யுங்கு போல-தா-தி யென் என்பதனை) தொகுத்தளித்தான். அன்றியும், அவன்றன் தளபதியாகிய செங்கு கோ என்பான் அராபியக் கரைவரை இந்து சமுத்திரத்திலே, அறுபத்தைந்து கப்பலேக்கொண்ட கடற்படையினை ஊர்ந்து சென்று பற்பல சாகசம் புரிந்தான். இவ்வாறுக யுங்கு லோவின் புகழ் இன்றும் நின்று நிலவுகின்றது. இவையெல்லாம் ஒருபுறமாக, சீனப் பெருமன்னருள் ஒருவனுக அவனை வைத்தெண்ணற்குப் பிற காரணங்களும் உண்டே. அவன் அனம், கொரியா, யப்பான் ஆகிய நாடுகளிலும் பேரரசின் ஆதிக்கத்தைப் பரப்பினன். மேலும், செங்கு கோ மேற்கொண்ட கடற்படையெழுச்சிகள் வாயிலாக, தென்புலமீது சீனர் பாராட்டிவந்த தெளிவற்ற மேலாண்மையானது உறுதிபெறவே, அத்தென்புலவரசுகள் திறையரசுகள் எனும் நிலையினை அடைந்தன. சீயம், யாவா, சுமாத்திரா, மலாயா ஆகிய நாடுகள் மீதும், சீனவரசு முதன்முதலாக மேலதிகாரங் கோரத் தலைப்பட்டது.

யுங்கு லோவை யடுத்து வழிவழியாண்டோர் குறிப்பிடத்தக்க ஆற்றல் படைத்தவரெனக் கூறவியலாது. எனினும், பதினேழும் நூற்றாண்டின் தொடக்கத்திலும் அடுத்த நூற்றாண்டின் நடுக்கூறுவரைக்கும் மிங்கு மன்னரின் ஆட்சியில், சீனப் பேரரசிலே இடையறு அமைதியும் சீத்துவ நிலையும் நிலவி வந்தன என்பது வற்புறுத்திக் கூறற்பாலது. உங்கு வூவும் யுங்கு லோவும் திருத்தியமைத்த நிருவாகமானது வழுவின்றித் தொடர்ந்தியங்கிற்று. அன்றியும், பேரரசின் பருமனைக் கருதும்போது, அது வேண்டியாங்கு திறமைபடைத்ததாய், எங்கணும் தன் அதிகாரத்தைச் செலுத்தவல்லதாய் விளங்கிற்றெனலாம். காங்கு தேயின் காலத்தில், போத்துக்கேயர் முதன்முதலாகச் சீனத்தை அடைந்தபோது திருத்தியமைத்த அந்நிருவாகமானது செவ்வனே இயங்கிவந்தது; அவ்வதத்தலத்துள்ள பதிலிராயன்மாரும் ஆள்பதிகளும் தத்தம் மாகாணங்களில் எழுகின்ற பிரச்சினைகளைத் தாமே தீர்த்தற்கு வேண்டுந் திறமையும் அதிகாரமும் படைத்தோராகக் காணப்பட்டனர். பீக்கிங்கிலிருந்து மத்திய அரசாங்கம் வலியற்றதாய், ஊழல் மிக்கதாய், திறமையில்லாததாய் இருந்தக் கண்ணும், அவ்வரசாங்கத்தின் பூட்கைகளைப் பற்றுறுதியோடும் திறமையோடும் உள்ளூர்ப் பதிலிராயன்மார் கடைப்பிடித்தொழுகினர்—தியென்சின் பொருத்தனைக்காலம் வரைக்கும் (1858) இதுவே சீன அரசியல் அமைப்பின் தலையாய சிறப்பியல்பாகக் காணப்பட்டது.

பிரேசின் வருகைபற்றிப் பீக்கிங்கு அதிகார வருக்கத்தினர்க்கு உரிய காலத்திற் செய்தி சென்றது. வழக்கம்போலக் காலதாமதம் நேர்ந்தபின்னர், பீக்கிங்கு செல்லற்கு அவன் அனுமதிபெற்றான். இதற்கிடையிலே, போத்துக்

கேயர்க்கு வாய்ப்பில்லாத செய்திகளும் மிங்கு வேத்தவைக்குக் கிடைக்கலா யின. திறையரசுகள் என்ற வகையாற் சீனப் பேரரசின் பாதுகாப்பைப் பெற நாடிய மலாயாச் சுலுத்தானரசுகள், புதிதாக வந்து புகுந்தோர்க்கு மாறுய் முறைப்பாடு அனுப்பியிருந்தன. போத்துக்கேயர் வர்த்தகம்நாடி வந்தடையும் போதும், நாடு கைப்பற்றத் திட்டமிடுவர் எனப் பிற்ருங்குச் சுலுத்தான் பீக் கிங்கு ஆட்சிக்கு விரிவான அறிக்கையனுப்பி எச்சரிக்கை செய்தான். இந்து சமுத்திரத்திலே அவர்கள் கையாண்ட முறைகளே அவன் அம்பலப்படுத்தி ஞன. பேரரசன் சமுசயங்கொண்டானெனினும், போத்துக்கேயத் தூதமைச் சனே ஏற்க மறுத்தானல்லன். எனவே, தோமசு பிரேசைப் பீக்கிங்கிற்கு அனுப்பு மாறு கட்டளே சென்றது. பிரேசு பீக்கிங்கைச் சேர்ந்த அளவில், போத்துக் கேயர் நம்பத்தகாதவரென்பது அவர்தம் செயல்களாலேயே சீன அரசினர்க்கு வெளித்துவிட்டது. முதலிற் பிரேசிற்குத் துணேயாகச் சென்ற தளபதியின் சோதரன், சைமன் அந்திராடே என்பான், சாங்கு சுவான் வரை கப்பலூர்ந்து சென்று, மலாயாவிற் பழகிய பழக்கம் போன்று, ஆங்கும் தலேதடுமாறி நடக் கத் தொடங்கினன். ஒருசிறு கோட்டியை இறக்கி, கோட்டை கட்டத் தொடங் கினன் அவன். சீனக் கடற்படை அவனேத் தாக்கவே, அவன் வெருண்டோடி னன். அந்திராடேயின் கடற் சோரம் பற்றிப் பீக்கிங்கிற்குச் செய்தி கிடைத்த தும், சீனவரசாங்கம் தூதமைச்சனே வரவேற்க மறுத்தது—அவன் கன்றனுக்கு மீண்டு, 1523 இற் சிறையில் இறந்தான்.

அஞ்ஞான்று அன்னியர்க் கெதிராய் யாதுங் கோட்டங் கொண்டிருந்தாரல் லர் சீனர் என்பதை இங்கு அழுத்திக் கூறுதல் அவசியம். மிங்குவமிசம் நாட் டினவுணர்ச்சி உடையதாயினும், அன்னியராட்சியின் பின்னர் மறித்தும் மலர்ந்த சீனப் பண்பாட்டைப் பிரதிபலித்ததாயினும், அன்னியரோடு கலந்துற வாடலே ஏற்கச் சித்தமாயிருந்தது. உண்மையை நோக்கின், அவ்வமிசத்தொடக் கத்திற் கடல்சார் முயற்சி பெருகியவாற்றை முன்னர்க் கண்டோம். இந்து சமுத்திரத்திலே செங்கு கோ மேற்கொண்ட பயணங்கள் வாயிலாகவும், மலா யாவோடும் தென்றிசைத் தீவுகளோடும் சீனம் பூண்ட தொடர்புகள் வாயிலாக வும், சீனவை அஞ்ஞான்று தனிப்படையுணர்ச்சி தூண்டியதில்லேயென்பது தெளிவாகின்றது. எனவே, பீக்கிங்கு தன் பூட்கையைச் சடுதியாய் மாற்றி, போத்துக்கேயரோடு யாதுந் தொடர்புகொள்ள மறுத்ததேன்? போத்துக் கேயர் நாட்டமுயன்ற அரசியற் கோரிக்கைகளிலும், ஆசிய மக்களிடத்து அவர் கள் காட்டிய தறுகண்மைப் போக்கிலுமே அதற்குத் தக்க விடை காணலாகும்.

போத்துக்கேய மன்னன் 'நாவாயோட்டற்கு அதிபதி' யெனத் தனக்குத் தானே பட்டஞ்சூட்டியவாற்றையும், தன்னுடையாள் கண்டுபிடித்த 'நாடு கட்கெல்லாம் இறைவன்' என உரிமை கோரியவாற்றையும் முன்னமே கண் டோம். போத்துக்கேயரின் இக்கோரிக்கை தரைமீது செல்லாதொழிந்தது. கோழிக்கோட்டில் 1511 இல் அல்புகேர்க்கி பட்ட கேட்டின் பின்னர் அக் கோரிக்கை தரைவல்லரசுகளேப் பொறுத்தவரை மெதுவாகக் கைவிடப்பட் டது. ஆயின், கடற்படைகொண்டு அதனேச் செயற்படுத்தக்கூடிய இடங்களில்,

இலங்கை போன்ற தீவுகளிலும் மலாக்காவிலும், அவர்கள் தம் போலிக் கோரிக்கைகளைச் சிறிதும் தளர்த்தினரல்லர். இன்னும், 'நாவாயோட்டற்கு அதிபதிகள்' என்ற வகையால், தாம் கீழ்த்திசைக் கடல்களிற் கப்பலோட்டுதற்கு முற்றுரிமை பெற்றவர்—தம் அனுமதிப் பத்திரமின்றி கப்பலூர்ந்து செல்வோர் யாவராயினும், அவர் ஏற்றிச் செல்லும் பண்டங்களைப் பறிமுதல் செய்யும் உரிமையுடையவர்—என்ற வாரூன கோட்பாட்டை அவர்கள் கடலில் உறுதியாகக் கடைப்பிடித்தனர். அன்றியும், அவர்தம் வர்த்தக உபாயம் யாதெனில், தக்கவொரு கரைப்புலத்திலே இறங்கி, அங்கு ஒரு கோட்டை கட்டி, அதனைத் தமது ஆணிலமாகக் கைப்படுத்தி, அத்தளத்திருந்து வர்த்தகம் நடாத்தலேயாம். மலாயாவிலும், கொச்சியிலும், சிற்றரசுகளின் கரைப்புலங்களிலும் இம்முறையினை அவர்கள் விருத்தி செய்தனர். முன்பு நாம் கூறியவாங்கு, தாதமைச்சனொருவன் பீக்கிங்கிற்குப் போய்க்கொண்டிருக்க, சைமன் அந்திராடே சாங்கு சுவானில் அதனையே செய்ய முயன்றான்.

ஆழ்கடல்களிலே போத்துக்கேயர் இழைத்த கடற்சோரங்கள் பற்றியும் பீக்கிங்கு வேத்தவை நன்கறிந்திருந்தது என்பதையும் நினைவிற்கொள்ளல் வேண்டும். பீக்கிங்கிற்கு முறைப்படி திறையளித்துவந்த மலாய் நாட்டு இராசாக்கள்—அவருள்ளும் குறிப்பாகப் பிற்றுங்குச் சுஔத்தான்—போத்துக்கேயர் கரைப்புலங்களிலே செய்த அட்டூழியங்கள்பற்றிப் பேரரசற்கு அறிவித்ததோடு, அன்னரின் அரசியல் வேட்கைபற்றியும் எச்சரிக்கை செய்திருந்தனர். இசுலாமானது இன்றுபோல் அன்றும் உலகளாவிய ஒரு சமூதாயத்தை உடையதாயிருந்தமையால், கோவாவிலும் ஓமசிலும் செங்கடற்கரையிலும் போத்துக்கேயர் செய்த வேலைகள், மலாய்நாட்டு முசிலிம் மன்னர்க்குத் தெரிந்தேயிருந்தன. இந்துசமுத்திரப் பிரதேசத்துச் சிற்றரசரோடு கொண்ட தொடர்புகளிற் போத்துக்கேயர் மறைக்க முயலாத குறிக்கோள்கள்பற்றி மலாய் மன்னர் மூலமாய்ச் சீன வேத்தவை சிறிது அறிந்திருந்தது.

கடற்படைவலியைச் செவ்வையாகப் பயன்படுத்த முடியாவிடத்து, நாடுகைப்பற்றி வைத்திருத்தல் இயலாதென்பதைக் கோழிக்கோட்டுச் சாமோரின் போத்துக்கேயச் சேனுபதிக்கு முன்பொருகால் உணர்த்திய பின்னர், சிறு தீவுகளே ஆட்சிசெய்வதோடு அமைவுற்றிருப்பர்—சீனத்தின் பெருவலிக்கு மாறுகத் துணிந்து சென்றிருக்கமாட்டார்—என்பது உண்மையே. ஆயின், சீனப் பேரரசன்மார் வில்லங்கத்தை வலிய வாங்கிக் கொள்ள விழைந்திலர். பிறநாடுகளின் உரிமைகளே மதியாதாரும், ஆழ்கடலில் வெளிப்படையாகவும் மட்டின்றியும் கடற்சோரம் புரிந்தாருமான போத்துக்கேயரொடு அவர்கள் எவ்விதத் தொடர்பும் வைக்க மறுத்தனர்.

இவ்வாறுக, அரசியலுறவோ சூழியலுறவோ வளர்ந்திலதாயினும், தென்றிசைத் துறைகளோடு போத்துக்கேயர் வளமார் வர்த்தகம் நடாத்தி வந்தனர். வர்த்தகத்துக்கெதிராகச் சிறப்பான தடையெதுவும் இருந்ததில்லை. இன்னும், விலையுயர்ந்த பண்டங்களை விற்பனைக்குக் கொணர்ந்த அன்னியரோடு வர்த்தக வுறவு வளர்வதைச் சீன ஆள்பதிகள் ஊக்கினராகலாம். யோட்சு மசுக்காகாசு

என்பான் சுவாங்கு சோவுக்கு வந்து போயினமை, சீன வர்த்தக வகுப்பாரொடு நல்லுறவு வளர்தற்கு ஏதுவாயிற்று. இவ்வழி, அரசாங்கச் சார்பற்ற வளமார் வர்த்தகம், உள்ளூர் அதிகாரிகள் அறிந்தும் அறியார் போல் இருப்ப, சுவாங்கு சோ, நிங்போபோன்ற இடங்களிலே தோன்றி வளர்ந்தது. ஆயின் போத்துக்கேயரின் குணக்கேடும், குணபுலத்திலே அவர்கள் வரம்பிகந்து கோரிய ஆட்சியுரிமைகளுங் காரணமாக, அன்னூர் உள்ளூர் மக்களோடும் பதிலிராயன்மாரோடும் முரண்பட்டு, இகல்வினைத்து, அவ்விரு குடியிருப்பினின்றும் விரட்டப்பட்டனர். எனினும், வர்த்தகம் இரு சாராரர்க்கும் இலாபந் தந்ததாதலின், போத்துக்கேயர் தமது நியொழுக்கத்துக்கு ஏற்ற கமுவாய் செய்து, பதிலிராயற்கும் பிற உத்தியோகத்தர்க்கும் தக்க சன்மானம் அளித்ததன்பின்னர், அன்னூர் தம் பண்டங்களே இறக்கி வர்த்தகஞ் செய்தற்கு வசதியாக, ஆட்புழக்க மற்ற அமக்காவு எனுந் திட்டைப் பயன்படுத்தற்கு 1557 இல் அனுமதிக்கப்பட்டனர். மக்கவோ என இன்று அழைக்கப்படும் அந்த அமக்காவு, சீனப் பெருநிலத்தோடு இணைந்துள்ள ஒரு சிறு தீபகற்பத் துண்டேயாகும்.

கடற்சோரர் சிலரைத் துரந்து சென்ற ஒரு சீனத்தளபதிக்குப் போத்துக்கேயக் கப்பலொன்று உதவிசெய்யவே, அதற்குக் கைம்மாறாய் ஆள்பதியான வன் மக்கவோவை வர்த்தக நிலையமாய்ப் பயன்படுத்துமாறு போத்துக்கேயர்க்கு அனுமதி தந்தான். அது 1887 வரை அவ்வாறு பயன்பட்டது. அந்நிலத்திற்கு 1849 ஆம் ஆண்டுவரை, போத்துக்கேயர் ஒழுங்காக வாடகை அளித்தனர் என்பதையும், மக்கவோவிலே நீதிபாலனமும் வரிக்கட்டுப்பாடும் சினர் கையிலேயே இருந்தவென்பதையும் இங்கு நாம் எடுத்துரைத்தல் வேண்டும். அங்கே 1690 வரை சீன மன்றங்களே நீதி வழங்கின—நீதவானொருவன் அங்கு வகிந்து நீதி செலுத்தினன். கொலைக் குற்றங்களில் இறுதித்தீர்ப்பு, கன்றன் நகரத்து நீதிமன்றத்திலேயே தங்கியிருந்தது. சீன அரசினர்க்கு உரிய கட்டணஞ் செலுத்தலின்றிப் 'போத்துக்கேய மக்கவோவிலே' 1843 வரை வீடு தானுங் கட்ட முடியாது. சீனப் பேரரசின் பெருவலியை விஞ்சியே மக்கவோ கைப்பற்றப்பட்டுளது எனும் பொதுக் கருத்து உண்மையன்றென்பது இத்தாற் புலனாகும். பிரித்தானியரும் பிரான்சியரும் ஐரோப்பியராதிக்கத்தைச் சீனத்திலே நாட்டிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூற்றுவரையும், பீக்கிங்கு வேத்தவைக்கன்றிக் கன்றனில் உறைந்த ஒரு சிறு உத்தியோகத்தர்க்கே போத்துக்கேயர் அடிபணிந்தொழுகுவாராயினர்.

அடுத்துச் சீனத்தோடு தொடர்புகொண்டோர் இசுப்பானியராவர். நூற்றாண்டின் தொடக்கத்தளவிற் பிலிப்பீனை அடைந்த அவர்கள், தீவுக் கூட்டத்தை முற்றாக வென்றடிப்படுத்தி, மனிலா நகரையும் தாபித்தார்கள். அங்கு அவர்கள் சீன மாக்கலங்களைக் கண்டனர். சீனத்துக்கு முதன்முதற் சென்ற இசுப்பானியர் இரு குருமாரே—அவர் தாம் மாட்டின் த எரடாவும், செரோனிமோ மாரினும் ஆவர். தென் சீன அரசினரோடு நேயவுறவுகள் நாட்டப்பட்டன; நூற்றாண்டிறுதியில் அவர்களும் கன்றனிலே வர்த்தகஞ் செய்ய அனுமதி பெற்றனர். பிலிப்பீனைத் தளமாகக் கொண்ட இசுப்பானிய வர்த்தகம் செழித்தோங்கியதா

யினும், சீனத்தொடு சூழியலுறவுகள் நாட்டுவதில், போத்துக்கேயர் போலவே இசுப்பானியரும் வெற்றி கண்டிலர். பிலிப்பீனே மெக்சிக்கோவுக்கு மையத்தல மாயிருப்ப, சீனத்தொடு இசுப்பானிய வர்த்தகம் மத்திய அமெரிக்காவினூடாக நிகழ்ந்தது—விசித்திரமான ஒருவகை வர்த்தகம் இது. 'ஆசியப் பருத்தியாடை யும் பட்டுத் துணியும், வாசனைத்திரவியமும் பிங்கானும் வாங்குதற்பொருட்டு அமெரிக்கன் வெள்ளி கலாவோவினும் அக்கபுல்கோவினும் பரிமாற்றஞ் செய் யப்பட்டது—மாட்சிமை தங்கிய கத்தோலிக்க மன்னரின் கருவூலம் இவ்வாறு ஏமாற்றப்பட்டது.''[1]

பதினேழாம் நூற்றாண்டின் முதற்காற் கூற்றிலே, பசிபிக்கிற் போத்துக்கேய ராதிக்கம் இழிவடையத் தலைப்பட்டது. அக்கால் இடச்சுக்காரர் அம்போய்னவி லிருந்து போத்துக்கேயரை 1605 இல் வெளியேற்றியபின், இந்தோனேசியத் தீவு கள் பிறவற்றினின்றும் போட்டியாளரைப் பையப்பைய விரட்டியோட்டினர். யக் கார்த்தாவில் இடச்சுக்காரர் 1619 இற் களஞ்சியமொன்று நிறுவி, அந்நகரைப் பற்றேவியா எனவும் அழைத்தனர். இடச்சுச் சேனுபதி அறிவித்தவாங்கு, 'யாவா நாட்டில் நாம் அடித்தலம் பெற்று ஆணிலமும் பெற்றோம்.' கிழக்குக் கடல்களிற் போத்துக்கேயரின் ஆதிக்கமானது, ஒல்லாந்தர் வந்து புகுந்தமை யால், ஈடாடத் தொடங்கிற்று. பதினைந்து கலங்களைக் கொண்ட கடற்படை யோடு, இடச்சுத் தளபதியொருவன் 1662 இல் மக்கலோவிற்கு அப்பாற் றோன் றினன். அத்தீபகற்பத்திலிருந்து போத்துக்கேயரை அவன் வெளியேற்றத் தவ றினனுயினும், அவன் படையெழுச்சியால் முக்கியமான விளைவுகள் ஏற்பட்டன. அக்காலத்திற் சீனர் செவ்வனே குடியேறு நாடாயிருந்த போமோசா அப் படையெழுச்சியின் விளைவாகவே அடிப்படுத்தப்பட்டது. இடச்சுக்காரர் தைவானிற் கோட்டை கட்டி அங்கு தம்மை நிலைநாட்டினர். பிற்றைக் காலவர லாற்றில் இத்தீவு வகிக்குஞ் சிறப்பிடத்தைக் கருத்திற் கொண்டு, சீனப்பெரு நிலத்தோடு இடச்சுக்காரர் உறவு கொள்ளற்குச் செய்த முயற்சிகளை எடுத்தாளு முன்னர், போமோசாவில் நடந்தேறிய சம்பவங்களைச் சுருங்கக் கூறுவம்.

இடச்சுக்காரர் போமோசாவைக் குடியேற்றமாக விருத்தி செய்யாது, யப்பா னுடு வளர்ந்துவந்த வர்த்தகத்தொடர்பில் ஓர் இடைநடுத்துறையாகவும் வர்த்தக நிலையமாகவுமே அதனைப் பயன்படுத்தினர். ஆயின் அவர்தம் நிலைக்கு ஆபத்து நேர்ந்தது: வீழ்ச்சியடைந்த மிங்குவமிசத்தைச் சேர்ந்தோனுய செங் செங்குங்கு என்பான்—வரலாற்றிற் கொக்சிங்கா எனப் பெயர்பெற்றோன்—போமோசாவைக் கைப்பற்ற நினைத்தான். மஞ்சுவினத்தோர் வடசீனத்தை அடிப்படுத்திய நாளில், மிங்குவமிசத்தின் ஆதரவாளர் சீன நாட்டிற் படிப்படி யாகத் துடைக்கப்பட்ட காலத்தில், அமோய்க்களத்தில் உறுதியோடு எதிர்த்து நின்ற செங்கு தன்படைத்தளத்தைப் போமோசாவிலே நிறுவத் துணிந்தான். அவன் 25,000 படைஞரோடு தீவைத் தாக்கினன்; நெடிது கோட்டையை

1. அட்சன், ப. 241. என்றி பேணுட்டின் Les Isles Philippines எனும் நூலையும் காண்க.

முற்றுகையிட்டபின், இடச்சுக்காரர் பிறவழியின்றிச் சரணடைய, அவன் அதனை மிங்குவமிசத்தின் சார்பாகத் தன் கைப்படுத்தினன். யார் யார்க்கும் இடங்கொடுக்காது, தனது நிலை பேணியதுமன்றி, அவன் புகியன் கரையையும் அல்லற்படுத்தவே அம்மாகாணத்துக் கரையோரத்தினின்றும் மக்களை வெளியேறுமாறு மஞ்சுப் பேரரசன் கட்டளையிடவேண்டியவனையினன். இறக்குந் தனைக்கும் கொக்சிங்கா அத்தீவை ஆண்டான்; அதற்பின் அவன் மகன் அரசெய்தினன், கொக்சிங்காவின் மைந்தன் இறந்ததன்பின்பே மஞ்சு வமிசத்தோர் பேமோசாவைத் தங்கைப்படுத்தினர்.

மஞ்சுவமிசத்தோர் சீனமீது படையெடுத்து அதனை வெற்றிகொண்டமை ஆசிய வரலாற்றிலே தனிப்பெரும் நிகழ்ச்சியாகக் கொள்ளத் தக்கது. மிங்கு வமிசத்தை விரட்டியோட்டிய மஞ்சுவமிசம் 1911 வரையும் சீனத்தை அரசாண்டமையால், ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமிடையே 250 வருடகாலமாக வளர்ந்த உறவிலே தாட்கோலன்னச் சிறப்பிடம் வகிப்பது. அவ்வமிசத்தின் எழுச்சியும், 200 வருடங்களாகச் சீனத்துக்கு அது அளித்துவந்த பீடும் அதிகாரமும், இறுதியில் அதன் வீழ்ச்சியும் ஆகியவெல்லாம், பொதுவறு சிறப்புங் கவர்ச்சியுமுடையவை.

சாங் தேயின் பின்னர், மிங்கு வமிசத்திலே வலியும் ஆற்றலுமற்ற கொற்றவர், ஒருவர்பின் ஒருவராய்த் தோன்றி அரசவை அண்ணகர்க்கும் ஊழலித்த உத்தியோகத்தர்க்கும் இசைவான கைப்பாவையாயினர். சிறு குழந்தையாயிருக்கும்போதே அரசெய்திய பேரரசன் வான் லீ என்பான் திறமையற்றோன் (1573-1620) போகவாழ்க்கைக்கு அடிமையாகி, அரசாட்சியைத் தன் அண்ணகர் மூலமாகவும் காமக்கிழத்தியர் மூலமாகவும் செலுத்த முயன்றான். அவனுக்குப் பிரதான ஆலோசகனையிருந்தவன் வேய் செங்சீன் எனும் பெயருடைய அண்ணகனே. சீன நாட்டின் நீண்ட வரலாற்றில் அவனே கயவனிற் கயவனைக் கருதப்படுவன். வான் லீக்குப் பின் அரசெய்தியோனை, அவன்றன் தந்தைக்கு ஆசைநாயகியாய் இருந்தாளொருத்தியும் அண்ணகன் வேயும் ஒத்துப் படுகொலை செய்தனர். அடுத்த பேரரசன், அண்ணகன் வேயின் சொல்லுக்கடங்கிய ஒரு பேதையே. அவன் பெயரால் அந்த அண்ணகனே—மாற்றாந்தாயின் துணையோடு—அரசாட்சி செய்தான். வேய் செங்சீனுடைய செயல்கள் யாவும் அறக்கொடியவாய் இருந்தமையாலும், மக்கள் கருத்தை அவன் இம்மியும் மதியாது நடந்தமையாலும், நாட்டின் நலத்தைச் சற்றேனும் பொருட்படுத்தாமையாலும் மிங்கு வமிசத்தின் மாட்சி மீட்சியின்றி வீழ்ச்சியுற்றது[1]. அண்ணகன் வேய் செய்த தீவினையின் பயனை, அடுத்த பேரரசன் சுங்சென் அனுபவிக்கவேண்டியவனையினன். எங்கணும் குழப்பம் மூண்டது. கலகத்தலைவன் இலீ சூசெங்கு என்பான் கைப்பட்டது தலைநகர். பேரரசு பாறிவீழும் நிலையில் இருந்தது. அதனால் மஞ்சு வமிசத்தினர் தம் வலிபெருக்கல் எளிதாயிற்று.

---

1 தணிக்கையாளன் யாங் லியன் என்பான் 1624 இற் பேரரசற்குச் சமர்ப்பித்த விஞ்ஞாபனத்தில் இவையெல்லாம் தொகுத்துக் கூறப்பட்டுள.

மஞ்சுக்கள் என்போர் எல்லைப்புறத்தில் வாழ்ந்த ஓர் இனத்தோரே. சீன மேலாண்மையை அவர்கள் ஒரோவொருகால் ஏற்றுமூகியபோதும், சீனர் அவர்களை ஒருபோதுமே வென்றடக்கியதில்லை. குலங் குலமாகப் பிரிந்தமைந்திருந்த அம்மக்கள் தேசிய ஒற்றுமை சிறிதுமின்றி வாழ்ந்து வந்தனர். ஆயின் அவர்களிடையே உதயதாரகைபோன்று ஒரு தலைவன் தோன்றினான்—அவனே நூர்காச்சி (பிறப்பு 1559). சீன எல்லைப்புறத்திலே அவன்றன் தந்தையும் பாட்டனும் ஒரு சீன உத்தியோகத்தனாற் கொல்லப்பட்டது கண்டு உளங்கொதித்த நூர்காச்சி, பழிவாங்கும் வேட்கையால் உந்தப்பட்டு, மஞ்சுக்குலங்களைக் கட்டுக்கோப்புடைய ஒரு கூட்டிணைப்பாக்கினன். எல்லைப்புறக் காவலனாக அவனைப் பதவிக்கமர்த்தியும், 'யாளி-வேங்கைச் சேனபதி' யெனும் பட்டஞ் சூட்டியும் அவன் கொண்ட கோபந் தணிக்கச் சீனவரசினர் முயன்றனர். இவ்வழி, அவன்றன் மதுகையும் மாட்சியுமே பெருகின ; மஞ்சுக்குலங்கள்மேல் அவனுடைய அரசியலதிகாரம் உறுதிப்பட்டது ; வலிமிக்க படையொன்றை அவன் திரட்டினான். பல்வேறு மஞ்சுக் குலங்கள் 1586 ஆம் ஆண்டளவில் அவனுடைய அதிகாரத்தை ஏற்றுக்கொண்டன ; அவனே மஞ்சூரிய மன்னனாக மதிக்கப்பட்டான். இனி, பிற்றைக்கால மிங்கு மன்னரின் ஆட்சியில், மொங்கோலியாமீது சீனர் செலுத்தி வந்த ஆதிக்கம் பெரும்பாலும் அழிந்தொழிந்துவிட்டது. அங்குத் தன் அதிகாரத்தை நூர்காச்சி மெல்லப் பரப்பினான். அவன் தனது அதிகாரத்தை யெகோ இனத்தோர் மீது நாட்ட முயன்று போர்வினைத்தகாலை. பீக்கிங்கு அரசாங்கம் யெகோவினர்க்கே ஆதரவளித்தமையால், 1618 இல் நூர்காச்சி சீனமீது போர் தொடுத்தான். அந்த நாளில் மிங்கு வமிசம் விரைவாகத் தகர்ந்து வீழும் இழிநிலையில் இருந்ததாயினும், பேரரசை வீழ்ச்சிப் போதல் எளிதன்று. கர்வம் படைத்த மஞ்சுமன்னனைத் தடியும் பொருட்டுப் படையொன்று அனுப்பப் பட்டது. பதினேழு ஆண்டுகளாக அப்போராட்டம் விட்டு விட்டுத் தொடர்ந்தது —மஞ்சு இனத்தின் வலிமை ஒவ்வோராண்டும் பெருகலாயிற்று. நூர்காச்சி 1626 இல் இறந்தபோது, மஞ்சு ஆதிக்கம் இலியாவோதுங்கு தீபகற்பம்வரை பரந்திருந்ததுமன்றி, சீனப் பேரரசிற்கும் பேராபத்து விளைத்து நின்றது.

நூர்காச்சியை அடுத்துப் பதவியெய்தியோன் தியென் சுங்கு என்பான். மஞ்சு இனத்தின் ஆதிக்கத்தைக் கொரியாமீதும், சாகர் மொங்கோலியர் மீதும் நாட்டி, சீன நாட்டினுள்ளும் தொடர்ந்து போரை நடாத்தியவன் அவனே யாவன். அவற்பின் அரசெய்தியோர் காலத்தில், இலி சூ-செங்கு என்பான் தலைமையில், பெருங் கலகமொன்று சீனத்தில் மூண்டது. அதன் பயனைக் கடைசி மிங்குப் பேரரசன் பீக்கிங்கிலே தற்கொலை செய்தான். மஞ்சு இனத்தோர் காத்திருந்த தக்க தருணம் அதுவாயிற்று. வடபுலத்திருந்த மிங்கு ஆதரவாளரோடு ஒன்று சேர்ந்து கலகத்தலைவற்கெதிராக அன்னர் தலையிட்டனர். இனி சூ-செங்கை வெற்றி கொண்டதற்பின்னர், மஞ்சுமன்னன் பேரரசிற்கு உரிமை பாராட்டி, சீனம் முழுவதையும் தனது ஆட்சிக்குட்படுத்தினான் (1645).

நலிவுற்ற மிங்கு வமிசம் மறைந்துபோக, தீவிரமான ஒரு புதிய வமிசம் ஆட்சி பெற்றமையாலே முக்கியமான ஒரு பருவத்திற் சீனம் வலிமைபெற்றது.

மங்கோலியர் போன்ற வடவெல்லைப்புறத்துக் குலங்கள், மிங்குமன்னரின் பிற்றைக் காலத்தில், சீன ஆதிக்கத்தை மறுத்து எழுந்ததுண்டு. கல்கனரும் எலுதரும் அரைகுறைச் சுயாதீனம் பெற்ற பிறகுலத்தோரும் ஏற்கவே பிரிந்து போயினர். மற்று, பிற்றைஞான்று சிங்கியாங்கு எனும் பெயரைப் பெற்ற பெருநாடும் முற்றுகச் சுதந்திரம் படைத்த நாடாயிற்று. முறையான ஆட்சி வறிதாகியிருந்த சைபீரியாவினுள், இரசியர் மெல்லப் புகுவாராயினர். சிங்கு எனப் பெயர்பெற்ற மஞ்சு வமிசம் பீக்கிங்கிலே தனது ஆட்சியைத் தொடங்கிய காலத்தில், சீன நாடு உண்மையிற் சிங்கியாங்கையும் திபெத்தையும் உள்ளடக்காது பெருமதிலின் தென்புறம் வரைக்குமே பரந்திருந்தது. வழிவழியாண்ட ஆற்றல் படைத்த மன்னவர் பலர்—அவருள்ளும், சீன வரலாற்றில் இடம்பெற்ற மாபெரும் மன்னருள் விருவரான காங்கு இசியும், சியென்லுங்கும்—மீண்டும் பேரரசை உறுதிப்படுத்தி, இரசிய முன்னேற்றத்தை அமூர் எல்லையிலே தடுத்து வைத்து, சிங்கியாங்கை மீண்டு கைப்பற்றிச் செவ்வையாக ஆட்சிப்படுத்தி, திபெத்திலே படைப்பலங்கொண்டு தலையிட்டு, அங்கும் சீன உரிமைகளை நிலைபெறுத்தினர். அடுத்த 200 ஆண்டுக் காலத்தில் சீனத்தின் அதிகாரமானது கொரியாவின் வடவெல்லை தொட்டுக் கம்போடியாவரைக்கும், பசிபிக்கிலிருந்து இமயம் கரக்கோரம் எனும் மலைகள் வரைக்கும், ஒரு பெரும் நிலப்பரப்பை அடக்கி நின்றது.

மிங்குப் பருவத்தின் இறுதி முதலாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை, ஐரோப்பியக் குருமார் பலர் பீக்கிங்கில் அரசவைக்கண்ணே பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அன்னர் சமயத் தொண்டராயிருந்த போதிலும் பீக்கிங்கிலே அவர்தம் சேவை பெரும்பாலும் விஞ்ஞானத்துறைக்கு உரியதாயிருந்தது. பேரரசன் காங்குஇசி அறிவு நாடியாராயும் உள்ளத்தவன்—அக்கால மன்னவனொருவன் அத்தகு பண்பு உடையனாயிருந்தமை குறிப்பிடத்தக்கது. சீனம் பற்றி ஐரோப்பியர் நன்முக அறியத் தொடங்கினர். சீன நாகரிகமும் சிந்தனைச் செல்வமும், கிறித்துவ மிசனரிமாரின் மொழிபெயர்ப்புக்கள் வாயிலாய் ஐரோப்பாவிற்குச் சென்று, பதினெட்டாம் நூற்றாண்டின் சிந்தனைப் போக்கிலும் நாகரிகத்திலும் சிற்சில விளைவுகள் பயந்தன—பின்னையதிகாரமொன்றில் இச்சார்பினைக் காட்டுவம்.

புதிய சீனப்பேரரசோடு சூழியலுறவுகள் பூணுதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன—அவ்வாறு முயன்றாருள் இடச்சுக்காரரே முதன்மையானவர். மஞ்சுவமிசத்தோர்க்குச் சிற்சில உதவி செய்திருந்த இடச்சுக்காரர், அதனை மனதிற் கொண்டு, பீக்கிங்கிற்குத் தூதனுப்ப அனுமதி தந்திடுமாறு மெல்ல விணவினர். ஆயின், கத்தோலிக்க மிசனரிமாரின் நலவுரிமைகளும் புரட்டசுத்தாந்து நாடாகிய ஒல்லாந்தின் வேணவாக்களும் முரணிநின்றன. பீற்றர்—த—கோயேசு என்பான் தலைமைவகிக்க, தூதுக்குழாமொன்று 'திறை தாங்கிச் செல்வோர்' என்ற வகையால், 1655 இற் பீக்கிங்கை அடைந்தது. வெறுமையாயிருந்த அரியணைமுன்பு அவர்கள் பணிந்து பணிந்தெழ, அவர்களுக்குப் பேரரசன் வெகுமதிகள் பல உவந்து நல்கினன். எட்டாண்டுக் கொருமுறை இத்தகைய

தூதுக்குழுக்களோடு வர்த்தகக் கப்பல்கள் நான்கினை அனுப்ப மாட்சிமை தங்கிய பேரரசன் அனுமதி யளித்தான்—முன்னங் கூறிய தூதின் அரசியற்பேறு இதுவொன்றேயாம். அடுத்த இடச்சுத் தூதம் பீற்றர் வான் ஊன் என்பான் தலைமையில் 1665 இற் பீக்கிங்கை அடைந்தது. திறைதாங்கிச் சென்ற ஒரு தூதுக்குழுவின் தலைவனென்ற வகையால், அவன் மரியாதையாக வரவேற்கப் பட்டானுயினும், அதனலும் குறிப்பான அரசியல் விளைவு யாதும் வெளிவந்த தில்லை. 'எம்மை ஒற்றர் போலக் கூட்டிச் சென்று, கள்ளர்போலத் திருப்பிய னுப்பினர்'—என்றவாருகத் தூதமைச்சன் பற்றேவியாவிற்கு அறிக்கை செய் தான்.

அப்பால், ஆங்கிலரும் சினக்கடல்களில் வந்து புகுந்தனர். இப்பிரதேசத்தில் ஆங்கிலர் முதன் முதலாகப் பிரவேசித்தபோது கிழக்கிந்திய வர்த்தகத்துக்குப் போட்டியிட்ட வைரித்த பகைவரான இடச்சுக்காரரின் நட்புறவோடே அவர் கள் சென்றனர். இரு நாட்டுக் கம்பெனிகளும் தம்மிடை 1619 இற் கைச்சாத் திட்ட ஒரு பொருத்தனேவாயிலாய், சினத்தின் கரைக்கப்பாலே ஒரு தீவினே வென்றடிப்படுத்தி, சீன மரக்கலங்களே நெருக்கித் தம்மொடு மாத்திரம் வர்த்த கஞ் செய்திடுமாறு தீர்மானங்கொண்டன. கூட்டுக் 'காப்புக் கழகம்' நிறுவுதற் கும் அப்பொருத்தனே வழிவகை செய்தது. இவ்வுடன்படிக்கையின் பத்தாம் வாசகம் வருமாறு சென்றது: 'சினவர்த்தகத்தை எங்கைப்படுத்தற்கு இப் பாதுகாப்புப் பயன்படுத்தற்பாலது. அந்நோக்கம்பொருட்டுக் கடற்படையா னது பிலிப்பீனுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்—அங்குச் சீனரை அலைக்கழிவு செய்து, எம்மொடு மாத்திரம் அவர்கள் வர்த்தகஞ் செய்திடுமாறு நெருக்குதல் வேண்டும்'. ஆங்கிலரின் துணைகொண்டு பெசுக்கடோர்த் தீவுகளே அரண் செய்த இடச்சுக்காரர், வர்த்தகத்தைத் தமது முற்றுரிமையாக்கத் தலைப்பட்டாராத லின், இந்த இயற்கைக் கொவ்வா நட்புறவு முடிவுற்றது. இடச்சுக்காரரோடு நட்புறவு இவ்வாறு தவறவே, ஆங்கில வர்த்தகர் போத்துக்கேயரை அணுகத் துணிந்தனர். கோவாவை ஆண்ட போத்துக்கேயர் பதிலிராயனிடமிருந்து உத் தரவுச்சீட்டை நாடிப் பெற்று, தளபதி வெடல் என்பான் தலைமையிற் பல கப் பல்களே அடுக்குப்பண்ணினர். சீனத்தோடு வர்த்தகஞ் செய்தற்குக் கோவா அரசினரிடமிருந்து மக்கவோ ஆள்பதிக்குச் சில அறிமுகக் கடிதங்களே எடுத் துச் செல்வதே வேண்டியது எனத் தளபதி வெடல் கருதுமளவிற்குச் சினம் பற்றி அவர்கள் அறிந்தது அற்பமாயிருந்தது. மக்கவோவிலிருந்த போத்துக் கேயரைச் சீன அதிகாரவர்க்கம் 'கேவலமான அடிமை நிலையில்' வைத்திருந் தமையால், தம்மாற் செய்யத்தக்க உதவி யாதுமில்லையெனக் கோவா ஆள்பதி விளக்கினன். எனவே, ஆங்கிலத்தளபதி தானே சென்று நடவடிக்கையெடுக் கத் தீர்மானித்தான். அவன் பார்ய்க்கப்படலொன்றையும் வள்ளத்தையும் ஆயத் தஞ் செய்து, வீரர் ஐம்பதின்மரை உடனேற்றி, கன்றன் ஆற்றிற் செலுத்தி வைத்தான். ஆயின், சீன அதிகாரவர்க்கத்தினர் அவர்களேத் தடுத்து நிறுத்தி ஆற்றைவிட்டேகுமாறு கூறினர். ஆங்கிலர் வழமையான மூனேப்பொடு மேற் சென்று, 'போத்துக்கேயர் போன்று தாமும் கட்டின்றி வர்த்தகம் நடாத்த அனுமதிக்கப்படவேண்டுமென்றும், தங்கப்பல்களுக்கு வேண்டும் பொருள்வசதி

யோடு பணமும் உடனடியாகத் தரல் வேண்டுமென்றும் வற்புறுத்த, மண்டரின் மாரும் கன்றனில் வதிந்த தலைமக்களை விசாரிப்பதாக வாக்களித்தனர். அதற் கிடையில், ஆறு நாட்டவரை கேட்டனராக அதுவும் அளிக்கப்பட்டது'[1].

இவ்வாறாக, வாகை சூடியோர் போன்று நிபந்தனை விதிப்பதும் சலுகைகள் வலிந்து பெறுவதுமாகிய மனப்பான்மையால் இடர்ப்பாடு விளைந்தது இயல்பே. நூற்றுவர் கொண்ட ஒரு கோட்டியானது கப்பல்விட்டிரிந்து, ஆற்றுக்கண்மை யில் ஒரு சிறு கோட்டையைப் பிடித்து, 'மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் பெரிய பிரித்தானிய வண்ணக் கொடியைக் கோட்டை மதில்களிற் பெருமை யோடு' பறக்கவிட்டது. அக்கோட்டி பல்வேறு சூறைச் செயல்களையும் ஆற் றிற் செய்தது. எனினும், பெரும் பொறுதி காட்டிய சீனர் கப்பலதிகாரிகளில் இருவரைக் கன்றன் நகர்க்கு அனுப்பி வைக்க, ஆங்கு, அவர்தம் மனுக்களை அந் நகர அலுவலர் உரியவாறு ஏற்றனர். ஆயின் அனுமதி கிடைத்திலது. தளபதி வெடல் தமது நடத்தைக்கு மன்னிப்புக்கோரி, இனிமேற் குற்றமிழைக்கமாட் டேனென உறுதியளித்தபின், கப்பலிற் சரக்கேற்றி இந்தியா மீளுதற்கு அனு மதிக்கப்பட்டான்.

பேரரசனுடைய கட்டளைப்படிக்குக் கன்றன் துறையை வர்த்தகநிமித்தம் திறந்துவிட்டபோது, ஆசியக் கடல்களில் அந்நாளில் வர்த்தக முற்றுரிமை பெற்றிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியானது 1685 இற் கன்றனிற் களஞ்சியம் நிறுவும் உரிமை பெற்றது. நிங்போவினும் அது வர்த்தக நிலையத் திறந்தது. 'மக்கிள்சுவீல்டு' எனும் மரக்கலம் 1,700 இற் செய்த பயணத்தின் பின், இவ் வர்த்தகஞ் சிறப்புற்றோங்க, கிழக்கிந்தியக் கம்பெனிக் கலங்கள் ஒவ்வோராண் டும் கன்றனுக்கு வந்து போயின. நிரந்தரமான களஞ்சியமொன்று 1715 இற் கன்றனில் நிறுவப்பட்டது; பேரரசின் வர்த்தக ஆணையாளரொடு முறையான உடன்படிக்கை ஒப்பேற்றப்பட்டது; அதன் வழி வர்த்தகம் ஒழுங்காக்கப்பட் டது. ஆயின் இவையெலாம் கன்றனுக்கே உரியவை. அங்கும் ஒங்கு வர்த்தகர் எனப் பெயரிய, முற்றுரிமை பெற்ற சீன வியாபாரக் குழுமூலமாகவே வியா பாரம் நிகழ்ந்தது. அச்சீனக்குழுவினர் சீன அதிகாரிகளின் அங்கீகாரத்தை யும் மற்று ஓரார்ரூற் பாதுகாப்பையும் பெற்று இருந்தனர். அக்குழுவின் நிலைமை பிற்றைநாளில் முறைமையாக உறுதிப்பட்ட ஞான்று, கோ ஒங்கு எனும் அக்குழுமமானது 'அரசாங்கத்துக்குரிய முழுவதிகாரமும் படைத்தாகி, ஒரு புறத்தில் அதன் பூரண ஆதரவைப் பெற்ற கருவியாகி, மறுபுறத்தில், பணப்புழக்கமானது செல்லுதற்கான ஒரு வாயிலாய் அமைந்தது—அப்பணத் தில் அதிகாரிகளும் பெரும்பங்கை எதிர்பார்த்திருந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் விளைந்த அரசியற் பிணக்குகளுக்கு அது பெரும் ஏதுவாய் இருந்ததாதலின், இவ்வர்த்தக முறைமை சற்றே சிறப்புடைத் தாகும். வெளிநாட்டு வர்த்தகம்பற்றிச் சீனர் கொண்டிருந்த மனப்பான்மையா னது கன்றன் நகரத்துப் பதிலிராயன் விடுத்த கட்டளையொன்றிற் செவ்வை யாக வெளிப்படுகின்றது. அக்கட்டளை வருமாறு சென்றது: 'மக்களை ஆளுதற்

[1] சீனத்துக்குத் தூதம்: பாகம் I, ப. 8–9 (பாமருங் கம்பெனியாரும், இலண்டன், 1797).

குக் குடியதிகாரிகளையும், தீங்கு செய்வோரைப் பயமுறுத்தற்குப் படையதிகாரிகளையும் வானுலகப் பேரரசு நியமிக்கின்றது. வர்த்தகம் பற்றிய அற்ப அலுவல்களை வர்த்தகர் தாமே தீர்மானிப்பர்—அவ்விடயம் பற்றி அதிகாரிகள் யாதுங் கேளார்'. சீனச் சார்பில் வர்த்தகத்தை ஒங்கு வியாபாரிகளே கட்டியாண்டனர். அவர்களும் பேரரசனுடைய சுங்கத்துறை ஆணையாளனின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டோரே. அந்த ஆணையாளனின் பதவிப் பெயர் 'ஒப்போ' என மருவி வழங்கிற்று. வர்த்தக உத்தரவுச்சீட்டு வழங்கும் உரிமை ஒப்போ ஒருவற்கே இருந்தது; அவன் ஒங்கு வியாபாரிகளின் மூலமாக வியாபாரமனத்தையும் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தினன்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் மதுகையும் மூலவளங்களும் இந்தியாவிற் சாலவும் பெருகவே, பதினெட்டாம் நூற்றாண்டின் போது, சீன வர்த்தகத்திலும் ஆங்கிலேயரே பெரும் பங்கு பெறுவாராயினர். சீனத்திலே கிழக்கிந்தியக் கம்பெனிக்குத் தலையாய வர்த்தகப் பொருளாயிருந்தது தேயிலையாகும். புக்கியென் மாகாணத்திற் பயிராக்கப்பட்ட கருந்தேயிலையே ஆங்கிலேயரின் கவனத்தை ஈர்த்தது. அத்தேயிலை புக்கியென் மாகாணத்திருந்து கன்றனுக்குக் கொண்டு வரப்பட்டு, ஒங்கு வர்த்தகர் வாயிலாகக் கொள்வனவு செய்யப்பட்டது. மக்கள் சபையின் தெரிவுக்குழு ஒன்றிலே சாட்சியமளித்த சாட்சியொருவன் வருமாறு சாற்றினன்: "கரியதேயிலை ஒவ்வொரு துண்டும் கம்பெனியாரைத் தப்பிப் போவதில்லையென யான் கூறமுற்படுவேன். எனின், கரியதேயிலை கொண்ட ஒவ்வொரு பொதியும், எப்பெறுமானம் உடையதாயினும், கம்பெனியாரின் பரிசீலனைக்கே முதன்முதல் அளிக்கப்படும் என்பதாம்". தேயிலை வாங்கும் அன்னியர் பிறரின் போட்டியும் ஆங்கே இருந்ததாயினும், அத்தகைய ஐரோப்பியரின் முதலீடானது ஆங்கிலேய முதலீட்டின் ஏழிலோர் பாகத்திலுங் குறைவாயிருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டு முடியுமுன்னமே தேனீரானது ஆங்கில மக்களின் தேசியப்பானமாக நிலைபெற்றுவிட்டது. இப்பெரும் இறக்குமதிக்கீடாகவே ஆங்கிலேயக் கம்பெனியானது அபின் விற்பனையைச் சீனநாட்டில் ஊக்குதல் செய்தது. அபின் விற்பனையைக் கம்பெனியின் முற்றுரிமையாக்கியவன் உவாறன் ஏத்திங்சு என்பானவன்.

சீனத்தில் வதிந்த ஐரோப்பியருட் பெரும்பாலானோர் ஆங்கிலக் கம்பெனியையே சேர்ந்தோராக இருந்தக் கண்ணும், பீக்கிங்கிற்கு ஒரு தூதுக் குழுவை அனுப்புதற்கு யாதொரு முயற்சியும் நெடுங்காலமாகச் செய்யப்படவில்லை. இப்பணிக்குத் தூதமைச்சனைக் கேணல் கத்காட்டு என்பானே முதன்முதலாகத் தெரியப்பட்டவன்—ஆயின் அவன் சீனத்தை அடையுமுன்னமே 1787 இல் இறந்துவிட்டான. சிலவாண்டு கழித்தபின்னர், பிரபலமான தூதமொன்று மக் இறந்துவிட்டான். சிலவாண்டு கழிந்தபின்னர், பிரபலமான தூதமொன்று மக் காட்னிப் பிரபுவின் தலைமையில், மூன்றும் யோட்சின் சான்றேலை தாங்கிப் பீக்கிங்கை அடைந்தது. மிக விரிந்த ஆயத்தங்களோடு உத்தியோகத்தர் பற்பலர் சகிதமாய்ச் சென்றது இம்மாபெருந் தூதம். தூதமைச்சனும் அவன்றன் பரிவாரத்தோரும் மிக்க விமரிசையோடு பீக்கிங்கிற்குச் சென்றனர். ஆயின், 'ஆங்கில நாட்டின் திறை தாங்கிவரும் தூதமைச்சன்' என்ற வாசகம் பொறித்த பதா

கையை அத்தூதுக்குழு தாங்கிச் சென்றது. எனினும், மக்காட்னிப் பிரபு தாழ்ந்து பணிந்து தொழுதெழ மறுத்து, பீடிற நடந்து ஒரு தாள் மடித்தே சான்ரேலியளிக்க இணங்கினன். தூதமைச்சற்குச் சியென் லுங்கு செலுத்திய மரியாதை பெரிதேயானும், அத்தூதால் வினைந்த அரசியற் பயனே வர்த்தகப் பயனே யாதுமில்லை.

அமேத்துப் பிரபுவின் தலைமையிற் பிற்றை நாளில் 1816 இற் சென்ற ஒரு தூதம் வறிதே மீண்டது. தூதமைச்சன் மண்டியிட்டுத் தொழுதெழல் வேண்டுமெனச் சீனர் வற்புறுத்த, தூதமைச்சன் அதுபற்றி சிந்திக்கவும் மறுத்தானாக, அத்தூதம் வெறுங்கையோடு பீக்கிங்கிலிருந்து மீண்டது. இந்தியாவை வென்றடிப்படுத்தியதனாற் பெருவலி பெற்ற பிரித்தன், படைப்பலங் கொண்டு சீனரை வர்த்தகஞ் செய்யுமாறு கட்டாயப்படுத்தும்வரை நிலைமை மாற்றமின்றி அவ்வாறு இருந்தது.

(2)

மலாக்காவிற்கு ஆள்பதி நாயகன் அந்தோனியோ கல்வாஞ்வின் கூற்றின் படிக்கு, முதன் முதலாகப் போத்துக்கேயர் 1542 இலேயே யப்பானை அடைந்தனர். யப்பானியத் தீவுகளில் முதன்முதல் இறங்கியோர், அதே சான்றவன் கூற்றின்படிக்கு, அந்தோனியோ த மோற்றேவும், பிரான்சிசுக்கோ டிமோரோவும், அந்தோனியோ பெரேற்றுவும் ஆவர். யப்பானில் மானியப் பிரபுக்களிடையே போர் நிகழ்ந்துகொண்டிருந்த காலம் அது. அப்போரில், சற்சுமாவின் தலைமையிலே மேற்றிசைப் பெருங் கொற்றவர் தத்தம் நாடுகளிலே சுதந்திரம் நாட்டி, மிக்காடோவும் சோகனுஞ் செலுத்தி வந்த அதிகாரத்தை ஒழித்துவிட்டனர். சோகனுட்சியானது அடுத்த ஆண்டின் தொடக்கத்தின்கண்ணே தொக்குகாவாக் குடும்பத்தினரின் கைப்படும்வரை மத்திய அரசின் வலிய ஒரு சாதனமாக வளர்ந்திலதாதலின், 1550 இற்கும் 1600 இற்கும் இடைப்பட்ட காலமானது மானியமுறையின் வழியதான ஆட்சியறவு தலைதூக்கிநின்ற காலமாகும். குழம்பிய இந்த நிலையிலிருந்து, இராணுவ மேதையான ஒடா நொபுங்கா (1534-82) என்பான் தோன்றினன். தைமியோக்கள் எனும் பெயருடைய மானியப் பெரும் பிரபுக்களின் வலியடக்கி, அவன் காலப்போக்கில் யப்பானிலே தனியதிகாரம் செலுத்தலாயினன்.

யப்பானுடைய வரலாற்றிலே நெருக்கிடைக் காலமாயிருந்த இப்பருவத்திலேயே, திறமான புதுப்புது ஆயுதங்களைத் தாங்கியோராய்ப் போத்துக்கேயர் வந்துற்றார்கள். பல்வகைப் படைக்கலம் பூண்ட கப்பல்களையும், ஆக்கியுபசு எனுந் துப்பாக்கிகளைத் தாங்கிய வீரரையுங் கண்ட தைமியோக்கள் அவற்றின் உண்மைப் பொருளை விரைவினில் உணர்ந்துகொண்டார்கள். மேற்கு யப்பானிலே தத்தம் புலத்திற் சுதந்திரம் நாட்டப் போராடி வந்த தைமியோக்கள், நாட்டிற் புகுந்த புதியோரை வரவேற்றார்கள். இத்தைமியோக்களில் ஒருத்தன் பிரான்சிசு சேவியரோடு ஒரு தூதுவனை 1551 இல் அனுப்பியதும் உண்டு. போத்துக்கேயரின் உதவிகொண்டு தாம் நாடுபற்றலாமெனக் கரைப்புலத்து மானிய முதல்வர் நம்பியிருந்ததும் உண்டு.

ஆ"ன் ப்திஞரும் நூற்ருண்டின் நடுக்கூற்றளவில், கரைப்புலமுட்பட எந்த விடத்துமே அரசியற் செல்வாக்குச் செலுத்தும் நிலையிற் போத்துக்கேயர் இருந்தாரல்லர் — இவ்வாறிருந்தமை யப்பானுடைய அதிட்டமேயாகும். ஆயின் அல்புகேர்க்கி யாண்ட வீர காலத்திலாயின், உண்ணுட்டிற் பெருங் கோளாறு விளைத்து, சிறிய தீவுகள் சிலவற்றை அவர்கள் கைப்பற்றியிருப்பர். ஆயின் இரண்டு இராச்சியங்கள் ஒருகுடைக்கீழ் ஒன்றுபட்டதைத் தொடர்ந்த 'அறுபதாண்டு அடிமை நிலையின்' பின்னர், போத்துக்கேயர் அரைநூற்ருண்டாய்த் தமது நிலை நாட்டிய இடங்களிலேயும் தம் அதிகாரம் பேணுதற்கு வகையறியாது இடர்ப்பட்டனர். அன்றியும், அவர்கள் தம்வசத்திருந்த தலையாய தீவுகளினின்றும் இடச்சுக்காரரால் விரைவில் விரட்டப்பட்டனர். இன்னும் நொபுனகாவின் அதிகாரம் வளர்ச்சியடைந்து உறுதிப்படவே, உள்ளூர்க் கொற்றவர் வெற்றிகரமாய்க் கலகம் விளைப்பதால் வரத்தகும் ஆபத்துப் பையவே குறைந்தது. உண்மையில் அபாயம் மிசனரிமாரின் முயற்சியில் இருந்தது — அது ப்ற்றிப் பிறிதோரிடத்திற் புறம்பாக நுதல்வோம். போத்துக்கேயத் தளபதியர்க்கும் மிசனரிமார்க்குமிடையே நிலவிய நெருங்கிய உறவே இங்கு வற்புறுத்திக் கூறத்தகுவது. கிறித்தவ நெறியைக் குணபுலத்திலே 'நீதிகாவலர்' ஆதரவின்கீழ்ப் பரப்பும் முயற்சியோடு போத்துக்கேய முடியரசு பரம்பரையாகக் கொண்டிருந்த தொடர்பின் வழியும், போத்துக்கலின் புகழிலும் பெருமையிலும் மிசனரிமார் கொண்ட ஈடுபாட்டின் வழியுமே அவ்வுறவு தோன்றிற்றென்க. பிரான்சிசு சேவியர் குணபுலத்திற்கு வந்துற்றபோது, சமயதாதுவர் என்ற வகையாற் போப்பின் சார்பிலும், மிசனரிப் பரிசோதகர் என்றவகையால் வேந்தன் சார்பிலும் வந்துற்ருர் என்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும். சமயம் பரப்பும் உயர்பணியானது போத்துக்கலில் அரசாங்கத்தின் ஒரு முயற்சியாய், முடியின் வருமானத்திற்றங்கியுளதாய் இருந்தது. ஆதலின், நாட்டின் நலவுரிமைக்கும் சமயப்பணிக்குமிடையே ஒருமைப்பாடு காணப்பட்டமை வியப்பாகாது.

நொபுனகாவின் ஆட்சிக்கண்ணே கிறித்தவ மிசனரிமார் பெற்ற ஊக்கமானது, அவற்பின் ஆட்சியெய்திய பெரும்படைத்தலைவனின் முற்காட்சியும் மதியுமின்றேல், அரசிற்குப் பெரும் ஆபத்தாக முடிந்திருக்கும். இடேயோசியெனும் பெயருடையான் அப்பெருந்தலைவன்; அவன் சாதாரண சேனதிபதியாகக் கொள்ளத்தக்கவனல்லன். அவன் பெரும் நாட்டபிமானி; நற்காட்சி வாய்க்கப்பெற்ற சிறந்த அரசறிஞன். அவனும் நொபுனகா போன்றே போத்துக்கேயரோடும் அவர்தம் மிசனரிமாரோடும் நல்லுறவு கொள்ளுதற்கு ஆவலாயிருந்தான். எனினும் அவன் எதனையும் ஊன்றிக் கவனிக்கும் அவதானமுடையோன். கிறித்துவ மதத்தைத் தழுவியோர் வாழ்ந்த பாக்கங்களைப் பாதுகாத்தற்காகப் பிரங்கிகளையும் போத்துக்கேயர் கொண்டு வந்திறக்கியவாற்றை அவன் கவனித்தான். வணபிதா கோயெல்கோ என்பாரைக் காணும்பொருட்டாய்ப் போத்துக்கேயக் கப்பலொன்றுக்குச் சென்றபோதினில், அக்கப்பல் சிறியதாயினும் பெரும்படைக்கலவரிசை தாங்கி நின்றவாற்றை அவன் அவதானித்தான். போத்துக்கேயரின் போர்க்கருவிகளிலும் பிற சாதனங்களிலும் மேற்றிசைத் தைமியோக்கள் அக்கறை கொண்டதையும், போத்துக்கேயரின் நட்பைக் கொண்டு தம் வலி பெருக்க

அன்னர் முயன்றதனையும் அவன் நன்கு அறிந்திருந்தான். இடேயோசி உறுதியொடு செயலாற்றினன்—அவ்வழி, யப்பானெங்கணும் மிசனரிமாரின் முயற்சிகள் 1587 அளவில் முற்றுகத் தடுக்கப்பட்டன.

இதற்கிடையிலே, பிலிப்பீன் தீவுகளிலே இசுப்பானியர் தம் ஆதிக்கம் நாட்டி, பிரதான தீவுக் கூட்டத்தை வென்றடிப்படுத்தியிருந்தனர். ஆதிகாலந்தொட்டே யப்பானியர் பிலிப்பீன் தீவுகளோடு வர்த்தகத் தொடர்புகள் வைத்திருந்தனர். இசுப்பானிய அதிகார வர்க்கத்தோடு வர்த்தகப் பேச்சுத் தொடங்குதற்கு இடேயோசி விருப்புடையனாய் இருந்தான். ஆயின் தற்செயற் சம்பவமொன்று அம் முயற்சியிற் குறுக்கிட்டது. கலியன் எனும் இசுப்பானியப் பெருமரக்கலமொன்று கரைதட்டிற்றுக, அதனை மீட்டு அதன் பண்டமனைத்தும் தன் உரிமையாக்கிய தைமியோவிற்கு அக்கப்பற்றலிவன் இசுப்பானியர் வலிமைபற்றிக் கூறியதோடு, இசுப்பானிய வெற்றியாளரின் மதுகைபற்றியும் கீர்த்தி பற்றியும் வீம்பாகப் பேசினன். சந்தேக உளத்தனாகிய இடேயோசி, கிழக்குப் புலத்திலே போத்துக்கேயரின் செயல்கள் பற்றி முன்னமே அறிந்தவனாதலின், நாட்டிலிருந்த இசுப்பானியர் அனைவரையும் சிறைசெய்யுமாறு கட்டளையிட்டு, ஒற்றரென அவர்கள் மேற் குற்றஞ் சாட்டி நாகசாகியில் அவர்களைச் சிலுவையில் அறைவித்தான்.

இடேயோசிக்குப்பின் 1600 இல் ஆட்சியெய்திய இயேயாசு தொக்குகாவா, மூன்றாண்டு கழிந்த பின்னர், செயிற்றாய் சோகுன் எனும் பட்டஞ் சூடினன். அதன் பொருள் 'மிலேச்சரை வென்றடக்கும் பெரும் சேனாபதி' என்பதாம். தொக்குகாவா சோகுனேற்று 265 ஆண்டுக்காலம் நீடித்தது. அது யப்பானியப் பேரரசு முழுவதிலும் உண்மைப்படியான அதிகாரஞ் செலுத்திற்று. அதே வேளையில், பேரரசுப் பட்டத்தின் திருவும் உருவும் பேணப்பட்டன. உள்ளபடியான ஆட்சியாளனாய்ச் சோகுனே இருந்தக்கண்ணும், அதன்றன் செயல்கள்பற்றிப் பேரரசனுக்கு அறிக்கை செய்து, நாட்டுக்கு முக்கியமான விடயங்கள் பற்றியுஞ் செய்தியனுப்பி, அவன்றன் அனுமதியைப் பெறுதல் வேண்டும். இராணுவ அதிகாரம் முழுவதும் சோகுனையே சார்ந்திருந்தது. தைமியோக்கள் எனும் மானியப்பிரபுக்கள் அனைவரும் ஒவ்வொரு சோகுனுக்கும் விசுவாசப் பிரமாணஞ் செய்தல் வேண்டும். தொக்குகாவாச் சோகுனேற்றுக்கு மாறுகப் போரிட்ட தொசாமா எனப் பெயரிய புறப்பிரபுக்கள் தத்தம் பாகையங்களை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டாராயினும், நாட்டு ஆட்சியில் யாது பங்கும் பெற்றிலர்.

இவ்வாறுகத் தொக்குகாவாச் சோகுனேற்றுனது மத்திய அரசின் அதிகாரத்தை மீண்டும் உறுதிப்படுத்தி, இருநூற்றைம்பதாண்டுக்காலத்துக்கு மேலாக நீடித்த ஒரு சருவாதிகாரத்தைத் தாபித்ததெனினும், புறப்பிரபுக்கள் இன்னும் அடக்கப்படாமை காரணமாகவும், சற்சூமா போன்ற இளவரசரும் மேற்றிசைச் சிற்றரசரும் இன்னும் பெற்றிருந்த பெருவலி காரணமாகவும், யப்பான் தேயம் வெளிநாட்டோரின் சதிகளுக்கு எளிதில் வயப்படும் நிலையில் இருந்தது. யப்பான் மாகாணம் அறுபத்தைந்திலே பதின்மூன்றை உடைய—சோசு போன்ற—புறப்பிரபுக்களும், கியூசூவில் அதிகாரம் படைத்தவனான சற்சூமா

வும் ஒன்று சேர்ந்தவிடத்து, தொக்குகாவாவின் அதிகாரத்தை மீறிச் செல்லும் வலியுடையராயினர். தனது ஆட்சியின் உறுதிநிலைபற்றி எஞ்ஞான்றும் விழிப் புடனிருந்த சோகுனேற்றுனது, கடல்வலி படைத்த பிறநாட்டினரின் தொடர் பாலே தனது ஆட்சிமுறைக்கு நேரக்கூடிய ஆபத்தை உணர்ந்தது. அதன் நேர் விளைவாக, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அமைந்தன்றிப் பிறவாற்றுல் வெளிநாட்டாரொடு பழகுதல் தடுக்கப்பட்டது. சோகுனேற்றுனது 1637 தொட் டுக் கடைப்பிடித்துவந்த தனிமைப்பாட்டுப் பூட்கையானது உண்ணாட்டுச் சார் பும் வெளிநாட்டுச் சார்புமாகிய இருசார்பையும் உடையதாயிருந்தது. வலிமை படைத்த விழுமியோர்களிஞ் இளர்ச்சிகளினின்றும் அரசாட்சியைப் பாதுகாத் தளித்தலே அப்பூட்கையின் உண்ணாட்டுச் சார்பு ஆகும். அத்தகைய விழுமி யோர் வெளிநாட்டு அரசுகளோடு நட்புறவுகள் பூணலாமன்றே? அன்றேல் திறமைமிக்க ஆயுதங்களையும் போர்க் கருவிகளையும் அவரிடமிருந்து பெறலா மன்றே? இனி, புறச்சார்பை நோக்குமிடத்து, அன்னியரும் நாட்டுமக்களும் தம்மிடை தொடர்பு பூணுமற் றடுத்து, தடுக்கவியலாத் தொடர்புகளைக் குறித்த ஒரு துறைமுகத்திலே சோகுனேற்றின் பிரதிநிதியின் வாயிலாக ஆற்றுப்படுத் தலே அப்பூட்கையின் நோக்கமாகும். சோகுன் இத்தகைய நடவடிக்கைகளைக் கைக்கொள்ளுதற்குத் தக்க நியாயம் இருந்தது. இசுப்பெயினும் போத்துக் கலும் கையாண்டு வந்த முறைகளையெல்லாம் யாக்கசு இசுப்பெக்சு என்பான் இயேயாசுக்கு முன்னம் விளக்கியிருந்தான். அன்றியும், இசுப்பானியரும் போத்துக்கேயரும் நாடு பற்றுதற்குக் கையாண்ட முறைகள் பற்றி ஒரு விஞ் ஞாபனத்தை 1612 இல் என்றிக்கு பிரவர் என்பான் சோகுனுக்குச் சமர்ப்பித் தான். இரண்டாந் தொக்குகாவா சோகுன் (இடெற்றுடா) காலத்தில், ஐரோப் பிய நாடுகள் ஒவ்வொன்றும் மற்றையதன் ஆதிக்க வேட்கையைக் கண்டிக்கத் தலைப்பட்டன. பிறவிடங்களிற் போன்றே யப்பானிலும், மதமாறிய யப்பானிய மக்கள் அன்னிய மதத்தாரிடத்தே அனுதாபம் உடையரென்பது தெளிவா யிற்று. அவ்வனுதாபங் காரணமாக அம்மக்கள் பட்ட இடுக்கண் சிறிதன்று. செம்பாராவிலே 1637 இல் மூண்ட கிறித்துவக் கலகமானது, அவ்வழி வரத் தகும் அபாயத்தைச் சோகுனுக்கு எடுத்துக் காட்டிற்று. போத்துக்கேயரிட மிருந்து ஆதரவு பெற்றதெனக் கருதப்பட்ட அக்கிளர்ச்சியை அடக்குதற்கு, கணிசமான பெரும்படையும், பெருநட்டம் விளைத்த போராட்டும் அவசியமா யின. பசிபிக்குத் தீவுகளிலே—அவற்றுளுங் குறிப்பாகப் பிலிப்பீன் மொலுக் காசு யாவாத் தீவுகளிலே—போத்துக்கேயர், இடச்சுக்காரர், இசுப்பானியர், ஆங்கிலேயர் ஆகியோரின் முயற்சிகள்பற்றி யப்பானியர் நன்கறிந்திருந்தனர். அவ்வழி, அன்னியரைக் கண்டிப்பாக நடத்தி, யப்பானிய மண்ணிலே அன்னர் கால்வைத்தற்கு வாய்ப்பளித்தலாகாதென்பதை யப்பானியர் உணர்ந்திருந்த னர். தெற்குப் புலத்திலே ஐரோப்பியரின் முயற்சிகள்பற்றி யறிந்து அறிவித் தற்காக, விசேட ஒற்றனெருவனே 1615 இல் ஆங்கு அனுப்பி வைத்தனர். யப் பான்மேற் படையெடுத்தற்கு இசுப்பானியர் கொண்ட ஒரு திட்டம்பற்றி 1622 இற் செய்தி பெற்றதாலும், யப்பானியர் கொண்ட கருத்து உறுதிபெற்றது. பதி

னேழாம் நூற்றாண்டின் தொடக்கமளவில், பிலிப்பீன் தீவுகளிலே தமது நிலையை உறுதிப்படுத்திய இசுப்பானியர், கணிசமான பெருங்கடற்படையை ஆங்கு வைத்திருந்தனர். போத்துக்கேயரின் உரிமைகளை மீறுதும், போப்பாண்டவர் உலகைப் பகிர்ந்தளித்தவாற்றைப் பாதிக்காதும், இசுப்பெயின் தாக்கத் தக்கதாய்ப் பசிபிக்கில் இருந்த நாடு யப்பான் ஒன்றே. அந்நாட்டை வென்றடிப்படுத்தல் தக்கதேயென இசுப்பானியர்க்குப் பட்டது. அதற்குப் பதிலாய்ச் சோகுனேற்றுக் கைக்கொண்ட நடவடிக்கை தீர்க்கமானதாய், தீவிரமானதாய் இருந்தது. யப்பானிலிருந்த இசுப்பானியர் அனைவரும் தாமதமின்றி வெளியேற்றப்பட்டனர். மதமாறிய யப்பான் மக்களை அகற்றும் பூட்கை உறுதியாகக் கையாளப்பட்டது; சிலவாண்டின் பின்னர், மேலைநாட்டோர் யப்பானுக்கு வருவது முற்றுகத் தடுக்கப்பட்டது.

இவ்வாறுக வெளிநாட்டோரை விலக்குங் கட்டளை பிரயோகிக்கப்பட்டதன் பின்னர், இராணுவ வர்க்கம் ஒன்றன் வாயிலாய் உறுதியும் உரனும் பெற்றிருந்த 'பாக்குவ' எனுஞ் சோகுனுட்சியானது, சிறப்பான ஒரு வாழ்க்கை நெறியை வகுத்து, அந்நெறியைத் தன் ஆதரவாளரிடை ஊக்கமாகப் பரவச் செய்தது. அதன் தத்துவம் முழுவதும் தொக்குகாவா சோகுனேற்றைத் தாபித்தவனை இயேயாசு என்பானுடைய 'மரபுரிமை'யில் அடங்கியுளது. நாட்டினப் பெருமைக்கு அடிப்படையாக, ஒறுத்த வாழ்க்கையை மேற்கொள்வதாகிய ஒழுக்கக் கோட்பாடே அஃது. நாட்டின் பாதுகாப்பையும் அதனோடு பிணைந்துள்ள சோகுனேற்றின் உறுதிப்பாட்டையும் யப்பானியர் அனைவரினதும் இலக்காய்க் கொண்டு, நாட்டை இராணுவ அடிப்படையிற் கட்டொழுங்கு செய்வதே சோகுனேற்று ஆட்சி முறையாகும். யப்பானை எதிரூன்றி நின்ற சிக்கலான பிரச்சினைகளை நிருவகிக்கவல்ல பாலன அமைப்பையும், வலிமை சான்ற மத்திய அரசாங்கத்தையும் சோகுனேற்று உருவாக்கியது. பாக்குவ ஆட்சியானது மூத்தோர் கழகத்தின் தலைமையிலே, கட்டுக்கோப்பமைந்த பணிக்குழுவாட்சியாக விருத்தியடைந்தது. இவ்வாறுக, நெடிது நிகழ்ந்த உண்ணாட்டுப் பூசலின் பின்னர், மீண்டும் அமைதி பெற்றதாய், அமைவான திறமை வாய்ந்த நிருவாகத்தை உடையதாய், வலிய மத்திய அரசாங்கம் படைத்ததாய்த் தோன்றிய யப்பான் உலகைச் செம்மாந்து நோக்கும் உறுதிபெற்றிலங்கிற்று.

மேனாட்டோரை விலக்குங் கட்டளை காரணமாக, அன்னாரோடு தொடர்பனைத்துந் துண்டிக்கப்பட்டதென்பது கருத்தன்று. இயேயாசு காலத்தில், இராடோவிலே (1611 இல்) பணிமனையொன்றை இடச்சுக்காரர் நிறுவியிருந்தனர். போத்துக்கேயர் நாகசாகியில் வர்த்தகஞ் செய்தனர்[1]. இராடோத் தைமியோ

1. 1594 ஆம் ஆண்டு முதலாக இடச்சுக்காரர் சிற்சில வர்த்தகப்பயணங்களை யப்பானுக்கு மேற்கொண்டது உண்டு. ஆயினும், நாலாவது பயணத்தைச் சேர்ந்த "இலீபீடே" எனும் இடச்சுக்கப்பல் யப்பானியக் கடற்கரையில் ஒதுக்கப்பட்டபோதே, இடச்சு இனத்தைப் பற்றி யப்பானியர் திட்டமாக அறிந்துகொண்டனர். அக்கப்பலினின்றுந் தப்பிக் கரைசேர்ந்தோரை இயேயாசு மரியாதையாக நடத்தினுன் என்பர். அவ்வன்புக்கு நன்றி தெரிவிக்குமுகமாக இடச்சு மன்னன் 1609 இல் ஒரு தூதுவனை யப்பானுக்கு அனுப்பி வைத்தான். அத்தூதினுல் உவகையெய்திய சோகுன் இடச்சுக்காரர் வர்த்தகஞ் செய்தற்கு அனுமதியளித்தான்.

இவ்வர்த்தகம் மூலமாய் இலாபம் பெரிதும் பெறுவானேயினன். ஆங்கிலேயரும் யப்பானிலே வந்துற்றார்கள். முதலாம் சேமிசு மன்னன் சோகுனுக்கு எழுதிய நிருபத் தாங்கி, தளபதி யோன் சாரிசு என்பான் தலைமையில், **குளோவு** எனுங் கப்பல் யப்பானே வந்தடைந்த ஞான்றே ஆங்கிலேயரின் தொடர்பு தொடங் கிற்று. மரியாதையாக வரவேற்கப்பட்ட சாரிசு வர்த்தகம் நடாத்த அனுமதி பெற்றான். ஆங்கிலப் பணிமனை நிறுவப்பட்டது. இந்தப் பணிமனைகளுக்கிடையே விளைந்த போட்டி யப்பானியர்க்கு நயம்பயந்தது. யப்பானியர் பெரிதும் நாடிய பொருளொன்று இருந்தது—அதுவே பீரங்கி. ஆங்கிலேயரும் இடச்சருமாகிய ஈரினத்தாரும் இராடோவிலே பீரங்கி சமைத்தனர் போலும். ஆயின் சோகு னேற்று அதிகாரிகளோ இங்கிலாந்தில் வார்ப்படஞ் செய்த பீரங்கிகளையே விரும்பிக் கேட்டனர். இறிச்சாட்டு கொக்சு என்பானுடைய நாட்குறிப்பேட்டின் படிக்கு, உண்மைத்திறத்தை யப்பானியர் அறிந்தேயிருந்தனர். இடச்சுக்காரர் பொதுவாக யப்பானியர்க்கு உதவியாய் இருந்தாராதலின், விலக்கீட்டுக் கட் டளை அன்னார்க்குச் செல்லாதொழிந்தது. ஆயினும் அவர்கள் இராடோவினின்று அகற்றப்பட்டு, நாகசாகிக்கு அண்மையிலுள்ள தெசிமா எனுஞ் சிறு தீவிற்கு மாற்றப்பட்டனர். வியாபாரிகளும் மாலுமிகளும் தொடர்ந்து ஓராண்டு காலத் துக்கு மேற்படத் தங்குதற்கு அனுமதிக்கப்பட்டதில்லை. ஒவ்வோராண்டும் அவர்கள் பணிவுடைய மனுவாளர்போன்று சோகுன் அல்லது யெட்டோவின் முன்னிலையிற் சமுகந்தருமாறு பணிக்கப்பட்டனர். அவர்கள் தம் மனைவிமா ரையோ பிற ஐரோப்பியப் பெண்டிரையோ கொண்டு வருதற்கு அனுமதிக்கப் பட்டிலர்; வேசியர் தவிர்ந்த பிற யப்பானியப் பெண்களும் அவர்களோடு சக வாசஞ் செய்யாமே தடுக்கப்பட்டனர். இனி, பொதுமக்களிடையே இடச்சுக் காரர்க்கு மதிப்பு இருந்திலது. தக்கேகோசி யென்பான், தற்கால யப்பானிய வரலாற்றுசிரியன், வருமாறு கூறியுள்ளான்: 'இடச்சுக்காரர்பாற் கண்ணேட் டஞ் செலுத்துவது சோகுனேற்றின் பூட்கையாக இருந்தாலும், பொதுவாக யப்பானியர் அவர்களோடு நண்பு பாராட்டியதில்லை'.

எனினும், தெசிமாவே மேற்குலகிற்கு யப்பானியர் திறந்த ஒரு வாயில் போன்றிருந்தது. இரங்கசுசா என வழங்கிய இடச்சு அறிஞர் குழாத்தின் வாயி லாக, பதினெட்டாம் நூற்றாண்டிலே யப்பானியரின் சிந்தனை வளர்ச்சியில் தெசி மாவிற்கிருந்த செல்வாக்குப்பற்றி, உரிய விடத்தில் ஆராய்வோம். தொடக்கத் திருந்தே யப்பானியர் இராணுவ விடங்களிற் பெரும் ஈடுபாடு கொண்டனர் என்பதே ஈண்டுக் கூறத்தக்கது. யாக்கசு இசுப்பெக்சு என்பான் 600 இராத்தற் பாரமுடைய பீரங்கியொன்றை வார்த்தமைத்தது 1615 இலேயாகும். பீரங்கி வார்க்கும் முறையை யப்பானியர்க்குக் கற்பிக்குமாறு 1618 இல் அவனைக் கேட்க, அவன் உதவி செய்தற்கு ஆவலாய் இருந்தானெனினும், அவனிடத்து அப்போது நிபுணர் யாரும் இருக்கவில்லை. ஆயினும் பின்னர், இராடோத் தைமியோ தன் முன்னிலையிலே பீரங்கி சிலவைச் செய்வித்தானதலின், நிபுணர் கிடைத்தனரென்பது கண்கூடு. இடச்சுக்கிழக்கிந்தியக் கம்பெனியார் அன்பளிப் பாகக் கொடுத்த பீரங்கியங்கங்கள் சிலவற்றின் திறனறிந்து அறிக்கை செய்

தற்காக 1638 இலே சோகுன் விசேட ஆணைக்குழு வொன்றை அனுப்பி வைத்தது உண்டு. பீரங்கியிலும் குண்டிலும் சோகுனும் அவன்றன் அதிகாரிகளும் காட்டிய அக்கறை கண்டு இடச்சுக்காரர் கவலைகொண்டனர். அவர்தம் அதிபனுகிய பிரான்சுவா காரன் என்பான் இனிமேற் சட்டிப்பீரங்கிகளை யப்பானிற் செய்தலாகாதெனக் கூறினன். அவற்பின் அதிபனுய அந்தனிசூன் ஓவவாட்டர் என்பான் இன்னும் வெளிப்படையாகத் தன் கருத்தைக் கூறினன். பீரங்கி வீரன் வேண்டுமென்ற கோரிக்கை பற்றி அவன் தன் மேலதிகாரிகளுக்கு எழுதும்போது, சாமர்த்தியமாக வருமாறு கூறினன்: 'பெருமையும் அகந்தையும் மிக்க இந்நாட்டினர்க்கு அவை (பீரங்கி) பற்றி யாதுமே பயிற்றுது விட்டிருத்தல் விவேகமாகாதா என்பது நல்லதொரு கேள்வி. ஆயின் அது நடந்து முடிந்த காரியமாதலின், நாம் வாளா இருக்க வேண்டியவரே.' இறுதியில் யுதீன் சாடல் எனும் பெயருடைய பீரங்கிவீரன் ஒல்லாந்திலிருந்து வந்து யெட்டோவில் ஆறுமாத காலந் தங்கியிருந்தான் (1650). ஆயின் இவ்விடயத்தில் யப்பானியர் இடைக்கிடையே ஈடுபாடு கொண்டனர். எனினும், அன்னர் மேலைப்புலத்தாரை மீண்டும் அனுமதிக்குமுன்னமே, பாதுகாப்புச் சம்பந்தமான பிரச்சினைகள் சிறிது அறிந்துகொள்ளவும், உறழ்வகையால் ஐரோப்பிய நாடுகளுக்குத் தாம் அத்துணை வலி குறைந்தவர் என்பதை உணர்ந்து கொள்ளவும் அவ்வாற்றல் வாய்ப்புக் கிடைத்தது.

விலக்கீட்டுக் கட்டளையானது கொமடோர் பெரி தன் 'கருங்கப்பல்களோடு' யப்பானியக் கரைக்கப்பால் 1853 இல் வந்தடையும்வரை தொடர்ந்து நீடித்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே, சோகுனேற்று தனது பூட்கையைப் பேணிக் காக்க எத்துணை முயன்றபோதும், வெளியுலகத்தொடர்பு வளர்ந்துகொண்டேயிருந்தது. பசிபிக்கில் ஏற்கவே வந்துற்ற இரசியர், வடதிசைக் கடல்களை ஆராய்வாராயினர். பிரித்தானியரும் தம் அதிகாரத்தை இந்தியாவில் உறுதியாக நாட்டிய பின்னர், பொறுமையிழந்து தினவுகொண்டோராகி, யாதுமோர் தலைக்கீடுபற்றி, தங்கப்பல்கள் சிலவற்றை யப்பானியக் கரைவரை அனுப்புவராயினர். தெசிமாவிலிருந்த முகவர்வாயிலாய், யப்பானிய அதிகாரவர்க்கத்தினர் நடப்பன யாவும்பற்றி அறிந்துவந்தனர். அதே வேளையில், சிறிதாயினும் பெருகிவந்த யப்பானியர் குழாமொன்று தளராத உறுதியோடும் வீறுமிக்க பொறுமையோடும் இடச்சு மொழியைக் கற்றும், மேனாட்டு விஞ்ஞான அபிவிருத்திகளைப் பயின்றும் வந்தது. இந்த அறிவுவளர்ச்சிக்குத் தெசிமா நகரம் உறுதுணைபுரிந்தது. கொமடோர் பெரியின் வருகையைத் தொடர்ந்து அரை நூற்றாண்டுக் காலத்திலே அவ்வறிவு முதிர்ந்து பெரும்பயன் தந்தது[1].

---

1. தெசிமாவிலிருந்து இடச்சுக்காரர் நடாத்திய வர்த்தகம் சொற்பமேயெனத் தெரிகின்றது. துறைமுகத்துட் புகுதற்கு 1700 இல் அனுமதிக்கப்பட்ட கப்பலின் எண்ணிக்கை ஐந்தேயாகும். பின்னர் 1715 இல் அது மேலுங் குறைந்து இரண்டு ஆயிற்று. பிற்றைநாளில், கான்சு காலத்தில் (1789–90) ஒவ்வோராண்டும் இடச்சுக்கப்பலொன்றே அனுமதிக்கப்பட்டது. அதற்பின்னர் ,"செம்மயிர்க் கப்பல்" யாதுமே நாகசாகிக்குட் பலகாலம் புகுந்ததில்லை. குறை, ப. 93–94 வரை பார்க்க.

இரண்டாம் பாகம்

வென்றடிப்படுத்திய காலம்

1750–1858

அதிகாரம் 1

இந்தியாவும் தீவுகளும்

(1)

ஐம்பதாண்டுக் காலத்தின்போது ஐரோப்பிய நாடொன்று இந்தியாவின் மூன்றி லோர் பாகத்தை வென்றடிப்படுத்தும்; எஞ்சியதன் மேலும் ஆதிக்கஞ் செலுத் தற்காக அது மராத்தியரோடு போட்டியிடும் — என்றெல்லாம் ஒருவன் 1750 இல் எதிர்வு கூறினானெயின், அவன் அதீதமான தீர்க்கதரிசனம் உடையவனாக இருத் தல் வேண்டும். என்னே? 1515 இல் அல்புகேர்க்கியின் காலத்தின்பின்னர் இந்தி யாவில் ஐரோப்பிய நாடுகளின் நிலைமை எவ்வாறிருந்ததோ, அவ்வாறே 250 ஆண்டுகள் கழிந்த பின்னரும் அஃதிருந்தது. கோவாவிலும் தாமனிலும் தியூ விலும் போர்த்துக்கேயர் ஆட்சி செலுத்தினர் — பிற்பாடு நிகழ்ந்த அரசியற் போராட்டில் அன்னார்க்கு யாது பங்கும் இருக்கவில்லை. இடச்சுக்காரர்க்கும் சிறு குடியிருப்புகள் சில இருந்தன — அவற்றுள் முக்கியமானது கொச்சி. அரண் செய்த அரைச்சதுர மைலளவான அந்நெய்தற் புலத்திருந்து, இடச்சுக்காரர் வளமார்ந்த மிளகுவர்த்தகம் நடாத்தினர். அந்நாளிற் பிரான்சிய 'இந்தியா வானது' புதுச்சேரியிலிருந்த தாபனங்களையும், காரைக்காலும் மாகியும் சந்திர நாகூரும் போன்ற சிறுவர்த்தக நிலையங்களையும் உள்ளடக்கியிருந்தது. அவற்றுக் கெல்லாம், படாடோபம் மிக்க சதிகாரனாகிய தூப்பிளே என்பான் ஆள்பதியாய் இருந்தான். பதினெட்டாம் நூற்றாண்டின் முன்னரைக் கூற்றிலே சாலவும் பெரு கிவிட்ட வர்த்தகத் துய்த்த பிரித்தானியர் சூரத்திலும் சென்னையிலும் மசூலிப் பட்டினத்திலும் கல்கத்தாவிலும் களஞ்சிய சாலைகள் நிறுவியதோடு, வங்கத்தி லும் சிறுசிறு வர்த்தக நிலையங்கள் வைத்திருந்தார்கள். ஆங்கில மன்னற்குச் சீதனமாகப் போர்த்துக்கேயர் அளித்த பம்பாய்த்தீவு, கிழக்கிந்தியக் கம்பெ னிக்கு அவனாற் கொடுக்கப்பட்டதாதலின், ஆங்குப் பிரித்தானியர் இறைமை யுரிமை படைத்திருந்தார்கள். 'ஒவ்வோராண்டும் செத்தம்பர் பத்தாம் தேதி, ஆண்டுக்குத்தகை பத்துப் பவுண் பொன்னுக்கு கொடுத்து, கிழக்குக் கிரீனிச் சைப் போன்று' சுயாதீனமாகக் கம்பெனி வைத்திருக்கலாமென்றே பம்பாய் அதற்கு அளிக்கப்பட்டது.

பம்பாய்த்தீவிற்கு வெளியே, எந்தவோரிடத்திலும் கிழக்கிந்தியக் கம்பெனி ஆணிலவுரிமை கோரியதில்லையென்பதை நாம் நினைவிற் கொள்ளல் அவசியம். இனி சென். யோட்சுக் கோட்டையும் கடற்கரையடுத்த நெய்தற் புலத்தையே அடக்கியிருந்தது. அதனை அடுத்து ஒன்றரை மைல் தொலைவிற் போர்த்துக்கேயக் குடியிருப்பான சென். தோம் இருந்தது. முகலாய ஆள்பதியொருவன் 1700 இற் சென்னையிலே தோன்றியபோது, கொழுத்த வெகுமதியும் 600 உண்டிவகைகளைக் கொண்ட விருந்தும், நடனமாதரின் சேவையும் அளித்தே அவனைச் சாந்திப் படுத்த வேண்டியதாயிற்று. இவ்வாறு நவாப்பு விசயஞ்செய்தல் ஆண்டுதோறும்

நிகழும் வைபவமாயிற்று. கம்பெனியின் குடியிருப்பு என்ற வகையில், சென்னை தோன்றியது 1708 வரையிலாகும். அவ்வாண்டில் தில்லியிலிருந்த மத்திய அரசாங்கம் கோட்டையையடுத்து ஐந்து கிராமங்களை நன்கொடையாகக் கம்பெனிக்கு வழங்கிற்று. வங்காளத்துப் பதிலிராயனைக் கம்பெனியார் இழிவான இச்சகமொழியால் விளித்துப் பேசுவதே வழக்காயிருந்தது. ஆங்கிலக் கம்பெனியில் அதிபனொருவன் பேரரசனை விளித்துப் பேசும்போது, "கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிபன் யோன் இறசலாகிய யான் ஒரு சிறு துரும்பேயென' நிலமீது நெற்றியழுந்த இறைஞ்சிக் கூறினன். வங்கத்திலே சுயாதீனமாக வர்த்தகம் நடாத்தும் உரிமை கம்பெனிக்கிருந்தது. அன்றியும், கல்கத்தாவிற் கண்மையில் இரு கிராமங்களைக் குத்தகையாகப் பெறுதற்கும் கம்பெனி அனுமதிக்கப்பட்டது. ஆயின் முகலாய அரசாங்கம் கம்பெனியார்க்கு ஆட்சியதிகாரம் அளிக்க மறுத்தமையாலே, கம்பெனியின் முயற்சி முழுவதும் நேரிய வர்த்தகஞ் செய்வதோடு நின்றுவிட்டது. பணிந்தொழுகும் இம்மனப்பான்மையைக் கம்பெனியாளர் தில்லிப் பேரரசனிடத்துக் காட்டியதோடு, மற்று, முகலாயப் பதிலையர் ஆள்பதிகள் அவ்வத்தலத்துக் கொற்றவர் யாவர் மாட்டும் காட்டி வந்தனர். அரசியலதிகாரம், பேரரசு ஆகியன பற்றிய கனவு யாதும் அன்னரை இன்னும் ஆட்கொண்டதில்லை.

இனி, தீவிரமாக அரசியலிலே தலையிடுதற்கு வேண்டும் வலிமையும் அன்னர்க்கு இருந்திலது. போத்துக்கேயரும் இடச்சரும் ஆங்கிலரும் முன்னம்பட்ட அனுபவத்தின் வாயிலாக, சிற்றரசர்க்கு மாருகத்தானும் தம் உரிமைகளை வற்புறுத்தும் தகைமையினை இன்னும் பெற்றிலர் என்பது தெளிவாயிற்று. திருவாங்கூர் இராசனெடி 1739 இல் இடச்சுக்காரர் மோதுற்றபோது, அயலடான இலங்கையிலே அவர்தம் ஆதிக்கம் பெரிதேயாய் இருந்தக்கண்ணும், அச்சமர் ஒல்லாந்தர்க்குப் பேரவலமாகவே முடிவுற்றது. அவர்கள் இறக்கமுயன்ற படைப்பிரிவானது, நூற்றுக்கு மேற்பட்ட ஐரோப்பியரைக் கொண்டிருந்ததாயினும், மானக்கேடான முறையிற் சரணடைய வேண்டியதாயிற்று. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே, சென்னைக் கண்மையிற் சில கிராமங்களிலே பிரித்தானியர் தமது அதிகாரத்தைப் பரப்ப முயன்றபோது, உண்ணாட்டு அரசினர் அவர்களை வல்லந்தமாக வெளியேற்றி விட்டனர். கடலிலேயும், பிரித்தானியரும் போத்துக்கேயரும் 1722 இல் ஒன்றுபட்டுத் தாக்கியபோது, கனேசி அங்கிரியா அவர்களைத் தோல்வியுறுத்தி வெற்றிடச் செய்தனன். மேற்குக் கரையிலிருந்த கடற்படையதிகாரிகள் 1738 இலே வருமாறு அறிக்கையனுப்பினர். 'அவனை (சம்பாசி அங்கிரியாவை) நிருவகித்தற்கு வேண்டும் வலிமை எம்மிடத்தில்லை. நீவிரும் பிறர்பலரும் எண்ணுவது போலாது அவன் வலிமை மிக்க பகைவனே'. பிற்றைக் கால வரலாற்றறிஞர் கருதியது போன்று, பிரித்தானியப் படைவலியானது பிளாசிப்போருக்குப் பின்னரும் கானூற்றாண்டு காலத்துக்கு முக்கியமான அரசியற் காரணியாக இருந்ததில்லை.

இவ்வர்த்தகத் தாபனங்களும் இங்கிலாந்திலே நிறுவப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனியும் ஐம்பதாண்டுக் காலத்துள் அரசியற்றுறையிலும் இராணுவத்துறையிலும் அதிகாரம் கைவரப்பெற்று, மராத்திய வல்லசோடு போராடி அசேக்களத்தில் (1803 இல்) அதன் பலந்துடைக்க வலியளித்தது யாது? இத்தகைய மாபெரும் மாற்றம் விளைதற்கு ஏதுவாயிருந்த அரசியற் சத்திகளும், சமூக பொருளாதாரச் சத்திகளும் யாவை? பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஆசியாவில் ஐரோப்பியர்க்கிருந்த நிலைமையைச் செவ்வனே விளங்குதற்கு, இப்பெரு மாற்றத்தை விளங்கிக் கொள்ளுதல் இன்றியமையாதது. என்னை? ஒரு பெரும் ஆசிய வல்லரசு என்ற வகையால், இந்தியாவைத் தளமாய்க் கொண்ட பிரித்தனது வலிமையே, சீனாவைப் பிறநாட்டோர்க்குத் திறந்து விடுதற்கும், யாங்கிசிப் பள்ளத்தாக்கில் ஐரோப்பியரின் ஆதிக்கத்தைத் தாபித்தற்கும், பெருமை சான்ற மஞ்சுக்களின் வலியடக்குதற்கும், எஞ்சியிருந்த ஆசியாவையும் ஐரோப்பாவிற்கு அடிமைப்பட்ட சார்ந்த பிரதேசமாக்குதற்கும் ஏதுவாக இருந்தன்றே? இந்தியாவைப் படைவலியால் வென்றடிப்படுத்தியமை 1858 அளவிலேயே முற்றுப்பெற்றதாயினும், அதுவே பிரித்தானியர்க்கு அசைவில்லாத அத்திவாரத்தை 1818 அளவில் அளித்து, அவ்வழி கைத்தொழிற்புரட்சியின் வயப்பட்ட பிரித்தனை, நெப்போலியனுக்கு முந்திய காலத்தில், அரசியற்றுறையிலும் பொருளியற்றுறையிலும் பசிபிக்கிலே அதிகாரஞ் செலுத்த வைத்த சத்தியாகும். இப்பெருமாற்றத்திற்கு ஏதுவாயிருந்த காரணிகளைப் பகுத்தாராய்தல் ஈண்டு அவசியமாகும்.

இந்தியாவின் நிலைமையானது 1748 ஆம் ஆண்டில் ஆற்றவும் சிக்கல் வாய்ந்ததாயிருந்தது. இந்தியப் பெருநிலப்பகுதியில், தெற்கே மைசூர் எல்லையிலிருந்து மேலைக்கரை வழியாகத் தில்லிவாயில்வரை, வளமிக்க பிரதேசங்களாகிய கூர்ச்சரம், மாளவம், கங்கையாற்றுக்கும் விந்திய மலைக்குமிடைப்பட்ட பெரும் புலப்பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பெரும் பிரதேசத்திலே வலிமிக்க பேரரசொன்றை மராத்தியர் தாபித்திருந்தனர். அதனைப் பூனாவிலிருந்த மத்திய அரசு ஆற்றுப்படுத்திக் கட்டியாண்டது. அக்கால் அது வொன்றே இந்தியாவில் வீறுகொண்ட உண்ணாட்டு அரசியற் சத்தியாக இயங்கிற்று. வெலிங்தன் கோமகன் கவனித்தவாங்கு நாட்டபிமானவுணர்ச்சி அதனை ஊக்கிற்று. அரை நூற்றாண்டு காலமாய், நாட்டைக் கட்டிக் காக்கும் பூட்கையே அதனை நெறிப்படுத்திற்று. பூனாவைத் தலைநகராகக் கொண்ட மராத்தியப் பேரரசானது பம்பாயிலும் சென்னையிலும் கல்கத்தாவிலும் இடங்கொண்டிருந்த வியாபாரிகளை இந்துத்தானப் பேரரசிற்கு மாறுக எழக்கூடிய போட்டியாளராய் இன்னும் கருதிற்றிலது. மாளவத்திலும் மத்திய இந்தியாவிலும் தான் வென்றடிப்படுத்திய வற்றை உறுதிப்படுத்துவதிலேயே அக்கால் அது பெரும்பாலும் ஈடுபட்டிருந்தது. இறுதியில், முகலாயரின் மாபுரிமையைத் தன்வயப்படுத்துவதே அதன் கருத்தாயிருந்தது. பிரித்தானியாதிக்கத்தை 1803 இலும் 1818 இலும், மற்று 1858 இலேயும் மீறியெழுந்தது மராத்திய வாசேயென்பது கூர்ந்து நோக்கற்பாலது. போரின்போது வெளிப்பட்ட கட்டொழுங்கும் இராணுவத்திறமையும்

அரசியற் றலைமையும் எல்லாம் மராத்தியரிடமிருந்தே—அவர்தம் தலைவராகிய நானா சாகிபு (இறுதிப் பேசுவா), தந்தியா தொப்பி, சான்சியிராணி எனுமிவரிடமிருந்தே—வந்தனவாகும்.

மராத்தியரைத் தவிர்த்து நோக்கின், மக்களின் விசுவாசத்தையோ பற்றுறுதியையோ கவரவல்ல, தெளிவாக வரையறைப்பட்ட அதிகாரபீடமெதுவும் இந்தியாவில் அக்கால் இருந்திலது எனலாம். பல்வேறு மாகாணங்களிலே முகலாயப் பிரபுக்கள் பலர் ஆட்சியதிகாரத்தை அபகரித்திருந்தனர். முகலாயப் பேரரசை மீறிச் சென்றேனும் பேரவாக் கொண்டவனுமாய அசாபு சா என்பான் பதிலையனுயிருந்து தக்கணப் பெருநிலத்தைத் தன்வயப்படுத்தி, மராத்தியர்க்குப் பெரும் வேதனமளித்து, ஓயாதியன்ற தன் சூழ்வுத் திறத்தினுல் ஐதராபாத்திலே தனது நிலை பேணினுன். அவன் 1748 இல் இறந்தகாலே, தில்லிப் பேரரசன் தான் தெரிந்து ஒருவனே அதிகாரியாக நியமிக்க முடியாமையாலே, அந்த வழியுரிமையைப் போரின் வழி நிருணயஞ் செய்யவிருந்தான். அவ்வழியுரிமையானது **அரியணைக்கன்றி** ஒரு **பதவிக்கே** உரியதாதலின், ஆங்கு மக்களின் பற்றுறுதியோ விசுவாசமோ இடம்பெற்றதில்லே. இன்னும், மரபு, வழமை, மக்கள் விருப்பு எனுமிவற்றுள் ஒன்றன் வழியதான வமிச உரிமையோ கிழமையோ இடம்பெற்றதுமில்லே. நாமத்தளவிலே குமரிமுனைவரை பரந்திருந்த முகலாயப் பேரரசின் ஒரு பாகமாய், தக்கணத்திற்குத் தெற்கிலிருந்த கருனாடகத்தில் முகலாயனது அதிகாரம் என்றுமே சென்றதில்லே. அக்கருனாடகம் ஒரு நவாப்பின் கைப்பட்டிருந்தது. அந்த நவாப்பு ஆற்காட்டிலிருந்த தன் தலைமையனுவலகத்திருந்து, கருனாடகச் **சுபாவை** ஆட்சி செய்வதாய் உரிமை பாராட்டினன். ஆயின் அப்பிரதேசத்திலே, முசிலிம் ஆட்சியின் மரபு தானும் இருந்திலதென்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும். தில்லிப் பேரரசனும் பட்டத்தளவான உரிமையுடையோனே; ஆற்காட்டு நவாப்பும் அவன்றன் கூலிப்படைஞரும் அப்பேரரசனுடைய, பட்டத்தளவான பிரதிநிதிகளே. அவன் செலுத்திய அதிகாரம் பொருட்படுத்தக்கூடியதாய் இருக்கவில்லே; நிருவாகம் என்ற பெயருக்கேற்ற ஓர் ஆட்சியமைப்பும் ஆங்கு இருக்கவில்லே. வளங்கொழிக்கும் மாகாணமாகிய வங்கம், திறமைமிக்க பதிலிராயன் அலிவர்த்தி கான் என்பான் ஆட்சியில் இருந்தது—அவனும் தன் சுதந்திரத்தைப் பெரும்பான்மையும் நிறுவிக் கொண்டான்.

பிறநாட்டுக் கம்பெனிகள் வர்த்தகம் நடாத்திய பெருநிலப்பகுதிகளிலே, விரைவாகக் குலைந்துகொண்டிருந்த மத்திய அரசாங்கத்தின் இழிவின்போது பெரும் பிரபுக்கள் தமக்கென வகுத்துக்கொண்ட நிலையானது, சீஞவிலே மஞ்சுப்பேரரசு மறைந்ததற்பின்னர் நிலவிய நிலைமையைப் பெரிதும் ஒத்திருந்தது. அங்கே முறையான உரிமை படைத்த அதிகாரபீடத்தினுல் ஆகியில் நியமிக்கப்பட்ட ஆள்பதிகள் ஆட்சி செய்தவரைக்கும், அரசியல் நிலைமை தகவான உறுதிபெற்றிருந்ததுபோற் றேன்றிற்று. இவ்வழி, ஐதராபாத்திலே அசாபு சா வலிமைசான்ற ஒரு கொற்றவனுய் இருந்தது மன்றி, மக்கள் மத்திய வரசின் சின்னமாகவும் விளங்கினுன். ஆயின், அவற்பின் உரிமையெய்தியோர்

தம்மிடை பொருவாராகி, யாதும் அரசியலதிகாரத்தையோ தத்துவத்தையோ குறித்தாரல்லர். கருனாடகத்திலே நிலைமை இன்னும் மோசமாயிருந்தது. நிசாமினால் நியமிக்கப்பட்ட அன்வார் தீன் அங்கு நவாப்பாய் இருந்தான். பிறனுக்குச் சேவையாளனே நிசாம். நிசாமிற்குக் கீழ்ப்பட்ட சேவையாளன் இந்த நவாப்பு; எனவே, சந்தாசாகிபும் முகமது அலியும் உரிமை கோரியது ஒரு சிற்றரசுக்கும் அன்று; மராபுரிமையான ஓர் ஆணிலத்துக்கும் அன்று—முகலாய வேத்தவைபால் அவர்கள் நாடிப் பெறமுயன்றது, வறிதே பெயர் மாத்திரையான ஒரு பதவியேயாகும். கருனாடகமீது நவாப்புச் செலுத்திய அதிகாரமானது எத்திறப்பட்ட தெனின்—எத்துணையாகப் பெயரளவிற்ருய தெனின்—கூறுதும். மராத்தியச் சேனபதி யொருவன் 1740 இல் நாட்டைப் பாழ்படுத்தி, ஆள்பதியான தோத்து அலியை எமனுலகிற் கனுப்பி, அவற்பின் ஆட்சிபெற் ருனிடம் ஒரு கோடி ரூபாய் திறையாகக் கறந்தான்: எனவே அன்வார் தீன் இறந்தபோது, சட்டப்படியான ஆட்சியுரிமையும்—அப்படியொன்று கருனாடகத்தில் இருந்ததாயின்—மறைந்தொழிந்தது.

அலிவர்த்தி கான் 1756 இல் இறந்தபோது, வங்கத்திலும் இத்தகைய நிலையே எழுந்தது. வெற்றிகரமாய்க் கலகம் விளைத்து, முன்னம் ஆட்சி செய்தோனை வீட்டியே அலிவர்த்திகான் பதிலரையனுகப் பதவிபெற்றவன். அவன் இறந்தபோது, உரிமைப் பிரச்சினை குடும்பச்சதியிற் சிக்குண்டது. அவனுடைய பேரப் பிள்ளையே இறுதியில் நவாப்பு நிசாமாக—பதிலிராயனுக—பதவிபெற்ருனெனினும், முகலாயப் பேரரசின் அங்கிகாரம் ஐயமின்றிப் பெற்ருனெனினும், எவருடைய பற்றுறுதிக்கும் அவன் பாத்தியமுடையானல்லன் என்பது காலப் போக்கிலே தெளிவாகியது. அவன் தானே விலக்கி வைத்த குடும்பத்தோரின் பற்றுறுதிக்கும் பாத்திரமானவனல்லன் என்பது இன்னும் தெளிவே. உண்மையை நோக்கின், ஐதராபாத்திலே அசாபு சாவும், கருனாடகத்திலே அன்வார் தீனும், வங்காளத்திலே அலிவர்த்திகானும் இறந்ததற் பின்னர் உருவாகிய அரசியல் நிலைமையில் அடிப்படையான காரணியொன்று பொதுவாயிருந்தது. **உத்தியோகப்பதவி யொன்றை, மரபுரிமைப்படியான அரசுரிமையாக** மாற்ற முயன்றதன் விளைவாக அரசியல் விசுவாசம் அற்றுவிட்டமையே அக்காரணியாகும். அவ்வாருக, மக்களின் இசைவைப் பெற்றதும், மக்களின் விசுவாசத்தைப் பெரும்பாலும் கவர்ந்ததுமான ஒழுங்கான அதிகாரத்தை ஒழித்தமையாற் குழப்பம் விளைந்தது. அன்றியும், ஆட்சியுரிமை கோரிய பல்வேறு அபேட்சகரிடையே குடிப்போர் மூள, வேத்தவையைச் சேர்ந்த பல்வேறு கட்சிகள் அவர்களை ஆரிக்க ஆட்சியதிகாரம் சின்னபின்னப்பட்டுச் சிதைந்தது. சந்தா சாகிபும் முகமது அலியும் ஆற்காட்டிலே போர் மூலந்தனர். தக்கணத்துப் பதிலிராயற் பதவியைப் பேரரசனுடைய அனுமதியோடே முசாபர் யங்கு பெற்ருனெனினும், நசீர் யங்கு அவன்றன் உரிமையை மறுத்தெழுந்தான்; வங்காளப் பதிலிராயற் பதவிக்குச் சிராசுத்தவுலா கோரிய உரிமையை கசிற்றி பேகம் எதிர்த்து நின்ருள். அவளுடைய மகன் சவுக்கத் யங்கு முன்பொரு காலம் பேரரசனுடைய பிரமாணத்தைப் பெற்றதும் உண்டு.

ஆட்சியுரிமை பெறுதற்குக் குடும்பங்களிடையே விளைந்த போட்டியை அடுத்துக் கொற்றவரிடையே மூண்ட போர்களின் பயனுய் ஆட்சியதிகாரம் தகர்ந்து விடவே, துறைகளிலே வந்து தங்கியிருந்த அன்னிய வர்த்தகக் கோட்டிகள் மிகத் தாராளமான கைம்மாறே மீப்பெருஞ் சலுகைகளோ அளிக்கக்கூடிய கட்சியின் சார்பாக உண்ணாட்டலுவல்களிலே தலையிடுதல் எளிதாயிற்று. மதியை விஞ்சிய கற்பனைத்திறன் படைத்த தூப்பிளேயானவன், ஐதராபாத்திலே சட்டப்படியான உரித்தாளி முசாபர் யங்கின் சார்பாகவும், ஆற்காட்டிலே சந்தா சாகிபின் சார்பாகவும் தலையிடுவதனுல் தனக்கெனப் பெரும் ஆக்கந் தேடும் வாய்ப்புக்கள் பற்பல இருப்பது கண்டான். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரும் தாம் தலையிட வேண்டிய காலம் வந்துவிட்டதெனச் சிந்தித்தார்கள். எனவே அவர்கள், கருனாடகச் சுபாவிற்குப் போட்டி அபேட்சகனுயிருந்த முகமது அலியின் சார்பாகத் தலையிடத் துணிந்தமை இயல்பேயாம். வரலாற்றிற் காணப்படுகின்ற கழிபெருங் கயவர்களில் இந்த முகமது அலியும் ஒருவன். அவன் தான் பட்ட பெருந்தொகைக் கடன் காரணமாகவும், கைவசப்படாரோக்கள் வாயிலாய்ப் பாராளுமன்ற அங்கத்தவர் அறுவரைத் தன் தயவில் வைத்திருந்து **பிரித்தானிய** அரசியலிலே தான் புகுத்திய ஊழன்முறைகள் காரணமாகவும், இறுதியில், நாவலம் படைத்த எட்மண்டு பேக்கின் கண்டனவுரைக்கு ஓர் இலக்காகியமை காரணமாகவும் அவன் விசித்திரமான மேன்மை பெற்றிருந்தான். ஆயின் இப்புகழ்க் காரணங்கள் ஒருபுறமாக, பிரித்தானியர் தலையீட்டை வரவழைத்து, அன்னியரின் உதவியோடு ஆள்பதியின் மரக்கதிரையை அரியணையாக மாற்றிய பெருமையைத் தேடிய முதல் இந்தியன் என்ற வகையாலும் அவன் நினைவிற்கொள்ளத்தக்கவன். இவ்வாறு தலையிட்டமையால் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி பெற்ற பலன் சிறிதே. ஆயினும், பிரான்சியப் பகைவர் பட்ட சங்கடங் கண்டு பிரித்தானியரின் நாட்டபிமானம் திருத்திப்பட்டதென் பதற்கையமில்லை. அன்றியும், எதிர்காலத்தே தம் வலிபெருகிய விடத்து, அரும் பெருஞ் சலுகைகள் தரத்தக்க ஒருவனது நட்பையும் அவர்கள் பெற்றனர்.

ஆயின் வங்காளத்திலே தலையிட்டமையால் கூடிய பயன் விளைந்தது எனலாம். அங்கே சிராசுத்தவுலாவுக்கு மாருகக் கசிற்றி பேகத்தையும் அவளுடைய இந்து வங்கியாளரையும் பிரித்தானியர் மெத்தச் சாவதானமாய் ஆதரித்திருந்தனர். எனவே, அப்பெருமகன் பதிலரையனுகப் பதவியேற்றபோது, ஆங்கிலர் அவன் கோபத்துக்கு இலக்காகியமை இயல்பேயாம். சட்ட விரோதமாய்க் கல்கத்தாவிலே அரணகங்கள் அமைத்த ஆங்கிலர், அவற்றை அழித்திடுமாறு பணிக்கப் பட்டனர். அவர்கள் மறுக்கவே, அவன் கல்கத்தாமேற் படையூர்ந்து சென்று வில்லியம் கோட்டையைத் தன் கைப்பற்றினன் (1756, யூன் 20). சிராசுத் தவுலாவுக்கு எதிராகக் கம்பெனியார் போரிட முடியாராய் இருந்தபோதிலும், அவற்கு மாருகச் சதிசெய்ய அறிந்திருந்தார்கள். அத்திருவிளையாட்டில் அவர்கள் தேர்ந்தவர்களன்றே! அவன் சட்டப்படியாக நவாப்பு நசீமாய் நியமனம் பெற்றவனல்லன்—அப்பட்டம் சவுக்கத் யங்கிற்கே உண்மையில் உரியதாகும்.

ஆதலின் அவற்கு மாறுக, மீர் யாபர் தலைமையில் முசிலிம் விழுமியோரின் கோட்டியொன்று இயங்கிற்று. இவற்றினும் முக்கியமான புதிய ஒரு சத்தி இப்போராட்டங்களிலே தோன்றத் தொடங்கிற்று.

தலையாய இந்தியக் கரைப்புலங்களிலே ஐரோப்பிய வர்த்தக நிலையங்கள் தாபிக்கப்பட்டதன் பின்னர், வலிமை மிக்க இந்திய முதலாளிமார் வர்க்க மொன்று வளர்ச்சி யடைந்திருந்தது. அன்னிய வர்த்தகரோடு நெருங்கிய தொடர்பு பூண்ட இம்முதலாளிமார் அன்னாரோடு வர்த்தகம் நடாத்திப் பெரும் இலாபம் பெற்றனர். இவ்வர்த்தகர் சூரத்திலே உயர்ச்சிபெற்று விளங்கினர்—கம்பெனியின் ஆகிப்பதிவேடுகள் இதற்குச் சான்று பகர்கின்றன. அரசியல் விடயங்களிலும் அவர்தம் செல்வாக்குப் பெருகியிருந்தது—1692 ஆம் ஆண்டிலுமே அவர்கள் கம்பெனியின் சார்பாக முகலாய அதிபரோடு இணக்கம் பேசியது உண்டு. சென்னையைச் சேர்ந்த ஆனந்தரங்கப் பிள்ளைமாரும் (தூப்பிளேயின் **துபாடி**), பச்சையப்ப முதலியார்மாரும் பேரதிகாரமும் பெருஞ் செல்வாக்கும் படைத்த மனிதரே. பதினெட்டாம் நூற்றாண்டின்போது, வங்க வர்த்தகம் வளர்ச்சியடைந்தமை காரணமாக, வட இந்திய வர்த்தகச் சமூகம் மூர்சிதாபாத்திலும் கல்கத்தாவிலும் சென்று திரண்டது. வங்கத்து மார்வாரிக் கோடீசுவரர்கள், பிற்றைக் காலச் சாங்காய் நகரிலே தழைத்தோங்கிய தனவந்தரை ஒத்திருந்தனர். நவாப்புமாரும் சேனாபதியரும் அவர்களே ஓரோவழி பிழிந்து பணங்கறந்தது உண்டேயாயினும், பொருளியல் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் உண்மையதிகாரம், சீரழிந்துவிட்ட முகலாய விழுமியோரின் கைதவறிப் **பனியா** முதலாளிமாரையே சென்றடைந்திருந்தது என்பதற் கையமில்லை. இப்பனியாக்கள் தர்பார் எனும் ஓலக்கத்திலே அவ்விழுமியோர் முன், வந்து வந்து இறைஞ்சிப் போவது வழக்கமேயானாலும், தம் பணப் பையைக் கவனமாகச் சுருக்கிட்டுப் பாதுகாத்தனர்.

பொருளாதார நலவுரிமைகளின் அடிப்படையிலே அன்னிய வர்த்தகரோடு நெருங்கிய தொடர்பு உடையாரும், முசிலிம் ஆட்சியை வாழையடி வாழையாக வெறுத்தொதுக்கிவந்தாருமான இவ்வகுப்பினர் வளர்ச்சியடைந்தமை, இந்திய வரலாற்றிலும் ஆசிய வரலாற்றிலும் ஆழ்ந்த செல்வாக்கை உடையதாயிற்று. ஆசியாவின் அரசியலமைப்பிலும் பொருளியலமைப்பிலும் பெருஞ்சிறப்புடைய ஒரு மாற்றத்தை அது குறித்தது. முன்னம் நாம் காட்டியவாங்கு, இந்தியாவின் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக்கொண்டதே. எனின், மண்ணின் விளைவையே அது அடிப்படையாகக் கொண்டிருந்தது. நாட்டின் கைத்தொழிலாக்கமெதுவும் மக்களின் நுகர்ச்சிக்கே பெரும்பாலும் உரியதாயிற்று. இத்தகைய பொருளாதார முறையினால், நிலம்படைத்த வகுப்பாரும், சாகீர்தார் எனப்பட்ட இராணுவ உயர்குடி வகுப்பாருமே அதிகாரம் பெற்றனர். பரம்பரையாக நிலவி வந்த இம்முறையானது, ஆழ்கடல் வணிகத்தை அடிப்படையாய்க் கொண்ட வர்த்தகப் பொருளாதாரத்தால், இருநூற்றாண்டு காலமாய்த் தாக்கப் பட்டு வந்தது. பதினாறும் நூற்றாண்டிலே, இவ்வணிகம் வாசனைத் திரவியங்களையே பெரும்பாலும் அடக்கிற்றாதலின், இந்தியத் தீபகற்பத்தின் பொரு

ளாதாரத்தைப் பாதித்திலது. ஆயின் பதினேழாம் நூற்றாண்டில், இந்திய வர்த்தகத்தின் உள்ளடக்கம் மாற்றமடைந்தது. இந்தியாவின் கைத்தொழிற் பொருள்களான கலிக்கோவும் மசிலினும் போன்றனவும், வர்த்தகப்பயிர்களான கடுகும் சணலும் போன்றனவும் வர்த்தகச் சிறப்புடைய பண்டங்களாயின. வளங் கொழிக்குங் கங்கையாற்றுப்பள்ளத்தாக்கின் விளைபொருளெல்லாம், மார்வாரி வணிகரின் கையூடாய் வங்கத்துறைகளைச் சென்றடைந்தன. வட இந்தியா வெங்கணும் அலுவலகங்கள் நிறுவியிருந்த இம்மார்வாரிகளே உண்மையதிகாரம் படைத்தோராயினர். மாகாணப்பதிலிராயரின் மன்றங்களிலே, தாங்கொடுக்கும் பணத்திற்குப் பெருவட்டி தந்த அதிபரையே ஆதரித்து, அவர்தம் முயற்சிக்கும் அவர்கள் உதவிசெய்தார்கள். குறிப்பாக வங்காளத்தில், குபேரன் என விதந் துரைக்கத்தக்க யகத் சேட்டு என்பான் தலைமையில், மார்வாரிகளின் ஆதிக்கம் பெரிதும் பல்கிற்று. அவனுடைய செல்வம் பற்றி இன்றும் மக்கள் கதை கதையாய்ப் பேசுவதுண்டு. யகத் சேட்டைச் சிராசுத்தவுலா பகிரங்கமாக எள்ளிநகை, அவனை அரண்மனையில் ஆட்சிப்புரட்டுச் செய்தற்காகக் கிழக்கிந்தியக் கம்பெனியோடு பேச்சுவார்த்தை தொடங்கி வஞ்சந்தீர்க்க முற்பட்டான்.

அதன் விளைவாக நேர்ந்த பிளாசிச் சம்பவம் உண்மையில் ஒரு சமரன்று—வெறும் வியாபாரமே. அதன் பயனுய், வங்கத்துத் தனவந்தர், யகத் சேட்டின் தலைமையிலே, கிழக்கிந்தியக் கம்பெனிக்கு நவாப்பை 'விற்றார்கள்'. இந்து வர்த்தகப் பெருமக்களோடும் அவர்தம் பிரித்தானிய நட்பாளரோடும் மறைவாக ஒத்துழைத்த சேனபதியர் ஆங்கிலர்க்கு மாறுகப் போரிட்டாரல்லர். அந்தத் துரோகியான மீர் யாபரும் தன் வஞ்சனைக்குக் கைம்மாறுக வங்க நவாப்புப் பதவி பெற்றான். பிளாசியால் வங்கத்தைக் கம்பெனி பெற்றதென்றேனும், கம்பெனி ஓர் இராணுவ அரசாய் மாறியதென்றேனுங் கொள்ளல் தவறாகும். எனின், இருபத்துநான்கு **பர்கானா எனப்பட்ட மாவட்டத்திற்குக் கம்பெனியைச்** சமீந்தாராக்கியதே அதன் பயனென்க. சுருங்கச் சொல்லின், வங்கத்து ஆள்பதியைக் கம்பெனியின் கைப்பாவையாக்கியது பிளாசி. எனவே, போராசை பிடித்த கம்பெனிச் சேவையாளர் அவனைப் பிழிந்து பணங்கறத்தலும், எல்லாவிதமான சலுகைகளையும் அவன்பாற் பெறுதலும் எளிதாயின. நவாப்பின் அரசாங்கம் கல்கத்தாவிலிருந்த கம்பெனியின் அதிகார வர்க்கத்தினரையே முற்றுகத் தழுவி நின்றதாதலின், சீர்கேடுற்றது. நவாப்புமார் அடிக்கொருகால் மாற்றப்பட்டனர். தில்லியிலிருந்த முகலாயப் பேரரசு இனியும் பொறுத்திருக்கலாகாதென வங்கத்து அரசியலிலே தலையிடத் துணிந்தது. ஆயின் அம்முயற்சி பயனளிக்கத் தவறிற்று. பக்சார்ச் சமரிலே தோல்விப்பட்ட பேரரசன் கம்பெனிக்குத் திவானியுரிமை வழங்குதல் செய்தான். வளமிக்க மாகாணங்களாகிய வங்கம், பீகார், ஓரிசா எனும் மூன்றிலும் வருமானத்தைப் பரிபாலிப்பதே இங்குத் திவானியென்பது. அக்கால், வங்கத்திவானியிலே கம்பெனி நடாத்திய திருவாகம் பற்றிய இழிவுகளையெல்லாம் இங்கு எடுத்துக் கூறவேண்டியதில்லை. சுருங்கக்கூறின், கட்டொழுங்குடைய அரசின் அதிகாரம் முழுவதும் பத்தாண்டுக்காலமாய்த் தனியோர் இலக்கைக் குறித்தே பிரயோகிக்கப்பட்டது—அதுவே கொள்ளை

யடித்தல். அக்கால் உருவாகிய அரசு ஒரு திருட்டு அரசே. கம்பெனியின் சேவை யாளனை இறிச்சாட்டு பெக்கர் என்பான் இலண்டனிலிருந்த தன் அதிபன் மார்க்கு 1769, மே 24 இல் வருமாறு எழுதினன் : 'கம்பெனியானது திவானி யுரிமை எய்தியகாலந்தொட்டு இந்நாட்டு மக்களின் நிலைமை முன்பு இருந்த தைக் காட்டிலும் மோசமாகி விட்டதென்பதை நினைக்க, ஆங்கிலேயன் எவனும் வேதனைப்படுவான். . . . . எதேச்சாதிகாரம் படைத்த வல்லாட்சியிலே தழைத் தோங்கியிருந்த இந்நன்னாடு நாசத்தின் எல்லையிலே இன்று நிற்கின்றது'. இந் நாட்டு நிலக்கிழாருட் பிரதானமானோர் சிலர், முக்கியமான ஒரு பத்திரஞ் சமர்ப்பித்து, கழகத்தோர்க்கு வருமாறு விண்ணப்பஞ் செய்தனர் : 'ஆங்கிலக் கனவான்மாரின் களஞ்சியசாலைகள் இங்கும் பலப்பல உண்டு. அவர்தம் இலிகிதர் கள் (குமாத்தாக்கள்) வங்க மாகாண மெங்கணும், எல்லாவிடத்தும், ஒவ்வொரு கிராமத்திலேயும் காணப்படுகின்றனர். எல்லாவகைத் தானியங்களிலும் துணி களிலும், இந்நாட்டில் உண்டாகின்ற பிற பண்டங்கள் அனைத்திலும் அவர்கள் வியாபாரஞ் செய்வர். இராயத்துக்களை நெருக்கித் தம்பணத்தைக் கொடுத்து, அடாத்தன முறையிலே பண்டங்களைக் குறைந்த விலைக்கு வாங்கி, நாட்டுக் குடி களையும் கடைக்காரரையும் கூடிய விலைக்கு அவற்றைப் பெற்றிடுமாறு கட்டாயப் படுத்துவர். . . . . **நாட்டிலே இன்று எஞ்சியிருப்பது யாதுமில்லை யெனலாம்'.**

ஈவிரக்கமின்றி மக்களைச் சுரண்டுவதையே தொழிலாகக் கொண்ட புதியவோர் அரசு இந்தியாவிலே தோன்றிவிட்டது. அவ்வரசு கடலிலே மறுக்கவொண்ணா ஆதிக்கம் பெற்றிருந்ததாதலின். கரைப்புலத்திலே தான் விரும்பிய எந்த இடத் திலும் தன் வலியைத் திரட்டிப் பிரயோகித்துத் திறன் பெற்றிருந்தது. ஆயினும், இந்தியாவிலே ஆட்சியதிகாரம் பெறுதற்குற்ற பெருவலிபடைத்த ஓர் அரசாங்கக் கம்பெனியானது வளர்ந்து விட்டதெனக் கருதல் இப்போது வழுவுடைத்தாகும். மைசூர் ஆட்சியை அபகரித்திருந்த ஐதர் அலி, 1769 இல், சென்னையிலமைந்துள்ள சென். யோட்சுக் கோட்டையின் வாயிலில் வைத்து, ஆங்கிலர்மீது தன் வலதாக அமைதியுடன்படிக்கை விதித்தான். வங்கத்திற் கிளைவு ஈட்டிய வெற்றியைப் பின்பற்றி பம்பாய் அரசாங்கம் மராத்தியரின் வலி யழிக்க முயன்றபோது, மானக்கேடான வட்கோன் ஒப்பந்தத்தை 1779 இல் அது ஏற்கவேண்டியதாயிற்று. 1772 இன் பின்னர் உவாறன் ஏத்திங்கு படிப்படி யாகக் கட்டியெழுப்பிய நிருவாகமானது, கிளைவு நிறுவிய திருட்டு அரசினைக் கட்டுக்கோப்புடைய வலிமைசான்ற அரசாட்சியாகச் சிறிது காலத்துள் மாற்றி யமைத்தது. மேலும், மராத்தியரின் ஆதிக்கத்தை விஞ்சிப் போக முற்படுதல் கம்பெனியின் வலிக்கு அப்பாற்பட்டதாகுமென்பதை உணர்ந்த ஏத்திங்சு, பூனை விலிருந்து மத்திய அரசிற்குத் திறையளித்து வந்தோராகிய நாகபுரியரசனையும் சிந்தியாவையும் மராத்தியத் தொடர்பினின்றும் பிரிக்க முற்பட்டான்.

ஏத்திங்சு, கோண்வாலிசு என்பாருடைய ஆட்சியிலே, இருபதாண்டுக்கால மாய் நிலவிய உறுதியான நிருவாகத்தாலும், பிரெஞ்சுத் தவபதி சபிரென் என்பான் பின்வாங்கிச் சென்றதன்பின்னர் பிரான்சியக் கடற்படை இந்து சமுத்திரத்தினின்றும் முற்றாக விலக்கப்பட்டமையாலும், பதினெட்டாம் நூற்

நூண்டின் இறுதியில், பிரித்தானியர் ஊன்கிய வலிமை பெற்றிருந்தனர். அது தீர்க்கமானதாய் இருந்திலதாயினும், இந்தியச் சிற்றரசுகளிடையே தலைப்பெருஞ் செல்வாக்குப் பெறுதற்குப் போதியதாய் இருந்தது. இவ்வழி, கருனுடகம் ஆங்கிலராட்சிக்கு உட்பட்டது; அயோத்தி நவாப்பு திறையளிக்குங் கடப்பாடு உடையனுயினன். பதினெட்டாம் நூற்நூண்டின் இறுதிக் கண்ணே, இந்தியாவிற் கம்பெனியை எதிர்த்து நின்ற அரசுகள் மூன்றே: அவைதாம் மேற்கிந்தியாவை யும் மத்திய இந்தியாவையும் அடக்கியிருந்த மராத்தியப் பேரரசும், தக்கணப் பீடபூமியை அடக்கியிருந்த ஐதராபாத்தின் நிசாமும், தெற்கிலே மைசூரை யாண்ட திப்பு சுலுத்தானுமென்க. மோனிங்தன் பிரபு (பின்னர் வெல்சிலி) ஆள்பதி நாயகனுக 1798 இல் வந்தற்றபோது இருந்த நிலைவரம் இதுவே. இந்தியாவிற் பிரித்தானியரின் வரலாற்றைத் துலங்கவைக்கும் பெருமக்கள் மிகச் சிலரே. ஆயினும் உவாறன் ஏத்திங்சும், வெல்சிலியும், தல்கவுசியும் பெரும் அர சறிஞராகக் கொள்ளத்தகும் தகைமையுடையவர். வீம்பும், விண்பகட்டும் எதிர்ப் பைப் பொறுக்காத்தன்மையும் ஓரோவழி அற்பத்தனமும் கபடும் எல்லாம் உடையனுயினும், வெல்சிலி தான் அடைய வேண்டிய இலக்கு யாதென்பதுபற்றி ஆதியிலிருந்தே தெளிந்த அறிவு உடையனுயிருந்தான். மராத்தியரின் வலி யழித்து, ஆங்கிலக் கம்பெனியின் ஆதிக்கத்தை இந்தியாவில் நாட்டுவதே அவ் விலக்காகும். இந்நோக்கம் கைகூடவேண்டுமாயின், தென்புறத்திருந்து மராத் தியர் தகயகத்தைத் தாக்குதற்காக மைசூரை ஆட்சிப்படுத்தல் அவசியம்; பிரான்சியனை இரேமண்டு பயிற்றியமைத்த வலிமை சான்ற படையால் வரத் தகும் அபாயத்தை விலக்குதற்காக, நிசாமை நடுநிலைப் படுத்தல் வேண்டும்; இவற்றினும் மேலாய், பூனுவிலே பிளவுச்சத்திகளுக்கு ஊக்கமளித்து, மராத்தி யரின் மத்தியவரசை நலித்தல் வேண்டும். திப்பு முன்னம் வீழ்த்திய மைசூர் நாட்டு இந்து வமிசத்தின் உதவியோடு போர் தொடுத்த வெல்சிலி, விரைவின் முடிந்த ஒரு போராட்டத்தின் பயனுய்த் திப்புவின் வழியழித்து, மராத்தியரின் தாயகத்தை எளிதிற் நுக்கும் வாய்ப்புப் பெற்நுன். ஐதராபாத்திலே உறுதியான ஆட்சிப் புரட்டின் மூலமாக, பிரான்சியர் தலைமையிலிருந்த நிசாமின் படைகள் குலைக்கப்பட்டதோடு, நிசாமும் பிரித்தானியரைச் சார்ந்த ஒரு சிற்றரசாயினன். இவ்வளவில், மராத்தியரை விஞ்சிப் போகும் படைப்பலம் தனக்குண்டென்பதை வெல்சிலி உணர்ந்தான். மராத்திய அரசிற்குப் பாத்தியங்கோரிய போலியுரித்தாளி யொருவனேடு வெல்சிலி பொருத்தனேயொன்று ஒப்பேற்றினன்—'வெறும் பத சோடு செய்த ஒரு பொருத்தனேயே' என வெல்சிலியின் சோதரனை ஆதர் வெல்சிலி (பின்னர் வெலிங்தன் கோமகன்) அது பற்றிக் கூறினன். அப்பால், பேசுவாவின் முறையான அதிகாரத்தை ஆதரிப்பான் போல நடித்த வெல்சிலி, மராத்திய அரசைத் தனது உதவி நட்புறவெனும் திட்டத்துள் அடக்க முயன் நுன். அப்பால் நிகழ்ந்த போரிலே, இராணுவ மேதையான ஆதர் வெல்சிலி மராத்தியரின் படைவலியைத் தக்கணத்திலே அசேய்க்களத்தில் (1803 இல்) நிர்மூலமாக்கினன்; இந்தியாவின் வடதிசைப் படைகளே இலேக்குப் பிரபு



இதயோசி, 1536—98.



இயாசு தொக்குகாவா, 1542—1616

இலசுவாரியில் விரட்டி யோட்டினன். இவ்வாறு பெருவெற்றிகள் ஈட்டிய போதும், திப்புவைத் 'தீர்த்துக் கட்டிய' வாறுகவோ, நிசாமை வென்றடக்கிய வாறுகவோ மராத்தியரையும் வென்றடிப்படுத்த முடியவில்லை. பாரத்பூரிலே இலேக்குப் பிரபு மீண்டும் மீண்டுந் தவறியமையாலும், கேணல் மொன்சனுடைய படைகளை ஒல்கார் மத்திய இந்தியாவிலே மேலுங் கீழுமாய் விரட்டியோட்டிய தனலும், பிரித்தானியர் போர்க்களத்திலே முதன்மைபெற்று விளங்கினரெனினும், இந்தியாவை வென்றடிப்படுத்தி வைத்திருத்தல் இன்னும் இயலாதென்பது தெளிவாயிற்று. ஆகவே சிறிது காலம் கைவிடப்பட்ட அம்மூயற்சி பன்னீராண்டு காலங் கழித்தே மீண்டும் தொடங்கப்பட்டது. அப்போது கம்பெனியானது ஏத்திங்சு மாக்குவிசின் ஆட்சியிலே மராத்தியர் வலியழித்து, பேசுவாவின் ஆணிலங்களைப் பம்பாய் இராசதானியோடு இணைத்து, இராசபுத்திரச் சிற்றரசுகளிலிருந்து சிந்தியாவைப் பிரித்து, அவ்வழி அவன் வலி குறைத்து, சத்திலெச்சுவரை கம்பெனியானது ஆட்சிபெற்றது.

ஆங்கிலக் கம்பெனியானது 1818 அளவிலே இந்தியாவில் 'மேலாண்மைபெற்ற வல்லரசு' ஆகிவிட்டது. தில்லிவரை கங்கையாற்றுப் பள்ளத்தாக்கும், தக்கணத்திலே மராத்தியரின் தாய்நாடும், அராபியக் கடலையடுத்த கரைப் பிரதேசமும், வங்கத்திலிருந்து தெற்குவரை ஆங்காங்குச் சிதறிக்கிடந்த கரையோரப் பகுதிகளுமெல்லாம் கம்பெனியின் நேரான ஆட்சியில் இருந்தன. பிரித்தானியரின் பாதுகாப்புப் பெற்ற கொற்றவரின் ஆட்சியிலேயே இந்தியாவின் உட்பிரதேசம் இருந்தது. அன்னருள் ஒருவனன சிந்தியா சுதந்திரம் படைத்த அரசனகவே அப்போது கருதப்பட்டான். இதற்கிடையிலே, சத்திலெச்சு நதிக்கு அப்பால், அஞ்சத்தகுஞ் சிக்கிய இராச்சியம் தோன்றி வளர்ந்தது. அது மேற்கே கைபர்க் கணவாய் வரையும், வடக்கே கில்கிற்றுவரையும், தெற்கே சிந்துவரையும் வியாபித்திருந்தது. வலிமிக்க இப்பேரரசு வளர்வதைக் கம்பெனி கருத்தூன்றிப் பார்த்து நின்றது—ஆயின் அதனை மீக்கொள்ளுந் துணிவு கம்பெனிக்கு இருந்திலது. இழிந்த ஆக்கிரமிப்புச் செயலாகக் கருதத்தக்க அபுகானியப் போராட்டத்திலே பட்ட அவலமான அனுபவங் காரணமாக, தம் படைப்பலம்பற்றி அளவிறந்த தன்னம்பிக்கை கொள்ளலாகா தென்பதைப் பிரித்தானியர் பயின்றிருந்தனர். ஆயினும், சுதந்திரமான ஓர் இந்திய இராச்சியம், 'புரையேறிய புண்போன்று' இருத்தலைப் பொறுக்கலாற்றாத வெல்சிலிப் பிரபு மராத்தியர் மாட்டுக் கையாண்ட அதே உபாயத்தைச் சீக்கியர் மாட்டும் பிரயோகித்தான். நிசாமின் சேனைகள் 1799 இற் குலைக்கப்பட்டவாறே, முதல் நடவடிக்கையாக சிந்தியாவின் பெரும்படை குலைக்கப்பட்டது. சீக்கியப் பகைவரைப் பின்புறத்திருந்து தாக்கும் நோக்கோடு, முன்னம் மைசூரை வென்றடிப்படுத்தியவாறே, சிந்து கைப்பற்றப்பட்டது. சீக்கியப் பேரரசிலே ஆற்றல் படைத்த ஆண்டகையும் படைத்தலைவனுமான இராசா குலாப் சிங்கு என்பானை வசப்படுத்தற்காகக் காசுமீரம் எனும் வளநன்னாடு அதற்கு அளிக்கப்பட்டது (பின்னர் அதற்கீடாகக் காசு கேட்டது கம்பெனி). இந்நடவடிக்கைகள் எல்லாம் முடிவுற்றபின்னர்,

சீக்கியர்மேற் போர் தொடுத்தற்கு ஒரு தலைக்கீடு கண்டு, இரத்தக்களரியான இரு பெருஞ் சமர் விளைத்தபின், கடைசி இந்திய இராச்சியமும் கைப்பற்றப் பட்டது (1848).

நூற்றாண்டுக் காலம் விட்டுவிட்டு நிகழ்ந்த போரின் பயனாய், இந்துநதி முதற் பிரமபுத்திராவரையும், இமயம் முதற் குமரிவரையும் பிரித்தானியர் தம் அதிகாரத்தைச் செவ்வனே நாட்டினர். காசுமீரமும் குவாலியரும் ஐதராபாத்தும் பரோடாவும் திருவாங்கூரும் இராசபுத்திர அரசுகளும் போன்ற இராச்சியங்கள் தொடர்ந்திருக்க விடப்பட்டனவேனும், அவை பிரித்தானியரின் அதிகாரத்தை எதிர்த்தற்கு வேண்டும் வலியில்லாத, ஒன்றோடொன்று தொடர்பில்லாத தனித்தனி இராச்சியங்களாய், ஆங்கிலரின் ஆதிக்கத்துக்குட்பட்ட சார் நாடுகளாய் மாற்றப்பட்டன. இந்தியாவில் மறுக்கவொண்ணு ஆதிக்கம் பெற்ற கம்பெனியானது தற்காலத்துக்குகந்த தனியொரு நிருவாகத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டது. எனினும், இந்திய மக்கள் வெற்றிகொள்ளப்பட்டராயினும், இன்னும் அடிப்படுத்தப்பட்டிலர். அன்னியரின் ஆட்சித் தளையை அகற்றுதற்காக அவர்கள் மராத்தியப் பேசுவாக்களின் தலைமையிலே, முகலாயப் பேரரசனுடைய அதிகாரத்தின் பெயரால், இறுதி முயற்சியாக ஒருமுறை கிளர்ந்தனர். அதுவே பிரித்தானிய வாலாற்றில் இந்தியக் கலகம் எனப்படும் (1857-8). பழைய ஆளும் வர்க்கத்தினரான மராத்தியரும் முகலாயரும் பிரித்தானியரை வெளியேற்றுதற்குச் செய்த உறுதியான கடைசி முயற்சி அதுவே. அம்முயற்சி தோல்விப்பட்டது. பதினெட்டு மாத காலமாய் விட்டுவிட்டு நிகழ்ந்த போராட்டின் பின்னர் அக்கலகம் வன்முறையாக அடக்கப்பட்டது. இந்தியப் பேரரசை உருவாக்கிய கிழக்கிந்தியக் கம்பெனி 1858 இலே முடிவுற்றது. அவ்வாண்டு முதலாய்ப் பிரித்தானிய அரசாங்கமே இந்தியாவை நேராக ஆளத்தொடங்கிற்று.

இந்தியப் பெருநிலத்திலே பிரித்தானியாட்சி, விஞ்சுவார் யாருமின்றி உறுதியாக நிலையுன்றியதும், அயலேயுள்ள அரசுகளிடத்து அது கொண்ட போரசு வேட்கை வெளிப்படுவதாயிற்று. சோழவரசு தவிர்ந்த பிற இந்தியப் பேரரசுகள் முன்னை நாளிற் கடலாதிக்கம் பெற்றிராமையாற் கடல்கடந்து பேரரசமைக்கத் துணிந்ததில்லை. ஆயின் பிரித்தானியரைப் பொறுத்தவரை, நிலைமை வேறுபட்டிருந்தது. அன்றியும், நெப்போலியப் போர்கள் காரணமாக இடச்சுக் குடியரசு பிரான்சியரோடு நட்புறவு பூண வேண்டியேற்பட்டபோது, பிரித்தானிய அரசாங்கம் கிழக்குப்புலத்திலே ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தல் எளிதாயிற்று. பிரித்தனுடைய நலனுக்காக—இந்தியக் குடிகளுக்குக் குந்தகம் விளைத்தே—கிழக்குலகில் நாடுவென்றடிப்படுத்தும் பாதையிற் சென்றது பிரித்தானிய அரசு. ஆதியில் 1795 இலே பிடிக்கப்பட்ட மலாக்கா 1807 இல் மீண்டும் கைப்பற்றப்பட்டது. இடச்சுக்காரரினின்றுங் கைப்பற்றப்பட்டயாவா பின்னர் வியன்னாப் பொருத்தனைப்போது திருப்பிக்கொடுக்கப்பட்டது. இவையெலாந் தொடக்க முயற்சிகளே. மராத்திய வல்லரசை இறுதியாக வென்றடக்கிய பின்னரே, 1818 ஆம் ஆண்டு முதலாக பிரித்தானிய அதிகார வர்க்கம் பேரரசு அமைக்கும் பாதையில் முன்னேறத் தலைப்பட்டது. யோகூர்ச் சுலுத்தா

னிடமிருந்து, கிழக்கிந்தியக் கம்பெனியின் சார்பாகச் சிங்கப்பூரை[1] அபகரிக்கு மாறு ஏத்திங்சு பிரபு இராபிள்சைத் தூண்டினான். அதன் நோக்கம் வருமாறு விளக்கப்பட்டது: 'எமது நீலயம் மலாக்காத் தொடுகடலை அளாவி நின்று, எம்முடைய சீனக்கப்பல்கள் எக்காலத்திலும் எத்தகு நீலையிலும் சென்று வருதற்கு வழிசெய்கின்றது.....தேசப்படத்தைப் பார்த்தால் இது நன்கு தெரியும். மேற்கிலே மோல்ற்ரு இருப்பது போன்று, கிழக்கிலே சிங்கப்பூர் கேந்திர நிலையமாக விளங்கலாம்'.

இந்தியாவிற்கு அருகாமையிற் பர்மா இருந்தமையாலே, அதன் அலுவல்களிலே தலையிடுதற்குப் பிரித்தானியர்க்குப் போதிய நியாயமிருந்தது. பர்மியர் 1748 இல் அரகன் தேயத்தைக் கைப்பற்றிய நாள் தொட்டு, எல்லைப்புறச் சம்பவங்கள் ஓரோவொருகால் நிகழ்ந்து வந்தன. இத்தகைய சம்பவமொன்று 1823 இல் நிகழ்ந்தபோது, இருதிறத்தார்க்குமிடையே 'பலப்பரீட்சை' ஏற்படுதற்குத் தருணம் நேர்ந்தது. பர்மாவைத் தரைப்புறத்திருந்து தாக்குதற்குப் பிரித்தானியர் செய்த முயற்சிகள் தோல்விப்பட்டன. பிரசித்தி பெற்ற பர்மியச் சேனபதி பண்டுலா என்பான் கம்பெனியின் படைகளுக்கெதிராய்ச் சில வெற்றியீட்டினன். ஆயினும் பிரித்தானியர் மீண்டும் படையெடுத்துச் சென்று இரங்கூனை வென்றடிப்படுத்தி, ஆவாவை நோக்கி முன்னேறிச் சென்றனர். அக்கால் ஒப்பேறிய அமைதிப் பொருத்தனை வாயிலாக, பர்மிய மன்னன் அரக்கனையும் தெனசரீமையும் ஆங்கிலர்க்களித்து, நட்ட ஈடாகப் பெருந்தொகை அளித்தான். ஆயின் கம்பெனியின் நாட்டாசை தணிந்திலது. இருபதாண்டுகளுக்குப் பின்னர் இன்னுமோர் அற்பமான தலைக்கீடு அகப்பட்டது. பர்மியத்துறைகளிலே தான் பட்ட அவமானத்துக்கும், தன்மேல் விதிக்கப்பட்ட தண்டப் பணத்துக்கும் நட்ட ஈடாக ஆங்கிலக் கப்பலொன்றின் தளபதியான உஷியி என்பான் 9,200 ரூபாய் கோரினன். அக்கால் ஆள்பதியாயிருந்த தல்கவுசிப் பிரபு இவ்விடயம்பற்றி ஆவா வேத்தவையோடு தொடர்புகொண்டு, 920 பவுண் பற்றிய இக்கோரிக்கையை வற்புறுத்துமுகமாக, ஆறுகலங் கொண்ட கடற் படையொன்றினைக் கொமடோர் இலம்பேட்டு என்பான் தலைமையில் இரங்கூனுக்கு அனுப்பிவைத்தான். தல்கவுசியே கூறியவாங்கு 'இணக்கப் பேச்சுக்கு

---

1. சிங்கப்பூரே குடியிருப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை, பெரும்பான்மையும் தற்செயலாகவே நிகழ்ந்ததெனலாம். எத்திங்சுப்பிரபு இராபிள்சுக்கு விடுத்த பணிப்புரையின் பிற்குறிப்பில், சுமாத்திராக் கரையை இடச்சுக்காரர் எற்கவே அடிப்படுத்தியிருந்தாராயின், யோகூரை அதற்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கலாமே என்றவாறான ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டுளது. அவ்வகையில் இராபிள்சு முயற்சி செய்தற்கு உதவியாகச் சுலுத்தானுக்கு முகமன் கூறும் ஒரு கடிதத்தையும் எத்திங்சு அனுப்பியிருந்தான். இராபிள்சு தனக்கு நண்பனான மாசு டென்னுக்கு எழுதும்போது, "எனது கவனம் பெரும்பாலும் யோகூருக்கே செல்கின்றது. எனது அடுத்தகடிதம் பழைய நகராகிய சிங்கபுரமிருந்த தலத்திலிருந்தே எழுதப்பட்டால், அது வியப்பாகாது".

கல்கத்தா அதிகாரவர்க்கத்துக்கு எழுதிய குறிப்புரையில் அவன் வருமாறு கூறினான்: "மலாக்காத் தொடுகடல் வழியாக நடைபெறும் எமது சீனவர்த்தகமும், இரியோத் தொடுகடலூடாகச் செல்லும் சுதேசிக் கப்பல்கள் யாவும், அதனைக் கண்டு கடந்தே செல்ல வேண்டுமாதலின், அதுவே இரியோவைக் காட்டிலும் தொடுகடலிற் கேந்திரமான நிலை வகிக்கின்றது."

ஒவ்வாக, திக்கக்குமியல்பினை' அந்தக் கொமடோர், பர்மிய மன்னனின் கொடியைத் தாங்கிய கப்பலொன்றினைப் பிடித்தமையாலே காரியம் முற்றிக் கைகடந்து விட்டது. இரண்டாம் பர்மியப் போருக்கு இட்டுச்சென்ற சம்பவங்களை இறிச்சாட்டு கொப்டன் கூறிய மொழிகளால் இங்கு எடுத்துரைத்தாலே நலம்:

'ஆயிரம் பவுனிலும் குறைந்த ஒரு தொகைக்காகத் தல்கவுசிப் பிரபு பர்மியரிடம் ஒரு கோரிக்கை விடுகிறான். அடுத்து, எங்கள் உத்தியோகத்தர்க்கு இழைத்த அவமானத்தைத் துடைத்தற்காக இரங்கூன் ஆள்பதி மன்னிப்புக் கேட்டல் வேண்டுமெனுங் கோரிக்கையும் விடுக்கப்படுகிறது. பின்னர் நட்டஈடாக இலட்சம் பவுண் அளிப்பதோடு, அரசனுடைய அமைச்சன்மார் மன்னிப்புக் கேட்டல் வேண்டுமெனவும் வற்புறுத்தப்படுகிறது'. அப்பால், நட்டஈடாகப் பணம் பெறுங் கோரிக்கையும், மன்னிப்புக் கதையும் நின்றுவிட, பர்மிய நாடு மேற் படையெடுக்கப்படுகிறது. 'நட்டஈடாகவும் இழப்பீடாகவும்' பெருமாகாணத்தை எற்றற்கு விருப்பந் தெரிவித்த அதே வேளையில், அம்மாகாணத்தை இந்தியப் பேரரசோடு இணைப்பதாற் கழிபெருங்கேடு விளையுமென நெடுங்குறிப்பு எழுதுதற்கும் அக்கனந்தங்கிய பிரபு தவறியதில்லை. எமது நிதிநிலைக்கு நாசம் விளைக்கக்கூடிய ஒரு மாகாணத்தை வலிந்திணைக்காமலே ஆயிரம் பவுண் கடனை அறவிடக்கூடிய ஒரு ஆள்பதி தேவையென்று 'நைம்சு'ப் பத்திரிகையிலே விளம்பரஞ் செய்யப்படாதா[1]?

ஆண்மை மிக்கோனைய தல்கவுசிப் பிரபு ஒரு பிரசித்தம் வாயிலாய்ப் பெருமாகாணத்தைக் கைப்பற்றியதோடு, பர்மியப் போர் ஆவாரமின்றி முடிவுற்றது. பர்மிய மன்னனுடு எத்தகைய பொருத்தனையும் ஒப்பேற்றப்படவில்லை; போர் நிறுத்தமும் முறைமையாக நிறைவேற்றப்படவில்லை. கோடிக்கணக்கான செலவை இந்தியத் திறைசேரி பொறுக்கவேண்டியதாய் இருந்ததெனும் கடன் பணமாகிய 920 பவுணும் மறக்கப்பட்டது. அன்றியும் பர்மியரை அத்தோடு விட்டுவிடும் எண்ணம் பிரித்தனுக்கு இல்லையெனவும் எச்சரிக்கை செய்யப்பட்டது. தல்கவுசி விடுத்த பிரசித்தத்திலே, எதிர்காலத்தே நிகழப்போவதற்குச் சூசகமாய் அமைந்த வாசகமொன்றிருந்தது. ஆக்கிரமிப்பிலே பர்மியர் தொடர்ந்தான்றி நிற்பாராயின், 'பர்மிய அரசு அடியோடு வீழ்த்தப்படுவதும், மன்னனும் அவன்றன் குடிகளும் நாடுகடத்தப்பட்டு நாசமடைவதும் திண்ணம்'. ஆட்டுக்குட்டி தொடர்ந்து ஆக்கிரமிப்புச் செய்ய, மூப்பத்துமூன்று ஆண்டுகளுக்குப்

(ii)

பின்னர், ஓநாயின் கூற்று நிறைவேறியது. பர்மிய அரசு வீழ்ந்தது: மன்னனும் அவன்றன் குடிகளும் நாடுகடத்தப்பட்டனர். ஆங்காங்குச் சிதறிக்கிடந்த தாபனங்களையும் கோட்டைகளையும், மத்திய தானமாகிய யக்கார்த்தாவிலிருந்து[2] நிருவாகஞ் செய்வதோடு இடச்சுக்காரரின் ஆட்சி இந்தோனேசியாவில் நின்றுவிட்டது. இந்நிலைமை வான் இமோவ் காலம்வரை (1743-50) நீடித்தது. மாத்தறம் என்னும் பெரும் அரசும், அற்சே, தேணுட்டியெனும் சுலுத்தானரசு

1. இறிச்சாட்டு கொப்டன் ; Political Writings of Ccbden. இலண்டன், 1867, பாகம் II (ப. 25–106).

2. இது பின்னர் " பற்றேவியா " என வான் கூலல் மாற்றப்பட்டது.

களும், பிறபல சிற்றரசுகளும் பெயரளவிலேனும் சுதந்திரமாய் இருந்தன. எனினும், உண்ணாட்டுக் குழப்பங்கள் காரணமாகவும், பொருளாதாரச் சக்திகளின் தாக்கங் காரணமாகவும் அவை பெரிதும் நலிவுற்றிருந்தன. பாலித்தீவிலும் இலம்போக்கிலும் இடச்சுச் செல்வாக்கு இன்னும் பரவிற்றிலது. சுமாத்திராவிலே பலம்பாங்கு, யம்பி எனுஞ் சுலுத்தானரசுகள் பற்றேவியாவிற்குத் திறையளிக்கும் நாடுகளாயிருந்தன. வாசனைத் திரவியங்களை ஏற்றுமதி செய்யும் முற்றுரிமை இடச்சுக் கம்பெனிக்கே இருந்ததாயினும், சுமாத்திராவில் எஞ்சிய பாகம் அரசியற் சுதந்திரம் உடையதாயிருந்தது. மிகப் பெருந் தீவாகிய போணியோவை இடச்சு அதிகாரம் அணுகியதில்லை. ஆயின் அத்தீவின் தென்கிழக்கு மூலையிலுள்ள பஞ்சமசின் சுலுத்தானெடி 1756 அளவிலேயே கம்பெனி அமைவான ஒரு பொருத்தனையை ஒப்பேற்றியது.

'மறைமுகமான ஆட்சி' எத்துணை சிக்கனமானது என்பதையும், தொல்லையின்றி நாட்டைச் சுரண்டிவாழ்தற்கு அது எத்துணை வாய்ப்பானது என்பதையும் இடச்சுக்காரர் முன்னமே உணர்ந்திருந்தனர். வர்த்தகமானது கம்பெனியின் முற்றுரிமையாக இருக்குந்தனையும், சுலுத்தான்மார் தம்மிடையே பூசல் விளைக்கவும், தங்குடிகளை அடக்கி யொடுக்கவும், தாம் விரும்பியவாறு நடந்து கொள்ளவும் விடப்பட்டனர். சுலுத்தான்மாரின் அதிகாரமெனுங் குடைக்கீழ், தீவின் மூலவளங்களை யெல்லாம் இடச்சுக்காரர் சுயாதீனமாகச் சுரண்டுவாராயினர். ஆயின் இத்தகைய மறைமுக ஆட்சியில் எப்போதும் தப்பாது நிகழ்வது போன்று அவ்வாட்சிக்குக் கருவிகளாயிருந்த அரசுகள் விரைவிற் சிதைவுறத் தொடங்கின. எனவே அவற்றைப் புரக்கும் வல்லரசு அவற்றின் அலுவல்களிலே நேராகத் தலையிட்டு அவற்றை நிலைபெறுத்தல் அவசியமாயிற்று. இவ்வழி, மாத்தறத்திலே மூடியாட்சியின் அதிகாரத்தைத் தளரவிடாது உறுதிப்படுத்தல், 1705 ஆம் ஆண்டு தொட்டு கம்பெனியின் திட்டமான பூட்கையாயிற்று. கம்பெனியார்க்கு வேண்டும் அரிசியனைத்தையும், **அவர் குறித்த விலைக்கே கொடுத்தல் வேண்டும்** என்பதே, இடச்சுக்காரரின் உதவிக்கீடாக விதிக்கப்பட்ட நிபந்தனையாயிற்று.

அரசியற் சுதந்திரமும் பொருளாதார அடிமைநிலையும் ஒருங்கு இடம்பெற்ற, இயற்கைக் கொவ்வா இம்முறையின் காரணமாக, அரசாட்சி தகர்ந்து வீழ்ந்தது. பாலித்தீவின் முதல்வரோடு மாத்தறம் ஓயாது போர் விளைத்ததோடு, இராசகுடும்பத்தைச் சேர்ந்தோரும் திறையளக்கும் பிறகொற்றவரும் விளைத்த கலகங்களுக்கெதிராகவும் போராட வேண்டியதாயிற்று. இடச்சுக்காரரின் கோரிக்கைகள் மென்மேலும் பெருகி வர, அக்கோரிக்கைகளைத் தீர்க்குமுகமாய் மாத்தறம் அரசு, திறையளக்குங் கொற்றவரைச் சுரண்டத் தலைப்பட, அவர்கள் பொறுமையிழந்து கிளர்ந்ததாலேயே கலகங்கள் மூளத்தொடங்கின. இத்தகைய நிலைவரங் காரணமாக, நட்பாளராயிருந்த மன்னவர்க்குச் சார்பாகவும், மற்று, இடச்சுப் பூட்டைக்குப் பணியாதிருந்த பிறமன்னவர்க்கு மாறுகவும் இடச்சுக்காரர் ஓயாது தலையிட வேண்டியவராயினர். இவ்வாறுக, அபே இசெயினல் என்பான் கூறிப்போந்த பிரபலமான வாசகத்திற்கமைய இடச்சுக்காரர்,

மைந்தற்கு மாமுகத் தந்தைக்கும், தந்தைக்கு மாமுக மைந்தற்கும் படைத் துணையளித்தனர். வலியார்க்கு மாமுக மெலியாரின் கோரிக்கைகளையும், மெலி யார்க்கு மாமுக வலியாரின் கோரிக்கைகளையும், அவ்வப்போது நிலவிய சூழ் நிலைக்கேற்ப அவர்கள் ஆதரிப்பாராயினர். ஒருபோது மன்னன் பக்கலும், மறு போது சிற்றரசர் பக்கலும் அன்னர் சார்ந்து நின்றனர்'.

சுலுத்தானரசுகளின் அரசியற் சுதந்திரத்தை வென்றெடுக்கி, நேராக தாமே கைப்பற்றும் பூட்கையினை வான் இமோவ் என்பான், 1743 இலே தொடக்கி வைத்தான். அவ்வாண்டிலே, யாவாவின் வடபாலுள்ள கரையோர மாவட்டங் கள் அனைத்தையும், கடற்றுறைகள் யாவற்றிலும் தனியாட்சியையும், பலம்பங் கன் இராச்சியங்களையும் கம்பெனியானது அபகரித்துக் கொண்டது. அடுத்துக் கம்பெனி மாத்தறம்மீது தன் கவனத்தைச் செலுத்தியது. ஆங்கு உண்ணாட்டுப் போரைத் தூண்டிவிட்ட கம்பெனி, கலகம் விளைத்த உறவினர்க்கு மாமுக உண்மையுரித்தாளியை ஆதரித்துவிட்டு, இறுதியில் அவ்வாசைப் பிரிவினை செய் தது. புதிய ஆட்சியாளர் பட்டத்தளவிலேயே மன்னராயிருந்தனர். அவர்தம் அவைக்கு நியமிக்கப்பட்ட வதிவாளரே நிருவாகத்தைக் கொண்டு நடாத்தினர். கம்பெனி தானே நேராக ஆண்டபகுதி தவிர்ந்த யாவா முழுவதும் ஐந்து சிறு அரசுகளாகப் பிரிக்கப்பட்டது—அவைதாம் பந்தகம், செரிபன், யொக்ய கார்த்தா, சுரகார்த்தா, மங்கு நகரம் என்பனவாகும். பந்தம் ஒன்றிலேயே சுதந் திர உணர்ச்சி இன்னும் நிலைத்து நின்றது. அங்கே, இரத்து சாரியா எனும் பெய ருடைய வித்தைப் பெண்மணி சுலுத்தான்மீது பெருஞ் செல்வாக்கு உடைய வளாயிருந்தனள். ஆயின் அவட்கெதிராகக் கலகம் மூண்டது. உள்ளூர் மக்க ளிடையே இன்னும் பரவிநின்ற இந்துமதப்பற்றைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய சமயகுரவன் கியாய் தாபா என்பானே அக்கலகத்திற்குத் தலைமைதாங்கினன். சுலுத்தானுடைய அதிகாரத்துக்கு மாமுக இங்கு இடச்சுக் காரர் தலையிட்டனர். விரைவில் அவர்கள் முதியோனுகிய சுலுத்தானைப் பதவி யிறக்கி, தமக்குப் பணிந்தொழுகக்கூடிய ஒருவனைப் பதவிக்கமர்த்தினர்.

இவ்வாமுக யாவாவிலே இடச்சுக்காரர் தமது நிலையினை 1760 ஆம் ஆண்டள வில் உறுதிப்படுத்தினர். ஆயின் சுமாத்திராவிலும், 'வெளிப்' பிரதேசங்களி லும், கம்பெனியாளர் வர்த்தகத்திலேயே கருத்தூன்றிநின்றனர். மேற்குச் சுமாத்திராவில், அற்சேச் சுலுத்தானரசு மிக இடர்ப்பட்டே தனியோர் அர சாகத் தனது நிலைபேணிற்று. 'வெளிப்' பிரதேசங்களிலே இடச்சுக்காரரின் அரசியலதிகாரம் பெயரளவிலேயே இன்னும் இருந்தது. ஆங்கு வர்த்தக முற் றுரிமையினையே கம்பெனி வற்புறுத்திற்று. ஆயின், இடச்சுக்காரரின் ஆதிக்கத் தில் மத்திய அரசொன்று உருவாகியபின்னர், அயலேயுள்ள நாடுகளிலும் படிப் படியாக அவ்வாதிக்கம் பரவுதல் காலப்போக்கில் நிகழவேண்டியதொன்றே. அவ்வாறே அடுத்த சில பத்தாண்டுக் காலத்துள், இடச்சுக்காரர் இந்தோனே சிய வர்த்தகத்தில் முற்றுரிமை பெற்றதோடு, தீவுப்பிரதேசங்களிலே செவ்வை யான ஆதிக்கமும் பெற்றனர்.

இப்பெருமாற்றத்தை விரைவுபடுத்திப் பூரணமாக்கியது பெரும்பான்மையும் இடச்சுக்காரரின் நாட்டாசை யற்றிப் பிரித்தானியரின் தலையீடேயாகும். பிரான்சு காட்டிய பதையிற் சென்ற நெதலாந்து 1795 இற் புரட்சியையே சார்ந்து நின்றது. குடியேற்ற நாடுகளிலே புரட்சித் தத்துவங்கள் பரவுவதுபற்றிப் பற்றேவிய அதிகாரவர்க்கம் அச்சங்கொண்டது. தாய்நாட்டிலே சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம்—ஆயின் குடியேற்ற நாடுகளிலே சுரண்டி வாழும் கொள்கை—இதுவே புரட்சிவயப்பட்ட ஒல்லாந்து நாட்டின் சுலோகமாயிற்று. ஆயின் புரட்சிகளைக் கட்டுப்படுத்தல் எளிதல்லவே! கம்பெனியின் பட்டயம் 1798 இல் ஒழிக்கப்பட, இந்தோனேசியா நெதலாந்தரசின் குடியேற்றமாயது. ஒல்லாந்தில் ஆட்சி செலுத்திய அரசாங்கம் புரட்சித் தத்துவங்களைத் தழுவியது போற் காணப்பட்டதாயினும், 'கிழக்கிந்திய உடைமைகளின் பாதுகாப்பானது, இப்போதுள்ளவாங்கு அவற்றின் பணிவுநிலையிலேயே தங்கியிருக்குந்தனைக்கும், சுதந்திரமும் சமத்துவமும் ஆகிய கோட்பாடுகளை அந்நாடுகளிற் புகுத்தலும் பிரயோகித்தலும் ஒல்லாவாம்' எனக் கூறிற்று. அடிமை முறையை ஒழித்தற்கும் அவ்வரசாங்கம் சித்தமாயிருந்திலது. 'பொதுநாகரிகம் உயர்ந்து, அவ்வழி, அவர்தம் நிலைமை அபிவிருத்தியடையும்வரை' அச்சீர்திருத்தம் பொறுத்தல் வேண்டுமெனும் பசப்புவார்த்தையொடு அது திருத்தியடைந்திருந்தது.

இடச்சுக்காரரின் ஆட்சிமுறைபற்றிப் பேசும்போது, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திப் பேசுதல் சற்றுக் கடினமே. இடச்சு வரலாற்றறிஞன் ஒருவன் கூறியவாங்கு, "அழிவு, எதிர்ப்பு, பழிக்குப்பழிவாங்கல் என்றிவையே மொலுக்காசுத் தீவுகளில் நடந்த துன்பக்கதையாகும்". இடச்சுக்காரர்க்குச் சார்பானவனும், குடியேற்றவாட்சிக்குப் பரிந்து பேசுவோனுமான ஆங்கில எழுத்தாளன், பேணிவல் என்பான், இடச்சுக்காரரின் ஆட்சிமுறையால் நேர்ந்த விளைவினை வருமாறு வருணிப்பன்: 'உலகம் முழுவதும் நுகர்தற்கு மேலதிகமாக அம்போய்ஞ கராம்பை விளைவித்தல் கூடும். ஆதலின் திடோர்க்கு மாருகத் தொடர்ந்து போர்செய்யுமாறு தேஞட்டி மன்னனை இடச்சுக்காரர் தூண்டிவிட்டனர்—அவ்வழி காராம்பைப் பயிரிடுவதிலிருந்து மக்கள் கவனத்தைப் பிறவழிச் செலுத்துவதே இடச்சுக்காரர் நோக்கமாகும். பண்டாவிலே உழுவோர் சுயாதீனமாகப் பயிர் செய்தற்குப் பதிலாக, (இடச்சுக்காரர்) அடிமைமுறையை வலிந்து புகுத்தினர். இன்னும், யாவாவிலே அரிசி விளையோகத்தைத் தூண்டிப் பதன்மூலம், சோற்றுண்டி விடுத்துப் போசனை குறைந்த சவ்வரிசியுணவையே உட்கொள்ளுமாறு மக்களை நெருக்கினர். இவ்வுணவாற் பலர் இறந்துபட, மென்மேலும் அடிமைகள் தேவைப்பட்டனர். அரசன் போன்ற தூரதேயங்களிலிருந்தும் அடிமைகள் இறக்குமதி செய்யப்பட்டாராயினும், இந்தோனேசியத் தீவுக் கூட்டமே அடிமைகள் பிடித்தற்குப் பிரதான களமாயிருந்தது. இனி, உணவுப்பொருள் உற்பத்தி செய்யாத் தீவினர், அடிமைகள் கொடுத்து அரிசி வாங்குதற்காக, அயலேயுள்ள தீவுகளிலே அடிமைவேட்டையாடினர்'.

பற்றேவியாவைத் தாபித்தோனை வான் கூன் என்பான், அக்கால இடச்சு எழுத்தாளர் கூறியது போன்று 'பாதகமான கொலை நெறியிற் சென்றனதலின், ஏழைமக்களின் செங்குருதி பழிக்குப்பழிவாங்க ஓலமிடுகிறது.[1]' இடச்சுக்காரர் பிற்றைநாளில் உருவாக்கிய பூட்கைக்கு அந்த வான் கூனே அடிப்படைத் தத்துவம் வகுத்தோனவன். 'ஐரோப்பாவில் ஒருவன் தன் ஆடு மாடுகளை யாது செய்யினும் செய்யலாமன்றே? அவ்வாறே இங்கும் ஆண்டான் தன் ஆட்களைத் தான் நினைந்தாங்கு நடத்தலாம். நெதலாந்திற் பகுத்தறிவற்ற விலங்குகள் போன்றே, இங்கெலாம், மக்களும் அவர்தம் உடைமைகளும் ஆண்டானுடைய சொத்துரிமையாகும். அரசன் இட்டதே இங்குச் சட்டம். எவன் வலியிற் பெரியனை அவனே அரசன்'.

இத்தகைய வாய்ப்பான கோட்பாட்டைக் கைக்கொண்ட இடச்சுக்காரர், யாவா மக்களிடத்து அறச்சார்பான கடப்பாடு யாதும் உடையார்போல நடத்தற்கும் இடமிருந்திலது. அறமும் மறமும் நோக்காது, எவ்வாற்றானும் பெரிலாபம் பெறுவதே இந்தியத் தீவுகளில் அவர்தம் குறிக்கோள் என அவர்கள் வெளிப்படையாகக் கூறினர். 'மேற்கொண்ட பணி தடைப்பட்டுவிட்டதே' எனுங் கூக்குரல் பிற்றை நாளிலே தோன்றிய ஒரு பாசாங்கேயாம். வெவ்வேறு காலங்களிலே, சருவதேச நிகழ்ச்சிகளின் தாக்கங் காரணமாய் உந்தப்படும்வரை, இடச்சுக்காரர் குடிமக்களின் நலவுரிமைகள் பற்றிச் சிந்தித்தாரல்லர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை, வாசனைத்திரவிய வர்த்தகமே ஊங்கிய இலாபம் அளித்தது. பதினேழும் பதினேழாம் நூற்றாண்டுகளில், காரம்பு வர்த்தகத்தால் வந்த இலாபம் அதிசயமானது. மொலுக்காசிலிருந்து காரம்பு ஏற்றிச் சென்ற மகேலனது கப்பல், **விக்டோறியா**, 2,500 சதவித இலாபம் வைத்து அதனை விற்றது. ஆயின் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கமளவிலே, இப்பெரும் இலாபம் அருகத்தொடங்கிற்று. இடச்சுக்காரர் தமது முற்றுரிமையைக் கடுமையாகக் கடைப்பிடித்தமையால், மற்றை நாடுகள் பிற வழியின்றி இந்தியாவினும் பிறவிடங்களினும் காரம்பு பயிர்செய்யத் தொடங்கின. அப்பால், கோப்பிக்கு ஐரோப்பாவிலே பெரு மதிப்பு உண்டென்பதும், அவ்வர்த்தகத்தாற் கொழுத்த இலாபம் பெறலாமென்பதும் புலப்பட்டன. ஐரோப்பாவிற் கோப்பியானது 1660 அளவிற் புகுத்தப்பட்டு, மக்கள் நயக்கும் பானமாயது. ஐரோப்பாவில் அதற்கிருந்த 'மானம்' அளப்பரிது போலத் தோன்றியது. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கமளவிலே, தென்னிந்தியாவினுள்ள மலபார் நாட்டிலிருந்து யாவாவிற்குக் கோப்பிச்செடி கொண்டு செல்லப்பட்டது. சிலவாண்டு காலத்துள் அது யாவாத் தீவில் ஒரு பெரும் விளைபொருளாயது. உலக சந்தைகளிலே நல்ல விலையிருந்ததாதலின், தீவைச் சேர்ந்த வேளாண் மக்களின் சித்துவத்தை அப்பயிர் மீண்டும் சீர்ப்படுத்தியிருக்கும். ஆயின் அதனைக் கம்பெனி விரும்பிற்றிலது. 'யாவகர் அளவெஞ்சிச் செல்வந்தராகிவிடுவர்,' எனும் அச்சம் அக்கால அரசாங்கப் பத்திரங்களிலே இழையோடி நிற்றல் காணலாம். யாவக

[1] Report of some people who have returned from the Indies, 1662. Kroniek, pp. 321-39.

ரின் சித்துவத்தைக் கெடுத்து, யாவாவின் செல்வத்தை இயன்றவரை வாரிச் சுருட்டுவதே இடச்சுக்காரரின் குறிக்கோள்—அதனை அவர்கள் மிகத் தெளிவாக ஐயந்திரிபறக் கூறியிருந்தனர்.

ஆகவே கம்பெனி மூப்படியான ஒரு பூட்கையைக் கடைப்பிடித்து வந்தது. பற்றேவியாவிலே கோப்பி விலையைத் தன்னெண்ணமாகத் தாழ்த்திவைத்தல்; கோப்பித் தோட்டங்கள் பெருகிவிடாது கட்டுப்படுத்தல்; வெளிப்படையாக உற்பத்தியாளரை ஏமாற்றுதல் ஆகியனவே அப்பூட்கையின் அமிசங்களாகும். இவற்றுள் ஈற்றிற் கூறியதைச் சற்று விளங்கவைத்தல் அவசியமாகும். 125 இரூ. தேயிலைக்குரிய விலைக்கு 240 இரூ.—270 இரூ. வரையான தேயிலையைக் கொடுத்திடுமாறு உற்பத்தியாளரைக் கட்டாயப்படுத்திற்று கம்பெனி. மேலும், பல்வேறு காரணங் காட்டிக் கழிவு பெற்றபின், கம்பெனியானது 14 இரூ. தேயிலையின் விலையையே உற்பத்தியாளர்க்கு இறுதியிற் கொடுத்தது. இவ்வாறு, உரிய இலாபத்தைப் பெருமே ஏமாற்றப்பட்டாராகி, தமது விளைபொருளுக்கு நியாயமான விலையும் பெறாராகி, வேளாண் மக்கள் கோப்பி பயிர்செய்ய விரும்பினரல்லர். கம்பெனிக்கு முகவராயிருந்த இந்தோனேசியப் 'பதிலாளிகளும்' ஊக்கமிழந்தனர். எனவே, பதிலாளிகளையும் விவசாயிகளையும் கொண்டு கட்டாயமாகக் கோப்பி பயிர்செய்வித்து, குறித்த விலையிலே தமக்குக் கொடுத்திடுமாறு நெருக்குதற்கு இடச்சுக்காரர் தீர்மானித்தனர். கம்பெனியாரின் அடிப்படைக் கொள்கை எளிமையானது. சுலுத்தானுடைய இறைமையுரிமைகளைக் கம்பெனியாரே பெற்றிருந்தாராதலின், நிலத்தின்மீது அவர்களுக்குப் பூரணமான சொத்துரிமையிருந்தது. எனவே அதனை விருத்திசெய்து பயன்பெறும் உரிமை முற்றுக அவர்களுடையதே. பதிலாளிகளும் விவசாயிகளும் கம்பெனியாரின் முகவரே. இன்னும், யாவா முழுவதையும் தமக்குரிய ஒரு மாபெருங் கோப்பித் தோட்டமாகவே அவர்கள் கருதினர். சட்டத்தைத் தலைக்கீடாய்க்கொண்டு கம்பெனியளித்த உரிமைவாயிலாய்த் தோட்ட முதலாளியானவன், இந்தோனேசியத் தொழிலாளர் தமது உழைப்பிற்கு ஏற்ற ஊதியத்தைப் பெறுவதையுந் தடுத்தற்கு உரிமைபெற்றிருந்தான்.

கோப்பியானது முற்றுரிமைக்குரிய வர்த்தகப் பொருளாய் முன்னமே ஆக்கப்பட்டுவிட்டது. அப்பால், 1760 அளவிலே, கோப்பிச் செய்கைக்குப் பதிலாளிகளே பொறுப்புடையாராயினர். அவர்களை மேற்பார்வை செய்யவும் கட்டுப்படுத்தவும் இடச்சு அதிகாரியொருவன் நியமிக்கப்பட்டான். பதிலாளிகளும் விவசாயிகளும் கோப்பிச் செய்கையைப் புறக்கணிக்காமே கவனிக்கும் பொருட்டுக் 'கோப்பிச் சேவிதர்' எனும் பெயருடைய சிறு உத்தியோகத்தர் அமர்த்தப்பட்டனர். யாவாவிற் கோப்பிச் செய்கை முழுவதும், ஒரு பெருந் தோட்டத்தைப் போன்று, ஒழுங்கான ஒரு கட்டத்துக்கமைய இயங்கிவந்தது. இவ்வாறு பயிர் செய்யப்பட்ட கோப்பியைக் கம்பெனி சேர்த்து வியாபாரஞ் செய்தது.

இப்பெருந் தோட்ட முறையானது இடச்சு—இந்தோனேசியத் தொடர்புகளிலே அமைதியான ஆழ்ந்தகன்ற ஒரு புரட்சியை உண்டாக்கியதெனலாம். நாட்டில் உற்பத்தியான அரிசியையும் வாசனைத் திரவியங்களையும் விலைக்கு

வாங்கி, இலாபம்வைத்து விற்கும் வியாபாரிகளாகவே இடச்சுக்காரர் முன்னம் விளங்கினர். அவர்கள் தம் படைவலியைப் பயன்படுத்தி வர்த்தகத்தில் முற்றுரிமை பெற்றது உண்மையேயாயினும், கம்பெனியின் வர்த்தக முயற்சிகள் மக்களின் வாழ்க்கையை முன்னம் பாதித்ததில்லை. ஆயின் பெருந்தோட்டப் பொருளாதாரமுறை உருவாயபோது, பிற மாற்றங்களும் வந்து புகுந்தன. தொழிலாளரின் உழைப்பைத் தக்கவாறு பயன்படுத்தல்; மக்களுடைய பொருளியல் வாழ்க்கையை ஆற்றுப்படுத்தல்; அனைத்தையும் திறம்பட மேற்பார்வை செய்தல் ஆகியன அம்மாற்றங்களாகும். சுருங்கக் கூறின், நாடு முழுவதையும் ஒரு தோட்டமாய்ப் பாவித்துப் பாலனஞ் செய்தல் அவசியமாயிற்று. யாவாத் தீவு முழுவதும் கம்பெனியின் பெருந் தோட்டமாயது. இறைமையதிகாரம் பாராட்டத் தொடங்கிய கம்பெனிக்கும் அதன் குடிகளுக்குமிடையே நிலவிய தொடர்பு, சாரமளவில், தோட்ட முதலாளிக்கும் அவன்றன் கூலிக்குமிடையே நிலவும் தொடர்பை நிகர்த்ததாயிற்று. ஆயின், கம்பெனியோ தொழிலாளியின் உழைப்பைப் பயன்படுத்தும் முதலாளியாக மட்டுமிராது, அவன்மீது சீவமரண உரிமை படைத்ததாய், விரிந்த முறையிலமைந்த கொடுங்கோலாட்சி நடாத்துவதாய் இருந்தது. ஆளுநருடைய அதிகாரத்தின் வழியதான ஒரு சட்ட முறையே அத்தகைய கொடுங்கோலாட்சியை வகுத்தலியலும். யாவாக் குடிமகன் கூலி யென்பதோடு அமையாது, தன் முதலாளிக்கு எதிராக யாதும் உரிமையற்ற—அவற்கு மாறுக நீதிமன்றத்துக்கோ நிருவாகத்துக்கோ முறையிடும் உரிமையற்ற—ஒரு கூலியாய் இருந்தான். இவ்வாறுக ஒரு மக்களினம் முழுவதுமே தோட்டக் கூலிகளாக மாற்றப்பட்டு, அம்மக்களிடையே இயற்கையாகக் காணப்படும் உயர் குடிமக்கள் கண்காணிகளாகவும் முகவராகவும் இழிக்கப்பட்டு, அவர்கள் மூலமாகவே அடக்குமுறை கையாளப்பட்டவாற்றை வரலாற்றிலே பிறவிடத் தெங்கணுமே காணமுடியாது. மக்களைச் சுரண்டி வாழ்தலில், பேருநாட்டு இன்காமக்களும் பழிக்குஞ்சாராகி இத்தகைய கட்டொழுங்கான முறைகளைக் கடைப்பிடித்தாராயினும், அம்மக்கள் நாட்டிலேயே வாழ்ந்து, தாம் பெற்ற செல்வத்தை நாட்டிலேயே செலவு செய்தனர். ஆயின் இங்கு, மக்களின் அருமுயற்சியிலே விளைந்த இலாபம் முழுவதும், தொலைதேயத்திலே வாழ்ந்த ஆளும் மக்கள் போக வாழ்க்கை நடாத்துதற்காக அனுப்பப்பட்டது.

இரக்கமற்ற இக்கொடும் பூட்கையைச் செயற்படுத்தற்குக் கருவியாய் அமைந்த 'பதிலாளிகள்' ஆள்பதிநாயகளுலே நியமிக்கப்பட்டனர். ஆயின் அப்பதவிகள் மரபுரிமைப்படி வருவனவாகக் கருதப்பட்டனவாதலின், இடச்சு அதிகாரவர்க்கம் அத்தகைய உரிமைகளையும் பொதுவாகக் கருத்திற் கொண்டே நியமனங்கள் செய்தது. அப்பதிலாளிகளை இடச்சுக்காரரே நியமித்தாராயினும், அன்னர் 'விவசாயிகளையும் நிலத்தையும் தமது சொந்த உடைமையாகவே கருதி,' கோப்பித் தோட்டங்களிலே அனைவரிடமிருந்தும் கட்டாய ஊழியம் பெற்றனர். பதிலாளிகள் செல்வஞ் சேர்த்தற்கு அனுமதிக்கப்பட்டிலர். எவ்வாறெனின் விளக்குதும். பதிலாளிகளுக்கு மேற்பார்வையாளனுயிருந்த சுதேச அலுவல் ஆணையாளியென்பான், கோப்பி அறுவடையாகி ஒப்படைக்கப்படுமுன்னரே,

மூற்பணமாகக் கடும் வட்டிக்குக் கடன் கொடுப்பது வழக்காயிருந்தது. அவ் வாறு பதிலாளிகள் படுங் கடன் வளர்ந்து பெரிதாகி, இறுதியில், அவர்கள் கொடுக்குங் கோப்பி, வட்டியைத்தானும் அடைத்தற்குப் போதாததாகிவிடும். எனவே, தோட்டங்களிலே கட்டாய ஊழியஞ் செய்த ஏழை விவசாயியோ, அவனுடைய ஊழியத்தை மேற்பார்வை செய்த பதிலாளியோ இலாபம் யாதும் பெற்றதில்லை. இந்தோனேசியரைச் செல்வந்தராக வொட்டாது தடுக்கும் பூட்கை மிக்க செப்பமாகக் கையாளப்பட்டது[1].

இவ்வாறு பரிதாபமாக இழிவடைந்த யாவா மக்கள், இசுலாம் மதம் ஊட்டிய ஊக்கத்தினாலே காப்பாற்றப்பட்டனர். போத்துக்கேயர் வந்தடைந்த ஞான்று, வர்த்தக நிலையங்கள் சிலவற்றிலேயும், ஆளும் மன்னரின் வேத்தவைகள் சில வற்றிலேயும் இசுலாம் மதம் தாபிக்கப்பட்டவாற்றை முன்னமே கண்டோம். உண்ணாட்டில் வாழ்ந்த இந்து மக்களை மதமாற்றஞ் செய்யப் போத்துக்கேயர் முயன்றும், அம்முயற்சிகள் வெற்றியளித்திலை; அன்றியும், பதினாறும் நூற்றாண் டின் இறுதியளவிலே, யாவாவும் சுமாத்திராவும் பெரும்பான்மையும் இசுலாம் மதத்தைத் தழுவிக்கொண்டன. கிழக்கு யாவாவிலிருந்த பலம்பங்கன் இராச் சியமானது மாத்தறம் சுலுத்தானது தாக்குதலை நிருவகிக்கலாற்றாது 1639 இல் வீழ்ச்சியடைந்தபோது, கட்டுக்கோப்புடைய இந்துமதம் யாவாவினின்றும் மறைந்தது. இசுலாம் மதத்தின் தன்மையும் பையவே மாறத் தொடங்கிற்று. இந்தியாவிலிருந்து ஆதியிற் கூர்ச்சர வணிகராற் புகுத்தப்பட்ட இசுலாமானது, பதினேழாம் நூற்றாண்டின் நடுக்கூற்றுவரையும், பழைய இந்து அடிப்படைமீது படிந்த மென்னுடை போன்றே காணப்பட்டது. ஆண்டுதோறும் புனித தலங் களுக்கு யாத்திரை போவதாலும், மௌலவிகளும் மௌலானாக்களும் அயராது செய்யும் போதனைகள் வாயிலாகப் பரவுவதாலும், ஒற்றுமையும் வைதிகப் பண் பும் கட்டுப்பாடும் பெற்று விளங்கிய இசுலாம் மதமானது நெடுநாள் அந் நிலையில் இருந்திலது. மெக்கா சென்று மீளும் யாவக யாதிகர் பெரும் இசுலா மியப் பண்டிதன்மாரைத் தம்மொடு அழைத்து வந்தனர். இன்னும் பதினேழாம் நூற்றாண்டில், உலகிலே இசுலாமிற்கு இருந்த நிலையினைப் பிரதிபலிப்பதாயிருந்த தருக்கியானது, மத்திய கிழக்கிலும், இலவாந்திலும், மத்தியதரைக் கடலைச் சார்ந்த கரையோரப் பிரதேச மெங்கணும் தன் பெருவலியால் ஐரோப்பிய நாடுகளைக் கலங்கவைத்தவாற்றையும் கருத்திற்கொள்ளல் வேண்டும். அக்காலக் கிழக்குலக அரசியலிலே, இந்தியாவில் ஆதிக்கம் பெற்றிருந்த முகலாயப் பேரரசும் மதிக்க வேண்டிய ஒரு வல்லரசாகத் திகழ்ந்தது. உலகிலே இசுலா முக்கிருந்த நிலை பற்றிப் பெருமையும், ஓர் உலக சமுதாயத்தைச் சேர்ந்தோர் என்ற வகையாற் பெற்ற பெருமித உணர்ச்சியும் முசிலிம் மக்களுக்கு—குறித்த

1. இவ்வாறு நாட்டு மக்கள் அறவுந் தாழ்வுற்று இருந்தமை ஒருபுறமாக, இடச்சுச் சட்டத்தின்படிக்கு இறித்தவரல்லாதாரின் சாட்சியம் நீதிமன்றங்களிலே அனுமதிக்கப்படவில்லை என்பதையும் நினைவிற் கொள்ளல் வேண்டும். எனினும், 1633 ஆம் ஆண்டின் பின்னர் "இறித்தவர் இடம் பெறுத சில வழக்குக்களில்" அவருடைய சாட்சியம் ஏற்கப்பட்டது. இத்த கைய அடிப்படையில் அமைந்த நீதி நிருவாகத்தில் இந்தோனேசியர்க்கு யாதும் உரிமை இருந்தாலும், அவ்வுரிமையை நாட்டுதல் முடியாக் காரியமாக இருந்திருக்கும்.

ஒரு நாட்டில் அவர்தம் அரசியல் நிலைமை நலிவுற்றே தாழ்வுற்றே இருந்த விடத்தும்—உறுதியும் உரனும் என்றுமே அளித்து வந்துள. மெக்காவிலிருந்தும் மத்திய கிழக்கிலிருந்தும் சேக்குமாரும் மௌலவிகளும் பிற சமயத் தொண்டரும் வந்துற்றமையால், இந்தோனேசியாவிற் சமய, சமூக, அரசியல் நிலைமைகளிலே ஒரு பெரும் மாற்றம் விளையலாயிற்று.

இவ்வாருகத் தீவிரமான சமயப்பணி 1630 அளவில் ஆரம்பமாயிற்று. அதனால், இசுலாமியக் கோட்பாடுகள் கடுகிப் பரவின; சமயக்குரவரின் அதிகாரம் உறுதிப்பட்டது; இசுலாமிய வாழ்க்கைமுறை, மக்கள் மனதைக் கவரத் தொடங்கிற்று. தளராது நின்ற இந்துமரபுகளை மக்கள் மறக்குமாறு செய்ததனும், கிறித்துவ மதத்தின் தாக்குதலை எதிர்த்ததனுமே இசுலாமியச் சமய முயற்சியின் குறிக்கோளாயின. சமூகச் சார்பில், மெக்காவின் ஆதிக்கமானது திருமணம், மரபுரிமைச் சட்டங்கள் ஆதியவற்றிலே **சரியத்தைப்**[1] பரப்பி, இசுலாமிய ஒருமைப்பாட்டைப் பேணுதற்கு உதவிற்று. அரசியற் சார்பில் அச்சமய வியக்கமானது எதிர்ப்புணர்ச்சியைக் குறித்து நின்றது. மெக்காவினது ஆள்பதியின் சார்பாக அராபியச் சேக்கு ஒருவன் மாத்தறம் மன்னற்கு சுலுத்தான் பட்டம் அளித்தான் என்பர். அற்சேய் போன்ற பிற சுலுத்தானரசுகளும் மத்திய கிழக்கு முசிலிம் நாடுகளோடு தொடர்புகள் கொள்ளத் தொடங்கின.

மெக்காவிற் கல்விகற்ற குருமார்க்கு மாருக யாவாவில் எதிர்ப்பும் இருந்தென்பதை நாம் மறத்தலாகாது. முல்லாமாரும் அவர்தம் குடும்பத்தினரும் மக்கள்மீது அதிகாரஞ் செலுத்த முற்பட்டமையாற் கோபங்கொண்ட சுலுத்தான், அமாங் குராத்து என்பான், அவர்களிற் பலரை வாட்கிரையாக்கினன் என்பர். அவன் தந்தையான அங்குங்கு சுலுத்தான் தன் காலத்திலே குருமாருக்கு அளித்திருந்த சலுகையனைத்தையும் இவன் பறித்தான் என்பர்.

இசுலாம் மதம் உறுதியும் உரனும் பெறவே, இந்தோனேசியத் தீவுகளில் இடச்சுக்காரரின் ஆக்கிரமிப்புக்கு மாருக எதிர்ப்புக் கூர்ந்தது. அம்போய்னாவிலே இடச்சுக்காரர் மதமாற்றஞ் செய்ய முயன்றமைகண்டு இசுலாமியர் சீற்றங் கொண்டனர்—அவ்வழி மொலுக்காசிலே போர் மூண்டது. இந்தோனேசியத் தீவுக்கூட்டங்களிலே இடச்சுக்காரருக்கு மாருக ஓயாது போர் மூண்டதற்கு ஒரு தலையாய காரணம் சமயமே யென்பதை இறைக்குளொவ் வான் கொயென்சு போன்ற உயர்தர இடச்சு அதிகாரிகள் உணர்ந்திருந்தனர். பதினேழாம் நூற்றாண்டின் பின்னரைக் கூற்றில் இத்தகைய போர்கள் குறிப்பிடத்தக்க அமிசமாகக் காணப்பட்டன.

இந்தோனேசியரின் கல்வியிலே இடச்சுக்காரர் யாதுங் கவனஞ்செலுத்தியதில்லை. அதனால் இசுலாம் தனது நிலையை உறுதிப்படுத்தற்கு வாய்ப்புக் கிடைத்தது. கல்வி புகட்டல் இசுலாமியக் குருமாராயத்தின் முற்றுரிமையாயது; பள்ளிவாசல்களே இசுலாமியக் கல்வியை மக்களிடையே பரப்புதற்கான மையங்

[1] Shariat.

களாயின. மெக்காவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் தொடர்ந்துவந்த இசுலாமிய மதகுருமார் மக்களின் ஊக்கத்தைத் தளரவிடாது தூண்டிவிட்டனர். இடச்சுக்காரரின் குறுகிய நோக்கும் செட்டுங் காரணமாக, இந்தோனேசியர் ஆன்ம ஈடேற்றம் பெற்றனர்:

யக்கோபினியப் போக்குடைய ஆள்பதிநாயகனை தண்டெயில்சு என்பான் ஆட்சியில், இடச்சுப்பூட்கையானது அவர்களை நெருக்கடியான நிலைக்கு இட்டுச் சென்றது. நிருவாகத்தைச் சீரமைத்து, நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த அவன் முற்பட்டபோது, யாவாவில் வாழ்ந்த இடச்சுக்காரரின் கடுமெதிர்ப்புக் காரணமாக அவனைத் தாயகத்திற்குத் திருப்பியழைத்தல் அவசியமாயிற்று. அப்பால், 12,000 படைஞரைக் கொண்டதும், நூறு கலங்களை உடையதுமான பிரித்தானியக் கடற்படையொன்று பற்றேவியாவில் வந்து தோன்றிற்று. ஆறு வாரங்களிற் போராட்டம் முடிவுற்றது: 1811 திசம்பர் 18 இல் சரணைப்பந்தம் நிறைவேறியது. பதினைந்து வருடகாலம் பிரித்தானியரே இடச்சுப் பேராசிற்கு அதிபராயினர்.

கம்பெனியாட்சியின் மறைவையும் இடச்சு அரசின் நேரான ஆட்சியின் தோற்றத்தையும் பிரித்துநிற்பது பிரித்தானியரின் இடைக்கால ஆதிக்கமேயாகும். ஆளும் பொறுப்பால் வினையுங் கவலையும் தொல்லையுமின்றி, இடச்சுக்காரர்க்குப் பெரும் இலாபம் அளித்து வந்த 'மறைமுக' ஆட்சியானது பெரும்பாலும் ஒழிக்கப்பட்டது. உண்ணாட்டுக் கொற்றவரின் பாலன உரிமைகளை இராபிள்சு பறித்தான். பந்தம் வென்றிணைக்கப்பட்டது; ஆண்டுதொறும் 10,000 இசுப்பானியத் தொலர் வேதனமாகப் பெற்றுச் சுலுத்தான் தானுகவே பதவிதுறந்து போயினன் (1813). செரிபன் 1815 இற் கைப்பற்றப்பட்டது. சுரகார்த்தாவிலும் யொக்யகார்த்தாவிலும் அவ்வந்நாட்டுச் சுலுத்தான்மார் அவர்க்கு வழங்கும் அறிவுரைக்கேற்பத் தத்தம் நாட்டலுவல்களை ஆற்றுப்படுத்துவதாய் வாக்களித்தனர். இவ்வாருகச் சிறிது காலத்துள், இராபிள்சு பழைய முறையை ஒழித்துவிட்டு, அதற்குப் பதிலாய்க் குடியேற்றவசின் நேரான ஆட்சியைப் புகுத்தினன். தண்டெயில்சு தொடக்கி வைத்த பூட்டையினையே அவன் இவ்வாறு பூர்த்தி செய்தான் எனலாம்.

இராபிள்சு செய்த சீர்திருத்தங்களின் குற்றமும் குணமும் எவ்வாருயினும், அவற்றில் மனிதப்பண்பும், விரிந்த நோக்கும், யாவக விவசாயிகளுக்கு உரிமைகள் வழங்கும் உறுதியும் காணப்பட்டன. அதனால், இடச்சு வரலாற்றறிஞரும், குடியேற்ற வாதத்தை ஆதரித்துப் பேசும் பேணிவல் போன்றோரும் அவற்றைக் கண்டித்தமை இயல்பே. ஆயின் மக்களை அடக்கியொடுக்கிய பெருந்தோட்ட முறையினை அவை ஒழித்தன என்பதற்கையமில்லை. இடச்சுக்காரர் தங்குடியேற்றத்தை மீண்டும் பெற்றபோது, மக்களுடைய நலன் கருதியே இந்தோனேசியாவை ஆளுதல் வேண்டுமெனுந் தத்துவத்தை அன்னரும் ஏற்று நடக்க வேண்டியவராயினர். அரியணை மீண்டும் எய்திய ஒல்லாந்து மன்னன், தன் குடிகள் அனைவரின் நலத்தையும், விதிவிலக்கின்றிப் பேணுவதே தன் குறிக்கோளாமெனப் பிரசித்தஞ் செய்தான்.

முடியாட்சியின் மீட்சியின் பின்னர் யாவாவையும் சுமாத்திராவின் சில பகுதிகளையும் செவ்வையாக அபிவிருத்தி செய்து, வெளிப்பிரதேசங்களில் வரளாவிருத்தலே இடச்சுக்காரரின் பூட்கையாயிற்று. யாவாவிற்கும் சுமாத்திராவிற்கும் வெளியேயுள்ள பெருநிலப் பரப்பைப் புறக்கணித்தமைக்கு இடச்சுக்காரர் ஒளிவுமறைவின்றி நியாயங் கூறினர். வெளிப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதாயின், யாவா நிருவாகத்தாற் பெறும் மேலதிக வருவாயைத் தாய்நாட்டிற்கு அனுப்பாது, ஆங்கு முற்றுகப் பயன்படுத்தல் வேண்டுமே! 'சாதக நிலுவை' எனப்பட்ட இக்கொள்கைப்படிக்கு, யாவா அரசாங்கம் ஒல்லாந்து நாட்டிற்கு அனுப்பி வைக்கும் மொத்த லாபத்தின் தொகையைக் கொண்டே, அவ்வரசாங்கத்தின் திறமை அளவிடப்படும்.

போத்துக்கேயர் கிழக்குலகிற்கு வந்துற்ற தொடக்க காலத்தில், சோனகரோடு தாம் கொண்ட தொடர்புகளில் மனிதப்பண்பின்றிக் கொடுமையாக நடந்து கொண்டனர் என்பது உண்மையே. ஆயின் ஐரோப்பாவிலே இசுலாமுக்கும் கிறித்துவத்துக்குமிடையே நிலவிய விரோத உணர்ச்சியே கிழக்குலகிலுந் தொடர்ந்தது என ஒருவாறு அதற்கு நியாயங் காட்டலாம். கத்தோலிக்க ஒருமைப்பாட்டைப் பேணுவதிலே சிறிது காலம் தீவிரங்காட்டி, கோவாவிலும் பிற இடங்களிலும் கிறித்தவரல்லாதாரைப் போத்துக்கேயர் வருத்தியவாற்றையும் நாம் நினைவிற் கொள்ளல் வேண்டும். இனி, பிரித்தானியர் பதினேந்தாண்டுக் காலம் வங்கத்திலே ஒரு 'திருட்டு அரசைத்' தாபித்து, பிறர் உரிமைகளை நோக்காது தம் உரிமைகளையே பாராட்டித் தம்மிச்சைப்படி மக்களைக் கொள்ளையடித்து வந்தனர். ஆயின் அத்தகைய ஆட்சி நடந்த காலத்திலுமே, இந்திய வணிகரின் அலுவலர்களிலே அரசாங்கம் வீணை தலையிட்டதில்லை. அன்றியும், பகிரங்கமாக மறுக்கும் உரிமையும் மக்களுக்கு இருந்தது. எனவே, அறத்தின் வழியும் சட்டத்தின்வழியும் யாதுங் கடப்பாடு கருதாது, ஒரு மக்களினம் முழுவதையுந் தோட்டக் கூலிகள் என்ற நிலையினுக்கு இழிவுறச் செய்த ஒரு பூட்கையைத் திட்டமாய்க் கொண்ட ஐரோப்பியச் சாகியத்தோர் இடச்சுக்காரரே யாவர். சீனுவில் மண்டியிட்டு மரியாதை செய்தனர்; யப்பானிலே பணிவோடும் பயபத்தியோடும் நடந்து கொண்டனர்; ஆயின் எந்த மக்களிடமிருந்து மிகப் பெரும் இலாபம் பெற்றனரோ அந்த மக்களையே அவர்கள் நம்பொணாக் கொடுமையொடு நடாத்தினர். போத்துக்கேயரிடங் காணப்பட்ட மதாபிமானமும் அவர்களிடத்தில்லை. தாம் நேராக அரசியலதிகாரஞ் செலுத்திய புலங்களிலேயாதல் பிரித்தானியர் காட்டிய விரிந்த மக்கட்பண்பும், அவர்களிடத்துப் பொதுவாக இருக்கவில்லை; பிரான்சியர் பாராட்டிவந்த பண்பாட்டு ஈடுபாடும் அவர்களிடம் காணப்பட்டிலது. அவர்கள் தாம் ஆட்சி செய்த மக்களின் நலன் பற்றி எந்த விதக் கடப்பாடும் ஏற்றுகொள்ளாராகி, நாடு கைப்பற்றிச் சுரண்டி வாழுங் கொள்கையினையே இறுகப்பற்றி நின்றனர். அடுத்த நூற்றாண்டின் போது, தமது பூட்கையை மனமின்றி மாற்றியமைத்த காலை, அன்னார் யாதும் உயரிய நம்பிக்கையால் உந்தப்பட்டாரல்லர். ஒல்லாந்துக்கும் இந்தோனேசியாவுக்கும் அப்பாற்பட்ட இயக்கங்களின் வலியே அவர்களை அந்நெறிக்குய்த்தது.

அதிகாரம் 2

சீனம்

தென்னாசியாவிலே ஒரு பெரும் தரைவல்லரசாகப் பிரித்தன் உறுதிப்பட்ட போது, பிரித்தானிய வர்த்தக நலவுரிமைகள் பசிபிக்கிலும் பரந்து பாய்தலைத் தவிர்க்க முடியாதென்பது தெளிவாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற்காற் கூற்றிலே, சீனத்தில் ஐரோப்பிய நாடுகள் வகித்த நிலையானது, அவை 1748 இற்கு முன்னம் இந்தியாவிற் பெற்றிருந்த நிலையினைச் சாலவும் ஒத்திருந்தது. கரையோரமாகச் சில வர்த்தக நிலையங்கள் அவர்க்கு இருந்தன. ஆயின் அரசியற் செல்வாக்கோ படைப்பலமோ அவர்க்கு அப்போது இருந்த தில்லை. ஐரோப்பிய நாடுகள் பிறவற்றோடு வரத்தகத்திற்காகப் போட்டியிடுவதி லேயே அவற்றின் கவனஞ் சென்று நின்றது. உண்ணாட்டுக்கு ஊடுருவிச் செல்ல அவைகள் விழைந்தில. உண்ணாட்டு வர்த்தகத்தால் வரும் இலாபம் பற்றி வாயாரப் புகழ்ந்து பேசிடும் தரகன்மாரொடு புழங்குவதோடு அவர்கள் திருத்தி யடைந்தனர். எனினும், இந்தியாவிலும் சீனத்திலும் ஐரோப்பியர் வகித்த நிலை களுக்கிடையே முக்கியமான இரு வேற்றுமைகளும் காணப்பட்டன. இந்தியா வில் வர்த்தகம் பெரிதும் ஊக்கப்படவே, அது நாட்டின் பொருளாதாரத்தோடு பின்னிப் பிணைந்த ஒரு கூறுயது. பணப்பலமும் பொருளாதாரப்பலமும் உண் ணாட்டினின்றும் கரைப்புலங்களுக்குப் பெயர்ந்ததாக, அக்கரைப்புலங்களின் சீத்துவ நிலை வர்த்தகத்திலேயே தங்கியிருந்தது. கரைப் பிரதேசத்துக் கொற்ற வர் பலர், வர்த்தகத்தைப் பேணுவதில் நேராகக் கவனஞ் செலுத்தினர். இவ்வழி, மைசூர் நாட்டு ஐதர் அலியென்பான், சிறிய பிரெஞ்சுக்குடியிருப்பான மாகியை தனது நலனுக்கு இன்றியமையாத ஒரு துறையாகக் கருதினர். கருநாடகத்து ஆள்பதியும், தஞ்சாவூர் இராசனும், கீழ்த்திசைக்கரைப்புலத்துச் சிற்றரையரும் சென்னையையும் புதுச்சேரியையும் தமக்கு வாய்த்த இயற்கையான வெளிவாயில் களாகக் கொண்டனர். தொன்றுதொட்டுக் கடல்சார் வர்த்தகமரபிலே ஊறி யிருந்த இந்தியநாடு, வெளிநாட்டு வர்த்தக மையங்களை ஒருகாலும் வெறுத்து நோக்கியதில்லை. இவ்வகையில், நிலைமை சீனத்தில் வேறுயிருந்தது. கடல்சார்ந்த வர்த்தகத்திலே சீனு ஈடுபாடு கொண்டதில்லை. தனது நாடு சகல பொருட்களை யும் 'சாலமிகுத்துப் பெற்றிருந்தது' எனவும், வெளிநாட்டிலிருந்து தான்பெறத் தக்கது யாதுமில்லையெனவும் சியென்லுங்கு என்பான் மூன்றும் யோட்சுக்கு எழுதியபோது, பிறநாடுகளோடு பண்டம் பரிமாறுதல் சீனத்தின் பெருமைக் கொவ்வா அநாவசியச் செயலேயென்னும்—பண்டுதொட்டுப் பயின்றுவந்த—மர பினையே அவன் எடுத்துரைத்தான்.

இந்தியாவுக்கும் சீனத்துக்குமிடையே, அரசியற் சிறப்புடைய பிறிதொரு வேற்றுமையுங் காணப்பட்டது. சீனம் நலிவுற்றிருந்த காலத்திலேயும் அரசிய லொற்றுமை ஆங்குப் பேணப்பட்டது; வெகு தொலையிலிருந்த மாகாணங்களி

லேயும் பேரரசன் தன் அதிகாரத்தைச் செலுத்தும் வலிபெற்றிருந்தான்; பதிலிராயன்மாரும் அவன் கட்டளை கேட்டு 'நடுங்கிப் பணிந்தனர்'. சீனத்தின் நிலைமை இவ்வாறு இருப்ப, இந்தியாவிலோ 1740 அளவிலே பேரரசின் அதிகாரம் முற்றுகத் தகர்ந்துவிட்டது. கோட்டைகளின் பாதுகாவலில், ஐரோப்பிய வர்த்தகக் குடியிருப்புக்கள் இடம்பெற்றிருந்த கரையோரப் பெரு மாகாணங்களிலே, அவ்வத்தலத்து ஆளுநர் பேரரசினின்றும் பிரிந்து, பெரும் பான்மையுஞ் சுதந்திரம் படைத்த கொற்றவராகிவிட்டனர். அவர்கள் தத்தம் ஆட்சியுரிமைகளை மரபுரிமைப்படியினதாக்கவே பாடுபட்டனர். இவ்வழி, சீனத்தில் ஒவ்வொரு பிரச்சினையையும் மத்திய அரசோடு போராடியே தீர்த்தல் வேண்டும். ஆயின் இந்தியாவிலோ பிரித்தானிய பிரான்சியக் கம்பெனிகள் அவ்வத்தலத்து ஆள்பதிகளோடும் பதிலிராயரோடும் மற்றுச் சிற்றரையரோடுமே புழங்கவேண்டியனவாய் இருந்தமையால், அவர்களை நெருக்குதல் எளிதாயிற்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன்னரைக் கூற்றில், பொதுவாக உலகமெங்கணும் அரசியல் நிலைமை ஆற்றவும் மாற்றமடைந்திருந்தது. இந்தியாவிலும் ஆழ்கடல் அனைத்திலும் மறுக்கவொண்ணா ஆதிக்கம் பெற்றிருந்த பிரித்தன், நெப்போலியப் போர்களுக்குப்பின்னர், உலகிலே தன்னேரில்லா மாபெருஞ் சத்தியாயது. அரசியல் துறையிலும், பொருளியற் சார்பிலும், அறநோக்கிலும், பிறிதோர் நாடும் முன்னரோ பின்னரோ எக்காலத்துமே பெற்றிராத மேன்மையை அந்நாடு எய்தியிருந்தது.

கடல் கடந்து பேரரசுகளை அமைப்பதிலே முன்னோடிகளாக விளங்கிய இசுப்பெயினும் போத்துக்கலும் ஒல்லாந்தும் அப்போட்டியில் இளைத்துப் பின்தங்கிவிட்டன. போத்துக்கலுக்குச் சின்னஞ் சிறு உடைமைகள் இன்னும் ஆசியாவில் இருந்தவாயினும், வசுக்கோ த காமாவும் அல்புகேர்க்கியும் மறைந்ததன் பின்னர் பதவியெய்தியோர் பழைய பட்டங்களையே பூண்டனராயினும், அவையெலாம் வழக்கொழிந்த புனைவுகளாகிவிட்டன. பிலிப்பீன் தீவுக்கூட்டம் இன்னும் இசுப்பெயின் வசமே இருந்ததாயினும், ஆசியாவில் நிகழ்ந்த அபிவிருத்திகளிலே அது பங்கு கொண்டதில்லை. ஒல்லாந்தின் நிலை சற்று வினைதமாயிருந்தது. நெப்போலியப் போர்களின்போது, நெதலாந்தினுடைய குடியேற்றங்களைப் பிரித்தன் அபகரித்துக்கொண்டது. எனினும், மத்தியகாலப் பேரரசனொருவன் கலகம் விளைத்த தன் பிரபுவை மீட்டும் அவன்றன் பாளையத்திற்கு உரியவனுக அமர்த்தும்போது, அவனது உடைமையில் ஒரு பாகத்தைக் 'கபளீகரஞ்' செய்வது போன்று, பிரித்தானியரும் இலங்கையை மட்டும் வைத்துக்கொண்டு இந்தோனேசியத் தீவுகளை யெல்லாம் 'பெருந்தன்மையோடு' ஒல்லாந்தர்க்கே திருப்பிக்கொடுத்தனர். அக்காலம் முதலாய் இடச்சுக்காரர் அரசியல் வேட்கையோ நாட்டாசையோ காட்டுதலின்றி, வளமிக்க நாடாகிய தமது 'தோட்டத்தைச்' செப்பமாகச் சுரண்டி வாழ்வதில் முழு மூச்சாக ஈடுபட்டார்கள். எனவே, 1814-48 வரையான காலப்பகுதியில், பெருவலிபடைத்த பெரிய பிரித்தனே, இரசியா தவிர்ந்த ஐரோப்பா முழுவதற்கும் பிரதிநிதியாகக் கிழக்கில் விளங்கிற்று.

பொருளியற் சார்பிலும் நிதித்துறையிலும் பிரித்தனே உச்சநிலே பெற்று விளங்கிற்று. பதினெட்டாம் நூற்றாண்டுக் கைத்தொழிற்புரட்சி காரணமாக, பிரித்தன் மற்றைப் போட்டி நாடுகளேயெல்லாம் முந்திச் சென்றுவிட்டது. பல் கிப் பெருகும் பொருளாதாரமும், கப்பற்போக்குவரத்தில் முதன்மையும் பெற் றிருந்த பிரித்தனே எந்தவொரு வல்லரசும் அல்லது வல்லரசுக் கோட்டியும் விஞ்சியிருக்க முடியாது. வர்த்தகம் பெருகியமையாற் புதிய சந்தைகள்வேண்டி நின்ற ஒரு நாடு, நெடுங்காலமாகச் சீனம் விதித்துவந்த கட்டுப்பாடுகளே இனி யும் ஏற்றுக்கொள்ளமாட்டாதென்பது எதிர்பார்க்கத் தக்கதே. வெளிநாட்டு வர்த்தகம்பற்றிக் கன்றனிலே விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தன்மானத் துக்கு ஒவ்வாதவை. சீனமக்களின் மனப்பான்மையைப் பின்வரும் கட்டுப்பாடு கள் தெற்றெனக் காட்டும். பெண்டிரைக் களஞ்சியசாலேக்குள் அழைத்துச் செல்லலாகாதென்பது யாம் முன்னர்க் கண்டதே. பெண்டிர் சிலரை மக்களோ விற்கு உடனுந் திரும்பிவிடுமாறு கட்டாயப்படுத்தற்காக, சீன அதிகாரவர்க் கம் வர்த்தகத்தை நிறுத்தி விடுவதாக அச்சறுக்கை செய்தது. சீனப் பணியா ளரை அன்னியர் வேலேக்கமர்த்தலாகாது; காவு கதிரைகளே அன்னியர் உபயோ கித்தலாகாது—அவர்கள் நடந்தே செல்லல் வேண்டும். அன்னியர் குறைப்பாடு கள் அனுப்பலாகாது; ஆயின் சீன அலுவலர் மூலமாய் அவர்கள் விண்ணப்பஞ் செய்யலாம். இவ்விறுதி விடயம்பற்றி 1831 இல் ஒரு சலுகையளிக்கப்பட்டது. சீன ஒங்கு வர்த்தகர் அன்னியரின் குறைப்பாடுகளே அனுப்பி வைக்க மறுத்தா ராயின், 'அன்னியர் இருவரேனும் மூவரேனும் தாழ்மையாக நகரவாயிலுக் குச் சென்று (நகரத்துட் புகுதலின்றி), வாயில் காப்போனிடந் தமது விண் ணப்பத்தைக் கொடுத்துப் போகலாம்.'

உலகிலே தான் வகித்த மேனிலேயாற் செம்மாந்திருந்த பிரித்தன், இத்தகைய மானக்கேடான நிபந்தனைகளுக்கமைந்து தன்னுடைய வணிகர் வர்த்தகஞ் செய் வதைத் தொடர்ந்து அனுமதிக்காதென்பது தேற்றம். சீன வர்த்தகம் இலாப மளித்ததாதலின், கிழக்கிந்தியக் கம்பெனியானது, இடையிடை பொறுமை யிழந்தக்கண்ணும், நூருண்டுகளுக்கு மேலாக அத்தாழ்வுநிலேயை ஏற்று நடந் தது. சேர் யோன் பிறற்று எடுத்துக்காட்டியவாங்கு, 'இறுமாப்புடைய சீன அதிகாரிகள் களிமகிழ்வோடு அன்னியர்மேற் குவித்த நிந்தைகளேயெல்லாம், பிறநாட்டு வணிகர் பொறுத்து நடந்தமைக்குக் காரணம் சீன வர்த்தகத்தி லிருந்த கொழுத்த இலாபமேயாகும். கிழக்கிந்தியக் கம்பெனியானது தனது தயிப்பன்[1] மூலமாய்ச் சீன அதிகார வர்க்கத்தோடு புழங்கியவரைக்கும் வர்த் தகமுறை செவ்வனே இயங்கிற்று. ஆயின் 1833 இற் கம்பெனியின் முற்றுரிமை யைப் பாராளுமன்றம் நிராகரித்தது. அதனல், கட்டுக்கமையாத் தனிப்பட்ட வர்த்தகர் பலர் தென்சீன வர்த்தகத்திற் பங்கு பெறுவதற்கு வந்து குவிந்த னர். இனப்பெருமை மிக்குப்படைத்த அவ்வர்த்தகர் கட்டுப்பாடு யாதையும் ஏற்க விரும்பாராகி, போரிடுதற்குத் 'தினவு' கொண்டிருந்தனர்.

---

[1] Taipan : 2 Quota.

அன்றியும், எவ்விடத்தும் வர்த்தகஞ் செய்தற்குத் தெய்விக உரிமை உண்டெனுங் கொள்கை பொதுவாக வலுப்பெற்றுவந்த காலம் அது. வர்த்தகம், கட்டின்றிப் பரவுதலைத் தடுத்தல் இயற்கைக் கொவ்வாது எனுங் கருத்தும் நிலவிற்று. பொருளாதாரம் விரிவடைந்து வந்த ஊழியிலே இத்தகைய மனப்பான்மை நிலவியது இயல்பேயாம். இத்தகைய கொள்கையில் முன்னின்ற நாடாகிய இங்கிலாந்து, நூறுண்டு கழியுமுன்னர், இறக்குமதியைத் தடைசெய்து, கோட்டா[2] முறையைச் செயற்படுத்தி, ஒல்லும்வாறெல்லாம் வர்த்தகப் போக்கினைக் கட்டுப்படுத்துமென யாரே அந்நாளில் எதிர்வு கூறியிருப்பர்! பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன்னரைக் கூற்றிலே, இத்தகைய கருத்துக்களெல்லாம் பிற்போக்கானவையாயும், அமைதிசால் வர்த்தக உரிமைகளுக்கு மாறுனவையாயும் ஆங்கில வணிகர்க்குத் தோற்றமளித்தன. வெளிநாட்டு வர்த்தகத்தை ஊக்குதற்குச் சீனம் விரும்பிற்றிலதாயின், அமைதி, சீர்திருத்தம், முன்னேற்றம் எனுமிவற்றின் சார்பாக அந்நாட்டைக் கட்டாயமாக வர்த்தகத்தை ஊக்குமாறு செய்தல் வேண்டும்.

ஐரோப்பிய வணிகர் பெருமளவான பட்டும் தேயிலையும் உருபாப்பும் வாங்கினரேயன்றி யாதும் விற்றது அற்பமேயாதலின், சீன வர்த்தகம் ஒரு தலைச்சார்புடையதாய் நெடுங்காலம் இருந்து வந்துளது. சீனத்திற்குத் தேவைப்பட்டயாதுமொரு பண்டத்தைக் கண்டுபிடித்தல் எஞ்ஞான்றுமே கடினமாய் இருந்துளது. எனவே பாதகமான வர்த்தக நிலுவையை ஈடுசெய்தற்கு, கடந்த காலத்தில், பொன்னும் வெள்ளியும் சீனத்துக்கு அனுப்பப்பட்டன. எனினும், சீனத்தில் அபினுக்குப் பெருமதிப்பு உண்டாகவே, அதன் வழி கொடுப்பனவைத் தீர்த்தற்கு ஒரு புதுமுறை கண்டறியப்பட்டது. இப்புதுமுறையை முதன்முதலாய்க் கண்டறிந்த பெருமை போர்த்துக்கேயரையே சாரும். ஆயினும் பேரசின் ஆணைவழி, 1729 இலே அபின் தடைசெய்யப்பட்டது. சிலகாலஞ் சென்றபின், இத்தடையுத்தரவு பெரும்பாலும் கவனிக்கப்பட்டிலதாயினும், அபின் வியாபாரம் அப்போதும் சிறிதளவே நடைபெற்றது. உவாறன் ஏத்திங்சு அபின் விற்பனையை 1773 இலே இந்தியாவிற் கம்பெனியின் முற்றுரிமையாக்கினன். அப்பால் 1797 இல், அபினுற்பத்தியையும் கம்பெனி முற்றுரிமையாகப் பெற்றது. இவ்வாறுகக் கிழக்கிந்தியக் கம்பெனியானது தன் பணப்பையை நிரப்புதற்கும், சீனத்தோடு செய்த வர்த்தகத்துக்கீடாய்ப் பணங்கொடுத்தற்கும், அபின் வியாபாரத்தை ஊக்குவதிலே கழிபெருங் கவனஞ் செலுத்திற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற்காற் கூற்றிலே, சீனத்துக்குச் சென்ற ஐரோப்பிய இறக்குமதிகளுள், அபின் விற்பனையே வளமார்ந்த கூறுயிருந்தது. 1818 முதல் 1836 வரையான பதினேழாண்டுக் காலத்தில், சீனத்துக்கு வந்த பிரித்தானிய இறக்குமதியின் மொத்தத் தொகையில் 17 சதவீதமளவினதாயிருந்த அபின் விற்பனை 50 சதவீதமாய் ஏறிவிட்டது.

இந்த அபின் வியாபாரமானது, குறிப்பாக 1800 இலே மூற்றுகத் தடைசெய்யப்பட்டபின்னர், உண்மையிற் சட்டவிரோதமானதாய் இருந்ததெனினும், கம்பெனியானது நவமான ஒருமுறையை வகுத்திருந்தது. அதன் வழி, கம்பெனி





யின் கப்பல்கள் அத்தியக்கமருந்தை ஏற்றிச் சென்றதுமில்லை; ஒங்கு வர்த்தகர் உத்தியோகபூர்வமாக அதனைக் கையாண்டதுமில்லை. ஆயினும் கம்பெனியின் அனுமதிச்சீட்டுப் பெற்ற 'நாட்டுக் கப்பல்கள்' வாயிலாய்ப் பெருந்தொகை அபின் 'புற' வணிகர்க்கு விற்கப்பட்டுச் சீனத்தை அடைதல் வழக்காயிருந்தது. கம்பெனியின் முற்றுரிமை ஒழிந்ததன்பின்னர், தனிப்பட்ட வர்த்தகர் கம்பெனியின் கட்டுப்பாட்டுக்கு அமையாராதலின், இவ்வர்த்தக முறையைத் தொடர்ந்து கடைப்பிடித்தல் இயலாததாயிற்று. தனிப்பட்ட வர்த்தகர் யாதுங் கட்டுப்பாட்டுக்கு அமையாவிடத்து விளையக்கூடிய குழப்பத்தை முன்னரே யுணர்ந்த கன்றன் நகரத்துப் பதிலிராயன், 'கன்றனுக்கு வந்து வர்த்தக விடயங்களைப் பொதுவாக நிருவகித்தற் பொருட்டு, வியாபார நூணுக்கம் அறிந்த ஒருவனைத் தீர யோசித்து நியமனஞ் செய்தல் நுங்கடன்' எனக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பணிப்பாளர் மன்றத்துக்கு அறிவிக்குமாறு ஒங்கு வர்த்தகருக்குக் கட்டளை விடுத்தான். இந்த யோசனையை உவந்தேற்ற பிரித்தானிய அரசாங்கம், நேப்பியர்ப் பிரபுவை 'சீனத்திற் பிரித்தானியக் குடிகளின் வர்த்தகத்திற்குப் பிரதம மேற்பார்வையாளனாய்' நியமித்தது.

நேப்பியர்ப் பிரபு 'விழலொன்றையும் பொருட்படுத்தமாட்டேன்' என்னும் மிடுக்குடன், 1834 இற் சீனத்தை வந்தடைந்தான். அவன் அரசாங்கத் தூதுவனாக நியமனம் பெற்றதில்லையாயினும், வறிதே வர்த்தக மேற்பார்வையாளனாகவே நியமிக்கப்பட்டானாயினும், அனுமதியின்றியே கன்றனுக்குப் புறப்பட்டான். கன்றனை அடைந்ததும், நேராகப் பதிலிராயனோடு பேசல் வேண்டுமென அவன் வற்புறுத்தி நின்றான்—அவனுடைய சொந்தப் பட்டம் யாதாயிருப்பினும், ஒரு வர்த்தக மேற்பார்வையாளன் இத்தகு கோரிக்கை விடுத்தது விந்தையேயாம். அன்னிய அரசாங்கத்தைச் சேர்ந்த வர்த்தகச் சிற்றனுவலன் ஒருத்தன், சூழியற் பதமில்லான், இந்தியப் பதிலிராயனுக்கு நேராகத் தான் எழுத முற்பட்டது போன்றிருந்தது அவன் செய்கை. சீனப் பிரமாணங்களின் படி வெளிநாட்டு வணிகன்மாரைச் சீன அரசாங்கத்தோடு தொடர்புறுத்தும் அனுவலராயிருந்தோர் ஒங்கு வர்த்தகரே. அன்னாரோடு தொடர்பு கொள்ள நேப்பியர் மறுத்தான். வர்த்தக மேற்பார்வையாளனிடமிருந்து எத்தகைக் கடிதமும் ஏற்க மறுத்த பதிலிராயன், அவ்விடயத்தில் ஒங்கு வர்த்தகரின் பொறுப்பையே வற்புறுத்தினான். ஆயினும் அவன் நிதானமிழக்காது, தன் அரசாங்கத்தின் உரிமைகளுக்குப் பங்கம் விளைக்காவகையில் ஒத்துமேவி நடக்கவே விரும்பினான். ஆயின், சீன மொழியிலே 'பிரயாசைமிக்க கயவன்' எனப் பொருள்படும் பெயரையுடைய நேப்பியரோ இருவயினைத்த இணக்கம் யாதிற்கும் இசைந்திலன். அப்போது சீன அதிகாரவர்க்கம் தனக்கிருந்த ஒரேயொரு வழியிற் செல்ல நினைந்தது. ஆங்கிலேயரின் மடமையையும் பிடிவாதத்தையும் சுட்டிக்காட்டி ஒரு பிரசித்தம் வெளியிட்டபின்னர், பணியாளரும் சுமைகாரரும் களஞ்சியசாலையிலிருந்து வெளியேறுமாறு பதிலிராயன் கட்டளையிட்டான்; உள்ளூர்ச் சனங்கள் யாதும் விற்றலாகாதெனவும், அவ்வழி விற்போர்

மரணதண்டனைக்குள்ளாவரென்றும் தடையுத்தரவு விடுத்தான். அன்னியர் பிறரும் ஆங்கிலேயர்க்குச் சாமான் வழங்கக் கூடாதெனவும் எச்சரிக்கை செய்தான். அன்றியும், இக்கட்டளைகளின்படி மக்கள் பணிந்தொழுகுவதை உறுதிப்படுத்தற்காக அவன் களஞ்சியசாலைக்குப் படைஞரும் அனுப்பினன்.

பிரித்தனுடைய மாபெரும் மாட்சிமை உளதாக, தான் உறுதியும் துணிவுங் காட்டி அளவிற் சீனர் தாள்பணிந்தொழுகுவர் என முன்னம் எண்ணிய நேப்பியர்ப்பிரபு தனது மானங்காக்கக்கருதி, தனது தலைமையிலிருந்த கப்பல்களை முன்னேறிச் சென்றிடுமாறு கட்டளையிட்டு, களஞ்சியசாலையைக் காத்தற்காகக் கடற்படைவீரரை இறக்குவித்தான். இவ்வாறு சீன ஆணிலத்தையும் அதிகாரத்தையும் மீறிச் சென்றபோது, பதிலிராயன் உடனும் எச்சரிக்கைவிடுத்தான். பிரித்தானியரை முற்றுகையிட்டுத் தனிமைப் படுத்தவும் வேண்டிய ஆயத்தங்களை அடுத்து அவன் செய்தான். வரம்பிகந்து தான் நடந்தவாற்றை இப்போது உணர்ந்த நேப்பியர்ப் பிரபு தன் கப்பல்களோடு மக்கவோவிற்குத் திரும்புதற்கு ஒருவாறு இசைந்தான். இவ்வாறு மானமழிந்து திரும்பிய நேப்பியர், இருவாரஞ் சென்றபின் காலமாயினன்.

நேப்பியர்ப் பிரபு பாமேத்தனுக்கு எழுதிய கடிதங்களிலிருந்து பிரித்தானியரின் மனப்பான்மையைத் தெளிவாய் அறியலாம். பிரித்தானியரின் அகம்பாவத்தையும், சீன மக்களின் கருத்துப் போக்கை விளங்க மறுக்கும் பான்மையையும், பிரித்தானியர் விரும்புவது எதுவும் தவறுகமாட்டாதென்னும் உறுதியான நம்பிக்கையையும், அக்கடிதங்கள் எடுத்துக் காட்டுவன என்றவகையால் எமது கவனத்துக்கு உரியவையாகும். அடிப்பட்ட நடைமுறைக்கு மாறுய்ச் செயல்புரிந்தோனும் நேப்பியரே; வல்லந்தமாகக் கப்பல்களை முன்னேற விடுத்துக் கப்பற்படைஞரை இறக்கியோனும் நேப்பியரே. அவ்வாறிருப்பவும், அவன் சீனப்பதிலிராயனைத் 'தடிதல்' பற்றித் தன் கடிதங்களிலே பேசுகின்றுன்; படைப்பலங் கொண்டு வெருட்டியே சீனரொடு எஞ்ஞான்றும் இணக்கப் பேச்சு நடாத்தல் வேண்டுமெனவும் பாமேத்தனுக்கு எடுத்துரைக்கின்றுன். சீனத்தில் அக்கால் இருந்த பிரித்தானிய வர்த்தகரும் அக்கருத்தையே கொண்டிருந்தனர். கிழக்கிந்தியக் கம்பெனியின் முற்றுரிமையானது 1834 இல் முடிவுற்ற காலந்தொட்டு, சுயாதீன வர்த்தகரே பெருவலிபடைத்த கோட்டியாகி, சமர்விளைக்கத் தினவுகொண்டிருந்தனர். சீனச் சஞ்சிகையொன்றிலே 'பிரித்தானிய வர்த்தகன் ஒருவன் 'கைச்சாத்திட்டு எழுதிய' கட்டுரையானது—யாமன் என்பாலுல் எழுதப்பட்டதென்றெ பொதுவாகக் கருதப்படுவது—கட்டுப்பாடில்லாத் தனிப்பட்ட தாளாண்மையின்' நன்மைகளை வற்புறுத்துகின்றது; இங்கிலாந்தினுடைய பொருளாதாரத்தின் வலிமை பற்றிப் பெருமிதநடையிற் பேசுகின்றது; 'எம்முடைய பண்டங்களுக்கு விற்பனை வாய்ப்புப் பெற்றுக் கொடுங்கள், வேண்டிய மட்டும் நாம் அவற்றை வழங்குவோம்' என்றவாறுய்ப் பிரித்தானியக் கைத்தொழிலானது அறைகூவியழைக்கின்றதெனவும் அக்கட்டுரை இயம்பாநின்றது. விற்பனைவாய்ப்பை எவ்வாறு பெற்றுக்கொடுப்பது? அதற்கும் 'பிரித்தானிய வர்த்தகன்' எளிதான விடை தந்துள்ளான். 'இந்தியாவி

லும் பெரிய பிரித்தனிலும் எமக்குள்ள வர்த்தகமும் வருமானமும் ஒரு விசித்திரமான மனப்பான்மைக்குக் கட்டுப்பட்டு இருத்தலாகாது. இந்நகையதுத் துச் சில பீரங்கிப் படகுகள் நின்று, சில வெடிதீர்ப்பின் அம்மனப்பான்மை எளிதில் மீக்கொள்ளப்படும்.....சீனரோடு போர் மலிவதன் விளைவு யாதாகு மென்பதிற் சந்தேகமில்லை.'

'பிரித்தானிய வர்த்தகன்' தனது சமுதாயத்தின் சார்பாகவே பேசினன்—நிலைமை பொறுக்கவியலாததாகிவிட்டது. ஒப்போமாரும் ஒங்குவர்த்தகரும் எட்டுப் பிரமாணங்களும், வணிகர்மீது பற்பல கட்டுப்பாடுகளும், வர்த்தகம்மீது பல தீர்வைகளும் சேர்ந்திருந்த முறையினை, மீப்பெரும் வலிமைபடைத்த ஒரு நாட்டின் எதிர்ப்புக்கு மாருக இனியும் பேணுதல் இயலாது.

அன்றியும் இருபதாண்டுக் காலமாக அம்முறை வெறுங் கண்துடைப்பாக மாறிவிட்டது. சீன வர்த்தகம் உத்தியோகச்சார்பற்ற பிற வழிகளாற் செல்லத் தொடங்கிற்று. இப்பிரமாணங்களெல்லாம் நடைமுறையிலிருந்த கன்றனுக்குச் செல்வதை விடுத்து, கன்றன் ஆற்றுமுகத்திலுள்ள இலின்றின் எனும் நன்கூரத் தலத்துக்குக் கப்பல்கள் செல்லத் தொடங்கின. அங்கே சீன அதிகாரிகள் கண்டுங் காணர் போன்றிருப்ப, அன்னியவர்த்தகர் பேரரசின் திறைசேரிக்குப் போகவேண்டிய பணத்தைத் தாம் கையாடினர்; ஒப்போவும் பதிலிராயனும் செலுத்த முயன்ற அதிகாரத்தை மீறி நடத்தனர்; எட்டுப் பிரமாணங்களையும் ஒங்குவர்த்தகரையும் ஒருங்கே அலட்சியஞ் செய்தனர். கன்றனிலே உத்தியோக முறையாக நடந்த வெளிநாட்டு வர்த்தகம் 1831 இல் 70 இலட்சம் தொலரள வினதாகவே மதிக்கப்பட, இலின்றின் மூலமாய்த் தனிப்பட்ட தாபனங்கள் நடாத்திய வர்த்தகம் ஒருகோடியே எழுபது லட்சம் அளவினதாகக் கணிக்கப் பட்டது. அதில் ஒருகோடியே பத்துலட்சம் அபின் வியாபாரத்தால் வந்த தாகும்.

ஆகவே, யாடின் முன்னரே கண்டு தெளிவோடும் உறுதியோடுங் கூறியவாங்கு, நாடுகளிடையே சமத்துவம் பேணி, வர்த்தகத்தை எளிதாக்கவல்ல ஒரு பெரு மாற்றம் அவசரமான அவசியமாயிற்று. படைப்பலம் பிரயோகித்தாலல்லது அத்தகைய மாற்றங் கைகூடாதென்பதும் தெளிவாயிற்று. அத்தகைய சூழ் நிலையிற் போரொன்று தப்பாது மூளும்—தடுக்கவியலாது—என்றே தோன்றிற்று. உலகிற்கு அதிர்ச்சியளித்து, எதிர்காலம் பற்றியும் அவநம்பிக்கை உண்டாக்கியவை யாவெனின், போர் தொடுத்தற்குக் காட்டப்பட்ட தலைக்கீடும் போராடிய முறையுமாகும். அபினே தலைக்கீடாயிற்று; சூறையாடலே போர் முறையாயிற்று. அபின் வியாபாரம் இயல்பிகந்து பெருகியதுபற்றி முன்னமே குறிப்பிட்டுள்ளம். கிழக்கிந்தியக் கம்பெனி அபினை நேராகச் சீனத்துக்கு ஏற்று மதி செய்திலதாயினும், தனிப்பட்ட வர்த்தகராற் கொண்டு செல்லப்பட்ட அபினைது கல்கத்தா ஏலவிற்பனையிற் கம்பெனியாலேயே விற்கப்பட்டது. இலின்றினிற் கள்ளக்கடத்தல் மூலமாகவும், கரையோரமாகச் சீனச் சட்டங்களை மீறிச் சென்றும் சீனமக்களுக்கு இந்த நச்சுமருந்து விற்பனையாயிற்று. உத்தரவுச்

சீட்டின்றிப் படைதரித்து சட்டப்படி தடுக்கப்பட்ட பண்டங்களே ஏற்றிச் செல்லல், சீன பிரித்தானிய சருவதேசச் சட்டங்களின்படி கடற்சூறையே என்பதற்கு ஐயமில்லை.

சீனப் பேரசின் அரசாங்கம் இக்காரியங்களே யெல்லாம் நன்றாக அறிந்திருந்தது. சீன மக்கள்மீது வேண்டுமென்றே அபினைத் திணிக்கச் செய்த இம்முயற்சிகள் பற்றிப் பேரசன் கவலை கொண்டான். அவ்வியாபாரத்தைத் தடுக்கும் பொருட்டாய் அவன் செவ்வையான நடவடிக்கை மேற்கொளத் துணிந்தான். அவ்வழி, தேர்ந்த நேர்மையும், கண்ணியமும் நாட்டுப்பற்றும் உடையோன், ஊ சுவாங்கு மாகாணத்துப் பதிலிராயன் இலின் திசி உசு என்பானைப் பேராசின் ஆணையாளனாய் நியமனஞ் செய்தான். பேரசின் ஆணையாளன் என்ற வகையாலும், மேன்மைதங்கிய தளபதியென்ற வகையாலும் அளவிறந்த அதிகாரம் படைத்திருந்த இலின், இரு சுவாங்கின் பதிலிராயனுக்கும் மேற்பட்ட பதவி வகித்தான். இந்நியமனம்பற்றிய செய்தி கேட்டுப் பதிலிராயன் மயக்கமடைந்து வீழ்ந்தான் என்பர். இலின் கொண்ட திட்டம் எளிமையானது. ஒழுங்கான வர்த்தகத்தை அவன் தொடர்ந்து நடத்த விரும்பியதோடு, அதற்கு ஊக்கமளிக்கவும் விரும்பினான். ஆனால், அபின் வியாபாரத்தை வேரோடுங்களைய அவன் உறுதி கொண்டான். சட்டத்தைப் பேணுவதிலன்றிப் பிறவகையால் அவன் அன்னியரிடத்துப் பகைமை கொண்டான் எனக் கூறுதற்கு யாதொரு சான்றுமில்லை.

வர்த்தகன்மார் (20,000) பெட்டிகளில் அடைத்து வைத்திருந்த அபினை அவன் பறிமுதல் செய்து, யாவரும் வியப்படையும் வகையில் பகிரங்கமாக எரித்தழித்தான். அப்பால், பேரசின் சட்டங்களுக்கு மாறாக 'இத்தீய வர்த்தகத்தைத் தொடர்ந்து நடத்தமாட்டோம்' எனக் கூறும் ஒப்பந்தப் பத்திரங்களே வர்த்தகரிடமிருந்து அவன் பெற்றான். பிரித்தானிய வர்த்தகர் அவ்வாறு கையொப்பமிட்டாராயினும், அவ்வழியொழுகும் விருப்பு அன்னார்க்கு இருந்திலதுபோலும். முக்கியமான பிரித்தானியத் தாபனமான யாடினும் மதீசனும் மனிலாவைத் தளமாய்க் கொண்டு, படைக்கலந் தரித்த கப்பல்கள்வாயிலாய்க் கரைப்புலங்களிலே கள்ள வியாபாரஞ் செய்ய அப்போதே திட்டங் கொண்டது. இதுகாறும் காரியமெல்லாம் பிசகின்றி நடந்தேறின. ஆயின் சிலவாரகாலஞ் சென்றபின்னர், குடிவெறிப்பட்ட பிரித்தானிய மாலுமிகளின் குழாமொன்று சீனன் ஒருவனைக் கொலைசெய்தபோது, தொந்தரவு ஆரம்பமாயது. பிரித்தானிய வர்த்தகமேற்பார்வையாளன் அக்கொலை செய்தோனை ஒப்படைக்க மறுத்தான். பேரசனுடைய அதிகாரம் மீறப்படுவது கண்ட இலின், அம்மாலுமியை ஒப்படைக்க வேண்டுமென்றும், ஆற்றமுகத்தில் நின்ற பிரித்தானியக் கப்பல்கள் மூன்றுநாட்களுளே துறைமுகத்துட் புகுதல் வேண்டும், அன்றேல், அவ்விடம் விட்டகலுதல் வேண்டுமென்றுங் கட்டளை விடுத்தான். அவ்வாறு செய்யத் தவறின், தன் அதிகாரத்தை நிலைநாட்ட நடவடிக்கை யெடுக்கப்போவதாகவும் உறுதி கூறினான். அப்பால், அத்தளபதி போர் யங்குகளைத் திரட்டலாயினன். பிரித்தானியரும் தம் போர்க்கப்பல்களாகிய 'வொலாகே', 'அயசிந்து'

எனுமிரண்டையும் செலுத்திச் சென்று, இணக்கப்பேச்சைக் காத்திராது, சீன யங்குகள்மேற் பீரங்கிப் பிரயோகஞ் செய்து அவற்றை ஆழ்த்தினர்கள். இவ் வாறுக முதலாவது அபின் போர் தொடங்கிற்று.

இலின் இருவகையிலே தவறிழைத்தான். திருட்டுத்தனமாக நடந்த அபின் வியாபாரத்திலே பிரித்தானிய அரசாங்கம் பங்கு கொண்டதில்லையென்றும், பழிக்கஞ்சா வர்த்தகரும் தறுகண்மை மிக்க கடற்சோரரும் அதனை நடாத்தினர் என்றும் அவன் நெஞ்சார நம்பினன். அவன் விற்ரோரியா அரசிக்கு எழுதிய கடிதங்களிலே இந்நம்பிக்கை புலனுகின்றது. 'மாண்புமிக்க உங்கள் நாட்டின் ஆட்சியிலுள்ள கபடமிக்க சதியாளரின் ஆக்கமே இத்தீங்கு பயக்கும் பண்ட மென நாம் ஓர்ந்துள்ளோம். அதனைப் பயிர்செய்து விற்றலை, மாண்புமிக்க அதி பதியாகிய நீவிர் பணித்திருக்க மாட்டீர் என்பதற்கையமில்லை'. பிரித்தனி லுமே 'அத்தியக்கமருந்தை மக்கள் சுவாசித்தற்கு அனுமதிக்கப்படுவதில்லை' என இலின் சுட்டிக்காட்டினன். 'அது தீங்கு பயப்பது தேற்றமேயாயின், மற் ரூரை அதன் தீயவினைவிற்காளாக்கி, நீவிர் இலாபமீட்ட முயல்வதென்னை'? 'கடவுளாணைக்கு அது எவ்வாறு இசைவாகும்?' என்று அவன் வினவினன். இவ்வகையில் அவன் கொண்ட விளக்கந் தவருனதே. இங்கு, இலண்டன் கிழக் கிந்திய சீனச் சங்கத்தின் குழு வற்புறுத்திக் காட்டியவாங்கு, அரசியின் அர சாங்கம் தான் செய்வது இன்னதென நன்ருய் அறிந்தே அதில் முற்ருக ஈடுபட் டிருந்தது. அக்குழுவின் விஞ்ஞாபனம் வருமாறு கூறிற்று: 'கிழக்கிந்தியக் கம் பெனியின் ஆணிலங்களிலே அபின் பயிரிடுகை கண்டிப்பான முற்றுரிமையாக இருப்பதையும், இந்திய அரசாங்கமே அம்மருந்தைப் பகிரங்க ஏலத்திலே விற் பதையும், அது இறுதியிற் சேருமிடம் யாதென்பதை நன்ருய் அறிந்தமையால் அதனை ஏற்றுமதி செய்வோர்க்குப் பணவுதவி செய்யுமாறு பகிரங்க அறிக்கை யாற் கம்பெனியின் ஆட்சிப்பீடம் கட்டளை விடுத்ததையும் நாம் கண்ணுறும் போதும்; அபின் பயிரிடுகை, இந்திய வருமானத்துக்கு அதனுல் வருந்தொகை ஆகியவற்றையெல்லாம் நுண்ணிதாக ஆய்ந்து, அது இறுதியிற் சென்று சேரு மிடத்தை நன்ருய் அறிந்து, அத்தகை முக்கியமான வருமான மூலத்தைக் கைவிடுதல் புத்தியாகாது எனப் பிரபுக்கள் சபை, மக்கள் சபை எனுமிவற்றின் குழுக்கள் தயக்கமின்றி முடிபு கொண்டதைக் கவனிக்கும்போதும்; மேலும், அமைச்சவை மந்திரியொருவனைத் தலைவனுகக் கொண்ட இந்திய மன்றம் கிழக் கிந்தியக் கம்பெனியைச் செவ்வனே கட்டுப்படுத்தும் அதிகாரம் உடையதாத லின், தான் அனுமதிக்காத தொன்றைத் தடுத்திருக்கலாமே யென்பதை நாம் அறியும்போதும்; உயர்ந்த அதிகார வருக்கத்தினுல் இவ்வாறு நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அனுமதிக்கப்பட்ட ஒரு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வர்த்த கர்மீது பழியோ கண்டனமோ சுமத்துதல் ஆற்றவும் அநீதியாகவே எமக்குப் படுகிறதென்பதை நாம் வெளிப்படையாகக் கூறத்தான் வேண்டும்!'

சட்டவிரோதமான இழிவுமிக்க இவ்வியாபாரத்திலும், அதனேடு கூடிய கடற் சோரத்திலும் பிரித்தானிய அரசாங்கம் மூழுப்பொறுப்பேற்றிருந்தது. அரசு பற்றி அறச்சார்பான ஒரு கொள்கையினையே கொண்டிருந்த—கொன்பியூசியசு

மதத்தோனை — இலின் இவற்றை யெலாம் அறியவுமில்லை; அறிந்திருக்கவும் முடியாது. அவன் கருத்துப்படி, வானுலகின் கட்டளைக்கிணங்க உலகிலே முறை செய்பவன் பேரரசன் அன்றே? அவனுடைய இரண்டாவது தவறு யாதெனின், தியவணிகரைப் பாதுகாத்தற்குப் பிரித்தானியக் கடற்படை தலையிடாதென நம் பியதேயாம்—இத்தவறு முதற்றவறின் அடியாகப் பிறந்ததொன்றே. கடலிலே பிரித்தனுக்கு இருந்த பெருவலிபற்றி நன்கறியாத இலின், மேன்மை தங்கிய போர்க்கலத் தளபதியென்ற வகையில், பிரித்தானிய வணிகக் கலங்களையும் போர்க்கப்பல்களையும் எளிதின் மீக்கொண்டு தனது அதிகாரம் நாட்டலாமென நம்பிக்கை கொண்டிருந்தான். இத்தவறுகள் காரணமாகப் போரின் முடிவு பாதிக்கப்பட்டதேயாயினும், இலினுடைய செயலின் சட்டநேர்மையை மாற்றிய தில்லை. சீனர்மேல் வல்லந்தமாகப் போர் தொடுத்து, சட்டமுரணை வியாபா ரத்தை அடிப்படையாகக் கொண்டதும் கடற்சோரத்தாற் கொண்டு நடாத்தப் பட்டதுமான ஒரு வர்த்தக முறைக்கு அரசாங்கத்தின் அறச்சார்பான ஆதரவை எலியற்று வழங்குவதற்கும் அத்தவறுகள் தக்க நியாயமாகா.

போரின் விவரங்களை எடுத்துக் கூறுதல் இங்கு அவசியமன்று. எனினும், போர் தொடங்கியவுடனும், தாம் முன்னம் ஒப்படைத்த அபினுக்கும் சில தீவு கட்கும் நட்டவீடு கோரத் தலைப்பட்டனர் பிரித்தானியர்! அன்றியும் இப்போ ரிலே தீர்க்கமான ஒரு முடிவு காணப் பிரித்தானியர் துடித்தனர். வளமார்ந்த சீன வர்த்தகம்பற்றிய ஓர் உருவெளித்தோற்றம் — உலகிலே சனத்தொகை மிக்க நாட்டிற் பிரித்தானியப் பண்டங்களைப் பெரும்பாலும் முற்றுரிமையின் அடிப்படையில் விற்றலாகிய மாயக்காட்சி — பிரித்தானியரின் கற்பனையிலே தீவிரமாக வேலை செய்யத் தொடங்கிற்று. பிரித்தானியப் பண்டங்களை விற்றற்கு வரைவின்றி வாய்ப்பளிக்கும் தனிப்பெரும் நாடு இதோ உளது என்றவாறுப்ப் பேசப்பட்டது. இந்த உருவெளித்தோற்றமே, இக்கானல் நீரே, சீனமென்னும் உலைநிலத்திற் பிரித்தானியரை மென்மேலுஞ் சிக்கவைத்தது. பிரித்தானியப் படைகள் சாங்காயை யூன் 13 இலே அடிப்படுத்தி (1842), சீனவின் உயிர்நாடி போன்ற யாங்குகிசிவரை ஊடுருவிச் சென்று, பெருநகராகிய நாங்கிங்கைச் சாடு தற்கு ஆயத்தங்கள் செய்தன. அங்கே நாங்கிங்குப் பொருத்தனை கைச்சாத்திடப் பட்டது (1842, ஓகத்து 29).

சீன வரலாற்றிலே பிற்றை ஞான்று அடிக்கடி நிகழப்போவதற்கு அறிகுறி போன்றிருந்த ஒரு சிறு சம்பவம் இங்குக் குறிப்பிடத்தக்கது. சீனச் சஞ்சிகை, XI, 680, வருமாறு கூறுகின்றது: 'செத்தம்பர் 3. மெய்ம்மையாக மிலேச்சர் போன்று செயல்புரிந்த பிரித்தானிய அதிகாரிகளையும் பிறரையுங் கொண்ட கோட்டியொன்று பீங்கான் கோபுரத்திற்கு வந்தது. உளியும் கோடரியும் சுத்தி யலுங் கொண்டு அவர்கள் (மடாதிபதிகள் கூறியது போல) பெரும்பாளம் பாள மாக வெட்டி யெடுத்துக் கொண்டு போயினர். அதலால் அவர்கள் இழைத்த சேதம் சிறிதன்று'. இந்த அநுசிதத்தைக் கண்ணுற் கண்ட சீனன் ஒருவன் வரு மாறு குறிப்பிட்டான்: 'ஆங்கில மிலேச்சர் பல்காலும் படோடாவில் ஏறி..... மெருகிட்ட ஓடுகள் பலவற்றை எடுத்துச் சென்றனர் — ஆற்றவும் வெறுக்கத்

தக்க இழிசெயல் அது'. வில்லியம் பாணட்டு என்பவன் இந்த அனுசிதச் செயலே யுமே 'ஒரு சின்னத்தையோ அபூர்வப் பொருளையோ பெறுதற்குள்ள இயல்பான ஆசையே அது', என மன்னிக்க முற்படுகின்றான். அழிவு வினைத்து அனுசிதஞ் செய்தற்கெழுந்த இவ்வடக்கவியலா நாட்டம், சீனத்தோடு ஐரோப்பியர் கொண்ட தொடர்புகளிலே, 1860 இல் வேனில் மாளிகையிலும், 1870 இலே தியென்சினிலும், 1900 இற் பீக்கிங்கிலும் மீண்டும் மீண்டும் வெளிப்படுவதைக் காணலாம்.

நாங்கிங்குப் பொருத்தனைப்படி ஒங்கொங்குத் தீவு பிரித்தானியர்க்காயது ஒரு புறமாக, ஐந்து துறைகளை வெளியுலகத் தொடர்பின் பொருட்டுத் திறந்து வைத் ததே அதிற் கண்ட முக்கியமான வாசகமாகும். அத்துறைகளிலே, 'இடுக்கணும் தடையுமின்றித் தமது வணிக முயற்சியைத் தொடர்ந்து நடாத்துதற்காக வெளி நாட்டு வர்த்தகர் தத்தங் குடும்பத்தோடும் தாபனங்களோடும் வதிதற்கு அனு மதிக்கப்படுவர்'. சீனத்தோடு மேற்றிசை வல்லரசுகள் கொண்ட தொடர்பினைத் துக்கும் இவ்வாசகமே அடிவாரமாய் அமைந்தது. இனி, 'காவல் அலுவலர்' எனும் பெயருடைய மேற்பார்வையாளர் தங்கி வாழ்தற்கு அனுமதியும், ஒழுங் கினமைந்த நியாயமான வரிமுறையும், சுங்கத் தீர்வையும் அத்துறைகளில் வழங் கப்படவேண்டுமெனவும் அப்பொருத்தனை குறித்தது.[1] இத்தகைய பொருத்தனை கள் வங்கியாவில் (1844, யூலை 3) அமெரிக்கரோடும், வம்பொவாவில் (1844, ஒற்ரோபர் 24) பிரான்சியரோடும் ஒப்பேற்றப்பட்டன. தூரகிழக்கிலே ஆதிக்கம் பெற்றி ருந்த காலத்துங் கைவரப்பெறுத அதிகாரத்தை மக்கவோவிற் போத்துக்கேயர் பெற்றனர்.

நூற்றாண்டுக்காலமாகச் சீனத்தை ஆட்டி வைத்த சருவதேசத் தொடர்பு களுக்கு அச்சாணிபோன்றிருந்தது இந்த நாங்கிங்குப் பொருத்தனையேயாகும். சீனத்தின் தனிமைப்பாட்டைப் பலவந்தமாகத் தகர்த்தலும், ஐரோப்பிய நாடு களோடு வர்த்தகஞ் செய்யுமாறு கட்டாயப்படுத்தலும், சீனம் மற்றை நாடுகளி லும் உயர்ந்ததன்று உண்மையிற் குழ்ந்ததே யென்பதை உணர்த்தலுமே அப் பொருத்தனையின் நோக்கங்களாகும். பொருத்தனையில் இடம்பெற்ற ஐந்து துறை களும் யாங்குதிசி யாற்றுமுகத்தில், கரையோரமாக இருந்தன. அவை தாம் சாங்காய், நிங்போ, பூச்சோ, அமோய், கன்றன் என்பன. ஆங்கு வதிந்த வெளி நாட்டு வணிகர் நேராக வர்த்தகஞ் செய்யும் உரிமை பெற்றிருந்தனர். ஒவ்வொரு துறையிலும் போர்க்கப்பலொன்று நிறுத்தி வைக்கப்படும்; 'வர்த்தகம் பாது காத்தற்காகத் திரியும் இப்போர்க்கப்பல்கள் சீனத்தில் எத்துறைக்கு வந்தாலும் அத்துறையிலே நன்கு வரவேற்கப்படல் வேண்டும்' எனுங் கோரிக்கையைப் பிரான்சியரும் அமெரிக்கரும் வலிந்து பெற்றார்கள். பிரான்சியர் தாம் செய்த

1. பிரித்தானியப் பொருத்தனையிற் காணப்பட்ட ஒரு வினோதமான இயல்பு, ஐரோப்பிய வரலாற்றறிஞராற் பூசிமெழுகப்படினும், இங்குக் குறிப்பிடத்தக்கது: அடிப்படுத்தப்படாத நகரங்களுக்கீடாக "விடுதலைப் பணம்" அறவிடுவதே அஃது. பிரித்தானியப் படைஞர் ஒரு நகரத்தை வென்றடிப்படுத்தினுற் கொள்ளையடிப்பர். அவ்வாறு அந்நகரைக் கொள்ளையடியாமல் விடுதற்கு ஈடாகவே அப்பணம் அறவிடப்பட்டதென்பது கருத்து. யாங்சோ நகருக்காக 5,00,000 தொலர் இவ்வாறு அறவிடப்பட்டதாம்.

பொருத்தனையிலே, கிறித்துவ மதத்தின் சார்பாகப் பெய்திட்ட வாசகம், சீனத்துக்கும் மேனாட்டோர்க்குமிடையே நல்லுறவு வளர்க்கச் செய்த முயற்சிகளையெல்லாம் வியர்த்தமாக்கியது. அச்செயலால், ஐரோப்பிய நாடுகளும் அவைதம் மிசனரிமாரும் சீனமக்கள்மீது திணிக்க விரும்பிய ஒரு மதத்தோடு ஐக்கியப் பட்டனர்.

இத்தனைக்காலமும் தத்தங் களஞ்சியங்களிலே முடங்கிக் கிடந்த வர்த்தகர் இப்போது சுதந்திரமாக மூச்சு விட்டார்கள். அவர்கள் கண்ட ஆசைக்கனவு நிறைவேற்றுந் தறுவாயில் இருந்தது. தென்சீனப் பெருந்துறைகளிலே வர்த்தகஞ் செய்தற்கு அன்னர் உரிமை பெற்றனர். சாங்காயிலே இங்கிலாந்தும் அமெரிக்காவும் பிரான்சும் குடியிருப்பு நிறுவின. சாங்காயானது சொந்த மாநகர சபையும் காணிச்சட்டங்களும் இன்ன பிறவும் படைத்த வெளிநாட்டுப் பகுதியிலே பிரித்தானியப் பண்டங்களை விற்பதற்கு அளப்பரிய வாய்ப்புக்களை அளிக்கவல்ல ஒரு துறைக்குத் தாம் முன்னேறிவிட்டதாகப் பிரித்தானிய வர்த்தகத் தாபனங்கள் எண்ணின. ஆயின் அவை கண்ட ஆசைக்கனவுகள் ஈடேறவில்லை. பொருத்தனைத் துறைகளால் வந்த சிறப்புரிமைகள் இருந்தக்கண்ணும், சீனத்துக்கு 1850 இற் சென்ற பிரித்தானிய ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமானம், 1843 இல் இருந்ததைக் காட்டிலும் மேற்பட்டதில்லை. இனி, 1854 இல் அது உண்மையிற் குறைந்துவிட்டது. சீனத்திலிருந்த வெளிநாட்டுத் தாபனங்களின் கடிதப்போக்குவரத்திலே, 'மந்தம்,' 'நம்பிக்கை பயக்கா நிலைவரம்,' 'உங்கள் (சீன) சந்தைகளின் கேவலநிலை,' என்பனபோன்ற வார்த்தைகள் அடிபடத் தொடங்கின. அபின் அழிதற்குச் சந்தையிருந்தது; பிற பொருள்களுக்கு யாதும் இருக்கவில்லை. சீன வர்த்தகத்திலே பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த யா஡ன் மதீசன் கம்பெனியார் 1850 யூனிலே வருமாறு அறிக்கை செய்தார்கள்: 'இறக்குமதிகளுக்குப் பாதகமான வகையில் இங்குச் சந்தைகள் மாறியதுபற்றி எமது சென்றமாத அறிக்கைப் படிவங்கள் கூறியுள. அதை நாம் இப்போது உறுதிப்படுத்தி, பருத்தி நூலிலும், சட்டைத் துணியிலும் பாரதூரமான வீழ்ச்சி யேற்படும் என்பதை அறிவிக்கின்றோம். கப்பல்கள் மேலதிகப் பொருள்களைக் கொண்டுவந்திறக்கியமையால் விளைந்த தேக்கத்தை எளிதாக அகற்றுதல் இயலாது.[1]

பிரித்தானியரின் ஆசைக்கனவு பொய்த்து விட்டதுமல்லாமல், பயங்கரக் கனவாகவும் மாறத் தொடங்கியது. ஐரோப்பிய வர்த்தகருக்கு இது பெரும் அதிசயமாயிருந்தது. சீனர் 30,00,00,000 பேரைக் கொண்ட ஒரு சமுதாயத்தில் இலங்காசயர்த் துணிகளுக்கு மதிப்பு ஏற்படவில்லையாயின், அதற்கு யாதோ இரகசியமான நியாயம் இருத்தல் வேண்டும். சீன அதிகாரிகள் விளைத்த இடைஞ்சல்களும் எதிர்ப்பும், மற்றுப் பிரித்தானியக் காவற்றாதரின் பலவீனமுமே காரணங்களாகக் காட்டப்பட்டன. சீன வர்த்தகத் தொடர்புகள்பற்றிப்

[1] See also, Old China Hands and the Foreign Office, George Allen and Unwin, London.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற் சாட்சியமளித்த மதீசன் வருமாறு முறையிட்டான் (1847) : 'சீனத்திலே ஓர் ஆங்கிலேயன் இடர்ப்பட்டகாலே, பிரித்தானிய அதிகாரவர்க்கம் பெரும்பாலும் சீனர் சார்பாகவே நிற்கின்றது'. இவ்விடர்ப்பாடுகளுக்கு முடிவு காணும் வகையில், பிரித்தானிய வர்த்தகச் சமுதாயமானது மூன்று அமிசங்களைக் கொண்ட யோசனை கூறிற்று. பொருத்தனைத் துறைகளுக்கு அப்பாலும் உரிமைபெறல்; குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்வதிற் படைப்பலம் பிரயோகிக்கக் காவற்றூதர்க்கு உரிமையளித்தல்; மத்திய சீன அரசாங்கத்தோடேயன்றி, மாகாண அதிகாரவர்க்கத்தோடு நேராகத் தொடர்பு வைத்தல் என்றிவையே அவ்வமிசங்களாம். 'இன்று நாம் எல்லைப்படுத்தப்பட்டுள்ள துறைகளுக்கு அப்பாலும் விற்றற்கும் வாங்கற்கும் உரிமைபெற்றுலன்றி, சீனத்தோடு நாம் நடாத்தும் வர்த்தகம் ஒருகாலும் பூரண வளர்ச்சியடையாது' —இவ்வாறு மன்செசுற்றர் வர்த்தக மன்றம் கழறியது.

இவ்வாருக உருவெளித்தோற்றமானது இன்னும் வருந்தியழைப்பதுபோற் காணப்பட்டது. அத்தோற்றம் இப்போது பொருத்தனைத்துறைகளிலன்றி யாங்குதிசிப் பள்ளத்தாக்கிலே காணப்பட்டது. மேலும், சீனத்தில் முற்பட்டுச் செல்லுதற்குத் தலைக்கீடு காண்டல் கடினமாய் இருந்திலது. கலகங்களும் இன்னுஞ் செயல்களும் அக்காலத்தில் அடிக்கொருகால் நிகழ்ந்ததுண்டு—அவற்றுக்குக் காரணம் பொதுவாக அன்னியரின் கட்டுப்பாடற்ற நடத்தையும் அகம்பாவமுமேயாம். ஓர் உதாரணத்தை இங்குக் காண்போம். தெருவிலே கூறிவிற்போனெருவனது சத்தம் கேட்டு எரிச்சல் கொண்ட ஆங்கிலேயன், கொம்ரன் என்பான், தான் இட்டதே சட்டமென நினைந்து, அச்சீனனை விரட்டியோட்டி அவனுடைய சொத்துக்கும் சேதம் விளைத்தான் (1846, யூலை 4). அப்பால் இச்சம்பவத்தைத் தொடர்ந்து, கொம்ரனுக்கு நண்பன் ஒருவன் அதே காரணத்திற்காக இன்னெரு சீனனை அடித்துவிட்டான். இதன்வழி கலகம் விளைந்தது இயல்பே. சீன அதிகாரவர்க்கம் அன்னியரையே பாதுகாத்தது. ஆயினும் அதனுல் விசித்திரமான விளைவே ஏற்பட்டது. சீனரைச் சாடிய கொம்ரனை அவனுக்கு நண்பனை தண்டிக்கப்பட்டிலனையினும், கலகஞ் செய்தாரைத் தண்டிக்குமாறு பிரித்தானிய அதிகார வர்க்கம் வற்புறுத்திற்று. வணிகரைப் பாதுகாத்தற்கும், மற்று, சீனக் கடைக்காரரை அன்னர் அச்சமின்றி இடையிடை உதைத்தற்குமாகக் கன்றனிலே போர்க்கப்பலொன்று நிறுத்திவைக்கப்பட்டது.

அக்காலத்திற் பரிமாறப்பட்ட கடிதங்களை ஆராயும்போது இரு விடயங்கள் தெளிவாகப் புலப்படுகின்றன. முதலாவது, பொருத்தனை விதித்த நியதிகளை நிறைவேற்றி இயன்றவரை இடர்ப்பாடுகளைத் தவிர்த்தல்; இரண்டாவது, இங்கிலிசு என்பான் நீதிமன்றத்திலே அளித்த சான்றின்படிக்கு, 'சீனத்தின் எந்தவொரு சட்டத்தையும் பொருட்படுத்தாத' வெளிநாட்டு வர்த்தகரின் அகம்பாவம் எனுமிவையாகும். சீனத்திலே வெளிநாட்டோரின் உரிமைகளை உறுதிப்படுத்திய வாசகங்களுக்கு விரிவான விளக்கங் கொடுத்து, அவ்வழி, தத்தம் சிறப்

புரிமைகளையும் அதிகாரத்தையும் பெருக்குதற்கு வெளிநாட்டு வணிகர் முயன்றனர். இவ்வழி விளைந்த விளைவு இருபடியானது. சீனர் அன்னியரை ஆற்றவும் வெறுக்கத்தலைப்பட்டனர். பிரித்தானியக் கடற்படை ஒரோவொருகால் தனது படைப்பலத்தைப் பிரயோகித்தமையால், சீன அரசாங்கத்தின் அதிகாரம் தொடர்ந்து நலிவுற்றது. அநியாயமான கோரிக்கைகளைப் பொதுமக்கள் தீவிரமாக எதிர்த்தபோதும், உள்ளூர் அரசாங்கங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய வாயின.

நாங்கிங்குப் பொருத்தனையானது, நிலைமையைக் குழப்பிவிட்டதேயல்லாமல், உறுதிப்படுத்தவில்லை யென்பது தெளிவாயிற்று. பிரச்சினைகளை மீண்டுங் கிளப்பி, படைப்பலங்கொண்டு அவற்றைத் திண்ணமாகத் தீர்த்திடுமாறு பிரித்தானிய அதிகார வர்க்கம் நெருக்கப்பட்டது. பொருத்தனையை மாற்றியமைக்கும் பொருட்டாக, 1854 இலே பிரித்தானியரும் பிரான்சியரும் அமெரிக்கரும் இணைக் கப்பேச்சுத் தொடங்கினர்கள். நான்கு குறிக்கோள்களை இலக்காய்க்கொண்டதே இவ்வினைக்கப் பேச்சு. சீனப் பேரரசின் எல்லாப் பகுதிகளுக்குஞ் சுயாதீனமாகச் செல்லும் உரிமை; யாங்குதிசி யாற்றிற் சுயாதீனமான கப்பற் போக்குவரத்து உரிமை; அபின் வர்த்தகத்தையும் 'பன்றி' (சீனத்தொழில்) வர்த்தகத்தையும் சட்டவமைதிப்படுத்தல், பீக்கிங்கொடு நேரான சூழ்வியற்றொடர்புகள் ஏற்படுத்தல் ஆகியனவே அக்குறிக்கோள்கள். அவற்றைச் சீனர் எதிர்ப்பதென்பதையும், அவற்றுளும் யாங்குதிசியாறும் அபின் வர்த்தகமும்பற்றிய குறிக்கோள்களை அடைதற்குச் சீனரைப் படுதோல்வியுறுத்த வேண்டுமென்பதையும் மேனாட்டுத் தூதுவர் அறிந்தேயிருந்தனர்.

போர் தொடுத்தற்கு வேண்டிய தலைக்கீடு எளிதாய்க் கிடைத்தது. பிரித்தானியப் பதிவுடையதெனக் கொள்ளப்பட்ட 'அரோ' எனுங் கப்பல்—சூ ஆ—செங்கு என்பானுடையது—பல கடற்சோரங்களிலே ஈடுபட்டவனெனக் கருதப்பட்ட இலீ மிங்—தாய் எனுங் கடற்கொள்ளைக்காரனைத் தாங்கிக் கன்றன் துறையுட் புகுந்தது. சுவான்றுங்கு மாகாணத்தின் பதிலிராயனும் உயர் ஆணையாளனுமாயிருந்த யே மிங்—சின் என்பான் அக்கப்பலைச் சோதித்து குற்றவாளிகளைச் சிறையிட்டான். பிரித்தானிய அதிகாரவர்க்கம் தான் நாடிய தலைக்கீட்டை இங்குக் கண்டது. பதிலிராயன் மன்னிப்புக் கோரல் வேண்டுமென்றும், செய்த பிழைக்கீடாகக் கழுவாய் தேடல் வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது. ஆயின் தான் செய்த செய்கை தன் அதிகாரத்துக்கு உட்பட்டதேயென்பதை உணர்ந்த பதிலிராயன் ஆங்கிலேயரின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க மறுத்தான். பிரித்தானியர் வேண்டுமென்றே பலவந்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதிலும், உறுதிமிக்கோனுகிய பதிலிராயன் அவைகண்டு அஞ்சினுனல்லன். இனி, அவர்தம் கோரிக்கைகளுக்கு அவன் இணங்கியிருந்தாலும், வேறு தலைக்கீடு ஆங்கிலர்க்கு அகப்பட்டிருக்கும். பொருத்தனையை மாற்றியமைத்தற்கு ஆங்கிலர் துணிந்து விட்டார்கள்—படைப்பலத்தாலேயே அது கைகூடத் தக்கது.

முதல் ஆங்கில—சீனப் போருக்குத் தலைக்கீடாயிருந்தது அபின். இப்போது, சீனருடைய சட்டவிரோதமான முயற்சிகளுக்குப் பிரித்தானிய அதிகார வர்க்கம் அளிக்க முற்பட்ட பாதுகாப்பே இரண்டாம் போருக்குத் தலைக்கீடாயது. இரண்டாம் போரின் போக்கும் முதலாவதன் போக்கையே பெரும்பாலும் ஒத்திருந்தது. மூன்றும் நெப்போலியனுடைய ஆட்சியிலே 'பெரும்புகழ்' பற்றி மீண்டுங் கற்கத்தொடங்கிய பிரான்சியர், கிழக்குலகக் கொள்ளையிலே தாமும் ஒரு பங்கு பெறுதல் வேண்டுமென ஆவல் கொண்டு, பிரான்சியக் குருவானவர் ஒருவர் கொல்லப்பட்டமையைத் தலைக்கீடாகக் கொண்டு போரிற் கலந்தனர்.

இவ்வாறாக அது ஆங்கில — பிரான்சியரின் போராகியது. அமெரிக்கர் இப்போரிலே பங்கு கொண்டிலராயினும், ஆங்கில — பிரான்சிய நட்பாளர் அடைய முயன்ற குறிக்கோள்களைத் தாமும் பூரணமாக ஆதரித்தனர். இதற்கிடையில் இந்தியாவிலே போர் குறுக்கிட்டதாதலின் (1857—8), போர்க்கருமங்கள் செவ்வனே நடைபெறவில்லை. எனினும், 1857 இற் கன்றன் கைப்பற்றப்பட்டது; பதிலிராயன் யே என்பான் சிறைப்பட்டு இந்தியாவிற்குக் கடத்தப்பட்டான். மேற்றிசை வல்லரசுகளின் பிரதிநிதிகள் நேராகப் பீக்கிங்கொடு இணக்கப்பேச்சுத் தொடங்கவேண்டுமென வற்புறுத்தினர். பீக்கிங்கு அதற்கு மறுத்தால், தியென்சினைப் பாதுகாக்கின்ற தாக்குக் கோட்டைகளை மேனாட்டுக் கடற்படைகள் வென்றடிப்படுத்துமென எச்சரிக்கை சென்றது. தியென்சின் பதிலிராயன் இணக்கப்பேச்சிற்குச் சம்மதித்தான். ஆயின், அவ்வழி, நட்பு நாடுகள் திருத்தியடைந்தில. சீனம் நெடுங்காலமாகப் பாராட்டி வந்த மேம்பாட்டை இறுதியாகவும் முற்றுகவும் தகர்த்து, பேரரசினுடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளோடு நேராகச் சமாதானம் பேசி, பேரரசின் தலைநகரிலேயே பொருத்தனைக்குக் கைச்சாத்திடல் வேண்டுமென அவர்கள் தீர்மானம் கொண்டார்கள். வெளிநாட்டுத் தூது வரைப் பீக்கிங்குள் அனுமதிக்கப் பேரரசன் மறுத்தான். அதனால், தாக்குக் கோட்டைகள் அடிப்படுத்தப்பட்டன — அவற்றைக் காத்த சீனத்தானைகள் எதிர்ப்புக் காட்டியதில்லை. எதிர்ப்பதாற் பயனில்லை யெனக் கண்ட சீன வேத்தவை இணக்கப்பேச்சிற்குச் சம்மதஞ் தெரிவித்து, பிரதிநிதிகளை நியமித்தது.

கடந்த இருபதாண்டுக் காலமாக மேற்கு நாடுகள் எவ்வெந்நோக்கங்களுக்காகப் போராடினவோ, அவையெல்லாம் தியென்சின் பொருத்தனை வாயிலாய்க் கைகூடின. யாங்குதிசி யாற்றிற் போக்குவரத்துச் செய்யும் உரிமை; வெளிநாட்டோர் வதிந்து வர்த்தகஞ் செய்தற்கு வசதியாக, ஆங்கோ வரை யாங்குதிசித் துறைகள் உட்பட மேலும் பதினெரு துறைகள்; சீனச் சட்ட நிருவாகத்திலிருந்து ஐரோப்பியர்க்கு விலக்கு; கிறித்துவ மிசனரிமார்க்குச் சுயாதீனமாகத் தொண்டாற்றும் உரிமை; கிறித்துவத்துக்கு மதமாறியோர்க்குப் பாதுகாப்பு; மேற்றிசை வல்லரசுகள், வதியுந் தூதுவரைச் சீனத்துக்கு நியமிக்கும் உரிமை— இவை யாவற்றையும் தியென்சின் பொருத்தனை அவர்க்கு அளித்தது. ஆயின் பிரித்தானியர் சீனத்தை மேலும் அவமானப்படுத்த நினைந்தனர். முதற் பிரித்

தானியத் தூதமைச்சனுக நியமிக்கப்பட்டோன் எல்சின் என்பான், பொருத் தனையை அங்கீகாரஞ் செய்தற்குப் பீக்கிங்கிற்குப் போகும்போது, 'போது மான கடற்படையொன்றைத்' தாக்குவரை கூட்டிச் செல்லுமாறு பணிக்கப்பட் டான். பீக்கிங்கிலே மாத்திரமன்றி, தாக்குவிலும் தியென்சினிலும் தக்க வர வேற்பு அளிக்குமாறு வற்புறுத்தல் வேண்டுமெனவும் அவனுக்குப் பணிக்கப்பட் டது. இவ்வளவில் அமெரிக்கரும் இரசியரும் தத்தம் பொருத்தனைகளை முறைப் படி அங்கீகரித்துவிட்டனர். ஆயின் பிரித்தானியரே தமது போர்க்கப்பல் ஆற் றில் அனுமதிக்கப்படவில்லையெனக் காரணங் காட்டித் தாக்குக் கோட்டைகளைத் தாக்க முனைந்தனர். மூன்றும் நெப்போலியனுடைய ஆட்சியிலே பிரான்சியர் ஆங்கிலர்பால் தாம் கொண்டிருந்த கெழுதகைமையை வெளிக்காட்ட நினைந்து ஆங்கிலர் மேற்கொண்ட ஒவ்வோர் ஆக்கிரமிப்புச் செயலிலும் பங்கு கொள்ள ஆவலாயிருந்தனர். ஆகவே ஆங்கில—பிரான்சிய நட்பாளர் மீண்டும் போர் தொடங்கினர். தாக்குக் கோட்டைமேற் செய்த தாக்குதல் தவறிற்றாயினும், அடுத்த ஆண்டிலே அக்கோட்டைகள் கைப்பற்றப்பட்டு, தியென்சினும் அடிப் படுத்தப்பட்டது. இணக்கப் பேச்சுத் தொடங்குதற்கு முயற்சிகள் செய்யப்பட்ட போதும், பிரான்சியரும் பிரித்தானியரும் பிடிவாதங் கொண்டோராகி, பெரும் படைப்பலத்தோடு துங்குசோவிற்குப் போதல் வேண்டுமென வற்புறுத்தி நின்ற னர். தப்பெண்ணமோ, கபடமோ, இரண்டுமோ காரணமாக, சமாதானக் கொடி பிடித்துச் சென்ற உத்தியோகத்தர் மூவரைச் சீனர் சிறைப்பிடித்தனர். அதனால் நட்பாளர் போர் விளைத்துப் பீக்கிங்குவரை செல்லத் தீர்மானித்தனர். துங்கு சோவின் நகர்ப்புறத்தை அடைந்தபோது, பேரரசனுடைய இளைய சோதரன்— நெருக்கடி மிக்க எதிர்காலத்தே தலைசிறந்த மஞ்சுத்தலைவனுய்த் திகழப் போகின்றவன் — இளவரசன் குங்கு என்பான் மூலமாக இணக்கப்பேச்சுக்கள் தொடக்கப்பட்டன. ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றதால், நட்பாளர் படைகள் முன்னேறிச் சென்றன. சியென் துங்கு என்பானுல் ஏரியை அடுத்துக் கட்டப்பட்ட அழகிய வேனில் மாளிகையை நோக்கி அப்படைகள் சென்றன. மூன்னம் நாங்கிங்கிலுள்ள பீங்கான் பகோடாவைச் சிதைத்தவாறே இப்போதும் நட்பாளரின் படைஞரும் தலைவரும் அம்மாளிகையைச் சிதைத்தனர். பிரான்சி யப் படைத்தலைவனை மொன்றுபான் கூறியவாங்கு, 'அதனை யொத்த எழில் மாளிகையை' ஐரோப்பாவில் எங்குமே காணவியலாது. அத்தகைய மாளி கையை அவர்கள் எஞ்சலின்றிக் கொள்ளையடித்தனர்.

இவ்வளவிலும் திருத்தியடையாத எல்சின் பிரபு, பீக்கிங்கை அடைந்த பின் னர், வேனில் மாளிகைக்கு எரியூட்டுமாறு கட்டளையிட்டான். இவ்வாறுக, வாகை சூடியோருமே "வருணித்தற்கு இயலாத மாட்சியுடைய" மாளிகையானது தீக் கிரையாயிற்று. இத்தகைய ஈனச்செயல் குணபுலத்தானுடைய மனத்திலே ஆழப்பதிந்து, ஐரோப்பியரிடத்துச் சீனர் ஆறாப் பயங்கொள்ளுதற்கு ஏதுவாகு

மென எல்சின் பிரபு தன் அறியாமையாற் கருதினன். இவ்வகையான விசித் திரச் சிந்தனைப் போக்குக் காரணமாக, தறுகண்மையுங் கொடுமையும் மிக்க செயல்களினூலே ஆசிய மக்களின் மதிப்பிலே தாம் உயரலாமென ஐரோப்பியர் நம்பி நடந்துளர்.[1]

சீனர் மனத்தில் இச்செயல் ஆழப் பதிந்தது என்பது உண்மையே. 'மிலேச்ச ரின்' பண்பு பற்றிச் சொல்லொணு இகழ்ச்சியும் கனன்றெரியும் வெறுப்புங் கொண்டனர் சீனமக்கள். வேனில் மாளிகை எரிக்கப்பட்டதை இன்னும் சீன மக்கள் மறந்தாரல்லர். மத்திய மக்களரசைச் சேர்ந்த உயர் அதிகாரியொரு வன், அம்மாளிகை பற்றிய 'கணக்கு இன்னும் முடியவில்லை; என்றே ஒருநாள் அது தீர்க்கப்படும்' என்றவாறுய் இந்நூலாசிரியர்க்குக் கூறியதுண்டு. கிரேக்கப் பளிங்குருவங்கள் பற்றியும் சீன மாளிகைகள் பற்றியும், இந்த எல்சின் போன் றோர் கொண்ட கற்பனை முற்றுந் தவறிச் சென்றது.

இழிவான இச்செயல்களுக்கெல்லாம் முடிவுகண்ட பீக்கிங்கு ஒப்பந்தப்படி, நட்புறவுக்குப் பங்கம் விளைத்ததற்காகப் பேரரசன் 'ஆழ்ந்த துக்கம்' தெரி விக்கவேண்டியவனுயினன். பீக்கிங்கிலே தூதகங்கள் நிறுவ மேற்றிசை வல்லரசு கள் அனுமதிக்கப்பட்டன; பெருந்தொறுநிதி அறவிடப்பட்டது. தியென்சினும் பொருத்தனைத் துறைகளில் ஒன்றுயது; பிரித்தனும் தன்னளவானே மீண்டும் நயம் அடைந்தது. கோலூனை நிந்தஉரிமையாகப் பிரித்தானிய முடியரசு பெற் றது. பிரான்சும் கரவாகவும் சீனர்க்குத் தெரியாமலும் தனது பொருத்தனையிலே ஒரு வாசகத்தைக் கூட்டி, சீன மாகாணமெதிலும் மிசனரிமார் நிலம் வாங்கியும் குத்தகையாகப் பெற்றும் வீடுகள் கட்டுதற்குச் சட்டவுரிமை பெற்றுக் கொடுத் தது. அவ்வழி வானுலகப் பேரரசிலே தனது ஆன்மிக ஆதிக்கத்தைப் பரப்பலா மெனப் பிரான்சு நம்பியது.

தியென்சின் பொருத்தனையும் பீக்கிங்கு ஒப்பந்தமும் சீன—ஐரோப்பிய உறவு களிலே புதியவோர் படலத்தை ஒருங்கே தொடக்கிவைத்தன. சருவதேச நம்பிக் கைத் துரோகமும், ஈடெடுப்பில்லா நாசவேலையும், அநாவசியமாகப் பேரரசற்கு இழைக்கப்பட்ட அவமானமும் அப்புதிய அத்தியாயத்தைத் தொடக்கி வைத்த மையால், எதிர்காலத்தே அவலமான விளைவுகள் நேர்ந்தன. சீனரிடம் எஞ் ஞான்றுமே நம்பிக்கையற்றோராகவும், சீனத்தோடு தாம் கொண்ட தொடர்பு களிலே சருவதேச அறநோக்கிற்கு இடமேயில்லை எனுங் கருத்துக் கொண்டோ

1. அண்மைக்காலத்தில், 1943 இல், இந்நூலாசிரியரும் உறுப்பினராயிருந்த ஒரு மா நாட்டிலே அமெரிக்கப் பிரதிநிதிகள் எடுத்துக் கூறிய ஒரு யோசனை இத்தகைய மனப்பான்மை யைப் புலப்படுத்துவதாக இருந்தது. யப்பானிய மக்களுக்கு மறக்கமுடியாத ஒரு போதனையாக அமையும் பொருட்டுப் பேரரசருடைய மாளிகையை இடித்தழித்தல் வேண்டுமென யோசனை தெரிவிக்கப்பட்டது. இந்த யோசனைக்குப் பலத்த ஆதரவும் இருந்தது. பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினரான தளபதி கமன்சு என்பார் எதிர்த்தமையாலே ஈற்றில் அது கைவிடப்பட்டது.

ராகவும், தத்தம் நலவுரிமைகளைப் பொறுத்தவரை தாம் ஒரு கூட்டாகச் செயற்படவேண்டுமெனும் ஓர்ப்புடையோராகவும் எக்காலத்தும்[1] நடந்துகொண்டனர். சீனரும் அழகான ஒரு தேசியச் சின்னத்தை அக்கிரமமாக அழிப்பது அரசியற் பெருமைக்கு உயர்வளிக்குமெனக் கருதிய—அநாகரிகமான—தறுகண்மைமிக்க—பண்பற்ற மனப்பான்மையை மன்னிக்கவும் மறுக்கவும் முடியாதவராயினர்.

1. இது 1895 வரையும் நீடித்தது.

மூன்றும் பாகம்

பேரரசுக் காலம்

1858 – 1914


40
50
60
30
20
10
0
இசுற்ருன்புல்
துருக்கி
ஐ.
சோ.
ஆமீனியா
அசர்பெய்சான்
இலெபனன்
சிரியா
இசுரவேல்
யோடன்
இராக்கு
தபிரிசு
தெகிரான்
துருக்மெனித்தான்
பாக்தாத்து
பாசிரா
பே சி யா
(இரான்)
குவைற்று
புசயர்
சவுதி
அரபியா
மெக்கா
ஓமன்
மசுக்கற்று
கராச்சி
யெமன்
ஏடன்(பொ)
பேர்பரா
சொக்கோத்திரா (பொ)
இ ந் து
சோமாலிலந்து
1950 இலிருந்து ஆசியாவும்
தூர கிழக்கும்
பிரதேசக்கள் :
பொ.-பிரித்தானிய பொதுநலவாயமும் பேரரசும்
பி.-பிரான்சிய
நெ.-நெதலாந்து
போ.-போத்துக்கேய
ஐ.-ஐக்கிய அமெரிக்க நாடு
எமல்
0 200 400 600 800 1000
70


60
70
80
90
100
110
சா.
ச.
கு.
கசுக்தான்
ஊர்கா
புறமொங்கோலியா
அகமொங்கோலியா
சிங்கியாங்கு
சிங்காய்
திபெத்து
சிக்காங்கு
காபுல்
காசுமீரம்
சிறிநகர்
இஸ்லாமாபாத்
தில்லி
இலாசா
நேபாளம்
காத்மாண்டு
கராச்சி
சந்திரநாகூர்
தாக்கா
கல்கத்தா
இந்திய
ஐக்கியம்
(பொ)
தாமன் (போ)
தியூ (போ)
பம்பாய்
கோவா (போ)
மாகி (பி)
இலட்ச
தீவுகள்
(இந்திய)
யாணம் (பி)
சென்னை
புதுச்சேரி (பி)
காரைக்கால் (பி)
கொழும்பு
இலங்கை (பொ)
நக்காவரத்
தீவுகள்
(இந்திய)
அந்தமான்
தீவுகள்
(இந்திய)
மண்டலே
பர்மா
இரங்கூன்
பாங்கொக்கு
மலாயா (பொ)
கோலாலம்பூர்
சமாத்திரா
சுமத்திரம்
மாலைதீவுகள்
(பொ)



110
120
130
40
ஐ. சோ. ச. கு.
உர்கா
மஞ்சூரியா
(மஞ்சுக்கோ)
தொகுகியோ
கொரியா
சோல்
தய்றென்
போட் ஆதர்
பீக்கிங்கு
அகமொங்கோலியா
தியென்சின்
இரோசிமா
நாகசாக்கி
30
நாங்கிங்கு
சாங்காய்
மக்கட் குடியரசு
சீனம்
சிக்காங்கு
சுங்கிங்கு
20
போமோசா
(தைவான்)
கன்றன்
ஓங்கொங்கு (பொ)
மக்கவோ (போ)
அனோய்
அய்னான்
பிலிப்பீன்
தீவுகள்
மணிலா
10
சீயம்
(தாய்லந்து)
பாங்கொக்கு (பி)
சைகோன்
வட
போணியோ
(பொ)
புரூனை
(பொ)
0
இடச்சு
நியூகினி
(நெ)
பினாங்கு
மலாயா (பொ)
சரவாக்கு
கோலாலம்பூர்
சிங்கப்பூர்
போணியோ
செலிபீசு
சுமாத்திரா
மக்கசார்
இந்தோனேசியா
10
பற்றேவியா (யக்கார்த்தா)
யாவா
100
ஒகந்திரேலியா (பொ)

அதிகாரம் 1

இந்தியா

இந்தியாவில் இறைமைபடைத்த சுதந்திர அரசாகத் திகழ்ந்த பஞ்சாப்பு இராச்சியமும் 1846-8 வரையிலே வென்றிணைக்கப்பட்டது. அதனால், குமரிமுனை தொட்டுக் காசுமீரம் வரையும், இந்துக்கூசு தொட்டு அசாம்வரையும் பிரித்தானிய அதிகாரம் அகன்று பரந்தது. இந்திய அரசுகளும் இராச்சியங்களும் இவ்வாறுக வென்றிணைக்கப்பட்டுத் தம் சுதந்திரத்தை இழந்தவாயினும், இந்திய மக்கள் இழந்த தம் சுதந்திரத்தை மீண்டும் பெறுதற்காக, நாடு முழுவதையும் உள்ளடக்கிய விரிந்த அடிப்படையிலே, இறுதி முறையாக ஒரு பெரும் முயற்சி செய்தனர். அதிகாரம் அனைத்தும் இழந்து உரிமையெலாம் பறிகொடுத்து நின்ற ஆளும் வர்க்கத்தின் தலைமையில், ஆற்றுமையாற் செய்த முயற்சியே 1857-8 வரையில் மூண்ட மாபெருங் கலகமாகும். பதினேந்து திங்களாய்ப் போராட்டு நீடித்த பின்னர் அக்கலகம் அடக்கப்பட்டது. அழிந்தொழியும் பழைய ஆட்சிமுறையின் இறுதிமூச்சே அஃது. பழைய பற்றுறுதிகளை அது தூண்டிவிட்டதாயினும், பரந்துபட்ட பல்வேறிடங்களிற் பொதுமக்களின் ஆர்வத்தை ஊக்கியதாயினும், அக்காலத்திற் பிரித்தானியரிடமிருந்து அதிகாரத்தைக் கவர்ந்து நிருவகிக்கவல்ல ஓர் அரசினைக் காத்தளித்தற்கு வேண்டும் இலட்சிய நோக்கோ கட்டுக்கோப்போ பெருவலியோ அதனிடத்துக் காணப்பட்டிலது. கலகம் நசுக்கப்பட்டு, நாமத்தளவில் அதற்கு அதிபனுயிருந்த முகலாய மாவேந்தன் இரங்கூன் நகர்க்கு நாடுகடத்தப்பட்ட 1858 ஆம் ஆண்டு முதல், மொன்ரேகு-செம்சுபோட்டுச் சீர்திருத்தக் காலமாகிய 1919 வரையும் இந்தியாவிற் பிரித்தானிய நாட்டுக்குப் பேராபத்தோ வில்லங்கமோ விளைந்ததில்லை. கலகம் முதலாய் 1947 ஆம் ஆண்டுருக, 90 ஆண்டுக் காலம், முகலாயக் கோட்டைமீது பிரித்தானியக் கொடியே ஆங்கிலேயரின் ஆதிக்கத்தைக் காட்டுஞ் சின்னமாய்ப் பறந்தது.

பேரரசின் ஆதிக்கத்திற் கட்டுண்ட அக்கால இந்தியாவின் வரலாறு குறிப்பான சிறப்புடைத்து: அரசியல், புவியியல், பொருளியல் எனும் மூத்திறப்பட்ட காரணிகளின் சேர்க்கையாலே, இந்தியாவிற் பிரித்தானியராட்சி மறைவாக மாறுதலடைந்தது அக்காலத்திலேயாகும். 'உடைமை', குடியேற்றம் எனும் நிலையிற் றொடங்கி, பிரித்தானிய இந்தியாவானது படிப்படியாக ஒரு பேரரசாய் வளர்ந்துவிட்டது. இலண்டன் அதிகாரவர்க்கத்துக்கு அது கீழமைந்ததாயினும், தன் கருத்தை நிலைநாட்டும் தகவுடைத்தாய், தாய்நாட்டு அரசாங்கம் விரும்பாத பூட்கைகளையும் அவ்வரசாங்கமே கடைப்பிடிக்கச் செய்யுமாறு தூண்டுவதாய் அமைந்திருந்தது. இந்தியாவின் பருமனும் சிறப்பும் மூலவளங்களும் புவியியல் நிலையும் பையவே தம் ஆதிக்கத்தை நிலைநாட்டத் தலைப்பட்டமையால், பிரித்தானிய இந்தியாவின் நலவுரிமைகள் பேரரசின் பூட்கையை உருவாக்குவ

திற் பெரும் பங்கு கொள்ளத் தொடங்கின. இந்தியாவின் பாதுகாப்பும், மற்று, இந்தியாவின் நலனென்று பிரித்தானியர் அந்நாளிற் கொண்ட கருத்துக்களும், சீனம், பாரசீகம், அபுகானித்தான் ஆகிய நாடுகள்மாட்டுப் பிரித்தானியர் கையாண்ட பூட்கையினைப் பலவாற்றானும் நிருணயித்தவாற்றைப் பின்னர்க் காண்போம். பேரரசுக்கொள்கை வலிமைபெற்றிருந்த அக்காலத்தில், இந்தியப் பொதுமக்களின் சார்பின்றி நிகழ்ந்த இப்பெருமாற்றம், இந்தியத் தேசிய வுணர்ச்சி வலுப்பெற்ற பிற்றைநாளில், புதிய ஆசியாவை உருவாக்குவதிற் சிறப்பான ஓர் அமிசமாயிற்று.

அக்காலப் பகுதியின் முதற் கூற்றில் (1858-1914) இந்தியாவானது பெயரள வானும் உண்மைப்படியானும் ஒரு பிரித்தானிய உடைமையாய் இருந்தது. எனின், பிரித்தானிய மக்களுக்குச் 'சொந்தமாய்', அவர்தம் நலனுக்காகவே ஆளப்படும் நாடாயிருந்தது அது. இந்தியாவை ஆட்சி செய்யும் அதிகாரம், 1858 இன் பின்னர், பிரித்தானியப் பாராளுமன்றிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்பாராளுமன்றம் அரசுச் செயலாளன் ஒருவன்வாயிலாய் இந்திய அரசாங்கத்தை மேற்பார்வை செய்தும், ஆற்றுப்படுத்தியும் ஆட்சி செய்தும் வருவதாயிற்று. அவனும் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புடையனுய் இருந்தான். 1919 ஆம் ஆண்டின் பின்னர், பிரித்தானிய அரசாங்கமானது நிதி சம்பந்தமான விடயங்களிலே சில கட்டுப்பாடுகளைத் தானுகவே ஏற்றுக்கொண்டதாயினும், 1946 வரையும் இந்திய அரசாங்கம் பிரித்தானிய அமைச்சவையின் ஓரங்கமாய்க் கருவியாய் இருந்து வந்துளது. முக்கியமான முடிபனைத்தும் இலண்டனுடைய சம்மதத்தைப் பெறுதல் வேண்டும் என்பதோடு அமையாது, உண்மையில், இலண்டனிலேயே எடுக்கவும் பட்டன. எவ்வாருயினும், அவை அரசுச் செயலாளனது இசைவைப் பெறுதல் வேண்டும். இந்திய அரசில் உயர்பதவிகள் யாவும் அந்த அரசுச் செயலாளனுடே செய்யப்பட்ட ஒப்பந்தங்களிலே தங்கியிருந்தன. 'ஒப்பந்தச் சேவையைச்' சேர்ந்த உயர் அலுவலாளர் தமது சேவை சம்பந்தமான நிலைமைகள்பற்றியும் அரசுச் செயலாளற்கு மேன்முறையீடு செய்யும் உரிமை பெற்றிருந்தனர். இந்தியப் பதிலிராயன்பதவி பெருமையும் மாண்பும் சாலப் பொருந்தியதாயினும், அப்பதவி வகித்தோனுடைய அதிகாரம் ஆற்றவும் வரையறை செய்யப்பட்டிருந்தது. இந்திய அரசுச்செயலாளனுடே ஒப்புநோக்குமிடத்து, அவன் ஒரு கீழுத்தியோகத்தனுகவே கருதப்பட்டான். அவனுடைய கருத்துக்கு உரிய மதிப்பு இருந்தபோதும், அது தீர்க்கமானதெனக் கருதலாகாது. புகழ்பெற்றபதிலிராயனுகப் பதவி வகித்த கேர்சன் பிரபு கூறியது போன்று, பிரித்தானிய அரசாங்கத்தின் ஒரு துணைக்கிளையாகவே இந்திய அரசாங்கம் இருந்தது எனலாம்.

இந்தியாவின் மத்திய அரசாங்கத்துக்குக் கீழமைந்தனவாகப் பல்வேறு மாகாண அரசாங்கங்கள் அக்கால் இருந்தன. இவை யாவும் தத்தம் அதிகாரத்தினை மத்திய அரசாங்கத்தின் வழி பெற்றனவேயாம். பகிரங்கமான போட்டிச் சோதனை வாயிலாய்ச் சீமையில் நிறுவப்பட்ட சிவில்சேவையே இந்திய திருவாகத்தைக் கொண்டு நடாத்திற்று. அச்சேவை ஒழுங்கான ஒரு மண்டரின்

முறையை ஒத்திருந்தது. பெருநகரப் பல்கலைக் கழகங்களான ஒக்சுபோட்டிலும் கேம்பிரிச்சிலும் பயின்ற மாணவர்க்கே அனுகூலமாகத் தக்கவகையில் அச் சோதனைக்குரிய பாடத்திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. அவ்வழி, சிவில் சேவையின் 'வர்க்கப்பண்பும்' பேரரசுமரபும் ஒருங்கே உறுதியாயின. பிரித்தானிய முடியரசு இந்திய ஆட்சிப்பொறுப்பை நேராகக் கையேற்றபின்னர் (1858), முதல் இருபத்தைந்தாண்டுக்காலம் சிவில் சேவையிலே இந்தியர் யாரும் இடம் பெற்றிலர் எனலாம். அந்நூற்றாண்டின் இறுதிக் காலந்தொட்டு ஒவ்வோராண்டும் சிற்சில இந்தியர் அச்சேவையில் இடம்பெற்றனராயினும், பேரரசு மரபு ஆதிக்கம் பெற்றிருந்தகாலம் முழுவதும், 1919 ஆம் ஆண்டு வரையும், அவ்விந்தியரின் விகிதம் அற்பமாய் இருந்தது. சிவில் சேவையானது வருமானந் திரட்டல், சட்டமும் ஒழுங்கும் பேணல், நாட்டிற் பொதுவாக நீதிபரிபாலனஞ் செய்தல் ஆதியாம் நிர்வாக கருமங்களே ஆற்றியதோடு உயர்தர நீதிச் சேவையிலும் பங்கு கொண்டது. மாகாண உயர்நீதிமன்ற நீதிபதிகளிற் குறிப்பிட்ட ஒருவிகிதத்தோர் நிருவாக சேவையிலிருந்தே நியமிக்கப்பட்டனர்.

'முற்றும் வெள்ளையர்மயமான' இச்சேவைக்குக் கீழே பெரியதோர் இந்தியப் பணிக்குழு இருந்தது. மாகாணவாரியாய் நிறுவப்பட்ட இச்சேவையின் பணியைச் சிவில் சேவையே கட்டுப்படுத்தியும் மேற்பார்வைசெய்தும் வந்தது. இந்தியரையே முற்றுகக் கொண்ட இம்மாகாணச் சேவைமூலமாகவே அரசாங்க அதிகாரம் இந்தியப் பொதுமக்களிடையே பரந்து செறிந்தது. ஆட்சியதிகாரம் நெடுங்காலமாக ஐரோப்பிய அதிகாரிகளின் கையிலேயே தங்கியிருந்தது. பொலிசுச் சேவையிலும் இத்தகைய முறையே கைக்கொளப்பட்டது. அனைத்திந்தியாவுக்கும் பொதுவான உயர்பதவணிகள் இங்கிலாந்திலேயே திரட்டப்பட்டன; உண்ணாட்டிலே திரட்டப்பட்ட மாகாணப் பொலிசுச் சேவை முக்கியங் குறைந்த வேலைகளையே கவனித்து வந்தது.

இங்கிலாந்திலிருந்து நேராக நியமிக்கப்பட்ட படை முதற்றலைவனின் பொறுப்பிலே, இந்தியாவின் பாதுகாப்பிருந்தது. இந்தியத் தானே சிப்பாய்ப் படையொன்றைக் கொண்டிருந்தது—அடிப்படையில் ஆணைபெற்ற உயர்பதவிகள் ஐரோப்பியர்க்கே ஒதுக்கப்பட்டிருந்தன. இந்தியாவிற் பல்வேறிடங்களிற் பிரித்தானியப் படைப்பிரிவுகளே நிறுத்தி வைப்பதாற் சிப்பாய்ப்படை வலியுறுத்தப்பட்டது. கிழக்குலகிலே பிரித்தானியரின் அதிகாரத்துக்குப் பிரதான கருவியாய் அமைந்து, மூன்றுகண்டங்களிலே வீரப்புகழ்பெற்றிருந்த உன்னதமான இந்தியச் சேனை, இக்காலப் பகுதியில், மேற்கூறியாங்கு முற்றும் ஐரோப்பிய அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. பெரும்படைக்கலகத்தின் போது பட்ட அனுபவத்தின் பயனுய், சமயத்துறையில் இந்தியப்படைஞரின் உணர்ச்சிகளை மதித்து நடப்பதிற் பிரித்தானிய அரசாங்கம் ஆற்றவுங் கவனமாயிருந்தது. மிசனரிமாரின் சமயப் பிரசாரத்துக்குப் பிரித்தானிய அதிகாரவர்க்கம் ஊக்கம் அளிக்காமைக்கு அதுவே ஒரு பிரதான காரணமாகும். அன்றியும், படையிலுள்ள இந்துக்கள், சீக்கியர், இசுலாமியர் ஆகிய பல்வேறு மதத்தினர்க்கும் சமயப்பணி செய்தற்காகக் குருமாரையும் அது நியமனஞ் செய்தது.

மேலைநாட்டு மிசனரிமாரின் சங்கங்களாலே விளையத்தகும் மதமாற்ற முயற்சியி னின்றும் இந்தியாவைப் பாதுகாப்பதில் இச்செயல் சாலவும் முக்கியமான தாகும்.

சிப்பாய்ப்படையைப் பேணும் இப்பூட்கையின்வழி பிற அரசியல் விளைவுக ளும் தோன்றின. தாம் திரட்டும் படைவகுப்பாரிடை அரசியற் கருத்துக்கள் பரவ வொட்டாது தடுப்பது, பிரித்தானிய அதிகாரவர்க்கத்தின் ஒரு பெருங் கவலையாய் இருந்தது. எனவே, சிற்சில குறிப்பிட்ட இனங்களிலிருந்தே படைக்கு ஆள்திரட்டல் அவசியமாயிற்று. அப்போது, அன்னர்க்கே விசேட சலுகை அளித்து, தக்கவாறு திருப்திசெய்து, அணைவாக வைத்திருத்தல் எளிதாமன்றே? இவ்வாறுகவே, மறக்குணம் வாய்ந்த இனங்களும், மறக்குண மில்லா இனங்களும் பற்றிய பிரபலமான ஒரு கொள்கை வளர்ச்சியுற்றது. ஆதியிலே பிரித்தானியர் சார்பாகப் போரிட்டு வெற்றிகள் ஈட்டிய சிப்பாய்மார், பிற்றை நாளில் மறக்குணமில்லா வகுப்பினராகக் கருதப்பட்ட இனங்களைச் சேர்ந்தோரேயென்பதை இக்கொள்கை புறக்கணிப்பதாயிற்று. மேலும், ஆற்ற லுஞ் சிறந்த இராணுவத்திறமையும் தீரமுங் காட்டிய மராத்திய வீரர், தேசிய வுணர்ச்சி மிக்குடையராய், மற்றையிந்தியச் சமுதாயத்தினின்றும் தனிமைப் படுத்தற்கு அரியராய் இருந்தமையாலே, மறக்குணம் படைத்த இனத்தோ ராகக் கருதப்பட்டிலர். சீக்கியரும், இராசபுத்திரரும், யட்டுமாரும், பஞ்சாப்பு நாட்டு முசிலிங்களும், பலுக்கித்தானியரும், தோக்காமக்களும் சலுகை பெற்ற பிறஇனத்தோருமே படைக்கு ஆள்திரட்டுதற்கேற்ற இனத்தோராயினர். பிற விடத்தெங்கும் காணுவகையிலே, தெள்ளத்தெளிவாகப் 'பிரித்தாளுங் கொள்கை' கையாளப்பட்டவற்றை, இவ்வகுப்பார்க்கு அளிக்கப்பட்ட சலுகை களிலே நாம் காணலாம். பிரித்தானியப் பேரரசின் அபிமான மக்கள் தாமே யென அவ்வகுப்பாரும் நம்பத்தொடங்கினர்—அப்பேராசும் அந்நம்பிக்கையை வளர்த்து வந்தது.

வென்றடிப்படுத்தியதன் வாயிலாக இந்தியப் பெருநிலத்திற் பிரித்தானியர் பெற்ற ஆணிலம் ஐந்தின் மூன்று பாகமேயாம். மொத்தப்பரப்பில் ஐந்திலோர் பாகம் இன்னும் இந்தியமன்னரின் ஆட்சியில் இருந்தது. அவருட் சிலர் பழைய அரசவமிசங்களில் எஞ்சியிருந்தோரே. பிரதான இராசபுத்திர அரசுகளின் மகாராசாக்களும், மைசூர், திருவாங்கூர், கொச்சி ஆகிய இராச்சியங்களின் மன்னரும் இத்திறத்தைச் சேர்ந்தோராவர். இவற்றிலும் முக்கியமான ஐதரா பாத்தும், மராத்திய அரசுகளும், காசுமீரமும் போன்றவை, வலிபெற்றுயர்ந்த கிழக்கிந்தியக் கம்பெனியோடு சமாதானஞ் செய்துகொண்ட 'போர்ப்பிரபுக்க ளின்' ஆணிலங்களேயாம். பிரித்தானிய ஆட்சியாளர் தமது நேரான ஆட்சிக் குட்பட்ட பிரதேசங்களிலே தமது ஆதிக்கத்தை உறுதியாக நாட்டியபின்னர், அவற்றின் அலுவல்களிலே தீவிரமாகத் தலையிடுவதன் வாயிலாக, அவற்றின் 'சுதந்திரத்தை' ஒடுக்கும் பூட்கையைத் துவக்கி வைத்தனர். இந்திய மன்ன ருள் வலிமைமிக்க ஒருவனாய பரோடா மகாராசன் 1875 இற் பதவி விலக்கப்பட் டனன். வேத்தவைக்கண்ணே சூழ்வியல் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய

'வதிவாளரிடம்' கூடிய அதிகாரங்களை ஒப்படைப்பதன் வாயிலாகவும், நிரு வாகிகளை நேராக நியமிப்பதன் மூலமும், ஒரோவழி மன்னரின் அதிகாரத்தைச் சுருக்குவதன்வழியும், இவ்வரசுகள் யாவும் ஒவ்வொன்றுக ஒரே மாதிரியான நிலைக்கு ஒடுக்கப்பட்டன.[1] அதுவே மறைமுக ஆட்சியாகும். காலப்போக்கிலே இவ்வாட்சிமுறையினைப் பிற பேரரசுகளும் பிற விடங்களிலே தழுவத்தொடங் கின. உதாரணமாக இந்துசீனத்திற் பிரான்சும், மஞ்சுக்கோவில் யப்பானும் இம்முறையைப் பின்பற்றலாயின. இவ்வாறுக, பிரித்தானிய இந்தியாவும் 'இந்திய' இந்தியாவும் இலண்டன் அதிகாரவர்க்கத்துக்குக் கட்டுப்பட்ட, ஆற்றலும் வலிய தனியோர் அரசியல் அங்கமாக இறுதியில் உருவாகின.

அக்காலத்தே இந்திய நாட்டின் பொருளாதாரக் கட்டுப்பாடு முற்றும் பிரித் தானியர் கையில் இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைக் கூற் றிலே, பிரித்தானியரின் கைத்தொழில் வாழ்க்கை விரிவடைந்து வந்த காலப் பகுதியில், இந்தியாவைத் தமக்கு வாய்த்த முற்றுரிமைச் சந்தையாகப் பிரித் தானியர் பயன்படுத்தலாயினர். கைத்தொழிற் புரட்சி காரணமாகத் தழைத்து வளர்ந்த இலங்காசயர் நெசவுக் கைத்தொழில் உலகிற்குத் தேவையான பருத் தித் துணியிற் பெரும்பாகத்தை வழங்கலாயிற்று. இந்திய நெசவுக் கைத் தொழில் வளர்ச்சியுறும்வரை, இலங்காசயர்த் துணிகளுக்கு இந்தியாவே வரை யாது வாய்ப்பளிக்குஞ் சந்தையாயிற்று. இந்தியக் கைத்தொழில் வளர்ந்த காலத்தும், பிரித்தானிய நெசவாலையாளர் இலண்டன் அதிகார வர்க்கத்தின் மூலமாய், அதன்மீது பாதகமான சுங்கத் தீர்வை விதிப்பதில் வெற்றி கண்டனர் —அவ்வழி, இந்திய நெசவுக் கைத்தொழிலிற்குச் சிறுகாப்பு வரியும் வாய்க் காது போயிற்று. இன்னும், 'மூலதனத்துக்கு வட்டி உறுதி' என்ற உத்தர வாதத்தின் பேரில், இந்தியாவிற் புகையிரதப்பாதை அமைக்கும் பொறுப்பு பிரித்தானியக் கம்பெனிகளிடமே ஒப்படைக்கப்பட்டது. தேயிலையும் இறப் பரும் கோப்பியும் அவுரியும் பயிராகும் பெருந்தோட்டங்களை விருத்தி செய்வ திற் பிரித்தானிய மூலதனமே ஈடுபட்டது. அசாம் போன்ற பிரதேசங்களும், பீகாரிற் சில விடங்களும், தென்னிந்தியாவில் மலைநாடுகளும் குடியேற்றவாட்சி யின் சாயலைப் பெற்றன—தோட்ட முதலாளிமார் உள்ளூரில் அதிகாரஞ் செலுத் தியதோடு, அரசாங்கத்தின் பூட்கையிலும் ஆதிக்கஞ் செலுத்தத் தலைப்பட்ட னர். இப்பிரதேசங்களிலே நிறுவப்பட்ட முதலாளிமாரின் ஆட்சியிலே, தோட்ட முதலாளியின் கைப்பொருளாகத் தோட்டத் தொழிலாளி இழிந்துவிட்டான். தொழில் ஒப்பந்தத்தைச் செயற்படுத்தற்குக் குற்றவியற் சட்டமே பிரயோ கிக்கப்பட்டது. தோட்ட முகாமையாளர் செய்யுங் கொலைகள் தண்டிக்கப் படாது மறைக்கப்பட்டன. பெருந்தோட்ட வெல்லைக்குள்ளே, சிறிய ஐரோப் பியக் குடியிருப்புக்கள் தாம் நினைந்தாங்கு அதிகாரம் வகித்தும் செலுத்தியும் வந்தன.

1. இந்நூலாசிரியர் எழுதிய "Indian States and the Government of India" எனும் நூலைக் காண்க.

இந்திய அரசாங்கம் 1858 இன் பின்னர், அப்பிரதேசங்களிலே ஐரோப்பியர் குடியேறலே ஊக்கிவந்தது. 'தரிசு நிலப் பிரமாணங்கள்' எனப் பெயரிய விசேட சட்டத்தைப் பிறப்பித்ததன் வாயிலாக, ஐரோப்பியர் காணி பெறுதலைக் கன்னிங் குப் பிரபு எளிமையாக்கினன். அச்சட்டத்தின்படிக்கு மலைநாட்டுப் பிரதேசங் கள் பல, ஐரோப்பியர்க்கு வழங்கப்பட்டன. தட்பமான அப்பிரதேசங்களில் அவர்கள் குடியேறி, பெருந்தோட்டங்களை விருத்தி செய்வர் என்பதே இப்பூட் கையின் நம்பிக்கையாகும். இப்பூட்கையின் பயனுய் அசாமிலும் நீலகிரியிலும் பென்னம்பெரிய தோட்டக் குடியிருப்புக்கள் தோன்றலாயின. அவரிச்செய்கை யில் அனுபவப்பட்ட தோட்டத்துரைமார் மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து கொணரப்பட்டு, பீகாரிற் குடியேற்றப்பட்டனர். ஆங்கு அவர்கள் மானியமுறை மருவிய நிலவாட்சி முறையினைத் தாபித்தனர். 'பதினெட்டாம் நூற்றாண்டுச் சமீந்தார்மாரின் (நிலக்கிழாரின்) மிக இழிந்த இயல்புகளும், வட்டிக்குப் பணங்கொடுக்கும் இந்தியரின் கஞ்சத்தனமும் ஒருங்கே அவர்களிடங் காணப் பட்டன. அவர்கள் சட்டத்துக்கமையாத ஒரு குழாத்தினரே. அவர்களுள் மிகச் சிலரே தாமாக அவுரி பயிரிட்டனர். அவுரி பயிரிடுவோர்க்கு முற்பணங் கொடுத்து, அவர்களைப் படிப்படியாகத் தம் ஆதிக்கவலையிற் சிக்க வைத்தே, தமக்கு வேண்டிய மூலப்பொருள்களை அன்னர் பெற்றனர்.—என்றிவ்வாருக எட்வேட்டு தொம்சன் என்பான் கூறியுள்ளான்.[1] அவுரி ஆணைக்குழுவின் உத்தி யோகபூர்வமான அறிக்கை வருமாறு கூறிற்று: 'இராயத்து (இந்திய விவ சாசி) ஆதியில் முற்பணம் பெறும்போது தயக்கத்தோடு அன்றி மகிழ்ச்சி யோடு பெற்றுவென்பதெல்லாம் ஒரு பொருட்டன்று. இருவழியும் மூடிவு ஒன்றே. அதற்பின்னர் அவன் சுதந்திர மனிதனுக ஒருபோதும் இருக்கமாட் டான்'. அரசாங்கத்தின் இசைவோடு தோட்டத்துரைமார் தோட்டப் பிர தேசங்களிலே அடிமைநிலையொத்த நிலைமைகளை மீண்டும் உருவாக்கினர் என லாம்.

பிரித்தானிய மூலதனத்தின் நலங்கருதி ஈவிரக்கமின்றி நிகழ்ந்த இச்சுரண்டும் முறையால், அப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் எத்துணை அவலப்பட்டனர் என்பதை வங்க அவுரி ஆணைக்குழுவின் அறிக்கை வாயிலாகவும், அக்கால இலக்கியங்கள் சிலவற்றின் வாயிலாகவும் ஒருவாறு நாம் அறிதல் கூடும். நில் தர்பான், அல்லது 'நூநீலக்[2] கண்ணுடி' என்னும் வங்கநாடகம், பிரித்தானியராட்சியில் நிகழ்ந்த இக்கொடுவினையை ஓளவிற்கு அம்பலப்படுத் தியதால், நாட்டிற் பரபரப்பை உண்டாக்கிற்று. அதிகாரவர்க்கமும் பெரிதுங் கலவரப்பட்டமையால், திரு. உலோங்கு எனப் பெயரிய மிசனரியொருவன், அந் நாடகத்தை ஆங்கிலத்தில் யாத்து வெளியிட்டோன், குற்றப்பணங் கொடுத்துச் சிறைத்தண்டனையும் பெற்றான். இக்கால முழுவதும், பெரும் போரின் பின்னர்த் தேசியவுணர்ச்சி கிளரும் வரையும், பெருந்தோட்டங்களில் நிலவிய நிலைமைகள், ஆசியாவோடு ஐரோப்பியர் கொண்ட தொடர்பின் வழித் தோன்றிய மிக

[1] Thomson and Garret : **British rule in India,** p. 474.

[2] அவுரிக்கு மறுபெயர் நூநீலம்.

இழிந்த இயல்புகளைக் காட்டுவனவாய் இருந்தன. இந்தியாவிற் பிரித்தானியரின் முற்றுரிமை நலன்கள் பெருந்தோட்டங்களையே அடிப்படையாகக் கொண்டன வென்று கருதலாகாது. கப்பற் சேவை, வங்கித் தொழில், காப்புறுதி முறை, பங்கீட்டு முறையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உண்ணூட்டு வர்த்தகத்தில் ஆதிக்கம் பெறுதல், ஆகியவற்றினும் அந்நலன்கள் தங்கியிருந்தன. இந்திய முதலாளிமார் சுதந்திரமாகத் தொழில் நடாத்தும் வாய்ப்பைப் பெறமுடியாதென்பதை உணர்ந்து, பிரித்தானியக் கம்பெனிகளுக்கு முகவராகப் பணிபுரியும் நிலையினை ஏற்றுக்கொண்டனர். நாம் ஆராயும் காலப்பகுதியின் முதற்கூற்றில், இந்தியாவிலேயே கைத்தொழில்களை நிறுவுங் கருத்தை ஆளும் வர்க்கம் மனத்திற் கொண்டிலது. பக்குவஞ் செய்யாத சணலைத் தண்டிக்கு அனுப்புவதே முன்னம் வழக்காயிருந்தது. தொழிலாளரின் நலவுரிமை காக்குஞ் சட்டங்களின் இடர்ப்பாடின்றி, குறைந்த வேதனத்திலே தொழிலாளரை வேலைக்கமர்த்தலாமெனக் கண்டு, அவ்வழி, சணற்கைத்தொழில் இந்தியாவிலேயே கூடிய இலாபமளிக்கும் எனும் உண்மையை உணர்ந்த பின்னரே, தண்டிக்கம்பெனிகள் ஊக்ளி நதியை யடுத்தும் தம் தொழிற்சாலைகளை நிறுவத் தொடங்கின. இந்தியாவின் ஏற்றுமதிகள் யாவும் மூலப்பொருள்களாகவே அக்கால் இருந்தன. இவ்வாறுக, பத்தொன்பதாம் நூற்றாண்டிலே, பிரித்தானியப் பண்டங்களுக்கு வாய்ப்பான ஒரு சந்தையாக இந்தியா இருந்ததோடு, பிரித்தானியக் கைத்தொழில்களுக்கு வேண்டும் மூலப்பொருள்களை வழங்கத் தலையாய நாடாகவும் இருந்தது.

நாட்டிலிருந்து செல்வம் வெளியேறியதன் பயனாக, இந்தியா மென்மேலும் நல்குரவுற்றது எனும் விடயமே அக்கால இந்தியப் பிரசாரகர்க்கும் பொருளியலறிஞர்க்கும் வாய்த்த பொதுவிடயமாகாது. இவ்விடயம்பற்றித் தாதபாய் நவுரோசி யென்பார் விவரமாய் ஆராய்ந்து வெளியிட்ட நூலின் பெயர் 'வறுமையும், இந்தியாவில் நெறிதிறம்பிய பிரித்தானியராட்சியும்' என்பதாகும். இந்தியத் தேசியவாதியான இந்த நவுரோசி இங்கிலாந்திற் பாராளுமன்றத்து உறுப்பினருமாயினர். இந்தியாவின் செல்வத்தைப் பிரித்தானிய அரசாங்கம் எண்ணித் துணிந்து கறந்ததா அன்று என்பதும், இந்தியாவிலிருந்து அநியாயமான பணக்கொடைகள் அறவிடப்பட்டனவா அன்று என்பதும் ஒரு புறமாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈற்றரைக் கூற்றில், இந்திய மூலவளங்களைப் போட்டியின்றிப் பிரித்தானிய முதலாளிமார் சுரண்டினர் என்பதும், அவ்வழி கழி பெரும் இலாபம் பெற்றனர் என்பதும், இலண்டன் அதிகாரவர்க்கத்தின் அனுமதி பெற்ற பொருளாதாரக் கொள்கைகள் இச்சுரண்டும் முயற்சிக்குப் பெரிதும் உதவின என்பதும் மறுக்கவொண்ணா உண்மைகளாகும். அவை பற்றி நாம் குறைப்பட்வேண்டிய அவசியமில்லை—அவை இயல்பேயாம். ஆயின் அவை உண்மைகள் என்ற வகையால் இங்கு எடுத்துக் கூறல் தக்கவையே.

இக்காலத்தே இந்தியாவிற் பிரித்தானியராதிக்கத்திற் காணப்பட்ட பிறிதோர் அமிசத்தையும் இங்குக் குறிப்பிடல் வேண்டும். இந்தியாவில் வதிந்த ஐரோப்பியன் ஒவ்வொருவனும் தான் இனத்தால் உயர்ந்தவன் எனும் தீர்க்கமான முடிவான நம்பிக்கையில் ஊறியவனாயிருந்தான். அரசாங்கத்தின் வெளிநாட்டுச்

செயலாளனுகிய செற்றன் கேர் என்பான் அதனே வருமாறு விளக்கினன் : 'சிறு வங்களாவில் வாழ்கின்ற தோட்டத்துரையின் உதவியாளன் தொட்டு இராச தானி நகரத்தில் இசைபட வாழ்கின்ற பத்திராதிபன் வரையும், முக்கியமான ஒரு மாகாணத்தின் அதிபனுகிய முதல் ஆணையாளன் தொட்டு அரியணையில் அமரும் பதிலிராயன் வரையும் இந்தியாவில் வதிகின்ற ஒவ்வோர் ஆங்கிலேய னும், உயர்வு தாழ்வு எனும் வேற்றுமையின்றி, மனதாரப் போற்றும் நம்பிக்கை அது. மக்களைக் கட்டியாள்வதற்கென்றே கடவுளால் நியமிக்கப்பட்ட ஒருவ னென ஒவ்வொருவனிடத்துங் காணப்படும் நம்பிக்கையே அது.[1] கடந்த நூற் ருண்டினும், இன்னும், முதற்பெரும் போர்வரையும், இந்த நம்பிக்கை எத்தணே பரவியிருந்ததென்பதைக் காட்டுதற்கு, இந்தியாவில் உயர்பதவி வகித்த பெரு மக்களின் வாயிலாக வந்த அதிகாரபூர்வமான கூற்றுக்கள் பலப்பல இங்கு எடுத் துக் காட்டலாம். இன்னுமோர் மேற்கோளை இங்கு எடுத்துக் கூறுவம்—அது படையில் நிலவிய மனப்பான்மையைப் புலப்படுத்துகின்றதாதலின். இந்தியா விற் புகழ்பெற்ற படைமுதற்றலேவனுயிருந்த கிச்சினர்ப் பிரபு வருமாறு கழறி னன் : ஐரோப்பியன் இயல்பாகவே உயர்ந்தவன் எனும் இவ்வுணர்ச்சியே இந் தியாவை எமக்கு வென்று கொடுத்தது. சுதேசியொருவன் எத்தணே நன்கு கற்ருனுயினும், எத்தணே சதுரப்பாடு உடையோனுயினும், எத்தணே வீரம் படைத்தோனுயினும், நாம் அவனுக்கு அளிக்கும் எந்தப்பதவியும் அவனே ஒரு பிரித்தானிய அலுவலாளற்கு ஒப்பானவனுகக் கருதுமளவிற்கு உயர்த்தமாட் டாது என்பது எனது நம்பிக்கை'.

ஒளிப்பு மறைப்பில்லா இந்த இனவாதம் எல்லாச் சேவைகளிலும் புகுந்து செறிந்து, பத்தொன்பதாம் நூற்ருண்டிலே, கிழக்குலகிற் பிரித்தானியராட்சி யின் சிறப்பியல்பாகத் தலேதூக்கி நின்றது. அதன் விளேவுகள் பரந்துபட்டுக் காணப்பட்டன. இந்தியப் படையிலே, மன்னனுடைய ஆணேவழிப் பதிவிபெறும் உரிமை எந்த இந்தியனுக்கும் இருந்திலது. சிவில் சேவையிலே போட்டிப் பரீட் சைவாயிலாய் இந்தியரும் சேரலாமெனினும், குறிப்பிட்ட ஒரு பதவிக்கு மேலே இந்தியர் உயரமுடியாது. அக்காலத்தில் இந்தியருட் சிறந்த நிருவாகியாயிருந்த தத்தர் என்பார் ஆணையாளராகப் பதவியுயர்ச்சி பெருமையாலே, தம் பதவி துறந்தனர். இனிச் சமூகவாழ்க்கையும் கலப்பின்றிப் புறம்பாயிருந்தது. உண்டிச் சாலேகள், மக்கட் களரிகள், சில பூஞ்சோலேகள் ஆதியாம் பொது விடயங்களி லிருந்து இந்திய மக்களைச் சில எழுதாவிதிகள் தடுத்து வைத்தன. இந்தியரின் உயிருமே அக்கால் அருமையானதாகக் கருதப்பட்டிலது. ஒரு தோட்டத் துரைக்கு உதவியாளனுயிருந்த இறட்டு என்பான் மிருகத்தனமான கோழைக் கொடுங்கொலே செய்தானுக, அவன் தண்டனே பெற்றபோது, அவனே ஒரு பெருந் தியாகியாகக் கருதிய ஐரோப்பியக் குடியேறிகள் அவனுக்கு மன்னிப்புப் பெறும் பொருட்டாகக் கிளர்ச்சி செய்தனர். கொலேயாளி யொருவனே மறைத்து வைத்த காரணம் பற்றி, ஒரு படையணியைக் கேர்சன் பிரபு—பேரரசு வாதத்துக்கு ஒரு குருவாகத் திகழ்ந்த கேர்சன் பிரபுவே—தண்டிக்கத் துணிந்தமையால்,

[1] Thomson and Garret, **British rule in India**, p. 536.

ஐரோப்பியரின் மதிப்பைச் சிலகாலம் இழித்திருந்தான். இக்காலத்திலும் அதற்குப் பின்னரும், பாதகஞ் செய்த ஐரோப்பியர்க்கெதிராய் நீதிபெறுதல் இயலாதாயிற்று. இவ்விடயம்பற்றித் தம் கருத்தை வெளியிட்ட பதிலிராயன்மார் சிலர், அவ்வழி தம் இனத்தோரின் வெறுப்புக்குஞ் சினத்துக்கும் ஆளாகினர்.

கிழக்குலகில் வாழ்ந்த பிரித்தானியரிடையே இந்த இனச்செருக்கு எத்துணை ஆழமாய் வேரூன்றியிருந்ததென்பது, இல்பேட்டுச் சட்டம் பற்றியெழுந்த கிளர்ச்சியின்வழி யாவர்க்கும் புலனாகியது. ஐரோப்பியரை விளங்கும் உரிமையை இந்திய நீதவான்களுக்கும் அளிப்பதே அதன் நோக்கமாயிருந்தது. இந்தியச் சிவில் சேவையிற் பதவி வகித்த ஆங்கில நீதவான்மார்க்கும் இந்திய நீதவான்மார்க்கும் சமவுரிமையளிக்கும் நோக்கோடு, தலைசிறந்த சட்ட நிபுணனை சேர் கோட்னி இல்பேட்டு என்பான் அதனைக் கொணர்ந்தான். ஐரோப்பியக் குடியேறிகள், 2,000 பேர்க்குங் குறைவானோர், அதற்கு மாறாய் உருவாக்கிய கிளர்ச்சி, பிரித்தானிய அரசாங்கத்தின் அதிகாரவர்க்கத்துக்கு எதிராகச் சென்றது என்ற வகையால், அதி புதுமையானதே. பாதுகாப்புக் கழகங்கள் ஆங்காங்கு நிறுவப்பட்டன; நிதிதிரட்டிப் பதிலிராயற் கெதிராகத் தீவிரமான கிளர்ச்சிக்கு அடிகோலப்பட்டது. ஐரோப்பியச் சாகிபுமார் பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதி, இந்தியாவில் இந்தியர்க்கும் உரிமையுண்டுகொல்? எனக் கனன்று கேட்டனர். இந்தியத் தேசம் வெள்ளையரின் நாடன்றுயின், இந்தியர்க்கும் அங்கு உரிமை சில உண்டு என ஒருகாலேனும் ஒப்புக்கொண்டால், இறுதிமுடிவு யாதாகும்: இப்புதுக் கருத்தெல்லாம் ஆங்கில இனத்துக்கு நேர்ந்தபெரும் அவமானமென்றே கருதப்பட்டன. படைக்கலகத்தின் போது நிகழ்ந்த அட்டூழியங்கள்பற்றி ஆங்கிலப் பொதுமக்களுக்கு நினைவூட்டியும், ஐரோப்பியரை விளங்குதற்கு இந்திய நீதவான்மாரை அனுமதிப்பதால் வெள்ளையர் இனம் முழுவதற்குமே ஏற்படக்கூடிய நிலைக்கவொண்ணு இழிவு பற்றிச் சுட்டிக் காட்டியும் ஆங்கில மாதர் கடிதங்கள் எழுதினர். இந்த இன வெறியின் வீறுகண்டு அதிர்ச்சியடைந்த புளோரென்சு நைற்றிங்கேல் அம்மையார், இந்நிலைவரத்தால் நேரத்தகும் அபாயம்பற்றி விக்ரோறிய மகாராணிக்கு அமைதியாக எடுத்துக் கூறி, அவ்வரசியின் சிந்தைக்குச் சாந்தியளித்தாள்.[1] ஆயினும், இந்தியாவில் வதிந்த ஐரோப்பியர் இப்பிரச்சினையிற் சிக்குண்டிருந்த உண்மைப் பொருளை உணர்ந்திருந்தனர். இந்தியப் பேராசிற்கு அடிப்படையான இனப் பெருமையெனுந் தத்துவமே அது. ஐரோப்பியரே அப்போராட்டில் அக்கால் வெற்றிபெற்றனராக, பதிலிராயன் அவர்தம் எதிர்ப்புக்குத் தலைவணங்கினன். இனப்பேதமே அடுத்த நாற்பதாண்டுக் காலம் அதிகாரவர்க்கத்தின் கோட்பாடாய்த் தொடர்ந்து நிலவிற்று. ஆயின் அதன் வலி காலப்போக்கிலே குன்றத்தொடங்கிற்று.

அரசாட்சியின் அத்திவாரம் இனம் என்றுகவே, அவ்வினத்தின் 'மாண்பினை' எவ்வாறுனும் பேணுதல் அவசியமாயிற்று. வெள்ளையனுடைய ஆதிக்கத்தைப் பேணுதற்காக, விரிவான விதிக்கோவையும் சடங்குகளும், ஆசார நியமங்களும் தக்கவாறு வகுத்தமைத்தல் வேண்டுவதே. பிரித்தானிய அதிகார வர்க்கம்

[1] Cecil Woodham Smith : **Florence Nightingale,** London, 1950, pp. 550-1.

இப்பிரச்சினையைச் செவ்வனே தீர்ப்பதில் முனைந்தீடுபட்டது. ஆயின் அன்னர் கொண்ட கருத்துக்கள் போலியானவை. விமரிசையும் ஆடம்பரமும் சுதேசிகளின் மனங்கவரும்; 'சிறுமனையில் வசிக்கின்ற தோட்டத்துரையின் உதவியாளனும்' ஐரோப்பியரின் பெருமையைக் காக்கும் பொருட்டு இடாம்பீகமாக வாழல் வேண்டும்—என்றவாறுன கருத்துக்களே அன்னர் மூடநம்பிக்கைகள் போன்று போற்றி நடந்தனர். பசுற்றெட்டு என்பான் எழுதிய 'பண்டைக் கல்கத்தாவின் எதிரொலிகள்' எனும் நூலில் வரும் பாத்திரமான மக்கிராபியென்பான், நால்வரையே கொண்ட குடும்பத்திற்குப் பணிவிடைசெய்ய 110 பணியாட்கள் இருந்தனர் எனக் கூறுகின்றான். 'சென்னையிலிருந்து கடிதங்கள்' எனுங் கட்டுரைத் திரட்டுங் கூறுவதுகாண்க: 'ஒவ்வொரு குதிரைக்கும் பணியாற்ற ஒவ்வோர் ஆடவனும் பணிப்பெண்ணும் உளர். பணிப்பெண் குதிரைக்குப் புல்லுவெட்டுவாள். இனி, ஒவ்வொரு நாய்க்கும் ஒரு பையன் உளன். பூனைக்கும் பணியாளர் உளரோவென யான் வினவினேன். ஆயின் பூனை மட்டும் தன்னைத்தானே கவனித்துக்கொள்ள வேண்டுமாம்!, இக்கால முடிவில் 1713 இல், ஒலிவ் தக்ளசு வருமாறு குறிப்பிட்டான்: 'நாள் முழுவதும் நான் "ஏன், ஏன்" என்று கேட்டுப்பார்க்கிறேன். எதற்கும் திருப்தியான விடை தருவார் யாரும் இலர். உண்டிச்சாலே போன்ற ஒருவிடுதியில் வசிக்கும் எமக்கு ஒரு பட்டாளம் வேலைக்காரர் அவசியமா?'[1] இவ்வகைத்தான ஆடம்பர வாழ்க்கை, சாகிப்பின் பெருமையைப் பேணுதற்கு அவசியமெனக் கருதப்பட்டது.

பல்திறப்பட்ட சுதேசிகளோடு பேசுதற்கேற்ற மொழிபற்றியும் அவர்களே எவ்வாறு எங்கே வைத்து உபசரிக்க வேண்டுமென்பதுபற்றியும் அவர்களுக்கு எத்தகைய மரியாதை அல்லது அவமரியாதை காட்டல் வேண்டும் என்பது பற்றியும், முற்றத்திலேயே நிறுத்திவைக்க வேண்டியவர் யாவர், விருந்தையேறத் தக்கவர் யாவர், மற்று அறைக்குள் அனுமதிக்கத்தக்கவர் எனுமிப்பாகுபாடுகள் பற்றியும், யார்க்கு இருக்கை அளித்தல் வேண்டும் யார்க்கு அளித்தலாகாது என்பது பற்றியும் எல்லாம் விரிவான விதிகளைக் கொண்ட ஆசாரக் கோவையொன்று வகுத்துக் கூறப்பட்டிருந்தது. இன்னும், இருக்கை பெறும் அந்தப் பெருமையானது, இந்தியன் யாவனுயினும் அவன்றன் முன்னோராயினும் நிருவாகத்துக்கு ஆற்றிய தொண்டின் நிமித்தம் வழங்கும் ஒரு மரியாதையாகவே கருதப்பட்டது. இவ்விதிகள் பிரமாணங்களாலும், சுதேசிக்குக் காட்டும் அவமரியாதையாலும் தன் பெருமை சுதேசியின் மதிப்பில் உயருமென்றே ஐரோப்பியன் பூரணமாக நம்பினான். இந்நம்பிக்கை எத்துணை மடமையென்பதையும் அதனால் அவனையும் அவனுடைய பழக்கவழக்கங்களையும் நாட்டுமக்கள் எத்துணை வெறுத்து இகழ்ந்தார் என்பதையும், புறம்பாகத் தனித்துவாழ்ந்த ஐரோப்பியன் உணர்ந்திலன்.

இந்தப் பெருமைபற்றிய கோட்பாட்டோடு சம்பந்தப்பட்ட பிறிதொரு மூட நம்பிக்கையும் இருந்தது. பொதுவாக இந்தியர் கோலாகலங்கண்டு மதிமயங்குபவர் என்பதே அந்நம்பிக்கையாகும். எனவே, ஒவ்வொரு தண்டலாளனும் தர்பார் எனும் ஓலக்கமிருந்தான்; ஒவ்வோர் ஆணையாளனும் இன்னும் விரிவான

[1] **Olive in India**, London, 1913.

சடங்குகளோடு மேலும் பெரிய ஓலக்கமிருந்தான். மற்று, ஆள்பதிகளும் பதி லிராயன்மாரும் தத்தம் அரசியல் வாழ்க்கையில் இன்றியமையாத அமிசமாகவே அதனைக் கருதி யொழுகினர். இலிற்றனும் கேர்சனும் காட்டிய பாணியில், ஆபரணமணிந்த கொற்றவர் புடைசூழ, அலங்கரித்த யானைகள் ஊர்வலமாய் உடன்வர, குணபுலத்து வேத்தவைக்கேயுரிய ஆடம்பரமெல்லாம் திரண்டாற் போன்ற மாபெருந் தர்பார்கள் ஒருவகை. பல்வேறு அதிகாரிகளின் வழக்க மான தர்பார்கள் பிறிதொருவகை. காலத்துக்குக் காலம் நிகழும் இச்சடங்கு கள், சாகிபின் மாண்பையும் அதிகாரத்தையும் மக்கள் மனத்திலே பசுமரத் தாணிபோற் பதியச் செய்யும் என்பதே உட்கருத்தாகும். பிரித்தானியப் பேரர சின் மதுகையும், மாண்பும், மகோன்னதமும் இந்திய மக்களின் மனத்தைச் சென்று தாக்குதல் வேண்டுமென்பதே நோக்கமாகும்.

பிற பாமர மக்களைப்போன்று இந்தியரும் ஊர்வலமும் சனத்திரளும் வேடிக் கைகளும் கெழுமிய வண்ணமார் விழாக்களே, விளைதங்களே விரும்புவர் என் பது உண்மையே. ஆயின், இலிற்றன் பிரபு முதன்முதலாகப் பெருந் தர்பார் நடாத்திய 1877 ஆம் ஆண்டிலேதானும், பொதுவாக இந்திய மக்களைக் கவர வல்லது அதிகாரமோ பதவியோ அன்று. என்னை? அறத்தாலும் தூய்மையா லும் வரும் புகழேயாகும். இவ்வண்மையைச் சாதாரண அறிவு படைத்த மக் களுமே அந்நாளில் ஆங்கிலர்க்கு உணர்த்தியிருப்பர். பிரித்தானிய அதிகாரிகள் பற்றி இந்திய மக்கள் கொண்ட கருத்திலிருந்துமே இவ்வண்மை புலப்பட்டிருக் கும். இறிப்பன்பிரபு 'நல்லவன்' என்று கருதப்பட்டமையாலும், பிற்றை நாளில் ஏவின் பிரபுவும் அதே காரணத்தினாலும், இந்திய மக்களின் மதிப்பில் உயர்ந்தனர். இவரினுஞ் சிறிய பிரமுகராகிய மன்ரோ போன்றாரும் தமது 'நற் சேவையாலும்' சமயப்பற்றினாலும் மக்களுடைய மரியாதையை ஈட்டிக் கொண் டனர். மற்று தர்பார் நடாத்தும் புகழேந்தும் பதிலிராயன்மாரும் அதிகாரி களும் நடந்து கொண்ட பான்மை கண்டு மக்கள் எள்ளிநகையாடினர்.

பீடும் இனச்செருக்குமே அடிப்படையாக அமைந்த இக்கோட்பாட்டின் பய னாக, இந்தியாவில் உறைந்த ஐரோப்பியர், எத்துணைக்காலம் வாழ்ந்த போதி லும், அன்னியராகவே நாட்டில் வாழ்ந்தனர். அன்னார்க்கும் நாட்டு மக்களுக்கு மிடையே கடக்கவியலாப் பிளவு இருந்தது. இந்தியாவிற் பிரித்தானியராட்சி முடிவுறும்வரையும் இந்நிலைமை மாறிற்றிலது. சிவில் சேவையைச் சேர்ந்த பெண்டறல் மூன் என்பான் 1940 ஆம் ஆண்டளவில் எழுதுங்கால், இவ்வண் மையை அழுத்திக் கூறுகின்றான். ஆயின் பேரரசின் ஆதிக்கம் வலுப்பெற்றி ருந்த அக்காலத்தில், அது மிக வெளிப்படையாகக் காணப்பட்டதாதலின், அதற்கு விளக்கம் தேவைப்பட்டிலது. ஆங்கில-இந்தியர், இந்தியர் எனும் இரு வேறு நாடுகளிலே இருசாராரும் வாழ்ந்தனர்—அவர்களிடையே இணைப்பு ஏற் பட்டிலது. ஒரு சாரார் மற்றையோரை ஆட்சிசெய்தனர். நிரூவாகத் துறை யிலேயே பிரித்தன் தனது ஆற்றலை விரைவிற் காட்டி, தன் சாதனைகளை உல கிற்கு எடுத்தியம்பல் ஒல்லுவதாயிற்று. நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை மகத்தான சட்டக்கோவைகள் விதித்துச் செயற்படுத்தப்பட்டன.

இவ்வாறு விதிக்கப்பட்ட சட்டங்களைப் பரிபாலித்தற்காக, உன்னதமான ஒரு நீதித்துறை தாபிக்கப்பட்டது. அது பலதிறப்பட்ட நீதிமன்றங்களைக் கொண்டதாய், இந்திய நாட்டிற் பல உயர்நீதிமன்றங்களே உச்சியில் உடைத்தாகி, கோமறைக்கழகத்திற் சென்று முடிந்தது. காணிகள், 'அளவிடப்பட்டு நிருணயிக்கப்பட்டன; ஒரே பெற்றித்தாய வரிமுறையும் புகுத்தப்பட்டது. பெரும் நீர்ப்பாசனத்திட்டங்கள், சிறப்பாகப் பஞ்சாப்பிலும் கங்கைப் பள்ளத்தாக்கிலும் உழவோர்க்கு வேண்டும் நீரை வழங்கின. ஆதியில் இராணுவத் தேவை கருதியே வீதிகள் பல அமைக்கப்பட்டவாயினும், அவை பரந்த பிரதேசங்கள் பலவற்றை இணைத்து, வர்த்தக விருத்திக்கு அடிகோலின. புகையிரதப்பாதைகளும் தந்திமுறையும், நாடுமுழுவதையும் உள்ளடக்கிய அஞ்சற்போக்குவரத்தும், தற்கால அரசுக்கு வேண்டுஞ் சாதனங்களே இந்தியாவுக்கு வழங்கின. பல்கலைக்கழகங்களும், உரூர்க்கிப் பொறியியற் கல்லூரி போன்ற தொழினுட்பக் கழகங்களும், மருத்துவமும் பிற ஆராய்ச்சிகளும் பயில்தற்குவேண்டும் நிறுவனங்களும் இந்தியாவிலே திறக்கப்பட்டன. இவையெல்லாம், அரசாங்க முயற்சியின் பயன்களே என்பது ஊன்றிக் கவனிக்கற்பாலது.

அரசியற் றுறையிலும், இத்தகைய அபிவிருத்திகள் அரசாங்கத்தின் ஆதரவிலே சிறிய அளவிற் கால்கொள்வவாயின. 1861 ஆம் ஆண்டு இந்தியக் கழகச் சட்டமானது சட்டமியற்றும் நோக்கத்தின் பொருட்டு, உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவரைச் சட்டமன்றிலே சேர்த்தற்கு வழிவகுத்தது. அவ்வழி 1862 இல் நியமனம் பெற்றோரில், மூன்று இந்தியரும் இடம்பெற்றனர். மாகாணங்களிலும் இத்தகைய சட்டமன்றங்கள் தாபிக்கப்பட்டன. இம்மன்றங்களுக்கு மறைமுகமாகப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறை 1892 இற் புகுத்தப்பட்டது. பாதீடு எனும் வரவுசெலவுத்திட்டத்தை விவாதிக்கும் உரிமையும், பொது நன்மையின்பாற்பட்ட விடயங்கள் பற்றிக் கேள்வி கேட்கும் உரிமையும் அவ்வாண்டிலேயே வழங்கப்பட்டன. இச்சீர்திருத்தம் சொற்பமேயாஞனும், அரசாங்க நடவடிக்கைகளைப் பகிரங்கமாகக் கண்டிக்கும் வாய்ப்பும் சட்டமியற்றுவதிற் பங்கும் இந்தியர் பெற்றனர். 1909 ஆம் ஆண்டிலே இதுறையில் மேலும் அபிவிருத்தி காணப்பட்டது. இந்தியச் சட்டமன்றத்திலே உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவரே முதன்முதலாகப் பெரும்பான்மையினராக இடம்பெற்றனர். அன்னருள் இருபத்தெழுவர் நேராகத் தெரிவு செய்யப்படுவர். அவருட் சிலர் நிலக்கிழாராலும் வர்த்தகமன்றத்தாராலும், எஞ்சிய பிறர் மாகாணச் சட்டமன்றங்களாலும் தேர்ந்தெடுக்கப்படுவர். மத்திய அமைச்சவையிலும், மற்று மாகாண அமைச்சவையிலும் முதன்முதலாக இந்தியரும் இடம் பெற்றனர். மிந்தோ-மோளிச் சீர்திருத்தங்கள் பாராளுமன்ற ஆட்சி முறையை ஆரம்பிக்காட்டாலும், இந்தியரை அவர்தம் நாட்டு அரசாட்சியோடு தொடர்பு படுத்துவதாந் தத்துவத்தைக் குறிப்பவாயின. இந்தியா படிப்படியாக மாறுதலடைந்தது.

அரசியற்றுறையிலே இன்னும் இரண்டு உண்மைகளைக் குறிப்பிடுதல் வேண்டும். அவற்றுள் ஒன்று, உள்ளூர்ச் சுயவாட்சி நிறுவனங்கள் விருத்தியடைந்

தமை ; மற்றையது முசிலிங்களுக்கு தனிவேறு தேர்தல் இடாப்புக்கள், வேண்டு மென்றே புகுத்தப்பட்டமை—தீங்குபயக்கும் இக்கோட்பாடே இருநாட்டுக் கொள்கைக்கு முன்னோடியாய், வித்தாய் அமைந்தது எனலாம். இவ்விரண்டனுள் முதலாவதோடு தொடர்புடையது இறிப்பன் பிரபுவின் பெயரேயாம். அச்சிர்திருத்தம் மாவட்டச் சபைகளையும் மாநகரமன்றங்களையுந் தாபித்து, அங்கே உண்மையான நிருவாக அனுபவத்தை மக்களின் பிரதிநிதிகளுக்கு முதன் முதலாய்ப் புகட்டி, அதனால், மக்களின் ஆதரவு பெற்ற ஆட்சிமுறைக்கு இந்திய நாட்டில் அத்திவாரமிட்டதெனலாம். இவ்வுள்ளூராட்சி நிறுவனங்களே மாகாணச் சட்டமன்றங்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தனுப்பும் தேர்வகங்களாக அமைந்தவாதலின், மாகாணமன்றங்கள் இசைவாக இயங்குதற்கு அவையே ஏதுவாய் இருந்தனவென்க. உள்ளூர்ச் சுயவாட்சித் தாபனங்களின் வளர்ச்சியானது, நாட்டுப்புறமக்களைப் பிரதிநிதித்துவ நிறுவனங்களிலே பரிச்சயப்படுத்தி, பிற்றைக்காலத்தே இந்தியக் குடியாட்சியின் உறுதிக்கு அச்சாணி போன்றதாயிற்று.

முசிலிங்களுக்குத் தனிவேறு தேர்வகங்களை வகுத்து நிறுவியமை, கேடு கெட்ட இருநாட்டுக்கொள்கையின் முதற்றோற்றப்பாடாய் அமைந்தது. அக் கொள்கை, இறுதியில், பாக்கித்தான் எனும் புதிய ஒரு நாடு தோன்றுதற்கு அடிகோலிற்று. இந்துக்களையும் முசிலிங்களையும் பிரித்து வைத்தற்காக, எண்ணித்துணிந்து கையாளப்பட்ட ஒரு பூட்கையின் விளைவே அதுவென்பதை, இதுகாறும் பிரசுரமாய ஆவணங்கள் ஐயத்துக்கு இடமின்றி நிலைநாட்டுகின்றன. இந்த அரசியற் சாணக்கியத்துக்குப் பொறுப்பாளியான பதிலிராயனுக்கு மனைவி மிந்தோச் சீமாட்டி, தன் கணவனது செயலால் இந்தியாவிற் பிரித்தானியரின் அதிகாரம் நெடுங்காலம் நீடிக்குமென இறும்பூதெய்திக் குறிப்பிட்டவாற்றை நாம் அறிவோம். தனிவேறு தேர்வகமுறை மிக எளிமையானதே. முசிலிங்களுக்கு முசிலிங்களே பிரதிநிதிகளாய் அமையற்பாலர் ; அப்பிரதிநிதிகளும் முசிலிம் வாக்காளராலேயே தெரிவு செய்யத் தக்கவர். இனி, இந்துத் தேர்வகத்தின் பிரதிநிதியாய் ஒரு முசிலிம் இருக்க முடியாது ; மறுதலையாக முசிலிம் தேர்வகத்தின் பிரதிநிதியாக இந்துவும் இருக்கமுடியாது. இந்த யுக்திகாரணமாய், குமரிமுனை தொட்டுக் காசுமீரமீருக வாழ்கின்ற முசிலிம்கள், இந்துக்களோடு எஞ்ஞான்றும் மாறுபட்டோராகி, எந்தப் பிரச்சினையையும் ஒரு சமயப்பிரிவாரின் நோக்கிலிருந்து பார்ப்போராகி, தனியோர் அரசியற் சமுதாயமாயினர். சட்டமன்றங்களுக்குப் போட்டியிடும் முசிலிம் வேட்பாளர், சமயத்தை அடிப்படையாகக் கொண்ட வாக்குரிமையினையே நம்பியிருந்தாராதலின், சமய வெறியின் அடிப்படையிலேயே அவர்தம் கருத்துக்களும் கொள்கைகளும் உருவாயின. இக்கேடுகெட்ட முறையினைக் களைந்தெறிதற்கு நாற்பதாண்டுகட்கு மேலாகச் சென்றது—அப்போது பிரிவினையே அதற்கு மாற்றுமருந்தாயிற்று.

'உடைமையும்' இனச்செருக்குமாகிய இருகோட்பாடுகளும், இக்காலத்திலே பாரதூரமாகவும் நுட்பமாகவும் மாறுதலடைந்தமை, மேற்போந்த ஆராய்ச்சி

யின்வழி தெளிவாகும். இருபதாம் நூற்றாண்டிலும் இவ்விரு கோட்பாடுகளும் நிலைத்துநின்றமை உண்மையேயாயினும், அவை மாறுதலடைந்ததும் மெய்யேயாம். உடைமைக் கோட்பாட்டின் கூர்மை விரைவில் மழுங்கிற்று. இனப்பெருமை யுணர்ச்சியும், பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையும் முன்னரே தன் அரசியற் சார்பைப் பெரும்பாலும் இழந்துவிட்டது—சமயச்சார்பு இன்னுந் தொக்கி நின்றது. ஆசியத் தேசிய உணர்ச்சின் வளர்ச்சியையும் அதன் இறுதி வெற்றியையும் செவ்வையாக விளங்குதற்கு, எவ்வாறு இப்பெருமாற்றங் கைகூடிற்றென்பது இன்றியமையாத ஒரு விடயமாகும்.

பிரித்தானியராட்சியில், இந்திய நாடு திறமைவாய்ந்த நிருவாக அமைப்பினை உடையதாகி, வலிமைசான்ற ஓர் அரசாக வளர்ச்சி பெற்றமைக்கு மூலகாரணம், அந்நாட்டுப் பணிக்குழுவேயாம். அப்பணிக்குழு மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவாளரைக் கொண்டதாகி, விரிந்த அடிப்படையிலே கட்டுக்கோப்புடையதாய் அமைக்கப்பட்டு, மாண்பும் மதிப்பும் மிளிரப் பேணப்பட்டதொன்றாகும். அப்பணிக்குழு வதிதே உத்தியோகத்தரைக் கொண்ட ஒரு குழுமாகாது : ஆட்சி செய்யும் ஒரு கூட்டுத்தாபனமாய் அது விளங்கிற்று. பதிலாயனும், வங்கம் சென்னை பம்பாய் ஆகிய இராசதானிகளின் ஆள்பதிகளும், மத்திய அமைச்சின் சட்ட அங்கத்தவருமே அதற்குப் புறம்பான உயர்பதவியாளர் : முக்கியமான மற்றைப் பதவிகளெல்லாம் அதற்குள் அடங்கியவையே. நீதித்துறையிலும் அன்னர் அங்கம் வகித்தனர். அரசாங்கத்தின் பூட்கையை உருவாக்குவதில் அன்னர் பெரும்பங்கு கொண்டனர். அப்பூட்கைகளைச் செயற்படுத்தற்கான ஒரேயொரு சாதனமாகவும் அன்னர் அமைந்தனர். விரைவில் அவர்களிடையே ஒரு பொதுமரபும், ஒற்றுமையுணர்ச்சியும், அரசியல் நேர்மை பற்றிய கட்டுப்பாடும், இந்தியமாட்டு ஒருபொது நோக்கும் வளரலாயின. அவர் தம் வாழ்க்கைப்பணி தொடங்கி முடியும் நாடு என்ற வகையாலும், அவர்கள் சேவை செய்யும் நாடு என்ற காரணத்தாலும், அந்நாடே அவர்தம் கருமமாயிற்று. அவர்கள் கருத்திற் கொண்டது இந்தியமக்களின் இந்தியாவன்று ; அது அவர்கள் சொந்தக் கருத்தில் உதித்த விசேடமான இந்தியாவாகும். அந்த இந்தியாவிடத்தே அவர்கள் விசுவாசங் கொள்ளலாயினர். அவர்தம் ஆதரவில் விடப்பட்ட பலகோடிக்கணக்கான மக்களைக் கொண்ட ஒரு நாடாக அவர்கள் அதனை உருவகித்தனர். இந்தியப் 'பொதுமக்களோடு' தம்மையும் ஒருங்குவைத்தெண்ணும் ஒரு விசித்திரமனப்பான்மை இவ்வாறாக அவர்களிடையே தோன்றிவளர்ந்தது. சிவில் சேவையின் ஆட்சியுரிமையை மறுக்கமுயன்ற—கல்வி பயின்ற—வகுப்பாரிடத்து அவர்கள் இயல்பாகவே அவநம்பிக்கை கொண்டனர்.

சிவில்சேவை மரபு இவ்வாறாக விருத்தியடைந்ததன் பயனுய் முக்கியமான ஒரு விளைவு ஏற்பட்டது. பிரித்தானிய அரசாங்கத்தின் பூட்கைகளுக்குப் பிரதிநிதியான அரசுச் செயலாளனுக்கும், சிவில் சேவைக்குப் பிரதிநிதியான இந்திய அதிகார வர்க்கத்துக்குமிடையே முரண்பாடு வளர்ந்தது. தேசியவுணர்ச்சி

விருத்தியடையுமுன்னர், தேசியவுணர்ச்சி காரணமாக இந்தியர் இந்தியர்க்குப் பிரதிநிதிகளாய் அமைவதே உத்தமமான முறையாகுமெனுங் கருத்தைப் பிரித்தானிய அரசியல் வாதிகள் தழுவுதன் முன்னர், சிவில் சேவையானது தனது இந்தியாவின் சார்பிலே இலண்டன் அதிகாரவர்க்கத்துக்கெதிராகப் போராடி வந்துளது. பாராளுமன்றத்தின் நெருக்கிடை காரணமாகவோ நிதி நிலையின் நெருக்கிடை காரணமாகவோ இலண்டனில் உருவாகும் பூட்கைகளுக்கு மாறுகச் சிவில் சேவையானது 'குறிப்பிட்ட தலத்திலுள்ள ஒருவனே அத்தலத்துள்ள நிலைமைகளை நன்கு அறிவனுதலின், தீர்மானஞ் செய்தற்கு அவனே ஏற்றவன்' என்றவாறுன சுலோகத்தைக் கிளப்பி வந்தது. இந்தியக் கைத்தொழில், வர்த்தக நலவுரிமைகளின் செல்வாக்கிற்கு உட்பட மறுத்தலும், சிவில் சேவையின் முக்கியமான ஒரு சிறப்பியல்பாய் இருந்தது. சிவில் சேவையாளருடைய வகுப்புணர்ச்சியும் இத்தகைய போக்கை, கருத்தினை, வலியுறுத்த உதவிற்று. சேர் பாட்டிள் பிறியர் என்பான் கொட்றிச்சுப் பிரபுவுக்கு எழுதுங் காலை, பிரித்தானியச் சிவில் சேவையாளன் 'அறிவாற்றலில் உயர்ந்தோனுக இருத்தலினும் பார்க்க, கிறிக்கற்றுக் களத்திலும் குதிரையேற்றத்திலும் வல்லவனுகவும், வறியோரிடையும் பணியாளரிடையும் மதிப்புடையனுகவும் இருத்தலே இந்தியச் சுதேசிகளுக்கு வேண்டுவதாகும்' என வற்புறுத்தினன். '**சைம்சுப்**' பத்திரிகையின் பிரபல நிருபனை இறசல் என்பான் வருமாறு குறிப்பிட்டான். 'சங்கேத வியாபாரத்தில் வெற்றிபெற்றேன் அல்லது வர்த்தகத்திற் பணஞ் சேர்த்தோன் இங்கிலாந்தில் உயர்சமூகத்திலே எவ்வாறேனும் இடம்பெற்றிடுவன். ஆயின் இந்தியாவிலோ அரசாங்க சேவையாளரின் உயர் சமூகத்திற்கு அவன் எஞ்ஞான்றும் புறம்பானவனே'. இவ்வாருக, இந்தியச் சிவில்சேவைக்கும் வர்த்தக வகுப்பார்க்குமிடையே நட்புறவு யாதும் இருந்திலது; இந்தியாவைச் சுரண்டி வாழ்வதிற் பிரித்தானிய இந்தியச் சிவில் சேவையாளர் அக்கறை கொண்டிலர். இன்னும், வாய்பறையாப் பாமரமக்கள் அடங்கிய இந்தியநாட்டின் சார்பாக, பிரித்தானிய வியாபாரிகள் முதலாளிமார்க் கெதிராகச் சிவில் சேவையாளர் பரிந்து பேசினர்.

இலண்டன் அதிகாரவர்க்கத்தோடு தொடர்ந்து நிகழ்ந்த போராட்டங் காரணமாக, வெள்ளைமன்றத்தின் (வைற்ரேலின்) அதிகாரத்துக்கு முற்றுகக் கீழ்ப்பட்டதே இந்திய அரசாங்கம் எனுங் கோட்பாட்டை அடுத்தடுத்து அரசுச் செயலாளர் பலர் பகிரங்கமாக எடுத்துரைக்கவேண்டியவராயினர். ஒரோவழி இப்போராட்டமானது ஓர் அரசியற் பிரச்சினையாகிப் பொதுமக்களின் கவனத்தையும் ஈர்த்தது. உதாரணமாக, இலங்காசயரின் நலனுக்கே திண்ணமாக உவந்ததாய், இந்தியாவின் நலனுக்கு ஊறுவிளைப்பதாய் அமைந்த ஒரு பூட்கைக்கு மாறுகப் பதிலிராயன் ஒருவன் பதவி துறந்தபோது அத்தகு நிலை யேற்பட்டது. இஃது இவ்வாருக, அரசுச் செயலாளர் ஒரு கோட்பாட்டை எடுத்தியம்புவது எளிதே. ஆயின், நிருவாகத்துறையிலே மட்டுமன்றி, தலையாய தினைக்களங்களின் அலுவல்களைப் பொறுத்தவரை அமைச்சவையிலுமே இடம் பெற்று, நிரந்தரமாக நிலையூன்றியிருந்த சிவில் சேவையாளரின் கருத்துக்கு

மாறுக அக்கோட்பாட்டைச் செயற்படுத்தல் எளிதன்று. படிப்படியாக இந்திய அரசாங்கமானது செவ்வையான அதிகாரஞ் செலுத்தத் தொடங்கிற்று. இந்தியாவின் உண்மை நலனுக்கு உகந்தவையெனச் சிவில் சேவை கொண்ட கருத்துக்களே அடிப்படையாகக் கொண்டு, சுயாதீனமான பூட்கைகள் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்டன.

இந்தியாவில் நிகழ்ந்த இப்பெரும்மாறுதலுக்கு இன்னும் முக்கியமான பிறிதொரு காரணமும் இருந்தது. ஆசியாவெங்கணும் பிரித்தானியரின் அதிகாரம் பரந்து செறிதற்கு ஏதுவான ஓர் அங்கமாக, ஒருபெரும் அரசாக, இந்தியா வகித்தநிலை இங்கிலாந்தில் உணரப்பட்டதே அக்காரணமாகும். இந்திய அரசாங்கம் ஒரு பேரரசாகப் பரிணமித்தமை, பெயரளவானும் பட்டத்தளவானும் நடந்த தொன்றன்று. பிரித்தானியராட்சியில், இந்தியாவானது அபுகானித்தான் பர்மா போன்ற அயலுடுகளிலேயும் பங்குகொண்டவாற்றைப் பின்னர்க் காண்போம். இந்திய அரசாட்சி உறுதியாக நிலைநாட்டப்பட்டதன் பின்னர், மூல வளங்களும் பெருவலியும் பொருந்திய ஒரு பெருங்களஞ்சியம் தமக்கு வாய்த்த வாற்றைப் படிப்படியாக உணர்ந்த பிரித்தானிய அரசியலறிஞர், பெரும்படையுந் திறமையான நிருவாக அமைப்புங் கொண்டு, ஆசியாவிலும் ஆதிக்கநிலை பெறுதல் இயல்வதொன்றே என்பதைக் கண்டனர். முதற் சீனப் போரிலே இந்தியா கொண்ட பங்குபற்றி முன்னமே கண்டோம். நாம் ஆராயும் காலப் பகுதியில், இந்தியாவைத் தளமாய்க் கொண்ட பிரித்தானிய அதிகாரம், யாக்கூப் பெக்கின் கலகத்தின்போது சிங்கியாங்கு மாகாணத்திலும் மற்று அபுகானித்தானிலும் ஊடுருவத் தொடங்கிற்று. அபுகானித்தானை ஒரு புரப்பகமாக ஒடுக்க முயன்றவாற்றை விரைவிற் காண்போம். இன்னும், அது பர்மாவை வென்றடிப்படுத்தி, பாரசீகத்திலே தலையிடமுயன்று, அராபியக் கரையிலும், பாரசீக விரிகுடாவிலும் பொதுவாகத் தன் ஆதிக்கத்தை நிறுவிக்கொண்டது. தென்ஞசியாவின் அரசியல் அமைப்பின் மையமாக, ஒரு பேரரசாக, 1857 ஆம் ஆண்டளவில் இந்தியா பரிணமித்தது.

பிரபலமான நாவலாசிரியற்கு மைந்தனும் புலவனுமாகிய இலிற்றனே, இந்தியப் பேரரசின் தாபகனுக உரிமைபாராட்டத் தக்கவனவன். பிரித்தானிய மூடியரசு பேரரசுப் பட்டத்தை இந்தியாவிற்கு அளித்து, அவ்வழி, பிறகுடியேற்றங்களிலும் வேறான ஒரு பதத்தை வழங்கியவாற்றைப் பிரசித்தஞ் செய்தற்காக ஒரு பெருந் தர்பாரை நடாத்தியோன் என்ற வகையாலும், 'மத்திய ஆசியாவில் ஆதிக்கத்தையும், முதற்றரமான ஒரு வல்லரசுக்குரிய பெருவருமானத்தையும் நல்கியோன்' என்ற கற்பனைக் கொள்கையின் வகையாலும், அவனே அவ்வுரிமைக்கு உரியான் எனலாம். இவ்வழி, ஓராற்றல் முகலாயப் பேரரசு 'புத்துயிர் பெற்றது'. குவெற்றுவை 1877 இல் அடிப்படுத்திய இலிற்றன் பலுக்கித்தானையும் இந்தியப் பேரரசில் இணைத்துக்கொண்டான். இவ்வாறுக அவன் இந்திய எல்லைப்புறத்தைக் கடந்துசென்றான். 1863 ஆம் ஆண்டு தொட்டு, அபுகானிய அலுவல்களிலே இந்திய அரசாங்கம் இடையிடை கவனஞ் செலுத்

தியதாயினும், மத்திய ஆசியாவில் இரசியரின் ஆதிக்கம் பரவவே, இன்னும் ஊங்கிய பங்கு கொள்ளவேண்டுமென அஃது உணர்ந்தது. பதிலிராயனை இலிற்றன், அபுகானித்தானை ஒரு புரப்பகமாக ஓடுக்கும் நோக்கொடு, இராணுவ நடவடிக்கைகள் சில மேற்கொண்டான். பேரரசுப் பட்டஞ் சூட்டியவாற்றை அபுகானிய வேத்தவையில் அறிவிக்கும் பொருட்டு ஒரு தூதினை ஏற்குமாறு அபுகானிய மன்னன் செர் அலியை அவன் வற்புறுத்தத் தொடங்கினன். இரசியரும் அவ்வுரிமை கோருவர் என நியாயங் காட்டிச் செர் அலி மிக்க மரியாதையோடு அக் கோரிக்கைக்கு இணங்க மறுத்தான். இணக்கப் பேச்சுக்கள் பயனளிக்காமையால், இலிற்றன் தலையிடத் துணிந்தான். கிரான்புறுக்குப் பிரபுவுக்கு வரைந்த கடிதமொன்றில் இலிற்றன் வருமாறு எழுதினன். 'நாம் ஆதிக்கம் யாதும் செலுத்தலின்றி, சுதந்திரமான வலிமை சான்ற அரசொன்றை அபுகானித்தானில் நிறுவும் பூட்கை தவருமென்பதை அனுபவ வாயிலாக நான் அறிந்துகொண்டேன். போரினாலேனும் இப்போது ஆட்சி செய்கின்ற அமீர் இறப்பதாலேனும்..... காபுல் அரசைச் சிதைத்துத் தகர்க்கும் வாய்ப்பு எமக்குக் கிடைக்குமாயின், நாம் அவ்வாய்ப்பைத் தவற விடலாகாதென, நான் நெஞ்சார நினைக்கின்றேன்'[1]. இலிற்றன் காத்திருந்த வாய்ப்பும் விரைவிற் கிட்டிற்று. தனது இந்தியப் பேரரசின் நலனுக்காக அபுகானித்தானைச் சின்னபின்னப்படுத்தும் நம்பிக்கையோடு, அவன் மேலிடத்துக் கட்டளைகளையும் மீறி, போர் மேற்செல்லத் துணிந்தான். இலண்டன் அதிகாரவர்க்கத்தையும் மீறி அவன் போர்நெறியதனில் முடுகிச் சென்றான். புனேந்துரைத்த சில தலைக்கீட்டின் பெயராற் போர்ப்பிரகடனஞ் செய்யப்பட்டது. இந்தியப் படைகள் மூன்று அபுகானித்தானுட் புகுந்தன. இரசியாவின் உதவியை நாடிப் பெறத்தவறிய அமீர் தலைநகரினின்றுந் தப்பியோடினன். அவனுக்கு மைந்தன் யாக்குப் கான் ஆங்கிலரோடு ஒரு பொருத்தனை செய்தான். அதன்படி, அபுகானித்தானின் வெளிநாட்டுப் பூட்கை இந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அமைதல் வேண்டுமென விதிக்கப்பட்டது. ஆயின், விரைவிற் கைவந்த இவ்வெற்றி வெறும் மாயமானது. பொருத்தனைப்படி நியமிக்கப்பட்ட வதிவாளனையும் அவன்றன் உத்தியோகத்தரையும் அபுகானியர் தாக்கிப் படுகொலை செய்தனர். இந்துக்கூசு மலைமீதாக இலிற்றன் வகுத்த அரசியலமைப்பு கணப்பொழுதிற் சரிந்து வீழ்ந்தது. பிக்கன்சுபீல்டுக்கு எழுதுங்காலை, அவன் வருமாறு கழிவிரக்கத்து எழுதினன். 'இத்துணைக் கவனமாய்ப் பொறுமையோடு பின்னப்பட்ட பூட்கையெனும் வலை மூரட்டுத்தனமாய் அழிக்கப்பட்டது. நாம் புதியதொன்றை, நலிந்த கூறுகள் கொண்டு அகலப் பின்னுதல் வேண்டும்'[2]. இராணுவப் பெருங்கேடு நேர்ந்தக்கண்ணும், அகன்ற வலை பின்னுவது பற்றி அவன் சிந்திப்பதற்கு ஊக்கமளித்தது, இந்தியப் பேரரசின் உறுதியான அத்திவாரமேயாம். அவப்பெயர் பெற்ற கயவனை சேனபதி உரூபேட்சு என்பான் மீண்டும் ஒரு படைக்குத் தலைமை தாங்கி அபுகானித்தானுட் புகுந்தான். புகுந்து, காபுலை அடிப்படுத்தியபின்,

[1] Lord Latton's, **Indian Administration,** p. 247.
[2] Lord Lytton's, **Indian Administration,** p. 358.

பிரித்தானியரை எதிர்ப்பதால் விளையும் பெருங்கேட்டினை அபுகானியர்க்கு உணர்த்தும் பொருட்டு, அவன் மக்களைக் கண்டபடி தாக்கிலிட்டும் கிராமங்களை எரித்தும் பேரழிவு செய்தான். ஆயின், அபுகானியரோ அவன் போதிக்க முயன்ற பாடத்தைக் கற்க மறுத்தனர். அவர்கள் தொடர்ந்து போர் செய்தமையால், பிரித்தானியப் படையெடுப்பாளர் பொறுக்கலாற்றாது, அரசியல் ஒப்பந்தமொன்றை வேண்டிநின்றனர். எளிதாக வெற்றியீட்டும் நோக்கத்தோடே அபுகானித்தானுள் அணிவகுத்துச் சென்ற படையானது, தனக்கு மதிப்புத் தேடத் தவறி, இந்தியாவிற்கு மீண்டது. தற்கால அபுகானித்தானை உருவாக்கியோனை அப்துல் இரகுமான் அரியணையேறி, பிரித்தானியத் தூதுவனெருவனை ஏற்க இணங்கினனையினும், பிறவல்லரசுகளோடு தொடர்பு கொள்வதில்லையென உறுதியளித்தானையினும், அபுகான் நாட்டின் சுதந்திரம் அழியாது காக்கப்பட்டது.

அபுகானியப் போராட்டம் படுதோல்வியாய் முடிந்து, இந்தியாவிற்குப் பெருஞ் செலவை விளைத்தவாற்றை நாம் ஈண்டுக் கவனித்தல் வேண்டும்; அவ் வழி அரசாங்கக் கடன் அதிகரித்தது. எனினும், போரின் பின்னர் நிறுவப்பட்ட அரசியல் முறைமை குழம்புதலின்றி 1919 வரையும் தொடர்ந்தியங்கியது. சுதந்திரமான தடுப்புநாடாக அமைந்த அபுகானித்தானில், இந்திய அரசின் செல்வாக்கானது கட்புலனாகா வகையில் ஆதிக்கம் பெற்றது. பேரரசுப் பட்டமானது பணவிரயத்துக்கு ஏதுவாயதை இந்தியாவும் உணர்ந்து கொண்டது. கிழக்குலகில் ஆங்கிலர் நடாத்திய போரெல்லாம் இந்தியாவின் கணக்கிலேயே நிகழ்ந்தவாதலின்.

பர்மாவிலே தலையிட்டமை கூடிய வெற்றியை அளித்தது. ஆயின் அது பண்பற்ற அக்கிரமமான வர்த்தக ஆக்கிரமிப்பாகக் கருதத்தக்கது. தல்கவுசியின் ஆட்சியின்போது, ஒருசிறு கடனை அறவிடுதலைத் தலைக்கீடாகக் கொண்டு, கீழ்ப் பர்மா அடிப்படுத்தப்பட்டவாற்றை ஏற்கவே கண்டோம். ஆயினும், மேற்பர்மா இன்னும் சுதந்திரமான அரசாகத் தொடர்ந்திருந்தது. அபிவிருத்தியடையா மூலவளம் பல படைத்த அந்நாட்டிற் கவனஞ் செலுத்திய பிரித்தானிய வர்த்தக வகுப்பார்க்கு, அந்நாடு சுதந்திரமாக இருந்தமை பொறுக்கவியலா விடயமாயிருந்தது. அந்நாட்டைத் தாக்குதற்கு வேண்டிய தலைக்கீடும் விரைவில் வாய்த்தது. பம்பாய்—பர்மா வர்த்தகக் கம்பெனியெனும் மாவியாபாரக் கம்பெனியிலே பிற பெருமக்களோடு, அக்காலப் பதிலிராயனுடைய உறவினர் சிலரும் பங்குடையோராயிருந்தனர். அக்கம்பெனிமீது பர்மிய அரசாங்கம் பெருங்குற்றப்பணம் விதித்தது. இனி, அரசியற்றலைக்கீடும் அக்காற்கிடைத்தது. இந்து—சீனத்திலும் சியத்திலும் பிரான்சு தன் செல்வாக்கைப் பெருக்கி வந்தமையும், பர்மாவிலேயும் தன் தூதமைச்சன் வாயிலாகத் தலையிட்டு வந்தமையும் அத்தலைக்கீடாயின. தபரின் பிரபு 1885 இலே தீபோ மன்னற்கு இறுதிக்கடிதம் போக்கினன். அது நிராகரிக்கப்படவே, மண்டலேக்கு அனுப்பப்பட்ட ஆங்கிலத்தானை "போராட்டத்தைப்' பதினைந்து நாளில் முடித்து அரசனையுங் கைப்பற்றியது. இங்கும் இப்போர்ச் செலவை இந்தியாவே தாங்க

வேண்டியதாயிற்று. எனினும், இந்தியப் பேரரசின் செல்வாக்கு சீயம், இந்து—சீனம், யுனான் ஆகிய நாடுகளின் எல்லைப்புறம்வரை பரந்ததென்பது ஆறுதலளிப்பதாகும்!

மேற்கில், ஆதியிலிருந்தே பிரித்தானிய இந்திய அதிகாரவர்க்கம் பாரசீகத்தின் அலுவல்களிற் பெருங் கவனஞ் செலுத்தி வந்துளது—சேர் யோன் மல்கம் தலைமையில் 1830 இற் சென்ற தூது இதனைக் காட்டும். பாரசீகத்தின் வடவெல்லையிலே இரசியாவின் அதிகாரம் உறுதியாக நிறுவப்பட்டபின், பிரித்தானியரின் கவனங் கூர்ந்தது. அங்கே, இலண்டனுக்கும் மொசுக்கோவுக்குமிடையே நிகழ்ந்த போட்டியும், மத்திய கிழக்கிலே பிரித்தானியரின் நலவரிமைகளும் இப்பிரச்சினையின் முக்கிய அமிசங்களாகக் கருதத்தக்கவை. சேர் இலீடர் புல்லேட்டு என்பான் கூறுவது காண்க: 'பாரசீகத்தோடு சூழ்வியற் ரெடர்புகளுக்கு மா. த. மன்னர்பிரானின் அரசாங்கமா, மற்று இந்திய அரசாங்கமா பொறுப்புடையதாக இருத்தல் வேண்டுமெனும் இப்பிரச்சினை பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தொடங்கி, அரைநூற்றாண்டுக் காலமாக நீடித்துளது. இந்தியாவின் சார்பாக மல்கமும், தாய்நாட்டு அரசாங்கத்தின் சார்பாக ஆபோட்டு யோன்சும் ஒருங்கே பிரதிநிதிகளாக இருந்தமையால் விளைந்த இடர்ப்பாடு, சேர் கோர் அவுசிலி யென்பானைத் தனியொரு தூதுவனாக நியமித்ததன் மூலம் தீர்க்கப்பட்டது. ஆயினும் அதில் அடங்கியுள்ள தத்துவப் பிரச்சினை 1860 வரையும் தீர்க்கப்பட்டிலது. அப்போது, சூழ்வியற் ரெடர்புகள் வெளிநாட்டு அமைச்சின் பொறுப்பாக இருத்தல் வேண்டுமென்றும், ஆயின் தூதுவராலயத்தின் செலவுக்கு இந்திய அரசாங்கமும் பணவுதவி செய்தல் வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது'.[1]

இவ்வழி, பாரசீகத்திலே பொறுப்பு இரண்டுபட்டு இருந்ததாக, இந்தியாவின் நலவுரிமைகளின் சார்பாகவே திபெத்திலே தலையிடவேண்டி நேர்ந்ததெனக் கருதப்பட்டது. 'இந்தியப் பேரரசுக்' கொள்கையின் வழிவந்த நேர்விளைவாகும் அது. திபெத்தொடு வர்த்தகந் தொடங்குதற்குப் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியளவிலே முயற்சிகள் செய்யப்பட்டபோதும், அவை பயனளித்திலை. 1886 இல், திபெத்தியர் சிக்கிம் நாட்டுள் வலியப் புகுந்தனர்—அந்நாட்டின்மீது அவர்கள் மேலதிகாரம் பாராட்டி வந்தனர். ஆயின், சிக்கிம் மன்னனோடு ஏற்கவே தொடர்புகொண்டிருந்த இந்திய அரசாங்கம் அங்குத் தலையிட்டுப் படையெடுத்து வந்தோரை விரட்டியோட்டியது. பின்னர் 1890 இலே சீனா—பிரித்தானிய ஆணைக்குழுவொன்று எல்லைப்புறத்தை வரையறை செய்தது. அக்காலத்திலேயே வர்த்தக ஒப்பந்தமும் நிறைவேறியது. ஆயினும் திபெத்தியர் அதனைச் செயற்படுத்தவொட்டாது தடுத்துவிட்டனர். எனினும், கேர்சன் பிரபுவின் காலத்தில், நிலைமை மாறியது. திபெத்து நாடு தனித்தொதுங்கி நின்றமையும், வெளியுலகோடு தடையின்றிப் புழங்குவதைத் தலையிலாமா தடுத்து வைத்தமையும், இந்தியாவிற் பிரித்தானிய ஆதிக்கத்தை அவமதிப்ப

[1] Bullard : **Britain and the Middle East.** London, Hutchinson, 1951, p. 90.

தாகுமெனக் கேர்சன் கருதினன். 'அரசியல் வர்த்தகத் தொடர்புகள் கொள்ளத் திபெத்து அரசாங்கத்துக்குப் பூரணமான வாய்ப்புக்கள் அளிக்கவல்ல, நாகரிகம் படைத்த, ஒரு பெரும் வல்லரசுக் கண்மையில், இத்தகைய தனிமைப் போக்குப் பொருந்தாது' எனக் கேர்சன் கருதினன். அயனாட்டு வேத்தவைகள், தன்னுடைய ஒப்பிலாச் சிறப்புடைய நிலையினை அங்கீகரித்து ஒழுகவேண்டுமெனப் பேரரசு விரும்பிற்று. பண்டை இந்தியச் 'சாம்பிராச்சியக்' கோட்பாட்டின் சாயலையும், சீனப் 'பொதுப் பேரரசுக்' கொள்கையின் சாயலையும் இங்குக் காணலாம்.

இங்குந் தலைக்கீடு விரைவிற் கண்டுபிடிக்கப்பட்டது. திபெத்தியத் தலையிலாமா மீது இரசிய அரசாங்கம் தனது செல்வாக்கைப் பரப்ப முயல்வதாகக் கூறப்பட்டது—உண்மையில் இதற்கு ஆதாரமில்லையென்பது பின்னர் வெளிப்பட்டது. தோசியெவ் எனப் பெயரிய புரியத்துப் புத்ததுறவியொருவன், பிற்றைநாளிற் பொந்தின்புலோவில் அறிவு போதிப்பவனுகக் கடமையாற்றியோன், தலையிலாமாவுக்குத் தலைமைக் குருவாக உயர்பதவி பெற்றான். இரசிய நாட்டவனை தோசியெவ், சென். பீற்றசுபேக்கு அதிகாரிகள் சிலருக்குக் கடிதங்கள் எழுதினன். இலாசாவில் இரசியர் சதி செய்தாரென எடுத்துக்காட்டுதற்கு, இவ்வழி, கேர்சனுக்கு ஒரு தலைக்கீடு வாய்ந்தது. இலாசாவுக்குத் தூதொன்று அனுப்புதற்கு இணங்குமாறு பதிலிராயன் பிரித்தானிய அரசுச் செயலாளனை 1902 இல் நெருக்கினன். முதலிற் பிரித்தானிய அரசாங்கம் இக்கோரிக்கையை ஏற்க மறுத்தது. எனினும், கேர்சன் திபெத்தியர்க்குக் கடுமையான நிபந்தனைகள் விதிக்க, அவர்கள் அவற்றை ஏற்க மறுக்க, அன்னர் விரோதபான்மை காட்டினர் எனக் கேர்சன் எடுத்துக் காட்டி, இலண்டன் அரசாங்கம் தன் கருத்தை ஏற்குமாறு செய்தான். பிரித்தானியப் படையொன்று எல்லைப்புறத்தைக் கடந்து சென்று, வழக்கொழிந்த பழையவகைப் படைக்கலங்கள் தாங்கி யெதிர்த்த திபெத்தியரைச் சுட்டு வீழ்த்தி, இலாசாவுட் புகுந்து, உலகறியா மர்ம நகரைக் கைப்பற்றிய புகழை ஈட்டியது. ஆயின், தலையிலாமா மொங்கோலியாவுக்குத் தப்பியோடினன். எனினும், பதிலாளிமீது பொருத்தனையொன்று திணிக்கப்பட்டது. வலோற்காரமான இந்த ஆக்கிரமிப்பைக் கண்டு இலண்டன் அரசாங்கமுமே அதிர்ச்சியடைந்தது. இனி, சருவதேச நிலை காரணமாகவும் பிரித்தானியப்படை திபெத்திலிருந்து பின்வாங்க வேண்டியதாயிற்று. திபெத்தின்மீது சீனத்தின் மேலாண்மையை அங்கீகரித்துப் பிரித்தனும் இரசியாவும் ஒப்பந்தம் ஒப்பேற்றின. இந்தியப் 'பேரரசுக் கொள்கை'யின் உச்சநிலையை இத்திபெத்தியப் படையெழுச்சி குறிப்பதாகும்.

பேரரசுக் கோட்பாட்டைத் துலக்கி வைத்தவன் இலிற்றன் பிரபு வெனக் கொண்டால், அதனை ஆதிர்சமாக்கியோன் கேர்சன் பிரபுவே. அயனாடுகளிலே புகழொளி பரப்பும் ஒரு பேரரசாக இந்தியாவைக் கண்டு அப்பேரரசின் உருவமாக விளங்கியவன் கேர்சனே எனலாம். பதிலிராயன் பதவி பெறுமுன்னமே, இந்தியாவின் எல்லைப்புறங்களிலே அவன் பெரிதும் பிரயாணஞ் செய்திருந்தான். அவ்வழி அவன் தனது எதிர்காலப் பணிக்கு ஆயத்தஞ் செய்தான் என்பது

குறிப்பிடத்தக்கது. திபெத்தியப் படையெடுப்புப் பற்றி மோளிப்பிரபு கூறியது போன்று, தனது சொந்தப் பேரரசுப் பூட்கையை ஆற்றுப்படுத்தும் மாட்சிமைப் பட்ட முகலாயன் போன்று கேர்சன் நடந்து கொண்டான். இந்தியாவே உல கின் மையமாக அவனுக்குப்பட்டது. அவன் பாரசீகக் குடாவிற்குச் சென்றான். அபுகானித்தானிலும் நேபாளத்திலும் இந்திய அரசாங்கத்தின் செல்வாக்கினைப் பெருக்க முயன்று ஓரளவு வெற்றியுங் கண்டான். தெற்கு ஆசிய அலுவல்களிலே அவன் இந்தியாவிற்கு ஒரு சிறப்பிடங் கோரினன்—இவ்வழி, இந்தியா ஒரு சுதந்திர நாடேயென்ற பாவனையில் அவன் நடந்துகொண்டான்.

புகழ்பெற்ற ஆங்கில வரலாற்றாசிரியன் ஒருவன் கூறியது போன்று, அக்காலத் தில் இந்தியப் பேரரசானது 'ஒரு கண்டஅமைப்பாக', இந்தியாவைத் தள மாய்க் கொண்டு எடின் முதல் ஒங்கொங்கு வரையுந் தன் அதிகாரத்தைப் பரப் பும் ஓர் அரசியல் அமைப்பாக இருந்தது. 'இந்தியாவும் பிரித்தனும், பிரித் தானிய மத்தியவகுப்பைச் சேர்ந்த குடியேறிகளும் இந்திய ஆட்பலமும், ஒன்று பட்டு ஒத்துழைத்ததன் விளைவே அது. அப்பேரரசைப் பெரிய பிரித்தனின்றி இந்தியாவும் இந்தியாவின்றிப் பெரிய பிரித்தனும், தனித்துத் தாபித்திருக்க முடியாது. பேரரசுப் பூட்கைகளை உருவாக்கியோர் அனைவரும் ஆங்கிலரே. ஆயின், பிரித்தனுடைய தேவைகளன்றி இந்தியாவின் தேவைகளே அவர்கள் நிருமாணித்த பேரரசுக்கு அடிப்படையாயின. பாரசீகக் குடாவிலும் திபெத்தி லும் சிங்கியாங்கிலும் பெரிய பிரித்தன் தலையிடுதற்கு இந்தியாவின் பாதுகாப்பே காரணமல்லாது, பிரித்தனுக்கு ஆங்கிருந்த அக்கறை யாது? பிரித்தானியரன்றி இந்தியக் குடியேறிகளே புதிய மாகாணங்களிற் சென்று குவிந்தனர். இனி, புகை யிரதப்பாதைகளையும் சுரங்கங்களையும் பெருந் தோட்டங்களையும் புதிய கைத் தொழில்களையும் பிரித்தானிய மூலதனமே நிருமாணித்ததாக, வட்டிக்குப் பணங் கொடுக்கும் இந்தியரே காணிகள் வாங்கினர். பிரித்தானியர் ஆசியாவிற் செய்த முயற்சிகளிலெல்லாம் ஆங்கில மன்னரின் தொண்டராகவன்றி இந்தியப் பேர ரசனின் தொண்டராகவே ஓராற்றூற் பணிபுரிந்தனர். பிறவாற்றால் தலக்கமற்றி ருக்கும் பேரரசின் இறப்பும் நிகழ்வும்பற்றி நாம் செய்வையாக விளங்குதற்கு மேற்கூறிய உண்மை பெரிதும் துணைசெய்யும்.

'நேராகப் பரிபாலிக்கப்பட்ட வளமார் பிரதேசமான உட்சதையையும் அதனையடுத்துப் பாதுகாப்பாகவுள்ள தோலையுங் கொண்ட ஒரு கனியாகவே இந்தியப் பேரரசைக் கருதுதல் வேண்டும். ஒருபுடை பூத்தான், நேபாளம் போன்ற வளர்ச்சியடையாச் சிற்றரசுகளும், மறுபுடை மலைநாடுகளும் பாலை நிலங்களும் அத்தோலில் அடங்கியிருந்தன. இவ்விருவகையான பிரதேசங்கள் மீதும் பலபடித்தாய ஆட்சியைப் பிரித்தன் செலுத்தியது. ஆயின், பிற நாடு களோடு அவை தொடர்பு கொள்ளாமல் தடுப்பதும் அல்லது அத்தொடர்புகளைக் கட்டுப்படுத்துவதும், மற்று அவற்றைப் பிறநாடுகள் எமக்கு மாறுகப் பயன் படுத்துவதும் பொது நோக்காயின.'

'இன்னும் சேய்மையில், எல்லைப்புறங்களுக்கு அப்பால், திறந்தவெளியான ஒரு களம்போன்று பயன்படுத்தற்காக, பாரசீகம், அராபியா, திபெத்து, அபு

காணித்தான், சிலகாலம் சிங்கியாங்கின் ஒருபகுதி எனுமிவைபோன்ற நொது மலான நாடுகளைக் கொண்ட ஒரு வட்டாரத்தை இந்திய அரசாங்கம் உருவாக் கியது. ஒரு புறத்தே, இந்தியாவின் செல்வாக்கு வட்டாரத்தின் எல்லையாகப் பாக்தாதுக்கும் தமாசுக்கசுவுக்குமிடையேயுள்ள அராபியப் பாலைநிலம் அமைந் தது. ஐரோப்பாவை எதிர்நோக்கும் நாடுகளையும், மற்று, ஆசியாவை எதிர் நோக்கும் நாடுகளையும் பிரிக்கும் உண்மையான எல்லையாகவும் அது அமைந்தது. ஒரு காலத்தில் உரோமானியப் பேரரசின் எல்லையாக இருந்ததுவும் அதுவே... ..... மறுபுறத்தில், இந்தியாவின் கவனம் இந்தோனேசியா, இந்துசீனம் ஆகிய நாடுகள்வரை வியாபித்திருந்தது. ஆயின் பல்வேறு காரணங்கள் பற்றி, மேற் றிசையிலேயே அக்கவனம் கூர்மையும் விழிப்பும் மிக்கதாய் இருந்தது.

'இந்தியப்படையினும் இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டு அலுவலகத் திலும் பணியாற்றிய ஒரு நிபுணர் குழுமானது, ஆரவாரமின்றி, ஒரு சதியோ மர்மமான கிரியையோ செய்வார்போன்று, இப்பூட்கை தொடர்ச்சி யறுதலின்றி நீடித்தியல்வதை உறுதிப்படுத்திற்று. பிரித்தானியக் கடற்படை உலவும் ஆழ் கடல்கள்; 3,000 மைல் நீளமுடைய மலேப்பாங்கான வடநாட்டு எல்லைப்புறம்; உரோமானியப் பேரரசின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட மிலேச்ச நாடுகளைப் பெரிதும் நிகர்த்தவையெனத் தொல்லருங்கால இலக்கியத்திற் பயின்ற உத்தி யோகத்தரால் கற்பனை செய்யப்பட்ட தூரதேயங்கள்; ஒரு காலத்தில் ஒன்று திரண்டு பொங்கியெழுந்தது, தென்றிசையிலுள்ள அயனமண்டல நாடுகள் மீது வந்திறங்கக்கூடிய அழிவுச்சத்திகள் அடங்கியிருந்த மத்திய ஆசியா; எல்லைப் புறச் சிறுதானைகளுக்கும் நாகரிகமற்ற குலங்களுக்குமிடையே, வெளிநாட் டோர்க்கு நகைப்பூட்டத்தக்கவகையில் நடந்த பூசல்கள்; வர்த்தகரும் இரா மாக்களும் போன்று வேடம்பூண்டு, பெருந்தொகையான வெள்ளிரூபாவும் அளவுகோலுந் தாங்கி, கிப்ளிங்கின் பாத்திரமான கிம்மின் துணைவரைப் போன்று, மலைநாடுகளிலே சுற்றித் திரியும் ஒற்றர்கள்—இவ்வாறுக அக்கால மக்களின் கற்பனைக்காட்சி விரிந்தது.[1]'

இவ்வழி, 'கடல் கடந்த இந்தியா' வளர்ச்சியுற்றது. பேரரசின் அயனமண்ட லப் பிரதேசங்களிலே இந்திய மக்கள் பெருந்தொகையினராய்க் குடியேறலா யினர். ஆங்கு, அவர்கள் விவசாயத்திலும் தொழிலிலும் பெற்றிருந்த தேர்ச்சி யைக் கொண்டு சென்றதோடு, சற்றே திரிந்த இந்தியச் சமூகமுறையையும், இந் திய மதங்களையும், கோவில்களையும், விழாக்களையும் அப்புதிய இடங்களிற் புகுத் தினர். தென் ஆபிரிக்காவிலும் கிழக்காபிரிக்காவின் பிரித்தானியக் குடியேற்றங் களிலும், சேய்மையிலுள்ள பிரித்தானிய கயனாவிலும் திரினிடாத்திலும் யமேக் காவிலும் இந்தியக் குடியேற்றங்கள் தழைத்தோங்கின. இந்தியாவின் நிலை திருந்தாவிடினும், இம்மகத்தான அபிவிருத்தியிலே அது சிறுபங்கே கொண்ட தெனினும், இந்தியப் பேரரசின் நிலை திருந்தி ஆசியாவின் பிரதான வல்லரசு களுள் ஒன்றுயது.

[1] Guy Wint : **British in Asia**, pp. 21-3.

அதிகாரம் 2

சீனம்

ஆங்கில-பிரான்சிய நட்புநாடுகள் பீக்கிங்கு வேத்தவைமீது திணித்த பொருந்தனையானது 'ஆணிலப்புறத்துரிமை[1]' எனுங் கோட்பாட்டைத் தாபித்த வாற்றை முன்னங் கண்டோம். சீனத்தின் எல்லாப் பாகங்களிலும் மிசனரிமார்க்கு மதம்பரப்பும் உரிமையும், அம்மிசனரிமார்க்கும் மதமாறிய மக்களுக்கும் பாதுகாப்பையும் அக்கோட்பாடு அளித்தது. ஒப்பந்தத் துறைகளுள் ஒன்றுகத் தியென்சினுஞ் சேர்க்கப்பட்டது; அன்றியும், பீக்கிங்கிலே தூதகங்கள் தாபித்து நிரந்தரமாக அங்குத் தங்குதற்கும் அவ்வொப்பந்த அரசுகளின் தூதுவர்க்கும் உரிமையளிக்கப்பட்டது. இதுகாறும், அன்னிய அரசாங்கங்களோடு மிக எட்டிய உறவினையே கொண்டிருந்த பீங்கிங்கு வேத்தவையானது இப்போது ஓயாத இராசதந்திர நெருக்கிடைக்கு ஆளாகியது. பிரித்தானிய, பிரான்சிய தூதங்கள் 1861 மாச்சுமாதத்திலே பீக்கிங்கை அடைந்தன; இரசியத் தூதுவன் அவ்வாண்டு யூலியிலே பீக்கிங்கைச் சென்றடைந்தான். அமெரிக்கத் தூதுவன் திரு. அன்சன் பேளிங்கேம், கன்றனிலிருந்து ஆறுதலாகச் சென்று 1862 இற் பீங்கிங்கை அடைந்தான். இவ்வாறுகச் சீனத்தின் நீண்ட வரலாற்றிலே புதியதோர் அத்தியாயந் தோன்றிற்று. வலோற்காரமாகப் புகுந்து கொண்ட வல்லரசுகளின் பிரதிநிதிகளுக்குப் பணிந்தும், அவர்களைச் சார்ந்தும் சீனம் ஒழுகவேண்டியதாயிற்று. இதுவே அக்காலத்துச் சீனவரலாற்றில் பிரதான இயல்பாயிற்று. இப்பொருத்தனைகளின்வழி பாராட்டப்பட்ட உரிமைகள், சிறப்புரிமைகள், தற்கிழமைகள், மரியாதைகள் யாவும் விரிவாக விளக்கங் கூறப்பட்டு, இராணுவ பலத்தின் ஆதரவிலே, ஐம்பதாண்டுக் காலத்துட் சீன வாழ்க்கையின் ஒவ்வொரு துறையையும் கட்டுப்படுத்துஞ் சருவதேசச் சட்டக் கோவையாயின. சீன 'யாளியைச் சங்கிலியாற் பிணித்தற்கு' இப்பொருத்தனைமுறை எவ்வாறு பயன்படுத்தப்பட்டது, அதன் போர்வையிலே சீனத்தின் மூலவளங்களைக் கறத்தற்கு ஒழுங்காகவும் உறுதியாகவும் எவ்வாறு ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. ஆன்சு, தாங்கு, மிங்கு, சிங்கு எனும் பெருங்குலங்கள் கட்டியாண்ட பெருமைசான்ற பேரரசு எவ்வாறு மூற்றுக வலியொடுக்கப்பட்டது, அதன் கொடிக்கீழிருந்த பல பிரதேசங்களைப் பறித்ததோடு 'செல்வாக்கு வட்டாரங்களாக' அப்பெருநாடு எவ்வாறு பிரிவினை செய்யப்பட்டது என்றிவற்றையெல்லாம் எடுத்துக் கூறும் அத்துயரச் சரிதைக்கு வரலாற்றிலே யாண்டும் ஓர் இணையினைக் காணவியலாது.

இக்காலத்திலே, சீனத்தின் கதியானது, காலச்சக்கரத்தின் விசித்திரமான சுழற்சியிற் போலும், அறியாமை மிக்க, பழிக்கஞ்சாப் பெண்ணெருத்தியின்

[1] Extra-territoriality.

கையிலே இருந்தது. யெகோனலா எனப் பெயர் படைத்த அம்மாது வரலாற்றிலே 'பதிவழி உரிமை பெற்ற' பேரரசி சூகிசீ எனவும், 'பழைய புத்தர்' எனவும் பிரபலமடைந்தாள். பதிலாளிகளுள் ஒருத்தியாக 1860 இற் பதவியேற்ற காலந்தொட்டு, 1908 நவம்பர் 15 இல் இறக்கும் வரையும், அவளே அசைக்க வொண்ணாச் சருவாதிகாரியாகச் சீனத்தை ஆட்சி செய்தனள். பேரரசன் தனது அதிகாரத்தை நிலைநாட்ட முயன்ற சிறிது காலமே அவளுடைய அதிகாரம் தடைப்பட்டு நின்றது. அவளிடத்தே முத்திறப்பட்ட குணவியல்புகள் துலக்கமாகக் காணப்பட்டன. யெகோனலா பிறரை ஆட்கொள்ளும் ஆண்மைத் திறம் படைத்தவள்; அவள் பிறரைக் கட்டியாளவே பிறந்தவள் எனலாம். இரண்டாவதாக, வேத்தவைச் சதிகளில் வியத்தகும் வினைத்திறன் அவளுக்கிருந்தது; ஆபத்து வருவதைக் குறிப்பாலுணர்த்து, எதிர்பாரா வகையிலே பகைவர்மேற் பாய்ந்து அடித்து வீழ்த்தும் ஆற்றலே அவள் படைத்திருந்தாள். மூன்றாவதாக, மனச்சாட்சி யென்பதொன்றே பழிநாணுமியல்போ அவளிடத்துக் காணப்பட்டிலது. குடும்பப் பாசமோ மனித உறவோ யாதினுக்கும் அவள் கட்டுப்பட்ட வளல்லள். ஆதி நாள் தொட்டே அவளிடத்து ஆராக் காதல் பூண்டிருந்த அவடன் காதலன் யுங் லூவுக்கு அவள் ஒருவேளை கட்டுப்பட்டிருந்தாளாகலாம். நாட்டின் நலவுரிமைகளைத் தன் சொந்த 'ஆசாபாசங்களோடு' ஒருங்கு வைத்தெண்ணினுள் அவள்.

மஞ்சுவமிசப் பிரபு ஒருவனுக்கு மகளாய்ப் பிறந்த யெகோனலா (1835), மாவேந்தன் இசியென் பெங்கு என்பானுடைய காமக்கிழத்திகளுள் ஒருத்தியாகவே 1856 ஆம் ஆண்வரையும் இருந்துவந்தனள். அவ்வாண்டில் அவளுக்கு ஒரு புத்திரன் பிறக்கவே, முதற்றரக் காமக்கிழத்தியாக அவள் நிலை உயர்ந்தது. தேற்றவுரித்தாளியின் மாதா என்றவகையால், அக்காலந்தொட்டு அவள் பேரரசன்மீது பெருஞ் செல்வாக்குச் செலுத்தினுள். ஆங்கில பிரான்சியரின் கோரிக்கைகளை எதிர்க்குமாறு பேரரசனைத் தூண்டுதற்கே அச்செல்வாக்கை அவள் பிரயோகித்தாள். பேரரசன் யெகோல் எனுமிடத்தில் இறந்தபின்னர், இளம் பருவத்தில் அவளுக்கு உற்ற நண்பனுகிப் பின்னர் காவற்சேனைக்குத் தலைவனுகிய யுங் லூவின் உதவியோடு, மஞ்சு இளவரசர் சிலர் தமது அதிகாரத்தை நிலைநாட்டச் செய்த சதியை அடக்கியதோடு, இணைப்பேரரசியோடு சேர்ந்து பூரண அதிகாரம் வகிக்கத் தலைப்பட்டாள். மனவுறுதியற்ற இந்த இணைப்பேரரசி தன் 'இளஞ் சோதரியின்' சொல்லுக்கு அடங்கி நடப்பவளே.

சூகிசீ (அதாவது தாய்மை மிக்க யோகம்மா) எனப் பெயரை மாற்றிக் கொண்ட யெகோனலா முதன்முதலாகக் கவனித்த பிரச்சினை தயிப்பிங்குக் கலகமாகும்.[1] இவ்விசித்திரமான இயக்கம் வெளிநாட்டுத் தாக்கத்தின் ஒரு விளைவேயாம். மேலைடுகளின் ஆக்கிரமிப்பால் மஞ்சு அரசாங்கத்தின் பலவீன

1. இப்புரட்சியின் வரலாற்றையும், அதன் சமயக் கொள்கைகளையும், அது அடக்கப்பட்ட வாற்றையும் பற்றி அறிதற்கு, பிற்கூறப்படும் நூல்களைப் பார்க்க:

(i) **Tseng Kuo-fan and the Taiping Rebellion,** Yale Historical Publications.
(ii) **The Events in the Taiping Rebellion,** Egmount Hake, London.

மனத்தும் வெளிப்படவே, நாட்டபிமானம் மிக்க சங்கங்கள் விழிப்படைந்து வானுலகமன்னனுகிய உங்கு சூ-சுவான் பக்கஞ் சார்ந்தன. தயிப்பிங்குக் கலகம் பாரதூரமான ஒரு விடயமானதற்குக் காரணம் இதுவே. இரண்டாவதாக, யேசுவின் இளைய சோதரனுகத் தன்னைக் கூறிக்கொண்ட உங்கும் வழுப்பட்ட கிறித்தவப் போதனையின் ஒரு விளைவாகக் கருதத்தக்கவன். அவன் போதித்த கிறித்தவமதம் வினேதமானது. அதன்படி கடவுளின் புத்திரனுகிய உங்கு, பர மண்டலத்திலுள்ள பிதாவின் பிரதிநிதியென்ற வகையால் உலகினை வானுலக மன்னனுகப் புரந்தான்.

மேற்குலகிற்கும் சீனத்துக்குமிடையே முதன்முதலாய் நிகழ்ந்த முறையான மோதுகையிற் சீனப் படைகள் பட்ட தோல்வி, ஆசியா முழுவதும் ஆழ்ந்த விளைவை உண்டாக்கிற்றெனலாம். வானுலகப் பேரரசு இத்துணை எளிதாக முறி யடிக்கப்பட்டது கண்டு யப்பானியத் தலைவர்கள் பெருந்திகைப்படைந்தனர். அன்னியனின் மதுகைபற்றி நம்பொணுக் கதைகள் பல வழங்குவனவாயின ; கிறித் தவ மதமே அதற்கு ஏதுவாமென நம்பினேர் பலர். சீனத்திலே, சிறப்பாகத் தெற்கில், அதிருப்தி கொண்டிருந்த மக்களின் கண்ணேச் சீனப்பேரரசு பட்ட தோல்வி திறந்துவிட்டது. தென்புலத்திலே ஊக்கமாயிருந்த மஞ்சு—மறுப்பு இரகசியச் சங்கங்கள் அவ்வழி குறிப்பாக விழிப்படைந்தன. அயிசாக்கர் உரே பேட்சின் போதனைவாயிலாகக் கிறித்தவத்தின் உண்மைப்பொருளை உங்கு உணர்ந்தானல்லனுகலாம். ஆயினும் அந்த மிசனரியின் இல்லத்திலிருந்து மீண்ட போது, உலகத்தைக் காப்பாற்றுதற்காக ஓர் இரட்சகன் அவதரிப்பன் என்ற கோட்பாட்டிலே அவன் ஆழ்ந்த நம்பிக்கை உடையனுய் இருந்தான். பல தெய் விகக் காட்சிகளினுல் தானே அந்த இரட்சகன் எனத் தெளிந்த உங்கு, அவ்வுண் மையை உலகிற்கு உணர்த்தி, பரம்பொருட் சங்கமெனுந் திருச்சபையைத் தாபித்தான். அவன் தன்னைத் தெய்வமாகக் கருதியதோடு, தன் மைந்தனையும் தெய்வாமிசம் உடையோனுகக் கருதினன். 1860 இல் வெளியிட்ட நல்லாணைப்படி உங்கு வருமாறு கூறினன் : 'பரமபிதாவும் மூத்த சகோதரரும் (யேசுவும்) மண்ணுலகிற்கு இறங்கி வானுலக இராச்சியத்தைத் தாபித்துள்ளனர். இவ் வுலகத்து அனுவல்களை நெறிப்படுத்தற்கு அடியேனையும் இளைய பிரபுவையும் (உங்கின் மைந்தன்) நியமித்துள்ளனர். பரமபிதாவும் மைந்தனும் பேரனும் புதிய பரமண்டலத்தின் கர்த்தராவர்.'

உங்கு தான் பரமண்டலத்துக்குச் சென்றவாற்றைப் பின்வரும் கவிதையில் வருணிக்கின்ருன் :

அவனும் வானகம் எய்தியகாலை
இறைவனும் அருளினன் பேரதி காரம்.
வானக அன்னையும் அன்பு பாராட்டி
சாலவும் அவற்கு அளிபல செய்தனன்.
அவடன் அழகும் அலகில் மாட்சியும்
உவமை கடந்த அளவின வாமே.

விண்ணகமுற்ற மூத்தோன் மனையாள்
கண்ணேட்டமுடையள், கற்பின் மிக்காள்,
செய்தற் கரிய செய்திடுமாறவள்
ஓய்தலின்றி மூத்தோற் குரைத்தனள்.

இவ்வாருகக் கிறித்தவ மதவெறியும் மஞ்சுவுக்குமாரூன தேசியவுணர்ச்சியுங் கலந்தமையாலே வீறுமிக்க புரட்சிச் சத்தி உருவாகிப் பேரரசிற் பல பிரதேசங் களிற் பரவி அரசவமிசத்தையும் மூழ்கடித்துவிடும்போலத் தோன்றியது.

குவாங்துங்கு, குவாங்சி மாகாணங்களிலிருந்து புரட்சியாளர் உனனுக்குப் பரந்து, இசியாங்கு நதியோரமாய் வழிப்பட்டுச் சென்று, சங்சாப் பெருநகரை அடையும்வரையும் வழியில் எதிர்ப்பட்ட நகரங்களை யெல்லாம் கைப்பற்றிச் சென்ருர்கள். சங்சா நகரிலே ஓய்வுநாட்களைக் கழிக்கவந்த அதிகாரியொருவன், செங் குவோ—வான் என்பான், கட்டுக்கோப்பொடும் உறுதியோடும் அவர்களை எதிர்ந்து நின்ருன். சங்சாவிலே கலகக்காரரின் முன்னேற்றந் தடைப்பட்டதா யினும், அவர்கள் வடக்குநோக்கிச் சென்று, தீவிரமான எதிர்ப்பு யாதுங் காண ராகி, பிற்றை நாளில் 1926 இற் சியாங்கை சேக்கின் படைகள் சென்ற அதே வழியாக அதே எளிமையோடு முன்னேறிச்சென்று. உவுகான் பெருநகரங்களை (ஆங்கோ, உவு சாங்கு, ஆன்யாங்கு ஆகியவற்றை) அடைந்தார்கள். அவர்கள் 1853 இல் தென்புலத் தலைநகராகிய நாங்கிங்கு நகரைக் கைப்பற்றினர்கள். வானுல மன்னன் அதனைத் தனது தலைமைப்பீடமாகக் கொண்டு பத்தாண்டுக் காலம் செவ்வனே அரசாண்டான்.

1860 இலே, ஆங்கில-பிரான்சியப் போர் முடிவுற்று, யெகோலிலிருந்து வேத்தவை மீண்டதற் பின்னர்ப் பேரரசி சூகிசீ மெய்யதிகாரம் படைத்த பதிலாளியாகப் பதவி வகிக்கத் தொடங்கிய ஞான்றும், யாங்திசிப் பள்ளத் தாக்கிலே தயிப்பிங்குக் கலகக்காரரே ஆட்சி செய்தனர்; நாங்கிங்கு மாளிகை யிலிருந்து வானுலக மன்னன் இன்னும் அரசோச்சிக்கொண்டிருந்தான். அவனுக் குப் பிரதான உதவியாளனுப்ப் பணியாற்றியவன் இலி சியூ-சிங்கு என்பான். அவன் 'விசுவாசமிக்க வேந்தன்' எனப் பொருள்படும் சுங்வாங்கு எனும் பெயராலேயே வரலாற்றில் இடம்பெற்றுளன். அவன் கழிபோராற்றல் படைத்த திருவாகியும் இராணுவ வீரனுமாவன். சாதாரணப் போர் வீரனுகத் தயிப்பிங் குப் படையிற் சேர்ந்த சுங் வாங், தயிப்பிங்கு இயக்கம் ஆரம்பித்த நாள் தொட்டு, முக்கியமான ஒவ்வொரு சமரிலும் பங்குபற்றினன். 1856 இலே, குறிப் பிடத்தக்க ஒரு வெற்றியின் பின்னர், அவன் ஒரு படைக்குத் தலைவனுய் நியமிக்கப்பட்டு, பின்னர் மன்னனுக உயர்த்தப்பட்டான். அவனுடைய சுய சரிதையானது சாலவும் முக்கியமான ஓர் ஆவணமாகும்.[1] செங் குவோ-பானே பதிப்பித்து வெளியிட்டதாகக் கருதப்படும் அந்நூலை வால்ரர் இலே என்பான் மொழிபெயர்த்துள்ளான். யாங்திசி நதிக்குத் தென்புறத்துள்ள பரந்த பிர தேசத்திலே கலகத்தலைவனது அதிகாரத்தைச் சுங்வாங்கு பேணிக் காத்தனன்.

1. இச்சுயசரிதை பற்றிய விரிவான ஆராய்ச்சிக்குப் பார்க்கத் தகுந்த சஞ்சிகை :
Journal of the Royal Asiatic Society, North China Branch, 1926 (pp. 92– 109).

தனது ஆட்சிக்கு நேர்ந்த பேராபத்தைக் கண்ட பதிலாளி கலகக்காரர்க்கு எதிராகத் தீவிரமான போராட்டத்தைத் தொடக்கி வைத்தான். நாங்கிங்கு நகரம் 1864 இல் வீழ்ச்சியுற்றது : வானுலகமன்னன் தற்கொலை புரிந்து பர மண்டலத்துள்ள தன் பிதாவைச் சேர்ந்தான். அவனேயடுத்து, அவன்றன் மைந் தனே அரசனைச் சுங்வாங்கு பிரசித்தஞ் செய்தான். ஆயின் யூலை மாதத்தில் இருவரும் பகைவர் கைப்பட்டுச் சிரச்சேதஞ் செய்யப்பட்டனர்.

தயிப்பிங்குப் புரட்சிக்கு மாறுக நடந்த வெற்றிப் போராட்டத்தின் மூலமாய் அரசறிஞர் மூவர் பிரபலமாயினர். அவர்கள் நாற்பதாண்டுக்காலம் பேரரசில் ஆதிக்கம் பெற்று, மஞ்சுவமிசத்தைத் தகர்ந்து வீழவொட்டாது காப்பாற்றிய தோடு, அதிகரித்து வந்த வெளிநாட்டுத் தாக்கத்துக்கிடையேயும் அவ்வமிசத் தின் நிலை பேணினர். இம்மூவருள் மூத்தோனும், மற்றை யிருவர்க்கும் குருவாக அமைந்தோனுமாகிய செங் குவோ-பான் தயிப்பிங்குத் தோல்விக்கு மூலகாரண னவன். அவனுக்குத் துணைவராய் அமைந்த மற்றையிருவரும் சோ சுங்-தாங்கு எனும் பெயரையும் இலி உங்-சாங்கு எனும் பெயரையும் உடையராயிருந்த னர். பிற்றை நாளிலே செங் குவோ-பான், வடபாற் கேந்திரமாகாணமாயிருந்த சிகிலியின் பதிலிராயனைப் பதவிவகித்தான். வெளிநாட்டு அரசுகளோடு 'சுமூக மான' உறவு நிலவியதற்கு, வேத்தவைக் கண்ணே அவனுக்கிருந்த பெருஞ் செல்வாக்கே காரணமாகும். இன்னும், சாங்காய் நகரிலே இரும்பாலை நிறுவிய பெருமையும் அவனையே சாரும். அவ்வாலையே பின்னர் கியாங்னன் ஆயுதசாலை யாக மாறியதாகும். சீனத்தில் முதன்முதலாக நவீன கப்பலொன்று கட்டு வதிலே, யுங்கு விங்கிற்கு உறுதுணையளித்தோனும் இவனே. தயிப்பிங்கு இயக் கத்தை அடக்கியொடுக்குவதிற் செங்கொடு ஒருங்குழைத்தவன், சோ சுங்-தாங்கு என்பான். அவனை ஒரு படையாட்சிவாதியெனக் கணித்து செங்கு அவனை உள்ளுற வெறுத்தான். ஆயினும் சோ ஆற்றிய தொண்டு வியக்கத்தக்கதே. நியன்பேக் கலகத்தை அடக்கி வைத்தவன் அவனே. சென்சி, கான்சு எனும் இரு மாகாணங்களையும், 1864-78 வரையும் பதினைந்து வருடகாலமாகப் பாழ் படுத்தி வந்த முசிலிங் கலகத்தை ஒடுக்கியமையே அவனுடைய அரும்பெருஞ் சாதனையாகும். திறமைவாய்ந்த யாக்குப் பெகு என்பான் தலைமையில், சிங்கி யாங்கு மாகாணம் பெரும்பான்மையும் ஒரு சுதந்திர நாடாகி வெளிநாடுகளோடு தொடர்பு கொள்ளத் தலைப்பட்டது. தயிப்பிங்குக் கலகத்தைக் காட்டினும் ஆபத்தான—வில்லங்கமான—ஒரு நிலைமை இவ்வாறுக மஞ்சுப் பேரரசை எதிர் நோக்கி நின்றது. தயிப்பிங்கு இயக்கம் ஒரு சீன இயக்கமே. அதன் வெற்றி அரசவமிசத்தை மட்டுமே பாதித்திருக்கும். ஆயின் வடமேற்றிசையில் மூண்ட முசிலிங்கலகம் சீன நாட்டுக்கு எதிராக விளைந்ததாகும். இந்தியாவிற் பிரித் தானியரும், மத்திய ஆசியாவில் இரசியரும் தத்தம் எல்லைகளுக்கு அண்மையாக நிகழ்வதுபற்றி அக்கறை கொள்ளத் தலைப்பட்டனர். சீன ஆளிலத்தின் ஒரு பாகமாக அப்பெரும் பிரதேசத்தினை இணைப்பதிலே காங்கு இசியும் சியன் லுங் கும் ஆற்றிய பெருந் தொண்டு பாழாகிவிடும்போற் றோன்றியது. இவ்வாறு பேரரசைச் சின்னபின்னப்படாது காத்து வைத்தோன் சோ சுங்-தாங்கே.

அவன் மெதுவாக அப்பிரதேசத்துள் முன்னேறிச்சென்று, போகுமிடங்களில் மக்களை அமைதிப் படுத்தி, அடுத்து முன்னேறுமுன்னர் கவனமாக ஆயத்தஞ் செய்தான். மிகுந்த புத்திக்கூர்மையும் சாதுரியமும் இராசதந்திரமும் அவன் காட்டி, வேண்டிய விடத்துப் பழிக்காஞ்சாக் கொடுமையுஞ் செய்து, சிங்கியாங்கு மாகாணத்தை அவன் ஊடுருவிச் சென்று, யாக்கூப் பெக்கு நிறுவிய புதிய அரசை நின்மூலஞ் செய்தான். கசுகாரும் யார்க்கண்டும் (1878) சரணடையவே, சிங்கியாங்கிற் சீனர் மீண்டும் ஆதிக்கம் பெற்றனர்.[1]

சூழ்வியற்றுறையிலேயே பெரும்பாலும் ஈடுபட்டிருந்த இலி உங்-சாங்கின்[2] பணிபற்றி இச்சரிதைப் போக்கொடு அவ்வப்போது ஆராய்வோம். அவன் பணி 1870 ஆம் ஆண்டுத் தியென்சின் சம்பவந் தொட்டு 1901 ஆம் ஆண்டுப் பொக்சர் ஒப்பந்தம் வரையும் நீடித்தது. அவனுக்கு மூத்தோனும் ஆதரவாளனுமாகிய செங்குபோன்றே உங்-சாங்கும் தயிப்பிங்கு இயக்கத்துக்கு மாறுகச் சுயாதீனமாகவும் அபிமானத்தோடும் போராடியதன் காரணமாகவே முதன் முதலாகச் சிறப்புப் பெற்றான். அச்செய்தி கேள்வியுற்ற செங் குவோ-பான் அவனை அழைத்துத் தன்கீழ்ச் சேவைக்கமர்த்தினன். மேலைநாட்டுப் பாணியிலே இராணுவம் அமைப்பதில், முதலில் அமெரிக்க வீரன் உவாட்டோடும் பின்னர் கோடனோடும் ஆதியிலே தொடர்பு பூண்டவன் உங்-சாங்கே. இவ்வாறுக அவன் தன் வாழ்க்கையிற் காலத்தால் முந்தியே அன்னியரோடு பயிலத் தொடங்கினன். பிற்காலத்தே பல்காலும் படுதோல்விப்பட்ட மெலியார் சார்பாக முப்பதாண்டுக் காலமாய் தொல்லைமிக்க சூழ்வியற் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தகாலை, அவன் பெற்ற அனுபவம் அவனுக்குப் பெருந்துணையாயிற்று.

தயிப்பிங்கு இயக்கமும் நியன்பேக் கலகமும் தோல்வியுற்ற காலந்தொட்டு (1865) சீன யப்பானியப் போர்வரையும் சீனப் பேரரசிலே சீத்துவப் பொலிவு காணப்பட்டது. சீனத்தின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரையும், சிங்கியாங்குக் கலகம் தோல்வியுற்றபின் எல்லைப்புறங்களிலுமே அமைதி நிலவிற்று. வர்த்தகம் புத்துயிர்ப்படைந்தது; நிதிநிலைமை செவ்வையானது போற் காணப்பட்டது. அனுபவம் மிக்க உத்தியோகத்தர் பலரைக் கொண்ட ஒரு கோட்டி, மண்டரின்மாரின் இறுதிச் சந்ததியாகக் கருதத்தக்கது, நாட்டை அமைவான திறமையோடு பாலனஞ் செய்தது. உண்ணாட்டிலே அரசவமிசத்தின் பெருமையும் பேரரசின் மாண்பும் உயர்ந்தோங்கியிருந்தன. வெளிநாட்டு அரசுகளோடு

1. 1876 இல், சோ சாங்-தாங்கு இக்கலகத்தை அடக்கிக்கொண்டிருந்த காலத்தில், சீனத் தூதுவன் குஞ்சுங்-தாவோ விற்குப் பிரித்தானிய வெளிநாட்டு அலுவலகம் ஒரு யோசனை கூறிற்று : யாக்கூப் பெக்குவின் தலைமையில் மத்திய ஆசியாவிலே ஒரு முசிலிம் இராச்சியத்தை நிறுவுதல் சீனத்துக்கு நன்மை பயக்கும் என்பதே அந்த மணியான யோசனை. அதற்குச் சோ கூறிய விடை சுவையானது : முசிலிம் அரசொன்றை நிறுவுவது பிரித்தனது விருப்பமாயின், அதற்கு வேண்டும் பிரதேசத்தை இந்தியாவிற் பிரித்தன் நல்கலாமே என்றவாறுக அவன் கூறினன்.

2. இலி உங்-சாங்கின் வாழ்க்கைச் சரிதையை அறிதற்குச் சிறந்த நூல்கள் இரண்டு உண்டு:
(i) By **J. O. P. Bland.**
(ii) **Li Hung-chang and Mr. A. Little** by R. K. Douglas.

பாரதூரமான சிக்கல் யாதும் அக்கால் இருந்திலது. எனினும், தியென்சின் சம்பவமும், அதனை யடுத்துப் பிரான்சியர் மேற்கொண்ட நடவடிக்கையும் வருங்காலத்தே நிகழப் போவனவற்றுக்கு ஓர் உற்பாதமாக அமைந்தன எனலாம்.

ஆயின், சீனத்தின் வலியழித்து அதனை ஆக்கிரமிப்புக்கு எளிதான இரையாக்குதற்கு ஏற்றவகையில், அன்னிய அரசுகள் தம் தொடர்புகளை அக்காலத்திலே அமைத்துக் கொண்டிருந்தன. தியென்சின் பொருத்தனையின் வாசகங்களைத் தமக்கு வாய்ப்பாகக் கொண்டு மேற்கு வல்லரசுகள், அவற்றுளுங் குறிப்பாக இங்கிலாந்து, அரசியல், வர்த்தகம், பொருளாதாரம் ஆகிய முத்துறைகளிலும், ஆகுலமின்றியும் அமைதியாகவும் சீன்த்துக்கு விலங்கிடுங் கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்தன. அவற்றுல் மத்திய அரசாங்கத்தின் இறைமை சுருங்கிற்று; மாகாணங்களிலே அதன் அதிகாரம் தகர்ந்து வீழ்ந்தது; பல பிரதேசங்கள் பிரித்தானியரின் பொருளாதாரச் செல்வாக்கிற்கு ஆளாகிப் பிரித்தானியப் 'புரப்பகங்கள்' எனும் நிலைக்கு இழிந்தன. அதே காலத்தில், அமெரிக்க ஐக்கிய நாடும் பிரான்சும் திட்டமிட்டுச் சீனத்திலே ஆன்மிகத் துறையில் ஆக்கிரமிப்புச் செய்துகொண்டிருந்தன. சீனத்தைக் கிறித்துவ மதத்துக்கும் அமெரிக்க வர்த்தகத்துக்கும் அடிப்படுத்துவதே அமெரிக்காவின் நோக்கம்; கத்தோலிக்க மதத்தையும் பிரான்சிய அரசியற் செல்வாக்கையும் எல்லாவற்றுனும் பரப்புவதே பிரான்சின் நோக்கம். இருபதாண்டுக் காலத்துட் சீனத்தைப் பெரும்பாலும் ஒரு குடியேற்ற நாடெனும் நிலையினுக்கு இழித்து, அரசியற் பெருநயத்தை மேலுட்டார்க்கு அளித்த முறைகளை நுணுகி ஆராய்வது தக்கதே.

பொருத்தனைவாயிலாய் வர்த்தகத்துக்குத் திறந்துவிடப்பட்ட துறைகளிலே, வெளிநாட்டோர் தங்கியிருந்து வர்த்தகஞ் செய்ய அனுமதிக்கப்பட்டனர். அத்தகைய துறைகளுள் முக்கியமானவை கன்றன், சுவாற்ரோ, அமோய், பூச்சோ, நிங்போ, சாங்காய், சிங்தாவோ, செபூ, தியென்சின் எனுமிவையாகும். இத்துறைகள் சீனக் கரையோரம் நெடுகிலும், தெற்கே கன்றன் தொட்டு வடக்கே தியென்சின் வரையும், ஆங்காங்கு பரந்து கிடந்தன. கடற்கரையை யடுத்த துறைகளோடு, யாங்திசி நதியையடுத்த பல நகரங்களும் ஒப்பந்தத் துறைகளாகவே கருதப்பட்டன. சிங்கியாங்கு தொட்டுச் சுங்கிங்கு வரை, நாங்கிங்கும் ஆங்கோவும் உட்பட, உண்ணூட்டிலே 1000 மைல்வரை இத்தகைய துறைகள் ஆங்காங்கு பரந்து கிடந்தன. தங்கி வதிந்து வர்த்தகஞ் செய்தற்கு உரிமையளித்த பொருத்தனை வாசகங்களை ஆதாரமாகக் கொண்டு, வெளிநாட்டோர் அத்துறைகளிலே அமைதியாகவும் மெதுவாகவும், 'குடியிருப்புக்கள்' நிறுவி, நகராட்சித் தாபனங்களும் நீதிமன்றங்களும் நிறுவுதற்கும் உரிமை கோரினர். இவ்வாருக, யாங்திசி நதியில் உட்புறமாகப் பலநூறுமைல் தள்ளி ஆங்கோவிலே பிரித்தானிய, பிரான்சிய, செருமானிய, இரசியக் குடியிருப்புக்கள் கிளம்பலாயின. வெளிநாட்டோர்க்கு 'ஆணிலப்புறத்துரிமை' இருந்ததாதலின், அன்னர் தமக்கென நீதிமன்றங்களை நிறுவலாயினர். சிலவாண்டு காலத்துளே, சீன அதிகாரமும் ஆட்சியும் புறந்தள்ளப்பட்ட சிறுச் சிறு ஆணிலங்கள் தோன்றின. இவை ஓரோவழி, சட்ட விரோதமான வியாபாரத்துக்கு வாய்ந்த மையங்களாயின.

இக்குடியிருப்புக்கள் தவிர, வெளிநாட்டோர்க்குப் பல சலுகைத் தலங்கள் அளிக்கப்பட்டன. இத்தகைய சருவதேசச் சலுகைகளும் பிரான்சியச் சலுகைகளும் சாங்காயிலும், பிரித்தானிய, செருமானிய (பின்னர் யப்பானிய) சலுகைத்தலங்கள் கன்றனிலும் காணப்பட்டன. சாங்காயிலே சருவதேசச் சலுகையின் எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றிய சரிதை சீனத்தோடு மேனாட்டோர் பூண்ட இவ்வகைத் தொடர்பினை தெள்ளத் தெளியக் காட்டுவதாகும். உள்ளங்கவரும் ஒரு விரகாவியம் போன்றது அஃது. அதில், வர்த்தக ஊக்கமும், மேலைநாட்டு நிருவாக ஒத்துழைப்பு முறைகளும், வியாபார நிருவாகமும், பொலிசு முறைகளும், சருவதேசத்திருட்டு வழக்கமும், மெலியார்மேற் செய்யும் ஆக்கிரமிப்பும், தீப்பழக்கங்களை ஏற்று நடத்தலும், தீய முறைகளும் ஆதிய வெல்லாம் அச்சரிதையில் இடம்பெற்றன. சாங்காயானது 1842 இலே, உவாங்பு நதியின் முகத்தில், மதில் சூழ்ந்த ஒரு சிறு நகராய் இருந்தது. உவாங்பு நதி யாங்திசியாற்றை அதன் முகத்துவாரத்தின் கண்ணே வந்து சேர்கின்றது. யாங்திசிப் பள்ளத்தாக்கின் முகப்பிலே அந்நகர் இருத்தலே அதன் சிறப்புக்குக் காரணமாகும். இனி, 1842 ஆம் ஆண்டுப் பொருத்தனையில், வெளிநாட்டோர் வாசஞ்செய்து வர்த்தகம் நடாத்தற்குரிய ஐந்து துறைகளில் அதுவும் ஒன்றாக இடம்பெற்றது. உடன்பாட்டின் வழி, பிரித்தானிய, பிரான்சிய அமெரிக்கத் தூதுவர் உள்ளூர் ஆட்சி அதிகாரிகளிடமிருந்து 'குடியிருப்புக்கள்' நிறுவ அனுமதி பெற்றனர். காவற்றூதகங்கள் இவ்வாறு தோன்றலாயின. அவற்றோடு, சீன வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த நிறுவனங்களின் முகவர் நிலையங்களும் ஒருங்கே தோன்றின. எந்தப் பிரதேசத்திலும் ஆட்சியதிகாரம் என்பதற்கு இடமிருக்கவில்லையாயினும், பிரித்தானியக் காவற்றூதக அலுவலாளர் முனையுருவில் நகராண்மைக் கழகமொன்றை நிறுவத் தலைப்பட்டார்கள். அக்கழகம் பல்வேறு அலுவல்களைக் கவனிக்கும்பொருட்டாகப் பல குழுக்களை நிறுவியது. அடுத்த இருபதாண்டுக் காலத்தின்போது அவர்கள் தமது நிலையை உறுதிப்படுத்தினர்கள். 1867 இல் நகராண்மைக் குழுவானது தனது சொந்த அதிகாரத்தானே காணிப்பிரமாணங்கள் என்பனவற்றைப் பிறப்பித்தது. அவற்றின்வழி, வரிகள் இறைகள் அறவிடும் உரிமையையும், சுகாதாரம் ஊர்க்காவற் கட்டுப்பாட்டையும் அவை தாமே மேற் கொண்டன. இதுவே தான்றோன்றித்தனமான சாங்காய் நகரப் பட்டயம் எனப் பட்டது. அப்பட்டயம் ஒரு பொருத்தனைக்கு நிகரான சட்டவமைதியுடைத் தென்றனர் நீதிபதி பீதம் என்பார். அவர் கருத்து தென்னுபிரிக்க அரசாங்கத்தின் தன்னெண்ணப்படியான விசித்திர தருக்க முறையை ஒத்துளது எனலாம்.

காணிப்பிரமாணங்களின்படிக்கு, குடியிருப்பினின்றும் வெளிச்செல்லும் வீதிகளை அமைக்கும் உரித்து தனக்குண்டேயெனச் சாங்காய் நகராண்மைக் கழகம் உரிமை பாராட்டிற்று. நகராண்மைக்கழகம் கோரிவந்த உரிமைகளை மேலும் வித்தரிப்பதற்கு அதுவே ஒரு போர்வையாகப் பயன்பட்டது. இவ்வாறாக, பரந்த பிரதேசங்களுக்குப் படிப்படியாக உரிமை கோரத் தலைப்பட்டனர் ஆங்கிலர். சுருக்கமாகக் கூறுவதாயின், தியென்சின் பொருத்தனையை யடுத்த இருப

தாண்டுக் காலத்துள், 1860 இற்கும் 1880 இற்கும் இடைப்பட்ட பருவத்தில், சாங்காய் நகரச் 'சருவதேசக் குடியிருப்பானது' இறைமையதிகாரம் படைத்த ஒரு நகரவரசாக, சீன ஆட்சிக்கு அமையாததாக வளர்ச்சியடைந்தது. அங்கே சீனப் பொலிசார் செயலாற்ற அனுமதிக்கப்பட்டிலர். சீன நீதிமன்றங்களுக்குச் சீனக்குடிகள் மீதுமே அதிகாரம் இருந்திலது; சீனச் சட்டங்கள் அங்குச் செல்லாவாயின. அன்றியும், அங்குச் சீனமக்கள் உரிமையற்ற கீழினத்தவராக நடாத்தப்பட்டனர். இன்னும் சீனரும் நாய்களும் இப்பூங்காவுட் பிரவேசித்தலாகாது' எனப் பகிரங்க அறிக்கையும் ஒட்டப்பட்டிருந்தது. அமெரிக்க பிரித்தானிய குடியிருப்புக்கள் இணைந்து, சருவதேச நகரம் என்பது உருவாயிற்று. அங்கே அன்னியர் பல்லாயிரக்கணக்காஞேரும், பெருந்தொகைச் சீனக்குடிகளும் வாழ்ந்தனர்.

நிதியத்துக்கும் வர்த்தகத்துக்கும் மையமான 'இப்பிரமாண்ட நகரின்' வளர்ச்சி புலனுகாவகையிலே, ஆழமான விஷவைச் சீனர்மீது பயத்தது. பதினெட்டாம் நூற்ருண்டின் இறுதிக்கண்ணே இந்தியாவில் நிகழ்ந்தவாற்றை நிகர்த்த ஒரு முறையின்வழி, பல நூற்ருண்டுக்காலமாகத் தரையைத் தழுவியிருந்த நாட்டுப் பொருளியல் வாழ்க்கையானது சீனக்கரையோர நகரங்களுக்கு —அவற்றுளுஞ் சிறப்பாகச் சாங்காய்க்கு—பரவிச் சென்றது. அந்நகரின் 'கொம்பிறதோர்ப்' பொருளாதாரத்தின் வழி விரைவிற் ருேன்றிய வியாபாரிகளும் தரகரும் வங்கியாளரும் அன்னிய நிறுவனங்களின் முகவரும் பெரும் பணப்பலம் படைத்தோராக, அப்பணப்பலம் பழைய வணிகக் குழுமங்களோடு சேர்ந்து, சீனத்தின் உண்ணாட்டு நிலைமைகளைப் பொறுத்தவரை ஆற்றவும் வலிபெற்றதாயிற்று. இத்தகைய நிலைவரத்தில், இந்தியநாட்டுத் துறைப்பட்டினங்களின் வியாபாரிகளாகிய சேட்டுக்கள் என்பார் முகலாயப் பேரரசில் வகித்த நிலை இங்கு ஒப்பிடத்தக்கது. உண்மையிற் சாங்காய் பிக்கிங் நகருக்கு ஒரு போட்டித் தலைநகரமாய் அமைந்தது எனலாம்.

சீனநாட்டின் இத்தகைய குடியிருப்புக்களும் சலுகைத்தலங்களும் ஆங்காங்கு விருத்தியடைந்ததோடு, இக்காலப் பருவத்தில், உண்ணாட்டுப் பெரும் நீர்ப் பாதைகள்மீதும் அன்னிய வல்லரசுகள் ஆதிக்கஞ் செலுத்தத் தலைப்பட்டன. தியென்சின் பொருத்தனையின் 52 ஆம் வாசகமானது, பகைநோக்கின்றியும் கடற்சோரரைத் துரந்தும் வரும் பிரித்தானியப் போர்க்கலங்கள் சீனப் பேரரசனின் ஆணிலங்களுக்குட்பட்ட துறைகளிலெல்லாம் சுதந்திரமாக வந்து போதற்கு அனுமதியளித்தது. அன்னியக் கப்பல்கள் வந்து போதற்கு இடனுயிருந்த துறைகளைத் தரிசிக்கும் உரிமையினையே அவ்வாசகம் பிரித்தானியப் போர்க்கலங்களுக்கு அளித்ததென்பதே சீனர் கருத்தாயிருந்தது. ஆயினும் அக்கருத்தைப் பிரித்தானிய அதிகாரவர்க்கமும், அதனைத் தொடர்ந்து பிறவல்லரசுகளும் மீறி, கன்றன் ஆற்றையும் யாங்திசி நதியையும் காவல்செய்யும் பொருட்டாகப் பீரங்கிக் கப்பல்களை அனுப்பி வந்தன. இவ்வாருக, சுங்கிங்கிலிருந்து சாங்காய் வரையும், சீனத்தின் நடுவணைச் சரிகுறுக்கே 1500 மைல் தூரத்துக்குப் பரந்திருந்த பிரதேசமானது அன்னியக் கப்பற்படை

களின் கட்டுப்பாட்டுள் அடங்கிக் கிடந்தது. துறைமுகங்களுக்கு வந்து போத லைக் கருதிய ஓர் உரிமை இவ்வாறு விந்தையான முறையில் வித்தரிக்கப்பட்ட வாற்றால், மேற்கு வல்லரசுகள் தம் பொருத்தனையுரிமைகளை எத்துணை மோச மாய்த் துர்ப்பிரயோகஞ் செய்தன வென்பது தெள்ளிதிற் புலப்படும். பிற்றைத் தளபதி யாங்திசி[1] எனும் விசித்திரமான பட்டப்பெயரோடு ஓர் அலுவலாளனை யும் பிரித்தன் நியமனஞ் செய்தது. இங்குச் சீனரின் உள்ளக்கிடக்கையை, சீற் றத்தை, உணர்வது எளிதே. அத்திலாந்திச் சமுத்திரத்தை உண்ணாட்டு நீர்ப் பாதையாக யாரும் என்றுமே பாராட்டியதில்லை. அங்ஙனமாயினும், அத்திலாந் தித் தளபதியெனத் தன்னைத்தானே இரண்டாம் வில்கெம் அழைத்தகாலை, பிரித்தன் கொண்ட சீற்றத்தை நினைவுகூர்ந்தால், சீனரின் மனப்பான்மையை விளங்குதல் எளிதே. சீனத்திருந்த பெருவல்லரசுகளின் பிரதிநிதிகள் பெரும் பான்மையும் அநியாயமான தம் கோரிக்கைகளை வற்புறுத்தும் பொருட்டாக ஆர்ப்பாட்டஞ் செய்தற்கும், மற்றுப் பீரங்கிப் பிரயோகஞ் செய்வோமென அச் சுறுத்தற்கும், யாங்திசி நதியில் நடமாடித்திருந்த இப்பீரங்கிக் கப்பல்கள் நிலை வரமான தூண்டுகோலாயின. மிசனரிமார், தனிப்பட்ட கடன்காரர், சாதாரண மான கிறித்துவ மதமாறிகள் எனுமித்திறத்தார் சார்பாக, இத்தகைய 'போர்க் கல இராச தந்திரம்'[2] கையாளப்பட்டமைக்கு உதாரணங்கள் பற்பல உண்டு.

உள்ளூர் அலுவல்களில் அன்னியர் ஆங்காங்குத் தலையிட்ட சந்தர்ப்பங்கள் ஒருபுறமாக, கிறித்தவ மிசனரிமாரின் நலனுக்காகப் பயன்படுத்தப்பட்ட 'போர்க்கல இராசதந்திரம்', அரசியலதிகாரத்தை நிலைநாட்டுதற்கும் பிரயோ கிக்கப்பட்ட இழிவான இரு சந்தர்ப்பங்கள் இங்குக் குறிப்பிடத்தக்கன. உண் ணாட்டு நகரங்களுள் ஒன்றாய யாங்சோ எனுமிடத்தில் 1867 இல் மிசனரிமார் தமது திருப்பணிமனையொன்றைத் திறந்தகாலை, அந்நகர்க்குடிகள் அன்னர்க்கு மாறாய்க் கிளர்ந்தெழுந்து, நகரத்திற் கலகம் விளைத்தனர். மிசனரிமனை தீக்கிரை யாயிற்று ; ஆயின் மிசனரிமார் ஒருவரேனும் கொல்லப்பட்டிலர். எனினும், சாங் காய் நகரிற் பிரித்தானியக் காவற்றூதனுயிருந்த மெதேசு என்பான், சீன அலு வலாளரை முதலிற் சிறிது மிரட்ட முயன்றபின், போர்க்கலம் நான்கின் துணை யொடு, நாங்கிங்கு நகர்க்குச் சென்றான். சென்று, சீனப் பதிலிராயனை அச் சுறுத்தி, கலகம் நிகழ்ந்த அத்தலத்து நீதவானைப் பதவிநீக்கஞ் செய்வித்தனன். அதனாற் கிறித்துநாதரின் திருநாமம் பரிசுத்தப்பட்டது ; பிரித்தானியப் பீரங் கிக் கப்பலின் வலியும் நாட்டப்பட்டது.

பிரான்சும் இவ்வகையிற் பின்னின்றிலது. அதிகாரம் கைக்கொண்ட பிரெஞ் சுப் பிசப்புமார், தத்தம் சமயதூதங்களின் நலவுரிமைகள்பற்றிச் சுங்கிலி யாமென் எனுஞ் சீனப் பெயரால் வழங்கிய வெளிநாட்டு அலுவலகத்திற்கு நிரு

1. Rear - Admiral Yangtze.
2. Gunboat diplomacy.

பங்கள் நேராக எழுதலாயினர். உண்ணாட்டிலே வெகுதூரந் தள்ளியிருந்த மிசனரிமாரினர் இரண்டு பாழ்படுத்தப்பட்டன என்பதைத் தலைக்கீடாய்க் கொண்டு, கோமகன் ரோசு சுவாட் என்பான், பிரான்சியக் கருமகர்த்தன், இருபோர்க்கலங்களின் துணையோடு யாங்திசி வழியாய் ஊர்ந்து சென்று, நாங்கிங்குப் பதிலிராயினைக் கண்டான்.

சீனநாட்டில் அன்னியர்க்கிருந்த உரிமைகள் யாவும், பொருத்தனை பூண்ட நாடுகளின் ஆணிலப்புறத்துரிமை யெனுந் தத்துவத்தை ஆதாரமாய்க் கொண்டு அமைந்திருந்தன. காவற்றூதர்கள் தாம் பெற்ற சலுகைகள் குடியிருப்புக்களின் வழி, வரம்பிறந்த அதிகார உரிமைகளைக் கோரினர். பிரித்தானியக் குடியிருப்பொன்றுள் வதிந்த அமெரிக்க நாட்டவர் மீதும் தனக்குப் பொலிசு அதிகாரமுண்டெனப் பிரித்தானியக் காவற்றூதன் ஓரிடத்திற் கோரினன்-- கோரியும் வெற்றி பெற்றிலன். பொலிசு அதிகாரம் எனும்போது, பொலிசு நிலையங்கள், சிறைக் கூடங்கள், நீதிமன்றங்கள் ஆதியனவெல்லாம் அதனுள் அடங்கும். இப் பரிவாரமெல்லாம் பிரித்தானியர்க்கிருந்தன ; சாங்காயில் ஓர் உச்சநீதிமன்றமும் அவர்களுக்கிருந்தது. பிற வல்லரசுகள் பலவற்றுக்கு இவ்வசதிகள் இருந்ததில்லை. பிறகாவற்றூதகமன்றங்களிலிருந்து ஐரோப்பியத் தலைநகர்களுக்கே மேன்முறையீடுசெய்யலாம். ஆணிலப் புறத்திரிமையற்ற ஐரோப்பியர்க் கெதிராக வழக்குகள் விளங்குவதில், பெருவல்லரசுகளின் காவற்றூதர் அனைவரும் ஒருவகை நம்பிக்கையுரிமை பாராட்டினர். இவையெல்லாம் குறிப்பிட்ட சில இடங்களுக்கே வரையறைப்பட்டிருந்தமையால், புறக்கணிக்கத் தக்கவை யெனலாம். ஆயின், உண்ணாட்டிலே மிசனரிமார் வலிந்துபெற்ற ஆதிக்கநிலையும், மதமாறிகள் கோரிய பாதுகாப்புரிமையும் அத்தகையனவா — இவை விஞ்சிய விடயங்கள். பொருத்தனைகளின்படிக்கு, விரும்பிய இடத்தில் வதியவும், சொத்து வாங்கவுமே மிசனரிமார்க்கு உரிமை யளிக்கப்பட்டது. ஆயின் பிரான்சியரோ சீனர் அறியாதே தமது பொருத்தனையிற் புதிய வாசகமொன்றைப் புகுத்தினர். அதன்படி, சீன மதமாறிகள் உட்படக் கத்தோலிக்கர் அனைவரையும் — அவர்கள் எங்கிருந்தாலும் — பாதுகாக்கும் பொதுவுரிமையை அவர்கள் கோரினர். எவ்வாறாயினும், பிரவல்லரசுகளோடு செய்த பொருத்தனைகளிற் கண்ட வாசகமானது சீன மதமாறிகளைத் துன்புறுத்தலாகாதென விதித்தது. சீனக் கிறித்தவர் சம்பந்தப்பட்ட வழக்குகளிலே தலையிடுதற்கு அவ்வாசகம் உரிமையளிப்பதாகுமென வாதிக்கப்பட்டது. இப்பிரச்சினைபற்றிச் சற்று விரிவாகப் பின்னர் ஓர் அதிகாரத்தில் ஆராயப்படும். ஆயின் இங்கு முக்கியமாக வற்புறுத்திக் கூறவேண்டியது ஒன்றுளது. 1865 இற்கும் 1885 இற்கும் இடைப்பட்ட காலத்தில், கத்தோலிக்கரும் சீன உண்ணாட்டு மிசனுமேயன்றி, பிறசமய நிறுவனங்களும் சீனநாட்டின் மூலைமுடுக்குக்கெல்லாம் ஊடுருவிச் சென்று, தாம் சென்றவிடத்தெல்லாம் ஆணிலப்புறத்துரிமையையும் சீனக் கிறித்தவரைப் பாதுகாக்கும் உரிமையையும் பரப்பிவிட்டன. சீனத்தின் இறைமையையும், அது தன்குடிகள் மேற்கொண்ட

அதிகாரத்தையும் பாரதூரமாக மீறுவதாகும் இச்செயல் — இவ்வகையில், 'சலுகைகள்', குடியிருப்புக்கள், பிரதேச ஆக்கிரமிப்புக்கள் ஆகியவனைத்துமே அதற்கு இணையாகா.

இன்னும், சீனத்தின் மேலாண்மையை ஏற்றுக்கொண்ட நாடுகளை ஒவ்வொன்றாகப் பிரித்தெடுக்கும் போட்டியையும் அவ்வல்லரசுகள் இக்காலத்தே கையாளத் தொடங்கின. கம்போடியாவும் அனமும் இவ்வாறு முதலிற் பறிபோயின. மேற்பர்மா 1886 இல் வலிந்து கைப்பற்றப்பட்டது. இவ்விரு மாற்றங்களையும் ஏற்குமாறு சீனம் கட்டாயப்படுத்தப்பட்டது. இரண்டாம் பெரும்போருக்குப் பின்னர் சீனம் பூரண இறைமை மீண்டும் பெறும்வரையும், சுற்றோரத்தில் நிகழ்ந்த இவ்வாக்கிரமிப்புத் தொடர்ந்து நடைபெற்றது. கொரியா, மஞ்சூரியா, மொங்கோலியா ஆகிய இடங்களிலே யப்பானுடைய செயல்பற்றியெழுந்த பிறநாட்டுக் கண்டனத்தின் தொடர்பாக இங்கு வற்புறுத்திக் கூறத்தக்கது ஒன்றுண்டு. சீனத்தின் சுற்றோரத்திலுள்ள பிரதேசங்களை ஆக்கிரமித்து, படிப்படியாக அவற்றைக் கவரும் முறையினை ஆதியிற் பிரான்சே கம்போடியாவிலும் அனம் நாட்டிலும் தொங்கிங்கிலும் கையாண்டது. அதனையே பிரித்தனும் பின்னர்ப் பர்மாவிற் கடைப்பிடித்தது.

அக்காலத்தில் சீனம்மாட்டுப் பிறவல்லரசுகள், கொண்ட மனப்பான்மையை, தியென்சின் படுகொலையெனுஞ் சம்பவம் செவ்வனே துலக்குவதாயுளது. சீனத்தின் அதிகாரத்தைத் தாக்குதற்கு ஓர் பீடிகையாய் அமைந்ததும், ஒவ்வொரு வல்லரசும் பின்னர் வெற்றியொடு பின்பற்றுதற்கு ஓர் மாதிரியாய் அமைந்ததும் இவற்றுள் முதற் சம்பவமேயாதலின், அதுவே பிறவற்றிலும் முக்கியமானது.

அரசமாளிகையுமாய்ச் சீனக் கோவிலுமாய் விளங்கிய தலமொன்றில், சட்டவுரித்து யாதுமின்றிப் பிரான்சியர் 1869 இலே உரோமன் கத்தோலிக்க தேவாலயமொன்றை நிறுவினர். தியென்சினிலே தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய பத்தாண்டுக்காலத்துள், இச்சம்பவம் நடைபெறுதற்கு முன்பாக, பிரெஞ்சு அதிகாரவர்க்கத்தின் பொதுவான நடத்தைபற்றி, அமெரிக்க வரலாற்றறிஞன் மோசு என்பான் சுருங்கிய சொல்லால் வருமாறு கூறுவன்: 'தியென்சினில் பிரெஞ்சுநாடும் கத்தோலிக்க மிசனரிமாரும் பூரணமாக வெறுத்தொதுக்கப்படுவர்[1]'. தியென்சினில், கத்தோலிக்கச் சகோதரிமாரால் ஓர் அநாதையில்லமும் நிறுவப்பட்டிருந்தது. இந்த அநாதையில்லத்துக்குக் கொணரப்படும் ஒவ்வொரு குழந்தைக்குமீடாக ஒருதொகையைச் சன்மானமாகக் கொடுப்பது சகோதரிமாரின் வழக்கமாயிருந்தது. வெளிப்படையாகக் கூறுவதாயின், பணங் கொடுத்துக் குழந்தைகளை வாங்கும் ஒரு முறையை அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர் எனலாம். பழிக்கஞ்சாத சீனத்தரகர் பலர் கள்ளமாய்க் குழந்தைகளைக் கடத்தி விற்பதற்கும், அம்முறை தூண்டுகோலாயிற்று. இனி, நோய்முற்றிய குழந்தைகளைத் திருமுழுக்காட்டுதற்கும் பணங் கொடுக்கப்பட்டது—திருமுழுக்காடியபின் மரணஞ் சம்பவித்தால், ஆன்மா மோட்சம் பெறும் என்பதிற் சந்தேகமில்லை. குழந்தைகளைக் கடத்திச் செல்லுதற்குத்

1. Morse and MacNair, *International Relations*, p. 404.

தாண்டும் இம்முறைகண்டும், திருமுழுக்காட்டியவுடனும் குழந்தைகள் பலர் இறப்பதற்கும் கிறித்துவ இடுகாட்டிற் புதைக்கப்படுதற்கும் இடமளித்த இம் முறைகண்டும் சீனப்பொதுமக்கள் உள்ளங் கொதித்தது இயல்பேயாம். அக் காலத்தில், அவ்வநாதையில்லத்திற் கொள்ளைநோயும் பரவவே, அங்குக் குழந்தை கள் பலர் இறந்துபட்டனர். இவ்விடயம்பற்றி முறைப்பாடு கேட்ட பேரரசின் ஆணையாளன், காவற்றூதனுடு அவ்விடயத்தையிட்டுத் தொடர்புகொண்டான். சீனரைக்கொண்ட குழுவொன்று அவ்வில்லத்தைச் சோதிக்கவேண்டுமென உடன் படிக்கை ஒப்பேறிற்று. ஆயின், தனது அதிகாரம் பங்கப்படுகின்றதே என நினைந்த பிரெஞ்சுக்காவற்றூதன் அதிற் குறுக்கிட்டு, சோதனை செய்தலாகிய கருத்தை எதிர்த்தான். சீனருடைய சீற்றங் கரைகடந்தோடிற்று. காவற் றூதனுடைய மனப்பான்மையும் கோபமும் ஆணையாளன் வரைந்து வைத்துள்ள அறிக்கையாற் புலனுகும். அவ்வறிக்கையின் ஒரு கூறு வருமாறு: 'அவனை (காவற்றூதனை) எதிர்கொண்டழைக்கச் சென்றகாலை, ஆத்திரங்கொண்டிருந்த அக்காவற்றூதன் தன் இடுப்புவாரிலே இரு கைத்துப்பாக்கிகள் வைத்திருப் பதையும். அவனுடு கூடிவந்த அன்னியரின் வாள் தரித்திருந்ததையுங் கண் டேன். அவர்கள் என்னை நோக்கிப் பாய்ந்து வந்தனர். திரு. பொந்தெயின் என்னை அணுகியதும் பண்பற்ற முறையிற் பேசத்தொடங்கினன்; கைத் துப்பாக்கியை வாரிலிருந்து எடுத்து என் முன்னிலையிற் சுட்டான். அதனுற் பயனிலாது போகவே அவன் கைப்பற்றப்பட்டான். நாம் இருவரும் மோதிக் கொள்வதைத் தடுக்கவிரும்பி நான் திரும்பிச் சென்றேன்'. ஆத்திரக்காரனை இக்காவற்றூதன் சுங்கிலி யாமெனிலிருந்து மீளும்போது சனக்கூட்டத்தை நோக்கிச் சுட்டான். அவன் உடனும் கொலைசெய்யப்பட்டான். அதற்பின், சனக் கும்பல் தேவாலயத்திற்குத் தீவைத்தது; கிறித்துவ நிறுவனங்கள் அழிக்கப் பட்டன. கட்டுக்கடங்காது கிளர்ந்த சனக்கும்பல் 1870 யூன் 21 இலே பிரான் சியரைப் பழிவாங்கியது.

இத்தருணத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தி, வல்லரசுகள் சேர்ந்து பீக்கிங்கு அரசாங்கத்துக்கு ஒரு கூட்டறிக்கை அனுப்பின. அப்பால், பிரெஞ்சுத் தளபதி யொருவன் போர்க்கப்பல்களோடு தியென்சினை வந்தடைந்தான். பிரித்தானிய, அமெரிக்க, இத்தாலியக் கடற்படையைச் சேர்ந்த கப்பல்களும் விரைவில் வந்து சேர்ந்தன. இவ்வாறுக, மேற்கு வல்லரசுகள் ஒன்றுபட்டு நின்றன. பிரெஞ்சுக் கோரிக்கைகளைப் பிறவல்லரசுகளும் ஆதரித்தன. படுகொலையிற் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சிரச்சேதஞ் செய்தல் வேண்டும் என்பது அக்கோரிக்கைகளுள் ஒன்று. அக்கோரிக்கையை ஏற்காவிடத்து, அவ்விவகாரத்தைத் தீர்க்கும் பொறுப்புக் கடற்படையதிகாரிகளிடமே விடப்படும் எனக் காவற்றூதன் அச் சுறுத்தினன். பிரான்சுக்கும் சேர்மனிக்குமிடையிற் சற்று முன்பாகவே போர்ப் பிரகடனஞ் செய்யப்பட்டிருந்தது. பிரெஞ்சுத்தூதுவன், பாரிசிலிருந்த தன் அதிபர்போன்று, வாகைசூடிப் பிரான்சின் மேன்மையை நாட்டத் துணிந்தான். விசாரணையின்றித் தம் அதிகாரிகளைச் சிரச்சேதஞ் செய்ய மறுத்த சீனர், கலகக் காரர் இருபதின்மரைச் சிரச்சேதஞ் செய்யவும், அதிகாரிகளை நாடுகடத்தவும்

ஒருப்பட்டனர். பிரசியா (அக்கால் இது பிரான்சொடு போரிட்டு நின்றது), இங்கிலாந்து, இரசியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள், சீனத்தின் உத்தரம் திருப்தியற்றதெனக் கூறி மீண்டுங் கூட்டறிக்கை அனுப்பினர். இதற் கிடையில், சிகிலியின் பதிலிராயனுக நியமிக்கப்பட்டவனும், அவ்வாற்றல் இணக் கப்பேச்சுக்குப் பொறுப்புடையனுய் இருந்தவனுமாகிய இலி உங்-சாங்கு மேலும் விட்டுக் கொடுக்காது உறுதியாக நின்றன். சேர்மானியப் போர் காரணமாகப் பிரான்சு துன்புற்றுக் கிடந்தமையே, அக்கால் ஓர் உடன்படிக்கை ஒப்பேறுதற் குத் தலையாய காரணமாகும். வல்லரசுகள் யாவும் தனக்கு எதிராக ஒன்றுபட்டு நின்றவாற்றைச் சீனம் உணர்ந்தது.

தயிப்பிங்குக் கலகம் ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இருபத்தைத்தாண்டுக் காலமே, மேலைப்புலத்தோடு சீனங் கொண்ட தொடர்புபற்றிய வரலாற்றில், மிக மூக்கியமானதென்பதை மேற்போந்த சுருக்கமான ஆராய்வு காட்டும். நாட்டிற் காணப்பட்ட சித்துவநிலை உண்மையில் ஒரு போலித் தோற்றமேயாகும். பொருத்தனைத் துறைகள் தழைத்தோங்க, உண்ணாட்டுப் பொருளாதாரமானது வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இறுக்கவேண்டிய கடன் யாதும் சீனத்துக்கு இருக்கவில்லையென்பது உண்மையே. ஆயினும், அக்காலத்தே சீன ரின் அதிகாரம் பெரிதும் தகர்க்கப்பட்டமையாலும், மக்களிடையே அரசாங் கத்துக்கு இருந்த மதிப்பு முற்றுக அழிக்கப்பட்டமையாலும், 1895 இல் மூண்ட சீன-யப்பானியப் போரையடுத்த பத்தாண்டுக் காலத்திற் காணப்பட்ட-பேரரசு வாதம் தலைவிரித்தாடிய—வால்பேகிசு இரவுக்கு அக்காலத்திலேயே அத்திவார மிடப்பட்டுவிட்டதெனலாம்.

பிரித்தனைத் தலைமையாகக் கொண்ட மேனுடுகளுக்கும் சீனத்துக்குமிடையே சூழ்வியற்றெடர்புகளை மிக வில்லங்கமாக்கிய பிரதான சிக்கல் ஒன்றுண்டு. பிரித்தானிய வர்த்தகச் சமூகத்தின் மனப்பான்மையே அதுவாகும். வற்றுத வர்த்தகமெனும் பேய்த்தேரே அச்சமூகத்தினரை உண்ணாட்டுள் வெகுதூரம் ஈர்த்துச் சென்றது. சீனத்தின் மத்தியப் பெருவழியாகிய யாங்கிதிசியாறு அக் காலத்திலே திறக்கப்பட்டுவிட்டது. 'குடியிருப்புக்களும்,' வர்த்தகத்தாபனங் களும் ஒவ்வொரு முக்கியமான நகரிலும் இருந்தன. ஆயினும், ஏதோ காரணம் பற்றி, விளைந்த பயன்கள் ஆற்றவும் ஏமாற்றத்தை யளிப்பனவாயிருந்தன. புகழ்ந்தேத்தப்படுஞ் சீனவர்த்தகம் கைகூடிற்றிலது.

இத்தோல்விக்குச் சீன அதிகாரிகளின் எதிர்ப்பும், இடர்ப்பாடான நீர்வை களுமேயென அவ்வர்த்தகச் சமூகங் காரணங் காட்டிற்று. பிரித்தானியப் பண்டங்களை வாங்குமாறு சீனரைக் கட்டாயப்படுத்துவதே அதற்கு மாற்று மருந்தாகுமென அச்சமூகத்தினர் துணிந்து, ஒல்லுமாற்றல் எல்லாம் அக்கருத் தினைப் பிரித்தானிய அரசாங்கத்துக்குத் தெருட்ட முயன்றனர். 'பொருத்தனை களைச் செவ்வனே வலியுறுத்தல் வேண்டும்; சீன நாட்டு நுகர்வோரொடு நேரா கத் தொடர்பு கொள்ளல் வேண்டும் என்பதே அவர்தம் கூக்குரலாயிற்று. சீன நாடு முழுவதையும் ஒரு பெரும்பொருத்தனைத் துறையாகப் பாவித்தல் வேண் டும்; அதிகாரமனைத்தும் அவ்வத்தலத்துள்ள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்

படல் வேண்டும்; அவர்களோடு புழங்குவதில், இறுதி வாதமாகப் பீரங்கிக் கப்பல்களே உபயோகிக்கும் உரிமையும் காவற்றூதர்க்கு இருத்தல் வேண்டும்— இவ்வாறான விருப்பை அன்னர் வெளிப்படையாகத் தெரிவித்தனர். யாங்கிசிப் பள்ளத்தாக்கையேனும் ஒரு பிரித்தானியப் புரப்பகமாக்க வேண்டுமென அவர்கள் ஒளிப்பு மறைப்பின்றி வேண்டிக் கொண்டனர். அது கைகூடிற்றுயின், வரையாது வர்த்தகஞ் செய்யத்தக்க சந்தை இலங்காசயர்க்கு வாய்க்குமென அன்னர் உறுதிகூறினர். பொற்றிங்கர் என்பான் கூறியதுபோன்று, 'அதன் ஒரு மாகாணத்துக்குப் போதியதான துணையையுமே காலங்காசயர் ஆலைகள் செய்யமாட்டா'.

இது மடைத்தனமான வீண் நம்பிக்கையே யென்பதை அனுபவம் மிக்க காவற்றூதக அலுவலாளர்கள் அப்போதே எடுத்துக் காட்டத் தவறியதில்லை. ஒங்கொங்கிலே துணைநீதவானையிருந்த மிச்செல் என்பான், சீன வர்த்தக வாய்ப்புக்களை வியத்தகும் வகையில் ஆராய்ந்து, வர்த்தக வகுப்பாரது நம்பிக்கையின் விழற்றனத்தை விளக்கிக் காட்டினன். கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுப் பத்து ஆண்டுகள் சென்றபின்னரும், ஒல்லாந்து நுகர்வதன் அரைவாசியைத் தானும் சீனம் நுகரத்தவறியது எத்துணை விசித்திரமென்பதைக் காட்டிய பின்னர், மிச்செல் வருமாறு விளங்கக் கூறினன்: 'இந்நாட்டின் கடற்கரையோரமாகாணங்களைப் பத்தாண்டுகளுக்கு முன்பாகப் பிரித்தானிய வர்த்தகத்துக்குத் திறந்துவைத்தபோது, எமது உற்பத்திப் பொருள்களுக்கு ஆங்குத் தோன்றக்கூடிய தேவைபற்றி மிக விழற்றனமான கருத்துக்கள் உதயமாயின. "மூப்பது அல்லது நாற்பது கோடி மக்களோடு வரையாது வியாபாரஞ் செய்யும்" எண்ணம்பற்றி. . . . . மாஞ்செசுற்றரிலுள்ள எங்கள் நண்பரும் இவ்விடத்துள்ள சகவூழியரும் பைத்தியங் கொண்டனர் போலத் தோன்றுகின்றனர்'.

காவற்றூதர்களுள் ஒருவன், பத்தாண்டுக்கால அனுபவத்தின் பின்னர், வருமாறு அறிக்கை செய்தான்: 'எமது வீட்டுப்பணியாட்கள் தவிர, அன்றன்றைச் சோற்றுக்கு அன்றன்றை உழைப்பை நம்பி வாழும் சினனெவனும் எமது கச்சுத்துணியாற் செய்த உடுப்பெதையும் அணிந்ததை நான் என்றுமே கண்டதில்லை'. 'சீன மக்களின் உறுதியான குடும்பச் சிக்கனத்தைக் கவிழ்க்க முடியாது' எனப் பிறகாவற்றூதரும் பிரித்தானிய வெளிநாட்டு அலுவலகத்தை ஒழுங்காக எச்சரித்து வந்தனர். ஆயின் பொருத்தனைத் துறைகளில் வாழ்ந்த வியாபாரிகளோ எதிர்மாறான எண்ணங் கொண்டனர். சாதாரணச் சீன மக்கள் அன்னியப் பொருள்களை வாங்க வொட்டாது தடுப்பவர் மண்டரின்மாரேயென்றும், வியாபாரிகளாகிய தம்மை அவர்தம் எண்ணம்போல நடக்க விடுத்தால், இலங்காசயர் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்தையும் அதற்கு மேலாகவும் சீனமாகாணமொன்றே துய்த்துவிடும் என்றும் அன்னர் உறுதியாக நம்பினர்.

பிறநாட்டு அலுவலகமானது அதன் காவற்றூதக அலுவலாளரால் தெரிக்கப்பட்ட கருத்தே செவ்வையானது என இறுதியில் ஏற்றுக்கொண்டாலும், வர்த்

தக வகுப்பாரின் கருத்தும் வலுமிக்கதாய் எஞ்ஞான்றும் இருந்தமையாலே அன்னரோடும் ஒத்துப் போகவேண்டியதாயிற்று. ஆயினும், வர்த்தகக் கனவு நனவாகாமை, தண்டவாளப்பாதைக் காலம் தலைப்படும்வரையும், விரும்பத் தகாத ஓர் அமிசமாகவே தொடர்ந்திருந்தது. அக்காலத்தின் பின், வர்த்தக மன்றி முதலீடே பெரும்பான்மையும் பிரித்தானிய நிதியக்குழுக்களின் நோக் காயிற்று.

அன்னியரின் வியாபார முயற்சி உண்ணாட்டிற் பரவியதாலே எதிர்பாரா விளைவொன்று ஏற்பட்டது. அதுவே வலுமிக்க சீன வர்த்தக வகுப்பொன்று வளர்ச்சியடைந்தமையாகும். வணிகப்பொருள்களை உண்ணாட்டில் விநியோகஞ் செய்யும் முயற்சியைச் சீன வர்த்தகரே படிப்படியாக மேற்கொள்ளத் தொடங் கியவாற்றைச் சேர் ரதபோட்டு ஒல்கொக்கென்பான் 1869 இற் சுட்டிக்காட்டி னன். அமோய் நகரில் வெளிநாட்டு வர்த்தகம் சீன வர்த்தகரின் கைக்கு மாறிய வாற்றைக் காவற்றூதன் குறிப்பிட்டான். 'உண்ணாட்டு மொழியும் சந்தை நிலவரமும்பற்றி மேலான அறிவு படைத்திருந்தமை காரணமாகவும், தாபனச் செலவுகள் குறைந்திருந்தமை காரணமாகவும், பூச்சோவில் விநியோகம் முழு வதும் சீனவர்த்தகரின் முற்றுரிமையாயிற்று' என அறிக்கை செய்யப்பட்டது. தொடக்கத்திருந்தே இந்தியாவினும் இத்தகைய நிலைமையே நிலவியமை இங்கு நினைவுகூரத்தக்கது. பிரித்தானிய அதிகாரம் ஆங்கு நிலைநாட்டப்பட்டதன் பின்னர், பிரித்தானியப் பண்டங்களை இந்திய வர்த்தகரே விநியோகஞ் செய் வாராயினர். கடற்கரைப் பிரதேசங்களிலும் மற்று யாங்கிசிப் பள்ளத்தாக்கு எங்கணும், பலமிக்க இவ்வர்த்தகவகுப்பார் தோன்றி வளர்ந்தமை, தலையாய பொருண்மையுடைய ஒரு சமூகப் புரட்சியாகும் என்பதைப் பின்னர்க் காண் போம்.

இக்கால வரலாற்றை முடிப்பதன் முன்னர், இப்பிரச்சினையின் பிறிதோர் அமிசமும் இங்குக் குறிப்பிடத்தக்கது. சீனச் சுங்கச் சேவை கரைப் பிரதேசங் களில் நிறுவப்பட்டமையே அதுவாகும். திறந்த துறைகளிற் சுங்கத் தீர்வைகள் ஒரே சீரான அடிப்படையில் அறவிடப்பட வேண்டுமெனவும், இந்நிருவாகத் திலேயே துணைபுரிதற்கு, சீன அதிகாரவர்க்கத்தின் கருத்துக்கமைய அன்னியர் நியமிக்கப்படவேண்டுமெனவும், தியென்சின் பொருத்தனையோடிணைந்த வர்த்த கப் பிரமாணங்கள் வகுத்து விதித்தன. சீனங் கொடுக்கவேண்டியிருந்த நட்ட ஈடுகள், 1860 ஆம் ஆண்டிற் பீக்கிங்கு ஒப்பந்தத்தின்படி, சுங்க வருமானத்தி லிருந்து அறவிடப்படவேண்டுமெனத் தீர்மானஞ் செய்யப்பட்டது. இவ்வாறாக ஈட்டுரிமைபெற்ற அன்னிய நாட்டுப் பிரதிநிதிகள் சுங்கநிருவாகத்திலே நேராக ஈடுபாடு கொள்ளத் தொடங்கினர். கரையோரச் சுங்கச் சேவையிற் பரிசோதகர்-நாயகமாக உரூபேட்டு ஆட்டு என்பான். அயிரிசு நாட்டவன், 1863 இல் நியமிக்கப்பட்டான். அந்நிருவாகம் பெயரளவானே சீன அரசாங்கத்துக்கு உரியதாயினும், மேலைப்புலத்து நாடுகள் ஒவ்வொன்றையுஞ் சேர்ந்த அன்னியரே அதனை ஏறத்தாழ முற்றாக நிருவகித்து வந்தனர். திறமையும் நேர்மையும்

உடையதாயிருந்தது அச்சேவையென்பது ஒப்புக்கொள்ளப்பட்டுளது. ஆயின், சீன அதிகாரத்தைத் தெளிவாகப் பங்கப்படுத்துவதாயிருந்தது அதுவென்பதை மறத்தலாகாது.

எனினும், அன்னியரான தாமே நிருவகித்த இச்சேவை தமது வர்த்தக வளர்ச்சிக்குப் பெருந்தடையாய் இருந்ததெனப் பிரித்தானிய வர்த்தகச் சமூதாயங் கருதியவாற்றை இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். சுங்க அதிகார வர்க்கம் சட்டத்தைச் செயற்படுத்த மூயன்றபோதெல்லாம், அச்செயல் நாட்டபிமானத்துக்கு ஒவ்வாதென்றும், ஐரோப்பிய நலவுரிமைக்கு மாருனதென்றும், வல்லரசுகள் பொதுவாக எதிர்க்கவேண்டியதொன்றே என்றும் அவர்கள் அனுப்பிய பல செய்திகளிற் காண்கிறோம். இன்னும், கள்ளக்கடத்தல் பொருத்தனைக்கு மாருனதேயல்லாது, சீனச்சட்டங்களுக்கு மாருனதோர் குற்றமன்று என்றும், ஆதலின் காவற்றாதக அனுமதியின்றிச் சீனச் சுங்க அதிகாரிகள் அத்தகைய குற்றங்களுக்கெதிராக நடவடிக்கை யெடுக்க முடியாதென்றும், சாங்காய் ஒங்கொங்கு வியாபாரிகள் விளம்பலாயினர்.

சீனமும் சீனமக்களும்பற்றி ஐரோப்பியர் பொதுவாகக் கொண்ட மனப்பான்மையை, 'பன்றி வியாபாரம்' எனப்படுவதன் வளர்ச்சியிலிருந்து உய்த்தறியலாம். குடியேற்றநாட்டுச் சுரங்கங்களிலும் பெருந்தோட்டங்களிலும் அடிமைத்தொழிலாளர்க்குப் பதிலாக வேலைசெய்யும் பொருட்டுச் சீனக் கூலியாட்கள் சட்டவிரோதமாகவும் பேரசின் ஆட்சேபங்களுக்கு மாருகவும் 1847 தொட்டுக் கப்பல்களிற் கடத்தப்படலாயினர். சான் பிரான்சுக்கோ நகருக்கு மாத்திரம் 1,08,471 சீனத்தொழிலாளர் 1863 இற்கு மூன்னமே அனுப்பப்பட்டுவிட்டனர். போத்துக்கேய இசுப்பானியக் குடியேற்றங்களும் ஒசுத்திரேலியாவும் கலிபோணியாவுமே இக்கூலியாட்களைப் பெற்ற பிரதான பிரதேசங்களாகும். இக்கூலியாட்கள் ஒப்பந்தகாரர் மூலமாகத் திரட்டப்பட்டனர்; காலைக்குக் கொணரப்படும் ஒவ்வோர் ஆளுக்கும் அவர்கள் தலைப்பணம் பெற்றனர். காலைக்குள் அகப்பட்ட அப்பாவி மனிதரைப் பின்னர்க் காப்பாற்ற முடியாது. 'மிதக்கும் நிரயங்கள்' எனப்படுங் கப்பல்களிலே அவர்கள் ஏற்றிச் செல்லப்பட்டார்கள். அப்பிரயாணிகளிடையே மரணவீதம் பெரும்பாலும் நாற்பத்தைந்து சதவீதமளவிற்கு அதிகமாயிருந்தது. கள்ளக்கடத்தலை ஆதாரமாய்க் கொண்ட இவ்வடிமை வியாபாரத்தால், நினைக்கவும் முடியாத பல பழிபாவங்கள் விளையலாயின (1859 இல், குற்றவாளிகளெனக் கண்ட கள்ளக் கடத்தற்காரர் எண்மரைக் கன்றன் பதிலிராயன் சிரச்சேதஞ் செய்வித்தான்). குடியகல்வைத் தடுக்கும் ஆஞ்ஞையை மாற்றுத்தரவு செய்தற்கு ஓர் நிபந்தனையாக, யாதுமோர் ஒழுங்குமுறையைக் கடைப்பிடித்தல் வேண்டுமெனச் சீன அதிகாரவர்க்கம் வற்புறுத்தியபோது, இவ்வடிமை வியாபாரம் மக்கவோவுக்கு மாற்றப்பட்டது. சீனத்திலிருந்து கடத்தி வரப்பட்ட 5,207 சீனக் கூலியாட்கள் கியூபாவிற்கும், 8,417 பேர் பெருவிற்கும் அச்சின்னஞ்சிறு குடியேற்றம் வாயிலாய் ஒரேயாண்டில் அனுப்பப்பட்டனர்.

வெளிநாடுகளிலே சூழ்வியற்றூதங்களைத் தாபித்தற்கும் இக்காலத்திலேயே சீன அரசாங்கம் முடிபுகொண்டது. இவ்விடயஞ் சம்பந்தமாக எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கை பேளிங்கேம் தூதம் என்பதாகும். முன்னம் அமெரிக்கத் தூதமைச்சனுப்பீக்கிங்கிலிருந்த அன்சன் பேளிங்கேம் என்பான் பதவியிலிருந்து ஓய்வுபெற்றகாலை, சீனத்தின் சார்பாகச் சுற்றுலாத் தூதமைச்சனுக நியமிக்கப்பட்டதோடு, மேலைப்புலத்து வேத்தவைகள் யாவற்றுக்கும், தத்துவம் பெற்ற தூதனுக அனுப்பப்பட்டான். பேளிங்கேம் முதன் முதல் அமெரிக்காவைப் பெரும்பரிவாரத்தோடு அடைந்தான். அங்கு அவனுக்கு நல்வரவேற்பு அளிக்கப் பட்டது. சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருத்தனையை ஆங்கு அவன் ஒப்பேற்றினன். சீன நாட்டின் ஆணிலத் திட்பத்தை நிலைநாட்டும் வாசகங்களும், வர்த்தகமும் வதிவும் பற்றி இருவயினெத்த உரிமைகளை அளிக்கும் வாசகங்களும் அதில் இடம்பெற்றன. தானே முன்னம் அமெரிக்கத் தூதமைச்சனுக இருந்த பேளிங்கேம், சீனத்திடம் மேலைநாடுகள் கையாண்ட சூழ்வுமுறைகளை நன்றே அறிந்திருந்தான். எனவே இலண்டனில் அவன் இருந்தகாலை, சீனத்தின் இறைமையை மீறத்தக்க உரிமைகளைப் பெறுதற்காகத் தகவிலாவகையிற் சீன அரசை நெருக்கிடை செய்யாமைக்கு உத்தரவாத மளிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டான். ஆயின் அவனுடைய பணி நிறை வேறுமுன்னர் அவப்பேருக அவன் சென். பீற்றசு பேக்கிலே இவ்வுலகவாழ்வை நீத்தான். அவனுடைய தூதம் இருகருத்திலே முக்கியமானது. முதலாவதாக, பீக்கிங்கிலிருந்த மத்திய அரசாங்கத்தோடேயே அமெரிக்காவும் இங்கிலாந்தும் தொடர்புகொள்ளும் என்பதாகிய ஓர் உறுதிமொழியை அவன் அவற்றிடமிருந்து பெற்றான். மேற்கு வல்லரசுகள் சீனப்பதிலிராயன்மாரோடு நேராகத் தொடர்புகொள்ளவே, பிரித்தானிய வர்த்தக வகுப்பார் விரும்பியவாறு, மத்திய அரசாங்கம் குலைவுறும் எனும் அபாயம் அவன் பெற்ற உறுதிமொழி காரணமாக விலக்கப்பட்டது. 'பற்பல அரசுகளைக் கொண்ட ஒரு கூட்டிணைப்பே சீனம் என்பதனை வெளிநாட்டு அலுவலகம் உணரும் நாள் எந்நாளோ?'—இதுவே அக்காலத்திற் சாங்காய் வணிகரின் பல்லவியாயிற்று. இரண்டாவதாக, நிரந்தரமான சூழ்வியற் றூதங்களை வெளிநாடுகளிலே தாபிக்க வேண்டியதன் அவசியத்தைச் சீன அரசாங்கம் உணர்ந்தது. எனினும் சில ஆண்டு சென்ற பின்னரே மேலைப்புலத்துத் தலைநகரங்களில் தூதகம் நிறுவப் பீக்கிங்கு அரசாங்கம் இறுதியாக முடிபு செய்தது.

இவ்வாருகச் சீனப் பேரரசின் தார்மிக அதிகாரம் தகர்ந்துவிட்டது; தன் குடிகள்மீதே அதற்கிருந்த ஆதிக்கம் நலிந்துவிட்டது; அதன் சூழ்வியல் முறையும் வெளிநாடுகளிலே உறுதியாகத் தாபிக்கப்படவில்லை. எனினும், சீன—யப்பானியப் பூசலின் விளைவாக மேலைப்புலத்தோடு அது கொண்ட தொடர்புகளிற் புதியவோர் அத்தியாயம் தோன்றும்வரையும், அப்பேரரசு தொடர்ந்தியங்கிற்று. யப்பானுக்குஞ் சீனத்துக்குமிடையே நிலவிய தொடர்புகள்பற்றி ஆராய்தல் எமது நோக்கத்துக்கு அவசியமன்று. ஆயினும், ஐரோப்பாவொடு அவை யிரண்டுங் கொண்ட தொடர்புகளைப் பாதித்தவாற்றல், அவையும் ஓளவு முக்

கியமானவையெனலாம். சீனம் பொதுவகையான மேலாண்மை செலுத்திவந்த ஓர் அரசே கொரியாவாகும். முன்னூறுண்டுக்கு மேலாகப் பீக்கிங்கு வேத்தவையின் பாதுகாப்பை விருப்பாயேற்று, ஆண்டுதோறும் திறையும் அளந்துவந்தான் கொரியநாட்டுப் பேரரசன். பல்வேறு ஐரோப்பிய நாடுகள் கொரியாவிலே தலையிட முயன்றதுண்டு. அவ்விராச்சியத்தைக் கவர்ந்திணைக்கும் எண்ணமுடையது தனது நாடெனப் பிரான்சியக் கருமகர்த்தன் ஒருகாலத்தில் (1866 இல்) சீன வெளிநாட்டு அலுவலகத்துக்கு அறிக்கை செய்ததும் உண்டு. உண்மையிற் படையெடுப்பொன்று நிகழ்ந்ததாயினும், தீர்க்கமான முடிவின்றி முடிந்த அப்போராட்டின்பின், பிரான்சு தன் திட்டங்களைக் கைவிடநேரிட்டது. அப்பால், வல்லரசுகள் வலிந்து நட்புறவு கொள்ளுதற்குச் செய்த முயற்சிகளையெல்லாம் கொரியா எதிர்த்து நின்றது. அவற்றுள், 1871 மே மாதத்தில் அமெரிக்கர் செய்த முயற்சியே முக்கியமானது. அக்கால் அமெரிக்கத் தளபதியொருவன் தன் கோரிக்கைக்குத் தக்க ஆதரவு கிடைக்காமையாலே, பீரங்கிப் பிரயோகஞ் செய்தான்; கரையோரத்து அரணகங்களைத் தன் கைப்படுத்தினான்; சில கொரியரையும் கொலைசெய்தான். ஆயினும் இச்செயல்வழியாகத்தான் நம்பியிருந்த பலன் கிட்டாதுபோகவே, ஏமாற்றமடைந்து பின்வாங்கிச் சென்றான். இந்த அமெரிக்க நடவடிக்கையின் ஒரேயொரு பயன், தக்க பாதுகாப்பு அளிக்குமாறு சீனப் பேரரசற்குக் கொரியா அரசாங்கம் முறையான வேண்டுகோள் விடுத்ததேயாகும்.

இக்காலத்திலேயே யப்பான் அரசியலரங்கில் அடியெடுத்து வைத்தது. அதற்கும் கொரியாவிற் சிற்சில உரிமைகள் இருந்தன. திறைகொண்டு செல்லுந் தூதுக்குழுக்களை யப்பானியப் பேரரசற்குச் சில சந்தர்ப்பங்களில் ஒப்பாசாரமாக அனுப்பி வைப்பது கொரிய மன்னரின் வழமையாய் இருந்தது. யப்பான் நாடு 1868 இல் அனுப்பிய தூதுக்குழுவொன்று சற்றுத்தகவிலா முறையிற் கொரியாவில் நடத்தப்பட்டது. ஈராண்டு கழிந்தபின்னர் மீண்டும் ஒருமுறை அத்தகைய நிகழ்ச்சி நடைபெற்றது. கொரியாவைத் தண்டிக்கப் படையெழுந்து செல்லவேண்டுமென யப்பானிற் கிளர்ச்சி பரவிற்றுயினும், பேரரசன் அமைதியையே விரும்பினன். எனினும், 1876 இல் யப்பான் ஒரு பொருத்தனையைக் கொரியாமேற்றிணிப்பதில் வெற்றி கண்டது. கொரியா முற்றுகச் சுதந்திரமான அரசென அப்பொருத்தனை கூறிற்று. அதனால், பிற்றை நாளில் யப்பான் கொரியாவிலே தலையிடுதற்கு வழி திறக்கப்பட்டது.

எனினும், கொரியர் சீனத்தையே தம் மேலாண்மையரசாகத் தொடர்ந்து ஏற்று நடந்தனர். அப்பால், சியோலில் வெளிநாட்டுத் தூதரகாலயங்கள் நிறுவப்பட்டபின், தீவிரமான சூழ்வியற் போராட்டமொன்று தலைநகரில் உருவாயிற்று. யப்பானியர் 1890 அளவில் வல்லந்தமாக ஒரு முடிபெடுக்க ஆயத்தஞ் செய்தனர். குறிப்பாக, யப்பானுக்கெதிராகத் தோன்றியியங்கியதெனக் கருதப்பட்ட ஓர் அன்னியர்—எதிர்ப்புச் சங்கம் ஒரு கிளர்ச்சியை ஆரம்பித்தபோது, யப்பான் விரும்பிய தருணம் வாய்த்தது. அக்கிளர்ச்சி பெருகிக் கலகமாகவே, கொரிய அரசாங்கம் அதனை அடக்க முடியாமற் போய்விட்டது. சீனமே

பாதுகாப்பளிக்கும் அரசு என்ற வகையால், சியோல் அரசாங்கம் சீனத்தின் உதவியை நாடிற்று. இவ்வேண்டுகோளுக்குச் செவிசாய்த்த சீன அரசாங்கம் ஒரு சிறுதானையை அனுப்பிற்று. யப்பானியரும் தமது கடற்படை வீரரை அனுப்பி வைத்தனர். பூர்வாங்கப் பேச்சுக்களிற் சிலகாலங் கழிந்தபின்னர், 'கொரியாவைச் சீர்திருத்தும்' தனது தீர்மானத்தை யப்பான் அறிவித்தது. சீனத்தின் பாதுகாப்புரிமையினையே பேணுதற்கு ஆவற்பட்ட கொரிய அரசாங்கம், வலிந்து சீர்திருத்தும் இம்முயற்சிக்கு இணங்க மறுத்தது. எனவே யப்பானியர் இராசமாளிகையைத் தாக்கி, அரசகுடும்பத்தவரைக் கைப்பற்றி, யப்பானியத் தூதகத்தில் அடைத்து வைத்தனர்.

அடுத்து நிகழ்ந்த போர் விரைவாகவும் குறுகிய காலத்துள்ளும் முடிவுற்றது. தரையிலும் கடலிலும் ஒக்கவே சீனர் தீர்க்கமாக முறியடிக்கப்பட்டனர். தரைப் படையினைக் கொரியாவிற் புறங்கண்ட யப்பானியர், யாலுநதியைக் கடந்து மஞ்சூரியாமேலும் படையெடுத்தனர். அதற்கிடையில் அவர்தம் கடற்படை தெயிறெனுட் புகுந்து போட் ஆதரை முற்றுகையிட்டது. அவ்வளவிற் சீனர் இணக்கப் பேச்சுக்குச் சம்மதித்தாராயினும், பிற பல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண விரும்பிய யப்பானியர் வல்லரசுகளின் தலையீட்டை ஏற்க மறுத்தனர். வே-கை-வேயில் அடைப்புண்டு கிடந்த சீனக்கடற்படை சரணடைய, சீனப் பெருநில மீதும் யப்பானியர் படையெழுந்து சென்றனர். அன்னியர் தலையீடு தனக்கு உதவாதென்பதை உணர்ந்த சீன அரசாங்கம் இணக்கப்பேச்சு நடாத்துதற்காக இலி-உங்-சாங்கு என்பானை விசேட தூதமைச்சனாக அனுப்பிற்று. இதன் விளைவே சிமோனோசெக்கிப் பொருத்தனையாகும். அதன்படி, கொரியாவின் சுதந்திரத்தைச் சீனம் அங்கீகரித்தது; போமோசாவையும் பெசுக்கடோர்தீவுகளையும் மஞ்சூரியாவிலுள்ள லியோதுங்கு மாகாணத்தையும் சீனங் கையளித்தது. அன்றியும் நட்டஈடாக 20,00,00,000 தேயிலையும் கொடுக்க உடன்பட்டது. இன்னும், ஆணிலப்புறத்துரிமையுட்பட, ஐரோப்பிய வல்லரசுகள் பெற்றிருந்த சிறப்புரிமைகள் அனைத்தையும் யப்பானும் வலிந்துபெற்றது. இணக்கப்பேச்சு நடாத்துதற்குப் புறப்படுமுன்னம், லி-உங்-சாங்கு இரசியத் தூதமைச்சனோடு தொடர்புகொண்டு, யப்பான் சீனத்திடமிருந்து ஆணிலச்சலுகை கோருங்காலே இரசியரின் தலையீடு கிடைக்குமென்பதாய் உறுதிமொழி யாதோ அவன் பெற்றுன்போலும்.[1] பொருத்தனையிற் கையொப்பமிடுமுன்னர், இரசியாவின் நடவடிக்கைக்குச் சேர்மன் ஆதரவு கிடைக்குமென்னும் செய்தியையும் பேளினில் அவனுடைய முகவனையிருந்த தெற்றெறிங்கு என்பானிடமிருந்து பெற்றுன். எவ்வாறுயினும், பொருத்தனை கைச்சாத்திடப்பட்டு எட்டுநாள் முடியுமுன், இரசியாவும் பிரான்சும் சேர்மனியும் கூட்டாகச் சேர்ந்து லியோதுங்குத் தீபகற்பத்தைச் சீனத்துக்குத் திருப்பியளித்தல் வேண்டுமென வற்புறுத்தின. யப்பான் மெத்தத் தயங்கியே இக்கோரிக்கைக்கு இணங்கிற்று.

1. J. O. P. Bland : *Li Hung -Chang*. London, 1917, pp. 179-80.

மேலைப்புலத்தோடு சீனங் கொண்ட தொடர்புகளிலே புதியவொரு கட்டத்தைச் சிமோனேசெக்கிப் பொருத்தனை குறிப்பதாகும். அதன்வழி சீனம் இழந்த பிரதேசம் பெரிதன்று. கொரியாமேற் செலுத்திவந்த மேலாண்மை முக்கியமானதாயினும், சீனர் அதனை முன்னம் பெரிதாக மதித்ததில்லை. போமோசாவையும் பெசுக்கடோர் தீவுகளையும் இழந்ததைத்தானும் அவர்கள் பொருட்படுத்தாதிருக்கலாம். இவற்றினும் பாரதூரமான விடயம் யாதெனில், அதன் சர்வதேசநிலைக்கு ஏற்பட்ட துடைக்க முடியாத பங்கமேயாகும். ஐம்பதாண்டு கழியும் வரையும் அதினின்றும் சீனம் முற்றுக மீட்சிபெறவில்லை. சீனத்தின் உண்மைநிலை யாவர்க்கும் புலனுயிற்று. ஊழல் அதன் ஆட்சியெங்கணும் ஊடுருவிப் புரையோடிவிட்டது (போரின்போது கடற்படைக்கு வேண்டிய வெடிமருந்து போதாமையால், அது போரிடவகையின்றி வாளாநின்றது; போர்க்கப்பல்களை ஏற்றுக் கப்பல்களாகப் பயன்படுத்தவேண்டியதாயிற்று); அதன் நிருவாகமுறை முற்றுகத் திறமையற்றுவிட்டது; இன்பக் கேளிக்கைகளில் மூழ்கியும், அறியாமையும் இழிவும் மிக்க அண்ணகரின் ஆதிக்கத்திற் சிக்குண்டுமிருந்த வேத்தவை நாட்டுக்குத் தலைமைதாங்கி நடத்தும் சக்தியற்றிருந்தது. துறைகளிலே வர்த்தகப் பொருளாதாரம் தோன்றி வளர்ந்தமையால், பழைய வகுப்பார் தமது பெருமையையும் அதிகாரத்தையும் பெரும்பாலும் இழந்து நின்றனர். இறுதியாக எவ்வகை அன்னிய ஆக்கிரமிப்பையும் நிருவகிக்க வியலாத ஆற்றுமையின்பாற்பட்டு நின்றது சீனம் என்பதும் தெளிவாயிற்று.

யப்பானியரோடு செய்த பொருத்தனைவாயிலாக, நாட்டுக்குக் கேடு சூழ்ந்த புதியவொரு சிக்கலும் வந்து புகுந்தது. மாபெரிய நட்டஈடு கட்டவேண்டியிருந்தமையே அதுவாகும். வேத்தவையின் ஊதாரித்தனமும் போர்ச்செலவுங் காரணமாகத் திறைசேரி வறண்டுவிட்டது. ஆகவே, இரசிய அரசாங்கத்தின் உத்தரவாதத்தின் பேரில், பிரான்சிய இரசிய வங்கிகளிடமிருந்து கடனுகப் பணம் பெறுதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. பிறவல்லரசுகளும்—குறிப்பாக இங்கிலாந்தும் சேர்மனியும்—அவ்வொழுங்கிற்கு ஆட்சேபந் தெரிவித்து, பெயரளவில் மறுசீரமைப்புக்குத் தாமும் கடன் கொடுக்கவேண்டுமென வற்புறுத்தின. இவ்வாறு பட்ட கடன்களெல்லாம் சுங்கவருமானத்தில் அறவிடுதற்கு உரியவாயின. அன்றியும், யாங்திசிப் பள்ளத்தாக்கின் உப்பு, இலிக்கின்[1] வருமானங்களும் இக்கடன்களுக்கு அடகாக வைக்கப்பட்டன. கடன்மூலமாகச் சீனத்தைக் கட்டுப்படுத்தும் படலம் இவ்வாறுக ஆரம்பமாயிற்று.

அடுத்துத் தொடர்ந்த நிகழ்ச்சிப் போக்கினை விரிவாக வரையறுத்துக் கூறுதல் எளிதன்று. ஆயின் மேலழுந்தவாரியாகப் பொதுப்பட வருணித்தல் எளிதாகும். பெரியவும் சிறியவுமாகிய ஐரோப்பிய வல்லரசுகள் அனைத்தும் சலுகை கோரிப் பீக்கிங்கை நெருக்கத் தொடங்கின. புகையிரதப்பாதை யமைத்தலே முதற்றிட்டமாயிருந்தது. சிறிய அரசியல் ஆதிக்கத்தோடு எளிதில் இலாபம்

1. இது ஒருவகைப் பிரதேசவரி.

பெறுதற்கு, புகையிரதப்பாதை நிர்மாணத்திட்டம் வாய்ப்பளிக்கும்போலத் தோன்றிற்று. 1890 இனை யடுத்த ஆண்டுகளிலேயும், சீனச் சந்தை குறிப்பிடத் தக்க அளவிற்கு விரிவடைந்ததாகத் தெரியவில்லை. உதாரணமாக 1894 இல், இந்தியாவிலும் பார்க்கச் சீனத்தில் இலங்காசயர் துணிவகைகள் இருபதுவீதங் குறைவாகவே விற்கப்பட்டன. ஆதலின், பெரும் வியாபாரக் குழுக்கள், ஒங் கொங்கு—சாங்காய் வங்கிக் கூட்டுத்தாபனத்தின் தலைமையில், சீனத்துக்கு மூலதனம் ஏற்றுமதி செய்தலே சிறந்த இலாபந்தரும் முயற்சியென்பதைக் கண் டன—அவ்வாறே அதனைக் கைக்கொண்டன. தெற்கிலே (யூனனிலும் தென் மாகாணங்கள் மூன்றிலும்) பிரான்சியரும், (பீக்கிங்கு—ஆங்கோவிலே) பெல் சியரும், (ஆங்கோ—கன்றனிலே) அமெரிக்கரும், (மஞ்சூரியாவில்) இரசியரும், (யாங்திசிப் பள்ளத்தாக்கிலும், ஆங்கில—இத்தாலியக் கூட்டிணைப்பின் பேராற் சான்சியிலும்) பிரித்தானியருமாகச் சீனநாட்டினை, 1896-9 வரையான மூன் றாண்டுக் காலத்துள், பல்வேறு ஐரோப்பிய அரசுகளின் கட்டுப்பாட்டுக்கமைந்த பல கூறுகளாகப் பங்குபோட்டன. அக்காலத்தில் ஐரோப்பாவிலே தன்னே ரில்லா வலிமைபெற்றிருந்த சேர்மனி அகப்பட்டதைச் சுருட்டும் இக்கைங்கரி யத்தில் தான் பிந்திவிட்டதை உணர்ந்து, தனக்கும் சீனத்தில் ஒரு பிரதே சத்தை வகிர்ந்தெடுக்க நினைந்தது. சேர்மானிய மிசனரிமார் இருவரைச் சீனக் கொள்ளைக்காரர் கொலைசெய்தனர் எனும் வழமையான பழைய தலைக்கீட்டின் போல், சேர்மனி சீனத்திற் படையிறக்கி, திசிங்தாவோவிலிருந்து சீனக் காவற்சேனையை வெளியோட்டி, அத்துறையை அடிப்படுத்திற்று. பின்னர் சேர் மானிய தூதமைச்சன் தனது அரசாங்கத்தின் கோரிக்கைகளைச் சமர்ப்பித் தான். நட்டஈடு, சீன அதிகாரிகளைத் தண்டித்தல் போன்ற பழைய மேனாட்டு வாய்ப்பாடுகள் அக்கோரிக்கைகளில் இடம்பெற்றதோடு, சான்றுங்கிலே புகை யிரதப்பாதை அமைக்கவும் கனிச்சுரங்கமறுக்கவும் தனியுரிமை கேட்டது மன்றி, கடற்படை நிலையமாகக் கியாவோச்சோ துறையினைக் குத்தகைக்கு விட வேண்டுமெனவும் வற்புறுத்தப்பட்டது.

பிற வல்லரசுகளும் இத்தன்மையவான கோரிக்கைகளைத் தாமும் வற்புறுத் தத் தொடங்கின. பிரான்சிய அரசாங்கம் எண்ணித்துணிந்து, 'ஒட்டியிணைத் தல்' என்று கூறத்தக்க கோட்பாட்டினை வகுத்துக் கூறிற்று. அதன் உட்கருத்து மிக எளிதானது. இந்து—சீனம் பிரான்சிய உடைமையாக இருந்ததாக, அதனை மருவியுள்ள பிரதேசங்கள் இந்து—சீனத்தோடு 'ஒட்டியிணைக்கப்படவேண்டு மெனப் பிரான்சு வற்புறுத்திற்று. யூனன் எனும் பெருமாகாணம் தொங்கிங் கோடு புகையிரதப்பாதை மூலமாய் இணைக்கப்படவேண்டும். குவாங்சோக் குடாவும் அதனைச் சார்ந்திருந்த பிரதேசங்களும் கப்பற்றளமாகப் பயன்படுத் தற்கு 1899 இற் கவரப்பட்டன. குவாங்சி, யூனன், குவெயிச்சோ, செக்குவான் ஆகிய பிரதேசங்கள்—சீனத்தின் மொத்தப் பரப்பில் நாலிலோர் பாகத்துக்கும் மேலான பிரதேசம்—இந்து—சீனத்தோடு 'ஒட்டியிணைக்கப்படுதற்கு' முடிபு செய்யப்பட்டது. இந்தியாவிற் பிரித்தானியர் நிருமாணிக்க விரும்பியதினும் பார்க்கப் பெரிய ஒரு பேரரசு உருவாதலைப் பிரான்சியர் கற்பனை செய்து கண்

டனர். பிரித்தானியர் பீஜிகொண்டது இயல்பேயாம். இலண்டனிலிருந்த சீனச் சங்கம் சோல்சுபெரிப் பிரபுவிற்கு விடுத்த ஒரு நிருபத்தில் வருமாறு கட்டுரைத்தது: 'இன்று அமைக்கப்படும் பல்வேறு புகையிரதப்பாதைகள் உண்மையில் அவ்வப் பிரதேசத்தில் நாட்டப்படும் அரசியல் ஊன்றுகோல்களே யெனவும், அவற்றைச் சுற்றி என்றேரு ஒருநாள் எல்லேவேலியிடப்படுமெனவும் நாம் ஓர்ந்து, ஒங்கொங்கிற்குப் பின்னணி நிலமாயமைந்த ஒரு மாகாணத்திற் பிரெஞ்சு நலவுரிமைகள் புகுதற்கு அனுமதிக்கப்பட்டதையிட்டு இச்சங்கம் பெரிதும் வருந்துகிறது.' தமது அரசியற் செல்வாக்கும் வர்த்தகமும் சென்று பரவுதற்குச் சிறப்புரிமையாகத் தாம் பெற்ற ஒரு பிரதேசமாகவே, ஒங்கொங்குத் தீவின் பின்னணி நிலமாகவே, தென்சீனத்தைப் பிரித்தானிய வியாபாரிகள் கருதிவந்தனர்.

'செல்வாக்கு வட்டாரம்' எனுங் கோட்பாட்டினை முறைமையாகப் பிரித்தன் 1899 இல் அங்கீகரித்தது. யாங்திசிப் பள்ளத்தாக்கு மூழுவதிலும் புறநீங்கலான விரிந்த அதிகாரத்தை அது தானே மேற்கொண்டது. இவ்வுரித்தைப் பிரித்தன் எத்துணை அக்கிரமமான முறையில் நிலைநாட்டத் தலைப்பட்டதென்பது, பீக்கிங்கு—ஆங்கோப் புகையிரதப் பாதைச் சலுகை விடயமாக அது கையாண்ட நடவடிக்கையாயிலாகத் தெளிவாகும். இப்புகையிரதப் பாதையைக் கட்டுதற்கு ஒரு பெல்சியக் கம்பெனியே சீன அரசால் அனுமதிக்கப்பட்டிருந்தது. பிரித்தானியத் தூதமைச்சனுக்கு இச்செய்தி அறிவிக்கப்பட்டபோது, 'பீக்கிங்கு—ஆங்கோ உடன்படிக்கையிற் கண்ட நியதிகளை மூற்றெப்பாகத் தழுவிப் பிரித்தன் கேட்ட சலுகைகளை' உடனும் அளிக்கவேண்டுமென அவன் கோரிக்கை விடுத்தான். அன்றேல், வேண்டுமென்றே தனது நாட்டுக் கெதிராகச் சீன அரசாங்கம் விரோதங் காட்டியுளதென்று கருதப்படுமென்றும், 'அதற்கிணங்க நாம் நடவடிக்கை எடுப்போம்' என்றும் அச்சுறுத்தப்பட்டது.

இவ்வாறுக, எதிர்காலத்தே உரிமைநாட்டும் நோக்கத்தோடு, வல்லரசுகள் பற்பல தந்திரவுத்திகளைக் கையாளத் தலைப்பட்டன. பராதீனப்படுத்தாமைப்[1] பிரகடனம் என்பதன்வாயிலாக அவை தத்தம் உரிமைகளை நிலைநாட்ட முற்பட்டன. இங்கும் பிரான்சியரே மற்றையோர்க்கு வழிகாட்டிச் சென்றனர். அயினுன் தீவைப் பிறவெந்த வல்லரசுக்கும் பராதீனப்படுத்தமாட்டாதெனச் சீன அரசாங்கம் பிரகடனம் விடுக்குமாறு பிரான்சு வற்புறுத்திற்று. இத்தகைய உறுதிவாக்கை யாங்திசிப் பள்ளத்தாக்கின் சார்பாகப் பிரித்தனும், புக்கியென் கரைப்புலத்தின் சார்பாக யப்பானும், கேட்கலாயின. போட் ஆதரை இரசியா கைப்பற்ற, அதற்கு மாறுத்தரமாகப் பிரித்தன் வெய்—கை—வெய் எனுமிடத்தை அடிப்படுத்திற்று. மேலும், சுங்க நிருவாகத்திலும் உப்பு நிருவாகத்திலும் தலைமை வகிப்பதுபற்றியும் நிரந்தரமான உரிமைகள் கேட்கப்பட்டன. இப்போட்டியிலே தான் பின்தங்கிவிட்டதை உணர்ந்த இத்தாலி, சிகியாங்கிலுள்ள சமென் குடாவில் ஒரு கடற்படை நிலையங் கோரிற்று. இம்முறை அத்

[1]. Non-alienation.

கோரிக்கைக்கு இணங்க மறுத்த சீனம், தனது ஆணிலவுரிமையை மீறும் எந்த முயற்சியையும் படைப்பலங்கொண்டு எதிர்க்குமெனக் கட்டுரை பகர்ந்தது.

இவ்வாறுக, யப்பானெடு பொருத்தனை செய்து மூன்றாண்டு முடியுமுன்னம், பொருளாதார முயற்சி, அரசியற் செல்வாக்கு, புகையிரதப்பாதை அபிவிருத்தி ஆகிய இம்மூன்றன்பொருட்டும் சீனம் செவ்வையாகக் கூறுபோடப்பட்டுவிட்டது. சருங்கக் கூறின், யூனானும் இந்து—சீனத்தையடுத்த பிரதேசமும் பிரெஞ்சு வட்டாரமாகக் கருதப்பட்டன; கன்றனும் யாங்கிசிப்பள்ளத்தாக்கும் இவற்றுக்கிடைப்பட்ட பெரும் பிரதேசமும் பிரித்தானிய வட்டாரமாகக் கணிக்கப்பட்டன. இரசியா மஞ்சூரியாவிலே ஆதிக்கம் பெற்றது; சேர்மனியின் கட்டுப்பாட்டில் சான்றுங் இருந்தது; யப்பான் புக்கியெனில் நாட்டங்கொண்டது. அன்னியரின் கட்டுப்பாட்டுக் கமைந்த புகையிரதப்பாதைகள் நாட்டை ஊடறுத்துச் சென்றன. கடற்கரையடுத்தும், உண்ணாட்டு நீர்ப்பாதைகளிலும் அன்னியக் கப்பல்கள் தடையின்றி நடமாடின.

இத்தூணைக் காலமும் பிரித்தானிய வர்த்தகர் வற்புறுத்தி வந்த 'செல்வாக்கு வட்டாரம்' இறுதியில் இவ்வாறு கைகூடிற்று. 'செல்வாக்குச் சமநிலை' யெனும் புதிய கோட்பாடும் விதிக்கப்பட்டது. ஒரு வல்லரசு மேலதிகச் சலுகை யாதும் பெற்றால், அதற்கீடாக, அதனைச் சமன்செய்யும் வகையிலே பிறவற்றுக்கும் சலுகைகள் வழங்கப்படல் வேண்டுமென்பதே அக்கோட்பாடாகும். இனி, 'திறந்தவாயிற்பூட்கை'[1] எனப்படுவதை அமெரிக்க ஐக்கிய நாடு பிரகடனஞ் செய்தகாலை, சீனத்தைத் தூண்டாடுவதாகிய இத்திட்டம் எதிர்பாராவிதமாகத் தடைப்பட்டது. இது மேனாடுகளின் தூர்ப்பாக்கியமே. பிலிப்பீன் தீவுகளைப் பெற்றதன்பின்னர், ஐக்கிய அமெரிக்கர பசிபிக்கிலே பிரதானமான ஒரு வல்லரசாயது. சீனத்திற் சலுகைகள் பெறுதற்குப் போட்டி உச்சநிலையடைந்திருந்த காலத்தில், அமெரிக்க அரசுச் செயலாளன், சீனத்தில் ஈடுபாடு கொண்டிருந்த அரசுகளிடமிருந்து, முறைமையான உறுதிவாக்குச் சில கோரினன். செல்வாக்கு வட்டாரமெனும் முறை, பிறநாடுகள் பொருத்தனை வாயிலாகப் பெற்ற உரிமைகளைப் பாதித்தலாகாது; சுங்கத்தீர்வை திரட்டும் பொறுப்பை எங்களும் சீன அதிகாரவர்க்கமே நிருவகித்தல் வேண்டும்; பாரபட்சமான துறைமுகத்தீர்வைகள் புகையிரதக்கட்டணங்களின் வழி, எந்தவொரு வல்லரசின் குடிகளும் ஒப்புரவில்லா நன்மையடைதலாகாது. இவையே அமெரிக்க அரசாங்கம் வற்புறுத்திய கோரிக்கைகளாகும். பிற வல்லரசுகளின் தனிப்பட்ட செல்வாக்கு விரைவாகப் பரவிவந்த பிரதேசங்களில் அமெரிக்க வர்த்தக நலன்களைப் பாதுகாப்பதே இப்பூட்கையின் உண்மை நோக்கமாகும். ஆயின், அப்பூட்கை—அதிலும் விசேடமாகச் சீனரே சுங்கத் தீர்வைகளைத் திரட்டல் வேண்டுமெனும் ஏற்பாடு—சீனத்தின் ஒருமைப்பாட்டைப் பேணுதற்கு மறைமுகமாக உதவிற்று. எதிர்காலத்தே இப்பிரகடனத்தால் விளையப்போகும் ஆழ்ந்த விளைவுகளை அக்காலத்தில் உணர்ந்தவர் இல்லை. அடுத்த ஐம்பதாண்டுக் காலத்தில்,

[1]. Open door policy.

தாரகிழக்கிலே அமெரிக்கா வகிக்கப்போகும் தலைப்பெருமிடத்தை 1899 இல் யாரே முன்னறிந்திருப்பர் !.

பிரிவினை யென்னும் அபாயம் யாவர்க்கும் தெளிவாயிற்று; வேத்தவையுமே அதனை உணர்ந்து விழிப்படைந்தது. ஆக்கிரமிப்பைத் தடுத்தற்கு ஆயத்தமாய் இருக்குமாறு குறிப்பாக மாகாணப் பதிலிராயன்மார் பணிக்கப்பட்டனர். இத்தாலியப் போர்க்கப்பல்கள் சீனக்கடல்களிலே நின்றமையும், கியாவோச்சோவிலே சேர்மானியப் பெரும்படையொன்று திரண்டமையும் சீன அதிகாரவர்க்கத்துக்குப் பெருங் கவலை யளித்தன. 1899 ஆம் ஆண்டு முழுவதும் பீக்கிங்கு அரசாங்கம் தைரியமிழக்காது நின்றது. மூப்படைந்த பேரரசி புதுவலி பெற்றனள் போற் காணப்பட்டாள். குவாங்சுவின் சீர்திருத்த இயக்கம் தோல்வியடையவே, முன்னம் நாமத்தளவில் அதிகாரம் துறந்திருந்த பேரரசி ஓர் ஆட்சிப் புரட்டின் மூலமாக மீண்டும் முழுவதிகாரம் கைக்கொண்டாள். பிற்போக்குச் சத்திகளெல்லாம் அவள் தலைமையிற்றிரண்டன. எனினும், வேத்தவை ஆற்றுமைப்பட்டிருந்ததென்பதையும், அன்னிய வல்லரசுகளில் பூட்கைக் கிணங்க நிருவாகத்தைத் திருத்தியமைக்கலாம் என்பதையும் வல்லரசுகள் நன்கு உணர்ந்திருந்தன. ஆயின் சீனமக்களின் நாட்டபிமானத்தையும் மனநிலையினையும் வெளிநாட்டு அதிகாரிகள் உள்ளவாறு உணரத் தவறினர். நாட்டுப்புறத்து மக்களெல்லாரும் கோபாவேசங் கொண்டு எழுந்தனர். அறியாமையும் மூடநம்பிக்கையும் நிறைந்த மக்களாயினும், அவர்தம் இதயங்களிலே தீவிரமான நாட்டபிமானந் தேங்கிநின்றது. அவ்விதயங்களிலிருந்தே 'ஒத்தியங்கும் முட்டிவீரரின் சங்கம்' எனும் பெயர் படைத்த 'பொக்சர் இயக்கம்' ஊற்றெடுத்தது. அவ்வியக்கம் மாகாணங்களிலும் தலைதூக்கிற்று. நாட்டுப்புறத்தில் மொய்த்திருந்த மிசனரிமார்மீதும், மற்றுக் கிறித்துவ மதமாறிகள் மீதுமே மக்களின் சீற்றம் பிரதானமாகச் சென்றது. பேரரசு முறையின் முன்னாதரராகக் கிறித்துவ மதமாறிகளுங் கருதப்பட்டனர். இருபதாண்டுக் கால வரலாறு; தியென்சின் சம்பவங்களைத் தொடர்ந்து பிரான்சியர் செய்த ஆக்கிரமிப்பு; மார்க்கிக் கொலையைத் தொடர்ந்து, சலுகைகள் பறிக்கப் பிரித்தானியர் செய்த முயற்சிகள்; பல்வகையான சலுகைகள் பெறுதற்காகப் பீக்கிங்கு வேத்தவையை இடையீடின்றி நெருக்கியமை; பங்குபோடுதற்கே சீனம் உளது என வல்லரசுகள் கொண்ட எளிய கருத்து—ஆகிய வெல்லாம் சாதாரண மனிதனுடைய நாட்டபிமானத்தைத் தூண்டிவிட்டன. சாந்துங்கிலேயே இவ்வியக்கம் முதலிற் காணப்பட்டது. '(அரச) வமிசத்தைப் போற்றுமின், அன்னியனை அழிமின்' என்பதே முட்டிவீரரின் சுலோகமாயிற்று. யப்பானில் மெயிசி மீட்சிக்கு முன்னர், தாய சிந்தோ இயக்கம் போதித்த கொள்கையே இங்குத் தழுவப்பட்டது. மக்களின் உணர்ச்சிப்பெருக்கையே உண்மையில் ஆதாரமாய்க் கொண்டிருந்த இவ்வியக்கம், அன்னியரோடு நேரான தொடர்பில்லாத உயர் அதிகாரிகளின் ஆதரவையும், அவருள்ளும் குறிப்பாக சாந்துங் ஆள்பதி யூ இசின் என்பானுடைய ஆதரவையும், மஞ்சூச் சிற்றரசராகிய சிங், துவான் என்பாருடைய சகாயத்தையும்

பெற்றது. பேரரசியும் இறுதியில் அவ்வியக்கத்தின் பக்கல் சார்ந்தாள். 1900 ஆம் ஆண்டு சனவரியளவில் மக்களாதரவாகிய பெருவலியைப் பெரிதும் பெற்ற தோடு, அது பேரரசியின் ஆதரவையும் பெற்றது.

மூட்டிவீரர் இயக்கத்தினை வெறிபிடித்த அன்னிய எதிர்ப்பியக்கமாகவே மேனாட்டோர் கருதினராயினும், அது தேசிய உணர்ச்சியாலும் நாட்டபிமானத் தாலும் உந்தப்பட்ட ஓர் இயக்கமேயென்பதிற் சந்தேகமில்லை. அது புத்தியீன மான இயக்கமென உறுதியான கருத்துக் கொண்டிருந்த யுங் ஆதானும், வட நாட்டு மூட்டிவீரர் கொள்கையிடும் ஆசையாலன்றி, உண்மையான சமய ஆவே சத்தால் உந்தப்பட்டனரென ஒரு கடிதத்தில் ஒப்புக்கொண்டான். மூட்டி வீரர்க்கு ஊக்கமளித்தலே ஆட்சேபிக்குமுகமாக அரியணைக்கு விடுத்த ஒரு விஞ்ஞாபனத்திலே, பதிலிராயன் இலி—உங்—சாங்கு என்பான் வருமாறு கழறி னன். 'எமது தற்காப்புக்களைச் சீர்படுத்த விரும்பாதவன் எவனும் இழிந் தோனே; தீர்ப்பெடுக்கும் நன்னலை எதிர்நோக்காதவன் எவனும் மானமற் றோனே; மாண்புடைய, கொற்றம் மிக்க ஒரு போரிற் சீனநாடு ஈடுபடுமாயின், யான் எத்துணை மகிழ்வேன் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ[1]'. புகழ்மிக்க புலமையோணும் உயர்ந்த அதிகாரியுமான மேன்மை தங்கிய சாங் சான் அன் றன்றை நிகழ்ச்சிகளையும் எண்ணங்களையும் குறித்து வைத்த நாட்குறிப்பேட் டினைப் பார்க்கும்போது, சீனப் பெருமக்கள் அவ்வியக்கத்தை உண்மையான நாட்டபிமானக் கிளர்ச்சியாகப் போற்றி அனுதாபங் காட்டினர் என்பது தெளி வாகத் தெரிகின்றது.

இத்தேசிய வியக்கத்தின் வலிகண்டு வல்லரசுகள் பீதிகொண்டன. மூட்டிவீரர் இயக்கத்தை ஒடுக்கிவிடுமாறு வற்புறுத்துமளவிற்கு அவை சென்றன. 'இச்சங் கங்களிற் சேருவதும், அதன் உறுப்பினன் யாவனுக்காயினும் புகலிடம் அளிப் பதும் சீனச் சட்டங்களுக்கு மாறான பெருங்குற்றமாகுமெனப்' பேரரசு ஆஞ்ஞை பிறப்பித்தல் வேண்டுமெனவும் யோசனை கூறப்பட்டது. அப்பால், அன்னியரின் ஆக்கிரமிப்பையும், மிசனரிமாரின் சமயப்பணியையும் எதிர்ப்பதை யும் குற்றமாக்குதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. வருந்தத்தக்க இம்முயற்சி கள் மூட்டிவீரரை நலித்தலின்றி, சீனத்தை அழித்தலே அன்னிய வல்லரசுக ளின் உள்ளக்கிடக்கையாகும் என்பதை மேலுந் தெளிவாகக் காட்டின. அன் னிய வல்லரசுகள் ஒன்றுபட்டு எதிர்த்தவாற்றைக் கண்ணுற்ற வேத்தவை யானது, அவ்வியக்கத்தை அடக்குமாறு சிகிலிப் பதிலிராயற்கும், சாந்துங் ஆள் பதிக்கும் கட்டளை விடுத்தது. சிகிலிப் பதிலிராயன் அதற்கிணங்கப் பிரசித்தம் விடுத்தது உண்மையே. ஆயினும் ஐரோப்பியத் தூதுவர் திருப்தியடைந்திலர். வேத்தவையை வெருக்கொள்ளச் செய்தற்காக, சிகிலிக்குடாவிலே கடற்படை யார்ப்பாட்டஞ் செய்யுமாறு கட்டளை விடுத்தனர். ஆயின் அவர்களோடு மாறு பட்டு நின்றோர் வேத்தவையினரே யல்லர்; வீறுகொண்டெழுந்த மக்களே யென்பதை அன்னர் உணர்ந்திலர்.

1. Bland : *Li Hung -chang*, p. 306.

மே மாதத்தில், மூட்டிவீரர் தாமே முந்துற்றுவந்து பீக்கிங்கு நகருட் குவி வாராயினர். சீன மதமாறிகள்மீதே அவர்கள் குறிப்பாகக் கவனஞ் செலுத்தி னர்—'இரண்டாந்தர மிலேச்சர்' என அவர்களைக் குறிப்பிட்டனர். அன்னியத் தூதகங்கள் காவல் வீரரையும் படைத்துணையையும் வேண்டி நின்றன. பிரித் தானியர் தியென்சினில் ஒரு கடற்படையிறக்கினர். பீக்கிங்கிலும் தியென்சினி லும் நிலைமை விரைவாக மோசமாகியது. ஆயின், விரும்பத்தகாத மிசனரி மார்க்கெதிராகவே பெரும்பான்மையும் மூட்டிவீரர் நடவடிக்கை மேற்கொண்ட னர். தீவிரமான நடவடிக்கையெடுக்கவேண்டிய காலம் வந்துவிட்டதென வல் லரசுகளின் பிரதிநிதிகள் எண்ணினர். தியென்சினிலிருந்த தளபதிகள் தாக்குக் கோட்டைகளைத் தாக்கித் தங்கைப்படுத்தினர். இச்செயலைத் தொடர்ந்து தாக்குவிலும் தியென்சினிலும் அங்குமிங்குமாகப் பூசல்கள் விளைந்தன. பீக்கிங் கிலே தூதரால்யங்கள் முற்றுகைப்பட்டன. அவசரமாய் அமைத்த தடுப்புக்க ளின் பின்னல், அன்னியர் தீரத்தொடு தற்காத்து நின்றனர். ஆயின் தூதராலய வட்டாரத்துக்கு வெளியே, மிசனரிமார்க்கும் கிறித்தவர்க்கும் பெருஞ் சேதம் விளைக்கப்பட்டது. உண்ணாட்டிலேயும், பதிலிராயன்மார் போகிய படைப்பலங் கொண்டு இயக்கத்தை அடக்க முயன்ற பகுதிகள்தவிர்ந்த பிற இடங்களிலே, மிசனரிமாரின் கட்டிடங்கள் அழிக்கப்பட்டன. அங்குப் பணியாற்றுவோரும் படுகொலை செய்யப்பட்டனர்.

அறியாமைமிக்க மூட்டிவீரர் மிசனரிமாரையும் மதமாறிகளையும் கொடுமை யாக நடத்திப் பழிபாவங்கள் புரிந்தாராயின், வெற்றி பெற்ற வேளையிலே ஐரோப்பிய வல்லரசுகள் நடந்து கொண்டவகையும் அறக்கொடிய வஞ்சந்தீர்க் கும் வன்மத்தை இழிந்த முறையில் வெளிப்படையாகக் காட்டுவதாயிருந்தது. அத்தாட்சியுள்ள அக்கால அறிக்கைகளை நோக்கும்போது, நேய நாடுகளின் சேனைவீரர் கொள்ளையடிப்போராய் மாறினர் என்பது தெரிகின்றது. படைத் தாக்குதல்கள் எல்லாத்திசைகளிலும் மேற்கொள்ளப்பட்டன. பத்துக் கட்டளை களுள் மிகச் சுருக்கமான மூன்றும் பல்காலும் விரிந்த முறையில் மீறப்பட்டன என்பது திண்ணம் — இவ்வாறாக ஒரு வரலாற்றுக்குறிப்புக் கூறுகின்றது. பீக் கிங்கிலே நிலைமை இன்னும் மோசமாய் இருந்தது. சீனத்தலைநகரிலே, ஐரோப் பிய வல்லரசுகளின் படைவீரரது உண்மைச் சொரூபம் வெளிப்பட்டது; நாக ரீகத்தின் வெளிப்பூச்சுத்தானும் அங்கு வெளுத்துவிட்டது. பழுத்த பேரரசு வாதியும் முன்னாளில் இத்தாலியத் தூதுவனுமாயிருந்த தானியேல் வறே என்பானுமே, 'பீக்கிங்குக் குடிகள் பட்டதுன்பம், தயிப்பிங்குக் கலகக்காரர் அந்நகரைச் சூறையாடினுல் நேரக்கூடிய துன்பத்திலும் சிறிதளவே குறைந் தது' எனக் கூறுதல் காண்கிறோம்.[1]

இம்முறையும் இலி—உங்—சாங்கு என்பானே இணக்கம்பேசி அமைதி ஒப்பேற் றினன். சீன அரசு கடுந்தண்டங் கொடுக்கவேண்டியதாயிற்று. இழிவுதருங் கொடிய அமைதியுடன்படிக்கை சீனம் மீது திணிக்கப்பட்டது. சூற்றமிழைத் தோரைத் தண்டித்தலும், முட்டாளான சேர்மனியத் தூதமைச்சனுக்கு ஒரு

1. Daniele Vare : *The Last of the Empresses*, p. 205.

நினைவுச்சின்னம் நிறுவுதலும்பற்றிய ஏற்பாடுகள் ஒருபுறமாக, அன்னியர் தன் புறுத்தப்பட்ட நகரங்களிலே சீன அதிகாரிகள் சோதனை செய்தல் ஐயாண்டுக் காலம் நிறுத்தி வைக்கப்படவேண்டுமெனவும் அவ்வுடன்படிக்கையின் பிரதான வாசகங்கள் விதித்தன. மிசனரிமாராற் கல்வி பயிற்றப்பட்ட இளைஞர்க்கும் மற் றுக் கிறித்தவர்க்கும் உத்தியோக வாய்ப்பளித்தற்கான ஓர் உபாயமே இஃது. தலையாய பிறவாசகங்களிற் பின்வருவன இடம்பெற்றன. போர்க்கருவிகளும் வெடி மருந்தும் இறக்குமதி செய்தற்கு இரண்டு வருடத்தடை; நட்ட ஈடாக 45 கோடி தெயிலீத் தவணைக்கட்டண முறையிற் சீனங் கொடுத்தல்—10 கோடி பவுணிலுஞ் சற்றுக் கூடியதான இத்தொகை 1940 இற் கொடுத்து முடிவுறும்; சீனர் தவிர்ந்த அன்னியர்க்கே தூதக வட்டாரம் ஒதுக்கி வைக்கப்படுதல்; அன்னியத் தூதகங்களே அதனைப் பாதுகாக்கும் பொறுப்பேற்றல்; அதற்காகப் பீக்கிங்கிலும் படை வைத்திருக்கும் உரிமை அவற்றுக்கு வழங்கப்படுதல்; தாக் குக் கோட்டைகள் அழிக்கப்படுதல்; என்றிவையாகும். கரையோரச் சுங்கவரி, உப்புவரி, உண்ணாட்டுத்தீர்வை எனுமிந்த மூவழியானும் வருகின்ற வருமானத்தி லிருந்தே நட்டஈடு அறவிடற்பாலது. இவ்வழி, இப்பிரதான நிருவாகத்துறையில் அன்னியரின் ஆட்சியை உறுதிப்படுத்துவதே வல்லரசுகளின் கருத்தாயிருந்தது. இழிவு செய்யும் பிற வாசகங்கள் — சீனர் செய்த பழிகளுக்குக் கழுவாயாக இடு காட்டிற் சின்னங்கள் அமைத்தல் போன்றவை — அன்னியரின் மாட்சியைப் பெருக்குவதையே நோக்கமாய்க் கொண்டவை.

மூட்டிவீரர் கிளர்ச்சியின் இருமடியான தன்மைக்கு, இவ்வுடன்படிக்கை சான்று பகர்வதாய் இருந்தது. மிசனரியெதிர்ப்பு உணர்ச்சி, அதன் ஒரு தன்மை; சீனத்துக்கு இழைக்கப்பட்ட இழிவுகளுக்கு மாருயெழுந்த சீற்றம் மற்றையது. மிசனரிமார்க்கு அவ்வுடன்படிக்கை வேண்டிய வாய்ப்பெலாம் அளித்தது. நட்ட ஈட்டில் ஒரு பங்கு அவரைச் சேரும். தமது அறிவாற்றல் ஆதிக்கத்துக்குத் தலை யாய தடையாக இருந்ததென நெடுங்காலமாக அன்னர் முறையிட்டு வந்த சோதனைகள் ஐயாண்டுக் காலத்துக்கு ஒழிக்கப்பட்டன. பீக்கிங்கில் ஒரு பகுதி யைப் படைதாங்கிய பாசறையாக வல்லரசுகள் மாற்றி, அங்கே தலைநகரின் இதயதானத்துள் நிலையுன்றி, சீனரை ஆட்டிவைத்தல் அவற்றுக்கு எளிதா யிற்று. அளவெஞ்சிக் கடுமையாக இருந்த இந்நிபந்தனைகளின் அகத்திலேயே அவற்றின் அழிவுக்கான வித்துக்களும் அடங்கியிருந்தவாற்றை அக்கால் யாரும் உணர்ந்திலர். அடுத்த ஐம்பதாண்டுக் காலத்தே மேலேப்புலத்தொடு சீனர் கொண்ட தொடர்புகளிற் சிறப்பாகக் காணப்பட்ட அளவிறந்த கசப்புக்கு, மூட்டிவீரர் ஒப்பந்தக்குறிப்பு எனப் பெயரிய அவ்வுடன்படிக்கையிலேயே காரண மாங் காணலாம்.

பீக்கிங்கு நகருக்கு அபாயம் வந்துற்றகாலை, மானமின்றி மாறுவேடத்திற் சியானுக்குத் தப்பியோடிய பேரரசி, இப்போது, அந்நகரில் வதிதற்கு மெல் லென வந்து சேர்ந்தாள். தனது வாணாளின் எஞ்சிய காலத்தில், அன்னியராலே தனக்கு இடுக்கண் வாராது என அவள் திடங்கொண்டாள். தான் நினைந்தாங்கு சீனத்தை ஆட்சி செய்த அப்பேரரசி, இப்போது, பிறநாட்டுத் தூதரின் மனைவி

யரை இச்சகம்பேசி மெச்சவும், கிறித்தவ நங்கையரை உபசரிக்கவும், பொதுவாக அனைவர்க்கும் இனியளாய் ஒழுகவும், நட்புறவைக் குலைத்தற்கு யாதுமே நிகழாதது போல நடிக்கவும் சித்தமாயிருந்தாள். உண்மையில், அடுத்த சில ஆண்டுக் காலத்தின்போது அவளுடைய ஆட்சியில் அந்தியொளி வீசிற்றென லாம். பழைய ஆதிபத்தியத்தின் சாயலே இப்போது பேரரசிற் காணப்பட்டா லும், பென்னம்பெரிய கடன்சுமை வந்தழுத்தினலும், சீத்துவத்தின் தோற் றத்தைக் காட்டுமளவிற்கு அது மீட்சிபெற்றது. அன்றியும், இரசிய—யப்பானி யப் போரென்னும் பெரும் பூசலுக்கு மையமாகத் தூரகிழக்கு மாறியதால், பெரு வல்லரசுகளின் விரும்பத்தகா நாட்டத்திலிருந்து சீனம் தப்பிநிற்றற்கு அவ காசங் கிடைத்தது. பேரரசி 1908 இல் இறக்க, பூயீ என்பான் சுவான் துங்கு எனும் பட்டப் பெயரோடு அரியணையேறினன். ஆயினும், சீனத்திற் புரட்சி வந் தடுக்குமுன்னர், மூன்றாண்டுக் காலம் அரச வமிசம் ஒருவாறு உயிர்தரித்து நின்றதாயினும், பெரும்பாலும் மதிப்பிழந்துவிட்டது.

மூட்டிவீரர் உடன்படிக்கைக்கும் மஞ்சுவமிச வீழ்ச்சிக்கும் இடைப்பட்ட பத்தாண்டுக் காலமே, சீனத்தில் மேனாட்டோரின் ஆதிக்கம் உன்னத நிலை யடைந்த காலமாகும். கல்விபயிற்றலைக் கட்டுப்படுத்துவதில், மிசனரிமார் பெரும்பான்மையும் முற்றுரிமை நாட்டிக் கொண்டனர். அன்னியர் ஆதிக்கஞ் செலுத்திய கரைப்பிரதேசங்கள், புதுவாழ்க்கை மலரும் மையங்களாயின. கன்ற லும், சாங்காயும், தியென்சினும் நிதிவலியும் பொருளாதார வலியும் உறைகின்ற பீடங்களாயின. ஆங்கு அதிகார மனைத்தும் ஐரோப்பியர் கைப்பட்டிருந்தன. பிறநாட்டுப் பீரங்கிக் கப்பல்களே யாங்கிசி யாற்றைக் காவல் செய்தன. ஐரோப்பிய அரசுகளினும் பெரிய தம் பிரதேசங்களிலே அதிபருங் காவலரு மாயிருந்த அன்னியத் தூதுவர், தமது பாதுகாப்பை நாடினர்க்கெல்லாம் தமது மாட்சியால் அஃதளித்து உள்ளம் பூரித்தனர். ஆயின் இவையனைத்துக்கும் அடி யிலே, ஆழ்ந்தகன்ற மாற்றமொன்று சீனத்திற் பரவுவதாயிற்று. ஐரோப்பிய மூலதனத்தோடு சம்பந்தப்பட்டவரும், தமது நாட்டிலே அன்னியர் ஆண்டனு பவித்த வாய்ப்புக்களை ஆசைக் கண்கொண்டு நோக்குவோருமான புதிய புதிய வகுப்பார் சீனரிடையே தோன்றினர். சலுகைகளை ஆதாரமாய்க் கொண் டமைந்த பொருளாதார வாழ்க்கையிலே இப்புதிய வகுப்பினர் முக்கியமான ஓர் அமிசமாயினர். சீன முதலாண்மை வளர்ந்த வரலாறு வியக்கத்தக்கது. கியாங்ஞான் கப்பற்சாலை 1865 இல் நிறுவப்பட்டது. கரையோரக் கடற்பாதை களிலும், உண்ணாட்டு ஆறுகளிலும் அன்னியர் தமது முற்றுரிமையைத் தாபிக்க முயன்றகாலை, அதற்குப் போட்டியாய், சீன வியாபாரிகளின் நாவாயோட்டற் கம்பெனி 1872 இலே தாபிக்கப்பட்டது, பட்டுநூற் பண்ணைகளும், பஞ்சாலைக ளும், தீப்பெட்டித் தொழிற்சாலைகளும் மாவாலைகளும் சாங்காயிலும் பிற கரை யோரப் பட்டினங்களிலும் தோன்றலாயின. இவ்வர்த்தக அதிபன்மார் கொம் பிறடோர்ப் பொருளாதாரத்தின் பிரதிநிதிகளாயிருந்தபோதும், ஐரோப்பிய வியாபாரிகள் அனுபவித்த சிறப்புரிமைகளை வெறுப்போராகி, தேசிய உரிமை களை ஆதரிக்கும் நாட்டமுடையோராய்க் காணப்பட்டனர்.

குடியிருப்புக்களிலே நிலவிய அரசியற் சுதந்திரத்தைப் புரட்சிக் கோட்டிகள் தமக்குற்ற வாய்ப்பாகப் பயன்படுத்தின. பிற்போக்குடைய வேத்தவையோடு தொடர்பிலாது, உண்மையில் அதற்கு விரோதமாக வளர்ந்த ஒரு தேசிய இயக்கம், இக்குடியிருப்புக்களிலே தீவிரமான வளர்ச்சியடைந்து, அங்கிருந்து, உண்ணாட்டுக்குப் பரவியது. அரசியல் விடயங்களிலே, வலிமிக்க ஓர் ஆயுதமாக பகிட்காரமுறை பயன்படுத்தப்படுவதாயிற்று. ஐக்கிய அமெரிக்காவிற் சீனர் நடத்தப்பட்டவாற்றை ஆட்சேபிக்குமுகமாக, கன்றனில் வாழ்ந்த சீனமக்கள் 1905 இல் அமெரிக்காவை விரித்த முறையிலே பகிட்கரிக்கத் தலைப்பட்டனர். 1908 இல் யப்பானியர்க்கு எதிராக இன்னுந் தீவிரமான பகிட்காரம் கடைப்பிடிக்கப்பட்டது. சீன நாட்டின் புதிய தேசியவுணர்ச்சி எத்துணை வலிய தென்பதை அவ்வாற்றால் ஐரோப்பிய வல்லரசுகள் அப்போதே உணர்ந்திருக்க வேண்டும். கல்வி பயிலுதற்காகச் சீனமாணவர் கடல்கடந்து பிறநாடுகளுக்குப் போகத் தொடங்கினர். சார்மன்னர் ஆண்ட இரசியாவின் பெருவலிக்கு எதிராக, யப்பானியர் ஈட்டிய வெற்றியானது, ஆசியாவில் ஐரோப்பியர்க்கிருந்த மாட்சியைத் தீர்க்கமாகவும் முற்றுகவுந் தகர்த்தது. இவ்வாறாக, புரட்சியானது 1911 ஒற்றோபர் 10 இல் ஆங்கோவிலும் உவச்சாங்கிலும் ஒரு சிறு கலகமாக உருவெடுத்தபோது, எதிர்த்துத் தாக்க முயலாது மஞ்சுவமிசம் வீழ்ந்தபோது, இத்துணை இழிந்த முறையில் வீழ்ச்சியுற்றது அழுகிப் புரையேறிப்போன ஒரு முடியாட்சி முறையே யன்றி, எழுபதாண்டுக் காலத்துக்கு மேலாகப் பலவந்தமே, படிறே, வெள்வெருட்டேயெனும் முறைகளால் தாம் நிர்மாணித்த விரிந்த ஓர் அமைப்புமேயென்பதை ஐரோப்பியர் யாரும் உணர்ந்தாரல்லர். புரட்சிக் காலத்து முதற்சில ஆண்டுகள் உண்மைப்பயன்பாடு இன்றியவாதலின், அதன் விளைவுகள் சில காலம் வெளிப்படாது உள்ளார்ந்து நின்றன. ஆயின் பத்தாண்டு கழியு முன்னர், சீனநாட்டு ஐரோப்பிய அமைப்பு முறையும், மஞ்சு முடியாட்சி வீழ்ந்தவாறே, எதிர்ப்பும் பொருதலுமின்றி, இற்றுவீழ்ந்தது.

அதிகாரம் 3

யப்பான்

இசியாவும் பிரித்தனும் பிறவல்லரசுகளும் யப்பானுடு வர்த்தகத் தொடர்பு கொள்ளுதற்குச் செய்த முயற்சிகள்பற்றியும், அம்முயற்சிகளைச் சோகுனட்சி வெற்றிகரமாகத் தடுத்தது பற்றியும் ஏற்கவே கண்டோம். கலிபோணியாவை 1844 இற் கைப்பற்றியமையால், பசிபிக்குக் கரைப்பிரதேசம் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு அணித்தாயிற்று. கொங்கிரசு எனும் பேரவையின் கடற்படையலுவற் குழு தன் அறிக்கையில் வருமாறு கூறிற்று: 'கலிபோணியாவைப் பெற்றமை யாலே, சீனத்தோடு வர்த்தகஞ் செய்யும் வசதி வாய்த்துளது — அதனை நாம் புறக்கணித்தலாகாது'. மேனட்டோர் தூழையாவகையில் இத்துணைக்காலமாய்ச் செவ்வையாக மூடப்பட்டிருந்த வாயிலை வலிந்து திறக்குங்காலம் வந்துவிட்ட தென அமெரிக்க அதிகார வர்க்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூற்றள வில் உறுதி செய்தது. மேற்கு வல்லரசுகளின் நோக்கங்கள்பற்றியும், அவற்றின் வலிமைபற்றியும், கிழக்கு நாடுகள் யாவற்றுள்ளும் யப்பானே தன்கறித்திருந் தது. மேலைப்புலத்து அறிவுக்கலைகளில் ஈடுபாடுகொண்டு, ஊக்கத்தோடும் இடர்ப் பாடடைந்தும் பெற்ற அவ்வறிவினைத் தேசியப் பாதுகாப்புப் பிரச்சினைகளுக் குப் பிரயோகிக்க முற்பட்டோரின் தொகை நாளுக்குநாள் யப்பானிற் பெரு கியவாற்றை முன்னர்க் கண்டோம். பிரித்தனுடு தொடர்ந்து போரினிற் சீனம் அடைந்த படுதோல்வி, இவ்வபாயம் பற்றி யப்பானியரை விழிப்புறச் செய்தது. நாங்கிங்குப் பொருத்தனையை (1842) அடுத்த பருவத்தில், தீவின் தற்காப்பைப் பலப்படுத்தவும், நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் தீவிரமுயற்சிகள் யப்பானிற் செய்யப்பட்டன. தம்மோடு தொடர்புகள் துவங்க மேனட்டோர் விசைவில் முயற்சி செய்வர் என்பதை யப்பானியர் அறித்தேயிருந்தனர். சோகு னுக்கு எழுதிய சொந்தக் கடிதங்கள் பலவற்றில், வெளிநாட்டு வர்த்தகத்துக்கு நாட்டைத் திறந்துவிடுவது எத்துணை விரும்பத்தக்கது என்பது பற்றி இடச்சு மன்னன் பல்காலுந் தெருட்டினன்.

கொமடோர் பெரியென்பான் போர்க்கலம் நான்கொடு உகாத்துறையில் வந் துற்றது 1853 யூலை 8 இலேயாகும்.[1] குடிப்பதி பில்மூர் அனுப்பிய கடிதமொன் றையும் கொமடோர் கொணர்ந்தான். நேயபான்மையோடே அக்கடிதம் சோகு னுக்கு அனுப்பப்பட்டதாயினும், அடுத்த ஆண்டில் இன்னும் பெரிய படைத் துணையோடு கொமடோர் பெரி மீளும்போது, திருத்தியான விடை கிடைத்தல் வேண்டுமென்பதாய்ச் 'சாடையான' ஒரு வெருட்டும் விடுக்கப்பட்டது. அவன் கடிதத்திற் கூறிய வாசகமொன்று எதிர்காலத்திற் கேடு குறிப்பதாய் இருந்தது: 'யப்பானுக்கு வரல்வேண்டுமென்று திட்டமிட்டிருந்த பெரும்போர்க்கலங்கள்

1. See Arthur Wallworth's *Black Ships of Japan* for an account of Perry's expedition.

இக்கடல்களை இன்னும் வந்து சேர்ந்தில; ஆயினும் அவை எந்நேரமும் வரலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கடிதத்தின் கீழ்க் கையொப்பமிட்டோன், தனது நேயபான்மைக்குச் சான்றாக, சிறிய கப்பல்கள் நான்கினையே இப்போது கொண்டுவந்துள்ளான். அவசியமேற்படின், இன்னும் பெரிய படைத்துணையோடு, எதிர்வரும் வசந்தத்தில், யெட்டோவுக்கு மீள்வதே அவன் திட்டமாகும்'. 'அமெரிக்க வாழ்க்கை நெறி' என்பதற்குத் திறந்துவிடப்படுந் தறுவாயில் யப்பான் இருந்தது. கொமடோரின் வெருட்டுப் பலித்தது — யப்பானியர் தமது பலவீனத்தை அறிந்திருந்ததுமன்றி, சீனப்போர் போதித்த பாடத்தையும் உணர்ந்திருந்தனர். அக்காலத்திற் சோகுனுட்சிக்கு, ஆழ்ந்த நோக்குடைய உசாத்துணைவனுயிருந்த இலி காமன் நோ காமி யென்பான், ஒரு விஞ்ஞாபனத்திலே, மேலைப்புலத்து மிலேச்சனை எதிர்ப்பது வியர்த்தமேயாகுமென்பதை எடுத்துக்காட்டி, மேலைப்புலத்து இரகசியங்களை யப்பான் கற்றுச் சமதையாக நின்றுபிடிக்கத்தக்க வலி பெறும்வரையும் இணங்கிப் போவதே தக்கதென அறிவுரை கூறினன். எனவே, சொன்ன சொல் தவறாது பெரும்படையோடு பெரி மீண்டகாலை, அவன் எதிர்பார்த்த சாதகமான பதில் கிடைத்தது. மார்சுமாதம் 31 இலே பொருத்தனை கைச்சாத்திடப்பட்டது. அதன்படி, அமெரிக்கா வர்த்தகம் நடாத்துதற்கு இருதுறைகள் திறக்கப்பட்டன; அங்குக் காவற்றூதரை நியமிக்கும் உரிமையும் வழங்கப்பட்டது. அப்பால், பெரிய பிரித்தனும் இரசியாவும் ஒல்லாந்தும் விரைவில் ஒன்றையடுத்தொன்றாக அத்தகைய பொருத்தனைகளை ஒப்பேற்றி, அத்தகைய சிறப்புரிமைகளையும் பெற்றன.

எனினும், இவ்வுடன்படிக்கையாற் சோகுன் தனது நிலைமையை நலித்துவிட்டான். நாட்டை அன்னியர்க்குத் திறந்துவிடும் பூட்கையினை விழுமியோரும் சமுராய்மாரும் ஒருமனதாக எதிர்த்தனர். வேத்தவையும் அதற்கு விரோதமாயிருந்தது. சோகுனுடைய அதிகாரத்துக்கமைந்தே அப்பொருத்தனைகள் ஒப்பேற்றப்பட்டன. நெருக்கடியான அக்காலத்திலே, நேரான ஆணுரித்தாளியாருமின்றிச் சோகுன் காலமாகினன். ஆயின், சோகுன் இறந்ததால் விளைந்த குழப்பந் தீருமுன், முதல் அமெரிக்கத் தூதுவன் யப்பானில் வந்திறங்கினன். வந்தவன் பெரியோடு செய்த உடன்படிக்கை விரிவாக்கப்படவேண்டுமென வற்புறுத்தினன். சோகுனுட்சி அக்கோரிக்கையை எதிர்க்கும் நிலையில் இருக்கவில்லை. எனவே, நாகசாகியில் ஒப்பேறிய புதிய உடன்படிக்கை பொருத்தனைத் துறைகள் இரண்டிலும் அமெரிக்கர் வதிதற்கு வழிவகுத்ததோடு, ஆணிலப்புறத்துரிமையெனுந் தீங்கான தத்துவத்தையும் ஏற்றுக்கொண்டது. முன்னம் சீனர் கழுத்திற் சங்கிலி விழுந்தவாறே, இப்போது யப்பானியர் கழுத்திற் சங்கிலி விழுந்துவிட்டது. தவஞ்செய்து அரிசு என்பான் சீனருக்குக் கன்றனில் நேர்ந்த சதியினைச் சுட்டிக்காட்டி, பாரதூரமான விளைவுகள் நேரும் என்று யப்பானியரை வெருட்டியபின்பே அன்னர் இவ்வேற்பாடுகளுக்கு இணங்கினர் என்பதை இங்குக் கூறவேண்டும். பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரரும் தாமதியாது வந்து புகுந்தனர். அவ்வல்லரசுகளும் அவற்றைத் தொடர்ந்து வந்த பிறவும் அத்

தகைய பொருத்தனைகளை வலிந்து பெற்று, காவற்றூதரை நியமிக்கும் உரிமையும், ஆணிலப்புறத்துரிமைகளும் பெற்றுக்கொண்டன.

இவ்விதமாகத் தமது நாட்டின் சுதந்திரம் பங்கப்படுவதைக் கண்ணுற்ற பழமைவாதிகள், இழிவுதரும் இப்பொருத்தனைகளுக்கு முடியரசு இசைவளிக்க மறுக்கவேண்டுமென எதிர்நோக்கி நின்றனர். அவ்வழி, சோகுனேற்றூட்சிக்கு இசைவு பிசகான ஒரு நிலைமை யேற்பட்டது. அன்னியர்க் கெதிரான, சோகுனுக்கு மாறான உணர்ச்சி தலைநகரிற் பெருகிற்று; பேரரசனும் எதிர்பாராவகையிற் பொருத்தனைகளுக்கு இசைவளிக்கப் பிடிவாதமாக மறுத்து நின்றான். 'முடியினைப் போற்றுதும், அன்னியனை விரட்டுதும்' என்னுங் கூக்குரல் நாடெங்கும் எதிரொலித்தது. சிலவாண்டுக் காலத்துள் அன்னியர் யாவரும் விரட்டியோட்டப்படுவர் என்ற அடிப்படையில், பேரரசன் பொருத்தனைகளை அங்கீகரிக்க இசைந்தான். 1857 இற்கும் 1863 இற்கும் இடைப்பட்ட காலத்தில், பொதுமக்கள் உணர்ச்சி மிகக் கிளர்ந்தமையாலே, அன்னியரைத் தாக்குதல் பல்காலும் நிகழ்ந்தது. அன்னியரை விரட்டுதற்குத் தேதி (1863, யூன் 24 எனக்) குறித்த சோகுனுட்சி எரிகின்ற திக்கும் எண்ணெய்க்குமிடையில் அகப்பட்டுத் தவித்தது. அன்னியரை விரட்டுதற்கான தேதியை உளத்துக் கொண்ட தெய்மயோக்கள் பிறநாட்டுக் கப்பல்களைத் தாக்கத் தலைப்பட்டனர். சோகுன் அரசாங்கமோ வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்குச் சாந்தி செய்வதில் ஈடுபட்டிருந்தது. பொறுப்புணர்ச்சியுடைய மக்கட் பிரிவினரோ மிலேச்சர் புகாமே நாட்டை அடைத்து வைக்கும் பழைய கருத்துக்கள் இனிமேல் வாய்ப்பாகாவென்றும், அன்னிய ராதிக்கமெனும் அபாயத்தை நிருவகிக்கவேண்டுமேல் பூட்டையில் மாற்றம் அவசியமென்றும் உணரத்தலைப்பட்டனர். வெளிநாடுகளுக்குத் தூது சென்று திரும்பியோரின் செல்வாக்கும் இக்கருத்தில் ஓளவு இடம்பெற்றதென்பதற்கு ஐயமில்லை. எதிர்காலத்தே இற்றை இளவரசான இரோபுமி யென்பான் இத்தகைய ஒருவன். முக்கியமான இப்பிரச்சினைபற்றி மக்கள் கருத்து இரண்டுபட்டது. சோகுனேற்றூட்சி தனது அதிகாரத்தை நிலைநாட்ட முயன்று தவறிய பின்னர் வீழ்ச்சியுற்றது. இவ்வாறாக மெயிசி யாட்சி மீண்டது (1868). அக்கால நிலவரத்தைச் சன்சம் என்பான் பின்வருமொழிகளால் அழகாகச் சுருக்கிக் கூறுவன்:

'பிறநாட்டு மாணவரின் நோக்கில், பெரியின் வருகைக்கும் 1868 ஆம் ஆண்டில் நிகழ்ந்த மெயிசி மீட்சிக்கும் இடைப்பட்ட காலத்து வரலாறானது யப்பானைத் தனிமைப்பாட்டினின்றும் வெளிப்படுமாறு தூண்டுதற்காய் மேற்கு வல்லரசுகள் செய்த போராட்டங்களையே பெரும்பான்மையும் நுதல்வதாகும். அந்நாளில் நாட்டிற் பொதுவாக விரவிநின்ற அன்னியரெதிர்ப்பு வெறியையும், யப்பானிய அரசாங்கங் கையாண்ட கபட தந்திரங்களையும் அழுத்திக் கூறுவதைத் தவிர்க்கவியலாது. ஆயின் பிறிதொரு நோக்கில் ஆராயுமிடத்து, இவ்வமிசங்கள் தற்செயற் சிறப்புடையனவேயன்றி அத்தனை அடிப்படைச் சிறப்புடையனவாகாவென்பது புலனாகும். பழைய ஒரு சமுதாயம் சிதைவடைந்து, தன் மூலப் பண்பை மாற்றாது, தன்னைத் தானே புதுப்பிக்கும் விந்தை முறைக்குச் சான்

ரூக உள்ளன என்றவகையானே இவ்வரலாற்றுச் சம்பவங்களே ஆராயும்போது, அவற்றின் உண்மைக் கவர்ச்சி வெளிப்படும். புகுதற்கு அனுமதி கோரிவந்த அன்னியரின் வருகையால், யப்பானிய அரசியல் வாழ்க்கையில் உள்ளீடாக நின்ற சில மூரண்பாடுகள் துலக்கம்பெற்றன; தீர்க்கவும் பட்டன. அவ்வகையில், மேனாட்டுச் செல்வாக்குத் தெளிவாயும் தீர்க்கமாயும் இருந்தது.[1]

சோகுனட்சியையும் அதன் பூட்கைகளையும் அறுத்தெறியுங் கருத்தையே மெயிசி மீட்சி உடைத்தாயிருந்தது. எனினும், சோகுனட்சியானது தன் இறுதிப் பருவத்தில், தேர்ந்தெடுத்த இளைஞரைக் கல்வியின் பொருட்டு வெளிநாட்டுக்கு அனுப்பியதும், அன்னர் திரும்பிவந்து, சீர்திருத்தம் நாடிய மக்கட் பிரிவின் அகக்காழ்போன்று நின்றதுவும் கூர்ந்து நோக்கற்குரியன. மேலும், மீட்சி பெற்ற மெயிசிவேத்தவை சோகுனட்சியின் அனுவலாளரைப் பெரிதும் நம்பியே ஆட்சிசெய்ய வேண்டியதாயிற்று. உள்ளபடி அதுவோர் அரசியற் புரட்சியாகவே கருதத்தக்கது. பேரரசனே மீட்டும் அதிகாரத்திருத்திய அப்புரட்சியால், புதிய சத்திகள் மூட்டின்றித் தாம் தொழிற்படுதற்கு வேண்டிய சுதந்திரத்தையும் மறுக்கவொண்ணு அதிகார வூற்றையும் பெற்றன. அவ்வதிகார வூற்றையே தமக்கு வாய்த்த கவசமாய்க் கொண்டு, புதிய யப்பானே உருவாக்கத் திட்டஞ் சூழ்ந்தோர் தீர்க்கமான பயன்காணும் வகையிற் செயலாற்றுதல் ஒல்லுவதாயிற்று. சோகுன்மார்க்குப் பதிலாக ஆதிக்கம் பெற்ற குலங்களின் தலைவர்கள் இத்தகைய வாய்ப்புக்களே உடையராயிருந்தனர். அன்னர் கவனமாகத் திட்டமிட்டும் தக்க நடவடிக்கைகளைப் பதனமாக மேற்கொண்டும், யப்பானுக்கு அன்னியராற் பூட்டப்பட்ட தளைகளை உடைத்தெறிந்தமை பாராட்டுக்குரியதே.

அக்கால் யப்பானிலே நிலவிய நிலைமைக்கும், நாங்கிங்குப் பொருத்தனையின் பின் சீனத்திலே நிலவிய நிலைமைக்கும் கொள்கையளவில் வேறுபாடு காணப்பட்டிலது. அன்னியர் குடியிருப்புக்கள் நகரங்களிலே நிறுவப்பட்டன; சில துறைகள் அன்னியர் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டன; உண்ணாட்டிலே நாவாயோட்டும் வசதியும் கலத்தான வசதியும் தகவாகப் பெறும்பொருட்டுப் பிரித்தானியர் நாகசாகியிலே படைப்பலமும் பிரயோகித்தனர். இவ்வகையில், பிரித்தானியக் காவற்றூதகத்தின் பதிவேடுகள்—பச்சே—சிமிது என்பாராற் பிரசுரிக்கப்பட்டவை — காட்டுஞ் சான்றுகள் கவனிக்கத்தக்கவை. உண்ணாட்டு அதிகார வர்க்கம்மாட்டு வெளிநாட்டு அனுவலாளர் ஆக்கிரமிப்பு மனப்பான்மை கொள்ளத் தலைப்பட்டார் என்பதையும், தம்முடைய காவல் வீரரையே மெதுவாகக் கொண்டு வரத் தொடங்கினர் என்பதையும் அப்பதிவுகள் காட்டுகின்றன. சீனப் பொருத்தனைத் துறைகளில் நிறுவப்பட்டவற்றை மாதிரியாகக் கொண்டு யப்பானிலும் நகராண்மைத் தாபனங்கள் நிறுவப்பட்டன. யப்பான் நாட்டிலே உண்ணாட்டுப் போர்கள் மூண்டு பரவியமையாலும், சோகுன்மாரின் ஆதிக்கம் நாடோறும் இழிவுற்றமையாலும் பிற ஆசிய நாடுகள் சென்றவழியே யப்பானும் சென்றிழியுமென அன்னியச் சமுதாயங்கள் மனத்திலே ஆவல் தேக்கிக் காத்து நின்றன.

1. Sansom : *The Western World and Japan*, p. 325.

மெயிசி மீட்சியும், 1868-1893 வரையான இருபத்தைந்தாண்டுக் காலத்தில் யப்பானியத் தலைவர்கள் கடைப்பிடித்து வந்த போக்கையும், எதிர்பாராவகையிலே யப்பானிய அடிமைத்தனங்களை முற்றுகத் தகர்த்தெறிந்து, ஐரோப்பிய நாடுகளுக்கமையாத பூரணமான சுதந்திர நிலையில் யப்பானை உறுதிப்படுத்தின. பொதுவாக ஆசியப் புத்துயிர்ப்புக்கு வழிவகுத்த இயக்கங்களின் சார்பிலேயே யப்பானியப் புத்துயிர்ப்பு வரலாறும் புறம்பாக வேறிடத்தில் எடுத்தாளப்பட்டுளது. ஆயின், யப்பானுடைய இறைமையதிகாரமீது திணிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அகற்றும் பொருட்டாய் யப்பானியத் தலைவர்கள் விளைத்த பெரும் அரசியன் மாறுதல்களையும் இன்னபிறவற்றையுமே இங்கு எடுத்துக் கூறுவோம்.

மெயிசி மீட்சியின் பின்னர் பேரரசன் ஓர் ஆஞ்ஞை பிறப்பித்தான் (1868, மார்ச்சு 26). அன்னிய வல்லரசுகளோடு உறவுபூணுதற்குத் தீர்மானஞ் செய்யப்பட்டுளதெனவும், சருவதேசச் சட்டத்துக்கமைய அப்பொருத்தனைகளை நிறைவேற்றவும் அவ்வுறவுகளை ஆற்றுப்படுத்தவும் வேத்தவை தீர்மானித்துளதெனவும், அவ்வாஞ்ஞை மூலம் பேரரசன் தன் குடிகளுக்கு அறிக்கை செய்தான். 'ஆதலின், மாட்சிமை தங்கிய மன்னனுடைய விருப்புக்குக் கீழ்ப்படிந்து, அதற்கிணங்க நாடு முழுவதும் நடத்தல் வேண்டுமெனக் கட்டளையிடப்படுகிறது.' பேரரசன் தொடர்ந்து எச்சரிக்கை செய்தான்: 'எதிர்காலத்தில், அன்னியரைக் கொலைசெய்தலாகிய குற்றஞ் செய்தோர் அனைவரும், அல்லது அன்னார்க்கு இன்ஞ்செயல் செய்தோர் யாவரும் மாட்சிமைதங்கிய மன்னர் பிரானுடைய தீவிர கட்டளைகளை மீறுவோராயும் நாட்டுக்குக் கேடு சூழ்தற்குக் காரணராயும் இருப்பதோடு அமையாது, மாட்சிமைதங்கிய மன்னர் கேண்மையுறவு பூண்டுள்ள பொருத்தனையரசுகளின் நோக்கிலே நாட்டின் பெருமையையும் நன்னம்பிக்கையையும் பங்கப்படுத்துவதாகிய கொடுங் குற்றஞ் செய்தோராகவும் கருதப்படுவர்.'

தொடக்கத்திலிருந்தே நாட்டின் பெருமையைக் காப்பாற்றுவதில் யப்பான் கண்ணுங் கருத்துமாய் இருந்ததென்பதும், அன்னியரோடு நட்புறவு பேணுதற்கு எண்ணித்துணிந்து முயற்சி செய்ததென்பதும் தெளிவு. மேஞட்டோரிடத்துச் சீனரும் மற்று யப்பானியருங் கொண்ட மனப்பான்மையிலே வேற்றுமையிருந்தவாற்றை, அக்காலத்திலுமே அவதானிகள் பலர் கவனித்தனர். 'சீனர், யப்பானியர் ஆகியோரின் மனோபாவத்திலும் பழக்க வழக்கங்களிலுங் காணப்படுகின்ற வேற்றுமை காரணமாக ஐயமறவினைந்த பயன் ஒன்றுண்டு. சீனர் படிப்படியாகப் பின்னிடைந்து செல்கின்றனர்; அவர்தம் பேரரசு சின்னபின்னப்படும்வரையும் அவர்கள் பெரும்பான்மையும் அவ்வாறே செய்வர் போலும். ஆயின் யப்பானியரோ படிப்படியாக முன்னேறும் நிலையில் இப்போது உண்மையாய் இருந்திலராயினும், அவர்களிடையே அண்மையிற் பரவப்போகும் அறிவொளியாற் பயனடைந்து, புதிய கண்டுபிடிப்புக்களாலும் அபிவிருத்திகளாலும் நலம்பெறும் பக்குவம் பெற்றுளர். இவற்றையெலாம் சீனர் எள்ளி நகையாடுபவராக, யப்பானியரோ எம்மை நன்கு அறிந்ததும் அவற்றைத் தக்க

வாறு தழுவிக்கொள்ளவல்லவராவர் என்பதும் பெரும்பாலும் நிச்சயம்[1]'. இவ் வாறு எல்சின் பிரபு எழுதிவைத்தனர்.

ஐரோப்பிய நிலைமைகள்பற்றி நெடுங்காலமாகச் சீனரைக் காட்டிலும் யப்பா னியர் நன்கறிந்திருந்தனர் என்பதற்கும், விழிப்புடையராய் இருந்தனரென்ப தற்கும் ஐயமில்லை. அரசியற் றுறையிலும், இராணுவத் துறையிலும் அவர்கள் தமது பலவீனத்தைப் பூரணமாக உணர்ந்திருந்தனர். அப்பலவீனத்துக்குரிய காரணங்களை ஆதியிலிருந்தே ஆராய்ந்து, விஞ்ஞான தொழினுட்பத் துறை களிற் பிற்றைநிலைப்பட்டமையும் அரசியலமைப்புச் செப்பமின்மையுமே அக் காரணங்களாமெனத் தெள்ளிதின் உணர்ந்தனர். இவற்றை நிவர்த்தி செய்வ தில் அவர்கள் மூனைந்தார்கள். அதன் பொருட்டு அவர்கள் மேனாட்டு உதவியை வரவேற்று, மேனாட்டுத் தொழினுட்பமுறைகளைப் பயில்வதில் முழுமனதோடு ஈடுபட்டது மன்றி, பொருளியல் வாழ்க்கையில் முன்னேறுதற்கு அவசியமான விஞ்ஞானப் பின்னணியை விளங்குவதிலும் கருத்தூன்றத் தலைப்பட்டார்கள். இக்குறிக்கோளை வகுத்துக் கொண்டதன்றி, யப்பான் மேனாட்டு நாகரிகத்தாற் கவரப்பட்டதென்றே, மேனாட்டுத் தார்மிகப் பெருமையை ஏற்றுக்கொண்ட தென்றே கருதுவது தவறாகும். ஆயின் மேலைப்புலத்து ஆசிரியன்மார் பலர், குறிப்பாக 1930 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில், அவ்வழுவுடைக் கருத் தைப் பெரும்பாலுங் கொள்வாராயினர். உண்மையில், யப்பானியத் தலைவர்கள் மேனாட்டு இராணுவ கடற்படைமுறைகளையும் பிற அமைப்புக்களையும் ஊக்க மாகவும் ஆர்வத்தோடும் பின்பற்றித் தற்காலமுறைக்கியைந்த அரசொன்றை நிருமாணிப்பதில் ஈடுபட்டிருந்த அதேவேளையில், மேனாட்டுக் கருத்துக்கள் யப் பானிற் பரவாவகை தக்க முற்காப்புக்கள் அனைத்தையும் மேற்கொண்டனர்— இவ்வரலாற்றைப் பின்னே அதிகாரமொன்றிற் காண்போம். உண்மையில் அவர் கள் மேனாட்டு வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களை மறுப்பதாயமைந்த ஓர் அடிப்படையிலேயே தமக்கென ஓர் இனக்கொள்கையையும், அரசியற் கோட்பாட்டையும் தேசிய ஒழுக்கமுறைமையையும் உருவாக்கத் தலைப்பட்டனர்.

எனினும், பிறவரசுகளோடு யப்பானியப் பேரரசு ஒக்க இணைந்து வாழ்தல் வேண்டுமெனுந் தீர்மானத்தை மேற்கொண்டபின்னர், யப்பான் தனது இறை மைமீது திணிக்கப்பட்ட கட்டுப்பாடுகளைச் சிறிது காலம் ஏற்று நடக்கச் சித் தங் கொண்டது. ஆயின் அதே வேளையில், தனது நிலையைச் சீர்ப்படுத்திச் சீர்திருத்தும் நெறியிற் செல்வதாயிற்று. அச்சீர்திருத்த நெறியின் குறிக்கோள் களை வருமாறு கூறலாம். முதலாவதாக, யப்பானியர் இன்னும் 'சுதேசிகள்' அல் லர்; நாகரிகமடைந்துவிட்ட அவர்கள் மேனாட்டோர்க்கு எவ்வாற்றானும் இளைத்தவருமல்லர் என்பதை வல்லரசுகளுக்கு அறிவுறுத்துவதாகும். இரண் டாவதாக, தக்க தருணத்திலே தன் படைவலியை உலகோர்க்கு உணர்த்தும் வகையில் அதனைத் திருத்தியும் பெருக்கியும் வலியுறுத்துவதாகும். இவற்றுள் முதற்குறிக்கோளை அடைய உதவினோர் மெயிசிச் சீர்திருத்தவாதிகளாவர்—

1. Quoted in *Western Barbarians and Japan* by M. Pakse-Smith.

மேலைப்புலத்துக்கு அன்னர் அனுப்பிய மதியூகிகளான அவதானிகளின் உறுதுணையும் ஆலோசனையும் அச்சீர்திருத்தவாதிகளுக்கு மெத்தவும் இருந்தன. இரண்டாவது குறிக்கோள் சாலவும் அவசரமானதென்பதைச் சோகுன்மாரே தாமாக உணர்ந்தனர். அவர்கள் அமெரிக்கர், இடச்சர் ஆகியோரின் அறிவுரையோடு தமது கடற்படையையும், பிரான்சியரின் அறிவுரையோடு தரைப்படையையும் சீர்திருத்தியமைக்கத் தலைப்பட்டார்கள். இவ்வாறுக, 1868 ஏப்பிரில் மாதம் 18 இலே மீட்சியை யடுத்துச் சிலமாதங் கழிந்தபின்னர், பேரரசன் மெயிஜி யப்பானியக் கடற்படையைப் பார்வையிட்டான். அக்கால் அப்படை ஆறு கலங்களைக் கொண்டதாய், தளபதி செய்கோயின்—நோ—மியா என்பான் தலைமையில் இயங்கிற்று. கொடிக்கப்பலாகிய 'தென்றியோமாறு' என்பதையும் யப்பானியப் பெயர்பூண்ட பிறிதொன்றையுந் தவிர, மற்றைக் கப்பல்கள் யாவும் 'கொசுமோப் பொலிற்றே' 'செராட்டு' 'கொக்குவெற்' என்றவாறுன அன்னியப் பெயர்களை உடையவாயிருந்தமை இங்குக் கவனிக்கத் தக்கது[1].

மேஞட்டு அறிவினை, அதனுள்ளுஞ் சிறப்பாகப் பயன்பாட்டுக்குரிய விஞ்ஞான அறிவினைப் பயில்வதில் யப்பான் நாடு உண்மையார்வங் கொண்டிருந்தது. இவ்வகையில் 'இரங்ககுசா' எனும் அறிஞர் குழாத்தின் தொண்டு குறிப்பிடற்பாலது. இடச்சு மொழிமூலம் பயின்ற இந்த யப்பானிய அறிஞர்கள் தமது தளரா முயற்சியாலும் ஊக்கத்தாலும் மேஞட்டு விஞ்ஞானத்திலே குன்ரு ஆர்வத்தை உண்டாக்கினர்கள். இந்த இரங்ககுசாக் குழாத்தினரின் அருமுயற்சிகளையும் அவர்கள் திரட்டி யப்பானிலே பரப்பிய அறிவுப் பெருக்கையுங் கண்ணுறும்போது, யப்பானிய நூண்புலத்தாரில் ஒரு பிரிவினரேனும், சீனரைப் போலன்றி, 'ஐரோப்பியக்' கல்வியிடத்து அருமையை கொண்டிலரென்பதும், நாட்டின் பாதுகாப்புக்கு மேஞட்டு விஞ்ஞான அறிவைப் போற்றி வளர்த்தல் அவசியமெனும் முடிபை ஆதியிலிருந்தே கொண்டாரென்பதும் புலனுகின்றன. நாட்டுப்படவமைப்புக் கலையிலும், புவியியலிலும், இராணுவக் கலைகளிலும், மருத்துவத்திலும், தாவரவியலிலும், வானசாத்திரத்திலும் இரங்ககுசாக் குழாத்தினர் அறிவைச் சேர்த்து நாட்டிற் பரப்பினர் என்பது சீ. ஆர். பொக்சர் என்பான் எழுதிய 'யப்பானிலே சான் கம்பெனி'[2] எனும் நூல் காட்டுஞ்சான்றிலிருந்து தெளிவாகின்றது. ஆகவே, எங்கணும் அறிவைத் தேடிப்பெறுமாறு தனது பட்டயச் சத்தியம்மூலமாய்ப் பேரரசன் தன் குடிகளுக்குக் கட்டளையிட்டபோது, மேஞட்டுக் கல்வியில் மக்கள் கொண்ட ஆர்வம் உண்மையாக வியக்கத்தக்கதாயிருந்தது.

பட்டயச்சத்தியம் (1868) ஒரு பெரும் மாற்றத்தைத் தொடக்கி வைத்தது. ஐந்து வாசகங்களைக் கொண்ட அச்சுருங்கிய சாதனம் வருமாறு சென்றது :

1. விரிந்த அடிப்படையில் அமைந்த ஒரு மன்றந் தாபிக்கப்படல் வேண்டும் —அவ்வழி பொதுமக்களின் கருத்துச் சிறப்பாக வலியுறுத்தப்படும்.

[1]. Pakse-Smith . *Western Barbarians and Japan.*
[2]. The Hague. Martinius Nijhoff, 1936.

2. ஆள்வோரும் ஆளப்படுவோருமாகிய இருதிறத்தாரதும் இடையறு முயற்சியால் நாடு முழுவதன் நலனும் போற்றி வளர்க்கப்படல் வேண்டும்.

3. குடிகள் அனைவரும், சிவில் இராணுவ அலுவலாளரும் பிறமக்களும், தத்தங் கடமைகளை இயன்றவரை சிறப்பாக ஆற்றுவதில் ஊக்கங் குன்றாதிருக்கக் கடவர்.

4. பொருளற்ற வழக்கங்கள் கைவிடற்பாலன; நீதியும் நேர்மையுமே எல்லாச் செயல்களையும் ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

5. உலக மெங்கணும் அறிவை நாடிப் பெறுதல் வேண்டும். அவ்வழி, எமது பேரரசின் அத்திவாரம் வலியுறுத்தற்பாலது.

'எமது பேரரசின் அத்திவாரத்தை வலியுறுத்தல்' எனும் இறுதி வாசகமானது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அந்நாட்டு வளர்ச்சியின் மூலமந்திரமாயுளது. மெயிசிச் சகாத்தத்து அரசறிஞர்கள் தாம் மேற்கொண்ட பணியிற் காட்டிய ஞானமும் பதனமும் தீவிரமும் உண்மையாக வியக்கத்தக்கன. எல்லா வகைத் தொழினுட்பநிபுணரும் விருப்பாக வரவேற்கப்பட்டனர். பலதுறைகளிலே புகழெய்திய பெருமக்கள் பலர் ஆலோசகராகவும் ஆசிரியன்மாராகவும் அரசாங்கத்தினைக்களத்து அலுவலாளராகவும் வந்து யப்பானிற் பதவியேற்றனர். இவ்வாறு ஐயாயிரத்துக்கு மேற்பட்ட அன்னியர் ஒருகாலத்தில் யப்பானிற் பதவி வகித்தனர். அவர்களுள் ஆயிரத்து முந்நூற்றுக்குக் குறையாத தொகையினர் உயர்ந்த உத்தியோகங்களில் ஈடுபட்டிருந்தனர். உலகத்தில் வலிமிக்க நாட்டுக்கு ஒப்பான வலிமைபடைத்த நாடாக எவ்வாறு வளர்ச்சியடையலாம் என்பதை, இப்பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களிடமிருந்து யப்பான் ஆவலாய்க் கற்க முயன்ற விடயமாகும். இராணுவக்கலைகளும் தொழினுட்ப முறைகளும் எத்துணை முக்கியமோ, அத்துணை முக்கியமாகக் கல்விமுறைகளும் சமூகவமைப்பு முறைகளுங் கருதப்பட்டன. கைத்தொழில் உற்பத்தி, திருந்திய விவசாயம், சருவதேச வர்த்தகத்தின் நுட்பமுறை, தற்காலப் போக்குவரத்துச் சாதனங்கள், கப்பற்சேவை—இவை யாவும் அவசரமானவை, அதி முக்கியமானவை என்பதற்கையமில்லை. எனினும், தற்கால நிலைமைகளுக்கேற்பவமைந்த அரசியன் முறையும் நீதிமன்றங்களும் சட்டங்களும் அவசியமென்பதையும் யப்பானியர் உணர்ந்தனர்.

இவை யெல்லாவற்றையும் உருவாக்குவதில் யப்பானியர் மூன்றாந் தடவை ஈடுபட்டனர். ஒரு சந்ததி காலத்துள் யப்பான் தோற்றத்தளவிலேனும் நவீன நிலையினை அடைந்தது. பெருவல்லரசுகளோடொத்த தரத்தினை யப்பான் அணுகிக் கொண்டிருந்த தென்பதையும், நிறந் தவிர்ந்த பிறவாற்றால் எல்லாம் யப்பானியர் ஐரோப்பியரே ஆகிவிட்டனர் என்பதையும் அப்பெருவல்லரசுகளுக்கு அறிவுறுத்துவதே தலையாய நோக்கமாயிருந்தது. இவ்வுண்மையை அன்னியர்க்கு அறிவுறுத்தற்கு உச்சிக்கொண்டையைக் கைவிடுவது அவசியமாயின், அல்லது அரண்மனை வைபவங்களிலும் மற்று உத்தியோகபூர்வமான சடங்குகளிலும் அன்னிய உடையைத் தரிக்கவேண்டியது அவசியமாயின், அல்லது பழைய பாணி

யில் அமைந்த யப்பானிய உடைகள் காலத்துக்கொவ்வாதனவென்று பேரரசன் அறிக்கை செய்வது அவசியமாயின், யப்பானியத் தலைவர்கள் அத்தகைய மாற்றங்களை யெல்லாம் ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருந்தார்கள். நவீனமோகந் தலைக்கேறிய இக்காலத்திலே, யப்பானுடைய நவீனத்தன்மையையும் மேனாட்டுப் பண்பையும் வற்புறுத்தற்காக வினோதமான செயல்கள் எத்தனையோ செய்யப் பட்டன. யப்பானில் அக்காலத்தே காணப்பட்ட இவ்வியல்புகளை மிகப்பாங் காக ஆராய்ந்துள்ள சான்சம் என்பான் வருமாறு முடிபுகொள்வன் : 'சமதை யான அடிப்படையிலே பிற வல்லரசுகளோடு பொருத்தனைகளை ஒப்பேற்றும் பிரச்சினையானது பிற பிரச்சினைகள் யாவற்றையும் விஞ்சிநின்று, அக்கால முழு வதும் வெளிநாட்டுப் பூட்கையை மட்டுமன்றி, உண்ணாட்டுப் பூட்கையையும் பாதித்ததென்னல் மிகைபடகூற்றாகாது. நாகரிகம் படைத்த நவீன அரசாங்க மாகக் கொள்ளுமளவிற்கு யப்பானிய மக்கள் மேனாட்டுப் பண்பாட்டைக் கிர கித்துக்கொண்டனர் என்பதை மேற்கு நாடுகளுக்குக் காட்டும் ஆவல் பெருகி நின்றது. மேனாட்டு நிறுவனங்களையும் வழமைகளையும் தழுவிக் கொள்ளும் மனப்பான்மையை யப்பானிய அதிகாரவர்க்கத்திடையே பெரிதும் உருவாக்கி யது அவ்வாவலேயாகும்.[1]

முன்னம் செய்த பொருத்தனைகளை மாற்றியமைத்தற்கு யப்பானியர் மறை வாகத் தமக்குள்ளே எத்தனையோ இடர்ப்பாடுகளைச் சகித்தேற்றுக்கொள்ளச் சித்தமாயிருந்தார்கள்—மேனாட்டு நாகரிகம் மேலானது எனப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளவும் அவர்கள் தயாராயிருந்தனர். மீறுதற்கரிய புனிதமான பேரரசன் பதவியையும் பாராளுமன்ற முறையினையும் இசைவாக்கும் வகையி னல் அவர்கள் ஓர் அரசமைப்பினையும் யாத்தமைத்தார்கள். அந்த அரசமைப்பு 1889 இலே பிரகடனஞ் செய்யப்பட்டகாலை, மூற்போக்குடைய நாடுகள் வைத் தெண்ணத்தக்க உரிமை தமக்கு வாய்த்துவிட்டதென அவர்கள் எண்ணினார்கள். கிறித்துவமதம்பற்றி அவர்களுக்கு ஐயப்பாடு சிறிது இருந்ததாயினும், வெளி நாடு போந்த யப்பானிய அவதானிகள் அறிவித்தவாறு, பொருத்தனைகளை மாற்றியமைத்தற்கிடாகக் கிறித்துவ மிசனரிமாரின் முயற்சிகளுக்குச் சுதந்திரம் அளித்தல் விலக்கலாகா நியதியாக இருந்தால், பூரணமான சமயப் பொறுதியை யப்பானிற் சட்டமாக்கும் வகையில் அரசமைப்பிலே ஒரு வாசகத்தை விருப் பாய்ச் சேர்க்கவும் பேரரசன் சித்தமாயிருந்தான்.

ஒப்புரவில்லாப் பொருத்தனைகளை மாற்றியமைத்தலை நாடிச் செய்த முயற்சி களில் யப்பானியரை எதிர்நோக்கி நின்ற பிரதான இடர்ப்பாடு யாதெனின், தூரகிழக்குத் தலைநகர்களிலே செயலாற்றிய ஐரோப்பியச் சூழ்வியற் பிரதிநிதி களிடையே காணப்பட்ட ஒற்றுமையேயாம். ஆசிய வேத்தவைகளோடு புழங் கும்போது, வல்லரசுகள் யாவும் தத்தம் உரிமைகளைப் பேணுவதில் ஒன்றுக் கொன்று ஆதரவளித்தல் வேண்டும்—தம் பொது உரிமைகளுக்கு மாறான பூட்கை யாதையும் எவ்வாற்றானும் கைக்கொள்ளலாகாது—என்றவாறான ஒரு

1. Sansom : *The Western World and Japan*, p. 401.

பொதுத் தத்துவத்தை அக்கால் வல்லரசுகள் யாவும் பூண்டிருந்தன. இரசியா வொன்றே இத்தத்துவத்தைப் பூரணமாக ஏற்றிலது. இவ்வாறுக, இத்தாலிய நாட்டவர் உண்ணாட்டிற் பிரயாணஞ் செய்தலை அனுமதித்து யப்பானும், ஆணிலப் புறத்துரிமைகளை மாற்றியமைத்தற்கு இணங்கி இத்தாலியும் தம்மிடையே ஒருபொருத்தனையை ஒப்பேற்ற முயன்றகாலை, பிறவல்லரசுகள் தம்மறுப்பைத் தெரிவித்து அதை அங்கீகாரஞ் செய்யவொட்டாது தடுத்தன! அக்காலத்திலே நவீனமயமாதற்கு யப்பான் செய்த முயற்சிகளைப் பரிவொடு நோக்கிய அமெரிக்க அரசாங்கம், யப்பானுடைய சமத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில் ஒப்பந்தஞ் செய்தது—அவ்வாற்றூற் பிறவல்லரசுகள் சீற்றங் கொண்டன. எனினும், சமத்துவம் பெறுதற்கு யப்பான்செய்த போராட்டில் இரசியாவே உண்மையில் உதவி செய்தது. இவ்விரு பேரரசுகளுக்குமிடையே சகாலின் எனுந் தீவு சிலகாலமாக ஓர் இடறுகட்டையாயிருந்தது. 1855 ஆம் ஆண்டுப் பொருத்தனைப்படி அதன் உரிமையை நிருணயித்தல் பின்போடப்பட்டது. ஆயின் அது பற்றிய இணக்கப் பேச்சுக்கள் இழுபட்டன. இறுதியில், 1875 இல் ஒப்பேறிய ஒரு பொருத்தனைவாயிலால் இவ்விடயம் நிருணயிக்கப்பட்டது. குரைல் தீவுகளில் யப்பானது உரிமை ஒப்புக்கொள்ளப்பட்டது; அதற்கீடாக யப்பான் சகாலின் தீவுமீது தான் கோரிய உரிமைகளைக் கைவிட்டது. சமதையான இரு வல்லரசுகள் இணங்கிச் செய்த பொருத்தனையாகும் அது. உலகப் பெருவல்லரசுகளுக்குச் சமதையான நிலைவகிக்கும் ஒரு வல்லரசென்ற தகுதியை யப்பானுக்கு அளித்த முதற் சருவதேச உடன்படிக்கையாகும் அது.

யப்பானுடைய அரசியல் முறையும் வேறுபட்ட புதிய வகையில் உருவாகத் தலைப்பட்டது. பேரரசு அரசாங்கம் தனது தகைமையை நிலைநாட்டச் செய்த போராட்டிற்கு, அதுவும் துணை செய்வதாயிருந்தது. சற்சுமாக் கலகம் (1877) படுதோல்வியுற்றமையாலே, மானியக் குலமுறையாட்சி தோற்றத்தளவிலேயாயினும் ஒழிக்கப்பட்டது. அவ்வழி, பிரதிநிதித்துவ நிறுவனங்களைத் தாபித்தற்கும் அடிகோலப்பட்டது. மேனாட்டு மாதிரியைப் பின்பற்றி ஒரு பாராளுமன்றத்தை நிறுவுதற்கு வாக்களிக்குமுகமாய்ப் பேரரசன் 1881 இல் ஒரு கட்டளை பிறப்பித்தான். அப்பாராளுமன்றமே புதிய ஆட்சி முறைக்கு அச்சாணியாக விளங்கப்போவது. தலையாய நாடுகளிலே இயங்கிய அரசியல் நிறுவனங்களை ஒப்பிட்டு ஆராய்ந்த இற்றே இரோபுமி யென்பான், யப்பானிலே, முடியாட்சியின் குடைக்கீழ்ப் பாராளுமன்ற ஆட்சிமுறையின் அமிசங்களை யெல்லாம் படிப்படியாகப் புகுத்துமாறு எவ்வாறு என்பது பற்றி ஆலோசனை கூறினன். நாட்டைப் பரிபாலித்தற்காக அமைச்சவை யொன்று 1885 இல் நிறுவப்பட்டமையே இவ்வகையில் எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கையாகும். அடுத்து, மேன்மை தங்கிய பிரமுகர்களையும் அனுபவமிக்க அரசறிஞரையுங் கொண்ட கோமறைக் கழகம், அப்பெயரையே கொண்ட பிரித்தானிய நிறுவனத்தை மாதிரியாகக் கொண்டு தாபிக்கப்பட்டது. இறுதியாய் 1889 இலே அரசமைப்பொன்று உரிய சம்பிரதாயத்தோடு பிரசித்தஞ் செய்யப்பட்டது—நாகரிக



“ முது புத்தர் ”

மடைந்த நாடுகளின் கோட்டியில் யப்பானுஞ் சேர்த்துவிட்டதென்பதை உலகுக்கு உணர்த்துவதாயிருந்தது அச்செயல்.

பேரரசனுடைய பதவியைப் பாராளுமன்ற ஆட்சி முறையோடு இசைவாக்குவது சற்றுக் கடினமாயிருந்தது. ஆயின் இற்றேவும் அவனெடு ஒத்துழைத்தோரும் ஆங்கு முரண்பாடு யாதையுங் கண்டிலர். அரசமைப்பின் முதல் உறுப்புரை வருமாறு விதித்தது :

'இடையருத பேரரச பரம்பரை என்றென்றும் பேரரசை அரசோச்சி ஆளக் கடவது!' 'பேரரசன் புனிதமானவன், மீறற்கரியவன்' என்று கூறுகின்றது மூன்றும் உறுப்புரை. இவ்வாசகங்கள் பற்றி இற்றே வருமாறு குறிப்புரை கூறினன்.

'விண்ணும் மண்ணும் பிரிந்த அந்நாளிலே புனிதமான அரியணை தாபிக்கப் பட்டது. பேரரசன் விண்ணின்று தோன்றியவன்; தெய்விகம் வாய்ந்தவன்; பரிசுத்தமானவன். அவன் தன் குடிகளுக்கெல்லாம் மேலானவன்'. அரசோச்சியதுமன்றி ஆட்சிசெய்பவனுமாயிருந்த தெய்விகப் பேரரசன் ஒருவன் உளனெக, பாராளுமன்றப் பொறுப்பாட்சியென்பதொன்று இருக்க முடியாது. எனவே, முடியரசுக்கே பொறுப்புடையதாயிருந்தது அமைச்சவை. குடிகளின் விருப்பை மன்னன் அறிதற்கமைந்த கருவியாகவே பாராளுமன்றம் இயங்கிற்று. இனி, பாராளுமன்றத்தை அமைப்பதில் இற்றே, பெருமக்கள் மன்றத்தையும் பொது மக்கள் மன்றத்தையும் கொண்ட பிரித்தானிய முறையைப் பின்பற்றினன்.

இச்செயல்களின் வழிவந்த பெருமதிப்பைப் பேரரசானது ஒப்புரவில்லாப் பொருத்தனைகளே மாற்றியமைக்குந் தன் குறிக்கோளே எய்தற்குப் பயன் படுத்திற்று. இம்முயற்சியைப் பிரித்தனே பிரதானமாக எதிர்த்தது. எனவே அவ்வல்லரசைப் பாராட்டி வசப்படுத்துவதில் யப்பானியர் கண்ணுங் கருத்துமாய் முனைந்து நின்றனர். 'கிழக்குலகப் பிரித்தானியர்' எனத் தம்மைத் தாமே பாவித்துப் பேசுவது யப்பானியரிடையே நாகரிகமாகக் கருதப்பட்டது. ஆங்கில மொழியைக் கற்பதற்கு விசேட ஊக்கம் அளிக்கப்பட்டது. பிரித்தானியரைப் பெரிதும் போற்றுபவர் யப்பானியர்; அன்னரின் சீட பரம்பரையாகத் தம்மைக் கருதுவதில் ஆவல்கொண்டவர் யப்பானியர்—என்றவாறான ஓர் எண்ணத்தை உருவாக்குதற்கு இயன்றமட்டும் முயற்சி செய்யப்பட்டது.

ஒருவர் பின் ஒருவராய் வெளிநாட்டு அமைச்சர் பலர்—அவருள்ளுங் குறிப்பாக இனேயே கோமகன் என்பான் (1879-1887)—இடையருது இணக்கப்பேச்சுக்கள் நடாத்தினராயினும், கணிசமான வெற்றி இதுகாறும் கைவந்ததில்லே. நுட்பமான இச்சகத்தோடு யப்பானுடைய கருத்துப் போக்கினே மிக்க வினயமாக எடுத்துரைத்துப் பிரித்தனிலே யப்பானியர் செய்த பிரசாரங் காரணமாக, வேண்டிய பயன் கைகூடிற்று. யப்பான் கோரிய உரிமைகளுக்குக் கிரன்வில் பிரபு மிகச் சாவதானமாகச் சம்மதந் தெரிவித்தான். பொருத்தனைகளே மாற்றியமைக்கும் பொருட்டுத் தொக்கியோவிலே 1886 இல் மாநாடு கூடிற்று. அது கூடுமுன்னமே, மேலைப்புலத்துத் தலைநகரங்களில் தக்க சூழ்வியல் முறைகளைக்

கையாண்டதன் பயனாக, யப்பான் நாடு அமெரிக்கா, பிரித்தன், சேர்மனி யென்னும் நாடுகளின் ஆதரவைப் பெற்றுவிட்டது. மாநாட்டில் நடந்த இணக்கப் பேச்சின் பயனாக, ஒத்துமேவலைச் சாரமாய்க் கொண்ட இணக்கமொன்று ஏற்பட்டது. அன்னியரை விளங்கும் யப்பானிய நீதிமன்றங்களிலே பிறநாட்டு நீதிபதிகளும் கூடவிருத்தல் வேண்டுமெனும் ஏற்பாடு, பிறபலவற்றோடு, அவ்விணக்கத்தில் இடம் பெற்றது. இனி, சுங்கவரிமுறை பற்றிய ஏற்பாடுகள் பூரணமான சுயாதீனத்தை யப்பானுக்கு அளிக்கத் தவறின. இவையெல்லாம் வெளிப்பட்ட போது, நாட்டிலே அவற்றுக்கெதிராய்க் கூக்குரல் எழுந்தது. இத்தகைய அரை குறையான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் யப்பான் இருக்கவில்லை. சேனுபதி வைக்கவுண்ட் தானி யென்பான் விடுத்த விஞ்ஞாபனத்தில் நாட்டின் உணர்ச்சிவேகம் வெளிப்பட்டது. மிகச் சிறப்பு வாய்ந்த அப்பத்திரம் இச்சகமும் பணிவுங் கலந்த அரசாங்கப் பூட்கையை அம்பலப்படுத்தி, ஈவிரக்கம் பாராத் தருக்கமுறையில் ஒறுத்துரைத்தது. 'பணிந்தொழுகல் எனுங் கொள்கையை ஒதுக்கிவைத்து, உண்ணாட்டு அரசாங்க அலுவல்களைச் சீர்செய்மின்.....படைவலி பெருக்கி எமது நாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்மின்.....ஐரோப்பாவில் என்றோ ஒருநாட் குழப்பம் வந்தே தீரும்.....அந்நாளைக் காத்திருமின்'. இக்கிளர்ச்சியின் பயனாய், இனியே யோசனைகள் கைவிடப்பட்டன.

அரசமைப்புப் பிரகடனஞ் செய்யப்பட்டு, பாராளுமன்றம் கூடிய பின்னர், பொருத்தனைமாற்றத்தை நாடிய இயக்கத்தைத் தடுத்தல் அரிதாகிவிட்டது. பாராளுமன்றந் தன் கோரிக்கைகளை விட்டுக் கொடுக்கும் மனநிலையில் இருக்கவில்லை. எனவே யப்பான் கூட்டு உடன்பாடு காணுந் தன் பூட்கை துறந்து, தன் கவனம் முழுவதையும் ஆங்கில நாட்டின்பாற் செலுத்தத் தீர்மானித்தது. 1894 இற் பிரித்தனைடு ஒரு பொருத்தனை கைச்சாத்திடப்பட்டது. ஐயாண்டுக் காலத்தில் ஆணிலப்புறத்துரிமையை முடிவுறுத்தற்கு அது வழிவகுத்தது; சுங்கவரி முறையில் யப்பானுக்கு அது சுயாதீனமளித்தது. பிற நாடுகளும் அவ்வழி பற்றின. கொரியப் போரிலே யப்பான் வாகைசூடி, இராணுவ வல்லரசாக மிளிர்ந்த போது, அதனை ஓர் இழிந்த நாடாகவோ சிறப்புரிமைகள் கவர்தற்கு வாய்த்த நாடாகவோ இனிமேலுங் கருதற்கு இடமிருக்கவில்லை. யப்பான் தன் தகைகளை உடைத்தெறிந்துவிட்டது. ஆங்கில—யப்பானிய உறவுடன்படிக்கை 1902 இல் ஒப்பேறியபோது, தகைமைவாய்ந்த ஒரு வல்லரசாக அது சருவதேச அரங்கத்தில் அடியெடுத்து வைத்தது.

அதிகாரம் 4

தென்கிழக்கு ஆசியா

ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாக 1747 முதல் 1850 வரையும், தூதுக் குழுக்கள், கபடு, படைவலியாதியாம் முறைகளைக் கையாண்டு, தென்கிழக்காசியத் தீபகற்பத்திலே ஆட்சிபெறுதற்குப் பிரான்சு செய்த முயற்சிகள்பற்றிப் பின்னர்க் காண்போம். மறக்குணம் படைத்த பிசப்பாண்டவர் பிக்னே த பெகெயின் என்பார் செய்த வீரசாகசம் நிறைந்த முயற்சிகளின் பின்னரும், பிரான்சின் நிலைமை ஆங்கு எவ்வாற்றானும் அபிவிருத்தியடைந்ததாகத் தெரியவில்லை. சியாலோங்கு என்பாற்குப் பின்னர் அவர் மீட்டும் அரியணையேற்றிவைத்த அதிபன்மாரும் தம்முன்னோரிலும் பார்க்கப் பிரான்சிய ராதிக்கத்தை எதிர்ப்பாராயினர். இவ்வாருகத் தன் முயற்சியனைத்திலும் படுதோல்விகண்ட பிரான்சு, மூன்றாம் நெப்போலியனுடைய ஆட்சியிலே, 'கொடிறுடைக்குங் கூன்கை' முறைகளைப் பிரயோகித்து ஆசியாவிலே தனக்கென ஒரு பேரரசை நிறுவத் தீர்மானித்தது. வழமைபோலத் திருச்சபைக்குப் பாதுகாப்பளிப்பதே ஈண்டுந் தலைக்கீடாயிற்று. 1858 நவம்பர் 14 இல் வெளிவந்த 'லா மொனிற்றர் யூனிவேசல்'[1] எனுஞ் சஞ்சிகையில் அவன் வருமாறு அறிக்கை செய்தான்: 'எமது மிசனரிமார் ஈவிரக்கமின்றித் துன்புறுத்தப்பட்டதால், ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் எமது போக்கலங்கள் அனம் இராச்சியத்தின் கடற்கரைக்குப் போக நேர்ந்தது. ஆயின் அவ்வரசாங்கத்தோடு தொடர்புகொள்ள அவை செய்த முயற்சிகள் பயனிலவாயின. பேரரசனுடைய அரசாங்கமானது அதன் வேண்டுகோள்கள் இவ்வாறு எள்ளியொதுக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. ஆதலின், படையெழுச்சிக்குத் திட்டமிடப்பட்டுளது.' பிலிப்பீனிலிருந்த இசுப்பானிய அதிகாரவர்க்கம் ஒத்துழைப்பு நல்கிற்று. 'எமது பரிசுத்த மதத்துக்கும் பத்திசிறந்த எமது மிசனரிமார்க்கும் இழைக்கப்பட்ட அவமானத்தைத் துடைக்க வேண்டியதன்' அவசியத்தை அவர்தம் படைமுதற்றலைவன் வற்புறுத்தினன்.

பிரான்சியர் எதிர்பார்த்தவாறு, போராட்டம் எளிதாக இருந்திலது. உண்ணாட்டுக் கிறித்தவர் ஆதரவுயாதும் அளிக்கத் தவறினர். ஐந்து திங்கள் கழிந்த பின்னரே, பிரான்சியர் ஆற்றுமுகத்தில் எதிரேறிச் சென்று, தீபகற்பத்தைக் காத்து நின்ற தாமேன் கோட்டையை ஒருவாறு பிடித்தனர். 1859 பெப்பிரவரியிற் சைகோன் தாக்கிக் கைப்பற்றப்பட்டது. ஆயினும் அனம் மக்களோ திறமைசான்ற படைமுதல்வன் நிகுயென் திரிபுவோங்கு என்பான் தலைமையில், அந்நகரை முற்றுகையிட்டு, பிரெஞ்சுக் காவற்சேனையை அரும்பூட்டான நிலையில் வைத்தனர். சீனப் போராட்டம் முடிவுற்ற பின்னர், தளபதி சாணர் என்

1. Le Moniteur Universal.

பான் தலைமையிற் புதியதானைகள் வந்துற்றபோது, அம்முற்றுகை விடுக்கப்பட்டது. முற்றுகை விடுவித்த அந்தத் தளபதி கம்போடிய மன்னனை அணுகினன்—அம்மன்னன் நேயபான்மை மிகவும் காட்டினன். கம்போடியாவொடு 1863 ஓகத்து 11 இற் பொருத்தனையொன்று கைச்சாத்தாயிற்று. அதன்வழி, கம்போடியா ஒரு புரப்பகம் எனும் நிலைக்கு ஒடுக்கப்பட, அதன் வெளிநாட்டு அலுவல்கள் பிரான்சின் பூரணமான அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டன. அப்பொருத்தனையின் பிற நிபந்தனைகள் வருமாறு: இராச்சியத்தின் அலுவல்களை மேற்பார்வை செய்தற்பொருட்டுப் பிரெஞ்சு வதிவாளனை நியமித்தல்; பயணஞ் செய்தற்கு வேண்டிய சுதந்திரம்; பிரெஞ்சு மிசனரிமார் தம் சமயத்தொண்டினைத் தொடர்ந்தாற்ற உரிமை; காடுபடு வளங்களை வேண்டியாங்கு பெறுதற்குப் பிரான்சுக்கு உரிமை; என்றிவையாகும். உண்ணாட்டு மன்னவர்வாயிலாக ஆட்சி செலுத்தும் இந்திய முறைமையின் செல்வாக்கைப் பிரான்சியர் செய்த இவ்வொழுங்குபாடுகளிலே தெளிவாகக் காணலாம். இத்தீபகற்பத்தில் ஆக்கிரமிப்புக்குத் தலைக்கிடாயிருந்தது மிசனரிமாரின் நிலையேயாதலின், அன்னர்பற்றிய ஏற்பாடொன்றே இந்திய முறைக்குப் புறம்பானதாகக் காணப்பட்டது. பிற்றைஞான்று சீயம் நாட்டொடு செய்த ஒரு பொருத்தனையின்வழி (1867, யூலை 16), அவ்விராச்சியத்தை மருவிச் சென்றவிடத்தெல்லாம் மீக்கொங்கு, தொங்கு—சாப்பு நதிகளிலே நாவாயோட்டும் உரிமையைப் பிரான்சு பெற்றது. இன்னுமோர் ஒப்பந்தத்தின்வழி (1869, சனவரி 15) மீக்கொங்கு நதிப் பிரதேசம் முழுவதும் பிரான்சியர் கைவசப்பட்டது—அதனால், கரையோரச் சிறு பிரதேசமளவிற்றாக அனம் இராச்சியம் ஒடுங்கிற்று.

எனினும், அனம் இராச்சிய பிரான்சிய ஆட்சிமுறைக்குள் இன்னும் அகப்பட்டிலது. பேரரசன் தூ—டுக்கு என்பான் 1862 இற் கைச்சாத்திட்ட ஒப்பந்தமானது கிழக்கொச்சின் சீனத்தின் கிழக்குப் பாகத்தையே பிரான்சிற்கு அளித்தது. பிரெஞ்சு ஆக்கிரமிப்பும், அதற்கு அனம் மக்களின் எதிர்ப்பும் பதினைந்தாண்டுக் காலம் தொடர்ந்து நீடித்தன. 1873 இலே பிரெஞ்சுத் தானைகள் அனேயுட் புகுந்தது மன்றி, செந்நதியின் கழிமுகத்துள்ள பிரதேசமனைத்தையும் தங்கைப்படுத்தின. பேரரசன் தூ—டுக்கு தனது மேலதிபதியாகிய சீனவரசுக்கு முறையீடு செய்தான். பிரெஞ்சு ஆக்கிரமிப்பை நிருவகிக்கும் வலி தன்மாட்டு இல்லாமையைச் சீன அரசாங்கம் உணர்ந்தபோதும், தனது திறைநாட்டின் உதவிக்குச் செல்லுமாறு தன்படைகளுக்கு அது இரகசியமாகக் கட்டளையிட்டது. அனேயுட் புகுந்த பிரான்சியர் தோல்விப்பட்டாராயினும், அப்போரிலே திட்டமான ஒரு தீர்வு ஏற்பட்டது. அதன்படி, அனம் பேரரசனது இறைமையைப் பிரான்சு ஒப்புக்கொண்டதோடு, அன்னியப் பகைவர் யாவர்க்கு மெதிராய்ப் பாதுகாப்பு வழங்கவும் அது வாக்குறுதியளித்தது. இவற்றுக்கீடாய்த் தூ—டுக்கும் வெளிநாட்டுப் பூட்கைபற்றிய விடயங்களிற் பிரான்சின் சொற்படி யொழுகவும், கொச்சின் சீனத்தைப் பிரான்சிற்குக் கையளிக்கவும், பிரெஞ்சு வர்த்தகம் நடைபெறுதற்குச் செந்நதியைத் திறந்துவிடவும் சம்மதித்தான். 1874, மார்சு 15 இல் ஒப்பேறிய இப்பொருத்தனையானது கொச்சின் சீனமே,

அனம் போரசே, கம்போடிய இராச்சியமே, இலாவோசுச் சிற்றரசே என்றெ லாம் பிரிவுபட்ட பல பிரதேசங்களை அடக்கிய இந்துசீனத்தின் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கிற்று.

அத்தியகற்பத்திலே பிரான்சின் நிலையினை அப்பொருத்தனை ஒழுக்காற்றுப் படுத்தியதாயினும், உடனடியாகப் பிரச்சினை யாதையும் தீர்த்துவிடவில்லை. சீன ருடைய மேலாண்மை என்றுமே மறுக்கப்பட்டதில்லை. ஆதலின், அவர்கள் பிரான்சின் விசேட நிலையினை ஏற்க மறுத்தனர். இந்துசீனத்திலே சீனக் கருங் கொடியாளரின் உதவியோடு தேசாபிமானிகள் பலர் கூட்டங் கூட்டமாகத் திரிந்து பிரான்சியர்க்குக் கிரமமாகப் பெருந்தொல்லை விளைப்பாராயினர். இறுதி யில், அனம் வேத்தவையின் வேண்டுகோட்கிணங்கி, அப்பிரதேசத்தை அமை திப்படுத்தும் நோக்கொடு, சீன அதிகாரவர்க்கம் படையனுப்பிற்று. சீனரின் மேலாண்மைப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கு இது ஒரு வாய்ப்பை அளித் தது. பெரும்பதிலிராயனுக்கு மகனை மாக்குவிசு செங்கு, பாரிசிலே தூதுவனாக இருந்தவன், போர்க்கோலங் கொண்டான். அதனை அலட்சியஞ் செய்த பிரான்சி யர் 1882 இல் விரிவான முறையிற் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சீன வெளிநாட்டு அலுவலகம் ஆட்சேபஞ் செய்தபோது, இவ்விடயத்திற் சீனத் துக்கு யாதுமே இடமில்லை என்றவாறாகப் பிரான்சியர் விடையிறுத்தனர். பிரெஞ்சு வெளிநாட்டு அமைச்சனான த பிரெயிகினே என்பான் வருமாறு கட் டுரைபகர்ந்தான்: '1874 ஆம் ஆண்டுப் பொருத்தனையைப் பூரணமாகப் பிர யோகிக்குமாறு இந்து—சீன அரசாங்கத்துக்கு யாம் அறிவுறுத்தியுள்ளோம். அப்பொருத்தனை கையொப்பநாடுகள் இரண்டோடுமே சம்பந்தப்பட்டதாகும். சீன அரசாங்கத்துக்கு யாம் கொடுக்கவேண்டிய விளக்கம் யாதும் இல்லை.' பிரான்சிய அமைச்சன் பூறே என்பானோடு இணைக்கப்பேச்சு நடாத்தி உடன் படிக்கையொன்றை ஒப்பேற்றினன் இலி உங்-சாங்கு என்பான். அதன்படி இரு செல்வாக்கு வலயங்களாகத் தொங்கிங்கு பிரிக்கப்பட்டது. அனமின் இறை மையை மதித்தொழுகப் பிரான்சியர் இசைந்தனர். ஆயின் அவ்வுடன்படிக்கை யைக் குவீடோசே[1] எனும் பிரான்சிய வெளிநாட்டலுவலகம் மறுதலித்தது. அப்பால் மூண்ட பூசலின்போது, கருங்கொடியாளர் சேனைபதி இறிவியர் என் பானது தானையை 1883, மே 19 இற் சுற்றிவளைந்து வெட்டிச் சாய்த்தனர். இத னால் சினங்கொண்ட பிரான்சியர், சேனைபதி பூவே, தளபதி கோபே என்னும் இருவர் தலைமையில் ஒரு பெரும் படையெழுச்சியைத் திட்டஞ் செய்தனர். சீனத்தொடு உண்மையில் உறவு முறித்திலதாயினும், ஒழுங்கற்ற முறையிலே பூசல் தொடர்ந்து நிகழ்ந்தது. இணக்கப்பேச்சுமூலமாக இவ்விடயத்துக்கு ஒரு முடிவு காண இலி உங்-சாங்கு பிரயத்தனஞ் செய்தானெனினும், அவனை நிரா கரித்தபின், சீனப்படை தொங்கிங்குட் புகுந்தது. இம்முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தப் பிரான்சியர் தவறினர். கேனல் தூகென் என்பான் யூன் 23 இற் பாக்கிள் எனுங் களத்திற் படுதோல்விப்பட்டான்.

1. Quai d' Orsay.

நிலைமை இவ்வாறு கைகடந்து விட்டதை உணர்ந்த பிரான்சியர் வரம்பிகந்த கடுநடவடிக்கை கையாளத் தலைப்பட்டார்கள். முறைமையான பூசல் மூண்டது. சீனக் கடற்படையை நாசஞ் செய்த தளபதி கோபே யாங்கிசியை முற்றுகையிட்டான். இதனைக் கண்ணுற்ற சீனர் தங்கன்—கம்பெல் என்பான் மூலமாக இணக்கப்பேச்சுத் தொடங்கினர். இறுதி உடன்படிக்கையால், தொங்கிங்குமீது தனக்கிருந்த அதிகாரத்தையும் அனம்மீது தான் செலுத்திய மேலாண்மையையும் சீனந் துறந்தது (1886, ஏப்பிரில் 25).

1861 தொட்டு 1876 வரையான காலத்தை வென்றடிப்படுத்துங் காலமெனக் கொள்ளலாம். அக்காலத்தில், பலவந்தக் கொள்கையை வற்புறுத்தி வந்த தளபதிகளின் கையிலேயே பிரெஞ்சு அதிகாரம் பெரும்பாலும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இப்பிரதேசங்கள் பற்றிய (பாரிசிலிருந்த) 'தாயக அதிகாரம்' கடலமைச்சிடத்தும் வர்த்தக அமைச்சிடத்தும் மாறிமாறி ஒப்படைக்கப்பட்டது. ஆணிலங்களை ஆட்சி செய்வதிலே தக்க அனுபவமில்லாத இவ்விரு நிறுவனங்களும் ஆட்சிப் பிரச்சினையை நிருவகிப்பதில் எவ்வித விளக்கமுங் காட்டத் தவறின. மண்டரின்மாரும் கீழுத்தியோகத்தரும் தொடக்கத்திலிருந்தே இந்து-சீனத்தில் ஒத்துழையாமைப் பூட்கையைக் கடைப்பிடித்துவந்தனர். அதன்பயனாக, சுதேச அலுவற் பரிசோதகனே அப்பிரதேசங்களை நேராகப் பாலனஞ் செய்து வந்தான். அன்னிய அதிகாரத்தின் தாக்கத்தாற் சமூகவமைப்பு முழுவதும் தகர்ந்து வீழ்ந்தது. மிக்க வளர்ச்சிபெற்றிருந்ததும், சிக்கலானதும், மக்கள் நன்கு விளங்கியொழுகியதுமான இந்துசீனச் சட்ட-அரசியல் முறைமையானது ஒதுக்கிவைக்கப்பட்டது. அதற்குப் பதிலாகத் 'தன்மயமாக்கும்' பூட்கை, தாய்நாட்டில் நிலவிய முறையை வலிந்து திணிக்கும் கொள்கை, பிரெஞ்சுக் குடியேற்ற அதிகாரவர்க்கத்தினுலே விடாப்பிடியாகக் கையாளப்பட்டது. அதன் பயனைச் சமூக அதிகாரம் தகர்ந்து வீழ்ந்தது—சிந்திக்குமாற்றல்படைத்த எவனும் அவ்வினைவையே எதிர்பார்த்திருப்பன். இந்து—சீனத்தின் முதற் குடியியல் ஆள்பதியாக விருந்த இல மயர் த வைலேசு என்பான் 1885 இலே நாட்டு நிலைவரத்தைச் செப்பமாக ஆராய்ந்து கூறினன்: 'பழையதை நாம் அழித்துவிட்டோம். ஆயின் அதனிடத்தில் யாதொன்றும் உருவாயதில்லை. வென்றடிப்படுத்திய காலமுதலாய் ஆரம்பித்த ஒரு சமூகப் புரட்சியின் வாயிலில் நாம் நிற்கின்றோம்'.[1]

கிழக்குப் புலத்திலே ஐரோப்பியரின் அதிகாரமானது அவர்தம் மாட்சிமையிலே தங்கியுளதென்பதைத் தம் பிரித்தானிய நண்பர் வாயிலாகக் கற்ற பிரான்சியர், தமது மாட்சிமையைப் பேணும் ஆர்வத்தில் இனமேன்மையுளப்பாங்கைப் பெரிதும் வளர்த்தனர். பான்சூ—திறிங் என்பவன் எழுதிய தூண்டுப்பிரசுரமொன்றிலே இவ்வுளப்பான்மை நன்கு விளக்கப்பட்டுளது. இந்து—சீனர்

1. See *Des institutions civiles de da Cochin Chine. Paris*, 1908.

மாட்டுத் தாம் கொண்டிருந்த இகழ்ச்சிமனப்பான்மையைப் பிரான்சியர் மறைக்கவும் முயலாதிருந்தவாற்றை அவ்வெழுத்தாளன் குறிப்பிட்ட பின்னர் தொடர்ந்து கூறுவன் :

'உங்கள் கண்ணிலே, நன்று தீதெனும் பேதமறியவொண்ணு, வாய்பறையா விலங்குகள் நாம்; பெருத் தறுகண்மையாளர் நாம். எங்களைச் சமானராக நடத்த நீங்கள் மறுப்பதோடு, நாம் நரகப் பிறவிகள் என்றெண்ணிப்போலும் எம்மை அணுகவும் அஞ்சுகின்றீர்.....பகற்பொழுதில் நாம் பட்ட இழிவுகளையெல்லாம் மாலைப் பொழுதினில் எண்ணியெண்ணிப் பார்க்கும்போது, வெட்கமும் துக்கமும் எமது இதயத்தைப் பிழிகின்றன. எமது சத்தியை யெலாம் உறிஞ்சியெடுக்கின்ற ஓர் எந்திரத்தில் அகப்பட்ட நாம் ஆற்றுமை நிலையினுக்கு ஓடுங்கிவிட்டோம். பிரான்சியரின் அலுவலகங்களில் இரவலரே தலைகாட்டத் துணிவதற்கு இதுவே விளக்கமாகும்'.[1]

பிரான்சியரோ தம்பாட்டில் தமது நிருவாகத்தையும், வீதிகள், அணைகள், தந்திவசதிகள், தொலைபேசிச் சாதனங்கள், இருப்புப்பாதைகள் எனுமிவற்றை அமைத்தலையும் தொடர்ந்து செய்தார்கள். ஆயின் நாட்டு மக்களோ பிரான்சியரின் அதிகாரத்துக்கு இசைந்தொழுகினரல்லர். அனமிலும், தொங்கிங்கிலும், கம்போடியாவிலும் கலகங்களும் கிளர்ச்சிகளும் அடிக்கொருகால் நிகழ்ந்தன. திறமையும் மதிப்பும் வாய்ந்த இளவரசன் சீவத்தா என்பான் தலைமையிலே கம்போடிய மக்கள் பதினெட்டு மாதகாலம் பெருநாசம்விளைத்த போராட்டம் மலைந்தனர். தேதம் கலகத்தை அடக்குதற்கு ஐயாண்டுக்காலஞ் சென்றது. தொங்கிங்கில், 1884 இற் பதிலாளியே கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினனாக, பிரான்சியரை ஆதரித்த கிறித்தவக் குடிகள் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறுக, சாந்திப்படுத்தும் பூட்கையானது சித்தியெய்திற்றிலது என்பதே உண்மை. பெருமைசான்ற ஒரு நாகரிகமரபை உடையோரான இந்து—சீனர் பிறரால் 'கிரகிக்கப்படுவதை' விரும்பினரல்லர்.

'கிரகிப்புப்' பூட்கையானது விரைவில் 'இணைவுப்' பூட்கையைத் தழுவுவதாயிற்று. பேட்டு என்பான் 1886 இலே தாபித்த பிரமுகர் கழகத்திலே இந்த 'இணைவுப் பூட்கையின்' தோற்றுவாய் காணக்கிடக்கின்றது. இந்தியாவிற் பிரித்தானிய முறைகளைப் போற்றிப் புகழ்ந்தோனுகிய செயிலி என்பான், 'சுதேசிகளைப்' பிரான்சியராட்சிக்கு வயப்படுத்தும் முதன் முயற்சி அத்திட்டமே யென விதந்துரைத்தான். போல்பேட்டு தெளிந்த காட்சியன் என்பதற் கையமில்லை. பிரான்சியரின் அதிகாரத்தை ஓரெல்லைக்குள் வரையறை செய்து, உள்ளூர் ஆட்சியை அனமியரிடம் விடுவதே அவன் கருத்தாகும். இந்தியாவில் இறிப்பன் பிரபு கைக்கொண்ட பூட்கையினையே அவனும் ஓராற்றுற் கையாண்டான் எனலாம். அனமிலும் தொங்கிங்கிலும் வதிவாளர்—நாயகமாயிருந்த காலை அவன் அப்பூட்கையைப் பிரசித்தஞ் செய்து, பற்பல சொற்பொழிவுகளில் விளக்கினன். தொங்கிங்குப் பிரமுகர் கூடியிருந்த மன்றத்திலே அவன் வருமாறு

1. This is quoted in Innes' *French Policy in Indo-China*, p. 61.

கூறினன் : 'பிரான்சின் தார்மிகத் தலைமையில் மக்களுக்குச் சித்துவமளித்தலே பிரான்சின் தனியொரு விருப்பு என்பதை நீவிர் அறிதல் வேண்டும். கீழ் இந்து சீனத்திலே சம்பவங்களின் நெருக்கிடையால் நாம் நிருவாகத்தை மேற் கொண்டோமாயினும், நேராக நிருவாகத்தை மேற்கொள்ளும் விருப்பு எமக் கில்லை. அறிஞர் வகுப்பானது புறநீங்கலானதன்று எனுங் காரணத்தால் உறுதி யாக நிலையுன்றியுளது : அது பற்றுறுதி உடையதாயிருக்குந்தனையும் ஆதிக்கம் பெற்றிருக்கும். அதிகார மையமாகவும், அலுவலாளரைத் தெரிதற்கான தோற்று வாயாகவும், அது தொடர்ந்து விளங்கும். ஒளிமயமான எதிர்காலத்துக்கு நாம் வழிகாட்டியுள்ள இந்தக் குணபுலத்து மக்களில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஐரோப்பியரும் ஆசியரும் இவ்வாறு சந்தித்தமையால் உன்னதமான எதிர் காலம் சந்தேகமின்றி விளையுமென நான் எதிர்பார்க்கிறேன்'.

பேட்டு இறந்ததற்பின்னர், 'இணைவுப்' பூட்கையைக் கருத்தூன்றிக் கடைப் பிடித்தவன் த இலனேசன் ஒருவனேயாவன். ஆயினும் அவன் மிகத் தீவிரமாக அப்பூட்கையிற் சென்றான் எனுங் காரணம்பற்றிப் பிறக்கழைக்கப்பட்டான். ஆட்சியறவும் குழப்பமும் மீண்டுந் தலைதூக்கின. பிரான்சியப் பிரதிகாவலருட் கிழக்குலகிலே சாலவும் வெற்றியீட்டிய போல் தூமர் என்பான் ஆட்சியில், இந்து — சீனத்திற் செப்பமான நிருவாகம் சிலகாலம் நிலவிற்று. ஆயின், அதே காலத்தில் இந்தியாவில் ஆட்சி செய்த கேர்சன் பிரபு போன்று தூமரும் பேரரசின் மாண்பையே முதன்மையாகக் கருதினன். தான் செய்த பணியை விதந்து கூறுமுகத்தால் அவன் கூறிய வார்த்தைகளிற் கேர்சனுடைய கருத்துக் கள் ஒலித்தன : 'அதன் (இந்து — சீனத்தின்) வலிய ஆட்சியமைப்பும், பொரு ளாதார நிதியியல் அமைப்புக்களும், அதன் பெருவலியுமெல்லாம் பிரான்சியரின் பீடு நலம்பெறுதற்கு உபயோகிக்கப்படுகின்றன. ஐயாண்டுக்காலத்துள் வர்த்த கம் இருமடங்கினும் அதிகமாகப் பெருகிவிட்டது. கைக்கொள்ளப்பட்ட பொது வேலைத்திட்டங்களுக்கு ஆசியாவில் எங்கணுமே இணையில்லை.....ஆசியப் பெருவல்லரசாகப் பிரான்சு எதிர்காலத்திலே திகழ்வதற்கு இந்து — சீனம் வழி வகுத்துவிட்டது.'[1]

நிருவாகத்தை ஒருமுகப்படுத்தியும், இந்து — சீன அரசாங்கத்திலே மிகுந்த திறமைப்பாட்டைப் புகுத்தியும் பிரான்சை ஓர் ஆசியப் பெருவல்லரசாக விளங் கச்செய்த அதே வேளையில், கேர்சனைப் போன்று தூமரும் அனமியரின் விரோ தத்தையே வளர்த்தான் எனலாம். பிரான்சிய நிருவாகக் கோட்பாடுகளைத் தழு வியே தாம் மேன்மேலும் ஆளப்படுவதை உணர்ந்த அனமியர் காழ்ப்புக் கொண்டனர். இவ்வாறுக, கிளர்ச்சி, பிரசாரம் முதலாயவற்றில் நவீனமுறைகளை மேற்கொண்ட தேசியக் கட்சிகள் படிப்படியாகத் தோன்றி வளர்ந்தன. யப்பா னது எழுச்சியும், ஐரோப்பியப் பெருவல்லசைச்சொன்றை நிலத்திலும் நீரிலும் அது மீக்கொண்டுபெற்ற வென்றியும் இந்து — சீனத்தில் ஆழ்ந்த வினைவைப் பயந் தன. மாணவர் பலர் கல்விபயிலுதற்காக யப்பானுக்குச் சென்றனர் — அங்குப் புதிய நிறுவனங்கள் தோன்றுவவாயின. பிரசார இலக்கியம் பொது மக்க

[1]. Doumer : *L' Indo-Chine Francaise.*

விடையே விரவிப் பரவிற்று. மாணவனொருவன் வருமாறு கட்டுரை பகர்ந்தான்: 'தாழ்மையான ஓர் ஊழியனும் மாணவனும் சிறியேனுமாகிய யான், நூல்களையும் புதிய கோட்பாடுகளையும் பயிலும் வாய்ப்புப் பெற்றதனால், வலியிலா ஐரோப்பியரை யப்பானியர் எவ்வாறு வென்றடக்க வல்லவராயினர் என்பதை, யப்பானுடைய அண்மைக்கால வரலாற்று நூலொன்றிற் கண்டறிந்தேன். நாங்கள் ஒரு தாபனத்தை உருவாக்கியதற்கு அதுவே காரணம்..... வாலிபப் பிராயமுடைய அனமியருள்ளே ஊக்கமிக்காரையும் துணிவுமிக்குடையாரையுந் தெரிந்து கல்விபயிலுதற்காக யப்பானுக்கு அனுப்புகின்றோம். இவ்வியக்கம் பற்றிப் பிரான்சியர் யாதுமறியாதே பலவாண்டுக் காலம் கழிந்துவிட்டது.....மக்களை எதிர்காலத்துக்கு ஆயத்தமாக்குவதே எமது இலக்காகும்'[1].

யப்பானியருடைய வெற்றியை அடுத்துத் தூரகிழக்கிலே நிலவிய தேசியவுணர்ச்சி வளர்ந்தமை கூர்ந்து நோக்கத்தக்கது. இந்தியாவிலே, திலகர், இலசபதிராய் முதலியோர் தலைமையில், தேசியவுணர்ச்சி மிகத் தீவிரமான வடிவிலே தோன்றுற்று. மறக்குணம் படைத்த கோட்டியொன்று பயங்கர நடவடிக்கைகளிலே பலவிடத்தும் ஈடுபட்டது. பொதுவாக நோக்குமிடத்து, அவ்வியக்கம் புரட்சிப்பான்மை உடையதாயிருந்தது. இந்து — சீனத்திலும் இத்தகைய நாட்டமே காணப்பட்டது. யப்பானிலே பயிற்சிபெற்ற மாணவர்கள் இந்து — சீனத்திலிருந்து பிரான்சியரை வெளியோட்டுதற்கு வெளிப்படையாகக் இளர்ச்சி செய்தார்கள். இவ்வியக்கம் எங்கணும் பரவியமையாலே, இளர்ச்சித் தலைவர்களைப் பெருவாரியாகச் சிறைப்படுத்தியும், படைவலியைப் பிரயோகித்துமே பிரான்சு தன் அதிகாரத்தை நிலைநாட்ட வேண்டியதாயிற்று.

எனினும், புதிய நூற்றாண்டின் முதற்கூற்றிலே பிரான்சும் பிற ஐரோப்பிய வல்லரசுகளும் ஆசியாவிலே தம் ஆதிக்கம் நித்தலும் நிலைபெறுமெனத் திருத்தியடைந்திருந்தன என்பதை நாம் நினைவிற் கொள்ளல் அவசியமாகும். 'மூற்போக்குடையாரென' அக்காலத்திற் கருதப்பட்ட மோலிப்பிரபு போன்ற சிந்தனையாளருமே, ஆசியாவில் ஐரோப்பியரின் அரசியலதிகாரம் அற்றுப்போகுங் காலம் விரைவாக அணுகியவாற்றைச் சற்றேனும் உணர்ந்தாரல்லர். 'பழைய சீனப்புள்ளிகளும்', வெயிலிற் காய்ந்த ஆங்கில—இந்தியரும், பிரெஞ்சுக் குடியேறிகளும் மாத்திரமன்றி, இலண்டனிலும் பாரிசிலும் எக்கிலும் விடயமறிந்த விவேகிகளுமே இணக்கத்தோடு கூடிய உறுதியான பூட்கையால் ஐரோப்பியாதிகாரத்தை முடிவின்றி நீடிக்கச் செய்யலாமெனத் திருத்தியடைந்திருந்தனர். இந்த அடிப்படையிலேயே அவர்கள் தம் நிருவாக, பொருளாதார, அரசியற் பூட்கைகளை உருவாக்கினர். குளோபுக்கோவிசுக்கியின் பின்னர் பதவியேற்ற அல்பேட்டு சரவுத்து என்பான் இந்து—சீனத்தில் இப்பூட்கையை ஆதரித்தோருட் குறிப்பிடத்தக்கவன். ஆள்பதிநாயகங்களைப் பதவி வகித்த இருவேறு காலப்பகுதியிலும், இடையிலே குடியேற்ற நாட்டு அமைச்சுகளைப் பதவிவகித்த காலத்தும், பெரும்பெருஞ் சீர்திருத்தத் திட்டங்களை அவன் கைக்கொண்டு, சுகாதார மருத்

1. Quoted in Ennis, *French policy in China.*

துவ சேவைகளைத் திருத்தியமைத்து விரிவுபடுத்தி, சைகோன் ஐபோங் துறை முகங்களை அபிவிருத்தி செய்து, அரசாங்கத் திணைக்களத் தாபனங்களையும் சீர் திருத்தியமைத்தான். அவனையடுத்துப் பதவியேற்றோரும் முக்கியமான பகிரங்க வேலைத்திட்டங்களை மேற்கொண்டனர். புதிய நூற்றாண்டின் முதன் முப்பதாண் டுக் காலத்தே, இந்து — சீனத்திற் பிரான்சியரின் நிருவாகமானது மிகச் சிறந்த எந்தக் குடியேற்றநாட்டு ஆட்சிக்கும் இணையானதாய், நன்முறையிலும் திறமை யோடும் நடாத்தப்பட்டது. அது விரிந்தமுறையிலே வீதிகளையும், புகையிரதப் பாதைகளையும் பிற போக்குவரத்து வசதிகளையும் அமைத்தது; நவீன கால அரசாட்சிக்கு வேண்டும் அத்தனை சாதனங்களையும் பொதுமக்களுக்கு வழங் கிற்று; பெருந்தொகை மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய பொருளாதார நட வடிக்கைகளை மேற்கொண்டது. மேலும் அது இந்து — சீனத்தின் பண்பாட்டி லும் வரலாற்றிலும் மிக்க ஈடுபாடு கொண்டு, கடந்தகால நினைவுச் சின்னங்களைக் கவனமாகப் பேணி, பிரபலமான குணபுலவாராய்ச்சிக் கழகமொன்றையும் நிறு விக் காத்தது.

ஆயினும் துரதிட்டவசமாக, படைவலியை ஆதாரமாகக் கொண்ட முன்னை ஆட்சிகள் போன்றே, நன்னெக்கத்தின் வழியவான மிக விரும்பத்தக்க இம் முயற்சிகள் யாவும் இந்து—சீனமக்களின் மனதைக் கவரத்தவறின. பிரான் சிற்கு விரோதமான உணர்ச்சி தொடர்ந்து வளர்ந்தது. இறுதியில், நல்லாட்சி சுயவாட்சிக்கு ஈடாகாது என்பதையும், அன்னியப் போர்வையுட் புகுந்த நாக ரிகம் அடிமைப்பட்ட மக்களின் மனத்தைக் கவராது என்பதையும் பிரான்சியர் பையவே உணர்ந்தனர். பல்வேறு சீர்திருத்தத்திட்டங்கள் பரீட்சிக்கப்பட்டன. சரவுத்தையடுத்துப் பதவி வகித்தோனும் அவனுடைய சிடுமூஞ்சி மொறிசு லோங் என்பான் தேர்தல்வழிச் சமுதாய நிருவாகக் கழகங்களைத் தாபிப்பதன் மூலம் 'இளைய அனமியரை' அமைதிப்படுத்த முயன்றான். கொச்சின்—சீனத் துக்குடியேற்றக் கழகத்திலே இந்துசீனர்க்குக் கூடிய பிரதிநிதித்துவம் அளிக் கப்பட்டது. ஆயின், இவையெல்லாம் தேசியவுரிமைப் பிரச்சினையை வறிதே சுரண்டிப் பார்க்கும் முயற்சியேயாகும். கழகத்தின் முன்பாக 1925 திசம்பர் 21 இல், ஆள்பதிநாயகன் அலெக்சாந்தர் வறேன் என்பான், சமவுடைமைக் கருத்துடையான், ஆற்றிய சொற்பொழிவில் இவ்வுண்மையின் ஒரு பொறி மின் னுவதைக் காணலாம்.

'மக்களும், அவர்தம் கருத்துக்களும், ஆசியா முழுவதுமே மாறுதலடைந்து வருங்காலம் இது. தற்கால நாகரிகத்தின் உயர்படிவங்களுக்கு உய்க்கும் பாதை யிலே இன்று குணபுலம் நிற்கின்றது. இந்த விடுதலை இயக்கத்தினின்றும் இந்து —சீனம் விலகியிருக்க முடியாது. நாம் போதித்த பாடங்கள் அந்நாட்டிற் சென்று பரவியுள. இந்து — சீனம் அவற்றைப் பற்றி இன்று சிந்திக்கின்றது. அது தன் எதிர்காலத்தை ஆராய்ந்து தன் கதியை நிருணயிக்க முற்படுகின் றது. எதிர்காலம் எவ்வாறு அமையும்? அமைதியை நாம் பேணமுடியுமாயின், இந்து—சீனம் முட்டின்றி விருத்தியடைய முடியுமாயின், சுதந்திரமான உயர்

படித்தாய ஒரு வாழ்வை அது அவாவி நின்று, என்றோ ஒருநாள், ஒரு பெரும் நாடாக விளங்குதல் வேண்டும்[1]' இவையெல்லாம் துணிவு மிக்க வார்த்தைகளே யாயினும், தாயகத்தில் நிலவிய கருத்துக்கமைய அவன் தன் கருத்துக்களைப் பிறவழியின்றி மாற்றிக் கொள்ள வேண்டியவனையினன். பியறி பாசுக்கர் என் பான், 1927-34 வரையும் ஆள்பதிநாயகனைப் பதவிவகித்தவன், இந்து — சீனத் திற் பிரான்சு தனது ஆதிக்க நிலையைப் பேணவேண்டுமாயின், அந்நாட்டுத் தேசியவுணர்ச்சியை ஓரளவிற்குத் தழுவி நடத்தல் அவசியமென்பதை உணர்ந் தான். உலகப் பெரும்போர் ஐரோப்பாவின் தார்மிக நிலையை உலுக்கிவிட்டது; இந்தியாவிலும் சீனத்திலும் சம்பவங்கள் துரிதகதியில் நடந்தேறத் தலைப்பட் டன. இந்தியாவிலே 1919 ஆம் வருடத்து அரைகுறைச் சீர்திருத்தங்கள் ஆட்சி யமைப்பை ஓரளவு மாற்றிவிட்டன. அவ்வழி, மாகாண அரசாங்கங்களிலே, குறித்த ஓரளவிற்கு, இந்தியர் ஆட்சி பெற்றனர். ஆயின் இம்மாற்றங்கள் பொது மக்களைத் திருத்திசெய்யத் தவறியதுமன்றி, 1920 ஆம் ஆண்டில், ஒத்துழை யாமைப் பெருங் கிளர்ச்சிக்கே வழிவகுத்தன. அக்கிளர்ச்சி இருபதாண்டுப் போராட்டின்பின்னர் உச்சமடைந்து, 'இந்தியாவை விட்டு வெளியேறு' இயக் கத்திற் சென்று முடிந்தது.

இந்து—சின விவகாரங்களிலே, இந்தியத் தேசிய இயக்கத்தினும் பார்க்கச் சீனத்திலே குமிந்தாங்குக் கட்சி தோன்றியமையும், புரட்சிகரமான அதன் பூட்கை 1924-7 வரையில் வளர்ந்தமையுமே கூடிய செல்வாக்குச் செலுத்தின எனலாம். வியட்நாமிலே தேசியவுணர்ச்சியின் வளர்ச்சியில் இக்காரணிகள் எத் தகைய செல்வாக்கை எவ்வாறு செலுத்தினவென்பதை உரிய இடத்திற் பின்னர் ஆராய்வோம். ஆயின் பியறி பாசுக்கரின் 'சீர்திருத்த' முயற்சிகளை அக்காலப் பின்னணியில் வைத்துத் தக்கவாறு மதிப்பிடுவதே இங்கு முக்கியமாகும். அவன் பிரமுகர் கழகத்தையும், மக்கட் பிரதிநிதிகளின் மன்றம் எனப்பட்ட ஒரு சபை யையும் திருத்தியமைத்தான். 'சீர்திருத்தம் பெற்ற' இம்மன்றங்கள் அமைக் கப்பட்டவாறு எவ்வாறென்பதை, தேர்தற் கழகத்தின் அமைப்பிலிருந்து தெளி வாக அறியலாம். தோட்டங்களின் அதிபரும் தூணியதிபன்மாரும், ஓய்வுபெற்ற அலுவலாளரும், தரை கடற்படைகள் குடிப்படைகளினின்றும் ஓய்வுபெற்ற ஆணைபெரு அதிகாரிகளும், வதிவாளர்—முதல்வரால் நியமிக்கப்பட்ட அலு வலாளரும் பிரமுகரும் என்றித்திறத்தோரே தேர்தற் கழகத்தில் இடம்பெற் றோராவர். மேலும், இம்மன்றங்களிலே அரசியற் கருத்துக்களை வெளியிடுதலும் தடைசெய்யப்பட்டது.

சுருங்கக் கூறின், 'வசப்படுத்தத் தக்கோரை (பிரமுகர்கள் என்பாரை) வசப் படுத்தலும்', பிரதிநிதித்துவம் எனும் பொய்க்கோலம் பூண்ட குடியேற்றவாட் சியும் கலந்த ஒரு கலவையே அப்பூட்கையாகும். பிரெஞ்சுப் பூட்கை மிக 'மூற் போக்குடையதாய்' இருந்த காலத்தும், குடியாட்சியில் அவநம்பிக்கையும் ஆட்சியதிகாரத்தை மக்களோடு பகிர்ந்துகொள்ள இணங்காமையுமே அப்பூட் கையிற் குறிப்பிடத்தக்க இயல்புகளாகக் காணப்பட்டன. தமது நிருவாகத்தில்

1. Quoted in *L' Asie Francaise*, March 1926, pp. 108 -13.

மண்டரின்மாரையும் அணைத்துக்கொள்வதே பிரான்சியர் செய்த மிக முற் போக்கான முயற்சியாய் இருந்தது. தேசிய உரிமைகளென மக்கள் தெளிவின்றி உணரும் நலவுரிமைகளுக்கு மாறுக அம்மக்களைப் பேதிக்கவல்லோர் 'உயர்நிலை வகிக்கும் மனிதரே' எனும் மருட்கையால் (குடியேற்றநாட்டு நிருவாகிகள் பிறர்போன்று) அவர்களும் உந்தப்பட்டே இத்தகைய நெறியிற் சென்றுர்கள். அன்னியராட்சிக்கெதிராகப் பொதுமக்கள் கிளர்ச்சி செய்தகாலை, சேர் பட்டம் பெற்ற மேதாவிகளும் முடிதரித்த இராசாக்களும் இந்தியாவிலே துச்சமாக மதிக்கப்பட்டவாறே மன்றங்களில் இடம்பெற்ற இந்த மண்டரின்மாரும் பெஞ் சன் பெற்ற அதிகாரிகளும் மதிக்கப்பட்டார்கள் எனலாம்.

யப்பானியர் இந்து—சீனத்தை 1941 இல் ஆக்கிரமிக்கு முன்னமே பிரான்சி யர் போட்ட 'கணக்குக்கள்' யாவும் எக்கச்சக்கமாய்த் தவறிச் சென்றன. 'இணைவுக்' கொள்கை அதிகரிக்க, தேசிய இயக்கங்கள் அழிந்தொழியும்; தீவிர வாதிகளின் பயன்வறிய எதிர்ப்பு அகல, அதனிடத்திற் பிரான்சொடு ஒத்து ழைக்கும் பூட்கையே தலைதூக்கும் என்றவாறுக அவர்கள் வாதித்ததுண்டு. பிரான்சியரதிகாரத்தை எவ்வுருவிலும் எவ்வடிவிலும் புறம்போக்கி, பூரண சுதந்திரத்தை மீட்டும் பெறல் வேண்டுமெனும் அடிப்படையிலேயே தேசிய வியக்கங்கள் உருவாகி உறுதிப்பட்டன. இந்து சீனத்துக்கு வெளியே, பாரிசு, பாங்கொக்கு, ஒங்கொங்கு, கன்றன், தொக்கியோ ஆகிய மையங்களிலிருந்து, அவ்வியக்கத்துக்கு இலட்சிய ஒருமைப்பாட்டையும் உறுதியான கட்டுக்கோப் பையும் அளிக்கும் வகையில், அது செவ்வையாக நெறிப்படுத்தப்பட்டது. அத னல் இந்து—சீனத்தின் சுதந்திரப் பிரச்சினையைப் பிரான்சு விரைவில் நிரு வகிக்கவேண்டுமென்பது தெளிவாயிற்று.

உலகப் பெரும்போரின் பின்னர் இந்துசீனத்தில் நடந்த அபிவிருத்திகளும், வியற்—மிங்கிற்கும் பிரெஞ்சுப் படைகளுக்குமிடையே நிகழ்ந்த போரும் பற்றி நாம் இங்குக் குறிப்பிடப்போவதில்லை. ஆயின் தூரகிழக்கிலே அரசியலாதிக் கத்தினின்றும் பிரான்சு விலக்கப்பட்டமை நடந்தேறிய காரியமாகி விட்டது.

அதிகாரம் 5

சீயம்

சினப்படைகள் படுதோல்வியுற்று, பீக்கிங்கு வேத்தவைக்கண்ணே ஐரோப் பியராதிக்கம் நிலைநாட்டப்படும்வரையும், மேற்குலக நாடுகளோடு சீயங்கொண் டிருந்த தொடர்புகள் எல்லாவகையாலும் அமைவாயிருந்தன. தளபதி பேணி என்பான் 1926 இலே செய்த பொருத்தனையானது தெளிவான சில நிபந்தனை களை வரையறுத்துக் கூறிற்று: 'சீயம் நாட்டிற்குச் செல்லும் ஆங்கிலக்குடிகள், சீயம் நாட்டுச் சட்டங்களுக்கமைய எல்லாவகையாலும் ஒழுகுதல் வேண்டும். எனின், ஆட்கொலை வழக்காயின், பிரித்தானியக் குடிகள் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படுவர்; பிற குற்றங்களுக்கு கசையடி, தண்டப்பணம், அல்லது சிறைத்தண்டனைக்கு ஆளாவர்; எந்தச் சீய அதிகாரிக்கு மெதிராக மரியாதை யற்ற மொழிபேசுவோர் நாட்டினின்றும் உடனும் வெளியேற்றப்படுவர்'. இதே வகையான பொருத்தனையொன்று 1933 இல் அமெரிக்கரோடு ஒப்பேற்றப்பட் டது. ஆயின் சினத்தில் நிலைமை மாறவே, இங்கும் நிலைமை மாறுதலடைந்தது. 1855 இல் ஒரு பொருத்தனை ஒப்பேற்றிய சேர். யோன் போறிங்கு என்பான் பிரித்தானியக் குடிகளுக்கு ஆணிலப்புறத்துரிமை யெனுந் தத்துவத்தைப் பெற்றதோடு, கிறித்தவத் தேவாலயங்கள் கட்ட அனுமதியும், அபின் இறக்கு மதிக்குப் பூரணச் சுங்கவரி விலக்கும் பெற்றான். பர்மாவில் ஒரு பகுதியைப் பிரித்தானியர் கைப்பற்றியமையாலே, சீயத்தின் எல்லையிலே வெருத்தரும் இரா ணுவ பூதம் இருந்தமை கண்டும் சீய வரசாங்கம் அச்சங் கொண்டது.

அதன் வடவெல்லையிலே புதியவோர் அபாயம் விரைவில் வந்து சூழ்ந்தது. பதினாலாம் உலூயியின் ஆட்சிக் காலத்தில் சீயத்து வேந்தவையிலே 'அன்னிய வர்த்தக மேற்பார்வையாளனுய்' இருந்த கொன்சுதாந்தின் போல்கர் எனும் கிரேக்க வீரனின் மறைமுகமான ஆதவோடு, பிரெஞ்சுப் படைகள் பாங்கொக் கைக் கைப்பற்றின (அக்கால் அது தலைநகராக இருந்திலது). ஆயின், அன்னி யப் படைகளின் வேத்தவைக் கோட்டிகள் கடுமையாய் எதிர்த்தன. போல்கர் கொலையுண்டிறந்தான்; பாங்கொக்கை விட்டேகிய பிரெஞ்சுப் படைகள், இடுக் கண்பல பட்டபின், புதுச்சேரியை ஒருவாறு சென்றடைந்தன (1688). தவறிப் போய இம்முயற்சியின் பின்னர்ப் பிரான்சியராற் சீயம் இன்னற்பட்டதில்லை. எனினும், பிரான்சிய வீரரும் மிசனரிமாரும் அண்மையிலே செய்த முயற்சி களைப் பாங்கொக்கு வேத்தவை விழிப்பாகக் கண்காணித்து வந்தது. ஆயின், மூன்றாம் நெப்போலியன் 1858 இலே தலையிட்டு, 1863 ஓகத்து 11 இல் ஒப்பே றிய பொருத்தனை வாயிலாய்க் கம்போடியாவிலே பிரான்சியராதிக்கம் தாபிக் கப்பட்டபின்னர், இப்பிரச்சினை சீயம் நாட்டிற்கு நேரடியான ஆபத்தை விளைத் தது. கம்போடியாமீது சீயம் தெளிவற்ற மேலாண்மை பாராட்டி வந்தது. கம் போடிய மன்னனைப் பிரான்சியர் நெருக்கத் தலைப்பட்டபோது, அவன் பாங்

கொக்கு வேத்தவையின் உதவியை நாடி, 1863 திசம்பர் 1 இலே சீயத்தோடு ஓர் இரகசியப் பொருத்தனை முடித்தான். இவ்வாறுக, ஒரு சூழ்வியற் போராட்டம் வினைந்தது; அதன்பயனுக பிரான்சுக்கும் சீயத்துக்குமிடையே உடன்படிக்கையொன்று ஏற்பட்டது. அதன்வழி அங்கோர், பற்றம்பாங்கு எனும் மாகாணங்களைச் சீயம் பெற்று, அவற்றுக்கீடாய்க் கம்போடியாமீது தன் கோரிக்கைகளைத் துறக்க இணங்கிற்று. மீக்கொங்கு நதியில் நாவாயோட்டும் உரிமையினையும் பிரான்சு பெற்றது.

இக்கடைசிச் சலுகை மேலுஞ் சிக்கல் விளைவதற்கு ஏதுவாயிற்று. மீக்கொங்கு நதியின் இடது கரைவழியாக அனும் நாட்டின் மலைப்பாங்கான எல்லைவரையும் வியாபித்துள்ள ஒரு பிரதேசம், இந்நூற்றாண்டின் தொடக்க முதலாகச் சீயத்தின் உடைமையாய் இருந்துவந்துளது. இப்பிரதேசத்தைத் தன் கைப்படுத்தி, பிற்றைநாளிலே, தருணம் வாய்த்தவிடத்து சீயத்துக்கெதிராய் ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் இரகசிய நோக்கம் பிரான்சிற்கிருந்தது. முன்னர்க் கூறிய பொருத்தனை கைச்சாத்தாகிய பின்னர், தவுடார்த் தலைமையில், படையெழுச்சி யொன்று ஆயத்தமாயது. முன்னம் 1863 ஆம் ஆண்டுப் பொருத்தனையாற் சீயத்தின் உடைமையெனக் கணிக்கப்பட்ட அங்கோர், பற்றம்பாங்கு மாகாணங்கள்மீதும், சீயத்துக்குச் சொந்தமான பிறசில பிரதேசங்கள் மீதும் பிரான்சு உரிமை கோரத் தலைப்பட்டது. இந்து-சீனத்திலும், தொங்கிங்கு மாகாணம்பற்றிப் பீக்கிங்கு வேத்தவையோடும் பிரான்சிற்குப் பல இடர்ப்பாடுகள் இருந்தமையாலே, காரியப்பாடான மூயற்சி யாதுஞ் செய்யப்பட்டிலது. எனினும், சூழ்வியன்முறையாலும் பிறவாற்றாலும் பாங்கொக்கு நெருக்கப்பட்டது. சீயத்தை நடுநிலைப்படுத்தும் ஒரு யோசனை பிரித்தானியரின் எதிர்ப்புக் காரணமாய்த் தோல்வியுற்றது. சீயத்தை மருவிய மலாய் நாட்டு எல்லையிலும் சானிலும் பிரித்தானியரின் நாடுபற்றுந் திட்டங்கள் இன்னும் நிறைவேறுமையே அவ்வெதிர்ப்புக்குக் காரணமாகும். இந்து-சீனத்தைச் 'சாந்திப்படுத்தல்' பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கூற்றில் ஒருவாறு முடிவுற்றபின்னர், சீயத்தின்மீது கவனஞ் செலுத்தப் பிரான்சிற்கு அவகாசங் கிடைத்தது. 1893 இல் ஓர் எல்லைச் சம்பவங் காரணமாக பிரான்சியர் சிலர் உயிரிழந்தகாலை, வேண்டிய தலைக்கீடும் வந்து வாய்த்தது. முன்னைநாளிலே பலங்குறைந்த நாடுகளோடு பேரரசுகள் புழங்கும் போது எடுத்துக்காட்டும் தலைக்கீடுகட்கு அவ்வெல்லைச் சம்பவம் ஓர் உதாரணமாகும். பாங்கொக்குமீது பீரங்கிப் பிரயோகம் செய்யப்படும் எனப் பிரான்சு அச்சுறுத்தி, மீக்கொங்கு நதிக்குக் கிழக்கேயுள்ள பிரதேசம் முழுவதையும் அந்நதிக்கண் அமைந்த தீவுகளையும் கொடுத்திடுமாறும், மேற்குப்புறத்திலே பதினைந்துமைல் தூரத்துக்கு இராணுவப் படையும் காவலர்ப்படையும் பின்னிடைதல் வேண்டுமென்றும், பெருந்தொகையான நட்டஈடு அளித்திடல்வேண்டுமென்றும் பிரான்சு வற்புறுத்திற்று. அம்மட்டோ! பிரான்சு தான் விரும்பிய இடங்களிலே, ஆணிலப்புறத்துரிமை படைத்த காவற்றூதகங்களைத் திறத்தற்கும் உரிமை கோரிற்று.

இப்பொருத்தனையின் ஒழுங்கின்படி (1893), சீயமும் அனும் நாட்டின் வினைதமான முறையில் மேலும் விரிவாக்கப்பட்டதனால், பிரான்சியரை மாத்திரமன்றி, பிரான்சின் ஆசியக்குடிகளையும், இன்னும் பிரான்சியக் காவற்றூதகங்களிலே தம்மைப் பதிவுசெய்த சீனரையும் தழுவிச் செல்வதாய் அமைத்திருந்தது. இவ்வாருகப் பிரான்சியரின் பாதுகாப்பிற்கு உரிமை பெற்றோரின் தொகை, மூவாண்டுக் காலத்துள் 200 இலிருந்து 30,000 எனும் படியாய்ப் பெருகிற்றென்ப. இவ்வாறு உருத்துநின்ற ஆபத்தினின்றும் சீயம் நாட்டை இருகாரணிகள் காத்தளித்தன. பிரான்சொடு யாதும் பொதுவெல்லையை வைத்திருக்காகாதெனப் பிரித்தன் பூண்டிருந்த உறுதி, முதற் காரணியாகும். ஆசியாவிலே பிரித்தானியரின் பூட்கைக்கு இடைப்படு நாடுகள் தேவையாயிருந்தன. ஆதலின் சீயத்தை அந்நிலையில் வைத்துப் பாதுகாத்தல் வேண்டும். மன்னன் சூலாலங்கோன் காட்டிய விவேகமும் சாதுரியமும் ஆற்றலும் இரண்டாவது காரணியுள் அடங்கும். சீயம்நாடு மேலுஞ் சிக்கல்களில் அகப்படாவாறு தன்னெறி தேர்ந்து அவன் சென்றான். பர்மிய எல்லையைப் பிரான்சு அணுகாது தடுத்தலைப் பிரதான இலக்காய்க் கொண்டே பிரித்தன், பிரான்சின் விரிவுக்கொள்கைக் கெதிராகச் சீயத்திலே தலையிட்டது. ஆயின், அப்பூட்கை 1895 சனவரி 15 இல் ஆங்கில—பிரான்சிய ஒப்பந்தம் நிறைவேறுதற்கு வழிவகுத்தது. இவ்வொப்பந்தம் மத்திய சீயத்தை நடுநிலைப்படுத்திற்று. ஆயினும், அந்நாட்டின் கிழக்குத் தெற்குப் பகுதிகள் தெளிவாக நிருணயிக்கப்படாது வாளாவிடப்பட்டன. மலாய்சான் பிரதேசங்களிலே பிரித்தனும், தனது குடியேற்றத்தின் எல்லையையடுத்த பிரதேசத்திற் பிரான்சும் தத்தம் ஆட்சியைப் பரப்ப ஏண்ணியிருந்தன. இவ்வொப்பந்தமானது சூலாலங்கோன் நாடிய அவகாசத்தை அவனுக்கு அளித்தது. அவன் வியத்தகும் மன்னனே என்பதற்கையமில்லை. பல தேயங்களுக்கும் பிரயாணஞ் செய்திருந்த அம்மன்னன், மேலைநாடுகளுக்குஞ் சென்று, அவற்றின் வலிக்கு மூலகாரணமாய் அமைந்தவற்றைக் கருத்தூன்றிக் கவனித்திருந்தான். அடிமையொழிப்பு உட்பட, இன்றியமையாத பல சீர்திருத்தங்களை அவன் புகுத்தினன். நாட்டின் அரசாங்கமும் திருத்தியமைக்கப்பட்டது. ஒரு சட்டக் கழகமும், அமைச்சரவையும், தற்கால அரசாட்சியின் பிற சாதனங்களும் 1895 இல் உருவாக்கப்பட்டன. அடுத்த பத்தாண்டுக்காலத்தில் அவன் புகையிரதப் பாதைகள் திறந்தும், தந்தியும் தொலைபேசியும் அமைத்தும், நாணயமுறையைப் புதுக்கியமைத்தும், நவீன அஞ்சல் முறையை நிறுவியும் தனது நாட்டை நவீனமயமாக்குதற்குப் பெரிதும் உழைத்தான். புதிய தண்டநீதிக்கோவையும் யாக்கப்பட்டது. அது 1908 ஆம் ஆண்டளவிலேயே செயற்படத் தொடங்கிற்றாயினும், சட்டநிருவாகம் சாலவுந் திருந்திவிட்டமையாலே, ஆணிலப்புறத் துரிமையின் அதிகாரவெல்லையைச் சுருக்குமுகத்தாற் சீய வரசாங்கம் பிரித்தலோடு ஒரு புதிய உடன்படிக்கையும் செய்யக் கூடியதாயிற்று.

இம்மாற்றங்கள் பிரான்சுக்குக் கசப்பையே விளைத்தன. சீயம் முழுவதையும் தன்பாதுகாப்புக்குள் அடக்குதல் வேண்டும்; அஃது இயலாததாயின், சீயம் நாட்டில் இயன்றவரை ஒரு பெரிய பிரதேசத்தைக் கவர்தல் வேண்டும் எனும்

பேராசையை ஒளிப்பு மறைப்பின்றி வளர்த்து வந்த பிரான்சு அம்மாற்றங்களை வரவேற்கத் தவறியது வியப்பன்று. பிரித்தானியரின் எதிர்ப்பு இத்தகைய பூட்கைக்குப் பங்கம் விளைத்தது. ஆயினும், ஐரோப்பாவில் நிலைவரஞ் சீரிழிந்தமையால், பிரித்தனும் பிரான்சும் கிழக்கிலே தம் போட்டியை அமைதியாகத் தீர்க்க வேண்டியவாயின. இதனாற் பிரான்சு சீயத்திலே ஓரளவு சுதந்திரமாகத் தலையிடுதற்கு வாய்ப்புப் பெற்றது. அவ்வாய்ப்பைப் பிரான்சு நன்கு பயன்படுத்தி, பாங்கொக்கைப் பலவந்தஞ் செய்து, சில பிரதேசங்களையும் மேலுஞ் சில சலுகைகளையும் அளித்திடுமாறு செய்தது. இவ்வாறாக, 1904 இலே, பிரான்சு தனது ஆணில அதிகாரத்தைப் பெரிய ஒரு பிரதேசத்தின்மீது பரப்பியதோடு, 'நடுநிலைப்படுத்திய ஒரு வலயமும்' உண்டாக்கப்பட்டது. மீண்டும் ஒருகால் 1907 இல் அப்பொருத்தனை மாற்றியமைக்கப்பட்டதன்வழி, அந்த 'நடுநிலை வலயமும்' பிரான்சின் கைப்பட்டது. இதற்கீடாகச் சீயம் பெற்ற கைம்மாறு ஒன்றே : பிரான்சின் ஆசியக் குடிகளைப் பொறுத்தவரை, ஆணிலப்புறத்துரிமை பத்தாண்டுக்காலத்தில் ஒழிக்கப்படவேண்டுமென விதிக்கப்பட்டது.

தென்பாகத்திலே தானுஞ் சில திட்டங்களைக் கருதியிருந்த பிரித்தன், பிரான்சு வலித்து பெற்ற இவ்விணைப்புக்களுக்கு இணங்கிற்று. வடதிசைக் கண்ணை பிரான்சியரின் ஆக்கிரமிப்புக்கு இணங்கியதற்கீடாக, பிரித்தனனது கெலந்தான், திரெங்கண்ணு, கேடா எனுமிந்த அரசுகளைப் பெற்றது. இவ்விரு நாடுகளும், யாதுந் தலைக்கீடுதானும் இல்லாது, 25,000 சதுரமைலளவான பிரதேசத்தைச் சீயத்திடமிருந்து கவர்ந்து தம்மிடைப் பகிர்ந்து கொண்டன. அத்துணைத் தியாகத்தோடு சீயம் நாடு உயிர் தப்பியிருந்தது. அதற்குக் காரணம் பேரரசுப்புலிகள் பசுக்களாகத் திடீரென மாறியதன்று. புதிய இப்பிரதேசங்களைச் சீரணித்து, புதிய ஆக்கிரமிப்புக்குத் திட்டந் தீட்டுமுன்னரே, உலகப் பெரும்போர் என்னும் உருவில் (1914-18) ஊழ்வலி உருத்துவந்து மேனாடுகளை மீக்கொண்டமையே அதற்குக் காரணமாகும். ஆறுவது இராமனுடைய ஆட்சியிலே சீயம் நாடானது அந்த அவகாசத்தைப் பயன்படுத்தித் தனது நிலையை மேலும் வலியுறுத்திற்று. மாறுதலடைந்துவிட்ட சருவதேச நிலையை உணர்ந்து, 1917 இல் அது சேர்மனிக்கெதிராய்ப் போர்ப் பிரகடனஞ் செய்து, வேர்சேய் மாநாட்டிலே தனக்கென ஓரிடம் பெறுதலை உறுதியுஞ் செய்தது.

நாலாம் பாகம்

இரசியாவும் தூரகிழக்கும்

அதிகாரம் 1

புரட்சிக்கு முன்னர்

சீனத்தொடு இரசியா (சார் மன்னர் காலத்திலாயிலென், சோவியற்று ஆட்சியிலாயிலென்) கொண்ட தொடர்புகளை ஆராயும்போது, அந்நாடுகளிரண்டும் மொங்கோலியரின் ஆட்சியில் இருந்தவை என்பதை நினைவிற்கொள்ளல் வேண்டும். 'யுவான்' வமிசத்தை விரட்டியதைத் தொடர்ந்து சீனமும், 'பொற் குழாம்' முறிவடைந்ததைத் தொடர்ந்து இரசியாவும், ஏறக்குறைய ஒரேகாலத்திலேயே அன்னியத்தளையினின்றும் விடுதலை பெற்றன வென்பது குறிப்பிடத் தக்கது. அவ்வழி, பதினைந்தாம் நூற்றாண்டிலே சீனத்தில் மிங்கு வமிசம் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டிருந்த காலத்தும், பேரிளங்கோ மூன்றும் ஐவன் (1462-1505) அனைத்து இரசியாவுக்கும் தன்னைச் சார்மன்னனாகப் பிரகடனஞ் செய்த காலத்தும், யூறல்மலை தொட்டு மொங்கோலியா வரையும் பரந்திருந்த பிரதேசமானது ஓர் அரசியல் வெறு வெளியாகவே காணப்பட்டது. 'பொற்குழாத்தின்' தலைவன் கானுக்கு, மூன்றாம் ஐவன் திறையளிக்க மறுத்தது 1480 ஆம் ஆண்டிலேயாம். 1483 ஆம் ஆண்டு முதலாக இரசிய மக்கள் சைபீரியாவிற்குட் பரவுவதைக் காண்கிறோம். ஆதியில் ஒகொற்றுய்ப் பானையத்துக்குச் சொந்தமாயிருந்த சிபிர் நாட்டுக் காரைசு, 1555 ஆம் ஆண்டளவில் மொசுக்கோவின் அதிகாரத்துக்கு அடிபணிவதைக் காண்கிறோம். அப்பால், இம்மக்கள் வெள்ளம் கிழக்கு நோக்கிப் பாயத் தலைப்பட்டது. யூறல்மலைகளை மருவியுள்ள பிரதேசங்களில் மக்கள் மெல்ல மெல்லக் குடியேறினர். இவ்வாறாக, அந்த வெறு வெளி மக்கள் வாழும் பிரதேசமாயிற்று. சைபீரியாவிற் பாய்ந்து செல்லும் பெருநதிகள் வாயிலாக, பரந்த தெப்பு வெளிகளை மொசுக்கோ மக்கள் கட்டியாண்டனர். சிபிர் நாட்டுக் கானரசு வீழ்ச்சியுற்று ஒரு நூற்றாண்டு முடியுமுன்னர், மாமன்னன் கானுடைய உடைமைகள் அனைத்தையும் தன்வயப்படுத்தி பசிபிக்குவரையும் மொசுக்கோ தனது ஆட்சியைப் பரப்பிக் கொண்டது.

வடபுலத்தை இரசியர் இவ்வாறு அடிப்படுத்தி ஆங்குக் குடியேற, சீனரும் தென்புலத்தே இத்தகைய ஒரு முறையினைப் பின்பற்றுவாராயினர். உலகத்தை வென்றடிப்படுத்திய செங்கிசுக்கானும் அவன்றன் குலத்தோரும் தோன்றிய தாயகமானது சீனரின் ஆட்சியுள் மெதுவாகப் புகுந்தது. மிங்கு வமிசம் சீரழிந்து மஞ்சுப் பேரரசு தலையெடுத்த காலத்தில், பீக்கிங்கு அரசாங்கமானது எனாதரையும் கல்கரையும் தன் கைக்கெட்டிய பிற குலத்தோரையும் தன் அதிகாரத்துக்கு அடிப்படுத்திற்று. ஆமூர்ப்பிரதேசத்திற் சீன வதிகாரஞ் செப்பமாய்ப் பரவிற்று. இவ்வாறாக, மாபெரிய கான் மன்னரின் உடைமைகள் யாவற்றையும் மொசுக்கோவும் பீக்கிங்கும் தம்மிடை பகிர்ந்தன. முன்னர் திறையளிக்கும் பெருநாடுகளாயிருந்த இரண்டும், இப்போது அந்த மேலரசின் அதிகாரத்தை வகிக்கத் தொடங்கின.

கான் மன்னரின் பேரரசு இவ்வாறுக மொசுக்கோவிற்கும் பீக்கிங்கிற்கு மிடையிற் பிரிவினைப்பட்டமையாலே, மூன்றாவது உரோமாபுரியின் சீசரும் வானுலக மைந்தனும் ஒருவரையொருவர் நேரெதிர் நோக்கினர். தரைப் பெரும் வல்லரசுகளாகிய இவ்விரண்டும், பிணக்கிற்கிடமான பெரும் பிரதேசங்களைத் தத்தமதென்று உரிமைகோரின. உண்மையில் வரலாற்றின் அடிப்படையில், அப்பிரதேசங்கள் அவையிரண்டுக்குமே சொந்தமாகா. ஆதியில் ஆமூரைக் கடந்து பரவியோர் மஞ்சுக்களேயல்லாது சீனர் அல்லர். 1616 அளவில் ஆமூரைக் கடந்துசென்ற மஞ்சுக்கள், ஒகொட்சுக்கு கடலை 1636 இல் அடைந்துவிட்டனர். மேற்கில் நேட்சின்சிக்கு வரையும் அவர்கள் உரிமைபாராட்டினர். இரசியரும் அதே காலத்தில் ஆமூர்நதியை அடைந்து விட்டனர்—அவருடைய கோட்டியொன்று 1636 இல் அந்நதியைக் கடந்தது. இதற்கிடையில், மஞ்சுக்களின் ஊக்கமுமுவதும் சீனத்தை வென்றடிப்படுத்துவதில் திரும்பிச் சென்றது. இதனால் அவர்கள் வடதிசையிலே மேலும் மூன்னேறிச் செல்லல் தடைப்பட்டது. ஆயினும் சீனப் பேரரசின் மாட்சிமை, அன்னரின் உரிமைக்கோரிக்கைகளை வலியுறுத்திற்று. இவ்வழி இரசியரின் விரிவுக்கு ஓர் வரம்பிடப்பட்டது.

பெருமதிலுக்குத் தென்புறத்தே மஞ்சுக்கள் தம் அதிகாரத்தை உறுதிப்படுத்திய காலத்தில், இரசியரோ குறிப்பாக யாக்கா பவ்லோவு கபரோவு என்பான் தலைமையிலே அடுத்தடுத்துப் படையெழுந்து சென்று, ஆமூர்ப் பகுதிக் குலத்தோரை தம் ஆட்சிக்குட்படுத்துவாராயினர். நீரச் செயல் நாடிய தனிப்பட்டோரை, 'தனிப்பட்ட முறையிலே' படையெழுந்துசென்று இப்பணியினை முற்றுவிப்பதே இரசியரின் பொதுமுறையாயிருந்தது. சிங்கு வமிசமானது பீக்கிங்கிலே தனது நிலை செவ்வனே நிறுவியபின்னர், வடபால் நிகழ்ந்த மாற்றங்களிலே கவனஞ் செலுத்தத் தலைப்பட்டது. உண்ணுழைந்த இரசிய வீரரைத் தடுக்கும்பொருட்டு முதன்முதலாக 1652 இல், சுங் சீ என்பான் தலைமையிற் படையொன்று அனுப்பப்பட்டது. ஆயின் அப்பிரதேசத்திலே இரசியரின் வலியைச் சீனர் சற்றுக் குறைவாகவே கணித்துவிட்டனர். 1653 இல் இருதிறப் படைகளும் மீண்டுஞ் சந்தித்தன. விட்டுவிட்டுத் தொடர்ந்த போராட்டின் பின்னர், 'இரசியப்படையெழுச்சிக்குத்' தலைமைதாங்கிய ஒனுபிறியா தெப்பஞை வும் அவனது சிறுதானையும் தோல்வியுற்றனர்; அத்தானையிற் பெரும்பாலோர் செருக்களத்திற் கொலையுண்டிறந்தனர். சீனப் பதிவேடுகள் பின்வரு மொழிகளால் அச் சம்பவங்களை எடுத்துக் கூறும்:

'பன்னிரண்டாவது ஆண்டிலே (அரசனுட்சியில்) சேனபதி மிங்கு தன்படைகளோடு பீக்கிங்கிலிருந்து புறப்பட்டான். அவன் அவர்களை (உலோச்சா-இரசியரை) கூ-மாரிலும் பிறவிடங்களிலும் தாக்கிச் சிறிது வெற்றி கண்டான். ஆயின், தக்க உணவுவசதி இல்லாமையாலே அவன் விரைவிற் பின்வாங்கினன். பதினாலாவது ஆண்டிலே, தற்காப்பு ஆணையாளியாகிய சார்குடா அவர்களைத் தோல்வியுறுத்தினன். அடுத்த ஆண்டிலும் அவன் தோல்வியுறுத்தினன். பதினேழாவது ஆண்டிலே, சார் குடாவின் மைந்தன் பாகாய் அவர்களை மீக்

கொண்டு பெருவெற்றி பெற்றான். சீனப்பதிவேடுகள் மேலும் கூறுவதாவது, 'உலோச்சாவை அடிமைப்படுத்தாது எங்கள் படைகள் பின்னிட்டன. அவர்கள் தொடர்ந்து இடையிடையே வந்து தோற்றினர்.'

மாவேந்தனுகிய காங்கு இசி என்பானுடைய ஆட்சியொடு, புதியவோர் அத்தியாயம் ஆரம்பமாகின்றது. பதவியால் மூத்த ஒரு சேனுபதியின் தலைமையிலே எல்லைக் காவனிலையங்கள் பலவற்றை அவன் தாபித்தான். சிறிது காலமாகப் பின்வாங்கியிருந்த இரசியரும், இராணுவ வல்லரசொன்று வந்துற்றவாற்றை உணர்ந்து, தனிப்பட்ட படையெடுப்புக்களை அனுப்பும் வழக்கத்தைக் கைவிட்டனர். நேட்சின்சிக்கு, அல்பசீன் எனும் இரு நகரங்களை அவர்கள் தாபிக்கத் தொடங்கினர். அவையிரண்டும் பிற்கால வரலாற்றிலே சிறப்பிடம் வகித்தற்குரியவை. நேட்சாநதியின் கழிமுகத்திலே நிருமாணிக்கப்பட்ட நேட்சின்சிக்கு நகரமானது வலிமை படைத்த ஒரு கோட்டையாகும். இவ்விடயத்தைக் கருத்தூன்றிக் கவனித்த காங்கு இசி வேண்டிய ஆயத்தங்கள் செய்தான். இராணுவத் தளங்களும் அஞ்சற் போக்குவரத்து முறையும் அமைத்தான்; ஆற்றிற் போக்குவரத்துச் செய்தற்கும் வசதிகள் செய்தான்; கிறின் எனுமிடத்திற் கலத்தானமும் கூட்டினன். இவ்வாறுக ஆயத்தஞ் செய்த காங் இசி உண்ணுழைந்த இரசியரைத் தண்டிக்கும் பொருட்டுப் படையூர்ந்து சென்றான். அல்பசீன் 1685 இற் கைப்பற்றப்பட்டு, கோட்டை அழிக்கப்பட்டது. உண்மைநிலைவரத்தை உள்ளவாறுணர்ந்த இரசிய அரசாங்கம், தனிப்பட்ட வீரரின் மடமையால் விளைந்த ஓர் எல்லைச் சம்பவமே அதுவெனச் சாதுரியமாகப் பாவித்து, ஆமூர் எல்லைப் பிரச்சினையைப் பீக்கிங்கு அரசாங்கத்தோடு பேசித் தீர்க்குமுகமாகத் தூது வரை நியமனஞ் செய்தது.

இரசியரும் சீனருமாகிய இவ்விருதிறத்தாரும் மாற்றூரின் வலியும் மூல வளங்களும்பற்றி அக்காலத்தில் ஒக்கவே அறியாதிருந்தனர் என்பது உன்னிப் பார்க்கவேண்டிய ஒரு விடயமாகும். சீனப் பேரரசுபற்றித் தெளிவற்ற சில கருத்துக்களையே கொண்டிருந்த சார் மன்னன் தமது மேலாண்மையை ஏற்றிடுமாறு வானுலகமைந்தற்குக் கட்டளை விடுத்தான். எஞ்ஞாதரும் கல்கரும் போன்ற வலிமை படைத்த ஒரு குலத்தோரே உட்புலத்து மிலேச்சரெனக் கருதிவந்த காங் இசியும், மொசுக்கோ அதிபன் பீக்கிங்கிற்குத் திறையளித்தல் இயல்பாக நிகழவேண்டியதே யென எதிர்பார்த்தான். முன்னரும் (1655 இல்) சார்மன்னன் திறையளிக்குந் தூதொன்றைப் பீக்கிங்கிற்கு அனுப்பியது உண்டெனவும் அவன் உரிமை பாராட்டினன். தியோடர் பைக்கோபின் தலைமையிலே இத்தகைய தூதொன்று பீக்கிங்கிற்கு வந்தது உண்மையே. பேரரசன் தவிர்ந்த பிறனெவனுக்கும் மரியாதை செலுத்தவும் சான்றோலை காட்டவும் தூதமைச்சன் மறுத்தமையாலே, நடைமுறைபற்றி உடன்படிக்கை யாதும் ஏற்பட்டிலது. அடுத்துச் சென்ற தூதமைச்சன் ஐவன் புலிலியேவைப் பேரரசனே வரவேற்றான் போலத் தெரிகிறது. பட்லியின் கூற்றுப்படி, சீனர் விடையிறுத்தவாற்றை இர

சிய அறிக்கை வருமாறு எடுத்துரைக்கின்றது : 'நீவிர் அனுப்பிய திறையினை யாம் ஏற்றுக்கொண்டோம்; அதற்கீடாக யாம் எமது கொடைகளையும் சன்மானங்களையும் நமக்கு அனுப்புகின்றோம்[1]'.

இவ்வாறிருப்ப, 1670 இற் சார் மன்னன் காங் இசிக்கு எழுதிய நிருபத்திலே, சீனப் பேரரசன் தனக்குத் திறையளிப்போனுதல் வேண்டுமெனக் கோரியது சற்று வியப்பூட்டுவதாகும். அந்நிருபத்தின் மொழிபெயர்ப்பு வருமாறு :

'பெரிய, சிறிய, வெள்ளை இரசியா அனைத்துக்கும் ஏகாதிபதியும் பெரும்பிரபுவும் பேரிளங்கோவுமான அலெக்சி மிக்கயிலோவிச்சுக்குப் பத்திமை செலுத்துகின்ற சார்மாரும் மன்னன்மாரும் பற்பலர் உளர். அப்பெரும்பிரபு அவர்களுக்கெல்லாம் நம் சன்மானங்களையும் அருளையும் இனிதுவந்து அளிக்கின்றார்.'

'பெரிய, சிறிய, வெள்ளை இரசியா அனைத்துக்கும் ஏகாதிபதியும் பேரிளங்கோவுமான அலெக்சி மிக்கயிலோவிச்சின் அருளையும் சம்மானங்களையும் அவ்வாறே பொக்டோய் சாரும் (சீனப் பேரரசனும்) நாடிப்பெற்று, மாட்சிமை தங்கிய சாரின் பாதுகாப்பை ஏற்குதல் வேண்டும்.'

அவ்வாறு ஏற்கின், பல இராச்சியங்களுக்கு உரித்தாளியும் அதிபரும், பெரிய, சிறிய வெள்ளை இரசியா அனைத்துக்கும் ஏகாதிபதியும் பேரிளங்கோவுமான அலெக்சி மிக்கயிலோவிச்சு, பொக்டோய் கானுக்குச் சம்மானங்கள் அனுப்பி, அளிமிக்க தமது ஆதரவில் வைத்து, பகைவரிடமிருந்து அவனைப் பாதுகாப்பர். அதே வேளையில், பொக்டோய் கான் மாட்சிமைதங்கிய சாரின் கைவசப்பட்டு, பெரும்பிரபுவுக்குத் தவருது திறையளித்து, பெரும்பிரபுவின் குடிகளும் தன் குடிகளுமாகிய இருதிறத்தாரும் சுயாதீனமாக வர்த்தகஞ் செய்ய அனுமதித்தல் வேண்டும்.

'பொக்டோய் கான் இவ்வழித் தீர்மானிப்பதை, இத்தூதுவர் வாயிலாக மாட்சிமைதங்கிய சாருக்கு அறியத்தருக'.[2]

இந்நிருபத்தின் உட்கிடை அறிவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஏனெனில், பெரும்பிரபு, மாட்சிமைதங்கிய சாரின் தூதுவனே வானுலகமைந்தனது சமூகத்திலே தாழ்ந்து பணிவதையும், எல்லைப்புறத் தொந்தரவுபற்றிக் கண்டிக்கப்படுவதையும் காண்கிறோம். இத்தூது யாதும் பயன்பெறுது மீண்டது. அடுத்த தூதம் (1675, மே 15) நிக்கொலாய் பாதரி என்பான் தலைமையிற் சென்றது. இரு பேரரசர்க்குமிடையே நிலவவேண்டிய உபசாரமுறையை முடிவாக நிருணயிக்க வேண்டுமெனவும், பாலங்கட்டும் சீன நிபுணர் சிலர் இரசியாவுக்கு அனுப்பப்படல் வேண்டுமெனவும் அத்தூது விரும்பிற்று.

1. Baddley : *Russia, Mongolia and China*, pp. 167 —8.

2. John Dudgeon : *Historical sketch of the ecclesiastical, political and commercial relations of Russia with China*. Peking, 1872.

ஆரம்பப் பேச்சுக்களின்போதே, இம்முறையும் இவ்விணக்கப் பேச்சுக்கள் முறிவடைந்தன. சீனர் அக்கறை கொண்டிருந்த ஆமூர்ப் பிரச்சினை இணக்கப் பேச்சில் இடம்பெறுமையாலும், இரசியத் தூதுவன் 'உமது இறையோனுக்கென அளிக்கப்பட்ட சன்மானங்களை, முழந்தாளிட்டு ஏற்க மறுத்துப் பணிவு காட்டத்' தவறியமையாலுமே, இப்பேச்சுவார்த்தைகள் மீண்டும் முறிவடைந்தன.

அல்பசின் கோட்டை அழிக்கப்பட்டபின், சார் மன்னனின் செம்மாப்புப் பங்கமடைந்தது. இதுகாறுந் தொடர்புபூண்டு புழங்கிவந்த பிற அரசுகள் போலச் சீனத்தைக் கணிக்கமுடியாதென்பதை இரசிய வேத்தவை உணர்ந்து, முறையான ஒரு தூதுக்குழுவை அனுப்பவும், இயலுமாயின் இணக்கப் பேச்சுக்களாற் பிரச்சினைகளைத் தீர்க்கவும் தீர்மானித்தது. மாவேந்தன் பீற்றர் தெரிந்தனுப்பிய தூதமைச்சன் தியோடர் அலெக்சிவிச்சு கொலோவின் என்பான் செலசின்சிக்கை 1689 ஓகத்தில் வந்தடைந்தான். ஏறக்குறைய அதே காலத்தில் இளவரசன் சொங்கோ—தூ என்பான் தலைமையில், உயரதிகாரிகள் பிறரையுங் கொண்டதாய், யேசுதரும் கேபிலனும் பெரேயிராவும் பேச்சுமொழி பெயர்ப்பாளராய் உடன்வர, சீனத்தூதுக் குழுவும் ஆங்கு வந்து சேர்ந்தது. ஒவ்வொரு கட்சியும் மற்றையதற்கு ஏற்பிலாக் கோரிக்கைகளை வற்புறுத்த, மாநாடு சிலகாலம் இழுபறிப்பட்டது. இறுதியில், சீனர் தமது உறுதிப்பாட்டையும் வலியையுங் காட்டிய பின்னர் ஓர் உடன்படிக்கை ஒப்பேறியது (1689, ஓகத்து 27).[2] இதுவே நேட்சின்சிக்குப் பொருத்தனையாகும். அது விதித்த நியதிகளின்படிக்கு இரு பேரரசுகளுக்குமிடைப்பட்ட எல்லையானது, ஆறுகளின் போக்கைத் தழுவி, ஆகுன் நதியின் தோற்றுவாயிலிருந்து வடக்கே அமூர் நதியின் வழியாக, உதியாற்றின் தோற்றுவாய்வரை வரையறை செய்யப்பட்டது. உட்புற, வெளிப்புறக் கின்கான் மலைகளுக்கிடையே அமைந்துள்ள உதிநதிப் பள்ளத்தாக்கு நடுநிலைப் பிரதேசமாகப் பிரகடனஞ்செய்யப்பட்டது. அல்பசினிலிருந்த இரசியக் கோட்டை முற்றாக அழிக்கப்பட்டது.

சீனத்துக்கும் ஓர் ஐரோப்பிய நாட்டுக்குமிடையே முதன்முதலாக ஒப்பேறிய இப்பெரும் பொருத்தனை, 150 ஆண்டுக் காலம் தொடர்ந்து பேணப்பட்டு, தென்றிசை நோக்கி இரசியா விரிவடைவதைத் தடுத்துவைத்தது. இக்காலத்திலே, யப்பானோடு வர்த்தகத்தொடர்புகள் கொள்ளுதற்கு இரசியர் மிகச் சாவதானமாக முதன்முதலாய் முயற்சி செய்தனர். ஒகொட்சுக்கிலே தளம் அமைத்த இரசியர் (1649), அப்பிரதேசத்தை ஆராய்ச்சிசெய்தனர். யப்பானுக

1. இவ்விணக்கப் பேச்சு வெற்றியடைந்ததற்குக் கேபிலியனைப் பெரிதும் பாராட்டல் வேண்டும். சீனப் பிரதிநிதியான இளவரசன் சொங்கோ-தூவுக்கு அவனே உசாத்துணைவனுக விளங்கினன்.

கண்மையாக குரைல் தீவுகள் இருந்தவாற்றை அற்றசோவு என்பான் 1700 இல் மொசுக்கோவுக்கு அறிக்கை செய்தான். அத்தீவுகட்கு 1713-14 வரையில் இரசியர் வந்து போயினர். சக்காலின் தீவில் 1714 இல் இரசியர் கால் வைத்தனர். போலந்து நாட்டினனனை பெனியோவிசுக்கி[1] என்பான் செய்த துணிவுடைப் பயணம் இடையில் நிகழ்ந்த சுவையான ஒரு சம்பவமாயினும், அதனால் ஒரு முக்கிய பயனும் விளைந்தது. இரசியாவின் விரிவுப்பூட்கைபற்றி அவன் யப்பானியருக்கு எச்சரிக்கை செய்தான். இரசிய ஆள்பதியான சபேரியா என்பான் 1792 இல் ஓர் தூதுக்குழுவை அனுப்பியும், அது பயனடைந்திலது. இத்தகைய முயற்சிகளைக் கண்டு, கரையோரப் பாதுகாப்பின் அவசியத்தை யப்பான் உணர்ந்தது. சைபீரியப்புறத்தில் நடப்பனபற்றிச் சோகுனும் அவனது அரசாங்கமும் விழிப்பாயிருந்தனர்.

நேட்சின்சிக்குப் பொருத்தனையின் பின்னர், இரசியாவும் சீனமும் பொதுவாக நேயபான்மை பூண்டிருந்தன. ஆயினும் வெவ்வேறு காலங்களிலே, ஆமூரில் இரசியர் நாவாயோட்டும் பிரச்சினை எழுந்ததுண்டு. இவ்வழி, சீனப்பதிவுச் சான்றுகளின்படி, 1757 இலே, 'ஆமூர்வழியாக உணவுப் பொருள்கள் ஏற்றிச் செல்லும் உரிமையை இரசியர் கோரினர். அது பொருத்தனைகளை மீறுவதாகுமெனக் கருதிப் பேரரசன் (சியன் லுங்கு) அனுமதி மறுத்தான்'.

இரசியத் தூரகிழக்குப் பூட்கையிலே தீர்க்கமான முதல் நடவடிக்கை, சார் மன்னன் நிக்கலசின் காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. முப்பத்தெட்டு வயதினனை நிக்கொலேவிச்சு முறவியேவு என்பானை 1847 இலே கிழக்குச்சைபீரியாவின் ஆள்பதிநாயகனாக அவன் நியமித்தான். இந்த முறவியேவுவிடத்து வெல்சிலியின் வேணவாவும் தல்கவுசியின் ஆற்றலும் ஒருங்கே பொருந்திக் காணப்பட்டன. அப்பிரமுகர் இருவரினும் மேலாக, ஆசிய வரலாற்றினை ஆக்கியோன் இவனே எனலாம். ஆமூரில் இரசியரின் ஆதிக்கத்தைத் தாபிப்பதே அவன் முதற் குறிக்கோளாயிருந்தது. இவ்விலக்கின் பொருட்டு, அவன் வகனேவு எனப் பெயரிய அதிகாரியை ஆமூருக்கு அனுப்பிவைத்தான். ஆயின் சென்ற வகனேவு பற்றிச் செய்தி யாதுங் கிடைத்ததில்லை. பெருநோக்குடையோனகிய

1. போலந்து நாட்டைச் சேர்ந்த விழுமியோனை பெனியோவிசுக்கியென்பான் போரின் போது ஐரோப்பாவிலே இரசியரால் பிடிக்கப்பட்டு, கம்சட்கா எனுமிடத்திற் சிறைவைக்கப்பட்டான். ஆயின் அவன் அவ்வூரின் ஆள்பதியினுடைய மகளையுங் கூட்டிக்கொண்டு தப்பியோடி யப்பானுக்குச் சென்றான். யப்பானியரோடு கேண்மைபூண்டு சில காலம் இருந்த பின்னர், தனியாவகம் படைத்த அவன் போமோசாவுக்குச் சென்று, அத்தீவுக்குத் தானே அரசனதற்கு முயன்றான். அம்முயற்சி தவறிவிடவே, அவன் மடகாசுகாருக்குக் கப்பலேறிச் சென்று, மக்களால் அத்தீவுக்கு அரசனகத் தெரிவு செய்யப்பட்டான். நாடாளும் அரசன் என்ற தகைமையோடு அவன் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்குச் சென்று, புதிய அக்குடியரசோடு பொருத்தனையுறவு பூண முற்பட்டான். அவன் தனது இராச்சியத்துக்கு மீண்டு சிலகாலங் கழிந்தபின்னர், பிரான்சியர்க் கெதிராய்ப் போரிட்டு இறந்தான் (1786). அவனது வாழ்க்கைச் சரிதை ஐரோப்பாவிற் பலரைக் கவர்ந்ததாகலாம்—அதை அடிப்படையாகக் கொண்டு கொற்சிபு என்பார் சேர்மன் மொழியில் ஒரு நாடகத்தை எழுதினர். அது பின்னர் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது.

முறவியேவு, இதற்கிடையில், பீற்ரேபவுலோவிசுக்கு எனுமிடத்தில் ஒரு கடற் றளங் கட்ட எண்ணங்கொண்டான். அதன் காப்பிற்கு ஆமூர் அவசியமென்பதை யுங் கண்டான். சகாலினையும், அதையடுத்த தொடுகடலையும் தலைநிலத்தையும் ஆராய்தற்கு ஆணைபெற்ற தளபதி நெவல்சிக்கி யென்பானோடு சேர்ந்து, ஆமூர் முகத்துவாரத்தை அடிப்படுத்த அவன் தீர்மானித்தான். மொசுக்கோ அதி காவர்க்கம் அதற்கிணங்க மறுத்ததாயினும், நெவல்சிக்கி அதன் கட்டளையைப் புறக்கணித்து, ஆமூர் நதிமுகத்திலே 1850 சனவரி 13 இல் இரசியக் கொடியை நாட்டினான். இரசிய முதலமைச்சனை நெசல்ரோட்டு இவ்வடங்காத்தன்மை கண்டு அன்னர் தண்டிக்கப்படவேண்டுமென வற்புறுத்தினன். ஆயின், வேறு வகையான கருத்துக்கொண்டிருந்த சார்மன்னனே முறவியேவுவையும் நெவல் சிக்கியையும் ஆதரித்தான். ஆமூர் நதியின் முகத்துவாரத்திற் சீனருக்கிருந்த உரி மையும் திட்டவட்டமானதன்று. காங் இசியின் ஆட்சியில், சீனராதிக்கம் உச் சம் பெற்றிருந்த காலத்துமே இரசியாவின் அதிகாரவெல்லையைக் கட்டுப்படுத் தியதேயல்லால், சீனம் தனது ஆட்சியை அப்பிரதேசத்திலே செவ்வையாகச் செலுத்தியதில்லை. இரசியர் மேற்கொண்ட நடவடிக்கை பற்றியும், சீனவரசு சில காலம் அறிந்திலது. இரசிய அரசாங்கமே உண்மையில் நடந்ததுபற்றி 1851 மே மாதத்திற் சீனருக்கு அறிவித்தது.

அப்பால், திரான்சுபயிக்கற் பிரதேசத்திலே இரசியா தனது அதிகாரத்தை உறுதிப்படுத்தத் தலைப்பட்டது. அக்காலத்திலே, தயிப்பிங்குக் கலகத்தைச் சீன அரசாங்கம் நிருவகிக்க வேண்டியதாய் இருந்ததுமன்றி, இங்கிலாந்தும் பிரான்சும் நெருக்கிடை செய்தமையாலும், வலியற்றுமிருந்தது. ஆதலின், தாய் நாடுமே தாக்கப்பட்ட அந்நாளில், சீனம் தனது பேரரசு பற்றிய உரிமைகளை வற்புறுத்த முடியாநிலையில இருந்தது. 1845 இல் ஆமூர் நதியில் முந்துற்றுச் சென்ற முறவியேவு, சீன ஆணிலமெனத் திட்டமாகத் தெரிந்த நாட்டோடாகச் சென்றகாலை, சீன அரசின் அனுமதி பெற்றே சென்றான். சாதுரியமாகவும் இணக்கமாகவும் நடந்துகொண்ட முறவியேவு, பீக்கிங்கு வேத்தவைக்கு, 'எல்லா இராணுவ ஆயத்தங்களும் தேவைகளும், சீனத்திற்கு இம்மியும் நட்டம் விளைக்காது, எம்மாலேயே வழங்கப்பட்டன' என்றவாறாக அறிக்கை செய்தான். சினத்தின் சைபீரியப் பிரதேசங்களை இரசியர் பாதுகாப்பதாற் சீனத்துக்கு விளையும் நன்மைகளை அவன் வற்புறுத்திக் கூறியமை கூர்ந்து நோக்கற்பாலது.

ஆங்கில—இரசியப் போரின்போது பசிபிக்கிலே பிரித்தானியரின் நடவ டிக்கை கண்டே, முறவியேவு ஆமூரில் இரசியரின் பிடியை உறுதிப்படுத்த எண் ணங்கொண்டான். ஆயின், அது மஞ்சுநாடாகிய தாயகத்தைப் பாதிக்குமாத லின், பீக்கிங்கு அதுபற்றிக் கவலைகொண்டது. எனவே எல்லைகளை நிருணயித்தற் காக இணக்கப் பேச்சுக்கள் தொடங்கப்பட்டன. நெடிதுநிகழ்ந்த பேச்சு வார்த் தைகளின் பின்னர் அயிகுன் பொருத்தனை முறியடிக்கப்பட்டது. அதன்வழி சீனர் ஆமூர்நதியின் வடகரையிலுள்ள பிரதேசத்திற் சட்டவுரிமையை இரசி யர்க்கு இறுதியில் விட்டுக் கொடுத்தனர். அப்பொருத்தனைக்கு அனுசரணையாக

தியெல்சின் பொருத்தனையும் ஒப்பேற்றப்பட்டது. அப்பொருத்தனை பிற வல்லரசுகளுக்குத் திறந்துவிடப்பட்ட துறைகளிலே கடல்வழி வர்த்தகஞ் செய்தற்கும், தூதமைச்சனை நியமித்தற்கும் ஏற்பாடு செய்தது.

புதிய ஒரு தூதுவன், பியறி பெரோவிசுக்கி என்பான், 1859 இற் பீக்கிங்கு சேர்ந்தான். தரைவழி வர்த்தகத்தைப் பெருக்க விரும்பிய இரசியர் இப்போது கசுகார், கல்கான் முதலாய பிரதேசங்களுக்கு கரவன் உரிமைகள் அளித்திடுமாறு கோரினர். சீனருடைய மறுப்புக் காரணமாக, பயன் யாதும் இரசியர் பெற்றிலர். பெரோவிசுக்கியின் தூதினை யடுத்து இக்கனசியேவு என்பான் தலைமையிற் பிறிதொரு தூது சென்றது. ஆங்கில—பிரான்சிய நட்பாளர் தாக்குவழியாக முன்னேறிச் சென்ற காலத்திலேயே, இத்தூது பீக்கிங்கை அடைந்தது. மேலைட்டோர் வேனில் மாளிகையைக் கொள்ளையடித்தும் எரித்தும் அழிவு வேலை செய்தமை, இரசியர்க்கு வாய்ப்பாயிற்று. சீனரிடத்து இரசியா கொண்டுள்ள நேயபான்மையை இரசியத் தூதுவன் வற்புறுத்தி, ஆங்கில—பிரான்சிய நட்புறவாளரின் மிலேச்சச் செயல் இரசியர்க்கு ஏற்பிலாமையையும் எடுத்துக் காட்டல் எளிதாயிற்று. சீனமக்களின் உளப்பான்மையை மேலைடுகளிலும் பார்க்க இரசியா செவ்வையாக உணர்ந்து நடந்தவாற்றைக் காட்டிய செயல்களில் இது முதலாவதாகும். சீனத்துக்கும் மேலைடுகளுக்குமிடையே இணக்கம் பேச இரசியத் தூதமைச்சன் முன்வந்தான்—அவ்வழி, எல்லைப்பிணக்கைத் தீர்த்து, கொரியாவின் எல்லைவரை உரிமை நாட்டைப் பெற்றமையாலே, அவன் நன்மை பெற்றான் போலும் (மேலதிகமான பீக்கிங்குப் பொருத்தனை, 1860).

இரசியாவின் நலவுரிமைகளும் யப்பானியப் பேரரசின் நலவுரிமைகளும் மோதுண்படக்கூடிய ஒரு பிரதேசத்திலே இரசியாவின் ஆதிக்கத்தை அவ்வுடன் படிக்கை பரப்பிற்று. இரசியக் கப்பலொன்று 1732 இல் நெமுரோவைச் சென்றடைந்து, வர்த்தகச் சிறப்புரிமைகள் கோரிற்று. எனவே, இரசியா யப்பானெடு கொண்ட தொடர்புகள்பற்றி மீண்டும் ஆராய்தல் அவசியமாகும். இரசியக் கப்பல்கள் சில 1739 மே மாதத்திலே, ஆவ்வாக்கரைக்கு அண்மையாக, யெட்டோவிலிருந்து நூறு மைல் தூரத்துள், வந்து தோன்றின. குரைல் தீவுகளிலே இரசியர் நிலையங்கள் அமைத்தமை 1785 இலே தெரியவந்தது. 1804 ஒற்றோபர் மாதத்திலே, இரசியப் போர்க்கப்பலொன்று, 'நாடியேசாடா[1]' என்பது, சாரின் தத்துவம் பெற்ற தூதுவனை இறைசனேவு என்பானெயுங் கொண்டு, நாகசாகித் துறைமுகத்துட் புகுந்தது. இறைசனேவு சோகுன் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைகள் தொடங்க முயன்றான்—வெற்றிகண்டிலன். குரைல் தீவுகளை ஆராய்ந்துகொண்டிருந்த தளபதி கொலோசியன் என்பான் சிறைப்பிடிக்கப்பட்டானெயினும், பின்னர், அவனுடைய போர்க்கப்பலான தயனவிலேயே அவன் செல்லுதற்கு அனுமதிக்கப்பட்டான். இதற்குப் பின் நாற்பதாண்டுகாலத்துக்கு மேலாக யாதுஞ் செய்யப்பட்டிலது. அப்பால், யப்பானெடு நல்லுறவு கொள்ளுமாறு நெசல்ரோட்டுக்கு முறவியேவு யோசனை கூறியதை அடுத்து, தளபதி

1. Nadiezhada.

புற்றியற்றின் என்பான் தலைமையிலே ஒரு தூதத்தைச் சார் மன்னன் நிக்க லசு 1852 இல் அனுப்பி வைத்தான். அவன் 'தயஞ' எனும் போர்க்கப்பலிலே யப்பானே வந்தடைந்தான். புவிநடுக்கமும் கடற்பெருக்கும் அக்கப்பலே மிகச் சேதப்படுத்தியமையாலே, அக்கப்பலே இழக்கவேண்டியதாயிற்று. அதனைச் சைபீரியாவுக்குத் திரும்புதற்கு வேறுவழியின்றி, யப்பானிலே இரு மரக்கலங் களைக் கட்டுதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. இவ்வாறுக யப்பானிலே முதன் முதலாக ஒரு நவீன கலத்தானங் கட்டப்பட்டது. யப்பானிலே தங்கியிருந்த புற்றியற்றின் யப்பானியரோடு நட்புறவு பூண்டு பொருத்தனையொன்று முடித் தான். அதன்வழி, குரைல் தீவுகளின் எல்லே நிருணயிக்கப்பட்டதோடு, இரு நாடுகளுக்குமிடையே சூழ்வியலுறவுகள் தாபித்தற்கும் ஏற்பாடு செய்யப்பட் டது. ஆயின், சகாலின் பிரச்சினை எதிர்காலத்தே தீர்ப்பதற்கு விடப்பட்டது. இக்காலத்திலும், சினத்தின் பலவீனத்தாலே பிறவல்லரசுகள் மஞ்சூரியாவைப் பங்குபோடப் போட்டியிட்ட காலம்வரையும் யப்பானிய நலவுரிமைகளோடு இரசியப் பூட்கை முரண்பட்டதில்லையென்பது திண்ணம். சகாலின் பிரச்சினை யும் 1875 ஆம் ஆண்டில் இணக்கப்பேச்சுமூலம் தீர்க்கப்பட்டது. அவ்வாண்டில் சென். பீற்றசுபேக்கிலே கைச்சாத்திடப்பட்ட பொருத்தனை, சமதையான இரு வல்லரசுகளுக்கிடையே ஏற்பட்ட பொருத்தனையாகவே கருதத்தக்கது. ஆசிய மக்களோடு கொண்ட தொடர்புகளிலே ஐரோப்பிய அரசுகள் காட்டிவந்த உயர்வு மனப்பான்மை, இரசியாவிடங் காணப்படாமை கவனிக்கத்தக்கது.

அயிகுன் பொருத்தனையும் அதற்கு அனுசரணையான பிற பொருத்தனைகளும் நிறைவேறிய பின்னர், இரசியர்க்கும் சீனர்க்குமிடையே பாரதூரமான சம்ப வங்கள் யாதுமின்றி இயல்பான தொடர்புகள் விருத்தியடைந்தன. சினத் துருக்கித்தானிலே யாக்கூப் பெக்குக்கலகம் மூண்டபோது, இரசியா தற்காலிக மாக இலியைத் தன் வசப்படுத்தியது. ஆயின், ஒழுங்கு நிலைநாட்டியவுடனும், அது சீன அரசுக்குத் திருப்பியளிக்கப்படும் என்ற நிபந்தனையின் மீதே இரசி சியா அவ்வாறு கைப்பற்றியதென்க. பின்னர், சீனம் தன் உரிமையை நிலை நாட்டுதற்கு இயலாதிருந்தபோதும், சார் மன்னரின் அரசாங்கம் சற்றுத் தயங் கியபின்னர், தான்பட்ட சில செலவுகளைப் பெற்று, அப்பிரதேசத்தைத் திருப்பி யளித்தது.

கொரியாப் பிரச்சினையும், அவ்விராச்சியமீது யப்பான் ஒளிப்பு மறைப்பின் றிக் கொண்டிருந்த பேராசையுமே இரசியாவை மீண்டும் சீன அலுவல்களிலே முக்கியமான பங்குகொள்ளச் செய்தன. 1876 ஆம் ஆண்டுப் பொருத்தனையின் பின்னர், கொரியாவை யப்பான் ஒரு சுதந்திர நாடாகப் பாவித்து, அங்குச் சிறப்பான உரிமைகள் பாராட்டி வந்தது. சீன அதிகாரவர்க்கமும் தலையிடத் தீர்மானித்தது. கொரியா நிருவாகத்தைத் திருத்தியமைத்தற்கு வொன் மொலெண்டோபு என்பானை இரு-உங்-சாங்கு நியமித்ததோடு, யுவான் சீ-கை என்பானை உயர் ஆணையாளனைக் சியோலுக்கு அனுப்பினன். கொரியப் படை யைத் திருத்தியமைத்தற்கு இரசியா இராணுவ அதிகாரிகளை அனுப்பவேண்டு மென மொலென்டோபு யோசனை கூற, இரசிய அரசாங்கம் அதனை விருப்பாயேற்

முது—அதற்கிடாக, கொரியாவின் கிழக்குக்கரையோரத்திலே இலாசரெவு எனுந் துறையை உபயோகிக்கும் உரிமைபெற்றது. கொரியா பற்றித் தாம் நினைத்த திட்டங்கள் தடைப்பட்டதையும், பனிக்கட்டியடைக்காத் துறைமுகமொன்றை இரசியர் பெற்றதனாலே தமக்கு அபாயம் ஏற்பட்டவாற்றையுங் கண்ட யப்பானியர், தாம் செயலில் இறங்கவேண்டிய காலம் வந்துவிட்டதென எண்ணினர். கொரியா பற்றி இரசியர் அக்காலத்தில் விசேட அக்கறை யாதுங் காட்டியதில்லை. ஆயின், யப்பானியரோ கொரியாவில் நடப்பன பற்றி மேன்மேலும் ஈடுபாடு கொள்வாராயினர். அவர்கள் கையாண்ட பூட்கை காரணமாக, கொரியா இராச்சியத்திலே சீனர் தம் நலவுரிமைகளைத் துறத்தல் வேண்டும்; அன்றேல், படைவலிகொண்டு அவற்றை நாட்டுதல் வேண்டும்—இதுவே சீனத்தின் நிலையாயிருந்தது. இதன் விளைவாக மூண்ட சீன-யப்பானியப் போர் பற்றி ஏற்கவே ஆராய்ந்தோம்.

அப்போரின் போக்கும் விளைவுகளும் பிறவிடத்தில் எடுத்தாளப்பட்டன. அப்போரிற் சீனம் பட்ட தோல்வியானது, சீன-இரசியத் தொடர்புகளிலே பெரும் விளைவு பயந்தது. சீனம் பன்முறை வேண்டுகோள் விடுத்தபோதும், அமெரிக்காவும் பிரித்தனும் இருதிறத்தார்க்குமிடையே இணக்கம் பேசி போர்க்கு அமைவான முடிவு காண மறுத்துவிட்டன. எனவே, சீனம் தனது பாதுகாப்பிற்கு அவசியமான இலியோதுங்குத் தீபகற்பத்தை, சிமோனோசெக்கிப் பொருத்தனைப்படிக்குக் கையளிக்க வேண்டியதாயிற்று. தனது நண்பர் தன்னை வஞ்சித்தனரெனவே சீனம் கருதிற்று.

இம்முறையும் இரசியாவே முன்வந்து தன் எதிர்ப்பைத் தெரிவித்ததோடு, அப்பிரதேசம் சீனத்துக்கு மீட்டளிக்கப்படவேண்டுமெனவும் வற்புறுத்திற்று. 1895ஆம் ஆண்டு தொட்டு சீன—இரசியத் தொடர்புகளிலே புதியவோர் அத்தியாயந் தொடங்குகின்றது. அதில் முக்கிய காரணி சீனம் அன்று—கொரியாவிலே தனது ஆட்சியை நிலைநாட்ட யப்பான் கொண்ட ஆசையேயாகும். இலியோதுங்குச் சரண் பற்றி இரசியா கொண்ட மனப்பான்மைகண்டு இலி-உங்-சாங்கு மனம் மாறினன். பிரித்தனோடும் அமெரிக்காவோடும் சீனம் ஒத்துழைப்பதையே இத்தூணைக்காலம் ஆதரித்து வந்த உங்-சாங்கு, இப்போது சீன-இரசிய ஒற்றுமைக்கு உற்ற நண்பனுயினன். சார் மன்னனது முடிசூட்டுவிழாவின்போது, சீனப் பேரரசனுடைய பிரதிநிதியாக அவன் 1896 இல் இரசியாவுக்குச் சென்றனன். யப்பானியரின் ஆக்கிரமிப்பு நேருங்காலை, இரசியாவும் சீனமும் ஒன்றுக்கொன்று தரையிலும் கடலிலும் உதவியளிக்கவேண்டுமென ஓர் இரகசிய ஒப்பந்தம் அங்கே ஒப்பேற்றப்பட்டது. அப்பொருத்தனையின் நாலாம் உறுப்புரைப்படிக்கு, சைபீரியப் புகையிரதப்பாதையை வடமஞ்சூரியாவூடாக விளாடிவொசுற்றொக்கு வரை நேராக அமைத்தற்கு இரசியாவுக்கு உரிமை வழங்கப்பட்டது. கிழக்குச் சீன இருப்புப்பாதையை இரசிய-சீனக் கூட்டுவங்கியொன்று அமைத்து நடத்தல் வேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டது. சைபீரியப்பாதை தவிர்ந்த பிறவற்றை **மூப்பத்தாறாண்டு காலத்தில் மீட்கும் உரிமையைச் சீனத்துக்கு அவ்வுடன்** படிக்கை வழங்கிற்றென்பதை ஈண்டுக் கவனித்தல் வேண்டும். இக்காலவெல்லை

தவறினும், எண்பதாண்டுக் காலத்தில் அப்பாதைகள் சீனத்தைச் சேரவேண்டு மெனவும் விதிக்கப்பட்டது. இரசிய-யப்பானியப் போர் மூளுமுன்னர் 1904 இல், மஞ்சூரியாவிலே இரசியரின் இருப்புப்பாதையின் மொத்த நீளம் 1596 மைலா யிற்று. இலி-உங்-சாங்கும் விற்றுக் கோமகனும் முன்னரே உணர்ந்தவாறு, யப்பானிலிருந்தே சீனத்துக்கு ஆபத்து வந்ததாயின், அதன் சார்பில் நோக்கும் போது இவ்வுடன்படிக்கை சீனம்மீது எவ்வித ஆக்கிரமிப்புஞ் செய்ததாகாது. இன்னும், சீனத்தின் ஏமமும் பாதுகாப்பும் இவ்விருப்புப்பாதைகளே இரசியர் அமைப்பதிலேயே தங்கியுள்ளதென்றும், இரசியர் உதவிகொண்டே யப்பானை எதிர்க்கலாமென்று இலி—உங்—சாங்கு உறுதிகொண்டான். ஆயின், 1897ஆம் ஆண்டு முதலாக, புதியதொரு மனப்பான்மை இரசியப் பூட்கையிலே விரவி நிற்றல் காணலாம்—சேர்மன் நாட்டு இரண்டாம் வில்கெமின் செல்வாக்கே இம்மாற்றத்திற்குப் பிரதான காரணமாகும். வில்கெமினுடைய பூட்கை, அவன் அம்பேக்கிலே நிகழ்த்திய ஒரு வீம்பான சொற்பொழிவிலே புலனுயிற்று. 'செருமானியக் கழுகு பொறிக்கப்பட்ட கேடயத்தைச் சேர்மன் மைக்கல் சீன மண்ணிலே உறுதியாக நாட்டிவிட்டான். எமது நியாயமான உரிமைகளினின்றும் யாரேனும் எம்மைத் தடுக்கவோ, எமக்குத் தீங்கிழைக்கவோ முற்பட்டாராயின், இருப்புக்கவசந்தரித்த எமது கைம்முட்டியே அதற்குப் பதில் இறுக்கும்.' சேர்மனியரின் திட்டங்களே இரசியாவும் இரகசியமாக அறிந்திருந்தது; தனது பங்காக, ஆதர்த்துறையையும் தால்னியையும் குத்தகையாக எடுக்குந் திட்டத்தை அது கொண்டிருந்தது. ஆயின் இங்கும், பீகிங்கிலும் (மார்சு 27) பிற்றசுபேக்கிலும் (மே 7) ஒப்பேறிய ஒப்பந்தங்கள் சீனத்தின் இறைமையுரிமை களைத் திட்டமாக அங்கீகரித்தன வென்பது கூர்ந்து கவனிக்கற்பாலது. கடற் றளமாய ஆதர்த்துறை, இரசிய சீனக் கப்பல்களுக்கே திறந்துவிடப்படவேண்டு மெனவும், தால்னி (அல்லது தெயிறென்) வர்த்தகத் துறையாகப் பயன்பட வேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. இவ்விரு துறைகளையும் ஆபினேடு இணைக் கும் உரிமையும் இரசியாவுக்கு வழங்கப்பட்டது.

1897-1904 வரையான ஏழாண்டுக காலத்திலே, சீனத்தின் பலவீனத்தை மேற்கு நாடுகள் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தும் பூட்கையைக் கைக் கொண்டபோது, இரசியாவும் அதிலே தீவிரபங்கு கொண்டது. கடன் ஒழுங்கு களிலே தானும் இடம்பெற வேண்டுமெனக் கோரிற்று; புகையிரதப் பாதை அமைப்பதில் விசேட உரிமை பாராட்டிற்று; சீனத்தை நெருக்குவதில் அதுவும் பிறநாடுகளோடு சேர்ந்துகொண்டது. மஞ்சூரிய இருப்புப் பாதைகளிலே இரசியா தனது அதிகாரத்தைப் பரப்பத் தொடங்கிற்று. மஞ்சூரியாவிலே அது பிரதேசவுரிமை கோராவிடினும், அப்பிரதேசந் தன் செல்வாக்கு வட்டாரத்துக் குள் அடங்கியதொன்றே எனுங் கருத்தை அது கொண்டிருந்ததென்பது புலனு யிற்று. கிரைமியப் போரின்போது பிரித்தானியக் கடற்படையதிகார வர்க்கம் வடபசிபிக்கிலே செய்த பயனளிக்கா முயற்சிகள் கண்டு விழிப்படைந்த இரசிய

அரசாங்கம், தன் எல்லைகளுக்கு அண்மையிலிருந்த மஞ்சூரியாவிலே பிரித்தானியச் செல்வாக்குப் பரவுவதைத் தடுப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்திருக்கலாம்.

பனிக்கட்டியடைக்காக் கடற்றளமொன்றை எய்துவதும், பிரித்தானியரின் கட்டுப்பாட்டுக்கமையாத ஒரு வெளிவாயிலைக் கடற்புறத்தே பெறுவதுமாகிய கனவு இரசியாவுக்குப் பலித்தது போற் காணப்பட்டாலும், அதனால் கடல் சார்ந்த வல்லரசுகளின் எதிர்ப்பைத் தூண்டியதோடு, யப்பான் கொண்டிருந்த அவாக்களுக்கும் மாறுகச் சென்றது. அன்றியும் சீனத்தின் நட்பையும் அவ்வழி இழந்தது. இவ்வாறுக விளைந்ததே இரசிய யப்பானியப் போராகும். அதில் ஆங்கிலருடைய ஆதரவு யப்பானுக்கிருந்தது. போட்சுமதுப் பொருத்தனைப்படி, மஞ்சூரியாவினின்றும் இரசியா விலக்கப்பட்டது; அப்பிரதேசத்திலே அதற்கிருந்த உரிமைகள், வெற்றி நாடாகிய யப்பானுக்கே சென்றன. இக்காலத்தின் பின்னர், சீன விவகாரங்களிலே இரசிய அரசாங்கம் ஈடுபட்டிலது. கிழக்குலகிலே அது தன் பழைய நிலையை நாட்டு முன்பே, உலகப் பெரும்போரும், அதை யடுத்துப் பெரும்புரட்சியும் மூண்டுவிட்டன. ஆசியமக்களிடையே அப்புரட்சியின் செல்வாக்கு எத்தகைய தென்பது விரைவிற் சற்று விரிவாக ஆராயப்படும். ஆயினும், உதவி ஆணையாளியாகிய கறக்கான் என்பான் 1919 யூலை மாதத்தில், சோவியத்து அரசாங்கம் தன் ஆணிலப்புறத்துரிமைகளைத் தாஞ்சுவே முன்வந்து துறந்துவிட்டதென்றும், சார் அரசாங்கம் முன்னம் பெற்ற நியாயமற்ற உரிமைகளைச் சீனத்துக்கு மீட்டளிக்க அது சித்தமாயுளதென்றும் உலகுக்குணர்த்தினன்.

சார் மன்னர் சைபீரியாவிற் கையாண்ட விரிவுப்பூட்கையின் சிறப்பான இயல்புகளையும், இரசியப் பூட்கைக்கும் மற்றுக் கடல்சார்ந்த வல்லரசுகளின்—குறிப்பாக இங்கிலாந்து பிரான்சு எனுமிவற்றின்—பூட்கைக்குமிடையேயுள்ள தெளிவான வேற்றுமைகளையும் இங்குச் சற்றுப் பொறுத்து ஆராய்வோம்.[1] சமயவீறும் கல்வி முயற்சியுந் தவிர்ந்த பிறதுறைகளிலே, அமெரிக்காவின் போக்கு பிறமேனாடுகளின் போக்கிலும் வேறுபட்டதாகவே எஞ்ஞான்றும் இருந்துளது. சேர்மனியும் இத்தாலியும் பங்கெடுக்கும் ஆவலுடையவாய் இருந்தவேனும், அவற்றுளும் சேர்மனி தலையாய பங்கு கொள்ள முயன்றபோதும், தூரகிழக்குப் புலத்தில் அவையிரண்டும் காலத்தாற் பிந்தியே வந்து புகுந்தன. ஆதலின், உறுதியான ஒரு பூட்கையை வகுத்து நடாத்தற்குப் போதிய அவகாசம் அவற்றுக்கு வாய்த்திலது. கியாவோச்சோவை அடிப்படுத்தி, விரிந்த பல உரிமைகளைச் சேர்மனி பெற்றது உண்மையேயாயினும், பிறவல்லரசுகளோடு சேர்மனிக்கும் உன்னத இடம் கொடுத்து நாட்டுக் கொள்ளையிலும் அதற்கு ஒரு பங்களிக்க

1. மத்திய ஆசியாவில் இரசியரின் ஆணிலவகற்சி, சைபீரியாவிற் காணப்பட்டதினும் வேறுபட்டிருந்தது. மத்திய ஆசியாவில், வென்றடிப்படுத்துங் கொள்கை மூலமாகவே இரசியர் தமது ஆணிலத்தைப் பெருக்கினர். இவ்வகையில் அம்முனை மேனாடுகளின் முறையைப் பெரிதும் ஒத்திருந்தது.

அவை உதவுமென்றே கருதப்பட்டன. பிரித்தனும் பிரான்சும் வகுத்து வளர்த்த வரலாற்று மரபின் அடிப்படையிலேயே, மேனாடுகளின் பூட்கை வகுக்கப்பட்டிருந்தது. அதினின்றும் இரசியப் பூட்கை பின்வருமாற்றல் வேறுபட்டிருந்தது.

ஐரோப்பியப் பெருவல்லரசுகளுள் இரசியாவொன்றே, 300 ஆண்டுகாலமாகச் சீனரோடு தொடர்பு பூண்டிருந்தும், போர் தொடுத்ததில்லை. அபின் வியாபாரத்தையோ மிசனரிமாரையோ தலைக்கீடாய்க் கொண்டு இங்கிலாந்தும் பிரான்சும் சேர்மனியும் உள்ளபடி போர் மலிந்தன, அன்றேற் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. ஆயின் இரசியாவோ அவற்றினின்றும் விலகி நின்றது. உரிமைகள் பெறுதற்காக அந்நாடு வலோற்கார நடவடிக்கைகளை மேற்கொண்டதில்லை.

இரண்டாவதாக, நாம் முன்னம் கூறியதுபோன்று, சீனம் தன் ஆதிக்கத்தைப் பரப்ப முயன்ற பிணக்கின்வாய்ப்பட்ட பிரதேசத்திலேயே ('மஞ்சூரியப் பிரச்சினை' தோன்றும்வரையும்) இரசியாவும் தன் ஆதிக்கத்தைப் பரப்ப முயன்றது. முதலாம் சீனப் போருக்குப் பின்னர், தொன்றுதொட்டுச் சீன வரசின் பாகங்களாயிருந்த ஒங்கொங்கைப் பிரித்தனும், பின்னர்த் தொங்கிங்கைப் பிரான்சும் தங்கைப்படுத்தின. ஆயின் இரசியாவின் ஆதிக்க விரிவும் ஆமூர் நதியின் வடகரையை அது கைப்பற்றியமையும் பிறிது தன்மைத்தான பிரதேசத்திலேயே நிகழ்ந்தனவாகும். எனின், அப்பிரதேசத்திலே சீனராட்சி அக்கால் இருக்கவில்லை. இனி, மூறவியேவும் அவன்றன் இணைவரும் மேற்கொண்ட நடவடிக்கைபற்றிப் பீக்கிங்கு அரசாங்கத்திற்கு இரசியா அறிக்கை செய்யும்வரையும், சீன அதிகாரவர்க்கம் அந்நடவடிக்கைபற்றி யாதும் அறியாதிருந்தது எனுமாற்றல் மேற்கூறியதன் உண்மை புலனுகின்றது. இவ்விருவகைப்பட்ட ஆக்கிரமிப்புப் பற்றியும் சீனர் கொண்ட மனப்பான்மையிலே அடிப்படையான வேற்றுமையிருத்தல் காணலாம். ஆன் இனம் அடிப்படுத்திய பிரதேசங்களைப் பொறுத்தவரை, சீன அரசியல் ஒரு பாகத்தை இழந்துவிட்டதுபோன்ற உணர்ச்சியே சீனரிடத்துக் காணப்பட்டது. மற்று, ஆமூரையடுத்த பிரதேசத்தைப் பொறுத்தவரை, ஒரு காலத்தும் செவ்வையாக நிறுவப்படாத ஓர் உரிமைக் கோரிக்கை பங்கப்பட்டுவிட்டது—சீனத்தின் தாயகப் பிரதேசத்தைப் பாதிக்காத ஒரு கட்டுப்பாடு நேர்ந்துவிட்டது—என்றவாறன மனப்பான்மையே சீனரிடத்து மேலோங்கி நின்றது.

இனி, மஞ்சூரியாவிலும் இரசிய அரசாங்கம் ஐயத்துக்கிடமின்றி ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கடைப்பிடித்ததாயினும், சீன மக்களின் மானவுணர்ச்சிக்குப் பங்கம் விளைக்காவகையிலும், பீக்கிங்கு அரசாங்கத்தில் இறைமையுரிமையைப் பெயரளவிலாயினும் பாதுகாக்கும்வகையிலும் சாவதானமாக நடந்து கொண்டது[1].

1. எனினும், இரயேப் பேரரசாட்சி அங்குப் பரவியது உண்மையே. அதன் ஆதிக்கம் மஞ்சூரியாவிலே செவ்வையாகவும் விரிவாகவும் ஊடுருவி நின்றது. அவ்வாறு ஊடுருவுதற்கு அமைந்த சாதனங்கள் கிழக்குச் சீனப் புகையிரதப்பாதையும் தென் மஞ்சூரியப் புகையிரதப் பாதையுமாம். இவையிரண்டும் சென். பீற்றசுபேக்கிலிருந்து நிதியமைச்சின் மூலமாக ஆட்சி செய்யப்பட்டன.

மேற்கூறிய இரு நியாயங்களைக் காட்டிலும் முக்கியமான பிறிதோர் உண்மை கவனிக்கற்பாலது. சீன மக்களுக்கும் அரசாங்கத்துக்குஞ் சினமூட்டி, சொல்லி லடங்கா அவமானத்தை அன்னார்க்கு விளைத்த இருவகைத்தான பூட்கையில்—அபின் பழக்கத்தைச் சீனமக்களிடை வலிந்து பரப்பி, மக்களை மாக்கள்போன்று வியாபாரஞ் செய்த அந்தப் பூட்கையில்—இரசியர் எந்தக்காலத்திலுமே சம்பந் தப்பட்டாரல்லர். அளவிறந்த இடுக்கணும் இழிவும் அவமானமும் சீனர்க்கு விளைத்து, அன்னார் பட்ட இராணுவத் தோல்விகளுக்கு நேர்க் காரணமாய மைந்த அபின் வியாபாரத்திலே தலைப் பெருங் குற்றவாளி பெரிய பிரித்தனே. சீன அரசாங்கத்தின் கட்டளைகளை மதியாதும், சீனமக்களின் மறுப்புக்களை நோக்காதும் நடாத்தப்பட்ட 'பன்றி வியாபாரத்திலே—அதாவது, வல்லந்த மாகச் சீனத் தொழிலாளரைப் பெருந்தோட்டங்களுக்கும் சுரங்கங்களுக்கும் ஏற்றுமதி செய்யும் அந்தப் புதுவகை அடிமை வியாபாரத்திலே—ஏற்றிச் செல் லும் வழியதனிற் சிலவேளை நாற்பது சதவீதமானோர் இறந்துபடும் அந்த வியா பாரத்தில்—அமெரிக்கா உட்பட மேலைப்புல வல்லரசுகள் யாவும் தீவிரமாக ஈடு பட்டிருந்தன. இரசியாவோ, காரணம் எதுவாயினும், அதிற் பங்குகொண்ட தில்லை. 'நஞ்சு வியாபாரமும், பன்றி வியாபாரமுமாகிய' இவ்விரண்டுமே சீன மக்களின் நெஞ்சத்தில் வன்மம் ஏற்றி அயலட்டோர்மீது கழிபெரும் வெறுப் புக் கொள்ளச் செய்தனவாகும்.

இன்னும், மதவடிப்படையிலே சீனத்தை வெற்றிகொள்ளும் முயற்சியில் இர சியா முக்கியமான பங்கோ பாத்தியமோ கொண்டதில்லை. மேலை நாடுகள்—அவற்றுள்ளும் சிறப்பாக அமெரிக்காவும் பிரித்தனும் பிரான்சும்—சீனத்தை ஆன்மிகத் துறையிலே அடிப்படுத்த முயன்று, அந்நாட்டின் சமுதாய, தார்மிக பாரம்பரியத்தை வேரறுத்து, பேரரசு முறை, ஆணிலப்புறத்தூரிமை யெனு மிரண்டின் ஆதிக்கத்தின் போர்வையிலே, சீனமக்கள் ஒரு முகமாக ஐயமின்றி வெறுத்துத் தள்ளிய ஒரு சமயத்தைப் புகுத்துமாறு அம்மேனாடுகளைத் தூண்டி விட்ட அல்வழிப்பட்ட ஆர்வத்தின் விளைவுகள் பற்றிப் பின்னோர் அத்தியாயத் தில் நாம் ஆராய்வேம்[1].

மேலும், அநாகரிகமான நாசவேலைகளில் மேனாடுகள் ஈடுபட்ட ஞான்று உதாரணமாக 1860 இல், வேனில் மாளிகைக்கு எரியூட்டி அதனைக் கொள்ளை யடித்தபோது— இரசியர் அவற்றினின்றும் விலகியிருந்தனர் என்பதையும் இறு தியாக இங்கு வற்புறுத்திக் கூறல்வேண்டும். 'பொக்சர் சம்பவம்' எனும் முட்டி வீரர் இயக்கத்தின்போதும், சேர்மானியர் வெளிப்படையாகப் பிரகடனஞ் செய்த ஈவிரக்கம் பாராத் தஞ்சமளிக்காப் பூட்கையினை மேலைப்புலத்து நட்பு நாடுகள் ஒருமித்துக் கடைப்பிடித்தகாலை, இரசியத் தூதுவனும் தானைகளும் பீக்கிங்கிலிருந்து வெளியேறியதுங் குறிப்பிடத்தக்கது. 1901 ஏப்பிரில் மாதத்

1. மத்திய ஆசியாவிலும் மேற்கு ஆசியாவிலும் இரசியா கடைப்பிடித்த பூட்கை அத்துணை நேர்மையானதென்று கொள்ளுதற்கு இடமில்லை. பதினெட்டாம் நூற்றாண்டிலே, வொல்காப் பள்ளத்தாக்கைச் சேர்ந்த தாட்டர் குலத்தோர், அவர்தம் சமய நம்பிக்கை காரணமாக, மிகக் கொடுமையாகத் துன்புறுத்தப்பட்டனர்.

திலே மேஞ்சூரியப் படையெழுச்சி நிகழ்ந்தபோது, இரசியர் அதில் யாதும் பங்கு கொண்டாரல்லர். இரசியப் பிரதிநிதி, சிறிது காலந் தயங்கிய பின்னர், பீக்கிங்கிலிருந்த மேஞ்சூரியத் தூதசாலையத்தைக் காப்பாற்றுவதிலும், பின்னர் இழப்பீடு பறிப்பதிலும் வல்லரசுகளோடு ஒத்துழைத்தானெனினும், இரசியா சுதந்திரமான ஒரு நெறியிற் சென்றதென்பது இங்குக் குறிப்பிடற்பாலது. பொருத்தனை கைச்சாத்திடப்படுமுன்னமே இரசியர் தம் தானைகளை வெளியேற்றினர் என மேஞ்சூரியர் அக்காலத்திற் குறைப்பட்டதும் உண்டு. அமைதியுடன்படிக்கை பற்றி இணக்கப்பேச்சு நடந்தகாலை, சீனத் தூதுவன் லி—உங்—சாங்கோடு இரசியப் பிரதிநிதி நேராகத் தொடர்புகொண்டிருந்தமை பிரசித்தமான விடயமாயிருந்தது—சீனத் தூதுவனது இல்லத்தைக் கொசாக் வீரரே காவல்புரிந்தனர். இரசியரின் போக்கு மேஞ்சூரியர் கருத்துப்படி "தகவிலாதது" எனக் கொள்ளப்பட்டது. பிரித்தானியப் பிரதிநிதியின் எதிர்ப்பு இருந்தக்கண்ணும், 'தத்துவம் பெற்ற இணக்கப் பேச்சாளனாக' உங்—சாங்கை அனுமதிப்பதற்கு இரசியத் தூதமைச்சன் பகீரதப் பிரயத்தனஞ் செய்தான் என்பது அறியக்கிடக்கின்றது. உண்மையில், சீனத் தூதுவனுக்கு உற்ற நண்பனும் ஆலோசகனுமாக இரசியப் பிரதிநிதி மாறிவிட்டான். இன்னும் அமைதிப்பொருத்தனை ஒப்பேறிய பின்னர், சீனர்மீது பழிக்குப்பழியும் கடுந் தண்டனையும் பிறர் வேண்டி நிற்ப, இரசியாவின் சார்பாக பாரன் த கியேசு என்பான் 'தண்டனைக் கட்டளை' விதிப்பதைத் தவிர்த்தற்கும், தன் அதிகார வரம்பின்வழி சீனர் பல்லோர்க்குப் பாதுகாப்பு அளித்தற்கும், தன்னாலான மட்டும் முயன்றான். மேலும், இரசிய வெளிநாட்டு அமைச்சன் இலாம்தோபுக் கோமகன் சென். பீற்றசுபேக்கிலே பிரித்தானியத் தூதமைச்சனைச் சந்தித்தகாலை, தனது அரசாங்கத்துக்கு 'மிசனரிமாரிலே அக்கறை இல்லை' என்றும், அதனாலே, மிசனரிமாரைத் தாக்கியோரைத் தண்டிக்க வேண்டுமெனுங் கோரிக்கையை வற்புறுத்துவதில் வல்லரசுகளோடு அது சேராதென்றும் கட்டுரை பகர்ந்தான்[1]. மிசனரிமாரைத் தாக்கியோரெனக் குற்றஞ் சாட்டப்பட்டோர்க்கு மரணதண்டனை விதித்தல் வேண்டுமெனத் தீவிரமாக வற்புறுத்தி நின்ற மேஞ்சூகளின் போக்கிற்கும் இரசியாவின் பூட்கைக்குமிடையேயுள்ள வேற்றுமை கூர்ந்து நோக்கற்பாலது.

இத்தகைய காரணங்களாலே, சீனத் தலைவர்கள் மேஞ்சூட்டு முறையிற் கல்வி பயின்றிருந்தும், வழிவழித் தொடர்ந்த சீன அரசாங்கங்கள் மீது அமெரிக்காவும் பிரித்தனும் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தும், இரசியா மாட்டுச் சீன மக்கள் குறிப்பாக விரோதமனப்பான்மை கொண்டதில்லை; வெவ்வேறு காலங்களிலே சீனத்திற் பரவிய அயலூட்டு—வெறுப்புணர்ச்சி காரணமாக இரசியா பெரிதும் பாதிக்கப்பட்டதுமில்லை.

1. Bland : Life of Li Hung- Chang, pp. 205 -9.

அதிகாரம் 2

ஆசியாவும் இரசியப் புரட்சியும்

ஆசிய மக்களிடையே, ஒற்றுமேபர்ப் புரட்சியால் ஏற்பட்ட விளைவுகள் இந் நூற்குப் புறம்பாக இருப்பினும், 1914 இற்கும் 1918 இற்கும் இடைப்பட்ட அதி முக்கியமான காலப்பகுதியில், ஆசிய ஐரோப்பிய நாடுகளிடையே நிலவிய தொடர்புகளைத் தக்கவாறு உணர்தற்கு, வரலாற்றுச் சிறப்புவாய்ந்த அப்புரட் சியினின்றுந் தோன்றிய சத்திகளைச் சுருக்கமாக ஆராய்ந்தறிய அவசியமாகும். ஆசியாக் கண்டத்திலே மேனட்டோரின் அதிகாரம் முடிவுற்றதை இப்பருவங் குறிக்கின்றது. பல்வேறு ஆசிய நாடுகளிலே, உருவாகி வளர்ந்து, இறுதியிற் சுதந்திரத்தை அந்நாடுகளுக்கு வென்றளித்த தேசிய இயக்கங்கள் யாவும், சோவியற்று அரசும் இவ்வரசின் வலிப்பெருக்கும் செலுத்திய செல்வாக்கிற்கு உட்பட்டதோடமையாது, அவற்றுல் ஊக்கமும் பெற்றமையாலே, அப்பெருஞ் செல்வாக்கு எவ்வாறு தொழிற்பட்டது என்பதனை நாம் விளங்கிக் கொள்ளல் அவசியமாகும். ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்குமிடையே நிலவிய உறவுகளில், ஒற்றுமேபர்ப் புரட்சியும் அதன் வழித் தோன்றிய கருத்துக்களும் எத்தகைய செல்வாக்கை உடையவாயிருந்தன என்பதைக் கண்டறியும் அளவிற்கே இப் பிரச்சினை இங்கு ஆராயப்படும்.

ஆசியாவிலே சோவியற்று நாட்டின் செல்வாக்கினைப் பொதுவாக ஆராய் தற்கு முன்னர், ஆசியாவில் முன்பிருந்த இரசியப் பேரரசின் தன்மையினைச் சுருக்கமாக இங்கு எடுத்துரைத்தல் அவசியம். மத்திய ஆசியாவை நோக்கி இரசியாவின் அகற்சியைக் கருதும்போது, திரு. வின்ற் என்பார் தமது ஆராய்ச்சி நூலிற் கூறியது போன்று,[1] 'இசுலாமியக் கொற்றவர் தமது விசுவா சத்தை மொங்கோலியப் பேரரசினின்றும் இரசியப் பேரரசுக்கு மாற்றிய வாற்றை ஏற்குமளவிற்குகவே அது அமைந்தது' எனலாம். மத்திய ஆசியாவுக் குச் செல்லும் பாதைகளுக்கு அண்மையாக வாழ்ந்த நாடோடிகளுட் பிரதான மானேர் கசாக்கர் எனப்படுவர். அன்னர் இரு கூட்டங்களாகப் பிரிந்திருந்த னர். அக்கூட்டத்தினொன்று இரசியரின் பாதுகாப்பைத் தன்னிச்சையாகவே நாடிக்கேட்டது. இவ்வாறுக, சைபீரியாவிற்கும் யக்சாட்டிசிற்கும் இடைப்பட்ட பரந்த பிரதேசமானது தீவிரமான இராணுவ நடவடிக்கை யாதுமின்றியும் படிப்படியாகவும் சார் மன்னரின் அதிகாரத்துட் சென்றது. மத்திய ஆசியா விலே செவ்வையான கட்டுக்கோப்புடன் அமைந்திருந்த அரசுகள் கீவாவும் பொக்காராவும் கோக்கண்டுமாகிய கானரசுகளேயாம். அவை தைமூரின் பேரர சிற்கு மையமாகவும், கல்விக்கும் பண்பாட்டுக்கும் நிலைக்களனுகவும் இசுலாமிய வரலாற்றிலே புகழ்பெற்றிருந்தன. காலப்போக்கிலே கோக்கண்டு கைப்பற்றப்

1. British in Asia, p. 137.

பட்டது. ஆயின் கீவாவும் பொக்காராவும் தத்தம் கான்மாரின் ஆட்சியிலே நாமத்தளவிற் சுயவாட்சியைப் பேணிவந்தன. இவ்வழி, இரசியப் பேரரசானது அபுகானித்தான், பாரசிகம் எனுமிவற்றின் எல்லைப்புறத்தைத் தொட்டதோடு, அதற்கு முன்னமே பசிபிக்குவரையும் வியாபித்திருந்தது.

சார் மன்னரின் பேரரசும் பிரித்தானியப் பேரரசுமுறையும் அடிப்படைத் தன்மையில் வேறுபட்டிருந்தன. அத்தன்மையினை ஓவென் இலாற்றிமூர் என் பார் வருமாறு அழகாக எடுத்துரைப்பார் : 'இரசியப் பேரரசு ஒருச்சேர்க்கும் முறைப்படியே அமைக்கப்பட்டது ; எனவே ஒருங்கிணைத்தலாகிய பிரித்தானிய முறையினின்றும் அது வேறுபட்டது. அதன் உடைமைகள் எல்லாம் அகண்ட மான பரந்தவொரு நிலப்பரப்புள்ளே அடங்கியிருந்தன.....ஆனிலங்கள் ஒருச்சேர்க்கப்பட்டவாறே மக்களும் ஒருச்சேர்க்கப்பட்டனர். சாதாரண இர சியனொருவன் மன்னற்கடங்கிய ஒரு பிரசையாக இருந்தானேயன்றி, உரிமை யுள்ள குடிமகனாக இருந்ததில்லை. இரசியரல்லா மக்களும் இரசியரே என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டனர்.....ஒவ்வொரு மக்கட் குழுவினுமிருந்த ஆளும் வகுப்பாருள் ஒரு சாரார், இரசிய ஆளும் வகுப்பார்க்கு இணையான நிலையுடை யோராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

தேசிய இயக்கங்களின் எழுச்சியோடு இவ்வடிப்படை வேற்றுமை மென் மேலும் துலக்கமாயிற்று. பிரித்தானியப் பேரரசினும் மேலைநாட்டுப் பேரரசு கள் பிறவற்றினும், இந்த இனவொதுக்கங் காரணமாகவும், ஆளும் வகுப்பாய் இருந்தோரும் மற்று ஆளும் வகுப்பாய் வளர்ந்திருக்கக் கூடியோருங் கொண்ட சீற்றங் காரணமாகவும், தேசியவுணர்ச்சி விரைவாக வளர்ந்தது. ஆயின் சார் மன்னரின் இரசியாவிலோ, இலாற்றிமூர் அழுத்திக் கூறுவதுபோன்று, தேசி யப் புரட்சியுட்பட எவ்வகைப் புரட்சியும் இரசியரையும் இரசியரல்லாதாரை யும்—அவர்கள் அருகருகாக வாழ்பவராயிலென், கலந்துறவாடி வாழ்பவராயி லென்—ஒருங்கே பேதமின்றிக் கட்டாயம் பாதிப்பதாயிருக்கும்[1]. ஆதலின், சார் மன்னரின் இரசியாவிலே, இரசியரும் இரசியரில்லாதாருமான ஆளும் வகுப்பினர் இயல்பாகவே ஒன்றுபட்டு நின்றனர். எனவே, புரட்சி மூண்டகாலே —உதாரணமாக, மத்திய ஆசியாவிலே ஓர் இசுலாமியக் கிளர்ச்சியைத் தூண்டி விடுதற்கு என்வர் பாசா முயன்றநாளிற் போன்று— சார் மன்னரின் மறை வோடு ஆசியப் பிரதேசங்களும் இரசியாவிலிருந்து பிரிந்துவிடும் போல் மூத லிற் றோன்றிற்று.

ஆயின் அவ்வாறு நடந்திலது. ஆசியத் தேசியவாதிகள் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டுதற்கு முயன்றார் என்பது உண்மையே. ஆயினும், வொல்காப் பிர தேசத்திலும், அசர்பைசானிலும், பொக்காராவிலும், யோட்சியாவிலும் பொல் சிவிக்கர் அன்னரை விரைவாக அடக்கிவிட்டனர். இரசியாவில் ஆசியப் பேர ரசு இவ்வாறுகச் சேதமின்றிப் பேணப்பட்டது.

1. Owen Lattimore : Situation in Asia. p. 17.

பொதுவாக, தனது அதிகாரத்தைப் பேணுவதிலே பொல்சிவிக்கு இரசியா பின்னர் இடர்ப்பட்டதில்லை எனலாம். புரட்சியெனும் இலட்சியத்துக்குச் சார்பாக அது ஆசியமக்களுள் ஒருசாராரின் ஆதரவைப் பெறக் கூடியதாயிருந்தது[1].

மேலும், திட்டவட்டமான ஒரு தேசியக் கொள்கையை இரசியப் புரட்சி உடைத்தாயிருந்தது என்பதையும், அக்கொள்கை ஆசியாவிலே சுதந்திரதாகங் கொண்டிருந்த சார்நாடுகளையும், குடியேற்றங்களையும், அரைகுறைச் சுயாதீனம் பெற்றிருந்த நாடுகளையும் கவர்ந்திழுத்தது என்பதையும் நாம் நினைவிற் கொள்ளல் வேண்டும். இலெனினும் இசுற்ருவினும் ஒருங்கே கைச்சாத்திட்டு வெளியிட்ட இரசிய மக்களின் உரிமைப் பிரகடனமானது இரசிய மக்களின் சமத்துவத்தையும் இறைமையையும் பிரசித்தஞ் செய்ததோடு, சிறுபான்மைச் சமுதாயங்கள் சுதந்திரமாக வளர்ச்சியடைதற்கு இரசிய மக்கள் அனைவர்க்கு மிருந்த உரிமையையும் எடுத்தியம்பிற்று. உண்மையிற் சங்கநாதம் போன்றிருந்த இச்சுதந்திரமுழக்கங் கேட்டு, சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருந்த ஆசிய மக்கள புதுநம்பிக்கை பெறுவாராயினர். தேசியச் சுயநிருணயத்தையும் இனங்களின் தனித்தன்மையையும் இவ்வாறு வற்புறுத்தியமை, அடுத்த இருபத்தைந்தாண்டுக் காலத்திலே, ஆசிய மக்களின் கருத்துப்போக்கினை உருவாக்குவதிற் பெருவினைவு பயப்பதாயிற்று.

ஆரம்பத்திலிருந்தே சோவியற்று மக்கள் இந்தியாவிலும் சீனத்திலும் இந்தோனேசியாவிலும் இந்துசீனத்திலும் நடந்துவந்த சுதந்திரப் போராட்டத்துக்குத் தமது ஆதரவைப் பகிரங்கமாகப் பிரசித்தஞ் செய்தனர். அவர்கள் அவ்வாறு செய்ததற்குக் காரணம், அது ஒரு புரட்சிகரமான சுலோகமாகும் என்பது மாத்திரமன்று. முதலாளித்துவத்தின் முற்றியநிலையே போரசு முறையாகுமாதலின், மத்திய வகுப்பாரின் தேசிய இயக்கங்கள் மூலமாக அதனை அழித்தல் சமுதாய மலர்ச்சியிலே ஒரு முன்னேற்றத்தைக் குறிக்குமென அவர்கள் கொண்ட கொள்கையும் ஒரு காரணமாகும். எனவே சுதந்திரப் போராட்டங்களுக்கு ஆதரவளித்தல் தக்கதேயாம். புரட்சிகரமான இரசிய வரசு என்றென்று இருந்தமையாலே, ஆசியநாடுகள் அனைத்திலும் தேசிய இயக்கங்கள் தார்மிகவலுப் பெற்றன என்பதற்கு ஐயமில்லை. கணிசமான காலத்துக்குத் தேசிய இயக்கம் நிலவிநின்ற இந்தியா போன்ற நாடுகளிலே, பொதுவுடைமைக் கொள்கையெனும் கம்யூனிசம் பெரும்பாலும் ஆதரவு பெற்றதில்லை எனலாம். ஆதலின், இரசியப் புரட்சிக்குப் பிற்பட்ட காலத்திலேயே சுதந்திர இயக்கம் செவ்வையாக வேரூன்றிய நாடுகளாய இந்தோனேசியாவிலும் இந்துசீனத்திலும், விடுதலைக்காகப் பாடுபட்ட சனசக்தியிலே பொதுவுடைமைவாதிகளும் தலையாக ஒரு கூறுயினர். இந்நாடுகள் ஒவ்வொன்றிலும் 1920-23 வரையான காலத்தில், பொதுவுடைமைக் கட்சிகள் தோன்றலாயின. இந்தோனேசியாவில், 1926 ஆம் ஆண்டளவில் அவர்தம் செல்வாக்குக் கணிசமான அளவுக்கு வளர்ந்

1. எதிர்ப்புக் கிளம்பிய இடமெல்லாம், இரசியர் ஈவிரக்கமின்றி அதனை அடக்கியொடுக்கினர். காசல் மக்களுக்கு நேர்ந்த அவலக் கதி இதற்கு உதாரணமாகும்.

தது. அவ்வாண்டிலே, யாவாவில் (சாவகத்தில்), இடச்சருக்கெதிராகப் பரக்க நிகழ்ந்த குழப்பங்களிலே பொதுவுடைமைவாதிகளின் 'கைவரிசையும்' மறை முகமாகச் சேர்ந்திருந்தது என்பது ஈண்டுநோக்கத்தக்கது. இந்துசீனத்திலும் தேசிய வியக்கத்தினிடையே அது விரைவாகப் பரவியது.

சீனத்திற் சாங்காயிலே 1921 இற் பொதுவுடைமைக் கட்சி நிறுவப்பட்டது. ஆயின் அக்கட்சியைத் தாபித்த சிறுச்சிறு குழாங்களின் மூலமாக, மூற்போக்கு வாதிகளான அக்காலத் தேசியத் தலைவரிடையே இரசியப் புரட்சிக்கிருந்த பெருஞ்செல்வாக்கினை அளவிடலாகாது; சீனப்புரட்சிக்குத் தந்தையும் சீனத் தேசியவியக்கத்தின் தலைப்பெரும் பிரதிநிதியுமான சன்—யாட்சென், புத்தமைப் பும் புதுவலியும் பெற்ற ஒரு சீனம்பற்றி மேனாடுகளும் அமெரிக்காவும் கொண் டிருந்த மனோபாவத்தை நன்முக உணர்ந்த பின்னர், பகிரங்கமாகக் கூறிய வார்த்தைகள் அப்பெருஞ் செல்வாக்கினைத் தெளிவுற எடுத்துக் காட்டுவன: 'இனி நாம் மேனாடுகளை நோக்கி நிற்க மாட்டோம். இரசியாவின் பக்கமே எமது பார்வை திரும்பியுளது' என்றார் சன்—யாட்—சென். சீனத்திலே தேசிய விழிப்பின் மூலவூற்றினைப் பிரதிபலிப்பவர் சன்—யாட்—சென்னும் அவர்தம் கட் சியாளருமே என்பதனைச் சோவியற்றுத் தலைவர்கள் உணர்ந்துகொண்டார்கள். சீனத்துக்கு நேரே சென்று நிலைவரத்தை ஆராய்ந்து திரும்பிய எச். மாறின் என்பானது அறிக்கையைத் தொடர்ந்து, சன்—யாட்—சென்னோடு நேராகத் தொடர்புகொள்ளற்காக அடோல்பு யோவ் என்பானை இரசிய அரசாங்கம் அனுப்பி வைத்தது. சாங்காயிற் பாதுகாப்பு மிக்க சருவதேசக் குடியிருப்பிலே இருதலைவர்களும் பேச்சுவார்த்தைகள் நடத்தியதன்பயனுக, சீன—சோவி யற்று ஒத்துழைப்புப் பற்றிக் கூட்டறிக்கையொன்று வெளியிடப்பட்டது. பிர பலமான இந்த அறிக்கைப் பத்திரத்திலே சோவியற்றுப் பிரதிநிதி முக்கியமான ஒரு கருத்தை வெளியிட்டான். 'தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டி, பூரண சுதந் திரத்தைப் பெறுவதே சீனத்தின் அவசரமான தலைப்பெரும் பிரச்சினையாகும். ஆசியத் தேசிய இயக்கத்துக்குப் புரட்சிகரமான இரசியாவின் ஆதரவு இவ் வாறு பகிரங்கமாகப் பிரசித்தஞ் செய்யப்பட்டது.

தேசியவியக்கங்கள் இவ்வாறு மிகு வலிபெற்றதினும் பார்க்க, பெரும்பான்மை யும் புரட்சிக்கோட்பாடுகளின் காரணமாக அத்தேசிய வியக்கங்களின் தன்மை யில் ஏற்பட்ட மாற்றமே முக்கியமானதெனலாம். ஒற்றேபர் புரட்சிக்கு முன் னர், இந்தியாவிலும் சீனத்திலும் தேசிய இயக்கங்கள் முற்றுக அரசியற்சார் பையே உடையனவாகவும் தாராண்மைக் கொள்கையினையே தழுவியனவாகவும் இருந்தன. அன்னியராதிக்கத்தினின்றும் விடுதலை பெறுவதே தனியொரு பிரச் சினையாக இருந்தது. பாராளுமன்றத் தாராண்மைக் கொள்கையையும் பிரதி நிதித்துவ ஆட்சியையும் அடிப்படையாகக் கொண்டதே அத்தேசிய இயக்கங் களின் சாரமாகும். திட்டவட்டமான ஒரு சமூகக் குறிக்கோளேனும் பொருளி யற் குறிக்கோளேனும் அவற்றுக்கு இருக்கவில்லை—அவ்வாற்றால், அவை தெளி வற்றனவாகவும் கற்பனைப் போக்குடையனவாகவும் காணப்பட்டன. இவற்றை யெல்லாம் இரசியப்புரட்சி மாற்றிவிட்டது. சான் மின் சூ எனப்படும் மக்கள்

தத்துவங்கள் மூன்றும், தெளிவற்றனவாகக் காணப்பட்டபோதும், ஒரு பொருளாதாரக் கோட்பாட்டை வகுத்துக் கூறின. 'உழுவோனுக்கே நிலம் உரியது' என்பதே அதன் நடுநாயகமான கருத்தாய் இருந்தது. இந்தியத் தேசியப் பேரவையும் தனது வேலைத்திட்டத்திலே தீண்டாமையொழிப்பிற்கு முதலிடங் கொடுத்தது—அதிமுக்கியமான புரட்சி நடவடிக்கையாக இது கொள்ளத்தக்கது. அன்றியும், 'திட்டமிடுதல்' பற்றியும் தேசிய இயக்கங்கள் சிந்திக்கத் தொடங்கின. குடியேற்ற ஆட்சியிலே கட்டுண்டு, நலிவுற்றுச் சீர்குலைந்து, மேலைடுகளையே சார்ந்துநின்ற ஆசிய நாடுகள் யாவும் தத்தம் பொருளாதாரத்தை உற்பத்திக்கு ஏற்றவகையிலே சீர்திருத்தியமைத்தற்கு, இரசியா கையாண்ட ஐயாண்டுத் திட்டங்களின் வெற்றியானது ஊக்கமளிப்பதாயிருந்தது. மேலைடுகளுக்கு எதிராக வெழுந்த தாக்குதல், ஐரோப்பாவின் உயிர் நிலையென்று கருதத்தக்க பொருளாதாரத்துறையினையே பெரிதும் பாதித்தது. ஐரோப்பியக் கைத்தொழிற் பொருள்களுக்கு வாய்ப்பான சந்தைகளாக இனியும் இருத்தற்கு ஆசிய நாடுகள் சித்தமாயிருக்கவில்லை. இரசியா போன்ற பிற்றை நிலைப்பட்ட ஒரு நாடு, திட்டத்தின் வழியமைந்த உற்பத்திப் பெருக்கினால் சிலவாண்டு காலத்துள் தலையாய ஒரு கைத்தொழில் நாடாக வளர்ச்சி பெற்றது கண்டு, ஆசியமக்களும் தாமும் கைத்தொழிற் புத்தமைப்பும் பொருளாதாரச் சுதந்திரமும் எய்திடலாம் எனும் நம்பிக்கை மீதூரப் பெற்றனர்.

அறிவுத்துறையிலே இத்துணைக் காலமாக மேலைடுகள் செலுத்திவந்த ஆதிக்கத்தையும் இரசியப் புரட்சியானது செவ்வையாகக் களைந்துவிட்டது. இருபதாம் நூற்றாண்டின் முதற் காலில், தியுவி, இரசல், பேக்சன், குரோசு போன்ற தத்துவஞானிகளும்; இலாசுகி, கோல் போன்ற அரசியற் சிந்தனையாளரும்; பேஜோ, தனன்சியோ, அனற்றோல் பிரான்சிசு, பிரண்டெலோ போன்ற அறிஞர் பெருமக்களுமே ஆதிக்கம் பெற்றிருந்தனர். ஆயின் அப்பருவம் முடிவடைய, இரசியாவில் ஊற்றெடுத்த புரட்சிப் போக்கினைப் பிரதிபலிக்கும் வகையிலே, புதிய இயக்கங்கள் ஆசியாவிலே வளரத் தொடங்கின. முற்போக்கு இலக்கியமென்பது ஓர் இலக்கியப் 'பாணி' என்பதோடமையாது, ஓர் இயக்க பேஜட்சோ, தனன்சியோ, அனற்றோல், பிரான்சிசு, பிரண்டெலோ போன்ற சந்தரும் எழுத்தாளராக மிளிரத் தொடங்கியபோது, ஒரு நூற்றாண்டுக்கால மாகத் தனியாட்சி செலுத்திய மேலைட்டுப் புலத்துறையின் ஆதிக்கம் முடிவுற்றது எனலாம்.

ஆசிய மக்களின் உணர்ச்சி வேகத்தை இரசியப்புரட்சி தூண்டிவிட்டதென்பதை யாரும் மறுக்கத்துணியார். ஆசிய மக்களை அது விழிப்படையச் செய்தது—மேலைடு போதித்த பலவற்றைக் கேள்விமறுப்பின்றி உள்ளவாறே ஏற்றுவந்த மக்கள் மனத்தில், சிந்திக்குந்திறன் படைத்த மக்கள் மனத்தில், அவை பற்றிச் சந்தேக வித்துக்களை அது விதைத்தது—என்பதற்கு ஐயமில்லை. ஆசியமக்கள் மீது மேலைடுகளுக்கிருந்த பிடியை அது சாலவுந் தளர்த்திற்று. என்பதையும் ஒப்புக்கொள்ளல் வேண்டும். ஆயின் இவை யாவற்றுக்கும் அப்பால், கூர்ந்து நோக்கற்பாலதொன்றுண்டு. வெவ்வேறு மக்களை அது வெவ்வேறு வகையிற்

பாதித்தது என்பதே அஃது. சமூகச் சீரமைப்பு ஓரளவிற்கு நடந்தேறி, நூறு வருடகாலமாக நிகழ்ந்த சீர்திருத்தத்தின் பயனுப்ப் பழமரபு தகர்ந்துவிட்ட இந்தியா போன்ற நாடுகளிலே இரசியப் புரட்சிக்கிருந்த கவர்ச்சியானது சீனத்திலும் இந்து சீனத்திலும் காணப்பட்டதிலும் வலிகுறைந்ததாகவே இருந்தது. நாம் முன்னம் ஆராய்ந்த வரலாற்றுச் சார்புகளின் காரணமாக, சீனத்திலும் இந்து சீனத்திலும் பழைய சமுதாயத்தை மேனாட்டுச் செல்வாக்குத் தகர்க்க உதவிற்றேயன்றி, அதனிடத்திற் பிறிதொன்றைப் பெய்தற்குத் துணைசெய்யத் தவறிவிட்டது. இவ்வாறுண்டாய சமூக, தார்மிக குழப்பத்தினிடையே, இரசியப் புரட்சியின் கோட்பாடுகள் இந்திய நாட்டிற் பெறத் தவறிய தலையாய செல்வாக்கை ஆங்குச் செலுத்தின. இரானும் அபுகானித்தானும் போன்ற நாடுகளிலே சமுதாய அமைப்பு எத்துணைப் பிற்போக்குடைய தாய் இருந்தபோதும், சீனத்திலும் இந்தியாவிலும் போன்ற அத்துணை நெருக்கிடைக்கு ஆளாகாது சீர்குலைதலின்றி 'நின்றுபிடித்தமையால்', அப்புரட்சியின் செல்வாக்கு இன்னுங் குறைவாகவே இருந்தது. இவ்வழி, சீனத்திலும் அனமிலும் ஒரு வெற்றிடத்தை நிரப்பு முகத்தாற் பொதுவுடைமைவாதம் பரவியவாற்றைக் காண்கிறோம். மற்று இந்தியாவிலோ சமூகச் சீரமைப்பும் சமயச் சீர்திருத்தமும் அவ்வெற்றிடத்தை முன்னமே நிரப்பிக்கொள்ள, மேலைப் புலத்தின் பிடியை அகற்ற உதவிய அறிவுத் துறைசார்ந்த ஓர் அபிவிருத்தியாகவே பொதுவுடைமைச் சிந்தாந்தம் இயங்குவதைக் காண்கிறோம். இனி இறுதியாக, சுதந்திரம் படைத்த நாடுகளாகிய இரான், அபுகானித்தான், சீயம் போன்ற நாடுகளிலே, சமூகத்துறையிலும் சமயத்துறையிலும் மிக அருகியே ஆக்கிரமிப்பு நிகழ்ந்திருந்தமையால் பொதுவுடைமைச் சித்தாந்தம் பொதுவாக அந்நாட்டு மக்களைக் கவரத் தவறிவிட்டது எனலாம்.

யப்பான் நாடு இவற்றுக்கெல்லாம் புறம்பான ஒருவகையில், தனித்து நிற்கின்றது. ஒற்றைப்பர்ப் புரட்சி யப்பானிலே யாதும் நம்பிக்கை யூட்டுவதற்குப் பதிலாக, அச்சத்தையே அதற்கு விளைவித்துளது. 'ஆக்கிரமிப்பாளர்' வரிசையைச் சேர்ந்திருந்த யப்பான், மேலைப்புலத்துக்கு எதிரான ஆசியப் புரட்சியெதுவும் தேசியச் சுதந்திரத்தை மாத்திரங் குறிப்பதாக இருக்கவேண்டுமேயல்லாது, சமூகத்திலே தீவிரமாற்றத்தைக் குறித்தலாகாது எனுங் கருத்தை உடையதாயிருந்தது—அவ்வாறிருந்தமை இயல்பே. ஆதலின் பாட்டாளிமக்களை அறைகூவி அழைப்பதாயும் 'சுரண்டப்படும் வருப்பாரைத்' தூண்டிவிடுவதாயும் அமைந்த இரசியப் புரட்சியானது மேனாடுகளுக்கு ஓர் ஆபத்தாக இருந்தவாறே யப்பானுக்கும் இருந்தது. இரசிய நாட்டிலே தலையிடுவதைத் தீவிரமாக ஆதரித்த நாடுகளுள் யப்பானும் ஒன்று. சோவியற்று நாட்டிலிருந்து கிழக்குச் சைபீரியாவைப் பிரிக்க முயன்று அது தவறியது. மற்றை ஆசியத் தேயங்கள் எல்லாம்—பழைமைக்கொள்கையில் நனி ஊறியவை தாமும்—மேலைப் புலத்துக்கெதிராகத் தாம் மலைந்த போராட்டிற் புதிய இரசியாவை ஒரு நட்பு

நாடாக நாடி நிற்ப, யப்பானை தனது தேசியப் பெருமைக்கு மாறுக வந்துற்ற வைரித்த ஓரெதிரியாக அதனைக் கணித்தது. இவ்வுணர்ச்சியோடு, பிரித்தனும் அமெரிக்காவும் தனக்கிழைத்த அநீதியால் அல்லற்பட்ட உணர்ச்சியும் தலைக் கூடவே, பொதுவுடைமை யெதிர்ப்பு ஒப்பந்தத்தில் அது சேர்மனியோடும் இத்தாலியோடுஞ் சேர்ந்து கொண்டது.

ஐந்தாம் பாகம்

ஐரோப்பா பின்னிடைதல்

1918 – 1919

அதிகாரம் 1

ஐரோப்பாவில் உண்ணாட்டுப் போரும் அதன் விளைவுகளும்

ஆசியச்சார்பில் நோக்குமிடத்து, 1914-18 வரையும் நிகழ்ந்த பெரும்போர், ஐரோப்பிய நாடுகளின் சமுதாயத்திடையே நிகழ்ந்த உண்ணாட்டுப் போராகவே கருதற்பாலது. அப்போரிற் சில கட்டங்களின்போது ஆசியநாடுகள் நேராகப் பங்குபற்றியது உண்மையே. ஆயினும், அப்போரில் ஈடுபட்ட ஒரு சாராரின்—கேண்மை பூண்ட வல்லரசுகளின்—அழைப்பாலும் தூண்டுகையாலுமே அவை பங்குகொண்டன என்பதையும், அவை பங்கு கொண்டது பற்றிச் சேர்மன் மக்கள் பெரிதும் வெகுண்டனர் என்பதையும் இங்குக் கவனித்தல் வேண்டும்.

ஆசிய வரலாற்றுப் போக்கிலே அப்போருக்கிருந்த முழுத்தாக்கத்தையும் உணர்வதற்கு, அப்போராட்டின் உண்ணாட்டுத் தன்மையை அழுத்திக் கூறுதல் அவசியமாகும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே, மூன்றிலொருபோது மில்லாப் பொருளாதாரச் சீத்துவமும் அரசியல் மாண்புந் துய்த்திருந்த ஐரோப்பிய நாடுகள், உலகம் முழுவதும் தமக்கே உரியது—ஆசியாவிலே தமது ஆதிக்கம் சாசுவதமானது—தெய்வசங்கற்பத்தால் அது நியமிக்கப்பட்டது—என்ற வகையான நம்பிக்கையில் ஊன்றி நின்றன. இந்த மனப்பான்மையை முன்னமே நாம் கவனித்ததுண்டு. கிப்பிளிங் புலவனது காலம் அது; மனித வினத்தை மேம்படுத்தும் பெரும் பாரம் தனதென்று வெள்ளையன் நினைந்த காலம் அது. கிழக்குலகை ஆட்கொண்டருளுவதே வெள்ளையினத்துக்கு விதிக்கப்பட்ட இலட்சியமாக அப்போது தோன்றிற்று. வெள்ளையன் நிருமாணித்த ஆட்சிமுறை அசைத்தற்கரிதாய்த் காணப்பட்டபோதும், ஏற்கவே இருவெடிப்புக்கள் தோன்றிவிட்டன. ஆசிய நிழலில் தானும் ஓர் இடம்பிடிக்கவேண்டுமென இரண்டாம் வில்கெமின் ஆட்சியிற் புதியசேர்மானியப் பேரரசு கொண்ட வேட்கையே முதலாவதாகும். கிழக்குலகிலே பிரித்தானியரின் அதிகாரத்துக்கு மறுப்பு மெதிர்ப்பும் இல்லாதிருந்த அக்காலத்தில் ஒருபோதுங் காணப்படாத முரண்பாடுகளும் போட்டிகளும், இப்போது, குடியேற்றவல்லரசுகளின் கூட்டத்திடையே முற்றி வளர்ந்தன. செல்வாக்கு வட்டாரங்களாகவேனும் சீனத்தைப் பிரிவினை செய்தலே அக்காலப் பெருங் குறிக்கோளாயிருந்தது. அது கைகூடினும் கூடும் போலத்தோன்றிற்று. ஆயின், அதற்கிடையில், ஆணிலம் உள்ளவும் இல்லவுமான பேரரசுகளிடையே போட்டி மூளவே, சீனத்துக்குப் பெரிதும் வேண்டிய தீர்க்கமான அவகாசங் கிடைத்தது. அக்காலத்தில், ஆணிலவுரிமையாதுங் கோருதலின்றி, பிறநாடுகளுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகளினின்று ஓல்லும் நன்மையெலாம் பெறுவதிற் கருத்தாயிருந்த அமெரிக்கா ஆணிலமில்

லாப் போரசுவாதியாகக் கருதத்தக்கது. சீனப் பிரவேசத்தைப் பிரிவினை செய்தல், அது பாராட்டிய உரிமைகளுக்கு ஒவ்வாது. எனவே, நாடுபற்றி ஆட்சி செய்ய விரும்பிய புதுப் போரசுநாடுகளான சேர்மனியும் யப்பானும் ஒருபுறத்தும், சீனத்தின் எல்லாப்பகுதியும் ஒக்கவே தனக்குத் திறந்திருத்தல் வேண்டுமென விரும்பிய அமெரிக்கா மறுபுறத்தும் தாக்கவே, பழைய முறையானது இரட்டைத்தாக்குதலின் நெருக்கிடைக்கு ஆளாயிற்று.

தூரகிழக்கில் ஒரு பெரும் வல்லரசாக யப்பான் வளர்ந்தமையே, ஐரோப்பிய ஆதிபத்தியத்திலே தோன்றிய இரண்டாவது வெடிப்பாகும். ஐரோப்பிய வல்லரசுகளைத் தானும் சேருமென்றும், அவை கடைப்பிடித்த பூட்கைகளையே கவனித்தல் வேண்டுமென்றும் 1895 ஆம் ஆண்டு முதலாக யப்பான் அறிக்கை செய்து வந்துளது. சீனத்துக்கெதிராகத் திரண்டு நின்ற சத்திகளோடு யப்பானுஞ் சேர்ந்துகொண்டதுபோற் காணப்பட்டாலும், தன்னலங் கருதியே ஆக்கிரமித்து, இறுதியில், தூரகிழக்கில் இயன்றவிடத்தெல்லாம் ஐரோப்பியச் செல்வாக்கை அகற்றும் நோக்கோடேதான், சீனத்துக்கெதிராகக் கிளர்ந்த ஐரோப்பிய கூட்டுநடவடிக்கை முறையை அது பயன்படுத்திற்று என்பது ஆதியிலிருந்தே தெளிவாகியது.

ஐரோப்பியப் போரின் உடன் விளைவு யாதெனில், ஆசியாவில் மேலுடுகளின் ஒற்றுமையில் நீராப் பிளவை உண்டாக்கியதேயாம். இவ்விடயத்திற் பிரதானமான இகலாட்டரங்கு சீனமேயாம். ஆரம்பத்திலேயே, 1914 ஓகத்து மூன்றுந் தேதியில், தனது நடுநிலையைப் பிறநாடுகள் மதித்தொழுக வேண்டுமென்றும், பிறநாட்டோர்க்குக் குத்தகையாக விடப்பட்ட சீனப்பிரதேசங்களிலே பகை தொடரல் யாதும் நிகழக்கூடாதென்றும் சீனவரசாங்கம் கேட்டுக்கொண்ட போதும், வல்லரசுகள் அக்கோரிக்கையை அக்கிரமமாகப் புறக்கணித்து, அதன் ஆணிலவுரிமையையும் மதித்தொழுக மறுத்துவிட்டன. பிரித்தானியப் படைப் பிரிவொன்றன் உதவியோடு யப்பானியத் தாணையொன்று சீனப்பிரதேசத்திலே கரையிறங்கி, திசிங்ராவோ எனும் ஊரைத் தாக்கி அடிப்படுத்தி, கியாவோச் சோத் தீபகற்பத்தையுங் கைப்பற்றியது. யப்பானிய அதிகாரவர்க்கங் கடைப்பிடித்த இந்த அபூர்வமான நெறிபற்றியும், சீனம்மேல் விடுக்கப்பட்ட இருபத்தொரு கோரிக்கை பற்றியும் பிறிதோரிடத்தில் ஆராய்வோம். எனினும், இந்நடவடிக்கையால் ஆசிய வல்லரசொன்று தலையாய ஐரோப்பிய வல்லரசொன்றினை விரட்டியோட்டி, ஆசிய அலுவல்களிலே அதற்கு மேலுஞ் செல்வாக்கு இருப்பதைத் தடுத்துவிட்டது—இதுவே நாம் இங்குக் குறிப்பாக அழுத்திக் கூற வேண்டிய விடயமாகும். இன்னும், பிரித்தனுடைய தீவிரமான உதவியோடேதான் இது கைகூடிற்று. யப்பானியப் படைமுதல்வன் சேனபதி காமியோ என்பான்றன் தலைமையிலேயே பிரித்தானியச் சேனபதி பொருதான் என்பதும் நினைவிருத்தத் தக்கது.

இரண்டாவதாக, காலப்போக்கிலே போர்நிலைமை நெருக்கடிப்பட்டபோது, சேர்மானிக்கெதிராக வீறுகொண்ட பிரித்தனும் பிரான்சும், தயங்கிப் பின்னின்ற சீனவரசை யாதுமோர் தலைக்கீடுபற்றிச் சேர்மானியச் சொத்துரிமை

களைக் கைப்பற்றுமாறும் சீன நாட்டிலிருந்து சேர்மானியச் செல்வாக்கை முற்றுகத் துடைத்திடுமாறும் தூண்டிவிட்டன. சீனத்துறைகளிலே அடைத்து வைக்கப்பட்ட சேர்மானியக் கப்பல்களை எவ்வாறேனுங் கைப்பற்றப் பிரித்தன் ஆவற்பட்டது. பிரான்சியரின் நெருக்கிடை காரணமாக, சீனத்திலே சேர்மானியக் கைத்தொழில் நிலையங்களும், வங்கிகளும், வர்த்தகமனைகளும், பிற முயற்சிகளும் மூடப்பட்டன; சலுகைகள் பறிக்கப்பட்டன; ஆணிலப்புறத்துரிமைகள் மறுக்கப்பட்டன. இவையெல்லாம் எதிர்காலத்தே சீனத்துக்குப் பெரும் பயன் அளிக்கப் போகும் ஓர் உதாரணமாயின. இறுதியில், மத்திய வல்லரசுகளுக்கெதிராகப் போர்ப்பிரகடனஞ் செய்யுமாறு சீனம் ஊக்கப்பட்டது.

சேர்மானியப் படையெடுப்பாளர் 1914 இல் மாண்நதியை அடைந்தபோது பிரித்தானிய அதிகாரிகளின் தலைமையிலே இந்தியப் படைப்பிரிவுகள் பிரான்சுக்கு விரைந்தனுப்பப்பட்டன; வில்லங்கமான வேளையில் அவை சேர்மன் படையெழுச்சியைத் தடுத்துநிறுத்தின. பின்னர், சுயசுக்கால்வாயையும் மத்திய கிழக்கையும் பாதுகாத்தற்கு அவை பெரிதும் பயன்பட்டன; ஆபிரிக்காவிற் பிறவிடத்தும் அவை உபயோகிக்கப்பட்டன. சீயம் சேர்மனி மேல் 1917 இற் போர் தொடுத்தது. இந்துசீனத் தொழிலாளர் கோட்டியொன்று பிரான்சிலே பணிபுரிந்தது. சீனமும் 1917 ஓகத்து 14 இல் நட்புநாடுகளின் பக்கஞ் சேர்ந்து கொண்டது. இவ்வாறுக ஆசியநாடுகள் அனைத்தும் ஐரோப்பிய உண்ணாட்டுப் போரிலே ஈடுபட்டன. எனினும், இந்தியாவிலும் சீனத்திலும் யப்பானிலேதானும் பொதுமக்கள் கருத்து நட்புநாடுகளுக்கன்றிப் பெரும்பான்மையும் சேர்மனிக்கே சார்பாயிருந்தது. இந்தியாவில், ஆளும் வர்க்கத்தினராகிய மகாராசாக்களிடையே யன்றிப் பிறவிடத்தே பிரித்தனுக்குச் சார்பான உணர்ச்சி யாதுங் காணப்பட்டிலது. சேர்மானியரின் வெற்றி பற்றிய செய்திகள் கேட்டு மக்கள் இறும்பூதெய்தினர்; மற்று, நட்பு நாடுகள் வெற்றியீட்டிய போது அவர்கள் மனம் மாழ்கினர். யப்பானியருடைய ஆக்கிரமிப்புத் திட்டங்களைத் தடுக்கும்பொருட்டே சீனம் மெத்தவும் தயங்கிப் போரில் இறங்கியது. யப்பானிலேயும், சாந்துங்குப் போராட்டின் பின்னர், நட்புநாடுகளுக்குமாறான உணர்ச்சி தெளிவாகக் காணப்பட்டது. 1916 ஆம் ஆண்டின் இறுதிக்கண்ணே, பிரித்தனுக்கெதிராக மிக உக்கிரமான பத்திரிகைப் பிரசாரம் ஊருவாகிற்று. ஆசியநாடுகள் நட்புநாடுகளின் சார்பிற் போரிட்டபோதும், ஆசியமக்களின் நட்புக்கு அருகதையற்ற இருகட்சியாரிடை மலிந்த ஓர் உண்ணாட்டுப் போரே அதுவென்றும், அக்கட்சிகளுள் யாதுமொன்று ஆசியரின் அனுதாபத்துக்குரியதாயின், ஆசியாவில் ஆக்கிரமிப்புச் செய்யாமலபுடையதும் பிரதான முசிலிம் வல்லரசான துருக்கியோடு கேண்மை பூண்டதுமாகிய சேர்மானியக் கூட்டுறவே அதற்கு உரியதாகத் தக்கதென்றும் கிழக்குலகப் பொதுமக்கள் கருதினார்கள்.

எவ்வாறுயினும், பெரும்போரிலே ஆசியமக்கள் பங்குபற்றியமை, ஆழ்ந்தகன்ற விளைவுகளைப் பயந்தது.

மாண்நதிப் போரிலே பங்குபற்றி இந்தியாவுக்குத் திரும்பிய இந்திய வீரன், வெள்ளைச் சாகிபு பற்றி, பல்லாண்டுகாலமாக அரசாங்கத்தின் பிரசார மூல மாய்த் தான் பயின்றவற்றுக்கு முற்றும் மாறுன கருத்துக்களோடு வந்து சேர்ந் தான். தென் பிரான்சிலே பணியாற்றிய இந்துசினத் தொழிலாளர் கோட்டிகள் தாம் முன்னங் கேட்டறியாத குடியாட்சியும் குடியரசும் பற்றிய புதுக் கருத் துக்களோடு அணுமுக்கு மீண்டன. அக்காலத்திற் பிரான்சுக்குச் சென்ற சின ருள் ஒருவன், இளைஞனை சோ-என்-லாய் என்பான்; அவன் கோட்டியிடையே அவனுடைய அரசியல் முயற்சி காரணமாக அவன் வெளியேற்றப்பட்டான்.

இத்தகைய விளைவுகளிலும் பார்க்க முக்கியமான செல்வாக்கு ஒன்றுண்டு. ஆசியாவிலே பிரான்சிய பிரித்தானிய அரசாங்கங்கள் தத்தம் குடிகளின் தார் மிக ஆதரவை வேண்டிநின்றன. குடியாட்சியைப் பாதுகாத்தற்கும் சேர்மன் கலாச்சார உலகை மீக்கொள்ளாவகை தடுத்தற்குமாகப் போர் நிதிக்கு உதவு மாறு இந்தியர்க்கும் இந்துசீனர்க்கும் கோரிக்கை விடுத்துவிட்டு, அதைத் தொடர்ந்து அந்நாட்டு மக்களுக்கு குடியாட்சியுரிமையும் அவர்தம் பண்பாடு கட்குச் சுதந்திரமும் வழங்க உறுதியளிக்காமை விசித்திரமான விந்தைப் போக்காகவே தோன்றியிருக்கும். மேலும், போர் நிதிக்குப் பணவுதவிபெற்ற தோடு, குடியாட்சியைக் காப்பாற்றுதற்காகப் படையிற் சேர்ந்து போரிடுமாறு இந்தியரும் இந்துசீனரும் கட்டாயப்படுத்தப்பட்டபோது, அந்நிலைமையில் ஊடுருவி நின்ற முரண்பாடுகள் குடியேற்ற நிருவாகிகளுக்குமே தெளிவாகப் புலப்பட்டன. இந்திய நாட்டிலே, போர்க்கு ஆதரவளித்தலைத் தேசியத் திட்டத் தின் ஓரமிசமாகக் கொள்ளுமுன்னம், அரசியற் பிரச்சினைகள்பற்றி உடன் பாடு யாதும் ஒப்பேறுதல் வேண்டுமெனத் தேசத் தலைவர்கள் பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்தனர்.

அரசியற்றுறையிலே, சனுதிபதி வில்சன் விடுத்த பதினலு அமிசப் பிரகட னத்தின் பயனுக, குடியேற்றவாட்சிமுறையும் பேரரசுமுறையும் மேலும் வலி குன்றின. 'மக்களின் சுயநிருணயம்' எனுங் கோட்பாடானது, 1917 இலே, ஒரு புதிய தாரகமந்திரமாய் ஒலித்தது. ஒடுக்கப்பட்டிருந்த ஐரோப்பியத் தேசியவினங்களைப் பொறுத்தவரை அதன் விளைவு எத்தகையதாயினும், ஆசி யாவிலே அது ஒரு விடுதலைக் கோட்பாடாகப் போற்றப்பட்டது. சேர்மனிக் கெதிரான பிரசார இயக்கத்திலே அதுவும் ஒப்பிய ஒரு 'போர்நோக்கு' எனும் நிலைக்கு உயர்த்தப்பட்டது. நட்புநாடு ஒவ்வொன்றும் வில்சன் உரைத்த புதிய சுலோகத்திலே தனது நம்பிக்கையைப் பறைசாற்ற முந்துற்றபோது, அதனை ஆதாரமாய்க் கொண்டு ஆசிய நாடுகள் வற்புறுத்திய கோரிக்கைகளைக் குடி யேற்றவல்லரசுகள் வெளிப்படையாக மறுக்கவோ பகிரங்கமாக எதிர்க்கவோ வகையறியாது நின்றன. மக்களின் சுயநிருணயம் எனும் மகத்தான இலட்சி யத்தை நிலைநாட்டுதற்காக ஆசிய மக்கள் ஐரோப்பியரோடு ஒத்துழைத்துப் போராடல் வேண்டும்; தொலை தேயங்களிலுள்ள செருக்களங்களிலே உயிரிழுத் தல் வேண்டும்; ஆனல் அவ்விலட்சியம் எத்துணைச் சிறந்ததாயினும், அம்மக் களுக்கு ஆகாது—என்றவாருக அவ்விலட்சியத்தைப் பிரசித்தஞ் செய்தல் ஒவ்

வாதே! ஆதலின், குடியேற்ற நாடுகளுக்கும் சுயவாட்சி வேண்டுவதே என் பதை ஒப்புக்கொள்ளல் அவசியமாயிற்று. அவ்வுரிமைக் கோரிக்கையைப் புறக் கணித்தலும் அல்லது அரச நிந்தையென மாசுகற்பித்தலும் இனி ஒவ்வாது.

சீனத்திலே சுயநிருணயக் கோட்பாடு சென்று பயன்படுதற்குப் பக்குவமான விரிந்த வாய்ப்பு இயல்பாகவே இருந்தது. சமனில்லாப் பொருத்தனைகள் வாயி லாக விளைந்த குறைபாடுகள் பல இருந்ததோடு அன்னியர் அதிகாரஞ் செலுத் திய பல பிரதேசங்களும் ஆங்கு இருந்தன. கியாவோச்சோ மாகாணத்தை யப் பான் தன் கைப்படுத்தி வைத்திருந்தமை, சுயநிருணயக் கோட்பாட்டைத் தெளி வாக மீறுஞ் செயலாகும். சீன வழமைகளுக்கிருந்த கட்டுப்பாடுகள், கடற்றுறை களிலே காணப்பட்ட பற்பல சலுகைப் பிரதேசங்கள், சீன மண்ணிலே அன்னி யத் தானைகள் தங்கியிருந்தமை—இவை யெல்லாம் சீன மக்களின் சுயநிருண யத்துக்குப் பங்கம் விளைப்பனபோற் காணப்பட்டன.

இந்த அரசியற் சார்புகள் ஒருபுறமாக, போரின்வழித் தோன்றிய பொருளா தாரச் சத்திகளும் மேலைப்புலத்தின் ஆதிக்கத்தைத் தகர்க்க உதவின. போர் நிகழ்ந்த நாலாண்டுக்காலத்தையும், யப்பான் நாடு கிழக்குலகோடு தான் நடாத் திய வியாபாரத்தைத் திட்டமிட்டு வளர்த்தற்குப் பயன்படுத்தியது. சேர்மானி யரின் போட்டி அகற்றப்பட்டது. சீவமரணப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பிரித்தனும் பிரான்சும், தத்தம் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் திரட்டி வெற்றிபெறுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தமையால், ஆசிய நாடுகளின் வர்த்தகவிருத்திக்கு வழிதிறந்தது. பிரித்தானியப் பொருளாதாரம் யுத்தமுயற் சியிற் சிக்குண்டு அவதிப்பட, கைத்தொழிற் பாதையிலே முதன் முக்கிய அடி யெடுத்து வைத்தது இந்தியா. இந்திய நாட்டு மூலதனத்துக்குச் சாதகமான நிலையேற்பட்டது. ஐரோப்பிய முதலாண்மை நலிவுற்றதனால் ஏற்பட்ட விளைவு கள் உண்மையிற் போருக்குப் பின்னரே வெளிப்பட்டன. அப்போது இலண்ட னுடைய மேம்பாட்டுக்கு அமெரிக்கா போட்டியாய் எழுந்தது. பிரித்தானிய மூலதனம் இன்னும் வலிமிக்கதாய் இருந்ததாயினும், இந்தியாவில் அது மெத்த வில்லங்கப்பட்டே தற்காத்துக்கொள்ளும் நிலையில் இருந்தது. மூலதனத்தைத் தழுவியமைந்த முயற்சிகள் இந்தியாவில் வளர்ந்தமையும், கைத்தொழில்கள் விருத்தியடைந்தமையும், முற்றுரிமையாகப் பிரித்தன் அனுபவித்த துறை களிலே இந்திய மூலதனம் பங்குபற்றியமையுமெல்லாம், பிரித்தானியப் பொரு ளாதார நிலை நலிவுற்றதன் நேர் விளைவுகளேயாம்.

பொதுவகையான வேறு இரு விளைவுகளும் இங்குக் குறிப்பிடத்தக்கன. முத லாவதாக, மேற்கு ஐரோப்பிய நாடுகளிலே, பலம் பொருந்திய இடதுசாரி இயக் கத்தின் வளர்ச்சியானது கிழக்குலகப் போரசில் நிகழ்ச்சிப் போக்கினை உரு வாக்குவதில் நேர்விளைவு பயந்தது. ஆங்கிலத் தொழிற்கட்சியானது, அதன் ஆரம்ப வளர்ச்சிக்காலத்திலே இந்தியத் தேசிய இயக்கத்தோடு நெருங்கிய தொடர்புடையதாய் இருந்தது. போருக்குப் பின்னர் சமவுடைமைக்கட்சிக்குத் தலைவராயிருந்த இராம்சே மக்டொனல்டு ஆதிநாளிலிருந்தே அவ்வியக்கத் துக்கு ஆதரவளித்து வந்தார். இவ்வாறே அனைத்து நாட்டுத் தேசிய இயக்கமும்

பிரான்சிய இடதுசாரிக் கட்சிகளோடு கைகோத்துச் சென்றது. போரையடுத்த காலப்பகுதியில், இக்கட்சிகள் தத்தம் நாட்டு அலுவல்களிலே கணிசமான பெருஞ் செல்வாக்குப் பெற்றன. அரசியல் ஆதிக்கமெனும் தளையைத் தளர்த்தும் வகையில் அமைந்த பூட்கைகளைச் செயற்படுத்தற்கு, இவை கருவியாய் அமைந்த வாற்றைப் பின்னர்க் காண்போம்.

இரண்டாவது அமிசமாகிய இரசியப் புரட்சிபற்றி முன்னமே புறம்பாக ஆராய்ந்துள்ளோம். பெரும்போரின் ஒரு விளைவு என்றவகையால், ஒற்றேர் பர்ப் புரட்சியானது, நட்பு நாடுகள் தம் குறிக்கோளாக ஏற்றுக்கொண்ட தத் துவங்களுக்கு ஒரு புதிய தாற்பரியத்தைக் கொடுத்தது. முதலாளித்துவத்தின் இறுதிக் கட்டமே பேரரசுமுறை என இலெனின் கொடுத்த வரைவிலக்கணமும், குடியேற்றவாதிக்கத்திலிருந்து அடிமை மக்களை மீட்கும் முயற்சி உண்மையில் முதலாளித்துவத்துக்கெதிராக நிகழும் போராட்டத்தின் ஒரு கூறே என அவர் கொண்ட உறுதியும் பேரரசு முறையின் உட்பொருளை மக்கள் கருத்தில் முற்றுக மாற்றிவிட்டன.

இறுதியாக, அப்போர் உலகமெங்கணும் இயக்கங்களின் வேகத்தை விரைவு படுத்திற்று. உதாரணமாக, இந்தியாவிலே, 1914 வரையும் நூண்புலத்தோரள வில் நின்றுவிட்ட சுதந்திர வியக்கமானது, 1919 இல் ஒரு பொதுமக்களியக்க மாகப் பெரிதும் விரிவடைந்து விட்டது. எங்கணும் நிலவரம் இத்தகையதா யிற்று. நிகழ்ச்சிப்போக்கின் வேகம் புதியதொரு தூரிதத்தைப் பெற்றது— 1918 இல் இதனை எதிர்வுகூறினர் யாருமிலர்; எதிர்பார்த்தாரும் யாருமிலர் எனலாம். அப்போர் உலகப் பெரும் புரட்சியாகி, 1914 ஓகத்துக்கு முற்பட்ட காலத்தையும் 1918 நவம்பருக்குப் பிற்பட்ட காலத்தையும் ஆழமாகப் பிரித்து வைத்தது எனலாம்.

சிந்தனைப் போக்கிலே ஏற்பட்ட இப்பெரும் பிளவை விளக்கிக் காட்டித் துலக் கமாக நிற்கும் ஒரு பேருண்மை உண்டு. போரையடுத்த காலத்திலே, பேரரசு வாத இலட்சியங்களில் நம்பிக்கை குன்றியதே அதுவாகும். சேச்சில் ஒருவ ரைத் தவிர, ஆட்சிசெய்வதே வெள்ளையனுக்கு விதிக்கப்பட்ட பெரும்பணி யென்ற கொள்கையில் நம்பிக்கை தெரிவித்த பெருமகன் யாவனுமே பிரித் தானியக் கட்சிகளில் இருந்திலன் எனலாம். தாராண்மைக் கட்சியைச் சேர்ந் தோராயினும், பழைமைக்கட்சியைச் சேர்ந்தோராயினும், கட்சிச்சார்பற்றோ ராயினும், இந்தியப் பதிலிராயன்மார் அனைவரும் இந்தியச் சுதந்திரமெனும் இலட்சியத்துக்கே தம் ஆதரவைப் பகிரங்கமாக எடுத்துக் கூறினர். எட்வின் மொன்சேகு முதல் (1917-22) பெதிக் உலோறென்சு வரையும் அரசுச் செயலா ளர் யாவரும்—பழைமைவாதப் பெரும்புள்ளியான சேர் சாமுவெல் ஓர் போன் ரூரும்—பிரித்தானியராட்சியைப் பேணுதற்கன்றி, இந்திய மக்களின் விடுதலைக் காகவே தாம் பணிசெய்து கிடப்பதாகக் கூறிக் கொண்டனர். சொல்லளவிற் பிரான்சியர் கூடிய தைரியங்காட்டினராயினும், அவரிடத்திருந்தும் நம்பிக்கை அகன்றுவிட்டது.

சீனத்தை நடாத்தியபான்மையில், இம்மாற்றம், பிறவிடத்தெங்குங் காணு வகையில் மிகத் தெளிவாகப் புலப்பட்டது. கடும் நடவடிக்கை யெடுத்தற்குக் காரணமாயும், ஆணிலமும் நட்டஈடும் பறித்தற்கு ஏதுவாயும் முன்னம் அமைந் திருக்கக்கூடிய சம்பவங்கள், இப்போது, மெல்லிய ஆட்சேபத்துக்கு உகந் தவையாகவே கருதப்படலாயின. சியாங்கை—சேக்கின் சேனைகள் ஆங்கோவிற் சலுகைப்பிரதேசங்களை அடிப்படுத்தின; பல மாதகாலமாக ஒங்கொங்கு வர்த் தக முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டது. இச்சம்பவங்களெல்லாம் முன்னெளிற் கடற்படையார்ப்பாட்டத்துக்குக் காரணமாய் அமைந்திருக்கும். ஆயின் 1926 இற் பிரித்தன் பொறுமையோடு இணக்கம் பேசச் சித்தமாயிருந்தது. ஐரோப் பியரின் மாட்சி சடுதியாக மறைந்தது கண்டு மனங்கவன்ற 'பழைய சீனச் சாம்பவன்களும்' தத்தம் களரிகளிலே பழைய குணம் மாறுத 'பிளிம்பரை'ப் போலப் பழம்பெருமைபேசிக் கொண்டாராயினும், பீரங்கிப் படகுகொண்டு மேனாட்டு ஆதிக்கத்தைச் சீனத்திலே மீட்டுந் தாபிக்கலாமெனத் தீவிரமாக நினைந்ததில்லை. ஐரோப்பியனுடைய மேன்மையிலும் தீர்க்கதரிசனத்திலும் நம் பிக்கை முற்றுக அற்றுவிட்டது.

அதிகாரம் 2

இந்தியா

சரலாற்றுப் புகழ்வாய்ந்த தில்லி நகரிலே, ஐந்தாம் யோட்சு மன்னரின் முடி சூட்டுவைபவத்தைக் கொண்டாடும் முகமாகக் கால்கொண்ட தர்பாரின் விமரிசையும் கோலாகலமுமே, இந்தியாவிற் பிரித்தானியரின் ஆதிக்க உச்சத்தினைக் குறிப்பவாயமைந்தன. இந்தியாவின் பழைய மாட்சியை எடுத்துக்காட்டுஞ் சூழலில், சா சகான் நிருமாணித்த ஓலக்க மண்டபத்தில் வீற்றிருந்து, ஐந்தாம் யோட்சு மன்னர் பேரரசர் என்ற வகையால் இந்தியப் பெருங் கொற்றவர் பார்த்திபரின் வணக்கத்தைப் பெற்றுக் கொண்டார். பிரபலமான பழைய குடும் பங்களிற் பிறந்த குலக்கொழுந்துகள் அரசர்க்கும் அரசிக்கும் பாங்காகப் பணிபுரிந்தனர். மாட்சிமைதங்கிய மன்னர்க்கு அணுக்கத்துணைவராயிருப்பதில், இந்திய இராசாக்கள் பெருமைப்பட்டனர். பொதுமக்களின் ஒப்புதலைக் காட்டுதற்கும் போதிய சான்றிருந்தது; கண்டனக்குரல் எழுந்ததில்லை. ஆயினும், அத்தர்பாரிலே பிரசித்தஞ்செய்த பிரகடனங்களில், மக்களுடைய கிளர்ச்சிக்குப் பணிந்து செல்லும் வகையில் முக்கியமான ஓரமிசம் காணப்பட்டது. கேசன் பிரபு கையாண்ட பூட்கையிலே தலைப்பெரும் அங்கமாயிருந்த வங்கப் பிரிவினைக்கு மாறுக அம்மாகாண மக்கள் தண்டுதலின்றிக் கிளர்ச்சி செய்தாராக, அந்தப் பிரிவினை யோசனை கைவிடப்பட்டது. பத்தி சிரத்தையோடும் கம்பீரமாகவும் கொண்டாடப்பட்ட அந்த முடிசூட்டுவிழாவைப் பார்த்துநின்றோரில், பிரித்தானியரின் ஆதிக்கவெற்றி உச்சத்தைக் கடந்து விட்டதென்பதையும் முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர்ப் பிரித்தானியக் கொடி அதே கோட்டையில் இறக்கி வைக்கப்படுமென்பதையும் கண்டார் யாரே!

மாறுதலடைந்துவந்த சூழ்நிலையை நினைவூட்டும் ஒரு சம்பவம் விரைவில் நிகழ்ந்தது. கல்கத்தாவிலிருந்து தில்லிக்குத் தலைநகரை மாற்றிய பதிலிராயன் ஆடிங்குப் பிரபு சில மாதங் கழித்துப் புதிய தலைநகரத்தில் இராசவிமரிசையோடு புகுந்தபோது, அவன் மீது வெடிகுண்டு வீசப்பட்டது. அதனை வீசிய இராசு பிகாரி போசு என்பான், வங்கத்துப் புரட்சி வீரன், பிற்றை நாளில் யப்பானிலே தஞ்சமடைந்து, இரண்டாவது உலகப் போரின்போது யப்பான் நிறுவிய தற்காலிக 'சுதந்திர இந்திய அரசாங்கத்தோடு' தொடர்புற்றிருந்தான். 1914 ஓகத்திலே முதற்பெரும் உலகப்போர் மூண்டபோது இந்தியாவிற் பொதுவாக அமைதிநிலவிற்று. ஆயின், போர் வளர்ந்துவர, அதனால் விளையத்தகும் விளைவுகளும் தெளிவாக, உடனடியாகச் 'சுயவாட்சி' வேண்டுமெனுங் கோரிக்கை தண்டுதலின்றி வற்புறுத்தப்பட்டது. அக்காலத்தில் அரசுச் செயலாளனாயிருந்த பழைமைவாதி ஒசுற்றென் சேம்பலினுமே கணிசமான அரசியன் முன்னேற்றத்துக்கு ஏற்ற காலம் வந்துவிட்டதென்பதை ஏற்றுக்கொண்டான். அக்காலத்தளவில், இந்தியாபற்றி ஆங்கிலரின் அரசியற் சிந்தனைப் போக்

கிலும் குறிப்பிடத்தக்க மாற்றங் காணப்பட்டது. 'பொறுப்பாட்சி' எனும் பெயர் படைத்த மூக்கியமான ஓர் அரசியற் பத்திரத்திலே, இலயனல் கேட்டிசு என்பான், பொறுப்பாட்சியோடு கூடிய பாராளுமன்றக் குடியாட்சியே இந்தியாவுக்கேற்ற தனியொரு வளர்ச்சி நெறியென்றும், மாகாண ஆட்சியிலே, தெளிவாக வரையறுக்கப்பட்ட குறித்த சில துறைகளில் இந்திய மக்களுக்குப் பொறுப்பளித்தல் அடுத்தபடியாக இருத்தல் வேண்டுமென்றும் வாதித்தான். பிரித்தானிய அரசாங்கம் 1917 ஓகத்திலே வெளியிட்ட அறிக்கையொன்று இந்தியாபற்றி அதன் பூட்கையை வருமாறு வகுத்துக் கூறிற்று. 'பிரித்தானியப் பேரரசில் ஒன்றுபட்ட ஓரங்கமாக அமையும் வகையில், இந்தியாவிற் பொறுப்பாட்சியை உருவாக்கும் நோக்கொடு, சுயவாட்சி நிறுவனங்களைப் படிப்படியாக அபிவிருத்தி செய்வதே' அப்பூட்கையாகும்.

பொறுப்பாட்சி யெனும் கருத்துப் புதியதொரு திருப்பமேயாயினும். அது சேய்மையிலுள்ள ஒரு குறிக்கோளே என்பதையும், உடனடியாகச் செய்தற்கு நினைந்த செயல் சுயவாட்சி நிறுவனங்களை அபிவிருத்தி செய்தலே—அதுவும் 'படிப்படியாக' அபிவிருத்தி செய்தலே—என்பதையும் நாம் இங்குக் கவனித்தல்வேண்டும். தடங்கலான, தாராண்மையற்ற இவ்வறிக்கைபற்றி இந்தியாவில் யாருமே திருத்தியடைந்திலர். இவ்வழிப்போந்த சீர்திருத்தங்கள், அவற்றை யாத்தோரின் பெயரால் மொன்ரேகு—செம்சுபோட்டுச் சீர்திருத்தங்கள் எனப் படலாயின. அவை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, செயற்படுத்தப் பட்டகாலை, மக்களாதரவைப் பெறத்தவறின. அரசமைப்புப் பற்றிய இவ்விகலாட்டு ஒருபுறமாக, அக்கால் இந்தியா கணிசமான முன்னேற்றமடைந்த பிறதுறைகள் உண்டு. உலொயிட் யோச்சு இலண்டனில் நிறுவிய போர் மந்திரத்தில் இந்தியர் இருவர் நியமனம் பெற்றனர். இன்னும், சுயவாட்சி பெற்ற பொதுநலவாய நாடுகளே அக்காலவரையும் உறுப்புரிமை பெற்றிருந்த பேரரசுமாநாட்டிற்கும் இந்தியா அழைக்கப்பட்டது. போர்க்குப்பின் கூடிய சமாதான மாநாட்டிலே தனக்கோர் இடம்பெற்று, தன் நலவுரிமைகளை நேராகப் பாதிக்கும் விடயங்களிலே தன் கருத்தை அறிவுறுத்துமளவிற்கு இந்தியாவின் நிலை சருவதேச வரசியலரங்கிலே மேம்பாடுற்றது.

போர்முடிவுற்ற பின்னர், சீர்திருத்தங்களின் சிறுமைபற்றி ஏற்கவே அதிருத்தி கொண்டிருந்த பொதுமக்களும், தருக்கிய உடன்படிக்கையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் கொடுமைகண்டு சீற்றங் கொண்ட முகமதியரும் ஒன்று சேர்ந்து பொங்கியெழுந்து கிளர்ச்சிசெய்யவே, பஞ்சாப்பில் அதிகார வர்க்கம் அச்சங்கொண்டது. பஞ்சாப்பு அரசாங்கம் இராணுவச் சட்டத்தைப் பிரகடனஞ் செய்ததுமன்றி, தான் பெருங் கலகமென்று கருதியதை அடக்குதற்காகக் கடுநடவடிக்கைகளையும் கடைப்பிடித்தது. இந்நடவடிக்கையின் கடுமை—அதிலுங் குறிப்பாகச் சலியன்வாலாபாக்குப் படுகொலைக் கொடுமை—இந்திய மக்களுக்கு மேலும் சினமூட்டியதோடு, சிறுகத் தொடங்கிய கிளர்ச்சியை ஒருபெரும் தேசிய இயக்கமாகவும் மாற்றிவிட்டது. இவ்வேண்டாக்கொடுஞ் செயல் இங்கிலாந்திலுமே மக்களின் மனச்சாட்சியை அதிர வைத்தது. சலியன்வாலாபாக்

கிற் பட்ட அவமானத்தால் நாடு முழுவதும் வெந்துயருற்ற அவ்வேளையிலேயே, காந்தி மகாத்மா நாட்டுக்குத் தலைமை தாங்கித் தமது ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார்.

மகாத்மாகாந்தியின் கருத்துக்கள் சாலவும் எளிமையானவை. இந்திய மக்கள் பல்வேறு வகுப்பாரின் ஒத்துழைப்பையே ஆதாரமாய்க் கொண்டு இந்தியாவிற் பிரித்தானியராதிக்கம் இயங்குவதாதலின், அவ்வொத்துழைப்பை முற்றுக மறுத்துவிட்டால், அரசாங்கம் அடியற்ற மரம்போலச் சாய்ந்துவிடும் என்பதே அவர் வாதம். நாற்பது கோடி மக்களைக் கொண்ட இந்திய நாட்டில், இத்தகைய ஒத்துழையாமைத் திட்டத்துக்கு, முதன்முதலாக, மக்களை விழிப்படையச் செய்தல் அவசியமென்பதையும், இரண்டாவதாக, தீவிரமாகச் செயலாற்றுவதைத் தம் அறக்கடனாக மக்கள் உணரவேண்டுமென்பதையும், மூன்றுவதாக, அத்தேசிய இயக்கம் அறுக்கையான ஒழுக்காற்றுப்பட்டதாய், கட்டுப்பாட்டுக் கமைந்ததாய், யாவரும் விளங்கத்தக்க ஒரு தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாய் அமைகுதல் வேண்டுமென்பதையும் காந்தியடிகளார் உணர்ந்தார்கள். அத்தகைய தத்துவத்தைக் காந்தியார் சாத்துவிக சத்தியாக்கிரகத்திலே கண்டார்கள். துருக்கியர் தாயகங்களை மேலைடுகளிடையே பங்குபோடுதற்குப் பிரித்தானிய அரசாங்கம் கைக்கொண்ட அக்கிரமமான நடவடிக்கைகண்டு மூசிலிங்கள் மனங்கொதித்திருந்தகாலம் அது. இவ்வழி காலிபின் மீட்சியைக் கோரிய கிளர்ச்சி இந்திய மூசிலிங்களின் ஆதரவைப் பரக்கப் பெற்றிருந்தது. தமது தேசியத் திட்டத்தின் ஒரு கூறுக அக்கோரிக்கையையும் காந்தியடிகளார் ஏற்றுக்கொண்டார்கள்.

காந்தியாரின் தலைமையிலே ஒத்துழையாமை இயக்கமானது மூவேறு பருவங்களூடாகச் சென்றது. காலிபாத் தலைவர்களோடு ஒருங்கிணைந்து, பெருவலி படைத்த ஒரு தேசிய இயக்கமாக அதனை உருவாக்கியது முதற் பருவம். அப் பருவம் 1920-4 வரையான காலத்துக்குரியது. இரண்டாவது பருவம், தண்டியாத்திரையோடும் உப்புச் சத்தியாக்கிரகத்தோடும் தொடங்கிற்று (1929-32). மூன்றுவது பருவம், 1942 இல் ஆரம்பித்த 'இந்தியாவின்றும் வெளியேறு' இயக்கத்தைக் குறிப்பதாகும். காந்திய இயக்கம் 1947 ஆம் ஆண்டு ஓகத்திலே இறுதி வெற்றி கண்டது. அப்போது பிரித்தன் உடன்படிக்கை வாயிலாய் இந்தியாவினின்றும் வெளியேறிற்று. இந்திர வரலாற்றிலே, 1757 ஆம் ஆண்டுப் பிளாசிப் போரொடு தொடங்கிய ஓர் அத்தியாயம் இவ்வாறுக முற்றுப்பெற்றது.

இந்தியாவிலே 1919 ஆம் ஆண்டையடுத்த காலப் பகுதியில், அரசமைப்பின் வழிப்பட்ட பாராளுமன்ற ஆட்சிமுறை விருத்தியடைந்தது. யாம் முன்னங் குறிப்பிட்ட மொன்ரேகு-செம்சுபோட்டுச் சீர்திருத்தங்களின் வழிகளிலே புகுத்தப்பட்டது. அதுவே இரட்டையாட்சிமுறை எனப்படும். அதன் வழி, மக்களாதரவுபெற்றோரும் சட்டசபைக்குப் பொறுப்புடையோருமான அமைச்சர்மார்க்குப் பலதிறப்பட்ட விடயங்கள் பற்றிய ஆட்சியதிகாரம் கையளிக்கப்பட்டது; மற்றும், 'சட்டமும் ஒழுங்கும்' நிதியும் எனுந்துறைகள், நியமிக்கப்பட்ட பிரித்தானிய அலுவலாளரின் கையிலேயே தொடர்ந்திருந்தன. இந்தியா

விற் பொதுமக்களாதரவு இத்திட்டத்திற்குக் கிடைத்திலதாயினும், பிரித்தானியர்க்குச் சாதகமான கட்சியாளரின் துணைகொண்டு பலமாகாணங்களிலே அது செயற்படுத்தப்பட்டது. இந்த இரட்டையாட்சிமுறை 1936 வரையும் மாகாணங்களிலே ஒருவாறு தொடர்ந்தியங்கிற்று. ஒருபுடை இந்தியத் தேசியப் பேரவையின் (கொங்கிரசின்) எதிர்ப்புக் காரணமாகவும், மறுபுடை பொதுமக்களின் ஆர்வமில்லாமை காரணமாகவும் அது குறிப்பிடத்தக்க வெற்றியாதும் அடைந்திலதெனினும், பேரரசு முறை மேலும் பின்னடைந்தவாற்றை இப்பருவங் குறிக்கின்றதெனலாம்.[1]

இவ்வாறு பேரரசு முறை பின்னிடைந்த வரலாற்றின் முக்கிய கட்டங்களை இங்குச் சுருங்கக்கூறல் அமைவாகும். இவற்றுள் முதற்கட்டம் நிதித்துறையிற் சுயவாட்சிபற்றி ஒப்பேறிய உடன்படிக்கையாகும். அதன்வழி, இந்தியாவின் மத்திய சட்டசபைக்கும் தில்லி அரசாங்கத்துக்குமிடையே இணக்கம் ஏற்படுங்காலை, இந்திய நிதித்துறை பற்றிய பிரச்சினைகளிலே தலையிடுவதில்லையெனப் பிரித்தானிய அரசாங்கம் உறுதியளித்தது. தில்லி அரசாங்கத்தின் பூட்கைகளை நிருணயிப்பதிலே பிரித்தானிய நலவுரிமைகள் இந்திய நலவுரிமைகளை மீதூரலாகாது என்பதே அதன் தாற்பரியமாகும். இனி, இரண்டாவது முன்னேற்றம் இந்திய வர்த்தகம் பற்றியது; இந்தியக் கைத்தொழிற் பொருள்களுக்குத் தேர்ந்து பாதுகாப்பளிப்பதை ஒரு பூட்கையாக ஏற்றுக்கொண்டதனாலும், பிரித்தானிய நலவுரிமைகள் பின்னிடைய, இந்திய நாட்டின் உரிமைக் கோரிக்கைகள் மேலோங்கின. இங்கிலாந்துதானும் கட்டுப்பாடற்ற வர்த்தக நெறியைக் கைவிடுத்து, வர்த்தகப் பாதுகாப்பு முறையைத் தழுவிக் கொண்டது. எனவே, இந்திய அரசாங்கமும் குழவியிளம் நிலையிலிருந்த தன் கைத்தொழில்களைப் பாதுகாக்கும்பொருட்டு ஒரு சுங்கவரிமுறையைச் சாவதானமாகக் கைக்கொள்வதைப் பிரித்தானிய அரசாங்கம் எதிர்ப்பது பொருத்தமாகாதே. இவ்வரிமுறையால் உருக்கும் சீனியும் சிமெந்தும் பட்டும் மற்றப் பருத்திப் பஞ்சுதானும் நலமடைந்தன. கைத்தொழிற்றுறையை விருத்தி செய்தற்கு முதன்முதலாக இந்தியாவுக்கு வாய்ப்புக் கிடைத்தது. எனினும், வலிமிக்க பிரித்தானிய நலவுரிமைகளின் எதிர்ப்புக்காரணமாக, இந்தியக் கப்பற்றொழிலுக்குப் பாதுகாப்பு யாதும் அளித்தல் தடுக்கப்பட்டது.

இலண்டன் பணச்சந்தையின் கட்டுப்பாட்டிலிருந்து இந்திய ரூபாய்க்கு விடுப்பளிக்கும் முதன்முயற்சியாக இந்தியச் சேமவங்கி தாபிக்கப்பட்டது. அக்காலத்திலே வங்கித் தொழிலும் காப்புறுதி முறையும் இந்தியாவில் வளர்ந்தமை, இந்திய மூலதனத்தின் வலி பெருகியவாற்றைக் காட்டுவதாய் அமைந்தது. அன்னிய நாட்டுச் சாமான்களைப் பகிட்காரஞ் செய்தலும் ஒத்துழையாமை இயக்கத்திலே ஓர் அரசியலாயுதமாகப் பயன்படுத்தப்பட்டது. பொருளாதாரத் துறையிலே பிரித்தானியக் கைத்தொழிலாளர் செலுத்தி வந்த மறுக்கவொண்ணா ஆதிக்கம் முடிவடையுங் காலம் அண்ணித்து விட்டதென்பதை அப்பகிட்காரமுறை

[1]. See *Working of Dyarchy in India* by Kerala putra (K. M. Panikkar). Bombay, 1928.

அன்னார்க்கு அறிவுறுத்திற்று. இவ்வழி, குறிப்பிட்ட சில துறைகளிலே பிரித்தானிய மூலதனமும் மற்றும் இந்திய மூலதனமும் ஒத்துழைக்கும்பான்மை காணப்பட்டது. பொதுமக்களின் கருத்தினுல் உந்தப்பட்ட இந்திய அரசாங்கமும் புகையிரதப்பாதைகளே நாட்டுரிமையாக்கும் பூட்கையைக் கடைப்பிடிக்கலாயிற்று. இந்தியாவிலே பிரித்தானியக் கம்பெனிகளுக்குச் சொந்தமாயிருந்த புகையிரதப் பாதைகள் இருபதாண்டுக் காலத்தளவில் இவ்வாறு நாட்டுரிமையாக்கப்பட்டன. இத்துணைப் பெரியவொரு துறையிலிருந்து பிரித்தானிய மூலதனம் விலக்கப்பட்டதும், புகையிரதப்பாதைகளே இந்திய அரசாங்கமே நிருவகிக்கத் தொடங்கியதும் ஆகிய இரு முயற்சிகளும் சாலவும் முக்கியமான அபிவிருத்திகளாகக் கருதத் தக்கவை.

நிருவாக ஆட்சியிலுமே தேசிய வியக்கம் உறுதியான முன்னேற்றங் கண்டது. பெரும்போர்க்கு முன்னர் இந்தியத் தரைப்படையிற் பிரித்தானிய அதிகாரிகளே உயர்பதவி வகித்தல் விதிவிலக்கற்று வழமையாயிருந்தது. ஆயின் போருக்குப் பின்னர் இந்தியப் பயிற்சிவீரர்க்குச் சாண்டேசிற்றிலே சிலகாலம் பயிற்சியளித்தபின் அரசவாணை வழங்கும் முறை மெல்ல ஆரம்பமாயிற்று. மிதவாதக் கட்சிகள் வற்புறுத்திய கோரிக்கைகளுள், தரைப் படையை இந்தியர் மயமாக்கலும் ஒன்றுக இருந்தது. பாராளுமன்றத்தின் வன்புறை காரணமாக, குறித்த சில போணிகளில் இந்தியரையே உயரதிகாரியாக நியமித்தற்கு ஒரு திட்டம் வகுத்துச் செயற்படுத்தப்பட்டது. முதற் பெரும் போரின் பின்னர் அரசவாணை பெற்ற இத்தகைய இந்திய அதிகாரிகளே, இந்தியா சுதந்திரம் பெற்றபோது இந்தியத் தரைப் படையிலே தலைமையிடம் பெற்றேராவர். வேத்தியற் கடற்படையொன்றும் இந்தியாவில் 1924 இல் நிறுவப்பட்டது; விமானப்படை நிறுவுதற்கும் முதன் முயற்சி செய்யப்பட்டது. இவையிரண்டிலும் இந்தியர் சிலர்க்கு அரசவாணை வழங்கப்பட்டது. இராணுவப்படைகள் இன்னும் பெரும் பான்மையாகப் பிரித்தானியர்மயமாகவே இருந்தபோதிலும், இந்தியாவிற் பிரித்தானியாதிக்கத்துக்கு அத்திவாரமாக இருந்த அம்முற்றுரிமை மேற்கூறிய நடவடிக்கைகளாலே பலவாற்றலும் பங்கப்பட்டது எனலாம்.

பரிபாலனத்துறையிலேயும், அரசியற் கிளர்ச்சி காரணமாக உயர்தரச் சேவைகளிலே முழுத்தொகையில் ஐம்பது சதவீதத்துக்கு இந்தியரே நியமனம் பெறல் வேண்டுமெனுங் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தியரைக் கொண்ட ஒரு பெரும் பணிக்குழுவையும், அப்பணிக்குழுவைக் கட்டுப்படுத்தி ஆற்றுப்படுத்தற்கான—உயர்தரச் சேவைகள் எனப்பட்ட—இந்தியச் சிவில் சேவை, இந்தியப் பொலிசுச் சேவை ஆதியனவற்றையும் அடிப்படையாகக் கொண்டதே பிரித்தானியர் இந்தியாவில் விருத்தி செய்த பாலன அமைப்பாகும். இங்கிலாந்திற் போட்டிப் பரீட்சைவாயிலாகச் சேர்க்கப்பட்ட இந்த உயர்தரச் சேவைகளிலே, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கூற்றளவில் இந்தியர் பலரும் இடம்பெற்றிருந்தனர். ஆயின் அவர்கள் விகிதம் சிறிதே. போர்க்குப் பின்னர்,

இச்சேவைகளுக்கான பரீட்சைகள் இந்தியாவிலும் நடாத்தப்பட்டன. இவ்வழி கூடிய தொகையினராய் இச்சேவைகளில் இந்தியர் நியமனம் பெற்றமையாலே, அரசாட்சியின் தன்மையில் முக்கியமான மாறுதல் பையவே நிகழ்ந்தது.

போர்க்குப் பின்னர், மத்திய அமைச்சவையிலே இந்தியரின் பிரதிநிதித்துவம் பொதுவாக ஐம்பது சதவீத அளவினதாயிற்று. எனினும், அச்சாணியன்ன உண்ணாட்டு அமைச்சும் நிதியமைச்சும் ஐரோப்பியர்க்கே ஒதுக்கப்பட்டன. இனி, மாகாணங்களிலே இந்தியரின் விகிதம் இன்னும் கூடியதாய் இருந்தது. நிதியமைச்சும் இந்தியர் கையில் ஒப்படைக்கப்பட்டது உண்டு. இவ்வாறுக, அரசியல் பொருளாதார துறைகளிற் போன்றே பரிபாலனத்துறையிலும் பேரரசின் அதிகாரம் படிப்படியாக நிலைபெயர்ந்து பின்னிடைவுற்றது. இறுதியில் 1935 இல், இந்திய அரசாங்கச் சட்டத்தின் வாயிலாய் பேரரசின் அதிகாரத்தை ஓளவிற்கு மாற்றியமைத்து, இந்தியத் தேசிய இயக்கத்தின் உரிமைக் கோரிக்கைகளோடு இசைவுபடுத்தற்கு முயற்சி செய்யப்பட்டது.

இந்திய மக்களில் எச்சாராரையும் 1919 ஆம் ஆண்டுச் சீர்திருத்தங்கள் திருத்திசெய்யத் தவறின என்பதை முன்னமே காட்டியுள்ளம். அதனால், போல்ட்வின் தலைமையிலமைந்த பழமைக் கட்சியின் அரசாங்கமானது இப் பிரச்சினை முழுவதையுந் தீர விசாரித்து அறிக்கை செய்யும் பொருட்டாக ஓர் ஆணைக்குழுவினை 1928 இல் நியமித்தது. அதன் அறிக்கை தாமதியாது மேற்கொண்டு முன்னேற்றங்காண வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக் கொண்டதாயினும், மாகாணச் சுயவாண்மையையும், மத்தியில் ஒரு கூட்டாட்சிக் கழகத்தையும் உள்ளடக்கிய குறுகிய சுயவாட்சி முறையினையே விதித்தது. ஆயின் இது இந்தியர்க்குப் பெரும் ஏமாற்றத்தையே விளைத்ததென்பதற்கையமில்லை. அதனால் இந்தியக் கட்சிகள் அனைத்தும் இன்னுந் தீவிரமாகக் கிளர்ச்சி செய்யலாயின. இதற்கிடையில், இராம்சே மக்டொனல்டின் தலைமையில் தொழிற்கட்சியரசாங்கம் இங்கிலாந்தில் நிறுவப்பட, 1930-33 வரையில் வட்டமேசை மாநாடு பற்பல கூடி, இணக்கஞ் செய்தற்கு மீண்டும் முயற்சி செய்யப்பட்டது. ஆங்கு, பிரதானமான இந்திய ஐரோப்பிய நலவுரிமைகளின் பிரதிநிதிகள் பங்குபற்றினர். ஆயின், காந்தி அடிகளாரின் தலைமையில் இந்தியப் பேரவை தனியொரு, வைகலின்போதே அவற்றிற் பங்குபற்றிற்று. அம்மாநாடுகளில் நிகழ்ந்த இணக்கப் பேச்சுக்களின் பயனுக, சுயவாட்சி பெற்ற மாகாணங்களையும் மகாராசாக்களின் சிற்றரசுகளையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு கூட்டாட்சித் திட்டம் உருவாகியது. கடந்தகால யோசனைகளினும் கூடிய கணிசமான முன்னேற்றத்தை இவ்வரசமைப்பானது தத்துவமளவிற் குறித்ததாயினும், 1935 இற் பாராளுமன்றத்தில் நிறைவேறிவந்த இந்திய அரசாங்கச் சட்டமானது மானிய முறைக்கே யுரிய மகாராசாக்களையும், மதத்தையே ஆதாரமாகக் கொண்ட பிற்போக்குக் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாங்கத்தைப் பின்னர் நிறுவும் ஒரு முயற்சியே அதுவென்பது தெளிவாயிற்று. மேலும், பிரித்தானிய வியாபார நலவுரிமைகளையும் மூலதனத்தையும் பாதுகாக்கும் பொருட்டாக விசேட காப்பீடுகளை விதித்தமையாலும், மகாராசாக்களின் உரிமைகளையும் சிறப்புரிமை

பெற்றிருந்த பிறவகுப்பாரின் நலன்களையும் பாதுகாத்து நிரந்தரமாய்ப் பேணும் பொருட்டாகச் சில வாசகங்களை அரசமைப்பிலே பெய்தமையாலும் மத்திய அரசாங்கத்தின் ஆட்சியதிகாரம் குறுக்கப்பட்டது. இப்புதிய சீர்திருத்தங்களை இந்திய தேசியப் பேரவை நிராகரித்தது. ஆயினும் அது மாகாணங்களிலே 1936 இல் ஆட்சி கைப்பற்றி, அச்சட்டம் விதிக்க நினைந்த பல்வேறு கட்டுப்பாடுகளை அகற்றுவதில் வெற்றிகண்டது. இவ்வாறு மாகாணங்களிற் பேரவையானது பொதுவாக சித்தியொடு இயங்கிவருங் காலத்திலேயே இரண்டாவது உலகப் போர் மூண்டது. அதனால் இந்த அரசமைப்புப் பரிசோதனையும் கைவிடப்பட்டது.

உலகப் பெரும்போர்கள் இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், இந்தியாவிற் பிரித்தானியாதிகாரம் பூரணமாகப் பின்னிடைந்து கொண்டிருந்தவாற்றை இதுகாறுங் கண்டோம். பேரரசின் ஆதிக்கம் பற்றிய பழைய கருத்து முதற் போரோடே மறைந்தொழிந்துவிட்டது. பின்னர் 1920-29 வரையான காலத்தில் இடம்பெற்ற அரசியற்றந்திரங்கள் யாவும், காலந் தாழ்த்தும் பின்னணித் தாக்குதல்களேயல்லால் வேறில்லை. இறுதியிலே இந்தியா சுதந்திரமடைவதைத் தடுக்க முடியாது எனும் உண்மையைப் பிரித்தானிய அதிகாரவர்க்கம் உணர்ந்த தாயினும், அதனைத் தன் உயரிய அரசியல் ஞானத்தாலும் அனுபவத்தாலும் மாற்றி மட்டுப்படுத்திவிடலாமென நம்பியிருந்தது. அவ்வதிகாரவர்க்கம் தனது நிலைபேற்றுக்கு ஆதாரவளிக்க வல்ல வகுப்பாரையும் நலவுரிமைகளையும் உருவாக்கி ஊக்கமளித்துத் தான் எண்ணியதைச் சாதிக்க முனைந்தது. இவ்வாறுக, இந்தியாவின் மொத்தப் பரப்பில் ஐந்திலோர் பாகமாயிருந்த சிற்றரசுகளை வேறுபடுத்தி, முடியின் நேரான அதிகாரத்துள் அகப்படுத்தி, இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைப்பதே ஆதித் திட்டமாயிருந்தது. மொன்ரேகு-செம்சபோட்டுச் சீர்திருத்தங்கள் ஆராயப்பட்ட அக்காலத்திலுமே, 1917 இல், மேற்கூறிய நோக்கொடு, மகாராசரின் மன்றமொன்றைக் கூட்டி நிறுவுதற்கு முயற்சி செய்யப்பட்டது. ஆயின், இந்தியச் சுதந்திரப் பிரச்சினை செயன்முறைக் கொவ்வா அரசியல் விடயமாக அப்போது தோன்றிற்றுதலின், மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுப்புக் கோரிய மகாராசரின் கோரிக்கைக்கு அப்போது ஆதரவளிக்கப்பட்டிலது. ஒத்துழையாமை இயக்கம் வலிபெற்று வளர்ந்து, புதிய குடியாட்சிக் கொள்கை மக்கள் மனதைப் பெரிதுங் கவரத் தொடங்கியகாலை, சிற்றரசுகளுட் பெரியனவான அரசுகளை யாண்ட வேணவா மிக்க மகாராசர்க்கும் பிரித்தானியப் பிற்போக்குவாதிகளுக்குமிடையே கூட்டுறவு எளிதாக உருவாகிற்று. இன்னும், மகாராசர்க்கு மேலதாய மேலாண்மை, முடிக்குரிய ஒரு தற்கிழமையேயாதலின் இந்திய மகாராசர் இந்தியாவோடன்றி இங்கிலாந்தோடே பிணைப்புக் கொண்டவர் எனுங் கொள்கையும் உருவாக்கப் பட்டது. இவ்வாறு எதேச்சாதிகார மன்னரின் குலநலன்களையும் அவாக்களையும் பிரித்தனுடைய பேரரசு நலன்களோடு இணைத்தற்குச் செய்த முயற்சி, ஒட்பமுடைய பிற மகாராசரின் எதிர்ப்புக் காரணமாகத் தோல்வியடைந்தது. இந்திய நாட்டின் உரிமைக்கோரிக்கைகளை மீறி நடந்தால், தத்தம் குடிகளுமே

அத்தகு செயலே நாட்டுக்கு வஞ்சனை செய்யும் செயலாகுமெனக் கருதுவர் என் பதையும், எதிர்காலவுணர்ச்சியின்றி இந்தியாவின் ஒருமைப்பாட்டைத் தகர்க்க முயலுதல் காலகதியிலே தமக்குத் தீமையே பயக்குமென்பதையும் அன்னர் உணர்ந்தனர். மாகாணங்களையும் சிற்றரசுகளையும் ஒருங்கிணைத்து, மத்தியில் ஒரு கூட்டாட்சி யரசாங்கத்தை உருவாக்குங் கருத்து இவ்வாறுகவே தோன் றிற்று. இங்கும், மகாராசரின் பிரதிநிதிகளும் பிற்போக்கான சமயக் கோட்டி களின் பிரதிநிதிகளும் நிரந்தரமான பெரும்பான்மையினராய் அமையத்தக்க வகையில் ஒரு மத்திய அரசாங்கத்தை உருவாக்குவதன் மூலம் பிரித்தானியரின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதே இலக்காயிருந்தது.

தேசியவாதிகளின் உறுதியான எதிர்ப்புக் காரணமாகவும், பூரண சுதந்திரம் படைத்த தனியரசு வேண்டி முசிலிங்கள் வற்புறுத்திய கோரிக்கை காரணமாக வும், 1935 ஆம் ஆண்டுச் சட்டம் தவறிற்று. பிரித்தானிய அரசாங்கம் தன் முயற்சிகள் தவறியதை உணர்ந்து, போர் முடியும்வரையுமே நிலைக்கத்தக்க சில கட்டுப்பாடுகளோடு கூடிய தொமினியன் பதத்தைச் சேர். தாபோட்டு கிறிப்சு வாயிலாய் அளிக்க முன்வந்தது. ஆயின், அக்காலத்தில் ஆள்பதி நாயகனுயிருந்த இலிண்லித்கோப் பிரபுவும் சிவில் சேவைகளும் இடக்குச் செய்ததன் காரண மாக, அத்திட்டம் உருப்பட்டதில்லை. இறுதியில், முசிலிம் மக்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட பிரதேசங்கள் பிரிக்கப்பட்டுப் புதிய பாக்கித்தான் அரசாக நிறுவப்பட்டபின், இந்தியா 1947 இற் சுதந்திரம் பெற்றது. இந்தியா விற் பிரித்தானிய அரசாங்கத்தின் ஆட்சி, 1947 ஓகத்து 15 இல், முடிவுற்றது; ஆங்கில மன்னன் இந்தியாவின் பேரரசன் எனும் தன் பட்டத்தை அன்றே துறந்தான்.

அதிகாரம் 3

சீனம்

சீனத்திலே மஞ்சுப் பேரரசு குலைந்ததன்பின் நிலவிய நிலைமைகளுக்கும் இந்தியாவில் முகலாயராதிக்கம் மங்கியதையடுத்துத் தோன்றிய நிலைமைகளுக்கு மிடையே நெருங்கிய ஒற்றுமை இருந்தது கண்கூடு. மஞ்சுமாரும் முகலாயரும் அன்னியராயினும், தாம் தாம் வென்றடிப்படுத்திய நாடுகளிலே தேசிய முடியாட்சியைத் தாபித்து, நாட்டுட் புகமுயன்ற அன்னியரின் ஆக்கியமிப்பைத்தகைத்து, கடல் வல்லரசுகளின் அதிகாரத்தையும் வலியையும் கடல்வழி வியாபாரத்தளவிற் கட்டுப்படுத்தி, தாம் தாம் நிலையுன்றிய உபகண்டங்களிலே பிறவல்லரசுகள் மீது 200 ஆண்டுக் காலமாகச் செவ்வையான அதிகாரஞ் செலுத்தி வந்தனர். கடற்கரையோரங்களிலிருந்த நெருக்கிடை காரணமாக அவற்றின் மூலபலம் நலிந்து, உண்ணாட்டுப் பொருளாதாரந் தகர்ந்து, அவ்வவற்றின் குடிகளுக்கிடையேயும் மதிப்பிழந்தே அவை இரண்டும் வீழ்ச்சியடைந்தன. இந்தியாவிலும் சீனத்திலும் அதலால் விளைந்த உடன் விளைவுகளிலும் வியக்கத்தக்க ஒற்றுமை காணப்பட்டது. இந்தியாவிற் போன்றே சீனத்திலும் நாமத்தளவான அதிகாரமே மத்தியில் இயங்க, வெற்றிகண்ட சேனபதியர் தத்தம் அதிகாரத்துக்குச் சட்டமுறையான உரிமைபெறுதலும், மற்றவர்கள் மீது ஆக்கிரமிப்புச் செய்தற்கு வேண்டிய தலைக்கிடு பெறுதலும் இயல்வனவாயின. உதாரணமாக, மாட்சிமைப்பட்ட முகலாயனுடைய உரிமைகளை அவன் சார்பாக நிலைநாட்டுவதாக மராத்தியச் சேனாபதி சிந்தியா பாவனைசெய்தவாறே, சீனத்திலும் அன்பூக் கட்சியானது பீக்கிங்கின் அதிகாரத்தைப் பயன்படுத்தத் தலைப்பட்டது. இந்தியாவிற் போன்றே சீனத்திலும் மாகாணப் பதிலிராயன்மார் 'போர்ப் பிரபுக்களாகத்' தம்மை நிலைநாட்டி, வரிதிரட்டி, அன்னிய அரசுகளோடு தொடர்பு பூணவுந் தலைப்பட்டனர். மஞ்சூரிய நாட்டுச் சாங்-சோ-லின் என்பானும் மற்றுத் தக்கணத்து நிசாம்-உல்-முல்கும் வங்கத்து அலிவாத்தி கானும் ஒரே வகையைச் சேர்ந்தோரே. பீக்கிங்கின் அதிகாரம் நலிவடைந்தபோது, உண்ணாட்டிலே ஆங்காங்குத் தத்தம் நிருவாகத்தை நிறுவிய பல்வேறு சேனபதியரும் கொள்ளையாளர்தலைவரும் இந்தியாவிலே தலையெடுத்த அமீர் கான் பிந்தாரா, யசுவந்து இராவ் ஒல்கார், தோத்து முகமது போன்றோரே.

எனினும் வேற்றுமையும் ஒன்று இருந்தது. இந்தியாவிலே மத்திய அரசாங்கம் குலைவுற்ற பின்னர்ப் போர்ப் பிரபுக்கள் தலையெடுத்தபோது, கிழக்கிந்தியக் கம்பெனி அன்னரை ஒவ்வொருவராக வென்றடிப்படுத்தியும், ஓரோவழி தன் பாதுகாப்புள் அகப்படுத்தியும் பிரித்தானிய ஆதிக்கத்தை இந்தியாவிலே நிறுவியதாக, சீனத்திலோ வல்லரசுகளிடைப் போட்டியும் உலகப்போரையடுத்த பருவத்திற் காணப்பட்ட சந்தர்ப்ப வாய்ப்புக்களும் அக்கதி நேராவகை தடுத்து வைத்தன. ஆயின் மஞ்சூரியாவிலே தனது அதிகாரதத்துக்குக் கீழமைந்த அர

சாங்கங்களே நிறுவியும், இன்னும் வடக்கே தன் பாதுகாப்புக்குட்பட்ட மாகாண அரசுகளைத் தாபித்தும், சீனத் தலைநிலத்திலே ஆணிலவகற்சி நாடிய யப்பானுடைய பூட்கையானது இந்தியாவைப் பிரித்தானியர் வென்றடிப்படுத்தியவாற்றையே முன் மாதிரியாகக் கொண்டிருந்ததென்பதை இங்கு வற்புறுத்திக் கூறல் வேண்டும்.

மஞ்சுமாரின் வீழ்ச்சிக்குப் பின்னர் சீனத்தில் நிகழ்ந்த அரசியற் சம்பவங்களை, இங்கு வரலாற்றுப் பின்னணியாக எடுத்துரைத்தல் நன்று. மஞ்சுமார் 1912 பெப்பிரவரி 12 இற் பதவிதுறந்தபின், நாங்கிங்கிலே அவசரமாகக் கூட்டப்பட்ட தேசியப் புரட்சி மன்றமானது சன் யாட்சனைத் தற்காலிகக் குடிப்பதியாகத் தெரிவுசெய்தது. ஆயின், பேரரசுக் கட்சியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்த யுவான் சீ-கை என்பாற்குச் சார்பாக அவர் பதவிதுறந்து ஓய்வுபெற்றார். அதற்பின் ஒரு குடிப்பதியையும் பதிற் குடிப்பதியையும், தேசிய ஆலோசனைக் கழகத்தையும், பொதுவழக்காற்றுக்கமைய இரண்டு மன்றங்களையுங் கொண்ட பாராளுமன்றத்தையும் உள்ளடக்கிய தற்காலிக அரசமைப்பொன்று மார்ச்சு 10 இலே பிரசித்தஞ் செய்யப்பட்டது. அப்பால், ஓராண்டின் பின்னர் கூடிய பாராளுமன்றத்திற் புரட்சிவாதிகளே பெரும்பான்மையோராக இருந்தனர். அதனால், உண்மையதிகாரஞ் செலுத்திய குடிப்பதிக்கும் புரட்சிவாதிகளுக்கு மிடையே முரண்பாடு வளர்ந்து, செவ்வையான நிருவாகஞ் சாத்தியமாகாவகை முடக்கி வைத்தது. திறைசேரியில் நிதி வறண்டிருப்ப, பாராளுமன்றம் தடங்கல் செய்வதிலே நாட்டங் கொண்டிருப்ப, யுவான் சீகை உண்ணாட்டு இடர்ப்பாடுகளை மீக்கொள்ளும் நோக்கொடும் தனது நிருவாகத்துக்கு வெளிநாட்டு ஆதரவைப் பெறும் நம்பிக்கையொடும் வெளிநாட்டிலிருந்து கடனுதவி பெறுதற்குப் பேச்சுவார்த்தைகள் தொடங்கினன். இவ்வாறுக, பேரரசு நாடுகள் காத்திருந்த பெருந்தருணமும் வந்து வாய்த்தது. பெருவல்லரசுகளான பிரித்தனும் பிரான்சும் அமெரிக்க ஐக்கிய அரசும் சேர்மனியும் இரசியாவும் யப்பானும் வேண்டிய கடன் பணத்தைக் கொடுத்துதவுதற்கு வங்கியாளர் கூட்டவையமொன்றை நிறுவுதற்கு அனுமதி கந்தன. ஆயின் எல்லாக் கடன் பணத்தையும் வழங்கும் உரிமை முற்றுகத் தமக்கே அளிக்கப்படல் வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலேயே அவை அவ்வாறு அனுமதியளித்தன. இனி, கடனுதவிக்கு ஏமவைப்பாக உப்புவரியனைத்தும் தமக்கு ஈடுவைக்கப்படவேண்டுமெனவும் அவை விதித்தன. அன்னிய அதிகாரிகளின் ஆட்சியிலிருந்த கடற்புறச் சுங்கமனைகளே உப்புவரிகளை நிருவகிக்கும் என்பதையும் இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். ஆயின் இவ்வொழுங்கு முறைக்குத் தன் ஆதரவை அமெரிக்க ஐக்கிய நாடு பின்னர் மறுதலித்துவிட்டது. வெள்ளை மாளிகைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குடிப்பதி வில்சன் 'கடனுதவிக்கு விதித்த நிபந்தனைகள் சீனத்தின் நிருவாகச் சுதந்திரத்தையுமே தீண்டுவனபோற்றோன்றுகின்றன' எனக் கருதினர். எனினும், சீரமைப்புக் கடனை 2.5 கோடி பவுணும் மற்றையைந்து வல்லரசுகளின் தலைநகர்களிலே திரட்டப்பட்டன. இரு திங்களுக்குப் பின்னர் மூண்ட இராணுவக் கலகத்தை அடக்குதற்கு இப்பணம் யுவானுக்கு உதவிற்று. புரட்சிக் கட்சியின் தலையாய

உறுப்பினரைச் சட்ட விரோதமானவரெனப் பிரசித்தஞ் செய்தற்கும் அக்கலகம் ஒரு தலைக்கீடாயது. அதற்பின்னர் யுவான் சி-கை தன்னிச்சைபோற் செயலாற்றுதற்கு வழிதிறந்தது. தேர்தல் நடந்தது; அவ்வழி கூடிய பாராளுமன்றம் மிகவதிகப் பெரும்பான்மை வாக்குக்களால் யுவானே அரசின் அதிபதியாகத் தெரிவு செய்தது. எனவே சீன அரசாங்கத்தை அங்கீகரிக்க மறுத்ததற்கு வல்லரசுகளுக்கு நியாயம் யாதும் மேற்கொண்டு இருக்கவில்லை.

முதலிற் பாராளுமன்றத்தின் ஆதிக்கத்தை ஒழித்தற்கும், பின்னர்த் தானே அரியணை ஏறுதற்கும் யுவான் செய்த உபாய தந்திரங்கள் பற்றி இங்கு விரிவாக ஆராயவேண்டியதில்லை. உங்-இசியன் எனும் இராசபட்டத்தோடு அவன் பேரரசனாகத் தெரிவு செய்யப்பட்டானெனினும், நாலாண்டுக் காலமாக நாட்டிலே சாலவும் வளர்ந்துவிட்ட குடியாட்சியுணர்ச்சி காரணமாகக் கலகம் விளைந்ததனால், அவன் அரியணை யேறுதல் பின்போடப்பட்டது. சில மாதங் கழிந்தபின் 1916 யூனிலே யுவானும் மரணமடைந்தான். அவன் மரணத்தின் பின்னர், போர்ப் பிரபுக்கள் பல்வேறு மாகாணங்களைத் தங்கைப்படுத்தினர். அப்பால், வடபுலப் போராட்டின் மூலமாகச் சியாங்கை சேக்கு மத்தியவரசின் அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டும் வரையும், பதிஞ்ரு வருடகாலமாகச் சீனத்திலே செவ்வையான மத்திய அரசாங்கம் யாதும் இயங்கியதில்லை. எனினும், அன்னிய அதிகாரிகளின் கட்டுப்பாட்டிலிருந்த சுங்கவரி நிருவாகத்தாலும், உப்பு வரியாலும் வந்து தேறிய மேலதிக வருமானத்தைக் கொண்டு ஒருவாறு இயங்கிய நாமத்தளவான அரசாங்கமொன்று பீக்கிங்கில் இருந்தது உண்மையே. வில்லங்கமான அக்காலத்திலே, சுங்க வரியும் உப்புவரியும் அஞ்சற் போக்குவரத்தும் எனுமிவற்றை நிருவகித்து வந்த—சீனம் முழுவதற்கும் பொதுவான—அரசாங்கச் சேவைகளே சீனத்தின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காத்தன வென்றால், அக்கூற்று மிகையாகாது.

வெற்றிகரமாக முன்னேறி வந்த குமிந்தாங்கு இயக்கமே இச்சீரழிவுக்கு முடிவு கட்டியது. பீக்கிங்கிலிருந்து வெளியேறிய சன்யாட்சனே அதனை உருவாக்கினர். மேனாடுகள் யுவானுக்கு அளித்த ஆதரவு கண்டு—அதிலுங் குறிப்பாக, வங்கியாளரின் கூட்டவையம் மூலமாய்க் கடனுதவி செய்தற்கு அவை அளித்த ஊக்கங் கண்டு—ஏமாற்றமும் வேதனையும் அடைந்த சன்யாட்சன் தொக்கியோ நகர் புக்குப் புதியவொரு கட்சியை உருவாக்க முனைந்தார். அக்காலத்தில் யப்பானே, அவர் உளங்கொண்ட இலட்சியமாய் இருந்தது. அந்நாட்டு அரசறிஞரிடமிருந்து அவர்க்குச் சிறிது ஆதரவுங் கிடைத்தது. அவர் யப்பான் பற்றிக் கொண்ட கருத்து எவ்வாற்றானும் அதற்கு விரோதமானதாக இருக்கவில்லை. 'உலகின் மிகப் பெரிய வல்லரசுகளுள் யப்பானும் ஒன்று. யப்பானிய மக்கள் பழைய தம் தேவேசங்களைத் துறந்து விட்டனர்; மேலைப்புலத்திலிருந்து அவர் கற்றவை பற்பல. அவர்கள் தமது நிருவாக முறையைச் சீர்திருத்திவிட்டனர்; தரைப்படையும் கடற்படையும் நிறுவிக்கொண்டனர்;

தமது நிதி முறையைச் செவ்வையாக அமைத்து விட்டனர்—இவையெல்லாவற்றையும் ஐம்பதாண்டுக் காலத்துள்ளே அன்னுர் செய்து முடித்துள்ளார்கள்[1]. இவ்வாறு சன் கூறினுர். எனினும், இரசியப் புரட்சியின் செல்வாக்கிற்கு உட்படு முன்னமே அவர் இத்தகைய கருத்தைக் கொண்டிருந்தார். தென்னுட்டில் 1917 இல் அவர் ஏற்கவே ஓர் 'அரசாங்கத்தை' நிறுவியிருந்தார். ஆயினும், வேண்டிய ஆதரவை அவர் பெறத் தவறியமையால், சாங்காயிலிருந்த சருவதேசக் குடியிருப்பில் அவர் புகலிடம் பெற்றுர். சீனமக்களுக்கு அவர் 1917 யூலை 25 இல் வெளியிட்ட கொள்கை விளப்பத்திலே, சீனமக்களின் விடுதலைப் போராட்டத்தில் இரசிய மக்களே உற்ற 'நட்பாளராயும் சோதரராயும்' அமைகுவர் எனுந் தமது நம்பிக்கையைப் பகிரங்கமாக அவர் எடுத்துக் கூறினுர். விரைவில் இலெனினுடு தொடர்பு நிறுவப்பட்டது. 1922 இல் சோவியற்று அரசாங்கத்தின் சார்பாக அடோல்பு யோவ் என்பான் சீனத்துக்கு வந்து, 1923 சனவரியிலே சாங்காயிற் சன்யாட்சனைச் சந்தித்தான். அவர்தம் பேச்சுவார்த்தைகளின் பயனுய், சோவியற்று மக்களின் ஆதரவை உறுதிப்படுத்தும் முகமாக ஒரு கூட்டுவிளப்பம் வெளியிடப்பட்டது. இவ்வுடன்படிக்கையின் பின்னர் சன்யாட்சன் கன்றனுக்குத் திரும்பினுர். செம்படையின் பயிற்சி முறையையும் இராணுவ அமைப்பையும் பயிலும் பொருட்டுச் சியாங்கை-சேக்கை மொசுக்கோவுக்கு அனுப்பிவைத்ததே, அவர் முதன் முதற் செய்த காரியமாகும்.

சியாங்கை சேக்கு மொசுக்கோவினின்றும் மீண்டதற் பின்னர், அவர் தலைமையிலே வாம்போவா இராணுவக் கழகம் நிறுவப்பட்டது. இரசியா போதனுசிரியரையும் படைக்கலங்களையும் அதற்குக் கொடுத்துதவிற்று. நாட்டின் ஐக்கியத்தை உருவாக்குதற்கான ஒரு கருவியாகவே, இவ்வாறு தோன்றிய புதிய படை கருதப்பட்டது. அரசியற் பிரசாரத்தாபனமொன்றும், அதனுடு இணைக்கப்பட்டது. குமிந்தாங்கின் முதற்றேசியப் பேரவை கன்றனிலே கூடிற்று. அது செய்த முடிபுகளுட் பொதுவுடைமைவாதிகளைக் கட்சியிற் சேர அனுமதிப்பதும் ஒன்றரும். புதிய படை வென்றடிப்படுத்துந் தன் முயற்சியைத் தொடங்கு முன்னமே 1925 இற் சன் யாட்சன் காலமாயினர். 1926 ஆம் ஆண்டளவிலே குமிந்தாங்கு—கொம்யூனிசக் கூட்டுறவானது யாங்கிசி நதிக்குத் தெற்கேயுள்ள சீனம் முழுவதினின்றும் போர்ப் பிரபுக்களைத் துடைத்து, உவுபெய்-பூவினைத் தோல்வியுறுத்தி, ஆங்கோவை வென்றடிப்படுத்தி, பெருங்கரைப்புலத்தை ஆட்சி செய்த மாசல் சன்சுவாங்-வாங்கென்பானுடைய தாளைனை எதிர்நோக்கி நின்றது. புதிய இவ்வியக்கத்தாற் படையாட்சியாளர்க்கு நேர்ந்த பேராபத்தை உணர்ந்த மாசல் சன் தன் இணைவரான போர்ப்பிரபுக்களைத் திரட்டினுன். ஆயினும் தேசிய இயக்கமெனும் பெருவெள்ளம் பெருக்கெடுத்து அவனையும் அவன்றன் பெரும் படையையும் மீக்கொண்டது. இவ்வாறுக, பசிபிக்குப் பிரதேசத்திலே ஓரோப்பியரின் அதிகாரத்துக்கு ஒரு சின்னமாயமைந்த சாங்காய் நகர வாயிலிற் சியாங்கை-சேக்கு எதிரூன்றி நின்றுர்.

[1]. Sun Yat-Sen : *Memoirs of a Chinese Revolutionary*, London, p. 114.

இந்த முக்கியமான காலப்பருவத்திலே ஐரோப்பிய நாடுகளுக்குஞ் சீனத் துக்குமிடையே நிலவிய தொடர்பினுக்கு ஒரு பின்னணியாக அமையும் வண் ணமே, மேற்கூறிய வரலாற்றுச் சம்பவங்களை இங்குச் சுருங்கக் கூறினேம். இங்கு நாம் நினைவிற் கொள்ளவேண்டிய அடிப்படையான விடயங்கள் இரண்டு உள. யுவான்-சி-கை இறந்தநாள் தொட்டு 1927 இல் நாங்கிங்கு நகரிலே குமிந் தாங்கு அரசாங்கம் நிறுவப்படும்வரையும், ஏறக்குறையப் பத்தாண்டுக் கால மாகச் செவ்வையான மத்திய அரசாங்கம் இல்லாமையே முதல்விடயமாகும். இனி, கட்டுக்கோப்பின்றிச் செவ்வையான செயற்றிட்டமின்றித் தக்கவாறு ஆற் றுப்படுந்தனுமின்றிப் போர்ப்பிரபுக்களின் ஆட்சியைப் பூழிபடுத்திக் குமிந் தாங்கு அரசாங்கத்தை நிறுவுதற்கு வழிவகுத்த மக்களியக்கத்தின் மாபெரும் வலி இரண்டாவது விடயமாகும்.

யுவான் சி-கை தன் அரசியல் மதிப்பை இழந்து, இரண்டரைக்கோடி பவுண் கடன்தொட்டுவதில் வெற்றிகண்டானெயினும், அவனுடைய அரசியற்றிட்டங்கள் முற்றுமுன்னமே ஐரோப்பியப் போர் 1914 இல் மூண்டுவிட்டது. பெரிய பிரித் தனும் பிரான்சும் சேர்மனியும் இரசியாவும் தத்தஞ் சத்தியெலாந் திரட்டிப் போர் முயற்சியிலே முனைந்திருந்த வேளையில், யுவான்சி-கை யப்பானை நேருக்கு நேர் எதிர்நோக்கி நிற்கவேண்டியவனனான். சீனத்தினின்றும் ஐரோப்பியச் செல்வாக்கை அகற்றி, ஆசியக்கண்டத்திலே தானே பரமாட்சி படைத்த வல் லரசாகத் திகழ்வதற்குத் தெய்வமளித்த ஒரு பெரும்வாய்ப்பாகவே யப்பானிய அரசறிஞர் அப்போதைக் கணித்து நடந்தனர். வேண்டிய தலைக்கீடும் எளிதில் வந்து வாய்த்தது. சீனக் கடல்களிலே உலவிய சேர்மானியக் கப்பல்களை நாசஞ் செய்வதில் யப்பானியரின் ஒத்துழைப்பைப் பிரித்தானியத் தூதமைச்சன் ஓகத்து 7 இலே வேண்டிக்கொண்டான். ஆயின் போர்ப் பிரகடனம் யாதையும் அவன் யப்பானிடங் கோரினனல்லன். எனினும் யப்பானே ஆங்கில-யப்பானிய நட்புறவின்வழி தான் ஏற்ற கடப்பாடுகளுக்கு வெகு தாராளமான விளக்கங் கொடுத்து, கொரியப் போரின்போது சேர்மனி விடுத்த ஆட்சேபனையைச் சுட் டிக்காட்டி, இறுதிக்கடிதம் போக்கிய பின்னர்ச் சேர்மனிமீது போர் தொடுத்தது. யப்பானியரின் உடனடியான நடவடிக்கைக்கு அரங்கமாய் அமைந்தது சீனமே. ஆங்கு, சீனரின் உரிமைகளைச் சற்றும் பொருட்படுத்தாது, யப்பான் சீனநாட் டிற் படையிறக்கி, சேர்மனியின் சலுகைப் பிரதேசமான கியாவோச்சேரவில் ஈவிரக்கமற்ற போராட்டு நடாத்தியது. அதனைக் கண்டுங் காணர் போலப் பிரித் தானியர் பார்த்திருந்தா என்பதையும் இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். சே மானிய சலுகைப் பிரதேசத்தை அடிப்படுத்திய பின்னர், சீனத்திலே யப்பான் கடைப்பிடித்த பூட்கையில் மேனாடுகள் எத்துணையாகக் குறுக்கிடவல்லவை என் பதனைச் சோதித்துப் பார்த்த பின்னர், யப்பானிய அதிகாரவ க்கம் முற்றுகச் சீனம்மீது தன் கவனத்தைச் செலுத்தியது. சீனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இத்தகைய ஒரு வாய்ப்பு 'நூறு வருட காலஞ் சென்றாலும் திரும்பி வாராது' என்றவாறான நம்பிக்கையில் மிக்காடோவின் ஆலோசகர் ஊன்றி நின்றனர். 'இத்தகைய திட்டத்தை நிறைவேற்றுதற்கும், சீனத்தில் இன்று நிலை மகள்

சாதகமாயுள' என்றும் இடித்துரைக்கப்பட்டது. நிப்பன் தலைவர்கள் எண்ணித் துணிந்த அத்திட்டம், தக்கதருணம் வாய்த்தவுடனும் தாமதமின்றி அறிவிக்கப் பட்டது.

இருபத்தொரு கோரிக்கைகளை உள்ளடக்கிய இத்திட்டம் 1915 சனவரி 18 இல் யுவான் சீ—கையிடஞ் சமர்ப்பிக்கப்பட்டது. சீனத்திலே யப்பானியரின் நலவுரிமைகள் என்றென்றும் பரமாட்சி பெறதலை உறுதிப்படுத்தற்கும், சீன விவகாரங்களிலே அன்னியர் பிறரின் நலவுரிமைகளை விலக்குதற்கும், போமோ சாவுக்கு எதிரேயுள்ள புக்கியென் சாந்துங்கு போன்ற பிரதேசங்களை யப் பானியச் செல்வாக்கிற்கு உட்பட்ட வட்டாரங்களாக வைத்திருத்தற்கும், மஞ் சூரியாவையும் உட்புறக்கிழக்கு மங்கோலியாவையும் யப்பானுடைய விசேட பாதுகாப்பில் வைத்தற்கும், கூட்டுநிருவாகம் வாயிலாகச் சில முக்கியமான பிர தேசங்களிலே பொலிசு நிருவாகத்தை ஆட்சிப்படுத்தற்கும் ஏற்ற வகையில் இத்திட்டம் விரிந்தமுறையில் எண்ணித் துணிந்து யாக்கப்பட்டது.

யப்பானியர் வற்புறுத்திய இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறு சேர் எட்வேட்டு கிரே சீன அரசாங்கத்துக்கு மே மாதம் 7 ஆம் தேதியன்று ஆலோ சனை வழங்கினன். இக்கோரிக்கைகள்பற்றி அமெரிக்கா கொண்டிருந்த மனோ பாவமும் இவ்வாறே விசித்திரமாக இருந்தது. குடிப்பதி வில்சனுடைய அரசுச் செயலாளனை வில்லியம் சென்னிங்சு பிறையன் என்பான் சாந்துங்கும் மஞ் சூரியாவும் சம்பந்தமாக யப்பானியர் விடுத்த கோரிக்கைகள் பற்றிச் சில குறை பாடுகளை ஒப்பாசாரமாக எடுத்துரைத்த பின்னர், 1915 ஆம் ஆண்டு மார்சு 13 ஆம் தேதியளவில், 'ஆனிலத் தொடர்ச்சி காரணமாக அம்மாவட்டங்களுக் கும் யப்பானுக்குமிடையே விசேட உறவுகள் தோன்றியுள என்பதை அமெரிக்க அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதென' ஒப்புக் கொண்டான். யப்பானுக்கு அளித்த இவ்வுறுதிக் கூற்றுக்களோடு சீனத்திலே ஐரோப்பிய நாடுகளின் தார் மிக அதிகாரம் முடிவுற்றதெனலாம். பிரித்தனும் அமெரிக்காவும் இவ்வாறுக, ஓரிடத்தில், யப்பான் விதித்த நியதிகளைச் சீனம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஆலோசனை கூறுமளவிற்கும், பிறிதிடத்தில், வடசீனத்தொடு யப்பானுக்குள்ள விசேட உறவுகளை அங்கீகரிக்கும் அளவிற்கும் தக்க ஆராய்வின்றி இசைந்ததன் பின்னர், பண்டிருந்த தமது ஆதிக்கநிலையை என்றுமே மீளப் பெற்றில.

இவ்வாறுகத் தனது சூழ்வியல் நிலையை உறுதிப்படுத்திய பின்னர், குடிப்பதி யுவான்மீது ஓர் உடன்படிக்கையை வல்லந்தமாகத் திணிக்கத் தருணம் வாய்த்து விட்டதென யப்பான் நினைந்தது. தான் முன்னம் விடுத்த கோரிக்கைகள் யாவற றுக்குந் திட்டவட்டமான பதிலிறுக்குமாறு வற்புறுத்தி, யப்பான் மே மாதம் 7 ஆம் தேதியன்று சீனத்துக்கு இறுதிக்கடிதம் அனுப்பிற்று. பிறிது வழியின்றி, அதற்கு இணங்குவதே தக்கதென்பதைச் சீனம் உணர்ந்தது. இரு பொருத்தனை களையும் பதின்மூன்று பரிமாற்றக் குறிப்புக்களையும் ஏற்றுக் குடிப்பதி யுவானது அரசாங்கம் மே மாதம் 25 ஆம் தேதியிற் கைச்சாத்திட்டது. அவை ஏட்டளவி லேனும் சீனத்தை யப்பானுடைய புரப்பகம் போலாக்கிவிட்டன. தான் ஏமாற் றப்பட்டதை உணர்ந்த அமெரிக்க அரசுச் செயலாளன் பிறையன், சீனக்குடியர

சின் பொருத்தனையுரிமைகளையேனும் ஆணிலத்திட்பத்தையேனும் பங்கப்படுத்துகின்ற உடன்படிக்கை யாதினையும் அமெரிக்கா ஏற்காதென அரசாங்கமிரண்டுக்கும் அறிக்கை விடுத்தான். ஆயின் யப்பானே அந்த ஆட்சேபத்தை அலட்சியஞ் செய்தது.

யப்பானியப் பேரரசனும் சீனக்குடிப்பதியும் அப்பொருத்தனைகளை முறைப்படி அங்கீகரித்தனர். ஆயின் சீனநாட்டின் அரசமைப்பின்படி அப்பொருத்தனைகளைப் பாராளுமன்றமும் முறைப்படி ஏற்கவேண்டுமென்பது விதியாதலின், அவை செல்லுபடியாகா, சீன அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தாவென்பதே சீனமக்களின் ஏகோபித்த கருத்தாக 'நெடுகிலும்' இருந்தது. 1915 ஆம் ஆண்டு முதலாய், இருபத்தோராண்டுக்குப் பின் அவ்விரு நாடுகளுக்குமிடையே போர் தொடங்கும்வரையும், சீன-யப்பானியத் தொடர்புகள் பற்றிய வரலாறு னது அக்கோரிக்கைகளின் கதிபற்றிய சரிதையேயாகும். பொருத்தனைகள் உடன்படிக்கைகள் வாயிலகத் தான் பெற்றதாகக் கருதிய பாமாட்சியை நிலை நாட்ட யப்பான் செய்த முயற்சிகளும், அத்தகைய உரிமைக் கோரிக்கை அனைத்தையும் தன்வலிக்கெட்டிய வரை எதிர்த்தற்குச் சீனம் செய்த உறுதியான முயற்சியுமே அச்சரிதையில் இடம்பெறுவன. சீனத்திலே யப்பானியப் பூட்கை தீர்க்கமாக இறுதித் தோல்வியடைந்து அவ்வழி, ஆங்குத் தான் வைத்திருந்த தானைகளைச் சரணடைய விடுத்து, சீனத்திலே தனக்கிருந்த மூலதனச் சொத்துக்களை யெல்லாம் இழந்ததுமன்றி, மஞ்சூரியாவினின்றும் யப்பான் வெளியேற்றப்பட்டதற்குக் காரணம் குடியாட்சிச் சத்திகள் சீனத்திலே வளர்ச்சி பெற்று, எட்டாண்டுக் காலமாகத் தற்காப்புப் போரைத் தொடர்ந்து நடாத்துதற்கேற்ற வலியைச் சீனத்துக்கு அளித்ததேயாம். யப்பான் செய்த தவறு, ஐரோப்பிய நாடுகளின் எதிர்ப்பைக் குறைவாகக் கணித்தது அன்று—சீனத்தின் சுதந்திரத்தைப் பாதுகாத்தற்கு அவை போர் செய்யமாட்டாவெனச் சரியாகவே அது ஊகித்தது. எனின், அளவிடற்கரிய பலம் வாய்ந்த சத்திகளைப் புரட்சியானது நாட்டிலே பாய்ச்சிற்று என்பதையும், யுவானும் அவனையடுத்து அதிகாரம் வகித்த போர்ப்பிரபுக்களும் சீனத்தின் பலவீனத்தையே காட்டினரெனினும், நாட்டிலே உருவாகி வந்த புதிய நிலைமையினை அப்பலவீனம் உண்மையிற் பிரதிபலிக்கவில்லை யென்பதையும் உரிய காலத்தில் உணரத்தவறியமையே யப்பான் இழைத்த தவருகும்.

இன்னும், ஆசியாவிலே யப்பானுடைய பூட்கையில் அடிப்படையான முரண்பாடு இருந்தவாற்றையும், அதனால் அப்பூட்கை தவறிச் சென்றவாற்றையும் இங்குக் குறிப்பிடல் வேண்டும். ஆசியாவினின்றும் ஐரோப்பியரின் அதிகாரத்தை அப்புறப்படுத்துவதே யப்பானுடைய முதனோக்கம்—இதில் ஆசிய மக்களின் ஆதரவும் அனுதாபமும் யப்பானுக்கு இருந்தன. இதனோடு, ஆணில விரிவுப் பூட்கையைக் கையாண்ட ஐரோப்பியப் பெருவல்லரசுகளுக்கு ஏற்ற சீடனுகவுமிருந்த யப்பான், ஆசிய மக்களிடையே பேரரசுநெறியைப் பரப்புவதும் தெய்வத்தாலே தனக்கு விதிக்கப்பட்ட பெரும்பணியெனக் கருதிற்று. இராணுவ அதிகாரமும் மறைமுக ஆட்சியுமாகிய முறைகளைக் கொண்டு சீனத்தின் மூலாதார

வளங்களைக் கட்டியாளலாம் எனுங் கருத்தை, இந்தியாவிற் பிரித்தானியர் கையாண்ட முறைகளைப் பயின்றதன் மூலமாய், யப்பானியர் அறிந்துகொண்டனர். இருபதாம் நூற்றாண்டிலே நிலைமை மாறிவிட்டது என்பதை மறந்த யப்பான், சருவதேச நிலவரத்தைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி வட சீனத்திலேனும் இந்தியாவை மூற்றுமொத்த ஓர் ஆதிக்கநிலையைத் தனக்கென அமைத்துக்கொள்ளும்பொருட்டு ஒரு திட்டத்தைச் செயற்படுத்தத் தீர்மானித்தது. முப்பதாண்டுக் காலமாக மனிதவாற்றலுக்கு அப்பாற்பட்ட பிரயத்தனத்தை விரயமாக்கிய பின்னர், தனக்கென ஓர் உயரிய நிலையை இத்துணை பொறுமையோடு அமைத்துக் கொண்ட யப்பான், தன் குடிகளைப் பிறநாட்டாட்சியில் வைத்தற்கு ஏதுவாயமைந்த ஓர் அவலநெறியிலே பேரரசு ஆதிக்கம் என்னுங் கொள்ளிவாய்ப் பேயால் உய்க்கப்பட்டது.

யப்பானுடைய விருப்புக்குப் பெரிதும் மாறுகவே சீனம் மத்திய வல்லரசுகள் மேற் போர் தொடுத்தது. சேர்மனியோடு பூண்டிருந்த தொடர்புகளைத் துண்டிக்குமாறு நேயநாடுகள் சீனத்திற்கு வேண்டுகோள் விடுத்தபோது, 'அரசியற் றுறையிலும் பொருளாதாரத்துறையிலும் மேம்படு நலவுரிமைகளைச் சீனத்திற் கொண்டிருந்த' யப்பான் அத்தகைய வேண்டுகோள் விடுப்பதிற் பங்குகொள்ள மறுத்தது. யப்பானுடைய இந்த மனோபாவங் காரணமாக, யப்பானுக்கும் அமெரிக்க அரசாங்கத்துக்குமிடையே கருத்துப் பரிமாற்றம் நடந்ததன் வழி, இலான்சிங்கு—இசியி உடன்படிக்கை ஒப்பேறியது. அவ்வுடன்படிக்கையின்படி, 'சீனத்தில் யப்பானுடைய விசேட நலவுரிமைகள்' காரணமாகவும், 'ஆணிலத் தொடர்ச்சி காரணமாகவும் யப்பானுக்குள்ள விசேட உறவுகளை' அமெரிக்க அரசாங்கம் மீண்டும் வற்புறுத்திக் கூறிற்று. யப்பானும் தனது அயலுட்டின் 'ஆணில இறைமையைப் பங்கமுறுவகை' பேணுதற்கு இசைந்தது. பெரும் போரிற் சீனம் பங்குகொண்டமை பீக்குங்கு அரசாங்கத்துக்கு ஓளவு முக்கியமான வெற்றியை அளித்தது எனலாம். போரின் பின் ஒப்பேறிய அமைதியுடன் படிக்கையிலே பங்குபற்றும் உரிமை சீனத்துக்கும் அவ்வழி வாய்த்தது.

வேர்சேய் மாநாட்டிலே சீனத்தின் பிரதிநிதிகளாக முதலில் உவாங் சிங்—ரிங்கும், பின்னர் வெலிங்தன் கூவும், அல்பிரெட்டு சேயும் கடமையாற்றினர். சீன நாடு ஒற்றுமை குலைந்து இருந்ததாயினும், மாநாட்டிலே சீனப்பிரதிநிதிகள் தனியொரு கருத்தையே வற்புறுத்தினர். சீனத்துக்குப் பூரணமான இறைமையை மீட்டுக் கொடுப்பதே அவர்தம் நோக்கமாயிருந்தது. சாந்துங்கு மாகாணத்திற் சேர்மனிக்கிருந்த உரிமைகள் யப்பானையே சேரல் வேண்டுமெனப் பிரித்தனும் பிரான்சும் இத்தாலியும் ஏற்கவே இணங்கிவிட்டதனால், சீனத்தின் நிலைமை வில்லங்கமானதாய் இருந்தது. ஆயினும் ஆணிலச் சார்பில்லாப் பேரரசு முறையையே தழுவிவந்த அமெரிக்க அரசாங்கம் ஆணிலம் பற்றுதலை மறச் செயலெனக் கணித்து, இவ்விடயத்தில் உறுதியாய் மறுத்து நின்றது. இங்கும் யப்பானியச் சூழ்வுத்திறனே வெற்றிபெற்றது—சாந்துங்கிற் சேர்மனிக்கிருந்த உரிமைகள் அனைத்தையும் யப்பானுக்கே அம்மாநாடு மாற்றியது. அவற்றுக்

கீடாகச் சில வாக்குறுதிகளையே—வெறும் வாய்ச்சொல்லளவில்—யப்பான் கொடுத்தது. இதனைச் சீனப் பிரதிநிதிகள் வேர்சேய்ப் பொருத்தனையிற் கைச் சாத்திட மறுத்தனர்.

வேர்சேய் முடிபு காரணமாகச் சீனமெங்கணும், முன்னெருபோதுங் காணு வகையிற் கிளர்ச்சி தோன்றிப் பரவியது. பீக்கிங்கு மாணவரே கிளர்ச்சி செய் வதில் முன்னணியில் நின்றனர். அவர்கள் 1919 மே மாதம் 4 ஆம் தேதி விரிந்த வகையில் ஆர்ப்பாட்டஞ் செய்து, யப்பானுக்குச் சார்பாயிருந்த ஓர் அமைச் சனது இல்லத்தை முற்றுகையிட்டனர். ஒருவார காலத்துக்கு மேலாகத் தலை நகர் முழுவதும் கொந்தளித்துக்கொண்டிருந்தது; அதிகாரவர்க்கமும் ஆர்ப் பாட்டக்காரரும் பலவிடயங்களில் மோதிக்கொண்டனர். பீக்கிங்குப் பல்கலைக் கழகத்தின் அதிபன் இந்நிலைவரத்தை 'பிரளயத்துக்கும் மிருகத்துக்குமிடையே மூண்ட போராட்டம்' என வருணித்தான். பொதுமக்களின் அனுதாபம் மாண வர் பக்கமே முற்றுக இருந்தவாற்றைத் தெளிவாக உணர்ந்த அரசாங்கம், நாட் டிலே புதிய ஒரு சந்ததி உருவாகி வந்ததனைக் கண்டு, தவறிழைத்த அந்த அமைச்சனைப் பகிரங்கமாகப் பதவியினின்றும் விலக்கியது. யப்பானியப் பண் டங்களைப் பகிட்காரஞ் செய்தல் வேண்டுமெனும் கோரிக்கை நாட்டில் நாலு புறத்திருந்துங் கிளம்பியது. யப்பானுக்கு மாருகத் திரண்ட எதிர்ப்பு அரசாங் கத்திலிருந்து மக்களுக்கும் பரவிவிட்டது.

பசிபிக்கிலே கடற்படைவலியைக் குறைப்பதுபற்றிய வாசிங்ரன் மாநாடு இத்தகைய சூழ்நிலையிலேயே நடைபெற்றது. கடற்படை வலிபற்றிச் சீனருக் கிருந்த ஈடுபாடு மிகச் சிறிதே யெனினும், பசிபிக்கைப் பாதிக்கும் பிரதான விடயங்களுட் சாந்துங்கும் ஒன்றுதலின், மாநாட்டுக்குப் புறம்பாக ஒப்பேறிய விசேட பொருத்தனையில் அதுவே இடம்பெற்றது. அமெரிக்கர் தளராது வற் புறுத்தி நின்றமையாலும், சீனப்பிரதிநிதிகளின் ஓவா முயற்சியாலும் ஒப் பேறிய ஓர் இணக்கத்தின் வழி, குறித்த ஒரு தொகையை நட்டஈடாகச் சீனங் கொடுத்தபின், முன்னஞ் சேர்மனிக்கிருந்த சலுகைகள் யாவும் சீனத்துக்கே மீளல்வேண்டுமென விதிக்கப்பட்டது. சாந்துங்கிலிருந்து யப்பானியப் படை ஞர் 1922 திசம்பர் 17 இல் வெளியேறின; கியாவோச்சோ—சினன் புகையிரதப் பாதையும் சீன அரசாங்கத்துக்குக் கையளிக்கப்பட்டது. இவ்வாருகச் சூழ் வியற்றுறையிலே சீன அரசாங்கம் முதன்முதலாக வெற்றிகண்டது; பிற நாடொன்று அனுபவித்த சலுகையும் முதன் முதலாகச் சீனத்துக்கு மீண்டது; யப்பானிய ஆக்கிரமிப்பும் முதன்முதலாகச் சீன மண்ணிலிருந்து பின்னிட்டது. சீன நாட்டு மத்திய அரசாங்கம் செவ்வையாக இயங்காதிருந்த போதிலும், அந் நாடு பிளவுபட்டிருந்த போதிலும் இச்சாதனைகள் ஈட்டப்பட்டன வென்பது குறிப்பிடத்தக்கது.

அல்பிரெட்டு சேயின் தலைமையிற் சென்ற சீனத் தூதுக்குழுவானது குறித்த இப்பிரச்சினையை மாநாட்டிற் கிளப்பியதோடு, பிறிதொரு முக்கியமான கோரிக் கையையும் மாநாட்டின் முன்பு வைத்தது. சீனத்தின் ஆட்சியதிகாரத்தின்மீதும் சுங்கவரிச் சுதந்திரத்தின்மீதும் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை அகற்றியும்,

பெருவல்லரசுகள் சீனத்திற் பாராட்டி வந்த சிறப்புரிமைகளை ஒழித்தும் சீனநாட்டின் அரசியலிறைமையை மூற்றுக நிறுவுதல் வேண்டுமெனுங் கோரிக்கையே அதுவாகும். அந்தக் கோரிக்கை பத்துப் பொதுத் தத்துவங்களின் வடிவிற் சமர்ப்பிக்கப்பட்டது. பேரரசுநாடுகளைக் குற்றஞ்சாட்டி அவற்றைத் தற்காக்கும் நிலையிற் சீனவரசாங்கம் தள்ளிவைத்த முதற் சருவதேசிய அரங்கம் இந்த வாசிங்ரன் மாநாடே என்பது குறிப்பிடத்தக்கது. இந்த 'உரிமைகள்' நியாயமானவையென நிலைநாட்ட எந்த நாடுந் துணிந்திலது. யப்பான்தானும்—பரன் கேற்ரே என்பான் மூலமாக—ஆக்கிரமிப்பு ஆசை யாதும் தனக்கில்லை யெனக் கூறிக்கொண்டது. இனி, தொங்கிங்கு மாகாணம் பற்றிய அச்சத்தைத் தன் மனதிற் கொண்டு பிரான்சும் சீனநாட்டின் எல்லைகள் தெளிவற்றிருந்தவாற்றைக் குறிப்பிட்டது. இவ்விஞ்தைமான கருத்துக்கு விடையிறுக்குமுகமாக வெலிங்ரன் அழுத்திக் கூறியது வருமாறு: 'சீனக் குடியரசின் ஆணிலங்கள் அதன் அரசமைப்பிற் செவ்வையாக வரையறுக்கப்பட்டுளவாதலின், அப்பிரச்சினை பற்றித் தனது தாதுக்குழு விவாதிக்க மாட்டாது' என்பதேயாம்.

இன்னும், சீனம்பற்றிய விடயங்களிலே தழுவி நடக்கவேண்டிய பூட்கையும் தத்துவங்களும்பற்றி ஒன்பது வல்லரசுகளுக்கிடையேயும் ஒரு பொருத்தனையை அம்மாநாடு நிறைவேற்றிற்று. எலிகு உறூட்டு என்பான் வரைந்தளித்த 'உறூட்டுத் தீர்மானத்தை' அடிப்படையாகக் கொண்ட (இப்பொருத்தனையின்) முதல் வாசகத்தின்படி, சீனத்தின் ஆணில நிருவாகத்திட்பத்தையும், இறைமையையும், சுதந்திரத்தையும் பேணிநடத்தற்கு அப்பெருவல்லரசுகள் இணங்கின. அன்றியும் செவ்வையான உறுதிமிக்க ஆட்சியை உருவாக்கி நிலைபெறுத்தற்குச் சீனத்துக்கு உதவிசெய்தற்கும், நாடுகள் யாவற்றினதும் வர்த்தகத்துக்கும் கைத்தொழிலுக்கும் சமதையான வாய்ப்பளிப்பதாய தத்துவத்தை நிலைநாட்டுதற்குத் தம் செல்வாக்கைப் பிரயோகித்தற்கும், குழப்பமுற்றிருந்த நிலைமையினைத் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தாது விலகி நிற்றற்கும், பிறவரசுகளைச் சேர்ந்த குடிகளின் உரிமைகளைப் பங்கப்படுத்தும் வகையிற் சிறப்புரிமைகளையும் சலுகைகளையும் நாடாது ஒதுங்கி நிற்றற்கும் அப்பெருவல்லரசுகள் தம்முள் இணங்கின.

யப்பானுடைய ஆக்கிரமிப்பிலிருந்து பிறநாடுகளின் வர்த்தக பொருளாதார உரிமைகளைப் பாதுகாப்பதே இவ்வேற்பாடுகளின் நோக்கமென்பதும், சீனத்தின் இறைமையை நிலைநாட்டுவது அத்துணை முக்கியமாகக் கருதப்பட்டிலது என்பதும் கண்கூடு. மேனாடுகள் யாவும் ஒருமித்துத் தம் உரிமைகளைப் பாதுகாப்பதே இம்முயற்சியின் நோக்கமாகும். ஆயின், சுயநலமே நோக்கமாக இருந்தாலும், இருவகையிற் சீனம் பெரும்பயன் பெற்றது. முன்னம் கூறப்பட்ட இருபத்தொரு கோரிக்கைகளை இப்பொருத்தனை குழிதோண்டிப் புதைத்துவிட்டது. இந்த வாசிங்ரன் பொருத்தனையிலே கைச்சாத்திட்டவாற்றல், அக்கோரிக்கைகளுக்கு அடிப்படையான தத்துவங்களை யப்பான் துறந்துவிட்டதென்பது தேற்றம். இனி இரண்டாவதாக, மேனாடுகளின் உரிமைகளைப்

பொறுத்தவரை, காக்கக்கூடிய உரிமைகளைக் காத்தற்கான தற்காப்பு முயற்சியாக அமைந்ததன்றி, மேற்கொண்டு சீனத்தின் உரிமைகளை ஆக்கிரமிக்கும் முயற்சியாக அப்பொருத்தனை அமையவில்லை.

சுங்கத்தீர்வைச் சுதந்திரமும் பிறநாட்டு அஞ்சல் அலுவலகங்களும் ஆணிலப் புறத்து ஆட்சியுரிமையும் பற்றிய பிரச்சினைகளையும் சீனம் அம்மாநாட்டிலே கிளப்பி, அவற்றிலும் குறிப்பிடத்தக்க வெற்றிகண்டது. செவ்வையாகச் செயற்படவல்ல ஒரு மத்திய அரசாங்கமுமேயில்லாத ஓர் அரசின் பிரதிநிதிகள் விடுத்த இக்கோரிக்கைகள்பற்றிப் பெருவல்லரசுகள் காட்டிய மனப்பான்மையிலிருந்து, பெரும்போர் காரணமாக மேனாடுகளின் மனோபாவத்திலே ஏற்பட்ட மாறுதல் துலக்கமாகப் புலப்பட்டது. வெலிங்டன் கூ சுங்கத்தீர்வைச் சுதந்திரங் கோரிய போது, எந்தவல்லரசும் அக்கோரிக்கையை எதிர்த்திலது. சீனத்தின் சுங்கத் தீர்வைச் சுதந்திரம் பற்றிப் பொருத்தனையானது யாதுங் குறிப்பிட்டதில்லையாயினும், இப்பிரச்சினையை முற்றுக ஆராய்வதற்குச் சாங்காயில் ஒரு மாநாடு கூடவேண்டுமென வல்லரசுகள் தீர்மானித்தன. அன்னிய அஞ்சல்நிலையங்களை ஒழிக்கவேண்டுமெனச் சீன அரசாங்கம் விரும்பியபோது, அவ்விருப்பு நியாயமானதேயென மாநாட்டில் நிறைவேறிய தீர்மானம் ஏற்றுக்கொண்டது. சில நிபந்தனைகளின் பேரில், இச்சலுகையை 1923 சனவரி முதற்றேதிக்கு முன்னமே துறத்தற்குப் பேரரசுகள் சம்மதித்தன.

ஆகவே சீனத்திலிருந்து ஐரோப்பிய நாடுகள் வெளியேறுவதில், முதற் கட்டத்தை இவ்வாசிங்டன் மாநாடு குறித்தது எனலாம். சீனத்தின் பிற்கால வளர்ச்சிக்கு அது எத்துணை முக்கியமானது என்பதை நாம் மறந்துவிடலாகாது. தனது இறைமையுரிமைபற்றிய எந்தவொரு விடயத்திலேயும் சீனம் உடனடியான திருப்தி பெற்றிலது என்பது உண்மையே. யப்பானைப் பொறுத்தவரை, அந்நாட்டுத் தூதுவர் மஞ்சூரியாவும் உட்புற மொங்கோலியாவும் பற்றித் தமது ஆதிக்க நிலையைப் பகிரங்கமாகவே நிலைநாட்டி நின்றனர். ஆயினும் சீனத்தின் சருவதேச நிலைமை எத்துணையோ அபிவிருத்தியடைந்துவிட்டதென்பதும், தனது உண்ணாட்டு அலுவல்களிலே அதன் அதிகாரம் வலுப்படுமளவிற்கேற்ப அதன் கோரிக்கைகளுக்குப் பிறநாடுகள் எதிர்ப்புக் குறையுமென்பதும் தெளிவாகப் புலப்பட்டன. வாசிங்டன் மாநாட்டையடுத்து, ஆங்கில-யப்பானிய நட்புறவு ஒழிக்கப்பட்டதும் சீனத்தின் நிலையை வலுப்படுத்திற்று. யப்பான் முன்னம் ஆக்கிரமித்தபோது, அந்நட்புறவே சூழ்வியற்றுறையில் யப்பானுக்குப் பாதுகாப்பளித்ததை இங்குக் குறிப்பிடல் வேண்டும். இனி, யப்பானியப் பூட்கை பற்றி அமெரிக்க அரசாங்கம் காட்டிய அவநம்பிக்கையும் எதிர்ப்பும் சீனந் தனது நிலையை உறுதிப்படுத்தி அந்நிலையிலிருந்து தன் உரிமைகளை நிலைநாட்டுதற்கு ஏதுவாகின.

இவற்றின் பின்னர், சீனம் பிரிவுபட்டுச் சிதைந்துவிடுமேயெனும் அச்சத்திற்கு இடம் இருந்திலது. போட்டியாளரான போர்ப் பிரபுக்கள் ஓய்தலின்றித் தம்மிடை பூசல் விளைத்தபோதும், தேசிய இயக்கத்தின் பெருவலி புலனுகியது. அப்பால், சோவியற்று ஐக்கிய நாடு காட்டிவந்த கெழுதகைமையை விருத்தி

செய்வதே சீனத்தின் அடுத்த முயற்சியாய் அமைந்தது. அடோல்பு யோவ் சீனத்திற்கு இட்டுச் சென்ற தூதமும், அவன் சன்யாட்சனோடு செய்த உடன் படிக்கையும் ஏற்கவே குறிப்பிடப்பட்டுள. சன்யாட்சனும் குமிந்தாங்கும் சீனத் திலே வகித்த சிறப்பிடத்தை மேனாடுகள் உணராது, பிரபலமான சேனுபதியரே சீனத்தில் உண்மையதிகாரம் செலுத்தினரெனக் கருதும் போக்கை உடையவா யிருந்தன. ஆயின் சோவியற்றுத் தலைவர்களுக்கோ உண்மை புலப்பட்டது. கட்டுக்கோப்பான தேசிய வியக்கம் நிலையுன்றியதும், சேனுபதியரின் சிறப்பு மறைந்தொழிந்துவிடும் என்பதை உணர்ந்த சோவியற்றுத் தலைவர்கள், பீக்கிங்கு அதிகார வர்க்கத்தோடு ஒப்பாசாரமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தியபோதும், குமிந்தாங்கொடு அரசியற் ரெடர்புகளை விருத்தி செய்வதிற் கருத்தாயிருந்தனர். பீக்கிங்கு வெளிநாட்டு அலுவலகத்தோடு கறக்கான் ஒப் பேற்றிய உடன்படிக்கைகளின்வழி, இரசிய அரசாங்கம் தன் சலுகைகளை விட்டுக்கொடுத்ததுமன்றி, ஆணிலப்புறத்துரிமையையும் துறந்துவிட்டது. இவ் வாரூக, மேனாடுகளோடு இவ்விடயங்கள்பற்றி இகலாட்டு நடந்தபோது சீனத் தின் நிலை மேலும் வலியுறுத்தப்பட்டது.

1925 மே மாதம் 30 இல் நிகழ்ந்த சாங்காய்ச் சம்பவத்தைத் தொடர்ந்து கிளர்ச்சி பரவியபோது, சீனத்தின் வலிமை பெருகியமை வியப்பூட்டும் வகை யிற் புலனுகியது. அக்கால், ஆர்ப்பாட்டஞ் செய்த சில மாணவர்மீது சலுகைப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். துறைப்பட்டினங்கள் யாவற் றுக்கும்—குறிப்பாகக் கன்ரனுக்கு—கிளர்ச்சி பரவிற்று. கன்ரனிலே, பிரித்தா னியத் தானைகள் ஆர்ப்பாட்டஞ் செய்த சீனர்மீது துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தன. அதற்கு எதிரடியாகச் சீனமக்கள் ஒங்கொங்கைக் கடற்புறத்தே மூற்றுகையிட்டதோடு, ஓராண்டுக்காலம் பிரித்தானியப் பண்டங்களைப் பகிட் காரமுஞ் செய்தனர்.

இவ்வாறு ஒங்கொங்கு முற்றுகையிடப்பட்டபோதும், பிரித்தானியப் பண்டங் கள் பகிட்காரஞ் செய்யப்பட்டபோதும், பிரித்தனுக்கு மாரூகத் தீவிரப் பிர சாரஞ் செய்யப்பட்டவிடத்தும், சீனருக்கு மாரூக எதிர்நடவடிக்கை யாதும் மேற்கொள்ளப்படாமை கூர்ந்து நோக்கற்பாலது. 1914 ஆம் ஆண்டுக்கு முன் னர், இத்தகைய ஆர்ப்பாட்டங்களுக்குப் பீரங்கிப்படகுகள் தக்க விடையிறுத் திருக்கும்; புரட்சிக்கு முன்னம், சீன வேத்தவை கடந்தண்டனைக்காளாகுமென அச்சுறுத்தப்பட்டிருக்கும். ஆயின் 1925 ஆம் ஆண்டிலோ, விரோதமான இந் நடவடிக்கைகள் வெளிப்படையாக நிகழ்ந்தபோதிலும், சுங்கத்தீர்வைச் சுதந் திரத்தைச் சீனத்துக்குத் திருப்பியளிக்கும் பொருட்டாகக் கூடிய பீக்கிங்கு மாநாட்டிலே பிரித்தன் அமைதியாகப் பங்குகொண்டது. மேனாடுகளின் பின் னிடைவு இரிந்தோடுவதுபோற் காணப்பட்டது. சுங்கத்தீர்வை மீட்டமைப்புக் குழுவொன்று சாங்காயில் முன்னமே கூடிற்று. சீன வருமானத்துக்குச் சாதக மாக 5 சதவீதத் தீர்வைக்கு வழிவகுக்கும் நோக்கமொடு தீர்வைப் பட்டியலை மாற்றியமைப்பதே அவ்வாணைக்குழுவின் நோக்கமாகும். ஆயின், 1925 இற் கூடிய மாநாட்டின் நோக்கம் இத்துறையிலே சீனத்துக்குரிய அதிகாரத்தை

மீட்டளிப்பதேயாகும். அது பூர்வாங்கக் கூட்டமாகப் பீக்கிங்கிலே 1925 ஒற்றோபர் 26 இற் கூடியது. பிரதமசீனத் தூதுவனை உவாங்கின் கோரிக்கை எளிமையானது: 1929 ஆம் ஆண்டு சனவரி முதற்றேதியளவில் தீர்வைக் கட்டுப்பாடுகள் யாவும் அகற்றப்படவேண்டுமென்பதே அது. வல்லரசுகள் அதனைத் தத்துவமளவில் ஏற்றுக்கொண்டன; அப்பால், தம்மைக் கட்டுப்படுத்தும் ஒருமுடிபாக அதனை ஏற்றுக்கொண்டன. அன்றியும், வாசிங்ரனிலே விதிக்கப்பட்ட தீர்வை விதங்களை உடனடியாகச் செயற்படுத்தற்கும் முடிபு செய்யப்பட்டது.

வாசிங்ரன் மாநாட்டின் முடிபுகளுக்கமைய, ஆணிலப்புறத்துரிமைபற்றி ஆராய்தற்கும் பீக்கிங்கிலே சமகாலத்தில் ஓர் ஆணைக்குழு கூடிற்று. ஆயின், இது விவாதத்துக்குரிய விடயமன்று எனவும், சீனத்திலே நீதிமன்றங்கள் செயற்பட்ட வாற்றை விசாரிக்க முயன்றவாற்றால் வல்லரசுகள் சீனத்தின் இறைமையை மறுக்கின்றன எனவும் தேசியவாதிகள் கருதினர். ஆணிலப் புறத்துரிமையை ஆராய்ந்த ஆணைக்குழு இறுதியில் இவ்விடயம்பற்றி ஓர் அறிக்கையை யாத்தளித்தது—அதிற் சில சீர்திருத்தங்கள் எடுத்துரைக்கப்பட்டன. இச் சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டவிடத்து, 'பல்வேறு அரசுகளும் தத்தம் ஆணிலப் புறத்துரிமைகளைத் துறத்தற்பாலன' என விதிக்கப்பட்டது.

இதற்கிடையிலே, சீனத்தில் ஆட்சிக்கு வந்த தேசிய அரசாங்கம் பிறநாட்டோர் சீனத்தில் வகித்த சிறப்பு நிலையினைச் சகித்தேற்றுக் கொள்ளும் பொறுதியுடையதாய் இருக்கவில்லை. நாங்கிங்கிலும் ஆங்கோவிலும் யாங்சிப் பள்ளத்தாக்கின் பிற்பகுதிகளிலும், தேசியத்தானைகள் பிறநாட்டு மக்களோடு மோதிக் கொண்டன. இப்பிரச்சினைகளுக்கெல்லாம் வலிந்தேனும் ஒரு முடிவு காணல் வேண்டுமென்ற துணிவு தேசியவாதிகளின் மனோபாவத்திலே தீவிரமாகக் காணப்பட்டது. ஆயின் இடச்சிறைக் கட்சிகளோடு சியாங்கை-சேக்கு மாறுபட்டுப் பிரிந்ததன் பின்னர், புரட்சியியக்கம் தாராண்மை வாதத்திற் கால்கொண்ட ஒரு தேசிய ஆட்சியாக மாறிய பின்னர் (1927-36), அவ்வரசாங்கத்தின் விவகாரங்களிலே சாவதானமான ஒரு போக்குப் புகுந்துகொண்டது. குமிந்தாங்கின் பிற்றைக்கால ஆட்சி வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு, அதன் நிருவாகத்திலே முதற் பத்தாண்டுகளில் அது ஈட்டிய அரிய சாதனைகளை—குறிப்பாக, சீனத்தின் அதிகாரத்தை மீட்கும் பணியில் அதன் சாதனைகளை—நாம் மறந்துவிடலாகாது. இவையெல்லாம் இக்காலவரலாற்றைத் தழுவிச் செல்வனவாதலின், அவற்றை இங்கே ஆராய முற்படாது சுருக்கமாகக் கூறிச் செல்வதே அமைவாகும்.

தலைநகர் நாங்கிங்கிற்கு மாற்றப்பட்டமையும், வல்லரசுகளின் நிலையினைப் பாரதூரமாகப் பாதித்தது. தனக்கெனக் காவற்படையும் பொலிசுக்காவலும் தற்காப்பு ஒழுங்குகளுமெல்லாம் பொருந்திய 'தூதுவர் பாக்கம்' நாங்கிங்கில் இருக்கவில்லை. இந்தத் தனியொரு செய்கையால் விசாலமான பூந்தோட்டங்களும் பெருமாளிகைகளும் வீற்றிருக்கும் வாழ்க்கையின் பிற அணியடுக்குமெல்லாம் மறைந்தொழிந்தன. 1928 ஆம் ஆண்டளவிலே யப்பான் தவிர்ந்த பிறவல்

லரசுகள் யாவும் சீனத்தின் சுங்கத்தீர்வைச் சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டன. இத்தாலியும் இசுப்பெயினும் போத்துக்கலும் போன்ற வல்லரசுகள் சில, தத்தம் நாட்டவர் வரிகொடுக்க வேண்டுமென்பதையும் தத்துவமளவில் ஏற்றுக்கொண்டன. பழைய பொருத்தனேயேற்பாடுகளே மீட்டமைக்கும் பிரச்சினையும் யப்பானுடே ஆராயப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட சுங்கத்தீர்வைகளே யப்பான் இறுதியில் அங்கீகரித்தது. ஆயின், 1930 மே மாதம் 6 ஆம் தேதியன்று நிறைவேறிய ஓர் உடன்படிக்கைப்படி இருவயிஞைத்த சலுகைகளின் அடிப்படையிலே தன் வர்த்தக நலன்களே மூவாண்டுக் காலத்துக்கு அது பாதுகாத்துக் கொண்டது.

மிக வில்லங்கமான ஆணிலப்புறத்துரிமைப் பிரச்சினையும் அதே காலத்தில் ஆராயப்பட்டது. சீன அரசாங்கத்தின் இறைமைமீதிருந்த கட்டுப்பாடுகள் பாவும் 'இயன்றவரை விரைவில் அகற்றப்படவேண்டும்' எனக் கோரும் அறிக்கையைக் கொண்ட குறிப்புக்கள், வாசகத்திற் பேதமின்றி, ஐக்கிய அமெரிக்க நாட்டுக்கும் பிரித்தனுக்கும் பிரான்சுக்கும் அனுப்பப்பட்டன. அம்மூன்று வல்லரசுகளும், தத்தம் உரிமைகளே விட்டுக்கொடுத்தற்கு முன்னம், 1926 ஆம் வருடத்து ஆணைக்குழுவின் விதந்துரைகளேச் சீன அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமெனுங் கருத்தை ஒப்பாசாரமாக எடுத்துக் கூறின. அவ்வாணைக்குழுவிலே புதிய தேசிய அரசாங்கம் பங்குகொண்டதில்லே யென்பது இங்குக் கவனிக்கத்தக்கது. அவ்வல்லரசுகளின் வாதத்தைச் சீன அரசாங்கம் மறுத்ததோடு, செயற்படுத்தவியலாப் பொருத்தனைகள்பற்றி ஆலோசனே கூறுதற்கு நாட்டுக் கூட்டவையத்துக்கு அதிகாரமளித்த ஒரு வாசகத்தின்வழி, அக்கூட்டவையத்துக்கே முறையீடு செய்தது. அதே காலத்தில், 1929 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 28 இலே அது வெளியிட்ட ஒரு கட்டளேயின்படி, சீன நாட்டிலே இடங்கொண்ட பிறநாடுகள் யாவற்றையும் தன் சட்டங்கள் 1930 ஆம் ஆண்டு சனவரி முதலாந்தேதி தொட்டுக் கட்டுப்படுத்துமென்றும், அந்நாடுகள் இவ்விடயம்பற்றி விடுக்க விரும்பும் வேண்டுகோள்களேச் சீன அரசாங்கம் ஆராயச் சித்தமாயுளது என்றும் அறிக்கை செய்தது. வல்லரசுகளின் விடை வருமாறு சென்றது : 'ஆணிலப்புறத்துரிமையைப் படிப்படியாக ஒழிக்கும் முயற்சி தத்துவமளவிலே தொடங்குமெனக் கருதுவதற்கு உரிய தேதி 1930 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாந் தேதியே எனக் கொள்ளற்பாலது'.

ஆங்கோ, குக்கியாங்கு, சிங்கியாங்கு, அமோய் ஆகிய இடங்களிலே பிரித்தானியர்க்கிருந்த சலுகைகளேயும் மீட்டுப்பெறுவதில் தாங்கிங்கு அரசாங்கம் வெற்றிகண்டது. வேய்—கை—வேயும் சீனத்துக்கு மீண்டது. சாங்காயிலும் தியென்சினிலுமிருந்த சருவதேசச் சலுகைகளும், பீக்கிங்கிலிருந்த 'தூதுவர் பாக்கம்' எனும் விசேட குடியிருப்புந் தவிர்ந்த பிறவிடங்களிலிருந்து மேனாட்டு அதிகாரம் வெளியேறிவிட்டது. இரு பிரதான பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாது எஞ்சிநின்றன. சீனத்தின் உண்ணாட்டு நீர்ப்பாதைகளேப் பிறநாட்டுக் கப்பல்கள் தொடர்ந்து பயன்படுத்தியமையும்—யாங்திசியிலும் பிற சலுகைப் பிர

தேசங்களிலும் போர்க்கப்பல்கள் நடமாடியமையும் இதில் அடங்கும்—ஆணிலப் புறத்தூரிமை பூரணமாக ஒழிக்கப்படாதிருந்தமையுமே அப்பிரச்சினைகளாகும். சீனத்துக்கும் யப்பானுக்குமிடையே பகைமை மூற்றிப் போர் விளையலாம் எனும் அச்சமே இப்பிரச்சினைகளைத் தீர்க்கவிடாது சீனத்தைத் தடுத்து வைத்தது. யப்பானுக்கும் சீனத்துக்குமிடையே நிலவிய தொடர்புகள் இவ்வாராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை. மேனாடுகளோடு இருவிரு நாடுகளும்கொண்ட தொடர்புகளை அவை எவ்வாறு பாதித்தன வென்பதே இங்குக் கவனித்தற்பாலது. சுருக்கமாகக் கூறின், மஞ்சூரியாவில் 1931 இலே யப்பான் தலையிட்டபோது சியாங்கை சேக்கு மேனாடுகளின் உதவியை நாடினர். எனவே, 1924 ஆம் ஆண்டு தொட்டுத் தண்டுதலின்றிக் காட்டிவந்த விரோதமனப்பான்மை நெகிழவிடுத்து, மற்று, ஐரோப்பாவொடு ஒத்துழைக்கும் பூட்கையை அவர் தழுவவேண்டியவராயினர்.

1927 இற்கும் 1930 இற்கும் இடைப்பட்ட காலத்தே, அன்னிய அரசுகளோடு தேசிய அரசாங்கம் நாங்கிங்கிலிருந்து இணக்கப் பேச்சுக்கள் நடாத்திப் பொருத்தனைகள் நிறைவேற்றியகாலே, சீன நாட்டின்மீது அவ்வரசாங்கம் செலுத்திய ஆட்சியதிகாரமானது நாமத்தளவினதேயன்றி உண்மைப்படியான தன்று. சாங் சோ—லின் 1928 இல் இறக்குந்தனையும் மஞ்சூரியாவில் ஆட்சி செலுத்தினன்; இளைஞனை அவன் மகன் சிலகாலமாக யப்பானுக்குச் சார்பான—இரசியாவுக்கு மாறான—பூட்கையைக் கடைப்பிடித்து வந்தான். 'கிறித்தவச் சேனபதியான' பெங்கு யூ-இசியாங்கும், சான்சிநாட்டுப் போர்ப்பிரபுவான யென் இசி—சானும் நாங்கிங்கு அரசாங்கத்தின் அதிகாரத்தை ஏற்க மறுத்து, தமது அதிகாரம் படிப்படியாக நழுவிக்கொண்டிருந்ததை உணர்ந்த பிற சிறு போர்ப்பிரபுக்களின் உதவியோடு, வடபுலத்திலே ஓர் அரசாங்கத்தை நிறுவத் தலைப்பட்டனர். ஆறு மாதப் போராட்டின் மூலமாக, 1930 இலே, சியாங்கை சேக்குக் கலகக்காரரைச் சிதறவடித்தனர். 'இளைய மாசல்' எனப்பட்டம் பெற்ற சாங் சுவே வியாங்கு என்பான் தேசியவாதிகளின் பக்கஞ் சார்ந்தமையே சியாங்கின் வெற்றிக்குத் தலையாய காரணமாகும். 'இளைய மாசல்' நாங்கிங்கு அரசாங்கத்தைக் காப்பாற்றுதற்கு முன்வந்ததுமன்றி, மஞ்சூரியாவின் சுதந்திரத்தை நிலைநாட்ட முயலும் பூட்கை ஒல்லுவதன்று என்பதை உணர்ந்து, உயிர்நாடியன்ன அப்பிரதேசத்தை மத்திய அரசாங்கத்தின் ஆட்சியில் வைப்பதே விவேகமும் நாட்டபிமானமும் ஆகும் எனத் தெளிந்துங் கொண்டான். இவ்வாறுக அவன் 1930 ஒற்றோபர் 9 ஆம் தேதியில், சுமிந்தாங்கின் பக்கஞ் சார்ந்தமை சீனம் இறுதியாக ஐக்கியப்பட்டதற்குத் தெளிவான சான்றுயிற்று; வரலாற்றில் இடம்பெற்ற பழைய பிரதேசங்கள் நாங்கிங்கு அரசாங்கத்தின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டமைக்குஞ் சான்று பகர்ந்தது. இம் முக்கியமான சம்பவத்தை யப்பான் வறிதே பார்த்துநிற்க முடியாது. மஞ்சூரியாமேற் படையெடுத்தமையே யப்பான் இறுத்த விடையாகும்.

அதிகாரம் 4

யப்பான்

மானியமுறையிற் சிக்குண்டு தனித்து நின்ற யப்பான், மூன்னெருபோதுங் காணு அதிகாரமும் வலிமையும் பெற்று உயர்ந்ததைக் கண்டு களித்த மெயிசிப் பேரரசன், தன் அரிய சாதனைகளின் புகழ்மணக்க, 1912 இற் காலமாகினன். யப்பானுடைய சருவதேச நிலைமை அக்காலத்தில் மாட்சிமைப்பட்டதாயிருந்தது. மேற்கு வல்லரசுகள் யப்பானுடைய பூட்கைபற்றி அவநம்பிக்கையோ சமுசயமோ கொண்டில. சருவதேசச் சூழ்வுத்துறையிலே யப்பான் அவற்றுக்குச் சமானமான ஒரு பெரும் வல்லரசாகப் பிரவேசித்தபோது, அசைத்தற்கரிய தமது சருவதேச நிலைபற்றி உறுதியான நம்பிக்கை அவை கொண்டிருந்தமையால், யப்பானைப் பெரும்பான்மையும் வரவேற்றனவேயல்லாது சினந்தொதுக்கியதில்லை. 'பெருந்தன்மையான' நேயபாவத்தோடும் மதிப்போடும் பிரித்தனனது, இரசியாவின் மிருவலியை ஈடுசெய்யும் பொருட்டாகக் கிழக்குலகிலே யப்பானைத் தனது நிலையைப் பலப்படுத்துமாறு ஊக்கிற்று. கொரியாவை யப்பான் வலிந்திணைத்தபோதும், மஞ்சூரியாவில் இரசியாவுக்கிருந்த உரிமைகளை அது அபகரித்தபோதும் பிரித்தன் யப்பானுக்கு இசைவாகவேயிருந்தது. 1907 ஆம் ஆண்டளவில் ஆங்கில-இரசிய நல்லுறவு பலப்பட்டதனாலே, ஆங்கில-யப்பானிய நட்புறவின் ஆதிநோக்கம் வலியிழந்துவிட்டது. எனினும், சேர்மானியக் கடற்படையின் வளர்ச்சியைத் தொடர்ந்து சருவதேச நிலைமை இழிந்துவிட்டதனாலே, ஆங்கில-யப்பானிய நட்புறவின் பயன் பிரித்தனுக்குக் கூடிற்றேயன்றிக் குறைந்ததில்லை. கியாவோச்சோவிலே சேர்மனி உறுதியாகத் தனதுநிலை தாபித்திருந்தது; பசிபிக்கிலே பல தீவுக்கூட்டங்களும் பப்புவாவிலே ஒரு பெரும் பகுதியும் அதற்குச் சொந்தமாயிருந்தன. ஐரோப்பியப் பெரும் போரொன்று மூளுமாயின், பசிபிக்கிலே நிலைமை ஆபத்தாக இருக்கும். ஐரோப்பியப் போர் மூளுமிடத்து, தூரகிழக்கிலே பிரித்தானிய நலவுரிமைகளைப் பாதுகாத்தற்கு ஆங்கில-யப்பானிய நட்புறவு விசேட முக்கியத்துவம் பெற்றது.

போர் மூண்டபோது, அந்நட்புறவின் நியதிகளைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தித் தூரகிழக்கிலே யப்பான் தனது ஆதிக்கத்தைத் தாபிக்க முனைந்தது. பிரித்தனுடைய தயக்கமான சம்மதத்தோடு யப்பான் சேர்மனிமேற் போர்தொடுத்தது. ஆயினும், யப்பானுடைய நடவடிக்கை எத்தூணை தூரம் பரவுமோ என்பது பற்றி இலண்டன் அதிகாரவர்க்கங் கவலைகொண்டது. சீனத்திலே சேர்மனிக்கிருந்த கடற்படைப் பலத்தையும் இராணுவப் பலத்தையும் யப்பான் அகற்றவேண்டுமென்று பிரித்தன் விரும்பியதேயன்றி சேர்மனிக்கெதிராகப் போர் தொடுப்பதைத் தலைக்கீடாய்க் கொண்டு இன்னுந் தெற்கே தன் நடவடிக்கையை யப்பான் விரிவுபடுத்துவதை விரும்பிற்றிலது. பிறநாடுகள் கொண்ட கவலையைத் தணிக்குமுகத்தாற் பிரித்தானிய வெளிநாட்டு அலு

வலகம் வருமாறு ஓர் அறிக்கையை வெளியிட்டது. 'பசிபிக்கிலே யப்பானியக் கப்பற்பாதைகளைப் பாதுகாத்தற்கு அவசியமாக இருந்தாலன்றி, யப்பானுடைய நடவடிக்கைகள் பசிபிக்கிலே சீனக்கடல்களுக்கு அப்பாலேனும், சீனத்துக்கு மேற்கே ஆசியக் கடல்களுக்கு அப்பாலேனும், கிழக்காசியக் கண்டத்திலே மேற்கே ஆசியக்கடல்களுக்கு அப்பாலேனும், கிழக்காசியக் கண்டத்திலே சேர்மனியின் ஆட்சியிலுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த பிற புலங்களிலேனும் பரவா!' ஆயின் யப்பானே ஒருதலைப்பட்சமான இப்பிரகடனம் தன்னைக் கட்டுப்படுத்தாது எனக் கொண்டது. அட்மிரல் மக்சிமிலியன் வொன் இசுப் பியின் தலைமையிலே இயங்கிய சேர்மானிய தூரகிழக்குக் கடற்படையைத் தூரந்து செல்வதைத் தலைக்கீடாய்க் கொண்டு ஒரு யப்பானியக் கடற்படை வியூகமானது தென் பசிபிக்கிலுள்ள சேர்மானிய தீவுக் கூட்டங்களுக்கு அண்மை யாகத் தோன்றியது.

சாந்துங்குப் போராட்டமூலமாக திசிங்ராவோவைக் கைப்பற்றி, சீனத்தி லிருந்து சேர்மானியச் செல்வாக்கை அகற்றிய பின்னர், யப்பானுனது நாம் முன்னங் கண்டவாறு சீனத்திலே பரமாட்சி யெய்தும் முயற்சியிற் கவனஞ் செலுத்தியது. ஐரோப்பிய நாடுகள் மேற்கே சீவமரணப் போராட்டத்திற் சிக் குண்டிருந்தபோதும், தனது நடவடிக்கையை எதிர்ப்பதில் (அவை) ஒன்று பட்டு நிற்குமென்பதையும், தனது 'நட்புநாடுமே' தனக்கு மாருகச் செல்லு மென்பதையும் யப்பான் உணர்ந்தது. எனினும் யப்பானியப் பூட்கையை நேராக எதிர்க்கும் நிலையிலே பிரித்தன் இருந்திலது. ஆதலின் சீனத்திலே தன் நட வடிக்கைகளுக்குத் தனித்தனி ஐரோப்பிய நாடுகளின் ஆதரவைப் பெறும் பொருட்டாக ஐரோப்பியத் தலைநகரங்களிலே தீவிரமான சூழ்வியன்முயற்சியில் யப்பான் இறங்கியது. பிற வல்லரசுகளோடு இணக்கஞ் செய்தபின், யப்பான் அமெரிக்க ஐக்கிய நாட்டின்பால் தனது கவனத்தைத் திருப்பியது. விசேட தூதமொன்று வைக்கவுண்டு இசியின் தலைமையிலே அமெரிக்காவுக்கு அனுப்பப் பட்டது. இவ்வாருக ஒப்பேறிய உடன்படிக்கையின்வழி, 'திறந்த வாயிற் பூட் கையையும்' மற்றுச் சீனத்தின் ஆணிலத்திட்டத்தைப் பாதிக்கத்தக்க சிறப் புரிமைகளைப் பெறுவதற்குத் தம் எதிர்ப்பையும் இரு நாடுகளும் உறுதிப்படுத்திய பின்னர், 'ஆணிலத் தொடர்ச்சியானது நாடுகளுக்கிடையே விசேடவுறவுகளைத் தோற்றுவிக்கின்றதாதலின், சீனத்திலே—குறிப்பாக யப்பானுடைய உடைமை களையடுத்துள்ள பிரதேசங்களிலே—யப்பானுக்கு விசேட நலவுரிமைகள் உண்டு' என்பதை இரு நாடுகளும் ஏற்றுக்கொண்டன. பெரும்போரை யடுத்த ஆண்டு களிலே யப்பானுக்கும் அமெரிக்காவுக்குமிடையே விளைந்த கடும் விரோதத்துக்கு வித்திடுவனவாக, இவ்வுடன்படிக்கையிற் காணப்பட்ட மூரண்பாடுகள் இருந் தன. மஞ்சூரியாவிலும் உட்புற மொங்கோலியாவிலும் தனக்கு விசேட நலவுரி மைகள் இருப்பதை, இவ்வுடன்படிக்கை வாயிலாய் அமெரிக்கா ஏற்றுக்கொண்ட தென்றே யப்பான் கருதி நடந்தது. ஆயின் அமெரிக்க ஐக்கிய நாடோ சீனத் தின் சுதந்திரத்தைப் பாதிக்கக்கூடிய சிறப்புரிமை யாதையும் யப்பான் கோரு வதில்லையெனத் திட்டவட்டமாக ஒப்புக்கொண்டதென்றே கருதுவதாயிற்று. ஆயின் வடசீனத்திலேனுந் தன்பரமாட்சியை அவ்வுடன்படிக்கை அங்கீகரிப்

பதாயுளது என்பதே யப்பானுடைய கருத்தாயிற்று. சீன நாட்டின் இறைமை யையும், தான் ஆதரித்து வந்த திறந்தவாயிற்பூட்கையையும் பாதிக்காத நல வரிமைகளே அவ்வுடன்படிக்கை அங்கீகரித்துளது என்பது அமெரிக்க அரசாங் கத்தின் முடிபாயிருந்தது.

யுவான் சி-கையோடு முன்னம் செய்த உடன்படிக்கைகளின் வாயிலாகத் தான் கோரிய உரிமைகளுக்கு வல்லரசுகளின் இசைவு கிட்டிவிட்டதெனத் திருப்தி கொண்ட யப்பான், இப்போது போரிலே முக்கியமான பங்கெடுக்கச் சித்திமா யிருந்தது. 1917 பெப்பிரவரியின் பின்னர்ச் சேர்மானியர் ஆரம்பித்த நீர்மூழ்கிக் கப்பற் போராட்டம் நேயநாடுகளுக்குப் பேராபத்து விளைப்பதாயிருந்தது. அப் போராட்டத்தை மத்தியதரைக் கடலிலே நிருவகித்தற்கு யப்பானுடைய கடற் படை உதவியைப் பிரான்சும் பிரித்தனும் பெரிதும் நாடின. ஆயின், சீனத்துக்கு அப்பால் யப்பான் நடவடிக்கையெடுப்பதை அனுமதித்தற்குப் போர் தொடங் கிய அந்நாளிற் பிரித்தன் தயங்கி நின்றதோடு, அக்கட்டுப்பாட்டுக்கு யப்பானும் இசைந்து விட்டதெனும் எண்ணத்தை உலக நாடுகளினிடையே உண்டாக்கி விட்டதாதலின், இப்போது மத்தியதரைக் கடலுக்குக் கடற்படை யனுப்புமாறு யப்பானைக் கேட்பது பிரித்தனுக்குச் சங்கடமாயிருந்தது. ஆயினும், புவிமத்திய கோட்டுக்குத் தெற்கேயுள்ள சேர்மானியத் தீவுகளுக்கு யப்பான் கோரிய உரி மையைப் பிரித்தனும் பிரான்சும் ஆதரித்தல் வேண்டும் எனும் நிபந்தனையின் பேரில், யப்பான் கடற்படை யனுப்பச் சம்மதித்தது. இவ்வுடன்பாட்டின்வழி, 'அகாசி'[1] யெனும் போர்க்கப்பலையும் நாசகாரிகளையுங் கொண்ட யப்பானியக் கப்பற்படையொன்று அட்மிரல் சாற்ரூவின் தலைமையிலே மத்தியதரைக் கட லிற் பிரவேசித்தது—வரலாற்றுச் சிறப்பு மிக்க இச்சம்பவத்தின் பொருண்மை பற்றிச் சில கூறல் அமையும்.

பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பந்தொட்டு, ஐரோப்பியப் போர்க் கப்பல்கள் ஆசியக் கடல்களிலே ஆதிக்கஞ் செலுத்தி வந்துள. ஆயின் ஆசியப் போர்க் கப்பல்கள் ஐரோப்பியக் கடல்களிலே புகுந்ததில்லை. கயிருத்தின் பாபரோசா என்பான் தலைமையில் மத்தியதரைக் கடலிலே சில காலம் ஆதிக்கஞ் செலுத்திய துருக்கியப் பெருங்கடற்படையானது உண்மையில் இலவாந்துக் கடற்படை யாருமேயன்றி, ஆசியக் கடற்படையாகாது. அல்பொன்சோ அல்புகேர்க்கி யின் காலத்தில் 1510 ஆம் ஆண்டிலிருந்து. இந்து பசிபிக்குச் சமுத்திரங்களிலே ஆரம்பித்த மேலைநாடுகளின் கடலாதிக்கமானது சூசிமாத் தொடுகடற்சமரிற் செம்மையாகப் பங்கப்பட்டது, சேர்மானியரின் பசிபிக்குக் கப்பற்படையை விரட்டியோட்டியமை அடுத்த வெற்றியாகும். இரண்டாண்டு கழித்து இப் போது ஆசியக் கடற்படையொன்று ஐரோப்பியக் கடல்களின் இதயதான மென்று கருதத்தக்க மத்தியதரைக் கடலிற் புகுந்து நடவடிக்கை யெடுக்கத் தலைப்பட்டது.

1. Akashi

போர் முடிவுற்றபோது, வெற்றிப்போரிற் பங்குபற்றிய ஒரு வல்லரசு என்ற வகையால், வேர்செய் மாநாட்டிலே, அமெரிக்கா, பிரித்தன், பிரான்சு, இத்தாலி முதலாய நாடுகளுக்குச் சமதையாக, யப்பானும் அங்கம் வகித்தற்கு அனுமதிக்கப்பட்டது. ஏமாற்றமே யாப்பானைக் காத்திருந்தது. மாநாட்டிலே முதன்மை பெற்றிருந்த குடிப்பதி வில்சன் யப்பானுடைய கோரிக்கைகளைப் பொறுத்தவரை தணியா விரோதம் பூண்டான். பிரித்தனும் பிரான்சும் யப்பானுடைய கோரிக்கைகளுக்கு மெத்தவுந் தயங்கியே ஆதரவு அளித்தவாயினும், குடிப்பதி வில்சனே அவை அறச்சார்பிலே தவருனவை, அரசியற் சார்பினும் அநீதியானவை, என்றவாருன கருத்தைத் தெளிவாக வெளிப்படுத்தினன். யப்பான் தன் நட்புநாடுகளின் ஆதரவோடு தன் காரியத்தைப் பெயரளவிலேனுஞ் சாதித்ததாயினும், அமெரிக்காவின் ஆதரவு பெற்ற சீனம் பொருத்தனையிற் கைச்சாத்திட மறுத்துவிட்டது. எனவே இப்பிரச்சினை தீர்ந்திலதென்பதும், தக்க தருணம் வாய்த்த விடத்து அதனை அமெரிக்கா மீண்டுங் கிளப்புமென்பதும் தேற்றம்.

அமித்த நடவடிக்கை வாசிங்ரனிலே எடுக்கப்பட்டது. உலகப்போர் காரணமாக அரசியற் செல்வாக்கு முதன்முதலாக ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்குப் பெரிதும் பெயர்ந்து விட்டது. பசிபிக்கிலே ஒரு காலத்திற் பூசல் விளையுமென வாசிங்ரன் எதிர்பார்த்தமையால், போரின் பின்னர், அமெரிக்க அரசின் கருத்து ஆங்கில—யப்பானிய நட்புறவைக் கண்டிக்கும் போக்குடையதாகவே காணப்பட்டது. முன்னம் போர் நடந்தகாலத்திலுமே யப்பானியரின் பூட்கை பற்றி அமெரிக்கா அவநம்பிக்கையும் சமுசயமுங் கொண்டிருந்தது. இப்போது, புவிநடுக்கோட்டுக்குத் தெற்கேயுள்ள தீவுக்கூட்டங்களில் யப்பானுடைய ஆதிக்கம் பரவியமை காரணமாக, அந்த அவநம்பிக்கையும் சமுசயமும் மேலும் வளர்ந்தன. வடசீனத்தில் யப்பான் மேற்கொண்ட தாக்குதலுக்குச் சருவதேசச் சூழ்வுத் துறையிலே உறுதிபயந்தது ஆங்கில—யப்பானிய நட்புறவே யென்றும், யப்பானுடைய ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தத் தான் கைக்கொண்ட முயற்சிகளைத் தடுத்துவைத்ததும் அதுவேயென்றும் அமெரிக்கா எண்ணியது. சேர்மனியால் வரத்தகும் ஆபத்து உருத்து நின்றகாலத்தில், 1911 இற் புதுப்பிக்கப்பட்ட அந்நட்புறவானது 1921 ஆம் ஆண்டில் அற்றுப்போயிருக்க வேண்டியது. மேலும், சேர்மன் ஆபத்து அக்காலத்தளவில் நீங்கிவிட்டதாதலின், ஆசிய வரசாகிய யப்பானுடு நட்புறவு பூண்டு கிழக்குலகிலே செயலாற்றுதற்குத் தனக்குள்ள சுதந்திரத்தைக் குறைப்பது அர்த்தமற்ற செயலே எனும் கருத்து இங்கிலாந்திலுமே வளரத் தொடங்கியது. இனி, வாசிங்ரனுடைய உணர்ச்சிகளை ஓராற்றுற் பிரதிபலிக்கும்வகையிலே, கனடாவும் அந்நட்புறவுக்குப் புத்துயிரளிப்பதை வன்மையாக எதிர்த்தது. அக்காலத்திற் கனேடிய முதலமைச்சருயிருந்த ஆதர் மெயிகன் என்பான் ஆங்கில—யப்பானிய நட்புறவை நிராகரித்தல் வேண்டுமென மிகத் தீவிரமாக நின்ருன். அவ்வழி,பேரரசு மாநாட்டிலே, யப்பானைப் பகைப்பதாற் கிழக்குலகிலே பிரித்தானிய நலவுரிமைகளுக்கு நேரக்கூடிய விளைவுகள் பற்றி உலொயிட் சோச்சும் சேச்சிலும் பிறரும் அஞ்சி

எதிர்த்தபொழுதும், மெயிகன் தன் கருத்துக்களுக்குக் கணிசமான ஆதரவைப் பெற்றான். பசிபிக்குப் பிரதேசத்திற் படைக்கல வகையைக் கட்டுப்படுத்துவதே அம்மாநாட்டின் தலையாய நேக்கமாயிருந்தது. தெற்குநோக்கி யப்பானிய ஆதிக்கம் பரவியபின்னர், அத்துணை செய்மையிலுள்ள தன் நலவுரிமைகளைப் பாதுகாத்தற்காக யப்பான் தனது கடற்படையைத் தப்பாது பெருக்கும் என்பது தெளிவாயிற்று. இவ்வாருக நாடுகள் தம்மிடை போட்டியிட்டுத் தத்தங் கடற்படைவலியைப் பெருக்குவதைச் சருவதேச உடன்படிக்கை மூலமாகவே தவிர்த்தல் கூடும்.

இத்தகைய பசிபிக்குப் பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு, இவ்விடயத்தில் நேராகச் சம்பந்தப்பட்ட நாடுகளைக் குடிப்பதி ஆடிங்கு ஒரு மாநாட்டிற்கு அழைத்தான். யப்பான் இம்முயற்சியின் உட்பொருளை விரைவில் உணர்ந்து கொண்டது. தன்னைத் தனிமைப்படுத்தி, சீனத்தோடு தான் கொண்ட தொடர்பினைத்தையும், குறிப்பாகச் சாந்துங்கு உடன்படிக்கையை, அலசியாராய்ந்து, அதன் முயற்சிகளைக் கட்டுப்படுத்துவதே இம்மாநாட்டின் நோக்கமாய் அமையும் என்பதை யப்பான் தெளிவாக அறிந்துகொண்டது. ஆதலின், குறித்த குறித்த வல்லரசுகளோடு மாத்திரம் தொடர்புடைய விடயங்களையும், மற்று நடந்துமுடிந்தனவாகக் கருதத்தக்க விடயங்களையும் மாநாட்டிலே கிளப்பலாகாது எனும் நிபந்தனையைத் தெளிவுபடுத்திய பின்னரே யப்பான் ஆடிங்கின் அழைப்பை ஏற்றுக்கொண்டது. இவ்வுபாயத்தைக் கைக்கொள்வதன் மூலமாக, வோசேய்ப் பொருத்தனையை இப்போது ஆதாரமாகக் கொண்டு சாந்துங்கிலே தான் பெற்றிருந்த உரிமைகளையும், குறித்த குறித்த வல்லரசுகளோடே மாத்திரம் தொடர்புடையனவாகக் கருதத்தக்க விடயங்களுள் ஒன்றாக வைத்தெண்ணத்தக்க மஞ்சூரிய ஆதிக்கத்தையும் யப்பான் தன்னளவிற் பாதுகாக்க நினைந்தது.

மாநாட்டின் ஆரம்பக் கூட்டத்திலேயே அமெரிக்காவின் குறிக்கோள்களைச் செயலாளன் இயூசு பெரும்பாலும் தெளிவாக விளக்கி வைத்தான். ஆங்கில—யப்பானிய நட்புறவைத் தீவிரமாகத் தாக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை—அது பற்றிப் பிரித்தன் அத்துணைக் கவலைப்பட்டிலது. இன்னும், அதனைப் புதுப்பிக்காது விடுதற்கு ஏற்ற தலைக்கீடாக நால்வல்லரசுப் பசிபிக்குப் பொருத்தனை பற்றிய ஒரு யோசனையும் மாநாட்டிலே பிரித்தனுக்கு வந்து வாய்த்தது. அந்த நால்வல்லரசுப் பொருத்தனை வாயிலாகப் பிரித்தனும் ஐக்கிய அமெரிக்காவும் பிரான்சும் யப்பானும் பசிபிக்கிலே தத்தமக்குள்ள உரிமைகளையும் ஆதிக்க நிலையினையும் மதித்தொழுக இணங்கியதோடு, யாதும் பிணக்கு விளையினும் இணக்கப்பேச்சால் அதைத்தீர்க்கவும் இணங்கின. இவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொள்வதன்வழி, ஆங்கில—யப்பானிய நட்புறவு முடிவடையுமென்க. மேலும், நால்வல்லரசுக் கடற்படைப் பொருத்தனை வாயிலாகப் பிரித்தனுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் யப்பானுக்கும் 5:5:3 எனும் விகிதசமம் அளிக்கப்பட்டது. அன்றியும், பனமாக்கால்வாய் வலயமும் ஆவாய்த் தீவுகளும் அலாசுக்கா

வும் தவிர்ந்த பிற பசிபிக்குப் பிரதேசங்களிலே மேற்கொண்டு கடற்படைத் தளம் யாதும் நிறுவலாகாதெனவும் விதிக்கப்பட்டது.

இம்மாநாட்டிலே ஆராயப்பட்ட சீனப் பிரச்சினைகள்பற்றி முன்னமே கூறி விட்டோம். சீனதைப் பொறுத்தவரை, இவ்வாசிங்ரன் மாநாடு ஒரு பெருந் திருப்பமாய் அமைந்தது. சீனநாட்டுக்குத் தனிபூட்டிப் பிணைத்துவைத்த சிக்கலான பொருத்தனைமுறை இன்னும் அகற்றப்படாதேயிருந்தது. ஆயினும் அது கணிசமான அளவிற்குத் தளர்த்தப்பட்டது. இனி, சாந்துங்கு உடன்படிக்கையோடு, மாற்றத்துக்கு அப்பாற்பட்ட விடயங்களாக நெடுங்காலமாய்க் கருதப்பட்டுவந்த சுங்கவரிச் சுயாதீனமும் ஆணிலப்புறத்துரிமையும் ஒளிப்பு மறைப் பின்றி ஆராய்தற்குரிய பிரச்சினைகளாக நிகழ்ச்சிநிரலிற் சேர்க்கப்பட்டன. யப்பானுக்கும் வாசிங்ரன் மாநாடு ஒரு பெருந் திருப்பமாவே அமைந்தது. முன்னை நாளிலே தனக்கு நட்புநாடாயிருந்த பிரித்தனும் பிற ஐரோப்பிய வல்லரசுகளும் தனக்கு மாறுகக் கூட்டுச்சேர்ந்தவாற்றையும், சருவதேச அரசியலிலே தான் தனிப்படுத்தப்பட்டவாற்றையும் யப்பான் உணர்ந்தது. மேலும், நால்வல்லரசுப் பொருத்தனையும் கடற்படையுடன்படிக்கையும் தனது நிலைமைக்குத் தற்காலிகமாகப் பாதுகாப்பளித்தாலும், பசிபிக்குப் பிரதேசத்திலே அமெரிக்காவின் தலைமையுரிமை உறுதியாக நிறுவப்பட்டுவிட்டதென்பதையும், மேலை நாடுகளின் ஒருமித்த எதிர்ப்பை எதிர்காலத்திலே தான் நிருவகிக்கச் சித்தமாயிருக்க வேண்டும் என்பதையும் யப்பான் நன்கறிந்து கொண்டது.

இடர்ப்பாடுமிக்க இச்சூழ்நிலையிலே யப்பான் கடைப்பிடிக்கத்தக்க பூட்கை ஒன்றேயாம். சருவதேச நிலைமையிலே ஒரு புதிய திருப்பமேற்பட்டுப் பிறநட்பு நாடுகள் தனக்கு வாய்க்கும் வரையும், தனது நிலைமையைக் காக்கத்தக்க வகையிலே தனது அகவலியை விருத்தி செய்வதே அப்பூட்கையாகும். அதனையே யப்பானும் கடைப்பிடிக்கத் தலைப்பட்டது. தலையாய ஒரு கைத்தொழில் வல்லரசாக உயர்ச்சி பெறுதற்கும், பிறருதவியை நாடுதலின்றித் தன் கடற்படையையும் விமானப்படையையும் விருத்தி செய்தற்கும், உணவு உற்பத்தியைப் பெருக்குதற்கும், தனது வர்த்தகத்தை அபிவிருத்தி செய்தற்கும் யப்பான் தன்னாலியன்றவரை முயற்சி செய்தது. நாட்டை ஒல்லும் வாறெல்லாம் பலப்படுத்துவதை இலக்காகக் கொண்டு திட்டமிடப்பட்ட ஒரு பொருளாதாரமுறை கைக்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இரும்பும் நிலக்கரியுமாகிய மூலவளங்கள் வேண்டியாங்கு கிடைக்காவிடத்தும், தேவைக்குப் போதுமான உணவு வினியோகம் நிரந்தரமாகக் கிடைக்காவிடத்தும், தமது நிலை எப்போதும் தாக்குதற்கெளிதாய் இருக்கு மென்பது யப்பானியத் தலைவர்களுக்கு நாளாவட்டத்திலே மிகத் தெளிவாகியது. இத்தகைய மூலவளங்கள் மஞ்சூரியாவிலேயே தேங்கிக் கிடந்தன. அப்பெரும் பிரதேசத்திலே யப்பான் தனது நிலை நாட்டி ஏற்கவே சிறப்பான இடம் பெற்றிருந்தது. ஆதலின் மஞ்சூரியாவிடத்துத் தனது கவனத்தைச் செலுத்திய யப்பான், அதனையே தனது தானியக் களஞ்சியமாகவும் ஆயுதசாலையாகவும் மாற்றத் துணிந்தது.

பெரும்புரட்சியை யடுத்த பருவத்திலே, சீனப் பெருஞ் சுவர்க்கு வடக்கே பரந்துள்ள பிரதேசமானது, மாசல் சாங் சோ—லின் என்பானது ஆட்சிக்குக் கட்டுப்பட்டிருந்தது. மூக்டனிலே தனக்கிருந்த சுதந்திரம், யப்பானிய அதிகாரவர்க்கத்தின் ஆதரவிலும் குவாந்தங்குப் படையிலுமே தங்கியிருந்த வாற்றை அவன் ஆதியிலிருந்தே அறிந்திருந்தான். மஞ்சூரியாவின் மாபெரிய போர்ப்பிரபுவாகச் சாங் சோ—லின் ஆதிக்கம் பெற்றிருந்தவரை, நிப்பொனுடைய அரசுபாய பொருளாதாரத் திட்டங்கள் ஈடேறுதற்கு யப்பானியர் நேராகத் தலையிட வேண்டிய அவசியம் இருந்திலது. குமிந்தாங்கு தலையெடுக்கும் வரையும் பாரதூரமான பிரச்சினை யாதும் ஆங்கு யப்பானியர்க்கு நேர்ந்ததில்லை. மஞ்சூரியாவும் உட்புற மொங்கோலியாவும் பெரும்பான்மையும் யப்பானுக்குக் கட்டுப்பட்ட புரப்பாட்சி நாடுகளாக மாறிவிட்டன. ஆயின், நாங்கிங்கிலே புதிய மத்திய அரசாங்கம் நிறுவப்பட்டமையாலும், சாங் சோ—லின் னுக்கு மைந்தனும் அவற்பின் ஆட்சிபெற்றோனுமாகிய சாங் சுவே—லியங்கை அவ்வரசாங்கம் ஏன்வயப்படுத்தச் செய்த முயற்சி காரணமாகவும், முற்றும் புதிய நிலைமை உருவாகித் தோன்றிற்று. போட்சுமதுப் பொருத்தனையைத் தொடர்ந்த இருபத்தையாண்டுக் காலத்தில் யப்பான் நிருமானித்த அமைப்பின் அத்திவாரத்தையுமே அப்புதிய நிலைமை தகர்க்கும் போலத் தோன்றிற்று. சீன மக்கள் தமது வருவாய் கொண்ட மூன்று புகையிரதப் பாதைகளை 1929 ஆம் ஆண்டு தொட்டு அமைக்கத் தொடங்கினர். தயிரென் துறைமுகத்துக்குப் போட்டியாக அமையும்வகையில் இரு புதிய துறைகள், யிங்கோவும் உலுற்ரு வோவும், திறக்கப்பட்டன. இவை உண்ணட்டோடு இணைக்கப்பட்டமையால், யப்பானுடைய ஆட்சியிலிருந்த புகையிரதப்பாதையின் மதிப்புப் பெரிதுங் குறைந்தது. இறுதியாக, 1930 இல், சியாங்கைசேக்கையும் குமிந்தாங்கையும் நாடிச் சாங்சுவே லியாங்கு சேர்ந்துகொண்டமையால், தான் தாழ்ந்து பணிந்து தன் ஆதிக்க நிலையினைத் துறத்தல் வேண்டும், அன்றேல், தன் உரிமைகளுக்காகத் தும்பைசூடிப் போரிடல் வேண்டுமென்பதை யப்பான் உணர்ந்துகொண்டது.

யப்பான் தும்பை சூடவே தீர்மானித்தது. தென் மஞ்சூரியப் புகையிரதப் பாதையின் தடத்திலே நேர்ந்த வெடி விபத்தொன்று போர்மேற்செல்லற்கு வேண்டிய வாய்ப்பினை யப்பானுக்கு அளித்தது. யப்பானியர் 1931 செப்தம்பர் 18 ஆம் தேதி இராப்பொழுதில் முக்கடனைத் தங்கைப்படுத்தினர். மஞ்சூரியாவின் கேந்திர மையங்கள் யாவும் சில நாளிற் கைப்பற்றப்பட்டன. நாட்டுக் கூட்டவையத்துக்குச் சினம் முறையீடு செய்தது. சீன-யப்பானிய உறவு மீண்டும் சருவதேசப் பிரச்சினையாயிற்று. அப்பிரச்சினை வறிதே உண்ணட்டுப் பிரச்சினையே யென்றும், நேராக இணக்கப் பேச்சுத் தொடங்குவதே அதனைத் தீர்த்தற்குத் தக்க வழியென்றும் யப்பான் விடையிறுத்தது. நாட்டுக் கூட்டவையத்திலே அரசுபாயப் போராட்டம் உருப்படியான பயனின்றி நீடித்தது. கழகத்தில் அங்கத்துவம் வகிக்காதிருந்த பொழுதிலும் அமெரிக்க ஐக்கிய நாடு இணக்கப்

பேச்சுக்களில் மிக நெருங்கி ஈடுபட்டது—ஆரம்பக் கட்டங்களில் இதுவே குறிப்பிடத்தக்க ஓர் அமிசமாகும். யப்பானுக்கெதிராக மேலைநாடுகள் ஒருமித்து நின்றவாற்றை அது வற்புறுத்திக்காட்டிற்று.

ஆண்டின் இறுதியளவில், மஞ்சூரியாவிற் பெரும்பாகத்தை யப்பான் கைப்பற்றியதோடு, தனக்குச் சாதகமான சீனக் கோட்டிகளை உருவாக்கவும் தலைப்பட்டது. சாங்காயில் வதிந்த யப்பானிய மக்களைப் பாதுகாக்கும் பொருட்டாகவும், சீன அரசாங்கம் தூண்டிவிட்ட பகிட்கார நடவடிக்கைக்கு எதிர்த்தாக்குதலாகவும், யப்பானியக் கடற்படை வீரர் சாங்காயில் இறங்கிச் சப்பேயிலிருந்த சீனத் தாளைகளைத் தகர்க்கத் தொடங்கினர். இத்தாக்குதல் 1932 சனவரி 28 இல் நிகழ்ந்தது. இதனால் மேற்கு வல்லரசுகளோடு மாறுபாடு விளைந்தது இயல்பேயாம். தமது சொந்த உரிமையாக இதுகாறும் கருதி வந்த ஒரு தானத்திலே யப்பான் தாக்குதல் நிகழ்த்திற்றேயென அவ்வல்லரசுகள் நினைந்தன. அவை ஆட்சேபந் தெரிவித்தபோதும், யப்பானிய விமானப்படையும் தரைப்படையும் போராட்டத்திற் சேர்ந்துகொண்டன. ஒன்பான் வல்லரசுக் கூட்டணி யப்பானுக்கெதிராகச் செயற்படவேண்டுமென அமெரிக்க நாட்டு அரசுச் செயலாளன் திம்சன் என்பான் வேண்டுகோள் விடுத்தான.

இவ்வாறாக அமெரிக்காவின் பூட்கையில் உண்மையான ஒரு திருப்பமேற்பட்டது. மஞ்சூரியாவைப் பொறுத்தவரை திம்சன் வகுத்துக் கூறிய கோட்பாட்டை 'அங்கீகாரஞ் செய்யாமை' எனும் ஓரேவாக்கியத்தாலே தொகுத்துக் கூறலாம். உண்மைப்படியான நிலைவரமெதனையும் சட்டப்படியானதென அமெரிக்கா ஏற்காதெனவும், சீனத்தில் அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் குடிகளும் பொருத்தனை வாயிலாகப் பெற்ற உரிமைகளையேனும், மற்றுச் சீனக் குடியரசின் சுதந்திரம், ஆளிலத்திட்பம், நிருவாகத்திட்பம் எனுமிவற்றோடு சம்பந்தப்பட்ட உரிமைகளையேனும் மீறும் வகையில் அவ்வரசாங்கங்களோ அவற்றின் முகவரோ ஒப்பேற்றும் எந்தப் பொருத்தனையையும் எந்த உடன்படிக்கையையும் அங்கீகரிக்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லையெனவும் அக்கோட்பாடு விதித்தது. அன்றியும், 'பாரிசுப் பொத்தனை விதித்த ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் முரண்பாடான முறைகளின் வழி உருவாகும் எந்நிலைவரத்தையும் எப்பொருத்தனையையும் எவ்வுடன்படிக்கையையும் அங்கீகரிக்கும் எண்ணம் அதற்கு இல்லையெனவும்' அக்கோட்பாடு கூறிற்று. சாங்காய்ச் சம்பவந் தொடங்கியவுடனும், 'அவுசுற்றன்'[1] எனுங் கொடிக்கப்பலையும் சில நாசகாரிகளையும் ஒருங்கே ஒரு காலாட்படைப் பேரணியையும் அமெரிக்க நாடு 'முற்காப்பு நடவடிக்கையாக' அனுப்பி வைத்தது. ஒன்பான் வல்லரசுப் பொருத்தனையை ஊக்குதற்கு முயன்று தவறிய பின்னர், ஆவாயிலே அமெரிக்கக் கடற்படை வெருத்தரும் வகையிலே திரண்டு நின்றது.

பகிரங்க அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் பொதுமக்களின் கருத்தை உருவாக்கி ஆற்றுப்படுத்துவது அமெரிக்காவிற் பயின்றுவந்த ஒரு வழமையான

1. Houston.

முறையாகும். அதனையும் கையாளும் அளவிற்கு அமெரிக்காவின் பகைமை யப்பானுக்கெதிராக வளர்ந்துவிட்டது. மூதவை அங்கத்தவனுை சனற்றர் போரு என்பாற்கு 1932 பெப்பிரவரி 23 இற் செயலாளன் திம்சன் வரைந்த கடிதமொன்றில் கூட்டறிக்கை விடல் வேண்டுமெனும் தனது யோசனையை—சேர் யோன் சைமன் ஏற்க மறுத்த யோசனையை—வருமாறு விளக்கினன்: நாட்டுக் கூட்டவையத்தின் பொதுமன்றத்திலே கூடப்போகும் நாடுகளுக்கு, எதிர் காலத்திற் கையாளத்தக்க நடவடிக்கைபற்றிக் கூறப்பட்ட ஒரு யோசனையே யாகும் அது. சீனத்துக்குத் தைரியமூட்டுவதும், யப்பானை அச்சுறுத்துவதுமே அதன் கருத்தாகும். அமெரிக்காவின் தூண்டுகையால் உந்தப்பட்டு, நாட்டுக் கூட்டவையம் மேன்மேலும் பகைமை பாராட்டி, அங்கீகாரஞ் செய்யாமை யெனுங்கோட்பாட்டை ஓராற்றூல் ஏற்கும் வகையிலே ஒரு தீர்மானத்தை நிறை வேற்றியதுமன்றி, சாங்காயிலே போர்நிறுத்த விவகாரம் பற்றி அறிக்கை செய் தற்கும் 'அவசியமான அவசர நடவடிக்கைகளை எடுத்துரைத்தற்குமாகச்' செயற்குழுவொன்றை நியமனஞ் செய்தது.

இவ்வாறுக, வியக்கத்தக்க கருத்தொன்றை யப்பானுக்கெதிராக மேலை நாடு களிடையே ஐக்கிய அமெரிக்கா உருவாக்கியது. சாங்காய்ச் சம்பவம் வெறுந் தற் காப்பு நடவடிக்கையே யென்றும், அது பூட்கைமாற்றம் யாதையும் குறிக்கா தென்றும் ஆதியிலிருந்தே சாதித்துவந்த யப்பான், படைக்கலத் தகைவு பற்றிய ஒழுங்குகள் யாவும் முடிவாகிச் செவ்வனே நிறைவேற்றப்பட்டபின்னர், தனது படையினை மார்சு 4 இற் பிறக்கீடு செய்தது. ஆயின் மஞ்சூரியாவைப் பொறுத்த வரை யப்பான் கொண்ட கொள்கை வேறுயிருந்தது. மஞ்சூரிய நாட்டை அடிப் படுத்திய பின்னர் மஞ்சூரியாவின் சுதந்திரத்தை இலக்காய்க் கொண்ட ஓரியக் கத்தை உருவாக்க முற்பட்டது யப்பான். இப்பூட்கைக்குத் தலைக்கீடாயமையத் தக்க ஓரளவு நம்பகமான சட்ட நியாயமும் ஒன்று இருந்தது. இங்கிலாந்தின் ஒரு கூறுக நோமண்டியைக் கொள்ள முடியாதவாறே ஆதியில், மஞ்சூரியாவும் சீனப்பேரரசின் ஒரு கூறுக இருந்ததில்லை. மஞ்சுமக்களே சீனத்தை வென்றடிப் படுத்தினரேயன்றி சீனம் மஞ்சுமக்களை வென்றடிப்படுத்தியதில்லை. இவ்வழி, மஞ்சுப்பேரரசு மறைந்துபோயபின், மஞ்சூரியாவும் மற்றுச் சீனமும் ஒன்றே யெனுங் கோரிக்கைக்குச் 'சட்டரீதியான ஆதாரம்' யாதும் இருக்கவில்லை. அன்றியும், சீனப் புரட்சி தொட்டு 1931 ஆம் ஆண்டுவரையும் மஞ்சூரியப் பதிலி ராயற் பதவி பீக்கிங்கின் ஆட்சிக்குக் கட்டுப்படாததாய்ப் பெரும்பாலும் சுதந் திரம் படைத்ததாகவே இருந்தது. எனவே அப்பிரதேசத்தில் மஞ்சு மக்களுக் கிருந்த உரிமைக் கோரிக்கையை மீட்டும் வலியுறுத்துவதே யப்பானது பூட்கை யாயிற்று. பேரரசன் புயி என்பானுடைய பரவணியுரிமையை அடிப்படையாகக் கொண்ட அவ்வுரிமைக் கோரிக்கை சட்டப்படி நியாயமானதே. அப்பேரரசன் சீனமுடித்தைத் துறந்தபின்னும் மஞ்சுப் பேரரசன் எனும் பட்டத்தைத் துறவா திருந்தான். இவ்வாறுக, புயீயை மூதலிற் பதிலாளியாகவும், பின்னர்ப் பேர சனுகவுங் கொண்டு 1932 பெப்பிரவரி 18 இல் மஞ்சுக்கோ சுதந்திர அரசாகப் பிரகடனஞ் செய்யப்பட்டது.

ஆயின், மஞ்சுப் பேரரசனுடைய நிலை சட்டப்படி நியாயமானதெனக் கொண்டாலும், மஞ்சூரியாவின் குடிசனப்பாங்கை அது மாற்ற முடியாது. அது இருபதாம் நூற்றாண்டின்போது பெரும்பான்மையும் சீனமக்களையே கொண்டிருந்தது. சீன மக்கள் வடக்கு நோக்கிப் பேரலையாகக் குடிபெயர்ந்ததனால், மஞ்சு மக்கள் அப்பேரலையில் ஆழ்ந்துபோய்விட்டனர். இன்னும், சட்ட நிலைமை யாதாயிருந்த போதும், பரந்த உலகமும் சீன மக்களும் மஞ்சூரிய மக்களிற் பெரும்பாலாரும் அந்நாட்டைச் சீனத்தின் ஒரு பாகமாகவே கருதிவந்தனர்.

இதற்கிடையில், மஞ்சூரிய நிலைவரத்தை ஆராய்ந்துகொண்டிருந்த இலிற்றன் ஆணைக்குழுவானது நாட்டுக் கூட்டவையத்துக்குத் தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. அவ்வறிக்கை ஒத்துமேவும் பாங்குடையதாகக் காணப்பட்டபோதும், மஞ்சூரியாமீது சீனத்தின் இறைமையுரிமையை வற்புறுத்திற்று. அமெரிக்கருடைய தலைமையிலே உலகமக்களின் பொதுக்கருத்தானது யப்பானுக்கெதிராகத் திரண்டெழுகின்றது என்பது பற்றி ஐயமறத் தெளிந்த யப்பானிய மக்கள், மென்மேலும் முரண்பாடான போக்குக் கொண்டனர். செனீவாவிலே பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்தகாலை, யப்பானியர் சானைக்குவான் கணவாயுட் பல வந்தமாகப் பிரவேசித்து, அவ்வழி, சீனப் பெருஞ் சுவர்க்கு உட்புறத்தேயிருந்த யெகோலையும் பிற பிரதேசங்களையும் அச்சுறுத்துவாராயினர். நாட்டுக் கூட்டவையமும் யப்பான் நாடும் மாறுபட்டு வெவ்வேறு நெறியிற் செல்லுங்காலம் அண்மித்துவிட்டமை தெளிவாயிற்று. புகையிரதப்பாதை சென்ற வலயம்வரை பின்வாங்கி, சீனத்தோடு தொடர்ந்த பிரச்சினைகள் யாவற்றையும் கூட்டவையத்துக் குழுவொன்றன் ஆதரவில் யப்பான் இணக்கப்பேச்சு மூலமாகத் தீர்த்து வைக்கவேண்டுமெனக் கூட்டவையம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. மேலும், சீனத்தின் இறைமைக்கு உட்பட்டுத் தன்னுட்சி படைத்ததான ஒரு மஞ்சூரியாவைச் சீனம் நிறுவவேண்டுமெனவும், யப்பானியரின் மஞ்சுக்கோவை அங்கத்துவ நாடுகள் அங்கீகரிக்கலாகா தெனவும் அத்தீர்மானம் விரித்தது. யப்பானை ஒதுக்கிவைத்துத் தனிப்படுத்துவதைக் குறியாகக் கொண்ட அமெரிக்கப் பூட்கை இவ்வாறுக வெற்றி பெற்றது. யப்பானும் தன்னைப் பொறுத்தவரை கூட்டவையத்திலிருந்து வெளியேறப் போவதாகவும், அதன் தீர்மானங்கள் தன்னைக் கட்டுப்படுத்தா எனவும் விடையிறுத்தது.

ஐரோப்பாவினின்றும் விலகித் தன்வழிச் சென்ற யப்பான், தான் கொண்ட முடிபைச் சீனம்மீது திணிக்கத் தீர்மானங் கொண்டது. படிப்படியாகவும் பையவும் யப்பான் தெற்கு நோக்கி முன்னேறியது. அந்நாளிற் குமிந்தாங்கு கன்னை பிரிந்து அகப்பூசலில் மும்முரமாக ஈடுபட்டிருந்ததாதலின். யப்பானியரின் முயற்சிகளுக்குச் சீனவெதிர்ப்புச் சிறிதுங் காணப்படாதபோதும், சீன மக்களின் தேசியவுணர்ச்சி ஆக்கிரமிப்பாளனுக்கு எதிராகத் திரண்டு வளர்ந்து ஓர் ஐக்கிய முன்னணியாகப் பரிணமித்தது. மற்று யப்பானே யெகோலிலிருந்த தன் தளத்திலிருந்து மொங்கோலியச் சிற்றரையரோடு நேயவுறவுகளைத் தாபித்து, எல்லைப் புலங்களுள் ஊடுருவத் தலைப்பட்டது. மொங்கோலியத் தன்னுட்சியியக்கம் இவ்வாறுகத் தோன்றிற்று. சியாங்-கை-சேக்குச் செயலில் இறங்கத் தயங்கிய

காலே, அரசுபாயக் களரியிலே தீவிர முயற்சி நடைபெற்ற அந்நாளில், கோ-உமே-சூ எனப்பட்ட உடன்படிக்கைகளின்வழி புதிய வகையான யப்பானியரா திக்கம் பீக்கிங்கிலேயும் தாபிக்கப்பட்டது. அவ்வுடன்படிக்கைகளின்படி, யப் பானியரின் ஆட்சேபத்துக்காளான சீன அலுவலாளர் (பீக்கிங்கு இடங் கொண்டிருந்த) ஓப்பேய் மாகாணத்திலிருந்து அகற்றப்பட வேண்டுமெனவும், குமிந்தாங்கின் தானேகளும் மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்களும் வெளி யேற்றப்படவேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. வடசீனம் தன்னுட்சி படைத்த ஒரு பிரதேசமாகப் பாவிக்கப்பட்டது. கொம்யூனிசத்துக்கு மாருன அரசாங்க மொன்று யப்பானியருடைய ஆதரவிற் கிழக்கு ஓப்பேயில் நிறுவப்பட்டது. ஓப் பேய்-சகார் அரசியற் கழகத்தைத் தாபித்தற்கும் சியாங்-கை-சேக்குக் நாங் கிங்கு அரசாங்கமும் சம்மதித்தனர்.

இந்தியாவிற் பிரித்தன் வகுத்துச்சென்ற பாதையைப் பின்பற்றி யப்பானும் சீனத்தில் வெற்றிகரமாகச் சென்றதுபோற் காணப்பட்டது. ஆதிக்க வலையைப் பரப்பும் முயற்சியில், படிப்படியாகப் பொம்மையரசாங்கங்களே நிறுவி அங்கே காரஞ் செய்து செல்வதே அந்நெறியாகும். ஆயின் அங்கோ, சீனத் தேசிய வுணர்ச்சி படைதொட்டெழுந்தது. சியான் நகரத்துத் திடீர் நடவடிக்கை காரணமாக யப்பானுக்கெதிராக ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்குதற்குச் சியாங்கை-சேக்குச் சம்மதிக்க வேண்டியவனுயினன். இம்முடிபைத் தொடர்ந் தும், கொம்யூனிசத்தலேவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையை யடுத் தும், ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்குச் சீனம் முடிவு கட்டிற்று. சியான் பிரகடனத் தின் விளேவாகத் தோன்றிய தேசிய ஒற்றுமை உறுதிப்படுமுன்னம் தாக்குதற்கு யப்பான் தீர்மானித்தது. மாக்கோபோலோச் சம்பவமே (1937, யூலே 8) அதன் விளேவாகும். அச்சம்பவம் சீனவெதிர்ப்புக்கு வழிதிறந்து, இறுதியில் யப்பானுக் கும் சீனத்துக்குமிடையே போர்க்கு அடிகோல, அப்போர் 1941 ஆம் ஆண்டின் பின்னர் இரண்டாவது உலகப் போரிற் சென்று கலந்தது.

வாசிங்ரன் பொருத்தனேகளுக்குப் பின்னர் யப்பான் சருவதேச அரசியலரங் கிலே தனிப்படுத்தப்பட்டவாற்றை ஏற்கவே கண்டோம். அதனல், தாராண்மைக் கொள்கையைத் தழுவிய மேலேடுகளிடத்து அது காழ்ப்புக் கொண்டது இயல்பே யாகும். எனவே, 1933 இல், இற்லரின் ஆட்சியிலே ஒரு பெரும் ஐரோப்பியவல்ல சாகச் சேர்மனி தலேயெடுத்தகாலே, சருவதேச அரங்கிலே உருவாகிவந்த புதிய நிலேமையைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தலாம் என்பதை யப்பானிய இராசதந்திரம் விரைவில் உணர்ந்தது. அன்றியும், அக்காலத்தில் ஐரோப்பாவும் படுமோசமாகப் பிளவுபட்டு நின்றதுபோலத் தோன்றிற்று. எதியோப்பியப் போரையடுத்து உரோம்-பேளின் அச்சும் உருவாகிவிட்டது. வலாஞ்சிய இசுப் பெயினது ஆதரவும்பெற்று சருவாதிகாரிகள் இருவரும் ஐரோப்பாவில் யுத்த சந்நத்தராய் நின்றமையாலே, மேற்கைரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்கவலி செவ்வனே ஈடுசெய்யப்பட்டது போலத் தெளிவாகத் தெரிந்தது. அவ்வழி, அமெரிக்காவின் ஆற்றுமைப்பட்ட ஆத்திரமொன்றையே நிருவகிக்க வேண்டிய தல்லால், பிறவாற்றுல் யப்பான் கிழக்குலகிலே சுயாதீனமாகச் செயலாற்றுதற்கு

வாய்ப்புண்டாயது. சேர்மனியும் இத்தாலியும் இசுப்பெயினும் பொதுவுடைமை யகிலவெதிர்ப்புக் கூட்டணியை ஒப்பேற்றிவிட்டன (1936, நவம்பர் 25). இங்கிலாந்து, பிரான்சு எனுமிவற்றின் எதிர்ப்பை நிருவகிப்பதில், தூரகிழக்குப் போராசாகிய யப்பானுக்கு இக்கூட்டணி ஓரளவுக்கு உறுதியான நட்புறவை நல்கிற்று. சருவதேச அரசியலரங்கிலே தான் பட்ட முற்றுகையைக் கடைசியாக உடைத்தெறிந்துவிட்டதெனவும், தான் விரும்பியாங்கு சீனத்தைச் 'சரிக் கட்டுதற்கு' நிலைமை வாய்த்துவிட்டதெனவும் யப்பான் கருதிற்று. அக்கருத்துத் தவறே யென்பது காலப்போக்கிற் புலனுயிற்று.

எனினும், 1937 ஆம் ஆண்டில் யப்பான் உலகை எதிர்ந்து சென்றதற்கும் காரணம் இதுமட்டுமன்று. சீனநாட்டிலே தனக்குத் திருத்தியான முறையில் விவகாரங்களைத் தீர்த்து வைக்க வேண்டுமாயின், தனக்கு மாருகச் சீனம் திரண்டெழும் வாய்ப்பைத் தடுத்துவைக்க வேண்டுமாயின், சீனத்திலே மேலைப் புலச் செல்வாக்கு—அதாவது ஈண்டு அமெரிக்கச் செல்வாக்கு—புத்துயிர் பெறுவதை விலக்க வேண்டுமாயின், தாமதமின்றிக் கடுகி நடவடிக்கை மேற்கொளல் அவசியமென்பதை யப்பான் தெளிவாய் உணர்ந்தது. சீனத்திலே நிலைமை மாறி வந்தவாற்றையும், தேசியவுணர்ச்சி விழிப்புற்றவாற்றையும் யப்பான் நன்கறிந்திருந்தது. நாங்கிற்கு அரசாட்சி 1935 இலே திறமையின்றியும், அரசியற் போட்டிகளாற் பீடிக்கப்பட்டும், ஒப்பளவானே வலியற்றும் இருந்ததாகலாம். ஆயின், முன்னம் ஆட்சி செய்த பல்வேறு அரசாங்கங்களோடு ஒப்பிடுங்காலை, சியாங்கினது நிருவாகம் ஆற்றவும் உறுதி பெற்றதாயிருந்தது. அது தேசியவுணர்ச்சியைப் பிரதிபலிப்பதாயிருந்தது; படையின் ஆதரவும் அதற்கிருந்தது; முதற் புரட்சியின் பின்னர் எந்த நிருவாகமும் செலுத்தியறியாத விரிந்த அதிகாரத்தை நாட்டில் அது பரக்கப் பெற்றிருந்தது. இவ்வாருக அடுத்து ஐந்தாண்டுக் காலத்துக்கு இப்பலப்படுத்து முயற்சியும் சீரமைப்பு வேலையும் தடங்கலின்றித் தொடர்ந்து நிகழுமாஞல், கிழக்காசியாவிலே மேம்பாடு அடைவது பற்றி யப்பான் கண்ட கனவெல்லாம் மறைந்தொழியும். இவையெல்லாம் நிகழத் தக்கனவேயென்பது பற்றி யப்பானும் மிக முந்தியே, 1915 ஆம் ஆண்டளவிலேயே, அறிந்திருந்தது. சீனமும் போரிற் சேருதல் வேண்டுமெனத் தத்தம் அரசாங்கங்கள் சீனக் குடிப்பதி யுவான் சி-கைக்கு எடுத்துக் கூறிய யோசனைக்கு ஆதரவு தேடுமுகத்தால் இரசிய பிரித்தானிய பிரான்சிய தூதமைச்சன்மார் வைக்கவுண்டு இசியிற்கு வேண்டுகோள் விடுக்க அவன் விடையளித்தபோது (1915) கூறிய வாசகங்கள் இங்கு நினைவுகூரத்தக்கன; 'போரிலே தீவிரமாகப் பங்குபற்றுதற்கு ஏற்றதான திறமைமிக்க ஒரு சீனப்படை அமைக்கப்படுதலைப் பார்த்துக்கொண்டு யப்பான் நிச்சிந்தையாக இருக்க முடியாது; 40 கோடி மக்களைக் கொண்ட ஒரு தேசத்தின் பொருளாதாரச் சத்திகள் விடுதலைபெற்று வளர்வதையும் யப்பான் கவலையின்றிப் பார்த்திருக்கவும் முடியாது'. யப்பானிய அரசறிஞ 1915 இல் எதிர்வுகண்ட ஆபத்துக்களெல்லாம் 1931 ஆம் ஆண்டளவிற் கைகூடும் நிலையிலிருந்தன. ஆதியிலே சோவியற்று நிபுணாற் பயிற்றப்பட்ட குமித்தாங்கு படை, அக்காலத்தளவிலே ஐக்கியமடைந்த ஒரு பொரு

படையாகவேனும் மாறிவிட்டது. அஃது எவ்வாறுயினும், நவீனமுறையிலே பயிற்சியும் படைக்கலமும் பெற்ற ஒரு தேசியப்படை உருவாகிவிட்டது. இன்னும், பிங்கிங்கின் நெருக்கிடைகளுக்கு அப்பாற்பட்ட தனியோர் அரசாங்கமும் ஆங்கு இருந்தது. அவ்வரசாங்கம் தற்கால அரசுபாயக்கலியிலே நனி பயின்றதாயும், நாட்டுக்கூட்டவையும் நல்லக்கூடிய வாய்ப்பனைத்தையும் செவ்வனே பயன்படுத்தி யப்பானுடைய முயற்சிகளைத் தடுக்க வல்லதாயு இருந்தது. 'நாற்பது கோடி மக்களைக் கொண்ட தேசத்தின் பொருளாதாரச் சத்திகள் விடுதலை பெற்று வளர்வது பற்றி யப்பான் அஞ்சிற்றென்பதை முன்னர்க் கண்டோம். அந்த விடுதலையும் இப்போது மெய்யாகி வந்தது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஊக்கமான உறுதுணையோடு குமிந்தாங்கு அரசாங்கம் பொருளாதாரத் தேசிய நெறியில் வழிப்பட்டுச் சென்றது. இத்துணைக்காலமும் வல்லரசுகளிடையே போட்டிக்கான ஒரு விடயமாயிருந்த புகையிரதப்பாதை அமைப்புத்தானும், இப்போது, குமிந்தாங்கு அரசாங்கத்திலே நேரடியாக நிதியிடப்பட்டுக் கையாளப்படுவதாயிற்று. ஆதலின், காலப்போக்கை வென்று செல்லுதல் யப்பானுக்கு அவசியமாயிற்று. யாளியானது மீட்சிபெற்று, மிகக் கவனமாக யப்பான் வகுத்த திட்டங்களை நின்மூலமாக்குமுன்னர், அதன் வலியழித்தல் வேண்டும்.

சீனத்தை வென்றடிப்படுத்தும் எண்ணம் யப்பானுக்கு எக்காலத்தேனும் இருந்ததாகத் தெரியவில்லை. அது நாடிய மேலாண்மைக்கு மாதிரியாக மஞ்சுக் கோவில் அது செய்த பரிசோதனை அமைந்தது. ஓப்பேய்-சகார்க் கழகமும் அத்தத்துவத்தின் ஒரு விருத்தியேயாகும். பரந்த அளவிற்குப் போர் மூளுமுன்னம் சியாங்கிற்கு வழங்கப்பட்ட பல்வேறு நிபந்தனைகளும், சீன அரசாங்கத்தை மறைமுகமாகக் கட்டுப்படுத்தி அதன் பொருளாதார அபிவிருத்தியிலே மென்மேலும் அதிகமாகப் பங்குபெறுங் கருத்தையே ஆதாரமாகக் கொண்டவை. இதுவே யென் கோட்டியும் கூட்டுச் சித்துவத்திட்டமும் அடங்கிய யப்பானியக் கோட்பாடாகும்.

வாசிங்ரன மாநாட்டை யடுத்து, யப்பானைத் தனிமைப்படுத்துவதாகிய அமெரிக்கப் பூட்கை வெற்றிபெற்றதன் பின்னர், தாராண்மையைத் தழுவிய மைந்த பூட்கைகள் தவறிவிட்டன. யப்பான் கொண்ட தேசியக் குறிக்கோள்கள் அவற்றின் மூலமாய்க் கைவரப்பெறு என்றவாறுன ஒரு கருத்து யப்பானிய மக்களிடையே வலிது பரவிற்று. 'சென்றே' எனப் பெயர்படைத்த மூத்த அரசறிஞரே அக்காலத்தில் அரசியல் விடயங்களில் தீர்க்கமான செல்வாக்குடையராயிருந்தனர். அன்னர் சாவதானமான ஒரு பூட்கைவழி நின்று, செயுக்காய்க் கட்சியிலே பெரிதும் தங்கியிருந்த கட்சி அரசாங்கத்தை ஒருவாறு பேணி வந்தனர். போர்க்காலத்தின்போது அக்கட்சியை ஆற்றுப்படுத்தி வந்தோனும் போராற்றல் படைத்தவனுமாகிய அரசறிஞன் அரா என்பானை மிதவாதத்தின் மிகைப்பட்டோனுகவும் மேஜட்டுச்சார்பு மிக்கோனுகவுங் கருதிய 'தேசாபிமானிகள்' 1921 நவம்பரிலே படுகொலை செய்தனர். அக்காலந்தொட்டு 1936 வரையும், படுகொலைகள் இடைமிடைந்த பாராளுமன்ற ஆட்சிமுறை நிலவும் வித்தைக் காட்சியையும், ஆங்கு, அரசியற்றலைவர்கள் அனைவரும் நாட்டைக்

காட்டிக் கொடுக்கக்கூடிய துரோகிகளேயெனத் தீவிரமாக நாட்டபிமானக் கட்சியார் கருதுவதையுங் காண்கிறோம். கட்சியரசாங்கம் புறக்கணிக்கப்பட்டுத் 'தளபதிகளின் அரசாட்சி' நிலவிய சிறிய இடைக்காலத்தின் பின்னர் முதலாளித்துவச் சத்திகள் முதன்மை பெற்றிருந்த செயுக்காய்க் கட்சியைப் பதவியேற்குமாறு மூத்த அரசறிஞர் மீண்டும் அழைத்தனர். 1924 ஆம் ஆண்டு முதலாக, முக்கியமான ஒரு மாற்றம் யப்பானிய அரசியலிலே காணப்பட்டது. நிலேபெற்ற பழைய கட்சிகளிலே பெருங் கைத்தொழில் வர்த்தக நிறுவனங்களின் ஆதிக்கம் வலுத்து, அவற்றாடாக அரசாங்கத்திலும் பரவியதே அம் மாற்றமாகும். கொரியா, மஞ்சூரியா, வடசீனம் ஆகிய நாடுகளிலே யப்பானியப் பொருளாதார முயற்சி படர்ந்தமையாலும், தென்கிழக்காசியாவொடு யப்பானிய வர்த்தகம் வளர்ந்தமையாலும், ஒருபெருங் கைத்தொழில் நாடாக யப்பான் உயர்ச்சி பெற்றது. பெருநிதியமும் விரிந்த அடிப்படையிலமைந்த பாரக் கைத் தொழில்களும் எத்துணே முக்கியமானவையென்பதை உணர்ந்த சேனேயும் இப் பொருளாதாரச் சத்திகளோடு மிக முந்தியே 1926 ஆம் ஆண்டளவிற் கூட்டுச் சேர்ந்து கொண்டது. 1924 இற்கும் 1931 இற்கும் இடைப்பட்ட காலத்தில், முதலாளிவர்க்கமே ஆதிக்கம் படைத்திருந்தது போல வெளித்தோற்றத்தளவிற் காணப்பட்டாலும், உண்மையில் மஞ்சூரியாவிலும், வடசீனத்திலும் சேனேயே தன்வலதாகச் செயலாற்றத் தலேப்பட்டது. பாராளுமன்றமே, முதலமைச்சனை அமாகுக்கி யென்பான் ஒரு நாட்டபிமானியாற் சுட்டுக் கொல்லப்பட்டபோது, அவ்வாட்சி முறை நிலேகலங்கிற்று. இந்த அமாகுக்கியின் அமைச்சவையே இலண்டன் மாநாட்டிற் பங்குபற்றிப் பின்னர் பொருத்தனேயிலும் கைச்சாத்திட்ட தென்பது இங்குக் கவனிக்கற்பாலது. 'எந்தவிழலுக்கும் செவி சாய்க்க மாட்டோம்' என்பதைப் படைத்தலேவன்மார் 1931 ஆம் ஆண்டு முதலாகத் தெளிவுபடுத்தினர். 1931 இல் முக்டென் சம்பவத்தைத் தொடர்ந்து மஞ்சூரியாவில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை யப்பானிய அமைச்சவைக்குந் தெரியாமலே நடந்ததொன்றாகும். ஆயின், குவாந்தங்குப் படை தன்வலதாகத் தீர்மானித்த இந்தத் தண்டடிமிண்டற் கொள்கைக்கு ஏதேனும் நியாயஞ் சொல்லித் தப்பவேண்டிய பொறுப்பை முதலமைச்சனும் வெளிநாட்டமைச்சனும் ஏற்கவேண்டியவராயினர்.

எனவே, நாட்டுப்படைக்கு ஏற்புடையவரான அரசியலாளரைக் கொண்டே 1931 ஆம் ஆண்டு முதலாக அமைச்சவைகள் அமைக்கப்பட்டன. இவ்வாறாக முதன்முதல் நியமனம் பெற்றோன் இனுக்காய் தக்குசி யென்பான். மிற்சுயித் தாபனத்தின் ஆதரவும் படையின் உதவியும் அவனுக்கு ஒருங்கே வாய்த்தன. இராணுவக் குடியாட்சி என்பதொன்றுக்கு ஆதரவளித்துவந்த சேனபதி ஆருக்கி யென்பான் கட்சியரசியலில் விரைந்த ஊழல்களைக் கண்டு பிறர் பலரைப்போல உண்மையாகவே அதிர்ச்சியடைந்து, நாட்டுப்படைகளே யப்பானில் உண்மையான குடியாட்சிக்கு முதுகென்பு போன்றவையெனக் கருதலாயினன். இவ்வாறாக, தாராண்மைவாதமும் பிரதிநிதித்துவ நிறுவனங்களும் நிப்பொனுடைய பரம்பரைப் புகழைக் கெடுத்த மேலைட்டுப் போலிகளேயெனும் ஒரு சிந்தனை

மரபு தோன்றி வளரலாயிற்று. இதன் பயனாக 1932 மே 15 இற் குழப்பம் மூண்டது. இளைஞரான அதிகாரிகளையும் இராணுவப் பயிற்சியாளரையும் மாணவர்களையும் கொண்ட பயங்கரச் சங்கங்கள் பிரதம அமைச்சன் இனுக்காயைப் படுகொலை செய்தன; கவுண்டு மக்கிமோ என்பானுடைய இல்லம் மீதும், தொக்கியோ நகரப் பொலிசுத் தலைமையகமீதும் வெடிகுண்டுகள் வீசப் பட்டன. நிலையுன்றிய நலவுரிமைகள் எனும் பிற்போக்குச் சக்திகளே அரசாங் கத்தையும் அரசியற் கட்சிகளையும் ஆட்டிவைக்கின்றன; அதனால் அவை மேனாடுகளே வெற்றிகரமாக எதிர்த்தற்கும் ஆட்சிக்கவிழ்ப்புச் சக்திகளை அழித்தற்கும் வலியற்றிருக்கின்றன என்றவாறான உயர்ந்த 'நாட்டபிமான நோக்கங்களே' மனிதரை மேற்கூறியவாறெல்லாஞ் செய்யத் தூண்டின. நிலை யுன்றிய பிற்போக்குச் சக்திகளும் வழுப்பட்ட அரசியலாளரும், ஊழல் மலிந்த அரசியற் கட்சிகளுமே பேரரசன் பெயரால் ஆட்சி புரிந்தாராதலின், பேரர சனது மீட்சி அதன் குறிக்கோளை எய்தத் தவறிவிட்டதெனும் உணர்ச்சி நாட் டிலே வளரத் தலைப்பட்டது. நாட்டின் பிரதிபிம்பமாகிய பேரரசனுடைய அதி காரங்களை அரசியல்வாதிகளும் முதலாளிமாரும் அபகரித்துக்கொண்டனர் என் றும் 'சோவாவை' (அக்காலப் பேரரசனது பட்டப் பெயர்) மீட்டும் நிறுவு வதே அக்காலத் தேவையென்றும், நாட்டின் நலவுரிமைகள் பற்றிய சிந்தனை யில்லாத அரசியல்வாதிகள் முதலாளிமாரின் செல்வாக்கு நாட்டினின்றும் அத னால் அகற்றப்படுமென்றும் சுட்டிக்காட்டப்பட்டது. அதுகாலத்தில் ஐரோப்பா விலே வழக்காற்றிலிருந்த நாற்சிசம், பாசிசம் எனுங் கோட்பாடுகளின் எதி ரொலி யன்று இஃது. யப்பான் நாட்டிலே எஞ்ஞான்றும் உறுதி பெற்றிலங்கி, ஐரோப்பாவின் பெருமை ஓங்கிநின்ற சிலகாலம் மங்கிப்போயிருந்த தூய நிப் பொன் கோட்பாட்டின் மறுமலர்ச்சியே அதுவாகும். வாசிங்ரன் பொருத் தனையை யடுத்து மேலைப்புலம்பற்றி யேற்பட்ட ஏமாற்றங் காரணமாகவும், கைத்தொழிற் சமுதாயமாக மாறுதலடைந்தவிடத்துத் தோன்றிய சமூக பொருளாதாரக் குழப்பங்கள் காரணமாகவும் படைவீரரைத் திரட்டுதற்கு நிலைக்களனாயிருந்த வேளாண்வர்க்கத்தைத் தாக்கிய பொருளாதார மந்தங் காரணமாகவும் தூய சிந்தோக் கொள்கைகள் புதுவடிவிற் புத்துயிர் பெற்றன. 'மன்னனைப் போற்றுமின்; அன்னியரை வெளியேற்றுமின்' என்பதே இதன் தாற்பரியமாகும். ஆயின் இம்முறை, பாராளுமன்ற ஆட்சியும் அமைச்சவைத் தத்துவமும் பேசிய இரண்டாம்பட்சத்து அன்னியரையும் வெளியேற்றவேண்டு மென்றுயிற்று.

இவ்வியக்கம் 1936 இலே உச்சநிலை யடைந்தது. அவ்வாண்டில், முதற்பிரிவுக் குரிய மூன்றும் காலாட்படைப்பேரணியைச் சேர்ந்த அதிகாரிகளும் படைவீர ரும், மஞ்சுக்கோவுக்குச் செல்லுமாறு கட்டளைபெற்றும், அதனை மீறி வியர்த்த மான புரட்சி விளைத்தனர். அன்னாருடைய நோக்கம் 'பேரரசனை மீட்டும் நிறு வுவதே' யாகும். தலைநகரில் பல்வேறு தானங்களை நோக்கிச் சென்ற அவ்வீரர் முதலமைச்சனது மனையைச் சூழ்ந்து, பிரதானமான அரசியற் பிரமுகர் பல ரைக் கொன்றொழித்து, முற்போக்குடைய சேனாபதியர் சிலரையும் படுகொலை

செய்தனர். மூத்த அரசறிஞர் குழாத்துள் உயிர் பிழைத்திருந்த ஒருவன் சயோஞ்சி என்பானே. அவனையும் புரட்சியாளர் தேடித் திரிந்தாராயினும், காணப்படாமையால் உயிர்தப்பினன். இப்புரட்சிக் கோட்டி பொலிசுத் தலைநிலையத்தையும் போரமைச்சின் அலுவலகத்தையும் தயற்று எனும் பாராளுமன்றக் கட்டிடத்தையும் கைப்பற்றி, அடிபணியச் செய்த முயற்சிகளையெல்லாம் மூன்று நாளாக எதிர்த்து நின்றது. பேரரசன் விடுத்த கட்டளையே இறுதியில் அவர்களைப் பணிய வைத்தது. புரட்சியெனக் கருதித் தொடங்கப்பட்டது, வெறும் படைக்கிளர்ச்சியாக முடிவுற்றது.

புரட்சிக் கொடியுயர்த்திய தீவிரமான இத்தேசியவாதிகள் இளவரசன் சயோஞ்சியின் நிதானமும் மதியூகமுங் காரணமாகச் சிறிது காலம் தடங்கலுற்றாராயினும், உண்மையில், தங் குறிப்பை அடைவதில் வெற்றி கண்டனர். கட்சி யரசாங்கம் அக்கால் மீட்டும் நிறுவப்பட்டிலது. தரைப்படை கடற்படை யமைச்சுகளிரண்டும் யாத்தலித்த 'நாட்டுப்பூட்கையின் அடிப்படைத் தத்துவங்கள்' படைக்கிளர்ச்சி நடந்து ஆறு திங்களின் பின்னர், யப்பான் நாட்டின் வேலைத் திட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. தாராண்மைவாதமும் மேனாட்டு மயமாதல் முயற்சியும் யப்பானிலே மங்கத் தொடங்கியதை இச்சாசனங் குறித்தது. இரண்டாவது உலகப் போரின் முடிவில், தூரகிழக்கிலே போர்க்குற்றவாளிகளை விளங்கிய சருவதேச இராணுவமுறைமன்று வழங்கிய தீர்ப்பிலே எடுத்துரைத்தவாங்கு, அச்சாசனம் வருமாறு சென்றது.

1. பெருவல்லரசுகளின் ஆக்கிரமிப்புப் பூட்கைகளைத் திருத்துதற்கும், கடல் கடந்து ஆணிலவகற்சிப் பூட்கையை உறுதியாகக் கடைப்பிடிப்பதன் மூலம் பேரரசு முறையின் தாற்பரியத்தை நிறைவேற்றுதற்கும் யப்பான் முயலல் வேண்டும்.

2. கிழக்காசியாவிலே உறுதிப்பாட்டை நிலைநாட்டும் சத்தியாக யப்பானியப் பேரரசு உதவும் வகையில், யப்பான் தனது தற்காப்பையும் படைக்கலவமைப்பையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

3. மஞ்சுக்கோவைச் செவ்வையாக அபிவிருத்தி செய்து, அவ்வழி, யப்பானிய—மஞ்சுக்கோத் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்த யப்பான் விழைகிறது. பொருளாதார அபிவிருத்தியை ஊக்கும் பொருட்டு, ஐ. சோ. ச. கு. நாட்டரல் வரத்தகும் அபாயத்தை அகற்றி, பிரித்தனுக்கும் அமெரிக்க நாட்டுக்குமெதிராக வேண்டிய ஆயத்தங்கள் செய்து, யப்பானுக்கும் மஞ்சுக்கோவுக்கும் சீனத்துக்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்பை உருவாக்க யப்பான் எண்ணியுளது. இடையறுத இப்பூட்கையைச் செயற்படுத்துவதில், பிறவல்லரசுகளோடு நட்புறவு கொள்ளல்பற்றி யப்பான் தக்க கவனம் செலுத்தல் வேண்டும்.

4. தென் கடற்புலத்திலே தனது இனப்பெருக்கத்தையும் பொருளாதார விருத்தியையும் ஊக்குதற்கு யப்பான் திட்டமிட்டுளது. பிற வல்லரசுகளைச் சீற்றமுறச் செய்யாது, அமைதிசான்ற மிதமான முறைகளாலே தன் வலியைப்

பெருக்க முயலும். இவ்வழி, மஞ்சுக்கோ அரசு நிறுவப்பட்டபின், யப்பானுடைய இயற்கை மூலவளங்களும் தேசியப் பாதுகாப்பும் பூரணமாக அபிவிருத்தியடையுமென யப்பான் எதிர்பார்க்கலாம்.

இப்பூட்கை மேலைப்புலத்தோடு முறிவு ஏற்பட்டதைக் குறிப்பதுமன்றி, யப்பானிய ஆக்கிரமிப்புக் கொள்கையின் இயல்பான விளைவாக இருந்ததோடு, முதற்பெரும் போரின் பின்னர் சருவதேச அரங்கிலே யப்பானைத் தனிமைப்படுத்தும் நோக்கொடு அமெரிக்கா கடைப்பிடித்து வந்த பூட்கையின் நேரான விளைவாகவும் இருந்தது.

அதிகாரம் 5

ஆசியாவிற் பிறவிடங்களிலே

முதற்பெரும் போரின் பின்னர், ஐரோப்பியரின் ஆதிக்கம் இந்தியா, சீனம் எனுமிந்நாடுகளிலிருந்து மட்டுமே பின்னடையத் தலைப்பட்டதெனக் கொள்ளல் பொருந்தாது. அபுகானித்தான், நேபாளம், சீயம், இந்துசீனம், இந்தோனேசியா ஆகிய நாடுகளிலேயும் குறிப்பிடத்தக்க வகையிலே நிலைமை மாறுதலடைந்தது. இந்தியாவிலும் சீனத்திலும் நிலைமை மாறியமையே ஓராற்றல் இதற்கு ஏதுவாம் என்பதில் ஐயமில்லை. அபுகானித்தானிலே அமானுல்லா மன்னன் தன் தந்தையின் ஆதிபத்தியமீது பிரித்தன் விதித்த கட்டுப்பாடுகளுக்கு அமைந்தொழுக மறுத்தானாகி, போராற் சோர்வுற்றிருந்த பிரித்தானியரின் பலவீனத்தைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி, பிரித்தானிய இந்தியாவின் எல்லைப்புறத்திலே போர் மூலையவுந் தொடங்கினன். அப்போரின் முடிவைத் தொடர்ந்து ஒப்பேறிய பொருத்தனைப்படி, இறைமையுரிமை படைத்த சுதந்திர அரசாக அபுகானித்தான் அங்கீகாரம் பெற்றது. சோவியத்து அரசாங்கமும் சற்றுத் தாமதியாது அதை அங்கீகரித்தது. விரைவில் அபுகானித்தான் பிரதான வல்லரசுகளோடு தொடர்பு பூண்டதுமன்றி, நாட்டுக் கூட்டவையத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நேபாளத்தினுடைய நிலைமை சற்று வேறுபட்டது. முதற் பெரும் போரின் பின்னர் அந்தக் கூர்க்காரிராச்சியம் சருவதேசச் சார்பிலே சுதந்திர நாடாதற்கு உரிமை கோரி அவ்வுரிமைக்கு அங்கீகாரமும் பெற்றது. நேபாளத் தூதகமொன்று இலண்டனிலே திறக்கப்பட்டது; இந்திய அரசாங்கத்துக்கும் நேபாள வேத்தவைக்குமிடையேயுள்ள தொடர்புகள் யாவும், சருவதேசச் சார்பில், இரு வேறு அரசுகளுக்கிடையே நிலவும் உறவுக்குச் சமானமாய் வைக்கப்பட்டன. ஆயின் நேபாளமோ தனக்கேயுரிய சில காரணங்களுக்காக, இம்முறைமை சார்ந்த நிலைமைக்கு மேற்படச் செல்லுதற்கு விரும்பிற்றிலது. மெயிசி மீட்சிக்கு முற்பட்ட காலத்தில் யப்பானியப் பேரரசன் வகித்த நிலையினைப் போலவே, நேபாள் மன்னனும் தன் அதிகாரமிழந்து பிற்றைநிலைப்பட்டிருந்தான். எனவே, பிற நாடுகளோடு சூழ்வியற்றொடர்பு பூண்டால், நேபாள மன்னனுடைய பதம்பற்றிப் பற்பல பிரச்சினைகள் தப்பாது கிளரும் என்பதை நேபாளத் தலைவர்கள் நன்கறிந்திருந்தனர். நேபாளத்திலே வாழையடி வாழையாக முதலமைச்சுப் பதவியை வகித்து வந்தது இராணாக் குடும்பமாகும். அக்குடும்பத்தின் அதிகாரத்தை ஆதரித்து நடப்பதே பண்டுதொட்டுப் பிரித்தானியர் கடைப்பிடித்துவந்த பூட்கையாகும். இராணாக் குடும்பத்தோரும் அவ்வாதரவுக்குக் கைம்மாறாக இந்தியாவிற் பிரித்தானியராட்சிக்குப் பூரணமான ஆதரவு அளித்து வந்தனர். முதற் பெரும் போரின்போது, பேரரசின் சார்பாகப் பல

கண்டத்திலேயும் இந்தியப் படை பொருதகாலே, நேபாளக் கூர்க்கர் சேனையே இந்தியாவிற் காவற்படையாகச் சேவைபுரிந்தது. நேபாளத்திலே தமது அதிகாரம் பிரித்தானியருடைய ஆதரவிலேயே தங்கியிருந்தவாற்றை நன்கறிந்திருந்த இராணுக்கள், பிறநாடுகளோடு நேபாளம் சூழ்வியற்றொடர்புகள் பூண்டால், யப்பானிற் போன்று நேபாளத்திலும் மன்னனுடைய அரசியற் பதம்பற்றிய பிரச்சினை தம்மை வந்தடுக்குமென்பதை உணர்ந்திருந்தனர். ஆதலின், சருவதேசச் சார்பிலே சுதந்திர அரசாய் முறைமைக்காக அங்கீகாரம் பெற்றதோடு நேபாளம் திருத்தியடைந்திருந்தது. எனினும் பிற்றைநாளில், இலண்டனில் வதிந்த நேபாளத் தூதுவன் பாரிசுக்கும் உரோமுக்குந் தத்துவம் பெற்ற தூதுவனை நியமிக்கப்பட்டானெனினும், பிறநாடுகளோடு இருவயினெத்த தூதுப் பரிமாற்றம் இரண்டாம் பெரும்போர் முடிந்தபின்னரே ஒப்பேற்றப்பட்டது.

சீயம் நாட்டிலே, அதன் இறைமையுரிமையை சகலவிதக் கட்டுப்பாடுகளினின்றும் மீட்டு நிறுவுதற்காக அந்நாட்டு மன்னன் ஆரூவது இராமன் மேற்கொண்ட நடவடிக்கைகளை முன்னர்க் கண்டோம். எனினும், தேசிய மூலவளங்களைப் பிறநாட்டோர் சுரண்டிப் பயன்பெறுதலைத் தடுக்கும் நோக்கொடு சீயம் நாடு தீவிரமான ஒரு பூட்கையை மேற்கொண்டது, 1932 ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பிற்பட்ட காலப்பகுதியிலேயாகும். அக்காலத்தில், சீயத்தின் அரசியல் வாழ்க்கையிலே மாறுபட்டுநின்ற இரு கட்சிகளுக்குந் தலைவராயிருந்த உலுவாங் பிரதித்தும் மாசல் சங்காராமும் இப்பிரச்சினை சம்பந்தப்பட்டவரை ஒத்த பூட்கையினையே தழுவியொழுகினர். இவ்வாறுக, மேற்குநாடுகளுக்கெதிராக யப்பான் போர் தொடுக்குமுன்னம், பாராளுமன்ற அரசாட்சி நிலவிய பத்தாண்டுக் காலத்தின்போது, பொருளாதாரத் தேசியப் பூட்கையைச் சீயம் நாடு ஆற்றுப்படுத்தி நிறைவேற்றுதல் இயல்வதாயிற்று. இராமன் மன்னன் அரசியற்றுறையிலே இறைமையை மீட்டு நிறுவினைபோல, அதற்கொத்த பணி பொருளாதாரத் துறையிலேயும் பூர்த்தியடைந்தது.

இனி, பிறவிடத்திற் போன்றே இந்தோனேசியாவினும் இந்துசீனத்திலும் பேரரசு முறை பின்னிடைந்தவாற்றைக் குடியேற்றப் பேரரசுகள் உணரத் தொடங்கின. இந்தியாவிற் போன்றே இந்நாடுகளின் வரலாற்றிலும், போராட்டங்கள், பரக்கநிகழ்ந்த தேசியக் கிளர்ச்சிகள், மிருகத்தனமான அடக்குமுறைகள், தேசிய அபிலாசைகளோடு பேரரசு நாடுகளின் பொருளாதார அரசியல் நலவுரிமைகளை இசைவுபடுத்த முயன்ற அரைகுறையான எத்தனங்கள் ஆகிய வெல்லாம் இடம்பெற்றன. பிரான்சிய அரசியற்றலைவர்கள் சிலர் உலகிலே நாகரிகம் பரப்புந் தலையாய தங் கடமைபற்றி இசைவு பிசகாகப் பேசினது உண்மையே. மற்று, இந்தியத் தீவகங்களின் செல்வத்தைச் சுரண்டி வாழ்வதிலேயே உலகிற்றும் பெற்ற உயரியநிலை தங்கியுளதென்பதை இடச்சர் உணர்ந்திருந்தும் உண்மையே. ஆயின், பிரான்சியரும் இடச்சருமாகிய இருபாலாரும் தத்தம் குடியேற்ற ஆதிக்கம் அத்தமிக்கும் காலம் அண்ணித்துவிட்டதென்பதை உணர்ந்து கொண்டனர். எனினும், தமது பிடியைத் தளரவிடாது நீடிக்கச் செய்தற்கு யாதுமொரு வழி வந்துவாய்க்கினும் வாய்க்குமெனும் நம்பிக்கையே அன்

னர்க்கு இன்னும் ஆறுதலளித்தது. பேரரசு வாதத்திலே ஊறியிருந்த பிரான்சியரும் இடச்சரும் தமது ஆதிக்கம் சாசுவதமாகாதென்பதை உணர்ந்தோராய், இறுதிப் போராட்டத்தில் வறிதே இன்னும் ஈடுபட்டிருந்தனர். இதற்கிடையில், யப்பானிய இராணுவ பலம் இடைப்புகுந்து அவர்தம் குடியேற்ற வாட்சியின் பலவீனத்தையும், அரசியன் முறைகளின் வெறுமையையும் உலகிற்கு எடுத்துக்காட்டிற்று.

இவ்வாறுக, இருபெரும் போர்க்கும் இடைப்பட்டகாலத்தில், பேரரசுமுறை தகர்ந்து வீழ்வதைக் காண்கிறோம். அத்தகர்வுக்கு முதற்காரணம், பெரும் பேரையடுத்து மேற்கைரோப்பியக் குடியேற்ற வல்லரசுகளில் முதலாண்மை முறை நலிவுற்றதேயாம். இனி, ஆசிய நாடுகள் பங்குகொள்ள நேர்ந்த போராட்டத்தின் சிறப்பான சூழ்நிலை காரணமாகவும், அப்போரில் அமெரிக்கா தலையிட்டமை காரணமாகவும், ஒற்றேபர்ப் புரட்சியின் வன்மையான செல்வாக்குக் காரணமாகவும் வெளிவிடுக்கப்பட்ட தேசியச் சத்திகளின் பெருவலியே இரண்டாவது ஏதுவாகும். செவ்வையாகச் செயற்படவியலாவகையிற் பாறிவிட்ட பேரரசு முறைக்கு இரண்டாம் பெரும்போர் எளிதே முழுக்குப்போட்டு முடிவுறுத்திற்று.

ஆறும் பாகம்

ஆசியாவின் மீட்சி

அதிகாரம் 1

பொது

ஒரேவகையான நெருக்கிடைக்குப் பாத்திரமாகி, ஒரேவகையான ஆபத்துக்களை எதிர்நோக்கி நின்ற இந்தியா, சீனம், யப்பான் எனுமிந்நாடுகளின் பழைய சமுதாயங்களும், அவற்றைத் தொடர்ந்து பிற சிறிய ஆசிய அரசுகளும் சமாந்தரமான நெறிகளிலே இயங்கி எதிரேறத் தலைப்பட்டன. ஆசியாவின் மறுமலர்ச்சி பொதுப்படையாக சில சிறப்பியல்புகளை உடைத்து. முதலாவதாக, காலத்துக் கொவ்வாத சில சமுதாயக் கட்டுக்களைச் சீர்திருத்தும் வகையிற் சமூகத்தை மாற்றியமைக்கும் முயற்சி பொதுவாகக் காணப்படுகிறது. இந்தியாவிற் சாதிக் கட்டுப்பாடும் யப்பானில் மானிய முறையும் சீனத்திற் சமுதாயப்படிமுறையும் இவற்றுக்கு உதாரணங்களாம். சமுதாயத்தை இவ்வாறு சீர்திருத்தியமைத்தன் முதனோக்கம் புறத்திருந்து வரும் நெருக்கிடைகளை எதிர்ப்பதேயாம். எனவே அச்சீரமைப்பு முடியிலிருந்து தொடங்கிற்றே யல்லாது அடியிலிருந்து தொடங்கிய இயக்கம் யாண்டுங் காணப்படவில்லை. பாமரமக்கள் நெடுங்காலந் துன்புழந்ததன் காரணமாகவோ அவர்களிடையே விழிப்புணர்ச்சி பரவியதன் காரணமாகவோ சமுதாயம் கீழிருந்து மேலாகப் பொங்கியெழுந்துவிடவில்லை. ஒவ்வொரு நாடும் தனக்கே சிறப்பான தன் மரபைப் பேணிக் காத்தற்குக் கொண்ட விழைவே அவ்வியக்கத்தின் வலிமைக்கு உள்ளார்ந்த ஏதுவாயிற்று. அதன் தலைவர்களும், அறிவியன்மரபுப்படி, பழமையை நாடும் வர்க்கங்களிலிருந்தே தோன்றினர்—இதனைப் பின்னர்க் காண்போம்: ஆசிய மறுமலர்ச்சிக்கு அடியாதாரமாயிருந்தது முன்னேற்ற விருப்புமன்று; மேம்பாட்டு விருப்புமன்று. அரசியல், பொருளாதாரம், சமுதாயம், சமயம் எனும் நாநாதிசைகளிலிருந்தும் அடர்ந்து தாக்கிய அன்னியனை எதிர்த்து நிருவகிக்கும் உறுதிப்பாட்டிலேயே அவ்வியக்கம் கால்கொண்டு நின்றது. ஆசியச் சமுதாயங்களில் ஏற்பட்ட மாற்றங்களை உண்ணின்று ஊக்கியவிசை புரட்சிவிருப்பின் பாற்பட்டதன்று—தேசிய வலியின்பாற்பட்டதே. நாம் இங்கு எடுத்துரைக்கப்போகுஞ் சரிதையிலே, தீண்டாமையொழிப்பைப் பார்ப்பனர் போதிப்பதையும், வானுலகமைந்தன் சீர்திருத்தங்களை வற்புறுத்துவதையும், யப்பானியத் தைமியோமார் போராட்டின்றியே தம் உரிமைகளைத் துறப்பதையும் கண்ணுறும்போது, மேற்கூறிய பொதுவுண்மையை நாம் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

இரண்டாவதாக, சமயச் சீர்திருத்தமின்றி அடிப்படையான சமுதாயச் சீரமைப்புக் கைகூடாதெனும் உண்மை தொடக்கத்திருந்தே உணரப்பட்டது. இங்கும் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். மக்கண்மேல் மதத்துக்கிருந்த பிடியும், அதன் வெளிப்புறக் குறைபாடுகளும் வெவ்வேறு நாடுகளிலே வெவ்வேறு தரத்தவாக இருந்தமையால், அதனைச் சார்ந்த சீர்திருத்த இயக்கமும் வெவ்வேறு இயல்புகளைக் காட்டிற்று. இந்தியாவில் அடிப்படை நம்

பிக்கைகளைப் புனராய்வு செய்தலும், தற்காலத் தேவைகளுக்கேற்பப் பழைய நம்பிக்கைகளுக்குப் புதிய விளக்கங் கொடுத்தலும், இந்திய நாட்டுச் சமயச் சிந்தனை மரபிற்கியைந்ததாயும் மேனாட்டுத் தத்துவமுறைகட்கு ஈடுகொடுக்கக் கூடியதாயும் அமைந்த ஒரு பொதுத் தத்துவஞானத்தை வகுத்துக் கூறலும், இறுதியாக, மிசனரி நிறுவனங்கள் மூலமாக ஐரோப்பாவிடுக்கும் அடர்தாக்கு தலை நிருவகிக்கவல்ல மதநம்பிக்கையையும் மெய்யார்வத்தையும் வளர்த்தலும் அவசியமாயின. இனி, பௌத்த நாடுகளாகிய பர்மாவிலும் சீயத்திலும் இம் மதப் பிரச்சினை எளிதாயிற்று. ஆயின் சீனத்திலோ கொன்பியூசியசின் அறக் கோட்பாடுகள் அகவிருத்திகளாலும் புறச் சத்திகளாலும் தாக்கப்பட்டு மதநம் பிக்கையால் ஏற்படும் உரன் காணப்படாமையால், மறுமலர்ச்சியின் இந்த அமிசமானது பகுத்தறிவையும் தாராண்மையையும் தழுவியதாய் அறிவிற் சிறந்த சிறு குழாத்தினரிடையே அடங்கிக் கிடந்தது. யப்பானிற் சிந்தோமதத்தைச் சீரமைத்துத் தேசியவழிபாட்டு முறையாக அதை உயர்த்தும் பணி, அரசாங் கத்தின் ஆதரவிலே மேற்கொள்ளப்பட்டது. யப்பானது தேசியப் புத்துயிர்ப் பின் இன்றியமையாத ஓர் அமிசமாக அது இடம்பெற்றது.

மேனாட்டுக் கல்வியையும் சிந்தனைச் செல்வத்தையும் கிரகிக்க மூயன்றமை, ஆசிய மறுமலர்ச்சியின் மூன்றாவது அமிசமாகும். இங்கும் நாடு பலம்பெற்றுப் பிழைத்து வாழல் வேண்டுமென்பதே இலக்காயிற்று. மேனாட்டுப் புதிய கல் வியை விருப்பாயேற்றுக் கிரகித்து அவ்வறிவாற் பெற்ற ஆற்றலைத் தமது நல னுக்காகப் பயன்படுத்தாவிடின், தாம் பிழைத்து வாழலும் மீட்சி பெறலும் ஒவ்வாவென்பதை ஆசியநாடுகள் விரைவில் உணர்ந்தன. இந்தியா, சீனம், யப் பான் எனும் நாடுகளின் அறிவியல் வாழ்க்கையிலே இந்த நூற்றாண்டின் மூக் காற்கூற்றிலே மேனாட்டுக் கல்வியிடத்துக் காணப்பட்ட தணியா ஆர்வம், ஐரோப்பாவிலே பலர் ஆசையாக நம்புவதுபோன்று, கிழக்குலக நாகரிகத்தை மேலைப்புலம் விழுங்கியதென்றவாறான கருத்தை ஒப்புக்கொள்வதாகுமெனக் கருத லாகாது. ஐரோப்பியரின் ஆற்றலை உண்ணின்று ஊக்குஞ் சத்திகளை விளங்கிக் கொண்டு, அவ்வறிவைத் தமது நலனுக்குப் பயன்படுத்துவதே நோக்கமாகும். இலக்கியம் அல்லது கலை சம்பந்தமான விடயங்களிலேனும் மற்றுத் தத்துவத் துறையிலேனும் ஆசியர் தமது மரபை இழக்குமளவிற்கு ஐரோப்பாவின் செல் வாக்காற் பாதிக்கப்பட்டிலர். இந்தியா, சீனம், யப்பான் எனுமிந்நாடுகளின் இலக்கியங்கள் ஐரோப்பிய இலக்கிய வடிவங்களையும், ஓரோவழி அவ்விலக்கியத் தின் சுக்குமங்களையும் இரவலாகப் பெற்றது உண்டே. ஆயின் அந்நாடுகளின் இலக்கியங்களுக்கு வேண்டிய ஊற்றம் அவ்வந்நாடுகளின் பொன்னாமரபுகளி லிருந்தே, நிரண்ட கருவூலங்களிலிருந்தே, பெரும்பான்மையும் பெறப்பட்டுளது. அண்மைக்காலத்தில், அதாவது ஆசிய நாடுகளிலிருந்து ஐரோப்பா மூடிவாக வெளியேறிய பின்னரே, குறித்த இத்துறையில் ஐரோப்பியச் செல்வாக்கு கணிச மாகப் பெருகியுளது. கலைப்படைப்புக்களும், காணப்பட்ட அபிவிருத்தி இத் தகையதே. புதுப்புது தாட்பமுறைகள் தழுவப்பட்டன ; புதிய வடிவங்களும் முய லப்பட்டன—ஆயின் ஐரோப்பாவின் ஊற்றம் என்பதொன்று இருந்திலது. இலக்

கியத்திலும் கலைந்நூறையிலும் ஆசியாவிலே தோன்றிய மறுமலர்ச்சி, புதிய கல்வியின் சேர்க்கையால் வளம்பெற்றது உண்மையே. ஆயின் அதன் மூலாதாரம் தேசிய மரபிலே ஊன்றிநின்றது.

ஆசிய மறுமலர்ச்சியின் சிறப்பியல்புகளுள் நாலாவதாகக் குறிப்பிடத்தக்கது தேசியவுணர்ச்சியின் வளர்ச்சியாகும். மேனாட்டு ஆக்கிரமிப்புக்கு மாறுக வெழுந்த எதிர்ப்புணர்ச்சியின் நேர்விளைவே இத்தேசியவுணர்ச்சியாகும். இவ்வகைத்தான தனிப்பட்ட தேசியவுணர்வு ஆசியாவிலோ மற்று ஐரோப்பாவிலோ காலத்தால் மிக முற்பட்டதென்று கருதலாகாது—இவ்விடயம் பற்றி நாம் பின்னருங் குறிப்பிடுவோம். ஆசியாவிலே, யப்பானில், அதன் தீவக நிலைமை காரணமாகச் சற்று முன்னமே தேசியவுணர்ச்சி வளர்ந்துவிட்டது. ஆயின் அதுவும் மானியவுணர்ச்சிக்குக் கட்டுப்பட்டே யிருந்தவாற்றை நாம் மனத்திற் கொள்ளல் வேண்டும். சீனத்திற் காணப்பட்டது பேரரசின் மாட்சியால் வந்த ஓருணர்ச்சியேயாகும்—உரோமானியப் பேரரசிற் காணப்பட்ட பெருமிதவுணர்ச்சியோடு அது ஒப்பிடத்தக்கது. இனி, இந்துமதத்தின் வழி வந்த ஒடியாமரபே இந்தியாவுக்கு உயிர்ப்பளித்தது. இவ்வாறான உணர்ச்சிகள் மாறுதலடைந்து தேசியவுணர்ச்சியாக உருவெடுத்தமை, ஆசிய மறுமலர்ச்சியின் இன்றியமையாத ஒரு சிறப்பியல்பாகும்.

இதுகாறும் கூறிய பொதுவியல்புகளின் அடிப்படையிலே, நாட்டுக்கு நாடு தேசியப் பிரச்சினை ஆழவகலங்களிற் பெரிதும் வேறுபட்டது. இந்தியச் சமுதாய வாழ்க்கையைச் சீரமைத்தல் இடர்ப்பாடு மிக்கதாயிருந்தது— சீனத்திலும், அதினுங் கூடிய அளவில் யப்பானிலும், காணப்பட்ட அரசியலொற்றுமையை இந்தியாவிற் புதிதாக உருவாக்க வேண்டியதாயிற்று. வாழ்க்கையின் ஒவ்வோர் அமிசத்தையும் தழுவிச் செல்கின்ற பலதிறப்பட்ட படிவங்களை உடையதும், சாதி வேற்றுமையையும் பரம்பரையாக வந்த வழமைகளையும் சட்டங்களையுங் கொண்டதுமான இந்துமதம் சீர்திருத்தவாதிகளுக்குச் சிக்கலான ஒரு பிரச்சினையாக இருந்தது. அன்றியும், ஆசியச் சமுதாய அமைப்புக்கள் பிறவற்றைக் காட்டிலும் இந்துமதமே பெரிதும் சீர்திருத்தம் வேண்டிநின்றது. சீர்திருத்தஞ் செய்தற்குப் பின்னணியாக அமைந்த அரசியற் சூழ்நிலையும் நாட்டுக்கு நாடு சாலவும் வேறுபட்டிருந்தது. தேசிய முடியாட்சி நிலவிய யப்பானிலும் சியத்திலும் பெருஞ் சமுதாயக் குழப்பம் யாதும் நேருதலின்றியே சமுதாய அமைப்பைச் சீர்ப்பட அமைத்துச் சீர்திருத்தப்பணியை ஆற்றுப்படுத்தல் இயல்வதாயிற்று. இந்தியாவிலே நாடெங்கணும் ஒரே சீரான கல்வி முறையைக் கடைப்பிடித்து, அமைதியும் ஒழுங்கும் பேணுவதாய், தேசப் பரப்பு முழுவதற்கும் பொதுவான தனியோர் அரசாங்கம் ஆட்சிசெய்தமையால், ஐரோப்பியச் செல்வாக்கின் தாக்கங் காரணமாகத் தோன்றிய சத்திகள் இடர்ப்பாடின்றித் தொழிற்பட்டுச் சென்று முடிதல் ஒல்லுவதாயிற்று. மற்றுச் சீனத்திலோ மத்திய அரசாங்கம் பாறியிருந்தது; ஒப்புரவில்லாப் பொருத்தனைகளும் ஆணிலப்புறத்துரிமையும் காரணமாக நாட்டின் இறைமையுரிமை கட்டுப்பட்டிருந்தது; பலதிறப்பட்ட கிறித்தவப் பிரிவுகள் மதங்களின் முயற்சிகள்

வரைவின்றித் தொடர்ந்து நிகழ்ந்தன; இறுதியாக, பொறுப்புணர்ச்சியின்றி அதிகாரஞ் செலுத்துவவாய், தத்தமக்கெனச் செல்வாக்கு வட்டாரங்களைத் தாபித்தற்கு ஆவல் கொண்டிருந்த பெருவல்லரசுகளின் போட்டியும் சதியும் நாட்டில் மலிந்திருந்தன. இக்காரணங்களாலே சமுதாய அமைப்பும் அரசிய லொழுங்குந் தகர்ந்து இறுதியிற் புரட்சி மூண்டது (1911-2). சீனத்துக்கும் பிற ஆசியநாடுகளுக்குமிடையே காணப்பட்ட இவ்வேற்றுமை சாலவும் முக்கிய மானது. இரசியப் புரட்சியின் புதிய கருத்துக்கள் சீனத்திலே பரவியகாலை, சீன மறுமலர்ச்சி முற்றுப்பெறுமே இருந்ததற்கும், வலிமையும் உறுதியும் படைத்த சமுதாய அமைப்பு ஆங்கு இல்லாமைக்கும் அதுவே காரணமாயிற்று. அதனைப் பின்னர் எடுத்தாள்வோம். சீர்திருத்தவியக்கம் ஆசியா முழுவதற்கும் பொதுவாயிருப்ப, அவ்வியக்கத்துக்கு ஊக்கமளித்த காரணிகளும் ஒத்தனவா யிருப்ப, அதன் விளைவுகளோ அவ்வந் நாட்டின் சூழ்நிலைகளுக்கு ஏற்பவும், வந் துற்ற தாக்கங்களின் வலிமைக்கு ஏற்பவும் வேறுபட்டிருந்தன.

அதிகாரம் 2

இந்தியா

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே நிகழ்ந்த இந்துச் சீர்திருத்த இயக்கமானது அக்காலப் பேரியக்கங்களுள் ஒன்றாக வைத்தெண்ணத்தக்க பெருமையுடைத்து. அதன் பெருமையினையும் ஆழ்ந்தகன்ற விளைவுகளையும் நோக்குமிடத்து, தற்கால வரலாற்றிலே இடம்பெற்ற முக்கியமான அபிவிருத்திகளுள் ஒன்றாக அது கருதத்தக்கது. பிரித்தானிய அதிகாரமெனும் போர்வைக்குள்ளே, பெரும்பான்மையும் புறத்தியார்க்குப் புலப்படாவகையில், அது பையவே நிகழ்ந்ததொன்றாதலின், வெளியுலகோரின் கவனத்தை இதுகாறும் ஈர்க்கத் தவறிவிட்டது. அவ்வியக்கம் மாபெரும் பொருண்மை உடைத்தாயினும் வெளியுலகத்தின் கவனத்தைக் கவராமைக்கு இன்னுமோர் காரணம் உண்டு. வெளியுலகச் சம்பவங்களைத் தீண்டலும் பாதித்தலுமின்றி நாட்டின் அகத்தே தானேயாக நிகழ்ந்த ஓரியக்கமே அஃது. நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாக இந்துமதத்திற் பையவே நிகழ்ந்த உருப்படியான சீர்திருத்தங்களின்றி இந்தியா சுதந்திரம் பெற்றுத் தற்கால உலகிலே ஒரு பெருநாடாகத் தலையெடுத்திருக்குமோ என்பது சந்தேகமே.

இவ்வியக்கத்தை உள்ளவாறு உணர்தற்கு, பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே இந்துமதத்தின் நிலை எவ்வாறு இருந்ததென்பதை விளங்குதல் வேண்டும். தில்லியிலிருந்து கல்கத்தா வரையும் இந்து கங்கைச் சமவெளி மீது இசுலாமிய ஆதிக்கம் பரவியிருந்தமை காரணமாக இந்துமதம் பெரிதும் தளர்ந்துபோயிருந்தது. அடிமையினத்தின் சமயமாக இழிந்துவிட்ட இந்து மதத்தை வெறும் விக்கிரக ஆராதனையாகப் பாவித்து இகழ்ந்து நோக்கினர் இசுலாமியர். அதற்கு மதிப்பும் மாண்பும் இருக்கவில்லை. பல்வேறிடங்களிற் பல இடர்ப்பாடுகளுக்குக் கட்டுப்பட்டே அம்மதத்தை அனுசரிக்க வேண்டியதாயிற்று. அதனை ஆற்றுப்படுத்தற்கு ஒரு மத்தியபீடம் இருக்கவில்லை. ஒரு தாபனம் இருக்கவில்லை. தலைமைவகித்து நடாத்துதற்கும் யாரும் இருக்கவில்லை. வட இந்தியாவின ஆட்சிப் பொறுப்பு பிரித்தானியர் கைக்கு மாறியபோது, 700 ஆண்டுக் காலத்திலே முதன்முதலாக இந்துமதம் இசுலாமுக்குச் சமதையான நிலையினைப் பெற்றது. ஆயின் இன்னும் கூடிய ஆபத்தான புதியவோர் உற்பாதம் அப்போது வந்துற்றது. நிலைகுலையும் தறுவாயிலிருந்த ஒரு சமுதாயத்திலே தாம் புகுந்து வேலைசெய்வதற்கு அளவிறந்த வாய்ப்புண்டு என நினைந்த மிசனரிமார் மதமாற்றுங் கைங்கரியத்தை மேற்கொண்டார்கள். இடையிடை மதமாற்றும் முயற்சியில் இசுலாம் ஈடுபட்டிருந்ததாயினும் அதன் போதனையை மக்களுக்கு எடுத்துரைக்கத் தனியான ஒரு தாபனம் இருந்திலது. ஆயின் கிறித்தவ மிசனரிமாரின் நிலையோ இதற்கு மாறுபட்டிருந்தது. சிற்சில இடங்களிற் சில வேளைகளில் வன்கண்முறைகளைப் பயன்படுத்த இசுலாம் தயங்கியதில்லை—

ஆயின் மிசனரிமாரோ அத்தகைய முறைகளைக் கைக்கொண்டாரல்லர். பிரசாரமே அவர் கைக்கொண்ட ஆயுதமாகும். மிசனரிமாரின் முயற்சி பற்றிய வரலாற்றை பின்னையதிகாரம் ஒன்றிற் காண்போம். ஆயின் இந்து மதத்தின் வரிசையிலே அதனல் விளைந்த எதிர்விளைவுகளை இப்போது ஆராய்வோம். இந்து மதத்தின்மீது கிறித்தவத்தாக்குதலின் முதல் விளைவாக, சமயத்தைச் சமூகச் சார்பிலே சீர்திருத்தல் வேண்டும் எனும் ஓரியக்கம் கல்வியறிவுபடைத்த இந்துக்களிடையே தோன்றி வளர்ந்தது. இவ்வியக்கத்துக்குத் தலைமைதாங்கியவர் இராம் மோகன் ராய் என்பார்—இந்துச் சீர்திருத்தவியக்கத்தின் தந்தை அவரே என்னல் சாலும். பார்ப்பனக் குடும்பத்திற் பிறந்த மோகன் ராய் வைதிக இந்துவாகவே வளர்க்கப்பட்டார். ஆயின், அரசாங்க சேவையைச் சேருதற்கு விரும்பும் இந்துக்கள் எல்லாம் போன்று , அவரும் இசுலாமியப் பண்பாட்டைப் பயிலவேண்டியவரானர். கிழக்கிந்தியக் கம்பெனியின் சேவையைச் சேர்ந்தகாலை, அரபிக்கிலும் பாரசீக மொழியிலும் அவர் ஆழ்ந்த புலமை படைத்திருந்தார்; கம்பெனியின் சேவையிலும் அவர் ஓளவு உயர்ச்சி பெறுர். அக்காலத்தளவில், மேனாட்டுத் தாராண்மைச் சிந்தனைச் செல்வமனைத்துக்கும் திறவுகோல்போன்றிருந்த ஆங்கில மொழியினை அவர் பயிலத் தலைப்பட்டார். ஐரோப்பிய ஞானவொளியானது ஐரோப்பிய அறிவுத்துறையிலே சாந்தமும் உறுதிப்பாடும் பொருந்திய கனிவொளிபரப்பிய காலமாகும். அது ஒல்பாச்சும் கொண்டோசெற்றும் தீதரோவும் பல்கலைவாகிளுப் பரப்பிய அறிவொளியானது இன்னும் அகன்றிடாக்காலம்; ஆங்கில நாட்டுப் பெந்தமும் பயன்பாட்டுவாதிகளும் உட்படப் பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சிந்தனையாளரின் செல்வாக்கு—இந்திய மக்களின் கருத்துவளர்ச்சியை உருவாக்குவதிற் சாலவும் ஆதிக்கஞ் செலுத்தப்போகும் செல்வாக்கு—இன்னும் உதயமாகாக் காலம். அக்காலத்திலேயே இராம் மோகன் மேனாட்டுக் கலைகளைப் பயிலுவதில் ஈடுபட்டார்.

அழிவும் நாசமுமே இந்தியாவெங்கணும் தலைதூக்கி நிற்பதை இராம் மோகன் கண்டார். மூகமதியராட்சியில் நிலவிய பழைய கட்டுக்கோப்புச் சடுதியாக மறைந்துவிட, வாழ்க்கைத் துறையிற் படுமோசமான குழப்பமே எஞ்சியிருந்தது. ஒரு காலத்தில், வீறுமிக்க வைணவ பத்திமார்க்கத்துக்கு நிலைக்களனுயிருந்த வங்காளத்திலே, இந்துமதமானது போலிப்பகட்டும் மூடநம்பிக்கையும் ஒழுக்கக்கேடும் வந்து படிந்து ஆற்றவுந் தாழ்ந்த நிலைக்கு இழிந்துவிட்டது. உண்மைப்பொருளை அறிவதில் நாட்டங்கொண்ட இராம் மோகன், மினசரிமார் போதித்துவந்த புதிய மதத்திலே கருத்தைச் செலுத்தினர். கிறித்துவ மதத்தைச் செவ்வனே விளங்குதற்காக அவர் கிரேக்க மொழியையும் எபிரேயத்தையும் பயிலத் தலைப்பட்டார். ஆயினும் அவருடைய புலமையோ ஐரோப்பியத் தாராண்மைவாதமெனும் தெள்ளிய ஊற்றுக்கே அக்காலத்தில் அவரை ஈர்த்துச் சென்றது. அறிவுக்களஞ்சியவாதிகள் எனப்பட்டோரில் அவரே இறுதியானவர் எனலாம். இவ்வாருக அவர் கிறித்துவ மதத்தைத் தள்ளினர். ஐரோப்பியச் சிந்தனைப்போக்கிலே அன்று பாவினின்ற மக்கட்பண்பையும், அதன் ஒழுக்க முறையையும், வாழ்க்கைப் பிரச்சினைகள்பற்றி அது கொண்டிருந்த பொது

மனோபாவத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார். 'யேசுவின் போதனைகள்—அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழிகாட்டி' எனும் பெயரிலே அவர் எழுதிய நூலானது இப்புதிய அறிவொளிச்சார்பிலே கிறித்துவத்தை விளக்கவெழுந்த ஒரு முயற்சியேயாம். அது மிசனரிமார்க்கு விடுத்த ஒரு மாறுத்தரமாகுமே யன்றி, இந்தியர்க்கு விடுத்த ஒரு வேண்டுகோள் ஆகாது.

கிறித்துவ மதப் போதனைகளே இராம்மோகன் இவ்வாறு தள்ளினாராக, இந்து மதத்திற்குப் புதிய விளக்கங் கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்தார். அப்புதிய விளக்கத்துக்கு உருவங்கொடுக்கும் வகையில், புத்தமைப்பும் புத்தூக்கமும் பெற்ற இந்துமதத்தைப் பிரதிபலிக்கும் வகையிலே, அவர் பிரம்ம சமாசத்தைத் தாபித்தார். கிறித்துவச் சார்பு பெற்ற இந்து சமயமே அச்சமாசம் என்பார் சிலர். உண்மை அதுவன்று. ஐரோப்பிய அறிவுத்துறைக்கோட்பாடுகளும் உபநிடதத் தத்துவஞான சாரமும் கலந்த ஒரு தொகுப்பே அஃது. சமயதாபனமென்ற அளவில் அது உண்மையான பழைய இந்துமரபுக்குரிய வேதாந்தத்திலேயே உறுதியாகக் கால்கொண்டு நின்றது. ஆயின் உலக வாழ்க்கைபற்றி அது கொண்டிருந்த நோக்கு இந்து மதத்தின்பாற்பட்டதுமன்று; கிறித்துவத்தின்பாற்பட்டதுமன்று. அவ்வகையில் அது ஐரோப்பியச் சார்பையே பெற்றதாகி, பதினெட்டாம் நூற்றாண்டிலே கிளர்ந்த அறிவுத்துறை யியக்கங்களிலிருந்தே ஊக்கமும் உரனும் பெற்றது.

இவ்வாறாக, 1820 ஆம் ஆண்டளவில் இந்தியாவானது, ஐரோப்பியச் சிந்தனைப் போக்கெனும் தெளிந்த நீரோட்டத்திலே தோய்ந்து, ஐரோப்பிய அறிவுத்துறையாராய்ச்சியின் நற்பயன்களிலே பங்குகொள்ளத் தலைப்பட்டது. பிரம்ம சமாசமும் இவ்விலட்சியத்துக்குத் தக இயங்கிற்று. சமுதாய வளர்ச்சிக்கு அது கொண்ட குறிக்கோள், மேனாட்டுமயமாக்குவதே. இந்து சமயத்தின் மீது மாசுபோல் வந்துபடிந்த வழமைகளையும் மூடநம்பிக்கைகளையுங் களைதல்; பெண்கள்தம் நிலையை உயர்த்தல்; பொதுமக்கள் அனுசரித்த இந்துநெறிக்கும் விழுமிய இந்துமத தத்துவங்களுக்குமிடையே காணப்பட்ட பெரும் பிளவை நீக்குதல்; சாதிவேற்றுமையே, சமூக விலக்கே, பல்தாரமணமே என்றித்தகைய பழம் பெருங் கேடுகளுக்கு எதிராகத் தண்டுதலின்றிப் போராடுதல்—இவையே அது மேற்கொண்ட பணியாகும். மிசனரிமாரின் தாக்குதல் கண்டு மனங் குழம்பியிருந்த, கல்வியறிவு படைத்த இந்துக்களுக்குப் பிரம்மசமாசமே வழிகாட்டியாயிற்று.

பிரம்மசமாசமரபு இந்தியருடைய வாழ்க்கை முறையிலே ஒன்றிக் கலந்து இன்று ஒருமைப்பட்டுவிட்டமையால், அஃது ஆற்றிய தனித்தொண்டு உள்ளவாறு உணரப்படாதுபோய்விடுதலும் உண்டு. மிசனரிமாரின் மோதுகையை நிருவகித்தற்கு வேண்டும் உள்ளுறுதியை இந்துமதத்திற்கு அது அளித்தவாற்றில் அதன் உண்மைச் சிறப்புத் தங்கியுளதென்று நாம் கொள்ளலாகாது. எனின், இந்தியப் பிரச்சினைகளுக்கு முடிவுகாண்பதில், நவீனமான மூற்போக்கினை மக்களிடைப் பரப்பியதே அதன் தனிச்சிறப்பாகும். கிழக்கின் பழமை

யும் மேற்கின் புதுமையும் இனிதே புணர்ந்த ஒரு புதிய நாகரீகத்தை உருவாக்கும் மகோன்னதமான முயற்சியில் இந்தியநாடு 1820 ஆம் ஆண்டின் பின்னர் ஈடுபட்டது. அவ்வாற்றால், புதிய இந்தியாவிற்கு முன்னோடியாக இராம் மோகன் ராய் விளங்கினரெனலாம். இவ்வகையிலே இராம் மோகன் இந்தியாவிலே கிளர்ந்த 'புதிய உணர்வின் உருவமாக, அதன் சிந்தனைச் சுதந்திரத்தையும், அதன் விஞ்ஞான வேட்கையையும், மனிதப்பண்பு மிக்க அனுதாபத்தையும், வடிதெடுத்த தூய ஒழுக்கமுறையினையும், பழைய மரபைப் பகுத்தறிந்து போற்றும் பண்பினையும், புரட்சியை நாடாச் சாதுரியத்தையும் பிரதிபலிப்பவராகத் திகழ்ந்தார்'.

பிறவூற்றுக்களிலிருந்தும் சீர்திருத்தவுணர்ச்சி இந்துமதத்துள் வந்து புகுந்தது. 'இந்தியநாட்டு மக்களிடை ஐரோப்பிய இலக்கியத்தையும் விஞ்ஞானங்களையும் ஊக்குவிப்பதே பிரித்தானிய அரசாங்கத்தின் பெருங்குறிக்கோளாக அமைகுதல் வேண்டும்' என 1835 இற் பிரகடனஞ் செய்த இந்திய அரசாங்கம், மேனாட்டுக்கல்வியைப் பரப்புவதாகிய பூட்கையைக் கடைப்பிடிக்கத் தலைப்பட்டது. அதன் விளைவுகள் புறம்பாக ஆராயப்படும். இத்திட்டத்தை முன்னின்று ஊக்கிய மக்கோலேயும் பிறர் பலரும், இப்புதிய கல்வி உயர்வகுப்பாரிடையே பரவுதல் காரணமாக இந்துமதங் குலைவடையக் கிறித்துவமே இறுதியில் ஏற்கப்பட்டு உயர்ச்சிபெறுமென நெஞ்சார நம்பியிருந்தார்கள். இத்தகைய கருத்தையே கொண்டிருந்த மிசனரிமாரும் கல்வித்துறையிலே கழிபேரார்வத்தொடு பிரவேசித்து, இந்தியாவிற் பல பாகங்களிலே பாடசாலைகளையும் கல்லூரிகளையும் ஆங்காங்கு நிறுவினர்கள். கிறித்துவ விவிலிய போதனை அங்கே இந்துக்களுக்கும் கட்டாயமாக விதிக்கப்பட்டது. மத்தியவகுப்பார் மேனாட்டுக் கல்வியை ஆசையோடு கற்றனர்; கிறித்துவ சமயநூல்களை விருப்பாய்ப் படித்தனர்; ஆனால் இந்துசமுதாயம் குலைவடையும் என்ற நம்பிக்கையும் நிறைவேறவில்லை; அறிவாளிகள் புதிய மதத்தைத் தழுவுவர் என்ற ஆசைக்கனவும் ஈடேறவில்லை. மற்று, இந்துமதம் புதிய இந்தக் கல்வியைக் கிரகித்துத் தன்னுள் அடக்கிக்கொண்டது. அவ்வழிப் போந்த விளைவுகள் இந்தியாவெங்கணும் புலப்பட்டன—வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதுமதம் புத்துயிர் பெற்றது.

எண்ணிறந்த பல பிரிவுகளும் பேதங்களும் இந்துசமயத்திலே காணப்பட்டாலும், புத்தமதம் உட்பட அவையனைத்துக்கும் தத்துவார்த்தமான அடிப்படை வேதாந்தமே யென்பது இங்கு நினைவுகூரத்தக்கது. வேதாந்தக் கோட்பாடு, முத்திறப்பட்ட பிரபாண நூல்களிலே அடங்கியுளது. அவைதாம் பிரமசூத்திரங்களும் உபநிடதங்களும் பகவான் அருளிய கீதையுமாகும். இந்தியாவிலுள்ள வைதிக சமயப் பிரிவுகள் அனைத்தும் இந்நூல்களையே தமக்குப் பிரமாணமாகக் கொண்டுள. முன்னை அதிகாரத்திற் கூறியவாங்கு, புதிய சமயப் பிரிவுகளைத் தோற்றுவித்த சமயாச்சாரியர் எல்லாரும் தத்தம் போதனைகள் இவ்வூற்றுக்களிலிருந்தே பெருகினவென்பதை நாட்டவேண்டியவராயினர். இவ்வாறாக, எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்துசமயச் சீர்திருத்தவாதியான

சங்கரர் அம்மூன்றுக்கும் விளக்கவுரை எழுதினர். இந்துசமயத்திற்குப் புதிய விளக்கங் காணவேண்டிய அவசியத்தை இராம் மோகன் உணர்ந்தபோது, உப நிடதங்களிலே பொதிந்துள்ள வேதாந்தக் கோட்பாடுகளையே நாடினர்.

அக்கால் நிலவிய வேதாந்தச் சீர்திருத்த வியக்கத்தின் முன்னணியிலே நின் றவர் சுவாமி விவேகானந்தர். மேனாட்டுக் கல்விபயின்ற வங்காளியான விவே கானந்தர், அந்நாளில் வங்கச் சமுதாயத்திலே ஆழ்ந்த செல்வாக்குப் படைத் திருந்த அனுபூதிச் செல்வரான இராமகிருட்டின பரமகம்சரால் பெரிதுங் கவ ரப்பட்டார். இந்துமதத்துக்குப் புத்துயிர்ப்பளித்து அதன் சமய-சமுதாயப் போதனைகளைத் தூய்மைப்படுத்தல் வேண்டுமெனும் பேரவாவினால் அவர் உந் தப்பட்டார். துறவறத்தை மேற்கொண்டு அவர் சந்நியாசியாக இந்தியாவெங்க ணுஞ் சென்று திரிந்து, வேதாந்தக் கருத்துக்களை உபதேசித்தார். அமெரிக்கா வுக்கு விசயஞ் செய்து ஆங்கு நெடுங்காலம் தங்கியிருந்தமையாலும், இங்கி லாந்தெங்கணும் சுற்றுப்பயணஞ் செய்தமையாலும் அவருடைய நாட்டபிமா னம் கொழுந்துவிட்டெரிந்தது; இந்து சமுதாயத்துக்குப் புத்துயிர்ப்பளித்து, இந்துமதத்துக்கு ஒரு சமூக நோக்கத்தை அளிக்கவேண்டுமெனும் அவா அவர் உள்ளத்திலே வளர்ந்தது. 'விதவையின் கண்ணீரைத் துடைக்காத—அநாதை யின் வயிற்றுக்குக் கஞ்சி வார்க்காத—எந்த மதத்திலும் எமக்கு நம்பிக்கை யில்லை' என அவர் உணர்ச்சிவசப்பட்டுக் கழறியவாசகங்கள் இந்து மதத்திலே காணப்பட்ட புதிய வீறுணர்ச்சியைப் பளிங்கதுபோற் காட்டுவனவாயுள. அவர் தாம் மேற்கொண்ட பணியினை வருமாறு விளக்கினர். 'இந்தியாவைப் பொறுத்தவரை உங்கள் இயக்கம் செய்யத்தக்க பெரும்பணி யாது?' என்ற கேள்விக்கு விடையிறுக்குமுகமாக அவர், 'இந்துமதத்தின் பொதுவான மூலா தாரங்களைக் கண்டு, அவற்றை உணருமாறு தேசியவுணர்ச்சியைத் தூண்டு வதே' என்றார். அந்தப் பொதுவடிப்படையை அவர் வேதாந்தத்திலே கண்டு அதனைப் பொதுமக்கள் விளங்கத் தக்க மொழியிலே நவின்று, இந்தியாவெங் கணும் அயராது போதித்து வந்தார்.

இப்புதிய தத்துவத்தை அவர் உபதேசித்ததோடமையாது, கல்வியறிவும் தூய வாழ்க்கையும் உயரிய சமயாபிமானமும் படைத்த தொண்டரைத் திரட் டிக் கிராமமெங்கணும் அச்செய்தி பரவச் செய்தார்.

எந்தவொரு மதப்பிரிவையுஞ் சேராத துறவிகள் பிறரும் அறிவாளிகள் பல ரும் இத்தத்துவங்களையே இந்தியாவெங்கணும் பரப்புவாராயினர். பத்தொன்ப தாம் நூற்றாண்டின் இறுதியில் இந்துமதச் சிந்தனை வளர்ச்சியிலே வேதாந்தக் கருத்துக்கள் மறுமலர்ச்சி பெற்றமை, நாடு முழுவதற்கும் முக்கியமாயமைந்த ஒரு சமயவியக்கத்தைக் குறிப்பது எனலாம். இக்கால முடிவிலே, மகான் அர விந்தர் தாம் எழுதிய 'கீதை பற்றிய கட்டுரைகளிலும்', 'தெய்விக வாழ்க்கை யிலும்' வேதாந்த சாரத்தை எல்லார்க்கும் ஒப்பமுடிந்தவகையிலே தெளிவுற விளக்கி வைத்தார். இவ்வாறாக, வேதாந்தமே இந்துசமயக்கருத்துக்கள் யாவற் றுக்கும் பொதுவாயமைந்த அடிப்படையாக மீண்டும் நாட்டப்பட்டது.

வேதாந்தமே ஒருமைப்பாட்டை நிறுவிய கோட்பாடாக இருந்தக் கண்ணும், அரிதே யுணரத்தக்க இத்தத்துவார்த்தமான கருத்துக்கள் கல்வியறிவு படைத்த மேன்மக்களேயே கவரத் தக்கவை. பொதுமக்கள் அனுசரித்த இந்துமதமானது பண்டுபோலப் பத்திநெறியிலும் நியமநிட்டைகளிலும் ஊறியதாய்ப் பிரிவுபட்டு நின்றது. ஆயின் அதுவும் மெல்லப் பெருமாற்றமடைந்தது. இந்துமதமென்னும் தொல்பழைய விருட்சத்திலே, உருத்திரிந்து உளுத்துப்போன பழங்கிளைகள், ஒன்றில், தாமாகவே பட்டுவீழ்ந்தன; அன்றேல் சீர்திருத்தவாதிகளின் ஊக்கத்திலே உருவான சட்டமெனும் ஆயுதத்தால் வெட்டி வீழ்த்தப்பட்டன. இவ்வாறுக, இன்றியமையாத ஓர் சமயாசாரமாக இந்துச் சமூகங்கள் பலவற்றுற் கருதப்பட்டுவந்த பாலியத் திருமணமுறையானது, பொதுக் கிளர்ச்சியின் விளைவாயெழுந்த சட்டத்தின் மூலமாய் ஒழிக்கப்பட்டது. கைம்பெண்டிர் திருமணம் ஏற்கப்பட்டது. சாதி வேற்றுமையை ஆதாரமாய்க் கொண்ட பல சமூகக் குறைபாடுகள் தாமாக மறையத் தலைப்பட்டன. 'சாதித்தொழில்' என்னும் பரம்பரை முறை தளரத் தொடங்கிற்று. தீண்டாதார் எனப்படுவோர்க்கும் ஆலயங்கள் திறந்துவிடப்பட்டன. வைதிக நெறியில் மிக்கூறியிருந்த சென்னையிலுமே இந்து சமயத் தருமசாதனங்களும் அறநிலையங்களும் பொதுநிருவாகத்தின் ஆட்சிக்குள்ளாயின. தாழ்த்தப்பட்டோரின் விமோசனத்துக்காக உருவாகிய இயக்கமானது ஒரு பெருந் தேசிய இயக்கமாக மாறிற்று. அவ்வழி, பிரித்தானியராட்சியில் இறுதிக் காலத்திலே இந்திய நாட்டின் அரசியல் வாழ்விலும் சமூக வாழ்விலும், தாழ்த்தப்பட்ட சாதியினர் பெரும்பங்கு கொள்வாராயினர். மக்களிடையே பயின்ற பொதுவியல்பான இந்துமதமானது அண்மைக்காலத்தில் என்றுமே காணப்படாத தீவிரமான தன்மையைப் பெற்றது. ஒரு நூற்றாண்டுக் காலப்போக்கில் அதன் பண்பும் சுபாவமும் மாற்றமடைந்துவிட்டன. சீர்திருத்தஞ் செய்தற்கும் ஐக்கியத்தை உருவாக்குதற்கும் தனியோர் அமைப்பு இல்லாமையே இந்துமதத்திற் காணப்பட்ட பெருங்குறையாகும். பல திறப்பட்ட வழமைகளும் வழக்காறுகளும் மூடநம்பிக்கைகளும் சடைத்துக் களையும் கிளையுமாக இந்து சமயத்திலே படர்ந்து வளர்ந்தமைக்கு இக்குறைபாடே காரணமாகும். இந்துமதத்தின் நிறுவனங்களே மக்கள் இந்துமதத்தின் சாரமாகவே கருதுவதற்குப் பண்டுதொட்டுப்பழகிவிட்டனர். அந்நிறுவனங்கள் பெரும்பாலும் வலாற்றின் அடிப்படையிலே தோன்றிய வளர்ச்சிகளேயாம். அவற்றுக்குப் பிரமாணமாய் அமைந்தது சமயமன்று—சட்டமேயாம். இவ்வுண்மையைச் சுவாமி விவேகானந்தர் அழகாக எடுத்துரைத்தார்: 'புத்தர் முதல் இராம் மோகன் ராய் ஈறுக அனைவரும் சாதிமுறையை ஒருதமய நிறுவனமாகவே பிழைபடக் கருதி வந்துளர்..... குருமார் எத்துணை பிதற்றினுலும், சாதியென்பது இறுகிக் கடினமாகிவிட்ட ஒரு சமூக நிறுவனமேயல்லாற் பிறிதொன்றில்லை. ஒருகாலத்தில் அதற்குமோர் இடம் இருந்ததெனினும், இன்று அது புரையேறிப் புழுத்த மணத்தையே இந்திய நாட்டில் வீசுகின்றது'.

சாதிமுறையும் கூட்டுக்குடும்பமும் தாயபாகவுரிமைகளும், இவற்றின் வழித் தோன்றிய உறவுமுறைகளுமெல்லாம், சமயத்தையன்றிச் சட்டத்தையே பிர மாணமாகக் கொண்டவை. இவையே இந்து சமுதாயத்தின் தலையாய சிறப் பியல்புகளாகக் கருதப்படுபவை. இவையெல்லாம் மனிதனுடைய படைப்புக் களே. இவற்றைத் தெய்வம் அருளிச் செய்ததுமில்லை; சமயம் இவற்றை விதித் ததுமில்லை. மனிதன் படைத்த சட்டங்களே யல்லாமல் எந்தக் குருமாராயமோ சமயதாபனமோ இவற்றைப் பேணுவதில்லை. பழைய சமூக தேவைகளைப் பூர்த்தி செய்தற்கே புதிய சட்டங்கள் தோன்றுகின்றன என்பது ஒரு பேருண்மை. இவ்வகையிற் சட்டமானது பழைமை பேணுந்தன்மையதாதலின் சமூக தேவைகளுக்கு ஈடுகொடுப்பதிற் சற்றே பின்தங்கிவிடுகின்றது. இந்து தர்மக் கோட்பாடுகள் உருவாகியபோது, அக்காலத்தே நிலவிய சமூகச் சக்தி களை அவை பிரதிபலித்தன என்பதற்கையமில்லை. ஆயின் அவை விரைவிற் காலத்துக்கொவ்வாப் பழம்பொருளாகிவிட்டன. அவற்றை விளக்குமுகத்தாற் காலத்துக்குக் காலம் புதிய வியாக்கியானங்கள் தோன்றியவாற்றைக் கண் ணுறும்போது, அவற்றை மாற்றியமைக்க வேண்டுமெனும் விருப்பு அக்காலத்தி லும் பரக்க இருந்தமை புலனுகின்றது. காலத்தின் கோலத்துக்கு ஏற்றவகை யில், சந்ததி தோறும் புதிய புதிய வியாக்கியானங்களைக் கொடுத்தலே இந்து சமய ஆச்சாரியார்க்கு வாய்த்த ஒரேவழியாக இருந்தது.

இந்துசமயச் சட்டங்களும் வழமைகளும் மாறு நியமம் படைத்தவையெனும் கருத்தை அவற்றை வகுத்தோரும் விளக்கியோரும் என்றுமே கொண்டவரல்லர். கலிநிதி காணே என்பார் எழுதிய 'தருமசாத்திர வரலாறு' எனும் பெருநூலே ஆராயின், காலத்தேவைகளுக்கேற்ப இந்து சமய நிறுவனங்களை மாற்றியமைத் தற்குச் சிந்தனையாளர் காலந்தோறும் முயன்றுளர் என்பது தெளிவாகும். சட் டங்கள் மாற்றத்தக்கனவாயின், அத்தகைய சட்டங்களை ஆதாரமாகக் கொண்ட நிறுவனங்களும் மாற்றத்தக்கனவே என்பது பெற்றும். இந்துசமுதாயத்திற் காணப்பட்ட பெருங் குறை, சட்டங்கள் மாற்றமடையாது இருந்து வந்துள் என்பதன்று. எனின், வந்துற்ற மாற்றங்களெல்லாம் இடத்துக்கிடம் வேறுபட் டனவாய், தனிப்பட்ட ஆச்சாரியன்மாரின் விவேகத்தை ஒட்டியனவாய், அங் கொன்று இங்கொன்றுக, முழுமை பெறுது தோன்றியதேயாகும். சட்டத் தத் துவங்களை முறையாக, முழுமையுறப் புத்தமைப்புச் செய்யும் முயற்சியாக அவை அமையவில்லை. மாறுதலடைந்துவரும் நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையிலே அவை எவ்வாற்றுனும் அமைந்திலவென்பதே இந்துமதத்தின் பெருஞ் சாபக்கேடு.

சமுதாயக் கருத்துக்கள் இவ்வாறு இலக்கின்றிச் சென்றதற்கும், சமூகப் பகையான வழமைகள் சடைத்து வளர்வதைத் தடுக்க முடியாமைக்கும் காரணம், அரசியல் ஆதிக்கத்தை இந்திய நாடு பறிகொடுத்தமையேயாம். இறைமை படைத்த தனியோர் அதிகாரத்தின் ஆட்சியில் இந்தியா எஞ்ஞான் றுமே இருந்ததில்லை. என்னே! மௌரியர் காலந்தொட்டு (கி. மு. 320), மாமன் னன் அரிசன் காலம்வரையும் (கி. பி. 637), இடையிடை முறிவு ஏற்பட்டவிடத்

தும் ஒருவாருக வடநாட்டிலே நிலவி வந்த அரசியல் ஒற்றுமைதானும், எட்டாம் நூற்றாண்டின் அரசியற் குழப்பங்களிலே சிக்குண்டு சின்னபின்னப்பட்டு, பன்னிரண்டாம் நூற்றாண்டிலே முகலாயர் படையெடுத்து வந்த காலமுதலாய் 700 ஆண்டுகள் வரை முற்றாக மறைந்தொழிந்துவிட்டது. இவ்வழி, 200 ஆண்டுகளுக்கு முன்பாகத் தொகுக்கப்பட்ட அந்நாளிலுமே காலத்துக்கொவ்வாப் பழங்கூளமாகிவிட்ட சட்டங்களின் அடிப்படையில் விளைந்த நிறுவனங்களே இந்துசமுதாயத்தைத் தொடர்ந்து ஆட்சிசெய்தன.

சட்டமியற்றும் முறையான அமைப்பொன்றும் முசிலிம் ஆட்சியிலே இருக்கவில்லை. இனி பிரித்தானியராட்சியிலே இந்தியா முதன்முதலாக ஐக்கியப்பட்ட பின், இந்துசமுதாயம் முழுவதும் தனியோர் ஆட்சியில் இருந்தகாலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகார வர்க்கமானது சமூக சீர்திருத்தத்திலே முதன் முயற்சி செய்த பின்னர், சமய நடுநிலைமையெனுங் கொள்கையைத் தலைக்கீடாய்க் கொண்டு, கிளர்ச்சிக்கு ஏதுவாகலாமெனத் தான் கருதிய சீர்திருத்த முயற்சிகளைக் கைவிட்டது. பின்னைக்கிப் பார்க்கும்போது, அதுவே புத்தியான செயலென்று கொள்ளினும் கொள்ளலாம். விரிவான சமூகச் சீர்திருத்தங்களுக்கும் வேண்டிய ஊக்கவிசை, மக்களிடத்திருந்தே ஊற்றெடுத்தல் வேண்டும். மக்களிடையே பயின்று, மக்களாற் பெரிதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களுக்கு அதிகாரமுறையான உருவங் கொடுப்பதே சட்டம். ஆதலின், இன்றியமையாத முதற்படி, இந்துமதத்தைச் சீர்திருத்தலாகும்.

முதற்பெரும்போரின் பின்னரே, சட்டமியற்றும் அரசுமுறை இந்தியாவிற் றோன்றிற்று. அரைகுறைச் சுயவாட்சித் திட்டம் 1921 ஆம் ஆண்டில் வந்ததன் பின்னர், தேர்தல் மூலமாய் நியமனம்பெற்ற இந்தியரையே பெரும்பான்மையாகக் கொண்ட மத்திய சட்டசபை நிறுவப்பட்டது. இந்து சமுதாயச் சட்டங்களை மாற்றுதற்கும், அச்சட்டங்களை இந்தியாவெங்கணும் செயற்படுத்தற்கும் அச்சபைக்கு அதிகாரமிருந்தது. மாகாணங்களிலேயும், தெரிவு செய்யப்பட்ட சட்டமன்றங்களுக்கே ஆட்சியதிகாரம் பெரும்பாலும் சென்றது. மத்திய, மாகாண அரசாங்கங்கள் சட்டத்துறையிலே ஈட்டிய சாதனை, சமூகச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரை, அடிப்படைச் சிறப்பு உடையதாகும். ஆயினும் பொதுமக்கள் கோரிய அளவிற்கு அது சென்றிலது எனலாம். மத்திய சட்டமன்றம் நிறைவேற்றிய முக்கியமான சட்டங்களுள், திருமணச்சட்டமும் (சிறுமியரின் திருமண வயதை 14 இற்கு உயர்த்திய) சம்மத வயதுச் சட்டமும் குறிப்பிடத்தக்கவை. இந்துமதத்தைச் சேர்ந்த வெவ்வேறு சாதியாரிடையே நிகழும் கலப்பு மணங்களுக்குச் சட்டவமைதியளிப்பதே திருமணச் சட்டமென்பது. அவ்வாற்றால் அது வைதிகப்பார்ப்பனக் கொள்கையான சாதிமுறையை வேரோடுங் களைந்ததுமன்றி, மனுநீதியையும் பிற சனாதனக் கோட்பாடுகளையும் தள்ளி வைத்தது. சாதிக்கலப்பைத் தடுத்துவைத்த 'மாறுநியமம்படைத்த விதியானது', இந்த ஒரேயொரு சட்டத்தால் இந்தியாவெங்கணும் ஒழிக்கப்பட்டது. சம்மத வயதுச் சட்டமும் புரட்சிகரமானதே. பூப்பெய்துமுன்னமே சிறுமியர்க்கு மணஞ்செய்து வைக்கும் முறை, ஈராயிரமாண்டுகளுக்கு மேலாக இந்துமக்கள்

பலரிடையே பயின்றுவந்த ஒரு வழமையாகும். அவ்வழமைக்கு நெடுங்கால மரபு ஆதாரமாக இருந்ததோடு பார்ப்பனரைப் பொறுத்தவரையேனும் அது சமய நூல்களாற் கட்டாயமாக விதிக்கப்பட்ட ஆசாரமாகக் கருதப்பட்டது. ஆயின் இந்தியச் சட்டமன்றம் அதனைச் சட்டவிரோதமாக்கியதோடு, பாலிய விவாகம் தண்டனைக்குரிய ஒரு குற்றமுமாயிற்று.

இவ்வாறுக, மூப்பதாண்டுக் காலமுடிவில், இந்துசமயச் சீர்திருத்தம் அடைந்த வளர்ச்சி காரணமாகப் புதிய சமுதாயமானது தனது சக்தியைச் சமூக பொதுநன்மையிற் செலுத்தல் இயல்வதாயிற்று.

இந்து சமயச் சீர்திருத்த முயற்சியினைச் சற்று விரிவாகவே இங்கு ஆராய்ந் துள்ளோம். இந்தியச் சமூகத்தின் மேலைட்டுக் கல்வியால் ஏற்பட்ட விளைவு களைத் தெளிவாக உணர்தற்கு, அச்சீர்திருத்தவியக்கத்தின் பெறுபேறுகளை அறிதல் அவசியமாதலின். கல்வித்துறையிலே கிழக்கிந்தியக் கம்பெனி செய்த முதன் முயற்சி, சங்கத அராபியக் கல்வியினை ஊக்குவதையே நோக்கமாய்க் கொண்டிருந்தவாற்றை இங்கு நினைவிற் கொள்ளுதல் வேண்டும். ஆங்கிலக் கல்வி பயிலுதல், அரசாங்கத்தின் ஆதரவின்றித் தனிப்பட்டோரின் முயற்சி யாகவே சிலகாலம் இருந்துவந்துளது. மிசனரிமார் தாபித்த சில கல்லூரி போன்றவை, மேலைட்டு அறிவை மக்களிடைப் பரப்புதற்கு உதவியாயிருந்தன. ஆயின், இந்தியாவின் ஆங்கிலக் கல்வியை அபிவிருத்தி செய்வதை அரசாங்கம் தனது பூட்கையாகக் கொள்ளல் வேண்டுமெனும் முடிபு, மக்கோலேப் பிரபுவால் ஊக்கப்பட்டு, 1835 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டது. மக்கோலே தாம் கொண்ட சில கருத்துக்களை அச்சாணியன்ன உண்மைகளாக விழித்தனர். 'அறியத்தக்கது எதுவோ அதனைப் போதித்தற்கே எமது பணத்தைச் செல விடுதல் வேண்டும். சங்கதத்தினும் அரபிக்கினும் பார்க்க ஆங்கிலமே பயிலு தற்குத் தக்கது. இந்நாட்டுச் சுதேசிகளை நனிசிறந்த ஆங்கிலப்புலமையோ ராக்குவது ஒல்லுவதொன்றே. எமது முயற்சி யாவும் அந்நோக்கத்தை இலக் காகக் கொண்டிருத்தல் வேண்டும். இக்கருத்தை ஏற்றுக்கொண்ட இந்திய அர சாங்கமானது, ஐரோப்பிய இலக்கியத்தையும் விஞ்ஞான அறிவையும் இந்தியச் சுதேசிகளிடை பரப்புவதையே தனது நோக்கமாகக் கொள்ளல் வேண்டுமென விதித்தது. முற்போக்குடைய இந்தியச் சிந்தனையாளரும் அக்காலத்தில் இத னையே வேண்டி நின்றார். மேலைட்டுக் கல்வியை வேண்டி நின்றோர் பிரதான மாக இந்தியத் தலைவர்களே எனுமிந்த உண்மையை—இக்கால ஆராய்ச்சி யாளர் பெரும்பாலும் மறந்துவிடும் இவ்வுண்மையை—இங்கு வற்புறுத்திக் கூறுதல் அவசியமாகும்.

அரசாங்கங் கொண்ட இத்தீர்மானத்தைத் தொடர்ந்து, பாடசாலைகளும் மாகாணத் தலைநகரங்களிலே ஆங்காங்குத் தோன்றத் தலைப்பட்டன. ஆயின் இந்தியா முழுவதையும் உள்ளடக்கும் வகையில், இயைபான ஒரு கல்விமுறை 1854 ஆம் ஆண்டிலேயே புகுத்தப்பட்டது. இப்புதிய பூட்கையின் பொதுவிலட் சியம், பிரபலமான ஓர் அறிக்கையிலே, வருமாறு எடுத்துரைக்கப்பட்டது; 'இந் நாட்டுமொழிகளுக்குப் பதிலாக ஆங்கிலத்தைப் புகுத்துவது எமது இலக்கு

மன்று, விருப்புமன்று. ஆதலின், எந்தவொரு பொதுக் கல்விமுறையிலும், அவற்றைப் பயிலுவது அயராது ஊக்கற்பாலதே. திருந்திய ஐரோப்பிய அறிவுப் பயிற்சியை இந்தியப் பொது மக்களுக்கு ஊட்ட வேண்டுமாயின், அஃது இந்நாட்டு மொழிகளுள் ஒன்றின் வாயிலாகவே ஊட்டற்பாலது'. இவ்வறிக்கையைத் தொடர்ந்து, இந்திய மாகாணங்களின் பிரதான தலைநகரங்களிலே, கல்கத்தா, பம்பாய், சென்னை, அலகபாத்து ஆகிய இடங்களில், பல்கலைக்கழகங்கள் தூவக்கப்பட்டன. இவ்வாறாக மிசனரிமாரின் முயற்சிக்கு விரிந்த ஒரு துறை திறக்கப்பட்டது.

பென்னம்பெரிய ஒரு நாட்டின் உயர்வகுப்பார்க்கு அன்னிய மொழியிலே கல்வி பயிற்றுதற்கு, அதிகாரம் மிகப் படைத்த அரசாங்கமே முயற்சி செய்வதாகிய இந்த மாபெரிய மக்கோலேத்திட்டம், ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாக நிலவிவந்துளது. இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னரும், இக்கல்வி முறை பெரும்பான்மையும் மாறுது இயங்கி வருகின்றது. பெரும்பாலான பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலமே இன்னும் போதனை மொழியாக ஆட்சி செய்கின்றது.

இம்முறையிலுள்ள குறைபாடுகள் பற்பல—அவற்றை எளிதாகத் தொகுத்துக் கூறலாம். ஆங்கிலங் கற்ற வகுப்பார்க்கும், மற்றுப் பரம்பரை முறையாகக் கல்வி பயின்றோர் உட்படப் பிற வகுப்பார்க்குமிடையே கடத்தற்கரிய ஒரு பிளவை அது உண்டாக்கிற்று. அன்னியப் புதுமொழியிற் புலமை பெறுதற்கும், அம்மொழிவாயிலாகப் பிற பாடமனைத்தையும் பயிலுதற்கும் விரயமான மனித சத்தி மிகப் பெரிது. அளவுக்கொவ்வாத முறையிலே, இலங்கியங் கற்றல் வற்புறுத்தப்பட்டது. இன்னும், இந்திய மண்ணிற்கு முற்றும் அன்னியமான ஒரு பண்பாட்டை ஒட்டுவைக்கச் செய்த முயற்சி, அம்மண்ணுக் கிணங்கி யாதும் பலனளிக்க நெடுங்காலம் சென்றது. அன்றியும், ஆங்கில அறிவிலே தேர்ச்சியுடையோராயினும், வாழ்க்கைக்கு உறுதிபயக்கும் பயன்கள் பற்றித் தெளிவான காட்சியற்றோராய், சிந்தனை வறட்சி மிக்கோராய், தமது நாட்டுச் சூழலுக்கே பொருந்தாப் போக்குடையோராய் அந்தரப்பட்ட ஒரு வகுப்பாரையும் அக்கல்விமுறை தோற்றுவித்தது கண்கூடு. இவை யெல்லாங் கூறியபின்னர், இக்கண்டனங்களிலே பொதிந்துள்ள உண்மையை ஏற்ற பின்னர், இத்தனிப்பெரும் பரிசோதனையால் விளைந்த நன்மை கணிசமானது, வியக்கத்தக்கது என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளல் வேண்டுவதே.

முதலாவதாக, இந்நவசமயச் சிந்தனைப் போக்கிற்குப் புறம்பான சமுதாய இலட்சியங்களிலே ஊறிய ஒரு புதிய வகுப்பாரை இந்தியாவுக்கு ஆங்கில உயர்கல்வி ஆக்கியளித்தது. அவ்விலட்சியங்கள் பொன்றாது தொடர்ந்து நிலைபெற்றமையே நவீன இந்தியாவின் வாழ்க்கைக்கு அடிகோலிய சமூக—சமயப் புரட்சிக்குக் காரணமாகும். மனிதவுணர்ச்சிக்கு விடுதலை யளித்தற்கும், மனிதத்துவேடங்களை அழித்தற்கும், மடமைசெய்யும் வழமைகளாலும் தீங்கு தரும் மூட நம்பிக்கைகளாலும் விளையுங் கேடுகளை ஒழித்தற்கும், சிந்தனையைத் தூண்டி ஊக்கமளித்தற்கும் பிரித்தானிய நிருவாகஞ் செய்த பணி மிகச் சிறிதே.

ஆயின், ஆங்கிலமொழிவாயிலாக இந்தியாவெங்கணும் புகுந்த புதிய இக்கல்வியானது இத்துறையில் ஆற்றிய தொண்டு மிகப் பெரிதே என்பதற்கையமில்லை. பிரித்தானிய ராட்சியிற் காணப்பட்ட அடிப்படை முரண்பாடு இதுவேயெனவும் வாதிக்கலாம். ஆட்சி செய்த அரசாங்கம் பழைய வழமைகளின் தகைமையை நிலைநாட்டியது; சமூக நீதித் தத்துவங்களை மறுத்துச் சென்ற சட்டங்களைப் பேணிப் பரிபாலனஞ் செய்தது; சமுதாயம் அவசரமாக வேண்டி நின்ற மாற்றங்களை உருவாக்குஞ் சட்டங்களை இயற்ற மறுத்தது; தாராண்மைக் கருத்துக்கள் பரவுவதைச் சமூசயக் கண்கொண்டு பார்த்து நின்றது. மற்று, அரசாங்கத்தின் நிதியுதவி பெற்று, அரசாங்கமே தனது கொள்கையாகக் கொண்ட கல்வி முறையோ அவ்வரசாங்கம் பேணிக்காத்தற்கு முயன்ற அனைத்தையும் தகர்க்கத் தலைப்பட்டது. பல்கலைக்கழகங்களும் பாடசாலைகளும் சுதந்திரக் கருத்தைப் போதிக்க, அரசாங்கமோ அதனை எவ்வாறேனும் அடக்கியொடுக்க முனைந்தது. அரசாங்கம் உருவாக்கிப் பேணிய கல்விமுறையே அவ்வரசாங்கத்துக்கு எதிராகக் கிளம்பி, அது கைக்கொண்ட அடக்குமுறைகளைப் பயனிலவாக்கிற்று.

இந்துசமய ஆசாரமென்னும் புராதனப் பெருங்கோட்டையைக் கீழறுத்தமை, இந்தியாவெங்கணும் பரந்துபட்டு திகழ்ந்த ஒரு பெரும் மாற்றமென்றவாற்றால், ஒப்பற்ற ஒரு சாதனையாகக் கொள்ளத்தக்கது. இப்புதிய கல்வி இந்தியமொழிகளின் வாயிலாகவே பயிற்றப்பட்டிருக்குமேல், அதன் பண்பும் பயனும் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபட்டிருக்கும்; அவ்வம்மாகாணத்து மொழியின் வளர்ச்சிக்கும் நெகிழ்ச்சிக்கும் பண்புக்குந் தக வேறுபட்டிருக்கும். அப்போதும் இந்துமதச் சீர்திருத்தம் கைகூடியிருக்கும் என்பதற்கையமில்லை. ஆயின் அஃது இந்தியா முழுவதையும் உள்ளடக்கிய தொன்றாய் அமைந்திருக்காது. அப்போது தனியொரு 'மாபெருந்திட்டம்' வாய்த்திருக்காது. அவ்வழி, இந்துச் சமுதாயம் ஒற்றுமைப்படுத்தற்குப் பதிலாக, இந்திய மொழிகள் எத்தனை உளவோ அத்தனை கூறுகளாக மொழிவழிப் பிரிவுபட்டிருக்கும். இவ்வாற்றால், ஒரே கிறித்துவச் சமுதாயத்தில் ஒன்றுக்கொன்று விரோதமான கூறுகளைக் கொண்ட ஐரோப்பாவின் கதியே இந்தியாவுக்கும் நேர்ந்திருக்கும். இத்தகைய கதியிலிருந்து இந்தியாவைக் காத்தளித்தது மக்கோலேப் பிரபு புகுத்திய பொதுப் போதனைமொழியேயாம்.

இரண்டாவதாக, இந்தியா முழுவதற்கும் தனியொரு மொழியினையே போதனை மொழியாகக் கொண்டு ஒரே பெற்றித்தாக அமைந்த இக்கல்வி முறையானது மக்களிடையே ஒத்த மனப்பான்மையினை, ஓருளப்பாட்டை உருவாக்கியமை, தனியொரு தேசியவினமாக இந்தியா அடைந்த வளர்ச்சியிலே தனிப்பெருஞ் சிறப்புடைய ஓர்மிசமாகக் கணிக்கத் தக்கது. அந்த அடிப்படையிலேயே இந்திய நாட்டினத்தை உருவாக்குதல் சாத்தியமாயிற்று. அரசியற் சிந்தனைக்கும் செயலுக்கும் அது ஒரு பொதுமொழியை வழங்கியமை தன்னளவான சிறப்புடைத்தாயினும், இந்திய நாட்டினத்தை உருவாக்குதற்கு ஏதுவாயமைந்த அந்த ஓருளப்பான்மை—உணர்ச்சியிலும் கருத்திலும் காணப்பட்ட

அந்த ஒருமைப்பாடு—அதனினும் ஊங்கிய சிறப்புடைத்து. இந்தியாவின் உள்ளத்தை ஆத்மீகமாக ஐக்கியப்படுத்தி வைப்பன யாவை? இந்துசமயச் சிந்தனைச் செல்வம் அவற்றுள் ஒன்று; சங்கதமொழியிலே பொதிந்துள்ளதும், இந்தியமொழிகளால் இன்றும் பிரதிபலிக்கப்படுவதும், உயிர்த்துடிப்புடையதுமான பெருமரபு மற்றையது. ஆங்கிலக் கல்வி பரவியமை காரணமாக, ஆதிக்கம் பெற்ற வகுப்பாரிடையே தோன்றிய கருத்தொருமிப்பு ஈற்றதாகும். இம்மூவேதுக்களுள், இந்தியாவை அரசியற் சார்பில் ஐக்கியப்படுத்தி, தனியொரு தேசிய வினமாகச் செயலாற்றவைத்து, புதிய ஒரு சமுதாயத்தை நிருமாணித்தற்கு ஏதுவாயமைந்தது இறுதியிற் கூறியதேயாம். முதலிரண்டும், இந்துநாகரிகத்துக்குத் தொன்றுதொட்டு நிரந்தரமாகவுள்ள அடிப்படைகளாகும். அரசியலிலே ஓருளப்பான்மையெனும் இணைப்புச் சத்தியில்லாது, அவையிரண்டும் தம்மளவானே ஐக்கியவினத்தைத் தோற்றுவித்திருக்க முடியாது—தோற்றுவிக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்காது. இந்துவாழ்க்கையின் ஒருமைப்பாடும் சங்கதப்பண்பாடெனும் பொது மரபும், மேற்கைரோப்பாவிலே நிலவுகின்ற கிறித்துவமதத்துக்கும் இலத்தின் மரபுக்கும் நனியொப்பானவை. ஆயினும், ஆங்குப் பிரதேச மொழிகள் முதன்மைபெற்றமையாலும், உலகில் வாழ்க்கையில் இணைப்புச் சத்தியொன்று வாய்க்காமையாலும் ஐரோப்பா சின்னபின்னப் பட்டே வளர்ச்சியடைந்தது. ஆங்கில மொழிவாயிலாக, ஒரே பெற்றித்தான கல்விமுறை ஒரு நூற்றாண்டுக் காலமாக வாய்த்திருக்காவிடின், இந்தியாவிலும் வினைவு அத்தகையதாகவே இருந்திருக்குமெனலாம்.

மேலும், ஐரோப்பாவிற் பரவிய 'அறிவொளியியக்கத்தின்' நற்பயன்களை இரவலாகவோ மறைமுகமாகவோ பெறுதலின்றி, நேராகப் பெறுதற்கும் ஆங்கிலக் கல்வி வாய்ப்பளித்தது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பியச் சிந்தனையாளர் அறிவுத்துறையிலே ஆற்றிய பணி வரலாற்றுச் சிறப்பும், உண்மையான மாட்சியும் பொருந்தியது. அன்னர் சேர்த்த சிந்தனைச் செல்வமெல்லாம், குழப்பமும் புரட்சியும் நிறைந்த ஒரு காலத்தின் பின்னர், பத்தொன்பதாம் நூற்றாண்டிலே உயிரோட்டமுள்ள சிந்தனையாக ஏற்கப்பட்டன. ஆங்கிலக் கல்வி இந்திய நாட்டிற் பரவிய அதே காலத்தில், ஐரோப்பாவில் அச்சிந்தனைவெள்ளம் மக்கள் வாழ்க்கையைப் பலநூறு வழிகளால் வளம்படுத்திற்று. பயங்கரமான புரட்சிச் சுலோகங்களாகக் கருதப்பட்ட 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்பவை, தாராண்மையெனும் விழுமிய கொள்கையாகச் சமுதாயத்தில் இடம் பெற்றுவிட்டன. பரம்பரை மரபில் ஊறிய இங்கிலாந்திலேதானும் சட்டமானது மெல்லச் சீர்திருத்தம் பெற்று, விரைவில் இந்தியாவையும் பாதிக்கத் தலைப்பட்டது. குறுகிய அடிப்படையிலமைந்த விக்குக் குழுவாட்சியிலே ஏமாப்பும், சீத்துவமும், உலகின் நானுதிசைகளிலும் பரந்த ஒரு போரசையுங் கண்ட அத்நாட்டில், 'மிகக் கூடிய பெரும்பாலாரின் மீப்பெருநன்மை' என்பது பலர்க்கும்

ஒப்பமுடிந்த ஓர் இலட்சியமாகிவிட்டது. திரண்ட இச்சிந்தனைச் செல்வ மனைத்தையும் ஆங்கிலமொழியெனுந்திறவுகோல் வாயிலாக இந்திய நாடு அரும் பெறலுரிமையாகப் பெற்றது. இந்தியச் சுதேசிகள் தாம் பேசும் பிறமொழிச் சொற்களின் உள்ளார்ந்த பொருளே விளங்காமலே எசமானரின் மொழியைப் பேசுவது பற்றியும், ஆளவந்தோரின் நடையுடை பாவனைகளைக் கண்மூடித்தன மாக அன்னர் பின்பற்றுவது பற்றியும் ஆங்கில நிருவாகிகள் இளிவரல் தோன்றப் பேசினராயினும், காலஞ்செலச் செலப் புதிய இந்தியச் சந்ததியார் அப்புதிய தத்துவங்களிலே பயின்று வளர்ந்தனர் என்பதை மறுக்க முடியாது. அவ்வழி, பார்ப்பானொருவன் சமத்துவமும் சகோதரத்துவமும் பற்றிப் பேசு வதிலே காணப்படும் முரண்பாடு காலப் போக்கிலே இணக்கமடைந்தது. இந்து மத்தியவகுப்பார் மேனாட்டுக்கருத்துக்களை இவ்வாறு தழுவிக் கொள்வர் என் பதை அக்காலத்தில் யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

அமைதியான ஒரு புரட்சிவாயிலாய் இந்தியா ஒரு நவீன சமுதாயமாகத் தலையெடுத்தமைக்குத் தனிப்பெருங் காரணம் யாதெனில், பல்வேறு பிரிவினரை யும் உள்ளடக்கிய ஒரு வகுப்பாரிடைக் கல்வி பரவியதன் மூலம் புதிய கருத்துக் கள் படிப்படியாக நாட்டிற் செறித்தமையேயாம். புதிய கல்வி முறையாற் பாமர மக்களுக்குக் கல்வி பொசியவில்லையே என்றவாறான ஒரு குற்றச்சாட்டு எடுத்துக் கூறப்படுவது உண்டு. நுணுகி ஆராயின், இக் கண்டனத்துக்குத் தக்க ஆதார மில்லையென்பது புலனாகும். நிலைகுலையுந் தறுவாயிலிருந்த இந்து சமுதாயத்திலே புதிய கருத்துக்கள் பட்டுருவ, இந்து சமயம் மறைந்தொழிய, இந்தியக் குடிகள் கிறித்துவ மதத்துக்கே தடுத்தாட்கொள்ளப்படுவர்—புதிய கல்வித் திட்டத்தின் கருத்தாக்கள் இவ்வாறான நம்பிக்கையோடே இருந்தனர். இந்த 'மகத்தான திட்டமே' மிசனரிமாரைப் புதிய இந்தக் கல்வி முறையிற் பேரூக்கங் கொள்ளச் செய்தது. ஆயின் அந்த நம்பிக்கை ஈடேறிற்றிலது. அதற்கு மாறாக, இந்தியா கிறித்துவ மதத்துக்கு மாறுவதின்றி, விரிந்த முறையிலே இந்துமதஞ் சீர்திருத்த மடைதற்கும், பகுத்தறிவுக் கெட்டியவகையிலே அதன் கோட்பாடுகள் விளக்க முறுதற்குமே ஆங்கிலக் கல்வியின் அபிவிருத்தி இட்டுச் சென்றவாற்றை முன் னங் கண்டோம். பாமர மக்களிடையே இந்துமதத்துக்குள்ள 'பிடிப்பு' வியத் தகும் வகையில் வலுப்படுத்தற்கும் தலையாய உலகமதங்களுள் ஒன்றாக அது தலையெடுத்தற்கும் அக்கல்விமுறை வழிவகுத்தது எனலாம். அந்தவகையிலே, மக்கோலேயும் அவர்தம் நண்பரும் செம்மாந்து எதிர்நோக்கியிருந்த விளை வுக்கு நேர்மாறான விளைவையே, கல்வி 'பொசிந்து பரவுதலாகிய' கொள்கை ஈற்றிற் பயந்தது. எனவே, இத்துணைப் பணமும் இத்துணைச் சத்தியும் எந்தக் குறிக்கோளுக்காகச் செலவழித்தனரோ அந்தக் குறிக்கோள் தவறிவிட்டதே யென மிசனரிமார் கவன்றது வியப்பன்று.

கடந்த அரை நூற்றாண்டுக்காலத்தின்போது தேசிய மொழிகள் அடைந்த இயல்பிகந்த வளர்ச்சியைக் கொண்டு மேனாட்டுக் கருத்துச் செறிவு எத்துணை யாக வெற்றியடைந்துளது என்பதை ஓராற்றல் மதிப்பிடலாம். இம்மொழி

களுக்கு உயிர்ப்பும் உரனும் ஊட்டி, கலைப்படைப்புக்கும் உயரிய சிந்தனைக்கும் ஏற்ற கருவிகளாக அவற்றை மாற்றி, உலகப் பேரிலக்கியங்களின் வரிசையிலே வைத்தெண்ணத்தக்க பெருமையை அவற்றுக்களித்த இலக்கிய முயற்சியை உள்ளவாறுணர்ந்த ஐரோப்பிய அறிஞர் இலரெனலாம். பத்துக்கோடிக்கும் மேற்பட்ட மக்களாற் பேசப்படும் இந்திமொழி தொட்டு ஒன்றரைக்கோடி மக்கள் பேசிடும் மலையாளமீறுக, வங்கமே, குசராத்தியே, மராத்தியே, தெலுங்கே, தமிழே, கன்னடமே ஆகிய மொழிகளிலெல்லாம், சென்ற ஐம்பதாண்டுக் காலத்தில் நடைபெற்ற இலக்கிய முயற்சி மிகப் பெரிது. அப்பெருமுயற்சியின் எதிரொலி ஓரோவொருகால் மாத்திரமே மேற்குலகிற் கேட்டதுண்டு. இந்தியாவில் வளர்ந்துள்ள புதிய மக்கட்பண்பின் உண்மைப் பிரதிபலிப்பாக அமைந்துள்ள இவ்விலக்கிய முயற்சி, மேனாட்டுக் கருத்துக்களும் எண்ணங்களும் புகுந்து செறிந்தமையால் ஏற்பட்ட விளைவே யென்பதை மறுத்தல் கடினம். அறிவுத் துறையிலே இந்தியா அடைந்துள்ள அபிவிருத்தி, ஆங்கில மொழியில் எழுதும் எழுத்தாளரின் இலக்கியப் பணியை உரைகல்லாகக் கொண்டே இறுகாதும் அளவிடப்பட்டுள்ளது. இந்து-ஆங்கில இலக்கியத்துறையைச் சேர்ந்த கவிஞரும் கட்டுரையாளரும் இலக்கிய விற்பன்னரும் அற்ப சொற்பமான எண்ணிக்கையுடையராய், தற்றிறமை அதிகமிலராய், தனித்தன்மை யளிக்கும் தகவுமிலராய், நவீன இந்தியாவின் உள்ளத்தைப் பிரதிபலிப்பவராகவோ இந்தியாவின் ஆக்கத்திறனை எடுத்துக்காட்டுபவராகவோ கருதற்கு அருகதையுடையரல்லர். ஆங்கிலக் கல்வியால் இந்தியாவிலேற்பட்ட உண்மையான விளைவுகளைக் காணவேண்டுமாயின், ஆங்கில மொழிவாயிலாக வந்தடைந்த ஐரோப்பியப் பண்பாட்டின் தாண்டுகையால் இந்தியருள்ளம் எவ்வாறு துலங்கிற்று என்பதை அறியவேண்டுமாயின், தாகூர். இக்பால், புத்ததேவபோசு, சரச்சந்திரர், பிரேமசந்தர், சுப்பிரமணிய பாரதி, முன்சி, வள்ளதோல், சங்கரன் குருப்பு ஆகியோரின் இலக்கியப் படைப்புக்களையும் இந்திய மொழிகளில் இக்கால இலக்கியங்களை வளம்படுத்திய பிற பெரும் எழுத்தாளரின் சிருட்டிகளையும் நாம் கூர்ந்து கவனித்தல் வேண்டும். தாகூரின் இலக்கியங்கள் சில, மொழிபெயர்க்கப்பட்டு மேனாடுகளிலே பெருமதிப்புப் பெற்றதன் காரணமாக, பாரதநாட்டு எழுத்தாளரின் இலக்கியப் பணி பற்றியும், அப்பணியின் தன்மைபற்றியும் மேனாட்டோர் இன்று ஓரளவிற்கு அறிந்துள்ளனர். எனினும், பொதுவாகக் கூறுமிடத்து, அவை ஐரோப்பிய அறிஞர்க்குப் பெரும்பான்மையும் மூடுமந்திரமாகவே இருந்து வந்துள.

இந்தியமொழிகளின் வளர்ச்சியிலே தெளிவான மூன்று கட்டங்களை நாம் காணலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், இந்திய மொழிகளிலே, கவிதாவிலாசமிக்க தலைசிறந்த படைப்புக்களையுடைய சீரிய இலக்கியங் காணப்பட்டது. இந்திமொழியிலே துளசிதாசரும் சூரியதாசரும் கேசவதாசரும், வங்க மொழியிலே வித்தியாபதியும் சண்டிதாசரும் திருத்திவசும் என்போரும் பேரிலக்கியங்களைப் படைத்திருந்தனர். சங்கதமொழியில் புகழுக்கு நிகரான இறவாப்புகழ்படைத்த செம்மைசான்ற பழைய இலக்கியம் தமிழுக்கு உண்டு.

மராத்தி, குசராத்தி போன்ற மொழிகளிலும் நிலைமை இத்தகைத்தாகவே இருந்தது. மக்களாற் பெரிதும் போற்றப்பட்ட தலைசிறந்த கவிதையிலக்கியம் ஒவ்வொரு மொழியிலும் காணப்பட்டது. ஆயினும், செவ்வியல் மொழிகளான சங்கதமும் பாரசீக மொழியுமே கல்வி பயிற்றுதற்குப் பயன்பட்டவாதலின், பிறவெல்லாம் பண்படாத நாட்டுமொழிகளாகக் கருதப்பட்டன. புலமையும் கல்வியறிவும் அந்தச் செவ்வியல்மொழிகளோடே சம்பந்தப்பட்டிருந்தன. புதிய கல்வித் திட்டத்திலே பாடநூல்களாகப் பயன்படத்தக்க நூல்கள் இம் மொழிகளில் இருந்திலவென்பது உண்மையே.

நாட்டு மொழிகளில், உலகியற் சார்புடைய இலக்கியம் வளர்ந்ததும் இக் காலத்திலேயாம். இம்மொழிகளிலே தோன்றி வளர்ந்த இலக்கியம் பெரும்பான்மையும் கவிதைத்துறையையே சேர்ந்ததென்பதையும், அதுவும் பிரதானமாகச் சமயச்சார்புடையதாய் இருந்ததென்பதையும் முன்னர்க் குறிப்பிட்டோம். பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னர், நாட்டுமொழிகளிலே இலக்கியப் பெருங் கர்த்தாக்களாக விளங்கிய யாவரும்—துளசிதாசர், சூரியதாசர், கபீர், மீரா, வித்தியாபதி, சண்டிதாசர், துக்காராம் என்றித்தகையாரெல்லாரும்—பத்தி நெறியோடு சம்பந்தப்பட்டோரே. இன்னும், வரலாற்றுச் சார்பில் நோக்குமிடத்து, மத்திய காலத்துச் சமயப்புத்துயிர்ப்பும் நாட்டுமொழிகளில் இலக்கிய வளர்ச்சியும் ஒன்றையொன்று தழுவியே வளர்ந்தன. மத்தியகாலத்து இந்தியாவின் சிறப்பியல்பாக விளங்கிய இராமன் வழிபாடும் கண்ணன் வழிபாடும் மக்களிடையே பரவி வேரூன்றுதற்குக் காரணராயிருந்தோர் நாட்டுமொழிகளிற் பாடிய புலவரேயாம். இவ்வாறாக இந்தியமொழிகளிலே வளர்ந்த இலக்கியம் சமயச் சார்புமிக்குடையதாய்ப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தோன்றிற் றெனலாம். இவ்விலக்கியங்களிற் காணப்பட்ட உலகியற் சார்பு, பெரும்பாலும், சிருங்காரரசம் மிக்க காதற் கவிதைகளிலேயே வெளிப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற் கூற்றிலேயே இந்திய இலக்கியம் உலகிற்கு சார்புடையதாக வளரத் தலைப்பட்டது—ஆங்கிலக் கருத்துக்கள் வந்து புகுந்தமையே அதற்குத் தலையாய காரணமாகும். இவ்வளர்ச்சிக்கு இன்றியமையாத அத்திவாரமிட்டோர் பெரும்பாலும் மிசனரிமாரும் பிறநாட்டாரு மேயாவர். பிறமொழிகளைக் கற்றுத்துறைபோய இத்தகைய அறிஞர் சிறந்த அகராதிகளையும் இலக்கண நூல்களையும் யாத்தளித்தனர். உதாரணமாகச் சேர்மன் மிசனரியான குண்டேட்டு என்பாரே மலையாள மொழிக்குச் சிறந்தவோர் அகராதியைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாத்தளித்தனர். இன்னும், கோல்டுவெல் பாதிரியார் எழுதிய 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணமொழியியல் வளர்ச்சிக்கு அத்திவாரமிடுவதிற் செரம்பூர் மிசனரிமார் செய்த பெரும்பணி போற்றத்தக்கது.

இவ்வாறு உறுதியாக அமைந்த அடிப்படையிலே, நாட்டுமொழிகளைப் பாட சாலைகளிற் போதனைமொழியாகப் பயன்படுத்தல் இயல்வதாயிற்று. இவ்வகையில், பாடநூல்களை எழுதுவதே முதற் கட்டமாயிற்று. பழைய பண்டிதன்மார்

இத்தகைய முயற்சியை மேற்கொள்ளுவதற்கு முன் வாராதலின், கல்வித் திணைக்களத்தாரின் கட்டளைக்கிணங்கவே பாடநூல்கள் பெரும்பாலும் எழுதப் பட்டன. பாடநூல்கள் எழுதப்பட்ட இக்காலத்திலேயே உரைநடையெழுதும் முறையும் விரிவாகப் பின்பற்றப்பட்டது. கடந்தகாலத்திலே தக்க கவனஞ் செலுத்தப்படாத ஒரு துறையாகும் இது. இலக்கியமென்று கொள்ளத்தக்க உயரிய நூல்கள் அக்காலத்திலே தோன்றுவிடினும், முறையான வசனநடை உருவாகியது. அந்நடையின் வளர்ச்சிக்கு நாட்டு மொழிகளிலே தோன்றிய பத்திரிகைக் கலையும் பேருதவிபுரிந்தது. பத்திரிகைக் கலையிலே பயன்பட்ட மொழி, உலகெங்கணும் இருந்தவாறே, செயற்கைத்தன்மை மிக்கதாயிருந்தது. எனினும், அது புதிய கருத்துக்கள் வளர்ச்சியடைதற்கு உதவிபுரிந்தது; அக் காலச் சமூக, பொருளாதார, அரசியற் பிரச்சினைகளை எடுத்தாளுதற்கேற்ற வகையில், மொழியை நெகிழ்ச்சியுடையதாக்கிற்று.

தழுவலாயமைந்த இலக்கியந் தோன்றிய காலம் அடுத்ததாகும். மேனாட்டுக் கல்வி பயின்ற வகுப்பாரின் இலக்கியத்திறன் அக்காலை இருவழியாக வெளிப் பட்டது. ஆங்கிலச் செவ்வியல் நூல்கள் முதலில் மொழிபெயர்க்கப்பட்டன; பின்னர், மேனாட்டு இலக்கிய விற்பன்னரின் செல்வாக்கின் வழி, முதநூல்களா யமைந்த புது நூல்கள் எழுதப்பட்டன. இக்காலத்திலேயே பங்கிம் சந்திரர் இசுக்கொட்டாசிரியரைப் பின்பற்றித் தம் நவீனங்களை எழுதினர்; மதுசூதன் தத்தர் என்பார் மிலிற்றனுடைய பாணியிலே எழுதினர்; மற்றுத் துவிசேந் திரலால் ராய் என்பார் ஐரோப்பிய உத்திகளைக் கையாண்டு வரலாற்று நாடகங் களை ஆக்கினர். இத்தகைய அபிவிருத்தி பிறமொழிகளிலும் பின்னர்க் காணப் பட்டதாயினும், இத்துறையில் வங்கமே பொதுவாக முன்னணியில் நின்றது.

இவ்வளவோடு திருத்தியடையாத புதிய தலைமுறையினர்க்கு வழிகாட்டியாக இரவீந்திரநாததாகூர் தோன்றினர். இந்திய இலக்கியத்துறையிலே ஒரு பெருஞ் சத்தியாக இரவீந்திரர் தோன்றியதோடு, நாட்டுமொழிகள் நவீனப் பெரு மொழிகளாக வளர்ச்சியடைந்தமை முழுமைபெற்றது எனலாம். கவி இரவீந் திரர் எந்தத் தலைமுறையினர்க்கு ஒரு தீர்க்கதரிசியாகவும் பொதுவான மேதை யாகவும் விளங்கினரோ அந்தத் தலைமுறையினர் விழிப்படைந்த இந்தியாவின் புதிய வாழ்க்கை நெறிக்கு, அதன் பண்புகளுக்கு உருவங்கொடுக்கப் பிரயா சைப்பட்டனர். இவ்வியக்கம் ஏககாலத்தில் இந்திய மொழிகள் அனைத்துக்கும் பரவிற்று. இனி, முழுமையுற்ற தேசியவுணர்ச்சியும், சுவதேசியியக்கமும், தில கர் அரவிந்தர் ஆகியோரின் தலைமையிலே தீவிரவாதமும் முந்துற்று நின்ற காலமும் இதுவேயென்பது குறிப்பிடத்தக்கது. 'ஜன கண மன' எனுங் கீதம் தலைப்பட்டு நின்ற இக்காலத்தில், 1903—10 வரையான காலத்தில், நாட்டபி மானமே கவிதையிலக்கியத்திற் பெரிதும் விரவிநின்றமை கண்கூடு. அக்காலை, நாட்டபிமானக் கருத்துக்களே நாடகத்திலும் நவீனத்திலும் கவிதையிலும் மிக்குயர்த்துக் கூறப்பட்டன.

தாகூருடைய மேதாவிலாசமானது, வங்கத்திலே மட்டுமன்றி இந்தியாவின் ஏனைப் பாகங்களிலும், நவீனப் பண்பை இப்புதிய மறுமலர்ச்சியிலே ஆழமாகப் பதித்துச் சென்றது. மொழிநடையிலே அவர் உயிர்ப்பையும் நெகிழ்ச்சியையும் பெய்தார்; பழைய மரபினின்றும் விடுதலைபெற்ற இலக்கிய வடிவங்களையும் பாணிகளையும் அவர் உருவாக்கிப் பரப்பினர்; வங்காள இலக்கியத்திலே, சர்வ நாடுகளுக்கும் பொதுவான ஒரு தன்மையைப் புகுத்தி, அதற்கென உலகிலே ஒரு தனியிடம் அமைத்துக் கொண்டார். ஒப்பற்ற மேதாவிலாசத்தைத் தாகூர் உடையராயினும், தனியயொரு பிறவியாக அவரைக் கொள்ளலும் பொருந்தாது. என்னே! நாட்டபிமானத்தால் உந்தப்பட்டு, முன்னைப்போலியிலக்கியத்தின் தளைகளை அறுத்தெறியும் ஆசையால் ஏற்பட்டு இலக்கியம் படைத்த கவிஞரும் எழுத்தாளரும் இந்திய மொழிகள் பிறவற்றிலும் தோன்றினரன்றே? தமிழ்க் கவி சுப்பிரமணிய பாரதியாரும் மற்று முகமது இக்பாலும் இவ்வகையிற் குறிப்பிடத்தக்க பெருமை படைத்தோரே அன்னாரின் கவிதைகளில் தேசிய வுணர்ச்சியும் புரட்சிமிக்க கருத்தும் மிளிர்வது காணலாம்.

உலகப் பெரும்போர்களுக்கு இடைப்பட்ட காலம்—பழைமை கடிந்து புதுமை போற்றிய—'தந்தையர்க்கு மாறுய்த் தனையர் எழுந்த' காலமாகும். புதிய புதிய இலக்கிய வடிவங்களைத் தேடியமைப்பதில் நாட்டமும், உணர்ச்சிகளுக்கும் கருத்துக்களுக்கும் உருவங்கொடுப்பதிற் புதிய முறைகளைப் பரிசோதித்துப் பார்க்கும் விருப்பும், வழமையான பாவகங்களினின்றும் விடுதலை நாடும் ஆசையும் எங்கும் எம்மொழிகளிலும் காணப்பட்டன. சமுதாயத்திலே காணப்பட்ட அமைதியின்மையும் விழிப்பும் இலக்கியத்திலேயும் வெளிப்பட்டு, 'இறியலிசம்' எனும் மெய்ம்மை நவிற்சியிலே தமது இலட்சியத்தைக் கண்டுகொண்டன. இப்சன், தெசுற்றிவிசுக்கி, செகோவ போன்றோரே மக்களின் அபிமானத்துக்குரிய இலக்கியமேதைகளாய்த் திகழ்ந்தனர். அரசியலரங்கிலே உச்சம் பெற்றிருந்த காந்தியவியக்கமானது கிராமாந்தரங்களோடும் இளைஞரை இட்டுச் சென்று, பண்டுபோல, இந்திய 'மண்ணிலே, இலக்கியம் விளைதற்கு வேண்டுந் தொடர்பை மீண்டும் தாபித்தது. முன்சியும் பிரேம்சந்தரும் சரத்சந்திரருமே இக்கால நாவலாசிரியர்க்கு உதாரண புருடராகக் கொள்ளத்தக்கவர் எனலாம். புதிய தலைமுறையினரைப் பொறுத்தவரை, பங்கிம் சந்திரர் போன்றோர் எழுதிய சிருங்காரரசமிக்க நவீனங்கள் பள்ளிப்பருவத்திலே வாசித்து இன்புற்ற பழங்கதைகளாகிவிட்டன.

அதிகாரம் 3

யப்பான்

யப்பானியப் புத்துயிர்ப்பானது இந்திய—சீனப் புத்துயிர்ப்பினின்றும் இரு வகையில் வேறுபட்டது. முதலாவதாக, இந்தியாவிலும் சீனத்திலும் மறுமலர்ச்சிக்குத் தோற்றுவாயாக அமைந்தது, சமுதாயத்தைத் தாராண்மைப் படுத்தவேண்டுமெனும் விருப்பேயாகும். மக்களாட்சிக்கு அதுவே வலியூட்டும் எனக் கருதப்பட்டது. நாட்டு நாகரிகங்கள் குலைவடைந்துவிடினும் விடும் எனும் நிலையே ஆங்குத் தலைவர்களை எதிர்நோக்கி நின்றது. எனவே சமுதாயக்கட்டுக் கோப்பு நிலைகுலைந்து குழம்பிவிட, அக்குழப்பத்தை அடியீடாகக் கொண்டே அந்நாடுகளிற் புத்துயிர்ப்பியக்கங்கள் தோன்றி வளர்ந்தன. அந்நாட்டுத் தலைவர்கள் தத்தம் சமுதாயங்களுக்கு உறுதி பயக்கக்கூடிய இலட்சியங்களை அடியாதாரமாகக் கொள்ளல் வேண்டும்; அன்றேல், மாளவேண்டும் எனும் நிலையே அந்நாடுகளிற் காணப்பட்டது. ஆயின் யப்பானிலோ, புத்துயிர்ப்புக்கு ஊக்கமளித்த சத்தி, தாராண்மைவாதமன்று—எதிர்வினைப்பாடேயாகும். சமுதாயக் கட்டுக்கோப்பு நிலைகுலைந்துவிடுமேயெனும் அபாயம் ஆங்குத் தோன்றவில்லை. இராணுவ நோக்கிலே, மேனாடுகளினும் யப்பான் வலிகுறைந்ததே யென்பதை யப்பானியத் தலைவர்கள் உணர்ந்தனர். எனவே தாராண்மை வாதத்தின் வாயிலாக வலிபெற்ற ஒரு யப்பானை உருவாக்குவதில் அன்னர் கருத்துக் கொண்டிலர். மேனாட்டு அறிவையும் உத்திகளையும் இயன்றவரை விரைவாகக் கிரகித்து யப்பானது வலிபெருக்குவதே அன்னரின் குறிக்கோளாயிற்று.

இரண்டாவதாக, இந்தியாவிலும் சீனத்திலும் சீர்திருத்தவியக்கமானது தன்னியல்பாகத் தோன்றிற்றுதலின், அதனை ஒரு திட்டத்துக்கமைய நெறிப்படுத்தும் வாய்ப்பு இருந்திலது. அது முதலில், ஒரு தத்துவ விசாரமாகத் தோன்றி காலப்போக்கிலே ஊக்கமும் ஆக்கமும் பெற்று, பல வகுப்பாரின் முயற்சியாலும் உத்வேகத்தாலும் தேசியப்பண்பைப் பெற்றது. பூட்கை பற்றிய கருத்துக்கள் அன்னரை ஊக்கியதில்லை. நாட்டின் பெருமைக்கு முதற் படி விருப்பே அவர்களை ஊக்கிற்று. ஆயின் யப்பானில், மேனாட்டுக் கலைகளையும் விருப்பே அவர்களை ஊக்கிற்று. ஆயின் யப்பானில், மேனாட்டுக் கலைகளையும் முறைகளையும் தழுவுவதிலேயே நாட்டின் ஏமாப்புத் தங்கியுளது என்பதை உணர்ந்ததன் பின்னர், அரசாங்கமே முன்வந்து மறுமலர்ச்சியியக்கத்தை படுத்தி ஒரு திட்டத்துக்கமையச் செயற்படுத்திற்று. நாட்டின் ஒருமைப்பாட்டையும் இராணுவத்தின் மூலபலங்களையும் பேணிக் காப்பதன் அவசியத்தை அரசாங்கம் அப்பால் ஒருகணமேனும் மறந்திலது.

எனினும், சீன இயக்கத்திலே காணப்படாத ஓர் ஒற்றுமையை யப்பானிய இந்திய இயக்கங்களிலே காணலாம். நிப்பன் நாட்டின் புத்துயிர்ப்பிலே காணப்பட்ட இன்றியமையாத ஓர் அமிசம் யாதெனில், சித்தோக்கொள்கை ஓர் அரசாங்க மரபாகவும் மக்களின் மதமாகவும் சீர்திருத்தப்பட்டு வலிபெற்று வளர்ந்தமையேயாம். அவ்வாறே இந்தியாவிலும் இந்துமதச் சீர்திருத்தமே மறுமலர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தவாற்றைக் கண்டோம். ஒரு நாட்டின் தனித்துவத்தையும் வலியையும் பேணி வளர்க்க வேண்டுமாயின், ஆன்மிக ஒற்றுமை அந்நாட்டுக்கு அவசியமென்பதை இவ்விரு நாடுகளும் உணர்ந்தன. சீனத்திலே மிசனரிமார் செய்த கைங்கரியத்தினால் ஆன்மிகத்துறை பெரிதும் சூழப்பமுற்றிருந்தது. அதன் விளைவாக, அறிவுத்துறையிலே விடுதலை நாடிய இயக்கமானது தற்கால வாழ்க்கைக்கு அவசியமற்றதென விலக்கவேண்டிய ஒரு மூட நம்பிக்கையே மதம் எனும் கருத்தைக் கொண்டதாயும் இருந்தது. கொன்பியூசியசின் 'சீனப் புதுப்பெருக்கானது' அடிப்படையில் மதத்துக்கு விரோதமானதாயும், போதனைகளால் உருவாக்கப்பட்ட ஒழுக்கக்கோட்பாடுகளை மேற்கொண்டிருந்த சீன அறிவாளிகள், சமயவாழ்க்கையை எஞ்ஞான்றும் குறைவாகவே கணிப்பவரென்பதை முன்னர்க் கண்டோம். அன்னார்க்கு சமயமறுப்பு ஏற்புடைத்தாயிருந்தது வியப்பன்று.

யப்பானிலே, விலக்குப் பூட்கையை இடையோசி செயற்படுத்திய பின்னரும், மேனாட்டு அறிவுக்கலைகளில் ஈடுபாடுடைய ஒரு சிறிய வகுப்பார் இன்னும் இருந்தனர். தெசிமா எனுமிடத்திற் களஞ்சியமொன்று நிறுவுதற்கு இடச்சு மக்கள் அனுமதிக்கப்பட்டனர். மேனாட்டு அறிவுத்துறையில் ஈடுபாடு கொண்ட யப்பானியர் பெரும்பாலும் அவர்களோடே தொடர்புகொண்டிருந்தனர். பிலிப்பீன் தீவுகளை வென்றடிப்படுத்தல் வேண்டுமெனும் ஆசை யப்பானுக்கு இருந்த போதிலும், இசுப்பானியர் ஆங்கு ஆட்சி பெற்றமையால் அவ்வாசை தடைப்பட்டபின்னர், சீனக்கடல்களில் ஐரோப்பிய வினத்தோரின் முயற்சிகளை அது பெருஞ் சமூசயத்தோடும் அக்கறையோடும் பார்த்திருந்தது. யப்பானிய அரசாங்கம் அச்சமும் சமூசயமுமே கொண்டிருந்தபோதிலும், மேனாட்டு அறிவுக்கலைகளில் ஆர்வங் கொண்டிருந்த வகுப்பார் இடச்சு இனத்தோர் மூலமாக மேனாட்டு விஞ்ஞான அறிவைத் தேடிப்பெறுவதில் அயராது உழைத்தனர். பிற ஐரோப்பியரின் உதவியையும் அவர்கள் ஒரோவழி பெற்றனர். அத்தகையாருட் குறிப்பிடத்தக்கோர், 1690-2 வரையில் யப்பானில் வாழ்ந்த சேர்மானியனை கெம்பர் என்பானும், பிற்றை நாளில், துன்பேக்கு, சீபோல்டு என்பாருமாவர்.

'இடச்சு' அறிவுத்துறையிலே யப்பானியர்க் கிருந்த ஆர்வம் பரக்கக் காணப்படாவிடினும், சிற்சில அறிவாளிகள் வட்டாரங்களிலே அது மிகத் தீவிரமாயிருந்தது. இடச்சுக்களஞ்சியசாலையின் அதிபன் யெட்டோவுக்கு ஆண்டுதோறும் வந்துபோவது வழக்கம். அப்போது யப்பானிய அறிவாளிகள் அத்தருணங்களைத் தவறவிடாது, விஞ்ஞான விடயங்கள்பற்றித் தம் அறிவைப் பெருக்குதற்கு வேண்டும் செய்திகளைச் சேகரித்துக் கொள்ளல் வழக்கமாயிருந்தது. எட்டாம் நூற்றாண்டின் நடுக்கூற்று வரையில் 'இடச்சு அறிவாளிகளின்' கோட்டி

யொன்று, இரங்ககுசா எனப்படுவது, உருவாகி மேனாட்டு அறிவைப் பயில்வதில் அயரா ஊக்கங்கொண்டிருந்தது. இக்கோட்டியாரின் முயற்சி காரணமாக வானியல், கணிதம், மருத்துவம், தாவரவியல் எனுமித்துறைகள் பற்றிய தரமான நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு, யப்பானிய நிபுணரிடையே பரிமாறப்பட்டன.

யப்பானியரின் கவனம் விஞ்ஞான விடயங்களிலேயே முற்றுகச் சென்றமை இங்குக் கூர்ந்து நோக்கத்தக்கது. அறிவொளி பரவிய அக்காலத்தில் ஐரோப் பாவிலே பெருவளர்ச்சியடைந்த கலைகளாய கவிதை, இலக்கியம், தத்துவம், சமூகவிஞ்ஞானம் போன்றவற்றில் யப்பானியர் கிஞ்சித்தும் கவனஞ் செலுத்த விரும்பினரல்லர். இந்தியாவிலே இராம் மோகன் ராய் கொண்டோசெற்று என் பாரோடு கடிதமூலமாய்ச் சம்வாதங்கள் செய்துகொண்டிருந்தகாலே, யப்பானிய அறிஞரோ கணிதப் பாடநூல்களே மொழிபெயர்ப்பதில் மூழ்கியிருந்தனர். மேனாட்டு மக்கட்பண்பிலோ சிந்தனைச் சுதந்திரத்திலோ யப்பானியர் ஆர்வங் கொண்டிலர். மேனாடுகளின் ஆதிக்கத்துக்கு எதுவாயிருந்த சூக்குமத்தை அறி வதே அவர்கள் நோக்கம். "மூத்தோர் களரி" எனுங் கோட்டியைச் சேர்ந்த தக்கசீமா, சக்குமா சோசன், வட்டனபே நோபுரு, தக்காஞே போன்றோரின் வாழ்க்கை வரலாறும் மேற்கூறிய உண்மையினையே விளக்குகின்றது. மூத்தோர் களரி யென்பது பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதலரைக் கூற்றிலே மேனாட்டு அறிவுத்துறையில் ஆர்வங்கொண்ட யப்பானியர்க்கு ஒரு மத்திய பீடமாய் அமைந்தது. சீன நாட்டைப் பிரித்தானியர் மிக எளிதாகத் தோல்வியுறுத்தி யமைகண்டு யப்பானியர் பெருங் கவலையும் அச்சமுங் கொண்டனர். வியப்பூட்டு வதும் எதிர்பாராததுமான அத்தோல்விக்குரிய காரணங்களே, அதிகாரவர்க்கத் தினர் ஆராய்ந்தறிய முற்பட்டனர். மேனாட்டுச் சார்புடைய கோட்டியே தயக்க மின்றித் தக்க விடையளித்தது. சக்குமா எழுதிய விஞ்ஞாபனமொன்றில் பொருள் பொதித்த சில வாசகங்கள் காணப்படுகின்றன; 'மேனாடுகள் கல்வி யிலே தாங் கொண்ட ஈடுபாட்டின் மூலமாகத் தம் அறிவை வளர்த்து, கொன் பியூசியசு பிறந்த நாட்டையுமே தாக்கிப் புறங்காணுமளவிற்குத் தம் வலி யைப் பெருக்கியவாறெவ்வாறு? அன்னியக் கல்வி பகுத்தறிவுக்கொட்டியதாய் இருப்ப, சீனக்கல்வி அவ்வாறில்லாமையே காரணம்.

அக்கால முதலாக அன்னியக் கல்வி—முக்கியமாகத் தற்காப்புச் சம்பந்தமான விடயங்களிலே—யப்பானிற் சாலவும் முன்னேற்றமடைந்தது. ஒரு நாட்டின் பலம் எவ்வாறு உருப்பட்டு இயங்குகிறது என்பது பற்றி மேனாட்டோர் கொண்ட கொள்கைகளைக் கற்றறிதல் தேசாபிமானிகளின் கடன். அவ்வாறுகவே நாட் டின் ஏமாப்பை உறுதிப்படுத்தலாமேயன்றி 'மூதுரைகளால் அதனே மேம்படுத்த முடியாது' என்றவாறான கருத்துக்களே வட்டனபே நோபுரு, தக்காஞே நாகா கிடே போன்ற அறிஞர் மக்களிடையே பரப்புவாராயினர். இவ்விருவருள் முன்ன வன் செல்வாக்குமிக்க அரசாங்க அதிகாரி; கவிஞன்; ஓவியன்; சிறந்த அறி வாளி. எழுத்தாளனான மற்றையவன் கனிப்பொருளியல், வரலாறு, இராணுவ வியல் போன்ற பலவிடயங்கள் பற்றி ஏராளமாக எழுதினன். இவ்வறிஞரின் சிந்தனை செல்லாத துறையில்லை. நாட்டின் பொருளாதாரத்துக்கு முக்கியமான

கப்பற் சேவை, கைத்தொழில், அரணமைப்பு, நாணயச் சீர்திருத்தம், அரசாங்க சேவைக்கு ஆள் திரட்டல் போன்ற சகல விடயங்களிலும் அவர்கள் சிந்தனை செலுத்தினர். இத்தகைய முற்போக்குக் கோட்டியாரிடையே மிக்க செல்வாக்குப் பெற்றிருந்த யொக்கோயி சோஞன் என்பான் அதிதீவிரமான தேசபத்தன். யப்பானே உலகிற்குத் தலைமைதாங்க வேண்டுமெனவும் அவன் வெளிப்படையாக எடுத்துரைத்தான். ஆதிக்க விரிவை யாதரித்த இந்த அறிஞனுடைய கருத்துக்கள், ஆசியக் கண்டத்தில் முதன்மை பெறுதற்கு யப்பான் முயன்றகாலத்தில், மக்களாதரவைப் பெரிதும் பெற்றன.

யொக்கோயி சோஞனைத் தலைவனாகக்கொண்ட புத்துயிர்ப்பாளர்க்கும் மேஞட்டுக் கோட்டிக்குமிடையே உருவாய கூட்டுறவு சாலவும் முக்கியமானது. மேஞட்டு விஞ்ஞானத்தில் ஆர்வம் மிகப் பெருகிய அதே காலத்தில், தூய சிந்தோக் கொள்கையைத் தழுவிய பிற்போக்கான தேசாபிமானத்துக்குச் சார்பான இயக்கமும் ஒருங்கே தோன்றி வளர்ந்தது. பழைமைபோற்றும்—அதாவது பண்டைக்கல்வியைப் போற்றும்—பிரிவுகள் பல தோன்றின. தொக்குகாவா சோகுனேற்றின் தலைவர்களிடையே ஆதரவு பெற்றுப் பரவிய கொன்பியூசியசுக் கோட்பாடானது, பழைமைபோற்றும் அந்தக் கட்சிகளின் போதனை காரணமாகச் செல்வாக்கிழந்தது. இவ்வியக்கத்திலே பங்குபற்றிய தலைவர்களுட் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கோர் காமோ நோ மபுச்சியும் (1697-1769), மொட்டூரி நொறிநாகா என்பாரும் (1730-1801), இராட்டா அற்சுற்றூனே (1776-1843) என்பவருமாவர். கொன்பியூசியசுக் கருத்துக்கள் பரவியமையாலும், சிந்தோக் கொள்கை மறைந்தமையாலுமே 'ஆதிக்கம் பணியாளர் கைப்பட்டு, மிக்காடோ வெறுஞ் சூனியமாகிவிட்டார்' என்பதே மபுச்சியின் சித்தாந்தமாயிற்று.[1] பேரரசனையே யப்பானியத் தேசியப்பண்பின் உருவமாகக் கொள்ளலும், சூரியதேவியின் வழித்தோன்றலாக அப்பேரரசனைப் போற்றலுமே சிந்தோ மரபின் அடிப்படைக் கருத்துக்கள் என்பதை இங்கு வற்புறுத்திக் கூறல் வேண்டும்.

'மன்னனைப் போற்றுமின், அன்னியனை வெளியேற்றுமின்' என்பதே தேசியவாதிகளின் சுலோகமாயிற்று. தூயசிந்தோக்கொள்கையாளரும் அதனையே ஆதரித்தனர். அன்ஞரும், மேஞட்டுக்கல்வியை ஆதரித்தோரும் கொன்பியூசியசுக் கருத்துக்களை எதிர்த்துத் தாக்கினர் எனுமாற்றால், அவ்விருசாராரார்க்குமிடையே ஒருவகையில் ஒற்றுமை காணப்பட்டது ; சீனக் கல்வி பகுத்தறிவுக்குப் பொருந்தாது ; அவ்வழி அது அபாயமீக்கது, என்றவாறுகச் சக்குமாவும் தமது விஞ்ஞாபனத்திற் கூறினரன்றே? அன்றியும் மாறுதலடைந்துவிட்ட யப்பானில், பலம் பொருந்திய மத்திய அரசாங்கத்தைப் பேரரசனுடைய தலைமையிலேயே அமைத்தல் சாத்தியமாகும் என்பதை மேஞட்டுக் கோட்டியாளரும் முற்போக்குடையார் உணர்ந்தனர். மேஞட்டு அறிவுக்கும் தூயசிந்தோ மரபுக்குமிடையே உருவான இந்தக் கூட்டுறவு விசித்திரமானது. மெயிசி மீட்சிக்குப் பின்னர்த் தோன்றிய யப்பானிய மறுமலர்ச்சியின் பண்பிலே அக்கூட்டுறவின் விளைவுகளைத் தெளிவாகக் காணலாம்.

[1] Holtom : Modern Japan and Shinto Nationalism.

மெயிசிக்காலத்தின் அரசியல் வரலாறு பற்றியும், மேனாட்டு அறிவைக் கிரகித்துப் பேரரசை ஒரு நவீன சமுதாயமாக மாற்றுதற்கு நவ யப்பானியத் தலைவர்கள் மேற்கொண்ட முயற்சி பற்றியும் சற்று விரிவாக ஏற்கவே கூறினேம். மெயிசிகாலத்து அரசறிஞர் தாம் எடுத்துக்கொண்ட சகல முயற்சியிலும் உன்னதமான வெற்றி கண்டனர். அன்னர் மத்திய அரசாங்கத்தைத் தாபித்தனர்; நவீன இராணுவ அமைப்பை உருவாக்கினர். மக்களை ஒழுக்காற்றுப்படுத்தி, நாட்டபிமானம் மிக்க ஒரு சமுதாயமாக்கினர்; நாட்டிலே கைத்தொழில்களை வளர்த்து அதன் பொருளாதார வலியைப் பெருக்கினர்; தேசியக் கல்வி முறையை உருவாக்கி, மேனாட்டுத் தொழினுட்ப அறிவை அவ்வழி நாட்டிற் பரப்பினர்; நவீன சமுதாயத்துக்கு வேண்டும் பொருளியல் அமைப்பைத் தோற்றுவித்தனர்—இவ்வாறாக யப்பான் நாட்டை ஒரு பெரும் வல்லரசாக மாற்றியமைத்தனர் எனலாம். முறையான ஒரு திட்டந் தீட்டி, அதற்கமையவே யப்பான் மேனாட்டு மயமாக்கப்பட்டது. மிக்க கவனமாகச் சிந்தித்து, நெறிப்படுத்தப்பட்ட ஒரு முறையாகும் அது. இந்நோக்கத்திற்குப் பயன்படத் தக்கனவும், எடுத்துக்கொண்ட இலட்சியத்துக்கு அனுசரணையாக அமையத் தக்கனவுமே ஏற்றுக்கொள்ளப்பட்டன; மற்றையவையெல்லாம் அறவே விலக்கப்பட்டன. மெயிசிப் பேரரசனுந் தான் எழுதிய ஒரு கவிதையிலே வருமாறு கழறினன்.

> "நல்லது தழுவியும், அல்லது விலக்கியும்
> எந்நாட்டவர்க்குங் குறையாச் சிறப்பில்
> இந்நாட்டவரை யான் உய்ப்பன் கொல்லோ."

இக்குறிக்கோளை அடைதற்குக் கையாண்ட முறைகள் பிறவிடத்தில் ஆராயப்பட்டுள. சிந்தோ மரபை அரசு தன் மரபாகவே ஏற்றுக்கொண்டவாற்றையும், சமுதாயவாழ்க்கை அச்சிந்தோ மரபோடு முற்றுகக் கலந்தவாற்றையும், இனத்தை மையமாகக் கொண்ட அச்சம்பிரதாயமுறை தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குதற்கும், யப்பானுடைய எதிர்காலத்திலே நன்னம்பிக்கையை உறுதிப்படுத்தற்கும், யப்பானிய அரசின் அடிப்படைக் கருத்துக்களுக்கு மாறான சகல எண்ணங்களையும் புறக்கணித்தற்கும் பயன்பட்டவாற்றையுமே இங்கு அழுத்திக் கூறல் வேண்டும்.

மெயிசியாட்சியின் முதலாமாண்டில் விடுக்கப்பட்ட அரசாணை வருமாறு கூறிற்று: 'தெய்வங்களை வழிபடுதலும், சிந்தோச் சம்பிரதாயங்களை வழுவாது போற்றலும் பேரரசுக்குச் செய்யும் பெருமாட்சிகளாகும்; அவையே தேசிய வரசுக்கும் கல்விக்கும் அடிப்படைத் தத்துவங்களாகும்.....பேரரசரின் ஆட்சி மீட்சிபெற்ற இத்தருணத்திலே, தொக்கியோவே புதிய தலைநகராக்கப்பட்டுளது; பேரரசர் இனித் தாமாகவே அரசாட்சி செய்வர். முதலில், சிந்தோக்கிரியைகள் துவக்கப்படும்; சட்டநிருவாகமும் ஒழுங்குபேணுதலும் உறுதிப்படுத்தப்படும். **சமயநெறியும் ஆட்சிநெறியும் இவ்வாறாகவே புத்தமைப்புப் பெறும்.**

'சய் செய் இச்சி[1]' என யப்பானிலே வழங்கப்பட்ட இக்கோட்பாடு அரசுங் கிரியையும் ஒன்றேயெனக் கொண்டது. அரசாணை எடுத்துக் கூறியது போன்று, அக்கோட்பாடு யப்பானியத் தேசிய மறுமலர்ச்சிக்கு அடிப்படைச் சிறப்புடை யதாயிற்று. அரசும் மதமும் ஒன்றேயெனும் இக்கோட்பாட்டின் ஆகிவரலாறும் அதேயரசாணையில் விளக்கப்பட்டுளது. அதே தினத்திற் பேரரசரால் வெளி யிடப்பட்ட பிரசித்தம் இவற்றினும் முக்கியமானது. அது வருமாறு : 'நாம் அமெரிக்கையாக அறிவிப்பதாவது : வானுலகத் தெய்வங்களும் பெரு மூதாட் டியும் (எனின் சூரியக் கடவுளின் மகளான அமெத்தராசு ஒமிகாமியும்) அரியா சனத்தை நிறுவி வழியுரிமையை உறுதிப்படுத்தினர். ஒடிவடைதலின்றி வாழை யடிவாழையாக வந்த பேரரசரின் பரம்பரை அதனை மாபுரிமையாகப் பெற்று ஆண்டுவந்துளது. சமயக்கிரியைகளும் அரசாட்சியும் ஒன்றேயாக இருந்தன ; எண்ணிறந்த குடிமக்களும் ஒற்றுமைப்பட்டிருந்தனர். அரசாட்சியும் கல்வியும் மேலோர்க்கு மிகத் தெளிவாயிருந்தன. அவர்க்குக் கீழுள்ள மக்களின் பழக்க வழக்கங்கள் அழகாயிருந்தன. எனினும், மத்திய காலந்தொட்டுச் சிதைவும் முன்னேற்றமும் மாறிமாறி வந்த காலங்கள் காணப்பட்டன. ஒரோவழி மார்க் கம் தெளிவாயிருந்தது ; ஒரோவழி அது இருணிறைந்திருந்தது. அரசாட்சியுங் கல்வியும் தழைத்தோங்கத் தவறிய காலம் நெடியதாயிற்று.

இப்போது விதியென்னும் சகடக்காலில், யாவும் புதியனவாகிவிட்டன. அரசையுங் கல்வியையும் நாட்டிற்குத் தெளிவுறுத்தல் வேண்டும். கடவுளர்க்குப் பணிந்தொழுகுவதாகிய பெருநெறியைப் பிரசித்தஞ் செய்தல் வேண்டும். ஆகவே இதனை நாட்டோர்க்குப் பிரசித்தஞ் செய்தற்காகப் பிரசாரகன்மாரை நியமிக் கின்றோம். எங்கள் குடிமக்களே ! நீவிர் இக்கட்டளையைச் சிரமேற்கொள்ளுவீர் களா ?

கல்வியும் அரசியலும் சிந்தோ மாபினின்றும் வேறுபட்டவையாகா—அவை யொன்றேயாம். யப்பானிய மறுமலர்ச்சிக்கு இவ்வொருமைக் கோட்பாடே அடிப்படைக் கருத்தாக இருந்தது. யப்பானியக் கல்வித் திணைக்களம் கல்வி பற்றித் தனது கொள்கையை விளக்குமுகமாக வெளியிட்ட பிரகடனம், கொக் குற்றை நோ ஒங்கி[2] (தேசிய அமைப்பின் அடிப்படைத் தத்துவங்கள்) என அழைக்கப்பட்டது. அது வருமாறு விதித்தது. 'அடிப்படைச்சார்பிலே கல்வி யானது சமயக்கிரியைகளோடும் அரசாட்சியோடும் ஐக்கியப்பட்டுள்ளது. அதா வது, சமயக் கிரியைகளும், அரசாட்சியும், கல்வியும் தனித்தனியே இயங்கினாலும், இறுதிநோக்கில் அவை மூன்றும் ஒன்றேயாம்'. இக்கால அரசுகளின் வழமை யைப் பின்பற்றி யப்பானும் சமயக்கல்வி போதித்தலை அரசாங்கப் பாடசாலை களிலும் பிற பாடசாலைகளிலும் (1899 ஓகத்து 2 ஆம் தேதியன்று விடுத்த 12 ஆம் இலக்கக் கட்டளைப்படி) தடைசெய்தாலும், அரசாங்கச் சிந்தோமரபு சகல பாடசாலைகளிலும் கட்டாய பாடமாக விதிக்கப்பட்டது. சிந்தோ மரபு சமயமாகாது ; குடிமைப் பொறுப்பை நிருவகித்தற்கு வேண்டும் ஒரு பயிற்சியே

[1] Sai sei itchi.
[2] Kokutai no Hongi.

அதுவென முன்னமே பிரகடனஞ் செய்யப்பட்டவாற்றை இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். பிற சமயபோதனைகள் யாவும் விலக்கப்பட, சிந்தோமரபே அதி முக்கியமாகப் போற்றப்பட்ட கட்டாய பாடமாகியது. இக்கொள்கையாற் பெரிதும் பாதிக்கப்பட்டோர் மிசனரிமாரே.

'கிரியையும்' அரசியலுங் கல்வியும் இணைந்த இம்முக்கூட்டே யப்பானிய மறுமலர்ச்சிக்கு அத்திவாரமாயிற்று. அது தாராண்மைக்கொள்கைக்கு மாறுபட்டதாய், சிந்தனைச் சுதந்திரத்துக்கு விரோதமானதாய் இருந்தபோதிலும், மேனாட்டு நாகரிகத்தின் சாதனைகளைக் கண்டு மருட்கையடைந்திருந்த காலத்தில் யப்பானுக்கு உறுதுணையாய் அமைந்து, மாற்றங்கள் பல வந்துற்ற காலத்தும் அந்நாட்டைக் காத்தளித்தது. மெயிசிமீட்சியைத் தொடர்ந்த இருபதாண்டுக் காலத்தில், மேனாட்டு விடயங்களிலே அளவிறந்த ஒரு மோகம், எல்லை கடந்து வெளிப்பட்ட ஒருபாசம், யப்பானிய நகரமக்களிடையே காணப்பட்டது. யப்பானிய மக்களின் வளர்ச்சியில் காணப்பட்ட இப்பருவத்தைச் சன்சம் எஞ்பான் வருமாறு வருணித்தான் : 'மேனாட்டுப் பாணியில் அமைந்த உடைகளையும் தோற்சப்பாத்துக்களையும் அணிதல் இப்போது அமைவெனக் கருதப்பட்டது... .....1875 ஆம் ஆண்டுக்கு முன்பின்னை காலத்தில், பூரணமான அன்னிய உடையை அணியும் வசதி படைத்த யப்பானியர் மிகச் சிலரே. என்றாலும் அன்னிய உடைவகையில் இரண்டோர் உருப்படியையேனும் அணிதல் வழக்கமாயிருந்தது. வேடிக்கையான சில கலப்பு உடைகளை யப்பானியர் வகுத்துக் கொண்டனர். காற்சட்டையணிந்து அதற்கு மேல் கிமோனோ தரித்தல். பருத்தித் துணியாலாய பெரிய கோற்றணிந்து, பருத்த பட்டுச்சட்டைதரித்து, அரைப்பட்டியிலே உடைவாளிரண்டு மாட்டிக் கொள்ளல் போன்ற வழக்கங்களை அன்னர் தழுவிக் கொண்டனர்'.

இளஞ்சிறுருக்காக 1878 இல் யாக்கப்பட்ட ஒரு **பாடல், யப்பானி**ற் காணப்பட்ட இப்புதிய நிலைவரத்தை விளக்குவதாக அமைந்துளது. நாகரிகப் பந்துப் பாட்டு என அழைக்கப்பட்ட அப்பாடல் மேனாட்டுப் பண்பாட்டின் நன்மைகளைச் சிறுபிள்ளைகளின் பிஞ்சு மனத்திலே பதிய வைத்தலை நோக்கமாகக் கொண்டது. மேனாட்டு நாகரிகத்தினின்றும் தழுவிக் கொள்ளத்தக்க, வாயுவிளக்கு, நீராவியந்திரம் முதலாயவற்றின் பெயர்களைக் கூவிக்கொண்டே பந்தைக் கிளம்பக் கிளம்ப அடித்துச் சிறுவர் விளையாடினர்.

யப்பானியர் சமயத்துறையிலே கண்ட ஒருமைப்பாடு பிற்போற்குடையதாய், தாராண்மைக்கு மாறுனதாய் இருந்தபோதிலும், விஞ்ஞானம், புலமை, இலக்கி**யம்,** கலைகள**ா**தியாம் துறைகளிலே யப்பானிய மறுமலர்ச்சி ஈட்டிய பெருஞ் சாதனைகளை நாம் கருத்திற் கொள்ளவேண்டும். புத்துயிர் பெற்றெழுந்த யப்பானிற் **கா**ணப்பட்ட புத்தூக்கமானது ஆக்க வழிகளிலே சென்றதாதலின், இருபதாம் நூற்றாண்டிலே அறிவுத்துறைகள் அனைத்திலும் பெரும் புத்துயிர்ப்பு காணப்பட்டது. விரிந்த ஆராய்ச்சியையும் அஃகியகன்ற புலமையையும் பல்கலைக்

கழகங்கள் எங்கணும் ஊக்கின. யப்பானியப் புதயுகத்திலே தீவிரமான புத்துயிர்ப்பின் அறிகுறிகள் காணப்பட்டன. இம்முறையிலே உள்ளார்ந்திருந்த முரண்பாடுகள் சுதந்திரமான சிந்தனை வளர்ச்சிக்குத் தடையாக இருந்தக்கண்ணும், மேனாட்டுக் குடியாட்சி முறைமைகள், பாராளுமன்ற அரசாட்சி, முதிர்ந்தோர் வாக்குரிமை, அமைச்சவை முறை எனுமிவற்றையும் மற்றுப் பழைய யப்பானிய மாபையும் இணங்கவைக்குமுகமாக ஆராய்ச்சி மிகச் செய்யப்பட்டதெனலாம்.

அதிகாரம் 4

சீனம்

சீன மறுமலர்ச்சி—தாராண்மைச் சார்புடையதும் பகுத்தறிவுக்கொத்த தும், மனிதப்பண்பு துறுமியதுமான மறுமலர்ச்சி—கால தாமதப்பட்டே சீனத் தில் வந்துற்றது. அதன் விளைவுகள் குறிப்பிடத்தக்க பெருமையுடையவாயினும், அரசியற் சூழ்நிலை அதன் இயல்பான வளர்ச்சிக்குத் தடையாயிற்று. புதுப் பெருக்கு எத்துணை வேகமாகப் பொங்கிற்றோ, அத்துணை வேகமாகவே தணிந்து ஓடுங்கிற்று. ஆரம்பத்திலே பல சாதனைகளைக் காட்டி நம்பிக்கையூட்டிய மறு மலர்ச்சியியக்கமானது விரைவாகத் தோல்வியடையவே, சீனத்திற் பண்பாட்டுத் துறையிலும் அறிவுத்துறையிலும் வெறுங் குழப்பமே எஞ்சி நின்றது. அவ்வாற் றால், மார்க்சியப் புரட்சிக் கருத்துக்கள் ஊடுருவிப் பரவுதற்கும் வழிதிறந்தது.

சுதந்திரமான ஆராய்வுணர்ச்சி இந்தியாவிலும் பார்க்கச் சீனத்திலேயே கூடிய அளவிற் காணப்பட்டதெனலாம். சீனத்திலே 2500 வருடகாலமாகத் தொடர்ந்த அறிவுவளர்ச்சி காரணமாக, அறிஞரும் சிந்தனையாளரும் காலத்துக்குக் காலந் தோன்றி, ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளை எதிர்த்துப் புதிய இயக்கங் களுக்கு வழிவகுத்துள்ளனர். இந்த ஆராய்வுணர்வை நேராகப் பெற்றிருந் தோருள் முதன்மையானவன் காங் யூ-வேய் என்பான். அவலம் நிறைந்த நூறு நாட் சீர்திருத்தக்காலத்தின்போது குவாங் இசுப் பேரரசற்கு உறுதுணையா யிருந்து ஊக்கமளித்தவன் இவனே.

கற்றன் நகரில் 1858 இற் பிறந்தவனுகிய காங் யூ-வேய், பெரும்பாலுந் தென் ஞட்டைச் சேர்ந்தவராகிய சில அதிகாரிகளிடையே ஓளவு செல்வாக்குப் பெற் றிருந்தான். அவ்வதிகாரிகளுக்குத் தலைவனுயிருந்த மேதகு செயலாளன் வெங் துங்-கோ என்பான், ஆதிக்கவலிமை பெறுதற்கு யப்பான் கையாண்ட வழிமுறை களை நன்கு அவதானித்து, மேனாட்டிலிருந்து கற்கவேண்டியனவற்றைக் கற்கத் தவறியமையே சீனத்தின் முன்னேற்றத்துக்குத் தடையாயிற்றெனுங் கருத்தைக் கொண்டான். இவ்வரசன் குங் 1898 இல் இறந்ததைத் தொடர்ந்து அரசாங்கம் மாற்றியமைக்கப்பட்டகாலை, காங் யூ-வேய் என்பானைப் பொதுவறு திறமையும் உயரிய குணங்களும் உடையானென விதந்துரைத்துப் பேரரசற்கு அறிமுகஞ் செய்தான் வெங் துங்-கோ. காங்கின் கருத்துக்களாற் பெரிதுங் கவாப்பட்ட பேரரசன், சீனம் தன் உண்மைட்டு நிருவாகத்தைச் சீர்ப்படுத்தற்கு உருப்படி யான முயற்சி செய்தாலன்றி, இடர்ப்பாடுகள் வந்துற்றகாலை அவற்றை நிருவ கிக்க முடியாதெனும் நம்பிக்கை கொண்டான். பேரரசன் முதன்முதல் விடுத்த சீர்திருத்தக் கட்டளை இந்நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாய் இருந்தது. அது வருமாறு :



1900 இல் ஐரோப்பிய செல்வாக்கு

பிரதேசங்கள்:

பே.-பிரித்தானிய பேரரசு
பி.-பிரான்சிய
ய.-யப்பானிய
இ.-இரசிய
இட.-இடச்சு
சே.-சோமானிய
போ.-போதத்துக்கேய
ஐ.நா.-அமெரிக்க ஐக்கியநாடு

பே.செ.-பிரித்தானிய பேரரசின் செல்வாக்கு
பி.செ.-பிரான்சிய செல்வாக்கு
இ.செ.-இரசிய செல்வாக்கு

0 200 400 600 மைல்

சினப் பொருத்தமானத் துறைகள் கோடிடப்பட்டுள.



Facing Page 298


100
110
120
130
40
30
20
10
0
10
100
மஞ்சூரியா
காலியா
பேரரசு
நியுசுவாங்கு
யெகோல்
பீக்கிங்கு
சிலி
தியென்சின்
தாய்ரென்
போட் ஆதர் (இ.)
செவு
வெய்-கை-வெய் (பே)
திசிங்ராவோ
கியோச்சோ (சே)
சான்சி
உவாங்கோ (மஞ்சள் நதி)
சியான்
நாங்கிங்கு
சாங்காய்
உவுகு
நிங்போ
சீனம்
ஆங்கோ
அன்யாங்கு
உவுச்சாங்கு
செக்குவான்
யாங்கிசி-கியாங்கு
சாங்சா
சுங்சிங்கு
வெஞ்சோ
பூச்சோ
கியாங்கி
புக்கியென்
அமோய்
போமோசா (ய.)
மீக்கொங்கு
யுனான்
சிங்கியாங்கு
குவாங்சி
கன்றன்
சுவாற்றோ
ஒங்கொங்கு (பே)
மக்கவோ (போ)
பக்கோய் (பி)
பாமோ
மேற் பர்மா
மண்டலே
சான்சு (பே)
தொங்கிங்கு
அனோய் (பி)
குவாங் சவு
அயினான்
பிலிப்பீன் தீவுகள் (அ. ஐ. நா.)
கொச்சின் சீனம்
அனம் (பி)
இந்துசீனம் இலாவோசு
சீயம்
பாங்கொக்கு
(பி.செ.)
கம்போடியா
சைகோன்
கீழ்க் கொச்சின் சீனம் (பி)
வட போணியோ (பே)
புரூனை (பே)
சரவாக்கு (பே)
மலாய்த் தீபகற்பம் (பே)
சிங்கப்பூர்
சுமாத்திரா (இ.)
போணியோ (இட)
செலிபிசு (இட)
மொலுக்காசு (இ.)
கிழக்கிந்திய தீவுகள்
யாவா (இட)
தீமோர்
ஒசுத்திரேலியா (பே)
தொக்கியோ
உராகா
கோபி
யப்பான்
கொரியா
சியோல்
நாகசாக்கி
பசுபிக்கு கடுத்திரம்

'பேரரசுக் குடும்பத்தோர் உட்பட எங்குடிகள் அனைவரும் சீர்திருத்த இலட்சியத்தின் பொருட்டுத் தம்மாலியன்றவரை முயற்சி செய்வதை ஊக்குவான் வேண்டி, நாம் இப்போது இவ்விசேட கட்டளையை விடுக்கின்றோம். ஞானிகள் விதித்த கோட்பாடுகளே கல்விக்கு அடிப்படையாக இன்னும் தொடர்ந்திருக்கும். ஆயின், பொருளற்ற போலிக்கொள்கைகளை ஒழிக்கும்பொருட்டும், அவ்வழி, வினைத்திறமையை அடைத்தற்குமாக, இற்றைக்காலத் தேவைகளுக்கு ஏற்ற வாறு ஐரோப்பியக் கல்வி முறையில் ஒவ்வொரு துறையையும் துணுகி ஆராய்தல் வேண்டும். பொருளாழமற்ற கொள்கைகளைக் கிளிப்பிள்ளை போல மீண்டும் மீண்டும் ஒப்புவிக்கும் வழக்கம் ஒழிதல் வேண்டும்; பயனற்ற சுலோகங்களை விலக்கல் வேண்டும். பயனற்றவற்றை அகற்றிப் பழைய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டதும், காலத்தின் கோலத்துக்கு இசையச் செல்வதுமான கல்வியை விருத்தி செய்வதே நாம் அடைய விரும்புவது. பேரரசு முழுவதற்கும் ஒரு மூன்மாதிரியாகப் பீக்குங்குப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும். சபைச் செயலாளர்கள், மெய்க்காப்பு உத்தியோகத்தர், நீதவான்மார், உயரதிகாரிகளின் மைந்தர், பரம்பரைப் பதவியுடைய மஞ்சுமார் ஆகிய இத்திறத்தாரெல்லாரும் இவ்வில்லங்கமான காலத்துத் தேவைகளுக்கேற்பத் தத்தம் திறமைகளைப் பயிற்றிவளர்க்கும் பொருட்டாக இப்பல்கலைக்கழகத்திலே பயிற்சி பெறுதற்கு உரிமையுடையோராவர். காலதாமதமோ சட்சபாதமோ எவ்வாற்றானும் பொறுத்தேற்றுக் கொள்ளப்படமாட்டாது. அரியாசனத்தின் இவ்வெச்சரிக்கைகளைப் புறக்கணிப்பதும் பொறுத்தேற்றுக் கொள்ளப்படமாட்டாது.'

மேனாட்டு மயமாவதில் யப்பான் கண்ட வெற்றியினின்றும் ஊற்றம் பெற்ற இந்த அசாதாரண முயற்சியானது சிறுபொழுது நிலைத்த செல்வாக்கையே பயந்ததாயினும், கூர்ந்து ஆராயத்தக்கது. பழைய பரீட்சைமுறை ஒழிக்கப் பட்டது; அரசியற் பொருளாதாரம் போன்ற பாடங்கள் பாடத்திட்டத்திலே சேர்க்கப்பட்டன. நவீன முறையில் அமைந்த கல்லூரிகளும் பாடசாலைகளும் திறக்கப்பட்டன. நாவாய்க் கல்லூரி நிறுவத் திட்டமிடப்பட்டது. புகையிரதப் பாதையமைத்தலையும் சுரங்கத் தொழிலையுங் கவனித்தற்கு அலுவலகங்கள் பீக்கிங்கிலே திறக்கப்பட்டன. இலியாங்கு சிச்சாவோ தலைமையிலே மொழி பெயர்ப்புத் திணைக்களமொன்றும் நிறுவப்பட்டது. சொகுசுப் பதவிகள் பல ஒழிக்கப்பட்டன. அடுத்தடுத்து அதிவிரைவாகக் கட்டளைகள் வெளியிடப் பட்டமை கண்டு, பழைமையிலூறிய அரசாங்க அதிகாரிகள் பீதி கொண்டாராகி, ஆட்சியதிகாரத்தை மீண்டும் ஏற்று நடத்துமாறு தவேசர் பேரரசிக்கு விண்ணப்பஞ் செய்தனர். இச்சதி முயற்சியைத் தெரிந்திருந்த குவாங் இசு முந்துற்று நடவடிக்கையெடுக்கத் தீர்மானித்தான்; யுவான் சி கையினை மாளிகைக்கு வரவழைத்து, அவனிடத்து நம்பிக்கைவைத்து, சேனையைச் சீர்திருத்துஞ் சிறப்பான பொறுப்பை ஒப்படைத்தான். அதன்பின்னர் தவேசர் பேரரசியைச் சிறைப் படுத்திவைக்குங் கடமையையும் அவனிடமே விட்டான். கடனும் பழிக்கஞ்சாத

வனுமான யுவான் நேராக யுங் ஓவிடஞ் சென்று, பேரரசன் வைத்த நம்பிக் கைக்குத் துரோகஞ் செய்தான். பேரரசனுடைய திட்டங்கள் பற்றித் தன் ஆதரவாளன் மூலமாக அறிக்கை பெற்ற பேரரசி, 'முதுபுத்தர்' எனும் பட் டப்பெயருடையாள் (பக்கம் 174), கனமேனுந் தாமதியாது நடவடிக்கை யெடுக்கத் தீர்மானித்தாள். பெருங் கழகத்தை அவள் கூட்டி, ஆட்சியதி காரத்தை மீண்டும் ஏற்குமாறு அவனைக் கோரும் ஒரு வேண்டுகோளை அக்கழ கம் நிறைவேற்றச் செய்தாள். சீர்திருத்தம் நாடிய பேரசன் தாமதமின்றிப் பதவிநீக்கப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டான். மேனாட்டு மயமாக்குத் திட் டத்தின்மூலம் பேரரசைச் சீர்திருந்த முயன்ற நன்னெக்கமுடைய பேரச னுடைய முயற்சி இவ்வளவில் முடிவுற்றது.

சீர்திருத்தவாதியென்ற வகையில், பிற்றைக் காலப் புரட்சியாளர் பலரிலும் பார்க்க காங் யூ-வெய் பெருமைசான்றவன் எனலாம். சீனம் முன்னேற வேண்டு மாயின் அதன் நிறுவனங்களை நவீனமான முறையிற் புத்தமைப்புச்செய்தல் வேண்டும் என்பதை உணர்ந்த தெளிவான சிந்தனையுடையான் அவன். காங்கி லும் தீவிரவாதியாகக் கொள்ளத்தக்கவன் இலியாங்கு சி-சாவோ. நாறுநாட் சீர் திருத்தக்காலத்திலே காங்கோடு அவன் ஒத்துழைத்தான்.

இந்த நூறுநாட் சீர்திருத்த முயற்சி அகால முடிவு அடைந்ததன் பின்னர், காங்கு ஓங்கொங்குத் தீவுக்குத் தப்பியோடி, அங்கிருந்து அமெரிக்காவுக்குச் சென்றான். இலியாங்கு சி-சாவோ யப்பானுக்குத் தப்பியோடி, அங்கே 'இசின் மின் பாவோ' எனும் பத்திரிகையை ஆரம்பித்து, புதிய கருத்துக்களைப் பரப்பு தற்கும் அரசியற் சீர்திருத்தத்தை ஊக்குதற்கும் தீவிரமாகப் போராடினான். உனான் மாகாணத்தவனான இலியாங்கிற்கு அம்மாகாணத்தைச் சேர்ந்த சிந் தனையாளர் பிறரும் ஆதரவளித்துவந்தனர்—அவருட் குறிப்பிடத்தக்கவன் தான் இசு துங்கு என்பான். பேரரசியின் ஆட்சிப் புரட்டுக்குப் பின்னர், மற்றை யோர் போன்று வெளிநாட்டுக்குத் தப்பியோட மறுத்த அச்சிந்தனையாளன் தனது கொள்கைக்காகத் தன் உயிரையுமே பறிகொடுத்தான். சீர்திருத்தம் வேண்டி இவ்வாறு தியாகஞ் செய்த முதற் சீனன், இற்றைக்காலத்தில், இவனே யெனலாம்.

வெளிநாட்டிலே புகலிடம் பெற்ற இலியாங்கு சி-சாவோ 'புதிய சமுதாயம்' பற்றிய புதிய கொள்கையை—சீனம் தனது சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு தன் கருத்துக்களையும் இலட்சியங்களையும் மாற்றியமைத்துக் கொள் ளல் வேண்டுமெனுங் கருத்தைபோதிப்பானுயினன். சீனம் ஒரு 'புதிய சமு தாயமாக' உருவாகவேண்டுமென்பதே அவன் கருத்து. 'இங்கொன்று அங் கொன்றுகச் சிறுமாற்றஞ் செய்வதும், இங்கே சற்றுத் துடைத்து அங்கே பூசிமெழுகுவதும் பயனிலா முயற்சியாகும். முற்றும் புதியதான ஓர் உணர்ச் சியை உருவாக்குவதே இப்போது வேண்டப்படுவது'. ஆற்றல் மிக்க அறிவாளி யும் எழுத்தாளனுமான இலியாங்கு, ஆதியில் முடியாட்சி வாதியாக இருந்து பின்னர்க் குடியரசுவாதிகளின் வரிசையைச் சேர்ந்தான். இனிய சந்ததியின் சிந்தனை வளர்ச்சியை ஆற்றுப்படுத்துவதில் அவன் செலுத்திய செல்வாக்குப்

பெரிதே. தனது சுயசரிதையை எழுதப்புகுந்த ஊ-சி, இலியாங்கின் கருத்துக்களும் பனுவல்களும் தன்மீதும் தன் நண்பர்மீதும் பெருஞ் செல்வாக்குச் செலுத்தியவாற்றைக் குறிப்பிடுகின்றனன்.

சீனச் சமுதாயத்தை உள்ளிருந்து ஊக்கிச் சீர்திருத்தமுற்பட்ட சக்திகளும் இருந்தன. அபின் விவகாரங்களுக்கு உயராணையாளனுக இருந்து பிரசித்தி பெற்ற இலின் சே-இசு வெளிநாட்டோர்பற்றிய விடயங்களைச் சற்றுத் தெரிந்து கொள்ள முன்னமே முயன்றவன். மேனாட்டுக் கல்வியில் ஆர்வங்கொண்ட யப்பானிய மாணவர் போன்று, இவனும் சீர்திருத்தத்திலன்றித் தேசியப் பாதுகாப்பிலேயே கருத்தைச் செலுத்தினன். வெளிநாட்டோரைப் பின்பற்றிச் சீனரும் துப்பாக்கிகளையும் கப்பல்களையுஞ் சமைக்கவேண்டுமென அவன் எடுத்துரைத்தான். இத்தகைய விடயங்கள்பற்றித் தான் திரட்டிய செய்திகளனைத்தையும் இலின் மாண்புடைச் செயலகத்தைச் சேர்ந்த வேய்-யுவான் என்பாற்கு அளிக்க, அவன் அவற்றை கைகுவோது சி எனுந் தலைப்பிலே அச்சிட்டுப் பிரசுரித்தான். அப்பிரசுரத்தின் நோக்கம் வருமாறு சென்றது :

'மிலேச்சரின் அலுவல்களைத் தக்கவாறு கையாளவேண்டுமாயின், மிலேச்சரின் உணர்ச்சிகளை நீவிர் அறிந்துகொள்ள வேண்டும். மிலேச்சரின் நிலைமையினைத் தெரிந்துகொள்ளவேண்டும்'. சீர்திருத்தத்தில் மெய்யார்வங் கொண்டவன் வேய். புகழ்மிக்க அறிஞனை குங்கு சூ-சின் என்பான் இச்சீர்திருத்தப் பணியிலே அவனுக்கு உறுதுணையாக அமைந்தான். சாதனைக்கு உவந்த அறிவே அக்காலத் தேவையாதலின், அதனையே பெருக்குவதில் ஈடுபடுதல் வேண்டுமெனுங் கருத்தை அன்னர் இருவருங் கொண்டிருந்தனர். இக்கருத்தே 'குங்கும் வேயும் செய்த போதனை' எனப்படுவதாயிற்று. இலினும் குங்கும் வேயுஞ் சேர்ந்து இசுவான்—நான் களரியைத் தாபித்தனர். இக் கோட்டிபற்றிச் சீனவரலாற்றறிஞன் ஒருவன் கூறுவதாவது : 'இக்களரியை உருவாக்கியோருள் உவாங்கு சுவே-சூ அபினெதிர்ப்பு இயக்கத்தைத் துவக்கினன் ; குங்கும் வேயும் சீர்திருத்தத்தை ஆரம்பித்தனர் ; இலினே அவர்தம் தலைவனுயினன். சீனத்தில் மேனாட்டுக் கல்வியை வேரூன்றச் செய்து வளர்த்தோர் இம்மூவரே.

இவரினும் வேறுபட்ட வகையைச் சேர்ந்தவன் யுங்கு மிங்கு என்பான். அமெரிக்க ஐக்கிய நாட்டிலே கல்வி பயின்ற மிங்கு (யேல் பல்கலைக்கழகத்தில் 1854 இல் இவன் பட்டம் பெற்றனன்) மாணவர் நூற்றுவரைக் கல்வி பயிலுதற்கு அந்நாட்டுக்கு அனுப்புமாறு சீன அரசாங்கத்தைத் தூண்டினன். மிங்கு தான் கொண்ட திட்டத்தை வருமாறு விளக்கினன். 'நூற்றிருபது மாணவரை ஒவ்வொன்றும் மூப்பதின்மரைக் கொண்ட நாலுகோட்டிகளாகப் பிரித்து, ஒவ்வோராண்டும் ஒவ்வொரு கோட்டியை அனுப்பிக் கல்வி பயிற்றுவிப்பதே இத்திட்டத்தின் நோக்கம். பதினைந்தாண்டுக் காலத்தில் அன்னர் தமது கல்விப் பயிற்சியைப் பூர்த்தி செய்வர். அவர்தம் சராசரி வயது பன்னிரண்டிலிருந்து பதினைகாக இருக்கும். முதற் கோட்டியும் இரண்டாவது கோட்டியும் வெற்றியடையுமாயின், இத்திட்டம் காலவரையறையின்றித் தொடர்ந்து நிகழும். அமெரிக்க ஐக்கிய நாட்டிலே அன்னர் இருக்குங்காலை, அவர்தம் சீன மொழி

யறிவைப் பேணுதற்காகச் சீன ஆசிரியன்மார் ஆங்கு அமர்த்தப்படுவர். இம் முயற்சி முழுவதையும் நிருவகித்தற்கு இரண்டு ஆணைக்குழுக்கள் நியமிக்கப் படும்'.

பதிலீராயனை செங்கு குவோ—வான் இத்திட்டத்தையேற்றுச் செயற்படுத்த முற்பட்டான். மாணவர் முப்பதின்மரைக் கொண்ட முதற் கோட்டி 1872 இல் அமெரிக்காவுக்குச் சென்றது. 1875 ஆம் ஆண்டளவில் முழுத் தொகையினரான 120 பேரும் இவ்வாறு அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டனர். ஆயின் இத்திட்டத்தை முற்றுக நிறைவேற்றிப் பார்க்குமுன்னர், 1881 இற் பிற்போக்குச் சத்திகள் சீனத்திலே தலையெடுத்தமையால், கோட்டி முழுவதுஞ் சீனத்துக்குத் திருப்பியழைக்கப்பட்டது. சென்று திரும்பிய இம்மாணவர் கோட்டியிற் பலர் சீனத்தை மேனாட்டுமயமாக்கும் முயற்சிக்கு உதவி செய்தனர் என்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

மேனாட்டுமயமாக்கும் முயற்சிக்கு வேறு இரு காரணிகளுஞ் சாதகமாயிருந்தன. பொருத்தனைத் துறைச் சீனரின் வளர்ச்சி அவற்றுள் ஒன்று; வெளிநாடுகளிலே சீனக்குடியிருப்புக்கள் பெருகியமை மற்றையது. ஒங்கொங்கிலே பொருத்தனைத் துறைகளிலும், சாங்காய், தியென்சின் ஆகிய பெருநகரங்களிலும் ஐரோப்பிய வல்லரசுகளின் பாதுகாப்பிலே சீனக் குடியிருப்புக்கள் பெருவளர்ச்சியடைந்திருந்தன. ஒங்கொங்குக் குடியேற்றத்தில் அவர்கள் பிரித்தானியக் குடிகளாகவே வாழ்ந்தபோதிலும், அயல்மாகாணமாகிய குவாந்துங்கிலே அவர்தம் செல்வாக்குப் பெரிதாயிருந்தது. வர்த்தக நகரமாகிய சாங்காயிலே இவ்வகுப்பார் பொருளியற் சார்பிலும் சமுதாயச் சார்பிலும் ஆதிக்கம் மிக்கோராயினர். தவேசர் பேரரசியின் காலத்திலே, வேத்தவைப் பிரபுக்களும் மண்ணகரும் மண்டரின்மாரும் ஆதிக்கம் படைத்திருந்தமையாலும், நாட்டுப்புறத்திலே பழைய பரம்பரையைச் சேர்ந்த அறிவாளிகளே இன்னும் மாட்சிபெற்றிருந்தமையாலும், இந்நகர வகுப்பார் பொருளாதாரத்துறையிலோ சமூகத்திலோ இன்னும் அத்தணைச் சிறப்பு இல்லாராகவே காணப்பட்டனர். எனினும், வளர்ந்து வந்த அவ்வகுப்பாரின் கருத்துக்கள் விவேகமும் முற்போக்குமுடைய அதிகாரிகளிடையே ஊடுருவிப் பரவத் தொடங்கின. கிறித்துவ மிசனரிமாரின் ஆதரவிலே சாங்காயிலும் பிறவிடங்களிலும் தாபிக்கப்பட்ட பெருங் கல்லூரிகள் மேனாட்டுக் கல்வியிலே தேர்ச்சி பெற்ற அறிஞரைத் தோற்றுவிப்பவாயின. அரசாங்கத்தார் நடத்தும் சோதனைகளிற் பட்டம் பெற்றோரே 1901 ஆம் ஆண்டு வரையும் உயர்ந்த உத்தியோகங்களை வகிக்கும் வாய்ப்புப் பெற்றிருந்தாராதலின், புதிய கல்வி பயின்றோர்க்கு இன்னும் அரசியற் செல்வாக்குக் கிட்டியதில்லை. எனினும், மத்திய வகுப்பாரின் வாழ்க்கைநெறியைக் குறிப்பாக நகரங்களில் அன்றே உருவாக்கினர். அன்றியும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியளவில் நகரங்களிற் பிறந்து வளர்ந்த வசதிபடைத்த சீன இளைஞர் பலர் யப்பானுக்கும் மேனாடுகளுக்கும் சென்று, உயர்கல்வி பயின்று, புதிய வாழ்க்கை முறையைத் தழுவித் தம்மிடையே ஒற்றுமையை வளர்த்தும் புதிய கருத்துக்

களோடும் இலட்சியங்களோடும் தாயகந் திரும்புவராயினர். இவ்வாறு 'கற்றுத் திரும்பிய மாணவர்' பேரரசு வீழ்ச்சியடைதற்கு முன்னமே சமூக மாற்றங்களை உருவாக்கி ஆற்றுப்படுத்துவதில் மிக்க செல்வாக்குடையோராய் விளங்கினர்.

மலாயா, இந்தோனேசியா, பிலிப்பின் தீவுகள், ஆவாய், அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய நாடுகளிலும் பிறவிடங்களிலும் வாழ்ந்த 'கடல்கடந்த சீனர்' சீத்துவமிக்க சமூதாயங்களாக வளர்ச்சி பெற்றிருந்தமையும், சீனம் மேனாட்டு மயமாதற்கு ஊக்கமளித்த ஒரு காரணியாயிற்று. மலாயாவும் யாவாவுந் தவிர்ந்த பிற நாடுகளில், 'கடல்கடந்த இச்சீனச் சமூதாயம்' பெருகி வளர்தற்குக் காரணமாயிருந்தது, கூலி வியாபாரமேயாம் ('60 ஆண்டுகளில் இது 'பன்றி வியாபாரம்' என இளிவரல் தோன்றக் குறிப்பிடப்பட்டது). பிற நாடுகளுக்குச் சென்ற இந்த ஒப்பந்தத்தொழிலாளிகளின் பிள்ளைகள் விரைவிலே தம்மினத்துக்குரிய விடாமுயற்சி, சிக்கனம் முதலிய குணங்களை வெளிக்காட்டி, அவ்வந் நாடுகளிலே பொருளாதாரத்துறையிற் சிறப்பும் செல்வாக்கும் பெற்று விளங்கினர். சீனப் பண்பை இழவாது, நாட்டபிமானம் மிக்கோராய் அன்னர் இருந்தாலெனினும் புதிய சூழலில் வாழ்ந்து, புதிய கல்வி பயின்று, பிற நாகரிகங்களோடு தொடர்பு பூண்டு வாழ்ந்தமையாலே, சீனச் சமூதாயத்திற் காணப்பட்ட குறைபாடுகளையும் அச்சமூதாயத்தை மாற்றியமைக்கவேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் உணர்ந்தனர். மேனாட்டு மயமாக்கும் பெருமுயற்சிக்கு, கடல் கடந்த இச்சீனச் சமூதாயங்கள் ஆர்வத்தோடு ஆதரவளித்தன.

பேரரசாட்சி நிலையுன்றி யிருந்தவரையும், மேனாட்டுமயமாதலை இலக்காகக் கொண்ட இயக்கம் அடைந்த முன்னேற்றம் மிகச் சிறிதே. பொக்சர் கலகத்திற்குப் பின்னர்ப் போன்று, அன்னியச் செல்வாக்கிற்கு இசைந்து சில சலுகைகளை வேத்தவை அளித்ததுபோற் காணப்பட்டாலும், 'முது புத்தரும்' அவருடன் ஆலோசகரும் உண்ணாட்டு அலுவல்களிலே பிற்போக்கான தம் ஆட்சிமுறையை நிலைநாட்டுவதில் வெற்றிகண்டனர். ஆயின் பேரரசாட்சியும், அதற்குச் சார்பாகவிருந்த பழைய சமூதாயத்தின் ஆதாரங்களும் ஒருங்கு வீழ்ச்சியடையவே, முந்திய அரைநூற்றாண்டுக்காலமாகப் பெருகித் திரண்ட சத்திகள் யாவும் வெளிப்படத் தொடங்கின. அவ்வழி தோன்றிய புரட்சி, முன்னர் நாம் கண்டவாறு அகாலமுடிவு எய்திற்றெனினும், பழைய முறை மீள்வதைத் தடுத்து வைக்கும் வலி அதற்கு இருந்தது. யுவான் சீ—கை தானே அரியணையேறி முடியாட்சியை மீட்டமைக்க முயன்று தோல்வியுற்றமை, வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு நிகழ்ச்சியாகும். சீனநாட்டிலே தீவிரமான சமூக சீர்திருத்தத்தை உருவாக்குதற்கு வேண்டும் சத்தியோ மக்களாதரவோ அப்புரட்சிக்கு இருந்தில தென்பது தெளிவான போதிலும், பழைய மரபு திட்டமாக அற்றுப் போனவாற்றை அது தெளிவாகக் காட்டிற்று. சின்வமிசப் பேரரசனை சிங்குவாங்—ரி தாபித்த பேரரசு மரபானது 2000 ஆண்டுக் காலமாக நீடித்த பின்னர் இறுதியாகவும் மீளாவகையும் முறிவடைந்தது.

சீனம் முதலில் அரசியற் குழப்பத்திலும் பொருளாதாரச் சிதைவிலும் வீழ்ந்து தத்தளித்தது. அவற்றுக்குப் பல காரணங்கள் இருந்தன. எளிதிற் புலனாகா

வகையிலும் செவ்வையான முறையிலும் சீனத்தின்மீது ஆதிக்கஞ் செலுத்திய வல்லரசுகளிடையே வலுத்திருந்த போட்டி, அக்காரணங்களுள் ஒன்று. மண்டரின் ஆட்சி தோல்வியடைந்தமையும், புதிய வகுப்பார் செவ்வையாகத் தொழிற் படத் தவறியமையும் பிற காரணங்களாகும். இப்புதிய வகுப்பார் பெரும்பாலும் கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்தவராதலின், மக்களிடையே அன்னர்க்கு அதிகாரமோ சிறப்போ இருந்திலது. இனி, மாறுபட்டு நின்ற பல்வேறு போர்ப் பிரபுக்களிடையே சீனையானது பிளவுபட்டு நின்றமை, பிறிதொரு காரணமாகும். இத்தகைய சூழ்நிலையிலேயே, அறிவியற் சுதந்திரத்தை இலட்சியமாகக் கொண்ட சீனப்பேரியக்கம்—'புதுப்பெருக்கு' எனும் பெயருடையது—உருவாகி வெளித்தோன்றிற்று.

பீக்கிங்குத் தேசியப் பல்கலைக்கழகமே இவ்வியக்கத்துக்கு மத்திய பீடமாயிற்று. அப்பல்கலைக்கழகத்துக்கு வேந்தனாயிருந்தவன் சாய் யுவான்—பெய் என்பான் அதன் தலைவராகச் சென்றா—இசியவும், ஊ—சியும் விளங்கினர். அப்பல்கலைக்கழகம் கன் சியா—நை என்பானை வேந்தனாகவும், ஆங்கிலப் பாதிரியான மாட்டின் என்பானை அதிபனாகவும் கொண்டு 1898 இலே தாபிக்கப்பட்டது. பேரரசி ஆட்சிப்புரட்சை நிகழ்த்தித் தானே நேராக ஆட்சிசெய்யத் தொடங்கிய பின்னர், அப்பல்கலைக்கழகத்திற் கைவைக்க நினைந்திலள். பழைய ஆட்சியில் அது தேசியப் பணியிற் குறிப்பிடத்தக்க பங்கு யாதும் கொண்டிலதாயினும், சாய்புவான் பெய் 1917 சனவரியிற் பதவிக்கு வந்தபின்னர், அதன் வரலாற்றில் ஒரு புதிய ஊழி தோன்றிற்றெனலாம்.

இலீப்சிக்கிற் கல்வி பயின்ற சாய் ஒரு சிறந்த அறிவாளி. கல்வித்துறையிலே சுதந்திரம் விளங்கவேண்டுமெனுங் கருத்தை அவன் பெரிதும் ஆதரிப்பவன். அறிவை வளர்த்தல் பல்கலைக்கழகங்களின் புனிதமான கடமையென்பதும், சமுதாயத்துக்குப் பயன்படும் வகையிற் பல்கலைக்கழகங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்பதும் அவன் நம்பிக்கை. அக்காலத்திலே 'லா யவனசே' எனுஞ் சஞ்சிகைக்கு ஆசிரியனாக இருந்தவனும், மறுமலர்ச்சியியக்கத்துக்குத் தலைமை வகித்தவனுமான சென் தூ-இசியுவை, பல்கலைக்கழகத்திலே இலக்கியப் புலமைப் பீடத்துக்கு அதிபனாக இருக்கும்படி சாய் அழைத்தான். பல்வேறு காரணங்கள் பற்றிப் பிற்றைக் காலத்திலே சென், சீனத்தின் வரலாற்றிலே சிறப்பிடம் பெற்றான். அவன் பிற்றை நாளிலே பொதுவுடைமைக் (கொம்யூனிசக்) கட்சியை நிறுவித் தலைமை தாங்கி நடாத்தியும், பின்னர் அவ்வியக்கத்தை விளக்குமுகமாகப் பெரும் இலக்கியத் தொண்டு செய்து, அவ்வழி, அவ்வியக்கத்தினின்றும் பிறழ்ந்த பிறிதொரு வகைக் கொம்யூனிசக் கொள்கையைத் தன் பெயராலே தோற்றுவித்தது மெல்லாம் தம்மளவானே சிறப்புடையவாயினும், ஆரம்பத்தில், ஐயாண்டுக் காலமாக அவன் புதிய பண்பாட்டு இயக்கத்துக்கு ஆற்றிய தொண்டே ஆசியவரலாற்றில் அவனுக்கு உன்னதமான ஓர் இடத்தையளிப்பது எனலாம். 'லா யவனசே' எனுஞ் சஞ்சிகையின் முதல் வெளியீட்டில், 'இளைஞர்க்கு எனது உருக்கமான வேண்டுகோள்' எனுந் தலைப்பிற் சென் எழுதிய தலையங்கமொன்று 1915 செத்தம்பரில் வெளியாகியது. சீனத்தின் பெருமையை

மீட்டும் நாட்டுதற்குச் சின இளைஞர் முன்னின்று போராட வேண்டுமென்பதே அதன் சாரம். சீன இளைஞரின் தேசாபிமானத்துக்கும், சுதந்திரமான அறிவியல் வாழ்க்கையிலே சின இளைஞர் கொண்ட அபிமானத்துக்கும் விடுக்கப்பட்ட உருக்கமான வேண்டுகோளாகும் அது. அதன் விளைவு மின்சத்தி பாய்ந்தாற் போலிருந்தது. அச்சஞ்சிகையின் முதல் வெளியீடு பன்முறை திருப்பியச்சிடப் பட்டது; இரண்டிலட்சத்துக்கு மேற்பட்ட பிரதிகள் விற்பனையாயின. உவச் சாங்கிலே தீர்ந்த துப்பாக்கி வெடியிலும் பார்க்க இதுவே புரட்சியின் ஆரம்பத் தைக் குறித்தது எனலாம்.

இந்த அடி நாளிலேதானும், உண்மை நிலவரத்தைச் சென் தெளிவாக விளங்கி யிருந்தான். புரட்சிக்குப் பின்னரும் சீனம் உருப்படாமைக்குரிய காரணங்களை ஆராய்ந்து பார்த்த சென், எட்ட நின்று ஏதிலார்போற் பார்த்துக்கொண்டிருந்த மக்களின் நொதுமலான மனப்பான்மையும், அவர்களிடையே விழிப்புணர்ச்சி காணப்படாமையும், பழைய கருத்துக்களை விடாது பற்றி நிற்கும் மடமையும், புதிய மாற்றங்கள் வந்தெதிர்ந்தபோது அவர்கள் செயலற்று நின்றமையுமே அக்காரணங்களாகுமென, கண்டுணர்ந்தான். ஆதலின், சீனநாட்டு இளைஞரே முன்வந்து பணியாற்றல் வேண்டுமென அவன் வேண்டுகோள் விடுத்தான். அவன் வகுத்த திட்டம், அவ்வேண்டுகோளிற் கண்ட ஆறு தத்துவங்களிலே அடங்கி யிருந்தது: 'அடிமை மனப்பான்மையன்றிச் சுதந்திரமும், பழைமைவாதமன்றி முன்னேற்றமும், கோழைத்தனமன்றி முனைப்புடைமையும், குறுகிய தேசியமன் றிச் சருவதேச நோக்கும், சம்பிரதாயமன்றிக் கருமத்திற் கண்ணும், உத்தேச மான சிந்தனையன்றி அறிவியல் முறையான சிந்தனைப் போக்குமே அவசியம்.' ஓராண்டுக்குப் பின் அவன் வருமாறு **கட்டுரை** பகர்ந்தான்: 'இளைஞர் மீச் சென்று வெற்றிகொள்ள வேண்டுமேயல்லாது வெற்றிகொள்ளப்படலாகாது; இரண்டாவதாக, சுயாதீனமான **தம் பண்**பைப் போற்றவேண்டுமேயல்லாது, பிறருக்கு வால் பிடிப்போராக இருத்தலாகாது; மூன்றுவதாக, மக்களியக்கத் தில் அவர்கள் ஈடுபடவேண்டுமேயல்லாது, குறுகிய கட்சிமுயற்சிகளில் நாட்டங் கொள்ளலாகாது.'

பழைய சீனப் பண்பாட்டின் குறைபாட்டைச் சென் வெளிப்படையாகத் தாக்கி, சீனமறுமலர்ச்சிக்கு வேண்டிய தத்துவ அடிப்படையை உருவாக்கினன். 'அரசியலாயிலென், அறிவுத் துறையாயிலென், ஒழுக்கமாயிலென், இலக்கியமாயி லென், மேனாட்டுமுறையும் சீனமுறையும் முற்றும் வேறுபட்ட விடயங்களாகும். அவற்றைக் கலத்தலோ இணைத்தலோ ஒவ்வாது. அவற்றுள் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்பதை நாம் ஆராயவேண்டியதில்லை—அவ்வாறு ஆராய முற்படு வது புறம்பான விடயம். ஆயின், சீர்திருத்தஞ் செய்யவேண்டுமென நாம் தீர்மா னித்தால், சகல விடயங்களிலும் புதிய மேனாட்டு முறையையே தழுவவேண்டும். 'நாட்டின் மரபுரிமை,' 'நாட்டுக்கே சிறப்பாகவுள்ள சூழ்நிலை' என்பன போன்ற பொருளற்ற சழக்குரை பேசி நாம் மலியவேண்டியதில்லை'.

'கிரியையும்' அரசியலும் கல்வியுமாகிய மூன்றினதும் ஒருமைப்பாட்டைப் போதித்து, தற்காலச் சிந்தனைப் பெருக்கைச் சிந்தோமத்மெனுங் குறுகிய புட்டியுள் அடைத்து வைக்க முயன்ற யப்பானியத் தலைவர்களின் பேச்சுக்கும் சீனச் சீர்திருத்தவாதிகளின் பேச்சுக்கும் எத்தனை வேற்றுமை? இவ்வாறுக, பழைமை வாதிகளான மண்டரின்மாரின் கொள்கையும், புதிய கல்வியை ஆதரித்த சீர் திருத்தவாதிகளின் கொள்கையும் நேருக்குநேரே மூரணி மோதின. அறிஞன் சென்னை ஆணித்தரமான தருக்கமுறையாக, சீனச் சிந்தனைக்கெல்லாம் அரண் போன்றிருந்த கொன்பியூசியசின் கோட்பாட்டையுமே இறுதியாகத் தாக்கத் தலைப்பட்டான். கொன்பியூசியசுவையே சத்துருவாகச் சென் கண்டான். 'லா யவனசே' எனும் சஞ்சிகையின் முந்திய ஒரு வெளியீட்டிலே இபெய்-சா என் பான் கொன்பியூசியசுவைக் காரசாரமாகக் கண்டித்துக் கட்டுரையொன்றை வெளியிட்டிருந்தான். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில், ஆன் வமிசத்தைச் சேர்ந்த உவுதி என்பானது காலம்வரைக்கும் ஒரு சிறு சித்தாந்தமாகவே கொன்பியூசியசு மதம் இருந்ததென்பதையும், கொன்பியூசியசின் ஐந்துறவுக் கோட்பாடு வல்லாட்சிக்கு வாய்த்த தத்துவ அடிப்படையாகப் பயன்படுத்தத் தலைப்பட்டாரென்றும் அவன் அக்கட்டுரையிலே விளக்கிக் காட்டினான். அதே மாதச் சஞ்சிகையிலே தொடர்ச்சியாகப் பல கட்டுரைகளை எழுதி இன்னும் மும் முரமாகச் சென் இத்தாக்குதலை நடத்தினான். 'அரசமைப்பு அபிவிருத்தியின் சார்பிலே கொன்பியூசியசு மதம்' என்பது அவற்றுள் ஒன்று. 'கொன்பியூசியசு நெறியும் தற்கால வாழ்க்கையும்' என்னுந் தலைப்பிலே பின்னர் வந்த கட்டுரை இன்னும் முக்கியமான கண்டனமாயிருந்தது. பேரரசற்குப் பத்திசெலுத்துவ தாகிய தனிப்பெருங் கடமை, பெற்றோர்க்குப் பத்தி, பதிபத்தி யெனும் தலையாய கடமைகள் மூன்றையுமே அடிப்படையாகக் கொன்பியூசியசு நெறி கொண்டுள தாதலின், அது மனிதவுரிமைகளை முற்றுக மறுக்குந் தன்மைத்து என்பதே சென்னுடைய கண்டனத்தின் சாரமாகும். இவ்வாறு திண்ணமாக எடுத்துக் கூறிய பின், இக்கால நிலைமை தேவைகளுக்கேற்பக் கொன்பியூசியசு நெறியை மாற்றியமைப்பது ஒவ்வாது என்பது தேற்றம். இதனையே புதுப்பெருக்குக் கோட்டியார் போதித்து வந்தனர். 'கொன்பியூசியசு மதம் வீழ்க' என்பதே அவர்தம் சுலோகமாயிற்று.

இத்துணைத் தீவிரமான சிந்தனையாளனை—தொன்றுதொட்டுப் பயின்று வந்த மரபுகளுக்கெதிராக எழுந்த புரட்சிக்குத் தலைமை வகித்தானை— தலைநகரி லமைந்த பல்கலைக்கழகத்திலே இலக்கியப் புலமைப்பீடத்தின் அதிபனாய் அமர்த்தி யது, அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான அங்கீகாரத்தை அப்புரட்சிக் கொள் கொள்கைக்கு அளித்தது போலாகும். சென்னுடைய கருத்துக்களுக்கு, இளைய தலைமுறையைச் சேர்ந்த அறிஞர் அதிக ஆதரவளித்தனர். அத்தகைய அறிஞருட் குறிப்பிடத்தக்கவன் ஹூ—சி என்பான். அவன் பல்கலையறிவு படைத்த புலமை யோன். மேனாட்டு ஆராய்ச்சி முறைகளைக் கற்றுத் துறைபோய தத்துவஞானி; விளக்கவுரையை நாடுதலின்றி மூலக் கிரந்தத்தையே நாடிக் கற்கும் பண் புடையன், ஆன் சுவே மரபைச் சேர்ந்த பேரறிவாளன்; மனிதவுறவுகளிலே பகுத்

தறிவுக்குள்ள பெரும்பயனில் நம்பிக்கை கொண்ட உண்மையான மனிதாபி மானி. மறுமலர்ச்சியியக்கத்துக்கு அவன் செய்த முதற்றொண்டு, இலக்கியத் துறையிலே ஒரு புரட்சி வேண்டுமென அவன் விடுத்த அறைகூவலேயாம். அமெ ரிக்காவிலே அக்காலத்திற் பிரசுரிக்கப்பட்ட 'சீனமாணவரின் திங்களேட்டிலே,' சாவோ யுவான் சென்னும் ஹு-சியும் சேர்ந்து வெளியிட்ட கட்டுரையொன்றில் இப்புதிய கருத்துக்கள் முதன்முதலாக இடம்பெற்றிருந்தன. இந்த அறிஞர் இவர்க்குமிடையில் முக்கியமான ஒரு வேற்றுமையும் இருந்தது. சித்திர வெழுத்து முறையைக் கைவிட்டு அகரவரிசையைச் சீனமொழியிற் புகுத்தச் சாவோ விரும்பினன்; ஹு-சி அதனை விரும்பவில்லை. இலக்கிய விற்பன்னரும் பொதுமக்களும் ஒரேமொழியை வழங்கச் செய்து, அவ்வழி, சித்தனைச் செல்வ ம்னை'தயும் பொதுமக்களுக்குந் திறந்து விடுவதே முதற்பெரும்பணியென ஹு-சி கருதினன். இலக்கியச் சீனமொழியென்பது மக்கள் நாவிலே பயிலாத தொன்றுதலின், செத்த மொழியே அதுவென அவன் வாதித்தான். 'மத்தியகால ஐரோப்பாவில் இலத்தின் போன்றது அது: சாக்காட்டிலேயும் கூடியது குறைந் ததெனப் பேதப்படுத்திப் பேசமுடியுமாயின், அது இலத்தினிலும் பார்க்க நனி செத்த மொழியாகும். இலத்தினைப் பேசுதலும் விளங்குதலுங் கூடும். ஆயின் இலக்கியச் சீனமொழியைப் பேசும்போது, நன்கு பழகிய சொற்றொடர்களைப் பயன்படுத்தினலன்றி, அல்லது, பேசுவோன் சொல்லப்போவது பற்றி முன்னமே ஓளவு தெரிந்திருந்தாலன்றி, அம்மொழியைச் செவிப்புலனில் விளங்கிக் கொள் ளல் பண்டிதர்க்கும் அரிதே'. இவ்விடர்ப்பாட்டைத் தவிர்க்கும் பொருட்டும், அனைவரும் புரிந்துகொள்ளத்தக்க சிந்தனைக் கருவியாக மொழி அமைதல் வேண் டுமெனும் நோக்கத்தோடும், ஹு-சி பேச்சு மொழி வழக்கையே ஆதரித்தான்.

தொலை தேயமொன்றிற் புழங்கி வந்த மாணவர் சஞ்சிகையிலே தன் கருத்துக் களை வெளியிடுவதோடு அமையாது, தன் கருத்துக்களை ஒரு கடிதத்தில் அடக்கி, லா யவனசெயிற் பிரசுரிக்கும் பொருட்டு, ஹு-சிக்கு அதனை அனுப்பி வைத்தான். இலக்கியச் சீர்திருத்தத்தை ஒரு திட்டத்துக்கமையச் செய்வது பற்றி அதிற் சில ஆலோசனைகளை அவன் எடுத்துக் கூறினன். அவன் கூறிய ஆலோசனைகள் கட்டுமட்டானவை. 'தொல்லருங் கால நூல்களிலிருந்து மேற்கோள் காட்டலைத் தவிர்க்க; ஒரே பெற்றித்தாக வசனமமைக்கும் முறையை விலக்குக; காலப் போக்கில் வழக்கொழிந்த இலக்கியத் தொடர்களைத் தள்ளி, பேச்சு வழக்கினைத் தள்ளாதொழிக; இலக்கணவரம்புக்கமைய வசனமமைத்தலின் அவசியத்தை வற்புறுத்துக; சாரமற்ற சொற்றொடர்களை உபயோகிக்க வேண்டா; முந்தை யோரின் நடையைப் பின்பற்றவேண்டா; சுருங்கக்கூறின் விளங்கத்தக்க மொழி நடையிலே இயற்கையாக எழுதுக'. ஆயினும், அவன் எடுத்துக் கூறிய வாதங் களிலே விரவி நின்ற நிதானமும் அவனது புலமையுமெல்லாம் சீன இலக்கியத் துறையிலே தாராள மனப்பான்மை வந்து பாய்தற்கு வழிதிறந்திருக்குமேயல் லாது, அறிஞன் சென்னுடைய அரும்பணியின்றேல், அவை இலக்கியப் புரட் சிக்கு அடிகோலியிருக்குமாவென்பது சந்தேகமே. அறிஞன் சென்னை அக்கருத் துக்களை ஒரு புரட்சிக்கோட்பாடாக உயர்த்தி வைத்தவன். ஹு-சியின் வேண்டு

கோனே ஆதரித்த சென், 'சீன இலக்கியத்திலே ஒரு புரட்சி' உருவாதல் வேண்டுமெனக் கட்டுரைத்தான். அவன், தானே பெருமித நடையிற் கூறியவாங்கு 'இலக்கியப் புரட்சிக்கொடியை ஏற்றி வைத்தான்'.

பேச்சு மொழியிலியன்ற கட்டுரைகளைப் பிரசுரிக்கத் தலைப்பட்டு, ஹு-சியின் ஆறு உத்திகளையும் 'லா யவனசே' கையாளத் தொடங்கியகாலை, இலக்கியப் புரட்சி ஈடேறியதோடு, செயற்கைத் தன்மைமிக்க பாண்டித்திய நடையின் கட்டுப்பாடுகளைச் சீன மொழி உடைத்தெறிந்து விடுதலையும் பெற்றுவிட்டதெனலாம். மொழி விடுதலையடைந்து வீறுபெற்று விளங்கவே, இலக்கியப் படைப்பு வரைவின்றிப் பெருகிற்று; ஐரோப்பிய நூல்கள் பெருந்தொகையாக மொழி பெயர்க்கப்பட்டன; விமரிசக் கட்டுரைகளும் சிருட்டியிலக்கியங்களுந் தோன்றின. தற்காலச் சீன இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அவ்விடுதலையே தோற்றுவாயாயிற்று எனலாம். அக்காலத்தில் அறிவுத்துறையிலே காணப்பட்ட ஊக்கத்தையும் ஆக்கத்தையும், இலின் யுற்ருங்கு எழுதிய 'பீக்கிங்கிலே ஒருகணம்' எனும் நவினமானது சவியுறப் படம்பிடித்துக் காட்டுவதாயுளது. பொக்சர் கலகந்தொட்டு குமிந்தாங்குப் புரட்சி வரையுமுள்ள காலப்பகுதி முழுவதையும் அந்நவினம் அடக்கியுளது.

அறிவுத்துறையிலே சுதந்திரவுணர்ச்சியைப் பாய்ச்சுவதையும், சீன வாழ்க்கை நெறியை நவினமுறையில் அமைப்பதையும் இலக்காய்க் கொண்ட இவ்வியக்கத்துக்குத் தீவிரமான எதிர்ப்பு இருந்திலதென்று நாம் கருதலாகாது. கொன்பியூசியசு போதித்த 'ஐந்துறவுக்' கோட்பாட்டைச் சீர்திருத்தவாதிகள் காற்றிற் பறக்கவிட்டனரேயென இடித்துரைத்துச் சாய்யுவான்—பெய்யுக்குப் பிரபலமான ஒரு கடிதம் போக்கிஞன் இலியு சூ என்பான். அவனைப் போன்ற—அறவும் பழைமையிலூறிய—கொன்பியூசியசு வாதிகளின் எதிர்ப்பு ஒருபுறமாக, இலியாங்கு சி—சாவோவும் இலியாங்கு சோ—மிங்கும் போன்றூர் பலர் சீனத்தின் தேசிய மரபுரிமையைத் தக்கவாறு போற்றி நடத்தல் வேண்டுமெனவும், கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையே ஒரு நற்புணர்ப்பைக் காண்டல் வேண்டுமெனவும் கழறியுரைத்தனர். ஆயின் புதுப்பெருக்கு இயக்கத்தின் தலைவர்கள், மேனாட்டில் மிகையபிமானம் பூண்டிருந்தாராதலின், அவர் காதில் இவ்வாதங்கள் ஏறியதில்லை. மேனாட்டு நாகரிகத்தின் விஞ்சிய மகிமையிலே அக்காலத்தில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த—ஹூ—சி, 'நல்லன கொண்டு, அல்லன தள்ளும்' கோட்பாட்டையுமே ஒறுத்துரைத்து, எஞ்சலின்றி முற்றுக ஏற்றுக்கொள்ளலே விமோசனத்துக்கு வழியாகுமென எடுத்துரைத்தான்.

வாழ்க்கைப் பயன்கள் பற்றித் தெளிவான காட்சியின்றி மலிவுற்ற ஒரு சமுதாயம்; அறமுறையும் மதமும் ஆற்றவுங் குழம்பியதனாற் சமூகக் கட்டுக்கோப்புக் குலைந்திருந்தகாலம்; புதியவொரு வாழ்க்கை நெறியைத் தேடி அலைந்து கொண்டிருந்த அறிவுடை வகுப்பார் — இத்தகைய சூழ்நிலையிலேயே இரசியப் புரட்சியெனும் சண்டமாருதம் வந்துமோதிற்று. புதுப்பெருக்கின் பயனுக, வியத்தகு விளைவுகள் ஏற்பட்டன என்பதற்கையமில்லை. கொன்பூசியசு மதத்தைக்

கண்டிப்பதிலும் இலக்கியப் புரட்சியைத் துவக்கி வைப்பதிலும் அது பெற்ற வெற்றிகள் குறிப்பிடத்தக்கவை. ஆயின் அதன் செல்வாக்கு அறிவாளிகளின் வட்டாரத்துக்கு அப்பாற் சென்றிலது; புதியவோர் அடிப்படையிலே சமூகத்தை ஒற்றுமைப்படுத்தற்கு அது உதவியதில்லை. மற்று, அதன் கருத்துக்கள் குழப்பத்தை அதிகரிக்கச் செய்தனவென்றே கூறலாம். தாராண்மைக்கும் பகுத்தறிவுக்குமொட்டிய புதிய அடிப்படையிலே சமூதாயத்தை மீட்டும் ஒற்றுமைப் படுத்தற்கு அது முதற்படியாக அமைந்திருக்குமென்பதில் ஐயமில்லை. ஆயின் அவ்வாய்ப்பு அதற்குக் கிட்டியதில்லை. சாய் யுவான் பெயும் ஹூ—சியும் மேஞட்டுத் தாராண்மைக் கொள்கையை ஏற்றுக் கொள்ளுமாறு எடுத்துரைத்த அதே காலத்தில், தாராண்மைக்கு மாறுன புரட்சிக்கொள்கைகள் மொசுக்கோவிலே பிரகடனஞ் செய்யப்பட்டு, தீவிரமனப்பான்மையுடைய இளைஞரால் உலகெங் கணும் ஆர்வத்தோடு கற்கப்படலாயின. சீனத்தை நவீனமயமாக்கும் பிரச் சினையை ஆராயும்போது, புதுப்பெருக்கை ஆதரித்து ஆற்றுப்படுத்தி நடாத்திய வனும் அதன் சஞ்சிகைக்கு ஆசிரியனுமான சென் தூ—இசியுவே சீனப் பொது வுடைமைக் கட்சியை நிறுவிய ஆதித் தாபகன் என்பதை நினைவிற் கொள்ளல் அவசியம். இரசியப் புரட்சிக்கும் சீனமக்களின் விழிப்புணர்ச்சிக்குமுள்ள நெருங்கிய தொடர்பினை அறிஞன் சென் 'லா யவனசே' எனும் சஞ்சிகையில் 1917 ஆம் ஆண்டு ஏப்பிரிலில் வெளியிட்ட தன் கட்டுரை மூலமாக ஆராய்ந்தான். 'லா யவனசேயில்' தொடர்ச்சியாக வெளிவந்த கட்டுரைகளிற் பொதுமக்களின் வெற்றியே பொல்சிவிக்குப் புரட்சியெனும் கருத்து வற்புறுத்திக் கூறப்பட்டது. அன்றியும், மாக்சு பற்றிய விசேட இதழொன்றைப் பீக்கிங்குப் பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த பேராசிரியன் பிறஞ்ருவன், இலி தி—சாவோ என்பான், பதிப் பித்து வெளியிட்டான். 1920 ஆம் ஆண்டு யூலைத் திங்களில், சென்னைத் தலைவ னுகக் கொண்டு சீனப் பொதுவுடைமைக் கட்சி தாபிக்கப்பட்டது. புதிய சிந்த னையிலும் புதுப்பெருக்கிலும் ஒரு புதிய திருப்பத்தையும் இரசியப் புரட்சி குறிப்பதாகுமெனச் சென்னும் இலியும் மறுமலர்ச்சித் தலைவர்கள் பிறரும் கருது வாராயினர்.

இவ்வாறு தோன்றிய பிளவு, சாய் யுவான்—பெயும், ஹூ—சியும் ஆதரித்துப் பரப்பிய தாராண்மைப் போக்குடைய மறுமலர்ச்சிக்குச் சாப்பறை யறைந்தது எனலாம். எனினும் இலக்கியப் புரட்சி, கொன்பியூசியசு மதத்துக்கு மாறுன கிளர்ச்சி, அறிவுத்துறையிலே ஆயுமுளப்பான்மை எனுமூன்றையும் உள்ளடக்கி அவர்கள் வகுத்த ஆக்கத்திட்டமானது, புதிய சீனத்தின் பொதுமரபாயது. அவை கண்ட வெற்றியே அவற்றின் இயக்கச்சத்தி குன்றுதற்குக் காரணமாயது. மேற்கொண்டு அவை மக்களின் உள்ளத்தைக் கவரத்தவறின. தீவிரப்போக் குடைய சிந்தனையாளர் மேஞட்டுத் தாராண்மைக் கொள்கையினின்றும் ஒதுங் கிச் செல்வாராயினர். அடுத்த இருபதாண்டுக் காலத்தின் போது, பல்கலைக்கழ கங்களிலும் அறிவாளிகளின் வட்டாரங்களிலுமே செல்வாக்குப் படைத்திருந்த தாராண்மைக் கொள்கையானது சீனநாட்டின் அறிவியல் வாழ்க்கையில் ஓளவு செல்வாக்கைத் தொடர்ந்து செலுத்திற்று. ஆயினும், இயக்கமென்ற வகையிலே

அதன் வலிகுன்றிவிட்டது. மக்களிடைப் பரவியிருந்த தீவிரமனப்பான்மைக்கு அது ஈடுகொடுக்க முடியாது தப்பித்ததோடு, தன் கோட்பாடுகளை நிறுவனங்கள் மூலமாகச் செயற்படுத்தற்கும் வலியற்றிருந்தது. குமிந்தாங்கு இயக்கம் வலதுசாரிகளின் இயக்கமாக மாறிச் சென்றமையாலும், கட்டுப்பாட்டுக்கமைந்த பல்கலைக்கழகங்கள் நிறுவனங்கள் மூலமாக நவ கொன்பியூசியசுநெறிக்கு அது புத்துயிர்ப்பளிக்க முயன்றமையாலும், தாராண்மைவாதிகள் ஒரு காலத்திற் பெற்றிருந்த செல்வாக்கும் அன்னர்க்கு மறுக்கப்பட்டது. அப்பால், பகுத்தறிவையும் அறிவொளியையும் மக்களிடைப் பரப்புவதன்மூலம் சீர்திருத்தம் நாடிய அவ்வியக்கமானது, 1936 ஆம் ஆண்டு முதலாகச் சீன மக்களின் உள்ளத்திலே செல்வாக்கு யாதுஞ் செலுத்தாதொழிந்தது.

ஆதியிலே இத்துணை நம்பிக்கை யூட்டியதும், நேரிய அபிலாசைகளை நெஞ்சாரக் கொண்டதும், காலப்போக்கைச் செவ்வனே உணர்ந்தமையாற் பெற்ற உறுதிப்பாட்டைக் கொண்டதுமான இப்பேரியக்கம்—மாசற்ற நேர்மையும், சிறந்த புலமையும் தெளிவான காட்சியும் படைத்த அறிவாளிகளைத் தலைவராக வாய்க்கப்பெற்றதான இவ்வியக்கம்—ஆருண்டுக்காலமாய்த் தொடர்ந்த தீவிர முயற்சியின் பின்னர் தோல்வியுற்றதற்குக் காரணமென்ன? காரணம் எளிதே போற்றுன்றுகிறது. முதலாவதாக, உரிய காலத்திலன்றித் தாமதப்பட்டே அது வந்துற்றது. மேனாட்டுத் தாராண்மைநாகரிகத்தின் மாட்சியை உலகப் பெரும்போரும், பின்னர் இரசியப் புரட்சியும் தகர்த்தெறிந்த பின்னரே அது வந்துற்றது. புதுப்பெருக்குப் போதித்த கொள்கைகளைச் சமுதாய அமைப்புக்குப் பிரயோகிக்குமுன்னமே, அதற்குப் போட்டியாயமைந்த இரசியப் புரட்சிக் கோட்பாடுகள்—குடியேற்ற நாடுகளிலும் சார்நாடுகளிலும் தேசியவுணர்ச்சியை வற்புறுத்திக் கூறிய கோட்பாடுகள்—சீனத்தை மீக்கொண்டுவிட்டன. இரண்டாவதாக, அரசாங்கங்களின் அரவணைப்பிலே மிசனரிமார் செய்த கைங்கரியங் காரணமாகச் சமுதாயங் கட்டுத்தளர்ந்து குழப்பமுற்றிருந்தமையால், தாராண்மைத் தத்துவத்தின் அடிப்படையிற் சமுதாயத்தைக் குறுகிய காலத்துட் சீர்திருத்தியமைத்தல் முடியாத காரியமாயிற்று. மூன்றுவதாக, மறுமலர்ச்சிக் கோட்பாடுகள் புரட்சிகரமான விளைவுகளைப் பயந்தவாயினும், அதன் தலைவர்கள் பொதுமக்களோடு தொடர்பிலராய்த் தம் போதனைகளை அவர்களுக்கு எடுத்துச் செல்ல வகையற்றிருந்தனர். நாலாவதாக, நெருக்கடி வந்துற்ற வேளையிலே, தலைமைவகித்தோர் ஈடுகொடுக்க முடியாது தவறிவிட்டனர். குமிந்தாங்கு அமைச்சனை சென்லி-பூ வின் பிற்போக்குக் கொள்கை ஒருபுறத்தும், இடதுசாரியாகக் கரைபுரண்டோடிய அறிவியற் பெருக்கு மறுபுறத்தும் வந்தடர்த்த ஞான்று, அவர்கள் அவற்றைத் தடுத்துநிறுத்தச் சத்தியற்றோராகி இரண்டுக்கு மிடையில் இடறி வீழ்ந்தனர். ஒற்றேபர்ப் புரட்சியின் தத்துவங்கள் வந்துறுமுன்னமே, சமுதாய ஒருமைப்பாட்டை ஓராற்றல் இந்தியா எய்தியிருந்தது. கிரியையும் அரசியலும் கல்வியும் ஒன்றெனக் கொண்டு, யப்பானும் தன் சமுதாயத்தை உறுதியான அடிப்படையில் அமைத்திருந்தது. சீனச் சமுதாயத்தைச் சிதறவிடாது பந்தித்து நின்ற பிணிப்புச் சத்தி, சமயந் தோல்வியுற்றமையாலும்

கொன்பியூசியசு மதம் கண்டனந் தாங்காது மதிப்பிழந்தமையாலும், மறைந் தொழிந்துவிடவே, அச்சமுதாயம் கட்டுக்கோப்பற்று உருக்குலைந்துவிட்டது. ஆதலின், பொதுமக்களோடு தொடர்பற்று ஒதுங்கிநின்ற அறிவாளிகளின் கோட்பாடாகவே புதுப்பெருக்குக் கருத்துக்கள் இடம்பெற்றிருந்தன.

1920 ஆம் ஆண்டையடுத்த காலப்பகுதியிலே தோன்றிய சீன இலக்கியம் இவ்வுண்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இரு தாபனங்கள்-இலக் கிய ஆராய்ச்சிக் கழகம் என்பதும் (1920), ஆக்கக் கழகம் என்பதும் (1922)— தாராண்மைத் தத்துவமரபினின்றும் பிரிந்து செல்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. முன்னைக் கோட்டிக்குத் தலைமை வகித்தவன் உஹ இ-சுன் என்பான். 'ஆகியூ' என்னும் பிரபலமான கதையை எழுதிய உஹ இ-சுன் தற் காலச் சீன இலக்கியத்துக்குத் தந்தையாகக் கருதப்படுவன்.[1] அக்கோட்டியைச் சேர்ந்த மற்றொருவன், மாவோதுங்கு எனும் புனைபெயராற் பிரபலமான சென் யென்-பிங்கு என்பான். அவன் எழுதிய ஏமாற்றம், தடுமாற்றம், தேடுகை எனும் முத்தொகைநூல், சீனத்தின் உள்ளத்திலே அக்கால் நிகழ்ந்த போராட்டங்களைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுவதாய் அமைந்துளது. குமிந்தாங்கும் தாராண்மை மரபும் தவறிவிட, முன்னர்க் காணப்பட்ட நம்பிக்கையுணர்ச்சி மறைந்து ஏமாற்றமே சீன உள்ளத்திற் றலைதூக்கிநின்றது. ஆக்கக் கழகத்துக் குத் தலைமை தாங்கியவன் குவோ மோ-யோ என்பான். அவன் வரலாற்றுசிரி யன்; அறிஞன்; கவிஞன்; சிறுகதை யெழுத்தாளன். அவன் 1925 ஆம் ஆண் டுக்குப் பின்னர் இலக்கியத்துறையிலே புரட்சிகரமான போக்கைக் கொண்டான். உஹ இ-சுன்னும் மாவோ துங்கும் சீன இடதுசாரி எழுத்தாளர் சங்கத்துக்கு ஆதரவளித்தனர். அறிவாளிகளின் சிந்தனைப் போக்குப் பொதுவாக இடதுபுறத் தையே நாடுவதாயிற்று.

1. தற்கால இலக்கிய வளர்ச்சியில் உஹஇ–சுன்னது சிறப்பை அழுத்திக் கூறுதல் அவசியம். அவன் எழுதியவற்றுட் செலவாக்கு மிக்க முதல் நூல் "பித்தனுடைய நாளேடு" என்பது. அது ஸ யவனசேயில் 1919 இல் வெளியிடப்பட்டது. மனித சமுதாயத்தில் மலிந்து கிடக் கும் பேராசையையும் சுய நலத்தையும் அது தீவிரமாகத் தாக்கிற்று. அதன் உள்ளடக்கம் போலவே அதன் அமைப்பும் மிகப் புதுமையாக இருந்தமையால், சீன இலக்கிய உலகை அது திகைக்க வைத்தது. எனினும் அவன் எழுதியவற்றுள் மிகச் சிறந்த பிரபலமான நூல் ஆகியூ என்பது. அது முன்னம் சென் பாவோவின் ஒரு விசேட அனுபந்தமாக வெளியிடப்பட்டது. கதாநாயகனுன ஆ கியூ என்பான், வேலையின்றிச் சுற்றித் திரிந்த ஒரு நாடோடி; வியப்பூட்டும் ஒரு கதாபாத்திரம். அவன் தன்னிடத்துக் காணப்பட்ட குறைகளைக் குறைகளாகக் கொள்ளாது ஒருவாறு அமைதிப்படுத்த முயல்கிறுன்; தான்பட்ட தோல் விகளுக்கு நியாயங்கண்டு தன்னையே திருத்தப்படுத்த முயல்கிறுன். வேடிக்கையும் நகைச் சுவையுந் ததும்பும் நடையிலே இந்நூல் எழுதப்பட்டுளது என்பர். சீனச் சமுதாயத்திற் காணப்பட்ட குற்றங்குறைகளே ஈவிரக்கமின்றி "அம்பலப்படுத்துவதே" இந்நூலின் நோக்கம். அவ்வழி அது ஆழ்ந்த செல்வாக்கு உடையதாயிற்று. அவனுடைய சிறுகதைத் தொகுதி களான "புலம்பலும்" "தயக்கமும்" கிராமவாழ்க்கையைச் சித்திரிப்பன. உஹஇ–சுன் பொது வுடைமை வாதியல்லனுயினும், சீன இடதுசாரி எழுத்தாளர் கூட்டவையத்தில் அவன் முதன்மை பெற்று விளங்கினுன். தற்காலச் சீன இலக்கியத்திலே அவன் விட்டுச் சென்ற செல்வாக்கு ஆழமாகப் பதிந்துளது.

சீன மறுமலர்ச்சி யியக்கத்திற் காணப்பட்ட முரண்பாடுகளையும், அதன் தோல்விக்குரிய காரணங்களையும், சீனத்தேசியப் புரட்சிக்குத் தந்தையாகப் போற்றப்படும் சன்யாட்சனின் வாழ்க்கை வரலாறு ஓரளவு தெளிவாகக் காட்டு கின்றது. ஐரோப்பிய வர்த்தகச் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த கரையோரப் பிரதேசத்திலேயே சன் பிறந்தார். இளம் பிராயத்திலே ஆவாய்க்குச் சென்ற சன், 'கடல்கடந்த சீனச் சமுதாயத்திலே' வளர்ந்து மிசன் பள்ளிக்கூடத்திலே கல்வி பயின்று, ஞானமுழுக்குப் பெற்றுக் கிறித்தவரானார். தாய்நாடு திரும்பி, மிசனரிமாரின் செல்வாக்கிலே சேவை புரிந்த சன்யாட்சன், புரட்சிகரமான முயற்சிகளிலே ஈடுபட்டார். அம்முயற்சிகளுக்குப் பெரும்பாலும் யப்பான் அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து ஆதரவும், வெளிநாடுகளிலே வாழ்ந்த சீன மக்களின் நிதியுதவியுங் கிடைத்து வந்தன. புரட்சியைத் தூண்டிவிடுவதற்கு முயற்சி செய்யாத இடைக்காலங்களில் அவர் அன்னியரின் சலுகைப் பிரதேசங் களிலே தஞ்சமடைந்து, சீனப் பேரரசாட்சியிற் செல்வாக்கும் ஆதிக்கமும் மறுக்கப்பட்ட புதிய வகுப்பாரிடையே தமக்கு ஆதரவாளரைத் திரட்டுவதிற் காலங் கழித்தார். புரட்சிக்காலத்திலும் அதற்குப் பின்னரும் சன் யாட்சன் சீனம் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள், புதுப் பெருக்குவாதிகளின் கருத் துக்களையே பெரிதும் ஒத்திருந்தன. அவர்களைப் போன்று அவரும் கொன்பியூசி யசு மதத்தையும் அதன் குறிக்கோள்களையும் எதிர்த்தார். மேனாட்டு நாக ரிகத்தை எஞ்சலின்றிப் பூரணமாக ஏற்றுக் கொள்வதையே அவர் ஆதரித்தார். ஐரோப்பிய நாடுகளின் தாராண்மைத் தத்துவமரபிலே அவர்க்குப் பெரு நம் பிக்கையிருந்தது. அடுத்த கட்டத்தில், 'மேற்குலகு தவறியதால்' ஏமாற்ற மடைந்த சென்னை மொசுக்கோ கவர்ந்தது. அவர் சீனமக்களுக்கு 1919 ஆம் யூலை 25 இல் வெளியிட்ட அறிக்கையிலே வருமாறு கூறினர் : 'இரசிய மக்களைப் போன்று சீன மக்களும் சுதந்திரமாக இருக்க விரும்பினால், வேர்சேயிலே நேய நாடுகள் அவர்களுக்குச் சூழ்ந்த கதியினைத் தவிர்க்க விரும்பினால், நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் உற்ற துணைவராயும் சகோதரராயும் இருக்கத்தக்க வர் செஞ்சேனையைச் சேர்ந்த இரசியத் தொழிலாளரும் விவசாயிகளுமே யென் பதைத் தெளிவாக விளங்கிக்கொள்ளல் வேண்டும்.' காலப் போக்கில் இந்நம் பிக்கையே அவருள்ளத்தில் உறுதிபெற்றது. அவர் இறுதியாக எழுதிய கடிதம் ஐ.சோ.ச.கு. நாட்டின் மத்திய நிருவாகக் குழுவுக்கே எழுதப்பட்டது. அது வருமாறு சென்றது : 'உலகில் அடக்கியொடுக்கப்பட்டு வாழும் மக்களுக்கு அமரர் இலெனின் மரபுரிமையாக விட்டுச் சென்ற சுதந்திரக் குடியரசுகளின் ஐக்கியத்துக்கு நீவிரே தலைவராக உள்ளீர்கள். அம்மரபுரிமையின் உதவி கொண்டு, பேரரசாண்மைக்குப் பலியாகியுள்ளோர் தப்பாது விடுதலை யடைவர் .....என்னருமைத் தோழர்களே, யான் உம்மிடமிருந்து விடைபெறு முன்னம் சொல்லவேண்டியது ஒன்றுண்டு. மாபெரும் வலிமையும் சுதந்திரமும் படைத்த ஒரு நாடாகத் திகழப்போதும் சீனத்தை உற்ற நண்பனாக

ஐ.சோ.ச.கு. வரவேற்கும் நாள் அதிக தூரத்திலில்லையெனவும் உலகில் அடக்கியொடுக்கப்பட்டுள்ள மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் இந் நட்பு நாடுகளிரண்டும் வெற்றியை நோக்கிக் கைகோர்த்துச் செல்லும் எனவும் எனது நம்பிக்கையைத் தெரிவிக்க விரும்புகிறேன்'.

மேஞட்டுமயமாதலை ஆகியில் ஆதரித்தவரும், மிசனரிப்பள்ளிக்கூடத்திற் கற்றுத் தேறியவருமான சன் யாட்சன், தாராண்மைவாதத்தினின்றும் விலகி இலெனின் வாதத்தை வெளிப்படையாக ஆதரிக்குமளவிற்கு மாறுதலடைந்தமை, சீனமக்களின் அக்கால வரலாற்றை, அவர்தம் புத்துயிர்ப்பும் மறுமலர்ச்சியின் தோல்வியும் பற்றிய வரலாற்றை, பிரதிபலிப்பதாயுளது.

அதிகாரம் 5

ஆசிய நாடுகள் சிறியவை

ஆசியநாடுகளுட் சிறியவற்றிலே தோன்றி வளர்ந்த இயக்கங்கள் பற்றியும் இங்கு நாம் சுருங்கக் கூறுவோம். பிரித்தானியர் 1937 ஆம் ஆண்டிலே பர்மாவை வென்றடிப்படுத்திய காலந்தொட்டு, அந்நாடு இந்தியாவின் ஒருபாகமாகவே வைத்து ஆட்சி செய்யப்பட்டது. அந்நாட்டிலே தோன்றிய தேசியப் புத்துயிர்ப்பு இயக்கமானது இந்தியச் செல்வாக்கினைப் பெரிதும் பாதிக்கப்பட்டது. எனினும் முக்கியமான இருவேறுபாடுகள் காணப்பட்டன. இந்திய மூதலாளி மாரும் வியாபாரிகளும் பர்மியப் பொருளாதாரத்திலே ஆதிக்கம் பெற்றுச் சுரண்டி வாழ்ந்தமையாலும், இந்தியர் பெருந்தொகையினராய்ச் சென்று பர்மாவிற் குடியேறியமையாலும், பர்மியத் தேசியவுணர்ச்சி இருபடித்தாய பண்பைப் பெற்றது—ஒன்று பேரரசாட்சிக்கு மாறுன உணர்ச்சி. மற்றையது இந்தியர்க்கெதிரான உணர்ச்சி. பேரரசாட்சிக்கு எதிரான போராட்டத்தை இந்தியத் தேசியவியக்கம் ஒருபுறந் தாண்ட, பிரித்தானியரோ பர்மியரின் இன வுணர்ச்சியை மறுபுறந் தாண்டி விட்டனர். இரண்டாவதாக, பர்மா வென்று கைப்பற்றப்பட்டதன்பின்னர், அரசாங்க மதமாயிருந்த பௌத்தம் அந்நிலையை இழந்துவிட்டாலும், பர்மிய மக்களிடையே அதற்கிருந்த செல்வாக்குப் பொதுவாகப் பாதிக்கப்பட்டிலது. சீனத்திலே பொதுக்கருத்தை உருவாக்கிய தலைவர்கள் தமக்கு மதமில்லையென்று கூறுவதை ஒரு பெருமையாகக் கொண்டாராக, பர்மாவிலோ தேசியத் தலைவர்கள் மக்களாதரவைப் பெறுதற்காகத் தாம் பத்திமிக்க பௌத்தரேயெனப் பாவனை செய்யவேண்டியவராயினர். இதற்கு உதாரண புருடனைக் கொள்ளத்தக்கவன் கலிநிதி போமோ என்பான். குழந்தைப் பருவத்திலே கிறித்தவனைத் திருமுழுக்குப் பெற்றவன் அவன். பிரசித்தி பெற்ற தேசியத் தலைவனை அவன் உயர்ந்தகாலை, தாய்த்திருமதமான பௌத்தத்துக்கே மீண்டுவிட்டதாகப் பிரகடனஞ் செய்தான். 'தற்காலத்துறவி' எனும் பிரபலமான நவீனத்தை எழுதிய தெயின் பே என்பான். குருமாராயத்துக்கு மாறுன கருத்துக்களை 1745 இல் வெளியிட்டதன் பயனைப் பின்னர் பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டியவனுயினன்—மதத்தையும் குருமாராயத்தையும் கண்டிப்பது குறித்துப் பொதுமக்களின் எதிர்ப்பு அத்தகையதாயிருந்தது.

முதற்பெரும் போரின் பின்னர் பௌத்த தாபனக் கழகம் நிறுவப்பட்டது. மாறுதலடைந்துவிட்ட அரசியற் சூழ்நிலையிலே பௌத்த மதம் உறுதிப்பாடு அடைந்தவாற்றையும், தமது மதத்தின் ஒருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பர்மியர் தேசியவுணர்ச்சியை வளர்க்க முற்பட்டவாற்றையும் அக்கழகம் குறித்தது. இவ்வாறுகப் பர்மிய இயக்கம் பெரும்பான்மையும் தேசியவுணர்ச்

சியினையே பிரதிபலித்தது. அதனைப் பர்மிய சமுதாயத்தின் கட்டுக்கோப்புக்கு யாதும் ஆபத்தோ, சமுதாயப் புரட்சி ஏற்படுமென்ற அபாயமோ ஆங்குத் தோன்றியதில்லை. அந்நாட்டின் சமுதாய அமைப்போ சமயமோ பாரதூரமாகப் பாதிக்கப்பட்டதில்லை. கரென் இனத்தவர் தவிர்ந்த பிற்றிடையே மிசனரிமாரின் முயற்சியும் அத்துணை பரவியதில்லை. பர்மா, இந்தியா ஆகிய நாடுகளிரண்டிலும் கல்வியும் தேசியவுணர்ச்சியும் பிறவுஞ் சம்பந்தமான சக்திகள் பெரும்பான்மையும் ஒத்திருந்தவாதலின், பர்மாவில் இந்தியர்க்கெதிராகப் பொருளாதாரத் துறையிலே போராட்டம் நிகழ்ந்த போதிலும், அவ்விருநாடும் பாண்பாட்டளவில் ஒரே யொழுக்கிற் செல்வவாயின.

சூலாலங்கோன் எனப் பெயரிய மன்னன் காலந்தொட்டு அரசியலொட்பங் காட்டிவந்த முடியாட்சியிலே, சீயம்நாடு மேனாட்டுமயமாதற்கான ஒரு திட்டத்தைச் சாவதானமாக மேற்கொண்டது. சீய மன்னரும் அவர்தம் ஆலோசகன்மாரும் இயற்கையான சிலவரையறைகளுக்குக் கட்டுப்பட்டே செயலாற்ற வேண்டுமென்பதை உணர்ந்தாராகி, நாட்டின் சுதந்திரத்தைப் பேணிக் காப்பதையும், ஒழுங்கான அபிவிருத்திக்கு வழிவகுப்பதையுமே இலக்காகக் கொண்ட பூட்கையை மேற்கொள்வாராயினர். ஆதியிலிருந்தே யப்பான் தனது குறிக்கோளாகக் கொண்டவைபோன்ற ஆதிக்கநிலையினையும் சிறப்பையும் அன்னர் அடைதற்கு முயன்றிலர். பிரான்சுக்கும் பிரித்தனுக்குமிடையில் நிலவிய போட்டியிலேயே தனது நாட்டின் பாதுகாப்பு உளது என்பதை உணர்ந்த சூலாலங்கோன், அவ்விரு வல்லரசுகளுக்குமிடைப்பட்ட தடுப்பு நாடாகச் சீயத்தைப் பாவித்து, 'நல்லதுகொண்டு, அல்லது தள்ளும்' ஒரு பூட்கையின் வழி, சமுதாயச் சீர்குலைவும் அரசியற் குழப்பமும் நேரா வகையிலே தனது அரசை நவீனமுறையிற் சீர்திருத்தியமைத்தான். மேனாட்டு அறிவுக்கு இணங்கத் தாம் ஒழுகவேண்டியதன் அவசியத்தை அரசகுடும்பத்தோர் உணர்ந்தனர். மன்குட்டு மன்னனின் ஆட்சியில் இவ்வாறான பூட்கை மெல்ல உருவாகிய வாற்றை வேத்தவையிற் செவிலியாகப் பணிபுரிந்த ஆங்கில மாதொருத்தியின் கதையைக் கூறும் 'அன்னவும் சீயமன்னனும்' எனும் நூலிலே தெளிவாகக் காணலாம். எனினும், அரசாட்சியை நவீனமயமாக்குதற்கு, மேனாட்டு நிலைமைகளை நன்கறிந்து தேர்ச்சிபெற்ற ஆளணி தேவையென்பது விரைவிற் புலனாயிற்று. எனவே, அரசாங்கத்தின் உதவியோடு மாணவரை மேனாட்டுக்கு அனுப்பும் பூட்கை தொடங்கிற்று. மேனாட்டுக் கல்வி பயிலுதற்காய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் பெரும்பாலும் உயர்குடியைச் சேர்ந்தோராய் இருந்தக்கண்ணும், பழைமைபேணும் மரபினைச் சேர்ந்தோராயும், மேனாட்டுக் கல்வியைக் கற்றுத் தெளிந்தோராயும், நவீனமயமாக்கும் ஒரு பூட்கையைத் துவக்கி வைத்துச் செயற்படுத்த வல்லவராயுமிருந்த இளைஞர் குழாமொன்றை இம்மேனாட்டுக் கல்விமுறை தோற்றுவித்தது. ஒக்சுபோட்டுக் கிறித்துவ சேச்சுக் கல்லூரியிலே கல்விபயின்ற மன்னன் ஆரும் இராமனே இவ்வியக்கத்துக்குத் தலைமை தாங்கினன். அவன் சூலாலங்கோன் பல்கலைக்கழகத்தைத் தாபித்தான்; மேனாட்டு இலக்கியத்தை மக்களிடையே பரப்பினன். செகப்பிரியரின் நாடகங்கள் சில

வற்றைத் தானே மொழிபெயர்த்தான்; ஐரோப்பிய விளையாட்டுக்களை நாட்டிற் புகுத்தினான்; முன்னேற்றமடைந்த நாடுகளின் வரிசையிலே சீயத்தை வைத்தற்கு அவன் இவ்வாறாக அரும்பாடுபட்டான். இத்துறையிலே அவன் ஈட்டிய அருஞ்சாதனைகளுள் ஒன்று, 'காட்டுப்புலிகள்' எனும் பெயருடைய இளைஞர் படையைத் தாபித்தமை—பொறுப்புணர்ச்சியையும் சேவையுணர்ச்சியையும் இளைஞர்க்குப் புகட்டுவதே அதன் குறிக்கோளாகும். சட்டப்படியான திருமண முறை வழக்காற்றிற் புகுந்தது. குடிகளிடையே கடமையுணர்ச்சியை உயர்த்தற்கு மன்னன் தீவிரமான முயற்சி செய்தான். ஆரும் இராமன் ஆற்றல் மிக்க பத்திரிகைக்கலைஞன். அசுவபாகு எனும் புனைபெயரில் அவன் தேசியப்பூட்கையின் இயல்புகளை மக்களுக்கு விளக்கினான்.

பர்மாவிற் போன்று சீயத்திலும் பௌத்த மதம் வலியும் உயிர்ப்பும் பெற்றிருந்தமையாலே, மிசனரிமார்க்கிருந்த செல்வாக்கு மிகச் சிறிதே. புத்த சமயத்துக்குப் புத்துயிர்ப்பளித்தற்கும் இராமன் ஓர் இயக்கத்தை ஆரம்பித்து ஆற்றுப்படுத்தினான். அவனுடைய ஆதரவிலே திரிபிடகம் பதிப்பித்து வெளியிடப்பட்டது. குருமாராயத்துக்குக் கல்வி புகட்டி வலுவளித்தற்கும் முயற்சி செய்யப்பட்டது. பிரித்தானிய மன்னரைப் பின்பற்றிச் சீயமன்னரும் 'புத்த சமய பாதுகாவலர்' எனும் பட்டத்தை வகிக்கத் தொடங்கினர். பழைமை தழுவிய தாயினும் பொதுவாக ஒட்பம் வாய்ந்த ஒரு பூட்கையைச் சீயம் நாட்டு முடிமன்னர் 1870 இற்கும் இடைப்பட்ட நெருக்கடியான காலத்திலே கடைப்பிடித்து வந்தமையால், சமுதாயச் சீர்குலைவின்றியும் கடுமையான கொந்தளிப்பின்றியும், சீயம் நாடு மாறுதலடைந்து, ஈற்றில் முதற்போரை யடுத்த காலக் கூற்றிலே, பிற வல்லரசுகள் பெற்றிருந்த ஆணிலப்புறத்துரிமையை இணக்கப் பேச்சு மூலமாகவும் படிப்படியாகவும் ஒழித்துப் பூரணமான சுதந்திரத்தைப் பெறுதல் இயல்வதாயிற்று. நாடெங்கணும் பரவியிருந்த சிறு நிலக்கிழார் முறையும், புத்தமதத்தின் உயிர்ப்பும் சீனத்திற் போலாது மேனாடுகளுக்கெதிராகக் கசப்புணர்ச்சி வளராவகையில் வெளிநாட்டு அலுவல்களைக் கையாள்வதிலே அரசகுடும்பத்தார் காட்டிய திறமையுமெல்லாம் அமைதிசால் முறையில் நாடு மீட்சியடைதற்கு உதவியாயிருந்தன.

சீயத்திலே 1932 இற் கிளர்ந்த புரட்சியானது எதேச்சாதிகாரமான அரச ஆட்சிக்கு மாறுகவும், மன்னன் சூலாலங்கோனின் பற்பல கான்முளைகளுக்கே உயர்ந்த உத்தியோகங்களை அளிக்கும் வழமைக்கு மாறுகவுமே மூண்டதொன்றும் (சருவதேசப் போட்டி மலிந்திருந்த அந்நாளில் அரச குடும்பத்தார்க்கே உயர் பதவியளித்தல் அவசியமாக இருந்ததாகலாம்). தேசியவுணர்ச்சியையே தழுவிச் சென்ற இப்புரட்சியானது, நவீனமயமாதலை இலக்காகக் கொண்ட இயக்கத்துக்கு மேலும் ஊக்கமளித்தது. அரசனுடைய சிறப்பதிகாரங்களைக் கட்டுப்படுத்தி, குடியாட்சி முறையை ஓரளவுக்குப் புகுத்தியதோடு, சீயமக்களின் தலைவன்மார் பொருளாதாரத் தேசிய வாதத்தையே தம் பூட்கையாக

விருத்தி செய்யத் தலைப்பட்டனர். அவ்வழி, அந்நாட்டின் பொருளியல் வாழ்க்கையிலே அன்னியர்க்கிருந்த வன்பிடியினைத் தளர்த்திச் சிய மக்களுக்கு விமோசனமளிப்பதே அவர்தம் நோக்கம்.

பர்மா, சீயம் ஆகிய நாடுகளிரண்டிலும் விசேடமாகக் குறிப்பிடத்தக்க விடயம் யாதெனின், ஈனயான பௌத்தம் வன்பொடு விளங்கியதேயாம். இவ்வாற்றால் அது சீனத்தில் நிலவிய மகாயான பௌத்தத்தினின்றும் வேறுபட்டிருந்தது. பாமரமக்களிடையே பௌத்தத்துக்குள்ள செல்வாக்கினைக் குறைபடமதிப்பிடுவதே ஐரோப்பிய எழுத்தாளரின் வழமையாயிருப்பினும், உண்மையில், சீன நாட்டின் அலுவல்களிலே புத்தகுருமாரும் பௌத்த தாபனமும் செலுத்திய செல்வாக்கு மிகச் சிறிதே. மொங்கோலியா தவிர்ந்த பிறவிடத்தில், புத்த மதத்தை அடிப்படையாகக் கொண்டு ஒருமைப்பாடு உருவாதலே மண்டரின் மாரின் கொன்பியூசியசு மதம் தடுத்துவைத்தது. மற்றுச் சீயத்திலும் பர்மாவிலும் ஈனயானம் தனது சமுதாய அமைப்பிலே வியத்தகும் வலிமையுடையதாகி பர்மிய, சீயச் சமுதாயங்கள் தம் உறுதிநிலை பேணிக் குழப்பச் சத்திகளாகிய மிசனரிமாரின் முயற்சிகளையும் மேலைட்டுக் கருத்துக்களையும் எதிர்த்து நின்று மகத்தான வெற்றி பெறுதற்கு ஏதுவாகி, அச்சமுதாயங்களைப் பிணித்து நிற்கும் வலிய சத்தியாயிற்று.

இந்துசீனத்திலே நிலவிய அரசியலமைப்பு சிக்கல் மிக்கதாதலின், அதனைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் சற்றுக் கடினம். பிரெஞ்சு அதிகாரத்துக்கு உட்பட்ட கம்போடியாவிலும் இலாவோசிலும் ஈனயானம் வலியதாய் இருந்தமையாலும், முடியாட்சியே தொடர்ந்து நிலவியமையாலும் சமுதாய அமைப்பு உறுதிபெற்றிருந்தது. சீர்திருத்த இயக்கங்கள் வலியற்றனவாயும் பரக்கப் பரவாதனவாயும் இருந்தன. இனி, அனம் பேரரசிலே வேத்தவையானது தழுவி நின்ற கொன்பியூசியசுத் தத்துவங்கள், சீனத்திலே அத்தத்துவங்கள் தோல்வியுற்றமையாலும் பிரான்சியரின் நேரான நெருக்கிடையாலும் நலிவடைந்து வலிகுன்றி, தீவிரமிக்க புதிய கருத்துக்களை எதிர்த்து நிற்கச் சத்தியற்றிருந்தன. பிரான்சியரின் நேரான ஆட்சிக்கு அடிப்பட்டிருந்த கொச்சின் சீனத்தில், மிசனரிமாரின் தீவிரமுயற்சி காரணமாகப் பலவிடங்களிலே பழைய முறை தகர்ந்துவிட, காயோடயிசம் போன்ற விசித்திரமான மதப் பிரிவுகள் தோன்றலாயின. இந்து சீனத்தில், பொதுவுடைமை வாதிகள் தலைமை வகித்து ஆற்றுப்படுத்திய தேசியவாதமே மக்களின் கவனத்தைப் பெரிதுங் கவர்ந்தது. எனினும், இந்து சீனத்திலே தேசியவுணர்ச்சி யென்பது புதியதொரு தோற்றப் பாடாகாது என்பதை முன்னமே கண்டோம். பிரான்சியரின் அதிகாரத்தை இந்துசீனமக்கள் தாமாகவே இசைந்து எப்போதாயினும் ஏற்றுக்கொண்டாரல்லர். பிரான்சியர் கையாண்ட 'இணைந்து நடத்தல், தழுவிக் கொள்ளல்' போன்ற கொள்கைகளை ஏற்று நடத்தற்கு இந்து சீனமக்களின் தேசியப் பெருமையும் பண்பாடும் தடையாய் நின்றன. ஆயினும் உண்ணாட்டுச் சீரமைப்பையும் சீர்திருத்தத்தையும் ஆதாரமாய்க் கொண்ட தேசிய வியக்கம் யாதும் விரிந்த முறையில் அந்நாட்டில், முதற் பெரும்போர்வரையும் இருந்ததில்லை. அவ்

வியக்கத் தொடங்கிய காலத்தில், இரசியப் புரட்சி கிழக்காசியாவிலே பெருஞ் செல்வாக்குப் பெற்றுவிட்டது. ஆதலின், தொடக்கத்திருந்தே இந்து சீனத் தேசியவாதம் மார்க்சியச் சார்புடையதாயிற்று. அச்சார்பே பின்னர் பொதுவுடைமைவாதமாக விருத்தி யடைந்தது.

இந்தோனேசியாவிலே, இந்தோனேசியச் சமுதாயத்தின் பரம்பரையமைப்பைப் பேணுவதாகிய பூட்கையினையே இடச்சுக்காரர் கடைப்பிடித்து வந்தனர். அந்நாட்டின் மூலவளங்களைச் செப்பமாகவும் முறையாகவும் தம் நலங்கருதிச் சுரண்டுவதிலேயே அன்னரின் கவனமெல்லாம் சென்றதாதலின், அவர்தம் அரசாட்சி சிலகாலம் மறைமுகமானதாகவே நடைபெற்றுவந்தது. இந்தோனேசிய மக்களிடையே தற்காலக் கல்வியை ஊக்குவதொழிந்தும், புதிய கருத்துக்கள் பாடசாலைகளை அணுகாமே தடுக்கக்கூடிய சுதேசக் கல்விமுறையை வளர்த்தும், இடச்சுக்காரர் தேசியவுணர்ச்சி வளராவகை நெடுங்காலந் தடுத்துவைத்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரையும், பண்பாட்டுத் துறையிலேதானும் செல்வாக்குச் செலுத்த அவர்கள் விரும்பினரல்லர். இருநூறாண்டுக்காலமாக, 'நாகரிகப்படுத்தும் பணியை யாம் மேற்கொண்டோம்' என நடிக்கவும் அவர்கள் நினைந்திலர். இந்தோனேசியாவின் செல்வத்திலேயே அவர்கள் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். இடச்சுக்காரரின் நாட்டுவருமானத்தில் அதுவே ஆறிலோர் பாகமாய் அமைந்தது என்ப.

ஆயின், வெளியுலகினின்றும் இந்தோனேசியாவை வல்லந்தமாகத் தனிப்படுத்தி வைத்தல், முடிவின்றி இயலக்கூடிய காரியமன்று. மத்திய கிழக்கிலே அகண்ட இசுலாமியக் கொள்கையின் வளர்ச்சியும் முசிலிம் உலகிலே காணப்பட்ட விழிப்புணர்ச்சியும் இந்தோனேசியாவையும் தப்பாது பாதித்தன. மெக்காவுக்கும் மெடினாவுக்குஞ் சென்ற யாதிகர் புதிய கருத்துக்களைக் கொண்டு வந்தாராக, அக்கருத்துக்கள் பாமரமக்களிடையே ஊடுருவி விரைவாகப் பரவத் தொடங்கின. இந்தோனேசியாவின் முந்திய வரலாறு பற்றி இடச்சு அறிஞன்மார் எழுதி வைத்த நூல்களிலே தமது புராதனப் பெருமையை இளைய தலைமுறையினர் கண்டனர். இன்னும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தோனேசிய மாணவர் தாராளமாக ஐரோப்பாவுக்குச் செல்லத்தொடங்கினர். முதற்பெரும் போரின் பின்னர் மாணவரின் போக்குவரத்து மேலும் அதிகரித்தது. இந்தியாவிலே காந்தியடிகளார் தொடக்கி வைத்த ஒத்துழையாமை யியக்கமும், எகிப்து நாட்டிலே சாக்துல்லும் வாப்தும் வெற்றிகரமாக நடத்திய போராட்டமும் இந்தோனேசியாவிலே புதிய ஆர்வத்தைத் தூண்டிவிட்டன.

தேசியக்கட்சியான 'புத்தி உத்தோமோ' என்பது ஆதியிலே கல்விச்சீர்திருத்தத்தையே வற்புறுத்தி வந்தது—அவ்வழி அதில் அரசியற் பண்பு சிறிதே காணப்பட்டது. ஆயின் 1908 ஆம் ஆண்டின் பின்னர், துருக்கியிலே இளந்துருக்கியியக்கமும் இந்தியாவிலே முசிலிம் கூட்டவையும் தோன்றிய காலத்தில், சமயந்தழுவிய தேசியக் கட்சியொன்று, சரேக்கத் இசுலாம் என்பது, தலைமையிடம் பெற்றது. இவ்வியக்கம் வெற்றி யாதும் ஈட்டு முன்னமே, இரசியப் புரட்சி

கிழக்குலகை அதிரவைத்தது. அதன் விளைவாக, சமயக்கருத்துக்களே இத் தூணைக் காலமும் ஆதிக்கம் பெற்றிருந்த அந்நாட்டில், அரசியற் போராட்டத் துக்குப் பொருளாதார அடிப்படையும் வந்து சேர்ந்தது. இந்தோனேசியச் சமுதாயத்தின் இசுலாமியத் தன்மை காரணமாகவும் (மொலுக்காசு தவிர்ந்த பிறவிடங்களிலே) மிசனரிமாரின் முயற்சி வாயிலாய்ச் சமூக நிலைவரத்தைக் குழப்பலாகாதென்னும் இடச்சுக்காரரின் திட்டமான பூட்கை காரணமாகவும், சமூகச் சீர்திருத்த இயக்கம் யாதும் விரிந்த முறையிலே இந்தோனேசியாவில் வளர்ச்சியடைதல் தடங்கலுற்றது. ஆயின், மாக்சியச் சிந்தனையின் செல்வாக் கைப் பெற்ற புதிய கட்சிகள், சமயச் சார்பை வற்புறுத்திய முன்னைக்காலத் தேசிய வாதிகள் போலாது, சமூக பொருளாதாரச் சீரமைப்பின் அவசியத்தை நன்கு உணர்ந்திருந்தன. இந்தோனேசியாவின் விடுதலையியக்கத்திலே இரண்டு அமிசங்கள் ஒன்றுகலந்து ஊக்கமளித்தமை, குறிப்பிடத்தக்க ஓர் விடயமாகும். சமயத்தின் வழியதான தீவிர ஒற்றுமையுணர்ச்சியும், சமூக பொருளாதாரச் சீரமைப்பு இன்றியமையாது எனும் புதிய உணர்ச்சியுமே அவ்வமிசங்களாம்.

ஏழாம் பாகம்

கிறித்தவ மிசனரிமார்

கிறித்தவ மிசனரிமார்

பாரசீகம், இந்தியா, சீனம் ஆகிய நாடுகளில் அறப்பழைய காலந் தொட்டே கிறித்தவம் நிலவிவந்துளது. மலபார் நாட்டுத் திருச்சபையானது சென். தோம சிலிருந்து சீட பரம்பரையைப் பெற்றதாக உரிமைபாராட்டுகிறது. அஃது எவ் வாருயினும், அத்திருச்சபை இருந்ததென்பதற்கு கி. பி. 182 இற்குரிய பழைய புறச்சான்று உண்டே. நெசுத்தோரியக் கிறித்தவர் பாரசீகத்திலே சிறப்பு மிக்க ஒரு சமுதாயமாக வாழ்ந்தனர். ஏழாம் நூற்றாண்டிலே நெசுத்தோரியக் கிறித் தவம் சீனத்தை அடைந்துவிட்டதென சியான்புச் சாசனம் (மேற்குச் சீனத் தில் உள்ளது) சான்று கூறுகின்றது. செங்கிசுகானின் பரந்த ஆணிலங்களிலே கிறித்தவச் சமுதாயங்கள் பல தழைத்து வாழ்ந்தன. அம்மாமன்னன் காணு டைய வேத்தவையில், குணபுலத்துக் கிறித்தவர், குடபுலத்துக் கிறித்தவர் ஆகிய இருபாலார்க்கும் பிரதிநிதிகள் இருந்தனர்.

ஐரோப்பாவின் இதயதானத்திலே மங்கோலியப் படைகள் வந்துற்றமையால், பீதி யெங்கணும் பரவிற்று. இப்பேராபத்தினின்றும் கிறித்தவ உலகைக் காப் பாற்றுமாறெவ்வாறு என்பதை ஆராயும் பொருட்டு போப்பாண்டவர் இலி யோன்சு நகரத்திலே 1245 இற் கழகங் கூட்டினர். ஐரோப்பாவுக்கு அண்மை யான பிரதேசங்களின் சேனபதிகளோடும், மற்றுச் செங்கிசுகானோடும் இணக் கப் பேச்சுத் தொடங்குதற்காகத் தூதுக்கோட்டிகளை அனுப்புதற்கு அக்கழகம் முடிவு செய்தது.

முதன்முதற் சென்ற தூதுக்கோட்டிகள் சமயச்சார்பு அற்றவையே. மங் கோலியரைப்பற்றியும், அவர்தம் வலியும் மூலவளங்களும் பற்றியும் செய்தி சேகரித்தற்கே அவை அனுப்பப்பட்டன. ஆயின், பிரான்சு நாட்டு ஒன்பதாம் உலூயியால் அனுப்பப்பட்ட பிரான்சிசுக்கன் பாதிரியான உருபிரக்கு நாட்டு வில்லியம் என்பார் மங்கு காணுக்குக் கிறித்தவம் பற்றிப் போதிக்கத் தலைப் பட்டகாலை (1245), மாபெருங் கான் அவர்க்கு வருமாறு கூறினன் :

'கையிலுள்ள ஐந்துவிரல்கள் போலவே சுவர்க்கத்துக்குப் பலவழிகள்உள'— குணபுலத்தை மதமாற்றக் கிறித்தவர் செய்த முயற்சிகளின் வரலாற்றில் இக் கருத்தைப் பல்காலும் நாம் காண்போம்.

கிழக்குலகில் கிறித்தவத்தைப் பரப்பும் முயற்சியில் யோன் த மொந்தி கோவினே என்பார் மிக முக்கியமானவர். பீக்கிங்கிலே குப்ளாய் காணுடைய வேத்தவைக்கு அவரைப் போப்பாண்டவரே அனுப்பி வைத்தார். மாபெருங் கான் இறந்து பட்டதற்குச் சற்றுப் பின்னை அக்காலத்திற் கான்பாலிக்கு என வழங்கிய பீக்கிங்கு நகரை அடைந்த கோவினே, நெசுத்தோரியரின் எதிர்ப் பைப் பொருட்படுத்தாது, தேவாலயங் கட்டி, நாட்டுமொழியைக் கற்றறிந்து, கத்தோலிக்கச் சடங்குகட்கு அவசியமான இலக்கியத்தை எழுதினர். மற்றைச் சமயத்தலைவர் அனைவரினும் பார்க்கத் தம்மையே கான் மன்னன் சிறப்பாகக்

கௌரவித்தான் என அவர் கூறியுள்ளார்—இக்கூற்றின் உண்மையை அறிதற்கு எமக்குச் சான்றில்லை. உரோமுக்கு அவர் எழுதிய கடிதங்கள் ஆங்குப் பேரார வத்தைத் தூண்டிவிடவே, போப்பாண்டவர் கான்பாலிக்குக் குருபீடத்தை நிறுவி, அவரையே அப்பதவிக்கு அமர்த்தினர். ஆயின் சிறிது காலத்துள் மொந்தி கோவினே இறந்துவிட்டார். (1328). அவர் இறந்து இருபத்தையாண்டுக் காலத்துள், அவர் அமைத்த தாபனம் முற்றுக மறைந்தொழிந்தது. சிறு வரை வீலிக்கு வாங்கி ஞானமூழுக்களித்து மதமாற்றஞ் செய்தல் அவர் துவக்கி வைத்த ஒரு வழக்கமாகும். அவ்வழி மெய்ச்சமயத்தாரின் தொகை உலகிற் பெருகி வருகின்றதேயென உரோம் நகர் களிப்படைந்ததாகலாம். ஆயின் ஒரு மதத்தைப் பரப்புதற்கு அம்முறை தகாதது என்பதற்கையமில்லை.

போத்துக்கேயர் ஆசியாவை அடைந்ததன்பின்னர் கிறித்தவ முயற்சியில் அடுத்த கட்டம் ஆரம்பமாயிற்று. கிழக்குலகிலே போத்துக்கேயரின் அதிகாரத் துக்கு ஆதாரமாய் அமைந்தவை மூன்றும் கலிக்தசும், ஐந்தாம் நிக்கலசும், ஆரும் அலெக்சாந்தரும் வெளியிட்ட திருநிருபங்களே. அத்திருநிருபங்கள், புதிது 'கண்டறிந்த' நாடுகளே இசுப்பெயினுக்கும் போத்துக்கலுக்குமிடையே பகிர்ந்தளித்து, கிறித்தவ மதத்தைப் பரப்புதல் அவ்விரு நாட்டின் மன்னவர தும் தலையாய கடன் என விதித்தது.

கிறித்தவ மதத்தைப் பரப்புதல், போத்துக்கேயரைப் பொறுத்தவரை ஓர் அர சாங்க முயற்சியாகவே இருந்துவந்தது. கிழக்குலகிலே சமயதாபனச் செலவு அனைத்தையும் மன்னனே ஏற்றுக்கொண்டான். 'பாட்ரோடோக்' கோட்பாட் டின் வாயிலாக (1514 ஆம் ஆண்டுத் திருநிருபம் விதித்த **Jus Patronatus** எனும் விதிப்படி) போத்துக்கல் அரசியலுரிமை பெற்றிருந்த பிரதேசங்களிலே மிசனரி வேலைபற்றிய அதிகாரம் முழுவதும் முடிக்கே வழங்கப்பட்டிருந்தது. இந்தியாவிற் சில பாகங்களுக்குக் கத்தோலிக்கப் பிசப்புமாரை நியமிப்பதை அங்கீகரிக்கும் அதிகாரம்—பாட்ரோடோவில் இறுதியாக எஞ்சியிருந்த இவ் வுரிமை—1950 ஆம் ஆண்டிலேயே போத்துக்கேய அரசாங்கத்தாராற் கைவிடப் பட்டது. வசுக்கோ த காமா இந்தியாவை வந்தடைந்து 123 ஆண்டுகள் கழிந்தபின்னரே, திருப்பீடத்தை அமைக்கும் பணியைப் போப்பரசு தன் கைப் படுத்தியது.

சமய விடயங்களிலே தூரகிழக்கு முழுவதிலும் அதிகாரம் படைத்த மேற்றி ராசனமாக 1534 இற் கோவா நிறுவப்பட்டது. பதிதரை வேரோடும் ஒழிக்கு மாறு போத்துக்கேயப் பதிலிராயற்கு விசேட கட்டளைகள் விடுக்கப்பட்டன. கோவாவிலிருந்த இந்துக்கோவில்கள் இடித்து அழிக்கப்பட்டு, அவற்றின் சொத் தெல்லாம் 1540 இற் கத்தோலிக்கச் சங்கத்தார்க்கு அளிக்கப்பட்டன. மத விசாரணைமன்று 1560 இல் நிறுவப்பட்டது.

பாரிசிலே கல்விபயின்று, ஆங்கு இக்னேசியசு லொயலா என்பாரின் சமயப் பணியாற் கவரப்பட்ட பிரான்சிசு சேவியர் கிழக்குலகிலே கிறித்தவத்தைத் தாபிக்கும் பொருட்டு 1541 இல் இந்தியாவுக்குப் பயணமாயினர். கோவாவி லிருந்த அதிமேற்றிராணியாரின் மாளிகைக்குப் பல்லக்கிலே செல்ல வேண்டிய

சேவியர், அதை விரும்பாது, குட்டரோக மருத்துவமனைக்குக் கால் நடையாகவே சென்று, அங்கு நோயாளிகளின் புண்களைக் கழுவுவதில் நேராக ஈடுபட்டார். ஆசிய மிசனரிமார்க்குப் பயிற்சியளிக்கும் பொருட்டாக 1542 இற் கோவாவிலே சென். போல் கல்லூரியை அவர் தாபித்தார். அடுத்த நூற்றாண்டுக் காலப் போழ்தில், தூரகிழக்கிற்குச் செல்லும் மிசனரிமார் கோவா வாயிலாக அனுமதி பெற்றுச் செல்லவேண்டியவராயினர். இவ்வாறாக, ஆசியாவிலே கிறித்தவ முயற்சிக்கு இந்நிறுவனம் ஆற்றிய தொண்டு மிகப் பெரிதே. தூரகிழக்கிலே சமயப்பணியில் ஈடுபட்ட கத்தோலிக்கப் பெருமக்களிற் பெரும்பாலானோர் கோவாவில் ஆரம்பப் பயிற்சி பெற்ற பின்னரே அவர்தம் பதவிகளுக்கு அனுப்பப்பட்டனர். யப்பானியர், சீனர், அனமியர் முதலானோரும் அக்கல்லூரிக்கு வந்து பயிற்சி பெறுதல் வழக்கமாயிருந்தது.

இத்தகைய நிறுவனவேலியிலே திருத்தியடையாத சேவியர் கோவாவைவிட்டு நீங்கி, மலபார்க்கரையில் வாழ்ந்த மீனவரிடையே சமயப்போதனை செய்யப் புறப்பட்டார். அவருடைய பத்தியையும் எளிமையையுங் கண்டு வியந்த மக்களிடையே ஓரளவு வெற்றியை அவர் கண்டார். ஆயினும், கிறித்துநாதரின் சுவிசேடத்தை இயன்றவிடத்தெல்லாம் பரப்புதல் வேண்டுமென்னும் ஆசையாற் பிடர் பிடித்துந்தப்பட்ட சேவியர் இந்தியாவை விட்டு நீங்கித் தூர கிழக்கிற்குப் பிரயாணமானார். ஆங்கு அவர் செய்த சமயப்பணிபற்றிப் பின்னர் காண்போம்.

இந்தியாவில் அவர் தாபித்த யேசுதர் சங்கங்கள், மதமாற்றும் பணியை ஆர்வத்தோடு மேற்கொண்டன. ஆயினும், உரொபேட்டோ த நொபிலி என்பார் மதுரையிலே சமயப்பணியைப் பொறுப்பேற்கும்வரையும், மதமாற்றம் மெதுவாகவே சென்றது. வியக்கத்தக்க அகக்காட்சி படைத்தவர் நொபிலி. மதுரையிலே சிறிது காலம் வாழ்ந்து பெற்ற அனுபவத்தின் வாயிலாக அவர் ஒரு முடிபுக்கு வந்தார். கிறித்தவம் மேனாட்டுப் போர்வையிலே இருக்கும்வரையும், நாட்டுமக்களின் உள்ளத்தையும் உணர்ச்சிகளையும் புரிந்துகொள்ளாதவரையும், அது பெருவெற்றி அடைய முடியாதென்பதை அவர் உணர்ந்தார். இந்து மதத்தைக் கருத்தூன்றிக் கற்றற்கு அவர் 1606 இல் யேசுதர் சங்கத்தின் அனுமதி பெற்றார். இந்துமத ஆராய்ச்சிக்கு மதுரையிலும் சிறந்த இடம் அவர்க்கு வாய்திருக்க முடியாது. பார்ப்பனரின் நடையுடை பாவனைகளை மேற்கொண்ட நொபிலி, இந்துமத சாத்திரங்களைக் கற்றுத் தேறுவதிலே இந்துப் பண்டிதன்மாரின் உதவியை நாடிப் பெற்றார். பல்லாண்டு காலம் முயன்று கற்றதன் பயனுகச் சங்கதப்புலமையும் ஓரளவு கைவரப்பெற்ற நொபிலி, மதுரைப் பார்ப்பனரைச் சமயவாதஞ் செய்தற்கு அழைத்தார். கற்றறிந்தார் குழுமியிருக்கும் அவையத்திலே சமயவாதஞ் செய்தல் பண்டுதொட்டுப் பயின்று வந்த ஒரு வழக்கமாகும். ஆங்கு, உபநிடதக் கருத்துக்களின் சார்பிலே அவர் கிறித்தவக் கோட்பாடுகளை நிலைநாட்ட முயன்றார். வைதிகப் பார்ப்பனர்தாமும் அவருடைய

சமநூலறிவைக் கண்டு போற்றினராம். இந்துமதச் சாயலிலே கிறித்தவத்தைப் போதித்தற்கு நொபிலி செய்த முயற்சிகளைப் பிற மிசனரிமார் விரும்பினரல்லர். அவர் இறுதியில் உரோமுக்குத் திருப்பியழைக்கப்பட்டார்.

அக்கால முதலாக, இந்தியச் சார்புடைய எதனையும் வெறுத்தொதுக்கும் மனப்பான்மை இந்தியாவில் மிசனரிமாரின் சிறப்பியல்பாகக் காணப்பட்டது. இந்து வாழ்க்கைநெறியோடும் மதத்தோடும் எவ்வாற்றானுஞ் சமரஞ் செய்தல் தவிர்க்கப்பட்டது. உதாரணமாக, மதமாறிய ஒருவனை இந்துமதத்தின் செல்வாக்கினின்றும் முற்றாக விலக்கி வைத்தற்கு, அவன் மாட்டிறைச்சி புசித்தல் அவசியமாகுமென வற்புறுத்தப்பட்டது.

முகலாய வேத்தவையிலும் இத்தகைய பொறையிலாமையுணர்ச்சியையே யேசுதர் சங்கத்தார் காட்டினர். சமய ஆராய்ச்சியிலே பேரார்வங் கொண்ட பேரரசர் அக்பர் சமயவிற்பன்னரான பல யேசுதரைக் கோவாவிலிருந்து தம் அவைக்கு அழைத்தார். அவர்களைச் சகல மரியாதையோடும் அக்பர் வரவேற்றார். ஆயின், சமயவாதக் களரியான இபதாத் காணவில் (தொழுகையில்லத்தில்) நிகழ்ந்த உரையாடல்கள் யேசுதர்க்குப் பெரும் வெறுப்பையே அளித்தன. பிறமதங்களை வெறுக்கும் அவர்தம் மனோபாவமும், பிற சமய ஆசாரியன்மாரை அன்னர் இகழ்ந்தமையும் அக்பருக்கு ஏற்பிலாவாயின. ஆகவே மிசனரிமார் பெரும் ஏமாற்றத்தோடு தலைநகரை விட்டு நீங்கவேண்டியவராயினர்.

மும்தாசு மகாலின் அடிமைப் பெண்கள் இருவரை வங்காளத்து யேசுதர் 1632 இலே வலோற்காரமாக மதமாற்றினர் எனக் கூறப்பட்டது. அக்கிரமமான இச்செயலுக்காகத் தக்க தண்டனையளிக்கும் நோக்கத்தோடு, சா சகானுடைய சேனைகள் போத்துக்கேயரை அவர்தம் குடியிருப்பினின்றும் விரட்டியோட்டின. அவரிற் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்; அன்றேல், சிறைப்படுத்தப்பட்டனர். இச்சம்பவத்துக்குப் பின், முகலாயப் பேரரசிலே கிறித்தவத்தைப் பரப்பும் முயற்சி பெரும்பாலும் கைவிடப்பட்டது.

போத்துக்கேயரின் ஆதிக்கம் 1660 ஆம் ஆண்டளவிற் சிதைவுற்றபின்னர், சமயப்பணி செய்யும் ஆர்வம் தென்னாட்டிலுமே குறைந்துவிட்டது. மத விசாரணை மன்றத்தைக் கோவாவில் நிறுவியதையும் (1561) 'ஓற்றேதாபே' முதன்முதலாக 1563 இல் நிறுவியதையும் கண்டு இந்துக்களும் முகமதியரும் ஒருங்கே உளங்கொதித்தனர்.

போத்துக்கேயருக்குப் பின்னர் வந்த இடச்சுக்காரரும் பிரித்தானியரும் வர்த்தகத்திலேயே கருத்தாயிருந்தனர். அன்றியும், அவர்கள் புரட்டசுத்தாந்த மதத்தினராதலின், கத்தோலிக்க சங்கத்தாரின் முயற்சிகள்பற்றி அனுதாபங் கொண்டிலர். இவ்வாறாக, பதினேழாம் நூற்றாண்டின் நடுக்கூற்றளவிலே, மத மாற்ற முயற்சியின் முதற் கட்டம் முடிவுற்றதெனலாம்.

போத்துக்கேயர் ஆதிக்கம் பெற்றிருந்த அக்காலத்திலே, கத்தோலிக்க மிசனரிமார் செய்த குறிப்பிடத்தக்க சில சாதனைகளையும் நாம் மறந்துவிடலாகாது. ஆங்கில வினத்தைச் சேர்ந்தவரான எசுற்றூவோப் பாதிரியார், இந்திய மொழிகள்

பலவற்றைத் துறைபோகக் கற்று, கிறித்துநாதரின் வாழ்க்கை வரலாற்றை மராத்தி மொழியிற் காவியநடையிலே கவிதை வடிவில் எழுதினர். இந்தியாவிற் கோவாவிலே முதன்முதலாக யேசுசங்கத்தாரே அச்சுயந்திரத்தை நிறுவினர். கொச்சிக்கு அண்மையில் மிசனரிமாரின் கல்லூரியிலே சங்கதமும் தமிழும் கற்பிக்கப்பட்டன. இசுப்பானியப் பாதிரியான கொன்சால்வெசு என்பாரே தமிழில் முதன்முதலாக அச்செழுத்தை உருவாக்கினர் என்பர்.

யேசு சங்கத்தாரின் கவனம் இந்தியாவுக்கு அப்பாலுஞ் சென்றது. பிரான்சிசு சேவியர் தூர தேயங்கட்கும் செல்லவிரும்பினர் என்பதை முன்னர்க்கண்டோம். இந்தியாவிலிருந்து 1545 இல் அவர் மலாக்காவுக்குச் சென்றார். ஆங்கு அவர் செய்த பணி இருதிறப்பட்டது. தீயொழுக்கத்திலே உழன்றுகொண்டிருந்த போத்துக்கேயரை நல்வழிப்படுத்தல் முதலாவது; பதிதர்க்கு மெய்ந்நெறியைப் போதித்தல், இரண்டாவது. ஆயின், அத்துறவியின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஆசிரியன் கூறியது போன்று மலாக்கா மக்கள் 'அவருடைய போதனையைப் பொருட்படுத்தினரல்லர்'.

மலாக்காவிலிருந்து அம்போய்னவுக்குச் சென்ற சேவியர், ஏழை எளியவர்களிடையே பணிசெய்யத் தலைப்பட்டனர். நோய்வாய்ப்பட்ட மக்களிடை அவர் சென்று அவர்களைப் பராமரித்துக் காப்பாற்றினர். தருமசிந்தையும் பத்தியும் மிக்க இக்கர்மவீரர் தமது வாழ்க்கைப் பணியிற் பெருவெற்றி கண்டார்.

மலாக்காவிலிருந்த அவர் திரும்பி வருகையில், அஞ்சிரோ எனும் பெயருடைய ஒரு யப்பானியனைச் சந்தித்தார். அவன் தனது நாட்டின் சட்டத்துக்குத் தப்பி ஒளித்தோடி வந்தவனவன். கிறித்துநாதரின் போதனைகளைக் கேட்க யப்பானியர் எத்துணை ஆவலாய் இருந்தனரென்பதை அவன் வாயிலாகச் சேவியர் கேட்டார். சேவியரோடு கோவாவுக்குச் சென்ற அஞ்சிரோ சமய சாத்திரங்களைக் கற்றற்காகச் சென். போல் கல்லூரியிற் சேர்ந்தான். 1549 இல், இச்சீடனையுங் கூட்டிக்கொண்டு சேவியர் யப்பானுக்குக் கப்பலேறிப் பிரயாணமானர். ஆங்குச் சற்சுமா தைமியோ என்பானுடைய பாளையத்தை அடைந்து, அன்பாக அவனால் உபசரிக்கப்பட்டார். பிறமொழி பயில்வதில் வல்லுநரான சேவியர் யப்பானிய மொழியையுஞ் சிறிது கற்றதலால் ஓரளவு வெற்றி ஆங்குக் கண்டார். ஆயின் விரைவான முன்னேற்றங் காணுதை சேவியர் அதிருத்தி கொண்டார். பௌத்த குருமாரின் எதிர்ப்பைக் கண்டும் அவர் சஞ்சலப்பட்டார். எனவே சேவியர் தலை நகரான மியாக்கோவுக்குப் புறப்பட்டார். பேரரசனை மதமாறச் செய்து தம் சமயப்பணிக்கு முத்தாய்ப்பு வைப்பதே அவர் நோக்கம். ஆயின் அங்கு ஏமாற்றமே அவரைக் காத்து நின்றது. ஆதலின் அவர் 1551 இற் கோவாவுக்கு மீண்டார். பௌத்த துறவிகளின் எதிர்ப்பு அவர் கொண்ட நம்பிக்கை யனைத்தையுஞ் சிதறடித்து விட்டது. கிழக்குலகச் சமயங்களைப்பற்றி யாதும் அறியாதிருந்த சேவியர் புத்தர்பிரானை ஒரு சாத்தானுகவும், யப்பானிய மக்களை அச்சாத்தானுடைய தீயவாட்சியிற் பாவ வாழ்க்கையில் உழல்பவராகவும் கருதினர். அறியாமையையும் துவேடத்தையும் ஆதாரமாய்க் கொண்ட அவர்தம் பணியால்



வண. பிதா இரிக்கி

வினைந்த நற்பயன் சிறிதே. ஆயினும் அவர் நம்பிக்கையிழந்திலர். சமயத்தொண்டரை யப்பானுக்கு மேலும் அனுப்பி வைக்குமாறு இக்னேசியசு உலயோலாவுக்கு அவர் கடிதம் எழுதினர்.

யப்பானில் இருந்த காலத்திற் சேவியர் சீனத்தின் பெருமை பற்றிக் கேள்விப்பட்டார். சமயப்பணி செய்தற்குப் புதியதோர் அரங்கம் வாய்த்துவிட்டதாக எண்ணிய சேவியர் சீனத்துக்குப் புறப்பட்டார். குவாந்துங்குக் கரைக்குப்



ஆதாம் சால்

பாலே, சிறிய தீவொன்றிற் கப்பலுக்காகக் காத்து நிற்கையில், குன்றுத ஊக்கம் படைத்த இச்சமயப் பெரியோர் உயிர் துறந்தார் (1552).

கிழக்குலகிலே இறித்தவ மதத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வீரஞ் செறிந்த மக்களுட் சேவியரும் ஒருவர். ஏழை எளியவர்களிடத்துக்

கொண்ட பெருங் கருணையாலும், ஊக்கம் உணர்ச்சிகளாலும், எத்தனை ஆபத்து வந்தவிடத்தும் அஞ்சாத தன்மையினாலும், தாங்கொண்ட திருப்பணியிலே வைத்த அபார நம்பிக்கையாலும் அவர் மற்றையனைவரிலும் மேம்பட்டுக் குணக் குன்றமென நின்றார். அவரிடத்துக் காணப்பட்ட கொள்கைப்பிடிவாதமும் பொறையில்லாமையும் குருட்டு நம்பிக்கையின் விளைவேயாம். இக்குணங்கள் காரணமாக, அவர் சென்ற விடங்களில் அவர்க்கு மாறுக விரோதங் கிளம்ப, அவர் எங்கணும் சாத்தானையே கண்டார். ஆயினும், இக்குணங்களோடு, உண்மையான பணிவுணர்ச்சியும் தருமசிந்தையும் ஒருங்கே அவரிடத்துக் காணப்பட்டன. சேவியர் காட்டிய சீரியவுணர்ச்சி, இழக்குலகிலே சேவை செய்த கிறித்தவத் தொண்டர்க்குத் தலைமுறைதலைமுறையாக ஊக்கமளித்து வந்துளது.

இதற்கிடையில், மக்கவோவிலிருந்த போத்துக்கேயக் குடியிருப்பு முக்கியமான ஒரு வர்த்தக மையமாக வளர்ந்துவிட்டது. அங்கே 1565 இல் யேசுதர் ஒரு சமய வதிவகத்தைக் கட்டினர். யேசு சங்க மிசனரிமாரான வலிக்ஞானியும் இரகியேரியும் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்தம் வருகையோடு, ஆசியாவை மதமாற்றஞ் செய்யும் முயற்சியில் இரண்டாவது கட்டம் ஆரம்பமாயது. போத்துக்கேய ஆட்சியாளரும் மிசனரிமாரும் இதுகாறுங் கையாண்ட முறை, 'பதிதர் கோட்டைகளைச்' சாடித் தம்வயப்படுத்துவதேயாம். கோவாவிலும் கொச்சியிலும் அரண்செய்யப்பட்ட பிற விடங்களிலும் போத்துக்கேய ஆட்சியாளர் கையாண்ட முறை, பலவந்தமாக மதமாற்றஞ் செய்வதேயாம். மதவிசாரணை என்று நெடுங்காலம் இயங்கிவந்த கோவாவிலேதானும், குடிகளிற் பெரும்பாலோர் இன்னும் கிறித்தவரல்லாதாராக இருந்து வந்தனர். வலோற்காரமாக மதமாற்றும் உத்தியைக் கைவிடுதல் வேண்டுமென்பது தெளிவாயிற்று. வலிக்ஞானியும் இரகியேரியும் புதியதொரு முறையை வகுக்க முற்பட்டனர்.

உயரதிகாரிகளைச் சாந்தப்படுத்தி, அவர்களுக்கு விசேட சேவைகளைச் செய்து, அவ்வழி, அதிகாரம் படைத்தோர்க்குக் கிறித்தவப் பிரசாரகரை இனியராக்குவதே புதியமுறையாயிற்று. அவ்வாறு செய்தற்கு, நாட்டுமக்களின் மொழியையும், நடையுடைபாவனைகளையும் பயின்று, சூழலுக்கேற்ப வாழ்க்கை முறையையும் ஆசாரத்தையும் அமைத்துக்கொள்ளல் அவசியமாயிற்று.

சிறந்த கணிதவிற்பன்னரும் இத்தாலிய யேசுதருமான இரிக்கியென்பார் 1582 இலே மக்கவோவுக்கு வந்து, வலிக்ஞானியொடு சேர்ந்துகொண்டார். தலைநகராகிய பீக்கிங்கிலிருந்தே சீனமெங்கணும் செல்வாக்குப் பரப்ப முடியும் என்பதை உணர்ந்த இரிக்கி, 1595 இல் அந்நகரை அடைந்தார். முதலில் அவர் முயற்சி பலிக்கவில்லையானாலும், பலவிதமான இசையெழுப்புங் கடிகாரங்களையும், எந்திரத்தால் இயங்கும் விளைதப் பொம்மைகளையும் பரிசாகக் கொடுத்தும், தமது கணிதத்திறமையின் உதவிகொண்டும், வேத்தவையின் சகாயத்தை அவர் மெல்லப்பெற்றார். பெருமக்களுக்கு வந்தனோபசாரஞ் செய்தும், தமது சமய தத்துவங்களை மிகச் சாவதானமாகப் போதித்தும் அவர் தலைநகரிலே பத்தாண்டுக் காலம்வரை தங்கியிருந்தார். இவ்வாறுக அவர் தீவிரமான சமய முயற்சியைப் பிற்காலத்திலே மேற்கொள்ளுதற்கு வழிவகுத்தார்.

தொடக்கத்திலே, சீன நூல்களை ஆராய்வதில் ஈடுபட்டிருந்த காலே, பௌத்தத்துக்கும் கொன்பியூசியசு மதத்துக்குமிடையேயுள்ள மூரண்பாடுகளை அவர் கண்டார். கிறித்தவ மதத்துக்குப் பௌத்தமே பெருந்தடையாய் இருந்தவாற்றை அவர் உணர்ந்து, கொன்பியூசியசு மதத்தாரின் பக்கல் சார்ந்து பௌத்தரைத் தாக்கினர். கிறித்தவக் கோட்பாடுகளுக்கு ஆதாரமாகக் கொன்பியூசியச் சாத்திரங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டி, கொன்பியூசியசுநெறி கிறித்தவத்துக்கு மாறுனதன்று என நாட்ட முயன்றார்.

கிறித்தவத் தொண்டர்க்கு 'ஒரு வாயில் திறந்துவிட்டேன்' என்னும் பூரண நம்பிக்கையோடு, இரிக்கி 1610 இற் காலமானார். இரிக்கி இறந்து பத்தொன்பது ஆண்டுகள் கழிந்தபின்னர், சீனப்பஞ்சாங்கத்தைத் திருத்தியமைத்தலைக் காரணமாகக் கொண்டு, கணிதவிற்பன்னரான பிறிதொரு யேசுதர் சீனத்துக்கு வந்து, மிங்கு மன்னரின் வேத்தவையிலே பிரசித்தி பெற்றார் (1629). அவர் பெயர் ஆதாம் சால் என்பது.

யேசுதரான சால் ஏற்றுக்கொண்ட பொறுப்பு வானியலோடன்றிச் சோதிடத்தோடே சம்பந்தப்பட்டது. மூக்கியமான ஒவ்வொரு வைபவத்துக்கும் பஞ்சாங்கத்திலே சுபதினங்கள் குறிக்கப்படுதல் வேண்டும். அம்முயற்சியிற் சால் ஈடுபட்டிருந்தபோது, ஒரு தருணத்தில், மிங்குப் பேரரசற்கு அருகாமையிலிருந்த புத்தகுருமாரின் 'தீயபார்வையைச்' சூரியப் புள்ளிகள் குறிப்பனவாகும் என்ற வாறுய் விளக்கங் கொடுக்கவும் அவர் தயங்கினாரல்லர்.

வானியலறிந்த யேசுதர் பலர் ஒருவர் பின் ஒருவராய்ச் சீன 'வானியற் கழகத்தில்' நியமனம் பெற்றனர். இவ்வழக்கம் நூறுண்டுக்காலம் நீடித்தது. ஆயினும், அக்காலத்திலே பீக்கிங்கில் மிங்கு மன்னரின் வேத்தவையில், யேசுதர் பெருஞ் சிறப்புற்றிருந்தனர் என்றவாறுக வரலாற்றறிஞர் சிலர் கொண்ட கருத்தில், யாதும் உண்மையில்லை என்பது உறுதி. எனினும், கிறித்தவத் தொண்டர் தத்தம் மாவட்டங்களிலே பாதுகாப்பொடு சேவை செய்தற்கு அன்னார் உதவினர்.

அக்காலத்தில், மிங்கு வமிசமே இக்கட்டான நிலையில் இருந்தது. அந்நாளில் ஆட்சி செய்த பேரரசன் வானியலில் வல்ல யேசுதரின் உதவியை நாடி, பீரங்கி தயாரித்துதவுமாறு கேட்டுக்கொண்டான். கல்வியிற் பெரிய அச்சமயகுரவர் அப்பொறுப்பைத் தயங்காது ஏற்று, தாம் சமைத்த பீரங்கிகளுக்குக் கிறித்தவ நாயன்மாரின் பெயர்களைச் சூட்டினர். கிறித்தவக் குருமார் தயாரித்துதவிய பீரங்கிகளின் துணையிருந்தும், மஞ்சுமாரின் தாக்குதலைத் தாங்கவியலாது மிங்கு வமிசம் வீழ்ச்சியுற்றது. ஆயின் புதிய ஆட்சியிலும் தம் பதவியை இழக்காது சால் குருவானவர் காத்துக்கொண்டார். மஞ்சுக்களின் ஆட்சி சீனமக்களிடையே இன்னும் உறுதிப்பட்டிலது; அன்றியும், மஞ்சுமன்னன் சீனரிடத்து இன்னும் சமூசயங் கொண்டிருந்தான். ஆதலின் அவன் அவ்வெளிநாட்டு அறிஞரைத் தொடர்ந்து ஆதரித்து வந்தான். பேரரசு வேள்விக்குப் பதிலதிபதியாகவும்,

பேராசுக் காலே நிலையத்துக்கு மேற்பார்வையாளராகவும், பேராசுப் பெருவிருந் துக்கு மேன்மை தங்கிய கௌரவ பரிசாரகராகவும் சால் பாதிரியார் நியமனம் பெற்றார். கிறித்தவக் குருவானவர் வகித்தற்கு இவை விசித்திரப்பதவிகளே!

மஞ்சுமன்னருட் பெருமையிற் சிறந்த காங்கு இசி யென்பான் பதவியெய்திய காலே, இவ்ஞனை அம்மன்னற்கு ஆசிரியராகச் சால் அமர்த்தப்பட்டார். ஆயின், வேத்தவையிலே கிறித்தவத்தைக் கண்டித்து வந்தோரின் விரோதத்தினின்றும் அவரைப் பாதுகாத்தற்கு அப்புதிய பதவி உதவிற்றிலது. சிறிது காலம் அப் பாதிரியார் சிறைச்சாலையிற் கிடந்து வருத்தினர். விடுதலைபெற்ற சில காலத்துள் அவர் காலமானர் (1666). அவருடைய சேவையைப் பெல்சியரான வேபியெத்து என்பார் தொடர்ந்து செய்தனர். இவரும் திறமைமிக்க வானியலறிஞராயும் விஞ் ஞானியாகவும் விளங்கினர்.

அத்தூதகம் பீக்கிங்கிலே மூடப்பட்டாலும், வேபியெத்தும் அவர்தம் துணை யாளரும் தமது விஞ்ஞான வேலையைத் தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்பட்ட னர். இளம் பிராயத்தினனை பேராசன் விஞ்ஞான விடயங்களிலே ஈடுபாடு உடையவனுதலின், யேசுசங்க அறிவாளியான வேபியெத்து மூன்பு சால் வகித்த பதவிகளுக்கு மீண்டும் நியமிக்கப்பட்டார்.

காங்கு இசி விடுத்த ஒரு கட்டளைவாயிலாய், மிசனரிமார் தமது மதத்தைப் பரப்புதற்கு அனுமதி யளிக்கப்பட்டது (1671). ஆயின், அரசின் நலன்களுக்கு மாருக யாதும் போதிக்கலாகாதென அவர்கள் எச்சரிக்கப்பட்டனர். நம்பிக்கை இளர்ந்த காலமாகும் அது. கலகமொன்று புதிதாக மூண்டமையாலே, மீண்டும் பீரங்கி சமைத்தல் அவசியமாயிற்று. பல்லாண்டு காலமாக வேபியெத்து பீரங்கி தயாரிப்பதிலேயே பெரிதும் ஈடுபட்டார். பேராசரின் நீழலிலே குரு வானவரின் புகழோங்க, திருச்சபை யடைந்த பயன் சிறிதே.

வேபியெத்து இறப்பதற்கு முன்னம் (1688), சீனத்திலே மிசன் வேலையில் ஈடு படுமாறு பிரான்சுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். புதிது பெற்ற ஆதிக்கத் தால் மதுகையும், கத்தோலிக்க மதத்தில் அபிமானமும் உடையனுயிருந்த பதி னலாம் உலூயி, கிழக்குலகிலே கிறித்தவ மதத்தைப் பரப்பும் உரிமையைப் போத்துக்கேயர்க்கு அளித்த பட்ரோடோ அதிகாரத்தை ஏற்று நடக்கும் பான் மையுடையனுய் இருந்தானல்லன். அவன் 'அன்னிய நாட்டுச் சமயதூதக் கூட்ட வையத்தை' ஏற்கவே பாரிசு நகரில் நிறுவியிருந்தான் (1664). இந்நிறுவனம் யேசுதரின் 'சங்கம்' போன்றதன்று — அது ஒரு 'கூட்டவையமே'. பொது வான **ஒழுக்காற்று விரதங்களின்** வழியதான ஒற்றுமையன்றி, பொதுவான நேக்கத்தின் வழியதான ஒற்றுமையே அதனைச் சேர்ந்த குருமாரைப் பிணைத்து வைத்தது. உரோமைத் திருப்பீடத்தின் அங்கீகாரம் பெற்ற அக்கூட்டவையத் தின் நோக்கம், கிறித்துவத்துக்கு மதமாற்றஞ் செய்தலே. பிரெஞ்சுக் குருமார் அறுவர் 1685 இலே தாரகிழக்கிற்குப் புறப்பட்டனர்.

அவ்வாறு சென்றருள் ஒருவர் கேபிலன் என்பவர்; அவர் சிறந்த பன் மொழிப் புலவர். சீன இரசிய எல்லைப்புறப் பிணக்கு மூண்டு, நேட்சின்சிக்குப்

பொருத்தனையிலே அது முடிவுற்ற காலத்தில் (1689), அவர் சின அரசாங்கத்துக்கு அரிய சேவை செய்தார். அவருடைய திறமைக்கும் சாதுரியத்துக்கும் கைம்மாறாக 'பொறையுடைமைக் கட்டளை' யொன்று பேரரசனால் வெளியிடப்பட்டது (1692). வானியலுக்கும் கணிதமன்றத்துக்கும் பொறுப்பேற்றுள்ள ஐரோப்பியராற் போதிக்கப்படுங் கோட்பாடுகள் 'தீமையப்பனவாகா' ஆகவே, மக்கள், 'தேவாலயங்களுக்குத் தாராளமாகச் சென்று கடவுளை வணங்கலாம்' என்றவாறாக அக்கட்டளை பிரகடனஞ் செய்தது.

மேலுஞ் சலுகை பெறுதற்கு உவந்த ஒரு கருவியாக யேசுதர் மருந்துவகைகளையும் கொணரத் தலைப்பட்டனர். பேரரசற்குற்ற ஒரு நோயைத் தீர்த்ததன் பின்னர், மாளிகை வளவிலே தங்குதற்கு மிசனரிமார் அனுமதிக்கப்பட்டனர். மாளிகைக்கு அண்மையாக ஒரு வேதாலயத்தைக் கட்டுதற்கும் அனுமதி வழங்கப்பட்டது (1703).

சோதிட ஆராய்ச்சியிற் பங்குபற்றுதல், கிரியா சபையிற் பதவியேற்றல் போன்ற இசைவுபிசகான முறைகளை ஆதாரமாய்க் கொண்டு யேசுதர் எழுப்பிய வெற்றிக் கோட்டம், வெளித்தோற்றத்தளவிலே மாட்சிமிக்கதாய்க் காணப்பட்டாலும், மாபெருங் கொற்றம் வந்துற்ற அவ்வேளையிலேயே இற்றுவீழத் தலைப்பட்டது. யேசுதர் தூதத்தின் தனிப்பெருந் தலைவர் பேரரசப் பெருவிருந்திற் போன்ற இசைவுபிசகான முறைகளை ஆதாரமாய்க் கொண்டு யேசுதர் எழுப்பிய சேவித்து நிற்றல், உரோமிலாயினும் பாரிசிலாயினும் மெச்சப்படப் போவதில்லை. ஆயின் தொமினிக்கன் குருமார் இதை பிரச்சினையை வற்றிக்கானிலே கிளப்பி விட்டனர்.

ஆயின் அவர்கள் கிளப்பிய உண்மைப் பிரச்சினை சீனக் 'கிரியைகள்' சம்பந்தமானது. அதாவது, கிறித்தவத்திருச்சபையின் போதனைகளை விட்டுக் கொடுக்காது, தேசிய (சீன) வழக்கங்களுக்கமைய நடத்தல் எவ்வளவிற்கு இயல்வதொன்றாம்? என்பதே பிரச்சினையாயிற்று. இப்பிரச்சினையோடு பிற பல கேள்விகளும் பின்னிக் கிடந்தன. கொன்பியூசிய வழமைப்படி மூதாதையரை வழிபடுதல், விக்கிரக ஆராதனையின்பாற்படுமா அல்லது மூதாதையர்க்கு மரியாதை செலுத்தல் என்ற அளவோடு நிற்பதா? என்பது ஒரு கேள்வி. கிறித்தவ மதத்திலே நாட்டுமரபுக்கு மாறுனது யாதுமில்லை என்றவாறுன எண்ணத்தை உண்டாக்குதற்காக, கிறித்தவ மதத்துக்கும் மற்றுப் பழைய சின மதத்துக்குமிடையே ஒத்த பண்புகளைக் காட்ட முயலுதல் முறையாகுமா? என்பது மற்றையது.

1693 ஆம் ஆண்டிற் போப்பரசு செயலில் இறங்கவேண்டியதாயிற்று. போப் பாண்டவராற் சீனத்துக்கு அனுப்பப்பட்ட விக்கார்—நாயகம், யேசுதர் இது காறும் ஆதரித்து வந்த வழக்கங்களைக் கண்டித்து ஆணை வெளியிட்டார். இவ்விகலாட்டைத் தமக்குச் சார்பாகத் தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கையோடு யேசுதர் சாதுரியமான ஒரு நடவடிக்கையைக் கைக்கொண்டார்கள். சீனக்கிரியைகளின் உட்பொருளை விளக்குமாறு பேரரசற்கு அவர்கள் விண்ணப்பஞ் செய்தார்கள். அவர்கள் அனுப்பிய விண்ணப்பமானது, எதிர்பார்க்கும் மறு

மொழியைக் குறிப்பாலுணர்த்துவதாய், வேத்தவையிலிருந்து உடன்பாடான ஒரு விடையினைப் பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. அவ்விண்ணப்பத்தின் சாரம் வருமாறு: கொன்பியூசியசைக் கௌரவிக்குமுக மாகச் செய்யப்பட்ட சடங்குகள்பற்றியும், விண்ணுலகைக் கருதிச் செய்யப்படும் வேள்விகள்பற்றியும் மூதாதையரின் பொருட்டுச் செய்யப்படும் விசேட கிரியை கள்பற்றியும், சீனத்திலுள்ள யேசுதரிடமிருந்து மெய்விளக்கம் பெறுதற்கு ஐரோப்பிய அறிஞன்மார் ஆவலாய் நிற்கின்றார். கொன்பியூசியசு நீதிகண்ட ஒருவராகவே சீனத்திற் போற்றப்படுகிறரென்றும், மூதாதையர் பொருட்டுச் செய்யும் கிரியைகள் அவரிடத்து அவர்தம் வழித்தோன்றல்கள் கொண்ட அன் பினை நினைவு கூருமுகமாகவே செய்யப்படுமென்றும், விண்ணுலகத்தைக் கருதிச் செய்யும் வேள்விகள் கட்புலனுகும் விண்ணுலகத்தை யன்றி, மண்ணையும் விண் ணையும் புரக்கும் பரமநாதரையே குறித்துச் செய்யப்படுமென்றும் சீனத்தி லுள்ள யேசுதர் தங்கருத்தைத் தெரிவித்துள்ளனர். மாட்சிமை தங்கிய பேரர சரின் விளக்கத்தைப் பீக்கிங்கு யேசுதர் மரியாதையோடும் பணிவோடும் எதிர் பார்த்து நின்கின்றனர் என்று கூறி அவ்விண்ணப்பம் முடிவுற்றது.

'ஒரு சொல்லேத்தானும் (அவ்விண்ணப்பத்தின்) மாற்ற வேண்டிய அவசிய மில்லை' என்பதே பேரரசர் அளித்த விடை. சீன மக்களின் சமயக் கருத்துக் களை அத்துணை செம்மையாக யேசுதர் விளங்கியிருந்தனராம். திருச்சபைக்குப் புறம்பான ஓர் அதிகாரிக்கு யேசுதர் இவ்வாறு விண்ணப்பஞ் செய்தமை கண்டு போப்பாண்டவர் இயல்பாகவே சீற்றங் கொண்டார். இப்பிரச்சினை முழுவதை யும் தீர விசாரிக்குமாறு தம் பிரதிநிதியைப் போப்பாண்டவர் சீனத்துக்கு அனுப்பி வைத்தார். இச்சமயதூதரைப் பேரரசன் அன்பாக வரவேற்றான். ஆயி னும் இப்பிரச்சினையிலே தீர்ப்பளித்தற்குப் பேரரசற்குள்ள உரிமையை அவர் மறுத்ததனால், மரியாதையாக அகன்றிடுமாறு அவர் பணிக்கப்பட்டார். கன்ற லினிருந்து திரும்புகையில், இத்துணைக் காலமாக யேசுதர் பிடிவாதமாக ஆதரித்து நின்ற அவ்வழக்கங்களைத் தடை செய்யும் முகமாய், அதிகாரபூர்வ மான ஒரு பிரகடனத்தை அவர் வெளியிட்டார். இப்பிரகடனம் பேரரசனுடைய கருத்துக்களை மீறுவதாகுமென அவற்கு அறிவுறுத்தப்படவே, அத்தூதர் கைது செய்யப்பட்டுப் போத்துக்கேயரிடம் ஒப்படைக்கப்பட்டார். போத்துக்கேயர் அவரைச் சிறையிலிட்டனர். சிறையிலேயே அவர் 1710 இற் காலமானார். சீனக் கிரியைகளை ஏற்றெழுகும் அன்னியரே சீனத்திற் றங்கியிருக்கலாமென்றும், மற்றையோர் விரைவில் அகன்றிடவேண்டுமென்றும் பேரரசன் கட்டளையிட் டான். இஃது இவ்வாருக, சீனக்கிரியைகள்பற்றிச் சமயதூதுவர் விடுத்த கட் டளை ஏற்குமுகத்தால், சீனத்துக்குச் செல்லும் குருமார் அனைவரும் சத்தியஞ் செய்தல் வேண்டுமெனப் போப்பாண்டவரின் திருநிருபமொன்று கட்டாயப் படுத்திற்று.

கிறித்தவமதம் போதித்தலை அரசாங்கம் 1724 ஆம் ஆண்டில் அடக்கியொடுக் கியதோடு, வேத்தவையிற் பணியாற்றியோர் தவிர்ந்த பிற அன்னியக் குருமார் கன்றனுக்கு அனுப்பப்பட்டனர். சீனத்திலே யேசுதன்மார் உளங் கொண்ட

இடாம்பீகமான திட்டங்கள் இவ்வாறுக முடிவுற்றன. கிறித்தவ நாடல்லாத ஒரு தேயத்தில் நிலவுகின்ற கிரியைகளுக்கமைந்து மிசனரிமார் ஒழுகுவது பற்றி இங்குக் குறிப்பிடவேண்டிய விடயமொன்று உண்டு. சீனத்தின் ஆதிமத மென்று கருதப்பட்ட சமயத்தோடு இணக்கந் தேடும் முயற்சியில், சீனக் கிரியைகளைத் தழுவியொழுகுமாற்றல் யேசுதன்மார் செய்து கொண்ட சமரசம், கிறித்தவ சித்தாந்தத்தின் சில முக்கியமான அமிசங்களையும் பங்கப்படுத்துவதாய் அமைந்திருந்தது. ஆதலில் அன்னர் சீனத்திலே சென்ற நெறியை, உரொபேட்டோ த நொபிலி இந்தியாவிலே இந்திய மக்களுக்கு கிறித்தவத்தை விளக்குதற்குக் கையாண்ட முறையோடு ஒருங்கு வைத்தெண்ணி நாம் மயக்குறலாகாது. வெளித்தோற்றத் தளவிலே இந்து வழக்கங்களுக்கமைந்து நடத்தலே நொபிலி ஆதரித்தார் என்பது உண்மையே. ஆயின் சித்தாந்தஞ் சம்பந்தமான விடயங்களிலே அவர் உறுதியாய் நின்றார். இந்துசமய சாத்திரங்களைக் கற்றுத் துறைபோய நொபிலி, கிறித்தவக் குருமார்க்கேயுரிய தேர்ச்சித் திறமையோடு, பார்ப்பனப் பண்டிதன்மாரை எதிர்த்து வாதித்தார். ஆயின், பௌத்தத்துக்கு எதிராகக் கொன்பியூசியசு மதத்தை ஆதரிப்பார் போல நடித்து, அவ்வழி, அதிகாரவர்க்கத்தின் ஆதரவைப் பெறலாம் என முயன்ற இரிக்கியின் தந்திரம் முற்றும் வேறானது.

யப்பானிலே கிறித்தவ தாதங்களின் வரலாறு கொந்தளிப்பு மிக்கதாய், வீரஞ் செறிந்ததாயிருந்தது. பிரான்சிசு சேவியர் யாப்பானிலிருந்து இந்தியாவுக்கு மீண்டதற் பின்னர், பெரும்பாலும் அத்தீவகப் பேரரசின் மேற்குப் பகுதியிலே மிசனரிவேலை ஓரளவுக்குத் தொடர்ந்து நடைபெற்றது. அப்பிரதேசத்திலே ஆட்சிசெலுத்திய மானிய மன்னர், மானியப் பிரபுக்களுக்கெதிராகத் தமது நிலையைப் பலப்படுத்தும் நோக்கத்தோடு, தம்துறைகளுக்குப் போத்துக்கேயக் கப்பல்கள் வந்துபோவதை ஊக்கி வந்தனர். கடல்களுக்கு அப்பாலுள்ள அன்னிய வல்லரசுகளுக்கும், புதிய மதத்தைப் போதிக்க வந்த மிசனரிமார்க்கு மிடையேயிருந்த நெருங்கிய தொடர்பை அன்னர் குறிப்பாலுணர்ந்தனர்.

ஆயின் மாகாணங்களிலே வேலை செய்தல், மிசனரிமாரின் ஆசையைப் பூர்த்தி செய்யத் தவறியது. தலைநகராகிய மியாக்கோவிலேயே அவர்களுடைய கவனஞ் சென்றது—அவ்விடத்திருந்தே பிரான்சிய சேவியர் ஏமாற்றத்தோடு திரும்பினரென்பது இங்கு நினைவுகூரத்தக்கது. அந்நாளில், நாடு கைப்பற்றுந்தன் முயற்சியிலே நொபுனகா முழுமூச்சாக ஈடுபட்டிருந்தான்—அவ்வகையில், வலிமைமிக்க பௌத்த ஆச்சிரமங்கள் அவனுக்கு எதிராக நின்றன. இத்தகு நிலையில் யேசுதர் நல்லதொரு வாய்ப்பைக் கையாண்டனர். பௌத்த திருச்சபைக்குக் குந்தகம் விளைக்கும் வகையில், அவனைத் தமது சமயமுயற்சியில் ஈடுபாடு கொள்ளச் செய்யலாமென அவர்கள் எண்ணினர். நொபுனகாவும் அவர்க்கு ஊக்கமளித்தான். கத்தோலிக்க மிசனரிமாரை அவன் கியோற்றோவுக்கு வருமாறு 1568 இல் அழைத்ததோடமையாது, தேவாலயங் கட்டுதற்கும் அன்னர்க்கு நிலம் வழங்கினன். அவனளித்த வலிமையான பாதுகாப்பிலே, கத்தோலிக்கச் சமயமுயற்சி ஆற்றவும் அபிவிருத்தியடைந்தது.

ஆயின், யேசுதரின் அதிட்டவீனத்தாற் போலும், நொபுனகா சிறிதுகாலத் துள் இறந்துவிட்டான். பிரசித்தி பெற்ற இடேயோசி, அடுத்துப் பதவியெய்தி னான். ஆரம்பத்திலே அவனும் கிறித்தவருக்கு அளிசெய்தான். ஒரு தருணத்தில், தனது சேனையை யப்பானியத் தலைநிலத்துக்கு ஏற்றிச் செல்லுதற்குப் பெருந் தொகையான கப்பல்களை ஒழுங்குசெய்வது பற்றியும் தன் மாளிகையிலே மிச னரிமாரோடு கலந்து ஆலோசனை செய்தான் என்ப. யேசுதரிடையே நம்பிக்கை சுடர்விட்டெரிந்தது.

ஆயின் அவர் கொண்ட நம்பிக்கை விரைவிற் சிதறுண்டது. 1587 இல், அவர் கள் எதிர்பார்த்த சலுகைக்குப் பதிலாக, மிசனரிமாரையும் அவர்தம் முயற்சி களையும் கண்டித்து, அவர்கள் கணமுந் தாமதியாது யப்பானை விட்டுப் போய் விடவேண்டுமெனப் பணித்த ஒரு கட்டளைபற்றிய செய்தியைப் பெற்றனர்.

இடயோசி தான் விடுத்த கட்டளைக்குத் தக்க நியாயங் காட்டியுள்ளான். மிசனரிமார் அன்னியர்; யப்பானியத் தெய்வங்களுக்கு மாறுக அவர்கள் போதனை செய்தனர் என்றவாறுக அவன் சுருக்கமாய் முடித்தான். இன்னும், மேற்குப் பிரதேசத்துப் பிரபுக்கள் மிசனரிமார் மூலமாக அன்னிய வல்லரசுக ளோடு தொடர்பு கொண்டிருந்தனர் என்பதையும், அப்பிரபுக்கள் விசுவாச மற்றோர் என்பதையும் அவன் நன்றாக அறிந்திருந்தான். உண்ணாட்டு அரசியற் பிரச்சினைகளிலே மிசனரிமார் சிக்குறவுப்பட்டு, பௌத்த திருச்சபைக்கு மாறுக எழுந்த உணர்ச்சி வேகத்தைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்தலாமென அவர்கள் நம்பியிருந்தனர். அன்னியரின் முயற்சிகளால் வரத்தகும் ஆபத்தை இடயோசி உணர்ந்தபோது, உண்ணாட்டு அரசியலில் அவர்கள் தலையிட முற் பட்டமை அவர்களுக்கே மாறுகத் திரும்பிற்று.

யப்பானில் வாழ்ந்த கிறித்தவ சமுதாயம் ஒருசிறு பிரிவாய் ஒதுங்கி வாழ்ந் தது; அன்னியரோடு அதற்கிருந்த தொடர்பு காரணமாய் இடையிடை அது இன்னற்பட்டதும் உண்டு. எனினும், 1614 ஆம் ஆண்டில், தொக்குகாவா சோகு னை இயேயாசு என்பான் கிறித்தவப் போதனைகளைப் பொறுத்து நடக்குங் காலம் மலையேறிவிட்டதென்பதைத் தெளிவாக்கி, அம்மதத்தைத் தடைசெய் யும் கட்டளையொன்றை அவ்வாண்டில் வெளியிட்டான். நாட்டில் வாழ்ந்த கிறித் தவப் பிரிவினரை வேரோடுங் களையக் கடுமையான முயற்சியும் மேற்கொள்ளப் பட்டது. அரசாங்கத்தின் மனப்பான்மையைக் கண்ட கிறித்தவர், யப்பான்மேற் படையெடுப்பதுபற்றி விழற்றனமாகப் பேசிக்கொண்டு பிலிப்பீன் தீவுகளிலே ஆதிக்கஞ் செலுத்திய இசுப்பானியரோடு மறைவாகச் சூழ்ச்சி செய்தனர் போலும். யப்பானியக் கிறித்தவர் 1638 இல் ஒரு சிறுகலகம் விளைத்தகாலை, அக் கலகம் மூர்க்கமாக அடக்கப்பட்டது. அவ்வளவில், யப்பானை மதமாற்றுதற்குச் செய்த முயற்சி முடிவுற்றது.

யப்பானிலே, கிறித்தவமத போதனைகளைப் பாமரமக்களுக்கு எடுத்துச் செல்லு தற்கு உருப்படியான முயற்சி செய்யப்பட்டது. சீனத்தில், அரசியல் விடயங் களிலே தலையிடுதல் ஆபத்து என்பதை உணருமளவிற்கு மிசனரிமார் நல்லறிவு



336*a*

பிரான்சிசு சேவியர் அடிகளின் மரணம்

படைத்தோராய் இருந்தனர். யப்பானிலோ, மானியச் சுயவாட்சியின் அரசியற் சுழிவுநெளிவுகளாற் கவரப்பட்ட கிறித்தவக் குருமார், அவ்வரசியற் சேற்றிலேயே சிக்குண்டு தமக்கு முடிவு தேடிக்கொண்டனர்.

கத்தோலிக்க மிசனரிமாரின் சமய முயற்சி போத்துக்கேய முடியரசோடு ஒன்றுபட்டுச் சென்றதாதலின், ஆசியாவிற் போத்துக்யேரின் ஆதிக்கம் இழிவடைய, அம்முயற்சியும் பாதிக்கப்படுவதாயிற்று. இந்தியாவிலே, போத்துக்கேயரின் ஆட்சியிலிருந்த சின்னஞ்சிறு பிரதேசங்களிலும், திருச்சபைத் தாபனம் பென்னம் பெரிதாய் இருந்தபோதிலும், மதமாற்றம் அதிக முன்னேற்றமடைந்ததில்லை. இந்துசமயத்திலே அளவெஞ்சித் தலையிடுதல், அரசியல் நலவுரிமைகளுக்கு மாறுகச் செல்லுமென்பதை ஆட்சியாளர் உணர்ந்தமையே அதற்குக் காரணம்.

1660 ஆம் ஆண்டு முதலாக, இந்தியக் கரையோரப் பிரதேசங்களிற் பெரும்பாலும் இடச்சுக்காரரே அரசியல் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியளவில், மதமாற்றஞ் செய்யுமார்வம் புரட்டசுத்தாந்தத் திருச்சபைகளிலே ஊடுருவி நின்றது. ஆங்கிலப் பாபித்தர் முதன்முதலாகப் புரட்டசுத்தாந்த மிசன் தாபனத்தை 1792 இல் நிறுவினர். ஆங்கிலிகத் திருச்சபையின் சமய நலனைப் பேணும் பொருட்டுச் சேச்சு மிசனரிச் சங்கம் 1799 இல் நிறுவப்பட்டது. பிற மதப்பிரிவுகளும் இந்த முன்மாதிரியைப் பின்பற்றின. இவற்றை யெல்லாம் கிழக்கிந்தியக் கம்பெனி விரும்பிற்றிலது. கல்கத்தாவுக்கண்மையிலே சின்னஞ்சிறு தேனியக் குடியேற்றமான செரம்பூரில், பாபித்த மிசன் வில்லியம் கேரி என்பான் தலைமையிலே நிலையுன்றிற்று. மாசுமன்போன்ற பிரபலமான சிலர் கேரிக்கு உதவியாயிருந்தனர். பிற்றைநாளிற் சீன நாட்டிற் புரட்டசுத்தாந்த மிசன்களுக்கு அடிகோலியவன் இந்த மாசுமனே யாவன். கேரியும் அவன்றன் இணைவரும், நிலை குலைந்து கொண்டிருந்த வங்கத்திலே, இந்து மதத்துக்குமாறாக மிகத் தீவிரமான பிரசார வியக்கத்தைத் துவக்கி வைத்தனர். ஆயின் வைதிக இந்துமதம் அதற்கு எதிராக வீறுகொண்டெழவே, மிந்தோப் பிரபு அத்தகைய பிரசாரத்தைக் கல்கத்தாவிலே தடைசெய்யவேண்டியதாயிற்று. பணிப்பாளர் மன்றத்துக்கு மிந்தோ எழுதிய கடிதம் இங்கு மேற்கோளாகக் காட்டத்தக்கது: 'கெந்துக்கூ (இந்துக்கூ) விளித்து எழுதப்பட்ட இந்தக் கேடுகெட்ட விழலைத் தயை கூர்ந்து வாசித்துப் பாருங்கள்..... ஒவ்வொரு பக்கமும் நிரயத்தீயையும், நிரயத் தீயிலும் வெவ்விய தீயையுங் கக்குகின்றது ..... தந்தை தாயர் புகட்டிய ஒரு மதத்தை நம்பிய பாவத்துக்காக, ஒரு மக்களினம் முழுவதுமே இவ்வாறு திட்டப்படுகின்றதே'.

கம்பெனியின் ஆதிக்கம் சிப்பாய்ப் படையிலேயே தங்கியிருந்ததென்பதும், சிப்பாய்களின் சமயத்தில் எவ்வாறேனுந் தொட்டால் சிப்பாய்களின் விசுவாசங் குலைந்துவிடலாமென்பதும் மிந்தோப் பிரபுவின் மனத்தில் இருந்தன. அவ்வுண்மைகளையே வேலூர்க் கலகமும் எடுத்துக் காட்டிற்று. இந்த உள்ளக்

இடக்கையே இந்தியாவிற் பிரித்தானியரின் பூட்கையை ஊடுருவி நின்றது. ஆகவே கிழக்கிந்தியக் கம்பெனி கிறித்தவப் பிரசாரத்துக்கு நேரான ஆதரவு யாதையுங் கொடுக்க முடியவில்லை.

எனினும், பிரித்தானிய நிருவாகத்தைச் சேர்ந்திருந்த போதகன்மார் பலர், மதமாற்றத்தைப் பொறுத்தவரை மூனைப்பான தீவிரக் கொள்கையையே ஆதரிப்போராயிருந்தனர். 'இந்துக்களுக்கு நலஞ் செய்யுமாதலின்' அதிமேற்றிராணியாரொருவரை இந்தியாவுக்கு நியமித்தல் நன்றென்றும் யோசனை கூறப்பட்டது. இந்தியாவிலே திருச்சபைத் தாபனத்தை விரிவுபடுத்துமளவிற்குப் பிரித்தானிய அரசாங்கந் தூண்டப்பட்டது. கல்கத்தாவிலே ஓர் அத்தியட்சகரும், அவ்வப்பிரதேசத்துப் பெயர்களைத் தாங்கிய மேற்றிராணிமாரும் ஆங்காங்கு நியமிக்கப்பட்டனர். ஆயின் இந்த உள்ளத்திலே அவ்வழி விளைந்த பயன் மிகச் சிறிதே.

கம்பெனியாரின் முற்றுரிமை 1813 இல் ஒழிக்கப்பட்ட பின்னர், கம்பெனியின் சேவையைச் சேராத ஐரோப்பியரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தற்கு, அதிகாரவர்க்கத்தினருக்கு யாதும் உரிமையிருக்கவில்லை. அலெக்சாந்தர் தபு என்பான் இசுக்கொட்டிசு மிசன் கல்லூரியின் உதவியோடு, நல்ல குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர் பலரை மதமாற்றஞ் செய்வதில் வெற்றிகண்டான். இம் முயற்சிக்கு எதிரீடாக, வங்கத்திலே இந்துமதம் சீர்திருத்த நெறியிற் செல்ல முற்பட்டது. அதனால், மிசனரிமாரின் வெற்றிப்பவனி தடுக்கப்பட்டது. தென்னாட்டிலே திருவாங்கூர் இராச்சியத்திலே மாத்திரம், மதமாற்றமுயற்சி குறிப்பிடத்தக்க பயனை அளித்தது. அங்கே, உயர்ந்த சாதியாரால் ஒடுக்கப்பட்ட சாணர்ச் சமூகம், மிசனரிமாரின் சமயமுயற்சிக்கு வாய்ப்பான இலக்காகியது. சாதிக்குழப்பத்தைத் தடுத்தற்காகத் திருவாங்கூர் மகாராசா முயற்சி செய்த போது, பாராளுமன்றத்திலே கேள்விகள் தொடுக்கப்பட்டன; அவரும் பதவி நீக்கப்படலாமென்று அச்சுறுத்தப்பட்டார். இச்செயல் பிற இந்தியச் சுதேச மன்னரின் கண்ணைத் திறந்துவிட்டது. முக்கியமான பல இராச்சியங்களிலே, பாடசாலைகள் திறப்பது உட்பட, மிசனரிமாரின் எத்தகைய முயற்சியும் 1947 வரை அனுமதிக்கப்படவில்லை.

ஆயினும், இந்தியாவிலே பிரித்தானிய அரசாங்கம் மறைமுகமாக மிசனரிமார்க்குக் கணிசமான உதவி செய்தது. இந்துக் கூட்டுக்குடும்பங்களின் சொத்திலே மதமாறியோர்க்கு இருந்த உரிமையைச் சட்டம் பாதுகாத்தது. இன்னும், மதமாறியோர் தம்மனைவிமாரையும் அச்சுறுத்திப் புதிய தம் மதத்திற் சேர்த்தற்கு வாய்ப்பாக, உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கள் அமைந்தன. பிற்றைநிலைப் பட்ட காட்டுச் சாதியாரிடையே மிசனரிமாரைப் பணிசெய்யுமாறு அரசாங்கம் ஊக்கிற்று.

இத்தகைய சமயபேதமே சீனத்திலும் அக்கால் நடைபெறலாயிற்று. 1723 இல் விடுக்கப்பட்ட விலக்கீட்டு ஆணையின் பின்னர், சீனத்திலே கிறித்தவ முயற்சியாதும் நடைபெற்றதாயின், அது இரகசியமானதாய்ச் சிறப்பிலதாகவே இருந்தது.

ஆயின் ஐரோப்பிய நாடுகளின் நெருக்கிடை காரணமாகச் சீனந்தன் துறைகளை முதலிற் பிரித்தானியர்க்கும் (1842) பின்னர் பிறநாடுகளுக்கும் திறந்து விட்டகாலை, நிலைமை விரைவாக மாறுதலடைந்தது. வர்த்தகச் செலவுக்குத் திறந்துவிடப்பட்ட துறைகளிலே, ஆணிலப்புறத்துரிமையெனும் போர்வையின் கீழ், மிசனரிமார் சுயாதீனமாகத் தங்குதற்கு வாய்ப்புக் கிடைத்தது. போத்துக்கேயர் விட்ட குறையை நிரப்ப நினைந்த பிரான்சிய அரசினர் தாமே கத்தோலிக்கத்தின் பாதுகாவலரென உரிமை பாராட்டினர். கத்தோலிக்கத்தை அனுசரித்தற்கு அனுமதியளிக்கும் ஒரு பேரரசாணையைப் பிரெஞ்சுத் தூதுவன் பெற்றுக்கொண்டான். இவ்வாறு தடங்கரை பெயர்க்கப்படவே, பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் செப்பமான ஆதரவிலே தீவிரமான சமயமுயற்சி ஆரம்பமாயது.

மிசனரியொருவனைச் சிரச்சேதஞ் செய்தமை, தக்கவாறு தண்டிக்கப்படல் வேண்டுமென்பதைத் தலைக்கிடாய்க் கொண்டு, இரண்டாவது சீனப் போரிலே பிரான்சும் சேர்ந்துகொண்டது. அரசியல் ஆக்கிரமிப்பைப் பூசிமெழுகுதற்கு, இத்தலைக்கிடே பிற்றை நாளில் முதற்றரமான ஒரு சாட்டாக வந்து வாய்த்தது. இது நிற்க, வல்லரசுகளோடு ஒப்பேற்றப்பட்ட 1858 ஆம் ஆண்டுப் பொருத்தனைகளின் வாயிலாய், சீனமெங்கணும் தங்குதடையின்றிப் பயணஞ் செய்யுமுரிமையை மிசனரிமார் பெற்றனர்; கிறித்தவ மதத்தைப் பொறுத்தேற்றுக் கொள்வதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது; சீனக் கிறித்தவர் தமது மதத்தை அனுட்டித்தற்குப் பாதுகாப்பும் வழங்கப்பட்டது. இவ்வாறாக ஐரோப்பாவுக்கும் கிறித்தவத்துக்குமுள்ள ஒருமைப்பாடு தெளிவாக்கப்பட்டது. இம்மட்டோ? சீனத்திலே மேற்கு வல்லரசுகள் செய்த ஆக்கிரமிப்பில், வாய்ப்பான அரசுபாயச் சாதனமாகவும் கிறித்தவம் தாழ்த்தப்பட்டது. ஆணிலப்புறத்துரிமையெனுங் கவசந் தரித்த மிசனரிமார், சீனக் கிறித்தவரின் 'நலவுரிமையின்' சார்பாகத் தத்தம் காவலர்க்கும் அமைச்சன்மார்க்கும் மேன்முறையீடு செய்யும் உரிமையையும் பெற்றார்கள். கிறித்துநாதரின் புனித மதத்துக்குத் தாமே பாதுகாவலர் என்று பறைசாற்றிய அப்பெருமக்களே, அம்மதத்துக்கு இழைத்த தீங்கைப் போல் யாருமே செய்திருக்க மாட்டார்—இதனைப் பின்னர் வரலாறு காட்டிற்று.

பல்வேறு காலங்களிலே நடந்த போர்களின் பின்னர், சீன மக்களிடமிருந்து தயைதாட்சணியமின்றிக் கறந்த நட்டஈட்டிலே கணிசமான பங்கு திருச்சபைகளுக்கே சென்றமை ஈண்டுக் கூர்ந்து நோக்கற் பாலது. சீனத்தின் மானபங்கத்தால் நன்மையடைந்தும், ஆக்கிரமிப்போடு ஒருங்கு வைத்தெண்ணப்பட்டுமே கிறித்தவ தூதங்கள் தம்பணியைத் தொடங்கின.

அன்னியரின் ஆக்கிரமிப்பை அடியொற்றிச் சென்று கிறித்தவத்தைப் புகுத்துவதாகிய இம்முறை, நியாயமானதேயெனக் காட்ட முயன்ற இலற்றேறென்று என்பான், 'மதமாறிகட்குப் பாதுகாப்பு உண்டெனும் உறுதியைப் பயப்பதால்' அது தக்கதே யென்றான். ஆயினும், அது 'கிறித்தவச் சமுதாயங்களே நாயகத்துள் நாயகமாக, அன்னியரின் பாதுகாப்பிலே ஆங்காங்குச் சிதறிக் கிடக்கும்

உட்கிடைகளாக மாற்றத் தலைப்பட்டது!' என்பதையும் ஒப்புக்கொள்கிறான் .....'வலிமைமிக்க அன்னியரின் ஆதரவாற் கைவரத்தக்க நயங்களைக் கண்டு சீனர் பலர் மதமாறினர்போல் நடித்தனர். திருச்சபையைச் சேருதற்குத் தூண்டுமுகமாகத் தத்தம் அரசாங்கத்தாரின் ஆதரவைப் பெற்றுத் தரலாமென வாக்குறுதியளித்த மிசனரிமாரும் பலர் உளர்.!

உண்மையில், பொருத்தனையிற் கண்ட வாசகங்களே சீனநாட்டிற் கிறித்தவ முயற்சிக்கு இறுதியிற் சாவுமணி யடித்தனவெனலாம். போரிற்பட்ட தோல்வியை யடுத்து, நாட்டின் மானமழிக்கும் நிலைமைகளிலே, அன்னிய அரசுகளின் பாதுகாப்பில் வளர்ந்த ஒரு மதம், அந்நாடு தன் அதிகாரத்தை மீண்டும் பெற்ற காலை, சகித்தேற்றுக்கொள்ளப்படும் என நம்பியிருத்தல் மடமையுள் கடமையெனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஐரோப்பியரைப் போலவே மிசனரிமாரும் தமது அரசியலாதிக்கம் சாசுவதமானது என நம்பியிருந்தனர்; சீன நாடு மீண்டும் மதுகை பெற்றெழுந்து, தமக்கும் தம்மதந் தழுவியவர்க்கும் மாறுகப் பழைய வரலாற்றேடுகளைப் புரட்டிக் காட்டுங்காலம் வரக்கூடுமென அவர்கள் கனவிலுங் கருதியிருக்கவில்லை. இலற்றேறெற்று ஆணித்தரமாகக் கூறியதுபோன்று, 'மேனாட்டுப் போராசாட்சியிலே திருச்சபை ஒரு பங்காளியாகிவிட்டது'. அப்போராசாட்சி இறுதியாக அழிந்தொழிந்தபோது, அதன் செல்லப்பிள்ளையாக இருந்த திருச்சபைக்கும் அக்கதியே தப்பாது நேர்ந்தது.

சீனத்திலே கிறித்தவம் தைப்பிங்குக் கலகத்திலே சம்பந்தப்பட்டிருந்தது. கிறித்தவப் பின்னணியிலேயே அஃது ஆரம்பித்தது. கலகத் தலைவனை உங்கு சூ சுவான் என்பான் தானே ஒரு தீர்க்கதரிசியாகி, கிறித்துநாதரின் இளைய சகோதரன் எனத் தன்னை வெளிப்படுத்தி, கடவுள் அவனுக்குக் காட்சி தந்தருளினானெனக் கதை பரப்பினான். அக்கலகம் ஒடுக்கப்பட்ட பின்னர், மிசனரிமார் பொருத்தனைவாயிலாகக் கிடைத்த சிறப்புரிமைகளைத் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தத் தலைப்பட்டு, அணைகடந்த வெள்ளம்போல உண்ணாட்டிலே பரவுவாராயினர். அவர்கள் தேவாலயங்களை அமைக்க, அவற்றையடுத்துச் சிறுசிறு சமுதாயங்கள் தோன்றி வளர்ந்தன. அன்னிய அரசுகளின் பாதுகாப்பைப் பெற்ற இம்மதமாறிகள், சீன மக்களை இகழ்ந்து நோக்கி, அவர்களிடத்துச் சற்று மூன்னப்பாகவே நடந்துகொண்டனர். தவேசர் போராசியின் காலத்திற் சீனத்தின் மிகச் சிறந்த அரசறிஞனைக் கொள்ளத்தக்க செங்கு குவோ-வான் கூறியது போன்று, 'மிசனரிமார் எங்கணும் தொல்லையே விளைத்துள்ளனர். கிறித்தவ மதத்தைத் தழுவாதாரைச் சீன மதமாறிகள் அடக்கி யொடுக்கும் போக்குடையர்; மிசனரிமாரோ மதமாறிகளைக் கட்டிக் காப்பர்; அம் மிசனரிமாரை அவர் தம் காவற்றூதர் பாதுகாப்பர்'.

கிறித்தவ மதப்பிரிவுகள் அனைத்தையும் பிரதிபலிப்பதாயமைந்த பென்னம் பெரிய தாபனமொன்று சீனநாடு முழுவதையும் அளாவி நிற்கும் வகையில் நிருமாணிக்கப்பட்டிருந்தது. உதாரணமாக, 1866 இலே நிறுவப்பட்ட சீன உண்ணாட்டு மிசன் 262 நிலையங்களை உடையதாயிற்று. மற்றுக் கத்தோலிக்கத் திருச்சபையோ சீனம் முழுவதையும் மேற்றிராசனங்களாகப் பிரிவினை செய்தது.

ஆயினும், மிசனரிமார் அழையாது நுழைந்த விருந்தினரே யென்பதைப் பொதுமக்களும் மண்டரின்மாரும் எஞ்ஞான்றும் தெளிவாகக் காட்டியே வந்தனர். இளவரசன் குங்கு பிரித்தானிய தூதமைச்சனுக்குக் கூறியதைக் காண்க: 'உங்கள் அபினேயும் மிசனரிமாரையுங் கொண்டு செல்லுங்கள்; அப்போது உங்களை நாம் வரவேற்போம்'. மிசனரிமாரின் முயற்சிக்கெதிராக எங்காயினும் ஒரு நகரத்திலே வலோற்காரமான குழப்பமேதும் மூளாத ஆண்டில்லை. இத்தப் பின்னணியில் வைத்தே பொக்சர் கலகத்தையும் விளங்குதல் கூடும். மிசனரிமாரும் 'குட்டிப்பேய்களான' மதமாறிகளுமே பொக்சரின் சீற்றத்துக்கு விசேட இலக்காயினர். அன்னியரின் ஆக்கிரமிப்புக்கு ஆதரவளிக்குங் 'குட்டிப் பேய்களது' விசுவாசம் சந்தேகிக்கப்பட்ட காரணத்தால், அச்சீனக் கிறித்தவர் அனுபவித்த துன்பஞ் சிறிதன்று.

யப்பானிலே, மிசனரிமாரின் முயற்சிகள் தக்கவாறு வசம்பு கட்டப்பட்டிருந்தன. யப்பானியப் போரசன் பட்டயச் சத்தியத்திலே (1868), 'உலகெங்கணுஞ் சென்று சென்று அறிவைத் தேடுவீர்' எனத் தன் குடிகளைக் கேட்டுக்கொண்டாளையினும், அதே தினத்தில் வெளிப்பட்ட அரசாங்க அறிக்கையில், ஒரு பிரகடனம் வருமாறு காணப்பட்டது: 'கிறித்தவரின் தீயமதம் இத்தாற் றடுக்கப்பட்டுள்ளது'. அன்னிய வல்லரசுகள் அதற்குமாறுக ஆட்சேபந் தெரிவித்தபோது, கிறித்தவத்துக்குமாறுக மக்கள் கொண்ட வெறுப்புணர்ச்சியை மெதுவாகவே மாற்றல் கூடும்; பூரணமான பொறுதிப் பூட்கை யப்பானிற் செவ்வையாகப் பலித்தற்கு, வல்லரசுகள் அவ்வாறுக மாறிய நிலைமைக்குக் காத்திருத்தல் வேண்டும் என்ற விதமாக விடையிறுக்கப்பட்டது. இதற்கிடையில், தேசாபிமானத்தையும் இராசவிசுவாசத்தையும் தேசியமதமான சிந்தோ மதத்தோடு ஒருங்கிணைத்து, அச்சிந்தோ மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதில் அதிகாரவர்க்கம் மிக மும்முரமாக ஈடுபட்டது. யாதும் ஏதுமின்றிக் கிறித்தவத்தை வெளிப்படையாக அனுட்டிக்க விடலாம் என்று கருதுமளவிற்கு நாட்டின் நிலைமை உறுதிபெற்றுவிட்டது என்பதைத் தெளிந்த பின்னரே, சமயப் பொறுதித் தத்துவத்தை, ஒரு சீர்திருத்தமுயற்சி என்ற வகையில், யப்பானியத் தலைவர்கள் பிரகடனஞ் செய்தனர் (1873). இந்நடவடிக்கையைக் கைக்கொண்டமைக்கு இன்னுமொரு காரணம் இருந்தது: கிறித்தவ முயற்சிக்கு வேண்டிய சுதந்திரம் நாட்டிலுண்டு என்பதை மேனாட்டோர் உணர்ந்தாலன்றி, ஆணிலப் புறத்துரிமையை ஒழிக்க முடியாதென யப்பானியர் உணர்ந்ததேயாம்.

இனிமேற் கிறித்தவம் 'தீய மதமாகாது என அரசாங்கம் ஒப்பிய காலத்தளவில், சிந்தோமதம் வலுப்பெற்று வளர்ந்து விட்டமையால், 'பெருவாரியான' மதமாற்றத்துக்கு இருந்த வாய்ப்பு முற்றுக மறைந்தொழிந்து விட்டது. கிறித்தவரின் உரிமைகளை அங்கீகரித்தமை, அலட்சியபாவத்தையே பிரதிபலிப்பது—அத்தகைய அலட்சியம் திருச்சபைக்கு நன்மை பயப்பதாகாது என்பதும் மிசனரிமார்க்கு நன்குக விளங்கிவிட்டது. மேலும், சீனத்திலே மேலாண்மை பெறுதற்கு ஏதுவாயிருந்த வாய்ப்பான பாதுகாப்பு நிபந்தனைகளை, யப்பானிலே மிசனரிமார் பெற்றிலர் என்பதையும் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலே, கிழக்குலக மதங்கள் பொதுவாகப் புத்துயிர்ப்புப் பெற்ற காலத்தில், யப்பானிலேயும் புத்தமதம், குறிப்பாக அமிடாவாதம், குறிப்பிடத்தக்க வகையிற் புத்துயிர் பெற்றது. அந்நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுக் காலத்தின்போது, பௌத்த சாத்திர அறிவு பல்கலைக் கழகங்களிலே விருத்தி யடைந்தது. சுசுக்கி போன்ற அறிஞன்மாரின் நூல்களிலே அவ்வளர்ச்சி காணப்பட்டது. இறுதியாக, யப்பானிலே கல்வி முறையானது தேசியக் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. சிந்தோமதம் விதித்த அரசாதிக்க மரபுக்குக் கிறித்தவப் போதனைகள் மாறுனவையென்னுஞ் சமூசயமும் கிறித்தவப் பிரசாரத்துக்கு ஒரு தடையாயிருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியளவில், மாயிருஞ் சீனத்தை வெற்றி கொண்ட யப்பான் வலிமை சான்ற ஒரு வல்லரசாக வெளிப்பட்டுத் திகழ்ந்தது. அவ்வெற்றியைத் தொடர்ந்து ஆணிலப்புறத்துரிமை ஒழிக்கப்பட்டமையாலும், ஆங்கில-யப்பானியக் கூட்டுறவு ஒப்பேறியமையாலும், பிற வல்லரசுகளுக்குச் சமதையான நிலையை யப்பான் பெற்றது. அவ்வளவில், அந்நாட்டில் மிசனரிமார்க்கு அங்கே வேலையிருக்கவில்லை.

தென் கிழக்காசியாவிற் கிறித்தவத்தின் வரலாற்றையும் நாம் கவனித்தல் வேண்டும். பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே, யேசு சங்கத்தைச் சேர்ந்த அலெக்சாந்திரே த உரோட்சு என்பார். அனுமிலே பைபோ எனுமிடத்திற் புகலிடம் பெற்றிருந்த யப்பானிய மீனவரிடையே தமது கிறித்தவப் பணியை ஆரம்பித்தார் (1624-7). தன் முயற்சியின் பயன் சிறிதே யென்பதைக் கண்டு ஏமாற்றமடைந்த உரோட்சு, திருப்பீடத்தை இம்முயற்சியில் ஈடுபடுமாறு தூண்டுதற்காக ஐரோப்பாவுக்கு மீண்டார். உரோமிலே திருப்பீடம் கையை விரிக்கவே, பிரான்சில் உரோட்சுப் பாதிரியார் அளிமிக்க ஆதரவைப் பெற்றார். அங்கே 1659 இல் நிறுவப்பட்டிருந்த அன்னிய நாட்டுத் தூதம் அப்பணியை மெய்யார்வத்தோடு மேற்கொண்டது. உருவானிலே வியாபாரிமார் சிலர் வர்த்தகத்தையும் சமயத்தையும் வளர்க்கும் இருமடியான நோக்கத்தோடு சங்கமொன்றைத் தாபித்தனர். அவர்தம் கப்பலில் வியாபாரியாக வேடம்பூண்டு பயணஞ்செய்தே அதிமேற்றிராணி இலம்பேட்டு என்பார்—உரோசுப் பாதிரியாரால் இச்சமயப்பணிக்கெனத் தெரிவு செய்யப்பட்டவர்—தொங்கிங்கை அடைந்தார் (1662). தொங்கிங்கை ஆண்ட திரிங்கு மன்னவர், இடச்சுக்காரரின் எதிர்ப்பிருந்தும் பிரான்சியரோடு வர்த்தகம் நடாத்த இசைந்தாராயினும், மிசனரிமாரின் சமயமுயற்சியை வரவேற்க எண்ணங்கொண்டிலர். ஆயின், தொங்கிங்கிற் பிரான்சியர் நிறுவிய களஞ்சிய சாலையை இடச்சுக்காரர் விரைவில் அழித்துவிட்டனர். நாட்டு மக்களும் புதிய மதத்திலே யாதும் ஊக்கங் காட்டத் தவறினர். எனவே, ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்காலமாக, எடுத்துப் பேசத் தக்கது யாதும் சமயத்துறையிலே அங்கு நிகழவில்லை.

அன்னிய நாட்டுத் தூதத்தைச் சேர்ந்த மிசனரியான பிக்னே த பெகெயின் என்பார் கொச்சின் சீனத்தில், 1765 இல், தமது பணியைத் தொடங்கினர். 1774 இல் அத்திரானின் மேற்றிராணியாக அவர் நியமனம் பெற்றார். அந்நாளில்

வீடுவாசலற்ற சஞ்சாரியாகத் திரிந்த உவே மன்னற்கு அவர் பெருஞ் சேவை செய்தார். அதிகயாகத் திரிந்த அம்மன்னனின் நலவுரிமைகளே மேம்படுத்தும் பொருட்டு, மேற்றிராணியார் பிரான்சுக்கு ஏகி, ஒரு பொருத்தனையை ஒப்பேற்றினர். அதன்படி, அம்மன்னற்கு அரியணையை மீட்டுக்கொடுத்தற்கு ஆவன செய்யப் பிரான்சு வாக்குறுதியளித்தது. ஆயின் அவ்வாக்குறுதி நிறைவேற்றப் படாமையாலே, பிக்நே தம் செலவிலேயே ஒரு படையெழுச்சியை ஒழுங்கு செய்து, மன்னற்கு இராச்சியத்தை மீட்டளித்தார். வெற்றிகண்ட அவ்வேளையிலேயே, மறக்குணம் படைத்த அம்மேற்றிராணியார் இவ்வுலக வாழ்வை நீத்தார் (1799). ஆயின், பிரான்சிலே புரட்சிப் போராட்டம் மூண்ட காரணத்தால், இப்பிரெஞ்சு மிசனரி ஈட்டிய உன்னத வெற்றியின் நயத்தைத் தக்கவாறு பயன்படுத்தல் இயலாது போயிற்று. பூர்பன்மன்னரின் ஆட்சி மீண்டகாலத்தில், அனும் நாட்டுப் புதிய பேரரசன் மின்மாங்கு என்பான் கிறித்தவமுயற்சிக்குப் பெரிதும் விரோதமாயிருந்தான். யேசுநாதரின் சமயத்தைக் 'கேடுற்றமதம்' என வருணித்த பேரரசன் தூ டுக்கு, அச்சமய குருமாரைக் கடலில் வீசவேண்டுமென 1848 இற் கட்டளைவிடுத்தான்.

அறக்கடிய இக்கண்டனங்கள், படைகொண்டு தலையிடுதற்கு மூன்றும் நெப் போலியனுக்குத் தலைக்கீடாய் வாய்த்தன. ஆயின் எனிசு என்பான் 'பிரெஞ்சுப் பூட்கையும் இந்து சீனத்தில் அபிவிருத்தியும்' எனுந் தனது நூலிற் கூறியவாங்கு, 'நாட்டைப் பிரான்சியர் தங் கைப்படுத்தி நாற்பத்திராண்டுகள் கழிந்த பின்னரும், மிசனரிமாரின் முயற்சிகள் குறிப்பிடத்தக்கனவாய்க் காணப்பட்டில'. பிறவிடத்திற் போன்று இங்கேயும், போரசாட்சியின் ஆதரவிற் சென்ற கிறித்தவம் ஆசிய உள்ளத்தை ஈர்க்கத் தவறியது.

சீயம், பர்மா ஆகிய இரு நாடுகளிலும், புத்தமதம் உள்ளூறுதி பெற்றிருந்தமையாலே, பெருவாரியான மதமாற்றத்துக்கு வாய்ப்புக்குன்றிவிட்டது. இந்தியாவிற் பட்டுப் பழுத்து அனுபவம் பெற்ற மிசனரிமார் பிற்றை நிலைப்பட்ட சாதியாரிடையே தமது முயற்சியைக் கருத்தூன்றிச் செலுத்தினர்; கரென் சாதியாரிடை அன்னர் ஓரளவு வெற்றியுங் கண்டனர். அவ்வழி, கரென் சாதியாரின் பிரிவினையியக்கத்துக்குக் கணிசமான ஆதரவு மிசனரிமாரிடைக் காணப்பட்டது — பர்மாவின் சுதந்திர இலட்சியத்துக்கு அது ஒரு பெரும் ஆபத்தாய் ஒரு பருவத்தில் இருந்தவாற்றையும் இங்குக் குறிப்பிடல் வேண்டும்.

மூசிலீங்களேயே பெரும்பான்மையாகக் கொண்ட இந்தோனேசியாவில், போர்த்துக்கேயரின் ஆரம்ப முயற்சியின் பின்னர் — குறிப்பாகப் பிரான்சிசு சேவியரின் முயற்சிக்குப் பின்னர் — கிறித்தவ முயற்சி அருகியே காணப்பட்டது. பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளிலே இந்தோனேசியாவின் வரலாற்றிற் காணப்பட்ட முக்கியமான ஓர் அமிசம் யாதெனில், உண்ணாட்டுப் பதித குலங்களிடையே இசுலாம் வளர்ந்து விருத்தியடைந்ததேயாம்.

இற்றை நூற்றாண்டின் வரலாற்றை நாம் இப்போது எடுத்தாளல் வேண்டும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தளவிலே, தேசியவுணர்ச்சி பெருகியமையாலும், இந்துமதம் வீறுகொண்டெழுந்தமையாலும் இந்திய நாட்டிற் கிறித்தவ

மிசனரிமார்க்கு இருந்தவாய்ப்புச் சாலவுங் குன்றிவிட்டது. இந்நூற்றாண்டின் தொடக்கத்திலே, இந்தியத் தேசிய வியக்கத்தின் முன்னணியில் நின்றோர் யாவரும் புத்துயிர்பெற்ற இந்துமதத்தை ஆதரிப்போராயிருந்தமை குறிப்பிடத்தக்கது. பால கங்காதரதிலகர் தேசியவியக்கத்துக்கு ஆற்றிய தலையாய தொண்டுகளுள் ஒன்று, பகவற்கீதையின் போதனைகளை இக்கால அரசியல் வாழ்க்கையின் சார்பில் விளக்கிக் கூறியதேயாம். ஆரிய சமாசத்தின் தலைவர்களுள் ஒருவர் இலசபதிராய். தீவிரமான தூய இந்து மதத்தைப் பிரதிபலித்த ஆரிய சமாசம், வட இந்தியாவிலே இந்து சமுதாயத்தைப் பலப்படுத்துவதிற் பேருதவி புரிந்தது. அரவிந்தகோசும் அவரைச் சேர்ந்த தீவிர தேசியவாதிகளும் அபிமானமிக்க இந்துக்களே. தென்னாட்டிலே, கிறித்தவப் பிரசாரம் வீறுமிக்கதாய் இருந்தபோதிலும், 'தீண்டாதாரிடையே' மதமாற்றஞ் சற்றுத் தாராளமாய் நிகழ்ந்தபோதிலும், வைதிக இந்துமதத்தின் ஆதிக்கம் பாரதூரமாக என்றுமே பாதிக்கப்படவில்லை.

முதற் பெரும்போரின் பயனாக மேனாடுகளின் பெருமை பொதுவாகக் குன்றியமை ஒருபுறமாக, வறிதே நுண்புலத்தாரின் இயக்கமென்ற நிலை நீங்கித் தேசிய வியக்கம் வளர்ச்சியடைந்தமை மிசனரிமாரின் வாய்ப்புக்களுக்குப் பாதகமாகச் சென்றது. இந்தியாவிலே கிறித்தவத் தலைவரும் தம் நாட்டவரினின்றும் மிக வெளிப்படையாகப் பிரிந்து நிற்றல் தமக்கு நன்மைபயக்காதென்பதை உணர்வாராயினர். கிறித்தவம் இந்தியப் பண்பாட்டிலே ஈடுபாடு கொள்ளத்தொடங்கிற்று. இந்தியக் கிறித்தவ தேசியக் கழகத்தின் ஆதரவிலே, இந்திய மரபுரிமை எனும் பெயரில், சிறுசிறு நூல்களாக வெளியிடப்பட்ட தொடர்நூலானது இம்மனமாற்றத்தை முதன்முதலாக எடுத்துக் காட்டிற்று. இந்தியக் கிறித்தவ சமூகமானது 1730 ஆம் ஆண்டையடுத்த காலக்கூற்றில், மேனாட்டு மிசனரிமாரின் கட்டுப்பாட்டைப் பெரும்பாலும் உதறித் தள்ளிவிட்டது.

அறிவுடை மக்களிடையே தோல்வியடைந்த கிறித்தவம் தாழ்ந்த வகுப்பாரைத் தன் இலக்காய்க் கொண்டது. ஆயினும், தீண்டாமையொழிப்பு அரசியல் முன்னேற்றத்துக்கு இன்றியமையாத ஒரு படியாகுமெனக் காந்தியடிகளார் வற்புறுத்தவே, மிசனரிமாரின் முயற்சிக்கு இன்னும் வாய்ப்பளிக்கும் போற் காணப்பட்ட கடைசிக் களமும் அவர் கைக்கு எட்டாததாயிற்று. இவ்வாறு மாறுதலடைந்துவிட்ட நிலைமைக்கேற்பத் தேசியத்திருச்சபை நிறுவுவதை இலக்காய்க் கொண்ட இயக்கங்களை ஆங்கில நாட்டுத் திருச்சபைகள் துவக்கி வைத்து ஊக்கமளித்தன. புதிய நிலைவரத்தை இன்னுந் தெளிவாக உணர்ந்து கொண்ட கத்தோலிக்க திருச்சபையானது சமயம் பரப்புஞ் சார்பை வற்புறுத்தாது, கத்தோலிக்க மக்களின் ஆன்மிக நலத்தைக் கவனிப்பதற்கு ஏற்றவாறு தனது பணியை மாற்றியமைத்துக்கொண்டது.

சீனத்திலே, மஞ்சு வமிசம் வீழ்ச்சியுற்றதன் பின்னர், கிறித்தவரின் நம்பிக்கை மீண்டுங் கிளர்ந்தது. நவசீனத்தின் தலைவரான சன்-யாட்சன் கிறித்தவரே. ஆயின் கிறித்தவத்தைப் பரப்புவதிலன்றிச் சீனத்தின் சிறப்பிலும் நலத்திலுமே

அவருடைய கவனஞ் சென்றமை விசைவிற் புலனுயிற்று. அவர்தம்முடைய பணிக்கு மிசனரிமாரின் ஆதரவை ஒருகாலத்தில் நம்பியிருந்தாராகலாம். ஆயின், மேற்குலகக் கிறித்தவ வல்லரசுகளின் மனப்பான்மைகண்டும், ஒற்றேர் பர்ப் புரட்சியின் செல்வாக்கால் உந்தப்பட்டும் அவர் மிசனரிமாரிலிருந்து வெகு தூரம் விலகிச் செல்லலாயினர். மேலும், ஒப்புரவற்ற பொருத்தனைகளுக்கும் பேரரசாட்சிக்கும் மாருகப் பொங்கியெழுந்த தேசியவுணர்ச்சிப் பெருக்கும் கிறித்தவ மதத்துக்குப் பாதகமாயமைந்தது. 'புதுப் பெருக்கு' எனும் மறு மலர்ச்சிக்குத் தலைவராயிருந்தோர் உண்மையில் அறியொணுமைவாதிகளே— அன்னர்க்குக் கிறித்தவம், வெளிநாட்டுப்போர்வை போர்த்த மூடநம்பிக்கை யின் ஒரு தோற்றப்பாடாகவே பட்டது. சாங்காயிலே 1922 இல் நிறுவப்பட்ட கிறித்தவ எதிர்ப்புச் சமாசம், முதலாண்மைக்கும் பேரரசாண்மைக்கும் உற்ற துணை கிறித்தவமென்றும், அவ்வழி, பலங்குறைந்த நாடுகளை நசுக்குதற் கமைந்த கருவி அதுவென்றும் வற்புறுத்தியது.

பீக்கிங்குப் பல்கலைக்கழக மாணவரால் உருவாக்கப்பட்டது கிறித்தவ எதிர்ப் புச் சமாசம். ஆணிலப் புறத்துரிமையின் பாதுகாப்பிலே, மேலுட்டு முதலாளித் துவத்தின் சுரண்டுதலுக்கு உடந்தையாக மிசனரிமார் செய்த வேலையை யெல் லாம் ஆதியோடந்தமாக விவரித்துப் பற்பல துண்டுப் பிரசுரங்கள் வாயிலாக அச்சமாசம் தன் கருத்துக்களைத் தீவிரமாக வெளியிட்டது. சீனத்தின் பல வீனத்தை மிசனரிமார் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தியமை, அன்னர்க்கு மாருன ஒரு பெருங் குற்றச்சாட்டாக இப்போது திரும்பியது.

இன்னும், மிசன் பள்ளிக்கூடங்களின் நிலையும் தீவிரமான ஒரு பிரச்சினையா யிற்று. இளஞ் சீனச்சங்கத்தின் ஐந்தாமாண்டு மகாநாடானது நிறைவேற்றிய ஒரு தீர்மானம் வருமாறு சென்றது: 'எமது நாட்டுமக்களின் தேசியவுணர்ச் சியை அழிப்பதாகிய கிறித்தவக்கல்வியை நாம் கடுமையாக எதிர்க்கிறேம்'. அன்னியக் கல்வி நிறுவனங்களைக் கட்டுப்படுத்துமுகமாக அடுத்த ஆண்டிலே பீக்கிங்கு அரசாங்கம் சில பிரமாணங்களைப் பிரகடனஞ் செய்தது.

இவ்வாறு நெருக்கடி வந்துற்ற காலத்திலே, சீனக்கிறித்தவர் தம்மைக் கைவிட்டவாற்றை வெளிநாட்டு மிசனரிமார் கண்டனர். அக்காலத்திலே, 'இரண்டாந்தர மிலேச்சரென்றும், மிசனரிமாரின் வேட்டைநாய்களென்றும்' பிறர் தம்மைக் கருதுவதை விரும்பாத சீனக்கிறித்தவர் பொதுவாகத் தேசிய வியக்கத்தைச் சார்ந்தே நின்றனர். சீன-ஜப்பானியப் போரின்போது, அமெரிக் கர் பிரித்தானியரின் ஆதரவைச் சியாங்கைசேக்குப் பெரிதும் நம்பியிருந்தகாலை, மிசனரிமார்க்குக் குமிந்தாங்கு பெருஞ் சகாய மளித்துவந்த அதே காலத்தில், சென்லிபூ என்பான் தலைமையிலே புதிய கொன்பியூசியமதம் அபிவிருத்தியடை யலாயிற்று. சியாங்கைசேக்குத் தாமே எழுதிய 'சீனத்தின் கதி' என்னும் நூலில் அப்புதிய மதம் வெளிப்பட்டது. இந்தியாவையும் ஜப்பானையும் போன்று சீனமும், கிறித்தவ மிசன்களின் 'திருப்பணியை' பொறுத்தவரை, வெறுங் கானல்நீராயிற்று. ஆயின் அவ்விருநாடுகளிலும் பார்க்க, மிசனரிமாரின் முயற்சி

யாற் பெருங் கேடுற்றது சீனமேயாம். இந்தியாவில் மிசனரிமாரின் ஆக்கிரமிப்பை நிருவகித்து நிற்கும் வலி இந்துமதத்துக்கிருந்தது; யப்பானிலும், அரசாங்கங் கைக்கொண்ட தடுப்பு முயற்சியால் யப்பானியச் சமுதாயக் கட்டுக்கோப்புத் தளராமே பாதுகாக்கப்பட்டது. ஆயின் சீனத்திலோ, மேனாட்டு வல்லரசுகளின் பாதுகாப்பிலே எழுபத்தைந்தாண்டுக் காலமாகத் தொடர்ந்த மிசனரி முயற்சிகாரணமாகச் சமூகப் பிணைப்புக்கள் செவ்வையாகக் குலைக்கப் பட்டமையால் 1948 இற் புரட்சி மூண்டது. சீனச் சமுதாயஞ் சீர்குலைந்திருந்தமை மிசனரிமாரின் முயற்சிக்கு உதவியாயிருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. சீனச் சமுதாயத்தில் அத்தகைய சீர்குலைவு ஏற்பட்டது உண்மையே. ஆயின் அதனாற் பயனடைந்தோர் மிசனரிமாரல்லர்—பிறரே.

ஆசியாவிற் கிறித்தவமுயற்சி தோல்வியடைந்ததற்குரிய காரணங்கள் பற்றிச் சில கூறி இவ்வாராய்வை முடிப்போம். ஆசியாவை மதமாற்றுதற்குச் செய்த முயற்சி தோல்வியுற்றதென்பதை மறுக்கமுடியாது. அதற்கு மிக வாய்ப்பான சூழ்நிலையிருந்த சீனத்திலேயே அது முற்றுகத் தோல்வியடைந்து வீழ்ச்சியுற்றது எனலாம்.

மிசனரிமாரின் வெற்றி இத்துணை அற்பமாய் இருந்ததற்கான காரணங்களை இங்குச் சற்று ஆராய்வோம். முதலாவதாக, தார்மிகத் துறையிலே தாமே மேம்பட்டவர் என்றவாறான மனப்பான்மையும், தாம் செல்லும் நெறியே மெய்ந்நெறியென்ற நம்பிக்கையும் மிசனரிமாரிடத்துத் தலைதூக்கி நின்றன. 'கிறித்தவமதமே உண்மையான மதம்; அதுவே மனிதனுக்கு இறைவனால் அருளிச் செய்யப்பட்டது' என்றவாறான கோட்பாடு இந்து உள்ளத்துக்கும் ஏற்புடைத்தன்று; பௌத்த மரபுக்கும் ஏற்புடைத்தன்று. பற்று காணுக்கு உருபிரக்கு நாட்டுவில்லியம் '(மெய்ச் சமயமாகிய கிறித்தவத்தில்) நம்பிக்கை கொள்ளாதவன் தண்டிக்கப்படுவான்' என்று கூறியபோது, இக்கோட்பாட்டை எடுத்துரைத்தான். எந்தவொரு சமயமும் தானே மெய்ச்சமயமெனப் பறைசாற்றிக் கொள்ளலும், மற்றவெல்லாம் புறத்தவெனலும், மற்றையோர் 'கடவுளாலே தண்டிக்கப்படுவர்' எனலும் இந்து பௌத்த மதங்களுக்கு நியாயமும் சாரமுமற்றனபோற் காணப்பட்டன.

இரண்டாவதாக, பேரரசுகளின் ஆக்கிரமிப்புக் கொள்கையோடே கிறித்தவ மிசனரி முயற்சி நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையால், அரசியற் சிக்கல்கள் வந்து புகுந்தன: மிசனரிமாரின் முயற்சி நாட்டின் நலனுக்கு விரோதமானதேயெனத் தேசியவுணர்ச்சி மிக்கோர் கருதத் தலைப்பட்டனர். அன்னியரான மிசனரிமாரின் நலன் கருதி, அவர்கள் சார்பாக வல்லரசுகளின் நெருக்கிடையும் ஆணிலப்புறத்துரிமையும் பிரங்கிப்படகுகளின் உதவியும் கைக்கொள்ளப்பட்டன என்பதையும் நாட்டு மக்கள் மறந்தாரல்லர்.

மூன்றாவதாக, ஐரோப்பியரே மேம்பட்டவர்—அவரே உயர்ந்தவர்—எனுங் கருத்தை மிசனரிமார் உணர்ந்தோ உணராமலோ புகட்ட முயன்றமை, விரோதவுணர்ச்சியை நாட்டு மக்களிடையே தூண்டிவிட்டது. ஐரோப்பியரின் அரசிய

லாதிக்கம் மறுக்கவொண்ணு உயர்ச்சி பெற்றிருந்த காலத்தும், மேனுட்டார் பண்பாட்டிலே தம்மினும் மேம்பட்டவரென எந்த ஆசியவினமும் ஒத்துக் கொண்டதுமில்லை; நம்பியதுமில்லை. மிசனரிமாரின் கல்விப்பணியிலே ஐரோப்பியப் பண்பாட்டின் சிறப்புக்கள் மெத்தவும் உயர்த்துக் கூறப்பட்டமையால், மிசனரிமாரின் முயற்சியும் மேனுட்டாரின் பண்பாட்டு மூனைப்பும் ஒன்றேயெனக் கருதப்படலாயின.

நாலாவதாக, கிறித்தவ மதப்பிரிவுகள் பற்பல தம்முள் மாறுபட்டு நின்று ஒன்றையொன்று தாக்கிப் பிரசாரஞ் செய்தமையும் மிசனரிமாரின் வேலைக்கு இடையூருயிற்று.

இறுதியாக, முதற்பெரும்போரையடுத்து (1914-18) ஐரோப்பாவிலே சமய நம்பிக்கை தளர்ந்தமையாலும், ஐரோப்பிய நாகரிகத்திலே நெருக்கடியேற்பட்டமையாலும், இரசியப் புரட்சி மூண்டமையாலும், ஆசிய மக்களுட் சில வகுப்பாரிடையே கிறித்தவமதத்துக்கு எஞ்சியிருந்த சிறிது கவர்ச்சியும் மறைந்தொழிந்தது. ஐரோப்பியரின் ஆதிக்கம் மறையவே, ஆசிய மதங்கள் பலவற்றுள் ஒன்றேயெனும் இயல்பான நிலையைக் கிறித்தவம் அடைந்தது. மிசனரிமார் ஆண்டனுபவித்த சிறப்பான நிலையும் அற்றுப்போயது.

எட்டாம் பாகம்

ஐரோப்பாவிலே குணபுலத்துச் செல்வாக்கு

அதிகாரம் 1

பண்பாட்டுச் செல்வாக்கு

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே படிப்படியாக ஆசியா மேனாட்டு மயமான வாற்றையும், இருபதாம் நூற்றாண்டின் முன்னரைக் கூற்றிலே அவ்வியக்கத்தின் வேகம் அதிகரித்தவாற்றையும் சுருக்கமாகக் கூறினோம். மேனாட்டுச் சார்பைத் தள்ளுதலின்றி, அதற்கு மாறாக, ஐரோப்பியப் பண்பாட்டின் பொதுவான அமி சங்களை அரிதின் முயன்று கிரகித்து, தத்தம் சமுதாயங்களைப் புத்தமைப்புச் செய்வதில் நன்கு பயன்படுத்தவே ஆசிய நாடுகள் முயன்றன என்பதை முன்னமே கண்டோம். இனி, நாம் ஆராய்ந்த அரசியல் வரலாற்றுக் காலம் முழு வதும், ஐரோப்பாவின் பண்பாட்டினும் நடையுடை பாவனைகளினும் ஆசியா செலுத்தியுள்ள செல்வாக்கைச் சற்று ஆராய்வோம். ஆசியாமீது ஐரோப்பா அரசியலாதிக்கஞ் செலுத்திய காலத்தில், 1860-1948 வரையான காலப்பகுதி யில, ஐரோப்பாவிலிருந்து பலவற்றை இரவலாக ஆசியா பெற்றதோடு, மேனாட்டு நாகரிக வளர்ச்சிக்கு வரையாது வழங்கியுமுளது என்பதை ஐரோப் பிய எழுத்தாளர் பொதுவாக மறந்துவிடுகின்றனர்.

வசுக்கோ த காமாவின் வருகையையடுத்த காலத்தில் ஆசியாவுக்கும் ஐரோப் பாவுக்குமிடையே அறிவுத்துறையில் உண்டான தொடர்புகள் பதினேழாம் நூற்றாண்டிலேயே உண்மையாகத் தொடங்கின எனலாம். எனினும் கிழக்குலக வர்த்தகத்தில் நேராக ஈடுபாடு கொண்ட மேற்கைரோப்பிய நாடுகள்மீது ஆசி யாவின் செல்வாக்கானது காலத்தால் முந்தியே தொடங்கிவிட்டது. முதன்முத லாக ஐரோப்பியக் கப்பல்கள் இந்தியாவையுஞ் சீனத்தையும் அடையுமுன்னமே, இந்திய மசிலினும் சீனப்பட்டும் பீங்கான் வகையும் ஐரோப்பாவுக்குச் சென்று விட்டன. கடல்வழித் தொடர்பு நேராக ஏற்பட்டபின்னர், இச்செல்வாக்கு, சிறப் பாகப் பொருளாதாரத் துறையிலே, மென்மேலும் பரவியது. பருத்தித் துணி களிற் பல்வகையுருப்பதிக்குங் கலை தவிர்ந்த பிறவாற்றால், இந்தியாவன்றிச் சீனமே இச்செல்வாக்குச் செலுத்துவதில் முதன்மை பெற்று விளங்கிற்று. பட் டும், அலங்காரத் தையல்வேலையும், பீங்கான் கலவகையும், அரக்குத் தொழிலும், வீட்டுத் தளவாடமும், சுவரலங்காரத்தாளும், தோட்டமமைத்தலும், ஏறக் குறைய அரைநூற்றாண்டாகப் பிரான்சிலும் பிரான்சின் வாயிலாய் ஐரோப்பா விலும் முதன்மை பெற்று விளங்கிய உரொக்கோப் பாணியுமெல்லாம் பதினெட் டாம் நூற்றாண்டின் முன்னரைக்கூற்றிலே சீன நாகரிகப் 'பெருக்கு' ஐரோப் பாவிற் பரவியதற்குச் சான்று பகரும். இத்தன்மையதான சீனச் செல்வாக்கைப் பிரதிபலிப்பதாயமைந்த பீங்கான் கலவகை ஏற்கவே பிரான்சிற் புகுந்துவிட் டது. பதினேழாம் நூற்றாண்டின் பின்னரைக்கூற்றிலே, செய்விரேசுவில் நிறுவப்

பட்ட பெருந்தொழிற்களங்கள் உயர்தரமான சீனக்களிமட்பாண்டங்களே வனைய லாயின. ஆயின் சக்சனி நாட்டு வல்லான் ஒகத்தசு காலத்தில் (1670-1738) பீங் கான் கலவகை ஐரோப்பாவில் ஒரு பைத்தியமாகிவிட்டது. சேர்மனி, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் அது பெருமதிப்புப் பெற்றுவிட்டது. சுவர்கள், மேற்கூரை, சாளரவிடைகள் எனுமிவற்றிற் பாவுதற்கும் பீங்கானையே ஒகத்தசு உபயோகித்தான் என இரயிச்சவயின் எனும் ஆசிரியன் கூறியுள்ளான். 1710-12 வரையான காலத்தில், மெயிசன் எனுமிடத்திலே 'சைனு' உற்பத்திசெய்யப் படலாயிற்று. ஒகத்தசின் ஆதரவோடு, பொற்றிசர் என்பானே மெயிசனில் ஒரு தொழிற்சாலையை நிறுவினன் என்பர். இத்தொழிற்றுறையில் ஐரோப்பா முழு வதற்கும் மையமாகச் சக்சனியே விளங்கிற்று. இவ்வகையில் அதன் செல்வம் சாலவும் பெருகிற்றென்றும், மாமன்னன் பிரடெரிக்கு அவ்விராச்சியத்தை ஏழாண்டுப் போரிலே வென்றடிப்படுத்திய பின், தன் கடன்களே அடைத்தற்கு அந்நாட்டுப் பீங்கான் கலவகையைக் கொடுத்தானென்றுங் கூறுவர்.

'சைனுவைப்' பயன்படுத்துவதாகிய இந்நாகரிக முறை இங்கிலாந்தில் உறுதி யாக வேரூன்றிற்றெனினும், ஆங்குச் 'சைனு' தயாரித்தல் உடனும் துவங்கப் படவில்லை. நாற்பதாண்டு கழிந்த பின்னரே போ வில் ஒரு தொழிற்சாலையும், அடுத்து, புதிய கன்றன் தொழிற்சாலையும் சீனச் சித்திரக்கோலங்களே அடி யொற்றத் தலைப்பட்டன. அத்தகைய கோலங்களுட் பெருவழக்குப் பெற்றவை காடைச் சித்திரமும் கோதுமைக்கதிர்க் கோலமுமேயாம். 'சைனுப் பாண்டங் களுக்கு மதிப்பு மிக உயர்ந்தமையால், இங்கிலாந்திலும் சேர்மனியிலும் பல தொழிற்சாலைகள் தோன்றின. உசுற்றர்த் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப் பட்ட சைனு மட்பாண்டங்கள்' மிக நேர்த்தியாய் இருந்தமையால், கைவண் ணந் தேர்ந்த நிபுணரின் கண்ணுக்கே அவற்றுக்கும் அசற் சீனமட்பாண்டத் துக்கும் வித்தியாசங் காணல் முடியுமெனக் கூறப்பட்டது. காங்கு இசி நீலத் திலும் வெள்ளையிலும் 'பமில் வேட்டிலும்' யப்பானிய இமாரியிலும், யுங்கு செய்கின் 'பமில் உரோசாவிலும்' அமைந்த உசுற்றர்க் கோலங்களே ஐரோப் பாவிற் பெரிதும் போற்றப்பட்டது.

பீங்கான் கலவைக்கு அடுத்ததாகச் சிறப்புப் பெற்றது அரக்கு வேலை. பதினை ரும் நூற்றாண்டின் ஆரம்பத்திலே, பிரெஞ்சு வேத்தவையில் அரக்குப் பெட்டகங் கள் நாகரிகப் பொருள்களாகக் கருதப்பட்டன. அந்நூற்றாண்டின் இறுதியள வில், அரக்குத் தொழில் நுட்பத்தைப் பிரான்சியர் அறிந்துகொண்டார் போலும். அரசினரின் ஆதரவோடே இக்கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்டாலும், மாட்டின் சகோதரர் நால்வரின் முயற்சியாலேயே இக்கைத்தொழில் சீனக் கைவண்ணத்துக்கொப்பான கலைப்பொலிவைப் பெற்றது. அரக்கு முதன்முதலாக 1663 இலேயே இங்கிலாந்திற் பயன்படுத்தப்பட்டது என்பர். கொன்சுதன்சு சைமன் என்பான் தான் எழுதிய 'பதினெட்டாம் நூற்றாண்டுத் தளவாடம் அமைப்போர்' எனும் நூலில் இங்கிலாந்தில் அரக்குத் தொழில் வளர்ந்த வர

லாற்றைச் செவ்வையாக ஆராய்ந்து, பிரான்சிய அரக்குப் பொருள்களிலும் பார்க்கச் சிறந்தவற்றைப் பேமிங்காம் தொழிற்சாலை உற்பத்தி செய்தது எனக் கூறுகின்றனர்.[1]

வீட்டுத் தளவாடங்களிலும் சீனச்செல்வாக்குத் தெளிவாகக் காணப்பட்டது. யேல் பல்கலைக்கழகத்தைத் தாபித்துப் பிற்காலத்திலே பெரும் புகழ்பெற்ற எலிகு யேல் என்பான் சென்னையில் ஆள்பதியாயிருந்து 1699 இல் மீண்டகாலை, பெருந்தொகையான சீன அலங்கரிப்புப் பொருள்களைத் தன்னுடன் எடுத்துச் சென்றான். இவ்விடயத்தில் அவனை ஒரு புதிய நாகரிகப் பாணியை மேனாட்டிலே தொடக்கி வைத்தான் எனலாம். எனினும் யேலுக்கு முன்னமே அரசருடும்பத்தோர் சீன, இந்தியச் சுவை வரம்புகளைத் தழுவிக் கொண்டனர். பெரிய பிரித்தனிற் சுற்றுப்பயணஞ் செய்த திபோ வருமாறு கூறினன்: 'மேரியரசியே சீனப் பொருள்கள் கொண்டு வீட்டை அலங்கரிக்கும் வழமையை அல்லது மோகத்தை இங்கிலாந்திற் புகுத்தினள். இவ்வழமை கடந்து பரவி பெட்டகங்கள்மீதும், பிற தளவாடங்கள்மேலும் கூரைவரையும் அடுக்கி வைக்கும்மளவிற்கு—சீனக்கலவைகளுக்காகத் தட்டனுமாரிகள் செய்து வைக்குமளவிற்கு—சென்றுவிட்டது.'

சீனப் பெட்டகங்களும் திரைகளும், வசதிபடைத்தோரிடையே பெருவழக்காயின. ஆங்கில வீட்டுத்தளவாட உற்பத்தியிலே தன்னேரில்லாப் புகழடைந்த தோமசு சிப்பெண்டேல் என்பான் சீனமாதிரிகளைத் தழுவத் தொடங்கிய பின்னரே, இத்துறையிற் சீனநாட்டின் செல்வாக்கு ஆங்கிலச் சுவை வரம்புகளைத் தொட்டது. சிப்பெண்டேல் எழுதிய 'கனவானுக்கும் பெட்டகத் தயாரிப்போர்க்கும் ஓர் வழிகாட்டி' எனும் நூலிற் சீன மாதிரிகள் பற்பல எடுத்துக் காட்டப்பட்டுள. சிப்பெண்டேலின் தளவாடப்பாணியில் அவை பெருஞ் செல்வாக்குச் செலுத்தின என்பதற் கையமில்லை. துறைபோய விமரிசகனொருவன் சிப்பெண்டேலின் பாணிபற்றி வருமாறு கூறினன். 'செதுக்கு வேலை செய்த கதிரைகளிலும், எழுது மேசைகளிலும், தொங்குகின்ற சீனத்தட்டுக்களிலும் போன்று மாதிரியுருக்கள் சீனப் பாணியைத் தழுவியிராதவிடத்தும், நளினுக்கமான வேலைப்பாடுகளிலே அப்பாணி புலப்படுகின்றது. 'பிரெஞ்சு' என முத்திரை பொறிக்கப்பட்ட கதிரைகளிலுமே, சித்திரைவேலைப் பாடுடைய அவற்றின் ஆசனங்களில், சீனயங்கையும் சோர்ந்து விழுகின்ற வில்லோ.....மண்டரின்மாரின் உருவங்களையும் காணலாம். அக்காலத்திலே தளவாடஞ் செய்வதிற் சீனப் பாணி பெரிதும் பரவியிருந்தமையால், எட்வேட்சும் தாபியும் வெளியிட்ட 'Chinese Designs of Building and Furniture' எனும்

1. எமது நாட்டுச் சபலமாதர் இன்புறவேண்டி
எமது காசைச் சீன நாட்டில் வீசுவ தேனோ?
இங்கு நாமே சீனப் பாண்டம் செய் வதாலே
அங்கு நின்று பாண்டம்யாதும் தேவைப்படாது—
இனித்தேவைப்படாது.

நூலையும், வில்லியம் சேம்பேசு வெளியிட்ட 'Designs of Chinese Building and Furniture' எனும் நூலையும் போன்ற பிரசுரங்கள் மக்களிடையே எளிதில் விற்பனையாகின.

மேனாட்டுச் சுவைவரம்பிலே தீர்க்கமான செல்வாக்குச் செலுத்திய பிறிதொரு சீனக் கலைப்பொருள் சுவரலங்காரத்தாள் என்பது. இத்தகைய அலங்காரத் தாள் இடச்சுவணிகர் மூலமாகவே இங்கிலாந்தை அடைந்ததாகலாம். மூன்றும் வில்லியம் இங்கிலாந்துக்குக் கொணர்ந்த கலையமிசங்களுள் இதுவுமொன்று. எவலின் என்பானுடைய நாட்குறிப்பேட்டிலே இப்புதிய அலங்காரப் பொருள் பற்றிய ஒரு வருணனை காணப்படுகிறது. 'பசைபூசிய ஒருவகைக் கண்ணாடியன்ன கவிக்கோலில் மெத்த அருமையாகத் தீட்டப்பெற்ற மனிதச் சித்திரங்கள், தேசப்படங்கள் ஆகியன; ஒருவகை மென்பட்டிலே மிக இயற்கையாக வரையப்பட்ட பூக்கள், மரங்கள், பறவைகள், விலங்குகள் முதலியன' பற்றி அவன் குறிப்பிடுகின்றான். சுவரலங்காரத்தாளில் இடம்பெறத்தக்க வண்ணக் கோலங்களை மிசனரிமாரே ஐரோப்பாவுக்கு எடுத்துச் சென்றாராகலாம். ஆயின், சீனச் சுவரலங்காரத் தாள்களைத் தழுவி முதன் முதலாக அவற்றைத் தயாரித்தவன் யின் பப்பிலோன் என்பானே (1688). இந்நாகரிகப் பாணி உச்சநிலையடைந்த காலத்தில், ஆங்கிலத் தழுவல்களும் தோன்றலாயின. பற்றசி பகுதியைச் சேர்ந்த யாக்சன் என்பான் மாதிரியுருவங்களைக் கொண்ட ஒரு நூலை 1753 இல் வெளியிட்டான். நெடுங்காலம் பயன்படத்தக்க சுவரலங்காரத்தாளை முதன் முதலாக விரிவான முறையில் உற்பத்தி செய்தவன் யாக்சனே. அவனைப் பின்பற்றி, செல்சியிலும் செரிங்கமிலுந் தோன்றிய தொழிற்சாலைகள் இக்கைத்தொழிலை இங்கிலாந்திலே இயல்பான ஒரு தொழிலாக மாற்றிவிட்டன.

சீனருடைய பூந்தோட்ட முறையும் ஐரோப்பியச் சுவைவரம்பிலே நிரந்தரமான செல்வாக்கைப் பதித்துளது. அடிசனும் போப்புமே அதற்கு ஆதிகர்த்தாக்களாக இருந்தபோதிலும், சேர் வில்லியம் சேம்பேசு என்பான் கியூப்பூங்காவிற் சீனத்தோட்டமொன்றை 1759 இல் அமைத்தபோதே அச்செல்வாக்குப் பிரசித்திபெற்றது. அப்பூந்தோட்டமுறையைப் பின்பற்றி ஐரோப்பியத் தலைநகரங்கள் யாவற்றிலும் புதிய தோட்டங்கள் தோன்றலாயின.

ஐரோப்பாவிற் சீன ஓவியக்கலையின் செல்வாக்கை அளவிட்டுக் கூறுதல் கடினம். எனினும், இயற்கைக் காட்சிகளை வரைந்த ஓவிய விற்பன்னர் பலரும் சீனச் சித்திரமாபுகளை நன்கு அறிந்திருந்தனர் என்பதற்கையமில்லை. சீன உத்திகளை அவர்கள் தாராளமாகக் கையாண்டனர் போலும். மலைகளையும் முகில்களையும் சித்திரிப்பதில், வட்டோ என்பான் சீன வடிவங்களிற் கொண்ட நாட்டம் தெளிவாகக் காணப்படுகிறது. சீனச் சாயலுடைய மனித உருவங்களையும் அவன் தன் படங்களிலே தீட்டினனும், அவை ஐரோப்பியச் சாயலையே கொண்டுள்ளன. பாரிசில் இருந்தகாலை, அவன் வரைந்த ஓவியங்களில், சீனச் சார்புடைய அவன்றன் கற்பனை தங்குதடையின்றி வெளிப்பட்டதென்பர். பிரெஞ்சு ஓவியன்மார் பிறரும்—அவருள்ளுங் குறிப்பாகக் கிறித்தோபு அல்ற்றும் பவுச்சரும்—அவனுடைய மரபைப் பின்பற்றி வெற்றியுங் கண்டனர்.

நீர்வண்ணத்தால் ஓவியந் தீட்டும் முறை சீனத்திலிருந்தே பிற நாடுகளுக்குச் சென்றது என்பார். 'இயற்கைக் காட்சிகளைத் தீட்டியோனும் மாபெரும் மேதையெனக் கொள்ளுதேபிளாற் பாராட்டப்பட்ட யோன் உரோபேட்டு கோசென்சு என்பானே சீனவுத்தியை முதன்முதலாகக் கையாண்டவன். அவன் கையாண்ட முறை 'சிறு நூலுக்கங்களிலும் சீன முறையை ஒத்திருந்தது' என்பர். கோசென்சின் தந்தையான அலெக்சாண்டர் கோசென்சும் பிற்றைநாளிலே மைந்தனுடைய சீன மரபாற் கவரப்பட்டானென்றும், 'சீனருடைய ஒரே வண்ணச்சித்திரங்களே 'அவனுடைய பிற்கால ஓவியங்கள்' நினைவூட்டுவனவாய் அமைந்தன வென்றும்' உலோரென்சு பின்யன் கூறியுள்ளான்.

கட்டிடக்கலையிலே உரொக்கொக்கோ மரபு பரவியது பற்றியும், சீனக் கருத்துக்கள் அவ்வியக்கத்திற் செலுத்திய செல்வாக்குப் பற்றியும் நிபுணர் பலர் விரிவாக ஆராய்ந்துள்ளனர். ஆதலின் அவை பற்றி இங்கு ஆராயவேண்டியதில்லை. 'ஐரோப்பாவும் சீனமும்' என்ற தனது நூலில், இவ்விடயம் பற்றிய அதிகாரத்தில் அட்சன் என்பான் தேர்ந்த அறிவோடு அதனை ஆராய்ந்துள்ளான். இரயிச்சுவைனும் இவ்விடயத்தை ஆதாரபூர்வமாகத் தனது நூலில் ஆராய்கின்றார். உரொக்கொக்கோவின் சிறப்பியல்புகளை அட்சன் வருமாறு அழகாக எடுத்துரைக்கின்றார்.

'வகையும் வளமுமே உரொகொக்கோ அலங்காரப் பாணியின் நோக்கமாகும். அதன் மாதிரியுருக்கள் சிக்கலும் பொலிவும் வாய்ந்தவை. எனினும் அவற்றில் நுட்பமான ஒருமைப்பாட்டையும் சமநிலையையும் காணலாம். சீனமாதிரியைத் தழுவிய வளைவுகள் அவற்றின் பொலிந்து காணப்படும். மெத்தவும் அலங்கார வேலைப்பாடுடைய வளைவுகள் நேர்கோடுகளை இடையறுத்துச் செல்வதையும், சீன நெய்யரி வேலையையொத்த நேர்கோட்டு அமைப்புக்கள் இதமாக அமைக்கப்பட்டிருப்பதையும் அவற்றிற் காணலாம். திண்மையும் விறைப்புமான தோற்றத்தை இப்பாணி தவிர்த்தது என்றவகையால் இது 'பரோக்குப்' பாணியிலும் வேறுபட்டது. செங்கோண மூலைகளை அது வளைவுகள் மூலமாகச் சீராக்க முயல்வது. விறைப்பும் மூளைப்புந்தவிர்த்து, அது தன் அலங்காரத்திலே உயிர்ப்புள்ள வளர்ச்சியைக் காணமுயல்வது.

இவ்வியக்கமானது எத்துணை விரைவாகப் போற்றப்பட்டுப் பரவிற்றோ அத்துணை விரைவாக மறைந்தும் விட்டது. ஆயினும், ஐரோப்பியக் கட்டிடக் கலை மரபிலே அதன் சாயல்களை இன்றுங் காணலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும், ஐரோப்பியச் சுவை வரம்புகளில் இந்தியா செலுத்திய செல்வாக்கு மிக அற்பமே. பருத்தித் துணியே ஒரு விதிவிலக்கு. கலையழகு பொருந்த அச்சிடப்பெற்றவையும், சலவைக்கு உவந்தவையும், மலிவாக வாங்கத்தக்கனவுமான மெல்லிய பருத்தித் துணிகள்—கலிக்கோ, மல், சலிம்பூர், மசூலிப்பட்டணம், சென்னை எனும் பெயர்களையுடைய வகைகளும் மிகினும்—சில ஐரோப்பிய வகுப்பாரிடையே நாகரிகமான உடையாகக் கருதப்பட்டதுமன்றித் தேசிய வழக்கமாகியும் பரவிவிட்டன. இந்

தியத் துணிகள் மிக இலேசானவையாயும், சலவைக்கு ஏற்றவையாயும், பல் வேறு வண்ணமுங் கோலமும் உடையவையாயும் இருந்தமையாலே, அவற்றுக்கு ஐரோப்பிய மக்களிடையே மதிப்புப் பெருகிற்று. பொதுக் கிளர்ச்சியும் பாராளு மன்ற நடவடிக்கையும்தானும்—உதாரணமாக மாரிகாலத்திலே பருத்தி யுடைகளுக்கு எதிராக 1677 இல் விதிக்கப்பட்ட தடையுத்தரவுமே — அம் மதிப்பை அழிக்க முடியவில்லை. கம்பளிக்கு ஆதரவாயிருந்தோர், இந்தியத் துணிகள் உடலை மறைப்பதில்லை யாதலால் ஆபாசமானவையெனப் பிரசாரஞ் செய்தனர்; ஆங்கிலக் கம்பனியுடையின் பெருமையும் உறுதியும் பற்றி மக்க ளுக்கு இடித்துக் கூறினர். ஆயினும் அத்தகைய பிரசாரத்தை இந்தியத் துணி கள் நிருவகித்ததோடு, இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் மக்களின் பழக்க வழக்கங்களிலே ஒரு பெரும் மாற்றத்தை உண்டாக்கின.

இவ்விடயம் பற்றிப் பிரெஞ்சு உற்பத்தியாளரும் பெரிதுங் கவலை கொண்டனர். பதினேந்தாம் லூயி காலத்தில் அமைச்சனாயிருந்த உலவோ என்பான் பஞ்சி சாயக் கைத்தொழில் வளர்ச்சியடைந்தவாற்றைப் பழைய ஆசிரியன்மார் ஒத் தடையுத்தரவைப் பிறப்பித்தான். இந்தியத் துணிவகைகளால் ஐரோப்பியச் சாயக்கைத்தொழில் வளர்ச்சியடைந்தவாற்றைப் பழைய ஆசிரியன்மார் ஒத் துக்கொள்ளுகின்றனர். 'பருத்தித்துணிகளையும் பஞ்சிலினையும் தயாரித்தற்கும், அவற்றுக்குக் கெட்டிச்சாயமூட்டுதற்கும் இந்தியர் எம்மைப் பழக்கியுள்ளனர். இந்தியத் துணிகளுக்குச் சாயமூட்டும் முறை ஐரோப்பாவிலும் தழுவப்பட் டுளது. ஆயின் அத்துணிகளில் காணப்படும் நிறவுறுதியும் நேர்த்தியும் அத் துணைச் செம்மையாக இங்குக் கைவரப்பெற்றில'.

தேனீர் அருந்தும் வழக்கம் இங்கிலாந்திற் புகுந்து பரவியமையால் விளைந்த சமூக மாற்றத்துக்குச் சீனமும் இந்தியாவுமே மூலகாரணமெனக் கொள்ளலாம். ஆதியிற் சீனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை மக்கள் உவந்து பருகும் ஒரு தேசியப்பானமாகிவிட்டது. அதனைச் சுவைத்துப் பார்த்த பெப் பிசு என்பான் உற்சாகமளிக்கும் அதன் குணத்தை நயந்து போற்றினன். சீனத் திலிருந்து பிரித்தானியர் பெற்ற வணிகப்பொருள்களிலே தேயிலையே முதலிடம் பெற்றவாற்றை முன்னர்க் கண்டோம். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியள வில், காலைப்போசனத்தோடு பருகும் இன்றியமையாத பானமாகச் சகல வகுப் பாரும் அதனைக் கொள்ளத் தொடங்கினர். அன்றியும் மாலையிலே தேய்நீர் அருந் தும் வழக்கமும் தொடங்கிவிட்டது. பிரெஞ்சுத் தத்துவஞானியும் வரலாற்றறி ஞனுமான இரெயினல் இங்கிலாந்தெங்கணும் அவ்வழக்கம் பரவியிருந்தமை கண்டு, மதுபானப்பழக்கத்தைப் பிரித்தானியரிடைக் குறைப்பதிலே அதுபோல எந்தச் சட்டமும் போதனையும் ஒழுக்காற்றுப் பணுவலும் உதவியதில்லையெனக் குறிப்பிட்டான். ஆயின் இந்தியத்துணி விடயத்திற் போன்று, இங்கும் தங்கம் வெளியேறுவதைக் கண்டு அச்சங்கொண்ட ஆங்கிலப் பொருளியலறிஞர், தேனீர்

அருந்தும் வழக்கத்துக்கு மாறுக நியாயங்கள் தேடமுற்பட்டனர். ஆதர் யங்கும் பிறரும் வறியோர் அதனை வாங்குவதாற்பட்ட வீண்செலவு குறித்துக் கண்டித்தெழுதினர். வட இங்கிலாந்துக் கிராமமொன்றிலே, விசித்திர மனப் பான்மையுடைய ஒரு கனவான் தேய்ப்போச்சிகளிற் சீன எழுத்துக்களை வாசித் துக் கற்றவாறு 'உரோமனி இரை' எனும் நூல் வாயிலாக அறியக் கிடக்கின் றது—தேனீர் அருந்தும் வழக்கம் அத்துணை பரவியிருந்தது.

பிரித்தானியத் திறைசேரியாளர் தேயிலைத் தீர்வையை அடுத்தடுத்துக் கூட் டியபோதும், தேயிலைக்கிருந்த 'மானம்' தொடர்ந்து கூடிற்றேயல்லாற் குறைந் ததில்லை. இந்தியாவும் தேயிலை வர்த்தகத்தில் ஈடுபடத் தொடங்கிற்று. தேயிலைச் செடி அசாமில் இயல்பாக வளருஞ் செடியேயாயினும், இந்தியாவில் முன்னம் பயிர்செய்யப்படவில்லை. ஆயின் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இந்தியாவும் தேயிலை வர்த்தகத்தில் வந்து புகுந்தமையாலும், இந்தியத் தேயிலைத்தோட்டங் கள் பெரும்பாலும் பிரித்தானியரின் வசமே இருந்தமையாலும், காலை மாலைப் பானமாகத் தேயிலைக்கிருந்த 'மானம்' பாரதூரமான போட்டியின்றித் தொடர்ந்து நிலவிற்று.

இனி, பதினெட்டாம் நூற்றாண்டிலே ஆசியக் கதைகள் ஆங்கில நாடக வரங் கிலே மதிப்புப் பெற்றமை, கிழக்குலக நாகரிகச் சார்பு இங்கிலாந்தில் இடம் பெற்றவாற்றை எடுத்துக் காட்டும் ஒரு சான்றுக்வளது. பதினெட்டாம் நூற் றாண்டிலே குணபுலத்துவிடயங்கள் பற்றி 136 நாடகங்கள் வரை நூல் வடிவிற் பிரசுரிக்கப்பட்டன; அன்றேல், நடிக்கப்பட்டனவென்று எழுத்தாளனொருவன் குறிப்பிட்டுள்ளான்.

அதே காலத்தில், இத்தகைய கிழக்குலக விடயங்களைப் பொருளாகக்கொண்டு, பிரெஞ்சு நாடக வரங்குகளிலும் நாடகங்கள் நடிக்கப்பட்டன. கொன்பியூசியசின் ஒழுக்காற்றுப் போதனைகளை ஐந்து அங்கங்களிலே விளக்கும் வகையில் வொல் தேர் எழுதிய 'ஓபலீன் த சீனே' எனும் நாடகமானது 'சாவோநாட்டு அனுதை' எனும் சீன நாடகத்தின் மொழிபெயர்ப்பைத் தழுவியமைந்ததே. அச் சீன நாடகத்தை மொழிபெயர்த்தோன் பிரேமாரசு என்பான். இந்நாடகக் கதை ஐரோப்பாவிற் பெரிதும் போற்றப்பட்டதோடு, அதை அடிப்படையாகக் கொண்ட மூவேறு தழுவல்கள் ஆங்கில மொழியிலே தோன்றின.

நோல் எனுமிடத்திலே குணபுலத்துச் சூழ்நிலை நிலவியவாற்றைத் திருவாட்டி சக்வில்—வெசுற்று விவரித்தாங்கு இங்கு எடுத்துக்கூறி, இங்கிலாந்திற் காணப் பட்ட குணபுலத்துச் செல்வாக்கின் இச்சார்பினை முடிப்பாம்.

'ஒரு பகோடாவை நினைவூட்டும் மணிக்கூட்டுக் கோபுரம் புதிதாக நிருமாணிக் கப்பட்ட காலம் அது. அந்நாளில், கவிஞனுடைய வரவேற்பறையிலே உரோசா வண்ணமும் பொன்னவிர் நிறமுங் கலந்த பெருத்திரை கதிரவனொளியிலே புத்

தொளி வீசிப் பிரகாசித்தது; சோழமண்டலத்துக் கவினுறு பெட்டகங்கள் விற்றைப் பொருளாகப் பாவிக்கப்பட்டன. கையிலே விசிறி பிடித்து, செவ்வண்ணச் சப்பாத்தின் மூற்புறம் மேலங்கிக்குக் கீழே வெளிப்பட்டுத் தோன்ற, குதிக்கால் தரையிற்படக் குந்தியிருக்கும் நிலையில் ஒரு சீனச் சிறுவனைச் சித்திரிப்பதாய்ச் சேர் யொசுவா வரைந்த ஓவியம் ஒருபுறத்தில் மாட்டப்பட்டிருந்தது. அக்காலத்தில், காப்பிரிச் சிறுவனை.....வைத்திருப்பதிலும் சீனச் சிறுவனை..... வைத்திருப்பதே நாகரிகமாகக் கருதப்பட்டது.[1]

1. Knole and the Sackvilles, pp. 186-7.

அதிகாரம் 2

ஐரோப்பியச் சிந்தனையிற் குணபுலத்துச் செல்வாக்கு

அற்புதமான கலைப்படைப்புக்களையும் சுகபோகப் பொருள்களையும் பற்றிக் கூறிய பின்னர், ஐரோப்பாவின் உள்ளத்திலும் சிந்தனைப் போக்கிலும் ஆசியா செலுத்திய செல்வாக்கினை இப்போது ஆராய்வோம். இங்கும், பதினெட்டாம் நூற்றாண்டுச் சீனமே முதன்மையான இடம் வகிக்கின்றது. ஐரோப்பியச் சிந்தனையாளரைச் சீனம் நெடுங்காலமாகக் கவர்ந்து வந்துளது. பீக்கிங்கிலிருந்து யேசுதர் அனுப்பிய செய்திகள் கேட்டு, அவர்களுடைய ஆர்வம் மேலும் பெருகிற்று. பெயிரே லா கொந்தே எழுதிய சீன வரலாறு ஐரோப்பிய அறிஞரின் ஆர்வத்தைத் தூண்டிவிட்டது. சீனத்திலே வாழ்ந்து சீனத்தைப்பற்றி அந்த ஆதி நாளில் ஐரோப்பியர் விடயமறிந்தோராய், நடுநிலை கோடாதும், ஓரளவு கண்ணோட்டத்தோடும் எழுதிவந்தனர். பதினேழாம் நூற்றாண்டின் பின்னரைக் கூற்றிலே, சீனநாட்டுத் தொல்லருநூல்களின் மொழிபெயர்ப்புக்கள் ஏராளமாக ஐரோப்பாவிலே தோன்றத் தலைப்பட்டன. தா இசுவேயி ன் நூலை மொழி பெயர்த்து இக்னேசியசு தா காசுற்ரு என்பான் 'சப்பியெந்தியா சினிக்கா' எனும் பெயரில் 1662 இல் வெளியிட்டான். சீனத் தொல்லருநூல்கள் நான்கனுள் ஒன்றுன 'சுங்கு யுங்கு' என்பதனைப் புரொசுப்பர் இந்தோசெற்ரு என்பான் மொழிபெயர்த்து, கொன்பியூனிசியசின் வாழ்க்கை வரலாற்றை இலத்தினிலும் பிரெஞ்சிலும் எழுதி அனுபந்தமாக இணைத்து 'சீனரின் அரசியலும் ஒழுக்கவியலும்' எனும் பொதுப்பெயரில் 1673 இற் பிரசுரித்தான். சீனப் பேரரசின் சமூக ஒழுக்க நிலைமைகளையும் அரசியல் நிலைவரத்தையும் ஐரோப்பியச் சிந்தனையாளர் விளங்குதற் கேற்றவகையிற் பதினெட்டாம் நூற்றாண்டிலே பெருந் தொகையான இலக்கியம் மேலுடுகளில், அவற்றுளுங் குறிப்பாகப் பிரான்சில், வளர்ச்சியடைந்தது. அந்நூற்றாண்டின் இறுதியளவில், கொன்பியூசியசின் நூல்களை யேசுதர் கற்றுணர்ந்து மேலுடுகளிலும் பரப்பினர். 'ஒழுக்கத் தத்துவத்தையும் அரசியற்றத்துவத்தையுங் கற்றுத் துறைபோய சான்ரோன்' எனவும் 'ஞானியெனவும்' கொன்பியூசியசை யேசுதர் ஒருவர் பாராட்டினராம்.

கொன்பியூசியசையும் அவர்தம் போதனைகளையும் இவ்வாறு யேசுதர் ஏத்திக் கூறியபோது, சுயநலமும் அவர்களை ஊக்கிற்று என்பதை நாம் நினைவிற் கொள்ளவேண்டும். 'கிரியைகள்' பற்றிய இகலாட்டு நிகழ்ந்தகாலை, கடவுளால் அருளிச் செய்யப்பட்டனவே கொன்பியூசியக் கோட்பாடுகள் என்பதும், 'நோவாவின் மைந்தரிடமிருந்தே' அவை சீனத்துக்கு வந்தனவென்பதும் யேசுதரின் சித்தாந்தமாயின. சீனவழமைகளைத் தழுவி யொழுகியதற்கு, இவ்வாறுகவே அன்னர் நியாயங்காட்டினர். அன்னருடைய நோக்கம் யாதாயினும், பதினெட்டாம் நூற்றாண்டிலே நிகழ்ந்த பெரும் அரசியல் விவாதத்தில், மானியவகுப்பாரின் சிறப்புரிமைகளுக்கு மாறுக, யேசுதர் மொழிந்த இச்சான்றுகளைத் தத்

துவஞாலிகள் மேற்கோளாக எடுத்துக் காட்டினர். உலகிலே மிகப் பெரியதும் மிகப் பழையதும் குடித்தொகை மிக்கதுமான இச்சீனச் சமுதாயம், உறுதிப் பாடு மிக்கதாய் இருந்தக்கண்ணும், முற்போக்குடையதாய்ப் பரம்பரையான உயர்குடிவகுப்பொன்று இலதாய் விளங்கிற்று. இலா கொந்தே என்பான் 'சீனரின் கொள்கைபும் அரசாட்சியும்' எனும் நிருபத்தை எழுதியபோது இவ்விடயத்தை அழுத்திக் கூறினன். 'பரம்பரையாக வரும் பிரபுவர்க்கம் ஆங்கு எக்காலத்துமே இருந்ததில்லே. மக்களிடையே, உத்தியோகப்பதவியால் வரும் பேதமொன்றைத் தவிரத் தகைமைபற்றியெழும் பேதங்களும் இருக்கவில்லே. இவ்வழி, கொன்பியூசியசின் குடும்பத்தைத் தவிர, இராச்சியம் முழுவதும் ஆள்வோராகவும் ஆளப்படுவோராகவுமே வகுக்கப்பட்டுளது..... ஒரு மாகாணத்தின் ஆள்பதியோ பதிலிராயனே இறந்துபடுங் காலத்தில், அவர்தம் மைந்தரும் பிறரைப் போலவே தம் மேம்பாட்டுக்கு உழைத்தல் வேண்டும். அன்னர் தம் தந்தையரின் விவேகத்தையோ குணநலத்தையோ பெற்றிலராயின், அவர் பெயரைத் தாங்குவதால் (அப்பெயர் எத்துணை பிரசித்திபெற்றதாயினும்) அன்னர்க்குத் தகைமை யாதும் ஏற்பட்டுவிடாது'. பரம்பரையாக ஆதிக்கஞ் செலுத்தி வந்த பிரபுவர்க்கத்தாரின் சிறப்புரிமைகளுக்குமாறுக மாபெரும் போராட்டில் ஈடுபட்டிருந்த வொல்தேர் போன்ரூர்க்கு, இத்தகைய புதுமைக் கருத்தைக் கண்டறிந்தமை பேருதவியாயிற்று என்று சொல்லலும் வேண்டுமோ? ஒட்பமான ஆட்சிமுறைக்குச் சீனமே சிறந்த உதாரணமாயது. செம்மையாக அறியப்படாது சேய்மையில் இருந்தமையாலே, சீனநாட்டு வல்லாட்சியின் உண்மைச் சொரூபம், இந்த ஒள்ளிய வல்லாட்சி பற்றிய அக்கொள்கைக்குப் பங்கம் விளைத்திலது. அன்றியும், பரம்பரையான உயர்குடி வகுப்பின் சுயநலத்தாற் பாதிக்கப்படாத ஒள்ளிய வல்லாட்சிக்கு உவந்த ஓர் உதாரணமாகத் திகழும் பெருமை, காங்கு இசியும் சியென் லுங்ரும் ஆட்சிசெய்த அக்காலப்பகுதிக்குப் பல்லாற்ருனும் உண்டே. ஆட்சிக் கலேயில், மறுக்கவொண்ணு வெற்றியைச் சீனர் எய்திவிட்டனரென்றே வொல்தேரும் அவன் போன்ரூர் பிறரும் கருதினர். 'ஒழுக்கவியலே அவர்கள் செம்மைப்படுத்திவிட்டனர்' என்று வொல்தேர் கழறினர். பகுத்தறிவுக்கியைந்த கொன்பியூசிய மதமே நாகரிகமான மனிதர்க்கேற்ற செம்மையான தத்துவமென வொல்தேர் போன்ரூர்க்குப் பட்டது.

இவ்விடயத்தில் முதன்முதலாக வழிகாட்டியவன் இலேப்னிற்சு என்பான். பீக்கிங்கு நகரிலே சிறிது காலம் மிசனரிவேலேயில் ஈடுபட்டபின் திரும்பிய வண. பிதா கிரிமோல்டியின் நட்பு, இலேப்னிற்சுக்கு 1689 இற் கிட்டியது. அதற்கு முன்னமே மொழிபெயர்ப்புக்கள் வாயிலாகச் சீனக் கருத்துக்களே அவன் ஓளவு அறிந்திருந்தான். சீன அரசியலின் தாற்பரியமென அவன் கருதிய ஒழுக்கமுறையில் அவனுக்கிருந்த ஆர்வமும் ஈடுபாடும், 'நொலிசிமா சினிக்கா' எனும் நூலிற்கு அவன் எழுதிய முகவுரையிலே வரையாது வெளிப்பட்டன. 'எமது நிலேவரத்னதக் கண்ணுறும்போதும், ஒழுக்கநிலே அளவுகடந்து இழிந்து விட்டவாற்றை உன்னிப்பார்க்கும்போதும், கடவுளால் அருளிச்செய்யப்பட்ட சமயநெறியைச் சீனர்க்கு அறிவுறுத்தற்காக மிசனரிமாரை அங்கு அனுப்புவது போன்று, இயற்

கைச் சமயநெறியை எமக்குப் போதித்தற்காகச் சீன மிசனரிமாரை இங்கு அனுப்புதல் வேண்டுமென நான் சிலவேளை யோசிப்பதுண்டு'. ஐரோப்பாவுக்குஞ் சீனத்துக்குமிடையே நாகரிகங் கலந்து பரிமாறுதல் வேண்டுமென அயராது உழைத்தவன் இலேப்னிற்சு.

வொல்தேர் காலத்தளவில், மக்கள் தம்வலதாகவே சீனம்பற்றித் தக்க முடிபு கொள்ளுதற்கு ஏற்றவகையிற் சீனத்தைப் பற்றிய செய்திகள் பெற்றனர். சீனர்க்குச் சார்பான கோட்டிக்கு வொல்தேரே தலைவனுயிருந்தான். அவன் எழுதிய எசை சுர் லா மோர்சு[1] (1760) எனுங் கட்டுரையில், புதிய்தோர் சமுதாயத்தையும் புதியதோர் தார்மிக உலகையும் தத்துவஞானிகள் 'சீனநாட்டிலே கண்டு கொண்டார்கள் எனக்கூறினன். அவனுக்குக் கொன்பியூசியசு குறைவற நிறைந்த ஒரு தத்துவஞானியாகவும் தீர்க்க தரிசியாகவும் அறிஞனுகவுங் காட்சியளித்தான். கொன்பியூசியசின் தத்துவபோதனைகளில், 'அற்புதங்களைப் போதிக்காதது' நகைக்கத்தக்க ஒட்டுவமைகளிற் பேசாததுமான—அறத்தையே இலட்சியமாகக்கொண்ட—அதிதூய ஒழுக்கத்தை வொல்தேர் கண்டான். இவையெல்லாம் கிறித்தவ மதத்துக்கு மாருக ஏவப்பட்ட கண்டனக் கணைகளே யென்பது கவனிக்கத்தக்கது. எல்லோரும் பின்பற்றக்கூடிய சிறந்ததோர் உதாரணமாக அவன் சீனத்தை எத்திக கூறினன். 'இத்தகைய உதாரணங்கள் பற்றி ஐரோப்பிய மன்னர் கேட்கும்போது, அவர்கள் யாதுசெய்தல் வேண்டும்? வியந்து நாணித்தழுவி நடப்பதே அவர்கள் செய்யத்தக்கது' என்றவன் கழறினன்.

அறிவுக்களஞ்சிய இயக்கத்தைச் சேர்ந்த தீதரோவும் எல்வெற்றியசும் பிற தத்துவஞானிகளும் இவ்வாறே சீனத்தின் நாகரிகத்தாலும் பண்பாட்டாலும் பெரிதுங் கவரப்பட்டனர். ஆர்வமிக்க யேசுதர் அனுப்பிய சமாச்சாரங்களுக்கு இயன்றவரை வாய்ப்பாக விளக்கங் கொடுத்து, அளவிறந்த சிறப்புரிமைகளை அனுபவித்து வந்த பிரபுவர்க்கத்தையும் திருச்சபையையும் அரணுகக் கொண்டிருந்த ஐரோப்பியச் சமுதாயத்தைச் சாடுதற்கு வேண்டிய ஆணித்தரமான வாதங்களைத் தாம் கற்ற கேட்ட அச்செய்திகளிலிருந்து அன்னர் வரையாது பெற்றனர். ஐரோப்பியச் சமுதாயத்தின் இருதூண்களெனக் கருதத்தக்க விழுமியோர் திருச்சபையார் எனுமிருதிறத்தாருள், பின்னையோர் சிந்தனைச் சுதந்திரத்துக்கு மாருகத் தம்பெரும் அதிகாரத்தைப் பயன்படுத்தினர் என்பது கண்கூடு. அன்னர் தம் எதிரிகளுக்கு மாருகப் பிரயோகித்தற்கு வேண்டிய அழிவாயுதங்களைச் சீனமென்னுங் களஞ்சியத்திலிருந்து வேண்டிய மட்டும் பெற்றனர். அக்களஞ்சியத்துக்கு வழிகாட்டியோர் அவ்வெதிரிகளேயென்பது கவனிக்கத்தக்கது.

சீனம்பற்றிய புத்தறிவை ஐரோப்பாவிற் பரப்பியோர் கத்தோலிக்க மிசனரிமாரே. அன்றியும், சீன தத்துவஞானத்தின் மேல் எழுந்த ஆர்வமானது, மேனுட்டுக் கல்விக்கோட்டங்களுள்ளே 'அத்தியந்த பரிசுத்த' பீடமெனக்

[1] Essai sur les moeurs.

கொள்ளப்பட்ட பாரிசுப் பல்கலைக்கழகத்துச் சமயபீடத்திலும் ஊடுருவிப் பரந்தது. கிறித்தவரல்லாத சீனரின் சமுதாயத்தை யேசுதர் புகழ்ந்து பாராட்டினராக, அப்பாராட்டையே வொல்தேரும் அவன்றன் நண்பரும் திருச்சபைக் கெதிராய் வெகு வாய்ப்பாகத் திருப்பிவிட்டனர். 'திருச்சபையை யன்றி ஒழுக்கமுறைகளையே அடிப்படையாகக் கொண்ட சமுதாயம்; சிறப்புரிமை பெற்ற ஒரு வகுப்பாரையுஞ் சாராத அரசாங்கம்; அறிவுக்குச் சிறப்பிடமளித்த உறுதிப்பயன் வரிசை; கல்வியறிவு மிக்காரென்ற காரணத்தால் மதிவல்லாரெனக் கருதப்பட்ட மேன்மக்களிடத்தே அதிகாரத்தை ஒப்படைத்த ஆட்சிமுறை; இராணுவத்தை உயர்த்தி வைக்காத அரசியல் அமைப்பு—இவ்வாறுக ஐரோப்பாவிற் காணப்படாத அத்தனை நற்பண்புகளையும் ஐரோப்பியத் தாராண்மைச் சிந்தனையாளர் சீனத்திலே கண்டனர். கண்டு, அதனையே ஐரோப்பிய முறைக்கெதிரான வலிய நியாயமாகவும், தழுவிக் கொள்ளத்தக்க உதாரணமாகவும் ஒருங்கே கொண்டனர்.

ஆயினும், ஆர்வமிக்க இந்தத் சீனபிமானத்துக்குக் கடுமெதிர்ப்பு இருந்திலதென்று நாம் கருதிவிடலாகாது. இந்தச் 'சீனவியக்கம்' ஐரோப்பாவிற் பரவத் தொடங்கிய ஆதிநாளிலேயே, பெனிலன் என்பான் 'இறந்தாரிடை சம்வாதம்' எனும் நூல்வாயிலாக வெளிப்படையாய் அதனை எதிர்த்தான். அந்நூலிற் சோக்கிரதரும் கொன்பியூசியசும் எதிர்கொண்டு சம்வாதஞ் செய்கின்றனர். சீனநாகரிகம் ஊங்கிய மேம்பாடுடைத்து என நாட்ட முற்படுவது எத்துணை மடமையென்பதைச் சோக்கிரதர் எளிதாக (நூலாசிரியற்கே திருத்தியளிக்கும் வகையில்) அம்பலப்படுத்திவிடுகிறார். பிற்றைநாளிலே இக்கருத்தை ஆதரிக்க முற்பட்டோருள் ஒருவன் அறிஞன் உரூசோ. வொல்தேரும் அவன்றன் கோட்டியாரும் ஆர்வத்தோடு எடுத்துரைத்த சீனக்கோட்பாடுகளிலே போற்றத்தக்கது யாதும் இல்லையென்பதே அவன் கருத்து. 'பண்பற்ற, அறிவிலிகளான மிலேச்சர்க்கு அடிமைப்படுவதினின்றும் அம்மண்டலத்தைக் காத்தற்கு அதன் அமைச்சன்மாரின் ஆற்றலும் அதன் சட்டங்களிற் பொதிந்துளதாகக் கூறப்படும் மதிநுட்பமும் வலியற்றவாயின், அந்நாட்டு அறிவாளிகளால் அது பெற்ற பயன் யாதோ?' என்றவாறுக உரூசோ வினவினன். சீனப் பூங்காவின் அழகு அவனுக்குப் புலப்படவில்லை.

இயற்கைவாதிகள் என்போர்மீது சீனஞ் செலுத்திய செல்வாக்கு நியாயப்படியானது; குன்றுத நீர்மையது. இச்சிந்தனை மரபுக்கு ஆதிகருத்தாவான குவெசுனே சீனப்பனுவல்களிலிருந்தே பெரும்பாலும் ஊற்றம் பெற்றார். அவன் எழுதிய 'தேபிளோ இக்கொனிமிக்கே'[1] என்பது போகி எனும் சீன அறிஞன் மேலேற்றிக் கூறப்படும் ஒரு கோட்பாட்டைத் தழுவி மிகச் சாதுரியமாக எழுதப்பட்ட ஒரு கணித நூலே என்பர். நிலபுலம் படைத்த பிரபுக்கள் அனுபவித்துவந்த வரிவிலக்கைத் தாக்குவதே குவெசுனேயின் நோக்கம். சீனநாட்டிலே, அரசுவிதிக்கும் வரிகளிலிருந்து யார்க்குமே விலக்களிக்கப்படவில்லை.

[1] **Tableaux Economiques.**

அன்றியும், பிற ஆசிய நாடுகள் அனைத்திலும் போன்று, சீனத்திலும் நிலந்தரும் விளைவுக்கேற்பவே வரி கணித்து அறவிடப்பட்டது. ஆதலின் சீனத்தை இங்கு முன்மாதிரியாக எடுத்துக்காட்டல் எளிதாயிற்று. சீனப்பனுவல்களிலிருந்தே குவெசுனே ஊற்றம் பெற்றான் என்பது மறுக்கப்பட்டிலது; மற்று, அவனுடைய சீடர் அவ்வுண்மையை அழுத்திக் கூறுவதிற் பெருமையே கொண்டனர். 'மனித குல நண்பன்' எனத் தானே தன்னைக்கூறிக்கொண்ட மூத்தோன் மிரபோ தன் குருவின் ஈமச்சடங்கின்போது நிகழ்த்திய உரையில் வருமாறு கூறினான்: 'விண்ணுலகத்தினின்றும் பெற்றுப் பின்னர் அறியாமையாலும் காமக்குரோதாதிகளாலும் மங்கிவிட்ட அந்த ஆதியொளியை, ஆதியழகை, மனித வியற்கைக்கு மீட்டுக் கொடுப்பதே கொன்பூசியசின் போதனைகளுடைய இலட்சியமாகும். ஆதலின் அவன் விண்ணுலகத்திலுள்ள கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தொழுகுமாறு தன் நாட்டவரை வேண்டிக்கொண்டான். 'செயலுக்கு ஏதுவாக உணர்ச்சியை எஞ்ஞான்றுமே கொள்ளாது, அதனைப் பகுத்தறிவுக்கு அடங்கச் செய்தல் வேண்டும். சமயவொழுக்கமெனும் இந்தச் சூடாமணியின் அழகைக் கூட்டுதற்கு நாம் செய்யத்தக்கது யாதுமில்லை. ஆயினும், செய்து முடிக்காத இன்றியமையாப் பணியொன்றிருந்தது. புவிமடந்தையின் நெற்றியில் அதனைச் சூட்டுவதே அப்பணி—எங்கள் குருவே அப்பணியைச் செய்தார்'. கொன்பியூசியசின் சித்தாந்த மரபுக்கு உரியவனும் அதனை ஏற்றவனும் குவெசுனே என்பர். பொருளியற் கருத்துக்களிலும் கல்விக் கோட்பாடுகளிலும் இயற்கைவாதிகளின் செல்வாக்கு ஆழமானது. இவ்வகையில், இலேப்னிற்சும், வொல்தேரும் பிறரும் கொன்பியூசியசின் ஒழுக்கத்தத்துவங்களிற் கொண்ட அபிமானத்தால் ஏற்பட்ட செல்வாக்கினும் பார்க்க, இயற்கைவாதிகள்வாயிலாகச் சீனஞ் செலுத்திய செல்வாக்குக் கூடிய பயனளித்தது.

பிரெஞ்சுப் புரட்சி மூண்டதோடு, தத்துவஞானிகளின் செல்வாக்கும் இயற்கைவாதிகளின் செல்வாக்கும் ஒருங்கே மறைந்தொழிந்தன. பதினெட்டாம் நூற்றாண்டில் அறிவாளிகளிடையே சீனத்துக்கிருந்த பெருமதிப்பும் அவ்வளவில் அற்றுப்போயது. பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஆதிக்க மமதையும் அதனோடிணைந்த மேம்பாட்டுணர்ச்சியும் மேலிட்டு நின்ற ஐரோப்பாவானது சீனத்தையோ இந்தியாவையோ பொருட்படுத்தவில்லை. ஆயினும் புதிய சத்திகள் இயங்கத் தொடங்கின. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியளவில் அந்நாள்வரையும் மறைபொருளாயிருந்த சங்கதமென்னும் அறிவுக்களஞ்சியத்தின் வாயில் ஐரோப்பிய அறிஞர்க்குத் திறந்து வழிவிட்டது. சாள்சு வெல்கின்சு பகவற்கீதையை மொழிபெயர்த்து, உவாறன் ஏத்திங்சின் முகவுரையோடு வெளியிட்டான் (1785); சாகுந்தல நாடகத்தைச் சேர். வில்லியம் யோன்சு மொழிபெயர்த்து 1789 இல் வெளியிட்டான். இம்மொழிபெயர்ப்புக்கள் ஆசிய-ஐரோப்பியத் தொடர்பிலே ஒரு புதிய திருப்பத்தைக் குறிப்பன. அடுத்த சிலவாண்டுக் காலத்தின்போது, மேனாடுகளிலே சங்கதமொழி ஆர்வத்தோடு பயிலப்பட்டது. உபநிடதங்கள் மொழிபெயர்ப்பு வாயிலாக மேனாட்டை அடைந்து, சொப்பனேவரும் நீற்சேயும் உருவாக்கிய தத்துவ போதனைகளில் ஆழ்ந்த செல்வாக்குச்

செலுத்தின. மேலும், சங்கத மொழியைப் பயில மூற்பட்டோர் மொழியியல் ஆராய்ச்சியிற் புகுந்தபோது, முன்னம் அறியா அறிவுத்துறைகள் பல வெளிப்பட்டன. அவ்வழி உலக மக்களின் மனோபாவத்திலும் மாற்றங்கள் உண்டாயின. சங்கதமும் பாரசீகமும் கிரேக்கமும் இலத்தினும் ஒருவயிற்றில் உதித்த ஓரினமொழிகளேயென்ற புத்தறிவும், ஆரியவினங்கள் அனைத்துக்கும் ஒரு பொதுவான மரபு உண்டென்ற புத்துணர்வும், பத்தொன்பதாம் நூற்றாண்டிச் சமுதாயச் சிந்தனைப் போக்கிலே தனிப்பேராதிக்கஞ் செலுத்தின. அக்கொள்கை பிற்றைநாளில், இனபேதத்தை ஆதரித்தோரின் கையிலகப்பட்டுத் திசைதடுமாறித் தீங்குபயந்தது என்பதனால் அதன் சிறப்புக் குன்றிவிடாது.[1]

பகவற்கீதையும் உபநிடதங்களும் பௌத்தசமய ஆகமங்களும் போன்ற கிழக்குலகச் சமயச் சாத்திரங்கள் மொழிபெயர்க்கப்பட்டதனால், அக்காலத்தில் விளைந்த செல்வாக்கு மிகக் குறுகியதாய், அற்பமானதாய், இருந்தபோதிலும், பிற்றைஞான்று ஐரோப்பிய அறிவாளிகளிடையே வேதாந்தங்களும் குணபுலத்துச் சிந்தனைகள் பிறவும் பரவிச் செல்வாக்கடைதற்கு அம்மொழிபெயர்ப்புக்கள் வழிதிறந்தன. ஆயின், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைக் கூற்றிலே தானும், எமேசனும் தோரோவும் போன்ற சிறந்த சிந்தனையாளரின் தத்துவப் படைப்புக்களிலே வேதாந்தக் கருத்துக்கள் தெளிவாக மிளிர்வதைக் காணலாம். எட்வின் ஆனல்டின் பகவற்கீதை மொழிபெயர்ப்பும், ஆசிய சோதியும், ஐம்பதாண்டு கழிந்தபின்னும் இன்றுவரை மக்களாற் போற்றப்பட்டதோடு, இந்திய சமயக் கருத்துக்களின் செல்வாக்குப் பெருகியவாற்றையும் அறிவுறுத்தி நிற்கின்றன. இருபதாம் நூற்றாண்டின் முன்னரைக் கூற்றிலே, கவிஞர் தாகூரின் 'கீதாஞ்சலி' வெளிப்பட்ட காலமுதலாக, ஐரோப்பியச் சமயவட்டாரங்களில் இந்துசமயக் கருத்துக்கள் தனிச்சிறப்பான ஓரிடத்தைப் பெற்று வந்துள. இவ்வாறு செல்வாக்குப் பெற்றமை பையவே நிகழ்ந்தது—அது காலத்தின் கோலமுமன்று; பழைய கோட்பாடுகளுக்கு மாறுகத் தற்காலிகமாய் எழுந்த எதிர்ப்புணர்ச்சியைக் குறிப்பதுமன்று. புலப்படாவகையில் மெல்லென நிகழ்ந்த கருத்துப் பரிமாற்றமேயாம்.

இக்கருத்துக்களைப் பரப்பிய 'விளையோகத்தரின்' தொண்டும் மறத்தற்கரியது. இந்தியாவைப் பொறுத்தவரை மக்சுமூல்லரும், சீனத்தைப் பொறுத்தவரை கைல்சும் பிறர் பலரும், யப்பானிய விடயங்களைப் பொறுத்தவரை இலப்காடியோ ஏணும் தத்தங்காலத்திலே தம்மளவிற் பெருஞ் செல்வாக்குச் சத்திகளாக விளங்கினர். அந்தமரபு காலப்போக்கிலே குறித்த குறித்த சிறப்பான துறைகளை நாடிச் சென்றாலும், ஐரோப்பியக் கலாச்சார வாழ்க்கையில் இன்றும் முக்கியமான இடம் வகிக்கிறது. உவேலியும் பிறரும் செய்த மொழிபெயர்ப்புக்கள் வாயிலாகச் சீனக்கவிதைப் பண்புகள் ஐரோப்பிய இலக்கிய மரபிற் புகுந்து கலந்துவிட்டன என்பர் எலியட்டு என்னும் ஆங்கிலப் புலவர். இனி,

[1] See Radhakrishnan's Eastern Religions and Western Thought, Oxford, 1940, pp. 247-51.

இந்திய இலக்கியத்தைப் பொறுத்தவரை, அதன் கவிதை மாபு ஆழ்ந்த செல்வாக்கு யாதுஞ் செலுத்தாவிடினும், இந்தியச் சிந்தனைச் செல்வம்பற்றி ஆண்டு தொறும் மேனாட்டிலே வெளியாகும் நூற்றொகையைக் கண்ணுறும்போது, இந்திய நாட்டின் பொன்றாத தத்துவஞானத்திலே மேனாட்டார் கொண்ட தணியா ஆர்வம் புலனாகும்.

ஆசிய உள்ளத்தை—இந்தியர் சீனரின் உள்ளப்பாங்கை—செவ்வனே விளங்கியமையாற் போந்த பிறிதொரு விளைவும் இங்குக் குறிப்பிடத்தக்கது. உறுபயன் உள்ள தெதுவும் ஈசியன் கடலை யண்டியுள்ள நாடுகளிலேயே தோன்றிற்றென்னும் உள்ளக் கிடக்கை, ஐரோப்பிய அறிவாளிகளிடையே நெடுங்காலமாக நிலவி வந்த ஒரு சித்தாந்தமாகும். சமயமும், தத்துவஞானமும், கலையும், இன்னும் விஞ்ஞானமும் அப்புலத்திருந்தே ஆதியிற் றோன்றின வெனுங் கருத்து நிலையுள்றியிருந்தது. சுருங்கக் கூறின், நாகரிகமனைத்துக்கும் கிரேக்க நாட்டிலே தோற்றுவாய் காணுதல் ஒருவழக்கமாகிவிட்டது. குணபுலவாராய்ச்சி தொடங்கிய ஆதிநாளில், ஆசிய நிகழ்ச்சிகளை—அவற்றுளுங் குறிப்பாக இந்திய வரலாற்று நிகழ்ச்சிகளை—கிரேக்க சம்பவங்களோடு பொருந்தவைக்கும் வகையிலே தேதிகுறித்தல் வழக்காயிருந்தது. கிரேக்கரே முற்றுந் தெரிந்த முழு ஞானிகள் என்னும் நம்பிக்கையில் விடாப்பிடியாக ஊன்றி நின்றமையே இத்தகைய வழுப்பட்ட மனப்பான்மைக்குக் காரணம். ஆயின், ஆசிய நாகரிகங்கள் பற்றிய அறிவு வளர வளர, அந்நம்பிக்கையும் மெல்லக் கைவிடப்பட்டது. மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்கு சிறியவும் பெரியவுமான நாடுகள் அனைத்தும் உதவி வந்துள எனும் உண்மையை உணர்ந்துகொண்டதன் விளைவாக, ஐரோப்பிய வுள்ளம் சற்றே விரிவடைந்தமை பெரும் பாக்கியமே.

ஐரோப்பாமீது ஆசியா செலுத்திய செல்வாக்கு—சிந்தனைத் துறையிலேதானும்—முற்றுக நன்மை பயப்பதாகவோ முற்போக்கானதாகவோ இருந்ததெனக் கருதலாகாது. அரசியற் கொள்கையிலும், சட்டக் கொள்கையிலும் பிற்போக்கான ஓரியக்கம் தோன்றுதற்கு அது ஏதுவாக இருந்துளது. அவ்வியக்கம் ஆங்கிலநாட்டிற் செலுத்திய செல்வாக்குச் சிறிதன்று. குடியேற்றநாடுகளிலும் சார்நாடுகளிலும் அரசாட்சியோடு தொடர்புகொண்டதனால் விகாரப்பட்ட அரசியல் அனுபவத்தோடு தாய்நாடு திரும்பிய பலர், வெலிங்தன் முதற் கேர்சன் ஈறுக, பழைமைபோற்றும் பாம்பரையைச் சேர்ந்தனர். இப்பிற்போக்குக் கொள்கையை வகுத்துக் கூறியவன், சேர் என்றி மெயின் என்பான், ஆங்கில அரசியலிலே பெருஞ் செல்வாக்குடையனாயிருந்தான். பண்டைச் சட்டம் பற்றி அவன் எழுதிய பெருநூலில், இந்தியாவிலே அவன் பட்ட அனுபவம் தெளிவாகப் புலப்படுகிறது. புதிய தோரிவாதத்துக்கு ஒரு சித்தாந்தத்தை வகுத்துக் கூறிய யேமிசு தீபன்—பிற்சு தீபனும் அல்பிரெட்டு இலயாலும் பிறரும் ஆசிய நாடுகளில், அனுபவப்பட்ட அரசியல்வாதிகளேயாவர். ஆசியாவிலே வர்த்தகத்துறையிலும் நிருவாகத்துறையிலும் மிசனரி வேலையிலும் ஈடுபட்டு அனுபவம் பெற்ற பலர், மனித சமத்துவத்திலும் மக்களாட்சியிலும் நம்பிக்கையிழக்கத் தலைப்பட்டனர். அத்தகையாரின் தொகை பெருகுவதாயிற்று. அவர்க

ளுடைய சேர்க்கையால் தாய்நாட்டின் குணசுபாவங்கள் மாற்றமடைந்தன என்பதற்கையமில்லை.

ஆசியாவும் ஐரோப்பாவும் சந்தித்ததனால் ஏற்பட்ட இறுதி விளைவொன்று இங்குக் குறிப்பிடத்தக்கது. அதுவே நிறவெறியுணர்ச்சி வளர்ந்தமை. பதினெட்டாம் நூற்றாண்டில், இந்தியாவிலாயினும் சீனத்திலாயினும் ஐரோப்பியரிடையே இந்த நிறபேதவுணர்ச்சி பெரும்பான்மையும் இருந்திலதென்றே அறிஞர் பலர் குறிப்பிட்டுள்ளனர். அந்நூற்றாண்டில், சீனரிடத்து ஐரோப்பியர் மதிப்புணர்ச்சியே கொண்டிருந்தனர். இனி இந்தியாவிலோ, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைக் கூற்றிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்கூற்றிலும் ஐரோப்பியரின் சிறப்பியல்பாகக் காணப்பட்ட அந்த இனக்கர்வம் அக்காலத்திலே தோன்றிற்றிலது.[1] இவ்வுணர்ச்சி வளர்ந்தமைக்குக் காரணங்கள் பலவாகலாம். ஆயினும், ஐரோப்பியர் செலுத்தி வந்த அரசியலாதிக்கமும், அவ்வாதிக்கம் தமது உரிமையே யென்ற உணர்ச்சியும் வெளிப்படையான காரணங்கள் போலத் தோன்றுகின்றன. சுதந்திரத்தை ஒருபோதும் இழக்காது தப்பிய யப்பானும் சீயாமும் போன்ற நாடுகளில் நிறவுணர்ச்சி பரக்கக் காணப்படாமை அதற்கு அரசியலே தலையாய தோற்றுவாயென்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

1. ஆங்கில ஆசிரியனொருவன் இந்தியாவில் வாழ்ந்த ஆங்கில வணிகர்பற்றி வருமாறு கூறினன் : "அவர்கள் ஆசியமக்களிடையே பன்னெடுங்காலம் வாழ்ந்து விட்டபடியால், நாகரிகமே சமயமே என்ற உயரிய உணர்ச்சிகளே மறந்து, ஆசியரின் மிக இழிந்த குணங்களையே பயின்று கொண்டார்கள்."

முடிவு

ஆசியாமீது கடல்வழியாதிக்கம் நிலவியகாலமானது வசுக்கோ நு காமாவின் வருகையோடு தொடங்கி, மேனுட்டுக் கடற்படைகள் ஆசியாவிலே தம் வசத் திருந்த தளங்களிலிருந்து புறப்பட்டதோடு முடிவடைகின்றது. மனிதகுல வளர்ச்சிக்கு அதிமுக்கியமான ஒரு சகாப்தத்தை இக்கால வெல்லே குறிக்கின் றது. ஐரோப்பாவோடு 450 ஆண்டுக்காலமாகத் தொடர்பு பூண்டிருந்த ஆசிய நாடுகளிலே அதனுல் நேரசுக விளைந்த மாற்றங்களும், அதன் வழித்தோன்றிய சத்திகளும், அவ்வாசிய நாடுகளின் வாழ்க்கையிலே ஒவ்வொரு துறையிலும் சென்று சென்று ஒரு பெரும் மாறுதலே உண்டாக்கியுள்ளன.

பலதிறப்பட்ட இச்செல்வாக்குக்களே எதிர்காலத்திலே ஆசியா எவ்வாறு பயன் படுத்துமென்று யாருமே எதிர்வுகூண முடியாது. பல்வேறு ஆசிய நாடுகளும் தத்தம் இனப்பண்புகள், வரலாறுகள், சமுதாய மரபுகள் எனுமிவற்றின் சார் பிலே, தாம் பட்ட புதிய அனுபவங்களே எவ்வாறு புடமிட்டுத் தம்மயமாக்கிப் பயன்படுத்தப்போகின்றன என்பதையும் யாருமே எதிர்வுகூண முடியாது. எனி னும், ஏற்கவே அந்நாடுகளில் நடந்தேறிய மாபெரிய மாற்றங்களேயும், பண்டைச் சமுதாயங்களே உருப்படியாக மாற்றியமைத்த கொந்தளிப்புக்களேயும், அவற் றின் மனப்பான்மையைப் புதிய வழிகளிற் செலுத்திய கருத்துக்களேயும் கவனிக்கும்போது, அவையெல்லாம் பழைய மரபினின்றும் ஒரு பெருந் திருப் பத்தைக் குறிப்பனவாதலாற் புரட்சிகரமானவையென்பது தெற்றெனப் புலப் படும். ஆசிய அரசுகள்மீது ஐரோப்பா ஆட்சி செலுத்திய காலமானது அவற் றின் வரலாற்றிலே ஒரு பிரிநிலேயைக் காட்டுவதாகும். எதிர்ப்பதாலும் தழுவிக் கோடலாலும் அவை புத்தூக்கம் பெற்று, புதிய கருத்துக்களுக்கமைய இசைந் தொழுகி, தாம் இழந்த சுதந்திரத்தையும் வலியையும் அவ்வாறுகவே படிப்படி யாக அவை மீட்டும் பெறுதல் இயல்வதாயிற்று.

கிழக்குநோக்கி ஐரோப்பாவின் படர்ச்சி சிலுவைப் போராகவே தொடங்கிய வாற்றை முன்னர்க் கண்டோம். மாபெருஞ் சிலுவைப் போர்களுள் ஒன்றன் தொடக்கமாகும் அது—அதனே நாம் எட்டாவது சிலுவைப்போர் என்போம். இவ்வியக்கத்தின் தலேமைப் பதவியைக் கடலோடி என்றியைத் தொடர்ந்து பெற்றோர், பாக்கியசாலி மனுவெலும் மூன்றும் யோவாவோவும் மாத்திரமல்லர். மெய்ச் சிலுவை வீரராகத் தம்மைக் கருதிக்கொண்ட அல்பொன்சோ அல்பு கேர்க்கியும் போத்துக்கேயப் படர்ச்சிக்குத் தலேமைவகித்த தலேவன்மார் பிற ரும் அவ்வரிசையைச் சேர்ந்தோரே. சோனகனுக்குக் கொடுத்த அடியொவ் வொன்றும், அவர் தம கருத்திலே, கிறித்தவ உலகிற்குக் கிடைத்த வெற்றியா கும். அல்புகேர்க்கி மலாக்காவிலே தன் படைவீரர்க்குத் தெளிவாக விளக்கியது போன்று, வாசனேத் திரவிய வர்த்தகத்தைத் தாக்குதல் முசிலிம் நாடுகளின் செல்வச் செழிப்பைத் தாக்குவது போலாகும். பொருளாதாரப் போராட்டத் தின் இந்த அமிசத்தை முசிலிம் வல்லரசுகளும் போத்துக்கலும் நன்றே விளங்கி

யிருந்தன. இந்தச் சிலுவைப் போராட்டமனப்பான்மையால் முக்கியமான சில விளைவுகள் தோன்றின. இசுலாமியரல்லாத மக்களோடும் மன்னரோடும் போத்துக்கேயர் பொதுவாக நல்லுறவு கொள்ளக் கூடியவராயிருந்தனர்.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தளவிலே, ஐரோப்பியப் படர்ச்சியில் முன்னங் காணப்பட்ட சிலுவைப் போராட்டச்சார்பும் இசுலாமிய வெதிர்ப்புப் போக்கும் தம் வலியிழந்தன. அதற்கு முக்கியமான காரணங்கள் இரண்டுண்டு. முதலாவதாக, கிறித்தவ உலகின் ஒற்றுமையைப் புரட்டசுத்தாந்த மதத்தின் எழுச்சி தகர்த்துவிட்டது. அதனால், முன்னம் இசுலாமுக்கெதிராக உய்க்கப் பட்ட மதவெறி, இப்போது ஐரோப்பாவிலே அகப்போர் மூளுதற்கு ஏது வாயது. ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாக ஐரோப்பாவுக்கு நாசம் விளைத்து, வெசுபேலியாப் பொருத்தனையோடு முடிவுற்ற சமயப் போர் காரண மாக, இசுலாமிய ஆபத்துப்பற்றிய நினைவு மறைந்து விட்டது. அதன்பின், ஐரோப்பிய வரலாற்றிலே அது ஒரு 'தலையாய தூண்டுகோலாகத்' தொழிற் பட்டிலது. இனி, இலெப்பாந்தோப் போரிலே, கிறித்தவ ஐரோப்பாவின் சார் பாக ஒசுத்திரிய நாட்டுத் தொன் யுவான் துருக்கியரின் கடற்படைவலியை அழித்தமை இரண்டாவது காரணமாகும். அவ்வெற்றியின் பின்னர்—ஒற்றே மன் பேரரசு அப்போதும் வலிமை சான்றதாய் வியன்ஞ நகரவாயில்வரை போர் தொடுத்துச் செல்லவல்லதாய் இருந்தக்கண்ணும்—இசுலாமிய ஆபத்து கொண்டிருந்த அச்சம் அற்றுப்போயது.

கத்தோலிக்க நாடுகளைப் பொறுத்தவரை, சிலுவைப் போராட்டவுணர்ச்சிக் குப் பதிலாக இப்போது மதமாற்றும் உணர்ச்சி தலைதூக்கி நின்றது. புத்தூக்கம் பெற்றெழுந்த கத்தோலிக்க மதமானது மதமாற்றுதற்குக் கிழக்குலகிலே அள விறந்த வாய்ப்புக்களிருப்பதைக் கண்டது—இப் புத்தூக்கத்தைச் சிறப்பாகப் பிரதிபலிப்பதாயிருந்தது அக்காலத்தே தோன்றிய யேசு சங்கம். இந்தச் சமயா பிமானத்தாற் போத்துக்கேய முடியரசு பெரிதும் உந்தப்பட்டது. அந்த அபி மானமே யேசுசங்கத் துறவிகளை முகலாய மாவேந்தன், சீனப் பேரரசன், யப் பானியச் சோகுன் ஆகியோரின் வேத்தவைகளுக்கு இட்டுச் சென்றது. ஆசியக் கடல்களிலே இடச்சரும் ஆங்கிலரும் வந்துற்றகாலை, இந்தச் சமயவீறு சற்றே தணிந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம்வரையும் புரட்டசுத்தாந் தத் திருச்சபைகள் பதிதரை மதமாற்றுவதாகிய திருப்பணியாற் கவரப்பட்டில. மிசனரி வேலையிலே அவை தீவிரமாக இன்னும் இறங்கவில்லை. ஆயின் பத்தொன் பதாம் நூற்றாண்டிலும், முதற்பெரும் போர் வரையும், ஆசிய—ஐரோப்பியத் தொடர்புகளிலே மதமாற்றும் வீறு மீண்டுந் தோன்றுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே, ஐரோப்பிய நாடுகள் தீவிரமாகவும் ஊக்கத்தோடும் திட்டமிட் டும் முயற்சிசெய்த ஒரு துறை உண்டாயின், அது இந்தியாவிலும் சீனத்திலும் அந்நாடுகள் செய்த மிசனரி முயற்சியேயாம். அந்நாடுகளிரண்டிலும் ஐரோப் பியர் செலுத்தி வந்த ஆதிக்கத்துக்கு அனுசரணையாக, ஆன்மிகத் துறையிலும் மதத்துறையிலும் மக்களை அடிப்படுத்தற்கு விரிவான முறையிலே முயற்சி செய் யப்பட்டது. அதனாற் பெற்ற விளைவுகள் மிசனரிமாரைப் பொறுத்தவரை ஏமாற்

றந் தருவனவாயிருந்தக்கண்ணும், ஆசிய நாடுகளின் ஆன்மிக அத்திவாரத்தை இவ்வாறு தாக்கியமை, அம்மக்களின் சமூக சமயச் சீரமைப்பிலே பாரதூரமான விளைவுகளைப் பயந்தது. ஆசியாவின் மீட்சியிலே, இவ்வியக்கத்தால் ஏற்பட்ட விளைவுகளை முன்னமே மதிப்பிட்டோம். ஆசிய நாடுகளின்மீது ஐரோப்பா செலுத்திய செல்வாக்கை மதிப்பிடும்போது, ஐரோப்பியப் படர்ச்சியிலே சமயாபிமானம் இழையோடி நின்றவாற்றையும், அரசாட்சியோடு சம்பந்தப்படாத தொண்டரின் சேவை அதிற் பெரிதும் இடம்பெற்றவாற்றையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டும். அரசியல் ஆக்கிரமிப்பு அரசாங்கமும் சில குழாங்களும் செய்த வேலையாயிருப்ப, வர்த்தகம் கட்டுக்கோப்பான தாபனமுடைய முதலாளிமாரின் உரிமையாயிருப்ப, ஆசிய மக்களுக்கு உறுதிப்பயனளிக்க மேனாட்டு மக்கள் செய்த முயற்சியாகவே மிசனரிவேலையிருந்தது.

ஐரோப்பியப் படர்ச்சியிற் காணப்பட்ட பல அமிசங்களுட் சமயமும் ஒன்றேயாம். ஆதியிலே, வாசனைத்திரவிய வர்த்தகத்திலே முற்றுரிமை நாட்டுவதைச் சமய முயற்சியோடு சமானமாகக் கருதி வந்த போத்துக்கேயருமே பின்னர் வர்த்தகத்துக்கே சமயப்பணியைக் காட்டிலும் உயரிடங் கொடுத்தனர். புரட்டசுத்தாந்த வல்லரசுகளின் வருகையோடு, வர்த்தகமே சிலகாலம் தலையாய நோக்கமாயது. வர்த்தகத் தொடர்புக்கப்பால் இருந்த பிறவகைத் தொடர்பு அற்பமே. ஆசிய ஐரோப்பியத் தொடர்புகள் கடவுள் செயலாக 1748 ஆம் ஆண்டிற் சடுதியாக அற்றுப் போயிருந்தால், இரண்டரை நூற்றாண்டுக் காலமாய்த் தீவிரமாகத் தொடர்ந்த முயற்சியின் பயனைக் காட்டுதற்கு யாதுமே எஞ்சியிருந்திருக்காது. மக்கள் சஞ்சாரமில்லாத கடற்கரைகளை யண்டிச் சில பாழடைந்த கோட்டைகள்; கரையோரப் பிரதேசங்களிலே போத்துக்கேயராற் கட்டப்பட்ட சில தேவாலயங்கள்; சீருஞ் சிறப்புமாக இருந்த ஒரு காலத்தை நினைந்து வருந்தும் கலப்பு மக்களைக் கொண்ட ஒரு சிறு சமூகம்—இத்தன்மைத்தாகவே இந்தியாவினுமே நிலைமை இருந்திருக்கும். வர்த்தகம் முதன்மை பெற்றிருந்த 1619-1758 வரையான காலத்தில், ஆசியாவில் ஐரோப்பியச் செல்வாக்குச் சிறிதே.

ஆயின், வென்றடிப்படுத்திய காலத்தில் (1750-1857) நிலைமை மாறுதலடையத் தொடங்கிற்று. அன்னியர் பெருந்தீங்கிற்கு ஏதுவாகிவிட்டனர். அவர்களை ஒருவாறு 'சரிக்கட்டவேண்டும்' என்றவாறான கருத்தை ஆசியத் தலைவர்கள் கொண்டார்கள். பிரங்கி அமைத்தலினும் படையமைப்பினும் போர்த்தள வாடத்திலுமே ஆசியத் தலைவர்கள் முதற்கவனஞ் செலுத்தியமை வியப்பன்று. ஆதிக்கம் பெற்றிருந்த மக்கள் சிலர் இத்தகைய இராணுவ விடயங்கள்பற்றி அக்கறை கொண்டது ஒருபுறமாக, ஐரோப்பிய நாடுகளின் சிந்தனைசத்தியினும், ஆன்மபலத்தினும் ஆர்வங்கொண்ட பிறர் பலர் இருந்தனர். இந்தியாவிலே இராம மோகன் ராயும் அவர்தம் கோட்டியாரும், யப்பானிலே இரங்கசுசாக் குழாத்தினரும், ஐரோப்பாபற்றி ஆசிய மக்களின் மனப்பான்மை மாறியவாற்றைப் பிரதிபலித்தனர். சீரங்கப்பட்டணத்து யக்கோபின் களரியிலே திப்பு சுலுத்தான் அங்கத்தவனாக இருந்தமை; ஐரோப்பிய அறிவொளியியக்கத் தலைவர்

களோடு இராம் மோகன் கடிதத் தொடர்பு கொண்டமை; இசுப்பெயினிலே தாராண்மைப் புரட்சிவாதிகளுக்கு ஆதரவு காட்டிப் பாராட்டும் வகையிற் கல்கத்தாவிலே பகிரங்கக் கூட்டம் கூடியமை— இவையெல்லாம் அறிவுத்துறையில் ஏற்பட்ட விழிப்பையும், ஆசியாவில் உதயமாகிக் கொண்டிருந்த 'உலகம் ஒரே குலம்' என்ற உணர்ச்சியையும் விளங்க வைக்கும் அறிகுறிகளாயின.

ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமிடையேயுள்ள அறிவியற் றொடர்பை மாற்றிய தனிப்பெருங் காரணியாதெனின், பிரெஞ்சுப் புரட்சியேயாம். ஐரோப்பாவுக்கு வெளியே பிரெஞ்சுப் புரட்சிக்கிருந்த செல்வாக்கை இன்று பலர் அறியார். எயிற்றித்தீவிலே நீகிரோவரையும் மைசூரிலே திப்புவையும் இந்தோனேசியாவிலே இடச்சுத் தீவிரவாதிகளையும் அவ்வியக்கத்தின் அலைகள் தொட்டன. யாவகத்திலே தண்டெயில்சு செய்த சீர்திருத்தங்கள் அதன் நேர்விளைவேயாம். இந்தியாவிலே பெரும் பெரும் பிரதேசங்களை வென்றடிப்படுத்த வெல்சிலி கையாண்ட ஆக்கிரமிப்புப் பூட்கை அதன் மறைமுகமான விளைவே—பிரெஞ்சுப் புரட்சியாளர் பற்றிய அச்சமே அக்கொள்கைக்குத் தூண்டுகோலாயிற்று. பிரெஞ்சுப் புரட்சியின் தத்துவங்களாகிய 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்பவை ஆசியாவெங்கணும் பரவிச் செல்வாக்குச் செலுத்தியது மேற்கூறிய கருத்திலன்று—புரட்சியென்ற வகையால், ஆசிய மக்கள்மீது அதற்கிருந்த உடனடியான செல்வாக்கு அற்பமே. நெப்போலியனுடைய ஆட்சிப் பரிசோதனையை யடுத்த காலத்தில், பிரெஞ்சுப்புரட்சியின் தத்துவங்கள் ஐரோப்பியத் தாராண்மை வாதத்திலே ஒன்றுகலந்த ஒரே பொது மரபாகிவிட்டன. நெப்போலியனுடைய சகாத்தத்தை யடுத்த காலத்தைச் சேர்ந்த சீர்திருத்த வாதிகளின் கைப்பட்டுத் திருத்தமும் மதிப்பும் பெற்று, ஐரோப்பிய அரசறிஞரின் உள்ளப்பான்மையில் அவை ஒன்று கலந்தன. ஐரோப்பிய நாடுகளின் குடியேற்றங்களிலே இனிமேலுங் கல்வியைப் புறக்கணித்தல் ஒல்லுவதன்றாயிற்று. தற்காலச் சட்டக் கோவைகளைத் தொகுத்தளித்தல் அவசியமாயிற்று. இழந்த யாவகத்தீவை மீட்டகாலத்தில், இடச்சர் தாமும் இந்தோனேசியரின் நலன்களில் வாய்ப்பேச்சளவிலாயினும் அக்கறை காட்ட வேண்டியவராயினர். இவ்வாறாக, ஐரோப்பிய நாடுகளின் பூட்கைகளிலே தாராண்மை மரபு புகுந்து மெல்லப் பரவுவதாயிற்று.

கிழக்குலகத்தோடு மேனாடுகள் கொண்ட தொடர்புகளிலே பிரெஞ்சுப் புரட்சித் தத்துவங்கள் செல்வாக்குச் செலுத்தியதுமன்றி, முதன்முதலாக ஆசிய மக்களுக்கு வேண்டும் ஓர் அரசியற் கோட்பாட்டையும் நல்கின. இந்தியத் தேசிய வியக்கத்தின் முதற்கட்டத்திலே தோன்றிய இந்தியப் பனுவல்கள் அம்மரபுக்குரிய தத்துவங்களையே நினைவூட்டுவனவாக உள. இராம் மோகன் ராயும் அவருடைய ஆதரவாளரும் உடன்கட்டையேறலை ஒழிக்க வேண்டுமெனக் கோரிய போதும், ஆங்கிலக் கல்வியும், பெண்களுக்குக் கூடிய சுதந்திரமும் வேண்டி நின்றபோதும், அச்சீர்திருத்தங்களின் சார்பாக இந்துசமய சாத்திரங்களிலிருந்தே பிரமாணங்கள் காட்டினரெனினும், பிரான்சிய அறிஞன் ரூசோவின் கருத்துக்களை இந்திய சூழ்நிலைக்கேற்பத் தழுவியே அவர்கள் உண்மையிற் சிந்

திப்பாராயினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன்னரைக் கூற்றில், ஆசியச் சீர்திருத்த இயக்கத்துக்கு ஐரோப்பாவே ஊக்கமும் ஆக்கமும் அளித்ததென் பதை மறுக்கவொண்ணாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே முதலாளித்துவம் ஐரோப்பாவில் உச்சநிலை யெய்திற்று. ஆசியாவின் மூலவளங்களை ஐரோப்பா தன்னலங்கருதிச் சுரண்டி யமையே அதற்கு ஏதுவாய் அமைந்ததென்பதை வரலாற்றறிஞர் பொதுவாக இப்போது ஒப்புக்கொள்கின்றனர். பேரரசு முறையைச் சிறப்பாக ஆராய்ந்த வரலாற்றறிஞர் ஒப்சன் என்பான் கூறுவதுபோன்று: "உலகத்தின் பிற பிர தேசங்களை இராணுவக் கொள்ளைவாயிலாகவும், ஒப்புரவில்லா வர்த்தகம் மூல மாகவும் வலிந்த உழைப்பின் வழியும் சுரண்டியமையே, ஐரோப்பிய முதலாளித் துவத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஆதாரமாய் இருந்துளது; ஆசிய (அமெரிக்க) வர்த்தகச் செல்வம் ஐரோப்பாவுக்குத் தங்குதடையின்றிச் சென்ற மையே இங்கிலாந்திற் கைத்தொழிற்புரட்சி உருவாதற்கு ஏதுவாயிற்று. ஆயின் குடியேற்றங்களை நிறுவிய வல்லரசுகளின் பொருளாதாரத்தின் முதலாளித்து வமே தலையாய இடம்பெற்றபோது, மேனாடுகளுக்கும் ஆசியாவுக்குமிடையே நிலவிய தொடர்புகளிற் பாரதூரமான பெருமாற்றம் ஏற்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் வர்த்தகமே நாடுகைப்பற்றுவதன் நோக்கமாயிருந்தது. இவ்வாறு கைப்பற்றப்பட்ட நாடுகளிலே பிறநாடுகளின் குறுக்கீடு தவிர்க்கப்பட்டது. மிக்க மலிவான விலையிலே மூலப்பொருள்கள் வாங்கப்பட்டன; 'தாய்நாட்டின்' தேவைகளுக்கேற்ப, வலிந்த உழைப்பைக் கொண்டு உற்பத்தி துவங்கப்பட்டது; உற்பத்தியால் வந்த இலாபமுழுவதும் தாய்நாட்டிற்கு அனுப்பப்பட்டது. இந் தியாவொடு பிரித்தன் கொண்ட பொருளாதாரத் தொடர்பிலே, தேயிலைத் தோட்டங்களும் புகையிரதப் பாதையமைப்பும் பிரதான இடம்பெற்றன. புகை யிரதப்பாதைகள் அமைத்தற்காகப் பெருந் தொகைப்பணம் இந்தியாவில் முத லீடு செய்யப்பட்டது. ஆங்கில எழுத்தாளன் ஒருவன் எடுத்துக்காட்டியது போன்று, இந்தியாவிற் புகையிரதப்பாதை யமைத்தற்குக் கொடுக்கப்பட்ட கடன்பணத்தில் ஏறக்குறைய மூன்றிலோர் பாகம் இலண்டனிலே சில செல வுகளுக்குச் சென்றது; மூன்றிலோர் பாகத்தினுஞ் சற்றுக் குறைந்த தொகை பெரும்பாலும் ஆங்கில எஞ்சினியர்க்கும் பிறர்க்கும் வேதனமளித்தற்கும் நிரு வாகச் செலவுகளைக் கட்டுதற்கும் செலவிடப்பட்டது; மூன்றிலோர் பாகத் தினுஞ் சற்றுக் கூடிய தொகை பிரித்தானியத் தண்டவாளங்களும் எந்திரங் களும் வாங்குதற்கும், அவற்றை இந்தியாவுக்கு ஏற்றி வருதற்கான கப்பற் செலவுக்குஞ் சென்றது".

ஆசிய—ஐரோப்பியத் தொடர்புகளிலே மூன்றாவது கட்டம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூற்றளவிலே ஆரம்பமாகிறது. பேரரசு முறை அதன் உண் மைக்கருத்தில் நிலவிய காலமே இஃது. இம்மாற்றம் இந்தியாவிலேயே முதன் முதலாகப் பூர்த்தியாகிறது. மற்றை நாடுகள் யாவற்றுக்கும்—இந்தோனேசி யாவிலே இடச்சுக்கும், இந்துசீனத்திலே பிரான்சியர்க்கும், சீனத்திலே மேனாட்டார் யாவர்க்கும்—முன்மாதிரியாகச் சென்றது இந்திய நாடேயாம்.

பெருந்தொகைப் பணம் முதலிடுவதை ஆதாரமாய்க் கொண்ட இந்தப் பேரரசு முறை காரணமாக, மிக முன்னேற்றமடைந்த தொழினுட்பத்திறனும் விஞ்ஞான அறிவும் ஆசியாவிலே வந்து புகுந்தன. முதலீட்டுக்குத் தலையாய துறையாக இருந்த புகையிரதப் பாதையமைப்புக்கு எஞ்சினியர்மாரை வரவழைத்தல் அவசியமாயிற்று. ஆறு கடக்கப் பாலங் கட்டுதல் வேண்டும்; சுருங்கை வழிகள் அமைத்தலும் வேண்டும்; இனி, புகையிரதப்பாதைகளை அமைத்ததன் பின்னர், அவற்றைப் பேணுதல் வேண்டும். தொழினுட்பத்திறனை வெளிநாட்டிலிருந்து தருவிப்பது செலவுமிக்க காரியமாயிற்று. எனவே எந்திரவியற் கல்லூரிகளையும் பாடசாலைகளையும் நிறுவுதல் தவிர்க்கவியலா அவசியமாயிற்று. தொழினுட்ப அறிவு கிழக்கிலே எவ்வாறு பரவிற்றென்பதற்கு இது ஒரு சிறு உதாரணம். முதலீடு செய்வதன் நேரிய விளையே அஃது. இப்புதிய அறிவைப் பெறுவதினின்றும் ஆசிய மக்களை ஒதுக்கி வைக்க முடியவில்லை—தொழினுட்பத்திறனை அவ்வந்நாடுகளிற் பெறுவதாலேயே, முதலீட்டால் வரும் வருவாயைப் பெருக்க முடியும். கைத்தொழிற் முறையிலும், இத்தகைய ஒரு பெயர்ச்சி காணப்பட்டது. கல்கத்தாவிலும் பம்பாயிலும் சாங்காயிலும் நிறுவப்பட்ட கைத்தொழில்கள், உண்ணாட்டிற் பயிற்றப்பட்ட ஆளணியை நம்பியே வளர முடியும். நாட்டு மக்களின் அறிவு பெருக பெருக, ஐரோப்பியரின் முற்றுரிமையாயிருந்த கைத்தொழிற்றுறையிலே ஆசிய மூலதனமும் மெல்லப் புகுதலைத் தடுக்க முடியவில்லை. இந்தியாவிலே பம்பாயிலும் அகமதாபாத்திலும் பஞ்சாலைகள் தோன்றலாயின. பெரும்பான்மையையும் ஐரோப்பிய நகரம் போலாகிவிட்ட சாங்காயிலே, ஐரோப்பிய முன்மாதிரியைப் பின்பற்றிச் சீனக் கைத்தொழிலதிபர் யாதும் இடர்ப்பாடின்றித் தொழிற்சாலைகளை அமைக்கத் தலைப்பட்டனர். சீனத்திலே புகையிரதப்பாதையமைத்தல் ஆதியிலே தொடங்கியபோது உக்கிரமான சருவதேசப் போட்டி மூண்டவாற்றை முன்னர்க் கண்டோம். இப்போது அது சீனரின் தொழிற்றுறையாகியது. இவ்வழி, மூலதன ஏற்றுமதியைக் குறிக்கும் ஓர் முறை என்ற வகையில், பேரரசு முறையானது தனக்கே அழிவு தரும் நச்சு விதையைத் தன்னகத்தே கொண்டிருந்தது எனலாம்.

ஐரோப்பியப் பேரரசு முறையின் பிறிதொரு சார்பு யாதெனின், சுரண்டி வாழ்தற்கேற்ற பிரதேசங்களைப் பெறுதற்காக ஆணிலப்படர்ச்சியை நாடுதலே. பத்தான்பதாம் நூற்றாண்டிலே ஐரோப்பியப் பேரரசு முறையானது தாராண்மையியக்கத்தின் மக்கணலப் பண்புகளால் உந்தப்பட்டு, கல்வி வசதி, சமூக நலத்திட்டம், அரசியற் பயிற்சி எனுமிவை யடங்கிய ஒரு பூட்கையை மேற்கொள்ளலாயிற்று. பெருந்தொகைக் குடிகளை நேராக ஆட்சி செய்ய முயன்றபோது, புதிய ஈடுபாடுகள் தோன்றின. நிருவாக அதிகாரவர்க்கத்தினர் வர்த்தகவிடயத்தோடு நேரான தொடர்புங் கொண்டிலர்; அதில் ஈடுபாடுங் கொண்டிலர். நிருவாக அதிகாரிகள் ஆங்கில மரபுப்படி, உயர்தரப் பாடசாலைகளிலே கல்வி பயின்ற மத்திய வகுப்பாரிடையிருந்தே பெரும்பாலும் சேவைக் கமர்த்தப்பட்டனர். எனவே இந்தியாவிலும், ஓளவிற்கு இந்தோனேசியாவிலும், பேரரசுமுறையின் அகத்தே ஒரு முரண்பாடு தோன்றி வளர்ந்தது; நிருவாக

அதிகாரவர்க்கத்தார் சமுதாயநலனையே வற்புறுத்தத் தலைப்பட்டாராக, வர்த்தக வகுப்பார் ஆணிலங்களைச் சுரண்டி வாழ்தற்கேற்ற பிரதேசங்களாகவே கருதுவாராயினர். இந்த இருவேறு கருத்துக்களிடையேயும் உள்ள முரண்பாடு இல்பேட்டுச் சட்டமுறிபற்றி யெழுந்த பூசலின்போதும், பின்னர் அரசியற் சீர்திருத்தத்தை எதிர்க்கத் தோன்றிய இயக்கங்களிலேயும் வெளிப்பட்டது. அரசியற் சீர்திருத்தத்துக்கு மாறுகத் தோன்றிய இயக்கங்களுக்குத் தொடர்ந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்தோர் வர்த்தக வகுப்பாரே யென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. வல்லரசுகள் மறைமுகமாக ஆதிக்கஞ் செலுத்திய சீனம் போன்ற நாடுகளிலும், இம்முரண்பாடு ஒக்கவே வெளித்தோன்றியது. சீன விவகாரங்களிலே சாங்காய் வணிகரும் பொருத்தனைத்துறை வணிகரும் ஒருபுறமாகவும், மற்று வெளிநாட்டலுவலகத்தோர் மறுபுறமாகவும் மாறுபட்டு நின்றதும், பூசல் விளைந்தது மெல்லாம் இம்முரண்பாட்டுக்கு உதாரணமாகும்—இவை பற்றி முன்னமே ஆராய்ந்தோம். அரசியலதிகாரமும் அமைதிக்காலத்து மக்கணல இலட்சியங்களும் ஒன்று சேர்த்தபோது, 'பிற்றைநிலைப்பட்ட' மக்களிடத்து ஒருவகைப் பொறுப்புணர்ச்சி கொண்டனர் பேரரசவாதிகள். இப்புதிய அபிவிருத்தியிலே, ஐரோப்பாவின் ஆதிக்கத்துக்கு ஆபத்து உண்டென்பதை அன்னர் உணர்ந்தாரல்லர். ஐரோப்பியரின் மேம்பாடு தெய்வத்தால் விதிக்கப்பட்டது; அது பன்னெடுங்காலம் பத்திரமாக நிலைத்து நிற்கும் என்ற நம்பிக்கையிலே அன்னர்—மூற்போக்குடையவர்தாமும்—பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயும் ஊன்றி நின்றனர். கட்டுக்கோப்புக் குலைந்து, கைத்தொழில் வளமின்றி, நலிந்து போயிருந்த சீனர் குறிப்பிட்ட ஒரு காலத்துள்ளே ஐரோப்பியரை எதிர்த்துப் பொரும் வலிபெறுவரென்றே, கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் பிரித்தானியரோடு போட்டியிடும் பெற்றியை இந்தியர் பெறுவரென்றே, இடச்சருக்கு மாறுக நூற்றுக்கணக்கான இந்தோனேசியத் தீவுகள் ஒன்றுபட்டெழுமென்றே, பேரரசாட்சி தழைத்தோங்கியிருந்த அந்த உன்னத காலத்தில் ஐரோப்பியனெருவனுக்கு யாராவது கூறியிருந்தால், அக்கூற்று நகைப்புக்கிடமாக இருந்திருக்கும். ஆகவே, ஆசிய மக்களுக்குக் கல்வி பயிற்றி வெள்ளைக்காரன் 'சிரமேற்கொண்ட திருப்பணியைச்' செவ்வனே நிறைவேற்றுதற்காயினும் தேவையான திறமையை அவர்களிடத்து விருத்தி செய்வதாகிய மக்கணல விலட்சியம், அச்சம் யாதுமின்றி, மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இந்தியாவும் இந்தோனேசியாவும் போன்ற பரந்த பிரதேசங்களை நேராக ஆட்சி செய்வதிலுள்ள பெருஞ் சிக்கல் காரணமாக, சுதேசிகளைக் கொண்ட ஒரு பெரும் நிருவாக வர்க்கத்தைப் படைத்தல் அவசியமாயிற்று. வர்த்தகமே முதன்மைபெற்றிருந்த காலத்தில் இத்தகைய அவசியம் ஏற்படவில்லை. ஆயின் பேரரசுமுறை முதன்மைபெற்ற காலத்தில் அது இன்றியமையாத தொன்றாயிற்று.

ஆசிய மக்களுக்கு நிருவாகப் பயிற்சியளித்து, அதனோடு, தற்கால ஆட்சியெந்திரத்தை விளங்க வைக்கும் அறிவுமளித்து, பெரும்பாலும் சுதேசிகளின் திறமை கொண்டே இயங்கத்தக்க ஆட்சியமைப்பை நிருமாணித்தல், அக்காலச்

தேவையாயிற்று. இவ்விடயம் இங்கு அழுத்திக் கூறத்தக்க சிறப்புடையது. முன்னைக்கால வரலாற்றுக்கும், பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளிலே விருத்தியடைந்த அரசியன் முறைகளுக்குமிடையே காணப்பட்ட தலையாய ஒரு பேதம் யாதெனில், வாழ்க்கைத்துறையின் ஒவ்வோர் அமிசத்தையும் சென்று சென்று தொட்டுப் பலபட விரிந்த நிருவாகமுறைகள் பிற்றைக் காலத்திலே தோன்றியதேயாம். இற்றைநாட் கருத்திலே ஒரு நிருவாக அமைப்பு என்று கொள்ளத்தக்க அரசாட்சி யாதும் ஆசியாவிலேனும் ஐரோப்பாவிலேனும் பதினெட்டாம் நூற்றாண்டிலே இருந்ததில்லை. ஆயின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைக் கூற்றிலே, மென்மேலுஞ் சிக்கலாக்கி வந்த வர்த்தக, கைத்தொழிற் பிரச்சினைகளையும் சமூக பொருளாதார சுபீட்சத்தையும் நிருவகிக்க வேண்டியவையாகி, ஐரோப்பிய நாடுகள் நவீன நிருவாகமெனும் விரிந்த பரமைப்பை உருவாக்கி வளர்த்தன. அத்தகைய அமைப்பை மகா பிரடெரிக்கோ நெப்போலியன் போனப்பாட்டோ கனவிலுங் கருதியிருக்க மாட்டார். அற்றைக்கால அரசியற் சிந்தனையும், அது சுதந்திரத்துக்குப் பங்கம் விளைக்குமெனக் கடுமையாக எதிர்த்துமிருக்கும்.

ஆசிய அரசு — முறையானது பற்பல அதிகாரிகளைக் கொண்டு இயங்கிற்றுதலின், 'நிருவாகம்' என்று சொல்லுவதற்கு ஓராற்றால் தகுதியுடைத்தே. ஆயின் அது அரசியலாட்சியன்று. அதன் கடமை நிலபரிபாலனம், பாதுகாப்பு என்பவற்றோடு நின்றது. பிரித்தானிய மூடியரசு இந்தியாவிலேயும்—பிற போரரசுகள் தத்தம் குடியேற்றங்களிலேயும்—விருத்தி செய்த நிருவாக முறையானது நவீன அரசுபற்றிய முதற் கருத்தை ஆசியவுள்ளத்துக்கு அறிவுறுத்தியதோடு, அதனை உரிய காலத்தில் அடைதற்கு வேண்டும் நிருவாக அமைப்பையும் வழங்கிற்று. சீனத்திலும் இவ்வபிவிருத்தி காணப்பட்டது — ஆயின் போதிய கவனம் அதனை ஆராய்ந்தறிவதிற் செலுத்தப்பட்டிலது. போரரசுச் சுங்கத்திணைக்களம் நிறுவப்பட்டமையும், தபால் தந்தி வசதிகள் விருத்தியடைந்தமையும் புதிய நிருவாக முறைக்கு வேண்டிய அத்திவாரத்தைச் சீனத்துக்கு வழங்கின.

ஆணிலப்படர்ச்சியெனும் போரரசுமுறையின் மூன்றாவது அமிசம் யாதெனின், குடிகளின் 'தார்மிக நலனிடத்து' அரசாங்கம் காட்டிய பொறுப்புணர்ச்சியேயாம். அந்த உணர்ச்சி மிசனரி வேலையிலே சிறப்பாக வெளிப்பட்டது. தம்மால் நேராக ஆளப்படும் பிரதேசங்களிலும், மற்றுத் தமது செல்வாக்கின் வயப்பட்ட பிரதேசங்களிலும் பல கோடிக்கணக்கான மக்கள் ஆன்ம விமோசனம் பெறும் வாய்ப்பின்றி மடிகின்றார்களே யென்னும் உணர்ச்சி குறிப்பாகப் புரட்டாத்தாந்த நாடுகளைச் சேர்ந்த மக்களின் மனச்சாட்சியைத் தூண்டிவிட்டது. சீன உண்ணாட்டுச் சமயதாதத்தைத் தாபித்த வில்லியம் அட்சன் தெயிலர் போன்றாரின் அபிமானத்தையும் குருட்டுப்பத்தியையும் முன்னமே கண்டோம். ஆசியாக் கண்டத்தின் பல்வேறு தேயங்களிலே தம் வாணாள் முழுவதையும் கழித்து, 'மெய்ந்நெறிக்குய்ப்பதாகிய' இலட்சியத்துக்காகத் தம்மையே அர்ப்பணித்த, தீவிர சிந்தையுடைய பத்திமிக்க பெருமக்கள் பல்லாயிரக் கணக்கானோரில் வில்லியம் அட்சனும் ஒருவனேயாவன். அவர்தம் சமயமுயற்சியால் விளைந்த பயன்

பெரும்பாலும் அற்பமேயெனினும், அவர்கள் சிறிதும் எதிர்பாராத எதிரியக்கங்கள் ஒரேவழித் தோன்றினவெனினும், பாமரமக்களின் வாழ்க்கையிலும் சுபீட்சத்திலும் அவர்கள் கொண்ட ஈடுபாட்டாலும், இனத்தடைகளை உடைத்தெறிய அவர்கள் செய்த முயற்சியாலும், மேற்குலகம் ஆசியாவை உள்ளத்தால் அண்ணித்தது. அன்றியும் இந்தியா, சீனம், பர்மா போன்ற நாடுகளின் அகத்தே சென்று அவர்கள் ஆற்றிய மருத்துவ சேவையும் கல்விப்பணியும் ஆழ்ந்தகன்ற விளைவுகளைப் பயந்தன.

பேரரசுமுறை முதன்மைபெற்ற காலத்திலேயே கிழக்குலக மக்களுக்கும் ஐரோப்பியர்க்குமிடையே உண்மையான தொடர்பு தோன்றிற்றென்பதை இங்குச் சற்று வற்புறுத்திக் கூறல் வேண்டும். அதற்குமுன் சென்று கழிந்த முந்நூற்றுச் சொச்ச வருடகாலத்திலே, 1498 தொட்டு 1858 வரையும், இந்தியாவிலேதானும் இத்தொடர்பு மிகக் குறுகியதாய், சிறுசிறு உத்தியோக வட்டாரங்களுக்கு அப்பாற்படாததாய், ஆளும் வகுப்பாரிடைதானும் பரவாதிருந்தது. நேரான நிருவாகமும், கல்வியபிவிருத்தியும், வர்த்தகத்துக்குப் பதிலாக மூலவளங்களை அவ்வத்தலத்தே பயன்படுத்தி உற்பத்தி செய்யும் முறையும் வந்தபிறவே, அத்தொடர்பு பையவே பல்வேறு படிகட்கும் சுவறிற்று. ஆசிய இளைஞர் ஐரோப்பியக் கல்விப்பீடங்களிலே இடம்பெறுதற்கும் வழி மெல்லத் திறந்தது. ஐரோப்பாவின் இரகசியங்களை அறிந்து வருதற்காகத் தேர்ந்தெடுத்த மாணவரை யப்பான் திட்டமிட்டு ஒழுங்காக அனுப்பியவாற்றை முன்னர்க் கண்டோம். சீனப் பெரும் பதிலிராயனை சாங்கு குவோ — பான் என்பான் ஆதரித்த 'முதல் நூற்றவர்' திட்டமும், அவ்வழி பற்றிச் சென்று இடையிற்றவறிய ஒரு முயற்சியேயாம். இந்திய வாலிபரைக் கடல்கடந்து செல்லுதற்கு முதன்முதலாய்த் தூண்டியது ஐரோப்பிய வாழ்க்கையின் மருமங்களை அறியும் ஆசையன்று — சிவில் சேவைச் சோதனையிற் போட்டியிடும் வாய்ப்பைக் குறியாகக் கொண்ட பொருளாதார நோக்கமேயாம். மாணவரின் இப்பெயர்ச்சி விரைவில் ஒரு பிரவாகமாயிற்று. ஐரோப்பாவுக்குச் சென்ற மாணவரிற் பெரும்பாலார் பொறியியல், மருத்துவம், காட்டியல், புவிக்கோளம், இரசாயனம் போன்ற இரஞ்சகமான பாடங்களையும் பயில்வதிலேயே ஈடுபட்டனர். இவ்வகைத்தான நோக்கத்தோடு இந்து—சீனமாணவர் பாரிசுக்கும், இந்தோனேசியர் இலேடனுக்குஞ் சென்று குழுமினர். சேர்மானியத் தொழினுட்ப முன்னேற்றத்தின் பீடு கண்டு, அந்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு ஈர்க்கப்பட்டோர் மிகப்பலர்.

நாம் இங்கு அவசியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் ஒன்றுண்டு. ஓவ்வோர் ஆசிய நாட்டிலேயும், ஐரோப்பியரின் ஆதிக்கத்தை இறுதியிற் பெயர்த்தெறிந்த இயக்கத்துக்குத் தலைமைவகித்தோர் எத்திறத்தாரெனின், பேரரசாட்சியின் ஆதரவில் மேனாடு பயிற்றிய பெருமக்களைச் சேர்ந்தோரே. மேனாட்டிற் பயிற்சி பெற்றோர் மகாத்மா காந்தியும் பண்டித நேருவும் மட்டுமல்லர்—இந்தியத் தேசிய மாசபையைத் தாபித்தோரும், சந்ததி சந்ததியாக வந்த மாசபைத் தலைவன்மாரும் அவ்வாறு பயிற்சி பெற்றோரே. யப்பானில், சோகுனேற்றுட்சியால் மேனாட்டுக்கு அனுப்பப்பட்ட அறிவாளரே, அரசைப் புத்தமைப்புச்

செய்வதை இலட்சியமாகக் கொண்ட இயக்கத்தை முன்னின்று நடாத்தியோராவர். சீனத்திலே, பஞ்சுமாரைப் பதவியிறக்கியமை மேனாட்டுக் கல்வி கற்ற மாந்தரின் வேலையன்றுயினும், அதைத் தொடர்ந்து உருவாகிய புரட்சியியக்கத்துக்குத் தலைமை வகித்தோர் மேனாட்டுப் பயிற்சி பெற்றோரே. இந்தோனேசியாவிலும், பர்மாவிலும் இந்து — சீனத்திலும் ஈழநன்னாட்டினிலும் முன்னணியில் நின்று தலைமை தாங்கியோர் மேனாட்டிற் கல்வி பயின்றவரே.

குணபுலத்துக்கும் குடபுலத்துக்குமிடையே நிலவிய தொடர்பின் வரலாற்றிலே சீவாதாரமான காலம், பேராசுமுறை முதன்மை பெற்ற காலமே யென்பது கண்கூடு. ஐரோப்பியரின் ஆசைகளெல்லாம் ஈடேறிவந்த காலமும் அதுவே; அதைத் தொடர்ந்து வந்தது, பின்னிடைவுக்காலமென்பது (1918-42). அதிலே ஆதிக்கம் பெற்ற இரு சத்திகள் ஒற்றுமேபர்ப் புரட்சியும் ஆசியத் தேசியவுணர்ச்சியின் எழுச்சியுமாம். முன்னதைப்பற்றி ஆராய்வது இந்நூலுக்குப் புறம்பான விடயம். தேசியவுணர்ச்சியின் வளர்ச்சியை, மேனாட்டு ஆதிக்கத்துக்கு மாறுகத் தோன்றிய எதிரியக்கம் என்ற வகையில், இனிக் கவனிப்போம்.

ஐரோப்பாவோடு தொடர்பு நிலவிய கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்திலே, ஆசிய நாடுகளில் உருவாகிய அபிவிருத்திகளுள் மிக முக்கியமானது தேசிய வுணர்ச்சியே என்பதற்கையமில்லை. ஐரோப்பிய மக்களோடு தொடர்பு ஏற்படும் வரையும், தேசியவுணர்ச்சியோ தேசியவினம்பற்றிய ஒற்றுமையுணர்ச்சியோ ஆசிய மக்களுக்கு இருந்ததில்லையென ஐரோப்பிய எழுத்தாளர் பலர் கூறிவுவர். நெப்போலியனுடைய ஆக்கிரமிப்புக்கு மாறுக எழுந்த எதிர்ப்பின் பயனுகவே தேசியவாதக் கோட்பாடு ஐரோப்பாவிலே விருத்தியடைந்தது எனும் உண்மையை இக்கண்டனம் மறந்துவிடுகின்றது. இங்கிலாந்திலும் பிரான்சிலும் நாட்டபிமான வுணர்ச்சி ஆழமாக வேரூன்றியிருந்ததென்பது உண்மையே. ஆயின், உலொம்பாடியையும் போலந்தின் சில பாகங்களையும் உள்ளடக்கியிருந்த பல நாட்டினங்களைக் கொண்டிருந்த அபிசுபேக்குப் பேரரசிலே, நாட்டபிமானத்தை இராசவமிச விசுவாசத்தோடே ஒருங்கு வைத்தெண்ணல் வேண்டும். தனியொரு மக்களினத்தைக் குறிப்பதாகி, ஒடியாத ஒரு பொதுமரபை உடையதான ஓர் அரசுடத்து உள்ளங்கவர்ந்தெழுந்தோங்கும் விசுவாச உணர்ச்சியே தேசிய வுணர்ச்சியெனக் கொண்டால், ஆசியாவிலே தேசியவுணர்ச்சியின் வளர்ச்சியாவது, ஐரோப்பாவில். வளர்ந்த அத்தேசிய வியக்கத்தோடு ஒக்கவே விருத்தியடைந்ததென்றும், ஐரோப்பாவிற் போலவே அன்னியராட்சிக்கு மாறுக எழுந்த எதிர்ப்பின் விளைவாகவே தோன்றிற்றென்றுங் கூறுதல் நியாயமானதே. தத்தம் நாடுகளின் தேசிய விடுதலைக்காகப் போராடிய தேசாபிமானிகளான மாசினியும் அயிரிசு நாட்டுத் தலைவர்களுமே ஆசியத் தேசியவுணர்ச்சிக்கு ஊக்கமளித்தனர். சீனத்திலும் யப்பானிலும் மற்று இந்தியாவிலுமே நாட்டபிமான வுணர்ச்சி மக்களிடையே ஆழமாகவும் உறுதியாகவும் பதிந்திருந்தது. ஆட்சி செலுத்திய இராசவமிசம் அன்னியமானதாய் இருந்தவிடத்தும், சீனமக்கள் தமது நாட்டிடத்துக்கொண்ட பற்று ஆழமானதாதலின், வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு மாறுக அவர்தம் எதிர்ப்பு எஞ்ஞான்றுமே தளர்ந்ததில்லை. யப்பா

னிலே, நாட்டபிமானம் தலையாய ஒரு தேசியப்பண்பாக என்றுமே இருந்துவந் துளது. அன்றியும் முதன் முதலாக ஐரோப்பியரோடு தொடர்புகொண்ட காலந் தொட்டு, தமது நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பிரச்சினையிலே அவர் கள் தீவிரமாகச் சிந்தை செலுத்தி வந்தனர். பிற்றைநாளில் வெலிங்தன் கோமா னுக உயர்ச்சிபெற்ற ஆதர் வெல்சிலி இந்தியாவில் இருந்தபோது, அக்கால் ஒரே யொரு தேசிய முடியரசாகத் திகழ்ந்த மராத்திய இனத்தின் தேசிய வுணர்ச்சி யும் நாட்டபிமானமுங் கண்டு வியந்தான். பின்னர், இந்துத்தானத்தில் வெளி நாட்டு ஆட்சி பரவியகாலை, தேசிய, நாட்டபிமான உணர்ச்சியானது வலியதாய் இருந்தமையாலே படைக்கலகம் மூண்டு கிழக்கிந்தியக் கம்பெனியை அழித்த தோடு, பிரித்தானிய அதிகாரவர்க்கத்தின் அத்திவாரத்தையும் குலுங்க வைத் தது. ஆயின், ஐரோப்பியத் தொடர்பின் பயனுக வினைந்த தேசியவுணர்ச்சியோ இதனிலும் வேறுபட்டது. அது இந்திய நாட்டிற்குத் தனிப்பட்ட ஒரு சொரூபம் உண்டெனுங் கோட்பாட்டை ஏற்றுக்கொள்வது; எல்லையினமைந்த இந்தியப் பிரதேசத்துள் வாழும் மக்கள் அனைவரும் இந்திய அரசின் தனித்தன்மையோடு ஐக்கியமாவது; இந்திய நாட்டு மக்கள் அனைவரும் சகோதரரே யென்னும் அனு பவ உணர்ச்சியில் நம்பிக்கை கொண்டு ஒற்றுமைப்பட்டிருப்பது—இந்த அமி சங்களெல்லாம் ஒருமித்துக் கலந்ததே தற்காலக் கருத்துப்படி தேசியவுணர்ச்சி என்க. உதாரணமாக, இந்தியத் தேசிய வுணர்ச்சியானது இந்திய மக்களின் இந் தியப்பண்பை அழுத்திக் கூறும்; இந்திய மக்கள் அனைவர்க்கும் பொதுவான வர லாறு, நாகரிகம், பண்பாடு எனும் பிணைப்புக்களை அழுத்திக் கூறும்; இவ்வழி இந் திய மக்கள் அனைவரும் இந்துத்தானம் எனும் நாட்டோடு பொது அனுபவத்தின் மூலமாக உள்ளத்தாற் கட்டுண்டிருப்பர். இவ்வாறே யப்பானிலும் 'தூய சிந் தோக்' கோட்பாடு விரிவடைந்து யப்பானிய மக்களின் ஒருமைப்பாட்டையும், அவர்களுக்கே சிறப்பாகவுள்ள தொடர்ச்சியான வரலாறு, பண்பாடு முதலியன வற்றையும், உலக நாடுகளின் வரிசையிலே அவர்களுக்கே சிறப்பாகவுள்ள இடத் தையும் பணியையும் அடக்கியதலை, அதுவே தேசிய வுணர்ச்சிக்கு வித்தா யிற்று. சீனத்திலும் ஆன் இனமே புதிய தேசியவுணர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது.

பொதுவான ஒரு வரலாறு இன்றி, ஒரு தேசியவினம் அமையாது. ஆதலின், தேசியவினம் எனும் இந்த முறைமைக்குச் சில நாடுகளிலே புதியவொரு வரலாற் றுப் பின்னணி தேவைப்பட்டது. ஆசிய நாடுகள் பலவற்றிலே, குறிப்பாக இந்தி யாவில், இத்தகைய பொருண்மையுடைய வரலாற்றுப் பின்னணி வாய்க்கவில்லை. இயற்கையாயமைந்த புராதன எல்லைகளுக்குட்பட்ட ஒரு பிரதேசம் என்ற வகையால் அதற்குப் புவியியல் முறையான ஒருமைப்பாடு உண்டு; சமூக, கலா சார ஒருமைப்பாடும் அதற்கு உண்டு; இந்துமத சாரம் அதன் வரலாறு நெடுகி லும் இழையோடி இணைந்து நிலமையால், சமய ஒருமைப்பாடும் அதற்கு உண் டெனலாம். ஆயின், பூகோதைம்யு ஐதிகமும் என்ற வகையாலல்லது தொடர்ச்சி யான அரசியல் வரலாறென்பது இந்திய நாட்டில் முன்னம் அறியாததொன்றே. சந்திரோக் கொட்டசு என்பது சந்திரகுப்த மௌரியனையே குறிக்குமென அடை

யாளங் கண்டு நிறுவியமை தொட்டு மொகெஞ்சதாரோவிலும் அரப்பாவிலும் நடந்த அகழ்வாராய்ச்சி வேலை வரையும், அசோக சாசனங்களைப் புரிந்து கொண்டதிலிருந்து இந்தியாவெங்கணும் அகப்பட்ட எழுத்துப் பொறிப்புச் சான்றுகளை ஆராய்ந்து தொகுத்தளித்ததுவரையும், இந்திய வரலாற்றை எழுதற்கு வேண்டும் விடயமனைத்தையும் எமக்குதவியது ஐரோப்பிய அறிஞரின் அயராத ஆராய்ச்சிப் பணியேயாம். இவ்வகையில் இந்தோனேசியா இன்னுந் துலக்கமான உதாரணமாகக் காட்சியளிக்கிறது. அங்கே ஐரோப்பிய அறிஞர் சிலர், பெரும்பாலும் ஒல்லாந்து நாட்டவர், யாவா சுமாத்திரா எனும் பழம் பேராசுகளின் வரலாற்றைச் சாசனங்கள் வாயிலாகத் தொகுத்து அளித்தனர். அந்த உறுதியான வரலாற்று அடிப்படையிலேயே இந்தோனேசியத் தேசியவுணர்ச்சி கால்கொண்டெழுந்தது. இச்சார்பிலே நோக்கும்போது, ஐரோப்பியச் சிந்தனையாளரும் அறிவாளிகளும் அறிவு வளர்ச்சிப் பொருட்டாக அயராது உழைத்தமையால், தொடர்பியான வரலாற்றுப் பின்னணியை இந்தியா, இலங்கை, இந்தோனேசியா எனுமிந்நாடுகள் பெறுவது இயல்வதாயிற்று—இவ்வுண்மை மறுக்க முடியாததொன்றே.

பண்பாட்டுத் துறையிலே அருஞ்சாதனைகளை ஈட்டுவதால் வரும் பெருமித உணர்ச்சியும் தேசிய வுணர்ச்சியின்பாற்படும்—பெருமைப்படத்தக்க ஒரு பண்பாட்டு மரபுக்குப் பொதுவுரிமை உடையேம் யாம் எனும் உணர்ச்சியே அஃது இந்தியர்க்கும் சீனர்க்கும் யப்பானியர்க்கும் அன்னர் மரபுரிமையாகப் பெற்ற பண்பாடுகள் சிறந்தன, வளமார்ந்தன வென்று, யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. உண்மையில் அவ்வகையிலே தாம் மற்றையோரினும் மேம்பட்டோரே எனும் திடநம்பிக்கை அன்னர்க்கு இருந்தது. இவ்விடயத்தைப் பின்னர்க் கவனிப்போம். ஆயின், இந்திய சீனப் பண்பாடுகள் மேனாட்டறிஞர் எமக்கு மீட்டுக் கொடுத்து விளங்க வைத்ததாலேயே, அந்நம்பிக்கை இற்றைநாளிற் சாத்தியமாயிற்று. அங்கோரிய அறிஞனை சேர் ஓரல் சிதைன் என்பான் கண்டறிந்து வெளியுலகத்துக்குத் தெரியப்படுத்தும்வரையும், துங்குவான் குகைகளில் மறைந்துகிடந்த ஓவியங்களையும் உலகம் அறிந்திருக்கில்லை. இந்திய நாட்டில் அசந்தாவிலும் பாக்கிலுமுள்ள குகையோவியங்களின் வரலாறும் அத்தகைத்தே. யோன் நோருக்கி அழகாகக் கூறியதுபோன்று, ஆசிய மக்கள் 'மேனாட்டு மோகத்திலே முதன் முதலாக மூழ்கித் தெளிந்த போது', மேனாட்டு உயர்ந்த சிந்தனையாளர் பலரின் கருத்தைக் கவர்ந்த தமது உயர்பண்பாட்டுக்கு மீண்டு, ஆங்குத் தமது தன்மானவுணர்ச்சிக்கு வேண்டும் ஊற்றத்தைப் பெற்றனர். இன்னும் ஐரோப்பியரின் அரசியலாதிக்கத்துக்கு மாறுய்க்கிளர்ந்த எதிர்ப்புணர்ச்சியே புதிய தேசிய வுணர்ச்சிக்கு ஊக்குவிசையாக அமைய, அத்தேசியவுணர்ச்சி வேண்டிய உரனையும் ஏதுவையும் தத்தம் பண்பாடுகளின் சிறப்பை உணர்வதிலே ஆசிய மக்கள் கண்டனர். அந்த மதிப்புணர்ச்சி மென்மேலும் பெருகுதற்கு ஐரோப்பிய அறிஞருலகம் ஆற்றிய தொண்டு அற்பமன்று.

மேனாட்டுத் தொடர்பு இயன்றவருநாளில், எதிர்ப்பியக்கத்தின் நேரான விளைவாகவும், வரலாற்றுணர்ச்சியையும் பண்பாட்டுப் பெருமிதத்தையும் மீட்டுப் பெற்றதன் வழித்தோன்றிய ஒற்றுமையுணர்ச்சியின் மறைமுகமான விளைவாகவும் தேசியவுணர்ச்சி தோன்றி வளர்ந்ததென இதுகாறும் விளக்கினேம். அது தேசியவுணர்ச்சி வளர்ந்த கதை. அதனினும் விரிந்த ஆசியவுணர்ச்சி, ஐரோப்பிய ஒற்றுமையுணர்ச்சிக்கு மாறுத்தரமாக, அதன் எதிரொலியாக வளர்ந்தது எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கு முன்னம், அகன்ற ஆசியவுணர்ச்சி யென்றொன்று இருந்ததில்லை. ஆயின், இந்நூற்றாண்டின் தொடக்கத்திலே, யப்பானியப் பேரோவியனை ஒக்காகுரா கக்குசோ என்பான் பிரமிக்க வைக்கும் ஒரு வாசகத்தோடு தனது நூலை ஆரம்பித்தான்: 'ஆசியா ஒன்றே' என்றான் அவன். இசுலாமியரல்லாத ஆசிய மக்களின் 'பாரம்பரியத்திலே' பொதுவான அமிசங்கள் மெத்தவும் உண்டே. சமயநோக்கிலும் சமுதாய அமைப்பிலும் கலைமரபிலும் பொதுவியல்புகள் உண்டே. இந்தியாவிலிருந்து யப்பான் வரையும் ஆசியநாடுகளின் நாகரிகங்கள் பொதுவான சிற்சில இயல்புகளாற் பிணிக்கப்பட்டுள்ளன—அவற்றைப் புத்தமதச் செல்வாக்கின் சார்பிலே வைத்து, முற்றுக விளக்க முடியாது. தென்புலத்தார் ஓம்பல், இல்லற தருமம் ஆகிய இரண்டும், இசுலாமியமல்லாத கிழக்குலகச் சமுதாயங்களிற் காணும் பொதுவியல்புகளாகும்—இவை யிரண்டும் பௌத்தமதத்துக்குப் புறம்பானவை. மேனாட்டு அறிஞர் பலர் சுட்டிக்காட்டியதுபோன்று, வாழ்க்கைநெறிபற்றி இந்துக்களும் சீனமக்களும் கொண்டுள்ள நோக்கில் அடிப்படையான வேற்றுமைகள் உண்டே. உதாரணமாக, இம்மைக்குரிய நடைமுறைக்கு உவந்த கொன்பூசிய வாழ்க்கைத்தத்துவங்களும், அத்தத்துவங்களிலுறிய சீன இலக்கிய கர்த்தாக்களின் நோக்கும் மேனாட்டு அறிஞரைப் பெரிதுங் கவர்ந்தன. ஆயினும், சிந்தனைப் போக்கிலும் உணர்ச்சிப் பெருக்கிலும் இந்திய சீனப் பொதுமக்களிடையே ஒற்றுமை உண்டேயென்பதை மறுக்க வொண்ணுது.

ஆசிய தேசங்களோடு ஐரோப்பிய நாடுகள் கொண்ட விவகாரங்களில், அவ்வைரோப்பிய நாடுகள் தமது ஒற்றுமையை—ஐரோப்பியத் தன்மையை—ஐரோப்பியத்துவத்தை—வற்புறுத்தியவாற்றால், 'ஆசியத்துவம்' எனும் பொதுவுணர்ச்சி இயல்பாகவே உருவாகித் தோன்றிற்று. பிற ஐரோப்பிய நாட்டோர் அரசியலுரிமை பெற்றிராத இந்தியாவிலேதானும், ஐரோப்பியரும் மற்று இந்தியரும் என்ற பாகுபாடேயல்லாது, ஆங்கிலரும் இந்தியரும் என்றவாறான பாகுபாடு காணப்பட்டிலது. இந்தியாவிலே பிரத்தியேகமான களிகள் (கிளப்புகள்) ஆங்கிலர்க்கேயன்றிப் பொதுவாக ஐரோப்பியர்க்கென்றேயிருந்தன. விசேட பாடசாலைகளும் கல்வி வசதிகளும் பொதுவாக ஐரோப்பியர்க்கென்றேயிருந்தன. ஐரோப்பியத் தேயங்கள் அனைத்தும் அரசியற் சிறப்புரிமை பெற்றிருந்த சீனத்திலே, ஐரோப்பியச் சமுதாயங்கள் ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்குதற்குப் பெரிதும் முயன்றன. பிரான்சிய—சேர்மானியப் போர் மும்முரமாக ஐரோப்பாவிலே நடந்துகொண்டிருந்த காலத்தும், சீனத்தில் நிகழ்ந்ததியென்சின் சம்பவத்தில், ஐரோப்பிய ஒற்றுமையெனுந் தத்துவத்தின் நிர்ப்பந்

தங் காரணமாகச் சேர்மானிய தூதமைச்சன் பிரான்சிய இணைவனின் பக்கல சார்ந்து அவனையே ஆதரிக்க வேண்டிய அவசியமேற்பட்டது. பொருத்தனைகளை மாற்றியமைத்தற்காக இணக்கப் பேச்சுக்கள் நிகழ்ந்தகாலை, யப்பானிலும் ஐரோப்பிய வல்லரசுகளின் மனோபாவம் அத்தகையதாகவே இருந்தது. இரு புடையான பொருத்தனைகளை ஒப்பேற்றுதற்கு யப்பானியர் பலதடவை முயன்ற போதும், மேனாடுகள் ஒன்றுபட்டு நிற்க விரும்பிய காரணத்தால், அம்முயற்சி கள் வியர்த்தமாயின. பேரரசுமுறை முதன்மை பெற்றிருந்த காலத்தில்—1880 முதல் 1914 வரையும்—ஆசியாவுக்கெதிராக ஐரோப்பியர் ஐக்கியப்பட்டு நின்ற னர். இந்த ஒற்றுமை மனோபாவம் 'ஆசியத்துவ' உணர்ச்சி பிறத்தற்கு அடி கோலிற்று. யப்பான் ஆக்கிரமிப்புச் செயல்களில் இறங்கியபோதும், 'மேற்குல கத்தோடு ஒருசேரநிற்றல்' எனுந் தன் கொள்கையைப் பிரசித்தப்படுத்திய போதும், அந்த ஆசியத்துவ உணர்ச்சி **பாரதூரமாகப் பங்கப்பட்டதில்லை.**

இஃது இவ்வாறுக, ஐரோப்பியத் தொடர்பால் ஆசியாவில் விளைந்த மாற்றங் கள் புறத்தோற்றத்தளவினவே, வெளிமட்டமானவையே; ஐரோப்பிய அரசிய லதிகாரம் ஆசியாவை விட்டகன்றதும், அம்மாற்றங்கள் உருப்படாது கழியும்— என்றவாறான கருத்துக்கள் ஐரோப்பிய எழுத்தாளரிடையே பொதுவாக நிலவு கின்றன. இந்தியாவிலும் சீனத்திலும் இந்தோனேசியாவிலும் இன்னும் யப்பா னிலும் வாழுகின்ற பெரும்பாலான பாமரமக்கள், அவர்தம் நாடுகளில் வந்துற்ற மாற்றங்களாற் பாதிக்கப்படாது ஒதுங்கி வாழ்கின்றனர்; மேனாட்டுக் கருத்துக் கள் சுறிப்பிட்ட சில வகுப்பாரிடையேதான் புகுந்து சுவறியுள; மேனாட்டுச் செல்வாக்கு வந்து மோதியபோதும் குணபுலத்துப் பெருமதங்கள் நின்றுபிடித் துள; பெருமாற்றம் நிகழ்ந்துவிட்டதுபோலத் தோன்றினாலும், கிழக்குலகிலே வாழ்க்கைநெறி பழைய தடத்திலேயே போய்க்கொண்டிருக்கிறது—என்ற வாறாக மேனாட்டு அறிஞர் பலர் எடுத்துரைப்பர். ஐரோப்பிய அரசியலதிகாரம் நீங்கியவுடன், ஆசியா பழைமைபோலத் தானறிந்த வழியிற் செல்லும்; உண் ணாட்டு வாழ்க்கைமுறை மேனாட்டுச் செல்வாக்கைத் துடைத்தொழிக்கும் என்ற கருத்துந் தெரிக்கப்பட்டுளது.

வரலாற்றை வெள்ளோட்டமாகக் கற்றதன் விளைவே இக்கருத்து எனத் தோன்றுகிறது. இந்துக்களும் சீனரும் யப்பானியரும் தம்முடைய பண்பாடு களே மேம்பட்டவையெனக் கருத விரும்புவராயினும், மேனாட்டு அறிவு வளர்ச் சியின் மேன்மையையேனும், ஐரோப்பிய சமூக, பொருளாதார அமைப்பின் ஊங்கிய வலியையேனும் (உறுதிப்பாடன்று) மறுக்கத் துணியார். சிறிதுகாலம் மேனாட்டு மோகத்தில் மூழ்கியிருந்த பின்னர், அவர்கள் தம்முடைய சமய, தார் மிக முறைகள் மேம்பட்டவையென்பதை உய்த்துணர்ந்து கொண்டார்கள். ஆயின், அறிவுத்துறையிலே அவர்கள் ஐரோப்பாவுக்குப் பல நூற்றாண்டுகள் பின்தங்கிவிட்டனரென்பதைத் தெளிதற்கு வேண்டிய மட்டும் அவர்களுக்கு நியாயமிருந்தது. ஆகவே ஐரோப்பியக் கல்வியறிவு ஒரு நூற்றாண்டுக் காலமாக ஆசியமக்கள் அனைவரதும் பெருமதிப்பைப் பெற்று வந்துளது. அன்றியும், ஐரோப்பியச் சமூக, பொருளாதார அமைப்பு அவர்களுக்கு ஒரு முன்மாதிரி

யாக அமைந்தது. அதனை அவர்களும் ஒரு முன்மாதிரியாகவே முன்வந்து ஆர்வ மொடு ஏற்றுக்கொண்டனர்; ஒருபுடை உலக நிலைவரத்தின் உறுவலியால் அவர் கள் ஏற்றுக்கொள்ள வேண்டியவராயினர். இந்திய, சீன நாடுகளின் வரலாற் றைப் பொறுத்தவரையேனும், இது முன்னம் ஒருபோதும் நடவாத புதுமை வட இந்தியாவிலே ஐந்நூற்றாண்டுக்காலமாக முசிலிம் அதிகாரம் நிலைபெற்றி ருந்தும், சாதிவேற்றுமையும் தீண்டாமையும்பற்றி இந்துக்கள் கொண்ட சமூ தாயக் கருத்துக்களே அவ்வதிகாரம் மாற்றத் தவறிவிட்டது—உண்மையில் அது அக்கருத்துக்களே மேலும் வலியுறுத்திற்று எனலாம். பன்னூறாண்டுக்காலமாக அன்னியராட்சி சீனத்திலே நிலவியக்கண்ணும், கொன்பியூசியப் போதனைகளின் தகைமையை மறுத்துரைக்க அவ்வாட்சி சீனரைத் தூண்டியதில்லை. அல்லது பெற்றாரைப் பேணல் பற்றிய நூலின் பிரமாணப் பயனைச் சந்தேகிக்குமாறும் சீனரை அவ்வாட்சி தூண்டியதில்லை. ஆயின் இன்றோ மேனாட்டுத் தொடர்பின் பயனைத் தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது; சாதிபேதத்தின் கொடுங்கோ லாட்சி அழிந்துவிட்டது. மாபெரிய புனிதாத்துமாவாகக் கொன்பியூசியசு இன்று சீனத்திலே போற்றப்படுவதில்லை—இளைஞரியக்கம் எழுப்பிடுஞ் சுலோகங்கள் இன்று அவரைக் கழித்து வைக்கின்றன. ஆகவே, ஐரோப்பியத் தொடர்பால் ஆசிய வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆழ்ந்தகன்ற பொருண்மை யுடையவை, உருப்படியானவை என்பதற்கையமில்லை. ஆசிரியர்பலர் கருத முற் படுவதுபோல, புதிய ஆசியவுணர்ச்சியொன்று எழுங்காலத்து அவை மறைந்து விடா வென்பதற்கும் ஐயமில்லை.

இந்தச் சந்தர்ப்பத்திலே, மேனாட்டுச் செல்வாக்கு நிரந்தரமாக நிலைத்துநிற் கக்கூடிய பிரதான துறைகளையும், பொதுவாக ஆசியச் சமுதாயங்கள்மீது அச் செல்வாக்குக்களின் பரப்பையும் ஆராய்தல் நலம்.

முதல்வதும் நீடித்து நிலைக்கக்கூடியதுமான செல்வாக்கு சட்டத்துறையி லேலே காணக்கிடக்கின்றது. புரட்சிக்காலத்துக்கு முற்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டு ஐரோப்பாவில் நிலவிய சட்டக்கோட்பாடுகளுக்கமைய, ஆசிய நாடுகள் யாவற்றிலும், சட்டமுறைகள் அடியோடு மாற்றியமைக்கப்பட்டுச் சீர் திருத்தப்பட்டுள. இத்தகைய மாற்றம் புகுந்த முதல் நாடு இந்தியாவே. ஆங்கு, மக்கோலேப் பிரபுவின் தலைமையிலே புதிய சட்டத் தத்துவங்கள் முறையாகப் புகுத்தப்பட்டுச் செவ்வையாகப் பிரயோகிக்கப்பட்டுள. இச்சார்பில், யான் பிற விடத்தெழுதிய சிலவற்றை இங்கு எடுத்துக் கூற விழைகிறேன்: 'ஒரு நூற் றாண்டுக்காலமாக இந்தியாவில் நிலவி வந்துள்ள சட்டமுறை மக்கோலேயின் பணியாகும். அந்த முறையின் எஃகு போன்ற உறுதியான சட்டகத்துக் கமைந்தே இந்தியாவின் சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்தி முழுவ தும் நடந்தேறியுளது. சூத்திரனுடைய சாட்சியத்தைக் கொண்டு பார்ப்பானைத் தண்டித்தலாகாது என இந்து சாத்திரங்கள் விதித்துள்ள ஒரு நாட்டில், சாதிக் கேற்பத் தண்டனையும் வேறுபடும் ஒரு நாட்டில், முசிலிமுக்கெதிராகச் சொல் லப்படுஞ் சாட்சியத்தை எற்கலாகாதென முசிலிம் சட்டம் விதித்துள்ள ஒரு நாட்டில், சட்டத்தின் முன் யாவருஞ் சமமேயென்ற ஒரு பெருந் தத்துவத்தை

நாட்டியுமை, முதற்றரமான சிறப்புடைய ஒரு சட்டப்புரட்சியேயாம். மக்கோலேயின் சட்டக் கோவையை, அதற்கு முற்பட்ட மனு, யசுத்தினியன், நெப்போலியன் என்பாருடைய கோவைகளோடு ஒப்புநோக்குவாரெவரும் இந்தியத் தண்டக்கோவை முன்னே முறைகளினின்றும் ஒரு பெரும் முன்னேற்றத்தைக் குறிப்பது எனுங் கூற்றைக் கண்டிக்கத் துணியார்'[1].

உள்ளங் கவர்ந்து ஓங்கிநிற்கும் இந்தச் சட்டவாணின் பாதுகாப்பிலே, இந்தியாவையும் பாக்கித்தானையும் பர்மாவையுஞ் சேர்ந்த 48 கோடியே 30 இலட்சம் மக்கள் கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாக வாழ்ந்து வந்துளர். அந்தச் சட்ட வமைப்பு சமூகத்தின் அடிப்படையையுமே மாற்றியமைத்த திறமதனைப் பலர் அறியார். வெவ்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த தனிமனிதரைக் கட்டுப்படுத்துந் தனியாட் சட்டங்கள் தம்மிடை வேறுபட்டாலும், தண்டச் சட்டம் எல்லார்க்கும் பொதுவானவொன்றே. இதற்கு அனுசரணையாகப் பெருந் தொகைச் சட்டங்கள் யாக்கப்பட்டுள—இவையெல்லாம் சகல விதச் சமூகவுறவுகளையும் பாதித்துள. உதாரணமாக, இந்திய மாதரின் நிலையடைந்துள்ள மாற்றங்களைக் கருத்திற் கொண்டால், அவற்றை இந்து சமய சாத்திரங்கள் ஐம்பதாண்டுக்கு முன்னருமே புரட்சிகரமானவையாய்க் கருதியிருக்கும். இந்துக்களின் தனியாட் சட்டமுமே—அவர்தம் வாரிசுரிமை, மரபுரிமை, திருமணம், கூட்டுக் குடும்பம், அவர்தம் விசேட சமுதாய அமைப்பிலே அடங்கியுள்ள பிற அமிசங்கள் ஆகியவனைத்தும் பற்றிய சட்டமுமே—இன்று இந்திய நாட்டில் இயங்குகின்ற சட்ட முறைகளாற் பெரிதும் மாற்றியமைக்கப்பட்டுள. இந்நிலையிலிருந்து பழைய இந்துக் கருத்துக்களுக்குத் திரும்பிப் போதல் பற்றிப் பேசுதற்கும் இடமில்லை. மேலையுலகத்தின் புதிய சட்டக் கோட்பாடுகளால் ஏற்பட்ட மாறுதல் நிரந்தரமானது—பிற பல துறைகளிலே நேர்ந்த 'மகத்தான' மாற்றங்கள் அழிந்து போனலும் இந்த மாறுதல் நீடித்து நிற்குமெனலாம்.

சட்ட முறைகள் மாறுதலடைந்தமை, பேரரசுகளால் நேராக ஆட்சி செய்யப்பட்ட இந்தோனேசியா, இந்து—சீனம், பர்மா போன்ற நாடுகளோடு நின்று விடவில்லை. யப்பான் தானுகவே மேற்கொண்ட நவீன சட்டமுறையானது இற்றைக்கு அரைநூற்றாண்டுக்கு மேலாக அங்கு இயங்கிவருகின்றது. யப்பானுடைய சட்டமுறையும் நீதிபாலனமும் நவீனத் தன்மையும் தாராண்மைப் பண்பும் உடையவாய் இருந்தமை பற்றியே, அது தன் பேரரசிலிருந்து ஆணிலப் புறத்துரிமையைக் காலத்தால் முந்தி ஒழியச் செய்தல் இயல்வதாயிற்று. சீனத்திலே, முன்னம் குமிந்தாங்கு புகுத்திய விரிவான சிவிற்கோவையும் தண்டக் கோவையும் ஒதுக்கி வைக்கப்பட்டாலும், புரட்சிக்கு முந்திய காலத்துச் சட்ட முறைக்குத் திரும்பும் நாட்டம் அங்கில்லை—இன்னும் முற்போக்கான சட்ட முறையைப் புகுத்துவதே நோக்கமாகக் காணப்படுகிறது. எவ்வாறுயினும், குடும்ப உறவுகள்பற்றிய புதுச்சட்டங்கள் மேனாட்டுச் சட்டங்களைக் காட்டிலும் முற்போக்குடையவாய்க் காணப்படுகின்றன.

1. A. Survey of Indian History.

பொருளாதாரக் கட்டமைப்புக் குலைந்து, சமுதாயங்கள் பெரிதும் இடுக்கண் படலாம். புதிய புரட்சிச் சத்திகளின் மோதுகையால் அரசியலமைப்புக்கள் அமிழ்ந்தி மறைந்து விடலாம். இத்துறைகளிலே ஆசியச் சமுதாயங்கள் சில காலத்தின் பின்னர் பின்னேக்கிச் செல்லுதல் சாத்தியமே. ஆயின், இப்பிரதேசங்களிலே நாகரிகமெனும் சோதி அணைந்துவிட்டலான்றி, புதிய சட்ட முறைகளின் அடிப்படைக் கருத்துக்களை அத்துணைச் சுலபமாக எவ்வாறு மாற்றமுடியும்? அவ்வாறு மாற்றுவது எளிதான காரியமல்லவே! எனினும், இவ்வாறு தம் பிக்கை தளர்தற்கு, இந்தியா, யப்பான், சீனம் ஆகிய நாடுகளிலே தக்க ஆதாரமில்லை. அந்நாடுகளில், பயங்கரமான குழப்பமும் ஆட்சியறவும் ஏற்பட்ட காலத்திலுமே, விரிவான முறையிலமைந்த சட்டமுறைகள் பங்கப்படாது தப்பிப் பிழைத்துள. எனவே, ஐரோப்பியச் செல்வாக்கால் வந்து புகுந்து உவந்தேற்கப்பட்ட புதிய சட்டமுறைகளால் விளைந்த பெருஞ் சமுதாய மாற்றங்கள், ஆசிய நாகரிகத்திலே நிரந்தரமான இடம் பெறுமென நாம் எதிர்பார்க்கலாம்.

இனி, ஐரோப்பாவொடு மூராணியதன் பயனுக விளைந்த சமுதாய அரசியல் அமைப்புக்கள்பற்றி அத்துணை நிச்சயமாகப் பேசமுடியாது. ஆட்சி முறைகள், அரசியலுரிமைகளின் தன்மை, விரிவான கருத்துப்படியான மக்களாட்சி, தலதாபன நிருவாகங்கள்—இவை யாவும் மறைந்தொழியலாம்; அல்லது தன்மையில் மாற்றமடையலாம்; அன்றேற் சில பிரதேசங்களில், நலிவுற்று உருத்தெரியாவகையிலே தப்பிப் பிழைக்கலாம். என்றாலும், இற்றைநாளில் அவையே ஆசியாவிற் காணப்படும் உன்னதமான மாற்றமெனக் கொள்ளத் தக்கவை. 'குணபுலத்து வல்லாட்சி' எனும் முறைப்படி ஆட்சி செய்யப்படும் நாடு யாதும் இன்று கிழக்குலகில் இல்லை. தெய்வாம்சமாகக் கருதப்படும் ஒரு பேரரசன் வாழையடிவாழையாகத் தொடர்ந்து கோலோச்சும் யப்பான் நாட்டினும், மக்களாட்சியைத் தழுவியமைந்த அரசமைப்பொன்று, மக்களாட்சிக்குரிய சகல சம்பிரதாயங்களோடும் இன்று நிலைபெற்றுளது. மேலும், கிழக்குலகிலே இன்று பொதுமுறையாக விளங்குவது குடியரசு முறையேயாம். ஐரோப்பாவிலே அறுவர் மன்னவரும் மாபெருங் கோமாட்டி ஒருத்தியும் இன்னும் அரசு வீற்றிருப்ப, இசுலாமியரல்லாத ஆசிய மக்களிடையே எஞ்சியுள்ள முடியரசுகள் மூன்றேயாம் (யப்பான், சீயம், நேபாளம்). அன்றியும், புதிது சுதந்திரம் பெற்ற நாடுகளும், அல்லது அன்னியராட்சியை உடைதெறிந்த நாடுகளும் குடியரசுகளாகவே பிரகடனஞ் செய்துகொண்டன. பண்டைப் பேரரசுகளும் இராச்சியங்களும் ஒரு காலத்தில் நிலையுன்றிருந்த இந்தியா, பர்மா, இந்தோனேசியா, சீனம் ஆகிய நாடுகள் இப்போது குடியரசுகளாகத் திகழ்கின்றன. இது தற்காலிகமான ஒரு பருவமாயிருக்கலாம்—எந்தவோர் அரசியல் முறையையும் நிரந்தரமானதெனக் கொள்ளல் முடியாதன்றே; ஆயினும், இலத்தின் அமெரிக்கக் குடியரசுகள் சிலவற்றிற் போன்று, ஆசியாவிலுள்ள மக்களாட்சி நிறுவனங்கள் உருத்திரிந்து தம் ஆதியுருவினின்றும் அமைப்பினின்றும் முற்றுக வேறுபட்டாலும், அல்லது, உரிய நெறியினின்றும் வழுவிச் சென்று தம் ஆதிப்பண்பை இழந்துவிட்டாலும், 'குணபுலத்து வல்லாட்சியின்' தத்துவங்கள் இனிமேல் மீண்டும் வருமாறில்லை. குடி-

களாற் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சில தத்துவங்களையும் கருத்துக்களையும் 'குணபுலத்து வல்லாட்சி' என்பது எஞ்ஞான்றும் பிரதிபலித்து வந்துளது. அக்கருத்துக்களையும் தத்துவங்களையும் இப்போது ஏற்றுக்கொள்வார் இலர்— எனவே இணைக்கும் இழை அறுந்துபட, அக்கோட்பாட்டினுள்ள வசியமும் அற்றுவிடும்.

ஆகவே, ஆசியாவில் இடங்கொண்ட மக்களாட்சி நிறுவனம் சில சந்ததி காலத்துக்கு மேற்பட நீடிக்காவிடினும், அல்லது இலிபீரிய மக்களாட்சியை நிகர்த்த பிரதிமைகளாக அதிவிரைவில் மாறினாலும், மேலைநாட்டிலிருந்து ஆசியா பெற்ற ஆட்சித் தத்துவங்கள் பண்பு மாத்திரையான தலையாய மாற்றத்தின்பாற்படும் என்பதும், அவற்றின் செல்வாக்கு எதிர்காலத்தும் ஊடுருவி நிற்கும் என்பதும் உண்மையேயாகும். புதிய சமூதாய அமைப்பு, புதிய அரசியல் நிறுவனங்களிலே பிரதிபலிக்கவேண்டும். மேலும், வர்த்தகப் பொருளாதாரமும், அதன்வழி உலக வர்த்தகத்திற் பங்குகொள்ளலும், கைத்தொழில் அபிவிருத்தியும், அதன்வழித் திரண்ட செல்வத்தின் ஆதிக்கமும், தொழில்வகுப்பாரின் வலியும், கடந்தகாலத்துப் பெருந்தலை நகரங்களினும் வேறுபட்ட கட்டுக்கோப்பான நகரவாழ்க்கையின் வளர்ச்சியும் ஆகியனவும் இன்னோரன்ன பிற காரணிகளும் ஒன்றுசேர்ந்து, நாட்டுப்புறப் பொருளாதாரத்தையும் நிலவரியையும் ஆதாரமாகக் கொண்ட பழைய அரசியலமைப்புக்கு மீள்வதை இயலாக் காரியமாக்குகின்றன. ஆசிய நாடுகள் மேனாட்டு நிறுவனங்களை இப்போது அச்சொட்டாகத் தழுவிக் கொண்டாலும், காலப்போக்கிலே அவை மேனாட்டு மரபை அவ்வாறு தழுவுதலின்றித் தமக்கே இயல்பான வகையிலே தம்பாட்டிலே புதிய நிறுவனங்களையும் புதிய மாதிரிகளையும் உருவாக்கலாம். கடந்த காலத்திலே எந்த ஆசிய நாடுங் கண்டறியாத புதிய சமூதாய, பொருளாதார அரசியற் சத்திகள் இன்று தோன்றியுள்ளதாதலால், கலப்பில்லாத தூய ஆசிய மரபொன்றுக்கு மீளுமாறில்லை.

பொருளாதார, அரசியல் ஊக்கவிசைகளுக்கு நிலக்களனுயுள்ள பெருநகரங்களின் வளர்ச்சியும், ஐரோப்பியத் தொடர்புகளால் ஏற்பட்ட விளைவேயாம். அவ்வளர்ச்சியிலே அடங்கியுள்ள பெரும் பொருண்மை இதுகாறும் பூரணமாக உணரப்பட்டிலது. இந்தியா, யப்பான், சீனம் ஆகிய நாடுகளை ஐரோப்பியர் வந்தடையுமுன்னம், சிறந்த நகரவாழ்க்கையும் நகரப்பண்பாடும் அந்நாடுகளிலே வளர்ச்சிபெற்றிருந்தன. பட்டணவாசி என்னும் பொருளையுடைய நாகரிகன் எனுஞ் சொல், திருந்திய இரசனையும் இலளிதமான பண்பாட்டையுமுடைய மனிதனைக் குறிப்பதாய், குறைந்த பட்சம் கி. மு. மூன்றும் நூற்றாண்டிலிருந்து அப்பொருளில் வழங்கப்பட்டுளது. வாரணசியும் பிரயாகையும் புரோச்சும் சூரத்தும் போன்ற பெருநகரங்கள், வேத்தவையோடும் வேந்தரோடும் தொடர்பின்றியே இந்தியாவிற் பண்டுதொட்டுத் தழைத்தோங்கியிருந்தன. இந்தியப் பட்டணங்களும் நகரங்களும், பெருந் தலைநகரங்களாக இல்லாவிடத்து, குடித்தொகை செறிந்த பெருமையங்களாகவே இருந்தன. அவை ஓரோவழி வர்த்த

கச் சிறப்புடையவாயும், ஓரோவழி சமயச் சிறப்புடையவாயும் விளங்கின. குடிமை மரபு என்பதொன்று அங்கு இருக்கவில்லை. சீனத்தில் இருந்த நிலைமை இத்தகையதே.

ஐரோப்பியத் தொடர்புகளின் பயனாக வளர்ந்த புதிய நகரங்கள்—பம்பாய், கல்கத்தா, சென்னை, சாங்காய், தியென்சின், சிங்கப்பூர், கொழும்பு, யக்கார்த்தா முதலியன—புதிய ஒரு தத்துவத்தைப் பிரதிபலிப்பன; சுயாதீனமான ஒரு கூருக நகரம் கட்டுக்கோப்போடு அமைந்தமையே அஃது. ஐரோப்பிய நகர வாழ்க்கையிற் காணப்படும் அத்தனை இலட்சணங்களும் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களிலே உண்டு. செரிபு, மேயர், ஒல்டமன் என்ற பட்டவர்த்தனரும் உளர். இச்சார்பிலே நோக்குமிடத்து, சாங்காய் நகரக் கழகத்தைப் பிரித்தானிய வணிகர் கட்டுக்கோப்பாக அமைத்ததுவும், எழுபதாண்டுக் காலத்தின்போது அது உன்னதமான வளர்ச்சியடைந்ததுவும், சீன வேத்தவையிலே அன்னியர் செலுத்திய செல்வாக்கினும் பார்க்க ஆழ்ந்த விளைவு பயந்த பெரு மாற்றங்களாகக் கொள்ளத்தக்கவை.

இந்தியாவிலும் சீனத்திலும் பிற ஆசிய நாடுகளிலும், செல்வம் படைத்த மத்திய வகுப்பாரை நகரமே உருவாக்கிற்று. பொருளாதார, அரசியல் வாழ்க்கையிலே தலைமைதாங்கி நடத்துவோராகவும், இன்றியமையாத விஞ்ஞானத்திறமை கட்கு உறைவிடமாகவும் மத்திய வகுப்பார் மிளிர்ந்தமை, பெரும்பாலும் புதிய நகரவாழ்க்கையின் விளைவேயாம். மத்தியகால ஐரோப்பாவிற் போன்று, ஆசிய நாடுகளினகத்தே பிறதுறைகளிற் பின்னிடைவு நிகழ்ந்தாலும், பெருநகரங்கள் நாகரிக மையங்களாகத் தப்பிப் பிழைத்தல் சாத்தியமே—இவ்வுண்மை எளிதிற் புறக்கணிக்கக் கூடியதன்று. அவ்வாறெல்லாம் நிகழுமாயின், பெருநகரங்களிலே நகரவாழ்க்கை தப்பிப் பிழைக்குமிடத்து, நாம் ஐரோப்பாவையே அதற்காகப் பாராட்டவேண்டும்.

ஆசியா மீது ஐரோப்பா செலுத்திய ஆதிக்கத்தின் நேர்விளைவாக எழுகின்ற பிறிதொரு விடயத்தையும் இங்குக் கவனிக்கவேண்டும். ஆசியாவின் முந்தை வரலாற்றில் என்றுமே அறியப்படாதவகையில், பரந்த பிரதேசங்களைப் பெரும் பெருந் தேசிய அரசுகளாக ஒருமைப்படுத்தியதே அஃது. உதாரணமாக, இந்தியாவானது அதன் நீண்ட வரலாற்றில் எக்காலத்திலேனும், இன்றுள்ளவாறு தனியோர் அரசாக ஒருங்கிணைக்கப்பட்டதில்லை. இந்துமதத்தின் ஒருமைப்பாடும், சங்கதப் பண்பாட்டின் ஒற்றுமையும், இமயந்தொட்டுக் குமரி மூனைவரை பரந்துகிடக்கின்ற பிரதேசமனைத்தையும் தனியோர் ஆட்சிக் கீழ் வென்றடிப்படுத்தத் தலையாய இந்தியப் பேரரசு ஒவ்வொன்றையும் தூண்டிவிட்ட அந்த அரசியலாக்கமுமே இந்திய ஆணிலத்தின் ஒருமைப்பாட்டைக் கடந்த காலத்திலே காத்து வைத்தன. தண்டுதலில்லாத இந்த ஊக்கம், முக்கியமான ஒவ்வொரு வமிசத்தையும் பண்டைநாளில் உந்தியது—ஆயின் அது கைவந்ததில்லை.

பிரித்தானியராட்சியின்போதும், இந்திய ஆணிலத்தில் ஏறத்தாழ ஐந்திலிரு பாகமான பரந்த பிரதேசம் அரைகுறைச் சுதந்திரம் படைத்த இராசாக்களின் ஆட்சியில் இருந்தது. தனியோர் அரசமைப்பின்கீழ், தனியொரு சட்டமுறைக்கு

அமைந்த தனியோர் அரசாக இந்தியா, அதன் வரலாற்றில் முதன்முதலாக, இன்று ஒருமைப்படுத்தப்பட்டுளது. ஒரு நூற்றாண்டுக் காலமாகத் தொடர்ந்த பிரித்தானிய நிருவாகத்தின் பயனே அதுவென்பதற்கு ஐயமில்லை. பிரித்தானிய நிருவாகம் தான் உருவாக்கிய ஆட்சியமைப்பின் மூலமாகவும், தனக்கு மாருகத் தோற்றுவித்த எதிர்ப்புச் சத்திகள் மூலமாகவும் இந்திய மக்கள்மீது ஒருமைப் பாட்டைத் திணித்தது. இச்சார்பில் இந்தோனேசியா இன்னும் துலக்கமான உதாரணமாகும். இத்தீவுகள் கடந்த காலத்திலே ஒரு காலத்தும் தனியோர் அரசியல் அமைப்பாக ஐக்கியப்படுத்தப்பட்டதில்லை. யாவா, சுமாத்திராப் பேரரசுகள் தாமும் அத்தீவுக் கூட்டத்தைத் தனியோர் அரசாக ஒருங்கிணைத்தற்குக் கனவிலும் கருதியதில்லை. சிறீவிசயத்துச் சைலேந்திர மன்னவர் கடற்படை வலியிற் பெருமை சான்றிருந்த காலத்தும்—போணியோவும் மொலுக்காசும் கணக்கற்ற சண்டாத்தீவுகளும் ஒருபுறமாக—யாவாத் தீவு முழுவதிலும் மேலாண்மை நாட்டக் கனவிலும் கருதினரல்லர். ஐரோப்பியர் அத்தீவுகளை அடைந்தகாலை, இந்தோனேசிய ஒற்றுமையுணர்ச்சி யாதும் இருக்கவில்லை. அத்தீவுகளிடையே இன்று காணப்படும் ஒருமைப்பாடு, 450 ஆண்டுக்கால ஐரோப்பியத் தொடர்பாலும், ஒல்லாந்து நாட்டவர் உருவாக்கிய பொருளாதார, அரசியற் பிணைப்புக்களாலும் விளைந்த பயனே.

சீனத்தை நோக்கினும், ஐரோப்பாவுக்கு மாருகக் கிளர்ந்த எதிர்ப்பே சீன ஆணிலம் ஒருமைப்படுதற்கு ஏதுவாயது. அறப்பழைய காலந்தொட்டுக் குமிந்தாங்குப் புரட்சி மூண்ட காலம் வரையும், பேரரசனுடைய நேரான கட்டளைகளுக் கமையவே சீனப் பெருமாகாணங்கள் ஆளப்பட்டபோதும், ஒரேசிரான பூட்கைகளுக்கு அவை அமைந்திருக்கவில்லை. போர் சம்பந்தமான விடயங்களிலுமே பேரரசு முழுவதும் ஒருங்கே ஈடுபட்டதில்லை. அபின் யுத்தம் 1839-42 வரையான காலத்தில் நிகழ்ந்தபோது, குவாந்தங்கு அரசாங்கமே அதில் ஈடுபட்டிருந்தது—போர் எவ்வாறு சென்றுகொண்டிருந்தது என்பதுமே பீக்கிங்கு வேத்தவைக்குத் தெரியாதிருந்தது. 1895 இல் யப்பானெடு போர் மூண்டபோது, அப்போர் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பாகவன்றிப் பெரும்பான்மையும் சிகிலிப் பதிலிராயனது பொறுப்பாகவே யிருந்தது. உண்மையில், பதிலிராயங்கள் பலவற்றைக் கொண்ட தளர்வான நாட்டுக் கூட்டவையமாகவே பேரரசு அக்கால் இருந்தது. சீனமக்களின் ஒற்றுமையுணர்ச்சியும், மத்திய அரசாங்கமே உயரதிகாரிகளை நியமிக்கும் முறையும், பேரரசனது அதிகாரமுமே அதனை ஒரு வகையாக ஒன்றுபடுத்திவைத்தன. ஐரோப்பிய வல்லரசுகளோடு தொடர்ந்த விவகாரங்களை நிருவகிப்பதில் இடர்ப்பட்ட பீக்கிங்கு அரசாங்கம், வெளிநாட்டு அலுவலகமும் நாட்டுப்படையும் சுங்கப்பகுதி போன்ற சில மத்திய திணைக்களங்களுங் கொண்ட ஒரு மத்திய நிருவாக அமைப்பாகத் தன்னை மாற்றிக் கொண்டது. குமிந்தாங்குப் புரட்சிக்குப் பின்னரே (1925-7), செவ்வையான மத்திய நிருவாகத்தையும், ஒழுங்கான தேசியப் படையையும், முக்கியமான விடயங்களைப் பொறுத்தவரை தெளிவாக வரையறுக்கப்பட்ட பூட்கைகளையும் உடைய

தேசிய அரசாங்கச் சீனத்தை மாற்றுதற்கு உருப்படியான முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இம்முயற்சியிலே குமிந்தாங்கு பூரண வெற்றி அடைய முடியவில்லை. சான்சியிலே யென் இசி-சான்போன்ற பழைய போர்ப் பிரபுக்களும், கான்சுவிலே மூசிலிம் 'மா' போர்ப்பிரபுக்களும் பிறரும் வழக்க மாகச் செலுத்திவந்த நாமத்தளவான விசுவாசத்தையே செலுத்த விரும்பினர். ஆயினும் ஒருமைப்பாட்டுச் சத்திகள் அப்போதும் இயங்கிக்கொண்டிருந்தன. சீனத்தின் ஐக்கியத்தை இறுதியில் மக்கள் குடியரசே நிறைவேற்றி வைத்ததா யினும், அது முன்னமே தோன்றித் தொழிற்பட்டுக்கொண்டிருந்த சத்திகளின் முடிபேயாம்.

ஐரோப்பாவொடு ஆசியா கொண்ட தொடர்பின் நேரான விளைவாகச் சமூ தாய, அரசியல் நிறுவனங்களிலே தோன்றிய மாற்றங்களை இதுகாறும் ஆராய்ந் தோம். எண்ணங்கள், கருத்துக்களின் சார்பிலேயே இவற்றினும் ஆழ்ந்தகன்ற மாற்றங்கள் உண்டாயின எனலாம்—ஆயின் அவற்றை இப்பனுவலில் ஆராய் தல் ஒல்லாது. தற்கால விஞ்ஞானங்களும், வரலாறும், உலகைப்பற்றிய விரி வான அறிவும் வந்து புகுந்தமையால், ஆசியாவின் உள்ளத்தில் யாது நிகழ்ந் தது, உண்டாய மாற்றங்கள் யாவை என்பன வெல்லாம் மனத்தையள்ளும் கவர்ச்சி பொருந்திய ஆராய்ச்சி விடயங்கள். இக்கருத்துப் புணர்ப்பினுல் யாது நிகழும் என்பதை யாருமே எதிர்வுகாணவும் முடியாது; எதிர்வு கூறவும் முடி யாது. மனித வாழ்க்கையின் ஒவ்வோர் அமிசத்தையும்— சமயம், கலை, மொழி, சிந்தனைப் போக்கு, மனித உள்ளத்தை நெடுங் காலமாகக் கவர்ந்து வந்துள்ள தத்துவ விசாரங்கள் எனுமிவற்றை யெல்லாம்—அது தொட்டுளதென்பது வெளிப்படை. குணபுலத்து மதங்களும் தத்துவ ஞானங்களும் ஒதுக்கப்படாது இன்று மேலும் வலிபெற்று விளங்குகின்றனவாயின், அவை ஆழமான மாற்றங் களுக்கு ஆட்பட்டிலவென்பது கருத்தன்று. பிற மதங்களையும் பிற தத்துவ ஞானங்களையும் பொறுத்தவரை, அவை தமது நிலையை உறுதியாகப் பேணியுள. போட்டியாயுள்ள பிற மதங்களாலன்றி நவீன விஞ்ஞானத்தாலே திணிக்கப்பட் டுள்ள முரண்பாடுகளைத் தீர்க்கும் பொருட்டு மிக நுணுக்கமான மாற்றங்களை அவையும் அடைந்துள. இவ்வழி, ஐரோப்பியத் தொடர்பாற் பெரும்பாலும் வந்துபுகுந்த புதிய கருத்துக்களின் செல்வாக்கை, இந்து பௌத்த மதங்க ளுக்கு இற்றைக் காலத்தில் எழுந்துள்ள புதிய விளக்கங்களிலும் வியாக்கி யானங்களிலும் காணலாம்.

தத்துவஞானமும் சமய சிந்தனையும் மக்கள்மீது பொதுவாக எத்துணைச் செல்வாக்குச் செலுத்தினும், அறிவாளிகளின் விசேட கவனத்துக்கே அவை உரியவை. ஆயின் மொழி அத்தகையதன்று. ஐரோப்பியச் செல்வாக்கு இங்கே மிகத் துலக்கமாகக் காணப்படுகிறது. சீனம், இந்தியா, யப்பான் ஆகிய நாடுக ளின் பேரிலக்கியங்கள் முதலாகச் சில கோடி மக்களே பேசிடும் சிறுமொழிகள் ஈறுக எல்லாவிடத்தும், பழைய மரபுகளை மறைத்து மேலூட்டுச் செல்வாக்கு மீக்கொண்டு நிற்பதைக் காணலாம். இந்நூற்றாண்டிலே சீனநாட்டில் நிகழ்ந்த பல புரட்சிகளைக் காட்டிலும் சீன இலக்கியப் புரட்சியே (1918-21) கூடிய மூக்

கியமானதென எதிர்காலத்திற் கருதப்படலாம். இன்று சீனத்திலே வழக்காற்றி லிருக்கும் இலக்கிய மரபுகளிலே செவ்வியல் இலக்கியங்களின் செல்வாக்குப் பெரும்பாலுங் காணப்படுவதில்லை எனலாம். அவை மேனாட்டு இலக்கிய வடிவங்களையே பெரிதும் முன்மாதிரியாகக் கொண்டவை. செவ்வறைக் கனவையோ மூன்று இராச்சியங்களின் கதையையோ சீன நவீனம் இன்று பின்பற்றுவ தில்லை. ஆயின், தோல்சுதோய், தேகனேவு, உரோமெயின் உரோலண்டு, தோமசு மான், மக்சிம் கோக்கி என்பாருடைய நவீனங்களின் அச்சிலேயே அது உரு வாக்கப்படுகின்றது. சிறுகதையிலக்கியத்துக்கு, சீனச் செல்வியல் இலக்கியத் திலே முன்மாதிரியாகக் கொள்ளத்தக்கது யாதுமில்லை. அது முற்றும் மேனாட் டிலே தோன்றிய இலக்கியவகை. இலூஇசுன், மாவோதுங், குவோ மோ—யோ என்பாருடைய இலக்கியப் படைப்புக்கள் மோப்பசான், செகோவு போன்ற முற்போக்குடைய இலக்கியகர்த்தாக்கள் ஆகியோரின் மனோதர்மத்தைக் காட் டுமேயன்றி, பண்டைச் சீன எழுத்தாளரின் இலக்கியங்களோடு யாதுந் தொடர் பில்லாதவை. கடந்த இருபதாண்டுக் காலத்தின்போது, ஆக்கப்பண்புள்ள சீன இலக்கியங்களில் ஐரோப்பியச் செல்வாக்கே முதன்மைபெற்றிருத்தல் காண லாம்.

இந்தியா இன்னும் தூலக்கமான உதாரணமாய் அமைந்துள்ளது. இந்தியப் பெருமொழிகளிலே தொடக்கத்திற் புரட்சிகரமான மாற்றம் யாதும் ஏற்பட வில்லை. மேனாட்டு இலக்கிய வடிவங்கள் இந்திய மொழிகளிலே ஆழமாக வேரூன் றிய போதும், நவீனங்கள், சிறுகதைகள், நாடகங்கள் ஆதியன மக்கள் அபி மானத்தைப் பெற்று மக்களுள்ளத்திலே இடம்பெற்றபோதும், பழைய செவ்வி யல் மரபே இன்னும் ஆதிக்கம் பெற்றிருந்தது. 3,000 ஆண்டுக்கால இலக்கிய மரபையுடைய இந்தியா குறிப்பாகக் கவிதையிலக்கியத்திலே செவ்வியற் சம்பிர தாயத்தையே இறுகப்பற்றி நின்றது. விக்ரோறியா காலத்துப் பண்பாட்டிலே ஊறித் திளைத்த தாகூரின் படைப்புக்களிலேயும் சங்கத மரபு மேம்பட்டு நின் றமை புலனாகியது. மேனாட்டு இலக்கிய வடிவங்கள் அனேகத்தையும் அவர் கையாண்டார். நாடகம், சிறுகதை, இசைப்பாடல், கட்டுரை, முதலியவற்றிலும் அவருடைய இலக்கியப் படைப்புக்கள் தோன்றின. ஆயின் வியாசர், வால்மீகி என்பாருடைய இதிகாசங்களிலேயும், காளிதாசர், சயதேவர் என்பாருடைய கவிதையிலேயும், வித்தியாபதி, கபீர், மீரா என்பாருடைய கீதங்களிலேயும் பயின்றெழுந்த குரலே அவருடைய இலக்கியப் படைப்புக்கள் யாவற்றிலும் எதிரொலித்தது. எனினும், கடந்த மூப்பதாண்டுக் காலத்தின் போது, இந்தி யப் பெருமொழிகளில் எழுந்த இலக்கியங்களிற் புரட்சிகரமான மாற்றங் காணப்பட்டது. செவ்வியல் நடையிற் காணும் செம்மைகள் பற்றிய சிந்தனை மறைந்துவிட்டது. மேனாட்டு இலக்கிய வகைகள் யாவற்றினின்றும் அவை வரையாது இரவலாக வாங்கத் தலைப்பட்டுவிட்டன. இப்சன், பேணாட் சோ, பிரண்டெலோ, செகோவு என்பாரிடமிருந்து நாடகத்தையும், பிரான்சிய இர சிய இலக்கிய கர்த்தாக்களிடமிருந்து சிறுகதையையும் நாவலையும், நவீன

ஐரோப்பியக் கவிதை மாபுகளிலிருந்து கவிதையையும் வரையாது பெறுகின்றன. தாமரையும், சந்திரனும், அன்னமும்பற்றிய விசாரம் மறைந்துவிட்டது; பழங் கூளமாகிவிட்ட அணியலங்காரங்கள் வழக்கொழிந்து விட்டன.

புதிய கலேவடிவங்கள், குறிப்பாக உரைநடையில் இயன்றவை, பழைய இந்திய மாபினின்றும் பெற்றது யாதுமில்லே எனலாம். இந்நூற்றாண்டிலே சென்ற இருபத்தைந்தாண்டுகளாக, மேனாட்டு மாபைத் தழுவியெழுந்த இலக்கியவகைகள் இந்திய மக்களிடைப் பரவி அவர்தம் அபிமானத்தைப் பெற்றமையாலே, இன்று ஐரோப்பியச் சிந்தனே அவர்களிடையே இயல்பாகப் பரவுகின்றது. புதிய இலக்கியத்திலே இடம்பெறுகின்ற சமுதாய அரசியற் பொருள், சாரமளவில் உலகப் பொதுநோக்குடையதாயிருக்கிறது. ஐரோப்பாவிலே பழைய சமுதாய அமைப்பு முறிவடைந்தமையால் ஏற்பட்ட செல்வாக்கும், மாக்சியக் கருத்துக்களின் ஊக்கவிசையும் இல்விலக்கியங்களிலே மிளிர்வதைக் காணலாம். ஆக்கப்பண்புள்ள இலக்கியப் படைப்புக்களால் மாத்திரமன்றி, வாரவிதழ்கள், சஞ்சிகைகள், புதினத்தாள்கள், சினிமாக்கள், இரேடியோ ஆகியவற்றின் மூலமும் இப்புதிய செய்தியும் புதிய இலக்கியங்களும் மென்மேலும் மக்களிடைப் பரவுகின்றன. முல்கு ராச ஆனந்தர் கூறுவது போன்று, "மூற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செல்வாக்கிற்குத் தம் வாழ்ளில் யாதும் ஒருகாலத்தில் ஆளாகாத நாற்பது வயதுக்குட்பட்ட எழுத்தாளரைக் காணமுடியாது; அச்சங்கம் 1935 இல் நிறுவப்பட்டது. அச்சங்கத்தின் வாயிலாகத் தோன்றிய இயக்கங் காரணமாக, எமது வாழ்க்கை நிலேமைகளே மிகவுயர்ந்த இலக்கியங்களோடு தொடர்புபடுத்திக் கூறும் கட்டுரைகளும், கவிதைகளும் பெருந் தொகையாக வெளிப்படலாயின. இவ்வழி, ஐரோப்பாவின் குரலன்றிப் புதிய வாழ்க்கையின் குரலே ஆயிரமாயிரம் மக்களின் வாயிலே எதிரொலிப்பதைக் கேட்கிறோம்.

இவ்வாறுக, ஆசிய நாடுகளிலே நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்குமிடையே பேதம் நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். மொழியில் ஏற்பட்ட இம்மாற்றமே, ஆசியாவிற் குறிப்பிடத்தக்க தலேயாய ஆழ்ந்தகன்ற பெருமாறுதல் எனலாம். அது வளர்ச்சிபெற்ற உள்ளத்தினே மாத்திரம் பிரதிபலிப்பதன்று; இடையருது நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றத்தையும் அது குறிப்பது. இவ்வகையில், மக்களிடையே மென்மேலும் பரவிவருகின்ற புதிய கருத்துக்களேயும் சிந்தனேகளேயும் அது குறிப்பதாகும். புதிய ஆசிய அரசு ஒவ்வொன்றும், சுதந்திரம் பெற்றதும், முதன்முதலாக மேற்கொண்ட முயற்சிகளிலொன்று ஒலிபரப்புஞ் சேவையைப் பெரிதும் விருத்தி செய்ததேயாம். இவ்வகையில் யாம் குறிப்பிடத்தக்க பிறிதொரு விடயமும் உண்டு. நவீன இலட்சியங்களே மக்களிடைப் பரப்புதற்கு ஏற்ற கருவியாக இலக்கியத்தை விருத்திசெய்தற்கு இந்தியாவும் சீனமும் இந்தோனேசியாவும் பிற ஆசிய நாடுகளும் எடுத்துக் கொண்ட தீவிரமான முயற்சியே அஃது.

இவ்வாறு புதிய கருத்துக்கள் ஆசிய நாடுகளிலே பரவுதற்கு மேனாட்டுத் தொடர்பும், பின்னர் ஒற்றுமைப்பர்ப் புரட்சியின் செல்வாக்கும், அடுத்துப் பொதுவுடமைக் கொள்கையின் பீடும் ஏதுவாக இருந்த போதும், அதனால் ஆசிய நாடுகளின் நாகரிக மரபிலே யாதும் மூறிவு ஏற்பட்டதில்லை யென்பதையும் இங்கு எடுத்துக் கூறுதல் வேண்டும். சீன இந்திய நாகரிகங்களும் பிறவும் இப் புதிய அனுபவத்தாலும் கருத்துக்களாலும் புதுமெருகு பெற்று வளமடைந்த போதிலும், தத்தம் பரம்பரைச் சிறப்பியல்புகளை இறுகத் தழுவிப் பேணி வருகின்றன. தென்னாசியாவிலும் தென்கிழக்காசியாவிலும் யப்பானிலும், நாட்டு மதங்கள் புத்தமைப்பும் புதுவலியும் பெற்றமையே அதற்குத் தலையாய காரணமாகும். கிறித்தவ மதத்தின் மோதுகையை நிருவகித்து நிற்கும்வகையில், இந்து மதமும் பௌத்தமும் மற்று இசுலாமும் தம்மைச் சீர்திருத்தியவாற்றால், புத்தூக்கமும் புத்துரனும் பெற்று வளர்ந்தன. சமயமரபுகளைத் தகர்க்குமளவிற்குக் கிறித்தவ மூயற்சி வெற்றி கண்ட சீனத்திலேயும், தேசிய நாகரிகத்தில் உள்ள பற்றுதல் சிறிதுங் குறையாது ஆழ்ந்ததாகவே இன்னும் இருக்கின்றது; அன்றியும், எளிதின் மாற்றமுடியாத இனப்பண்புகளும் உளப்பாங்குகளும் அதனை மேலும் வலியுறுத்தியுள்ளன. இவ்வழி, ஐரோப்பியச் செல்வாக்காற் பெருமாற்றங்கள் ஆசியாவில் விளைந்தபோதிலும், இன்னும் பெரிய மாற்றங்கள் இனி மேலும் விளையக்கூடுமாயினும், ஆசிய நாகரிகங்கள் தத்தம் தனித்தன்மை இழவாது விருத்திசெய்து, ஆன்மிகச் சார்பிலும் அறிவுத்துறையிலும் கிறித்தவ உலகினின்றும் வேறுபட்டே நிற்கும் என்பதற் கையமில்லை.

ஆசிய மக்களின் அரசியன் மனோபாவத்திலே காணப்பட்ட விசித்திரமான ஒருதன்மையை இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். வெளியுலகத்தைப் பொருட்படுத்தவேண்டியதில்லை யெனும் ஒரு நம்பிக்கையே அஃது—அதனை மாற்ற நெடுங்காலம் பிடித்தது. சாதாரண இந்துவானவன், இந்தியாவுக்கு அப்பாலேயும் நாடுகளும் மக்களும் உளர் என்பதை உணராதிருந்தான். பிரித்தானியர் தமது ஆதிக்கத்தை இந்தியாமீது நிறுவிய பின்னரே, ஐரோப்பாவை அவன் உள்ளவாறுணர்ந்தான். நாகரிக உலகிற்கு அப்பாலே வாழும் மிலேச்ச சாதியினரே ஐரோப்பியர், என்றவாறுகச் சீனமக்கள் கொண்ட கருத்தைச் சிதறடித்தற்கு, இரு மூறை யுத்தம் புரிய வேண்டியதாயிற்று. சீனப் போரசின் ஆணையாளனை இலின் என்பான் 1842 இல் விற்றோரியா இராணியாரை விளித்தூசைக்குமாற்றால், அவரைக் 'குலமூதாட்டி' எனக் கள்ளங் கபடமின்றிக் குறிப்பிட்டான். பத்தொன்பதாம் நூற்றாண்டிலேதானும், சீனரைப் பொறுத்தவரை, உலகம் சீனராச்சியத்தையே சுற்றிச் சுழன்றுகொண்டிருந்தது. அதுவே 'வானுலகப் போரசு' எனச் சீனர் நெஞ்சார நம்பினர். சீனத்தின் வெளிவிளிம்பிலேயுள்ள அரசுகளும் அக்கருத்தை ஏற்றொழுகின. தொலை தூரங்களிலே முக்கியமான நாடுகள் இருந்தாலும், அவை பெருமையிலும் பலத்திலும் நாகரிகச் சிறப்பிலும் தமது நாட்டுக்கு எவ்வாற்றாலும் ஈடாக முடியாது என்றே சீன மக்கள் நம்பியிருந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைக் கூற்றிலேயே, உலகம் பற்றிய அறிவைப் பொறுத்தவரை ஆசிய மக்களின் கண்ணை மறைத்திருந்த அறியாமையிருள் நீங்கிற்று. தாம் முன்னம் அறியாதிருந்த ஒரு பரந்த உலகின் ஒரு பாகமே ஆசியாவென்பதையும், அந்நாளில் அது முக்கியமான பாகமுமன்று என்பதையும் முதன்முதலாக அவர் அப்போதே உணர்ந்தனர். படிப்படியாக அறியாமைத் திரையகல, உண்மையுலகம் அவர்களுக்குப் புலப்பட்டது. யப்பானியர் முதலில் உணர்ந்தனர்; பின்னர் மற்றையோரும் உணரத் தலைப்பட்டனர். அயன மண்டலப் பிரதேசத்துப் பொருள்களுக்கு இருந்த பெருமதிப்புக் காரணமாக ஆசியாவின் சிறப்புப் பெருகியமையாலும், ஒரு பெரும் வல்லரசாக யப்பான் வளர்ச்சி பெற்றமையாலும், ஐரோப்பிய அரசுகளின் போட்டிக்களமாயிருந்து பின்னர் அபாயப் பிரதேசமாகச் சீனம் மாறுதலடைந்தமையாலும், உலகில் ஆசியா வகித்த சிறப்பு நிலையை வெளிநாட்டோர் உணர்ந்து கொண்டனர். முதற்பெரும் போரின் பின்னர், ஐரோப்பிய அரசுகள் போலாது பசிபிக்குப் பேரரசாகவுந் திகழ்கின்ற அமெரிக்க நாடே மேலையுலகத்தில் முதன்மை பெற்ற போது, உலக அரசியலெனும் சுழிப்பிலே ஆசியா நேராகப் புகுந்து கொண்டது.

ஆதலின், ஆசிய வரசுகள் இனிமேல் ஒதுங்கி வாழும் பூட்கையைக் கடைப்பிடிக்கவும் முடியாது; பிற நாடுகளைப் புறக்கணித்து அவை இல்லையென்ற மனோபாவத்தோடு வாழவும் முடியாது. எனவே இற்றைக் கால உலகத்து அரசியல் விடயங்களிலே சீனமும் இந்தியாவும் இந்தோனேசியாவும் யப்பானும் சிறப்பான பங்கெடுத்தற்கு வாய்ப்பு உண்டு. கிழக்குலகமீது மேனாடுகள் முன்னம் செலுத்திய ஆதிக்கத்தின் விளைவாகத் தோன்றிய பெருமாறுதலே அதற்குக் காரணமாகும்.

ஆசியத் தொடர்பால் ஐரோப்பாவில் ஏற்பட்ட விளைவுகள், சாலக் குறைந்தவையே யாயினும், சிறப்பற்றவை யெனக் கருதலாகாது. பதினேழாம் பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலே ஐரோப்பாவில் முதலாளித்துவம் வளர்ந்தமை, தன்னளவானே புரட்சிகரமான ஆழந்தகன்ற ஒரு மாற்றமாகும். அவ்வளர்ச்சி ஐரோப்பிய வர்த்தகமும் வியாபார முயற்சியும் ஆசியாவுட் புகுந்து பரவியவாற்றோடு நெருங்கிய தொடர்புடையது. தலையாய மேற்கைரோப்பிய நாடுகளின் அரசியல் விருத்தியும், அவ்வாறே, கிழக்குலகிலே தாம் ஆட்சி செய்த குடியேற்ற நாடுகளின் மூலவளங்களை அவை சுரண்டுவதாய பூட்கையாலும், அந்நாடுகளோடு வர்த்தகஞ் செய்து பெற்ற செல்வத்தாலும் பெரிதும் ஊக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளின் பொருளியல் வாழ்க்கையிலும், கிழக்குலகத் தொடர்பால் ஏற்பட்ட நிரந்தரமான விளைவுகளைக் காணலாம். உதாரணமாக, ஐரோப்பியரின் உடை, உணவு, பானம் போன்றவற்றிற் கிழக்குலகின் செல்வாக்குப் படிந்துளது. பண்பாடு, கலை, தத்துவஞானம் ஆதியாந் துறைகளிலே, குணபுலத்துச் செல்வாக்கு ஐரோப்பாவிற் புகுந்து செறிந்த வரலாற்றை முன்னமே சுருக்கமாக ஆராய்ந்தோம். ஆயின் அச்செல்வாக்கின் விளைவுகளை இப்போது அளந்தறிதல் கடினமாகும். பதினெட்டாம் நூற்றாண்டிற் பரவிய உரொக்கொக்கோ இயக்கம் போலாது, பத்தொன்பதாம் இருபதாம் நூற்

ருண்டுகளில் ஆன்மிகத்துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் ஏற்பட்ட தாக்கங்களும் எதிர்த்தாக்கங்களும் மிக ஆழமானவையாய், இன்னும் பூரணமாக வெளித் தோன்றாது உள்ளடங்கியிருக்கின்றன. அண்மைக் காலத்திலே மீச்சிறப் படைந்துவிட்ட இரு போக்குக்களாகக் கொள்ளத்தக்கவை சீன இலக்கியத்தின் செல்வாக்கும் இந்திய தத்துவ ஞானத்தின் செல்வாக்குமாகும். இச்செல்வாக்குக்களின் ஆழவகலங்களை அளந்தறிதல் இன்னும் நெடுங்காலத்துக்கு ஒல்லாத தொன்றாகவே இருக்கும். எனினும், ரி. எசு. எலியட்டுக் கூறியது போன்று, இற்றைக்கால ஐரோப்பியக் கவிஞர் பெரும்பாலார் சீன விலக்கியத்தின் செல்வாக்கிற்கு யாதுமோர் வகையில் உட்பட்டவரே. குணபுலவாதிகளையும் அறிஞரையும் கருத்திற் கொள்ளாது, கற்றறிந்த பொதுமக்களையே பெரும்பாலுங் கருத்திற் கொண்டு பகவற்கீதையும் உபநிடதங்களும் ஆண்டுதொறும் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவருவதைக் காணும்போதும், இந்திய நாட்டு மகான்களின் சமயானுபவங்களிலே ஐரோப்பியர்க்குள்ள ஈடுபாட்டைக் காணும்போதும், ஐரோப்பியச் சிந்தனை வளர்ச்சியிலே குணபுலத்துச் செல்வாக்கு எத்துணையாக ஊடுருவிப் பரக்கின்றதென்பது புலனாகும். இச்செல்வாக்கை எதிர்காலத்து வரலாற்றறிஞர் பொருண்மைமிக்கதாய்க் கொள்ளுதல் கூடும்.

மேலும், உறுபயன் தரத்தக்கது எதுவும் மத்தியதரைக் கடலையண்டியே தோன்றி வளர்ந்தது எனும் நம்பிக்கையுறுதியை, அண்மைக்காலத் தொல்பொருளாராய்ச்சி பெரிதுங் குலைத்துவிட்டது. ஆசியப் பெருமக்களின் தொல்வரலாறும், நாகரிகமடைந்த மானுட குலத்தின் அரும்பெறலுரிமையின் ஒரு கூறெயெனுங் கருத்து இப்போது வலுப்பெற்று வருகிறது. இவ்வழி, மேனாட்டுக்குப் புறம்பான அனுபவமனைத்தும் இரண்டாந்தரத்த—புகழில—எனுங் கருத்தைக் கொண்ட குறுகிய ஐரோப்பியவாத மனப்பான்மை காலப்போக்கிலே தகர்ந்துவிடலாம். ஆசிய—ஐரோப்பியத் தொடர்பால் விளைந்த செல்வாக்கு முற்றும் ஒருதலைப்பட்சமானதன்று என்பதைக் காட்டுதற்கும், ஆசியாமீது அன்னியர் ஆதிக்கஞ் செலுத்துதல் பழங்கதையாகிவிட்ட இந்நாளில், பண்பாட்டுத் துறையிலே கொள்ளலுங் கொடுத்தலும் ஆகிய பரிமாற்றம் இன்னும் நின்று பயனளிக்கும் என்பதை உணர்த்துதற்குமே, இவ்விடயங்களை ஈண்டுத் தொட்டுக் காட்டினும்.

அட்டவணை

அ

அக்பர், 326
அகமதாபாத்து, 17, 372
அகாசி (போர்க் கப்பல்), 249
அங்கிரியா, கஞ்சி, 70
அங்குங்கு, சுலுத்தான், 90
அங்கோர், 188
அசந்தாக் குகையோவியங்கள், 378
அசாபு சா, 72
அசாம், 117–8, 128, 357
அசுராரா, 9
அசேப் போர், 71, 79
அசோக சாசனம், 378
அசோசு, 9
அஞ்சிரோ, 327
அட்சன், 5, 6, 13, 355
அட்லின், 10
அடிசன், 354
அடில் சாகி, 27
அந்திராடே, சைமன், 50–1
அந்திராடே, பெர்ணந்து பெரசு, 30, 48
அந்துவேப்பு, 3, 22, 37
அப்துர் இரசாக்கு, 17, 19
அப்துல் இரகுமான், 130
அப்பொன்சோ அல்புகேர்க்கி, 15, 24, 27–31, 37, 50, 60, 69, 94, 250, 367
அபிசுபேக்கு, 376
அபின், 22, 59, 96–7, 99–101, 104, 107, 187, 205–6, 301, 340
அபின் போர், 101–3, 107–8, 165, 206, 386
அபுகானித்தான், 128–30, 208, 213–4, 264
அபுகானியப் போராட்டம், 79, 129–30
அம்பார், கோசா, 24
அம்போய்னா, 31, 38–9, 53, 85, 89, 327
அமாங் குராத்து I, சுலுத்தான், 90
அமானுல்லா, மன்னன், 264
அமிடாவாதம், 342
அமித்தடாம், 36, 46
அமூர், 56, 193–9, 204
அமெரிக்கக் குடியேற்றங்கள், 44
அமேத்து, பிரபு, 60
அமோய், 103, 141, 150, 245
அயிகுன் பொருத்தனை, 199, 201
அயினன், 157
அரக்குப் பொருள், 353
அரகன், 81, 85
அரப்பா, 378
அரவிந்தகோசு, 344
அரா, 259
அராபியக் கடல், 15, 25, 26, 27
அராபியர், 15–16, 19, 29, 31, 33–4
அராபியா, 15, 16, 19
அரிசு, தவுன்செண்டு, 166
அரோ, 106
அல்பசின், 195–6, 197
அல்மேடா, உலொறென்சோ தி, 25
அல்மேடா, பிரான்சிசுக்கோ தி, 24
அல்வாரசு, நுனோ, 8
அல்ற்று, கிறித்தோபு, 354
அலகபாத்து, 282
அலாசுக்கா, 251
அலி, ஐதர், 77–8, 93
அலிவர்த்தி கான், 72, 232
அலெக்சாந்தர், 324
அவியோ, இறை த, 30
அவுசிலி, சேர் கோர், 131
அவுசுற்றன், கொடிக்கப்பல், 254
அவுரங்கசீப், மாவேந்தன், 43
அவுரிச்செய்கை, 118–9, 128
அவுற்மன் கோணீலியசு த, 36
அற்சுற்ருனே, இராட்டா, 293
அற்சே, 39, 82
அற்றசோவு, 198
அன்பூக் கட்சி, 232
அன்னவும் சீய மன்னனும், 315
அனம், 49, 146–7, 177–84, 187–8, 316–43
அனோய், 178

ஆ

ஆக்கக் கழகம், (சீனம்), 311–2
ஆகி யூ, 311
ஆகுன் நதி, 197
ஆங்கிலை–இரசியப் போர், 199, 203–4
ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி, 41–4, 57, 58–9, 69–70, 74–81, 95–9, 100–102, 117, 232, 274, 280–1, 337, 377
ஆங்கிலக் குடிப்போர், 42

ஆங்கில-யப்பானிய உறவுடன்படிக்கை, 176, 247, 249–50
ஆங்கிலேயரின்முன் இந்தியாவின் அரசியல் அதிகாரம், 71–5, 94, 280, 385
ஆங்கோ, 107, 138, 141, 222, 244, 245
ஆசியத் தத்துவம், 392
ஆசியாவில் இசுப்பெயினின் ஆள்புலப் படர்ச்சி, 62, 63–4, 177, 336
ஆசியாவில் ஒல்லாந்தின் படர்ச்சி, 37–40, 45, 53, 69–70, 82–6, 90–2, 327, 342
ஆசியாவில் பிரான்சின் படர்ச்சி, 43–4, 47–8, 69, 117, 130, 177–90, 204, 315, 316–8, 343
ஆசியாவில் பிரித்தானியப் படர்ச்சி, 23, 40–44, 47, 57–9, 65–7, 69, 74, 80–82, 91, 93–110, 141–50, 169, 188–9, 204
ஆசியாவில் பொதுவுடமைத் தத்துவம், 211–4 298, 309–10, 312–3, 318–9, 389
ஆசியாவில் மேனாட்டுப் பண்பாடு, 212
ஆட்டு, உரோபேட்டு, 141
ஆடிங்கு, குடிப்பதி, 251
ஆபிரிக்கா கண்டறியப்படல், 7–8, 12, 36
ஆபிரிக்காவில் போத்துக்கேயர், 30
ஆபுரு, 31
ஆமெடா, அடக்கற்கரிய, 36
ஆரிய சமாசம், 344
ஆவ்வா, 200
ஆவா, 81
ஆவாய்த் தீவுகள், 251, 254, 302, 312
ஆற்காடு, 72–3
ஆறுக்கி, சேனுபதி, 260
ஆன் இனம், 205
ஆன் யாங்கு, 138
ஆன் வமிசம், 306
ஆனந்தர், முல்குராச, 389
ஆனந்தரங்கப்பிள்ளை, 75
ஆனல்டு, எட்வின், 364

இ

இக்கனசியேவு, 200
இக்பால், 286, 289
இசியாங்கு நதி, 138
இசியென் பெங்கு, மாவேந்தன், 136
இசி, வைக்கவுண்டு, 248, 258
இசின் மின் பாவோ, 300
இசுக்கொட்டிசு மிசன் கல்லூரி, 338
இசுப்பெயின், 8–9, 11, 94, 258, 369
இசுலாம், 4–9, 10–11, 14, 17–8, 27–9, 35, 51, 89–90, 92, 208, 273–4, 318, 344, 367–8, 390
இசுவான்–நான் களரி, 301
இசுற்ருலின், 210
இடச்சு ஐக்கிய கிழக்கிந்தியக் கம்பெனி, 37–40, 43, 57, 65, 82–5, 86–9, 91
இடெற்ருடா, 63
இடேயோசி, 62, 291, 336
இத்தாலி, 157, 158, 174, 204, 213, 244, 258
இந்திமொழி, 286
இந்திய அரசாங்கச் சட்டம் (1935), 229
இந்திய உள்ளூராட்சி, 125
இந்திய ஒத்துழையாமை இயக்கம், 226, 227, 230, 318
இந்தியக் கலகம் (1857), 80, 107, 113
இந்தியக் கழகச் சட்டம், 124
இந்தியக் கிறித்தவ தேசியக் கழகம், 344
இந்திய சட்ட மன்றம், 124
இந்து சமுத்திரம், 3–21, 22, 23–9, 30–3, 38, 43, 47–8, 49–50, 77, 249
இந்திய சுதந்திரம், 231, 273
இந்தியத் தண்டக்கோவை, 382
இந்தியத் துணிவகைகள், 45–6, 351, 355–6
இந்தியத் தேசியப் பேரவை, 212, 226, 229, 376
இந்தியத் தேசியவுணர்ச்சி, 182–4, 185, 211–2, 220–2, 224–5, 229, 230, 289, 344, 377–9
இந்தியப்படை, 115, 120, 134, 218–20, 228, 264, 337
இந்தியப் பாராளுமன்ற ஆட்சிமுறை, 225–7, 229, 279–81
இந்தியப் பொலிசுச் சேவை, 115, 228
இந்தியப் புகையிரதப் பாதைகள், 228, 371–2,
இந்திய மரபுரிமை நூல்கள், 344
இந்திய முசிலிங்கள், 16–21, 115, 125, 225–6, 230, 273, 280, 318, 326, 380
இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம், 389
இந்திய முன்னேக் கடற்படை, 13–4
இந்திய வர்த்தக வகுப்பினர், 74–5, 118–9, 150, 314
இந்தியா (பார்க்க : பிரித்தானியா, இந்துக்கள், முசிலிங்கள், மரதர், சமோரின்கள்)
இந்தியாவில் பிரித்தானிய ஆட்சி, 23, 70–71, 80, 281–5, 337–9, 371, 385

இந்தியாவில் பிரித்தானிய இனக்கொள்கை, 120–24, 125–6
இந்துக்கள், 17–8, 27, 30, 33–4
இந்துக்கூசு, 129
இந்துச் சீர்திருத்தம், 273–81, 283–5, 337, 344
இந்து சமயமும் பண்பாடும், 17–8, 89, 115, 125, 271–81, 282–9, 326, 337, 363–4, 377, 380–3, 390
இந்து–சீனம், 130, 156–7, 178–86, 187–9, 209–11, 219, 264–5, 317–8, 343
இந்துத்தானம், 71, 377
இந்தோசெற்று, புரொசுப்பர், 359
இந்தோனேசியா, 14, 15, 18, 28, 30–1, 34, 36–42, 43, 47, 54, 82–92, 94, 209–11, 264–5, 302, 318–9, 369, 373, 377, 385–6
இப்சன், 289, 388
இப்பாலுசு, 14
இமயம், 56
இயூசு (ஐ. அ. அ. செயலாளன்), 221
இமோவு, வான், 82, 83
இயேயாசு என்பானின் " மரபுரிமை ", 64
இரகசியச் சங்கங்கள், 137
இரகியேரி, 330
இரங்ககுசா, 171, 292
இரங்கூன், 81
இரசல், 212
இரகசிய–சீன வங்கி, 202
இரகசியப் புரட்சி, 204, 208–13, 234, 265, 271, 309–10, 312–3, 318–9, 346, 376, 389
இரசிய–யப்பானியப் போர், 162–3, 203
இரசியா, 55, 66, 94, 107, 129, 130–4, 140, 154–5, 157, 174, 193–7, 198–209
இரசியாவும் சீனமும், 204, 209–12, 243, 311–3
இராசபுத்திரம், 79–80
இராசபுத்திரர், 116
இராசா குலாப் சிங்கு, 79
இராசு பிகாரிபோசு, 224
இராடோ, 40, 64–5
இராபிள்சு, 81–2, 91
இராம் மோகன் ராய், 274–7, 278, 291, 370–1
இராமகிருட்டின பரமகம்சர், 277
இராமன் (அரசன்), ஆறுவது, 190, 265, 315
இரிக்கி, 35, 330–1, 335
இரெயினால், 356
இரெயினல், அபே, 83
இரேமண்டு, 78
இல்கான் அர்குன், பாரசிக, 6
இல்பேட்டு, சேர் கோட்னி, 121
இலக்கிய ஆராய்ச்சிக் கழகம் (சீனம்), 311
இலக்கியப் புரட்சி, 387
இலக்கியப் புரட்சியும் மலாயாவும், 48, 49–50, 302
இலங்காசயர், 149
இலங்காத்தர், 41
இலங்கை, 16, 34, 35, 38, 40, 43–4, 51, 70, 94
இலசபதிராய், 183
இலசுவார்ப் போர், 79
இலண்டன் கிழக்கிந்திய சீனச் சங்கம், 101
இலண்டன் மாநாடு, 260
இலம்பேட்டு, அதிமேற்றிராணி, 342
இலம்பேட்டு, கொமடோர், 81
இலம்பொக்கு, 83
இலயால், அல்பிரெட்டு, 365
இலற்றேறெற்று, 339
இலனேசன், த, 182
இலாகிறே, தவுடாற் த, 188
இலாசரெவு, 202
இலாசுகி, 212
இலாம்தோபுக் கோமகன், 207
இலாவோசு, 179, 317
இலாற்றிமூர், ஓவென், 209
இலான்சிங்கு–இசியி உடன்படிக்கை, 239
இலி, 201
இலி உங்–சாங்கு, 139–40, 148, 154, 179, 202–3, 207
இலி காமன் நோ காமி, 166
இலிசுபன், 7
இலிண்லித்கோப் பிரபு, 231
இலி தி–சாவோ, 309
இலி மிங்–தாய், 106
இலியாங்கு சி–சாவோ, 300–1, 308
இலியாங்கு சோ–மிங்கு, 308
இலியாவோதுங்கு, 55, 202
இலியோதுங்கு மாசாணம், 154
இலியோன்சுக் கழகம், 323
இலிவி, 46
இலிற்றன் ஆணைக்குழு, 256
இலிற்றன் பிரபு, 123, 128–9, 132
இலின்சுகோற்றன், யான், அய்கன், 36
இலின் திசி–உசு, 100–2, 301, 390
இலின் யுற்சுங்கு, 308

இலின்றின், 99
இலி சூ. செங்கு, 54–5
" இலெண்டாசு டா இந்தியா ", 22
இலெப்பாந்தோப் போர், 368
இலெனின், 210, 222, 233, 312
இலேக்குப் பிரபு, 78
இலேப்னிற்சு, 361, 363
இளஞ் சீனச் சங்கம், 345
இற்லர், 257
இற்ரே, இளவரசன், 167, 175–6
இறிப்பன் பிரபு, 123, 124, 181
இறியூக்கியூத் தீவுகள், 48
இறிவியர், சேஞபதி, 179
இன்கா மக்கள், 88
இஞுக்காய் தக்குசி, 260
இஞுயே, கோமகன், 175

ஈ

ஈனசு, இல், 9
ஈனயான பௌத்தம், 317

உ

உங்கு சூ–சுவான், 137–9, 340
உசுற்றர், 352
உசேன், மீர், 25
உண்மைப் பிரச்சினை, 333–4, 359
உபநிடதம், 275–7, 325, 363–4, 392
உருவான், 342
ஊசோ, 362, 371
ஊர்க்கிப் பொறியியற் கல்லூரி, 124
உரக்கொக்கோ, 355
உரொபேட்டோ த நொபிலி, 325, 335
உரோட்சு, அலெக்சாந்திரே த, 342
உரோம், 3, 333–4, 342
" உரோமனி இரை ", 357
உரோலண்டு, உரோமெயின், 388
உலகப் போர், முதலாம், 120, 185–6, 190, 217–22, 224–5, 232, 236–8, 241, 247–9, 258, 264, 280, 310, 344, 346
உலகப் போர், இரண்டாம், 146, 224, 229–30, 256, 265
உலகப் போரில் ஆபிரிக்கா, 218
உலயோலா, 35, 324, 328
உலூ இசன், 212, 311–2, 387
உலூயி, ஒன்பதாம், 4, 323
உலூயி, தளபதி, 81
உலூயி, பதினாலாம், 187, 332, 356
உலொயிட் சோச்சு, 225, 250
உவாங்கு சுவே–சூ, 301
உவேலி, 364
உரூபேட்சு, அயிசாக்கர், 137
உரூபேட்சு, சேஞபதி, 129–30
உஞன், 138

ஊ

ஊக்ளி நதி, 43, 119
ஊ–சி, 301, 304, 306–9
ஊன், பீற்றர் வான், 57

எ

எகல், 3
எகிப்து, 4–5, 14, 19, 23–5, 31–3, 318
எசுற்ருவோ, பாதிரியார், 326
எட்வேட்சும் தாபியும், 353
எமேசன், 364
எய்டன், வான் தர், 38
எயிற்றித்தீவு, 370
எரடா, மாட்டின் த, 52
எல்சின் பிரபு, 108–9, 169–70
எலிகு உரூட்டு, 241
எலிகு யேல், 353
எலிசபெத்து, முதலாம், 36, 41
எலியட், 364, 392
எலியற்று, சாள்சு, 102
எலூதர், 56, 193, 195
எவலின், 354
என்வர் பாசா, 209
என்றி, கடலோடி, 7–13, 35, 367
என்றி, நாலாம், 43
எனிசு, 343

ஏ

ஏகன், தளபதி வான் தர், 37
ஏடின், 16, 133
ஏண், இலப்காடியோ, 364
ஏத்தின்சு, உவாறன், 59, 77, 96, 363
ஏத்திங்சு, மாக்குவிசின், 79, 80
ஏஷின் பிரபு, 123
ஏழாண்டுப் போர், 352

ஐ

ஐ. அ. அ., 153, 204, 391
ஐ. அ. அ. வும் சீயமும், 187

ஐ. அ. அ. வும் சீனமும், 103, 106–7, 134, 141, 156, 158, 163, 165, 206, 217, 223, 237–40, 245, 248, 301–2
ஐ. அ. அ. வும் யப்பானும், 165–6, 170, 174, 239–40, 243, 249–52, 254–7, 258–9, 262
ஐதராபாத்து, 72, 73, 78–80, 117
ஐபோங், 184
ஐரோப்பாவுடன் வாணிபம், 40, 43–6, 96–7, 147–9
ஐவன், மூன்றும், 193

ஓ

ஓகத்தசு, வல்லான், 352
ஒகொட்டிசுக்கு, 197
ஒகொட்சுக்கு கடல், 194
ஒங்கு வர்த்தகர், 58–9, 95, 97–8
ஒங்கொங்கு, 26, 103, 133, 149, 150, 157, 204, 222, 243, 302
ஒங்கொங்கு–சாங்காய் வங்கிக் கூட்டுத்தாபனம், 156
ஒசுத்திரேலியா, 151
ஒப்சன், 371
ஒரிசா, 76
ஒல்கார், யசுவந்து இராவ், 232
ஒல்கொக், சேர் ரதபோட்டு, 150–1
ஒல்பாச்சு, 274
ஒல்பான் வல்லரசுக் கூட்டணி, 254
ஒல்லாந்து, 91, 94, 265, 318–9, 371
ஒற்றுமை பேரரசு, 14, 32–3, 89, 368

ஓ

ஓப்பேய், 257
ஓப்பேய்–சகார் அரசியற் கழகம், 257, 259
ஓமசு, 26, 30, 51
ஓர், சேர் சாமுவெல், 222
ஓவவாட்டர், அந்தனிசூன், 66

க

கக்குசோ, ஒக்காகுரா, 379
கங்கை ஆறு, 124
கசாக்கர், 208
கசிற்றி பேகம், 73–4
கசுகார், 140, 200
கடற்சூறை, 22, 99–102, 106
கத்காட்டு, கேணல், 59
கபரோவு, யாக்கா பவ்லோவு, 194
கபிரால், பெதுரு அல்வாறெசு, 20, 23
கபீர், 287, 388
கம்பளி, 355
கம்பாய், 17, 28, 31, 34
கம்போடியா, 14, 56, 145–6, 177, 178, 181, 187–8, 317
கமோவென்சு, 34
கரக்கோரம், 56
கரன், பிரான்சுவா, 66
கருஞ்டகம், 72–4, 77, 93
கரன் இனத்தவர், 315, 343
கல்கத்தா, 43, 69–71, 74–7, 99, 224, 282, 337, 369
கல்கனர், 56, 193
கல்வனே, அந்தோனியோ, 60
கலிக்தசு, மூன்றும், 11, 324
கலிபோணியோ, 151, 165
கறக்கான், உதவி ஆணையாளர், 204, 243
கன்றன், 40, 48, 51, 52, 58–9, 94, 97, 99, 103, 106–8, 134, 141–2, 151, 157, 234, 242, 244, 335
கன்னடம், 286
கன்னிங்கு பிரபு, 118
கனடா, 251

கா

காங்கு இசி, 56, 139, 195–7, 199, 332–5, 360
காங்கு தே, 48, 49
காங் யூ–வேய், 298–9
காசிம், தளபதி, 24
காசுற்று, இக்னேசியசு தா, 359
காணியர், பிரான்சுவா, 188
காபுல், 129
காமா, த, 20
காமா, போல் த, 12
காமா, வசுக்கோ த, 3–4, 12–13, 18–23, 94, 324
காமியோ, சேனுபதி, 218
காயோடயிசம், 317
காரைக்கால், 69
கான் மாக்சு, 309
காளிதாசர், 388
கான்சு, 139
கான்சு காலம், 66

கி

கிச்சினர் பிரபு, 120
கிப்லிங், 134, 217
கியாஞ்ஞான் கப்பற்சாலை, 163
கியாவோச்சோ, 156, 159, 204, 218, 221, 236, 247

இயூசூ, 62
இயூப் பூங்கா, 354
இயூபா, 151
இயேசு, பாரன் த, 207
இயோற்றே, 335
இரங்கனூர், 24
இரன்வில் பிரபு, 175
இரான்புறுக்கு பிரபு, 129
இரிமோல்டி, வண பிதா, 360
இரேக்கம், பண்டைய, 3, 365
இரே, சேர் எட்வேட்டு, 237
இல்கிற்று, 79
இழக்குச் சீன இருப்புப்பாதை, 202
இளே, உரோபேட்டு, 77
இறித்தவ எதிர்ப்புச் சமாசம் (சீன), 345
இறித்தவம், 4, 7–11, 14, 29, 63–4, 90, 92, 103, 136–8, 141, 145, 173, 274–6, 323, 324–5, 329, 333, 335, 341, 346, 368
இறித்து இட்ட கட்டளே, 9
இறித்துவ மிசனரிமார், இந்தியாவுக்கு, 273–6, 282, 285, 288, 324–7, 334, 337–8, 344, 345
இறித்துவ மிசனரிமார், இந்து–சீனத்துக்கு, 342
இறித்துவ மிசனரிமார், இந்தொனேசியாவுக்கு, 327, 344
இறித்துவ மிசனரிமார், சீனத்துக்கு, 291, 302–3, 312, 323, 327–35, 336, 339–40, 344, 359–61, 390
இறித்துவ மிசனரிமார், மொங்கோலியாவுக்கு, 323
இறித்துவ மிசனரிமார், யப்பானுக்கு, 327, 335–6
இறிப்சு, சேர் தாபோட்டு, 231
இறின், 195
இன்கான் மலே, 197
இனி, 9

ஈ

ஈதை, 277, 344, 363–4, 392
ஈதை பற்றிய கட்டுரைகள், 277
ஈவா, 208

உ

உக்கியாங்கு, 245
உங்கு, இளவரசன், 108, 298, 340–1
உங்கு சூ–சின், 301
உசராத்திரி, 287
உண்டேட்டு (மிசனரி), 287
உப்ளாய் கான், 323
உமரி முனே, 72, 125
உமிந்தாங்கு, 185, 235–6, 243, 244, 245–6, 252, 256, 258–9, 308, 309, 310–1, 345, 382, 386
உரைல் தீவு, 174, 198, 201
உரோசு, 212
உவாங்கிசு, பேரரசன், 159, 298–9
உவாங்கி மாகாணம், 138, 156–7
உவாங்சோ குடா, 156
உவாங்துங்கு, 138, 302, 328
உவாலியர், 80
உவெசுனே, 362, 363
உவெயிச்சோ, 156–7
உவெற்று, 128
உவோ மோ–யோ, 311, 388
உளோபுக்கோவிசுக்கி, 183
உன்கா, திரித்தன் தா, 26

ஊ

ஊர்ச்சரம், 17, 18, 25, 34, 71

எ

எதரி, 31
எம்பர், 291
எயிரோ, 5
எலந்தான், 190

ஏ

ஏசவதாசர், 286
ஏட்டிசு, இலயனல், 225–6
ஏடா, 190
ஏபிலன் (யேசுதர்), 197, 332–3
ஏர்சன் பிரபு, 114, 122, 131–3, 182, 224, 365
ஏர், செற்றன், 120
ஏரி, வில்லியம், 337
ஏற்றே, பரன், 241

ஐ

ஐ குவோ து சி, 301
ஐபர் கணவாய், 79–80

ஒ

" ஒக்குற்றை நோ ஒங்க ", 295
ஒக்சிங்கா, 40, 53–4

கொக்சு, இறிச்சாட்டு, 46, 65
கொச்சி, 24–7, 29–30, 33, 34, 35, 38, 43, 51, 69, 117, 178, 183, 316, 343
கொட்றிச்சுப பிரபு, 127
கொன்டோசெற்று, 274, 292
கொந்தி, நிக்கொலோ, 17
கொநதே, பெயிரே லா, 359–60
கொப்டன், இறிச்சாட்டு, 82–3
கொயிம்பிரா, 35
கொயென்சு, இறைக்குளொவு வான், 40, 90
கொரியா, 48, 49, 56, 146, 153–4, 176, 201–2, 246, 259
கொல்பேட்டு, 43, 46
கொலோசியன், தளபதி, 200
கொலோவின், தியோடர் அலெக்செவிச்சு, 197
கொழும்பு, 38
கொறேரா, 21
கொன்சுதேபிள், 355
கொன்பியூசியசு, 359, 360–63, 381
கொன்பியூசியசுத் தத்துவம், 270, 291, 292–3, 305–6, 309, 312, 316, 330, 333, 334, 337, 359–60

கோ

கோக்கண்டு, 208
கோக்கி, மக்சிம், 388
கோசென்சு, யோன் உரோபேட்டு, 355
கோண்வாலிசு பிரபு, 77
கோப்பி, 45, 86–9
கோபே, தளபதி, 179
கோமசு, யோன், 26
கோயெல்கோ, வண. பிதா, 61
கோயேசு, பீற்றர் த, 56
கோல், 212
கோல்டுவெல், பாதிரியார், 287
கோவூன், 109
கோவா, 17, 28, 30, 32, 34, 35, 38, 43, 51, 57, 92, 325, 326–7, 330
கோவில்கம், 13
கோவினேவி, மொன்றி, 3, 323–4
கோழிக்கோடு, 3, 13, 15, 18–20, 23–7, 29, 31, 33, 34, 50
கோற்றினே, தொம் பெர்னந்து, 27–8

ச

சக்சனி, 352–3
சகாலின், 174, 198, 202
சங்கத மொழி, 284, 286, 326, 363, 388
சங்கரர், 277
சங்கரன் குருப்பு, 286
சங்கராம், மசால், 265
சங்சா, 138
சத்தியாக்கிரகம், 226
சத்திலெச்சு, 79
சந்தா சாகிபு, 73, 74
சந்திரகிரி, 42
சந்திரசுப்தமௌரியன், 377
சந்திரநாகூர், 69
சண்டிதாசர், 287
சணல், 119, 221
சப்பே, 254
சபேரியா, 198
சம்பா, 14
சம்மத வயதுச் சட்டம் (இந்தியா), 280–81
சமயதூதக் கூட்டவையம், 332, 342
சமாதான மாநாடு, 225, 239–40, 250
சமோரின்மார், 15, 18–21, 23–6, 31, 33, 36, 51
" சய்செய்இச்சி " கோட்பாடு, 295
சயதேவர், 388
சரத்சந்திரர், 286, 289
சரவுத்து, அல்பேட்டு, 183
சரேக்கத் இசுலாம், 318
சலடின், 4
சலியன்வாலா பாக்கு, 225
சலுகைகள், 141–5, 221, 222, 243, 245, 302
சவுக்கத் யங்கு, 73
சன்சம், 16, 46, 167, 173, 295–6

சா

சாக்குல்லு, 318
சாபர் கான், 17
சாகிரசுமூனே, 9
சாகுந்தல நாடகம், 363
சாங்காய், 102, 103, 138, 141–5, 150, 151, 163, 211, 235–6, 241, 245, 254, 255, 302, 345, 373, 385
சாங்கு சுவான், 50–1
சாங் சான், 160
சாங் சுவே–லியாங், 246, 253
சாங் சோ–லின், 232, 246, 253
சாங் தே, 54
சாணர், தளபதி, 177
சாணூர், 338

சாரிசு, தளபதி யோன், 65
சாவுல், 17, 25, 28
சாவோ யுவான்–சென், 307
சாள்சு, இரண்டாம், 42
சாள்சு, முதலாம், 42
சாற்றே, அட்மிரல், 249
சான் இறப்பியேல், 12
சான் கேபிரியல், 12
சான்சியிராணி, 72
சான் பிரான்சுக்கோ, 151
சான் மின் சூ, முதலாம், 211
சான்றுங்கு, 156, 158–60, 220, 237, 240, 248, 251
சானேக்குவான் கணவாய், 256

சி

சிக்கிம், 131
சிகிலி மாகாணம், 139, 160–1, 386
சிங்கப்பூர், 80–1
சிங்களர் அரசர்கள், 38
சிங்கியாங்கு, 56, 128, 139, 141, 245
சிந்தியா, 77–8
சிந்தியா, மராத்தியச் சேனாபதி, 232
சிந்து, 79
சிந்தோக் கொள்கை, 159, 261, 270, 290, 292–6, 305, 341, 377
சிப்பெண்டேல், தோமசு, 353
சிபிர், 193
சிமோரோ, பிரான்சிசுக்கோ, 60
சிமோனேசெக்கில் பொருத்தனை, 202
சியாங் கை–சேக், 138, 223, 235–6, 244–6, 253, 256–8, 345
சியாலோங்கு, 177
சியான் பிரகடனம், 257
சியென் லுங்கு பேரரசன், 56, 59, 93, 108, 140, 198, 360
சிராசுத்–தவுலா, 73–6
சிலுவைப் போர், 3–4, 7–8, 367
சிறீ விசயப் பேரரசு, 15, 16
சின் சி குவாங்கு–ரி, 303

சீ

சீக்கியர், 79–80, 115
சீயம், 18, 46, 49, 130, 178, 187–90, 213, 264–5, 270, 315–6, 342
சீவத்தா, இளவரசன், 181
சீன இடதுசாரி எழுத்தாளர் சங்கம், 311
சீன உண்ணூட்டுச் சமயதூதம், 374
சீன ஒவியங்கள், 354–5
சீனக் கருங்கொடியாளர், 179–80
சீனச்சங்கம் (இலண்டன்), 157–8
சீனச் சஞ்சிகை, 102
சீனத்தில் முசிலிங் கலகம், 139
சீனத்தில் யப்பானின் எதிர் நடவடிக்கை, 218–9, 232–3, 236–40, 246, 253–8
" சீனத்தின் கதி ", 345
சீனத்துடன் இசுப்பெயினின் தொடர்பு, 53, 244
சீன–யப்பானியப் போர், 140, 148, 152–2, 154, 202, 345, 386
சீனத் தோட்டம், 354
சீனப் பெருஞ் சுவர், 56, 194, 253, 255
சீனப் பொதுவுடைமைக் கட்சி, 211, 304, 309
சீனம் (பார்க்க : மிங்கு, மஞ்சுமார், பிரித்தானியா, பிரான்சு, யப்பான், இரசியா, ஐ. அ. அ.)
சீன மக்கட் குடியரசு, 109, 386
சீன மாணவர் திங்களேடு, 307–8
சீன வியாபாரிகள் நாவாயோட்டற் கம்பனி, 163

சு

சுங்கிங்கு, 141
சுங்கு யுங்கு, 359
சுங் சென், 54
சுங் வாங், 138
சுரகார்த்தா, 84, 91
சுவதேசியியக்கம், 288
சுவாங்கு சோ, 48, 52
சுவான் லுங்கு, 163

சூ

சூகீசீ, பேரரசி, 136–9, 158–62, 300, 303, 340
சூசிமாத் தொடுகடற் சமர், 249
சூயுவான்–சாங்கு, 48, 49
சூரத்து, 17, 42, 69
சூரியதாசர், 237
சூலாலங்கோன், பல்கலைக்கழகம், 315
சூலாலங்கோன், மன்னன், 189, 315, 316

செ

செகப்பிரியன், 315
செகோவு, 289, 388

செங்–கடல், 6, 14, 18–9,26, 29, 42, 51
செங்கிசுக்கான், 193, 323
செங்கு கோ, 16, 29, 49, 50
செந்–நதி, 178
செபூ, 141
செம்–படை, 235, 312
செய்கோயின்–நோ–மியா, தளபதி, 171
செய்விரேசு, 351
செயிலி–பேட்டு, 181
செயுற்ரு, 8
செர் அலி, 129
செரம்பூர், 337
செராவோ, தளபதி, 31
செரிபன், 84, 91
சென்சி மாகாணம், 139
சென் தூ–இசி, 304–8, 309
சென் தோம், 69
சென் தோமசு, 323
சென் பிரான்சிசு சேவியர், 35, 61–2, 324, 327–8, 335, 344
சென் பீற்றசுபேக்கு, 203, 207
சென் பீற்றசுபேக்குப் பொருத்தனை, 201
சென் போல் கல்லூரி, கோவா, 325, 327
சென் யோட்சுக்கோட்டை (சென்னை), 69, 77
சென் லி–பூ, 310, 345
சென்னை, 42–3, 69–72, 93, 126, 278, 282
சென்னையிலிருந்து கடிதங்கள், 122
செனேவா, 3, 5–6

சே

சேச்சில், சேர் வின்சன், 222, 251
சேச்சு மிசனரிச் சங்கம், 337
சேம்பலின், ஒசுற்றென், 224
சேம்பேசு, வில்லியம், 354
சேமிசு, முதலாம், 42, 64
சேர்மனி, 154, 155, 217–20, 248–9, 256–8
சேர்மனியும் சீனமும், 155–8, 204, 218, 236, 239, 247–8, 351–2

சை

சைகோன், 177, 184
சைபீரியப் புகையிரதப் பாதை, 202
சைப்பீரியா, 193, 198–9, 201, 208
சைமன், கொன்சுதன்சு, 352
சைமன், சேர் யோன், 255
சைல்டு, சேர் யோசையா, 42

சொ

சொக்கோத்திரா, 26, 30

சோ

சோ என்–லாய், 220
சோக்கிரதர், 362
சோகுனேற்று, 60, 62–5, 165–9, 170, 198, 201, 293, 376
சோழப் பேரரசர்கள், 14–5, 80

த

தக்கசிமா, 292
தக்கணம், 28, 72–3, 78, 232
தக்காணை, 292–3
தக்குசி, இனுக்காய், 260
தக்ளசு, ஒலிவு, 122
தங்கன், கம்பெல், 180
தஞ்சாவூர் இராசா, 93
தஞ்சியர், 8
தண்டி, 119
தண்டெயில்சு, 91, 370
தத்தர், 120
தபரின் பிரபு, 130
தபு, அலெக்சாந்தர், 338
தமிழ், 286, 327
தயசு, 12–3
தயிப்பிங்குக் கலகம், 136–9, 148, 199
தருமசாத்திர வரலாறு, 279
தல்கவுசி பிரபு, 78, 79, 82–3, 130
தலையிலாமா, 132–3
தளவாடங்கள், 353–4
தற்காலத் துறவி, 314
தனன்சியோ, 212

தா

தாக்கு, 108, 161–2, 199
தாகூர், இரவீந்திரநாத, 286, 288, 364, 388
தாமன், 38
தானி, சேனுபதி வைக்கவுண்ட், 176

தி

திபோ, 353
தியுவி, 212
தியூ, 25, 34, 38
திருமணச் சட்டம் (இந்தியா), 280–81

தில்லி, 70, 71, 76
தில்லி தர்பார், 224
திறந்தவாயிற் பூட்கை, 158, 249
திடோர், 85
திப்பு சுலுத்தான், 78, 370
திபெத்து, 56, 131–3
திம்சன், செயலாளன், 255
திமோர், 44
தியென்சின், 103, 107, 108, 140–2, 147–8, 160, 161, 163, 245, 302, 380
தியென்சின் பொருத்தனை, 100, 107, 135, 165, 169
தியென் சுங்கு, 55
திரான்சுபயிக்கல், 199
திரிபிடகம், 316
திரினிடாத்து, 134
திருவாங்கூர், 70, 80, 117, 337
திரெங்கண்ணு, 190

தீ

தீதரோ, 274, 361
தீபோ, மன்னன், 130
தீமன், அந்தோனி வான், 38–9
தீன், அன்வார், 73

து

துக்காராம், 287
துணிவகை, 44–5
துருக்கி, 89, 219, 225, 226, 318
துருக்கிக் கடற்படை, 249, 268
துரோடசிலாசுப் பொருத்தனை, 12
துளசி, 27
துளசிதாசர், 287

தூ

தூகென், கேணல், 179
தூடுக்கு, பேரரசன், 178
தூப்பிளே, 69, 74
தூமர், போல், 182

தெ

தெசிமா, 40, 65–6, 291
தெமாக்கு, 31
" தெய்விக வாழ்க்கை ", 277
தெயிறென், 154, 203
தெயின் பே, 314
தெலுங்கு, 286
தெற்றெறிங்கு, 154
தென் ஆபிரிக்கா, 134
தெனசரீம், 81

தே

தேதம் கலகம், 181
தேயிலை, 40, 44, 59, 356
தேவராயர், இரண்டாம், 17

தை

தைமியோக்கள், 60–1, 64, 65, 167, 269
தைமூர், 208
தைவான், 53

தொ

தொக்கியோ, 175, 260–1, 294
தொக்குகாவா, இயேயாசு, 62–3, 64, 336
தொக்குகாவாக் குடும்பம், 60–1
தொங்கிங்கு, 146, 156, 180–1, 188, 204, 343
தொங்கு–சாப்பு நதிகள், 178
தொசுற்றேவிசிக்கி, 289
தொம்சன், எட்வேட்டு, 118
தொழிற்கட்சி, 221

தோ

தோக்ரா மக்கள், 116
தோகியெவு, 132
தோத்து அலி, 73
தோமசு மான், 388

ந

நசீர் யங்கு, 73
நவாப்பு, அயோத்தி, 78
நவுரோசி, தாதபாய், 119
நன்னம்பிக்கை முனை, 6, 9, 11, 13

நா

நாகசாகி, 62, 64, 66, 166, 168, 201
நாகபட்டணம், 43
நாகபுரி அரசன், 77
நாங்கிங்கு, 102, 138, 144, 233, 236, 244
நாங்கிங்குப் பொருத்தனை, 102–5, 135, 165, 168

நாட்டுக் கூட்டவையம், 245, 254–7, 258, 264
நால் வல்லரசுப் (பசிபிக்குப்) பொருத்தனை, 251
நானுசாகிபு, 72

நி

நிக்கலசு (முதலாம்) சார், 198, 201
நிக்கலசு (ஐந்தாம்) போப்பாண்டவர், 10–11, 35, 324
நிங்போ, 52, 58, 103, 141
நிசாம்–உல்–முல்கு, 232
நியண்பேக் கலகம், 139
நிர்வாக சேவை (இந்தியா), 114–6, 120–1, 126–8, 228–9, 375
நீல் தர்பான் அல்லது பூநீலக் கண்ணுடி, 118

நீ

நீலகிரி, 118

நு

நுர்காச்சி, 55–6

நூ

நூறு நாட் சீர்திருத்தக் காலம், 298–9

நெ

நெசல்ரோட்டு, 199, 200
நெசுத்தோரியர், 323
நெப்போலியப் போர்கள், 80, 94, 343
நெப்போலியன், மூன்றும், 108, 177, 187, 343

நே

நேட்சா நதி, 195
நேட்சின்சிக்கு, 195
நேட்சின்சிக்குப் பொருத்தனை, 197–8
நேப்பியர்ப் பிரபு, 97–8
நேபாளம், 264–5

நை

நைற்றிங்கேல், புளோரென்சு, 121

நொ

நொபுங்கா, ஓடா, 60–1

நோ

நோல், 357

ப

பக்சார், 76
பங்கிம் சந்திரர், 288, 289
பச்சையப்ப முதலியார், 75
பசடோர் முனை, 9, 11
பசிபிக்குச் சமுத்திரம், 28, 30, 48, 53, 55, 63, 65, 93, 158, 193, 199, 203, 208, 247–51
பஞ்சமசு, 83
பஞ்சாப்பு, 113, 115, 124, 225
பட்டு, 44–5, 351
பட்லி : இரசியா, மொங்கோலியா, சீனு, 195
பண்டா, 85
பண்டித நேரு, 375
பண்டுலா, சேனுபதி, 81
பண்டைக் கல்கத்தாவின் எதிரொலிகள் (பசுற் றெட்டு), 122
பண்பாடும் சிந்தனையும், 57, 298–313, 351–63, 379–82
பத்கல், 28
பத்திரிகை, " ரைம்சு ", 127
பத்தொன்பதாம் நூற்றுண்டில் பிரித்தானிய உலக ஆதிக்கம், 94–5
பந்தம், 40, 41, 84, 91
பப்பிலோன், யீன், 354
பம்பாய், 34, 42–3, 69, 72, 78, 79, 126, 282, 372
பம்பாய்–பர்மா வர்த்தகக் கம்பெனி, 130
பர்மா, 48, 81, 127, 130, 145–6, 187, 189, 270, 314–5, 317, 342–4, 381
பருத்தி, 355–6
பரோடா, 80
பரோடா, மகாராசா, 116
பலம்பங்கள், 84, 89
பலியோலஜி, 6
பலுக்கித்தான், 116
பவுச்சர், 354
பற்றம்பாங்கு, 188
பற்று, அப்துல், 40
பற்று கான், 346
பற்றேவியா, 53, 57, 82, 85–6, 91
பன்றி வியாபாரம், 151–2, 206, 302
பனுமாக் கால்வாய், 251

பா

பாக்கித்தான், 125, 230, 381
பாக்கிஸ்தான் குகையோவியங்கள், இந்தியா, 378

பாக்குவு, 64
பாகாய், 194
பாங்கொக்கு, 187, 188
பாசுக்கர், பியறி, 185
பாட்ரேடோக் கோட்பாடு, 324
பாண்டிச்சேரி, 44, 69, 93
பாண்ட்டு, வில்லியம், 103
பாபரோசா, கயிருத்தின், 249
பாபித்த மிசன், 337
பாமேத்தன் பிரபு, 98
பாரசீகக் குடா, 6, 18, 19
பாரசீகம், 128, 130–1, 208, 212–3, 323
பாரத்பூர், 79
பாராளுமன்ற முறையும் தேசியவாதிகள் அரசாங்கமும், 233, 244–7, 258, 345
பாராளுமன்ற முறையும் போத்துக்கலும், 48, 49–50, 302
பாரோசு, 9, 22
பாலித்தீவு, 83–4

பி

பிந்தாரா, அமீர்கான், 232
பிரடெரிக்கு, மாமன்னன், 352
பிரம்ம சமாசம், 275–6
பிரம சூத்திரங்கள், 276
பிரவர், என்றி, 63
பிராமணர், 269, 274, 281, 285, 325, 334
பிரான்சியக் கிழக்கிந்தியக் கம்பெனி, 43–4
பிரான்சிய–சேர்மானியப் போர், 147, 379
பிரான்சு ஆசியாவில் நலிவுறுதல், 265
பிரான்சும் சீனமும், 103–10, 134–6, 153, 154–60, 218, 240–1, 245, 339, 359–63
பிரித்தானிய (இந்திய) ஆட்சி, 114–28, 130–4, 139, 226–31, 271–3, 275, 281–5, 337–9, 373–5
பிரித்தானிய கயனா, 134
பிரித்தானியப் (இந்தியப்) பேரரசு, 128–34
பிரித்தானியப் பேரரசுக் கோட்பாடு நலிவுறுதல், 222–31
பிரித்தானிய பொதுநலவரசு, 225
பிரித்தானியப் பொருளாதாரப் பலவீனம், 221
பிரித்தானியா இந்தியாவை வெற்றிகொளல், 70–72, 75–6, 78–80
பிரித்தானியா பிரான்சுடன் கொண்ட முரண்பாடு, 47, 78, 189–90, 315
பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி, 94, 117, 371
பிரித்தானியாவும் சீயமும், 187, 315
பிரித்தானியாவும் (பார்க்க : இந்தியா, யப்பான்) சீனமும், 57–9, 70, 93–110, 142, 143–6, 148–51, 156–61, 218, 222–3, 236–7, 242–5
பிரித்தானியாவும் யாவாவும், 91
பிரெசு, தோமசு, 48, 49
பிரெஞ்சுப் புரட்சி, 363, 369–70
பிரெஞ்சு மிசனரிமார், சீனத்தில், 332–3, 339–40
" பிரெத்தர் யோன்," 26
பிரெயிசினே, த, 179
பிரேம்சந்தர், 212, 286, 289
பில்மூர், குடிப்பதி, 165
பிலிப்பீன், 53, 57, 62, 63, 94, 158, 177, 291, 336
பிலிப்பு, இரண்டாம், 36
பிளாசி, 70, 75–6, 226
பிற்றுங்கு, சுலுத்தான், 50, 51
பிறயர் ஒடறிக்கு, 3
பிறற்று, சேர் யோன், 95
பிறியர், சேர் பாட்டின், 127
பிறையன், வில்லியம் சென்னிங்சு, 237
பின்யன், உலோரென்சு, 355

பீ

பீக்கன்சுபீல்டு பிரபு, 129
" பீக்கிங்கிலே ஒருகணம்," 308
பீக்கிங்கு, 18, 22, 48–50, 55–6, 103, 107–9, 134, 144, 152–3, 156, 158–62, 178, 188, 193–6, 199, 203, 204–5, 207, 232, 234, 238–9, 245, 257, 258, 299, 323, 330, 332, 345, 386
பீக்கிங்கு ஒப்பந்தம், 109–10, 150
பீக்கிங்குத் தேசிய பல்கலைக்கழகம், 304
பீக்கிங்குப் பொருத்தனை, 200
பீக்கிங்கு மாநாடு, 243–4
பீகார், 76, 117–8, 127
பீசப்பூர், 17
பீதம், நீதிபதி, 142
பீற்றர், மாவேந்தன், 197

பு

புகையிரதப்பாதை அமைத்தல், 155–6, 203, 240, 253, 259, 372
புத்த சமயம், 270, 276, 296, 314–7, 327, 334, 336, 341, 342, 346, 378, 390

புத்த தேவ போசு, 286
புத்தர், 278, 327
புத்தி உத்தோமோ, 318
பு யீ, பேரரசன், 255
புரட்சி, 164, 233-6, 239, 243-4, 252, 255, 271, 303-13, 345
புல்லேட்டு, சேர் இறீடர், 131
புற்றியற்றின், தளபதி, 201

பூ

பூச்சோ, 103, 141, 150
பூடனே, இலா, 47
பூவே, சேனுபதி, 179
பூறே, 179
பூனை, 71, 78-9
பூனி, மன்னன், 18

பெ

பெக்கர், இறிச்சாட்டு, 77
பெக்கு, யாக்கூப், 128, 140, 201
பெகு, 82
பெகெயின், பிசப்பாண்டவர் பிக்னே த, 177, 342
பெங்கு யூ-இசியாங், 220
பெதிக் உலோறென்சு, 222
பெந்தம், 274
பெரி, கொமடோர், 66, 67, 165-6
பெரூ, 151
பெரெத்தெரெலோ, இறப்பியேல், 48
பெரேயிரா, 197
பெல்சியம், 156-7
பெறேவிசுக்கி, பியறி, 200
பெனியோவிசுக்கி, 198
பெனிலன், 362

பே

பேக்கு, எட்மண்டு, 74
பேச்சன், 212
பேணுட், என்றி, 53
பேணி, தளபதி, 187
பேணிவல், 85
பேரரசு (பார்க்க : மிங்கு, மஞ்சுமார்), 134
பேரரசும் இந்தியாவும், 15-7
பேரரசும் ஒல்லாந்தும், 53

பை

பைக்கோபு, தியோடர், 195
பைபோ, 342

பொ

பொக்காரா, 208
பொக்சர் இயக்கம், 158-62, 303, 307, 341
பொக்சர் ஒப்பந்தம், 140, 161-2
பொக்சர், சீ. ஆர்., 171
பொதுநலவரசின் நாவாய்ச் சட்டங்கள், 46
பொதுவுடைமையெதிர்ப்பு ஒப்பந்தம், 214
பொற்குழாம், 193
பொறையுடைமைக் கட்டளை, 333

போ

போ, 352
போட் ஆதர், 154, 157, 203
போணியோ, 14, 83-4, 386
போத்துக்கேயர், 4, 7-18, 20-37, 38, 43, 48, 49-53, 57, 60, 69, 89, 91-2, 94, 324-6, 330, 336, 369
போமோ, கலேநிதி, 314
போமோசா, 40, 53-4, 154, 237
போர்க் கப்பல்கள், 12-15, 20, 23, 25
போல்கர், கொன்சுதாந்தின், 187
போல்ட்வின், 229
போலோ, மாக்கோ, 3
போரு, செனற்றர், 255
போறிங்கு, சேர் யோன், 187

பௌ

பௌத்த தாபனக் கழகம், 314

ம

மக்கசார், 39
மக்கள் சபை, 59, 74, 95, 100, 104, 114, 175, 225
மக்கவோ, 44, 52, 53, 57, 96, 98, 103, 152, 330
மக்காட்னிப் பிரபு, 59
மக்கிமோ, கவுண்டு, 261
" மக்கிள்சுவீல்டு ", 58
மக்கோலே, 276, 281-3, 285, 381
மக்சு மூல்லர், 364
மக்டொனல்டு, இராம்சே, 221, 229
மகலன், 31, 86
மகாத்மா காந்தி, 225-6, 209, 318, 344, 763
மகாயானம், 317
மஞ்சு கான், 323
மங்கு நகரம், 84

ப்மசூலிபட்டணம், 42, 52
மஞ்சுக்கோ, 117, 255, 259, 262
மஞ்சுப் பேரரசு, 40, 53–7, 69–73, 106–10, 135–7, 138–41, 152, 154–5, 158–60, 162–4, 193–4, 232–3, 255, 298–9, 302–3, 332, 344–5, 376
மஞ்சூரியா, 55, 146, 154, 157, 200, 203–6, 232–3, 237–8, 242, 245–6, 247, 248, 251, 255–6, 259–60
மண்டலே, 130
மத்தியதரைக் கடல், 249–50
மத விசாரணை மன்று, 324, 325, 330
மதீரா, 9
மதுரை, 325
மபுச்சி, காமோ நோ, 293
மம்மலி, 24
மராத்தி மொழி, 286, 327
மராத்தியப் பேரரசு, 69–71, 77–80
மராத்தியர், 116, 377
மலபார், 18, 19, 26, 35, 36, 86, 323, 324
மலாக்கா, 18, 28–31, 35, 38, 43, 48, 50, 80, 81, 327
மலாயா, 14, 15, 18, 27, 29, 43, 48–50, 188–9
மலையாளம், 286
மவுரோ, 13
மன்குட்டு, மன்னன், 315
மன்செசுற்றர், 46, 104, 149
மனிலா, 52
மனுநீதி, 280
மனுவெல், தொம், 12–3, 21, 22, 25, 26, 35, 36, 367

மா

மா உவன், 16
மாஓ, 69, 93
மாசினி, 376
மாசுமன், 337
மாண் போர், 219, 220
மாத்தறம், 40, 82–4, 89–90
மார்வாரி, வணிகர், 76
மாரின், செரோனேமோ, 52
மாலிக்கு அயாசு, 25
மாலிண்டி, 26
மாவோ துங்கு, 311–2, 388
மாளவம், 71
மாறின், எச்., 211

மி

மிக்காடோ, 236, 293
மிங்கு, சேனுபதி, 194
மிங்கு வமிசத்தினர், 15–8, 31, 40, 48–51, 53–5, 193, 331–5
மிச்செல் (ஒங்கொங்கிலே துணைநீதவானு யிருந்த), 149
மிசனரிமாரின் நடவடிக்கைகள், 34–5, 56–7, 60–1 89, 90, 107, 115, 118, 134, 137, 144–8, 156, 158, 161–3, 177–8, 204–6, 271, 315, 323, 346, 367–8, 375, 390
மிந்தோப் பிரபு, 124, 337
மிந்தோ-மோலிச் சீர்திருத்தங்கள் (இந்தியா), 124
மியாக்கோ, 327, 336
மிரபோ, 363
மிலிந்தி மன்னன், 13
மிற்சுயி, 260
மின் மாங்கு, பேரரசன், 343

மீ

மீக்கொங்கு, 178–188
மீரா, 287, 388

மு

முகமது அலி, 73-4
முகமது, சித்தி, 26
முகம்து, தோத்து, 232
முகலாயப் பேரரசு, 42-3, 71–5, 80, 89-90, 113, 129, 232, 326
முசாபர் யங்கு, 73-4
முசிலிங்கள், 28, 30, 33, 34, 90, 208, 209
மூலாளித்துவ முயற்சி (இந்தியா), 221, 228
மும்தாசு மகால், பேரரசி, 326
மூர்சிதாபாத்து, 75
மூன்சி, 286, 289

மெ

மெக்கா, 22, 90, 318
மெக்சிக்கோ, 53
மெடினு, 318
மெயிகன், ஆதர், 250
மெயிசன், 352
மெயிசிப் பேரரசன், 168, 169, 170, 173-6, 247, 294-5

மெயிசி மீட்சி, 159, 167-8, 170-1, 247, 294, 296
மெயின், சேர் என்றி, 365

மே

மேரி, அரசி, 224
மேலேப்புல அழிவு, 22-3, 102-3, 108-9, 199, 206
மேலே வர்த்தகர், 98, 99-100, 103-4, 147-50, 152, 156, 157-8

மை

மைசூர், 71, 77, 78-9, 93, 117

மொ

மொகெஞ்சதாரோ, 378
மொங்கோலியர், 56, 193, 208, 323
மொங்கோலியா, 55, 146, 237, 242–248, 253, 257, 317
மொசாம்பிக்கு, 13
மொசுக்கோ, 193, 195, 198, 234
மொலுக்காசு, 28, 35, 39, 42, 63, 85-6, 90, 319, 386
மொலென்டோபு, வொன், 201
மொறிசுலோங், 184
மொன்சன், கேணல், 79
மொன்ரேகு-செம்சுபோட்டு, 113, 225, 226, 229
மொன்றுபான், 108
மொனிற்றர் யூனிவேசல், 177

மோ

மோப்பசான், 388
மோளிப் பிரபு, 133, 183
மோற்றே, அந்தோனியோ த, 60

மௌ

மௌரியர், 279

ய

யக்கோபின் களரி, சீரங்கப்பட்டணத்து, 369
யகாங்கிர், 42
யங்கு, 357
யச்சாட்டிசு, 208
யப்பான், ஒரு பெரும் வல்லரசாக, 218, 221, 247-52, 341, 390
யப்பான், மேல்நாட்டு அறிவுத்துறையினும் கலேத்துறையினும் உள்ள ஆர்வம், 64-7, 165-6, 170-2, 290-3, 294, 295-6, 369
யப்பான், மேலே நாடுகளுடன் உள்ள தொடர்பு, 23-4, 35, 40-1, 43, 46, 63-4, 165, 169-76, 218, 238-9, 241, 247-9, 254-8
யப்பானிய பட்டயச் சத்தியம், 171
யப்பானின் கடற்படை, 170-2, 248
யப்பானின் சட்டமுறை, 382
யப்பானின் பாராளுமன்ற ஆட்சிமுறை, 174-6, 259-63, 297, 382-3
யப்பானும் இசுப்பெயினும், 62-4, 291
யப்பானும் இந்துசீனமும், 182-4, 186
யப்பானும் இரசியாவும், 166, 174, 200-4, 213
யப்பானும் கொரியாவும், 153-5, 201, 259
யப்பானும் சீனமும், 49, 136, 146, 152-4, 157, 163, 240-1, 244-5, 248, 249-50, 258-9, 262
யப்பானும் பிரான்சும், 166
யப்பானும் பிரித்தானியாவும், 64, 166-9, 175-6, 247-51, 262
யப்பானும் போத்துக்கலும், 60–2, 63, 64, 334-5,
யம்பி, 83
யமேக்கா, 134

யா

யாக்குப் கான், 129
யாக்கோபு தி லாகே, 43
யாக்சன், 354
யாபர், மீர், 75, 76
யாங்திசிப் பிரதேசம், 71, 102, 103, 104-7, 138, 141-2, 143, 148-50, 156-7, 163, 180, 244, 245
யாலு நதி, 154
யாவா, 29, 30-1, 38-9, 49, 53, 63, 80, 84-9, 90-1, 302, 369-71, 377, 385-6

யு

யுங்கு, மிங்கு, 301
யுங்கு லோ, பேரரசன், 15, 49
யுங்கு லிங்கு, 139
யுங் லூ, 136, 160, 300
யுவான், தொன் (ஒசுத்திரியா) , 368
யுவான் சீ-கை, 201, 233-4, 236-8, 248, 258, 300, 303
"யுவான்" வமிசம், 193
யுஞன், 131, 156-7

யூ

யூசுபு அதில் கான், 17
யூறல் மலை, 193

யெ

யெகோல், 138, 255, 256
யெகோவினர், 55
யெட்டோ, 66, 166, 200, 291
யென் இசி-சான், 246, 387

யே

யேசு சங்கம், 35, 368
யேசுதர் சங்கங்கள், 325-36, 342, 359-62, 368
யேசுவின் போதனைகள், 275
யே மிங்-சின், 106-7

யொ

யொக்கோயி சோனுன், 293
யொக்யகார்த்தா, 84, 91

யோ

யோசுவர், சுலுத்தான், 80
யோட்சு, ஐந்தாம், 224
யோட்சு, மூன்றும், 59, 93
யோவ், அடோல்பு, 211, 235, 243
யோவாவோ, மூன்றும், 35, 367
யோன்சு, சேர் வில்லியம், 363

ரோ

ரோசு சுவாட், கோமகன், 145

லா

லா யவனசே, 304-6, 308, 309

வ

வங்கம், 42-3, 69, 70, 73-4, 75-8, 92, 126, 224, 232, 274, 287-8, 337
வங்கமொழி, 286
வங்கியாப் பொருத்தனை, 103
வட்கோன ஒப்பந்தம், 77
வட்டமேசை மாநாடு, 229
வட்டோ, 354
வம்பொவாப் பொருத்தனை, 103
வம்போவா இராணுவக் கழகம், 235
வலிக்ஞானி, 330
வறுமையும், இந்தியாவில் நெறிதிறம்பிய பிரித்தானியராட்சியும், 119

வா

வாசனைச்சரக்கு வியாபாரம், 5, 6, 14, 15, 18-22, 27-9, 31, 33, 36, 40, 44, 48, 82, 86, 369
வாசிங்ரன் மாநாடு, 240-2, 244, 251, 259, 261,
வால்மீகி, 388
வால்ரர் இலே, 138
வான் லீ, 54

வி

விசயநரப் பேரரசு, 16, 27, 33, 42
விந்திய மலை, 71
வித்தியாபதி, 287
வியற்நாம், 185
வியற்-மிங்கு, 186
வியாசர், 388
வில்கெம், இரண்டாம், 144, 185, 217
வில்சன், சனுதிபதி, 220-1, 233, 237, 250
வில்லியம், உருபிரக்கு நாட்டு, 323, 346
வில்லியம் கோட்டை (கல்கத்தா), 74
வில்லியம், மூன்றும், 354
விலக்கீட்டுக் கட்டளை, 65
விவேகானந்தர், சுவாமி, 277-8
விற்று, கோமகன், 203
விற்றோரியா, அரசி, 101, 121, 390

வீ

வீயன்னுப் பொருத்தனை, 80
வீரத்து, செபால் த, 38

வெ

வெசுபேலியாப் பொருத்தனை, 368
வெடல், தளபதி, 57-8
வெல்கின்சு, சார்சு, 363
வெல்சிலி, 78-9, 370
வெலிங்தன் கூ, 239-42
வெலிங்தன், கோமகன், 71, 79, 364, 377
வெனிசு, 3-6, 45

வே

வே-கை-வே, 154, 157, 245
வேட்டுமூனை, 10
வேட்டுமூனைத் தீவு, 12
வேய் செங்சின், 54
வேய் யுவான், 301
வேலூர்க் கலகம், 337

வை

வைணவ மதம், 274

வொ

வொல்தேர், 357, 360-2, 363
"ஜனகண மன", 288